யூநாநி தாதுவிருத்தி போதினி

ஹகீம் ப.மு. அப்துல்லா சாயபு

தாமரை நூலகம்
சென்னை – 600 026.

யூநாநி
தாதுவிருத்தி போதினி

ஹகீம் ப.மு. அப்துல்லா சாஹிப்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண்	:	138
முதல் பதிப்பு	:	ஜனவரி 1995
இரண்டாம் பதிப்பு	:	ஜனவரி 2007
மூன்றாம் பதிப்பு	:	ஜூலை 2013
நான்காம் பதிப்பு	:	ஜூன் 2019

பதிப்புரிமை பெற்றது

நூலைப்பற்றி

நூலின் பெயர்	:	யூநாநி தாதுவிருத்தி போதினி
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	ஜூன் 2019
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி
அச்சுத்தாள்	:	16 கி.வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	847
பிரதிகள்	:	1000
நூல் விலை	:	ரு. 450/
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை -34

பதிப்புரை

மனித குலம் இன்பமாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் காரணமாக எழுதப்பட்டது இந்த அருமையான நூல்.

இதன் பெருமையும் சிறப்பும் உணர்ந்த மேல்நாட்டவர்களும் மெச்சித் தத்தம் மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்தனர். இவ்வாறு உலகெங்கணும் புகழ் பெற்ற இந்நூல்தான் இயற்றப்பட்ட மூல மொழியாகிய தமிழிலேயே மறுபதிப்புச் செய்யப்படாமல் இவ்வளவு காலம் முடங்கிக் கிடந்த காரணம் இது மிகப்பெரிய நூலாக அமைந்து விட்டதே எனலாம்.

யூநாநி தாருட்ய விருத்தி போதினி முதல் பாகம், இரண்டாம் பாகம், திறவு கோல் என்ற மூன்று பாகங்களாக மிகப் பெரிய நூலாக அமைந்துள்ளது. இந்த நூலை மறுபதிப்புச் செய்ய வேண்டும் என்று திரு ஏ.என். அனுமந்தன் அவர்கள் கூறிய போது இப்படிப்பட்ட ஒரு நூல் அழிந்து போக விட்டுவிடக் கூடாது என்ற எண்ணம் என்னைத் தூண்டிக் கொண்டே இருந்தது. நூலில் குறிப்பிட்டிருந்த பழங்கால அளவைகள் சொற்கள் முதலானவற்றைத் திருத்தியமைக்கும்படி திரு அனுமந்தன் அவர்களையே கேட்டுக் கொண்டேன்.

எவ்வளவு பொருட் செலவான போதிலும் இம்மூன்று பாகங்களையும் சேர்த்து ஒரே நூலாக வெளியிட வேண்டும் என்று உறுதி கொண்டேன். திறவுகோலை இரண்டாகப் பிரித்து மருந்துப் பொருட்களின் குணபாடம் கூறும் பகுதியை முதலிலும் — நோய்களும் மருந்துகளும் கூறும் பாகத்தை இறுதியிலும் சேர்த்து நூலுக்குப் புதிய வடிவம் கொடுத்தேன். மிகப் பெரிய புத்தகமாக அமைந்து விட்டதால் நீண்ட காலம் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்பதற்காக முழு ரெக்ஸின் பைண்டிங் செய்ய ஏற்பாடு செய்தேன்.

நூல் பற்றியும் அதைத் தான் இயற்றிய காரணம் பற்றியும், மருந்துகளில் தனக்குள்ள அனுபவங்களைப் பற்றியும் திரு ஹக்கீம்

அப்துல்லா அவர்கள் எழுதிய நூன்முகத்தின் வாயிலாகவே அறிந்து கொள்வது நலம் என்பதற்காக அதை அப்படியே சேர்த்துக் கொண்டுள்ளேன்.

ஏராளமான பொருள் செலவான போதிலும் கவலைப் படவில்லை. இந்நூலின் பயனை உணர்ந்துள்ள தமிழக மக்கள் ஒவ்வொருவரும் விலையைப் பொருட்படுத்தாது இந்த நூலை வாங்கிக் கலைக்களஞ்சியம் போல் பாதுகாத்து வைத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை
1-1-1995

வணக்கம்
பதிப்பாசிரியர்.

நூன் முகம்

மிகு வேகமும் பெருந்தன்மையும் பகுத்தறிவுமுடைய எனது ஜனன தேசத்து வைத்தியச் சகோதரர்களே யான் இச்சிறிய நூலினை இயற்றும்படி பல்கால் என்னுள்ளத்தைத் தூண்டி எழுப்பிய காரணம் இன்னதென இதனடியில் யான் கூறும் விஷயங்களால் வெள்ளிடைமலை போலத் தெள்ளிதின் விளங்கும்:—

இச்சென்னையின்கண்ணே கல்வியினும் செல்வத்தினும் ஒரு சிறிதுங் குறைவில்லாமல் வாசம் செய்து வந்த கனவானொருவர் நீர்ப்பீனிசத் தலைநோயால் பீடிக்கப்பட்டுத் துன்புற்றிருந்தனர். இவர், பண்டைக் காலந்தொடங்கி நம் முன்னோர்களால் அனுபவ யுக்தமாகக் கைகண்டதும், இத்தேசவாசிகளுடைய தேகக் கூறுபாட்டிற்கு ஒத்ததுமாகிய அரும்பெருஞ் சிறப்பினை வாய்ந்த இந்து, யூநாநி வைத்திய முறைகளைப் பரீக்ஷிக்காமலே இகழ்ந்தும், ஆங்கிலேய வைத்திய முறைகளைப் புகழ்ந்தும் கையாடி வந்தனர். இங்ஙனமே இவர் கையாடி வந்த அவ்வாங்கிலேய ஔடதம் கொழுநிலத்திட்ட செஞ்சாலிக்குப் பெய்த பெருமழை போன்றிருந்ததேயல்லாமல் அப்பிணியினை ஒரு சிறிதும் பரிகரித்திலது. இதனை நெடுநாள் கண்ணுற்று வந்த இவரது நண்பரொருவர், இவருடைய அனுமதி பெற்றுப் பின் சுதேச வைத்தியத்தில் சொற்பப் பயிற்சியுள்ள இவ்வேழையினிடம் அந்நோயினுடைய கூறுபாடுகளையெல்லாம் சாங்கோ பாங்கமாகச் சொல்லினர். ஆனால், பிரதமத்தில் அந்நோய்க்குச் சிகிச்சையொன்றுஞ் செய்யாமல் ஹிந்து, யூநாநி வைத்தியத்தில் அவருக்கு மிக நம்பிக்கை உண்டாகத் தக்க பல திருஷ்டாந்தங்களைக் காட்டிச் சுதேச, யூநாநி ஔடதங்கள் எவ்விதத்திலும், ஆங்கிலேய ஔடதங்களுக்குக் குறைந்தவைகளல்லனவென்று வற்புறுத்திக் கூறினேன். அக்கனவான் அக்கருத்துக் கிசைந்து அடியேனால் கொடுக்கப்பட்ட "மஹா சுகந்த ஆனந்த நாதன்" என்னும் ஸ்நாந தைலமிட்டுத் தலைமுழுகியும், "முபர்ரி ஹேபாரீத்" சீத குதூகலநி என்னும் ஔடதத்தையுட் கொண்டும், கடவுளினது கிருபையால் ஆரோக்கிய மடைந்தனர்.

அக்கனவானுக்கு இத்தேச ஔடதங்களில் ஒருவாறு நம்பிக்கையுண்டான போதிலும் தாருட்யவிர்த்தி அவுடதங்களில் முழு நம்பிக்கை கிடையாது. ஓர் நாள் இவரிடம் யான் சென்றிருந்தபோது அப்பிரபுவின் நண்பர்களும் தமிழ், இங்கிலீஷ் முதலிய பாஷைகளில் மிகு பாண்டித்திய முடையவர்களுமாகிய சிலர் வந்து வார்த்தையாடிக் கொண்டிருக்கையில் "உலகத்தில் தாருட்ய விர்த்தி ஔடதம் உண்டா இல்லையா" என்பதைப் பற்றி விவாதம் நடந்தது. அவ்விவாதத்தில் சிலர் உண்டென்றும் சிலர் இல்லையென்றும் வாதித்தார்கள், பிரபுவும் அத்தகைய ஔடதம் கிடையா தென்றே தமக்குள் நிச்சயித்திருப்பதாகத் தெரிவித்தார். அதன் மேல் அடியேன் அடியிற்கண்டவாறு உத்தரித்தேன்.

ஜீவனுக்கு இரத்தமே பிரதானம், முக்கியமாக மனிதர்கள் நோயின்றி வாழ்வதற்கும், ஆயுள்விர்த்தி, பலம், காந்தி, ஊக்கம், காமம், ஆண்மை, சந்தானவிருத்தி முதலியவையடைவதற்கும் அவ்விரத்தத்தினின்றுண்டாகும் சுக்கிலமே பிரதானம். ஆகையால், இச்சுக்கிலத்தைப் பற்றிய விதிகளை யாவரும் அறிந்திருப்பது பிரதானத்திலும் மிகப் பிரதானமே. ஏனெனில், இப்பிராணாதாரமாகிய இந்திரியத்தை எவ்விதம் உபயோகப் படுத்த வேண்டுமோ அவ்விதம் உபயோகப் படுத்தாதலினால் ஆண்மையை முழுவதும் இழந்திருப்பவர்க ளனந்தர்; நாளுக்கு நாள் அதிக அளவாய் நஷ்டமடைந்து வருபவர்களனந்தர், இன்னும் பலவித நோய்களடைந்து, தளர்ந்து, மெலிந்து துர்ப்பலமடைந்து மனமுடைந்து, சொல்லொணா வருத்தத்தோடு அகால மரணத்திற்குள்ளானவர்களும் அனந்தரே. இம்மகத்துவம் பொருந்திய இந்திரியத்தைப் பற்றிய விதிகளை அறியாதொழுகுவதனால் பற்பல ரோகங்கள் நேரிட்டுத் தாருட்ய நஷ்ட முதலியவைகள் உண்டாகும். அவ்விதம் உண்டாகிய காரணத்தைத் தெரிந்துகொள்ளாமல் பலவித ஔஷதங்களைச் சாப்பிட்டுத் தங்களுக் குண்டாகிய குறைகளை நீக்கிக் கொள்வதற்கு மாறாய் முன்னிருந்த சக்தியையும் இழந்து துர்ப்பலப்பட்டு மணவாழ்க்கையில் நிராசையடைந்து விடுகிறார்கள். ஆகையால், முன்னர் இதன் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். எவ்விதமெனில்:—

தாருட்டிய நஷ்டத்தை அல்லது ஆண்மைக் குறைவின் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டில் முக்கியமாய் இந்திரியம், ஆணங்கம், பீஜம் முதலியவைகளைப் பரீக்ஷித்தறிய வேண்டியது. மேலும், சஞ்சார காலங்களில் உண்டாகும் சில சம்பவங்களையும் அறிய வேண்டியது. இவைகளைப் பரீட்சித்தறியாத வரையில் அவைகளுக்குத் தக்க சிகிச்சை செய்வது சாத்தியமன்று. ஆனால், சிகிச்சை செய்து கொள்பவரும் இவ்விஷயங்களைப் பற்றி வெளிப்படையாகச் சொல்லக் கூடாமையா

யிருக்கின்றது; இவ்விதமே சிகிச்சை செய்பவருக்கும் ஒருவேளை இக்காரணங்களெல்லாந் தெரிந்திருந்த போதிலும் இவ்விஷயங்களை விவரமாய்க் கேட்கக் கூடாதிருக்கிறது. ஆகையால், வைத்தியர்களிடத்தில் வந்து தாருட்ய விருத்திக்காக ஔஷதம் வேண்டுமென்று கேட்க, வைத்தியர்களும் தாருட்டிய நஷ்டத்தின் காரணத்தை நன்றாய் நிதானிக்காமலே ஏதோ ஓர் ஔஷதங் கொடுக்க, அதனால் ஒரு முறை பிரயோசனமுண்டாய்ப் பல முறை யாதொரு பிரயோசனமும் இல்லாமற் போய் விடுகிறது; இப்படிச் செய்வதனால் மருந்தின் பெருமைக்குங் குறைவு நேரிட்டு, வைத்தியர்களுக்கும் அபகீர்த்தி சம்பவிக்கிறது. மேலும்; சிகிச்சை செய்து கொண்டவர்களும் மருந்தினால் யாதொரு பிரயோசனமு மடையாமல் அதிருப்தியடைந்து மனந் தளர்ந்து விடுகிறார்கள். இவ்வகையினர்கள்தான் தாருட்ய விருத்திக்கு ஔஷதங் கிடையாதென்று சாதித்துத் திரிகிறார்கள். இது ஒருபோதும் ஒப்புக்கொள்ளத்தக்கதன்று; ஏனெனில், மரணத்தைத் தவிர மற்றெல்லா வியாதிகளின் இலக்ஷணங்களை ரிஷிகள், சித்தர்கள் முதலிய பெரியோர்கள்; தங்கள் மெய்ஞ்ஞான அருள் நோக்கத்தினால் அறிந்தும்; பண்டிதத்தில் வல்லமைசாலிகளாகிய அக்கீம்கள் வைத்தியர்கள் முதலியோர் அனுபவத்தினால் நிச்சயித்தும் வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள். மேலும், அவற்றில் ஒவ்வொன்றிற்கும் தக்க சிகிச்சைகளும் ஏற்படுத்தியே இருக்கின்றார்கள். ஆனால், அதைத் தெரிந்து பிரயோ கிக்காமைக்கு நமது அறியாமையே முக்கிய காரணமெனச் சொல்லல் வேண்டும். இவ்வித சாஸ்திரங்களெல்லாம் நமது பெரியோர்களால் உண்டாக்கப்பட்டு சமஸ்கிருதம், அரபி, பார்ஸி முதலிய பாஷாந்தரங்களி லிருக்கின்றன. ஆனால், அவைகளெல்லாம் அப்பாஷையிற் சிறந்தவர்களுக்கன்றி மற்றையோருக்குப் பயன்படா. மிகவும் வல்லவர்களால் தெரிந்து கொள்ளக் கூடுமே தவிரச் சகலரும் தெரிந்து கொள்ளக் கூடாமையா யிருக்கிறது. ஆகையினால், யாவரும் எளிதில் அறியும்படி அவ்வருமையாகிய சிகிச்சையை விரும்பும் சாஸ்திரங்களைத் தமிழில் வெளிப்படுத்த வல்லவர்கள் சிலர்; ஆனால் அப்படிச் செய்ய அவர்களுக்குத் தக்க உதவி செய்யும் சுதேசாபிமானிகள் ஒருவரும் இலரெனவே சொல்ல இடமுண்டு.

மேலும் நம்மிடத்தில் ஓர் துர்வழக்கமும் உண்டு. அது யாதெனின், தமக்குத் தெரிந்த அருமையான விஷயங்களை நம்மவர்களுக் குபயோகப்படும்படி செய்ய வேண்டுமென்கிற எண்ணம் கொஞ்சமும் நமக்குண்டாகிறதில்லை. அவைகள் பிறருக்குத் தெரிந்து விட்டால் நம்மை மதியார்கள் என்கிற எண்ணமோ அல்லது நமக்குத் தெரிந்த விஷயங்கள் ஒருவருந் தெரிந்து கொள்ளக் கூடாதென்கிற பொறாமையோ என்னவோ தெரியவில்லை. முடிவில் அவரவர் கற்றது அவரவர்களோடே போய்ச்

சேருகிறது. இவ்விதம் நமது முன்னோர்களால் உண்டாக்கப்பட்ட அருமையான நூல்களும் பாகங்களும் நாளடைவில் க்ஷீணமடைந்து வருகின்றன. மேலும் நமது சாஸ்திர மூலமாகவே பல விஷயங்களை நிந்தித்துப் பலவித பிரசங்க வாயிலாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் வெளிப் படுத்துகிறார்கள்.

இவ்விதம் நமது ஸ்திதியிருக்கிறபடியால் தாதுவிர்த்தி அவுடதம் உண்டென்பதிலும் இல்லையென்பதிலும் சந்தேகம் இன்னும் சிலநாட் சென்றால் சாஸ்திரம் என்னும் பேரே இல்லாமற் போய் தாதுவிருத்தி அவுடதம் இல்லையென்று நிச்சயமாகிய சந்தேக நிவர்த்தியாய் விடும்.

தக்க பரீக்ஷைகளினால் தாது நஷ்டப்பட்ட காரணங்களைக் கண்டு அவைகளுக்குத் தக்க சிகிச்சை செய்தால் அவுடதங்களினால் பயனுண்டா மென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. தாது நஷ்டப்பட்ட காரணத்தைத் தெரிந்து செய்யாததினாலேயே இவ்வளவு சந்தேகத்திற்கிடமாயிற்று என்று சொன்னேன்.

இதை அவர்கள் அங்கீகரித்துக் கொண்டார்கள். அவர்களின் சினேகித ரிருவர் நடுவில் போகசக்தி சற்றுமில்லாது முற்றும் இழந்திருந்தார்கள். அவர்களுக்குச் சிகிச்சை செய்யப்பட்ட போது சொற்ப தினத்திற்குள் லோகதயாபர கடவுளினது கிருபையால் போக சக்தியுண்டாகி சந்ததியும் உண்டாய் விட்டது.

இதுமுதல் அக்கனவானும் அவர் சினேகிதர்களும் தாதுவைப் பற்றி முக்கிய விசயங்களையெல்லாம் ஒன்றாய்த் திரட்டி எழுதச் சொல்லி வற்புறுத்தி வந்தார்கள். மேலும் தாதுவின் தத்துவங்களையும் அவற்றின் விதிகளையும் அறியாததினால் போக சக்தி குறைவு முதலாகிய பல வியாதிகளுக் குட்படுகிறவர்கள் தொகையும் நாளுக்கு நாள் அதிகமென்றே அனுபவத்தினால் தெரிய வருகிறது.

இத்தியாதி காரணங்களினால் இத்தாதுவைப் பற்றிய சகல விபரமும் அவைகளின் சிகிச்சையும் அடங்கிய ஓர் சிறிய கிரந்தம் இருந்தால் யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளவும், அவ்வித வியாதிகள் உண்டாகாது காத்துக் கொள்ளவும், தாது நஷ்டத்தின் காரணத்தை வெளிப்படுத்தவாவது அல்லது சொல்லவாவது இருதரத்தவர்களுக்கும் கூடாமையாயிருக்கிற படியால் அவைகளைத் தாங்களே யூகித்தறிந்து சிகிச்சை செய்து சந்தோஷமடையவும் அனுகூலமாகும். இவ்வித விஷயங்கள் இவ்வளவு விபரமாய் அடங்கிய நூல் தமிழில் இதுவரையில் வெளிப்பட்டு இருக்கிறதாய்த் தெரியவில்லை. ஹிந்தி பாஷையில் சில

நூல்களிருக்கின்றன. ஆனால் இவ்வளவு விபரமாகவும், இவ்வளவு வெளிப்படையாகவும் சொல்லப்படவில்லை. மேலும் அவற்றில் கண்டிருக்கிற பாகங்களும் இவ்வளவு அனுபோகப்பட்டவைகளல்ல. ஆகையால் அவை பெரும்பாலும் அந்த பாஷை தெரிந்து, அனுபவசாலிகளாகிய அக்கீம்களுக்குயோகப்படுமேயொழிய மற்றெல்லோருக்கும் உபயோகப் படுமெனத் தோன்றவில்லை. ஏனெனில் தாதுவின் தத்துவத்தைப் பற்றியும் இராஜ கருவிகளைப் பற்றியும் குறிப்பாகவே சொல்லப்பட்டிருக்கின்றன.

மேற்கண்ட காரணங்களினால் எல்லோருக்கும் பிரயோசனப்படும்படியாக தெளிவான நடையில் ஓர் புத்தகம் செய்ய வேண்டுமென்கிற ஆவல் வெகுநாளாயுண்டாயிருந்தது. ஆனால் அதற்குத் தக்க சாஸ்திரப் பயிற்சியில்லையேயென்கிற பயமாகிய சமுத்திர மத்தியி லகப்பட்டுக் கிடக்கு மடியேன்; என்னருமையாகிய அக்கீம்களும், வயித்தியர்களும் மற்றைய பண்டிதர்களும் அனுபோக சாலிகளாகிய பெரியோர்களும், சுதேசாபிமானிகளாகிய கனவான்களும், மற்றெல்லோரும், ஏழையை கைசோர விடார்கள் என்கிற தைரியமாகிய கப்பல் மூலமாய்க் கடவுளினது கிருபையினால் கரை சேர்க்கப்பட்டேன். இதில் கண்டிருக்கிற ஒவ்வொரு விசயமும் சாஸ்திர யுக்தமாகும் அனுபவ யுக்தமாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அப்படியும் ஏதேனும் பிழைகளுண்டாயிருப்பின் எமது நண்பர்கள் அன்புடன் திருத்தித் தென்புண்டாக்குவார்களெனப் பிரார்த்திக்கிறேன்.

இந்நூலில், அனேக கிரந்தங்களிற் கண்டிருக்கிற விசயங்களையும், சிறந்த பல வயித்தியர்களின் அனுபவ அட்டவணை அல்லது குறிப்பிலிருந்து எடுத்துச் சேர்த்து எழுத வேண்டியிருந்தது.

ஏனெனில் நமக்கு நேரிடும் ஒவ்வொரு விசயமும் அனுபோகத்தினால் நிச்சயித்தறிகிறதானால் நமக்கு குறைவிலாத வயசும் சம்பூரணமாகிய புத்தியும் வேண்டும். ஆனால் நம்மவர்களுக்கு அவ்விதம் அமைவது கூடாமை. (இக்காரணத்திற்காகவே நாம் ஒவ்வொருவரும் நமது புத்திக்கு எட்டின வரையில், நமக்கு பலமுறை அனுபவப்பட்டவைகளையும் கைகண்டவைகளையும் விபரமாய் எழுதி வைக்க வேண்டும். அப்படிச் செய்வதினால் நமக்கும், நமக்குப் பின்னர் நம் சந்ததி முதலியவர்களுக்கும் உபயோகப்படும்.) ஆகையினால் மேற்கண்ட சிறந்த அக்கீம்கள் பண்டிதர்கள் பெரியோர்கள், ஆகியவர்களின் அனுபவ யுக்தமாகிய பாகங்களையும், அவர்களது அனுபவத்திற்கண்ட பல விசயங்கள் அடங்கிய கிரந்தங்களிலிருந்தும் முக்கியமான ஒவ்வொரு விசயத்தையும் பொறுக்கித் தக்க விதமாய் அவ்விடங்களிற் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது.

இதனால் அந்த சாஸ்திரங்களுக்கும், அவற்றை ஆக்கியோர்களுக்கும், பெருமையும், புகழும், கீர்த்தியும், சிறப்பும், நன்மையும் உண்டாகுமென்பதிற் சந்தேகமா?

அக்கிரந்தங்களாவன:— * கிதாபு ருஜூஉ உஷ்ஷைக் இலஸ் ஸபியான் ஸ்ரீ காநூனே பூ அலிசீனா — தஷ்ரீஹே அரஸ்த தாலீஸ் — தஷ்ரீஹே பலாதூன் — புஸூலே ப ராதி — அக்ஸீரே ஆஜம் — முபர்ரிஹூஸ் குலாப் — திப்பே அக்பர் — மஜ்ம உல்ப ஹான் — க்மியாயே அனாசரி — ரிஸாலயேலுக்மான் — முஜர்ர பாதேலுக்மான் — மக்ஸநூல் அத்விய்யா — துசுபதுல்மூமினீன் ** சந்தான விர்த்தி; அமிர்தசாகரம், மதனரத்னாகரம், ஜீவ ரக்ஷாமிர்தம், மதனசிந்தாமணி, தேரையர் நோயணுகாவிதி அகஸ்தியர் பெருநூல் பன்னீராயிரம், மூலிகை சங்கலிதம் முதலியவைகளும், டாக்டர் — ராபொடர் தாமஸ் — எம்.டி. டாக்டர். மாஸ், துரைகள் முதலிய ஆங்கிலேய பண்டிதர்களால் செய்யப்பட்டிருக்கிற சில நூல்கள் முதலியவைகளுமே.

இப்புஸ்தகத்தில் கண்டிருக்கிற பாகங்களில் ஒன்று, அல்லது, பல பின்காணும் பெரியோர்கள், அக்கீம்கள் பண்டிதர்கள் முதலாகியவர்களுக்கு பலமுறை அனுபவப்பட்டுக் கைகண்ட முறைகள். அந்தந்தப் பாகங்களில் அவ்வவற்றிற்கு அதிகாரியாயுடையவர்களின் சரித்திர நாமத்தை எழுதலாமென்றால், இச்சிறிய நூல் அதிக விரிவாய் விடுமாகையாலும், அவர்களின் நாமத்தை ஒன்றாகச் சேர்த்து எழுதுவதனால் சிறப்பாகவும் திருப்தியாகவும் இருக்கும் என்கிற நோக்கத்தினாலும் இவ்விடம் எழுதலாயினேன்.

அவர்களாவன:— ஸையிதினா மூர்ஷதினா சற்குருவாகிய சையத்ஷா அஸதுல்லா உசேனி காசிபு, சையத்ஷா புர்ஹானுந்தீன் உசேனிசாகிபு; உஸ்தாதினாமவுலானா மவுல்வி அலரத் ஷேகுயூசுபு ஆலிம்சாயபு, அக்கீம்பஷீர் அகமது சாயபு, அக்கீம் அப்துல் வாஜித் சாயபு, அக்கீம் முகம்மத் சாயபு, அக்கீம் முகம்மத் இப்ராஹீம் சாயபு, அக்கீம் மஸ்தான் சாயபு, அக்கீம் சையத் முகம்மத் மஹதி சாயபு, அக்கீம் சையத் பஸல் அலிசாயபு, அக்கீம் முகம்மத் இகஸான் அலிகான் சாயபு, அக்கீம் சையத்

---

* இந்த அர்த்தமுள்ள இவ்உருது கிரந்தமானது மகா ஸ்ரீ டாக்டர் சையத்குலாம் உசேன் சாகிபு அவர்களால் செய்யப்பட்டது. இக்கனவான் அதிக பொதுநலப் பிரியர், ஜீவகாருண்ய சிந்தையுடையவர்.

** தமிழில் இதன் அர்த்தமாவது — விருத்த கௌமார சிந்தாமணி இது அரபு பாஷையில் உள்ளது. மகா பண்டிதராகிய ஹக்கிம் அகமதி புனு சுலைமான் பாஷா என்பவரால் மாலிக் பாஷா எனும் அரசருக்காகச் செய்யப்பட்டது.

அலிசாயபு, கோகா பண்டிதர், நரசி பண்டிதர், அப்பாவு பண்டிதர், சுப்பிரமணிய பண்டிதர், டாக்டர் ஜெகநாத நாயுடு, சி. ஜோசிபண்டிதர் முதலானவர்களே.

சினேகிதர்களே மேற்கண்ட அக்கீம்களும், பண்டிதர்களும் மிகத் தேர்ச்சியடைந்து மிக வல்லவர்களெனப் பெயர் பெற்றவர்கள்; இவர்களையன்றி இன்னும் அநேகர்களிடத்திலிருந்து பல விஷயங்களும் சேர்க்கப்பட்டன. இவ்விஷயங்களையெல்லாம் சம்பாதிக்கிறதற்காக எவ்வளவு பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டும். எத்தனை நாட் செல்லும், எவ்வளவு பொருள் வேண்டுமென்பதைச் சிநேகிதர்களே யோசிக்க வேண்டும். இதில் கண்டிருக்கிற அநேக பாகங்கள் ஏழையினால் செய்யப்பட்டு அனுபவமானவைகள். மற்ற பாகங்களும் சிறந்தன வென்பதிற் சந்தேகமில்லை. ஏனெனில், அந்த பாகத்தையானே செய்து அனுபவப்படுத்தா விட்டாலும், தக்கவர்களால் செய்து அனுபவப்படுத்தப்பட்டவைகள்; மேலும், சிறந்த பல கிரந்தங்களின் ஆதாரத்தோடு எடுக்கப்பட்டிருக்கின்றன. கண்டபடி எழுதி வைத்தவைகளும், அதிக பிரயோசனமற்றவைகளும் செய்வதற்குக் கஷ்டமானவைகளுமான பாகங்களையும், மற்றவிதமான பாகங்களையும் எடுத்து எழுதவில்லை. இந்தப் புஸ்தகமானது சிகிச்சையைத் தேடும் எல்லோருடைய உபயோகத்திற்காக எழுதப்பட்டிருக்கிறது. அந்த அருமையான பாகங்களையெல்லாம் முக்கியமாக ஜீவகாருண்ணியச் சிந்தையுடன் வெளியிட்டேனேயொழிய மற்றப்படியல்ல. ஏனெனில், இவ்வருமை பொருந்திய ஒவ்வொரு பாகங்களையும் சம்பாதித்து அதன் உண்மையை நிச்சயித்தறிய அதிக பிரயாசையும் அதிக பணச்செலவும் உண்டாயிருந்தன. இங்ஙனமல்லாது பன்னிரண்டு வருஷந் தேடின போதிலும் உண்மை சித்தியாகாது. நான் இவ்வளவு தைரியத்தோடு சொல்வது எந்த ஆதாரத்தின் மேல் என்னில், இதில் கண்டிருக்கிற பாகங்கள் தக்க விதமாக உபயோகப்படுத்தப்பட்டு, கடவுளின் கிருபையால் யாதொரு சந்தேகமின்றி ஆச்சரியப்படும்படியான குணத்தைத் தந்திருக்கின்றன. மேலும், அநேகவித பிரயோசன முண்டாயிருக் கின்றன. ஒருவேளை எவ்வித பிரயோசனமுண்டாகா விட்டாலும் யாதொரு கெடுதியும் சம்பவிக்காதென்பது திண்ணம்; ஆகையால், இவற்றில் கண்டிருக்கிற பாகங்களெல்லாம் மிகவும் சிறந்தனவையென்றும் சிரேஷ்டமானவையென்றும் சொல்லத் துணிவேன்.

இப்புத்தகத்தைப் பற்றின விளம்பரம் வெளிப்பட்டவுடன், ஆங்கிலேய கனவான்களும், சுதேச கனவான்களும் நேராகவும் பிறர் மூலமாகவும், தங்களுக்கு நேரிட்டிருக்கிற தாருட்ய நஷ்டமும், அவை நேரிட்ட காரணங்களும் விளம்பரத்தில் குறிப்பாகக் கண்டிருந்த போதினும்

அனுபவத்திற்குச் சரியாக ஒத்திருக்கின்றனவென மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நாமங்களையும் இங்கு எழுதலாமென்றால், அவர்கள் வெட்கத்தினால் அவ்விதம் செய்யும்படி சம்மதிக்கவில்லை. இதனால் நமது கருத்தென்னெனில், இந்நூல் பெரியோர்களின் நூலிலிருந்தும் பலமுறை அநுபவப்பட்டுச் சாஸ்திர யுக்தமாகவே எழுதியிருக்கிறதென்பது விளங்கும் என்பதே. ஆயினும், இப்புத்தகத்தைப் பற்றி இவ்விடம் ஒன்றும் விசேஷித்துச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் அடியேன் கோரிக்கை ஒன்றுளது; அது யாதெனின், அடியேன் சக்தியானுசாரம் கஷ்டப்பட்டுச் சகலவிதமாகவும் முயற்சி செய்து எழுதின நூலை வெளிப்படுத்தியிருக்கிறேன்; இனி அவர் அவர்களே அதனுண்மையை அறிந்து தெரிவிக்க வேண்டும் என்பதே.

இந்தப் புத்தகத்தை எழுதத் துவக்கினபின் அடியேனுக்குச் சம்பவித்த தேக அசவுக்கியத்தாலும், இடைக்கிடை சம்பவித்த பல தொல்லைகளாலும் தடையாகி விடுமெனத் தோற்றப்பட்டது. ஆனால், கடவுளினது கிருபையாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும் யாதொரு குறைவின்றி நிறைவேறினது.

இந்நூலைப் பற்றிய பலவித சகாயம் செய்தவரும் பரோபகார சிந்தையுடன் பாடுபட்டவருமாகிய மகா கனம் பொருந்திய மகா ஸ்ரீ பு. முனுசாமி நாயகர் அவர்களுக்கு மிகவும் நன்றியறிந்தவனா யிருக்கிறேன். சகோதரர்களே! இக்கனவானின் நற்குணம், நற்செய்கை, பரோபகார சிந்தை, பிறர் காரியத்தைத் தன் காரியம் போலவே பாவித்து நடத்தல், நற்காரியங்களைச் செய்வதில் பின்வாங்கா முயற்சி முதலிய குணங்களை எவ்வளவாக எழுதின போதிலும் எழுதி முடியாது. மேலும் அதிகம் எழுதினால் ஒருவேளை முகஸ்துதியென யோசிப்பார்களென இவ்வளவில் நிறுத்தினேன். இவர் சினேகத்தை விரும்புவோர் அஞ்சு நிமிஷம் இவரோடு சினேகித்தால் போதும்.

''மருவுக மாசற்றார் கேண்மையொன் றித்து
மொருவுக வொப்பில்லார் நட்பு''.

இந்நூலிற்கு யூநாநி வைத்திய தாருட்ய விர்த்தி போதினி எனப் பெயர் கூறியது யாது காரணம் பற்றியெனில், இஃது யூநாநி, மிஸ்ரி, இங்கிலீஷ் ஆகிய மூன்று வைத்திய சாஸ்திரங்களிலிருந் தெடுத்தெழுதின போதினும் பெரும்பாலும் யூநாநி வைத்தியத்திலிருந்தே எடுத்து எழுதப்பட்டபடியால் மிகுதி பற்றி யூநாநி வைத்தியம் என்றும், தாருட்ய விர்த்தி போதினி, தாருட்ய நஷ்டம் சம்பவித்ததற்கு ஏதுவாகிய காரணங்களையும், தாருட்ய நஷ்டமடையாமல் தப்பித்துக் கொள்ளும் உபாயங்களையும், தாருட்ய

நஷ்டம் நேரிட்ட பின்பு அவற்றிற்குத் தக்க சிகிச்சை எவ்விதம் செய்ய வேண்டியதென்பதையும் அறிவித்து, சிகிச்சை செய்து நஷ்டத்தை நீக்கித் தாருட்யத்தை விர்த்தி செய்ய உபயோகப்படும் விஷயங்களைப் போதிக்கும் நூல் என அருத்தங்கொள்ளுமென் றுணர்க.

இந்நூலால், அடையும் பெரும் பயனாவது பல சாஸ்திரப் பழக்க அனுபவ சித்தியே. இந்த யூநாநி வைத்திய தாருட்ய விர்த்தி போதினியானது, வெகுநாள் அனுபவப் பரம்பரை வைத்தியர்களைப் பார்க்கிலும் பகற்காலங்களில் காக்ஷிப் பொருள் யாவற்றும் ஐயந்திரியறத் தெரிவது போல, உண்மையான மனதுடனே தன்னை விரும்பினோர்கட்கெல்லாம் தாருட்ய நட்டத்தைப் பற்றிய சகல விபரங்களையும் அவ்வவற்றிற்குரிய பலவித சிகிச்சைகளையும், மிக எளிதாகவும் அதிக தெளிவாகவும் தெரிவிக்கும் என்பதே.

ஆகையால் ஆயுள் விர்த்தி, சந்தான விர்த்தி, பலம், தேகபுஷ்டி, காந்தி, ஊக்கம், மனதிற்கானந்தம் முதலியவைகளை விரும்பும் அறிவாளிகள் யாவரும் இதனைச் சற்றும் அலட்சியம் செய்யாது ஆதியோடந்தமாக ஆராய்ச்சி செய்து தங்கள் தங்கள் ஆன்மாவிற்கு உற்ற துணையெனப் பூரண சம்மதத்துடன் மிகு மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்வார்கள்.

❑

கடவுள் துணை

யூநாநி வைத்திய தாதுவிருத்தி போதினி

அரும்பத விளக்கம்

அகர்

இதற்குத் தமிழில் அகரு என்றும், அகருக்கட்டை யென்றும், அரபியில் ஊத் என்றும், ஊதேஹிந்தி என்றும், இங்கிலீஷில் அகுவிட்லேரியா (Aquitlaria) என்றும் பெயர்.

பிறப்பு:— பங்காள ராஜதானியில் சில்ஹட் தேசத்திலும், சீனதேசத்திற்குச் சமீபமான சக்தியாவென்னும் தீவிலும், இன்னும் சில மலைப் பிரதேசங்களிலும் உண்டாகிறது. சிங்கப்பூர், தஞ்சாவூர் முதலிய ஊர்களில் உயர்ந்தவைகள் கிடைக்கின்றன.

உருவம்:— இது ஒருவகை மரத்தின் கொம்பு; இது கரடு முரடாகவும், கோணலாகவும், அநேகமாய் மத்தியில் துவாரமுள்ளதாகவுமிருக்கும். இது நன்றாய் முதிர்ந்த பக்குவத்தில் வெட்டி, அனேக நாள் சென்ற பின்புதான் இதில் வாசனை யுண்டாகி, மருந்திற்குபயோகப்படுகிறது; இதற்காகவே இதை பூமியில் புதைத்து மக்க வைப்பதுமுண்டு; இதில் பலவிதங்களுண்டு; அதிக கறுப்பாயிருப்பதற்கு கிருஷ்ண அகரு என்றும்,கணுக்கள் நிறைந்திருப்பதற்குக் குருவித்தலை அகரு என்றும், வெண்மையாயும் இலேசாகவுமிருப்பதற்கு தெப்பல் அகரு என்றும், தண்ணீரில் ஆழும் தன்மையுள்ளதற்கு பார்ஸி பாஷையில் ஊதேகறகி என்றும், தமிழில் வயிர அகரு என்றும் பெயர். இன்னும் உருவம், வருணம், தண்ணீரில் ஆழுங் குணம் முதலியவைகளில் இதைப் போன்ற இன்னொரு வகையுமுண்டு, ஆனால் அதற்கு சுகந்த வாசனை இராது. அதற்குத் தகர் என்று பெயர். அகில் என்பது வேறினம் என்றும் தெரிந்திருக்க வேண்டியது.

வருணம்:— வெண்மை; கறுப்பு; கருஞ்சாயல்; (சுவை, மணம்) கைப்பு; சிறுகாரம்; சுகந்த வாசனை.

இயற்கைக் குணமுந் தரமும்:— 2ம் தரச்சூடும், 3ம் தர வறட்சியும்.

உண்மைத் தோழனாய் உறுதியான உதவியாக நின்று நன்மை பயக்க வேண்டுமென்பதே நமது நன்னோக்கம்.

ஆகையினால் அதிக சிரமம், மனோ சிரமப்பட்டும், பலவகைகளிலும் பொருள் செலவு செய்தும், பல துறைகளிலும் நுழைந்து பல பல சாஸ்திரானுபவங்களையும் ஒன்றுபடத் திரட்டி, பலவிதத்திலும் யாவருக்கும் தெளிவாய்ப் புலப்படும்படி முன்னர் எழுதியிருப்பது போலவே இப்போதும் எழுதியிருக்கின்றோம். அக்கிரந்தத்திற்காக நாமெடுத்துக் கொண்ட சிரமம் இத்தனைய தென்பது அதனை நன்றாய் ஆழ அகல வாசிப்பவர்களுக்குப் புலப்படாமற் போகாது. யூநாநி பெயருள்ள சரக்குகளுக்குத் தமிழ்ப் பெயர்களைக் கண்டுபிடிக்கப் பல நாளனுபவமும் பல சாஸ்திரப் பயிற்சியும் பல தேசத்தவர்களுதவியும் அதியாவசியகம் வேண்டியது. இதற்காகவே முக்கியமாய் மேற்கண்ட விதமாய் சிரமப்பட்டு, பெரும்பாலும் தமிழ்ப் பெயராகவே அதில் எழுதியிருக்கின்றோம். ஆனால் தமிழில் பெயர் கிடையாது. அல்லது, ஒருவேளை அரிதாய் காரணப் பெயராகவாவது அல்லது தொழிற் பெயராகவாவது இருந்து பெரும்பாலாரால் சாதாரணமாய் வழங்கப்படாத சரக்குகளுக்கு மாத்திரம் யாவராலும் வழங்கப்படும் பிரபல்லியமான இயல்பு பெயர்களாகிய யூநாநி பெயர்களே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில் அவை யூநாநி மருந்துக் கடைகளில் சாதாரணமாய் அப்பெயர்களுடன் வழங்கப்படுகின்றபடியால் இலகுவாய்க் கிடைக்கக்கூடும்; அரிதாயுள்ள பெயர்களும் சாதாரணமாய் வழங்கப்படாத பெயர்களும் கடைக்காரர்களுக்குத் தெரியாதாகையால், ஒன்றை விட்டொன்றை மாற்றி கொடுக்க ஏதுவாகும். இதற்காகவே சாதாரணப் பெயர்களை நீக்கி வழக்கப் பெயர்களாகிய யூநாநி பெயர்களாகவே சொல்லியிருக்கின்றோம். ஆயினும், நமது கிரந்தத்தைக் கைக்கொண்டு அதிலுள்ள பாகங்களைச் செய்து பலனடைந்து ஆனந்தித்து வருகின்றவர்கள் பலராயினும், சிலர் அக்கிரந்தத்தில் சொல்லப்பட்டவைகளெல்லாம் யூநாநிப் பெயர்களாகவே இருக்கின்றனவென்றும், மேற்கண்டபடி அவையெங்கு கிடைக்குமென்றும், மலைத்து மயங்குகின்றார்கள். ஆகையால், அவர்களின் மனக்குறைகளையுமொருவாறு நிராகரிக்கும் பொருட்டே மேற்படி கிரந்தத்திலுள்ள யூநாநி பெயர்களையெல்லாம் ஒன்றாய்த் திரட்டி அகராதி ரூபமாய் அமைத்து, பற்பல பாஷைகளிலுமுள்ள பெயர்களையும், அவற்றின் பிறப்பு, விலை முதலியவைகளையும் எழுதி இருக்கின்றோம். ஏனெனில் தந்தி தபால், ரயில் முதலியவைகள் விசேஷித்த இக்காலங்களில் எவ்வகை சரக்குகளையும் எந்த விடத்திற்கும் மதராஸ்,

பம்பாய், கல்கத்தா, ஐதராபாத்து முதலிய விடங்களிலிருந்து வெகு இலகுவாய் வரவழைத்துக் கொள்ளக்கூடும்.

ஆகையால், யூநாநி வைத்திய தாதுவிருத்தி போதினி முதலிரண்டாம் பாகங்களுடன் இத்திறவுகோலையும் அங்கீகரித்து, இவற்றை எல்லாம் அற்பமாய் எண்ணாமல் ஆழ்ந்த கருத்துடன் வாசித்தறிந்து, அவற்றிற் சொல்லப்பட்டிருக்கிற ரோக நிவாரண லக்ஷணம் ஆகியவைகளை ஆராய்ந்து தெரிந்து, அவ்வற்றிற்குரிய லக்ஷணங்கள் பொருந்திய சரக்குகளையுந் தெரிந்து சேர்த்து, அவற்றில் சொல்லப்பட்டிருக்கிற கைபாகம், செய்பாகம், முதலிய முறைப்படி செய்து, அவரவர்களுக்குள்ள வியாதிகளை நீக்கி, பலாபி விர்த்தி, ஆயுள் விர்த்தி முதலிய இம்மைக்குரிய பல விர்த்திகளையும் இனிது பெற்று, வச்சிரதேகிகளாக நீடுழி வாழ்வார்களாக ஆமீன்.

❑

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்

யூநாநி வைத்திய தாதுவிருத்தி போதினி

திறவுகோல்

முகவுரை

கடவுளின் கிருபையாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலும் நமது யூநாநி வைத்திய தாதுவிருத்தி போதினியென்னும் கிரந்தம் வெளிவந்து, அதனால் யாவரும் பற்பல பிரயோஜனங்களை யடைந்து வருவதைக் கடிதமுகத்தாலும், பிறவற்றாலும் எமக்கு அடிக்கடி அறிவித்து வருவதினால் நமக்கு அதிகமனோற்சாகமுண்டாகி, இன்னும் நம்மாலியன்ற வரையில் சிரமப்பட்டு, மேற்படி கிரந்தத்தை முன்னிலும் அதிக தெளிவாகவும், மிகவும் இலகுவாகவும் தெரிந்து கொள்ளும் மார்க்கங்களையேற்படுத்தி, யாவருக்கும் எக்காலத்தும் கைத்துணையாய் நின்று பிரயோஜனப்படும்படி செய்ய வேண்டுமெனக் கருதி, முன்னரே ஆங்காங்கு பலவித குறிப்புகள், நானாவித உபப் பிரயோகங்கள் முதலியவைகளை யெழுதியிருப்பினும், சில யூநாநி பெயருள்ள சரக்குகள், தமிழ்ப் பெயருள்ள சில சரக்குகள் ஆகியவைகள், அவை என்னமோ, அவை ஏதோ. அவை யென்னவிலை யுள்ளனவோ என மயங்கித் தியங்கி மலை வுறுமனதைத் திடப்படுத்தும்படி அவ்வகைச் சரக்குகளையெல்லாம் ஒன்றுபடத் திரட்டி அகராதியாகவமைத்து, பற்பல பாஷைகளிலுமுள்ள அவற்றின் நாமங்கள், பிறப்பு, விலை முதலியவைகளைத் தெரிந்து வீண் சந்தேகங்களை யொழித்துக் கொள்ளும்படி ''அரும்பத விளக்கம்'' என ஒன்றும்; இன்னும் ஒவ்வொருவரும் வேறொருவர் சகாயமின்றியே யின்ன வியாதிக்கு இன்ன சிகிச்சைதான் ஏற்றதென பல நாளனுபவசாலியாகிய ஓர் வைத்தியன் உற்ற சமயத்தில் ஒப்பற்றவிதமாய் நின்று வற்புறுத்திச் சொல்வது போல தாங்களே தெரிந்து கொள்ளும்படியாக ''ரோக சிகிச்சாக்கிரம அட்டவணை''யென ஒன்றும் ஏற்படுத்தி யூநாநி வைத்திய தாதுவிருத்தி போதினி திறவுகோல் என பெயரிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றோம். ஏனெனில், நமது கிரந்தமானது ஒவ்வொருவருக்கும் எவ்விதத்திலும் எக்காலத்திலும்,

செய்கையும், உபயோகமும்:— ஆதம சக்தியைச் சுததியாக்கி விர்ததியாக்கும்; பந்தங்களை யவிழ்க்கும்; இருதயததிற்கு ஆனந்ததகை யுண்டாக்கும்; வெண்ணரம்புகளையும், மூளையையும் பலப்படுததும்; பஞ்சேந்திரிய சக்திகளை அதிகப்படுததும்; இரைப்பை, ஈரல், குடல்கள் இவைகளைப் பலப்படுததும்; வாயுவைக் கண்டிக்கும்; பைததியததை நீக்கும்; கருப்பையின் குளிர்ச்சிக்கும் உபயோகப்படும்.

(துர்க்குணம்) சூட்டுடம்பிற்கு உதவாது. (பரிகாரம்) பச்சைக் கர்ப்பூரமும் ரோஜாப்பூவும் (பதில்) இலவங்கப் பட்டை, இலவங்கம் — குங்குமப்பூ ஆகியவைகளின் யோகம். (பிரமாணம்) விராகனெடை — முக்கால், 7/8 (கிரகசம்பந்தம்) சூரியன்.

அக்ரோட்

இதற்குத தமிழில் அக்குரோட்டு; சதுர்பீஜம் என்றும், சமஸ்கிருததில் பிரீந்துபல் என்றும் அரபியில் ஜவுஸ் என்றும் பார்ஸியில் சார்மக்ஸ் என்றும், இங்கிலீஷில் வால்நட் (Walnut) என்றும் பெயர்.

பிறப்பு:— பெர்ஷியா, காபூல் முதலிய தேசங்களில் விசேஷமா யுண்டாகின்றது. இது இந்து தேசததிலுமுண்டாகின்றது. ஆனால் அதன் பரப்பு அதிக சிறிதாகவும், அதிக சதைப்பற்றில்லாததாகவுமிருக்கிறது. இதற்கு நாட்டு அக்ரோட்டு, இந்தியன் வால்நட் (Indian Walnut) என்று பெயர். இது மதிராஸ் மருந்து கடைகளிலும், மற்றும் சில வியாபாரிகளிடததிலும் விற்கப்படுகின்றது.

(உருவம்) இதுவொரு பெரிய மரததின் கொட்டைகள், இதையுடைததால் உள்ளே பாதம், பிஸ்தா முதலியவைகளைப் போன்ற பருப்பு இருக்கும்; இது நாலுபாகங்களாய்ப் பகுக்கப்பட்டிருக்கும், இதற்கே அக்ரோட் பருப்பு என்று பெயர். (வருணம்) கொட்டை செஞ்சாயல், பருப்பு வெண்மை, (சுவை) உருசியானதாகவும், நெய்ப்பசையுள்ளதாகவும், சற்று இலைப்பானதாகவு மிருக்கும். (இயற்கைக் குணமும்) தரமும், 2ம் தரச்சூடும், 1ம் தர வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— மிகவும் பரிசுததமான ஆகார சுபாவமுடையது; மலததை இளக்கும்; துர்நீர்களை நீக்கும்; போக சக்தியை அதிகப்படுததும். அஜீரணததை யுண்டாக்காது; இராஜ உறுப்புகளையும் பலப்படுததும்; இதன் பருப்பை வறுததுச் சாப்பிட்டா குளிர்ச்சியினாலுண்டான இருமல் தணியும்.

(துர்க்குணம்) சூட்டுடம்பிற் காகாது. (பரிகாரம்) மாதுளம்பழ ரசம். (பதில்) சாரப்பருப்பு, சில்கோஜாப் பருப்பு. (பிரமாணம்) துலா 1—2 (கிரக சம்பந்தம்) சந்திரன், சனி.

அப்திமூன்

இதற்கு உருது பாஷையில் ஆகாஸ்பேல் என்றும், அமல்பேல் என்றும், தமிழில் அந்தரக்கொடி என்றும், இங்கிலீஷில் இண்டியன் டாடர் (Indian Dader) என்றும் பெயர். அப்திமூன் என்பதற்கு உன்மத்த நிவாரணி என்று அர்த்தம்.

(பிறப்பு) இது மலைகள், மைதானங்கள், தென்மேற்கிலுள்ள அக்ரீத் என்னும் தீவு முதலிய இடங்களில் விளைகின்றது.

(உருவம்) முதலியவைகள் 2ம் பாகத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன.

இது சாதாரணமாய் மத்ராஸ் மருந்துக் கடைகளில் விற்கப்படுகிறது.

அம்பர்

இதற்கு இங்கிலீஷில் ஆம்பர்கிரிஸ் (Ambergris) என்றும், மற்ற எல்லாப் பாஷைகளிலும் அம்பர் அல்லது ஆம்பர் என்றும் சொல்லப்படுகிறது; இது அதிக விலையுயர்ந்த சரக்காகையால், இதன் உற்பத்தி, லக்ஷணம், பரீக்ஷை முதலியவைகளைப் பற்றிச் சற்றுவிபரமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் ஆவசியகம். (1) இது பூமியில் உற்பத்தியாகிற ஒருவகை தராசத்தே. ஆனால் (2) இதை சிலர் ஒருவகை மரப்பிசின் என்றும், (3) சிலர் கடலிலுள்ள ஒருவகைப் பிராணியின் எச்சம் என்றும், (4) சிலர் கடலில் பெய்யும் ஒருவகைப் பனி உறைந்துண்டாகிற பனிக்கட்டி யென்றும், (5) சிலர் ஒருவகை தேனீக்களினால் சேகரிக்கப்பட்ட மெழுக்கென்றுஞ் சொல்லுகிறார்கள்.

1. இது பூமியில் உற்பத்தியாகிற சமுத்திரத்திற்கு அடித்துக் கொண்டு வரப்பட்டுத் தண்ணீரின் சக்தியினால் அணுக்கள் ஒன்றோடொன்றாய்ச் செறியப்படுவதினால் புரைகளுள்ளதாய் இறுகி, உருண்டை வடிவமாகவும், மற்றும் பல ரூபங்களாகவும் கரையில் ஒதுக்கப்படுகிறது. அல்லது, கடற்களிலுள்ள கனி (Mine) களில் மோமியாயி என்னும் இரண சஞ்சீவி முதலிய மருந்துகளைப் போல உற்பத்தியாகி வெளிப்பட்டுத் தண்ணீரில் மிதக்கின்றது. அங்கு அது தண்ணீரால் அடிக்கடி பலமாய் அலைக்கப் படுவதினால் அணுக்கள் ஒன்றோடொன்று செறிந்து புரைகளுள்ளதாய் இறுகி, உருண்டை வடிவமாகவும், பல ரூபங்களாகவும் கரையில் ஒதுக்கப்படுகிறது. எந்தவிதமாயினும் இது பூமியில் உற்பத்தியாகிற ஒருவகை தராசத் தென்பதில் சந்தேகமில்லை.

2. இது ஒரு மரப்பிசின் என்று சொல்லுகிறவர்கள், அவ்வகை மரங்கள் சிலவிடங்களில் காணப்பட்டிருப்பதாகவும், அம்மரங்கள் பூமியிற் புதைந்து கிடக்கும் போது அவற்றில் அம்பர் கண்டெடுக்கப்பட்டிருப்பதாகவும், சில அம்பர் கட்டிகளில் பல கிருமிகளும், மரச்சக்கைகளும் காணப்பட்டிருப்பதாகவும் சொல்கின்றார்கள்.

3,4. கடல் பிராணியின் எச்சமென்றும், பனிக்கட்டி யென்றும் சொல்பவர்களின் அத்தாட்சிகள் அதிக உறுதி யானவைகளாகவும் அதிகமாய் நம்பத்தக்கனவைகளாகவும் காணப்படவில்லை.

5. ஒருவகை தேன்மெழுக்கென அபிப்பிராயப்படுகிறவர்கள் சொல்கிறதாவது:—சில தீவுகளிலுள்ள சோலைகள் நன்றாய்த் துளிர்த்துப் புஷ்ப்பித்து இருக்குங் காலங்களில் ஒருவகைத் தேனீக்கள் தேன்கூடு கட்டி தேன் வைக்கின்றன. ஆனால் அக்கூடுகள் மழை காலங்களில் மழையினாலும், காற்றினாலும் சிதற அடிக்கப்பட்டு, நீரோட்டத்தின் மூலமாய் சமுத்திரத்திற்கு அடித்துக் கொண்டு வரப்படுகின்றன. அப்போது அத்தேன் கூடுகளிலுள்ள தேனானது ஜலத்தில் கரைந்து போகிறபடியால் அதிலுள்ள மதுரம் எடுபட்டுப் போய் விடுகிறது. மிகுதியாகிய மெழுக்கானது வெயிலின் தீக்ஷணியத்தினாலும், அடிக்கடி அலைக்கும் தண்ணீரின் சக்தியினாலு முன்னர் உருகிப் பரவி விடுகின்றது; பின்பு அந்த ஜலத்தின் சக்தியினாலேயே அணுக்கள் ஒன்றோடொன்றாய்ச் செறியப்பட்டுப் புரைகளுள்ளதாயிறுகி உருண்டை வடிவமாகவும், மற்றும் பல வடிவங்களாகவும் கரைகளில் ஒதுக்கப்படுகின்றது.

மேற்படி தேன்கூடுகள் மேற்கண்ட விதமாய் அடித்துக் கொண்டு வரப்பட்டவுடன் கண்டெடுக்கப்பட்டால் அது மாவைப்போலவும், வாயிலிட்டால் மதுரமாகவும், ஒருவித சுகந்த வாசனை யுள்ளதாகவு மிருக்கின்றன. இவ்விதம் முக்கியமாய் யமன் தேசம் மஹல்ல தீவு (Maldives) ஹனாரமவுத் முதலிய கடற்கரையோரங்களில் கண்டெடுக்கப்படுகின்றன. அவ்விடத்திய அரசாங்கத்தார்களும், தனிகர்களும் அதிக விலை கொடுத்து வாங்கித் தாங்களே உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். அதனால் தாதுவிருத்தி, ஆன்மசக்தி விருத்தி, தேகபல விருத்தி முதலிய அனேக ஒப்பற்ற சுகுணங்களுண்டாகி சுகாநந்தத்தை அனுபவித்து வருகின்றார்களாம் இன்னும் ஒருதடவை ஒரு அம்பர்க் கட்டியைப் பகுத்த போது அதில் நூறு பூச்சிகளுக்கதிகம் காணப்பட்டது. அவை தேனீக்களைப் போலவுமிருந்ததுமன்றி அவற்றிற்குக் கடினமும் பளிங்கைப் போன்றதுமான சிறகுகளிருந்தன. இவ்விதம் பல பல தடவைகளில் கண்டதாகவும் எழுதியிருக்கிறார்கள் என்பதே.

அம்பரின் வகைகள்:— பரிசுத்தமானதாய், மஞ்சள் வருணமாக, அல்லது மஞ்சளும் சிவப்புங் கலந்த சாயலாக அல்லது பொன் சாயலாக அணுக்கள் ஒன்றன்பின் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்ட விதமாக செறியப்பட்ட புரைகளுள்ளதாயும், விருத்த வடிவமுள்ளதாயும், எளிதில் ஒடியத் தக்கதாகயும் இருப்பதற்கு பொன்னம்பர் அல்லது, அம்பரே அஷ்ஹப் என்று பெயர். 2. இக்குணங்களோடு உருண்டை வடிவமாயிருப்பதற்கு ஜேண்டு அம்பர், அல்லது ஷமாமா அம்பர் என்று பெயர். 3. மண், மணல் முதலியவை கலந்திருப்பதற்கு பூவாலுக அம்பர் என்று பெயர். இது தண்ணீரில் ஆழும். ஆகையாலிதைச் சுத்தி செய்தே அவிழ்தங்களிற் சேர்க்க வேண்டும். 4. கருஞ்சாயலாயிருப்பதுடன் கசகசாவைப் போன்ற சிறு வெண்புள்ளிகள் நிறைந்திருப்பதற்கு கசகசா அம்பர் என்று பெயர். 5. பலவகை ரூபமாய் அதாவது படலம் படலமாய் இருப்பதற்கு பலகை அம்பர் என்று பெயர். 6. அம்பர் மீன் என்னும் ஒருவகை மீனானது முன் கண்ட விதமாய்க் கடலில் மிதந்து வரும் அம்பரை அதிக ஆவலாய் விழுங்கும். ஆனால் அது தன் வயிற்றில் ஜீரணமாகாதாகையால் மீன் இறந்து போய், அல்லது வயிறு உப்பி மிதந்து கரைகளில் ஒதுங்குகின்றது. இந்த விஷயம் தெரிந்தவர்கள் அதை உடனே எடுத்துக் கீறி வயிற்றிலிருப்பதை எடுத்துக் கொள்வார்கள். இதற்கு மீனம்பர் என்று பெயர். இது அதிக இலேசாகவும், அனேகமாய்க் கருமையாகவுமிருக்கும். இது சில சமயங்களில் விஷ தருமம் அடைவதுண்டு. 7. மேற்கண்ட எந்தவகைகளிலும் அறக்கருமையாய் இருப்பதற்கு கிருஷ்ண அம்பர் அல்லது ஹபஷி அம்பர் அல்லது, நீகிரோ அம்பர் என்று பெயர்.

பொன்னம்பரில் உயர்ந்த இனமாகிறது வெண்மஞ்சள் சாயலாகவும், வாயிலிட்டு மென்றால் ரூமிமஸ்தகி, பாதாம் பிசின் ஆகியவைகளைப் போல வழவழப்பும், நெய்ப்பசையுமுள்ளதாய் நொறுங்கித் தூளாகாமல் நசுங்குங் குணமுள்ளதும், ஊசியை நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அதிற் சொருகினால் சுகந்த வாசனை உண்டாவதும், ஊசி சொருகின விடத்தில் தைலத்தைப் போன்ற வஸ்து உண்டாகாமல், உள்ளும் புறமும், ஒரே தன்மையாயிருப்பதுவும், அவ்விடத்தில் கொஞ்ச காலத்திற்குப் பின் வெண்சாயலான புள்ளிகள் தோன்றுவதுமே, 2. இதற்கு அடுத்த இனம் நீலவர்ணமுள்ளது. அதாவது பசு மஞ்சள் சாயலான வர்ணமுள்ளது. 3. இதற்கடுத்தது பசுஞ் சாயலானது. 4. இதற்கடுத்தது கசாகசா அம்பர். 5. இதற்கடுத்தது பலகை அம்பர். 6. இதற்கடுத்தது கருமையான பலகை அம்பர், 7. இதற்கடுத்தது மீனம்பர், 8. இதற்கடுத்தது அறக்கருமையாயிருப்பதே.

அம்பரில் வைப்புமுண்டு, சுண்ணாம்பு, மட்டிப்பால், தேன் மெழுகு இவற்றை வேண்டிய அளவு சேர்த்து அரைத்து கொஞ்சம் கருப்பு

அம்பரும் சேர்த்துப்பலவகை ரூபமாகச் செய்திருப்பதுமுண்டு. அல்லது மேற்கண்ட வஸ்துக்களை அரைத்து உருண்டையாய்ச் செய்து அதன் மேல் நல்ல அம்பரை உருக்கி நாலு ஐந்து புரைகளாயேற்றி இருப்பதுமுண்டு.

அம்பரின் பரீக்ஷை அம்பரைக் கொஞ்சமெடுத்து நசுக்கினால் தூளாகாமல் மெழுகைப் போல் மிருதுவாய், தட்டையாய் நசுங்க வேண்டியது அதை நெருப்பில் போட்டால் சுகந்த வாசனைப் புகையுண்டாக வேண்டியது ஊசியை நெருப்பில் காய்ச்சிச் சொருகினால் சுகந்த வாசனையுண்டாவதுடன் முன் விவரித்தபடி தைலப்பசை யுண்டாகாமலிருக்க வேண்டியது இவைகளே முக்கிய பரீக்ஷைகள்.

வைப்புச் சரக்கிலும் உண்மைச் சரக்கிலும் வித்தியாசம் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகையால் அதையொடித்து அது புரைகளுள்ள தாயிருக்கிறதாவென பரீக்ஷித் தறிவதே உத்தமமான வகை.

அம்பரை யுபயோகப்படுத்தும் விதமும் அதைச் சுத்தி செய்யும் விதமும்:— அம்பரைச் சிறு துண்டுகளாகச் செய்து பீங்கான் பாத்திரத்திற் போட்டு தேகத்திற்கு ஏற்றவிதமாய் பாதம் எண்ணெய் அல்லது, பிஸ்தா எண்ணெய் அல்லது, ரோஜாப்பூ எண்ணெய் அதில் விட்டு, வேறொரு பெரிய பாத்திரத்தில் அரைவாசி ஜலத்தை வார்த்து அதில் மேற்படி பீங்கான் பாத்திரத்தை மிதக்கும்படி விட்டு அடுப்பேற்றி எரிக்க வேண்டியது. அதாவது சல யந்திரத்தில் வைத்து எரிக்க வேண்டியது. அம்பர் எல்லாம் நன்றாய்க் கரைந்த பின் எடுத்து சுத்தமான மெல்லிய வஸ்திரத்தில் வடிகட்டிப் பிழிந்து திப்பி நீக்கி மருந்துகளுடன் சேர்த்துக் கொள்ள வேண்டியது. வேறொரு விதம்: அம்பரை சிறுதுண்டுகளாய்ச் செய்து அதற்குச் சமனெடை ஆற்று மணல் சேர்த்து, புட்டியில் போட்டு குப்பிப் புடத்தைலமா யிறக்கிச் சேர்த்துக் கொள்ள வேண்டியது. அம்பரைச் சிறு துண்டுகளாய்ச் செய்து, அதற்குச் சமனெடை சருக்கரையை அல்லது, கற்கண்டைச் சேர்த்துக் கல்வத்திலிட்டு நன்றாய் பொடித்து மருந்துகளுடன் சேர்த்துக் கொள்ள வேண்டியது.

(சுவை) சிறுகசப்பு. (இயற்கைக் குணமும் தரமும்) 2-ஆம் தரச்சூடும் முதல் தரவறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— ஆன்ம சக்திகளைப் பாதுகாக்கும்; மூவகை சக்தியையும் பலப்படுத்தும்; ஆனந்தத்தை யுண்டாக்கும்; தேகசுபாவச் சூட்டை விர்த்தியாக்கும்; பஞ்சேந்திரியங்களின் சக்திகளை உள்ளும் புறமும் விர்த்தியாக்கும்; வயது சென்றவர்களுக்கு இது அதிக சிரேஷ்டமானது. மூளை, இருதயம் ஈரல், இவற்றின் வியாதிகளுக்கு மிகவும் உபயோகப்படத்தக்கது. மார்பு அதிர்ச்சி ரோகம், விஷபேதி ரோகம் இவைகளை நீக்கும்; பந்தங்களை யவிழ்க்கும்; போக சக்தியை

யுண்டாக்கும்; இதை ஆண் குறியில் பூசுவதினாலும் போக சக்தியை விர்த்தி செய்வதுடன் போகானந்தத்தையு முண்டாக்கும்.

(துர்க்குணம்) சிறு குடல்களுக்கும், பித்ததேகிகளுக்கு முதவாது. (பரிகாரம்) கருவேலம் பிசினும் பச்சைக் கற்பூரமும், (பதில்) கஸ்தூரியும் குங்குமப்பூவும்; (பிரமாணம் குன்றிமணியெடை 2—3) (கிரக சம்பந்தம்) சூரியன்.

அம்ரூத்

இதற்கு அரபியில் கும்மஸ்றா என்றும், பார்ஸியில் அம்றூத் என்றும், ஹிந்துஸ்தானியில் நாஷ்பாதி என்றும், இங்கிலீஷில் பியர் (Pear) என்றும் பெயர்.

பிறப்பு:— சீனா, பலக் முதலிய தேசங்களிலும், குளிர்ச்சியான சிலவிடங்களிலும் உண்டாகிறது.

உருவம்:— இது ஒருவகை கொய்யாப் பழவகை, ஆனால் சிலர் சொல்லுகிறது போல கொய்யாப் பழமல்ல (வருணம்) வெண்சாயலான மஞ்சள் வருணம். (சுவை, மணம்) ஒருவகைப் பழம் இனிப்பாயிருக்கும்; ஒருவகையான புளிப்பு; சுகந்த வாசனை. (இயற்கைக் குணமும் தரமும்) மதுரமான வகை, சற்று சூடானது, புளிப்பானது, குளிர்ச்சியும் கொழுமையுமானது.

செய்கையும், உபயோகமும்:— சந்தோஷம், பலம் இவற்றை யுண்டாக்கும்; முதலில் மலத்தை இளக்கிப் பின்பு மலத்தைக் கட்டின போதிலும் அசுத்த சத்துக்களை நீக்கும். இருதயம், இரைப்பை, தீபனசக்தி இவைகளைப் பலப்படுத்தும்; இருதய அதிர்ச்சி ரோகத்தை நீக்கும்.

துர்க்குணம்:— சீதளதேகிகளுக்குதவாது; இரைப்பை துர்ப்பலப் பட்டவர்களுக்கு வயிற்றுப்பிசத்தை யுண்டாக்கும் (பரிகாரம்) இஞ்சி முறப்பாவும் சோம்பும் (பதில்) பேதானாப்பழம். (பிரமாணம்) பலம் 2—3 (கிரகசம்பந்தம்) சந்திரன்.

விலை, புதிதான பழம் இங்கு அகப்படுவது கடினமாகையால், சீனதேசத்திலிருந்து தேனில் பதமிட்டு வரும் பழங்களை உபயோகித்துக் கொள்ளலாம். இது இங்கிலீஷ் ஷாப்புகளிலும், முறப்பாக்கள் விற்கும் கடைகளிலும் கிடைக்கிறது.

அல்ஸி

இதற்கு அரபியில் பஜ்ருல்கத்தான் என்றும், பார்ஸியில் துக்மேஜகீர் (Zagheer) என்றும், இந்துஸ்தானியில் அல்ஸி; தீஸி என்றும்;

தமிழில் அலஸி, நாட்டு ஆளிவிதை, அல்லது பெரு ஆளிவிதை யென்றும், தெலுங்கில் மதனகிஞ்சலு என்றும், சமஸ்கிருதத்தில் அதஸி; நீலபுஷ்பீ என்றும், இங்கிலீஷில் லின்ஸீட் (Linseed) (Flaxseed) பிளாக்ஸ் ஸீட் என்றும் பெயர்.

பிறப்பு:— இது இந்தியாவில் பலவிடங்களில் இதர தானியங்களைப் போல் விளைவிக்கப்படுகிறது.

உருவம்:— இது ஒரு செடியின் விதை, இது சிறிதாகவும் சற்று அகன்று நீண்டதாகவுமிருக்கும். இதில் அதிக சிறிதான இனமும் உண்டு; அதற்கு அரபியில் ஹப்புர் றஷாத் அல்லது ஹஸுர்ப் என்றும், பார்ஸியில் துக்மேதுர்றா தேஜக் என்றும், இந்துஸ்தானியில் ஹாலிம் அல்லது ஹலீம், அல்லது சன்ஸர் என்றும், தமிழில் ஆளிவிதை அல்லது சீமை ஆளிவிதை, அல்லது சிறு ஆளிவிதை என்றும், தெலுங்கில் ஆடியாலு என்றும் பெயர். (வருணம்) சிவப்பு (சுவை) இலைப்பு, (இயற்கைக் குணமும் தரமும்) 2ம் தரக்குளிர்ச்சியும் வரக்ஷியும்; சிலருடைய கருத்தின்படி 2ம் தரச் சூடு; சிலருடைய கருத்தின்படி 3ம் தரச்சூடு.

செய்கையும், உபயோகமும்:— இதின் கோழையானது கப இருமலை நீக்கும். மார்பிலுள்ள சளி முதலியவைகளை நீக்கி மார்பைச் சுத்தி செய்யும், மலத்தை இளக்கும்; வீக்கங்களைக் கரைக்கும்; நீர்க்குண்டிக்காய், நீர்ப்பை இவைகளிலுள்ள இரணத்தை யாற்றும்; நீர்க்கட்டை யுடைக்கும். இந்திரியத்தை தடிப்பாக்கும்; நீர்க்குண்டிக்காய், நீர்ப்பை இவைகளிலுள்ள கற்களை உடைத்து வெளிப்படுத்தும்.

துர்க்குணம்:— கண்பார்வை, ஜீரணம், நீர்க்குண்டிக் காய்கள் இவைகளுக்காகா (பரிகாரம்) கொத்துமல்லி விதை, காடிஷர்பத்து, தேன், (பதில்) வெந்தயம், (பிரமாணம்) விராகனெடை இரண்டரை — மூன்று (கிரகசம்பந்தம்) சந்திரன்.

அனிஸூன்

இதற்கு அரபியில் அனிஸூன் என்றும், பார்ஸியில் பாதியனே றூமி என்றும், ஹிந்துஸ்தானியில் றந்தனீ என்றும், தமிழில் றூமிச்சோம்பு என்றும், இங்கிலீஷில் பிம்பிநேல்லா (Pimpinella) என்றும் பெயர்.

பிறப்பு:— இது இந்தியாவில் பங்காளம் முதலிய விடங்களிலும் விளைந்தாலும் றூம் முதலிய தேசங்களிலிருந்து வருவதைப் போல அவ்வளவு விசேஷ குணமுள்ளதாய்க் காணப்படவில்லை. இது யூநாநி மருந்துக் கடைகளில் சாதாரணமாய்க் கிடைக்கிறது.

உருவம் முதலியவைகள் 2ம் பாகத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன.

அஜமோதா ஓமம்

இதற்கு அரபியில் பஜ்ருல் கறப்ஸ் என்றும், ஹிந்துஸ்தானியில் அஜ்முத்; அஜ்முதா என்றும், தமிழில் அசமதாகம்; அசம்தா வோமம் என்றும், தெலுங்கில் அஜுமோத ஓமம்; அஷுமதாக வோமம் என்றும், இங்கிலீஷில் இண்டியன் பார்ஸ்லீ ஸீட்ஸ் (Indian Parsly Seeds) என்றும் பெயர்.

பிறப்பு:— இந்தியாவின் வடபாகம் முதலிய விடங்களிலிருந்து கொண்டுவரப் படுகிறது. இது சாதாரணமாய் இங்கு எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது.

உருவம்:— றூமி சீரகத்தைப் போன்ற உருவமுடைய விதைகள். (வருணம்) கறுப்பு. (சுவை) காரம்; விறுவிறுப்பு. (இயற்கைக் குணமும் தரமும்) 2ம் தரச்சூடும் வரக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:— வரக்ஷியான இருமல், மேல்மூச்சுடன் கூடிய இருமல், உள் அவயவத்தின் குளிர்ச்சி ஆகியவைகளுக்கு உபயோகப்படும். வாயு, உப்பிசம் இவைகளைக் கண்டிக்கும். ஈரல், மண்ணீரல் இவற்றின் நரம்புகளின் பந்தங்களை நீக்கும்; நீரைப் பெருக்கும், கல்லடைப்பை நீக்கும், பசிதீபனத்தையும் போகசக்தியையு முண்டாக்கும்.

(துர்க்குணம்) கெட்ட ஆவிகளை யுண்டாக்கும், காக்கை வலிக்காரர்களுக்கு உதவாது (பரிகாரம்) றூமிச் சோம்பும், றூமி மஸ்தகியும். (பதில்) குறாசாணி ஓமம், (பிரமாணம்) விராகனெடை ஒன்றரை — இரண்டரை. (கிரகசம்பந்தம்) சனி.

ஆலுபுகாரா

இதற்கு அரபியில் இஜாஸ் என்றும், பார்ஸியில் ஆலு என்றும், ஹிந்துஸ்தானியில் ஆலுபுகாரா என்றும், தமிழில் ஆல்பொகடா பழம் என்றும், தெலுங்கில் ஆல்பொகடா பண்டுலு என்றும் சமஸ்கிருதத்தில் அல்லூகா; அல்லூசா என்றும், இங்கிலீஷில் புறூன்ஸ் Prunes; பிரென் ப்லம்ஸ்; Frenen Plums என்றும் பெயர்.

பிறப்பு:— இது புகாரா முதலிய வடதேசங்களிலிருந்து இந்தியாவுக்கு ஏராளமாகக் கொண்டு வரப்படுகிறது. இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

உருவம் முதலியவைகள் 2ம் பாகத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன.

ஆஸ்

இதற்கு உருது பாஷையில் உதேஹ்றா என்றும், பார்ஸி பாஷையில் மூர்த் என்றும் பெயர்.

உருவம்:— இது மாதுள மரத்தைப் போன்ற ஒரு மரம்; இதன் இலை பச்சை வருணமாகவும், தடித்ததாகவும், குட்டையாகவும், அதிக சுகந்த வாசனை யுள்ளதாகவும், சிறுகசப்பும் துவர்ப்புமுள்ளதாகவு மிருக்கும். இது மற்ற மரங்களைப் போல இலையுதிர் காலங்களில் இலையுதிர்க்கிற தில்லை. பூ வெண்சாயலாய் சுகந்த வாசனையுள்ளதாயிருங்கும். அதன் காய் ஆரம்பத்தில் பச்சையாகவும், பழுத்தபின் கருப்பாகவும், சிறு தித்திப்புடன் சிறுகசப்பாய் சற்று துவர்ப்புள்ளதாகவும் இருக்கும். இதன் விதையும் வேரும் அவுஷதங்களில் அதிகமாய் உபயோகப்படுத்தப்படுகின்றன.

ஆஸ் விதை

இதற்கு அரபியில் அப்புல் ஆஸ் என்றும், பார்ஸில் துக்மே மூர்த் என்றும் பெயர்.

பிறப்பு:— இது வடதேசங்களிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரப்படுகிறது; இது மதராஸ் மருந்துக் கடைகளிலெல்லாம் சாதாரணமாய்க் கிடைக்கும்.

உருவம்:— ஒரு மரத்தின் காயின் விதைகள், வருணம் — கறுப்பு. சுவை — சிறுகசப்பும் துவர்ப்பும். இயற்கை குணமுந் தரமும் — சாங்கரிக சக்தியுடையது.

செய்கையும், உபயோகமும்:— சூட்டினா லுண்டான இருமலைத் தணிக்கும்; மலப்போக்கைக் கட்டும்; வயிற்றுக் கடுப்பைச் சாந்தப்படுத்தும்; இருதயத்தைப் பலப்படுத்தும்; இதன் எண்ணெய் மாந்திரீக விஷயங்களுக்குக் குபயோகப்படும்.

துர்க்குணம் — தலை நோயுண்டாகும், பீனிச ரோகிகளுக்கு உதவாது. பரிகாரம் — பனப்ஷா பூ. (பதில்) கருவேலம்பிசினும் மருதணைப் பூவும். பிரமாணம் — விராகனெடை — ஒன்றரை, இரண்டேகால். கிரகசம்பந்தம் — சனி.

ஆஸ் வேர்

இதற்கு அரபியில் அஸலுல் என்றும், பார்ஸியில் பேகே ஆஸ் என்றும் பெயர்.

பிறப்பு:— இது வடதேசங்களிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டு எல்லா யூநாநி மருந்துக் கடைகளிலும் விற்கப்படுகிறது.

உருவம்:— இது ஒருவகை வேர். வருணம் — கருஞ்சாயலானது. சுவை — சிறுகசப்புடன் துவர்ப்பு. இயற்கை குணமும் தரமும்:- சாங்கரிக சக்தியுடையது.

செய்கையும், உபயோகமும்:— இது சுகந்த வாசனையுள்ளபடியால் இருதயத்தைப் பலப்படுத்துகிறது. இரைப்பை, ஆன்மசக்தி ஆகியவற்றையும் பலப்படுத்துகிறது. பெரும்பாடு, சீதபேதி ஆகியவைகளுக்குமாம். நீரைப் பெருக்கும். வீக்கங்களைக் கரைக்கும்.

துர்க்குணம்:— தலை நோயுண்டாகும். பரிகாரம் — பனப்ஷாபூவும், கருவேலம் பிசினும் (பதில்) கருவேலம்பிசினும் மருதாணிப் பூவும். பிரமாணம் — விராகனெடை இரண்டரை, கிரகசம்பந்தம் — சனி.

இனிப்புப் பூசணிக்காய்

இதற்கு ஹிந்துஸ்தானி பாஷையில் மீடாகந்து; கோல் கந்து (Golkandu) என்றும், அரபியில் யக்தீன் என்றும், தெலுங்கில் கும்மடிகாய் என்றும், தமிழில் தென் தேசங்களில் பறங்கிக்காய் என்றும், மத்ராஸ் முதலிய விடங்களில் பூசணிக்காய் என்றும், இங்கிலீஷில் (Pumpkin) பம்கின் என்றும் பெயர். ஆனால் தென்தேசங்களில் கல்யாண பூசணிக்காய்க்குச் சாதாரணமாய் பூசணிக்காயென வழங்கப்படுகிறது; இதற்குச் சமஸ்கிருதத்தில் கூஷ்பாண்ட என்றும், அரபியில் மொஹநபா என்றும், ஹிந்துஸ்தானியில் றுமிகந்து; பேடா என்றும், தெலுங்கில் பூடிதேகும்மடி என்றும் பெயர். இனிப்புப் பூசணிக்காய்களின் விதைகள் தான அவுஷதங்களுக்கு முக்கியமா யுபயோகப்படுகின்றது.

இனிப்புப் பூசணிக்காய் விதை

மேற்படி பற்பல பாஷைகளின் பெயர்களுடன் அவ்வப் பாஷையின் விதையென்னும் வார்த்தையின் பிரதி பதத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

உருவம்:— இவ்விதை சற்றுத் தட்டையாய்க் குவிந்து நீண்டிருக்கும். வருணம் — சற்று செஞ்சாயலான வெண்மை. பருப்பு வெண்மையாயிருக்கும். சுவை — உருசியானது. இயற்கைக் குணம்; தரம் — 2ம் தரக் குளிர்ச்சியும் கொழுமையும்.

செய்கையும், உபயோகமும்:— இரத்தக் கொதிப்பு, ஈரலின் சூடு, தாகம், அஸ்திச்சூடு ஆகிய இவற்றைத் தணிக்கும். தாது க்ஷீணம் முதலியவைகளுக்குமாம்.

துர்க்குணம்:— சீதள தேகிகளுக்கு உதவாது. பரிகாரம் — சோம்பு. பதில் — கலியாண பூசணி விதைப் பருப்பு, பிரமாணம் — பருப்பு பலம் கால், அரை. கிரகசம்பந்தம் — சந்திரன்.

விலை:— இது மதராஸ் மருந்துக் கடைகளில் அரிதாய்க் கிடக்கிறது. ஆனால், பறங்கிக்காய் வியாபாரிகளிடத்தில் கிராக்கியாய்க் கிடைக்கும். தென் தேசங்களில் சாதாரணமாகவும், சரசமாகவும் கிடைக்கும்;

இஸ்பகோல் விதை

இதற்கு அரபியில் பஜருல்கதூனா என்றும், பார்ஸியில் இஸ்பர்ஜா (Isparza); ஷிகம்தரீதா என்றும், தமிழில் ஸ்கோல் விதையென்றும், இங்கிலீஷில் (Spogel seeds) ஸ்போகல் சீட்ஸ் என்றும், (Plantago Ispagola) பிளாண்டகோ ஸ்பகோலா என்றும் பெயர். இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

உருவம் முதலியவைகள் 2ம்-பாகத்தில் சொல்லப்பட்டி ருக்கின்றன.

உட்டங்கு

இதற்கு அரபியில் கிரீஸ் என்றும், பார்ஸியில் அன்ஜரா என்றும், ஹிந்துஸ்தானியில் உட்டங்கன் என்றும் பெயர். இது ஒரு முள் நிறைந்த செடியினம். இதன் இலைகள் பற்களுள்ளதாகவுஞ் சிறிதாகவும் அடர்த்தியாய் முள் நிறைந்ததாகவு மிருக்கும். இதன் முட்கள் அதிகம் நீண்டு கூர்மையுள்ளதாக விருக்கும். இது தேகத்தில் தைத்தால் அந்த ஸ்தானம் சிவந்து போய், தினவு, எரிவந்தம் ஆகியவைக ளுண்டாகும். இதன் பூ மஞ்சள் வருணமாயிருக்கும். மருந்துகளில் இதன் விதைதான் விசேஷமாய் உபயோகப்படுகிறது.

உட்டங்கு விதை

மேற்படி பற்பல பாஷைகளின் பெயர்களுடன் அவ்வப் பாஷையின் விதையென்னும் வார்த்தையின் பிரதி பதத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

உருவம்:— இவ்விதை மிருதுவாகவும், பிரகாசமுள்ளதாகவும், சற்று அகன்று குவிந்ததாகவும், எள்ளைப் பார்க்கிலும் சற்று பெரிதாகவுமிருக்கும். சுருக்கிச் சொல்லில் இது அனேகமாய் நாட்டு ஆளி விதையைப் போலவே இருக்கும். வருணம் — கருமையாகிய ஊதா வருணம். சுவை — இலைப்பு, ருசியாயிராது. இயற்கைக் குணமும், தரமும்—2ம் தரச்சூடும் வரக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:— வரக்ஷியினாலுண்டான இருமல், குளிர்ச்சியினாலுண்டான இருமல் ஆகிய இவற்றைக் கண்டிக்கும். நுரை ஈரலின் வியாதிகளுக்கு மிகவும் உபயோகமானது. மண்ணீரலின் வீக்கத்தை கரைக்கும். நீர்க் குண்டிக்காயின் வியாதிக்கும், பாண்டு ரோகத்திற்கு முபயோகப்படும். போக சக்தியையுண்டாக்கும். மார்பு

முதலிய விடங்களிலுள்ள அசுத்த சத்துக்களை நீக்கும். கபத்தைப் பேதி வழியாய் வெளிப்படுத்தும்.

துர்க்குணம்:— சிறு குடல்களுக்கு உதவாது. பரிகாரம் - பாதம் பிசின், கருவேலம் பிசின். பதில் - வெங்காய விதை. பிரமாணம் - விராகனெடை - ஒன்றரை. கிரகசம்பந்தம் - புதன்.

விலை:— இது யூநாநி மருந்துக் கடைகளில் சாதாரணமாய் கிடைக்கும்.

உஷ்ணா

இதற்கு அரபியில் ஷிபதுல் உஜூஸ் என்றும், பார்ஸியில் தவாஸி என்றும், ஹிந்துஸ்தானியில் சடேலா, சரீரா என்றும் பெயர். வெளி தேசங்களிலிருந்து இங்கு கொண்டுவரப் படுகின்றது. யூநாநி மருந்துக் கடைகளில் இது சாதாரணமாய்க் கிடைக்கும்.

உருவம்:— இது இலையில்லாத ஒருவகைக் கொடிகள், மரங்களிலும், தனக்கடுத்தவைகளிலும் படரும்; மெல்லிய கயிற்றைப் போல் சற்று அகலாமா யிருக்கும்; ஒன்றோடொன்று சுற்றித் திரித்துக் கொண்டிருக்கும்; இது உலர்த்தி யிங்கு கொண்டுவரப் படுகிறது. இரண்டு பக்கமும் வெண்மையாகவும், சுகந்த வாசனையுள்ளதாகவு மிருப்பது உயர்ந்த இனம், கருப்பாயிருப்பது மட்டச்சரக்கு வருணம் — கபிலவருணம். சுவை, மணம் — சிறு கசப்பு; சுகந்த வாசனை; இயற்கைக் குணம் தரமும்:— சூடுங்குளிர்ச்சியும் சமமானது.

செய்கையும், உபயோகமும்:— இது சற்று துவர்ப்புள்ளதா யிருப்பதால் பந்திக்கும் குணமுடையது; வீக்கம், வாயு இவைகளைக் கண்டிக்கும். இது தேகத்தின் எல்லாச் சக்திகளோடும் ஒத்திருந்து அவற்றைப் பலப்படுத்தும்; இதை கிஷாயம் வைத்துச் சாப்பிடுவதினால் இருதயத்தைப் பலப்படுத்தி உற்சாகத்தையுண்டாக்கும்; இருதய அதிர்ச்சி, வாந்தி, அருவருப்பு, ஈரலின் நோவு, கருப்பையின் நோவு, இவைகளுக்கு உபயோகப்படும்; இரைப்பையைப் பலப்படுத்தும், போக சக்தியை விர்த்தி செய்யும், சூதக விரத்தத்தை வெளிப்படுத்தும்.

துர்க்குணம்:— சிறு குடலுக் குதவாது. பரிகாரம் - றூமிச் சோம்பு. பிரதி - சடாமாஞ்சிலும். சந்தனமும். பிரமாணம் - விராகனெடை - இரண்டு, இரண்டரை. கிரகசம்பந்தம் - சுக்கிரன்.

உஸ்தூ குதூஸ்

இதற்கு அரபியிலும் பார்ஸியிலும் உஸ்துகுதூஸ் என்றும், தமிழில் ஆத்மரக்ஷணி யென்றும், இங்கிலீஷில் லவண்டுலா (Lavndula) என்றும் பெயர்.

இது மதராஸ் மருந்துக் கடைகளிலெல்லாம் இலகுவாய்க் கிடைக்கும்.

உருவம் முதலியவைகள், 2ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஊர்க்குருவி

இதற்கு அரபியில் உஸ்பூர் (Usfoer) என்றும், பார்ஸியில் குஞ்சிஷ்க் என்றும், ஹிந்தியில் சுடா; கோரியா என்றும், தமிழில் சிட்டுக்குருவி, அடைக்கலங்குருவி என்றும், இங்கிலீஷில் (Sparrow) என்றும் பெயர். ஆனால் சில ஊர்களில் ஊர்க்குருவியென கோட்டான் பக்ஷிக்குச் சொல்கிறார்கள்; இங்கு கோட்டான் பக்ஷியன்று.

பிறப்பு:— இப்பக்ஷிகள் பெரும்பாலும் எல்லாத் தேசங்களிலும் உண்டு. வேட்டைக்காரர் முதலியவர்கள் வலை முதலிய கருவிகளைக் கொண்டு பிடித்து விற்கிறார்கள். வீட்டுக்கடுத்த மற்ற பக்ஷிகளைப் போல இதையும் வளர்ப்பதுமுண்டு. வளர்ப்பதற்கு நாட்டுக் குருவியென்றும், சுயேச்சையாய்த் திரிவதற்குக் காட்டுக்குருவி யென்றும் பெயர். அவுஷதத்திற்கு காட்டுக்குருவியே சிரேஷ்டமானது, அதிலும் கொழுத்திருப்பது உத்தமமானது; அது அகப்படாவிட்டால் நாட்டுக் குருவியை உபயோகிக்கலாம்; இது மதராஸில் ஜெனரல் மார்க்கட்டிலும், குஜிலியிலும் வேட்டைக்காரர்களிடத்தில் கிடைக்கிறது.

உருவம்:— இது ஒரு சிறிய பக்ஷி; காட்டுக்குருவியின் உடலானது சற்று பெரிதாகவும், மூக்கு நீண்டு மெல்லியதாகவுமிருக்கும்; உருவத்தில் இது நாட்டுக்குருவியைப் பார்க்கிலும் கொஞ்சம் நீண்டதாகத் தோற்றும். வருணம் — இதன் மாமிசம் கபில நிறம். சுவை — இலைப்பு. இயற்கைக் குணமும், தரமும் 2ம் தரச்சூடும் வரக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:— போக இச்சையை யுண்டாக்கும். தேகத்தைக் கொழுப்பிக்கும், மலத்தை இளக்கும், சுத்தமான ஆகார சுபாவமுடையது, இரைப்பையைப் பலப்படுத்தும், நீர்ப்பாண்டு, பக்ஷவாதம், ஈரல், துர்ப்பலம் இவைகளுக்கு உபயோகப்படும், கோசத் தளர்ச்சியை நீக்கி, அதை பலப்படுத்தும்.

துர்க்குணம்:— சூடான தேகிகளுக்கும், சிறுகுடல்களுக்கும் ஆகாது. பரிகாரம் — மாதுளம்பழ ரசம்; காடி ஷர்பத்து. பிரதி — காடை, பிரமாணம் — ஜீரண சக்திக்கு ஏற்ற அளவு. கிரகசம்பந்தம் — சனி.

எலுமிச்சந் துளசி

இதற்கு அரபியல் பரஞ்ச்மிஷ்க் என்றும், பார்ஸியில் பாலங்கூயேகுர்த் என்றும், ஹிந்துஸ்தானியில் ராம்துல்ஸி என்றும், சமஸ்கிருதத்தில் ராமதுளசி யென்றும், தெலுங்கில் நிம்மதுளசி யென்றும்,

மலையாளத்தில் காட்டு துத்துவா என்றும், இங்கிலீஷில் (Dorema Ammonimacum) டோரிமா அம்மோனிமாக்கம் என்றும் பெயர்.

பிறப்பு:— இது மலைநாடு, மைதானம், காடு முதலான விடங்களிலுண்டாகிறது. இது உலர்த்திக் கடைகளில் விற்கப்படுகிறது. சாதாரணமாய் எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

உருவம்:— இது திருநீற்றுப் பச்சையினம். இதன் இலைகள் சற்று பெரிதாகவும், பாலங்கூ இலையைப் போலவும் இருக்கும். வருணம் — பசு மஞ்சள் வருணம். நடுவில் சீரகத்தைப் போன்ற பசுஞ்சாயலான கரும்புள்ளிகள் விழுந்திருக்கும். மணம் — ஒருவகை இலவங்க வாசனையுடையது; இக்காரணத்தினாலேயே இதற்கு காட்டு லவங்கம் என ஒரு பெயருமுண்டு. இன்னொரு வகை கஸ்தூரி வாசனையுள்ளது. முந்திய வகையானது நாட்டு எலுமிச்சந் துளசியென்றும், பிந்திய வகையானது சீனா எலுமிச்சந்துளசி யென்றும் சொல்லப்படும். இயற்கைக் குணமும் தரமும் — 2ம் தரச்சூடும், வரக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:— இதை உள்ளுக்குச் சாப்பிட்டாலும், முகர்ந்தாலும் மூளையின் நரம்புகளின் அடைப்புகளை நீக்கும்; மூளையிலுள்ள அசுத்த மாசுகளை நீக்கி, அதை சுத்தி செய்யும்; தலையில் பற்றிட சீதள நோய் போம். வாயிலிட்டு மெல்ல வாயிற் சுகந்தமுண்டாகும்; பல், பல்லீறு ஆகியவை யிறுகும், பல்லின் ஊற்றை நீக்கும்; இதை உள்ளுக்குச் சாப்பிட கபமதிகரித்துண்டான மனக்கலக்கம், இருதய அதிர்ச்சி ஆகியவைகள் தீர்ந்து, இருதயம் பலப்படும். ஈரல், இரைப்பை இவைகளும் பலப்படும். ஜீரணமாகாத ஆகாரங்கள் நன்றாய்ச் ஜீரணமாகும். வாயுவைக் கண்டித்து ஏப்பத்தை உண்டாக்கும். ஜீரண சக்தியை யுண்டாக்குவதில் இது சஞ்சீவிக் கொப்பானது. மண்ணீரலின் வியாதி, மூலவியாதி இவைகளுக்கும் உபயோகப்படும்.

துர்க்குணம்:— சூடான தேகிகளுக்குத் தலைநோயை யுண்டாக்கும். பரிகாரம் பனப்ஷாவும், காடிஷர்பத்தும். பதில்-பூனைவணங்கிப் பூண்டு அல்லது அதன் விதை பிரமாணம்-விராகனெடை. 2-3 கிரகசம்பந்தம்-சூரியன்.

எலுமிச்சம் துளசி விதை

மேற்கண்ட நாமங்களுடன் அந்தந்தப் பாஷையின் விதையென்னும் வார்த்தையின் பிரதிச் சொல்லைச் சேர்த்துக் கொள்ளவும்.

இந்த விதைகள் மதராஸ் மருந்துக் கடைகளில் சாதாரணமாய்க் கிடைக்கிறது.

உருவம்:— இது உருவத்தில் திருநீற்றுப் பச்சை விதையைப் போன்று அதிலும் சிறியது. வருணம் — கருப்பு. சுவை — சிறு கசப்பு. இயற்கைக் குணமுந் தரமும் — 2ம் தரச்சூடும் வரட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— சிரசிலுள்ள மூளையின் நரம்புகளின் பந்தங்களை நீக்கும். மூக்குத்துவாரங்களின் அடைப்பை நீக்கி சுத்தி செய்யும். இருதயம், ஈரல், இரைப்பை இவைகளைப் பலப்படுத்தும். ஜீரண சக்தியை அதிகப்படுத்தி, பசிதீபனத்தை யுண்டாக்கும்; வீக்கத்தை வாடச் செய்யும்; வாதம், கபம், இவற்றாலுண்டாகிய மார்பு அதிர்ச்சி, மனக்கலக்கம் ஆகியவைகளுக்குபயோகப்படும்; வயிற்றுக் கடுப்பு, பல்லீறுகளின் வலி இவைகளைச் சாந்தப்படுத்தும் பற்களை யிறுகச் செய்யும்.

துர்க்குணம்:— சூடான தேகிகளுக்குத் தலை நோயுண்டாகும். பரிகாரம் — பனப்ஷாவும், காடி ஷர்பத்தும். பிரதி — லவங்கமும், பூனை வணங்கிப் பூண்டும், பிரமாணம் — விராகனெடை — ஒன்றரை — 2- கிரகசம்பந்தம் — சனி; அங்காரகன்.

கந்தபேரோஜா

இதற்கு அரபியில் அலக்குஸ் ஸநோபர் என்றும், பார்ஸியில் சமகே சனோபர் என்றும், ஹிந்துஸ்தானியில் ஸரல்கீகோந்த், சீர் கீகோந்த்; பர்ஜிகோந்த் என்றும் தமிழில் சீமை தேவதாரிப் பிசின்; சுருள் தேவதாரிப் பிசின் என்றும் இங்கிலீஷில் (Resin of Longifolia Galbanum) என்றும் பெயர். இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும்; வருண சாமான் வியாபாரிகளிடத்தும் கிடைக்கும்.

உருவம்:— இது தேவதாரு மரத்தின்பால் உறைந்துண்டான வஸ்து. மணம் — துர்வாசனை. இயற்கைக் குணமும், தரமும் — 2ம் தரச்சூடும், 2ம் தர வரக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:— வீக்கம், கட்டி முதலியவைகளை கரைக்கும். அசுத்த நீர்களை உறிஞ்சிக் கொள்ளும் பழைய இருமல்கள், கருப்பை ஸ்தம்பனரோகம் இவைகளுக்குபயோகம். நீர்ப்பையிலுள்ள கற்களையுடைத்து வெளிப்படுத்தும், நீர்க்குண்டிக்காய்களைச் சார்ந்த நரம்புகளின் பந்தங்களை நீக்கும். இதன் சத்து பிரமேக வியாதி, நீர்த்தாரையிலுள்ள விரணங்கள் முதலியவைகளைக் குணப்படுத்தும் சத்தெடுக்கும் விதம் 2ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

துர்க்குணம்:— மூளைக்கு உதவாது. பரிகாரம் — பனப்ஷா எண்ணெய்; தீபகர்ப்பூரம், பிரதி — குந்திரிக்கப் பிசின், பிரமாணம் — விராகனெடை — 1 — ஒன்றரை, கிரகசம்பந்தம் — சனி.

கரபஸ் ஓமம்

அஜ்மூதா ஓமம் என்பதைப் பார்க்கவும்.

கல்தாமரை

இதற்கு அரபியில் நீலோபர் என்றும், ஹிந்துஸ்தானியில் சோடா கமல் என்றும், தமிழில் சிறுதாமரையென்றும், அல்லிப்பூவின் லக்ஷணமும், தாமரைப் பூவின் லக்ஷணமும், கலந்திருப்பதால் கல்தாமரையென்றும் பெயர்.

பிறப்பு:— இது இந்தியாவில் ஏரி குளம், கட்டுக்கடையான நீர்வளம் முதலியவைகளில் தாமரை, அல்லி முதலிய புஷ்பங்களைப் போல உண்டாகிறது. இதில் சிவப்பு, வெள்ளை, ஊதா, மஞ்சள் முதலிய வருணமுள்ளவைகளிருக்கின்றன. வெளி தேசங்களிலிருந்து உலர்த்தி யிங்கு கொண்டு வந்து விற்கப்படுகிறது. இது மதராஸ் மருந்துக் கடைகளில் ஒரு காலங்களில் அரிதாய்க் கிடைக்கிறதே யொழிய எப்போதும் சாதாரணமாய் கிடைக்கிறதில்லை. ஆனால் அதற்குப் பதிலாய் உலர்ந்த தாமரைப்பூ, உலர்ந்த அல்லிப்பூ ஆகியவைகளை விற்கிறார்கள். அல்லிப்பூவும் தாமரைப்பூவும் அதன் குணத்திற்குச் சற்றேறக் குறைய ஒத்தே இருக்கும்; இதன் உருவம் முதலியவைகள் 2ம் பாக புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

கஸ்தூரி

இதற்கு அரபியில் மிஸ்க் என்றும், பார்ஸியில் மிஷக் என்றும், சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், தமிழ் முதலிய பாஷைகளில் கஸ்தூரி என்றும் பெயர்.

பிறப்பு:— இது ஒருவகை மானின் மதம் உரைந்துலர்ந்த வஸ்து. இம்மிருகத்திற்கும் அசைபோடும் மற்ற மிருகத்திற்கும் சில வித்தியாசமுண்டு. அதற்குக் கொம்புகளிருப்பது போல இதற்குக் கொம்புகளில்லை. ஆனால் இதன் மேற்றாடை யிரண்டு பக்கங்களிலும் நீண்டு மெலிந்த இரண்டு சிங்கப் பற்களுண்டு. இது பெரும்பாலும் சிறு மானையொத்தே இருக்கும்; ஆனால் இதன் கால்கள் மானின் கால்களைப் பார்க்கிலும் அதிகம் மெலிந்தவைகளாகவும் கால்களின் துண்டுகள் ஒரே எலும்பாகவும் இருக்கும். இது சாதாரணமாய் மூன்றடிக்குக் குறைந்ததாகவும், இடுப்பு சற்று உயர்த்தப்பட்டதாகவும் இருக்கும். உரோமம் உறத்ததாகவும், நெகிழ்ந்துறழ்ந்து ஆடத்தக்கதாகவுமிருக்கும். காலம், வயது, முக்கியமாய் வாசஸ்தானம் ஆகியவைகளுக்குத் தக்கபடி இதன் வர்ணம் பலவிதங்களாயிருக்கும். இது அதிக கூச்சமும், சாந்தமும்

உடையது. கஸ்தூரி ஜனிக்கிற பையானது கோசத்தோலுக்கருகே அண்டவடிவமாய் முன்புறத்தில் ரோமங்களுள்ளதாயிருக்கும். பின்பக்கமிராது; இந்தப் பையானது மிருதுவாகவும், தட்டையாகவும் ஒன்றின்பின் ஒன்றாகப் பல திரைகளுள்ளதாகவுமிருக்கும். உட்திரையில் சிறு குழிகளில் சிறிய கோள வடிவுள்ளதாய் கஸ்தூரி உற்பத்தியாகிறது. இந்தப் பையிலிருந்து மெத்த வாசனையுள்ள வஸ்து வடிந்து கொண்டிருக்கும். இதுவே கஸ்தூரிமானுக்கு முக்கிய அடையாளமாம். இவ்விதம் வடியும் மதமானது உலர்ந்ததுதான் கஸ்தூரி. கஸ்தூரிமான்கள் மத்திய ஆசியா கண்டத்தில் ஹிமாலயா பர்வதத்திலிருந்து ஆல்டாய் மலை வரையிலும், அங்கிருந்து சீனதேச வரையிலும் உள்ள மலைப் பிரதேசங்களில் அதிகமாய் இருக்கின்றன. ஆகையால் கஸ்தூரியானது திபெத், சீனா, கத்தாயி முதலிய அனேக தேசங்களிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப் படுகிறது.

கஸ்தூரியின் வகைகள்:— சிலர் இது உற்பத்தியாகும் தேச விசேஷப்படி உயர்த்தி மட்டமென்றும், சிலர் இது சேகரிக்கப்படும் முறை விசேஷப்படி உயர்த்தி மட்டமென்றுஞ் சொல்லுகின்றார்கள். தேச விசேஷப்படி உயர்த்தி மட்டமென, சொல்பவர்கள் துர்க்கி கஸ்தூரி உயர்ந்ததென்றும், இந்திய கஸ்தூரி மட்டமென்றும் சொல்லுகிறார்கள்.

சேகரிக்கும் முறை விசேஷப்படி சொல்லுகிறவர்களின் அபிப்பிராயமாவது:— கஸ்தூரி நான்கு விதப்படும். (1) முன் விவரித்தபடி கஸ்தூரி மானினின்று கசிந்து கொண்டிருக்கும் மதமானது கற்களிலும், பாறைகளிலும், மரங்களிலும் உறைந்து உலர்ந்து கிடக்கும். இவ்விதம் பக்குவ காலத்தில் இயல்பாகவே வெளிப்பட்டு உலர்ந்து கிடப்பதை வியாபாரிகள் எடுத்துச் சேகரிப்பார்கள். இந்த வகையானது மெத்த வாசனையுள்ளதாகவும், சூடான தேகிகள் முகர்ந்தால் மூக்கிலிருந்து இரத்தம் சொட்டும்படியான காரமானதாகவுமிருக்கும். மஞ்சள் சாயலான வர்ணமுள்ளதாகவிருக்கும்; துண்டுகள் சற்று நீண்டு கடினமானதாகவுமிருக்கும். இதற்கே துர்க்கி கஸ்தூரி யென்று பெயர். இந்த வகையானது அரிதாயும், அதிக சிரமத்தோடும் சேகரிக்கப்படுகிறபடியால் எல்லோருக்கும் கிடைப்பதரிது; ஆனால் சக்கரவர்த்திகள், ராஜாக்கள் முதலியவர்களுக்கு வெகுமதியாக அனுப்பப்படுகிறது. (2) கஸ்தூரி மான்களினின்று மதமானது எப்போதும் கசிந்து கொண்டேயிருந்தாலும் வயது, காலம், தேகசுபாவம் முதலியவைகளுக்கு ஏற்றபடி அதிகப்படுவதும் குறைவதும் உண்டு; அவ்விதம் மதமானது அதிகப்படுங் காலங்களில் அவற்றிற்கு அந்த ஸ்தானத்தில் ஓர்வித தினவு உண்டாகும்; அப்போது அவைகள் கற்கள், பாறைகள், மரங்கள் முதலியவைகளிற் போய் அந்த ஸ்தானத்தைத் தேய்த்துக் கொள்ள நேரிடும். இப்படித் தேய்க்கத் தேய்க்க அதிக

ஆரோக்கியமாகவும் இன்பமாகவு மிருக்குமாகையால் அதிக பலமாகவும் வெகு நேரமும் தேய்த்துக் கொள்ளுகின்றன. அப்போது அந்தக் கஸ்தூரிப் பையானது கிழிந்து போய் அதிலுள்ள மதநீரெல்லாம் வெளிப்பட்டுப் போவதுடன் அதற்கடுத்த பாகங்களும் காயம்பட்டு அதிக இரத்தமும் வெளிப்படுகிறது. இவ்விதம் வெளிப்பட்ட மதமும் இரத்தம் கலந்து உரைத்து காய்ந்தெடுக்கப் படுகிறதற்கு தீபக் கஸ்தூரியென்று பெயர். இது முன் வகையைப் பார்க்கிலும் தாழ்ந்ததாயினும், மற்ற இனங்களைப் பார்க்கிலும் விசேஷமானதாகையால் இதுவும் முன் சொன்னபடி இராஜாக்களுக்கு வெகுமதியாய் அனுப்பப்படுகிறது. இந்த இரண்டு வகைகளும் எல்லோருக்குங் கிடைப்பதரிது. (3) மாட்டிலிருந்து கோரோஜன மெடுப்பது போல இம்மான்களையு மறுத்து, அதன் கஸ்தூரிப் பையை யெடுத்து உலர்த்திப் பையோடே அல்லது பையிலிருந்து கஸ்தூரியை வெளிப்படுத்தி விற்கப்படுகிறது. சாதாரணமாய் ஒரு பையில் 1 1/2 — 3 விராகனெடை கஸ்தூரி யிருக்கும்; மதம் பொழியும் காலங்களில் அதிகமாயிருக்கும். (4) இக்கஸ்தூரி மான்களை வேட்டைக்காரர்கள் பிடித்து கஸ்தூரிப் பையில் அதிக இரத்தம் வந்து தங்கும்படி அதைச் சுற்றிலும் உள்ள பாகத்தை அழுத்தித் தேய்த்து, பின்பு அதையறுத்து உலர்த்திக் கொள்ளுகிறார்கள்; அல்லது அந்தப் பையில் அதிக இரத்தம் தங்கி நிற்கும்படி அதைச் சுற்றிலும் பட்டி வைத்துக் கட்டி அதை அறுத்தெடுத்துச் சில நாள் வரையில் யவைக்கோதுமையில் புதைத்து வைக்கிறார்கள். ஜவ்ந்தைப் புதைத்து வைப்பது போலவே இதைப் புதைத்து வைக்காத வரையில் முன்னுள்ள துர்க்கந்தம் நீங்கி சுகந்த முண்டாகிறதில்லை. இவ்விதம் எடுப்பதற்கு சீனக் கஸ்தூரி என்று பெயர். வருணம் கருப்பாகவும் சற்று கடினமான தாகவுமிருக்கும். (5) இம்மிருகத்தை யறுத்து அதன் இரத்தம், அதன் ஈரல் ஆகியவைகளை யெடுத்து உலர்த்தி ஒருவித பாடம் பண்ணுகிறார்கள். இதற்கு இந்திய அல்லது சுதேச கஸ்தூரி என்று பெயர்.

ஆனால் பெரும்பாலோர் கருத்தின்படி கஸ்தூரியானது அசல் இனம், வைப்பினம் என இரண்டே வகைப்படும். முன் சொன்ன 5 வகைகளில் முதலிரண்டு வகையும் அசலான வகைகள்; அதிலும் முந்தி சொல்லப்பட்டது மட்டம் இன்னும் முன்சொன்ன ஐந்து வகைகளில் நாலாவதும், ஐந்தாவதுமாகிய இரண்டினங்களும், இன்னும் முயல், புறா, சேவல் முதலியவைகளில் ஒன்றின் இரத்தத்தோடு றேவல் சீனி, லவங்கம், கள்ளிப்பால் முதலிய சிலவற்றையும், கொஞ்சம் கஸ்தூரியையும் சேர்த்து பாடப்படுத்தி விற்கும் கஸ்தூரியும் வைப்பாம். இவற்றுள்ளும் முதற் சொன்ன இரண்டு வகைகளு முயர்ந்ததும், பின்சொன்ன வகை மட்டமுமாம் இவ்விதங்களில் ஏதேனும் ஒருவகையாய்ப் பதப்படுத்திக்

கஸ்தூரிப் பையில் பந்தனம் செய்வதும், செய்யாமலும் அனுப்பப்படுகிறது. இவ்விதம் பெரும்பாலும் சீனர்களால் செய்யப்படுகிறபடியால் அங்கிருந்து வரும் சரக்கிலும் பெருஞ் சந்தேகத்திற்கிடமா யிருக்கிறது. இன்னும் இதைச் சேகரிக்கும் விதம் பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். ஆகையால் எப்படியாயினும் பரீக்ஷித்து வாங்குவதே யுத்தமம்.

கஸ்தூரியின் பரீக்ஷைகள்:— கஸ்தூரியானது பையுடனிருந்தால் நூல் கோர்க்கப்பட்ட ஊசியை பையின் ஒரு பக்கத்தில் குத்தி, மறுபக்கம் இழுத்து, வெள்ளைப் பூண்டிலும் அப்படியே குத்தியிழுக்க வெள்ளைப் பூண்டின் வாசனையில்லா விட்டால் அது அசலானது. கஸ்தூரியானது பையிலில்லாம லிருந்தால் கொஞ்சம் உள்ளங்கையி லிட்டு இரண்டு மூன்று துளி ஜலம் விட்டு, விரலால் நன்றாய்த் தேய்க்க, திரியைப் போல் திரளாமல் கரைந்து போமாயின் அசலானதே, அரஸ்த தாலீஸ் என்னும் பண்டிதர் சொல்லுகிறார். கஸ்தூரியைத் தூள் செய்து நிறுத்து, நெய்ப்பசையான பாத்திரத்தில் ஒரு ஜாமம் வைத்தெடுத்து மறுபடியும் நிறுக்க, முன்னெடையிலும் அதிகமாயிருந்தால் அசலானதே என்பது. ஒரு பாத்திரத்தை நெருப்பின் மேல் வைத்துக் கொஞ்சம் கஸ்தூரியை அதிற்போட சுகந்த வாசனை யுண்டாவதும் அசலானதே. பூண்டை விரலினால் சற்று நசுக்கி, கஸ்தூரியையும் கொஞ்சம் எடுத்து அவ்விரலில் தேய்க்க, துர்வாசனை போய் சுகந்த வாசனை இருக்கில் அசலானதே.

உருவம்:— கஸ்தூரியானது மணிமணியாய்த் தூளாகவும் மொத்தையாகவு மிருக்கும்; தொட்டால் மிருதுவாகவிருக்கும். வருணம் - செஞ்சாயலான ஊதா வருணம். மணம் - பரவி நெடியேறத்தக்க அல்லது ஊடுருவிச் செல்லத்தக்க காரமான வாசனை. உருசி - கைப்பும் சிறு உறைப்பும்; உருசியானதல்ல. இயற்கைக் குணமும் தரமும் — 3ம் தரச்சூடும் 2ம் தர வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— அகம்புறம் ஆகிய விடங்களினுள்ள உறுப்புகளைச் சுத்தியாக்கும். சுவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் முதலிய ஐம்புலன்களின் சக்தியை விருத்தி செய்யும். உன்மத்தம், மூர்ச்சை, முகவாதம், நடுக்கல், காக்கைவலி, பாலகாக்கைவலி, இரத்த சிரஸ்தாப ரோகம், புத்தி மந்தம், மறதி முதலிய நரம்புகளைப் பற்றிய எல்லா வியாதிகளுந் தீரும். மருந்துகளின் சக்திகளை தேகத்திற்குள் ஆழ்ந்து செல்லும்படி செய்யும்; இதை ஆக்ராணிப்பதினால் குளிர்ச்சியினா லுண்டான பீனிசம், தலைவலி ஆகியவைகள் தீரும். குளிர்ச்சி, வாதம் ஆகியவைகளினாலுண்டான மார்பு அதிர்ச்சி, வீண் பயம், மனக்கலக்கம், வீண் கவலை முதலிய

இருதய வியாதிகளை நீக்கி இருதயத்தைப் பலப்படுத்தி சந்தோஷ முண்டாக்கும். பேதியைக் கட்டும். சிறு குடல்களின் வாயுவைக் கண்டிக்கும். இதை வர்த்திப் பிரயோகம் செய்ய அழிகருப்ப ரோகத்தை நிவர்த்தி செய்து, கர்ப்பத்தைப் பாதுகாத்து வளர்க்கும். தலைமூளை முதலிய இராஜ கருவிகளையெல்லாம் பலப்படுத்தி தேகசுபாவச் சூட்டை விருத்தி செய்யும். தேகபலத்தையுண்டாக்கிப் போக சக்தியை விருத்தி செய்யும். முகவசீகரத்தையும் மனோரம்மியத்தையுமுண்டாக்கும்.

துர்க்குணம்:— சூட்டுடம்பிற்காகாது. பரிகாரம் - மூங்கிலுப்பு, பன்னீர், பச்சைக் கர்ப்பூரம் - பதில் - தாளிசபத்திரியும், ஜாநந்தும். பிரமாணம் - விராகனெடை அரைக்கால் முதல் கால் வரை கிரகசம்பந்தம் - சனி.

கஸ்தூரி பிரம்புத் திராவகம்

இதற்கு அரபியில் மாவுல்கிலாப் என்றும், மாவுல் கிலாபுல் பல்கி என்றும், பார்ஸியில் அரகே பேதேமுஷ்க் அல்லது மிஷ்க் என்றும், அரகேபஹராமஜ் என்றும் பெயர்.

பிறப்பு:— கஸ்தூரிப் பிரம்பின் பூவை வாலையிலிட்டு இறக்கப்படும் திராவகம்.

உருவம்:— இது ஜலத்தைப் போலிருக்கும். சுவை; மணம் - கொஞ்சம் உறைப்பும் காரமான வாசனை, இயற்கைக் குணமும் தரமும் - சூடும் கொழுமையும்.

செய்கையும், உபயோகமும்:— வியதா பேதகாரி; சப்த தாதுக்களின் ரோகங்களையும் படிப்படியாய்ப் போக்கி தேக சுபாவத்தை நிலை நிறுத்தும். மூளையைச் சார்ந்த நரம்புகளின் அடைப்பை நீக்கும். சூட்டினாலுண்டான தலைநோயைச் சாந்தப்படுத்தும். இருதயம் வயிற்றிலுள்ள உறுப்புகள் இவைகளைப் பலப்படுத்தி, போக சக்தியை விர்த்தி செய்யும்.

துர்க்குணம்:— இல்லை. பரிகாரம் — இல்லை. பிரதி — தாமரைப் பூ திராவகம்.

விலை:— இது சாதாரணமாய் யூநாநி மருந்துக் கடைகளிலும் பன்னீர் முதலியவைகள் விற்கும் மொகல் வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

கஹரூபா

இதற்கு அரபியில் கர்னுல்பஹர்; மிஸ்பாஹாமர்றாம், இன்கிதிறியூன் என்றும், பார்ஸியிலும் இந்துஸ்தானியிலும் கஹரூபா என்றும், தக்கினியில் கபூர் என்றும், தமிழில் கற்பூரமணி என்றும் இங்கிலீஷில் (Amber) ஆம்பர் என்றும் பெயர்.

பிறப்பு:— ஒருவகை மரத்தின்பால் உறைந்துண்டாகின்ற ரோஜனம். றூசியா, பல்கெரியா; மக்ரிப் (Morocco) முதலிய தேசங்களிலிருந்து கொண்டு வரப்படுகிறது. இந்தியாவிலும் சிலவிடங்களில் இது உண்டாகிறது. ஆனால் சிலர் இது பூமியிலுண்டாகும் ஒருவகை தராசத்து என்கிறார்கள். ஆயினும் பெரும்பாலார் மேற்கண்ட இருதரத்தார்களுடைய அபிப்பிராயங்களையும் ஏகோபித்துச் சொல்லுகிறதாவது:— கடலோரத்திலுள்ள ஒருவகை மரத்தின் வேர்களினடியில் இது ஏராளமாய் வெட்டி எடுக்கப்படுகிறது. அந்த வகை மரத்தைத் தவிர மற்ற மரங்களுக்குக் கீழ் அப்படிக் காணப்படுகிறதில்லை. ஆகையால் அந்த மரத்தின் வேர்களில் வடியும் பாலானது உறைந்து ரோஜனமாகி பூமியில் கிடக்கின்றது, ஆகையால் அது அங்கு மேற்கண்டபடி வெட்டி எடுக்கப்படுவதுமுண்டு. அல்லது நீரோட்டத்தினால் அடித்துக் கொண்டு வரப்பட்டு கடற்கரையோரங்களில் ஒதுக்கப்படுவதுமுண்டு என்பதே. இவ்விதம் அரேபியாவின் ஒரு பாகத்தின் கடலோரத்திலுள்ள ஒருவகை மரத்தின் கீழ் வெட்டி எடுக்கப்படுகிறது. இதுதான் எல்லா வகைகளிலும் மேலானது. இது சற்று கடினமாயிருக்கும். குணத்திலும் விசேஷமானது.

கஹறுபாவிள் வகைகள்:— கடினமானதாகவும், பளபளப்புள்ளதாகவும், பொன் வருணமுடையதாகவும், கையினால் தேய்த்துச் சூடுண்டாக்கினால் எலுமிச்சம்பழ ரச வாசனையுள்ளதாகவும், வைக்கோல், பஞ்சு, பட்டு இவற்றின் துண்டுகளைச் சமீபத்தில் பிடித்தால் இழுத்துக் கொள்ளும் சக்தியுடையதாகவும் இருப்பது உயர்ந்த இனம். இதற்கு றூம்கஹறுபா என்று பெயர்.

இக்குணங்களுள் வித்தியாசப்படுவது மட்டம். ஆனால் கஹறூபாவிற்குப் பதிலாய் சந்திரஸை (Indian Copal) மாற்றிக் கொடுப்பது வழமையாகையால் அதை பரீக்ஷித்து வாங்க வேண்டியது ஆவசியகம்.

கஹறுபாவின் பரீக்ஷைகள்:— சந்திரஸ் என ஒருவகைப் பிசின் உண்டு; அதுவும் கஹறூபா பால் வடிகிற மரத்திலிருந்தே வடிகிற ரோஜனமென சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் சொல்லுகிறதாவது சந்திரஸானது இந்தியாவிலுண்டாகிற கஹறூபா மரப் பிசின் என்பதே. அது எப்படியாயினும் கஹறூபாவிற்குள்ள குணங்களெல்லாம் சந்திரஸ் ரோஜனத்திற்கு இல்லையென்பதே. சந்திரஸை கொஞ்ச நேரம் தேய்த்து வைக்கோல் துரும்பை சமீபத்தில் பிடித்தால் கஹறூபா, இழுத்துக் கொள்ளுவது போலவே அதுவும் இழுத்துக் கொள்ளும். ஆனால்

கஹறுபாவை அதிக நேரம் தேய்க்க வேண்டும்; சந்திரசை அப்படி அதிக நேரந் தேய்க்க வேண்டியதில்லை. கஹறுபாவானது சற்று கடினமானதாகவும் தேய்த்தால் எலுமிச்சம் பழ ரசவாசனை வருகிறதாகவும், பிரகாசமுள்ளதாகவுமிருக்கும். சந்திரஸிற்கோ இக்குணங்களிரா. கஹறுபாவைத் தூள் செய்து நெருப்பிற் போட்டால் றூமிமஸ்தகி வாசனை வரும். சந்திரஸைப் போட்டால் கொம்பு தீயும் வாசனை வீசும். வருணம் - மஞ்சள் வருணம், மஞ்சளும் சிவப்பும் கலந்த வருணம்; பொன் வருணம், பளபளப்பாய் பிரகாசமுள்ளது. சுவை - உருசியில்லை. மணம் - கையில் தேய்த்து முகர்ந்தால் எலுமிச்சம் பழ ரசவாசனை வீசும்.

இயற்கைக் குணமும் தரமும்:— சூடும் குளிர்ச்சியும் சமமானது; சிலர் குளிர்ச்சியும் வறக்ஷியுமானதென்கிறார்கள்.

செய்கையும், உபயோகமும்:— இருதயத்தைப் பலப்படுத்திச் சந்தோஷத்தையுண்டாக்கும்; இரத்த வாந்தி, இரத்தபேதி, நீரில் இரத்தம் விழுதல் ஆகிய வெளியுறுப்புகளிலிருந்தும் உள்ளுறுப்புகளிலிருந்தும் வரும் இரத்தத்தைக் கட்டும். ஈரல், இரைப்பை, நீர்த்தாரை ஆகியவைகளைப் பலப்படுத்தும். நீர்க்குண்டிக்காய்; நீர்ப்பை இவற்றின் துர்ப்பலத்தை நீக்கும், வயிற்றுக் கடுப்பை யுடனே நிற்பாட்டும். இதையிடுப்பில் கட்டிக் கொண்டிருப்பதினால் பயத்தை நீக்கி, தைரியப்படுத்திப் பலமுண்டாக்கும்.

துர்க்குணம்:— தலைக்கு உதவாது. பரிகாரம் - பனப்ஷா. பதில் - மூங்கிலுப்பும், சந்திரஸ்ஸ௱ம். பிரமாணம் - விராகனெடை - அரை கிரகசம்பந்தம் - அங்காரகன்.

விலை:— இது எல்லா மருந்துக் கடைகளிலும் அரைத்து சிறு பில்லைகளாகச் செய்துலர்த்தியும், அரைக்காமல் மணிமணியாகவும் விற்கப்படுகிறது.

காசினிக்கீரை

இதற்கு அரபியில் ஹிந்தபா என்றும், பார்ஸியிலும் ஹிந்துஸ்தானியிலும் காஸ்நி என்றும், தமிழில் காசினி என்றும் பெயர்.

பிறப்பு:— இது மதராஸில் தோட்டங்களில் மற்ற கீரையினங்களைப் போல பயிர் செய்யப்படுகிறது. மற்ற கீரைகளைப் போலவே கறிக்காக இதுவும் உபயோகப் படுத்தப்படுகிற படியால் விசேஷமாய் விற்கப்படுகிறது.

இதன் இலையும், வேரும் அனேக மருந்துகளில் உபயோகப்படுகின்றபடியால் இது அகப்படாத விடங்களில் இதன்

விதையை விதைத்துப் பயிர் செய்து வைத்துக் கொள்வது நலம். உருவம் முதலியவைகள் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

காசினிவிதை

இதற்கு அரபியில் பஜ்றுல் ஹிந்தபா என்றும், பார்ஸியில் துக்மே காசினியென்றும், தமிழில் காசினிவிதை யென்றும் பெயர்.

உருவம்:— விதை சீரகத்தைப் பார்க்கிலும் சற்று சிறியது. வருணம் - வெண்சாயலானது சுவை - இளைப்பு. இயற்கைக் குணமும் தரமும்:— குளிர்ச்சியும் வறட்சியுமானது.

செய்கையும், உபயோகமும்:— நரம்புகளின் பந்தங்களையவிழ்க்கும்; நீர்க்கட்டையுடைக்கும். தலைநோய், இருதய அதிர்ச்சி, பாண்டுரோகம், மயக்கம் இவைகளுக் குபயோகப்படும்; ஈரலின் சூடு, தாகம், சுரம் இவை தீரும். நீர்க்குண்டிக்காய், மண்ணீரல் இவற்றின் துர்ப்பலமாகியவைகளுக் குபயோகப்படும். வாயிலிருந்து இரத்தம் விழுவதை நிறுத்தும், பசிதீபனத்தைத் தூண்டும்.

துர்க்குணம்:— மண்ணீரலுக்குதவாது. பரிகாரம் - காடி ஷர்பத்தும் றூமிச்சோம்பும் பிரதி - தரா விதையும் குஷ்ஹெஸ் விதையும் பிரமாணம் - விராகனெடை - ஒன்றரை - இரண்டேகால். கிரகசம்பந்தம் - சந்திரன்.

இது எல்லா மருந்துக் கடைகளிலும் சாதாரணமாய்க் கிடைக்கும்.

காசினிவேர்

இதற்கு அரபியில் அஸ்லுல் ஹிந்தபா என்றும், பார்ஸியில் பேகே காஸ்னி என்றும், தமிழில் காசினி வேர் என்றும் பெயர்.

விலை:—காசினி பயிரிடும் தோட்டக்காரரிடத்தில் அதிக சரசமாகவும், மருந்துக் கடைகளில் கிராக்கியாயும் இந்த வேர் கிடைக்கும். உருவம் - முதலியவைகள் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

காபுலிக் கடுக்காய்

இதற்கு அரபியில் அஹலீஜ் காபுலி என்றும், பார்ஸியில் ஹலீலயே காபுலி; ஹலீலயே கலான் என்றும், தமிழில் சூரத்துக் கடுக்காய்; பெருங்கடுக்காய் என்றும், இங்கிலீஷில் (Myrobalon Cabulic) மைறொபலூன் காபுலிக் என்றும் பெயர். இதன் உருவம் முதலியன 2ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இது எல்லா மருந்துக் கடைகளிலும் சாதாரணமாய்க் கிடைக்கும்.

காரிகியூன்

இதற்கு அரபியில் காரிகியூன் என்றும், பார்ஸியில் யாஹஷ்மான் என்றும், இங்கிலீஷில் (Polyporus Igniarius) பாலி பொரஸ் இக்னியரிஸ் என்றும் பெயர்.

இது எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது; இதன் உருவம் முதலியன இரண்டாம் பாகத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன.

காவுஜுபான்

இதற்கு அரபியில் லிஸானுல்ஸவர் என்றும், பார்ஸியில் காவுஜுபான் என்றும், இந்துஸ்தானியில் ஸின்காஹோலி என்றும், தமிழில் கோநாக்கில்லை என்றும் பெயர்.

விலை:— இது சாதாரணமாய் எல்லா யூநாநி மருந்துக் கடைகளிலும் கிடைக்கும். உருவம் - முதலியவைகள் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

காஹுக்கீரை

இதற்கு அரபியில் கஸ் என்றும், பார்ஸியில் காஹு என்றும், தமிழில் சல்லாத்துக்கீரை என்றும் தெலுங்கில் காவுகூற என்றும் பெயர்.

பிறப்பு:— இது காசினிக் கீரையைப் போலவே பயிர் செய்யப்படுகின்றது. உருவம் முதலியவைகள் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

காஹுவிதை

இதற்கு அரபியில் பஜருல்கஸ் என்றும், பார்ஸியில் துக்மே காஹு என்றும், தமிழில் சல்லாத்துவிதை காவு விதை என்றும், தெலுங்கில் காவுவித்துலு என்றும், இங்கிலீஷில் (Lettice seed) லெட்டிஸ் ஸீட் என்றும் பெயர்.

எல்லா மருந்துக் கடைகளிலும் சாதாரணமாய்க் கிடைக்கிறது.

உருவம் முதலியவைகள் இரண்டாம் பாகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

காஜர் கிழங்கு

இதற்கு அரபியில் ஜஸர் என்றும், பார்ஸியில் கஜர்; ஜர்தக் என்றும் இந்துஸ்தானியில் காஜர் என்றும், தமிழில் மஞ்சள் முள்ளங்கி, கார்ட்டுக்கிழங்கு என்றும், சமஸ்கிருதத்தில் ஷிகாமூல, கிரிஞ்சன என்றும்,

தெலுங்கில் பச்செ முள்ளங்கி என்றும், இங்கிலீஷில் (Carrot) காறட் என்றும் பெயர்.

பிறப்பு:— இது பெங்களூர், இலங்கையில் நூறலியா, நீலகிரி முதலிய விடங்களில் ஏராளமாய்ப் பயிர் செய்யப்படுகிறது. மதராஸில் பெங்களூரிலிருந்து கொண்டு வந்து விற்கப்படுகிறது.

உருவம் முதலியன இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

கித்துமிவிதை

இதற்கு அரபியில் பஜ்றுல்கித்மி என்றும், பார்ஸியில் துக்மேதித்கு என்றும், துக்மேகீறு என்றும் மதராஸ் மருந்துக் கடைகளில் சீமைத் துத்தி விதையென்றும் பெயர்.

இது எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

உருவம்:— ஒருவகை விதைகள். வருணம் - கருமை. சுவை - இலைப்பு. இயற்கைக் குணமும், தரமும் 1ம் தரக் குளிர்ச்சியும், கொழுமையும்.

செய்கையும், உபயோகமும்:— அசுத்த மாசுகளைப் பக்குவப்படுத்தும்; வீக்கங்களைக் கண்டிக்கும்; அவயவங்களைத் துவளச் செய்யும்; வேதனைகளைச் சாந்தப்படுத்தும்; மலத்தை இளக்கும். மார்நோய், பக்கநோவு, சூட்டினாலுண்டான இருமல் ஆகியவைகளுக் குபயோகப்படும்.

துர்க்குணம்:— இரைப்பைக்கும், நுரையீரலுக்கும் ஆகாது. பரிகாரம் - தேனும் சோம்பும், பதில் - சீமை சிறு துத்திவிதை, அல்லி தாமரைப்பூ. பிரமாணம் - விராகனெடை - ஒன்றரை, இரண்டு. கிரகசம்பந்தம் - சந்திரன்.

கின்னா

இதற்கு அரபியில் கின்னா என்றும், பார்ஸியில் பார்ஜத், பேர்ஜத் என்றும், ஹிந்துஸ்தானியில் பரீஜா என்றும், தமிழில் ரோஜனப் பிசின் என்றும், இங்கிலீஷில் (Galbanum) கால்பானம் என்றும் பெயர்.

உருவம்:— இது ரோஜனம் கலந்த ஓர்வகைப் பிசின், சிறிய கட்டிகள் சேர்ந்து மொத்தையாயிருக்கும். வருணம் — கொஞ்சம் பச்சையும் மஞ்சளும் கலந்த சாயல். மணம் — மெத்த வாசனையுடையது. சுவை — கறகறப்பு, வாய்க்கினிப்பின்றி கைப்பாயிருக்கும். இயற்கைக் குணமும், தரமும்: 3ம் தரச்சூடும், 2ம் தர வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— கஷ்ட சுவாசம், பழைய இருமல், கருப்பை ஸ்தம்பன ரோகம், காக்கைவலி, நரம்பைப் பற்றிய ரோகங்கள், கபவியாதிகள், அஜீரண ரோகம், சூதகபந்தம் ஆகிய வியாதிகளைக் கண்டிக்கும், கருவழிக்கும்.

துர்க்குணம்:— சூடான தேகிகளுக்குதவாது. பரிகாரம் - பனப்ஷா எண்ணெய், தீபகர்ப்பூரம். பதில் - பெருங்காயம், பிரமாணம் - விராகனெடை கால், அரை அளவில் அதிகமாயின் நஞ்சின் குணத்தைத் தரும். கிரகசம்பந்தம் — சனி.

இது மருந்துக் கடைகளிலும், முக்கியமாய் இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

கிஷ்மிஷ் பழம்

இதற்கு அரபியில் கிஷ்மிஷ் என்றும், பார்ஸியில் ஜபீப் என்றும், தமிழில் விதையில்லாத திராகைஷயென்றும், இங்கிலீஷில் (Raisins) ரேய்ஸின்ஸ் Currants, கர்றன்ட்ஸ் என்றும் பெயர். இவற்றுள் (Currants) என்பதே இதற்குரிய பெயர்.

பிறப்பு:— இது காபூல் முதலிய தேசங்களிலிருந்து உலர்த்திக் கொண்டு வரப்பட்ட ஒருவகை திராக்ஷாப்பழம். சற்று சதைப்பற்றுள்ளதாகவும் விதையில்லாததாகவுமிருக்கும்.

உருவம்:— இது சாதாரண திராகைஷயைப் பார்க்கிலும் சிறியது. வருணம் - செஞ்சாயலானது. சுவை - இனிப்பு, உருசியானது. இயற்கைக் குணமும், தரமும் - சூடும், கொழுமையுமானது.

செய்கையும், உபயோகமும்:— அசுத்த மாசுகளைப் பக்குவப்படுத்தும்; கட்டிகளை மிருதுவாக்கும், நரம்புகளின் பந்தங்களை நீக்கும். மலத்தை இளக்கும். இரத்தத்தின் கொதிப்பைத் தணிக்கும் சுவாசகாச வியாதிக்கு உபயோகப்படும்; தேகத்தைக் கொழுப்பித்துப் போக சக்தியை யுண்டாக்கும்; மூளை முதலிய உறுப்புகளைப் பலப்படுத்தும்.

துர்க்குணம்:— ஜுரக்காரர்களுக்குதவாது. பரிகாரம் — காடி ஷர்பத்து, காஹூ. பதில் — திராக்ஷப்பழம். பிரமாணம் — விராகனெடை — 1,2. கிரகசம்பந்தம் — குரு.

இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

குப்பாஜி விதை

இதற்கு அரபியில் குப்பாஜி என்றும், பார்ஸியில் நான்குலாக் என்றும், தமிழில் சீமை சிறு துத்திவிதை யென்றும், இங்கிலீஷில் Common Dwarf Mallow Seeds காமன் டுவார்ப் மாலோ ஸீட்ஸ் என்றும் பெயர்.

உருவம்:— சீமைத் துத்தியைப் போன்ற ஒருவகைச் செடியின் விதைகள். வருணம் - இலை. பச்சை, பூ - ஊதா வருணம், விதை கபிலவருணம், வேர் மஞ்சள் வருணம். சுவை - இலையானது கைப்பு, மற்றவைகள் இலைப்பு, இயற்கைக் குணமும் தரமும் - 2ம் தரக் குளிர்ச்சியும் கொழுமையும்.

செய்கையும், உபயோகமும:— மலத்தை யிளக்கும். அசுத்த மாசுகளைப் பக்குவப்படுத்தும். ஈரலின் நரம்புகளின் பந்தங்களை நீக்கும், மண்ணீரலின் வலியை நீக்கும். மஞ்சட்காமாலை, வறட்சியினாலுண்டான தினவு, சிறுகுடலின் இரணம் ஆகியவைகளுக்கு உபயோகப்படும். வயிற்றுக் கடுப்பு, நீரெரிச்சல், நீர்ப்பையின் சீழ்க்கட்டி ஆகியவைகளுக் குபயோகப்படும். அனேக மிருகங்களின் விஷங்களை முறிக்கும். இதன் கியாழத்தில் சர்க்கரை சேர்த்துக் குடிக்க, இருமல், குரற்கம்மல் இவை தீரும்.

துர்க்குணம்:— சூடான தேகிகளுக்கும், இரைப்பைக்கும் உதவாது. பரிகாரம் - புளிப்பான வஸ்துக்கள். பதில் - சீமை துத்திவிதை, பிரமாணம் - விராகனெடை இரண்டு, இரண்டே கால், கிரகசம்பந்தம் - சந்திரன்.

மதராஸ் தோட்டங்களிலும் மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

குறுவா

இதற்கு அரபியில் மகபதுல் ஹமகா என்றும், பார்ஸியில் குறுபா என்றும், ஹிந்துஸ்தானியில் நூநியா பாகுல் என்றும், தமிழில் குறுவாக்கீரை, பருப்புக்கீரை *கோழிக்கீரை என்றும், சமஸ்கிருதத்தில் லூனகா என்றும் பெயர்.

பிறப்பு:— காசினி முதலிய கீரைகளைப் போலவே யிதுவும் பயிர் செய்யப்படுகிறது. மற்ற கீரைகளைப் போலவே இதுவும் கறிசமைத்துச் சாப்பிடப்படுகிறது. கீரையும் இதன் விதையும் அவுடதங்களுக்

* கோழிக்கீரை அல்லது குப்பைக்கீரை என இன்னொரு வகையுமுண்டு. இது குப்பை மேடுகளில் தானாய் முளைத்து வனமாய்க் கிடக்கும். இதன் விதை முளைக்கீரை விதையைப் போலவே யிருக்கும்; இதன் குணமும் அனேகமாய் பருப்புக் கீரையையே யொத்திருப்பதால் அதற்குப் பதில் இதையும் உபயோகிக்கலாம்.

குபயோகப்படுகின்றன. விதையின் உருவம் முதலியவை 2ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இது தோட்டங்களிலும், மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

குல்கந்து

இதற்கு அரபியில் ஜ-ூலென்ஜபீன் என்றும், பார்ஸியிலும் ஹிந்துஸ்தானியிலும் குலங்கபீன், குல்கந்த், குல்ஷகர், குல்கன் என்றும், தமிழில் ரோஜாப்பூ தித்திப்பு என்றும், இங்கிலீஷில் (Confection of Roses) கன்பெக்ஷன் ஆப் ரோஸெஸ் என்றும் பெயர். இதன் செய்பாகம் குணம் முதலியவைகள் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும், இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் விற்கப்படுகிறது.

குஷ-ூஸ் விதை

இதற்கு அரபியில் பஜ்றுல்குஷ-ூஸ் என்றும், பார்ஸியில் துக்மே பாஸ், துக்மே பர்ஷ் என்றும், ஹிந்துஸ்தானியில் அம்ராதா கீ பீன்ஜ் என்றும் பெயர்.

பிறப்பு:— கயிறுகளைப் போன்று இலைகளில்லாததும் முள் நிறைந்ததுமான ஒருவகைப் பூண்டின் விதைகள், இதன் கிளைகள் கருமஞ்சள் சாயலானவை. முட்களிலும், புற்களிலும் படர்ந்து கிடக்கும். பூவானது துண்டு துண்டுகளாய் வெண்சாயலா யிருக்கும்; மஞ்சள் சாயலான வகையுமுண்டு. பூவின் மத்தியில் விதையொட்டிக் கொண்டிருக்கும்.

உருவம்:— வருணம், சுவை, பதில் ஆகியவைகள் 2ம் பாகத்தில் சொல்லப்படடிருக்கின்றன.

இயற்கைக் குணமும், தரமும் — 2ம் தரச்சூடும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— இரைப்பை, குடல்கள் ஆகியவைகளிலுள்ள அசுத்த மாசுகளை வெளிப்படுத்தித் தேகத்தைச் சுத்தி செய்யும்; அசுத்த சத்துகளினாலுண்டான சுரத்திற் குபயோகப்படும். மூத்திரம், வியர்வை, சூதக இரத்தம் ஆகிய இவற்றை நன்றாய் வெளிப்படுத்தும். பாலைச் சுரப்பிக்கும்.

துர்க்குணம்:— மண்ணீரல், நுரையீரல் இவைகளுக்காகாது. பரிகாரம் - காடி ஷர்பத்து, தேன், காசினி விதை. மாத்திரை - விராகனெடை ஒன்றரை, ஒன்னேமுக்கால், கிரகசம்பந்தம் - குரு.

இது எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

கெக்கரிவிதை அல்லது கெக்கரிக்காய் விதை

இதற்கு அரபியில் பஜ்றுல்கயித், பஜ்றுல்கிஸ்ஸா, பஜ்றுல் கஸத் என்றும் பார்ஸியில் துஃமேகியார்ஜா, துக்மே பாத்ரங்க என்றும், ஹிந்துஸ்தானியில் கீறேக் பீன்ஞ்ஜ் என்றும், தமிழில் தென்னாட்டில் கெக்கரிவிதை, கெக்கரிக்காய் விதை என்றும், வடநாடுகளில் முள் வெள்ளரிக்காய் விதை யென்றும் இங்கிலீஷில் (Thorn cucumber seeds) தார்ன் குகம்பர் ஸீட்ஸ் என்றும், தெலுங்கில் முல்லு தோசகாய வித்தலு என்றும், கன்னடத்தில் முள்ளுசவதி பீஜா என்றும் பெயர்.

உருவம் முதலியவைகள் 2ம் பாகத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன.

பிறப்பு:— தென்னாடுகளில் விசேஷமாய் வெள்ளரிக் காயைப் போல் பயிர் செய்யப்படுகிறது. வெள்ளரிக்காயைக் கறிசமைத்துச் சாப்பிடுவது போல இதையும் கறிசமைத்துச் சாப்பிடுகிறார்கள்.

கோழிக்கீரை விதை

குறுவா விதை என்பதைப் பார்க்கவும்.

சதாப், சதாப் இலை

இதற்கு அரபியில் பேஜன், சதாப் என்றும், பார்ஸியில் சதாப் என்றும், ஹிந்துஸ்தானியில் சதாப், தத்திலி என்றும், தக்கினியில் சதாப் (Sadaf) என்றும், தமிழில் அர்வதா என்றும், தெலுங்கில் சதாப், அருடு என்றும், கன்னடத்தில் நாகதாளிசப்பு என்றும், சமஸ்கிருதத்தில் சதாப என்றும் பெயர்.

பிறப்பு:— பல்லாரி, பெங்களூர் முதலிய விடங்களில் விசேஷமாகவும், மதராஸில் சொற்பமாகவும் உண்டாகிறது; வடதேசங்களில் கோதுமைப் பயிர்களில் விசேஷமாயுண்டாகிறது. ஆனால் இது வளர வளர அந்தப் பயிரை இது நாசம் செய்து விடுகிறபடியால், களையெடுத்து விடுகிறார்கள்; இலை பச்சை; பூ, மஞ்சள் வருணம், சுவை — கைப்பு; மணம் — துர்வாசனை; இயற்கைக்குணமும், தரமும் — 3ம் தரச்சூடு.

செய்கையும், உபயோகமும்:— வாயுக்களைக் கண்டித்துத் தேகத்தைச் சுத்திசெய்யும்; வயிற்றுப்பிசத்தைக் கண்டிக்கும்; மூளையைப் பலப்படுத்தும்; மூளையைப் பற்றின வியாதிகள், மார்பின் வியாதிகள், மண்ணீரலின் வியாதி, காமாலை, வாயு சம்பந்தமான குடல் முறுக்கு

நோய் ஆகியவைகளுக்கு உபயோகப்படும், மூத்திர அஸ்மரிரோகத்தைக் கண்டிக்கும்; மூத்திரம், சூதக இரத்தம், இவற்றை நன்றாய் வெளிப்படுத்தும். இதில் ஜலம் வார்த்தரைத்துப் பற்றுப் போட சூடு, கொழுமை முதலியவைகளினா லுண்டான தினவுபோம்.

துர்க்குணம்:— போகசக்தி, கண்பார்வை, தலை நோய் இவற்றிற்காகாது.

பரிகாரம்:— றூமிச்சோம்பு, காடிஷர்பத்து, பிரமாணம் — விராகனெடை — 1-2. கிரகசம்பந்தம் — சனி, அங்காரகன்.

உலர்ந்த இலைகள் சாதாரணமாய் மருந்துக் கடைகளில் விற்கப்படுகின்றன.

சப்ஜா

இதற்கு அரபியில் *ஷாஹசப்ரம் (Shah Safram) றைகான் என்றும், பார்ஸியில் ஷாஹசப்ரம்; * நாஜ்போ என்றும், ஹிந்துஸ்தானியில் சப்ஜா (Sabz) என்றும், சமஸ்கிருதத்தில் விஷ்வ துளசியென்றும், தெலுங்கில் ருத்ரஜட; வேபுடுபச்சு, விபூதிபத்ரி என்றும், மலையாளத்தில் பச்ச புஷ்ப என்றும், கன்னடத்தில் நாமகஸ்தூரி என்றும், தமிழில் திருநீற்றுப்பச்சை; திருநீற்றுப்பத்திரி என்றும் பெயர். இது பிரசித்தமாய் எங்குமுள்ளது; அவுஷதங்களில் இலையைப் பார்க்கிலும் இதன் விதை அதிகமாய் உபயோகப்படுத்தப்படுகிறது.

சப்ஜா விதை

மேற்கண்ட நாமங்களுடன் அந்தந்த பாஷையின் விதையென்னும் பிரதி பதத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

உருவம்:— சிறு விதைகள் வருணம் — கருப்பு, சுவை — இலைப்பு, பசையுள்ளது. இயற்கைக் குணமும் தரமும் — 2ம் தரச்சூடும், வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— வயிற்றுக் கடுப்பிற்கு சர்க்கரையுடன் சாப்பிட சஞ்சீவிக் கொப்பான பிரயோஜனத்தைக் கொடுக்கும் மார்பு வறட்சி, வறக்ஷியான இருமல் ஆகியவைகளுக்கு மிகவும் உபயோகப்படும்; இந்திரியத்தைத் தடிப்பாக்கும்.

துர்க்குணம்:— மூளைக்கு உதவாது. பரிகாரம் - பன்னீரும் பூனைவணங்கியும், பதில் - பூனைக்காஞ்சொறி வித்து, மாத்திரை விராகனெடை - ஒன்றரை. கிரகசம்பந்தம் - சந்திரன்.

---

* இந்நாமங்கள் துளசிக்குமுண்டு.

*சல்கூஜா, சில்கூஜா

இதற்கு அரபியில் ஹப்புஸ்ஸதூபர் என்றும், பார்ஸியில் சில்கூஜா என்றும், சமஸ்கிருதத்தில் சல்கோஜா என்றும் பெயர்.

பிறப்பு:— இது ஒரு மரத்தின் கொட்டைகள்; துர்க்கி, பர்ஷியா, சீலான், காஷ்மியர் முதலியவிடங்களில் ஏராளமாய் உண்டாகின்றது. அங்கிருந்து இந்தியாவுக்கு விசேஷமாய்க் கொண்டுவரப் படுகின்றது.

உருவம்:— இக்கொட்டைகள் சிவப்பாகவும் உள்பருப்பு வெள்ளையாகவு மிருக்கும்; சுவை — சிறு தித்திப்பாய் உருசியுள்ளதாயும் நெய்ப்பசையுள்ள தாயுமிருக்கும். இயற்கைக் குணமும் தரமும் — 2ம் தரச்சூடும், 1ம் தரக் கொழுமையும்.

செய்கையும், உபயோகமும்:— போகசக்தியை விர்த்தி செய்யும்; பசிதீபனத்தை யதிகப்படுத்தும்; இருதயம், நரம்பு ஆகியவைகளைப் பலப்படுத்தும், இரைப்பை, ஈரல், நுரை ஈரல், நீர்க்குண்டிக்காய், நீர்ப்பை, ஜனன இந்திரியங்கள் ஆகியவைகளுக் குபயோகப்படும். நரம்புகளின் அடைப்புகளை நீக்கும்; அசுத்த மாசுகளைப் பக்குவப்படுத்தும்.

சில்கூஜாவானது ஸநூபர் மரத்தின் வித்தல்லவென சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் ஸநூபர் தினுசில் ஒரு வகை மரத்தின் வித்தென்பதே பெரும்பாலார் அபிப்பிராயம்.

துர்க்குணம்:— தாமதமாய்ச் சீரணப்படுத்தும். பரிகாரம் — புளிப்பான பழங்கள், காடி ஷர்பத்து, பிரதி — பாதாம் பருப்பும் சீமை தண்ணீர்விட்டான் கிழங்கும்; மாத்திரை விராகனெடை — இரண்டேகால். கிரகசம்பந்தம் — சந்திரனும் சனியும்.

இது இவ்விடத்தில் மருந்துக் கடைகளிலும், பாதாம் முதலிய பருப்பு தினுசுகள் விற்கும் வியாபாரிகளிடத்திலும் விசேஷமாய்க் கிடைக்கிறது.

சன்னராஷ்டம்

இது அரத்தையினத்தில் சிறியது. இது தென்தேசத்தில் சிற்றரத்தை என்று சாதாரணமாய் பெயர் வழங்குகின்றது; இது பிரசித்தமான சரக்கு.

சாரப் பருப்பு

இதற்கு அரபியில் ஹப்புஸ்ஸம்னா என்றும்; பார்ஸியில் நகலோகாஜா என்றும்; ஹிந்துஸ்தானியில் சிறோன்ஜி; பியால், என்றும்;

---

* சல்கூஜா, சில்கூஜா என இருவகைகளாய் வழங்கப்படினும் சில்கூஜா என்பதே சரியான பெயர்.

சமஸ்கிருதத்தில் சிர்ம என்றும்; இங்கிலீஷில் (Chirangia sapida) என்றும் பெயர்.

இதன் உருவம் முதலியவைகள் 2ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

சாலாமிஸ்ரி

இதற்கு அரபியில் ஸஅலப்மிஸ்ரி; குஸ்யத்துஸ்ஸ அலப் என்றும், பார்ஸியிலும் ஹிந்துஸ்தானியிலும் ஸஅலப்மிஸ்ரி என்றும், மற்ற பாஷைகளில் சாலாமிஸ்ரி என்றும் இங்கிலீஷில் (Salep) என்றும் பெயர்.

பிறப்பு:— இது துர்க்கி, எகிப்து, பெர்ஷியா முதலிய தேசங்களில் உண்டாகும் ஒரு செடியின் கிழங்கு; இது இங்கு உலர்த்தப்பட்டு கொண்டுவரப் படுகிறது. சேமங்கிழங்கு, உருளைக்கிழங்கு முதலியவைகளினாலும் செய்து விற்கப் படுகிறது; அசல் சரக்கிற்கும் வைப்புச் சரக்கிற்கும் இடையில் ஏதேனும் ஒரு வித்தியாசத்தைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம், குணபேதமே தவிர மற்றெல்லாவித வெளி பரீக்ஷைகளுக்கும் ஒத்தேயிருக்கும். ஆகையால், அசல் சரக்காய் வாங்கி உபயோகப்படுத்த வேண்டியது முக்கியம். உருவம் — இது குள்ளநரியின் பீஜத்தைப் போலிருப்பதினால் இதற்கு குஸ்யதுஸ்ஸஅலப் எனப் பெயரிடப்பட்டிருக்கின்றது; அரபியில் குள்ளநரிக் குஸஅலப் என்றும் பீஜத்திற்கு குஸ்யா என்றும் பெயர். வருணம்—வெள்ளை; சுவை — இலைப்பு, மென்றால் வழவழப்பாயிருக்கும்; மணம் — இந்திரிய வாசனையைப் போலிருக்கும்; இயற்கைக் குணமும் தரமும் — 1ம் தரச்சூடும் கொழுமையும்.

செய்கையும், உபயோகமும்:— விந்து விளைவையுண்டாக்கிப் போக சக்தியை யுண்டாக்கும். ஆண்குறியில் எழுச்சியை யுண்டாக்கும்; விசை நரம்புகளைப் பலப்படுத்தும். பக்ஷவாதம், முகவாதம் முதலிய மூளையைப் பற்றின வியாதிகளுக் குபயோகப்படும்; மயிர் உதிர்தலை நீக்கி மயிரை முளைப்பித்து வளர்க்கும்.

துர்க்குணம்:— இரைக்குழலுக்கு உதவாது; பரிகாரம் — சர்க்கரையும் நெல்லி முள்ளியும், பிரதி — மஞ்சள் முள்ளங்கி விதையும் சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்கும், மாத்திரை விராகனெடை — 2, இரண்டேகால், கிரகசம்பந்தம் — குரு.

இது பலவிதமாய் பலவிடங்களில் விற்கப்படுகிறது; மருந்து ஷாப்புகளிலும் தூள் செய்து விற்கப்படுகிறது;

சிவப்புதூதரி விதை

இதற்கு அரபியில் பஜ்றுல் ஹம்ம அஹமரு என்றும்; பார்ஸியில் நுக்மே தூதரிசுரும்ஃ என்றும், இங்கிலீஷில் ரெட்மாலோஸ் ஸீட்ஸ் (RedMollows seeds) என்றும் பெயர். சிலர் இதனையே சீமை சிவப்பு நீர்முள்ளி விதை என்று சொல்லுகிறார்கள்.

பிறப்பு:— இது ஒருவகை செடியின் விதைகள்; இச்செடியின் இலைகள் நீர்முள்ளி இலையைப் போல உருவத்தில் இருந்த போதிலும் அதைப் போல இதற்குத் தண்டுகள் இல்லை கிளைகள் சிவந்தும் சற்று கடினமாகவும் அங்குமிங்கும் முட்கள் உள்ளவைகளாகவுமிருக்கும். இதன் காயானது மெல்லிய பரிசுத்தமான தோலுடையது; இதற்குள் மசூரிபருப்பைப் பார்க்கிலும் அகலமான விதைகளுண்டு சிவப்பு தூதரி, வெள்ளை தூதரி, மஞ்சள் தூதரி, என மூன்று வகைப்படும்; இம்மூன்று வகைகளும் வருணபேதமே மொழிய குணத்தில் சற்றேறக்குறைய ஒத்தேயிருக்கின்றன. ஆனால் மஞ்சள் தூதரியானது மற்றிரண்டு வகைகளைப் பார்க்கிலும் கனத்திலும் அகலத்திலும் சற்று சிறியது. சுவை — சிறுகைப்பு, இயற்கைக் குணமும் தரமும் — 1ம் தரச்சூடும், கொழுமையும்.

செய்கையும், உபயோகமும்:— பசிதீபனமுண்டாக்கும்; தேகத்தைக் கொழுப்பிக்கும்; வீக்கங்களைக் கரைக்கும்; இந்திரிய புஷ்டியை யுண்டாக்கி, விந்தைக் கெட்டிப்படுத்தி, ஆண்குறியில் எழுச்சியையுண்டாக்கி, போகசக்தியைத் தரும் நரம்புகளின் பந்தங்களை நீக்கும்; தொண்டைக்கட்டு முதலியவைகளைத் தீர்த்துக் குரலோசையை இனிமையாக்கும். முகவசீகரத்தையுண்டாக்கும்.

துர்க்குணம்:— வயிற்றுறுப்புகளுக்காகாது. பரிகாரம் — ஜரிஷ்க்பழம். பதில் — வெள்ளைத் தூதரிக்கு வெள்ளை பஹமன்கிழங்கு, சிவப்பு தூதரிக்கு சிவப்பு பஹமன்கிழங்கு, மஞ்சள் தூதரிக்கு இவ்விரண்டு வகைகளிலொன்று. மாத்திரை — விராகனெடை ஒன்றரை—2. கிரகசம்பந்தம் — சந்திரன்.

இது எல்லா மருந்துக் கடைகளிலும் சாதாரணமாய்க் கிடைக்கும்.

சிட்டுக் குருவி

ஊர்க்குருவி என்பதைப் பார்க்கவும்.

சிவப்பு முள்ளங்கி

இது காஜர்கிழங்கே; ஆனால் இது நன்றாய் முதிர்ந்து அதிக சதைப் பற்றுள்ளதாய் மஞ்சள் சாயலைப் பார்க்கிலும் செஞ்சாயல் அதிகமாயிருக்கும்; இப்படியிருக்கும் காஜர்கிழங்கிற்கு செம்முள்ளங்கி, சிவப்பு முள்ளங்கி என்று பெயர்; தாதுவிருத்தி அவுஷதங்களுக்கு

மேற்கண்ட விதமாய் பக்குவப்பட்டிருக்கும்; காஜர்கிழங்கு மிகவும் சிரேஷ்டமானது; சூசம்பா வருணமுள்ள ஒருவித முள்ளங்கியுமுண்டு; இதற்கும் சிவப்பு முள்ளங்கி என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது காஜர் இனமல்ல. ஆகையால் இது தாதுவிருத்தி அவுஷதங்களில் உபயோகப்படுகிறதில்லை.

சிவப்பு பஹமன்

இதற்கு பார்ஸி பாஷையில் பஹருபனே சுருஃப் என்று பெயர், இதற்கு வேறு பாஷைகளில் பெயர் தெரியவில்லை. ஆனால் கற்பக்கிழங்கென்றும், சதாநந்தகிழங்கென்றும் காரணப் பெயர்களுண்டு. ஆனால் இப்பெயர்கள் சாதாரணமாய் வழங்கப்படவில்லை.

பிறப்பு:— பஹமன் என்பது ஒருவகைக் கிழங்கு; இது சிறிய மஞ்சள் முள்ளங்கிக் கிழங்கைப் போன்றதாய் ஸ்பரிசத்திற்குச் சற்று கடினமானதாய், கரடு முரடாய் வளைவாயிருக்கும். இது அர்மனி மலைப் பிரதேசங்களிலும் குராசான் தேசத்திலும் அதிகமாய் விளைகின்றது; இது சிவப்பு வெள்ளையென இரண்டு வகைப்படும். சிவந்த இனமான வெள்ளையினத்தைப் பார்க்கிலும் அதிகம் பெரிதாகவும், அதிகம் நீண்டதாகவும், அதிகம் கரடு முரடானதாகவுமிருக்கும்; அதின் உட்புறமானது மேல்புறத்தைப் பார்க்கிலும் அதிகம் சிவப்பாயிருக்கும். வெள்ளையினமோ அகமும் புறமும் ஒரே தன்மையாய் வெண்மையாகவேயிருக்கும். சிவந்த இனத்தில் உயர்ந்ததானது கல்லைப் போல் கடினமானதாகவும், சுகந்த வாசனையுள்ளதாகவும், வாயிலிட்டு மென்றால் கொஞ்சம் வழவழப்பாகவும், சிறு துவர்ப்புள்ளதாகவுமிருக்கும். ருசி — வெள்ளையினம். இலைப்பு. சிவந்த இனம் சிறுதித்திப்புடன் இலைப்பு. இயற்கைக் குணமும் தரமும் — வெள்ளையினம் இரண்டாந் தரச்சூடும் வறட்சியும்; சிவப்பு மூன்றாந்தரச் சூடும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— தேகத்தைக் கொழுப்பித்து விந்து விளைவை விருத்தி செய்து, போக சக்தியையுண்டாக்கும். இருதயத்தையும், மூளையையும் பலப்படுத்தும். மார்பு அதிர்ச்சி, காமாலை இவைகளுக்குபயோகப்படும். நீர்ப்பையிலுள்ள கற்களையுடைத்து வெளிப்படுத்தும்; இரணங்களைச் சுத்தி செய்யும்.

துர்க்குணம்:— சூடான தேகிகளுக்காகாது; பரிகாரம் — சீமை இலந்தைப் பழமும், பாதாம் பிசினும். பதில் — தூதரியும் வெட்பாலையரிசியும். மாத்திரை — விராகனெடை இரண்டு இரண்டேகால். கிரகசம்பந்தம் — சூரியன். இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

சிறு சீமைத் துத்தி

குப்பாஜி என்பதைப் பார்க்கவும்.

சீமை அயிரை மீன்

இதற்கு அரபியில் ஸமகுர்றமல்; சமகுஸ்ஸைதா என்றும் பார்ஸியிலும், இந்துஸ்தானியிலும் ரேக்மாஹி என்றும், இங்கிலீஷில் The Scink என்றும் பெயர்.

பிறப்பு:— இது ஒருவகை மீன்; மணற்குள்ளேயே எப்போதும் ஆழ்ந்து கிடக்கும்; உருவத்தில் பல்லியைப் போலவும், அரணையைப் போலவுமிருக்கும்; உப்பிட்டும், உப்பிடாமலும் உலர்த்திக் கொண்டு வரப்படுகிறது; ஐரோப்பா முதலிய தேசங்களிலிருந்தும், ஷாம் தேசத்திலிருக்கும் பத்துக் கிராமத்திலுள்ள செளல் என்னும் ஏரியிலிருந்தும் கொண்டு வரப்படுகிறது. மேற்படி ஏரியில் ஜனிக்கும் வகைகள்தான் மற்றெல்லா வகைகளிலும் சிரேஷ்டமானதென பற்பல பண்டிதர்களினால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

வருணம் — மஞ்சள் சாயல். சுவை — இலைப்பு, உவர்ப்பு. மணம் — துர்க்கந்தம். இயற்கைக் குணமும், தரமும் — இரண்டாம் தரச்சூடு. அதன் கால்கள் மூன்றாம் தரச்சூடு.

செய்கையும், உபயோகமும்:— இதன் அபூர்வ குணத்தைப் பற்றி ஆதாரமில்லாத அனேக பூர்வ கதைகளுண்டு. அவையெல்லாம் முற்றிலும் கட்டுக்கதையென நம்ப இடமிருந்தாலும் போக சக்தியை விருத்தி செய்யும் குணம் இதற்கிருக்கிறதென எல்லாப் பண்டிதர்களினாலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்தியாவிலுள்ள விலாங்கு மீன், உடும்பு ஆகியவைகளுக்கு தாதுவிருத்தி, போகசக்தி ஆகியவைகளையுண்டாக்கும் பற்பல விசேஷ குணமிருப்பதாக இந்து வைத்திய சாஸ்திரங்களிலும் அனேகம் சொல்லப்பட்டிருக்கினும் அக்குணங்களெல்லாம் சாங்கோபாங்கமாய் இல்லாவிட்டாலும், தாதுவிருத்தி, போக சக்தி ஆகியவைகளை விருத்தி செய்யுங் குணம் இருக்கிறதென்பதை நாம் அனுபவத்தில் உண்மையாய்க் காண்கிறோம். ஆனால் மேற்படி வஸ்துக்கள் தாதுவிருத்தி யோக முறைகளோடு சேர்க்கப்பட்டால் விசேஷ குணத்தைத் தருவதில் சந்தேகமில்லையென எல்லாப் பண்டிதர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவ்விதமே மேற்படி மீனின் கால்களைத் தூள் செய்து கோழி முட்டையுடன் சேர்த்து அரைவேக்காடாய் வேக வைத்துச் சாப்பிட்டு வருவதினால் போக சக்தி தாதுவிருத்தியாகிய இவையுண்டாகும் சீமை அயிரை மீன் சதையும் தாதுவிருத்தி அவுஷதங்களோடு சேர்க்கப்பட்டால் அதுவும் அதிக விசேஷ குணத்தைத் தரும். முக்கியமாய்

ஆண் அயிரை மீனை திராட்சா பானத்துடன் கொஞ்சம் ஜலம் சேர்த்து நன்றாய்க் கலந்து அந்த ஜலம் விட்டு இந்த மீனை அரைத்து யோகங்களில் சேர்க்க வேண்டியதே யிதன் பாகம்.

துர்க்குணம் — சூடான தேகிகளுக்காகாது. பரிகாரம் — உப்பிட்டு உலர்த்த வேண்டியது; பதில் — சாலமிஸ்ரி. பிரமாணம் — விராகனெடை ஒன்று, இரண்டு. கிரகசம்பந்தம் — சனி.

சீமை அத்திப்பழம்

இதற்கு அரபியில் தீன் என்றும், பார்ஸியிலும், ஹிந்துஸ்தானியிலும் அஞ்சீர் என்றும், சமஸ்கிருதத்தில் மஞ்ஜுல்பல என்றும், தெலுங்கில் அஞ்சுரு, தேனெ அத்தி, சீமைமேடி பண்டு என்றும், தமிழில் சீமை அத்திப்பழம், சதை அத்திப்பழம் என்றும், இங்கிலீஷில் Fig என்றும் பெயர். நாட்டு அத்திப் பழத்திற்கு விதை அத்திப் பழமென தமிழில் ஒரு பெயருமுண்டு.

பிறப்பு:— இந்தியாவில் பெங்களூர் முதலிய பற்பல இடங்களிலும், ஷாம் முதலிய பிரதேசங்களிலும் ஏராளமாய் விளைகின்றது. இப்பழமானது உலர்த்தியும் உலர்த்தாமலும் கொண்டு வந்து விற்கப்படுகிறது.

உலர்த்தாத பழங்கள், பழவர்க்க தினுசு கடைகளில் விற்கப்படுகின்றன; உலர்த்தின பழங்கள் மருந்துக் கடைகளில் விற்கப்படுகின்றன.

உருவம் முதலியவைகள் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

சீமை இலந்தைப் பழம் Apple

இதற்கு அரபியில் துப்பாஹ் (Thuffah) என்றும், பார்ஸியிலும், ஹிந்துஸ்தானியிலும் ஸேப் (Sayb) என்றும், சமஸ்கிருதத்தில் பதர் (Bathar) என்றும், தமிழில் சீமையிலந்தைப் பழம், சேப்பு பழம் என்றும், தெலுங்கில் சீமரேக பண்டு என்றும், இங்கிலீஷில் (Apple) ஆப்பிள் என்றும் பெயர்.

பிறப்பு:— இது சீமையிலிருந்து கொண்டு வரப்படுகிற பிரசித்தமான ஒருவகை இலந்தைப் பழம்; பெங்களூர் முதலியவிடங்களிலும் விசேஷமாய் விளைகின்றது.

உருவம் — மஞ்சள் வருணம், சிவப்பு வருணம். சுவை — ஒருவகையானது இனிப்பு, ஒருவகையானது புளிப்பு. இயற்கைக்

குணமும் தரமும் — இனிப்பு 1-ம் தரச்சூடு. புளிப்பு 2-ம் தர குளிர்ச்சியும், வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— மனக்களிப்பை யுண்டாக்கும். இருதயம், தலை, மூளை, ஈரல், இரைப்பை, இரைக்குடல் ஆகிய இவற்றைப் பலப்பிக்கும்; ஜீவாத்துமாவைச் சுத்தி செய்யும். சூட்டைச் சாந்தப்படுத்தும். இருதய அதிர்ச்சி, இளைப்பு இவைகளை நீக்கும். பசிதீபனத்தை அதிகப்படுத்தும். அதிசீக்கிரம் இரத்தமாக மாறும். முகவசீகரமுண்டாகும்; இதன் முறப்பாவானது அதிக ருசியானதும், குணஞ் செய்வதில் அதிக பலமுள்ளதுமாம்.

துர்க்குணம்:— மார்பின் வியாதிக்குதவாது; வாயுவை யுண்டாக்கும். பரிகாரம் — லவங்கப்பட்டை, தேன், ரோஜாப்பூ தித்திப்பு. பதில் — பேதானாப்பழம். பிரமாணம் — துலா 2. கிரகசம்பந்தம் — குரு, சந்திரன்.

சீமை இலந்தம் பழம் Thorn Apple

இதற்கு அரபியில் உன்னாப் என்றும், பார்ஸியில் ஜீலான், ஸீலான் என்றும், இந்துஸ்தானியில் விலாயதிபேர் என்றும் பெயர்.

பிறப்பு:— இது இந்து தேசத்தில் விளைகிறதில்லை. பெர்ஷியா முதலிய பிரதேசங்களிலிருந்து இங்கு கொண்டு வரப்படினும், யூநானி மருந்துக் கடைகளில் விசேஷமாய் விற்கப்படுகிறது. இந்தியாவிலுண்டாகும் இலந்தைக்குத் தமிழில் நாட்டு இலந்தை என்றும், இங்கிலீஷில் (Country thom apple) கண்டிரி தாரன் ஆப்பீள் என்றும், பிறதேசத்திலிருந்து கொண்டு வரப்படுகிறதற்குத் தமிழில் சீமை இலந்தை என்றும், இங்கிலீஷில் (Foreign thom apple) பாரின்தாரன் ஆப்பீள் என்றும் பெயர்; இதன் உருவம் முதலியவைகள் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

சீமை காவிக்கல்

இதைச் சிலர் பூங்காவி என்று சொல்லுகிறார்கள்; இங்கு பூங்காவியல்ல; பூங்காவிக்கு அரபியில் தீனே அர்மனி என்றும், பார்ஸியில் கிலே அர்மனி என்றும்; ஹிந்துஸ்தானியில் பூல்கேரு என்றும், தமிழில் பூங்காவி என்றும், தெலுங்கில் பூக்காவி என்றும் பெயர். சீமை காவிக்கல் என்பது வேறுவகை. ஆனால் உருவம் முதலியவைகளில்

பூங்காவியைப் போலிருக்கினும் குணத்தில் வேறுபடும். சீமை காவிக்கல் என்பதற்கு அரபியில் ஹஜ்ரே அர்மனி என்று பெயர்.

இதன் உருவம் முதலியவைகள் 2—ஆம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இது மதராஸ் மருந்துக் கடைகளில் அரிதாய்க் கிடைக்கிறது; இங்கு இதற்குப் பதிலாய் பூங்காவியைக் கொடுக்கிறார்கள்; சீமை காவிக்கல் பம்பாய், ஹைதராபாத் முதலியவிடங்களில் சாதாரணமாய்க் கிடைக்கும்.

சீமைச் சிவதைவேர்

இதற்கு அரபியில் துர்புத் என்றும், பார்ஸியில் நிஸ-ுத் என்றும் ஹிந்துஸ்தானியில் நாக்பதர்; பிதோரி என்றும், தக்கினியில் திகடா என்றும், சமஸ்கிருதத்தில் த்ரிபுதா என்றும், தெலுங்கில் தெகடா என்றும், மலையாளத்தில் சிவாகவேர் என்றும், தமிழில் சீமைச் சிவதைவேர் என்றும் பெயர். இந்தியாவிலுண்டாவதற்கு நாட்டுச் சிவதை என்றும், இந்தியாவில்லாத பிறதேசங்களில் உண்டாவதற்கு சீமைச் சிவதை என்றும் பெயர் வழங்குகிறது. மேற்கண்ட நாமங்கள் இவ்விரண்டு வகைகளுக்கும் சொல்லப்படினும் அவுஷதங்களில் பெரும்பான்மை சீமைச் சிவதையே உபயோகப்படுத்தப்படுகிறபடியால், மேற்கண்ட நாமங்களுடன் அவ்வப் பாஷையில் சீமை என்னும் வார்த்தையின் பிரதி பதத்தைச் சேர்த்துக் கொண்டால் சந்தேகத்திற்கிடமாகாது; சீமைச் சிவதையானது நாட்டுச் சிவதையைப் பார்க்கிலும் அதிக சத்துள்ளதும், அதிக சதைப் பற்றுள்ளதுமாகையால், இதுவே அவுஷதங்களுக்குச் சிரேஷ்டமானது; இது அகப்படாத காலங்களில் நாட்டுச் சிவதையை உபயோகித்துக் கொள்ளலாம்.

இதன் உருவம், சுத்திக்கிரமம் முதலியவைகள் 2—ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது.

சீமை துத்தி விதை

கித்மி விதை என்பதைப் பார்க்கவும்.

சீமை நறுவிலிப்பழம்

இதற்கு அரபியில் முகாதஹே கபீர்; முகீதஹே கபீர் என்றும் பார்ஸியில் ஸபிஸ்தானே கலான்; ஸக்பி ஸ்தானே கலான் என்றும், ஹிந்துஸ்தானியில் லசோடா என்றும், ஸமஸ்கிருதத்தில் குருப்தார்

என்றும், தெலுங்கில் பெத்தநக்கெரு பண்டுலு, சீமநக்கெரு பண்டுலு என்றும், மலையாளத்தில் சீமவலியவானிச்சி என்றும், தமிழில் பெரு நறுவிலிப்பழம், சீமை நறுவிலிப்பழம் என்றும், இங்கிலீஷில் (Cardia Myxa) கார்டியா மிக்ஸா என்றும் பெயர்.

இதன் உருவம் முதலியவைகள் 2—ஆம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும் அகப்படும்.

சீமை மருதோன்றி விதை

இதற்கு அரபியில் ஹர்முல் என்றும், பார்ஸியில் இஸ்பந்த், ஸபந்த், ஸபந்தே சோக்தனீ என்றும், தமிழில் தென் தேசங்களில் சீமை மறுதோன்றி விதை, சீமை மறுதணை விதை என்றும், மதராஸ் முதலிய வடதேசங்களில் சீமை அழுவண விதை என்றும், இங்கிலீஷில் (Ruta Gravaolens) ருடா கிராவியோலேன்ஸ் என்றும் பெயர்.

இதன் உருவம் முதலியவைகள் 2—ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

சீமை முள்ளங்கி

இதற்கு அரபியில் லிப்த் என்றும், பார்ஸியிலும் ஹிந்துஸ்தானியிலும் ஷல்கம், ஷல்ஜம் என்றும், தமிழில் சீமை முள்ளங்கி என்றும், இங்கிலீஷில் (Turnip) டர்னிப் என்றும் பெயர்.

பிறப்பு:—இது காட்டுச்சீமை முள்ளங்கி, நாட்டுச்சீமை முள்ளங்கி என இரண்டு வகைப்படும். காட்டுச் சீமை முள்ளங்கியானது அவுஷதங்களில் அதிகமாய் உபயோகப் படுத்தப்படுகிறதில்லை; நாட்டுச் சீமை முள்ளங்கியானது சதுப்பு நிலங்களிலும், ஜலக்கரையோரங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. இதன் இலை நமது நாட்டு முள்ளங்கி இலையைப் போலவும், அதிக பற்களுள்ளதாகவும் வழவழப்புள்ளதாகவுமிருக்கும்.

உருவம்:— இக்கிழங்கு உருண்டையாயிருக்கும்; சில வகையானது சிறிது நீண்டதாகவுமிருக்கும்; இதன் மேற்புறத்தில் சிலும்புகள் உள வருணம் — வெள்ளை; சிவப்பினமுண்டு. சுவை — சிறு தித்திப்பும் உறைப்பும் உள்ளது.

இயற்கைக் குணமும், தரமும் — சூடும் கொழுமையும்.

செய்கையும், உபயோகமும்:— அதிக ஆகார சுபாவமுடையது. மார்பிலுள்ள கபத்தையிளக்கியிருமலைக் கண்டிக்கும். தேகத்திலுள்ள அசுத்த சத்துக்களைப் பற்றிப் பிடித்திழுத்து வெளிப்படுத்தும்; மலத்தை இளக்கும்; பசிதீபனத்தையும் போக சக்தியையுமுண்டாக்கும்; பார்வை

சக்தியை அதிகப்படுத்தும்; கல்லடைப்பை நீக்கி மூத்திரத்தை அதிகப்படுத்தும்.

துர்க்குணம்:— வயிறுப்பும், தாமதமாய் ஜீரணமாகும். பரிகாரம் — ஆட்டிறைச்சி, புளிப்பு. பதில் — மஞ்சள் முள்ளங்கிக் கிழங்கு. பிரமாணம் — பலம் — 1—2, கிரகசம்பந்தம் — குரு.

இது பெங்களூர் முதலியவிடங்களிலிருந்து கொண்டு வந்து ஜெனரல் மார்க்கட்டில் விற்கப்படுகிறது.

சீமை முள்ளங்கி விதை

மேற்கண்ட நாமங்களுடன் அந்தந்தப் பாஷையின் விதையென்னும் வார்த்தையின் பிரதிபதத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

உருவம்:— இவ்விதை முள்ளங்கி விதையைப் போலவே யிருக்கும். வருணம் — கருப்பும், சிவப்பும். சுவை — சிறு கைப்பும் உறைப்பும்.

இயற்கைக் குணமும் தரமும் — 2—ம் தரச்சூடும் முதல் தரக் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்:— போக சக்தியையும் தீபன சக்தியையும் அதிகப்படுத்தும்; நீர்க்கட்டையுடைக்கும். சீமை முள்ளங்கியின் மற்ற குணமும் இதற்குமுண்டு; ஆனால் அதைப் பார்க்கிலும் இதற்கு அதிக சக்தியுண்டு.

துர்க்குணம் சூடான தேகிகளுக்குதவாது; தலைநோய் உண்டாகும்; பரிகாரம் — காடி ஷர்பத்து. பதில் — மஞ்சள் முள்ளங்கி விதை; கிரகசம்பந்தம் — சந்திரன்.

இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது.

சுக்காங் கீரை

இதற்கு அரபியில் ஹூம்மாஜ் என்றும், ஹம்மாஜ் என்றும்; பகலதுல் ஹாமிஜா என்றும், பார்ஸியில் துர்ஷா என்றும், துர்றா குறாஸானியென்றும், ஹிந்துஸ்தானியில் சூகா என்றும், தக்கினியில் சுக்கா என்றும், தெலுங்கில் சுக்கு கூராக்கு என்றும், தமிழில் சுக்காங் கீரை என்றும் பெயர்.

பிறப்பு:— காசினி முதலிய கீரைகளைப் போலவே இதுவும் பயிர் செய்து விற்கப்படுகிறது; சுவை — புளிப்பு. இயற்கைக் குணமும் தரமும்; முதல்தர குளிர்ச்சியும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— ஈரலைப் பலப்படுத்தும்; பசி தீபனத்தையுண்டாக்கும்; சூட்டினாலுண்டான நெஞ்செரிச்சல், கரும்பித்தம் இவற்றைக் கண்டிக்கும். சூட்டினாலுண்டான வாயுவைப் போக்கும்; மலத்தையிளக்கும்; ஜீரண சக்தியையுண்டாக்கும்.

துர்க்குணம்:— குளிர்ச்சியான தேகிகளுக்கும், விசை நரம்புகளுக்குமாகாது; பரிகாரம்—தேன், மாதுளம் பழ ஷர்பத்து; பதில் — ஜரிஷ்கும், மாதுளம்பழமும், மாத்திரை — இதன் ரசம் பலம் கால் அரை; கிரகசம்பந்தம் — சந்திரன்.

சுக்காங்கீரை விதை

மேற்கண்ட நாமங்களுடன் அந்தந்தப் பாஷையில் விதை என்னும் வார்த்தையின் பிரதிபதத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

வருணம் — இவ்விதைகள் செஞ்சாயலான கருமை; பளபளப்புள்ளவைகள்; சுவை புளிப்பு. இயற்கைக் குணமும், தரமும் — முதல்தர குளிர்ச்சியும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— சங்கோசனகாரி; ஈரல், இருதயம், இரைப்பையாகிய இவைகளின் அனேக வியாதிகளுக்கும்; வாந்தி, பாண்டு முதலிய வியாதிகளுக்கும் உபயோகப்படும். இரத்தப் போக்கு, பித்த பேதி இவைகளைக் கண்டிக்கும். கைப்பான பித்தங்களைச் சாந்தப்படுத்தும். இரத்தத்தைச் சுத்தியாக்கும்.

துர்க்குணம்:— மண்ணீரலுக்கும் நீர்க்குண்டிக்காய்களுக்குமாகாது. பரிகாரம் — சோம்பும் சர்க்கரையும். பதில் — பார்த்தங்கு விதை. பிரமாணம் — விராகனெடை — 2 — 3, கிரகசம்பந்தம் — சந்திரன்.

இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும் அகப்படுகிறது.

சுரிஞ்சான் மிஸ்ரி

இதற்கு அரபியில் லோ அபத் பர்பரி, அக்னா, சூரஞ்சான் என்றும், பார்ஸியில் சூரிஞ்சான் என்றும், ஹிந்துஸ்தானியில் பர்பரி என்றும், ஸமஸ்கிருதத்தில் குண்ட பேருண்ட என்றும், இங்கிலீஷில் (Colcihicum) கால்சிகம் என்றும் பெயர்.

இது இனிப்பு, கைப்பு என இரண்டு வகைப்படும்.

உருவம் முதலியவைகள் 2ம் பாகத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன.

இது யூநானி மருந்துக் கடைகளிலும் இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் அகப்படும்.

சேப்புப்பழம்

சீமை இலந்தைப் பழம் (Apple) என்பதைப் பார்க்கவும்.

தரஞ்சபீன்

இதற்கு அரபியிலும் பார்ஸியிலும் தரஞ்சபீன் என்றும், துரஞ்சபீன் என்றும், இங்கிலீஷில் (Manna of the Desert) மன்னா ஆப்தி டேஸர்ட்டு என்றும் பெயர்.

இதன் பிறப்பு, உருவம் முதலியவைகள் 2ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

தர்பூஜ் விதை

இதற்கு அரபியில் பஜ்றுல் பதீகுல் ஹிந்தீ என்றும், பார்ஸியில் துக்மேதர்பூஜ், துக்மே ஹிந்த்வானா என்றும், தமிழில் தர்பூஜ் விதை என்றும், சர்க்கரைக் கும்மட்டிக்காய் விதை என்றும் பெயர்.

பிறப்பு:— இது ஒருவகைப் பழத்தின் விதை, தர்பூஜ் பழமானது பருமனில் சிறு கல்யாண பூசணிக்காயைப் போலவும், மேலே கருஞ்சாயலான பச்சை வருணமாகவும், அறுத்தால் உள்ளே சிவந்த வருணமாகவும், ஜலம் நிறைந்த சதையுள்ளதாகவுமிருக்கும்.

உருவம்:— விதைகள் கருப்பாகவும், சிவப்பாகவுமிருக்கும். சுவை — இலைப்புடன் சிறு தித்திப்பு. இயற்கைக் குணமுந் தரமும், 2ம் தர குளிர்ச்சியும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— தேகத்தைக் கொழுப்பிக்கும், நிலை பெயர்த்த அசுத்த மாசை நிலை நிறுத்தும். மார்பிலுள்ள கபசப்தத்தை நீக்கிச் சூட்டினாலுண்டான இருமலை நீக்கும். சூட்டினாலுண்டான சுரம், நீரெரிச்சல் ஆகியவைகளுக்கும் உபயோகப்படும். நீர்ப்பையிலுள்ள கல்லை வெளிப்படுத்தும்.

துர்க்குணம்:— சீதள தேகிகளுக்காகாது. பரிகாரம் - தேன், பிரதி - சுரை விதை. பிரமாணம் - விராகனெடை இரண்டேகால், மூன்றேகால்.

தார் தைலம்

இது தார் என்னும் வஸ்துவிலிருந்து வடித்தெடுக்கப் பட்ட தைலம்.. தாருக்கு அரபியில் * கீர், கீகர் என்றும், பார்ஸியிலும், ஹிந்துஸ்தானியிலும் கில் என்றும், தமிழில் கீல்தார் என்றும் பெயர்.

பிறப்பு:— இது பூமியில் வெட்டி எடுக்கப்பட்ட ஒருவகை தராசத்து. வருணம் - கருப்பு. சுவை - கைப்பு. மணம் - துர்வாசனை. இயற்கைக் குணமும், தரமும் - 3ம் தரச்சூடு.

---

* இந்நாமங்கள் மருந்து வெள்ளைக்கும் சொல்லப்படும்.

செய்கையும், உபயோகமும்:— இத்தைலத்தை உள்ளுக்குபயோகப்படுத்துகிறதில்லை; இதை மேலே பூசுவதினால் வீக்கத்தைக் கரைக்கும். துர்நீர்களைப் பக்குவப்படுத்தி சுத்தி செய்து இரணத்தை ஆற்றும், தாரை நெருப்பிலிட்டுப் புகைக்க துர்வாசனை, தொற்று வியாதி ஆகியவைகள் நீங்கும். இப்புகையைச் சுவாசிக்க காக்கை வலி, சுவாசகாசம் ஆகியவைகள் சாந்தப்படும். இதன் பிளாஸ்திரி காயம் முதலியவைகளையாற்றும். துர்க்குணம் துரையீரல், இரைப்பை இவைகளுக்காகாது — பரிகாரம் — தேனும், கசகசாவும். பதில் — கருங்குங்கிலியம். கிரகசம்பந்தம் — சனி.

திருநீற்றுப் பச்சை

சப்ஜா என்பதைப் பார்க்கவும்.

துரிஞ்சு நாரத்தம் பழம்

இதற்கு அரபியில் உத்றுஜ், உத்றஜ் என்றும், பார்ஸியில் துரன்ஜ் என்றும், ஹிந்துஸ்தானியில் பிஜ்ரொ என்றும், ஸமஸ்கிருதத்தில் பல்பூரா, கேசரிபல் என்றும், தெலுங்கில் மாதீபலபண்டு என்றும், மலையாளத்தில் கணபதி நாராண்ண என்றும், தமிழில் துரிஞ்சு நாரத்தம் பழம் என்றும் பெயர்.

சிலர் மேற்கண்டவைகள் நாரத்தம் பழமென்றும், சிலர் எலுமிச்சம் பழமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் நாரத்தம் பழ வகைகளுள் இதுவும் ஒருவகை என்பதிற் சந்தேகமில்லை.

பிறப்பு:— நாரத்தை பலவகையாயிருப்பது போலவே இத்துருஞ்சு நாரத்தையும் இரண்டு வகைப்படும். அவற்றுள் ஒரு வகையானது அடி, நுனி என்னும் இரண்டு பக்கங்களும் குவிந்து இருப்பதுடன் சற்று நீண்ட வடிவுள்ளதாகவும், தோலானது அதிகம் தடித்ததாகவும், உட்சதையானது கொஞ்சமாகவுமிருக்கும். இதன் தோல்தான் அவுஷதங்களில் உபயோகப்படுத்தப்படுகிறது. மற்றொரு வகையானது இரண்டு பக்கங்களும் கூர்மையா யிராமலும், ஒன்றைப் போல் ஒன்று ஒத்ததாயிராமலும் வித்தியாசப்பட்டிருக்கும், அதாவது கிளையில் ஒட்டியிருக்கும் பக்கமாகிய அடிப்பக்கமானது சற்று அகண்டு விரிந்தும், நுனிப் பக்கமானது சற்று குவிந்துமிருக்கும்; இதன் தோல் அவுஷதங்களில் உபயோகப்படுத்தப் படுகிறதில்லை.

வருணம்:— தோலானது பொன் போன்ற மஞ்சள் சாயலானது. சுவை — சிறு கைப்பு. இயற்கைக் குணமும், தரமும் — 1ம் தரச்சூடும், 2ம் தர வறக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:— இருதயத்தைப் பலப்படுத்திச் சந்தோஷத்தை யுண்டாக்கும்; பித்த வாந்தி, பித்தக் கொதிப்பு இவற்றைத்

தணிக்கும். பசி தீபனத்தையுண்டாக்கும்; பித்தத்தினால் உண்டான கெட்ட ஆவிகளை மேலே ஏறவிடாமல் தடுக்கும்; இதன் முறப்பாவானது, அதிக ருசியாகவும் குணத்தில் பலமுள்ளதாகவுமிருக்கும்.

துர்க்குணம்:— சூடான தேகிகளுக்குத் தலை நோயையுண்டாக்கும். பரிகாரம் - பனப்ஷாவும் சீமை அத்திப்பழ ஷர்பத்தும். பதில் - எலுமிச்சந் தோல், கமலா தோல். பிரமாணம் - விராகனெடை அரை-ஒன்று.

கிரகசம்பந்தம் — சந்திரனும், சுக்கிரனும்.

தூதரி சுபேத்

சிவப்பு தூதரி என்பதைப் பார்க்கவும்.

தூதரி சுரு.:

சிவப்பு தூதரி என்பதைப் பார்க்கவும்.

தேவதாருப் பிசின் சத்து

கந்தபே ரோஜா என்பதைப் பார்க்கவும்.

தோல் கோதுமை

இதற்கு அரபியில் ஷார் என்றும், பார்ஸியிலும், ஹிந்துஸ்தானியிலும் ஜவ் என்றும், ஸம்ஸ்கிருதத்தில் யவ என்றும், இங்கிலீஷில் (Barley) பார்லி என்றும், தமிழில் யவைக் கோதுமை; தோற் கோதுமை, வாற் கோதுமை என்றும் பெயர்.

பிறப்பு:— இது ஒருவகைக் கோதுமை, பங்காளம் முதலியவிடங்களிலிருந்து கொண்டு வரப்படுகிறது. இது கொண்டைக் கடலையுடன் அதிகம் கலக்கப்பட்டிருப்பதால் இதுவும் அந்தப் பயிருடன் பயிராகிறதாய்த் தோற்றப்படுகிறது. வருணம் — மஞ்சள் சாயலானது. சுவை — இலைப்பு. இயற்கைக் குணமும், தரமும் — 1ம் தரக் குளிர்ச்சியும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— ஆகார சுபாவம் குறைந்த அளவாயுடையது. அசுத்த மாசுகளைப் பக்குவப்படுத்தும். இரத்தக் கொதிப்பு, பித்தாதிக்கம் தாகம், சூட்டினாலுண்டான ஜூரத்தின் தீக்ஷணியம் ஆகியவைகளைத் தணிக்கும். இரத்தவமனம், விடாஜூரம், பக்க நோவு, இருமல், சூட்டினாலுண்டான தலை நோய் ஆகியவை களுக்குபயோகமாம். நீரைப் பெருக்கும். இதன் கஞ்சியானது

அவுஷதமாகவும், ஆகாரமாகவும் உபயோகப்படுத்தப்படும். இதனால் அனேகவித குணங்களுண்டாம். துர்க்குணம் - நீர்ப்பைக்கும் சிறுகுடல்களுக்கு மாகாது. பரிகாரம் - நெய், லவங்கம், லவங்கப்பட்டை, ஏலக்காய் ஆகியவைகளின் யோகம். பதில் - இல்லை. பிரமாணம் - இதன் கஞ்சி ஜீரண சக்திக்கு ஏற்ற அளவு.

இந்தக் கஞ்சி செய்யும் வகை முதலியவைகள் முதற் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

நிலக்கடம்பு

இதற்கு அரபியில் அஸாரூன் என்றும், ஹிந்துஸ்தானியில் தகர் என்றும், சகன்த்பாலா என்றும், தமிழில் நிலக்கடம்பு என்றும், சீமை நிலக்கடம்பு என்றும் இங்கிலீஷில் (Toberhas Monitana Coronarya) டாபெராஸ்மானிடானா கொரொனாரியா என்றும் பெயர்.

பிறப்பு:— இது ஒருவகைச் செடியின் வேர். இது நான்கு வகையெனச் சொல்லப்பட்டிருக்கினும் முக்கியமாய் இரண்டே வகைப்படும்.

ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஷாம் முதலிய தேசங்களிலிருந்து இங்கு கொண்டு வரப்படுகிறதற்குச் சீமை நிலக்கடம்பு என்றும், இந்தியாவிலுண்டாவதற்கு நாட்டு நிலக்கடம்பு என்றும் பெயர். முந்திய வகையானது குணத்தில் அதிக சக்தியுடையது; ஆகையால் இதுதான் அவுஷதங்களுக்குச் சிரேஷ்டமானது. நமது கிரந்தத்தில் நிலக்கடம்பு என்று சொல்லப்பட்டிருப்பதை சீமை நிலக்கடம்பென்றே அர்த்தம் செய்ய வேண்டியது.

உருவம்:— இந்த வேரானது மஞ்சள் வேரைப் பார்க்கிலும் மெல்லியதாகவும், சற்று நீண்டதாகவும், கடினமானதாகவு மிருக்கும். வருணம் - மஞ்சள் வருணம். சுவை - உறைப்பு, விருவிருப்புள்ளது. மணம் - சுகந்த வாசனை. இயற்கைக் குணமும், தரமும் - 2ம் தரச்சூடும், வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— கெட்டியான அசுத்த மாசுகளை யிளக்கி வெளிப்படுத்தும்; தேக சுபாவச் சூட்டை விருத்தி செய்யும். வீக்கத்தையும், வாயுக்களையும் கண்டிக்கும். தலை மூளை, இரைப்பை, ஈரல், வெண்ணரம்புகள், மண்ணீரல், நீர்க்குண்டிக்காய் இவைகளைப் பலப்படுத்தும். பித்தத்தையும், கபத்தையும் பேதி மூலமாய் வெளிப்படுத்தும். அதிக நாட்பட்ட சுரங்களை சுவஸ்தப்படுத்தும். நீர்க்கட்டு, சூதகக்கட்டு ஆகிய இவைகளையுடைக்கும்.

துர்க்குணம் — நுரை ஈரலுக்காகாது; பரிகாரம் — திராக்ஷப் பழம். பதில் — சன்னராஷ்டமும் சுக்கும். பிரமாணம் — விராகனெடை ஒன்னேகால். கிரகசம்பந்தம் — சூரியன்.

இது எல்லா மருந்துக் கடைகளிலும் சாதாரணமாய்க் கிடைக்கும்.

நிலக்காடை

இது ஒருவகைக் காடைப் பக்ஷி. இது மற்ற காடையினங்களைப் போல மேலே அதிகமாகப் பறக்காமல் வயல்களிலும், செடிகளிலும் திரிந்து வாசஞ் செய்யும். இது அதிகமாய் நிலத்தில் ஓடித் திரிகிறபடியால் நிலக்காடையெனப் பெயர் பெற்றது. இந்த இனம் அகப்படாவிட்டால் ஆண் காடையை அதற்குப் பதிலாய் உபயோகித்துக் கொள்ளலாம்.

நிஷாஸ்தா

இதற்கு அரபியில் நிஷாவு என்றும், பார்ஸியிலும், ஹிந்துஸ்தானியிலும் நிஷாஸ்தா என்றும், தமிழில் கோதுமை சத்து, உலர்ந்த கோதுமைப் பால், உலர்த்தின கோதுமைப் பால் சத்து என்றும் பெயர்.

பிறப்பு:— கோதுமையை யூறவைத்துப் பிசைந்து பால் எடுத்து உலர்த்திக் கொள்ளப்பட்டதே. வருணம் — வெள்ளை. சுவை — இலைப்பு. இயற்கைக் குணமும், தரமும் — முதல் தரக் குளிர்ச்சியும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— அசுத்த சத்துக்களைப் பக்குவப்படுத்தும். துர்நீர்களை வறட்டும். இரணங்களையாற்றும். இரத்த ஓட்டத்தை நிற்பாட்டும். தொண்டை, மார்பு, இவைகளிலுள்ள கறகறப்பை நீக்கும். சூட்டினாலுண்டான இருமல், மார்பு நோய், இரத்தங் கக்கல் ஆகிய இவைகளுக் குபயோகப்படும். மலத்தைக் கட்டும். இதன் பாயசம் மூளையைப் பலப்படுத்தும். துர்க்குணம் — குடலில் சிக்கிக் கொள்ளுமாகையால் சிக்கலுண்டாக்கும். பரிகாரம் — இனிப்பு வஸ்து, லவங்கம். பதில் — ஊறவைத்துக் கழுவி அரைத்துப் பிழிந்த அரிசியின் சத்து. பிரமாணம் — துலா 1. கிரகசம்பந்தம் — சந்திரன்.

கடைக்காரர்கள் கோதுமைச் சத்திற்குப் பதிலாய் அரிசிமாவைக் குழைத்து உலர்த்தி விற்கின்றபடியால் நாம் செய்து கொள்வதே உத்தமம்.

நீர்நாய் விதை

இதற்கு அரபியில் ஜுந்தி, ஜுந்த்பய்தஸ்தர் என்றும், பார்ஸியில் குந்தேபேதஸ்கர், ஆஷேபச்கான் என்றும், ஹிந்துஸ்தானியில் அவுத்பலா

ஊகாகுஸ்யா, ஜூந்த் என்றும், தமிழில் நீர்நாய் விதை நீர்நாய் ஜவ்வாது என்னும், தெலுங்கில் ஜூன்னு, நீருகுக்கபீஜமு என்றும், இங்கிலீஷில் (Castor) காஸ்டர் என்றும் பெயர்.

பிறப்பு:— ஜூந்து என்பது கஸ்தூரியைப் போலவே ஒரு மிருகத்தின் மதம் உறைந்துண்டாகின்ற வஸ்து. இந்தப் பிராணியானது அமெரிக்கா தேசத்தின் ஹட்ஸன் குடாதீரத்திலும், ஐரோப்பாவில் தாலூப் முதலிய நதிகளின் தீரங்களிலும் ஏராளமாய் வசிக்கிறது. இது உருவத்தில் சிறு நாயைப் போலிருக்கும். இதற்கு கருஞ்சாயலான சிவந்த ரோமமுண்டு. இது நீரிலும் கரையிலும் வாசஞ் செய்கிறது. நீரில் வசிக்கிற நிமித்தம் இது நீர்நாய் எனச் சொல்லப்பட்டாலும் உண்மையாய் இது நீர்நாய் அன்று. நீர்நாய் ஜாதி வேறு. இதற்கு இங்கிலீஷில் (Beaver) பீவர் என்று சொல்லப்படுகிறது. இப்படியே பல பாஷைகளிலும் நீர்நாய் விதை எனச் சொல்லப்பட்டாலும் உண்மையில் அம்மிருகத்தின் பீஜமன்று. ஆனால் கஸ்தூரி மானுக்குக் கஸ்தூரிப்பை யிருப்பது போலவே இதற்கும் ஜூந்து ஜனிக்கும் பையுமிருக்கிறது. இந்தப் பையும் பீஜமும் ஒன்றுதான் எனச் சிலர் அபிப்பிராயப்பட்டாலும் அவற்றின் தோலைக் கிழித்துப் பார்த்தால் பீஜம் வேறு, மேற்படி பை வேறு பிரிந்திருப்பது நன்றாய்ப் புலப்படும். அவ்விரண்டும் ஒன்றாயிருப்பது போல மேலுக்குத் தோற்றும். கஸ்தூரிப் பைக்கு இருப்பது போலவே ஜூந்து ஜனிக்கும் பைக்கும் அனேகம் திரைகளுண்டு; கஸ்தூரி சேகரிக்கப்படுகிறது போலவே இதுவும் பலவிதமாகச் சேகரிக்கப்படுகிறது. சேகரிக்கும் விதம் முதலியவைகளைப் பற்றி இங்கிலீஷ் கிரந்தங்களிலும் வெகுவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அமெரிக்கா ஜூந்து, றூசி ஜூந்து என இருவகைப்படும். பிந்தியவை அகப்படுகிறது அரிது.

உருவம்:— மதம் உறைந்துண்டான வஸ்து, சற்று கனமாயிருக்கும். வருணம் — கமலாப்பழ வருணத்தைப் போல மஞ்சள் சாயலாயிருக்கும். ஆனால் நாட்பட நாட்பட கபில நிறமாய் மாறி வரும். மணம் — காரம், சுகந்த வாசனை. சுவை — கைப்பு, அருவருப்பானது; இதன் குணமும், தரமும் — மூன்றாம் தரச்சூடும், இரண்டாந்தர வறக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:— உற்சாவகாரி, வேதனா சாந்தகாரி, நரம்பின் சிக்கல்களை நீக்கும் வாயுக்கள், வீக்கங்கள் ஆகிய இவைகளைக் கண்டிக்கும். அதிக குளிர்ச்சியான மருந்துகள், நஞ்சுகள் ஆகியவைகளுக்கு மாற்றாகி அவற்றை முறிக்கும். தேக சுபாவச் சூட்டை விருத்தி செய்து தேகத்தைப் பலப்பிக்கும்; மூளையைப் பற்றின குளிர்ச்சியான வியாதிகள், வெண் நரம்புகளின் வியாதிகள் ஆகியவைகளுக் குபயோகப்படும்; நீர்க்கட்டு, சூதகக்கட்டு ஆகியவைகளை யுடைக்கும்; போக சக்தியை யுண்டாக்கும்; கருப்பையைப் பலப்பிக்கும்.

துர்க்குணம்:— சூடான தேகிகளுக்குதவாது; பரிகாரம் — பனப்ஷா ஷர்பத்து. பதில் — சீமை அதிவிடயமும் அரிசித்திப்பிலியும்; பிரமாணம் — விராகனெடை அரை, முக்கால். கிரகசம்பந்தம் — புதன்.

இது யூநானி மருந்துக் கடைகளிலும், இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் அகப்படும்.

பட்டு

இதற்கு அரபியில் கஸ் (Kazz) அப்ரேஸம் என்றும், பார்ஸியில் அப்ரேஷம் என்றும், ஹிந்துஸ்தானியில் ரேஷம் என்றும், தமிழில் பட்டு, வெள்ளைப்பட்டு, கோராப்பட்டு என்றும், இங்கிலீஷில் (Rawsilk) ராஸில்க், (White silk) ஒயிட் ஸில்க் என்றும் பெயர்.

பிறப்பு:— இது சிற்சில மரங்களிலுண்டாகும் பட்டுப் பூச்சி என்னும் ஜெந்து தன்னுடைய வாயின் எச்சியினால் தன்னைச் சுற்றிக் கட்டிக் கொள்ளும் கூண்டு. இதையெடுத்து இழைத்துப் பலவகை வருணம் போட்டுப் பலவித வஸ்திரங்கள் நெய்யப் படுகின்றன; மருந்திற்கு வருணம் போடப்பட்ட துதவாது; மருந்துக் கடைகளில் மேற்படி பட்டுக் கூண்டுகள் விற்கப்படுகின்றன; மருந்திற்கு இதை உபயோகப்படுத்தும் போது இதைக் கத்தரித்துப் புரட்டினால் உட்பக்கத்தில் வெங்காயச் சருகைப் போன்ற ஒரு வஸ்துவிருக்கும். அதை நீக்கி விட்டு, மற்றதைக் கிஷாயமாகச் செய்தாவது அல்லது பாகப்படுத்தியாவது உபயோகப்படுத்த வேண்டும். அல்லது அதிக சன்னத்தூளாய் மாவைப் போல கத்தரித்தும் உபயோகப்படுத்தலாம்.

உருவம்:— இக்கூண்டை விரலினால் இழுத்தால் நூலைப் போல சன்ன இழைகளாய் வரும்; மிருதுவாயிருக்கும், வருணம் — வெள்ளை, மஞ்சள் சாயலான வெள்ளை; சுவை — இலைப்பு, ருசியானதல்ல.

இதன் குணமும், தரமும் — முதல் தரச்சூடும், வறக்ஷியும் சிலர் சூடும் குளிர்ச்சியும் சமமென்கிறார்கள்.

செய்கையும், உபயோகமும்:— இராஜ கருவிகளைப் பலப்படுத்தும், தேகத்தைக் கொழுப்பிக்கும். போக சக்தியை விருத்தி செய்யும்; ஆனந்தமுண்டாக்கும். முகவசீகரமுண்டாக்கும்; தேகத்திலுள்ள அசுத்த மாசுகளை நீக்கித் தேகத்தைச் சுத்தி செய்யும்; துர்நீர்களை வறட்டும், கண்ணின் நோய்கள், மார்பு அதிர்ச்சி, இரைப்பை மரத்தல் ஆகியவைகளுக்கு முபயோகப்படும்.

துர்க்குணம் - இல்லை, பரிகாரம் - இல்லை, பதில் - பக்குவப் படுத்தின முத்து. பிரமாணம் - விராகனெடை முக்கால், இரண்டேகால். கிரகசம்பந்தம் - புதன்.

ப்ருப்புக் கீரை விதை

குருவா விதை என்பதைப் பார்க்கவும்.

பர்பயூன்

இதற்கு அரபியில் பர்பயூன் என்றும், பார்ஸியில் லுப்னே பனப்ஷா, ஹாபிஜே அத்பால் என்றும், தமிழில் பாலரக்ஷணி என்றும் பெயர்.

பிறப்பு:— உருவம், வருணம், சுவை, மணம், பதில் ஆகிய இவை இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. (இகு—தம்) 3ம் தரச் சூடும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— அசுத்த மாசுகளை நீக்கித் தேகத்தைச் சுத்தி செய்யும்; கபத்தைப் பேதியால் வெளிப்படுத்தும்; சத்து நரம்புகளிலுள்ள கபத்தை வெளிப்படுத்தி அவற்றைச் சுத்தி செய்யும். பக்ஷவாதம், முகவாதம், நரம்புத் தளர்ச்சி, நடுக்கல், காக்கை வலி, மூர்ச்சை, பாண்டு, மகோதரம், குடல் முறுக்கு நோய் இவை தீரும். சூதகக் கட்டையுடைக்கும். இதை முலைப் பாலில் இழைத்து மூக்கில் நசியமிட பக்ஷவாதம் உடனே சாந்தப்படும்.

துர்க்குணம் - சூடான தேகிகளுக்கும், பீஜங்களுக்குமாகாது. பரிகாரம் - அதிமதுரப்பால், கருவேலம் பிசின், எண்ணெய்கள். பிரமாணம் - குன்றியெடை 2, 3. கிரகசம்பந்தம் - அங்காரகன். இது எல்லா மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

பல்ஸான்

இதற்கு அரபியில் பல்ஸான் என்றும், இங்கிலீஷில் (Balsam) பால்ஸம் என்றும் பெயர்.

பிறப்பு:— இது எகிப்து, அரேபியா, எருசேலம் முதலியவிடங்களில் உண்டாகின்ற ஒருவகை மரம். இதன் இலைகள் அருவதா இலைகளைப் போலிருக்கும். ஆனால் வருணத்தில் சதாபிலையைப் பார்க்கிலும் அதிக வெள்ளையா யிருக்கும். மனிதர்களுக்குச் சீதோஷ்ணத்தினால் சுகாசுகம் நேரிடுகிறது போல இந்த மரத்திற்கும் சீதோஷ்ணத்தினால் சுகாசுகம் நேரிடுகிறதாம். ஆகையால் அந்தந்தக் காலத்திற்கு ஏற்ற விதமாய் இதைப் பாதுகாக்க வேண்டுமாம். இந்த மரத்தில் வடியும் தைலமே அதிக சிரேஷ்டமானது. இதற்கு அரபியில் துஹனுல் பல்ஸான் என்றும், பார்ஸியில் ரோகனே பல்ஸான் என்றும், தமிழில் பல்ஸான் தைலமென்றும், இங்கிலீஷில் (Balsam of Mecca) பால்ஸம் ஆப் மெக்கா (Balm of Gilead) பாம் ஆப் கிலீட் என்றும் பெயர். இத்தைலமானது ஒரு

காலத்தில் இதனெடைக்கு இரண்டு பங்கு தங்கம் கொடுத்து வாங்கப்பட்டது. இப்போது ஐரோப்பாவிலும் அசல் தைலம் அகப்படுகிறது அரிதாகையால் இதில் நம்பிக்கை வைப்பது வீண் என ஒரு இங்கிலீஷில் டாக்டர் எழுதுகிறார்.

பல்ஸான் எண்ணெயின் பரீக்ஷை:— இத்தைலத்தைக் கொஞ்சம் ஜலத்தில் விட்டால் உள்ளே ஆழ்ந்து போகும். இதில் பஞ்சை அல்லது துணியை நனைத்து ஜலத்தினால் கழுவ இந்த நெய்ப்பசை எடுபட்டு சுத்தியாய்ப் போம். துணியை அல்லது குச்சியை இதில் நனைத்துக் கொளுத்த தீ பற்றி எரியும். ஆனால் இது கருகாமல் முன்போலவே இருக்கும். பல்ஸான் மரத்தின் குச்சிகளும் விதைகளும் அவுஷதங்களில் உபயோகப்படுத்தப் படுகின்றன.

பல்ஸான் குச்சிகள்.

இதற்கு அரபியில் ஊதுல்பல்ஸான் என்றும், பார்ஸியில் ஊதே பல்ஸான் என்றும், சோபே பல்ஸான் என்றும் பெயர்.

வருணம் — கோதுமை வருணத்தைப் போலிருக்கும். சுவை - கைப்பு. மணம் — சுகந்தம். இயற்கைக் குணமும், தரமும் - மூன்றாம் தரச்சூடும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— நரம்புகளின் அடைப்புகளை நீக்கும். தேக சுபாவ சக்திகளை விருத்தி செய்யும். மூளையிலுள்ள துர்நீர்களை நீக்கும். சுவாசகாசம், இரைப்பு, இரைப்பை, ஈரல் இவைகளின் குளிர்ச்சி ஆகியவைகளுக்கும் உபயோகப்படும். அனேகவித நஞ்சுகளுக்கு மாற்றாம்.

துர்க்குணம் — சிறுகுடல்களுக்குதவாது. பரிகாரம் — பாதாம் பிசின், சந்தனம், மூங்கிலுப்பு. பிரதி — பல்ஸான் விதை. பிரமாணம் — விராகனெடை கால், அரை, முக்கால். கிரகசம்பந்தம் — குரு, சூரியன். இது எல்லா யூநாநி மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

பல்ஸான் விதை

இதற்கு அரபியில் ஹப்புல் பல்ஸான் என்றும் பார்ஸியில் துக்மே பல்ஸான் என்றும் பெயர்.

பிறப்பு:— இது ஒருவகைக் கீரையின் விதை. இதன் இலையானது வெள்ளாட்டின், நாக்கைப் போலிருக்கும். இதன் விதையின் உருவம், வருணம், சுவை பதில் ஆகியவைகள் 2ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இயற்கைக் குணமும், தரமும் — 2ம் தரக் குளிர்ச்சியும், வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— தாகத்தைத் தணிக்கும். பிரமேக வியாதிக் குபயோகப்படும். துர்நீர்களினாலுண்டான ஜுரம், விடாஜுரம், இரத்தவமனரோகம் இவற்றைக் குணப்படுத்தும். சிறுகுடல்களைப் பலப்படுத்திச் சீதபேதியைக் கண்டிக்கும்.

துர்க்குணம் — மூளைக்கும் நுரையீரலுக்கும் ஆகாது. பரிகாரம் — பனப்ஷா, தேன், றூமிமஸ்தகி. பிரமாணம் — விராகனெடை இரண்டு, இரண்டேகால், கிரகசம்பந்தம் — சந்திரன், குரு.

பார்லி அரிசி

பார்லி அரிசி என நமது கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் இடங்களிலெல்லாம் யவைக் கோதுவை என்னும் தானியமென்பதே அருத்தமாம். ஏனெனில் பார்லி (Barley) என இன்னொரு வகைத் தானியமுமிருக்கிறது. தோல் கோதுமை என்பதைப் பார்க்கவும்.

பிந்த.: பருப்பு

இதற்கு அரபியில் ஜலூஜ் என்றும், புந்தக் (Bundaq) என்றும், பார்ஸியில் பிந்தஃ, புந்தக் என்றும் பெயர்.

பிறப்பு:— இது மலைப் பிரதேசங்களி லுண்டாகும் ஒரு வகைப் பெரிய மரத்தின் கொட்டைகள். சிறு புன்னைக் கொட்டையைப் போலிருக்கும். உடைத்தால் உள்ளே பருப்பிருக்கும். வருணம் — புதிய பருப்பு வெண்மை, நாட்பட்டது மஞ்சள் சாயல். சுவை — தித்திப்பு, நெய்ப் பசையுள்ளது. இயற்கைக் குணமும், தரமும் 1ம் தரச்சூடும், வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— போத சக்தியை யுண்டாக்கும். குடல்களைப் பலப்படுத்தும். மூளையைப் பலப் படுத்தி அதின் சக்தியை விருத்தி செய்யும். இதைத் தேனுடன் சாப்பிட இருமலை நீக்கும். நீர்க்குண்டிக்காய்களின் துர்ப்பலங்களை நீக்கி அதைக் கொழுப்பிக்கும். பிரமேகத்திற்கும் மயிர் உதிர்கிறதற்கும் உபயோகப்படும். இதன் எண்ணெய் குளிர்ச்சியினாலுண்டான இருமல், நெஞ்சரை, ஈரல் இவைகளுக்குபயோகப்படும்.

துர்க்குணம் — இரைப்பையில் வாயுவை யுண்டாக்கும். பரிகாரம் - காடி ஷர்பத்து, சர்க்கரை, பிரதி - அக்ரோட் பருப்பு, பிஸ்தாபருப்பு. பிரமாணம் - விராகனெடை இரண்டரை, மூன்று. கிரகசம்பந்தம்-சூரியன்.

பிளப்புசீரகம்

இதற்கு அரபியில் கமூனே கிர்மானி என்றும், பார்ஸியில் ஜீரயே கிருமானி என்றும், ஹிந்துஸ்தானியிலும் தக்கினியிலும் ஷாஜீரா என்றும், தமிழில் சீமை சீரகம், பிளப்பு சீரகம் என்றும் பெயர்.

உருவம் :— இது சோம்பைப் பார்க்கிலும் அதிக மெல்லியதா யிருக்கும். வருணம் - கருஞ்சாயல். மணம்-சுகந்தவாசனை. சுவை-சிறுதித்திப்பும், உறைப்பும். இயற்கைக் குணமும்: தரமும் 2ம் தரச்சூடும், 3ம் தரவறட்சியும்.

செய்கையும் உபயோகமும் : இரைப்பை, ஈரல், குடற்கள், நீர்க்குண்டிக்காய்கள் ஆகியவைகளின் வாயுக்களைக் கண்டிக்கும், வயிற்றுப்பிசம், அஜீர்ணம், அஜீர்ணபேதி, மண்ணீரலின் வீக்கம் ஆகியவைகளைக் கண்டிக்கும். நீரைப் பெருக்கும். சூதகக்கட்டை யுடைக்கும். சொட்டு மூத்திரத்தை நிப்பாட்டும். கஷ்டசுவாசம், குளிர்ச்சியினாலுண்டான இருதய அதிர்ச்சி யிவை தீரும்.

துர்க்குணம் - நுரையீரலுக்கு ஆகாது. பரிகாரம் - பாதம்பிசின். பதில் - கேக்கு விதை. பிரமாணம் - ஒன்றரை இரண்டு. கிரகசம்பந்தம் - அங்காரகன். இது எல்லா மருந்துக் கடைகளிலும் சாதாரணமாய்க் கிடைக்கிறது.

பிஹி, பிகிப்பழம்

இதற்கு அரபியில் சப்ரஜலுல் ஹூலூ என்றும், பார்ஸியில் பிஹி என்றும், தமிழில் பேரீக்காய், பேதானாப்பழம் என்றும், இங்கிலீஷில் (Quince Fruit) க்வீன்ஸ் புருட் என்றும் பெயர்.

உருவம்:— இது ஒருவகைப் பழம். வருணம் - மஞ்சள் சாயல், வெண்மை. சுவை - தித்திப்பாகவும் ருசியாகவுமிருக்கும். இயற்கைக் குணமும், தரமும் - சூடும், குளிர்ச்சியும்.

செய்கையும், உபயோகமும்:— இரைப்பை, இருதயம், மூளை இவைகளைப் பலப்படுத்திக் களிப்பை யுண்டாக்கும். மார்பு அதிர்ச்சி, மனக்கிலேசம் இவைகளைக் கண்டிக்கும். நீரைப் பெருக்கும். பாலைச் சுரப்பிக்கும். வறட்சியான இருமலைச் சாந்தப்படுத்தும்.

துர்க்குணம் — குடலில் சிக்கலை யுண்டாக்கும். குடல் முறுக்கு நோய் உண்டாகும். பரிகாரம் - தேன், றூமிச் சோம்பு. பதில் - அம்ரூத் பழம், சேப்புப் பழம். கிரகசம்பந்தம் - சனி.

பிஸ்தா

இதற்கு அரபியில் புஸ்துக் (Fusthuq) என்றும், பார்ஸியில் பிஸ்தா என்றும், சமஸ்கிருதத்தில் தந்தீபல என்றும், இங்கிலீஷில் (Pistacia Nut) பிஸ்டேஷியா நட் என்றும் பெயர்.

பிறப்பு:— இது பிறதேசங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒருவகை மரத்தின் கொட்டைகள். கிஷ்மிஷ் பழத்தைப் போலிருக்கும்; ஆனால் இதற்கு கடினமான மேலோடுண்டு. வருணம் - பச்சை. அகத்திலும் புறத்திலும் சற்று சிவப்பு. சுவை இலைப்பும், சிறு தித்திப்பும், ருசியாயுமிருக்கும். இதன் குணமும், தரமும் - கொஞ்சம் கொழுமையுடன் 2ம் தரச்சூடும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— விற்பனசக்தி ஞாபகசக்தி, போகசக்தி இவற்றை விருத்தி செய்யும். தலைமூளை, இரைப்பை இவற்றைப் பலப்படுத்தும். இருதய அதிர்ச்சி, வாந்தி, அரோசிகம் இவைகளைக் கண்டிக்கும். ஈரலின் நரம்புகளின் சிக்கலை யறுக்கும். தேகத்தைக் கொழுப்பிக்கும். நீர்க்குண்டிக்காயின் துர்பலத்தை நீக்கும். ஈரலின் குளிர்ச்சியைப் போக்கும்.

உருவம்:— இது கறிமிளகைப் போலிருக்கும். வருணம் — கறுப்பு. சுவை — கைப்பு. இயற்கைக் குணமும், தரமும் — இரண்டாம் தரச்சூடும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— இரைப்பையைப் பலப்படுத்தி ஜீரண சக்தியை விருத்தி செய்யும். இரைப்பை, குடற்கள் இவற்றின் குளிர்ச்சி, கொழுமை ஆகிய இவற்றைக் கண்டிக்கும். ஈரலின் நரம்புகளின் அடைப்புகளை நீக்கும். காதிரைச்சல், பாண்டுகால்வாதம் ஆகியவைகளும், இன்னும் மூளையைப் பற்றின வியாதிகளும், வாயு சம்பந்தமான வியாதிகளும் தீரும். துர்க்குணம் — நீர்க்குண்டிக்காய்க் குதவாது. பரிகாரம் — பாதாம் பிசின். பதில் — பல்ஸான் குச்சி. மாத்திரை — விராகனெடை ஒன்றரை, இரண்டு. கிரகசம்பந்தம் — சனி.

பறங்கிக்காய்

இனிப்புப் பூசணிக்காய் என்பதைப் பார்க்கவும்.

பறங்கி விதை

இனிப்புப் பூசணிக்காய் விதை என்பதைப் பார்க்கவும்.

பனப்ஷா

இதற்கு அரபியில் பர்பீர், பனப்ஜ்ஸ என்றும், பார்ஸியில் பனப்ஷா என்றும், இங்கிலீஷில் (Violet) வாயிலெட் என்றும் பெயர்.

பிறப்பு:— இது நேபாளம் முதலிய மலைப் பிரதேசங்களில் உண்டாகின்ற ஒருவகைச் சிறுபூண்டினம். இப்பூண்டு ஒரு சாண் முதல்

ஒன்றரைச் சாண் உயரம் வளரும். இதன் கிளைகள் அதிகம் மெலிந்தவைகளாயிருக்கும். இதன் இலை மாதுளை யிலையைப் போலும், மருதோன்றி இலையைப் போலுமிருக்கும். ஆனால் அடியிலிருந்து அகன்று பெருத்து இரண்டு முனைகளும் நீண்டு தாமரை மொக்கைப் போலிருக்கும். அவுஷதங்களில் இதன் பூவே விசேஷமாய் உபயோகப்படுத்தப்படுகிறது.

பனப்ஷா பூ

மேற்கண்ட பெயர்களுடன் அந்தந்தப் பாஷையில் பூ என்னும் வார்த்தையின் பிரதிபதத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

உருவம்:- முதலியவைகள் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

பஸ்பாயிஜ், பிஸ்பாயஜ்

இதற்கு அரபியில் பஸ்பாயிஜ், அஜ்றாஸ-ஒல்கல்ப் என்றும், ஹிந்துஸ்தானியில் கன்கலீ, கன்காலீ என்றும், தக்கினியில் பிஸ்பாயிஜ் என்றும், தமிழில் பாசிப் பற்பூண்டு என்றும், இங்கிலீஷில் (Common Poly Pody) காமன் பொலி பொடி என்றும் பெயர்.

இதன் உருவம் முதலியவைகள் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

பஹமனே சுபேத்

சிவப்பு பஹமன் என்பதைப் பார்க்கவும்.

பஹமனே சுரு.:

சிவப்பு பஹமன் என்பதைப் பார்க்கவும்.

பாத்ரஞ்சுபோயா

இதற்கு அரபியில் பாத்ரஞ்சுபோயா என்றும், பார்ஸியில் துர்றயே குர்பா, பாத்ரங்கபோயா என்றும், ஹிந்துஸ்தானியில் பிலாயிலோடன்; பில்லிலோடன் என்றும் தமிழில் *பூனை வணங்கி என்றும், இங்கிலீஷில் (Melita Repens) மெலிடா ரிபன்ஸ் என்றும் பெயர்.

உருவம்:— இது ஒருவகைப் பூண்டு. பூனை இதன் மேல் விழுந்து உருண்டு புரளும். இயற்கைக் குணமும், தரமும் — 2ம் தரச்சூடும் வறட்சியும். செய்கையும், உபயோகமும் — இருதயம், மூளை, இரைப்பை ஆகியவைகளைப் பலப்படுத்தும். பஞ்சேந்திரியங்களின்

* பூனை வணங்கி என சடாமாஞ்சிலுக்கும் ஓர் பெயருண்டு.

சக்தியை விருத்தி செய்யும். மூளையின் நரம்புகளிலுள்ள துர்நீர்களை நீக்கிச் சுத்தி செய்யும். அதிநித்திரா ரோகத்தைப் போக்கும். கபசம்பந்தமான வியாதிகள், வாத சம்பந்தமான வியாதிகள் ஆகியவைகளுக் குபயோகப்படும். இருதய அதிர்ச்சி, மனக்கிலேசம் முதலியவைகளையும் சாந்தப்படுத்தும். இதைப் பற்றிட இருதய துர்ப்பலம் நீங்கும். துர்க்குணம் — பக்க நோவிற்காகாது. பரிகாரம் — கருவேலம் பிசின். பிரதி — கோராப்பட்டு, பிரமாணம் — விராகனெடை இரண்டு, இரண்டரை.

கிரகசம்பந்தம் — குரு, சுக்கிரன்.

பாலங்கூ

இதற்குப் பார்ஸியில் பாலங்கூ என்றும், துகீமேரெலங்கூ என்றும், இந்துஸ்தானியிலும் தக்கினியிலும், பாலங்கா என்றும், தமிழில் காட்டெலிமிச்சந் துளசி விதை; பேய்லவங்க விதை என்றும் பெயர்.

பிறப்பு:— இதன் இலையானது திருநீற்றுப் பச்சையிலையின் வாசனை மணக்கும். வெண் சாயலான பச்சை வர்ணமுள்ளதாய், பற்களும் சிகரமும் இல்லாததாயிருக்கும். அவுஷதங்களில் இதன் விதையே அதிகமாய் உபயோகப்படுத்தப்படுகிறது.

உருவம்:— இதன் விதையானது திருநீற்றுப் பச்சையின் விதையைப் பார்க்கிலும் மொத்தமானதாகவும், சற்று நீண்டதாகவுமிருக்கும். வருணம் — கருப்பு. சுவை — இலைப்பு. வழவழப்புள்ளது. இயற்கைக் குணமும், தரமும் — 1ம் தரக் குளிர்ச்சியும், கொழுமையும்.

செய்கையும், உபயோகமும்:— இருதயத்தைப் பலப்படுத்தும். இதைப் பன்னீருடன் உபயோகிக்க இருதய அதிர்ச்சி, மனத்திடுக்கம், இரத்த பேதி, ஊஷ்ணபேதி ஆகியவை நீங்கும். சர்க்கரையுடன் சாப்பிட வயிற்றுக் கடுப்பு, சீதபேதி இவற்றைப் போக்கும். தாகத்தைத் தணிக்கும்.

துர்க்குணம் - இரைப்பைக்கு ஆகாது. பரிகாரம் - கற்கண்டும், சுக்காங்கீரை விதையும். பிரதி - திருநீற்றுப் பச்சை விதையும் கோராப்பட்டும். பிரமாணம் - விராகனெடை இரண்டு, இரண்டரை. கிரகசம்பந்தம் - குரு.

பார்தங்கு

இதற்கு அரபியில் பஜ்றுல் லிஸானுல் ஹமல் என்றும், பார்ஸியில் துக்மேபார் தங்கு என்றும், தமிழில் பள்ளைதாரை விதை என்றும் பெயர்.

துர்க்குணம் — நீர்ப்பைக்கு ஆகாது; பரிகாரம் — காடி ஷர்பத்து, ஆலுபகோடாப்பழம். பதில் — பாதம் பருப்பு. கிரகசம்பந்தம் — குரு.

பூ மாதுளம்பூ — பூ மாதுளைப்பூ

இது ஒருவகை மாதுளமரத்தின் பூ, இந்த இளம் பூ பூக்குமேயொழிய காய் காய்க்கிறதில்லை; சாதாரண மாதுளம் பூவைப் பார்க்கிலும் இதன் பூவானது இதழ்கள் நிறைந்து பெரிதாயிருக்கும். இதற்கு அரபியில் ஜல்நார் என்றும், பார்ஸியில் குல்நார் என்றும் ஹிந்துஸ்தானியில் குல்அனார் என்றும், தெலுங்கில் புவ்வுதானிமம் என்றும் மலையாளத்தில் பூமாதுளம் என்றும், கன்னடத்தில் ஹூஷிதாளிம்பே என்றும், தமிழில் பூமாதுளை, ஆண் மாதுளை என்றும், இங்கிலீஷில் (Male Variety of Punica Granatum) மேல் வரய்டி ஆப் புனிகா கிரானடம் என்றும்பெயர்.

உருவம்:— கருஞ்சிவப்பாயிருக்கும். சுவை - கைப்பு; ருசியாயிராது இதன் குணமும் செய்கையும் - 2ம் தரம் குளிர்ச்சியும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— சங்கோசனகாரி இரத்த பேதி, பித்தபேதி, இரத்த ஒட்டம் இவற்றைக் கட்டும். பிரமேக வியாதிக்கும் உபயோகப்படும். சிறுகுடல்களைப் பலப்படுத்தும். வாயிலிருந்து இரத்தம் விழுதலை நிற்பாட்டும்.

துர்க்குணம் - தலை நோயுண்டாகும். குடல்களில் சிக்கலையுண்டாக்கும். பரிகாரம் - பாதாம் பிசின். பிரதி - மாதுளம் பூ. பிரமாணம் - விராகனெடை - ஒன்னேகால் - ஒன்றரை. கிரகசம்பந்தம் - புதன்.

பேதானா விதை

இதற்கு அரபியில் பஜ்றுல்சபர்ஜல், ஹப்புஸ்ஸபர்ஜல் என்றும், பார்ஸியில் பிஹிதானா, பெஹ்தானா, துக்மே ஆபி என்றும், தமிழில் பேதானா விதை, பேரிக்காய் விதை என்றும் இங்கிலீஷில் (Quince seeds) குவன்ஸ் ஸீட்ஸ் என்றும் பெயர்.

உருவம்:— இது ஒருவகை விதைகள். வருணம் - கருப்பும், சிவப்பும். சுவை — இலைப்பு, வழவழப்புள்ளது. இதன் குணமும் செய்கையும் — 2ம் தரக் குளிர்ச்சியும் கொழுமையும்.

செய்கையும், உபயோகமும்:— இதை ஜலத்தில் ஊற வைத்தெடுத்த கோழையானது தொண்டையின் கறகறப்பு, வறட்சியான இருமல் ஆகியவைகளுக்குபயோகப்படும். இரைப்பையின் சூட்டைத் தணிக்கும். வறட்சியினாலுண்டான ஜுரம், நாவறட்சி, எரிவந்தம் ஆகியவைகளைச் சாந்தப்படுத்தும். நுரையீரலின் இரணத்தையாற்றும். முக்கியமாய் இது பித்த சம்பந்தமான வியாதிகளுக்கு அதிக முபயோகப்படும்.

துர்க்குணம் - இரைப்பைக்கு ஆகாது. பரிகாரம் - சர்க்கரை, சோம்பு. பிரதி - இஸ்பகோல்விதை. பிரமாணம் - விராகனெடை 2 - இரண்டரை. கிரகசம்பந்தம் - சந்திரன்.

பேரீக்காய்

பிஹிப்பழம் என்பதைப் பார்க்கவும்.

பேரேலக்காய்

இதற்கு அரபியில் காகிலா கபாறு; ஹீல் ஜகர் என்றும், பார்ஸியில் காகியேகலான்; காகிலயேஜகர் என்றும், ஹிந்துஸ்தானியில் படீயிலாச்சி ஜங்லி இலாச்சி என்றும், சமஸ்கிருதத்தில் ப்ஹதஉபகுஞ்சிக என்றும், தெலுங்கில் பெத்த ஏலக்காயலு; அடவி ஏலக்காயலு என்றும், தமிழில் பேரேலக்காய் என்றும், இங்கிலீஷில் (Wild Cardamom) ஒயில்டு கார்டமம் என்றும் பெயர். இது உண்மையில் ஏலக்காயில் வேறு வகையானது. ஆனால் இங்கு மருந்துக் கடைகளில் பேரேலக்காய் என்றால் ஏலக்காய்களில் பெரிதாயிருப்பதை பொறுக்கிக் கொடுக்கிறார்கள். ஆகையால் இங்கு ஜங்க்லீ இலர்ச்சி அல்லது காட்டேலக்காய் என்று கேட்க வேண்டும்; அப்போது சரியானதாய்க் கொடுப்பார்கள். ஹைதராபாத், பம்பாய் முதலியவிடங்களில் காகிலயேகபார் என்றும் கேட்க வேண்டும். இது மருந்துக் கடைகளில் இங்கு அரிதாய்க் கிடைக்கிறது.

இதன் உருவம் முதலியவைகள் — 2ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

புதீனா, புதினா

இதற்கு அரபியில் நஅநவுல்ஹிந்தி; நஅனாவுல்ஹிந்தி; ஹபகுல்ஹிந்தி; போதன்ஜூல்ஹிந்தி என்றும், பார்ஸியில் புதீனா என்றும், தமிழில் புதினா, ஈயெச்சக்கீரை என்றும், தெலுங்கில் ஈகளங்கிலி கூர என்றும், மலையாளத்தில் புதிஇனா என்றும், கன்னடத்தில் சட்னிமரகு என்றும், இங்கிலீஷில் (Indian peppermint) இண்டியன் பேப்பர் மிண்டு என்றும் பெயர்.

உருவம்:— இது ஒருவகைக் கீரையினம். சட்னி, சுண்டாங்கி, ஊறுகாய் முதலியவைகளில் விசேஷமாய் உபயோகப்படுத்தப்பட்ட பிரசித்தமான கீரை. இதுவும் மற்ற கீரைகளைப் போல பயிர்

செய்யப்பட்டுப் பச்சையாகவும், உலர்த்தியும் விற்கப்படுகிறது. வருணம் - பச்சை, உலர்ந்தது, பசுஞ்சாயலானது. இகு — தம் 2ம் தரச்சூடும், வறக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:— மார்பு, நீர்க்குண்டிக் காய்கள் இவற்றிலுள்ள துர்நீர்களை நீக்கித் தேகத்தைச் சுத்தி செய்யும்; ஏப்பத்தைக் கண்டிக்கும்; வாயுவை அதமாக்கும்; மூத்திரம், வியர்வை இவற்றை அதிகப்படுத்தும்; கருவழிக்க இது உபயோகமாகும்; இதை முகர்ந்தால் மயக்கந் தீரும்.

துர்க்குணம் - சிறு குடல், நீர்க்குண்டிக்காய், போக சக்தி இவைகளுக்காகாது. பரிகாரம் - பாதம் பிசின், அதிமதுரப்பால், பிரதி - வெங்காயத்தாள், பிரமாணம் - விராகனெடை - 2-இரண்டேகால். கிரகசம்பந்தம் — அங்காரகன்.

போஜிதான் மிஸ்ரி

இதற்கு அரபியில் முஸ்தஅஜலா என்றும், பார்ஸியில் போஜிதான் என்றும் பெயர்.

உருவம்:— இது ஒருவகை வேர். மொத்தத்திலும் நிகளத்திலும் பெரும்பாலும் விரலளவா யிருக்கும். ஸ்பரிசத்திற்குக் கடினமாயிருக்கும். மேலே வரிவரிகளாயிருக்கும். வருணம் - வெள்ளை. சுவை - சிறுதித்திப்பு. இயற்கைக் குணமும், தரமும் - 2-ஆம் தரச்சூடும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— போக சக்தியையுண்டாக்கும். போக இச்சையைத் தூண்டும். கால்வாதம், விரல்வாதம் இவைகளைக் கண்டிக்கும். ஈரல், மண்ணீரல், இவற்றின் நரம்புகளின் சிக்கலை நீக்கும். இரைப்பியிலுள்ள துர்நீர்களை நீக்கி அதைச் சுத்தி காக்கும். கருவிழிக்கும், பாண்டு வியாதிக் குபயோகப்படும். இரைப்பையிலுள்ள பூச்சிகளைக் கொல்லும். சீதளமான விஷங்களை முறிக்கும் மாற்றாகும். மூலவியாதிக்கு உபயோகப்படும். இது முக்கியமாய் பித்த நீர்களைப் பேதியால் வெளிப்படுத்தும்.

துர்க்குணம் - பீஜங்களுக்காகாது. பரிகாரம் - தேன், சதகுப்பை. பதில் - பஹமன் கிழங்கு. பிரமாணம் - விராகனெடை - ஒன்றேகால் - ஒன்றரை. கிரகசம்பந்தம் - சூரியன். இது எல்லா மருந்துக் கடைகளிலும் சாதாரணமாய்க் கிடைக்கும்.

மஞ்சள் முள்ளங்கி விதை

இது காஜர் கிழங்கின் வித்தாகையால் அதற்குடைய பற்பல பாஷைகளின் பெயருடன் அந்தந்தப் பாஷையில் விதை என்னும் பிரதிபதத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

உருவம்:— இது ஒருவகை விதை. வருணம் - சிவப்பும், கபிலவருணமும். சுவை - இலைப்பு. இகு - தம் — 2ம் தரச்சூடும், 1ம் தரவறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— போக சக்தியையுண்டாக்கி அதைப் பலப்படுத்தும் நீரைப் பெருக்கும். கருப்பையின் அசுத்தங்களை நீக்கி அதைச் சுத்தி செய்யும். மார்பு நோயைச் சாந்தப்படுத்தும். வறுத்த விதையானது பாண்டுரோகம், நீரடைப்பு, வயிற்றுப்பிசம், இரணங்கள் ஆகியவைகளுக்கும் உபயோகப்படும். கல்லடைப்புரோகம், அஸ்மரிரோகம் ஆகியவைகளுக் குபயோகப்படும்.

துர்க்குணம் — இரைப்பை, தொண்டை, விசை நரம்புகள் ஆகியவைகளுக்காகாது. பரிகாரம் - றூமிச் சோம்பு. பிரதி - காட்டு மஞ்சள் முள்ளங்கி விதையும், றூமிச் சோம்பும். பிரமாணம் - விராகனெடை - ஒன்றரை ஒன்றேமுக்கால். கிரகசம்பந்தம் - சந்திரன். இது எல்லா மருந்துக் கடைகளிலும் அகப்படும்.

மயிர்ச்சிக்கி

இதற்கு அரபியில் அறுல்ஜிபால்; ஷஅறுல்அரஜ்; ஷஅறுல்ஜின் என்றும், பார்ஸியில் பரிஸியாவஷான் என்றும், ஹிந்துஸ்தானியில் காலீசான்ப் என்றும், தமிழில் மயிர்ச்சிக்கி என்றும், தெலுங்கில் மயூரசிகி என்றும் பெயர். இதன் உருவம் முதலியவைகள் 2ம் பாகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

மருக்கொழுந்து

இதற்கு அரபியில் மர்ஜன்கோஷ் என்றும், பார்ஸியில் மர்ஜங்கோஷ் என்றும், இந்துஸ்தானியில் தவ்னாமர்வா என்றும், சமஸ்கிருதத்தில் தமன என்றும், தமிழில் தென்னாடுகளில் மருக்கொழுந்து என்றும், மதராஸில் தவனம் என்றும், இங்கிலீஷில் (Hieracium Pilosella) ஹிராஷியம் பைலோ செல்லா என்றும் பெயர். இது ஒருவகைச் சுகந்தமுள்ள புல்லினம். இது மற்ற சுகந்த புஷ்பச் செடி முதலியவைகளைப் போலவே பயிர் செய்யப்படுகிறது; இலைகள் குறுகி அதிகம் நீண்டதாகவும், அதிகம் மெல்லியதாகவுமிருக்கும்; பூவானது செஞ்சாயலான

வெண்மையாயிருக்கும். விதையானது திருநீற்றுப் பச்சையின் விதையைப் போலிருக்கும். மரு, மருவு என வேறொரு வகையுமுண்டு. அதன் இலை திருநீற்றுப் பச்சையின் இலையைப் போலிருக்கும். இது அவுஷதங்களுக்கு விசேஷமாய் உபயோகப்படுத்தப்படுகிறதில்லை. ஆனால் முந்தின வகையின் இலைதான் பச்சையாயும் உலர்த்தியும் அவுஷதங்களில் உபயோகப்படுத்தப்படுகிறது. இதன் விதையும் பெரும்பாலும் அவுஷதத்திற்கு உபயோகமாம். நமது கிரந்தத்தில் மருவு, மருவு விதையென்பதை முறையே மருக்கொழுந்து, மருக்கொழுந்து விதை எனத் தெரிந்து உபயோகிக்கவும். சுவை - கைப்பு. இயற்கைக் குணமும், தரமும் - 2ம் தரச்சூடும், 1ம் தரவறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— தேகத்திலுள்ள மாசுகளை நீக்கிச் சுத்தி செய்யும்; வீக்கங்களைக் கரைக்கும்; சிக்குகளை யறுக்கும். நீர்களை வறட்டும். கல்லடைப்பை யுடைக்கும். முகவாதம், பக்ஷவாதம், வாயுவினாலுண்டான தலைநோய் ஆகியவைகளுக் குபயோகப்படும். கபாலத்திலுள்ள துர்நீர்களைப் போக்கும்; மார்பு நோய், சுவாசகாசம், வாயு சம்பந்தமான குடல் முறுக்கு நோய், பாண்டுரோகம் இவைகளுக் குபயோகப்படும். இதை முகந்தால் ஜலதோஷம், முகவாதம், அதிநித்திராரோகம் இவை சாந்தப்படும். இதன் ரசத்தைக் கக்குவான் ரோகத்திற்குக் கொடுத்துக் குணம் காணப்பட்டிருக்கிறது. (இது சுயானுபவம்.)

துர்க்குணம் - நீர்க்குண்டிக்காய்க்கும் நீர்ப்பைக்குமாகாது. பரிகாரம் - காசினியும், குருவாவும், பிரதி - மாசிப்பத்திரியும், கருஞ்சீரகமும். பிரமாணம் - விராகனெடை இரண்டு, இரண்டேகால். கிரகசம்பந்தம் - அங்காரகன்.

மாமுதா

இதற்கு அரபியிலும், பார்ஸியிலும் ஸக்முனியா மகமூதா என்றும், இங்கிலீஷ் (Scammony) ஸ்காம்முனி என்றும், தமிழில் ஸகுமூனியா, மாமுதா என்றும் பெயர்.

உருவம் முதலியவைகள் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இது சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

மிஷ்மிஷ்

இதற்கு அரபியில் மிஷ்மிஷ் என்றும், பார்ஸியில் ஜர்த் ஆலு, ஸக்கர்பாதம் என்றும், ஹிந்துஸ்தானியில் கூபானி, சர்க்கரை பாதாம் பழம் என்றும் பெயர்.

பிறப்பு:— இது ஒருவகைப் பெருமரத்தின் பழங்கள். ஆலுபகோடாப் பழத்தைப் போல் இருக்கும். உள்ளே கொட்டையும் மேலே சதையுமிருக்கும். வருணம். சுவை - இனிப்பு. இயற்கைக் குணமும், தரமும் - 2ம் தரச்சூடும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— பித்தத்தைப் பேதிவழியாய் வெளிப்படுத்தும். தாகத்தையும், இரத்தக் கொதிப்பையும் தணிக்கும்; அசுத்த மாசுகளைப் பக்குவப்படுத்தும் சிக்கல்களை யறுக்கும்; பித்த சம்பந்தமான ஜுரம், இரத்தாதிக்கத்தினா லுண்டான ஜுரம் ஆகியவைகளுக்குபயோகப்படும். இதன் பருப்பு மூலவியாதியைக் குணப்படுத்தும். உறுப்புகளைப் பலப்படுத்தும். வயிற்றின் பூச்சிகளை நாசமாக்கும்.

துர்க்குணம் — வயிறுப்பும், சீக்கிரம் கெட்டுப் போம்; பரிகாரம் — சர்க்கரையும் காடிஷர்பத்தும். பதில் — கிஷ்மிஷ் பழம். பிரமாணம் — விராகனெடை இரண்டரை மூன்று. கிரகசம்பந்தம் — சந்திரன்.

முலாம்பழ விதை

இதற்கு அரபியில் பஜ்றுல்பதீக் என்றும், பார்ஸியில் துக்மே கர்பூஜா என்றும், ஹிந்துஸ்தானியில் கர்பூஜேக் பீன்ஸ் என்றும், தமிழில் முலாம்பழ விதை என்றும், இங்கிலீஷில் (Melon seed) மெலன் ஸீட்ஸ் என்றும் பெயர்.

இதன் உருவம் முதலியவைகள் 2ம் பாகத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன.

முலாம் பழமானது கடப்பை, சித்தவட்டம் முதலியவிடங்களில் விசேஷமா யுண்டாகின்றது. மதராஸில் அவ்விடங்களிலிருந்துதான் முக்கியமாய்க் கொண்டு வரப்பட்டு விற்கப்படுகிறது.

மேனா

இதற்கு அரபியில் மன்ன் என்றும், பார்ஸியிலும், ஹிந்துஸ்தானியிலும் ஷிர்கஷ்த் என்றும், தமிழில் மேனா என்றும், இங்கிலீஷில் (Manna Ashmanna) மன்னா; ஆஷ்மன்னா என்றும் பெயர்.

இதன் உருவம் முதலியவைகள் 2ம் பாகத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன. இது மருந்துக் கடைகளிலும், இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

யஷப்

இதற்கு அரபியில் ஹஜ்றுல் யஷப் (Yashaf) என்றும், பார்ஸியில் ஸங்கேயஷ்ப் என்றும் பெயர். இது ஒருவகை ரவாக்கல் அல்லது

ஒருவகை ரத்தினம். இது எங்கிருந்த போதிலும் அதற்குச் சமீபத்தில் இடி விழுகிறதில்லை. இதைத் தரித்துக் கொண்டிருக்கிறவர்கள் சமீபத்திலும் இடி விழாமல் விலகிப் போம்; இது சீனா தேசத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. இந்து தேசத்திலும் சிலவிடங்களில் கண்டெடுக்கப் படுகிறது. இது அதிக கடினமானது. வருணம் — பற்பல வகையுண்டு. இவற்றுள் மஞ்சள் சாயலான பச்சை நிறமுள்ளதும் வெண்சாயலான பச்சைநிறமுள்ளதும் மேலானவைகள். சுவை — இலைப்பு. இயற்கைக் குணமும், தரமும் — குளிர்ச்சியும் வறட்சியும் சமமானது.

செய்கையும், உபயோகமும்:— இருதயம், இரைப்பை, மூளை இவைகளைப் பலப்படுத்தும். மார்பு அதிர்ச்சி, மனக்கிலேசம் ஆகியவைகளுக்கு அதிகமாய் உபயோகப்படும். மூளையைச் சார்ந்த வியாதிகள், முக்கியமாய் காக்கைவலி முதலியவைகளுக் குபயோகப் படும். உறைந்து கட்டிப் போன இரத்தத்தைக் கரைக்கும். உள் அவயங்களிலுள்ள இரணத்தையாற்றும். இதைத் தரித்திருப்பதினால் மார்பு அதிர்ச்சி, மனக்கிலேசம் ஆகியவைகளைப் போக்குவதில் ஆச்சரிய குணமுடையது.

துர்க்குணம் - இல்லை. பரிகாரம் - இல்லை. பதில் - மஞ்சள் வருண மாணிக்கம். பிரமாணம் - குன்றிமணியெடை 3, 4. கிரகசம்பந்தம் - சனி. இது யூநானி மருந்துக் கடைகளில் விற்கப்படுகிறது.

யூதக்கல்

இதற்கு அரபியில் ஹஜ்றுல் யஹூதி என்றும், பார்ஸியில் ஸங்கே யஹூதொன் என்றும், இங்கிலீஷில் (Jewsstone) ஜூஸ்ஸ்டோன் என்றும் பெயர்.

பிறப்பு:— இது ஒருவகைக் கல்லு; உருண்டையாய் இலந்தைப் பழத்தைப் போலிருக்கும். வருணம் - வெள்ளை. சுவை - இலைப்பு. இயற்கைக் குணமும், தரமும் - 2ம் தரச்சூடும், 1ம் தரவறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— இது நீர்க்கட்டை நன்றாய் உடைத்து நீரை அதிகப்படுத்தும்; கல்லடைப்பு, சதையடைப்பு, அஸ்மரிரோகம் இவைகளை சுவஸ்தப்படுத்தும். நீர்ப்பையிலும், நீர்க்குண்டிக்காய்களிலும் கல்விளைவைத் தடுக்கும். இதைக் கைப்பு பாதம் பருப்புடன் அரைத்து ஜலத்தில் கரைத்துக் குடிப்பாட்ட நீர்ப்பையில் உறைந்து இருக்கும் இரத்தத்தைச் சிறுநீருடன் வெளிப்படுத்தும்.

துர்க்குணம் - ஈரலுக்கு ஆகாது. பரிகாரம் - கருவேலம் பிசினும் கரபஸ் ஓமமும். பிரதி - கரபஸ் ஓமம். பிரமாணம் - விராகனெடை ஒன்றரை. கிரகசம்பந்தம் - சனி.

ராஜவர்த்திக்கல் — இராஜவர்த்திக்கல்

இதற்கு அரபியில் லாஜ்வரத் (Lazvard) என்றும், பார்ஸியில் லாஜ்வர்த் என்றும், ஹிந்துஸ்தானியில் ராவட் என்றும், இங்கிலீஷில் (Lapis Lazuli) லாபீஸ் லஜூலி என்றும் பெயர்.

பிறப்பு:— இது ஒருவகை ஊதாக்கல்; நடுவில் பொன் வருணப் புள்ளிகள் விழுந்திருக்கும். சுவை — இலைப்பு. இயற்கைக் குணமும், தரமும் — பாகப்படுத்தினது. 2ம் தரக் குளிர்ச்சியும், வறட்சியும். பாகப்படுத்ததாது 2ம் தரச்சூடும் வறட்சியும். இதைப் பாகப்படுத்து முறை, 2ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

செய்கையும், உபயோகமும்:— துர்நீர்களை நீக்கி தேகத்தைச் சுத்தி செய்யும். வாத நீர்களைப் பேதிவழியாய் வெளிப்படுத்தும்; உன்மத்தம், நீர்க்குண்டிக்காயின் நோவு, மனத்திடுக்கம், விசனம் முதலிய வாத சம்பந்த வியாதிகளுக்குபயோகப்படும். இருதயத்தைப் பலப்படுத்தி சந்தோஷமுண்டாக்கும். இதைக் கண்ணிலிட கண்ணோய், பில்லம், நீர்ப்பில்லம் முதலியவை தீரும். துர்க்குணம் - இரைப்பைக்கு ஆகாது; வயிற்று நோய், மயக்கமுண்டாகும். பரிகாரம் - றூமி மஸ்தகி, பாதம்பிசின், தேன். பிரதி - சீமைக் காவிக்கல். பிரமாணம் - விராகனெடை அரை, முக்கால். கிரகசம்பந்தம் - புதன்.

லாதன்

இதற்கு அரபியில் லாஜன் (Lazan) என்றும், ஹிந்துஸ்தானியில் லாதன் என்றும், தமிழில் மட்டிப்பால், சீமை மட்டிப்பால் என்றும் பெயர்; இது நாட்டு மட்டிப்பால், சீமை மட்டிப்பால் என இரண்டு வகைப்படும். நாட்டு மட்டிப்பாலானது மலையாளம்; திருவனந்தபுரம், கோயம்புத்தூர், இலங்கை, கொங்கான் முதலியவிடங்களில் உண்டாகும் ஒருவகை மரப்பால்; சீமை மட்டிப்பாலானது பில்லை பில்லைகளாயிருக்கும்; இது இங்கு அகப்படுகிறது அரிது. ஆகையால் நாட்டு மட்டிப்பாலைச் சேர்த்துக் கொள்ளலாம். வருணம் - செஞ்சாயலான கருப்பு. மணம் - சுகந்த வாசனை. சுவை - சிறுகைப்பு. இயற்கைக் குணமும், தரமும் - 1ம் தரச்சூடும், 2ம் தரவறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— தேகத்திலுள்ள மாசுகளைப் பக்குவப்படுத்தி வெளிப்படுத்தித் தேகத்தைச் சுத்தி செய்யும். வாயு, வீக்கம் ஆகியவைகளைக் கண்டிக்கும். கல்லைப் போலிருக்கிற வீக்கங்களையும் மிருதுவாக்கும். வயிற்றிலுள்ள பூச்சிகளைக் கொல்லும்.

துர்க்குணம் — சூட்டுடம்பிற் காகாது; வயிற்று நோய் உண்டாகும். பரிகாரம் - பன்னீர், சந்தனம். பிரதி - இல்லை. பிரமாணம் - விராகனெடை கால், அரை. கிரகசம்பந்தம் - அங்காரன்.

வெள்ளைத் தூதரி

சிவப்புத் தூதரி என்பதைப் பார்க்கவும்.

வெள்ளை பஹமன்

சிவப்பு பஹமன் என்பதைப் பார்க்கவும்.

றூமிச் சோம்பு

அனிஸூன் என்பதைப் பார்க்கவும்.

றூமி மஸ்தகி

இதற்கு அரபியில் மஸ்தகியுல்றூமி, அலகுல்றூமி என்றும், பார்ஸியில் குந்துரேறூமி என்றும், றூமிமஸ்தகி, மஸ்தகி என்றும், தமிழில் றூமிமலைத்தகி, பூனைக்கண் குங்கிலியம் என்றும், இங்கிலீஷில் (Mastich or Mastic) மாஸ்டிச் அல்லது மாஸ்டிக் என்றும் பெயர்.

பிறப்பு:—இது ஷாம் தேசத்திலுண்டாகும் ஒருவகை மரத்தின் பிசின். வருணம் - மஞ்சள் வருணமும், வெண்மையும். சுவை - முதலில் இலைப்பு, பின்பு கைப்பு. மணம் - ஒருவகை துர்வாசனை. இதன் குணமும், தரமும் - 2ம் தரச்சூடும், வறக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:—இரைப்பை, ஈரல், நீர்க்குண்டிக்காய் இவற்றைப் பலப்படுத்தும். தீபாக்கினியை விருத்தி செய்யும். போக இச்சையையுண்டாக்கும். சீதபேதி, அரோசிகம் இவைகளுக் குபயோகப்படும். வீக்கங்களைக்கரைக்கும்.

துர்க்குணம் — நீர்ப்பைக்கு ஆகாது. பரிகாரம் - பாதம் பிசின். பதில் - பாதம் பிசின். பிரமாணம் - விராகனெடை முக்கால். கிரகசம்பந்தம் - சனி.

றேவல் சீனி

இதற்கு அரபியில் றாவந்த் என்றும், பார்ஸியில் ரேவந்த் றேவந்சீனி, பேகே ரேவாஸ் என்றும், ஹிந்துஸ்தானியில் ரேவன் சீனி என்றும், தமிழில் இரேவல்சின்னி, மஞ்சள் சீனக்கிழங்கு என்றும், தெலுங்கில் பஸுபுசீனகட்ட என்றும், கன்னடத்தில் ரேவசின்னி என்றும், இங்கிலீஷில் (Rhubarb) ரூபார்ப் என்றும் பெயர்.

இதன் உருவம் முதலியவைகள் 2ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸஅத்தர்

இதற்கு அரபியில் ஸஅத்தர் என்றும், பார்ஸியில் ஈஷன், ஊஷன் என்றும், ஹிந்துஸ்தானியில் ஸாதர் என்றும், பெயர் ஸுஅத்தர் என வழங்கப்படினும் ஸஅத்தர் என்பதே சரியான சொல். இது ஒருவகைப் புல் இனம். வருணம் - இலையானது பச்சை வருணம், பூவானது நீல வருணம். மணம் - காரமான சுகந்த வாசனை. சுவை - உறைப்பு. இதன் குணமும் தரமும் - 2ம் தரச்சூடும், வறக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:— வாதநீர், கபநீர் ஆகியவைகளை வெளிப்படுத்தித் தேகத்தைச் சுத்தி செய்யும்; போக சக்தியை யுண்டாக்கும்; இரைப்பையின் மேல் நிற்கும் அசுத்த மாசுகளை நீக்கி அதைச் சுத்தி செய்து பசிதீபனத்தை யுண்டாக்கும். கெட்ட ஆவிகள் மூளையிற் செல்லாது தடுக்கும். மூளையைச் சார்ந்த பல வியாதிகளுக்கு இது முக்கியமாய் உபயோகப்படுத்தப்படுகிறது.

துர்க்குணம் - நுரையீரலுக்காகாது. பரிகாரம் - காடி. பிரதி - புதீனா, காட்டுப் புதீனா. பிரமாணம் - விராகனெடை 2, இரண்டேகால். கிரகசம்பந்தம் - சனி.

இது சாதாரணமாய் மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

ஸமாக், ஸுமாக்

இதற்கு அரபியில் ஸும்மாக் என்றும், ஹிந்துஸ்தானியில் தத்ரீக், தமாதீர் என்றும், இங்கிலீஷில் (Rhus Coriaria; Dry seeds of Sumac) ரூஸ்கொரியா; ட்ரைஸீட்ஸ் ஆப் சுமாக் என்றும் பெயர்.

இதன் உருவம், சுவை, வருணம், பதில் ஆகிய இவை 2ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதன் குணமும், தரமும் — 2ம் தரக் குளிர்ச்சியும் வறட்சியும், சிலரிடத்தில் 3ம் தர வறட்சி.

செய்கையும், உபயோகமும்:— சங்கோசனகாரி, வாந்தி, அரோசிகம், பித்தபேதி இவைகளைக் கண்டிக்கும்; இரைப்பையிலுள்ள பற்களைக் கூர்மையாக்கும்; இரத்தம் வடிதலை நிற்பாட்டும்; நீரைக் கட்டும்; வயிற்றிலுள்ள அவயவங்களை பலப்படுத்தும்.

துர்க்குணம் - குளிர்ச்சியான ஈரலுக்காகாது. பரிகாரம் - றூமி மஸ்தகியும் றூமி சோம்பும். பிரமாணம் - விராகனெடை ஒன்னேகால், ஒன்னேமுக்கால்.

கிரகசம்பந்தம் - சனி.

ஸாலாமிஸ்ரி

ஸாலாமிஸ்ரி என்பதைப் பார்க்கவும்.

ஷகாகுல் மிஸ்ரி

இதற்கு அரபியில் ஷகாகுல் மிஸ்றி என்றும், பார்ஸியில் காஜரே தஷ்தி என்றும், ஹிந்துஸ்தானியில் ஸதாவி, ஸதாவர் என்றும், சமஸ்கிருதத்தில் ஷதாவரி என்றும், தெலுங்கில் சீம சல்லகட்டலு, சீமபில்லி பீசல, சீமபில்லிதேக என்றும்; கன்னடத்தில் மஜ்ஜிகே கட்டே என்றும், மலையாளத்தில் சதாவலி என்றும், தமிழில் சீமை தண்ணீர் விட்டான் கிழங்கு, காட்டு மஞ்சள் முள்ளங்கி கிழங்கு என்றும் பெயர். மேற்கண்ட நாமங்களில் சில நாட்டு தண்ணீர் விட்டான் கிழங்கிற்குஞ் சொல்லப்படினும் அதிக குணமும் சத்துமுள்ளது சீமை தண்ணீர் விட்டான் கிழங்கேயாதலால் அவுஷதங்களில் அதுவே சிரேஷ்டமானது.

உருவம்:— இது ஒருவகைக் கிழங்கு. மிகவும் வழவழப்புள்ளது. வருணம் - வெள்ளை. சுவை - இலைப்பு. இதன் குணமும் தரமும் - 2ம் தரச்சூடும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— இந்திரியத்தைக் கெட்டியாக்கிப் போக சக்தியை யுண்டாக்கும். இரைப்பை, ஈரல், நீர்க்குண்டிக்காய் ஆகிய இவற்றில் சூட்டை யுண்டாக்கும்; கபத்தைக் கண்டித்து வெளிப்படுத்தும் பாலை அதிகப்படுத்தி அதைத் தடிப்பாக்கும். பலவித இந்திரிய இழிவு ரோகம், பிரமேக வியாதி ஆகியவைகளுக்குமாகும். மூலரோகம், நரம்பைப் பற்றின வியாதிகள் ஆகியவைகளுக்குமாகும்.

துர்க்குணம் — தலை நோயுண்டாகும். பரிகாரம் - தேன். பதில் - பஹமனேசுபேத். பிரமாணம் - விராகனெடை 2. கிரகசம்பந்தம் - சூரியன்.

ஷல்கம்

சீமை முள்ளங்கி என்பதைப் பார்க்கவும்.

ஷாஜீறா

பிளப்பு ஜீரகம் என்பதைப் பார்க்கவும்.

சிலர் கேக்கு விதையைத் தப்பாய் ஷாஜீறா என்று வழங்குகிறார்கள்; கேக்கு விதைக்கு அரபியில் கறோயா; கமுனு அர்மனி; கமுனுறூமி என்றும், பார்ஸியில் ஜீறயே றூமி;

ஜீறயே அர்மனி என்றும், ஹிந்துஸ்தானியில் விலாயதீ ஜீறா என்றும், தமிழில் கேக்கு விதை, சீமைச் சோம்பு என்றும், இங்கிலீஷில் (Caraway seeds) காரவே ஸீட்ஸ் என்றும் பெயர்.

ஜய்தூன் எண்ணெய்

இதற்கு அரபியில் துஹநுல் ஜய்த்தூன்; துஹநுல் ஜய்த் என்றும், பார்ஸியில் ரோகனே ஜய்தூன் என்றும், இங்கிலீஷில் (Olive oil) ஆலிவ் ஆயில் என்றும் பெயர்.

உருவம்:— இந்த எண்ணெயானது தடிப்பாகவும், பிசுபிசுப்புள்ளதாகவும், அதிக தெளிவாயுமிருக்கும். வருணம் - தரத்திற்குத் தக்கபடி மஞ்சள், பச்சை, வெண்சாயல் ஆகியவைகளில் ஒரு நிறமாயிருக்கும். நல்லது தெளிவாயிருக்கும். சுவை - தித்திப்பு, நாட்பட்டால் கார்த்து போம். மணம் - வாசனை இல்லை. இதன் குணமும் தரமும் - 1ம் தரச்சூடும் கொழுமையும்.

செய்கையும், உபயோகமும்:— விசை நரம்புகளின் குளிர்ச்சியை நீக்கி அவற்றைப் பலப்படுத்தும்; பல அவயவங்களைப் பலப்படுத்தும், வீக்கத்தைக் கரைக்கும், வயிற்றிலுள்ள கிருமிகளைக் கொல்லும்; வயிற்றுக் கடுப்பைச் சாந்தப்படுத்தும்; இதை மேலே பூசிவர குளிர்ச்சி சம்பந்தமான நோவுகள் தீரும்; இரணங்கள் சீக்கிரம் ஆறும்.

துர்க்குணம் - சூடான தேகிகளுக்கு ஆகாது. பரிகாரம் - பால், தேன். பிரதி - ஆமணக்கெண்ணெய். பிரமாணம் - பலம்-1, ஒன்னேகால். கிரகசம்பந்தம் - சந்திரன்.

இது யூநானி மருந்துக் கடைகளிலும் இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

ஜரிஷ்க்

இதற்கு அரபியில் அம்பர்பாரீஸ் என்றும் பார்ஸியில் ஜரீஷ்க்; ஜரீஷ் என்றும் இங்கிலீஷில் (Berries) பெர்ரீஸ் என்றும் பெயர்.

இதன் உருவம், சுவை, பதில் 2ம் பாகத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன.

வருணம் - ஊதா சிவப்பு. இதன் குணமும் தரமும் - 3ம் தரக் குளிர்ச்சியும் வறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— பித்தத்தின் தீக்ஷணியத்தைச் சாந்தப்படுத்தும். தாகத்தை யடக்கும். இரைப்பை, ஈரல், இருதயம்

இவற்றின் சூட்டைத் தணித்து அவற்றைப் பலப்படுத்தும். பித்தபேதி, அஜீரணபேதி முதலிய பல பேதிகளைக் கட்டும். இரத்த சிராவக ரோகத்தைக் கண்டிக்கும்.

துர்க்குணம் - குளிர்ச்சியான தேகிகளுக்கும் குடல் முறுக்கு நோய் உள்ளவர்களுக்குமாகாது. பரிகாரம் - லவங்கம் சர்க்கரை. பிரமாணம் - துலா முக்கால், ஒன்று. கிரகசம்பந்தம் - சனி.

ஜன்தியானா

இதற்கு அரபியில் ஜின்தியானா என்றும், பார்ஸியில் கௌஷாஹ் என்றும், ஹிந்துஸ்தானியில் பக்கான் பேத் (Pakkhan Bayd) பாகான் பேத் (Paukhan Bayd) என்றும், சமஸ்கிருதத்தில் அஷ்மபேத் என்றும், இங்கிலீஷில் (Gentian Root) ஜென்ஷியன் ரூட் என்றும் பெயர்.

உருவம்:— இது ஒருவகை வேர்; இது சிலிர்த்து முறுக்கிக் கொண்டு சிறிதும் பெரிதுமாயிருக்கும். வருணம் - மேலே பழுப்பு நிறம். உள்ளே மஞ்சள் நிறம். சுவை - தித்திப்பு:ம், கைப்பும். மணம் - சுகந்த வாசனை. இயற்கைக் குணமும், தரமும் - 2ம் தரச்சூடும், வறக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:— பலகாரி; ஜடராக்கினி வர்த்தனகாரி; வீக்கங்களைக் கரைக்கும்; குடல்களின் சிக்கல்களை யறுக்கும்; குளிர்ச்சியினாலுண்டான நோவுகள், பக்கநோவு, இரைப்பையின் நோவு ஆகியவைகளைச் சாந்தப்படுத்தும். நீரைப் பெருக்கும். இந்திரிய இழிவு, பிரமேகம், பாண்டு ஆகியவைகளுக் குபயோகப்படும். பேய், நாய்கடி முதலிய பல விஷங்களுக்கு மாற்றாகும்.

துர்க்குணம் — மார்பிற்கும், சூடான தேகிகளுக்கும் ஆகாது. பரிகாரம் — மஸ்தகி. பிரதி — நிலக்கடம்பு. பிரமாணம் — விராகனெடை முக்கால், ஒன்று. கிரகசம்பந்தம் — அங்காரகன்.

இது யூநானி மருந்துக் கடைகளிலும், இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கிறது.

ஜிப்தேறூமி

இது வெள்ளைக் குங்கிலியத்தைப் போன்ற ஒருவகை ரோஜனம். இது மூன்று வகைப்படும். ஒருவகையானது கீலைப் போல் கட்டியாயிருக்கும். இது பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படுகிறது. இன்னொரு வகை — திரவரூபமாய்த் தடித்துக் குழம்பாயிருக்கும். இதற்கு ஜிப்தேறூமிறதப் என்று பெயர். இதுதான் அவுஷதங்களில் உபயோகப்படுத்தப்படுகிறது. இது ஒருவகை சவுக்க மரப்பிசின்.

மற்றொரு வகையானது மேற்படி பிசின் வெயிலில் அல்லது நெருப்பில் உலர்த்தப்பட்டதே. வருணம் - கருப்பு. சுவை - கைப்பு. இதன்குணமும் தரமும் - 3ம் தரச்சூடும், 2ம் தரவறட்சியும்.

செய்கையும், உபயோகமும்:— வீக்கம், வாயுகள் இவற்றைப் போக்கும். கீல்களுக்குப் பலத்தைக் கொடுக்கும். பக்ஷவாதம், குதிகால் வாதம், தொடை வாதம் ஆகிய இவைகளைக் கண்டிக்கும். மார்பு, தொண்டை இவற்றைச் சுத்தி செய்யும். ஆண் குறியைப் பருமனாக்கி நிகளமாக்கும். இரத்தத்தைச் சருமத்தின் பக்கம் இழுக்கும். ஆண் குறியில் இதைப் பூசுவதினால் போக சக்தியை அதிகப்படுத்தும்.

துர்க்குணம் - குளிர்ச்சியான நுரையீரலுக்கும் மண்ணீரலுக்கும் ஆகாது. பரிகாரம் - பாதம் பிசின்; பனப்ஷா, தீபகர்ப்பூரம். பிரதி — குக்கிலும் மெழுக்கும். பிரமாணம் - விராகனெடை, ஒன்றரை-2. கிரகசம்பந்தம் - குரு.

ஜூபா

இதற்கு அரபியில் ஜூபாவுல் யாபிஸ் என்றும் பார்ஸியில் ஜூபர்யேகுஷ்க் என்றும், இங்கிலீஷில் (Croton Jaufia) க்ரோடன் ஜெளபியா என்றும் பெயர்.

உருவம்:— இது ஒருவகைப் புல் இனம். பூமியில் படர்ந்து கிடக்கும்; இலை தவனம், மருதோன்றி இவற்றின் இலையைப் போலிருக்கும்; கிளையானது கணுக்கள் நிறைந்ததாயிருக்கும்; ஒவ்வொரு கணுவிலும் மஞ்சள் பூவிருக்கும். இதில் விதையிராது. சுவை - கைப்பு மணம் - சுகந்தம், எருசலேம் தேசத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. தான் சிரேஷ்டமானது; இதற்கு ஜூபாயே மிஸ்றியென்று பேர். ஜபாயேறதப் என்கிற ஒருவகையுமுண்டு. இது மூலிகையல்ல. ஆட்டின் காலின் சந்திலுள்ள அழுக்கு இதன்குணமும் தரமும் - 2ம் தரச்சூடும் வரக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:— கபத்தை பேதிவழியாய் வெளிப்படுத்தித் தேகத்தைச் சுத்தி செய்யும்; பலமான வாத நீர்களைக் கண்டிக்கும்; இரைப்பையிலுள்ள கிருமிகளைப் போக்கும்; வீக்கங்களைக் கரைக்கும்; புராதன இருமல், வறக்ஷியான இருமல் இவைகளைக் கண்டிக்கும்; நுரையீரலின் எரிவந்தம், மார்பின் நோவு, பக்கநோவு இரைப்பையின் நோவு ஆகியவைகள் போம். கபநீரை வறட்டும்.

துர்க்குணம் - ஈரலுக்கு ஆகாது. பரிகாரம் - சீமையிலந்தைப் பழம், கருவேலம் பிசின். பிரதி - ஸஅத்தர், மயிர்ச்சிக்கி. பிரமாணம் - விராகனெடை - இரண்டேகால், மூனேகால் கிரகசம்பந்தம் - அங்காரகன்.

ஹப்புல்பான்

இதற்கு அரபியில் ஹப்புல்பான் என்றும், பார்ஸியில் பாரே தரக்தே ஆஜாத் என்றும், இந்துஸ்தானியின் பதாயின்கே பல் என்றும் பெயர்.

பிறப்பு:— இது ஒருவகை ஒதிய மரத்தின் உருண்டையான கொட்டைகள். இந்த மரம் இந்தியாவில் பயிராகிறதில்லை; முருங்கை மரத்தைப் போல இது அதிக மிருதுவானது. வருணம் - கறுப்பு. சுவை - நெய்ப் பசையுடன் கைப்பு. இதன்குணமும் தரமும் - 2ம் தரச் சூடும் வறக்ஷியும்.

செய்கையும், உபயோகமும்:— ஈரலின் நரம்புகளின் சிக்கலையறுக்கும். கபநீர், வாதநீர் ஆகியவைகளைப் பேதிவழியாய் வெளிப்படுத்தும்; வீக்கங்களைக் கரைக்கும்; இரத்த சுத்தியுண்டாக்கும், மண்ணீரலின் நோய்க்குபயோகப்படும்; மூலம், ஜுரகட்டி, வறக்ஷியான தினவு ஆகியவைகளைப் போக்கும்; துர்க்குணம் - ஈரலுக்கும் இரைப்பைக்குமாகாது; பரிகாரம் - சோம்பு. பதில் - தாளீச பத்திரி, செஞ்சந்தனம்; பிரமாணம் - விராகனெடை ஒன்னே முக்கால், இரண்டு.

கிரகசம்பந்தம் — சனி.

யூநானி வைத்திய தாதுவிருத்தி போதினி
அரும்பத விளக்கம் முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றகுமா நிர்றகீம்

யூநாநி வைத்திய

தாருட்யவிர்த்தி போதினி

முதற்பாகம்

கடவுள் வணக்கம்

அரபு வாக்கியம்

அல்கம்து லில்லாஹி, றப்பில் ஆலமீன்;
அஸ்ஸலாத்து, வஸ்ஸலாமு அலா ஸய்யிதில்
மூர்ஸலீன்; வஆலிஹி, வஅஸ்காபிஹி,
அஜ்மஈன்.

வெண்பா

நேர்பெருகும் பிஸ்மில்லா ஹிர்றகுமா நிர்றகீ
மேர்பெறவென் றிந்நூ லியம்புதற்குச் — சீர்பெறவே
யத்தனே சித்தனே யாதியே சோதியே
கத்தனே நீயிதற்குக் காப்பு.

விருத்தம்

அகதாகி சமதாகி யானதொரு லம்யலிதாய
மிகலம்யூ லதேயாகி மேன்மைபெரு வலம்யகுன்
லஹுூகுபுவன் அகதாகி லாயிலாஹ இல்லாஹுூ
ரகுமானே ராஜிகுனா ரப்புலா லமீன்காப்பே.

முகம்மது சல்லல்லாஹுூ அலைகிவசல்லம்
அவர்கள் துதி

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

அயிற்றியிருப் புகழா ரகுமது நபியை
யன்பொடு துதிசெய வன்னோய்
செயிர்ப்புறா வதனான் முகம்மதின் பதத்தைச்
சிந்தனை நாளுமே செய்வா
முயிர்த்திடப் பஃராத் லுக்குமா னென்போ
ருரைபொருட் சுருக்கியூ நாநி
வயித்யதா ருட்ய விர்த்திபோ தினியாய்
வழுவற வழுத்துதற் பொருட்டே.

பீடிகை

மனித உடலானது இகபரங்களுக்கு ஏற்றதாகயிருக்கிற தென்பது யாவருக்குந் தெரிந்த செய்தியே. இந்த உடலிற்கு மூலாதாரமாகிய தாதுவின் சுகமான ஆரோக்கியத்திற்கு ஏற்றபடி புத்தி சந்தானமும், ஞானேந்திரியம், கருமேந்திரியம், புத்தி முதலியவைகளுக்குச் சத்தியுமுண்டாகின்றனவென, மெய்யறிவு நூல்கள் வாயிலாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. தாதுவின் ஆரோக்கியமே தேகபலம், மனோபலம், ஆயுள்பலம் முதலியவற்றோடுங்கூடிய வழிவழிப் பெருக்கத்திற்கும் யோகிகள் முதலானவர்கள் திடகாத்திரர்களாய் நீண்ட காலம் வாழ்வதற்கும் காரணமாயுள்ளது; தாதுவைப் பற்றிய சகல விபரங்களையும் சந்தேகமறத் தெரிந்து கொள்வது யாவருக்கும் அத்தியாவசியம்; ஆகையால், தாது எப்படி யுண்டாகிறதென்பதையும், அதன் ஏற்பாட்டையும், சந்தான வுற்பத்திக்குரிய உறுப்புக்களும், ஏனைய உறுப்புக்களும் ஒன்றிற்கொன்று எப்படி சம்பந்தப்பட்டிருக்கின்றன வென்பதையும், நான் முன்னம் தெரிந்து கொள்ளாவிட்டால் அவைகளைப் பற்றிய ரோக நிதானமும், அதன் பரிகாரமும், அவைகளைப் பாதுகாக்கும் முறைமையும், நமக்குத் தெளிவாக விளங்க மாட்டா; ஆகையால், அவைகளைப் பற்றிச் சிறிதளவு ஞானம் உண்டாகும்படி சில விஷயங்களை இவ்விடம் கூறுகின்றோம்.

தாதுவின் விபரம்

தாதுவெனினும், சுக்கிலமெனினும், இந்திரீயமெனினும், விந்துவெனினும், இரேதஸ் எனினும், இரத்தசத்து எனினும் ஒன்றையே குறிக்கும்.

நாம் உட்கொள்ளுகின்ற ஆகாரங்களினின்றும் பிரிகின்ற சத்தானது அன்னரசமெனப்படும்; அவ்வன்ன ரசத்தினின்றும் பிரிகின்ற சத்தே இரத்தமாகும். இவ்விரத்தத்தினின்றும் பிரிகின்ற சத்தே* சுக்கில சோணிதங்களாகும்.

யூநாநி வைத்திய ஆதிகிரந்த கர்த்தாவாகிய "ஹக்கீம் பஃராத்" என்பவர் சொல்லுகிறதாவது:—

"சுக்கிலமானது முக்கியமாய்ச் சிரசின் மூளையில் உற்பத்தியாகின்றது. நமது காதுகளுக்குப் பின் இரண்டு சுக்கில நரம்புகளுண்டு. அம்முக்கிய நரம்புகள் தலையின் பின்புறமாய்க் கீழிறங்கி

---

* புருஷ தாதுவிற்குச் சுக்கிலமென்றும், ஸ்திரீ தாதுவிற்குச் சோணிதமென்றும் பெயர்.

மூளைக் கொடியின் சார்பாய்ச் சென்று, குண்டிக் காய்களிற் சேர்ந்து பீஜத்திற் போய்ச் சேரும்; மூளையிலுற் பத்தியாகிற விந்து இதன் வழியாய்ச் செல்லும். மேலும், இராஜ உறுப்புக்களினின்றும், மற்ற உறுப்புக்களினின்றும், தனித்தனி ஒவ்வொரு கிளை நரம்பும் மேற்படி முக்கிய நரம்புகளுடன் போய்ச் சேருகின்றது. இரத்தமானது உறுப்புகளிற் சென்று தசை, எலும்பு, முதலானவைகளாய் மாறுந் தருணத்தில் அவ்விரதத்தினின்றுஞ் சிறிது பாகஞ் சிறு துளிகளாய்க் கசிந்து, அதற்குரிய நரம்புகள் வழியாய்ப் பிரதான நரம்புகளிலுள்ளதோடு கலந்து ஆண் குறிக்குப் போய்ச் சேரும். பெண்களின் ஸ்தனத்திற் செல்கிற இரத்தம் வெண்மையாக மாறிப் பாலாகிறது போல், முன் விவரித்தபடி ஆண்குறிக்குச் சேர்வதெல்லாம் அங்கே முழுவதும் பக்குவப்பட்டு, நன்றாய் வெண்மையாகி, சிலேத்தும நீர் போன்று, கொஞ்சம் வழுவழுப்புள்ளதாகவும் தடிப்பாகவும் மாறும். இதற்குத் தாதுவென்று பெயர். தாதுவானது ஒவ்வோர் உறுப்பிலும் இரத்தத்தோடு கலந்து சிவந்தேயிருக்கும்; ஆனால், அவ்விரத்தமானது கொஞ்சம் வெண்மை கலந்த சிவப்பாகவே யிருக்கும். குண்டிக்காய்களுக்கும் ஆண்குறிக்கும் மத்தியிலுள்ள நரம்புகளில் அது இருக்கும் போது முன்னிலும் அதிக வெண்மை கலந்த சிவப்பாயிருக்கும். ஆண்குறியிற் சேர்ந்த பின்னர் அதன் சக்தியினாற்றான் சுத்த வெண்மையாக மாறுகின்றது. இக்காரணத்தினால் தான், ஆண்குறி தளர்ச்சியுற்றிருக்கும் போது வெளிப்படுகிற சுக்கிலம் சிவந்திருக்கின்றது.

சுக்கிலமானது முக்கியமாய் மூளையிலுற்பத்தியாகிற தென்பதற்குச் சான்றுகள் அனேகமுண்டு. அவைகளில் முக்கியமானவை எவையெனின்:—

புதிதாய் பெண்களுடன் உடலுறவு உடையவர்களின் உறுப்புக்களில் மூளைக்குத் தூரமான உறுப்புக்களைக் காட்டினும் அதற்குச் சமீபமான உறுப்புக்களில் அறிகுறியாகச் சில வேறுபாடுகள் உண்டாகின்றன. இன்னும் மிதமின்றி பெண்களுடன் உடலுறவு உடையவர்களிடத்தும், இவ்வாறே வேறுபாடுகள் உண்டாகின்றன. அவ்வேறுபாட்டிற்குக் காரணமாவது, பெண்களின் உடலுறவினால் சுக்கிலம் வெளியாகிறதே. அது வெளிப்படுவதால் முதலில் மூளைக்குப் பேதமுண்டாகிறது. அப்படிப் பேதமுண்டாகவே அதற்குச் சமீபமாகிய அங்கஸ்தானங்களிலும் பேதமுண்டாகிறது.

இரண்டாவது, காம நோயுற்றவர்களுக்குப் பெரும்பாலும் மூளையைச் சார்ந்த நோயே யுண்டாகிறது.

மூன்றாவது, இங்கிலீஷ் வைத்திய கபால லக்ஷண சாஸ்திரிகளாலும் (Phrenologists) காமமானது (மோகம், சிற்றின்பம்) பின் தலையில் சின்ன மூளையிலிருக்கிறதாய்ப் பலவித சோதனையினால் நிச்சயப்படுத்தப் பட்டிருக்கிறது- காமத்திற்கு இந்திரியத்தின் இயக்கம் பிரதானமாகையால், அம்மூளையில் விந்துற்பத்தி யதிகமென விளங்குகிறது என்பதே.

இக்காரணங்களினால் சுக்கிலமானது முக்கியமாய் மூளையி லுற்பத்தியாகிறதாக நன்றாய்த் தெரிய வரும்.

இன்னும் இரண்டு காதின் பின்புறத்திலிருக்கிற சுக்கில நரம்புகள் வழியாய் மூளையில் உற்பத்தியாகின்ற விந்து செல்லுகிறதென்பதற்கு ஆதாரம் யாதெனின்:

காதுகளின் பின்புறத்திற் செல்லுகின்ற சுக்கில நரம்புகளைக் குத்தி, அவைகளினின்றும் வெளிப்படும் திரவத்தைப் பாகப்படுத்தினாற் பால் போன்ற வெண்மையாகிற நீராகும். மற்ற பாகங்களில் அப்படியாகிறதில்லை.

இரண்டாவது, அவ்விரண்டு நரம்புகளும் தறிக்கப் பட்டவர்களுக்கு ஒருபோதும் புத்திர சம்பத்துண்டாகிறதில்லை. யுத்தத்திலாவது, வேறெவ்விதத்திலாவது, அல்லது இதன் உண்மையை அறிகிறதற்காகவாவது, மேற்படி நரம்புகள் துண்டிக்கப்பட்டவர்களுக்கு, அதற்கு முன் புத்திர சம்பந்தத்துண்டாயிருந்தும், துண்டிக்கப்பட்ட பின் சந்தானமற்றுப் போனதாய் அனேக பண்டிதர்கள் பலமுறை சோதனை செய்து நிச்சயித்திருக்கின்றார்கள்.

மூன்றாவது, இங்கிலீஷ் வைத்திய கபாலலக்ஷண சாஸ்திரிகளும் சொல்லுகிறதாவது:— சிரசின்பின் சின்ன மூளைக்கு உண்டாகிற சில வியாதிகளினால் சிலருக்கு ஆண்குறி விம்மல் கண்டு நிமிர்ந்திருக்கிறது; சிலருக்கு அது தளர்ந்து, ஆண்மையில்லாமலே க்ஷீணித்து விடுகிறது; சிலருக்குப் பெண் இச்சையில்லாமலே போய் விடுகிறது. ஆகையால் சிரசின் சின்ன மூளைக்கும், பீஜம், காமம், கோசம் ஆகிய இவைகளுக்கும் ஓர்வித சம்பந்தமுண்டாயிருக்கிறது என்பதே.

மேற்கண்ட காரணங்களினால் மூளையில் முக்கியமா யுண்டாகிற சுக்கிலமானது காதுகளுக்குப் பின்னிருக்கிற நரம்புகள் வழியாய் ஆண்குறிக்குப் போய்ச் சேர்கிறதென்று நாம் நன்றாய்த் தெரிந்து கொள்ளலாம்.

புத்தி, ஞாபகம், சித்தம், அறிவு இவைகளிருக்கிற ஸ்தானம் மூளையேயாம். சகல உணர்ச்சிகளுக்கும் மூளையே பிரதானம். ஆகையினால் மற்ற உறுப்புக்களிலும் இதை அதிக கவனமாகப் பாதுகாக்க வேண்டியது. இதற்கு அதிக கெடுதியை யுண்டாக்கும் செய்கைகளையும் தவிர்க்க வேண்டியது.

சாதாரணமாய் ஒவ்வொரு உறுப்பிலும் சுக்கிலமுண்டா கிறதென்பதைப் பரிசோதிக்க வேண்டித் தேகத்தில் வெட்டினாலும், வேறெவ்விதமாயாவது சுக்கில நரம்பு அறுபட்டாலும், இன்னும் வேறு காரணங்களினால் கொஞ்சம் சுக்கிலம், அல்லது சுக்கிலம் மிகுந்துள்ள இரத்தம் வெளிப்பட்டாலும் அதிக சோர்வும் களைப்பும் உண்டாகின்றன. சுக்கிலம் குறைந்துள்ள இரத்தம் அதற்கிரண்டு மூன்று பங்கதிகமாய் வெளிப்பட்டாலும் அவ்வளவு சோர்வுங் களைப்பும் உண்டாகின்ற தில்லை.

இரண்டாவது, எந்த உறுப்பாகிலும் (முக்கியமா யிராஜவுறுப்பு) ஒருவனுக்குப் பலஹீனப்பட்டிருந்தால் அவனுக்குப் பிறக்கிற பிள்ளைக்கும் பெரும்பாலும் அந்த வுறுப்பே வலுவிழந்திருக்கும் என்பதே.

வேறு சில ஹக்கீம்கள் சொல்லுகிறார்கள். "சுக்கிலமானது பிரதானமாய் ஒருறுப்பி லுண்டாகிறதில்லை. ஒவ்வொரு உறுப்பிலு முண்டாகிற சுக்கிலமானது ஈரலில் வந்து அங்கிருக்கிற கிளை நரம்புகள் வழியாய்க் குண்டிக்காய்களுக்கேகும். அக்குண்டிக்காய்கள் இரத்தத்திலிருந்து மூத்திரத்தப் பிரிப்பதுமன்றி, அந்த இரத்தத்தின் சத்தையிழுத்து, தங்கள் ஏவற் கருவிகளாகிய சுக்கில நரம்புகள் வழியாய், ஆண் குறியில் சேர்க்கின்றன. அவ்விடத்தில் தான் முழுவதும் பக்குவப்பட்டு வெண்மையாய் விந்துவாகின்றது."

ஆண் குறியானது மிகவும் சிறிதான இந்திரியக் குழல்கள் செறிந்து ஏற்பட்ட ஓர் உறுப்பு. இந்திரியக் குழல்கள் ஒன்றோடொன்று சேர்ந்து பின்னிக் கொண்டு முடிவில் ஒரே குழலாய் ஏற்படும். அந்தக் குழலுக்கு விந்துவாகி என்று பெயர். விந்துவாகியானது, சற்றேறக் குறைய — 2 அடி நீளமும், அரை அங்குலம் அகலமுமுள்ளது; பீஜக் கொடியின் பின்புறமாக மேலுக்குச் சென்று பீஜக் கொடியின் துவார வழியாய் வயிற்றுக்குட்சென்று மூத்திரப் பைக்குப் பின்புறமாக அதன் அடிக்கிறங்கி, அந்த ஸ்தானத்திலிருக்கிற இந்திரிய கமலக் குழலோடு சேர்ந்து ஒரே குழலாகி நீர்த்தாரையில் முடிந்து விடும். அதற்கு ஸ்கலிதக்குழல் என்று பெயர். இந்திரிய கமலங்கள் பையைப் போன்று மடங்கி மடங்கி உரத்த ஓர் சவ்வினால் சுற்றப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் இரண்டு இந்திரிய கமலங்களுண்டு. இவை

அவரவர்களின் தேக வடிவுக்கேற்ற விதமாய் உருவத்தில் விகற்பப்படும்; சிலவேளை ஒருவருக்குள்ள இரண்டு கமலங்களே ஒன்றிற்கொன்று விகற்பப்பட்டிருக்கும். ஒவ்வொன்றும் மடங்கியிருக்கும் போது சுமார் இரண்டரை அங்குல நீளம், அரை அங்குல அகலமிருக்கும். மடங்கியிருப்பதை நீட்டினால் 5-6 அங்குலமுள்ளதாய் இறகு (பேனாவைப்) போன்று அதன் கனமுடையதாயிருக்கும். சுக்கிலமானது பீஜத்திற்கு பக்குவப்பட்டு விந்துவாகி வழியாய் வயிற்றுக்குட்சென்று, மூத்திரப் பைக்கு அடியிலிறங்கி, இந்திரிய கமலங்களில் தங்கியிருக்கும், பெண்களுடன் உடலுறவு காலங்களில் அது வெளிப்பட்டு, நீர்த்தாரை வழியாக ஸ்கலிதமாகி விடுகின்றது.

விந்துவின் சுபாவ லக்ஷணங்கள்

சுகஸ்திதியிலுள்ளவர்களின் புதிய விந்துவானது அரைப் பிரகாசமுள்ளதாகவும், தடிப்பாகிய திரவ ரூபமுடையதாகவும், மணி போலக் கட்டிகளுள்ளதாகவுமிருக்கும். வருணத்தில் வெண் சாயலாக அல்லது பாலைப் போலவும், பாகத்தில் சளியைப் போலவுமிருக்கும்; அதற்குரிய ஓர்வித வாசனையுமுண்டு. வெளிப்பட்டு அதிக நேரஞ் சென்று விட்டால் தண்ணீரைப் போல நீர்த்துப் போம்; பின்பு அதன் உஷ்ணம் நீங்கிக் குளிர்ச்சியடைந்தால் அதிலுள்ள பிருதிவியின் சத்து உறைந்து போம்; அது உலர்ந்து விட்டால் சற்று மஞ்சள் சாயலாய்ப் பிரகாசமுள்ளதாய்க் கெட்டியாயிருக்கிறதாய்த் தோன்றும்; விந்துவைத் துணியில் நனைத்து உலர்த்தினால் இரட்டுத் துணியைப் போல உரப்பாயிருக்கும்; அத்துணியை அனலில் வாட்டினால் மண் வருணக்கறை தோற்றும். இன்னும் அதை விளக்கிற்குச் சமீபத்தில் பிடித்துப் பார்த்தால் மண் வருணக் கறை அதிக நன்றாய்த் தோற்றும்.

விந்துவில் அல்லது விந்து நிறைந்த துணியில் வெடியுப்புத் திராவகததைச் சேர்த்தால் அது அதிக மஞ்சள் வருணமாகி விடும். பின்பு எப்போதும் வெள்ளையாக மாறாது. டாக்டர் கார்பென்டர் சொல்லுகிறதாவது, "நீலவருணக் கம்பளியை அல்லது மஞ்சள் வருணக் காகிதத்தை விந்தில் நனைத்தால் யாதொரு பேதமுங் காணப்பட மாட்டாது."

இன்னும் இந்திரியத்தைப் பூதக்கண்ணாடியால் பார்த்தால் இரண்டுவித வஸ்துக்கள் காணப்படும். ஒன்று முட்டை வெண்கருவைப் போன்று அதிகப் பிரகாசத்துடன் வருணமற்றதாய்க் காணப்படும். அதற்குக் கருநீரென்று பெயர். மற்றொன்று கிருமி; அவைகளுக்கு விந்துக் கிருமியென்று பெயர். கருநீரானது நாம் கோரியடைய வேண்டிய

பிரயோசனத்தைத் தர விந்துக் கிருமிகளைத் தக்க விதமாய்ச் செலுத்தத் துணைக் கருவியாயுபயோகப்படும். விந்துக் கிருமிகள் பெருத்த சிரசோடும், நீண்ட வாலோடு மிருக்கும். அவை துரிதமாய் வால்களை யாட்டிக் கொண்டு முன்னோக்கி நகர்ந்து போம். ஓர் அங்குல தூரத்தைப் பதின்மூன்று நிமிஷத்தில் நகரும்; நகரும் போது எதிரில் ஏதேனும் தடையாயிருந்தால் அவ்வழியை விட்டு மாறி முன்னோக்கியே போம். எப்போதும் பின்பக்கம் திரும்புகிறதில்லை. இவற்றைச் சிலர் உயிருள்ளனவல்ல என்கின்றார்கள். ஆனால் அதிக நேரமான பின் பரிசோதித்தால் முன்போல் அவை நகராமலிருக்கிற படியால் உயிருள்ளவைகளெனவே நம்பப்படுகின்றன. விந்துக் கிருமிகள் நாதத்தோடு சேர்ந்து கருப்பற்றும்படிச் செய்யும். மேற்கண்ட இலக்ஷணங்களுள்ள விந்துவானது குற்றமற்றதென்றும், அவற்றிற்கு மாறுபட்டால் குற்றமுள்ளதென்றும் அறிய வேண்டியது.

நம்மவர்களுள் சிலர், நமது சாஸ்திரங்களிலே சொல்லப்பட்டிருக்கும் இந்திரியோற்பத்திக் கிரமம் தவறென்று மதித்து, ஆங்கிலேய பண்டிதர் கூறுங் கிரமமே உண்மையென்று கொண்டாடுவர். சுருக்கி விரித்துக் கூறும் வித்தியாசமேயன்றி இருதிறத்தார்களது ஸ்தூல அபிப்பிராயத்தில் அதிக பேதமில்லை. ஆயினும் ஆங்கிலேய பண்டிதர்களிலும் சிலருடைய கருத்தை இங்கே எடுத்துச் சொல்லுவோம்.

தாதுவின் உற்பத்திக் கிரமத்தைப் பற்றி, யூநாநி வைத்திய பண்டிதர்களின் அபிப்பிராயமும், இந்து வைத்திய பண்டிதர்களின் அபிப்பிராயமும், பெரும்பாலும் ஒத்தேயிருக்கின்றன. ஆனால் தற்கால ஆங்கிலேய பண்டிதர்கள் தாதுவின் ஏற்பாட்டைப் பற்றித் தங்களுக்குள்ளேயே ஒருவர்க்கொருவர் மாறுபாடான அபிப்பிராயப்படுகிறார்கள். அவை பின் வருகின்றனவாம்.

நாம் உட்கொள்ளும் ஆகாரங்கள் இரைப்பை முதலிய இடங்களில் பல மாறுதலடைந்து, திப்பி நீக்கப்பட்டு எஞ்சி நிற்பதற்கு அன்னரசம் (Chyle) எனப்படும்; இது சிறுகுடல் மார்க்கமாய்ச் செல்லும் போது ரசாயனிகள் (Lactials) இதை கிரகித்து ரசதாரைக்குக் (Thoraclc duct) கொண்டு போம். அங்கிருந்து அது மேலுக்கேறி இடதுபுஜ காளத்தில் வீழ்ந்து, கெட்ட இரத்தத்தோடு சேர்ந்து, பெருநாளங்கள் (Venaecavae) வழியாய் இருதயத்தின் வலது சிரவத்திற்கு (Right auricle) வரும். அங்கிருந்து வலது சடரத்தில் (Right ventricle) இறங்கும்; அங்கிருந்து புப்புச நாடி வழியாய்ச் சுவாசப் பைக்குட் செல்லும்; அங்கு நாம் சுவாசிக்கும் காற்றினால் குறைகள் நீங்கி நல்லரத்தமாகிப் புப்புச

நாளங்கள் (Pulmanary veins) வழியாய் இருதயத்தின் இடது சிரவத்திற்கு (Left auricle) வரும்; அதிலிருந்து இடது சடரத்திற்கு (Left Ventricle) வரும். அங்கிருந்து பெருநாடி (Aorta) வழியாய்ச் சென்று தேகமெங்கும் வியாபித்துப் போஷிக்கும்; செலவாகி மிஞ்சிக் கெட்டுப் போன இரத்தமானது மறுபடியும் முன்சொன்னது போல இருதயத்திற்கு வரும்; இவ்விதம் சதாகாலமும் சுற்றிக் கொண்டே தேகத்தைக் காப்பாற்றும்.

மேற்கண்ட விதமாய் இரத்தம் நமது சரீரத்திற் சுழன்று வரும் போது அதிலிருந்து அந்தந்த இடத்திற்கு தேவையானபடி பலவகை வஸ்துக்கள் உண்டாகின்றன. ஈரலில் பித்த நீரும், பெண்களின் தனத்தில் பாலும், வாய்நீர்க் கோளங்களில் உமிழ் நீரும், கண்ணீர்க் கோளங்களில் கண்ணீரும் உண்டாகின்றன. இவ்விதமே இரத்தமானது பீஜப்பிரதேசத்தில் வரும் போது, இந்திரிய நாளங்கள் அதிலிருந்து தமக்குரியதைக் கிரகித்துப் பாகப்படுத்தி விந்துவாக்கின பின் அது இந்திரிய கமலத்திற் சென்று தங்கியிருக்கிறதென அவர்களிற் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆனால் டாக்டர் எக்டீன் சொல்லுகிறதாவது இந்திரிய நாளங்கள் இரத்தத்தைப் பூரணமாய் விந்தாக மாற்றவில்லை; அது இந்திரிய கமலங்களில் வந்து கொஞ்சங் காலம் தங்கின பின்பே பூரணமாய் விந்தாகிறது; அதாவது பீஜத்தில் இரத்தமானது இந்திரியத் தன்மையடைந்து, துளித்துளியாய் இந்திரிய நாளங்கள் மூலமாக இந்திரிய கமலத்திற்குப் போய்த் தங்கியிருந்து அங்கே தான் பூரணப் பக்குவமடைகிறது என்பதே.

டாக்டர் குவ்லீகர் என்பவர் சொல்லுகிறார், "மேற்கண்ட இரண்டு வகையும் சரியன்று, பெண்களின் உடலுறவு அல்லது அதைப் போன்ற செய்கைகளால் லிங்க முதலிய நரம்புகள் அதிகமாய் இயக்கப்படுவதனாலே பீஜப் பிரதேசத்தில் இரத்தம் அதிகமாய்ப் பிரவேசித்து அந்த க்ஷணமே விந்தாக மாறி வெளிப்படுகிறது" இதை யவர் பலவகை அத்தாட்சியினால் நிரூபிக்கிறார்.

இவ்விதம் இரத்தமானது பீஜத்தில் அல்லது இந்திரிய நாளத்தில், அல்லது இந்திரிய கமலங்களில், விந்தாக மாறி அங்குத் தங்கியிருக்கிறது என்றாயினும், அல்லது அப்போதைக்கப்போது விந்தாக மாறி தக்ஷணமே வெளிப்படுகிறது என்றாயினும், ஆங்கிலேய பண்டிதர்களால் இதுவரையில் நிச்சயிக்கப் பட வில்லை. ஆனால் பெரும்பாலோர் உத்தேசமாவது: இரத்தமானது பீஜத்தில் விந்துவாக மாறி விந்து கமலத்தில் வந்து அங்கு பூரணமாய்ப் பக்குவப்பட்டுத் தங்கியிருக்கிறதென்பதும்,

வேண்டுங் காலங்களில் சற்று சூடுண்டான உடனே வெளிப்படுகிற தென்பதுமே. (இது நமது சாஸ்திரக் கொள்கையைச் சார்ந்ததே)

இவ்விஷயத்தில் எப்படியானாலும், விந்துவானது போக இச்சை முதலியவைகளுக்குப் பிரதானமானதென்பதில் நம்மவர்கள் கருத்தோடு ஒத்தேயிருக்கிறார்கள்; எப்படியெனில், அவர்களுள் பெரும்பாலோர் விந்துண்டாகித் தங்கியிருக்கிறதென உத்தேசித்தாலும் அவ்விந்து செலவாகா விட்டாலும் புதிதாய் விந்துண்டாகின்றது நின்று போம் என்றும், ஒருவேளை யுண்டானாலும் மிகவும் சொற்பமா யுண்டாகும் என்றும், நல்ல யௌவனமுள்ளவர்களும் சரீர அப்பியாசம் முதலியன செய்து நல்ல சுகஸ்திதியோடு திடகாத்திரர்களாயிருப்பினும் விந்து தகுந்த விதமாய்ச் செலவாகாவிட்டால் நூதனமாய் விந்து உற்பத்தியா கிறதில்லை என்றும், சம்போக முதலியவைகளில் இஷ்டமில்லாமற் போய் விடுமென்றும் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

இன்னும் விந்துவினால் புத்திர சந்தானம் உண்டாவதுந்தவிர விந்துவானது தேகபலம், மனோபலம் முதலியவைகளுக்கும் ஆதாரமாயிருக்கிறதென்பது நமது சாஸ்திர யுக்தமாகவும், நம் பெரியார் அநுபவ சித்தமாகவும் கூறப்பட்டிருக்கிறது. இப்படியே ஆங்கிலேய பண்டிதர்களும் கண்டறிந்திருக்கின்றார்கள். அதன் விவரம்:—

வைத்திய சாஸ்திரத்திற் சிறந்த பண்டிதரும், வெகுநாள் அனுபவசாலியுமாகிற ஓர் பிரான்சு டாக்டர் எழுதுவதாவது. "இரத்தமானது இந்திரியமாக மாறின பின்பு வீண் செலவாகாமல் மறுபடியும் இரத்தத்திற் சேர்ந்து சரீரத்திற் சுழலுவதினால் மனதிற்கும் தேகத்திற்கும் அதிக சக்தியை யுண்டாக்குகிறது. இதற்காகவே அதிக மனோபலம், அதிக தேகபலம் ஆகியவைகளை விரும்பும் யோக சாதனைக்காரர்களும், மல்வீரரும், சம்போகம் முதலியவைகளில் நின்றும் நீங்கியிருக்கின்றார்கள். இவ்வழக்கம் இப்பொழுதுண்டானதன்று பழமையாயுண் டானதே" என இவ்வாறு பழமையான மெய்யறிவு நூல்களிலிருந்து ஆதாரங்களை குறிப்பிடுகிறார்.

டாக்டர் எக்டீன் துரை சொல்வது, "விந்துவினால் சகல சக்தி யுண்டாகிறதென்பது உண்மையே; ஆனால் மேற்குறித்த பிரென்சு டாக்டர் சொல்லுகிறது போல விந்துவானது தன் சுயரூபத்தோடு இரத்தத்திற் கலந்து மறுபடியும் இரத்த நரம்பிற் செல்லுகிறதில்லை. ஆனால் விந்துவானது கொழுப்பாக மாறி, ஐக்கிய நரம்புகளினால் இழுக்கப்படுகிறது; இவ்விதம் விந்துவின் சில பாகம் இரத்தத்திற் கலக்கும்; ஏனெனில் இந்திரிய நாளங்கள் தடையுற்றாலும் வீங்கியிருந்தாலுங்கூட இந்திரியமானது விளைந்து மறைந்து கொண்டேயிருக்கிறது" இக்கருத்தை டாக்டர் சித்தின் ஷா சாயபு பஹாதுரும் ஆமோதிக்கின்றார்.

டாக்டர் ஹேலர் துரை சொல்வது:— "பிரன்சு டாக்டரின் அபிப்பிராயமே சரியானது. ஏனெனில், அதிக சக்தியுள்ள விந்துவானது இரத்தத்தோடு தேகத்தில் சுழன்று வருவதனாலேதான் ஆண்களுக்கு யௌவனத்தில் தாடி, மீசை, அரையிலுரோமம் ஆகியவை களுண்டாவதுந் தவிர, குரல், நடவடிக்கைகள் முதலியன வேறு படுகின்றன. இவை வேறுபடுகிறதற்குக் காரணம் வயது அதிகப் படுவதனாலென்றால் பேடிகளுக்கேன் அப்படியுண்டாகிறதில்லை; ஆகையால், மேற்கண்ட காரணத்தினாலே ஆண்களுக்கு அவ்வாறு உண்டாகிறது."

இவற்றால் நாமறிய வேண்டியது என்னவென்றால், விந்துவானது தன் சுயரூபத்தோடு இரத்தத்திற் சேர்ந்தாலும் சரியே அல்லது கொழுப்பாக மாறிச் சேர்ந்தாலும் சரியே; அது தேக உற்பத்திக்கு ஆதாரமாயிருப்பதுந் தவிர ஆண்மை, தேகசக்தி, மனோசக்தி முதலியவைகளுக்கும் ஆதாரமாயிருக்கிற தென்பதிற் சந்தேகமில்லை.

நல்ல யௌவனமும் ஆரோக்கியமும் உள்ள ஒரு வாலிபனுக்கு ஒரு தடவை வெளிப்படும் இந்திரியமானது; சற்றேறக்குறைய நாலேகால் வராகனெடையுள்ளது.

30 மில்லி கிராம் நல்லிரத்தத்தில் 3 மி. கிராம் விந்துண்டாகிறதாக ஒரு ஹிந்து சாஸ்திர பண்டிதரின் உத்தேசம்.

மேற்கண்ட காரணங்களினால் இரத்தினத்திற்குச் சமானமாகிய இவ்வரிய பொருளை நாம் வீண் செலவு செய்யாமல் எவ்விதம் உபயோகப்படுத்த வேண்டுமோ அவ்விதம் உபயோகிப்பது உத்தமம் என விளங்குகின்றதன்றோ?

கோசம்

கோசம் எனினும் ஆண்குறி எனினும் சந்தானோற்பத்திக் காதாரகருவி எனினும் ஒன்றேயாகும்.

இது, துடி நரம்பு, புழை நரம்பு, வெண்ணரம்பு, ஸ்பரிச நரம்பு, மாமிசம் இவைகளால் அமைக்கப்பட்ட ஓர் உறுப்பு. இதில் மாமிசம் கொஞ்சமாகவும் நரம்புகள் அதிகமாகவுமிருக்கும். ஒவ்வொரு உறுப்பிலுமுள்ள துடிநரம்பு, புழை நரம்பு ஆகியவைகளின் துவாரம் அவ்வவ்வுறுப்பிற்குத் தக்கபடி பெரிதாகவும் சிறிதாகவும்மிருக்கும். ஆனால் ஆண்குறியிலுள்ள நரம்புகளின் துவாரமோ, அதன் அளவிற்குத் தக்க அளவைப் பார்க்கிலும் அதிக விசாலமாயிருக்கின்றது.

ஆண்குறியானது துவாரமுள்ள இரண்டு ஜோடி வெண்ணரம்புகளினால் அரையெலும்போடு இணைக்கப் பட்டிருக்கிறது. அவைகளாற்றான் அதற்கு அசைதல் முதலிய இயக்கமுண்டாகிறது; அவற்றுள் ஒரு ஜோடி நரம்புகள் ஆண் குறியின் இரு பக்கத்திலும் பக்கத்திற் கொன்றாயிருக்கின்றன. அவை பூரித்து விறைத்துக் கொள்வதினால் ஸ்கலிதக்குழல், நீர்த்தாரை ஆகியவைகள் விசாலமாகி யிலகுவாய் விந்து வெளிப்பட இடமாகிறது. மற்றோர் இணையானது ஆண்குறியின் அடியில் வளைவாய் இணைக்கப்பட்டிருக்கின்றது. அவை இரண்டும் சமமாய்ப் பிகுவடையும் போது ஆண்குறி நேராய் விம்மும்; ஆனால் அவையிரண்டும் அதிகமாய்ப் பிகுவடைந்து விறைத்தால் ஆண்குறியானது பின்பக்கம் வளையும், அவற்றுள் எந்தப் பக்கத்து நரம்பு அதிகமாய்ப் பிகுவாகி விறைக்கிறதோ அந்தப் பக்கமே ஆண்குறியும் வளைந்திருக்கும். இந்த நரம்புகள் இடுப்புமுள்ளந் தண்டுவழியாய் அங்குள்ள மூளைக் கொடியிலிருந்து புறப்பட்டு வருகின்றன. அம்மூளைக் கொடி சிரசு மூளையினின் றுண்டானது.

இன்னும் ஆண்குறியின் மத்தியில் ஓர் துவாரமுண்டு; அதற்கு மூத்திரத் தாரையெனப் பெயர். அந்தத் தாரையானது நீர்ப்பையிலிருந்து ஆரம்பமாகிக் கோசத்தின் மலரில் முடிகிறது; இந்தத் தாரையில் வேறு இரண்டு தாரைகள் வந்து சேருகின்றன. அவற்றில் ஒன்று விந்து கமலங்களில் சேர்க்கப் பட்டிருக்கிறபடியால் அதன் மூலமாய் விந்து வெளிப்படுகிறது. இதுவே ஸ்கலிதக் குழல். மற்றொன்று சுகநீர்க் கோளங்களில் சேர்க்கப்பட்டிருக்கிறது. சுகநீர்க் கோளமானது நீர்ப்பையின் தலைப் பக்கத்திலிருக்கின்றது. மேற்படி தாரை வழியாய்* சுகநீர் வெளிப்படுகிறது. இந்த இரண்டு தாரைகளும் ஆண்குறியின் அடிப்பாகத்தில் மூத்திரத் தாரையோடு சேருகிறபடியால் அங்கு மூன்று தாரைகள் காணப்படுகின்றன.

ஆண்குறி மலரிலுள்ள துடிநரம்புகளும், புழை நரம்புகளும் அதிக சன்ன துவாரங்களுள்ளவைகளா யுண்டாக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இவை கோசத்தின் மற்ற பாகங்களில், ஆவி முதலாகியவைகள் சீக்கிரமாய் வியாபிக்க இடந்தருவது போல், இம்மலரில் இடந்தருகிறதில்லை. இப்படியே அம்மலரின் சருமத்திலுள்ள துவாரங்களும், தேகத்தின் மற்றப் பாகங்களிலுள்ள தோலின்

---

* இந்திரிய இழிவினாலுண்டான தாது நஷ்டம் என்னும் பாடத்தைப் பார்வையிடவும்.

துவாரங்களைப் பார்க்கிலும் அதிக சிறியவைகள். அப்படிக்கில்லாமல், இவை விசாலமாய் உண்டாக்கப்பட்டிருப்பின், பெண்களின் உடலுறவுக்கு முன் உண்டாகியிருக்கிற கோசத்தின் எழுச்சி உடலுறவிற்கு முன்பே தளர்ச்சியடைந்து போம். ஆகையினாற்றான், உண்மைப் பண்டிதராகிய கடவுளால் இம்மலரின் நரம்புகளின் துவாரங்களும் அதன் தொலியின் துவாரங்களும் அதிக சன்னமாயுண்டாக்கப்பட்டிருக்கின்றன.

இன்னும் இந்திரியக் குழல், நீர்த்தாரை, இவைகளின் ஜவ்வுகள் மெத்தத் தடித்ததாகவும், அதிக சன்ன துவாரங்கள் உள்ளவைகளாகவுமிருக்கின்றன. ஏனெனில் ஆவி முதலாகியவைகள் செல்லும் போது அவை அங்கே தடைபட்டிருக்கவும், போகத்தினால் சீக்கிரத்தில் அதிக க்ஷீணமடையாமலிருக்கவுந் தான். கோசத்தின் தோல், இந்திரியக் குழல், நீர்த்தாரையின் புரைகள் இவைகளின் துவாரங்கள் விசாலமாயிருந்தால் ஆண்குறி நீண்டு, கெட்டியாகிப் பருக்கிற தன்மை சுத்தமா யில்லாமற் போய்விடும்.

ஆண்குறி நீண்டு, பருத்துக் கெட்டியாதலுக்கு ஆண்குறி விம்மல் என்று பெயர். இதற்கு ஆவி, ஆத்துமசத்து, இரத்தம் என்னும் மூன்று வஸ்துக்களாதாரமா யிருக்கின்றன. வெண்ணரம்புகள் வழியாய் ஆவியும், துடி நரம்புகள் வழியாய் ஆத்துமசத்தும், புழை நரம்புகள் வழியாய் இரத்தமும், அதற்குட் செல்லுகின்றன; இப்படி மூன்றும் பிரவேசித்தால்தான் கோசம் நீண்டு பருத்துக் கெட்டியாய்ப் போகத்திற்கு உபயோகப்படும்.

மேற்கண்ட ஆவி முதலாகிய மூன்றுமன்றி ஆண்குறி விம்மல் உண்டாகாது. ஒருவேளை காற்றினால் உண்டானாலும் கெட்டியாயிராது. ஏனெனில், இக்கெட்டித் தன்மை இரத்தத்தினால் மாத்திரந்தான் உண்டாகும்; அப்படியும் ஒருவேளை காற்றினால் கடினமுற்று உண்டாயினும் அதிசீக்கிரத்தில் தளர்ச்சியடைந்து போம்; ஆகையால், ஆண்குறியின் விம்மல் இரண்டு விதப்படும்; ஒன்று இயற்கை. மற்றொன்று செயற்கை. ஆவி, ஆத்தும சத்து, இரத்தம், இவைகளால் உண்டாகிறதுதான் இயற்கை. ஆகார சீரண காலங்களில் உண்டாகிற ஆவியினால் அல்லது காற்றினால் அல்லது வேறு காரணங்களினால் உண்டாகிற எழுச்சி செயற்கை. இது சிறு குழந்தைகளிடத்தும், வயது சென்ற கிழவர்களிடத்தும் அதிகமாய்க் காணலாம்; வேறு காரணங்களாவன:—

முதுகு முள்ளந்தண்டி லுண்டாகும் தினவுள்ள வியாதியினாலும் ஆண்குறி விம்மும்; பக்ராத் என்பவர் சொல்வது - "பீஜப் பிரதேசத்தில் விந்தாகவும் அதற்காதாரமாகவும் வரும்" இரத்தத்தில் வாய்வு அதிகமாய்

விடுவதனாலும் ஆண்குறி விம்மும்; இன்னும் நீர்ப்பையின் வாயின் ஓரத்திலிருக்கிற இரண்டு கோளங்களிலுள்ள சுகநீர் முதலியன அதிகமாய் உண்டாவதனாலும் தினவுண்டாகி ஆண்குறி விம்மும். இன்னும் நித்திரையிலும் ஆண்குறி விம்மும்:— எப்படியெனில் நாம் விழித்திருக்கும் போது செலவாகும் சக்தி, வாய்வு முதலியவைகள் நாம் நித்திரை செய்யும் போது அவ்வளவு செலவாகா. ஆகையால் அவை புழை நரம்புகளில் அதிகமாய்ச் செல்லும்; அப்பொழுதும் ஆண்குறி விம்மும்; இன்னும் சிலருக்கு, நித்திரையின் முடிவில் அதாவது ஆகாரம் பூரணமாய்ச் செரிமானமாகும் சமயத்திலுண்டாம் சத்தை, தேக சுபாவமானது வெளிப்படுத்த முயலும். ஆண்குறியின் நரம்புகள் விசாலமான துவாரமுள்ளவைகளான படியால் அவைகளில் அதிகமாய்ப் பரவும்; அப்போதும் ஆண்குறி விம்மும். இவ்வகை யெழுச்சிகளெல்லாம் செயற்கை விம்மலெனப்படும். ஆனால், இப்படி யுண்டாகிற விம்மலில் ஆண்குறி கெட்டியாயிராது; போகத்திற்கும் உபயோகப்படாது.

காமம்

காமமென்பது விருப்பம். இஃது ஓர் பொருளை விரும்புதல், அப்பொருள் சந்தானமே; ஆகையாற்றான் வழக்கத்தில் சந்தானத்திற் கேதுவாகிய போக இச்சைக்குபயோகப் படுத்தப்படுகிறது. இவ்விச்சையானது இயற்கையில் முக்கியமாய் விந்துவினா லுண்டாகிறது — அதன் விவரமாவது: சுத்தமான விந்துவானது பக்குவப்பட்டு விந்து கமலங்களில் நிறைந்தால், அங்கு அதற்கும் ஓர் இயக்கம் உண்டாகிறது. அல்லது அதிலிருந்து ஆவியெழும் அப்பொழுது அதனை வெளிப்படுத்த உண்டாகும் உணர்ச்சியே போகத்தின் விருப்பமாம். ஏனெனில் உடலுறவினால் அல்லது அதைப் போன்ற செய்கைகளினால் மாத்திரம் விந்து சுபாவமாய் வெளிப்படும்; விந்து வெளிப்பட்டவுடன் அவ்விச்சை தணிந்து போகிறது; போகத்தினால் நாமடைய வேண்டிய பெரும் பயனாவது, முக்கியம் மக்கட் பெருக்கத்திற்கும் தேக ஆரோக்கியமுமே; அந்த மக்கள் உற்பத்திக்காக விந்துவானது கருப்பையிற் செல்ல வேண்டும். அப்படி அது அங்கு செல்லாத வரையிற் கருத்தரிக்க மாட்டாது. இதற்காகவே ஆண்குறியானது விம்ம வேண்டியது அவசியமாயிற்று. ஆகையால் போக இச்சை உற்பத்தியானவுடனே இராஜ கருவிகளாகிய இருதயம், தலை மூளை, ஈரல் முதலியவைகள் ஆண்குறியை விம்மச் செய்யத் தத்தம் தொழிலை நிறைவேற்றும்படி சித்தமாகி ஜீவசக்தி, ஆவி, இரத்தம் ஆகியவைகளை அதில் பிரவேசிக்கச் செய்யும்; அதன் பின்பே அது விம்மிக் கருப்பாயசத்தில் விந்துவைச் செலுத்த உபயோகப்படும்.

ஆண்குறி விம்மும் போது அதற்கு ஜீவசக்தி யிருதயத்திலிருந்தும், உணர்ச்சி, இயக்கம் ஆகியவைகள் மூளை, மூளைக்கொடி, இவைகளின் நரம்புகளிலிருந்தும், பருமனாதல், பாதுகாத்தல் ஆகியவைகள் ஈரல், குண்டிக்காய், இரைப்பை முதலியவைகளிலிருந்தும் உண்டாகின்றன.

இன்னும் விந்துவினால் போக இச்சை யுண்டாவது மன்றிப் போக சக்தியுமுண்டாகிறதென நிச்சயப்பட்டிருக்கிறது. ஆனால் சில ஆங்கிலேய டாக்டர்கள் சொல்லுவதாவது — "ஆண்குறி விம்மவும் போகசக்தி யுற்பத்தியாகவும், விந்து ஆதாரமாகாது" இது ஏற்றுக் கொள்ளத் தக்கதெனத் தோற்றவில்லை. ஏனெனில், ஒருவனுக்கு ஓர் முறை விந்து வெளியான பின் உடனே போகிக்கச் சக்தியற்றவனாகி விடுகிறான். பின்னர் விந்து கமலங்களில் விந்துண்டாகியே மறுபடியும் போகசக்தி யுண்டாகிறது. அப்பொழுதே ஆண்குறியும் விம்முகிறது.

ஆனால், விந்துவின் நல்ல நிலைக் கேற்றபடியும், அதன் விளைவிற் கேற்றபடியும் போகசக்தி முதலியன உண்டாகிறதுமன்றி இராஜ கருவிகளின் சுக நலநிலைக்கேற்ற விதமாகவும் போகசக்தி முதலியன உண்டாகுமென்பது நமக்கு நன்றாய்த் தெரிகிறது.

இவ்விராஜ கருவிகளில் இருதயமே பிரதானமானது. ஏனெனில் இதற்கு நேரிடும் சொற்ப சம்பவங்களினாலும் தேகத்திலுள்ள வஸ்துக்கள் குறைவதும் அதிகப்படுவதுமுண்டு; இன்னும் அதற்கு நேரிடும் சம்பவங்களே சகல சுக துக்கத்திற்கு ஆதாரமா யிருக்கின்றன.

ஒருவனுக்குச் சற்று துக்கமுண்டானவுடனே கண்ணீர் ஆறாகவோடுகிறது. அந்தத் துக்கமே அளவிலதிகமாய் விட்டால் ஒரு துளி நீருமில்லாது கண்ணீர் வற்றி விடுகிறது. இன்னும் இன்பமான பொருள்களை நினைப்பதனால் வாயில் நீரதிகப்படுகிறது. புளிப்பான பொருள்களின் பெயரைக் கேட்ட மாத்திரமே வாய் நீரூற்றைப் போல் ஊறுகிறது. பயம், திடுக்கிடல் முதலியவைகளினால் வாயுலர்ந்து ஓர் சிறு துளிக்கும் வழியில்லாமற் போய் விடுகிறது; இவ்விதியை யனுசரித்தே முற்காலங்களில், திருட்டு முதலிய தகாத நடத்தையுள்ளவர்களை ஓரிடத்திற் சேர்த்து, ஒவ்வொருவருக்குங் கொஞ்சம் அரிசி கொடுத்து மெல்லச் செய்கிறது. திருடனுடைய வாயிலிட்ட அரிசியானது கொஞ்சமும் ஈரப்பசை யில்லாததாய் உலர்ந்தே யிருக்கும்; இப்படி இவை அதிகப்படுவதுங் குறைவதும் இருதயத்திற்கு நேரிடும் சம்பவங்களாலன்றோ? அப்படியே இருதயத்திற்கு நேரிடும் சந்தோஷத்தினாலும் தேக சவுக்கிய முதலியன உண்டாகிறவென்பதிற் சந்தேகமில்லை.

போகத்தினால் மனதிற் கானந்தமுண்டாகும்; ஏனெனில் ஆண்குறியின் மலரில் முன் சொன்னது போல் நரம்புகள்

அதிகமாயிருக்கிறபடியால் அதற்குரித்தான இடத்தில் இயக்கப் படுவதனாலும் மனதிற்கு ஒருவித சந்தோஷம் உண்டாகிறது. அப்படி உண்டாகவே விந்து குதித்து வெளிப்படுகிறது; இவ்விதம் மனதிற்கு ஓர்வித ஆனந்தமுண்டாவதனால் தேகத்திற்குஞ் சகலவித சவுக்கியமு முண்டாகும்.

(இதன் விபரம் இருதயத்தைப் பற்றின தாது நஷ்டமென்னும் பாடத்தைப் பார்வையிடவும்.)

இன்னும் மூளையும் இவ்விஷயங்களில் அதிகமாய்ச் சம்பந்தப்பட்டிருக்கிறது; மூளையானது சகல உணர்ச்சிக்கும் சித்தம், அறிவு முதலியவைகளுக்கும் ஆதாரமாயிருக்கிறதென்றும், இது ஆரம்பத்தில் விந்து உற்பத்திக்கு ஆதாரமாயு மிருக்கிதென்றும் நமக்குத் தெரியும்.

ஆகையால் ஒரு பெண்ணை அல்லது காமத்தையுண்டாக்கத் தக்கவைகளைக் கண்ணுற்ற மாத்திரத்தில், கண்ணிலுள்ள பார்வை நரம்புகள் மூலமாய் மூளையறிந்து உடனே யிருதயத்திற்குத் தெரிவிக்க, அது அதைக் கவனித்த உடனே மூளையும் மற்ற உறுப்புக்களும் அதற்குடன்பட்டுத் தத்தம் வேலையாகிய இரத்தம், ஆவி, ஜீவசக்தி ஆகியவைகளை ஆண்குறிகளில் செலுத்த ஆண்குறி விம்மும். இப்படியே யின்பமான குரல், சங்கீதம், போக சம்பந்தமான வார்த்தைகள் முதலியவைகளைக் கேட்பதினால் செவிகளிலுள்ள கேள்வி நரம்புகள் மூலமாகவும், இன்பமான வஸ்துக்கள் முதலியவைகளை முகர்வதனால் கந்த நரம்புகள் மூலமாகவும், அதரபான முதலிய இன்பத்தை யுண்டாக்கத் தக்கவைகளைப் புசித்தலினால் சுவைக்கும் நரம்புகள் மூலமாகவும், இன்பத்தைத் தரத் தக்கவைகளைத் தொடுவதனால் ஸ்பரிச நரம்புகள் மூலமாகவும், மூளையறிந்து முன் சொன்னபடி இருதய முதலிய இராஜ உறுப்புக்கள் கூடிக் கோசத்தை விம்மச் செய்கின்றன.

இவ்விதம் ஆண்குறியை விம்மச் செய்வதினும் மூளையானது அதிக சம்பந்தப்பட்டிருக்கிறது.

இன்னும் ஆண்குறியின் நரம்புகள் அதிகமாயிருக்கிறதி னிமித்தம் அதில் உணர்ச்சியு மதிகமாகையால் அதைத் தொடுவதனால் அல்லது அது ஒன்றின் மேல் உரைவதினால் அல்லது அதை மெதுவாய் வருடுவதனால் அது விம்மும்.

இவ்விதம் ஆண்குறி விம்மின பின்பு அதற்குச் சற்று இயக்கமுண்டாக அதனால் விந்துவிற்கு இயக்கமுண்டாகும். அப்படி யுண்டானவுடனே போக இச்சை, போகசக்தி புண்டாகும்.

ஈரல், குண்டிக்காய், இரைப்பை ஆகியவைகளும் இரத்தத்தை யுண்டாக்கித் தேகத்தைப் பாதுகாப்பதில் எவ்வளவு முக்கியமானதென யாவருக்குந் தெரிந்த விஷயமே.

மேற்கண்ட காரணங்களினால் இயற்கை அல்லது செயற்கையாகிய காமம், போகம் ஆகியவைகளுக்கு விந்துவும், இருதய முதலிய இராஜ கருவிகளும் ஒன்றிற்கொன்று அதிக சம்பந்தப்பட்டிருக்கிறபடியால் இவைகளைச் செம்மையாய்ப் பாதுகாக்க வேண்டும். அப்படிப் பாதுகாத்தாலொழிய முழுமையான கோரிக்கையடைய முடியாது.

சுக்கில சுரோணிதத்தினா லுண்டாகும் போக இச்சையானது, சகல ஜீவான்மாக்களிடத்தும் சுபாவமாக ஜனிக்கும்படி கடவுளால் உண்டாக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால் இதன் அடிப்படையான உண்மைகள் இதன் விதிவிலக்கு ஆகியவைகளை யறிந்து நடக்க வேண்டியது, கனதனவான்கள், ஏழைகள் ஆகிய சகலருக்கும் அவசிய மானவைகளிலொன்று. ஏனென்றால், சந்தான விருத்தி, ஆயுள் விருத்தி, பலம், காந்தி, ஊக்கம் இவை முதலானவைகளுக்குச் சுக்கில சோணிதங்கள் ஆதாரமாயிருக்கின்றன. ஆகையால் இவை வீணாகாமலும் குறைந்து போகாமலும் அவரவர்களால் கூடிய மட்டும் முயற்சி செய்ய வேண்டியது அதி முக்கியத்திலும் முக்கியமே. மேலும் இவ்வுலகத்தின்கண் இன்ப சுகத்திற்கும் இதுதான் காரணமாயிருக்கிறது. இது வீணாக்கப் பெற்றவன் இப்பூலோகத்தின்கண் நடைப்பிணத்தினாலுங் கடைப்பிண மாயிருப்பன்.

விவாகமும் பிரதான பயனும்

கடவுள் பெண்கள் ஆண்களாகிய இருபாலாரையும் படைத்து, அவர்களிருவருக்கும் ஒருவித சம்பந்தத்தை உண்டு பண்ணியிருப்பதை நாம் கவனிக்குங்கால், மனுஷ ஜாதி பெருகவும், இகலோக சுகானுபவங்களடையவும் இவ்விதம் ஏற்படுத்தி யிருக்கிறாரென நாம் யூகிக்க ஏதுவுண்டு.

பண்டைக் காலந்தொடுத்து இந்த ஏற்பாடு நடந்தேறி வருவதாய் எல்லா விதத்தினாலும் காணப்படுகிறது. இன்னும் உலகத்திலுள்ள எவ்வகைச் சாதியார்களுடைய ஆசார வழக்கத்திலும் இந்த விவாக ஏற்பாடு காணப்பட்டே வருகிறது. குடும்ப உற்பத்திக் கிரமப் பயனைப் பற்றிச் சொற்ப ஞானத்தையுடைய காட்டு முருடர் ஜாதியிலும் இந்த ஏற்பாடு நடந்தே வருகிறது.

உலகத்தில் அதி விசேஷ சீர்திருத்தத்தையும், புத்தி யுக்தியையும், கல்வியையுமுடைய ஜாதியார்களுடைய மேம்பாட்டிற்குக் காரணம், விவாக ஏற்பாடென்னும் அதியுக்த அதிவிசேஷ சடங்கு ஒன்றே. ஒரு ஜாதியரின் சீர்கேடு ஆரம்பித்த தென்பதற்கு, மக்களின் ஒழுக்க முறையை அசட்டை செய்தலும், விவாக ஏற்பாட்டை அவமதித்தலுமே முதல் முதல் உண்டாம் அறிகுறி. விவாகமான ஆண்பாலாரும், பெண்பாலாரும் தனிமையில் யிருந்தவர்களைப் பார்க்கிலும் அதிகம் நீண்ட ஆயுளுள்ளவர்களா யிருந்தார்களென அநேக தேசக் கதைகளால் அனுபவ பூர்வமாக நிச்சயிக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் ஆண்மக்களும், தம் வாழ்நாளெல்லாம் முற்றும் ஒழுங்கோடு நடப்பவர்களும், தனியாயிருப்பவர்களுள் அனேகர் பயிலும் சீர்கேடான பழக்கங்கள் தண்டனையான ஒழுங்கீனங்கள் என்னும் இவைகளினின்றும் நீக்கப்பட்டவர்களும் ஆகிய இவர்களே மேற்கண்ட நீண்ட வயதிற்குப் பாத்திரவான்கள்.

ஆண் மக்களைப் பார்க்கிலும் அதிகமாய் பெண்கள் விவாகத்தினால் பிரசவ முதலியவைகளாலே அபாயத்துக் குட்படுத்தப் பட்டவர்களாயினும், அவர்கள் பெரும்பான்மையும் தேக வியாபாரம், மன வியாபாரம் முதலிய தொல்லைகளின்றும் நீக்கப்பட்டிருப்பதும், தம் ஆயுளின் பிற்பாகத்தில் அவ்வித அபாயங்களுக்கு ஏதுவில்லாமல் அமைதியா யிருப்போமென்கிற கோரிக்கை யுடைத்தாயிருப்பதுமே அவர்களின் நீண்ட வயதிற்குக் காரணமாகும். அது எவ்விதமாயினும் விவாகமானது நீண்ட ஆயுளுக்குக் காரணமென்பதில் யாதொரு தடையுமில்லை. மேலும் உயிர் வாழ்க்கையானது (தெய்வச் செயலால்) மாற்றப் படாவிட்டாலும், அதன் சுதந்தரங்களெல்லாம் புறக்கணிக்கப்படா விட்டாலும் ஆண் பெண்ணாகிய ஒவ்வொருவரின் சுகத்திற்கும் சந்தோஷத்திற்கும் விவாகமானது மிகவும் ஏதுவான தென்பதிற் சந்தேகமில்லை.

ஆகையால் விவாகமானது உயிர் வாழ்க்கை, தேக பலம், மனோபலம், சன்மார்க்கம், ஜனசாரம், சந்ததி விர்த்தி ஆகிய இவைகளுக்கெல்லாம் முதன்மையாய்ச் சம்பந்தப்பட்ட ஒரு நிலையான ஏற்பாடு, எனவே விவாகத்திற்குப் பாத்திரரான வயதையுடைய ஒவ்வொரு வாலிபரும் பெண்களும் தாமதிக்காமல் அதற்குடன்பட வேண்டியது அவசரமும் அவசியமுமாம் என்பது தெளிவான உண்மை; ஆகையால் இந்த விஷயம் அதிக ஜாக்கிரதையோடும், தெளிவான யோசனையோடும் கவனிக்கத்தக்கது. வாழ்நாள் முழுவதும் உதவத்தக்க ஒரு துணையையும், கூட்டாளியையும் தேடிச் சம்பாதிப்பது எளிதான காரியமல்ல. அது தீர்க்கமாகவும் அதிக எச்சரிக்கையாகவும் தீர்மானிக்கத் தக்கது. அதற்காகப் பல பல நியாயங்களைச் சீர்தூக்கிப் பார்க்காமல்

அந்தகாரமும் அவசரமுமுள்ள ஆவலுக்கு அதி துரிதமாய்க் கீழ்ப்படிந்து விடலாகாது.

ஆண் பெண்ணாகிய இருபாலாரின் சம்பந்தத்தின் பிரதம பிரயோசனமாவது மனுஷ ஜாதி விர்த்தியாவதேயாம். ஆயினும் விவாகமானது இதைப் பார்க்கிலும் அதிக பிரயோசனத்தை யுடையது. இந்த ஏற்பாடானது மனுஷ ஜாதிக்குச் சிறப்பைத் தரத்தக்கது. விவாகமானது அன்னியர் கூட்டுறவை யுண்டாக்குகிறது. இது சாதாரண காம இச்சையைப் பார்க்கிலும் அதி மேலானது. விவாகம் செய்து கொள்ளும் ஆண் பெண்ணாகிய இருதிறத்தாரும் விவாகம் என்னும் கட்டினால் ஒவ்வொருவரும் தம் தம் உரிமைகளையும் தத்தமக்குரிய சுதந்தரங்களையும் பத்திரப்படுத்திக் கொள்ள ஏதுவாகிறது.

(a) ஆனால் தற்காலத்தில் சிலருடைய மறுப்பானது. மனக்களிப்பிற்கும், நல்லனுபவத்திற்கும் பொருளானது மூலமானபடியால் ஏகாங்கியா யிருப்பதனாலே கையிலுள்ள பொருளை விர்த்தி செய்ய ஏதுவாகுமென்பதே. இதைப் பற்றிச் சற்று யோசிப்போமாக.

1. தன் மனைவி மக்களின் வளர்ப்பு நிமித்தம் கொஞ்சம் பொருள் செலவு செய்ய நேரிட்ட போதிலும் கையிலுள்ள பொருளை விர்த்தி செய்யப் பெண்சாதி பிள்ளைகள் பெருங் காரணமாகிறார்கள். எப்படியெனில், பொருளைச் சேகரிக்கவும் அதை விர்த்தி செய்யும் மனவலிமை அவசியம் வேண்டியது. இந்த மனவலிமையானது ஒவ்வொருவரிடத்தும் சொற்பமாயாவது அதிகமாயாவது இயற்கையாயுண்டு பண்ணப்பட்டிருக்கிறது. இது இல்வாழ்க்கையில் நாளுக்கு நாளுண்டாகும் உற்சாகத்தினாலே சிறிது சிறிதாக விர்த்தியாகிப் பூரண பலமடைந்து அதுவே தொழிலாகி விடுகிறது. ஏகாங்கியாயிருக்கும் போதோ ஒருவித உற்சாகமில்லாமல் வெறுப்புண்டாகிப் பெரும்பாலும் அவ்வித விர்த்தியடைய ஏதுவில்லாமல் சிறிது சிறிதாக க்ஷீணதசை யடைந்து விடுகிறது.

2. இன்னும் தனிமையிலிருக்கும் போது கையிலுள்ள பொருளை வீண் விரயம் செய்யும்படியான விஷயங்களும் வரன்முறை கடந்த பல இஷ்டங்களும் பெரும்பாலும் உண்டாம். செலவிற்கும் ஒரு அளவு ஏற்படாமல் தம் மனம் போனது போல் நடக்க ஏதுவாம். ஆனால் இல்வாழ்க்கையினாலோ, அவ்வித வீண் விஷயங்களுக்கும் முறை கடந்த இஷ்டங்களுக்கும் இடந்தராமல் நிறுத்தவும் அளவாய்ச் செலவிடவும் நியாயமான சுகானுபவங்களை அனுபவிக்கவும் நாளடைவில் பழக்கமாகிப் பொருளை விர்த்தி செய்ய ஏதுவாம்.

3. இவற்றிற்கெல்லாம் மேலாக, எவ்வளவு பொருளுண்டா யிருக்கினும் அப்பொருளாலுண்டாகும் சுகம் தம் மனைவி மக்களாலுண்டாகும் உண்மையான சுகத்தைப் போல அவ்வளவு ஒருபோது முண்டாகாதென்பது திண்ணம். எவ்விதமெனில்,

தனியாய்த் தம் வயிற்றுக் குழியை நிறைத்துக் கொள்வதனால் ஒருவித திருப்தியெனினும், தம் மனைவி மக்களுடன் உண்பதனாலுண்டாகும் மனக்களிப்பும் சந்தோஷமும் ஒருபோதும் உண்டாகாது. "அமிழ்தினுமாற்ற வினிதே தம்மக்கள் — சிறுகையளாவியகூழ்" (தம்மக்கள் சிறுகையாலளாவியகூழ் அமிர்தத்தினும் மிக இனிது) என்று நாயனார் முதலியோர் சொல்வதைக் காண்க.

தம் சந்ததியினால் உண்டாகும் சந்தோஷமும் உண்மையான மனக்களிப்பும், எவ்விதமானதென்பதை நாம் இங்கு எடுத்துரைப்பது அநாவசியம். "மக்கண் மெய்தீண்ட லுடற்கின்பமற்றவர் — சொற்கேட்டலின்பஞ் செவிக்கு" (தம்மக்கள் உடலைத் தொடுதல் உடற்கின்பம். அவர் சொற்களைக் கேட்டல் செவிக்கின்பம்) என்பதையுங் காண்க.

4. இன்னும் இல்வாழ்க்கையானது பொறுமை, கிருபை, தயவு, தாக்ஷணியம், குடும்ப வாழ்க்கை, குடும்ப ஒழுங்கு, நல்லொழுக்கம், நன்னடத்தை, தெய்வ பக்தி, பரிசுத்தம் ஆகிய இவைகளை விர்த்தி செய்து நல்ல கீர்த்தியை நிலைநாட்டும். ஏகாந்தமானது அவ்விதம் செய்ய ஏதுவில்லை என்பதே.

5. பொருள் முதலியவைகளால் உயிர் வாழ்க்கைக்குச் சுகம் உண்டாமென எண்ணுவோர்களும் உத்தமகுண பெண்ணை விவாகம் செய்து கொள்வதனால், அவள் தன் புருஷன் வரும்படிக்குத் தக்க செலவை ஏற்படுத்திச் சீர்படுத்துவதில் உதவியாவதுந்தவிர அந்தப் பொருளிற்கும் காவலாயிருக்க ஏதுவாகிறாள். ஆகையால் பொருளை விர்த்தி செய்யவும் அவள் ஒரு பெரும் மூலகாரணமாகிறாள் என்பதைக் காண்க.

(b) வேறு சிலர் தமக்குச் கிடைக்கும் துணைவியானவள் துர்க்குணமுள்ளவளாகவும் தம் சுபாவத்திற்கு ஒவ்வாதவளாகவும் இருந்தால், தம் ஆயுள் முழுவதையும் சண்டை சச்சரவில் போக்க ஏதுவாகுமாகையால் ஏகாங்கி யாயிருப்பதே உத்தமமென்கிறார்கள். இதற்குச் சமாதானமாவது.

இப்படி நேரிடுவது தம்மாலேயேயன்றி அவர்களாலல்ல. ஏனெனில் ஒரு பெண்ணை நாம் கொள்ளுமுன், அவள் குணம், நடவடிக்கை, கல்வி, தெய்வ பக்தி முதலியவைகளைத் தீரத்தெரிந்து நிச்சயிக்காமல், பணம், நகை, அழகு முதலியவைகளில் பேராசை கொண்டு மயங்கிச் சிக்கிக் கொள்வதே பெருங் காரணம். ஏழைகளாயினும் தேக அழகில்லாதிருந்தாலும், நற்குணப் பெண்டீரே பெருஞ் செல்வம், குணஅழகு அழகேயன்றி முகஅழகு அழகல்லவென்று நிதானித்து விவாகம் செய்து கொண்டால் அவ்விதம் நேரிட இடமுண்டாகாது. மேடு பள்ளம் இன்னதெனத் தெரியாமல் கபோதி விழுவது போல விழுவதை விட்டு ஏற்றது இன்னது ஏற்காதது இன்னதெனப் பகுத்தறிந்து செய்து கொண்டால் எப்போதும் சுகமுண்டாவது நிச்சயம்.

நாம் மேற்கண்டபடி அடையும் விவாகத்தின் முதற் பயனாவது சந்ததியும், உண்மையான சுகானுபவங்களுமே; ஆனால் அனுபவத்தில் பெரும்பாலார்க்கு அந்த நோக்கங்களில்லை; அவர்கள் விரும்புவதெல்லாம் பணமே; பிள்ளை எவ்விதமானதென்றும், பெண் எவ்விதமானதென்றும் சற்றும் கவனிப்பதேயில்லை.

வேறு சிலர், பெண் சிவப்பாயிருக்கிறதா? கண் கறுப்பாயிருக்கிறதா? மூக்கு நீளமாயிருக்கிறதா? நாக்கு அகலாமாயிருக்கிறதா? என்றுந் தேடுகிறார்கள். இதுவும் ஒரு விஷயத்தில் அவசியமே யென்றாலும், குண அழகு இல்லாவிட்டால் முகஅழகினா லாவதென்ன, வெளி மினுக் கெல்லாம் வெறும் தளுக்கே. ஆணாயினும் பெண்ணாயினும் குணமில்லாவிடின் பிணமே. ஆகையால் புத்திமான்கள் எந்தக் காரியத்தையும், ஆழ அகல யோசித்தே செய்வார்கள். "எண்ணித் துணிக கருமத்துணிந்ததிடனெண்ணுவ மென்பதிழுக்கு" (யாதொரு தொழிலைச் செய்வதற்கு முன் யோசித்துச் செய்ய வேண்டும், செய்யத் தொடங்கிய பின் யோசிப்போமென்பது இழிவு) உண்மையான சுகம், மனக்களிப்பு ஆகிய இவைகளுக்குப் பணமும் முக அழகும் பிரதானமாகாது என்றும், நற்குணமுள்ள புருஷன் மனைவி ஆகிய இவர்களால் சற்புத்திர சந்தானமுண்டாகி உண்மையான சுகத்திற்கு ஏதுவாகுமென்றும், தெரிந்தே அதற்கான பிரயத்தனம் செய்வார்கள்.

(ப) மனக்களிப்பு, சுகபோகம் முதலியவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நோயில்லாமையும் ஒரு பெருங் காரணமாம். தேக சுகமின்றி உயிர் வாழ்க்கை இன்பந் தராது. (எல்லாச் செல்வங்களிலும் நோயற்ற வாழ்வே பெருஞ்செல்வம்) ஆகையால் தனிமையாயிருப்பது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட இயற்கைக்கு ஒவ்வாதது. ஆகையால் அது

தேக சுகத்திற்கும் மன ஆறுதலுக்கும் நஷ்டத்தை உண்டாக்கும்; ஆயுள் குறையும். ஆகையால் நோயில்லா திருக்கவும் இல்வாழ்க்கை ஒரு ஏதுவென்பதும் விளங்கும்.

இவை முதலிய விஷயங்களை நாம் யோசிக்கும் போது உண்மையில் மனிதர்களுள் விவாகத்திற்குப் பாத்திரமானவர்கள் தகுந்த காலத்தில் விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்பது இயல்பான ஏற்பாடென்று விளங்குகிறது. விவாகமின்றிச் சுகவாழ்வையும் இகவாழ்வையும் பெற்றுக் கொள்வதில் வெற்றி பெறுவது கஷ்டமென்றும்; இல்வாழ்க்கையினால் உண்டாகும் சுகபோகங்களைப் போலப் பிரமசாரியாயிருப்பதினாலும் கன்னிகையாயிருப்பதிலும் உண்டாகாது. இது தினசம்பவமும் காட்சிப் பிரமாணமுமா யிருப்பதால் இதற்கு வேறு அத்தாட்சி வேண்டாமலே வெளிப்படையாய் விளங்கும்.

ஆகையால் விவாகத்தினாலே கருதப்பட்ட இயற்கைப் பயனாவது உயிர் வாழ்க்கையில் உண்மையான இன்ப சுகபோகம், சவுக்கியம், தேகபலம், முதலியவைகளை யடைந்து நற்குண முதலியவைகளுள்ள சற்புத்திர சந்தானத்தை யடைவதே.

விவாகத்திற்கு அபாத்திர புருஷர்கள்

ஆணாப் பிறந்த ஒவ்வொருவரும் கல்யாணஞ் செய்து கொள்ளப் பாத்திரவான்களே யென்றெண்ணும் அபிப்பிராயம் நீதியானதன்று. ஸ்தீரி புருஷராகிய இருவரும் கல்யாண பந்தத்தினால் பரஸ்பரம் தனித்தனி ஒவ்வொருவருடைய சுகபோகங்களைப் பற்றிக் கவனிக்க வேண்டும். இருவரும் (ஒருவர் மற்றொருவரைப் போல) சமமாய்ப் பாத்தியப்பட்டவர்களாகையால் அவர்களொவ்வொருவரும் தத்தம் சொந்த விஷயங்களைப் பற்றித் தீர்க்கமாய் ஆராய்ந்து தேர்ந்து நிதானிக்க வேண்டிய விஷயங்கள் அனேகமுள. (ஆனால் யோக்கியமான புருஷர்களைத் தெரிந்து கொள்ள நமது தேசத்துப் பெண்களுக்கு ஞானமுமில்லை, பாத்தியமுமில்லை, வழக்கமுமில்லையாகையால், இம்முதன்மையான விஷயம் அப்பெண் மக்களின் பெற்றோர்களை அல்லது நெருங்கிய பந்துக்களைச் சேர்ந்ததென அவசியம் தெரிந்திருக்க வேண்டியது) எல்லா ஆண்மக்களும் புருஷராக யோக்கியதை யுடையவர்களா யிருப்பார்களா யிருப்பார்களென ஒருவரும் சொல்லத் துணியார்கள். ஏனெனில் அனேகர் பரம்பரையான அல்லது நூதனமாய்ச் சம்பாதித்த அங்கஹீனம் அல்லது வியாதி முதலியவைகளை உடையவர்களாயிருக்கலாம் அல்லது தகாத நடத்தைக் குட்பட்டவர்களாயிருக்கலாம் என்பதே.

விவாகம் செய்து கொள்ளும் மணமகன், தான் விரும்பத்தக்க மனைவியை எதிர்பார்க்கிறது போலவே, விவாகஞ் செய்து கொள்ளும் மணமகளும், தான் விரும்பத்தக்க கணவனை எதிர்பார்க்கச் சகல சுதந்தரமுண்டு. மணமகன் நற்குண முதலியவைகளுள்ள பெண்ணை மனைவியாய்ப் பெறாமல் ஏமாந்து விட்டால், அதற்கு எவர் மேலாயினும் பழியைச் சுமத்தி பரிகாரந் தேட முயலுவான். ஆனால் மனைவியாகும் பெண்கள் ஆண்மையில்லாத கணவன் வாய்த்து விட்டால் அவள் என்ன செய்யக்கூடும் பாபம். வாழ்நாள் முழுவதையும் வீணாக்கவே நேரிடும், ஆகையால் கல்யாணம் செய்வதற்கு முன்பே கணவன் புருஷ யோக்கியதை முதலியவைக ளுடையவனாய் விவாகத்திற்கு தகுதியுள்ளவனா என நிச்சயித்தறிய வேண்டியது. கல்யாணத்திற்கு யோக்கியமானவன் மகா உன்னத குணங்களையெல்லாம் ஏகமாய் உடைத்தாயிருக்க வேண்டுமென்பது இங்கு கருத்தல்ல, ஆயினும் ஆண்மையில் கூடியவரையில் குறைந்த அளவாயேனும் உடைத்தாயிருக்க வேண்டுமென்பது கருத்து. வேறு சிலர் அது எப்படியாயினும் சந்ததியுண்டானால் போதுமென்கிறார்கள். ஆனால் சுகமான சற்புத்திர சந்தானத்தைப் பெற ஏதுவில்லாதவர்களெல்லாம் விவாகத்திற்குச் சாதாரணமாய் தகுதியுள்ளவர்களல்லரெனவே சொல்ல வேண்டும். அவை பின் வருகிற விதமாம்.

(1) தக்க பருவம் வராதவர்கள்:— இதற்கு வயதுத் திட்டம், பற்பல தேசங்களிலும் பற்பலவிதமாயிருந்த போதிலும், அங்காதி பாதசாஸ்திரம் (Anatomy) பிராணி தர்மகுண சாஸ்திரம் (Physiology) ஆகிய இவைகள், தேகத்தின் அவயவங்களெல்லாம் முற்றும் பூரணஸ்திதியை அடைந்த பின்பே விவாகம் செய்து கொள்ள வேண்டுமென மிக வற்புறுத்திச் சொல்லுகின்றன. ஏனெனில் தாய் தகப்பன்மார்களின் அங்க அடையாளங்களையே சந்ததியும் பெறுவதால் அப்படிச் செய்ய வேண்டும். அவயவங்களெல்லாம் முழுவளர்ச்சியடையா விட்டால், அவர்கள் ஜனனேந்திரியம் முதலியவைகளும் முழுவளர்ச்சியடையா. ஆகையால் பலமும் திடகாத்திரமும் உள்ள சந்ததியுண்டாக ஏதுவிராது. தாய் தகப்பன்மார்களுடைய தேகசுபாவமும் ஒழுங்கீனப்பட்டு அதிசீக்கிரந் தளர்ந்து துர்ப்பலப்பட்டுப் போம். சீதோஷ்ணம் சமரசமான தேசங்களில் புருஷர்கள் 15 - முதல் 20 வயதிற்குள்ளாகவும் ஸ்திரீகள் 12 - முதல் 16 வயதிற்குள்ளாகவும் பக்குவப் பருவத்தையடைந்து விடுகிறார்கள். ஆயினும் இவர்கள் ஜனனேந்திரியங்களும் அவயவங்களில் சில பாகங்களும் முழு வளர்ச்சியை யடைவதற்குப் பக்குவப் பருவத்தை யடைந்தபின் சற்றேறக் குறைய 3-4 வருஷங்கள்

செல்லும். ஆகையால் அந்தக் காலமே கல்யாணத்திற்குத் தகுந்த பக்குவமெனத் தீர்மானிக்க வேண்டும். நமது இந்து தேசத்தில் நடத்தப்படும் பாலிய விவாகமானது சிலர் மதாசாரப்படி பலவந்தப்படுத்தப்பட்ட விஷயமாகையால் அதற்கு மறுப்பு சொல்ல நாம் வெளிவரவில்லை. ஆனால் சந்ததிக்கும் அதன் விருத்திக்கும் சில ஊறு சம்பவிக்குமென்பதே நமது கருத்தாகும்.

(2) வயது தளர்ந்தவர்கள்:— இவர்கள் அதிக இளமையான பெண்களைக் கல்யாணஞ் செய்து கொள்வதே பெருத்த ஆக்ஷேபனை; அப்படிச் செய்து கொள்வதனால் இகலோக வாழ்க்கையில் பலவித இடையூறுகள் நேரிடுவது போலவே பலமுள்ள நல்ல மக்கட்பேறு உண்டாவதற்கும் பல இடையூறுகளுண்டாம். இவர்களுக்குத் தேகபலமிருந்து ஒருவேளை கல்யாணம் செய்து கொள்ள அவசியமானால் தங்களுக்குச் சற்று இளமையானவர்களைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்.

(3) காக்கை வலியுள்ளவர்கள் அல்லது மூர்ச்சை நோயுள்ளவர்கள்:— மனத்தொழிலைக் கெடுக்கும் வியாதிகளான நரம்பைப் பற்றிய ரோகங்களில் காக்கை வலியைப் போல மற்ற வியாதிகள் அவ்வளவு பலமானவைகளாயிரா. இது முக்கியமாய் சந்ததியைப் பின்பற்றுவதில் அதிசிரேஷ்டமானது. காக்கை வலியுள்ள தாய் தந்தைகளுக்குப் பெரும்பாலும் பைத்தியமுள்ள அல்லது காக்கை வலியுள்ள சந்ததியே உண்டாகும். அநேக வருஷங்கள் இந்த வியாதிக்காளா யிருப்பவர்கள் கல்யாண எண்ணத்தை நீக்கி விடுவதே உத்தமம். ஒருவேளை பலமான மருந்துகளால் சில நாள் அந்த வியாதி நின்றிருந்த போதிலும், அத்தகையவர்களும் கல்யாணத்திற்குச் சந்தேகப்படத் தக்கவர்களே. ஒருவன் பக்குவ வயதை யடைந்தபின், ஏதேனும் ஒரு நரம்பிற்குண்டான கெடுதியின் நிமித்தம், அல்லது இரைப்பை, ஈரல் ஆகிய இவைகளிலொன்றிற்கு நேரிட்ட ஒழுங்கீனத்தின் நிமித்தம், அல்லது ஏதேனும் காரணத்தால் நேரிட்ட நரம்புச் சோர்வின் நிமித்தம், இந்த வியாதியானது சம்பவித்து, தகுந்த ஔஷதப் பிரயோகத்தால் நிவிர்த்திக்கப்பட்டு, 2-3 - வருஷம் வரையில் அந்த வியாதியானது வராதிருக்கும் பட்சத்திலே, அத்தகையினர்கள் கல்யாணஞ் செய்து கொள்வதினின்றும் விலக்கப்பட மாட்டார்கள். ஆனால் இந்த வியாதியானது பரம்பரையை யடுத்துச் சிறுபோதிலிருந்து தொடர்ந்து நின்றால், அவசியம் அவர்கள் சந்ததியையும் அது பின்பற்றுமென்பதும் அது மருந்தால் தீருவது அசாத்தியமென்பதும் நிச்சயமான விஷயமெனத் தெரிந்திருத்தல் வேண்டும்.

இல்வாழ்க்கையின் பயன்

பழுதற்ற உத்தம ஜாதி குல கோத்திரத்தில் நோய் பழியிலாத பரிசுத்தர்களாகிய மாதா பிதாக்கள் காலவழியில் யௌவன பருவத்தில் உற்பவித்த நற்குண நற்செய்கையுடைய பெண்ணை விவாகத்திற்குரிய பருவ காலத்தில் கிரம விவாகம் புரிந்து, பாரர்த்தத்தின் பொருட்டும் வம்ச பெருக்கத்தின் பொருட்டும் தேக ஆரோக்கியத்தின் பொருட்டும் விதிக்கப்பட்ட காலங்களில் அந்த பெண்களுடன் மிதமாய் மருவி வாழ வேண்டும். இவ்விதம் மணந்து வாழ்வதற்கே. மணவாழ்க்கை, இல்வாழ்க்கை, இல்லற வாழ்க்கை முதலியவை எனப் பல நாமங்களுண்டு.

இப்போது மணவாழ்க்கை இன்னதென்பது யாவருக்கும் நன்கு புலப்படும். ஆகையால்; தேக சுபாவத்திற்குத்* தகுதியான காலங்களில், மிதமாய், மணந்து வாழ்வதால் தேக சுபாவ மேன்மிச்சக் கழிவும், இந்திரியக் கழிவும் உண்டாகும். ஆகையால் இவ்வகை யணுபோகமானது தேக சுகம் நிலைபெற்றிருக்கவும், அநேக வியாதிகளுண்டாகாதிருக்கவும் ஆதாரமாயிருக்கிறது. இன்னும் இதனால் தேக புஷ்டி, பலம், காந்தி, ஊக்கம், மனதிற்கானந்தம் உண்டாகும். கோபம், அகங்காரம், காம விகாரம், இவைகளை குறைக்கும். தேகத்தின் சூடு, குளிர்ச்சி, கொழுமை, வறட்சி இவைகளைச் சமப்படுத்திச் சீராக்கும். ஆயுள் விர்த்தி, சந்ததி விர்த்திக்கிடமாகும்; புத்தித் தெளிவையும் கண்ணிற் கொளியையு முண்டாக்கும்; இரத்தமத ரோகத்தைப் போக்கும்.

இது நிற்க, தேக சுபாவத்திற்குரிய வயதில் இயல்பாய் விருப்பமிருந்தும் இல்வாழ்க்கையில் முற்றும் விட்டிருக்கிற ஏகாங்கிகளுக்கும், நடுவில் நெடுநாள் வரையில் சுபாவ விரோதமாய் மணவாழ்க்கையைத் தவிர்த்தவர்களுக்கும், மணவாழ்க்கையால் அல்லது, மோகத்தால் இந்திரியம் இளகின பின் அதை வெளிப்படுத்தாமல் உள்ளடக்குகிறவர்களுக்கும் இந்திரியமானது விஷமாக மாறி, அதன் உஷ்ணம், இருதயம், மூளை, இவைகளில் தாக்குகிறபடியால், இவர்கள் மயக்கம், மனக்கலக்கம், நினைவு தடுமாற்றம், மூர்ச்சை, காக்கைவலி, தலைசுழற்றல், கண்ணிருளல், தேகங் கனத்தல், பசிமந்தம், நித்திரை பங்கம், இரத்தக் கெடுதி, பயித்தியம் முதலாகிய நோய்களுக்

---

* ஒருவனுக்கு யாதொரு காதலியின் நினைவில்லாமலும் கைச்சரசலீலை ஆலிங்கனம் இல்லாமலும் காமக்குறிகளுண்டாகும் போது தான் தேக சுபாவத்திற்குத் தகுதியாகிய காலமாம். இதுவே மெய்க் காமக்குறியாம்.

குள்ளாகிறார்கள். அனுபவத்திலும், இப்பேர்ப்பட்டவர்கள் பெரும்பாலும் மேற்கண்ட வியாதிகளினால் கஷ்டப்பட்டு நஷ்டமடைந்தவர்களாகவே யிருக்கிறார்கள்; இன்னும் தேக சுபாவத்திற் கொவ்வாத காலங்களிலும், மிதத்திற்கு மிஞ்சியும் உடலுறவு கொள்பவர்களும் மேற்கண்ட நோய் முதலியவைகளுக் காளாவார்களென்பது பரிஷ்காரமாய் யாவரும் தெரிந்திருக்க வேண்டிய விஷயமே.

மிதமிஞ்சின சங்கமத்தின் கெடுதி

இவ்விதம் நாம் முதலில் சில விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது; அவையாவன:

1. ஆன்மா; 2. ஜீவாக்கினி; 3. காரணாக்கினி;

I. ஆன்மா

ஆன்மாவெனினும், ஆத்துமாவெனினும், ஜீவன் எனினும், (றூஹ்) எனினும் ஒன்றேயாகும்.

இரத்தத்தின் கொழுமையினின்றெழும் ஆவிக்கு ஆன்மாவென்று பெயர்.

நமது சரீர குணத்தை நடத்தும் ஆன்மாக்கள் மூன்று.

அவையாவன:

(a) அறிவான்மா; (b) ஜீவான்மா; (c) தேகான்மா;

(a) அறிவான்மா; Mentalenergy, or (Spirit)

இது தலை மூளையை இடமாகப் பொருந்தி நின்று சிந்தித்தல் முதலிய உள்ளுணர்வுகளையும், பார்வை, கேள்வி முதலிய வெளியுணர்வுகளையும், அசைவையுமுண்டாக்குகிறது. மூளைக்குத் தீங்கு நேரிட்டால் அவயவங்களின் அசைவுக்குத் தீங்கு நேரிடும். இது பக்ஷவாதம், ரத்த சிரஸ்தாபரோகம் (Apoplexy) அபஸ்மாரரோகம் (Epilepsy) ஆகியவைகளிற் காணலாம்.

(b) ஜீவான்மா; Animal Energy or (spirit)

இது இருதயத்தை இடமாகப் பொருந்தி நின்று தேக அவயவங்களை உயிர்ப்பித்து, சந்தோஷம், துக்கம், பயம், கோபம், பகுத்தறிவு, யூகை ஆகியவைகளை யுண்டாக்கும்.

இது வேறு, அறிவான்மா வேறு. ஆகையாற்றான் பக்ஷவாத முதலிய வியாதிகளின் அவயவங்கள் உணர்ச்சியற்று விட்டாலும், இறந்தவர்களின் அவயவங்கள் கெட்டு விடுவது போல, அவை கெடாது இருக்கின்றன. இருதயத்திற்குக் கெடுதி நேரிட்டால் சித்தப் பிரமை, பைத்தியம், இசிவு முதலியவைக ளுண்டாகும்.

(c) தேகான்மா; Natural Energy or (spirit) இது ஈரலை இடமாகப் பொருந்தினின்று தேகத்தைப் போஷிக்கும்; ஈரலுக்குத் தீங்கு நேரிட்டால், தேகம் வற்றி யுலர்ந்து போம். ஆனால் உணர்ச்சி, இயக்கம், உயிர்ப்பு ஆகியவைகளிருக்கும்.

குறிப்பு

மேற்கண்ட இராஜ கருவிகள் ஒன்றோடொன்று அதிக சம்பந்தப்பட்டிருக்கிறபடியால், இவற்றுள் ஒன்றிற்குக் கெடுதி நேரிட்டால் அது மற்றொன்றையும் தொடர்கிறது. அக்கெடுதியின் அளவிற் கேற்றபடி சீக்கிரமாகவும், தாமதமாகவும், அதிகமாகவும், குறைவாகவும் நேரிடும்.

2. ஜீவாக்கினி

ஜீவாக்கினி யெனினும், தேகச்சூடு எனினும் (அறாறத்தே கரீஜி) எனினும் ஒன்றேயாகும்.

முன் கூறியபடி இரத்தத்தின் கொழுமையி னின்றெழும் ஆவி ஆன்மாவாம். அவ்வான்மாவின் சிகையே ஜீவாக்கினியாம்.

இது தேகத்தில் நிலைத்திருப்பதனால், ஜீவிக்க ஆதாரமாகவும், தேகவுறுப்புக்கள் தத்தந்தொழிலை ஒழுங்காய் நடத்தவும் இடமுண்டு. இது தேகத்தை விட்டு நீங்கும் போது தேகத்தின் சகல தொழில்களும் பிரிந்து போகும். மனிதனுடைய அந்தியத்தில் ஜீவாக்கினி குறைந்து தேகங் குளிர்ந்திருக்கிறதற்கு "சீதளக்காரன் மேலிட்டு விட்டான்" என்று சொல்வது வீட்டு வழக்கம்.

3. காரணாக்கினி

காரணாக்கினி எனினும், காரணச்சூடு எனினும் (அறாறத்தே கரீயா) எனினும் ஒன்றேயாகும்.

நாம் செய்கிற உணவுப் பொருட்கள், அக்கினி, வெயில், தேகவுழைப்பு, சூடான காற்று இவை முதலியவைகளா லுண்டாகுஞ் சூட்டிற்குக் காரணாக்கினியென்று பெயர்.

இது அதிகரிப்பதனால், தேகவுறுப்புகளின் சுபாவத் தொழில் ஒழுங்கீனப்பட்டு, வியாதிக்கிடமாகின்றது.

ஆன்மாக்கள், ஜீவாக்கினி, காரணாக்கினி என்பவைகள் இவையென்றும், அவை தேகத்தோடு எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கின்றனவென்றும் இப்போது தெரிந்து கொண்டோம். இனி மிதமற்ற உடலுறவின் கெடுதிகளை விவரமாய்த் தெரிந்து கொள்வோமாக.

மிகுதியாகிய உடலுறவினால், தேகத்தினின்றும் கழிய வேண்டிய அளவிற்கதிகமான இந்திரியம் வெளிப்படும். இந்திரியம் இரத்தத்தின் சாரமாகையால் இரத்தம் அளவிற் குறையும்; இரத்தங் குறைந்தால், அதன் கொழுமையினின்று உண்டாகும் ஆன்மாக்கள் குறையும்; ஆன்மாக்கள் குறைவதால், அதன் சிகையினின்று உண்டாகும் ஜீவாக்கினி குறையும். ஜீவாக்கினி குறையவே தேகவுறுப்புக்களின் சுபாவத் தொழில் கெட்டு, தேகங் கலகலக்கப்பட்டு, கட்டு முட்டாகிய பலம் மட்டுப்பட்டு யாதொரு அட்டியில்லாமல் மட்டில்லாத துஷ்ட வியாதிகளுக்குட்பட்டு, நஷ்டமடைய நேரிடும்.

இரண்டாவது, அதிபோகத்தினால் காரணாக்கினியும் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். இதனால் தேகவுறுப்புக்கள் வெட்டையாகி, அவைகளின் தொழில் ஒழுங்கீனமாகி, இரத்தக் குறைவுண்டாகி, தேகபலம் க்ஷீணமாகி, அகால மரணத்திற் கேதுவாகும்.

மூன்றாவது, மிதமற்ற உடலுறவினால் ஆன்மாக்களின் தத்துவமும் அதிகமாய் வெளிப்படுத்துகின்றது. இக்காரணத்தாற்றான் யாவருக்கும் போகத்திற்குப் பின்பு களைப்பும் சோர்வு முண்டாகிறது. ஆகையினால், அதிபோகத்தினால் ஆன்மாக்களின் சாரமும் அதிகமாய் வெளிப்படும். இதனால் மனிதர் தேகம் அஸ்தியாக வற்றி, சத்தற்று, அகால மரணத்திற்குள்ளாக நேரிடும்.

நான்காவது, மிதமற்ற உடலுறவினால் இந்திரியம் அளவிற்கதிகமாய் வெளிப்படும்; வெளிப்படவே இந்திரிய விளைவு குறைந்து இந்திரியத்திற்குப் பதிலாக இரத்தம் வெளிப்பட ஆரம்பிக்கும். இரத்தம் வெளிப்படுவதனால், இரத்த நரம்புகள், இருதயம், ஈரல் முதலாகிய உறுப்புக்களின் தொழில் மாறுபட்டு நல்லிரத்தக் குறைவுண்டாகி, தேக பாதுகாப்பு குறைந்து தேகந்தளர்ந்து முடிவில் மரணம் ஏற்படும்.

அதிபோகத்தினால், இராஜ கருவிகளாகிய, தலை மூளை, இருதயம், ஈரல், குண்டிக்காய் இவைகளும் இரைப்பை, புப்புசம், இரத்த நரம்பு, இந்திரிய நரம்பு முதலாகியவைகளும், தத்தந் தொழிலில் ஒழுங்கீனப்பட்டு, அனேக வியாதிகளுக்கிடந் தருகின்றன.

பெரும்பான்மையும் சித்தப்பிரமை, நித்திரையின்மை, பஞ்சேந்திரிய உணர்ச்சிக் குறைவு, நீரிழிவு, கல்லடைப்பு, சதையடைப்பு, கைகால் நடுக்கல், நீரரு கல், மேகம், வெட்டை நோய், முகவாதம், கீல்வாதம் அங்குஷ்டவாதம், நரம்பு வாதம், பக்ஷவாதம், இருதயரோகம், தலைச் சுழற்றல், மந்தாக்கினி, புத்தி நஷ்டம் முதலிய வியாதிகளுண்டாகின்றன.

அதி உடலுறவு உள்ளவர்களின் சுக்கிலத்தின் தத்துவங் குறைந்து போவதால் புத்திர சம்பத்துண்டாகாது; ஒரு வேளையுண்டான போதிலும் எலிக் குஞ்சுகளைப் போலவும், மூஞ்சுறுகளைப் போலவும், தேரைகளைப் போலவும், தேவாங்குகளைப் போலவும், சப்பையும், ஐவ்வுமாய், அற்ப ஆயுளுள்ளவைகளாய்ப் பிறக்கும்.

அதி உடலுறவினால் தேகப்பசைகள் குறைந்து போவதால், மெலிந்த தேகிகள் அதிசீக்கிரத்தில் (திக்) (Hectic fever) விடாச் சுரமென்னும் மகா ரோகத்திற்குட்பட்டு, அதற்கிரையாகிறார்கள்.

உடலுறவு காலங்களில் தன்னிடத்தை விட்டிறங்கிய இந்திரியத்தை மேலுக்கேற்றுகிற பழக்கம் அனேகருக்குண்டு. உண்மையில் இப்பழக்கம் மிகக் கொடியது. ஏனெனில் வெளிப்பட வேண்டிய இந்திரியத்தையுள்ளே மறித்துத் தடுக்கிற படியால், அதன் உஷ்ணத்தினால் இந்திரிய கமலங்களில் வீக்கமும், நீர்த்தாரையில் ரணமும், ஊற்றாம் பெட்டியில் கல்விளைவும், கல்லடைப்பும், நீரடைப்பும், பிறவும் உண்டாகின்றன.

இன்னும் உடலுறவு காலங்களில் இந்திரியம் வெளிப்படுகிற தருணத்தில், அது வெளிப்படாதிருக்கும்படி மல்லாந்து படுத்துக் கொள்வதினாலும் இந்திரியந் தடைப்பட்டு, தொடைகளிலும், புட்டங்களிலும், அவைகளைச் சார்ந்த ஸ்தானங்களிலும் வியாதியுண்டாகிறது அல்லது அத்தருணத்தில் ஒரு பக்கமாய் ஒருக்கணித்துப் படுத்துக் கொள்வதனாலும், குண்டிக்காய்களில் வியாதி, ஆண்குறி வீக்கம், முதலாகியனவும் உண்டாகின்றன.

தேரையரும் இப்படியே செப்பியிருக்கிறார்.

வெண்பா

விந்துவை மறிக்குங்கால் வீக்கம் பிரமேக
முந்துவளி கல்லடைப்பு மூடுசுரஞ் - சந்துகைகா
லாசனநா பக்கமிடுப் பவ்வுழிநோய் மார்புவலி
வீசன னீர்க் கட்டிவை யாமே.

அதிகம் புணர்ச்சியிலுழன்றவர்களுடைய தேகம் சீதோஷ்ணாதிகத்தால் தளர்ந்து போகிறபடியால், இவர்கள் இரத்தங்குத்தி வாங்கிக் கொள்வதனாலும், அடுத்தடுத்து செய்யும் குளிர்ச்சியாகிய ஸ்நாநங்களினாலும் அபாயத்துக்குள்ளாவார்கள். ஆகையால் இப்பழக்கமுள்ளவர்கள் மேற்கண்ட கிரியைகளை அவசியம் நீக்க வேண்டியது. மேலும் இவர்கள் முக்கியமாய் முட்டை மஞ்சட்கரு, கொழுத்த ஆட்டிறைச்சி, ஆட்டின் தலையிறைச்சி, காலிறைச்சி, ஆட்டுக்குட்டியிறைச்சி, மாங்கிஷத் தீநீர் முதலியவைகளையும், வாதுமைப் பருப்பு, சாரப் பருப்பு, பிஸ்தாப் பருப்பு முதலாகிய வித்தினங்களையும் இன்னும் இவை போன்ற சூடுங்குளிர்ச்சியுமாகிய வஸ்துக்களையும், இவை களினால் யோக முறையாகச் செய்யப்பட்ட லேகியங்கள், *மாஜூன்கள், மாத்திரைகள் முதலாகியவைகளையும் கையாடி வரவேண்டியது.

மித மிஞ்சிய புணர்ச்சியினாலுண்டாகுந் தீங்குகள் அனந்தம். அவைகளை இன்னும் விவரமாய் எழுதப்புகின் இச்சிறிய கிரந்தம் பெரிதாகி விடுமாகையாலும், மேலும் அப்பழக்கமுள்ளவர்கள் தாம் தாமே தங்கள் நிலைமையை நன்றாய்த் தெரிந்து கொள்ளக் கூடுமாகையினாலும் இம்மட்டில் நிறுத்தப்பட்டது.

டே வெண்பா

அனந்தவித பந்தத்தோ டல்லும் பகலு
மனந்தலின்றிச் சேர்ந்தா ரகக்கண் — கனிந்தநோய்ச்
சங்கைக்கு மூப்புமிலை சார்ந்த மருத்துவர்க
டங்கைக்கு மூப்புமுலை தான்.

அனுபவத்தில் இவர்கள் மேற்கண்ட வியாதிகளில் ஒன்று அல்லது பல நோய்களினால் பீடிக்கப்பட்டவர்களாகவே காணப்படுகிறார்கள்.

---

* மாஜூன் என்பது ஓர்வித லேகியமே; கஞ்சா சேர்த்துச் செய்து கடையில் விற்கிற மாஜினம் அன்று. மாஜூன் செய்முறை அவிழ்த பாகத்திற் பார்க்கவும்.

சங்கமத்திற்குரிய நேரம்

உணவு அருந்தியவுடனும் அல்லது இரைப்பையில் ஆகாரம் ஜீரணிக்காமல் இருக்கும் போதும் சங்கமங்கூடாது. ஏனெனில் அதன் காரணம் பின்னர் கூறுவாம்.

இவ்விடம் நாம் செரிமான உறுப்புக்களையும், அவைகளின் தொழில்களையும் முன்னம் தெரிந்து கொள்ள வேண்டி யிருக்கிறது. ஆனால் அது மிக விரிவானதாகையால் அவைகளில் முக்கியமானதாகிய இரைப்பையைப் பற்றிச் சில விஷயங்களைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

இரைப்பை

இரைப்பையெனினும், தீனிப்பையெனினும், அன்னாசயம் எனினும், ஆமாசயம் எனினும் ஒன்றே.

இது நமது வயிற்றுக்குள்ளே சதைகள், ஜவ்வுகள், நரம்புகள் ஆகிய இவைகளால் ஏற்படுத்தப்பட்ட ஒருறுப்பு. இது நீளத்தில் சுரைக்காயை யொத்ததாய் மேற்பாகம் அன்னவாகியென்னும் குழலோடு சேர்ந்தும், கீழ்ப்பாகந் துணைக்குக்ஷியோடு சேர்ந்தும் இருக்கும்; அகலத்தில் துருத்தியை யொத்ததாய், பிலீக ஷ்தானத்திலிருந்து, ஈரற்குழிக்கு எட்டியிருக்கும். நாம் உட்கொள்ளும் ஆகாரங்கள் யாவும் இவ்விடம் வந்துதான் ஜீரணமாக வேண்டியது.

இரைப்பைக்குட் செல்லும் ஆகாரங்கள் தேகக் கூறுகளிற் சேருமுன், அவசியமாய் வெகு மாறுதல்கள் அடைய வேண்டியிருக்கின்றன. அதற்குட் செல்லும் கெட்டியான உணவுகள் சலவடிவமாய் மாறி, சத்துத்திரள், அசத்துத்திரள் என இருபாற்பட்டு முற்கூறு தேகத்தைப் பாதுகாக்கும்; பிற்கூறு மலமாய்க் கழியும்.

உணவுப் பொருள்கள் வாய்க்குட் சென்ற பின்பு, அது தொண்டைக்குப் போய் இரைக்குழல் வழியாக இரைப்பைக்குள் இலகுவாகச் சேரத்தக்கதாக, அதைப் பற்கள் அரைக்க, உமிழ்நீர் அதிகமாகச் சுரந்து, அதனுடன் சேர்ந்து நன்றாக மசிந்து மிருதுவாகும்.

அப்படி மிருதுவான பிறகு அந்தக் கவளம் விழுங்கப்பட்டுத் தொண்டைக்குட் சென்று, மிடறு இரைக்குழல் என்பவைகளிலுள்ள ஜவ்வுப் பேசிகளால் நெருக்கியிறுக்கித் தள்ளுண்டு, தொண்டை, இரைக்குழல் வழியாக இரைப்பைக்குட் விழுகின்றது.

ஒரு முறை சாப்பிட்ட அன்னபானாதிகளெல்லாம் இம்முறையாகத் தீனிப் பைக்குட் சேர்ந்த பிறகு, இரைப்பையிலுள்ள ஐவ்வுகள் இறுகி, நசித்து, பிசைந்து, மசியும்படி செய்வதால் இரை பிதுங்கி, உருண்டு புரண்டு திரண்டுவர, இரைப்பையின் உட்பக்கங்களிலிருக்கிற ஜடராக்கினியென்னும் புளிப்பு ரசம் ஜனித்து அத்துடன் மிஸ்ரமித்த பின், அதை மிருதுவும் நரை நிறமுமான பாணியாக்குகின்றன.

பின்பு, ஈரல், துணைக்குட்சி, சிறுகுடல், இருதயம், புப்புசம் முதலாகிய இடங்களிற் சென்று பல மாறுதல்களடைந்து முடிவில் நல்லிரத்தமாகித் தேகத்தைப் பாதுகாக்கும்.

செரிமான உறுப்புக்களில் முக்கியமானதாகிய இரைப்பையில்தான் நாம் உட்கொள்ளும் எல்லா ஆகாரங்களும் முதலில் பக்குவமடைய வேண்டியது. மேலும் நமது தேகத்தின் உறுப்புக்களெல்லாம் இதையே ஆதாரமாகப் பற்றியுள்ளவைகளா யிருக்கின்றன. எல்லாவுறுப்புக்களும் இரையோடு எவ்வளவு விசேஷமாகச் சம்பந்தப்பட்டிருக் கின்றனவோ அவ்வளவு விசேஷமாக மற்றெந்த உறுப்பும் தம்மில் ஒன்றிற்கொன்று சம்பந்தப்பட்டிருக்கவில்லை. இரைப்பையும் மூளையும் எப்படிச் சம்பந்தப்பட்டிருக்கின்றனவென்று பின்வருகிற (தலைமூளை பலஹீனத்தைப் பற்றிய தாது நஷ்டம்) என்னும், பிரிவினால் தெரிய வரும். இரைப்பைக்கு ஏதேனும் ஒரு கெடுதி நேரிட்டால் தேகத்தின் மற்றெல்லா உறுப்புக்களுக்கும் யாதேனும் ஒரு கெடுதியுண்டாகாதிருக்காது. ஆகையால் எந்த வியாதிக்கும் முதல் முதல் இரைப்பையின் நிலைமையை கவனிக்க வேண்டியது அவசியமாகிறது.

நாம் உட்கொண்ட ஆகாரம் இத்தனை மாறுதல்கள் அடைய வேண்டியிருக்கிறபடியால், உணவு இரைப்பையிற் போய்ச் சேர்ந்தவுடனே, நரம்புகளுடைய பலம் ஜீரண உறுப்புகளுக்குச் செல்லும்; அப்பொழுது மாமிசங்களின் பலங் குறைந்து தேகத்திற் காயாசமுண்டாகும். (சாப்பிட்டவுடனே ஆயாசமுண்டாகிறது, அனுபோகத்தில் நமக்குத் தெரிந்த விஷயமே.) ஆகையால் நாம் சாப்பிட்டவுடனே சற்று அமைதியாயிருக்க வேண்டியது. அப்படியிருப்பதனால் இரைப்பையில் ஆகாரம் முழுவதுமாக செரிமானமாகி நமது தேகத்தைப் பாதுகாக்கத்தக்க நல்லிரத்தத்தை யுண்டாக்கும்.

இன்னும் சாப்பிட்டவுடன் கடுமையாகிய மனமுயற்சி, தேக முயற்சி செய்யலாகாது. ஏனெனில் மேற்கண்ட விதமாக நரம்புகளின் பலம் சாதாரணமான செரிமான உறுப்புகளுக்குச் செல்ல, அதற்கு விரோதமாய்

நாம் வேறு முயற்சியில் செலுத்துகிறதினால் அவைகளுக்கு ஏதேனும் ஒரு கெடுதி யுண்டாகும்.

சாதாரணமான விஷயங்களுக்கே இப்படியானால், இராஜ கருவிகளாகிய மூளை, இருதயம், ஈரல், இரைப்பை ஆகியவைகளும், பீஜம், குண்டிக்காய் முதலியவைகளும், அதிகமாய்ச் சம்பந்தப்படும் சங்கம முயற்சியானது அக்காலங்களில் உண்டாயிருப்பதனால், போக உறுப்புகளுக்கும் செரிமான உறுப்புக்களுக்கும் முக்கியமாய் இரைப்பைக்கு எவ்விதமும் ஏதேனும் ஒரு கெடுதி நேரிடாதிருக்காதென்பது, யாவருக்கும் நன்றாய் விளங்கும்.

ஆகையாற்றான் சாப்பிட்டவுடனே சங்கமங் கூடாது. அப்படி சங்கமமுடையவர்கள் முக்கியமாய் அக்கினி மந்தம், வயிற்றுப்பிசம், பேதி, குன்மம், சூலை நோய், செரியாமை முதலாகிய நோய்களுக்குட்பட்டு நஷ்டமடைவார்கள்.

இரண்டாவது, நன்றாய்ப் பக்குவப்படாத சத்தானது நரம்புகளிற் சென்று வறட்சியை யுண்டாக்கி, சிகிச்சைக் குள்ளடங்காது.

இவ்வாறே, ஆகாரமெல்லாஞ் செரிமானமாகி, இரைப்பை வெறுமையாயிருக்கும் போதும் சங்கமம் கூடாது; ஏனெனில், சங்கமத்தினால், இரத்தம், ஆவி, ஆத்துமசத்து வெளிப் படுகின்றனவென்றும், இன்னும் அதனால் ஜீவாக்கினி வறண்டு குறைந்து விடுகிறபடியால் குளிர்ச்சி யதிகரிக்கும் என்றும், நமக்கு முன்பே தெரிந்திருக்கின்றது. இரைப்பை வெறுமையாயிருக்கும் போதுண்டாகிய சங்கமத்தினால், ஜீவாக்கினி அதிகமாய்க் குறைந்து, தேக பலமும் அதிகமாய் க்ஷீணித்து போம். இதனாலும் வியாதிகளுக்கிடமாகும்.

ஆகையினால் ஆகாரமானது, தீனிப்பையிற் சீரணித்துண்டாகிய சத்தில் பெரும் பாகம் துணைக்குக்ஷி, ஈரல் இவைகளிற் சென்றும், சிறுபாகம், இரைப்பையில் தங்கியும் இருக்குஞ் சமயமே சங்கமத்திற்குரிய நேரம்.

சிலருக்கு ஜீரண காலமும் சில பொருள்கள் ஜீரண காலமும் மாறுபடுவதாலும் பெரும்பான்மை ஒரு சமயம் சாப்பிடுகிற உணவு செரிக்க 3-4 மணி நேரஞ் செல்லும். ஆகையினால் உணவருந்திய ஒரு மூன்று மணிக்கு பின் உண்டாயிருக்கிற சங்கமமே மிதம். எல்லாத் தேகிகளுக்கும் இதுவே பொருந்தும். அனேக பண்டிதர்களுக்கும் இதுவே சம்மதம்.

இன்னும், சங்கமத்திற்கு முன்னிரவைப் பார்க்கிலும் பின்னிரவே சிரேஷ்டமானது. ஏனெனில் அப்பொழுது தேகத்தின் சகல சக்திகளும்

சமரசப்பட்டிருக்குமாகையால், அக்காலச் சங்கமத்தினால் உண்டாகும் கருவானது, கூர்மையான புத்தியும், ஓர்மையான பக்தியும், சோர்வில்லாத சக்தியும், நேர்மையான யுக்தியுமுள்ளதாயிருக்கும்.

சங்கமங்களுக்கிடையில் வேண்டிய கால அளவு

சில முரட்டுப் பண்டிதர்கள் மக்களை மயக்கி வெருட்டிச் சொல்லுகிறதாவது:— உலகத்தில் மனித தேகத்திற்கு மேகத்தைப் போன்ற அனேக வியாதிகள் போகத்தினால் உண்டாகிறபடியால், அதனை முற்றிலும் பற்றற நீக்க வேண்டியது'' என்பதே.

இவர்கள் இப்படிச் சொல்லுகிறது புத்திக்கும், ஆயுள் வேத சாஸ்திரங்களுக்கும் சற்றும் பொருத்தமாகத் தோன்றவில்லை. போகத்தை விதிப்படி யனுபவித்திருந்த அனேகர் யாதொரு வியாதியும் அணுகாமல் பூரண சுக ஸ்திதியிலிருந்ததாக அனேக பண்டிதர்களால் பரிசோதித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் அகமது இபுனு சுலைமான் பாக்ஷா என்னும் பண்டிதர் சொல்லுகிறார், ''நூறு வயதிற்குச் சமீபத்திருந்த கிழ்வர்களைப் பரீக்ஷித்திருக்கிறேன். அவர்கள் ஒரு நாளேனும் ஸ்திரீ சங்கமமின்றி யிருந்தவர்களல்லர். அவர்கள் அப்படியிருந்தும் அவர்களுக்குக் கொஞ்சம் பஞ்சேந்திரியக் குறைவும், மற்றும் யாதொரு குறைவும் உண்டாகவில்லை. மேலும் அவர்களுக்கிருந்த தேக பலமும், மன்வலிமையும், நல்ல வாலிபர்களிடத்தும் இருக்கவில்லை. இன்னும் சங்கமத்தை முற்றுந் தவிர்த்திருந்த ஒரு கூட்டத்தாரையும் பரிசோதித்திருக்கிறேன். அவர்களில் அனேகர் கடினமாகிய வியாதியுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள்; அனேகர் தேக சுபாவ விரோதமாகச் சங்கமத்தைத் தவிர்த்த காரணத்தினாலே அதைச் சார்ந்த சில வியாதிகளினால் அகால மரணத்தையடைந்தார்கள்.''

ஆகையினால், வியாதிக்குக் காரணம் உடல் உறவல்ல. ஆனால் அதையனுபவிக்குங் காலபேதமும், தேகக்கூறின் வேறுபாடுகளுமேயாம்.

இதற்காகத்தான் உடலுறவுக்கிடையிலும் கால அளவுகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:

சில ஹக்கீம்கள், உடலுறவுக்கிடையில் ஒரு வருஷஞ் செல்ல வேண்டுமென்றும், சிலர் ஆறு மாதங்கள் செல்ல வேண்டுமென்றுஞ் சொல்லுகிறார்கள்.

சிலர் ஒரு மாதம் போதுமென்றும் அபிப்பிராயப் படுகிறார்கள். நோயணுகா விதியில் தேரையரும் இப்படியே சொல்லியிருக்கிறார். "பெண் கடமைத் திங்களுக்கோர் காலன்றி மருவோம்."

வைத்தியர்களில் ஒரு கூட்டத்தார் அவரவர்கள் வயதிற்குத் தக்கபடி காலமுறை நிச்சயிக்க வேண்டியிருக்கிறது, என்கிறார்கள்; அது எப்படியெனில் மனிதன் குறைந்த பக்ஷம் இருபத்திரண்டு வயதிற்குப் பின் உடலுறவு கொள்ள வேண்டியது. அவ்வா றில்லாமல் அந்த வயதிற்கு முன் உண்டாகிய உடலுறவினால் பெரும்பாலும் விரைவாக தாது நஷ்டம் உண்டாகும். தேகம், கோசம், இவைகளும் சீக்கிரம் மெலிந்து போம்.

22 வயது தொடங்கி 33 வயது வரைக்கும், தன் மனைவி மனமொன்றாகி, நேசித்து, தன் மேல் அன்பு மிகுந்தவளாகயிருந்தால் அவளோடு தின உடலுறவு கூடும். இதுவும் தேகத்திற்கு ஏதேனும் குற்றம் உண்டாகாதிருக்கு மட்டுந்தான். அப்படி ஏதேனும் ஒரு குற்றங் கண்டால் உடனே அதைத் தவிர்க்க வேண்டியது.

30 — வயதிலிருந்து, 40 வயது வரைக்கும் தின அனுபவங் கூடும் 40 வயதிலிருந்து, 50 வயது வரைக்கும் மூன்று நாளைக்கோர் தடவையாம். 50 வயதிலிருந்து 60 வயது வரைக்கும், ஐந்து அல்லது ஆறு தினங்களுக்கோர் தடவையாம். 60 வயதிலிருந்து 70 வயது வரைக்கும் தேகம் பலமுள்ளதாக யிருந்தால் பத்து தினங்களுக்கோர் தடவையாம் 70-வயதிலிருந்து 75 வயது வரைக்கும் தேகசக்தி தகுதியாயுமிருந்து, சங்கமத்தினால் மனதிற் கானந்தமுமுண்டானால், மாதம் ஒன்று அல்லது இரண்டு தடவையாகும். 80 அல்லது 80க்குச் சமீபித்து விட்டால் வருஷத்திற் கோர் தடவைக் கதிகங் கூடாது. ஆனால் தேகபலம் அதிகமாயிருந்து, காமமும் அதிகமாயிருந்தால் வருஷத்திற்கிரண்டு தடவையாகும் 90 வயதானால் உடலுறவுக்கு இடமில்லை; நிறுத்த வேண்டியதுதான். மேற்சொன்னதெல்லாம் தேக ஏற்பாடு பலமானதாயும், தேககுணம் சமரசமானதாயும் இருக்கப் பெற்றவர்களுக்கேயாம்.

தேக அமைப்பு அதிக பலமுள்ளதாயும், தேக உறுப்புக்கள் அதிக சக்தியுள்ளனவாயும், இருக்கப் பெற்றவர்களுக்கு 50 வயதிலிருந்து 60 வயது மட்டும் அனுபவித்தல், மற்றவர்களுக்கு 40 வயதிலிருந்து 50 வயது வரைக்கும் அனுபவிக்க வேண்டிய அளவாயிருக்கும். இப்படியே அவர்களுக்கு நூறு வயது மட்டும் முறையே பார்த்துக் கொள்ளவும்.

இன்னும் சிலர் சொல்லுகிறதாவது "தேகத்திற் கொஞ்சமுந் துர்ப்பல முண்டாகாமற் பூரண சக்தியுண்டாயிருந்து, தேக குணங்களும் மாறுபடாமலிருக்கு மட்டுந் தின அனுபவங்கூடும்."

ஆனால் இவர்களிப்படி 2 மாறுபட்டாலும் பெரும்பாலார் கருத்தாவது எல்லோருடைய உடல் வாகு ஒரே மாதிரியானதல்ல. ஏனெனில், சில விபரீத தேகிகள் ஓரிரவில் ஏழு தரம் அனுபவித்தும், அவர்களுக்குக் கொஞ்சமும் துர்ப்பல்முஞ் சோர்வும் உண்டாகாதிருக்கின்றன. வேறு சிலர் ஏழு மாதங்களாயினும் சங்கமமென்றால் தேகம் நடுங்கி, மனமொடுங்கி, மயங்கித் தியங்குகிறார்கள். ஆகையினால் உடலுறவுக்கிடையில் வேண்டிய கால அளவைத் தேக பலத்திற்கு தக்கபடி நிர்ணயிக்க வேண்டியதே. நல்ல நிலையில் உள்ள சமமாகிய தேக சக்தியுள்ளவர்களுக்கு மூன்று நாளைக்கோர் முறைதானுரித்தது, இதுவே அநேக பண்டிதர்களின் கருத்து.

டாக்டர் சித்தின்ஷா சாயபு பஹதூர் சொல்லுகிறார். நுரையீரல் துர்ப்பலப்பட்டிருக்கின்றவர்கள், கபத்துடன் இரத்தம் விழப் பெற்றவர்கள், கண் பார்வை, இரைப்பை, குடல்கள் ஆகியவைகள் துர்ப்பலப்பட்டிருக்கிறார்கள், காக்கைவலி, மூர்ச்சை, பைத்தியம், இந்திரிய இழிவு லேபனக் குறைவு, முதலிய வியாதிகளுள்ளவர்கள், கல்வியில் அதிகப் பயிற்சியுள்ளவர்கள் ஆகிய இவர்களுக்குச் சங்கமங்களுக்கிடையில் அதிக நாள் செல்ல வேண்டும். ஏனெனில், அடுத்தடுத்துண்டாம் சங்கத்தினால் பொதுவாய் எல்லோருக்கும் தீங்கை விளைவிக்குமென்பது உண்மையென்றாலும் முக்கியமாய் இவர்களுக்கு அதிகக் கெடுதியை விளைவிக்குமென்பது திண்ணம்."

சங்கமத்திற்குத் தகாத காலங்கள்

உணவு செரிக்காமல் மந்தப்பட்டிருக்கும் போதும், வாந்தியாகிய பின்பும், நித்திரை பங்கப்பட்டிருக்கும் போதும், நித்திரையினின்று விழித்தவுடனேயும், நெடுநேரம் நித்திரையின்றியிருந்த போதும், கடினமாகிய உழைப்பிற்குப் பின்பும், மனவருத்தப்பட்டு விசனமாயிருக்கும் போதும் அதிகப் பரிதாபச் சிந்தையாயிருக்கும் போதும், பேதியாகும் போதும், பேதியான பின்பும், மலசல நெருக்கத்திலும், குடிவெறி மயக்கத்திலும், கடும் பசியாயிருக்கும் போதும், தானமாயிருக்கும் போதும், இரத்தங்குத்தி வாங்கின பின்பும், கொம்பினால் இரத்தம் வாங்கின பின்பும், தேகம் அதிகுளிர்ச்சியாய், அல்லது அதிக சூடாயிருக்கும் போதும், குளிர்ந்த ஸ்நானங்களுக்குப் பின்பும் புளிப்பு வஸ்துக்களை அதிகமாகச் சாப்பிட்டிருக்கும் போதும், அதிக உஷ்ணமான ஊர்களில் உஷ்ணமான நேரங்களிலும், வறட்சியாகிய தேகிகள் கோடைக் காலங்ககளிலும், பகற்காலங்களில் சூரிய வெப்பம் அதிகமாயிருக்கிற நேரங்களிலும், குளிர்ச்சியாகிய தேகிகள் குளிர் காலங்களிலும், தொற்று வியாதிகள் பரவியிருக்கும்

போதும், விஷபேதி பரவியிருக்கும் போதும், விஷக்காற்று வீசும் போதும், அதிக வேர்வைக்குப் பின்பும், தலைநோய் கண்டு இருக்கும் போதும், சுரமாயிருக்கும் போதும், சந்துவாதத் தொந்தரவிலும், குத்தலுண்டாகும் கட்டிகள் உண்டாயிருக்கும் போதும் உடலுறவை நீக்க வேண்டும்.

தேகம் தளர்ந்த முதியவர்களுக்கும், சொட்டு மூத்திரம் உள்ளவர்களுக்கும், நீரிழிவு உள்ளவர்களுக்கும், நாள்பட்ட ரோகிகளுக்கும், முக்கியமாய் மூளை, இருதயம், இரைப்பை, குண்டிக்காய், ஈரல் இவைகளைப் பற்றிய ரோகம் உள்ளவர்களுக்கும், புச்சா வர்த்தலாத நோயுள்ளவர்களுக்கும், சூலை நோயுள்ளவர்களுக்கும், குன்ம நோயுள்ளவர்களுக்கும், தேகந் துர்ப்பலமுள்ளவர்களுக்கும் சங்கமம் அறவே கூடாது.

உடலுறவிற்குப் பின் தலைவலி கண்டாலும், இருதயத்தில் திடுக்கம் அல்லது அதிரல் உண்டானாலும், தேகம் மஞ்சள் வருணமானாலும், கண்களில் வறட்சியுண்டானாலும், இவைகளுக்குப் பின் உண்டாகும் சங்கமத்தினால் ஏதேனும் தேகத்திற்குக் கெடுதி நேரிடுமென்பதற்கு இவை அறிகுறியான படியால், உடனே நிறுத்தி வைக்க வேண்டியது.

டாக்டர் டியூர்நெட் துரையவர்கள் மிகக் கண்டிப்பாய் வற்புறுத்திச் சொல்லுகிறதாவது, இருதயத்தைப் பற்றிய 'எவ்வகை வியாதியுள்ளவர்களும் முற்றிலும் பற்றறச் சங்கமத்தை நீக்கிவிட வேண்டியதென்பதே.

ஏனெனில், இக்காலங்களில், மூளை, இருதயம், இரைப்பை, குண்டிக்காய், இரத்த நரம்புகள் முதலாகியவைகள் தத்தந் தொழில்களில் மாறுதலடைந்து, தேக சுபாவம் மாறுபட்டிருக்கும்; அக்காலங்களில் உண்டாகிய சங்கமத்தினால், உடலின் சத்துத் திரள்கள் அதிகமாய் அழிந்து தேகந் துர்ப்பலப்பட்டுப் போம். ஆகையினால் தேகத்தின் நோய் அதிகரித்து விபரீதமாகவும், வேறு நோய்கள் இலகுவாய்ப் பற்றவும் இடமாகும். இவ்விதம் அனேக நோய்களுண்டாகி ஓய்வில்லாத தொந்தரவிற்கிடமாகிச் சந்திரனைப் போன்ற, சுந்தரமாகிய தேகம் நொந்து, நிந்தனைக்கு இடமாகி விடும்.

ஓர் விண்ணப்பம்

மேற்கண்ட ஒவ்வொரு விஷயமும் மிக வல்லவர்களாகிய அனேக பண்டிதர்கள் தங்கள் தங்கள் அனுபவத்தினால் தெரிந்து சொல்லப்பட்டவைகள். மேலும் மேற்கண்ட காலங்களில் உண்டாயிருந்த

உடலுறவினால் பலவிதத் தொந்தரவையனுபவித்தவர்கள் சிலரல்லர். எனவே அனுபோகத்தினாலுந் தெரியவந்திருக்கிறது. இன்னும் எனது அரிய சினேகிதர்களில் ஒருவருக்கு ஓர் விபரீத வியாதியுண்டாயிற்று. அதென்னவெனில், மார்பில் சதாகாலமும் பொன்வண்டின் ரீங்காரத் தொனியைப் போல் உண்டாயிருந்தது. சப்தவேணு (Stethoscope) என்னும் கருவியின் உதவியின்றி, மார்பில் காதை வைத்துக் கேட்க அத்தொனி நன்றாய்த் தெரிந்து கொள்ளக் கூடியதாயிருந்தது. அது இன்ன வியாதி என்றும், அதன் காரணம் இன்னதென்றும், அனேக டாக்டர்களாலும், அனேக சுதேச வைத்தியர்களாலும் தெரிந்து கொள்ளக் கூடாமையாயிருந்தது. ஒரு நாள் (ஷேகுர் ரயீஸ் பூ அலி ஸீனா) என்னும் பண்டிதர் அவர்கள் (அரபு) பாஷையில் எழுதியிருக்கிற ஓர் கிரந்தத்தைத் தற்செயலாய்ப் பார்க்க நேரிட்டது. அதில் கண்டிருக்கிறதாவது, "அளவிற்கதிகமாகிய உடலுறவினாலும், பகற்காலங்களில் தகாத நேரங்களில் உண்டாகிய உடலுறவினால் இன்னின்ன வியாதிகளுண்டாகுமென்றும், இன்னும் அவர் காலத்தில் இப்பழக்கமுள்ள சிலருக்கு மார்பில் தடதடவென அதிரலும், சிலருக்குக் கடலிரைதல் போல் சப்தமும், சிலருக்கு ரீங்காரத் தொனியும் இதைப் போன்ற வேறு சில வியாதிகளும், இப்படியே சிரசிலும் உண்டாயின" என்பதே. தக்ஷணம் மேற்கண்ட சினேகிதரிடத்திற் சென்று, அவர் தனியாயிருக்கக் கண்டு, "சினேகிதரே, உமக்குண்டாயிருக்கிற வியாதி யின்னதென்றும், அதன் காரணம் இன்னதென்றும் தெரிந்து கொள்ளக் கூடவில்லையே; எந்த வியாதியான போதிலும் அதன் காரணம் தெரிந்து விட்டால் அந்த வியாதியைக் கைவசப்படுத்துகிறது மிகவும் எளிது. ஆகையினால் தங்களுடைய பழக்கங்களில் மாறுதல் ஏதேனும் உண்டோவென்றேன்." அதற்கு அவர் சொன்னதாவது: "என் பழக்கங்களில் அறிகுறியாய் யாதொரு வேறுபாடுகளும் இல்லை. ஆனால் சென்ற இரண்டு மூன்று மாதங்களில் பகற் காலங்களில் சுமார் 10—11 மணி நேரத்தில் பல தடவைகளில் சங்கமம் நேரிட்டது. இதுவேயொழிய மற்ற யாதொரு வித்தியாசமுங் கிடையாதென உறுதியாகக் கூறினார்.

பின்பு மேற்படி பண்டிதரவர்களின் அனுபவத்திற்கும் இவ்விடம் நடந்திருப்பதற்கும் ஒத்திருப்பதால் அவ்வியாதிக்குக் காரணம் வேனிற் காலப் பகலில் வெய்யில் அதிக தீக்ஷணியமாகிய நேரத்தில் உண்டாயிருந்த சங்கமமே என்பது யாவருக்கும் நன்றாய் விளங்கும். ஆகையால் மேற்கண்ட பண்டிதர் எழுதியிருக்கிற முபர்ராவும் (Mufarrah), இன்னும் சில அக்கீம்களோடு யோசித்து, இராஜ கருவிகளுக்குப் பலத்தை யுண்டாக்கும் ஒரு லேகியமும் செய்து கொடுக்கப்பட்டு, உண்மைப்

பண்டிதராகிய சகல வல்லமையுள்ள, பரம தயாபரக் கடவுளினது கிருபாகடாக்ஷத்தினால் அவ்வியாதி குணமடைந்து முன்போலவே சுகமாக வாழ்ந்திருந்தார்.

ஆகையினால் என்மீது அன்புள்ள நண்பர்களே! மேற்கண்ட செய்திகள் ஒவ்வொன்றையும் அற்பமாய் எண்ணாதீர்கள். ஒவ்வொன்றையும் நன்றாய் ஆராய்ந்து தங்கள் மனதில் நிலைத்திருக்கும்படி செய்வீர்களெனத் தங்களை மிகவும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேற்கண்ட சப்தம் முதலியவைகள் எப்படியுண்டாகிற தென்பது மிகவும் விரிவான விஷயம். மேற்படி பண்டிதரின் சிறந்த கிரந்தத்தில் விரிவாய்ச் சொல்லியிருக்கிறபடியால் தேவையுள்ளவர்கள் பார்த்துக் கொள்ளவும்.

குறிப்பு

உடலுறவிற்குப் பின் தண்ணீர் அல்லது குளிர்ந்த பானங்கள் சாப்பிடுகிற பழக்கம் அனேகருக்குண்டு. இப்படிச் செய்வதனால் தப்பாமல் எப்படியும் வியாதிகளுக்கிடமுண்டு. ஏனெனில், உடலுறவினால் ஜீவாக்கினி குறைந்து காரணாக்கினியதிகரிக்கும்; அதனால் தேக உறுப்புக்கள் (முக்கியமாய் உள்ளுறுப்புக்கள்) அதிகமாய் உஷ்ணத்திருக்கும்; நன்றாய்ச் சூடேறிய பாத்திரத்தில் சலத்தைத் தெளித்த உடனேயே இழுத்துக் கொள்வது போல, சங்கமத்திற்குப் பின் சாப்பிடுகிற குளிர்ந்த பானங்களை யந்த உறுப்புக்கள் உடனே ஏற்றுக் கொள்ளும். அதனால் பக்ஷவாதம், முகவாதம், வாய்கோணல், நடுக்குவாதம், ஈரல் வீக்கம், ஈரல் நடுக்கம் முதலிய நோய்களுண்டாம்.

இப்படியே உடலுறவிற்குப் பின், அதிக சூடும் காரமுமான சத்துள்ள பானங்களும் சாப்பிடலாகாது; ஏனெனில், நன்றாய் நீர் வற்றி இருக்கிற கட்டையில், அக்கினி சீக்கிரம் பற்றுகிறது போல, இவ்வுறுப்புக்களில் அவைகளின் சூடு தாக்கி அவைகளின் சுபாவத் தொழில் மாறும். இதனாலும் அனேக வியாதிகளுக்கிடமாகும்.

ஆகையால் இவ்விரண்டு காரியமும் பெண்கள் ஆண்கள் இருவருக்கும் கெடுதியை விளைவிக்கிறபடியால் இருவருந் தவிர்க்க வேண்டியது.

உடலுறவிற்குப் பின் தாகத்திற்கு வேண்டியிருந்தால் காய்ந்தாறின பாலுடன் சுத்தி செய்த தேன் கூட்டிச் சாப்பிடுவதால் தேகத்தின் சோர்வும், களைப்பும் நீங்குவதுமின்றி, தாருட்ய விர்த்தியுமுண்டாகும். இன்னும் உடலுறவிற்குப் பின் வெங்காய ஷர்பத்தைச் சாப்பிடுவதால் அதிக பிரயோசனமுண்டாகும்.

மருவத் தகாத ஸ்திரீகள்

மகா வல்லவர்களாகிய பண்டிதர்கள் தங்களனுபவத்தினால் கண்டு, பலருபயோகத்திற்காக நவின்றதாவது:

உடலுறவு கொள்ள தகுதியற்ற பெண்கள் பலராயினும் அவர்களில் முக்கியமாய்ச் சிலரோடு ஒருபோதும் சேரக் கூடாது; அவர்கள் யாரென்றால் —

1. கபட ஸ்திரீகள், விபசாரிகள்

ஏனெனில், இவர்கள் வஞ்சனை, சூது, மாயாஜால வித்தைகளைக் காட்டி, பொய் அபிநயனங்களால் காமத் தீயை மூட்டி விடுவார்கள். ஆனால் தங்களிஷ்ட நாயகர்களைத் தவிர, மற்றவர்களிடத்தி லொருக்காலும் மனமொத்துச் சந்தோஷப்படுத்த வேண்டுமென்பது இவர்களின் கருத்தல்ல. பணம், பொருள் முதலியவைகளைத் தட்டி பறிப்பதே இவர்கள் கருத்தாகையால், பற்றி யெரிகின்ற காமத் தீயானது தணியும் வகையாய்த் தணியாதாகையால் கொடிய வியாதிகளுக் கிடமாகின்றது.

2. சூதத்தினாலும், மகப்பேற்றினாலும் உதிரப் போக்கு கண்டிருக்கிற பெண்கள்

ஏனெனில், இவர்களோடிந்த நிலையில், கூடுவதனாலே, *அக்கெட்ட வுதிரத்தின் சூடு, மூளை, இருதய முதலாகியவைகளில் தாக்குகிறபடியால், சித்தப்பிரமை, பைத்தியம், மூர்ச்சை முதலான வியாதிகளுண்டாகும். சிலவேளை ஒரு மருந்திலுந் தீராத மேக வியாதிகளுண்டாகும்.

குறிப்பு

இந்து ஸ்திரீகளில் அனேகர் மாதவிடாய் கண்ட மூன்றாம் நாள் ஸ்நாநஞ் செய்து தீட்டு நீங்கிற்றென்று, வீட்டுக்குள் வந்து விடுகிறார்கள். அக்காலத்தில் புருஷர்கள் சில சமயம் மோசம் போக நேரிடும்; ஏனெனில் சூதகமானது எல்லோருக்கும் ஒரே நிர்ணயமாய் மூன்று நாளையில் நின்று போகாது, சிலருக்கு மூன்று நாள்களுக்குக் குறைந்தும், சிலருக்கு மூன்று நாட்களுக்கு அதிகப்பட்டும் இருக்கும். உதிரப் போக்கு சுத்தமாய் நின்று

---

* அறிவிப்பு - சூதகத்தின் உதிரத்தைப் பசுமையாகிய மரம், பூண்டு, செடி இவைகளின் மேல் போட்டால் எல்லாம் பட்டுப்போம். இன்னம் சதாப் இலைச் செடி, சிலகொடி செடிகளின் மேல் சூதகமுள்ள ஸ்திரீகளின் சாயை படுவதனாலும் அவை யுலர்ந்து போதல் நிச்சயம்.

பற்றற்றுப் போன பின்பு தான் உடலுறவு கொள்ள வேண்டும். சிலருக்கு இரண்டொரு நாள் உதிரங்கண்டு, இரண்டொரு நாள் நின்று, பின்பு இரண்டொரு நாள் கண்டு, முடிவில் சுத்தமாய் நின்று போகும். ஆரம்பமாகக் கண்ட நாள் முதல் முடிவாக நின்ற நாள் வரைக்கும் சூதகமே. இக்காலங்கள் ஒருபோதும் அனுபவங் கூடாது. சூதகத்தின் கால அளவு அவரவர்கள் பழக்கத்தையனுசரித்தது.

இந்த விஷயத்தில் மஹம்மதிய ஸ்திரீகள் அதிக சாக்கிரதை யுள்ளவர்கள். சூதத்தைப் பற்றிய விவரம் மிகவும் விரிவானது, பிரியமுள்ளவர்கள் தெரிந்தவர்களால் அறிந்து கொள்ளவும்.

3. புருஷனில்லாத ஸ்திரீகள்

விதவைகள், கன்னிகைகள் முதலானவர்கள்.

ஏனெனில், இவர்கள் செய்யுந் தகா நடத்தையினால் கர்ப்பந்தரித்து விட்டால் அவமானத்திற் கிடமாகுமேயென்கிற எண்ணத்தினாலும், அல்லது இத்தகாத செயல் வெளிப்பட்டு விட்டால் மகா கெட்ட பேருண்டாகுமே என்கிற சந்தேகத்தினாலும், கருவை யழித்தலினால் இராஜாங்கத்தார் தண்டனை முதலியவைகளுண்டாகுமென்னும் பயத்தினாலும், அக்காலங்களில் விந்து ஸ்கலிதமாகுந் தருணத்தில், கணவனை விட்டு நீங்கி விடுவார்கள். அப்பொழுது இந்திரியத் துளிகள் ஆண்குறியின் துவாரத்தில் தங்கி விடுகிறபடியால் மேக வியாதிகள் பிறக்கின்றன.

இப்படியே சங்கம காலங்களில், வேறெந்தக் காரணத்தினாலும் பயம், அச்சம், சந்தேகமுண்டாகிற ஸ்திரீகளோடும், வேறு நாயகன்மீது இஷ்டமுள்ளவர்களாய் மனமொத்திணங்கா பெண்களுடன் உடலுறவு கொள்ளக் கூடாது.

4. கிழவிகள், தம் வயதிலும் அதிகம் மூப்பான பெண்கள்

ஏனெனில், இவர்கள் காந்தக் கல்லின் சுபாவமுடையவர்கள், அக்காலங்களில் ஸ்கலித தருணத்தில் மாம்பழத்தை யுரிஞ்சி இழுப்பது போல், இரத்த சத்து தேகசத்து முழுவதையும் இழுத்துக் கொள்ளுஞ் சுபாவம் இவர்களுக்குண்டு. இது நஞ்சுண்பதிலும் கொடியதாகையால், இவ்வித வியாதியுண்டாகுமென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. சந்தேகமுள்ளவர்கள் இம்முறை கடந்த நடத்தையினால் சிரமத்தையனுபவிக்கும் அனுபவசாலிகளைக் கேட்டுத் தெரிந்து நிச்சயித்துக் கொள்ளலாம்.

5. டங்கினி ஜாதி ஸ்திரீகள்

ஏனெனில், இவர்கள் அட்டையின், தன்மையுடையவர்கள்; மேலும் தன் கணவனுக்கு கொஞ்சமும் கீழ்ப்படிந்து நடவாமை; தன் கணவன் மனமொத்திணங்காமை; தம் கணவன் எவ்வித பலசாலியாயினும் அவர்களையொரு அற்பமாக மதிக்காமல் நடத்தல்; எப்போதும் சந்தேகமான நடவடிக்கை. இன்னும் அவர்கள் பிறப்பு உறுப்புகளும் மாறுபட்டேயிருக்கும். ஆகையால், இவர்களுடன் கூடி வாழ்வதனால் பலசாலிகளான பருத்த தேகிகளும் நாளடைவில் மனமுடைந்து தளர்ந்து அசக்தர்களாய்ச் சுட்கித்துப் போக நேரிடும். ஆகையால் பலசாலிகளாகிய பருத்த தேகிகளும் நாளடைவில் உடல் நலமற்றுப் போவார்கள்.

அந்தச் சாதி பெண்களை யறியுங்குறி யனேகரனேக விதமாய் கூறியிருக்கினும் அவற்றுள் முக்கியமான சில குறிகள் இவ்விடத்தில் கூறப்படும். அவைகளாவன:-

சதாகாலமும் அன்னிய கணவன் மீதே இஷ்டம். தங்கள் தேகம் கழுதையைப் போல கொழுக்க உணவு தின்பதிலேயே பிரியம், தன் கணவனென்றும் அயலானென்றும் வித்தியாசமின்மை, மானமின்மை, கொலை பாதகப் பார்வை. குறுகிய நெற்றி, குதிரைப் பிடரி மயிர் போன்ற கடினமாகிய தலை மயிர், அதிகங் குறுகின பிடரி, தேகமுழுது முரோமம் நிறைந்திருத்தல், அதிகமாய் ஸ்தூலித்த தேகம், முதலியனவாம்.

மேற்கண்ட பெண்களின் சேர்க்கை ஒருபோதுங் கூடாது; ஒவ்வொருவருந் தங்களாலியன்ற மட்டும் கண்டிப்பாய் நீக்க வேண்டியது. ஏனெனில் முன்னெழுதிய காரணங்களினால் ஆண்களுக்கு இந்திரியந் தன்னிடத்தை விட்டிறங்கிய பின், சரியாய் வெளிப்படாமல் இந்திரியக் குழல்களிலும், நீர்த் துவாரங்களிலும், தங்கிப் போவதனாலும், பலவேளை இந்திரியம் கொஞ்சமியங்கியுங் கொஞ்சமியங்காமற் போவதனாலும், எழும்பின காமத்தீ யடங்கும் விதமா யடங்காமற் போவதுனாலும், சீழ்மேகம், நீர் எரிச்சல், நீர்க்கடுப்பு, நீரடைப்பு, அரையாப்பு, அண்டவாதம், விரைவாதம், எலும்புருக்கி முதலாகிய அனேக வியாதிகளினால் பீடிக்கப்பட்டு அவைகளுக்கே இரையாய் விடுவார்கள்.

தேரையர் முதலானவர்களுமிப்படியே செப்பியிருக்கிறார்கள்.

கலித்துறை

துக்கம் பயமங்க கேசந் திரிமலந் துஞ்சலலி
வெட்கம் பசிகருப் பக்தாக மூப்பு வெறுப்பபசுஞ்
சுட்க மலட்சியங் கோபமருபமெய்த் துர்க்கந்தங்கோண்
மிக்கதி தூல முடைமாதர் போகம் வினைக்குவித்தே.

இதுவுமது - வெண்பா

தேவ குருவரச தீனதூ ரத்தையல்
பாவ வமங்கலமாம் பார்வையர்பான் - மேவுமின்பங்
கண்டாரைச் சாருமுறு கண்ணிடுக்க மின்றியே
விண்டாரைச் சாருமுன்னி விள்.

ஏகாந்த மினிதோ? இல்வாழ்க்கை யினிதோ?

போக சம்பத்துக்களிருந்தும் அவற்றையனுபவிக்காது யதார்த்தமாய்த் துறந்திருக்கிறவர்கள் அநேகர். இவ்வகையார்கள் எல்லா மதங்களிலும் உண்டு. இவர்களுக்கு அரபியில் ஹஸ-ஒர் என்றும், இங்கிலீஷில் காண்டினென்ட் பெர்ஸன் (Continent Persen) என்றும், ஹிந்தியில் ஜதி ஜக இந்திரி என்றும் தமிழில் துறவியென்றும், சிங்களத்தில் குருநாஸ் என்றும் பெயர்.

தேக சவுக்கியமும், ஆண்மையும், சுகத்திற்கு வேண்டிய எல்லா வகை வஸ்துக்களுமிருந்தும் உண்மையாய்ப் பெண்ணை நீக்கியிருக்கிறவர்கள் அந்தந்தச் சமையிகளால் பூசிக்கப் படுவதுமன்றிப் பிறராலும் பூசிக்கப்படுகிறார்கள். உண்மையில் அவர்கள் அப்படிப் பூசிக்கப்பட வேண்டியவர்களே. ஏனெனில், இப்படிச் செய்வதனால் தேக சக்தி, பலம், தேஜசு, ஆயுள் விருத்தி, விற்பன சக்தி, ஞாபக சக்தி, தேவ பக்தி, வைராக்கியம், முதலியன்வும் முக்கியமாய் ஞானமும் உடையவர்களாயிருக்கிறார்கள். மேலும் எல்லோருக்கும் அதிக பிரயோசனமுள்ள பல கிரந்தங்களுக்கும் கர்த்தாவாகி யிருக்கிறார்கள்.

முன்னோர்களின் வரலாறுகளில் தெரிகிறதாவது. ஹிந்துக்களில் ரிஷிகள், ஆங்கிலேயர்களில் பீரீஸ்ட்மார்கள், மகம்மதியர்களில் பகீர்கள், மஸ்தான்கள், புத்தமதஸ்தர்களில் குருநாஸ்கள் ஆகிய இவர்கள் ஆயுள் முழுவதும் அல்லது ஆயுளில் பெரும்பாகம் பெண்ணைத் தவிர்த்திருக்கிறார்கள். பெரும்பாலும் இவ்வகையார்களே தத்துவ சாஸ்திரங்கள், புராணங்கள், ஞானநூல் முதலியவைகளையுண்டு பண்ணி மக்களை நல்வழிக்குள்ளாக்கிச் சீர்படுத்தினார்கள் என்பதே.

இப்படித் துறவியாதல் யாவர்க்கும் எளிதன்று. உண்மையான துறவியாய்க் காலங்கழிப்பது கடலைக் கைக்கொண்டு நீந்திக் கரையேறுதல் போலாம்.

ஆனால், 1, குடும்ப வாழ்வில் இருந்தவர்களுள்ளும் அனேகர் கல்வியறிவு, மனோபலம், தேகபலம், நுண்ணிய புத்தி, விற்பன சக்தி, ஞாபக சக்தி, வைராக்கியம், ஞானம் முதலியவைகளுமுடையவர்களாகி, காவியங்கள், புராணங்கள், ஞானநூல் முதலியவைகளையுண்டு பண்ணி மனிதர்களை நன்மார்க்கக் கதியாக்கியிருக்கிறார்கள் எனச் சரித்திரங்கள் மூலமாய்த் தெரிகிறதுமன்றி, இன்னும் அவர்களாலியற்றப்பட்ட கிரந்தங்களாலும் காணலாம்.

குடும்ப வாழ்வில் உள்ள ஆங்கிலேயர்கள், அமெரிக்கர்கள் முதலியவர்களால் இன்றைக்கும் அனேக நவீன காரியங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

2. விவாகத்தினால் புத்திர சந்தானமும் உண்டாகிறது. அதனால் வம்ச விருத்திக்கு மிடமாகும்.

3. காமமானது மனிதர்களால் உண்டாக்கப்பட்டதன்று சர்வ வல்லமையுள்ள கடவுளால் உண்டாக்கப்பட்டது. ஆகையினாலே தான் மிருகம், பறவைகள் முதலிய சகல ஜீவன் மக்களிடத்தும் இவ்விச்சை இயற்கையாகவே உண்டாகிறது.

4. எம்மருந்திலும் தீராத பல மஹா ரோகங்கள் விவாகத்தினால் குணமடைந்துள்ளன. அவற்றுள், தலை மூளை, இருதயம் ஆகிய இராஜ கருவிகளைப் பற்றிய வியாதிகளே முக்கியமானவை.

a. அநேகருக்கு வாலிபத்தில் யாதொரு காரணமுமின்றிச் சோம்பல், கவலை, மனந்தடுமாறுதல், அழுகை, மனிதர்களிடத்தில் வெறுப்பு. கலந்துரையாடவும் அருவருப்பு. தான் வாழ்தல் தனக்கே வருத்தமாயிருத்தல், தலைபாரம், சில நேரங்களில் தலை நோய் முதலியவைகளுண்டாகின்றன. கனவில் விந்து வெளியாதல் மேற்கண்ட அடையாளங்கள் குறைகின்றனவாதலின், இவை காமத்தினால் உண்டான வியாதிகளென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால் இவை விவாகத்தினால் மட்டுந் தீருமே யொழிய மற்ற எவ்வகை மருந்தாலும் தீரா.

b. மஹா பண்டிதர்களாகிய பஃரேத், ஜாலிநுயூஸ் சொல்லுகிறார்கள்: "ஒருவனுக்கு இரத்தசத்து அதிகமாய் விளைந்தும் விவாகமில்லாதிருந்தால் சிரோரோகம், மந்தாக்கினி ரோகம் முதலிய மகா ரோகங்கள் அவசியமுண்டாகும்; இவ்விதமே எமது மாணாக்கர்களிற் சிலர் விவாகத்தைத் தவிர்த்ததினிமித்தமே அதிக சோர்வுள்ளவர்களாகி,

மனக்கலக்கமுற்று, பைத்திய ரோகத்துக்குச் சமீபித்து விட்டார்கள். உடனே விவாகம் செய்வித்த பின் எல்லாத் துர்க்குணங்களும் நீங்கி, சவுக்கியமடைந்து முன்னிலும் புத்திக் கூர்மையுள்ளவர்களானார்கள்.''

c. இரத்த விருத்தியையும் சர்வ சவுக்கியத்தையுமுடைய வாலிபர்களின் நிலைமையைக் காப்பாற்றவும் அவர்கள் சுகம் நிலை பெற்றிருக்கவும் விவாகமே மகா முக்கியமானது; ஏனெனில் இவர்கள் மனமானது தகாச் செய்கைகளிற் செல்லாமலிருக்க ஏதுவாவதுமன்றித் தேகசக்தி முதலியவைகளுக்கேற்றபடி மணந்து வாழ்வதனால் தேவைக்கு அதிகமாகிய கழிவு வெளிப்படும்; அப்படி வெளிப்படுவதனால் தேகபலம், நரம்புகள், தசைகள் ஆகியவை உறுதியாகின்றன. ஜீவாக்கினி விருத்தியடைகிறது. இரத்தச் சுழலில் (Circulation of the blood) வேகமதிகமாகிறது. இவ்விதம் அனேக பிரயோசனங்களுண்டு.

d. விவாகத்தினால் கோபம். அகங்காரம், காம விகாரம் முதலியவை நீங்கும். (Vide page 37)

5. தேக சுபாவத்திற்குரிய காலங்களில் மணந்து வாழாவிடில் காக்கைவலி, பைத்தியம் முதலிய மகா ரோகங்கள் உண்டாகின்றன. (Vide page 39)

இவையின்றி வைத்தியத்திற் சிறந்தவரும், வெகுநாள் அனுபவசாலியுமாகிய பிரென்சு டாக்டர் பர்ட்லின் துரை எழுதுகிறார். ''விவாகமுடையவர்கள். விவாகமின்றி ஏகாங்கிகளாயிருப்பவர்களைக் காட்டிலும் வெகுகாலஞ் சீவிக்க இடமுண்டு. ஏகாங்கிகளுள் பலர் அடிக்கடி மகா கொடிய வியாதிகளுக்குள்ளாகிறார்கள். தற்கொலை முதலிய தகாத செயல்களைச் செய்வதும் அவர்களுள் பலரே; மற்றவர்களுக்கு இப்படி ஏற்படுவதில்லை. ஒருவேளை ஏற்பட்டாலும் மிகவுங் குறைந்த அளவாகவேயிருக்கும்'' இதற்கு எடுத்துக்காட்டாக தம் தேசத்தின் மரண அறிக்கைக் குறிப்பின் சராசரிக் கணக்கை யெடுத்துக் காண்பிக்கிறார். அஃதாவது; கலியாணமுள்ளவர்கள் வருஷமொன்றிற்கு ஆயிரத்திற்கு 7,8 பெயர்கள் விகிதமாகவும், ஏகாங்கிகளில் 14-16 பெயர்கள் விகிதமாகவும் மரணமடைகிறார்களென்பதே.

ஆனால் விவாகத்தால், இவர் கருத்தாவது மணந்து வாழ்தலன்று; பெண்கள் ஆண்கள் ஒருவர் மற்றொருவரை அன்பாய் நேசிக்கவும், சாப்பாடு முதலிய குடித்தன விஷயங்களை ஒழுங்காய் நடத்தவும் ஏதுவாகிறதென்பதே.

இவர் இப்படிக் கருதினும், நன்றாய்த் தீர்க்க ஆலோசிக்கில் அன்பு, குடித்தன ஒழுங்கு முதலியவையெல்லாம் ஓர்வித கற்பனையே. விவாகமானது உண்மையில் சந்தான விருத்திக்காகவே ஏற்படுத்தப்

பட்டதென விளங்குகிறது. ஏனெனில் ஆண், பெண் ஆகிய இவர்களுள் ஆணிற்கு ஆண்மையில்லாவிட்டாலும், அல்லது பெண்களுக்கு பெண் தன்மையில்லா விட்டாலும் இருவருக்குமுள்ள மணச் சம்பந்தத்தைப் பிரித்து விடும்படியாகப் பல சமய சாஸ்திரங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. குடும்ப வாழ்வே முதன்மையானால் அப்படிப் பிரிக்க யாதொரு நிமித்தமுமில்லை.

மிருகங்கள், பறவைகள் முதலியவைகளுள் தத்தம் பெண் வருக்கங்களால் குடித்தன முறை நடப்பித்துக் கொள்ள யாதொரு நிமித்தமுமில்லையாயினும் கூடி வாழும் விஷயத்தை அவை மறக்கவில்லை.

இன்னும் அந்தமான் தீவிலுள்ள காட்டு மனிதர்கள், வீடு வாசல் முதலியன ஒன்றுமில்லாது காட்டு மிருகங்களை யொத்திருந்தும் சுபாவமாயுண்டாக்கப்பட்ட இக்கிரியையை கையாண்டு வருகிறார்கள்.

இவ்விதமான காரணங்களையும் நன்றாய் யோசிக்குங்கால் வயது முழுவதும் கலியாணமில்லாது ஏகாங்கியாயிருக்க வேண்டுமென்கிறதாய்த் தோற்றவில்லை.

துறவியாய்விடின் சாமானியர்க்கும் எட்டாத அனேக அரிய காரியங்களைச் சாதிக்கலாம் என்பது சத்தியமே. ஆயினும் அனேகர் குளிக்கப் பேசய்ச் சேறு பூசிக் கொள்வாரைப் போலத் துறவறம் பூணத் துணிந்தும் அதில் நிலைக்க மாட்டாதவர்களாய் இரகசிய மார்க்கமாய்ப் பெண் மாய்கையில் வீழ்ந்து இரு வழியிலும் பயனடையாதவர்களாய் விடுகின்றார்கள். அப்படிக் கெடுவதிலும் இல்லறம் பூணுவது உத்தமம். அது யாவருக்கும் சகஜ மார்க்கம்.

இக்காரணங்களினால், லௌகிகர்களாகிய நாம் ஏற்ற காலங்களில் விவாகம் பண்ணுவது அவசியமாகும்; விதிப்படியும் காலம், தேசம், தேகம் முதலியவைகளுக்கிணங்க முறைப்படியும் மணந்து வாழ்வதனால் பல நன்மைகளுண்டாமென்பது யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மையாகும்.

ஆகையால், நம்மனோர்க்கு இல்வாழ்க்கையே இனிதென்பது ஆயுள்வேத வைத்தியர் அனைவருடைய ஒப்புதலுமாகும்.

கருப்பையும் அதைச் சார்ந்த வறுப்புக்களும்

கருப்பையெனினும், கருப்பாஸயம் எனினும், கர்ப்பக் கோளறை எனினும், கருக்குழி எனினும் ஒன்றேயாகும்.

கருப்பை — இது ஜவ்வினாலும், நரம்புகளாலும் உண்டாக்கப்பட்டு, ஈரல், மண்ணீரல் முதலாகிய மிருதுவான சில உறுப்புக்களுக்குச் சமீபித்ததாகவும், நீர்ப்பைக்கும், மலப்பை, கூபகம் ஆகிய இவைகளுக்கு இடையிலும், அடிவயிற்றின் மத்தியிலும் வைக்கப்பட்டிருக்கிறது.

இது ஜவ்வினாலும், நரம்புகளாலும் அமைக்கப் பட்டிருப்பதேனெனில்; அதற்குள் தரிக்குங் கரு வளர வளரத் தானும் வளர்ந்து அது பக்குவப்பட்ட பின்பு அதை வெளிப்படுத்தி விட்டு, தான் தன் முன் சுபாவ ஸ்திதிக்கு வந்து விடுவதற்காகவே.

ஈரல் முதலாகியவைகளுக்குச் சமீபத்தில் இது வைக்கப்பட்டிருப்பதன் காரணமாவது, கருவுற்றிருக்கும் போது அதைச் சுற்றிலுமிருக்கிற உறுப்புக்களின் சூட்டினாலும் அது ஆதரிக்கப்படும் பொருட்டேயாம்; இன்னும் கரு வளர வளர அதற்கொரு தடையுண்டாகாதிருக்கவே மிருதுவான உறுப்புக்களுக்குச் சமீபத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

அடி, உதை, குத்து முதலாகிய அபாயங்களினின்றும் காக்கப்படுவதற்காக கருப்பையானது நீர்ப்பைக்கும், மலப்பை, கூபகம் ஆகிய இவைகளுக்கும் மத்தியில் வைக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் இது அடிவயிற்றில் வைக்கப்பட்டிருப்பது, சிசு இலகுவாய் வெளிப்படுகிறதற்காகவேயாம்.

பெண்களின் பிறப்பு உறுப்புக்களில் முக்கியமானதாகிய கருப்பையானது, கோசமும் பீஜப்பையும் சேர்ந்திருக்கும் உருவத்தைப் போலவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவை புருஷர்களுக்கு வெளிப் பக்கத்தில் வைக்கப் பட்டிருக்கின்றன. பெண்களுக்கோ கருப்பையானது உட்பக்கத்திலுள்ளதாயும் தலை கீழாக்கப்பட்டதாயு மிருக்கிறது. அதன் விவரமாவது:—

கருப்பையானது தட்டையாய், மேற்புறம் அகன்றும் விரிந்தும், கீழ்ப்புறம் உருண்டும் சிறுத்தும் இருக்கும்; சிறுத்திருக்கிற இடத்திற்குக் கழுத்தென்றும், துவாரத்திற்கு வாயென்றும் பெயர். அகத்தில் கருப்பையின் வாயை பெண்களின் மறைவிடத்தை சுற்றிக் கொண்டிருக்கும். நாம் ஒரு பையின் வாயைக் கெட்டியாய்ச் சுருக்குவது போல், கருப்பையும் தன் வாயைக் கெட்டியாய்ச் சுருக்கிக் கொள்ளும். அக்காலங்களில் ஊசியினால் நீக்குகிறதும் கஷ்டமாயிருக்கும் கருப்பையானது கருத்தரிக்காது இருக்கும் போது சிறிதளவு நீண்டு

தடித்ததாகவும் நெருக்கமானதாகவும் இருக்கும். கருத்தறித்த பின் நீளத்தில் குறையும். ஆனால் கரு வளர வளர அதற்கேற்றபடி அதன் கனமுங் குறைந்து கொண்டே போகும்.

இயல்பான நிலையில் கருப்பை மட்டும் நீளத்திலே 3, அகலத்திலே 2, தளத்திலே 1 அங்குலமுள்ளதாயிருக்கும். இது உடல்வாகிற்கும் வயதிற்கும் தக்கபடி அதிகப்படுவதும் குறைவதுமுண்டு; முன்பக்கமிருந்து கருப்பை ஈறு வரைக்கும் ஆறங்குலத்திற்குக் குறைந்தும் பன்னிரண்டங்குலத்திற்கு மிகுந்தும் இருக்கிறதில்லை.

பிறப்பு உறுப்பாகிய ஆண்குறி, பீஜம் ஆகிய இவைகளுக்கு, இராஜ கருவிகளோடு நெருங்கிய சம்பந்தமுண்டாயிருப்பது போலவே, பெண் பிறப்பு உறுப்பாகிய கருப்பைக்கும் இராஜ கருவிகளோடு நெருங்கிய சம்பந்தமுண்டாயிருக்கிறது.

இன்னும் கருப்பையில் ஏதேனும் சொற்ப குறைபாடு உண்டான போதிலும் அதை இரைப்பையே முதல் முதல் உணர்ந்து கொள்ளும். ஆகையினாற்றான், பெண்களுக்குக் கர்ப்பந் தரித்தவுடனே, காலையில் வாந்தி, மயக்கம், பசி மந்தம் முதலிய குறிகளுண்டாகின்றன.

கருப்பையின் உபயோகமாவது, விந்துவைக் கிரகித்து தன்னில் பத்திரப்படுத்தி, தன் சூடு முதலியவைகளால் கருவை வளர்த்து காத்து, பக்குவ காலத்தில் வெளிப்படுத்துவதும், தேகத்தில் அசுத்தமான நீர் முதலியவை உண்டாயிருந்தால் அவற்றைத் தன் மூலமாய் வெளிப்படுத்துவதும், (இது வெள்ளை மேகம் அதிகமாயிருக்கையில் காணப்படும்) கர்ப்பமில்லாத காலத்தில் ஸ்திரீகளின் மேன் மிச்சமாகிய கெட்ட உதிரத்தைக் காலக்கிரமமாய் வெளிப்படுத்துவது முதலியவையே.

கருப்பையானது மக்கள் பெருக்கத்திற்கு ஆகும். ஒரு வயலுக்குச் சமானமானதாகையால், தேகத்தில் மிகவும் முக்கியமான உறுப்புக்களில் இதுவும் ஒன்று; சீர்திருத்தமில்லா நிலத்தில் நல்ல விதையும் முளைத்து நன்றாய்ப் பயிராகாதது போல் வியாதி முதலியவைகளுள்ள கருப்பையிலும் விந்து தங்கி, புத்திர சம்பத்துண்டாக வாய்ப்பில்லாமற் போகும். ஆகையால் தேகத்தின் முக்கிய உறுப்புக்களைப் பற்றி அதிக கவனம் எடுத்துக் கொள்வது போலவே கருப்பையைப் பற்றியும் அவ்வளவு கவனம் எடுத்துக் கொள்ள வேண்டியது எல்லோருக்கும் மிகவும் அவசியமே.

நாதஸயம்:— ஆண்களைப் போல பெண்களுக்கும் பீஜங்களுண்டு; ஆனால் புருஷர் பீஜங்கள் பெரிதாகவும் நீண்ட விதமாயும் உருண்டையாயும் இரண்டு பீஜங்களும் ஓர் பைக்குள்

அமைக்கப்பட்டனவாயும் இருக்கும். பெண்களின் இரண்டு பீஜமும் சிறிதாகவும் இலுப்பைக் கொட்டையைப் போல் உருண்டு வெள்ளையாகவும் வெவ்வேறு பைக்குள் அமைக்கப்பட்டனவாகவும் கருப்பையின் பக்கத்திற்கொன்றாகவும் அமைந்திருக்கும். இவைகளுக்குத்தான் பெண் பீஜங்களென்றும், நர்தாசயங்களென்றும், சினைப்பைகளென்றும் பெயர். புருஷர்களுக்குப் பீஜங்களிலிருந்து சுக்கிலமானது சுக்கில நரம்பு வழியாய் நீர்த்தாரைக்குச் செல்லுகிறது போல பெண்களுக்கும் அவர்கள் பீஜங்களிலிருந்து நாதமானது நாதக் குழல்கள் வழியாய்க் கருப்பைக்குட் செல்லுகின்றது.

இந்த நாதக் குழல்கள் பக்கத்திற்கொன்றாய்த் தாரையைப் போலே நீண்டு ஒரு முனை கருப்பையின்மேல் முனையோடு கூடியும் மற்றொன்று குஞ்சம் போல் விரிந்து அந்தரமாயும் நான்கு அல்லது ஐந்து அங்குலம் நீளமுள்ளதாயும் உள்துவாரம் மெத்த சன்னமுள்ளதாயும் கருக்குழியோடு சம்பந்தப்பட்டிருக்கும். குஞ்ச முனையானது சினைப்பையோடு ஒரு நரம்பினால் சேர்ந்திருக்கும். இந்த நாதக் குழல்களின் துவாரங்கள் மிகவும் சன்னமாயிருக்கிறபடியால் தான் புருஷர்களுக்கு ஒரே தடவையாய் விந்து வெளிப்படுவது போல பெண்களுக்கு நாதம் ஒரே தடவையில் வெளிப்படாமல் கொஞ்சங் கொஞ்சமாய் வெளிப்படும். ஆகையினாற்றன் ஏககாலத்தில் அடுத்தடுத் துண்டாம் சேர்க்கையினால் ஆண்கள் சோர்வடைகிறது போல பெண்கள் சோர்வடைகிறதில்லை.

சூதகம்

மாதவிடாய் எனினும், மாதாந்த ருது எனினும், வீட்டுத் தூரம் எனினும், வீட்டு விலக்கம் எனினும், தலை முழுக்கு எனினும், தலையமுக்கு எனினும், பிரஷ்டை எனினும் ஒன்றேயாகும்.

பெண்களுக்கு மாதந்தோறும் கருக்குழியிலிருந்து வெளிப்படுகிற இரத்த வெளிப்பாட்டிற்குச் சூதகம் என்று பெயர்.

இது பெண்களின் தேக சுகத்திற்காக அவர்கள் தேகத்தின் மேன் மிச்சங்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து சுபாவமாய் அவ்வழியாக வெளிப்படுகிற தேகக் கழிவாயிருக்கும். இது எப்பொழுது ஆரம்பமாகிறதோ அதன் பின்புதான் பெண்களுக்குப் பிள்ளைப் பெறுகிற தன்மையும் உண்டாகிறது. அப்படியே எப்பொழுது சூதகங் காண்கிறது முழுவதும் நின்று போகிறதோ அப்பொழுதுதான் பிள்ளைப் பெறுந் தன்மையும் அற்றுப் போகிறது. சூதகங் காண்பதற்கு முன்பும் இது நின்று போன பின்பும் எந்த பெண்ணும் பிள்ளை யுண்டாயிருப்பதாய் நாம் கேள்விப்பட்டதில்லை. இன்னும் சூதகமானது

பெண்களின் பிறப்பு உறுப்புக்களுக்கு ஓர் புதிய சுபாவத்தை யுண்டாக்குகிறது நமக்குத் தெளிவாகத் தெரிய வருகிறது. அதென்னெனில் கருப்பையானது விந்துவையிழுத்துத் தன்னிடத்தில் பக்குவப்படுத்திக் கருவை வளர்க்கும் விருப்பமேயாம். கருப்பைக்கு விந்துவை யிழுக்கிற குணம் இருக்கிறதென்பது, வீடு கூடுங்காலங்களில் சில சமயங்களிலே ஆண்குறி உள்ளேயிழுக்கப்படுகிறதனால் தெரிய வரும்.

2-வது கருப்பையானது விந்துவைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தன்னில் ஐக்கியப்படுத்திப் பக்குவப் படுத்துகிறதென்பது பெண்களுக்குக் கருப்பை ஸ்தானத்தில் சேர்க்கைக்குப் பின்பு புழு நெளிதல் போல ஓர்வித உணர்ச்சியுண்டாவதனால் தெரிய வரும்.

3-வது கருப்பை கருவை வளர்க்கிறதாக எவ்விதமாய்ப் பொதியப்பட்டிருக்கிறதென்பது சினையாயிருக்கிற ஆடு முதலியவைகளைப் பரிசோதித்துப் பார்க்கத் தெரிய வரும்.

இக்காரணங்களினால்தான் பலாதூன் (Plato) என்னும் பண்டிதர் கருப்பையானது ஒன்றையுண்டாக்க விரும்பும் ஒரு ஜந்துவிற்கு ஒப்பாயிருக்குமென்று சொல்லுகிறார்.

ஆகையினால் பெண்களுக்கு வீட்டு விலக்கம் கண்டு சுத்தமான பின் ஒன்றையுண்டாக்கக் கருப்பை விருப்பங் கொள்கிறபடியால் அக்காலங்களில் அவர்களுக்குச் சஞ்சார இச்சை அதிகமாயுண்டாகும். அப்படியுண்டாதல் அக்கால உடலுறவினால்தான்.

டாக்டர் அபர்நெதி (Dr. Abernethy) என்பவர் சொல்லுகிறார். "சூதகமானது கருப்பையில் அழலையை நீக்கித் தேக சுகத்தை யுண்டாக்குவதுமன்றி பெண்களுக்கு சுபாவமாயுண்டாயிருக்கிற உடலுறவில் மிகுந்த விருப்பத்தைச் சாந்தப்படுத்திப் புருஷர்களுக்கிணங்கியிருக்கும்படி செய்யும்."

ஹக்கீம் அரஸ்தாலீஸ் (Aristotle) என்னும் சாஸ்திரி சொல்கிறார். "சூதகமானது மலஞ் சல முதலியவைகளைப் போலவே சுபாவத்தில் தேகக் கழிவாயிருக்கினும் குணத்தில் நல்ல இரத்தத்தைப் போலவேயிருக்கும். அதெப்படியெனில் இதனால் பிள்ளைப் பெறுந் தன்மையுண்டாகி மனித வர்க்கம் பெருக்கமடைய இடமாகிறது. மேலும் சிசு கருப்பையிலிருக்கும் போது அது அதற்காதாரமாயிருப்பதுந் தவிரச் சிசு வெளிப்பட்டும் அதற்காதாரமாகிறது. சிசு ஜனனத்திற்குப் பின்

பெண்களுக்கு மார்பகத்தில் உண்டாகிற பால், சூதகம் வெண்மையாக மாறினதாயிருக்கும். இன்னும் சூதகமானது கருப்பையின் வியாதிகளை நீக்கித் தேகத்திற்கு ஆரோக்கியத்தை யுண்டாக்குகிறது.

ஆகையினால் சூதகமானது பெண்களின் சுகத்திற்கு ஆதாரமாகியவைகளில் மிகவும் முக்கியமானது.

சில வியாதிகளாலும் கருக்குழியிலிருந்து ரத்த வெளிப்பாடு உண்டாகும். அப்படியுண்டாவது சூதகமென்றும் வியாதி என்றும் அறிகிறதற்குச் சில குறிகளுண்டு; அவையாவன:—

1. வயது:— பெண்கள் மாதவிடாய் ஆகிய வயது வித்தியாசப்படும்; உஷ்ண தேசத்தில் சீக்கிரத்திலும், சீதள தேசங்களில் தாமதித்தும் கன்னிகைகள் பிரவிடையாகிறார்கள். உஷ்ண தேசத்தில் 6 முதல் 10 வயதிற்குள்ளும், உஷ்ண சீதளம் சமமாயிருக்கிற தேசத்தில் 14 முதல் 15 வயதிற்குள்ளும், அதி சீதள தேசத்தில் 18 முதல் 20 வயதிற்குள்ளும் ஸ்திரீகள் புத்தியறிகிற காலமென்று ஒருவிதமாய் உத்தேசித்துச் சொல்லலாம். மேலும் பெண்களுக்கு 25 வயது அல்லது அதிகம் 30 — வயதிற்குள் மாதவிடாய் கண்டு விடும். ஆகையினால் கன்னிகைகளுக்கு 6 வயதிற்கு முன் கருக்குழியிலிருந்து குருதிப் போக்கு அதிகமானால் வியாதியெனத் தீர்மானிக்க வேண்டியது.

2. கால ஒழுங்கு:— மாதவிடாயானது 28 நாளைக்கோர் தரங் காண வேண்டிய முறையாகும். ஆனால் தேக சவுக்கியத்திற்குத் தக்கபடி இந்தக் காலக் கிராமம் வித்தியாசப்படுகிறது. சிலருக்கு 28 நாளைக்கு முன்னதாகவே காணும். சிலருக்கு நாள்கள் அதிகப்படும்; புருஷனுக்குள் ஐக்கியமாகியிருக்கிற ஸ்திரீகளுக்குத் தலை முழுக்குக் கிரமமாயிருப்பது அரிது. ஆகிலும் சூதகங்கண்டு பற்றற சுத்தமான நாள் முதல் 15 தினங்களுக்குள் ரத்த வெளிப்பாடு காணில் வியாதியென நிதானிக்க வேண்டியது.

3. நிறம்:— மாதவிடாயானது சிவந்து, அல்லது மஞ்சள் வர்ணம், அல்லது சாம்பல் வர்ணம், அல்லது மண் வர்ணமாக இருக்க வேண்டியது. அப்படி இல்லாமல் வெளுத்திருந்தால் வியாதியே. வஸ்திரத்தில் ஈரமாயிருக்கையில் சிவந்து, உலர்ந்த பின் வெளுத்தாலும் மாதவிடாயே. ஈரமாயிருக்கையில் வெண்மையாயிருந்து உலர்ந்தபின் மஞ்சள் நிறமானால் வியாதியேயாம். இதற்கு (இஸ்தி ஹாஸயே தஜ்னீஸ்) தொந்தப் பெரும்பாடென்று பெயர். சிவப்பும் வெண்மையும் கலந்து காண்பதில் வெண்மை மிகுந்திருந்தாலும் வியாதியே.

4. தன்மை:— சாதாரணமாய் உதிரமானது காற்றுப் பட்டால் உறைந்து போகும். சூதகத்திற்கு உறைகிற தன்மை கிடையாது. இப்படியே *அழுக்கும் உறைகிறதில்லை. சூதகம் துளித்துளியாய் வெளிப்படும்; அப்படிக்கில்லாமல் தடதடென ஓடிவரின் வியாதியெனச் சொல்ல வேண்டும்.

5. காலக்கெடு:— 13 நாளைக்குக் குறைந்தும் 10-15 நாளைக்கு அதிகப்பட்டும் காணில் வியாதியாம்.

6. அளவு:— உடல் வாகிற்குத் தக்கபடி சூதகத்தின் அளவும் வித்தியாசப்படும். ஆனால் அவை அரை முதல் 1 ஆழாக்கு அளவுக் கிருப்பதுமுண்டு. சாதாரணமாய்ச் சுமார் 100 கிராம் அல்லது 140 கிராம் இருக்க வேண்டியது.

சூதக்கட்டு

சூதகபந்தம் எனினும், சூதகக்கட்டு எனினும் ரத்த குன்மசூலையெனினும், சூதகவாயு எனினும் ஒன்றேயாகும்.

சூதகக் கட்டினால் கர்ப்பம் தரிக்காமற் போவதுமன்றி அனேக வியாதிகளுக்குங் காரணமாயிருக்கிறபடியால் அதைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இது இரண்டு விதப்படும்.

முதலாவது:— முப்பது ஆகியும் சூதகம் ஆரம்பமாகாமலே நின்று போதல்.

குறிகள்:— தேகம் பாரித்தல், எழுந்திருக்க நடக்கப் பிரியமின்மை, சொற்ப முயற்சியினாலும் களையுண்டாதல், மார்பு அதிரல், முதுகு, இடுப்பு, அரை முதலிய ஸ்தானங்களில் நோய், மலபந்தம், வயிறுப்பல், வயிற்றில் புளிப்புண்டாயிருத்தல், மண், செங்கல் முதலியவைகளில் விருப்பம். இன்னும் இது நாள்பட்டு விட்டால் முகம் வெளுத்துப் பின்பு மஞ்சணித்தல், உதடுகளின் நிறம் மாறல், மகோதர வியாதியுள்ளவர்களின் தேகம் போலாதல், பாதங்களில் வீக்கம், கொஞ்சங் கடினமான வேலை செய்வதனாலும் தீவிரமாகிய மூச்சு, நாடி தீவிரப்படினும் க்ஷீணமடைதல் சூதக சன்னியின் குறிகளில் அனேகமுண்டாதல் முதலாகியவைகளாம்.

2-வது:— மாதாந்திர தீட்டு ஆரம்பமாகி வியாதி முதலாகிய காரணங்களினால் நின்று போம். இதன் விவரம் பின்வருகிற விதமாயிருக்கும்.

சூதகக்கட்டானது வெளிக்காரணம், உட்காரணமென்னும் இரண்டுவித காரணங்களாலுண்டாகும்.

---

* குழந்தை பிறப்பிற்கு காணும் உதிரத்திற்கு அழுக்கென்று பெயர்.

வெளிக்காரணமாவது:— சூடாகிய காற்று, அதி உஷ்ணம், அளவிற்கதிகமான நித்திரையின்றி விழித்திருத்தல், அதிக கஷ்டமாகிய வேலை, வேகமாகிய முயற்சி முதலியவைகளாம். இக்காரணங்களால் தேவைக்கு அதிகமாகிய தேகக் கழிவு வெளிப்படாமல், உள்ளே க்ஷீணித்துப் போவதால் சூதகம் வெளிப்பட வாய்ப்பில்லாமற் போகும். இன்னும் சதா காலமும் வேலைகளில் சுறுசுறுப்பாய் முயற்சியாயிருக்கிற பெண்களுக்குச் சூதகங் காண்கிறதில்லை; சில சமயம் கண்டாலும் மிகக் குறைந்த அளவாயிருக்கிறதாகத் தெரிய வந்திருக்கிறது. முக்கியமாய்ச் சூதகபந்தம் அதிகுளிர்ச்சியினால் உண்டாகிறது; அதெப் படியெனில் இது உதிரத்தை வழிய விடாமல் உறையச் செய்து அது வெளிப்படும் வழியையும் அடைத்து விடும்.

உட்காரணம் இரண்டு விதப்படும். ஒன்று கருப்பையை பற்றினது; மற்றொன்று உதிரத்தைப் பற்றினது.

கருப்பையைப் பற்றினதாவது:— கருப்பையில் விப்புருத்திக் கட்டி, பிளவை, ரணம் முதலியவைகளுண்டாயிருத்தல்; கருப்பையின் நாளங்கள் குறுகிப் போதல்; அல்லது அவைகளின் வழி நெருங்கிப் போதல், பெருத்த தேகிகளின் குடற் பிதுக்கமுண்டாகிக் கருப்பையின் வாயை அல்லது அதன் கழுத்தை நெருக்கிக் கொள்ளல்; அல்லது கருப்பையில் குளிர்ச்சியதிகரித்து அதன் இயல்பான குணத்தைக் கெடுத்தல். அல்லது அதில் சூடதிகரித்து, தேவைக்கு அதிகமாகி கழிவை எரித்துத் தகித்தல்; அல்லது கருப்பையின் வாயில் துர்மாமிசம் வளர்தல்; அல்லது கருப்பையின் வாய் வேறு பக்கமாய் மாறுபட்டிருத்தல் முதலியவைகளாம்.

இரத்தத்தைப் பற்றினது இரண்டு வகையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று இரத்தத்தின் சுபாவ குணங்கெட்டுச் சூதக பந்தமுண்டாதல்; மற்றொன்று இரத்தத்தின் அளவு குறைந்து சூதகபந்தமுண்டாதல்.

இரத்தத்தின் இயற்கையான குணங்கள் கெடுதலாவது:— அதில் பித்தநீர், கபநீர், வண்டல் முதலாகியவை அதிகப்படுவது. இதனால் இரத்தத்தின் சுபாவ குணம் கெட்டுச் சூதகபந்தமுண்டாகும்.

இரத்தத்தின் அளவு குறைதல்:— இது இரண்டு விதப்படும்.

முதலாவது:— சாதாரணக் குறைவு. இது மகாவீரத்துவமுள்ள பெண்கள் தாங்கள் எடுத்துக் கொள்ளும் தேகப் பயிற்சி அல்லது உழைப்பினால் தேகக் கழிவாகிய மிதமிஞ்சிய தேகத்திலேயே தகனமாய்ப்போம்; ஆகையினால் அளவு குறைந்து சூதகபந்தமுண்டாகும்.

2-வது தேகத்தில் இரத்தக் குறைவுண்டாவதனால் இவ்வுதிரத்திலும் குறைவுண்டாகும். இதற்குப் பல காரணங்களுண்டு. இரத்தபேதி, இரத்த வாந்தி, இரத்தக் கடுப்பு, இரத்தமூலம் முதலாகிய வியாதிகளாலும் நாள்பட்ட தொந்த வியாதிகளாலும் தேகத்தில் இரத்தக் குறைவுண்டாகும்; இப்படிக் குறைவுண்டாகவே மேன்மிச்சத்திற்கிடமில்லை; ஆகையால் சூதகமுங் காணாது, இன்னும் இக்கழிவு மூக்கினால் வெளிப்படுவதனாலும் சூதகங் காணாமல் நின்று போவதுமுண்டு.

சூதகக் கட்டின் அடையாளங்கள்

1. தேகத்தில் இரத்தக் குறை உண்டாவதனால் சூதகம் நிற்கும்.

காரணம்:— கடினமாகிய உழைப்பினாலும், அடிக்கடி பட்டினியாயிருப்பதனாலும், காலந் தவறி உணவு உண்பதினாலும், தேகத்தை இளைக்கச் செய்யும் வியாதிகளாலும், அதிக மலசலப் போக்காலும், அதிக வாந்தியினாலும், இன்னும் இரத்த வாந்தி, இரத்த மூலரோகம், பெரும்பாடு, கர்ப்பக் கிரந்தி ஆகிய இவ்வியாதிகளால் இரத்தம் அதிகமாய்ப் போவதனாலும் தேகபோஷணை குறைதல் முதலியவைகளாலும் இரத்தக் குறைவுண்டாகி இவ்வியாதியுண்டாகின்றது.

குறிகள்:— 1. முகம், கண்கள், உதடுகள், நாக்கு, வாய், ஈறு, தேகம் இவைகள் வெளுத்திருக்கும்; தீபனம் மந்தப்பட்டிருக்கும். கண் விழிகள் பெரிதாய்த் தோன்றும், அசக்தி, ஆயாசம் இவைகளும் உண்டாகும்; அற்ப முயற்சியினாலும் சோர்வு, பெருமூச்சு, மார்பு அதிரல் ஆகிய இவைகள் உண்டாகும். சிலருக்குக் கணுக்காலும் வீங்கியிருக்கும் ஸப்தஸோதன வேணுவினால் (Stethoscope) மார்பில் சோதிக்க துருத்தி சப்தங் கேட்கும். இந்த வியாதிக்குச் சூதக பாண்டு என்று சொல்லப்படும்.

2-வது, தேகத்தில் குளிர்ச்சி யதிகரிப்பதினால், இரத்தத்தில் அசுத்த சத்துக்கள் சேர்ந்து இரத்தத்தின் குணங் கெட்டுச் சூதகம் நின்று போம்.

அடையாளம்:— தேகத்தில் சோம்பல் அதிகப்படல், தேகம் வெளுத்தல், நரம்புகளில் நீல வருணமுண்டாதல், நீர் அதிகமாய்ப் போதல், இரத்தம் வெளிப்பட்டால் தெளிவாயிருத்தல், கபஞ் சேர்ந்த மலம், பசி மந்தம்; நித்திரைக்குப் பின் தேகங் கனமாய்த் தோற்றல் முதலியவைகளாம்.

3-வது, கருப்பஸாய நரம்புகளின் வாய் அடைபட்டுப் போவதனாலும் சூதகம் நிற்கும். இதன் காரணங்களாவன:

a. கருப்பையில் சூடதிகரித்து வறட்சியுண்டாகி நரம்புகளின் வாய் அடைப்பட்டுப் போம்.

அடையாளம்:— கருப்பஸாயத்தில் வறட்சியும் எரிவும் உண்டாகியிருக்கும்.

b. கருப்பஸாயத்தில் குளர்ச்சி அதிகப்படுவதனாலும் மேற்படி நரம்புகள் சுருங்கிச் சூதகம் நிற்கும்.

குறிகள்:— தேகம் வெளுத்தல், நாடி நடை மந்தப்படுதல், நரம்புகளில் குளிர்ச்சி யதிகமாய்த் தோற்றல் முதலியவைகளாம்.

c. கருப்பையில் வறட்சி யதிகரிப்பதினாலும் சூதகம் நிற்கும்.

குறிகள்:— தேகம் இளைத்தல், மர்மஸ்தானம், கருப்பை ஸ்தானம் இவை வரட்சியாயிருத்தல், நாடிகள் வெறுமையாய்த் தோற்றல் முதலியவைகளே.

4-வது, கருப்பையில் வீக்கம் உண்டாவதனாலும் சூதகபந்தமுண்டாகும்.

காரணம், கருப்பையில் அடிபடுவதனாலும், அகாலப் பிரசவத்தினாலும், கஷ்டப் பிரசவத்தினாலும், அதிகமான ஆண்களுடன் உடலுறவினாலும், கன்னி திரை கிழிந்து போவதனாலும், வீக்கம் உண்டாகும். இக்காரணங்களன்றிக் கருப்பையில் அசுத்த உதிரம், பித்தநீர் ஆகியவை சேர்வதனாலும் வீக்கம் உண்டாகும்.

குறிகள்:— தீக்ஷண்ணியமான சுரம், நாவு கறுத்தல், தலைநோய், (முக்கியமாய் உச்சியில் நோயுண்டாதல்) அரை, உந்தி, முதுகு, இடுப்பு, புட்டங்கள், துடைகள் ஆகிய இடங்களில் நோய், மலம், சிறுநீர் அதிகம் வருத்தத்தோடு வெளிப்படுதல், நாடி நடை, சுவாசம், இவை தீவிரமாயிருத்தல், இரைப்பையும், மூளையும் விகற்பப்படுதல் முதலியவைகளாம்.

குறிப்பு

தலையுச்சியிலும், அரையிலும் (மறைவிடத்தில்) நோயிருந்தால் கருப்பையின் முன்பக்கத்தில் வீக்கம் இருக்கிறதென்றும், இவ்வேதனையுடன் நீர் வருத்தத்தோடு இறங்கினால் கருப்பையின் முன்பக்கத்தின் மேற்புறத்தில் வீக்கம் இருக்கிறதென்றும் அறிய வேண்டியது.

திரிகஸ்தானம், புச்சம் ஆகிய இவ்விடங்களிலும், முதுகிலும் நோயிருந்தால் கருப்பையின் பின்பக்கத்தில் வீக்கமிருக்கிற தென்றும்,

2-வது தேகத்தில் இரத்தக் குறைவுண்டாவதனால் இவ்வுதிரத்திலும் குறைவுண்டாகும். இதற்குப் பல காரணங்களுண்டு. இரத்தபேதி, இரத்த வாந்தி, இரத்தக் கடுப்பு, இரத்தமூலம் முதலாகிய வியாதிகளாலும் நாள்பட்ட தொந்த வியாதிகளாலும் தேகத்தில் இரத்தக் குறைவுண்டாகும்; இப்படிக் குறைவுண்டாகவே மேன்மிச்சத்திற்கிடமில்லை; ஆகையால் சூதகமுங் காணாது, இன்னும் இக்கழிவு மூக்கினால் வெளிப்படுவதனாலும் சூதகங் காணாமல் நின்று போவதுமுண்டு.

சூதகக் கட்டின் அடையாளங்கள்

1. தேகத்தில் இரத்தக் குறை உண்டாவதனால் சூதகம் நிற்கும்.

காரணம்:— கடினமாகிய உழைப்பினாலும், அடிக்கடி பட்டினியாயிருப்பதனாலும், காலந் தவறி உணவு உண்பதினாலும், தேகத்தை இளைக்கச் செய்யும் வியாதிகளாலும், அதிக மலசலப் போக்காலும், அதிக வாந்தியினாலும், இன்னும் இரத்த வாந்தி, இரத்த மூலரோகம், பெரும்பாடு, கர்ப்பக் கிரந்தி ஆகிய இவ்வியாதிகளால் இரத்தம் அதிகமாய்ப் போவதனாலும் தேகபோஷணை குறைதல் முதலியவைகளாலும் இரத்தக் குறைவுண்டாகி இவ்வியாதியுண்டாகின்றது.

குறிகள்:— 1. முகம், கண்கள், உதடுகள், நாக்கு, வாய், ஈறு, தேகம் இவைகள் வெளுத்திருக்கும்; தீபனம் மந்தப்பட்டிருக்கும். கண் விழிகள் பெரிதாய்த் தோன்றும், அசக்தி, ஆயாசம் இவைகளும் உண்டாகும்; அற்ப முயற்சியினாலும் சோர்வு, பெருமூச்சு, மார்பு அதிரல் ஆகிய இவைகள் உண்டாகும். சிலருக்குக் கணுக்காலும் வீங்கியிருக்கும் ஸப்தஸோதன வேணுவினால் (Stethoscope) மார்பில் சோதிக்க துருத்தி சப்தங் கேட்கும். இந்த வியாதிக்குச் சூதக பாண்டு என்று சொல்லப்படும்.

2-வது, தேகத்தில் குளிர்ச்சி யதிகரிப்பதினால், இரத்தத்தில் அசுத்த சத்துக்கள் சேர்ந்து இரத்தத்தின் குணங் கெட்டுச் சூதகம் நின்று போம்.

அடையாளம்:— தேகத்தில் சோம்பல் அதிகப்படல், தேகம் வெளுத்தல், நரம்புகளில் நீல வருணமுண்டாதல், நீர் அதிகமாய்ப் போதல், இரத்தம் வெளிப்பட்டால் தெளிவாயிருத்தல், கபஞ் சேர்ந்த மலம், பசி மந்தம்; நித்திரைக்குப் பின் தேகங் கனமாய்த் தோற்றல் முதலியவைகளாம்.

3-வது, கருப்பஸாய நரம்புகளின் வாய் அடைபட்டுப் போவதனாலும் சூதகம் நிற்கும். இதன் காரணங்களாவன:

a. கருப்பையில் சூடதிகரித்து வறட்சியுண்டாகி நரம்புகளின் வாய் அடைப்பட்டுப் போம்.

அடையாளம்:— கருப்பஸாயத்தில் வறட்சியும் எரிவும் உண்டாகியிருக்கும்.

b. கருப்பஸாயத்தில் குளர்ச்சி அதிகப்படுவதனாலும் மேற்படி நரம்புகள் சுருங்கிச் சூதகம் நிற்கும்.

குறிகள்:— தேகம் வெளுத்தல், நாடி நடை மந்தப்படுதல், நரம்புகளில் குளிர்ச்சி யதிகமாய்த் தோற்றல் முதலியவைகளாம்.

c. கருப்பையில் வறட்சி யதிகரிப்பதினாலும் சூதகம் நிற்கும்.

குறிகள்:— தேகம் இளைத்தல், மர்மஸ்தானம், கருப்பை ஸ்தானம் இவை வரட்சியாயிருத்தல், நாடிகள் வெறுமையாய்த் தோற்றல் முதலியவைகளே.

4-வது, கருப்பையில் வீக்கம் உண்டாவதனாலும் சூதகபந்தமுண்டாகும்.

காரணம், கருப்பையில் அடிபடுவதனாலும், அகாலப் பிரசவத்தினாலும், கஷ்டப் பிரசவத்தினாலும், அதிகமான ஆண்களுடன் உடலுறவினாலும், கன்னி திரை கிழிந்து போவதனாலும், வீக்கம் உண்டாகும். இக்காரணங்களன்றிக் கருப்பையில் அசுத்த உதிரம், பித்தநீர் ஆகியவை சேர்வதனாலும் வீக்கம் உண்டாகும்.

குறிகள்:— தீக்ஷண்ணியமான சுரம், நாவு கறுத்தல், தலைநோய், (முக்கியமாய் உச்சியில் நோயுண்டாதல்) அரை, உந்தி, முதுகு, இடுப்பு, புட்டங்கள், துடைகள் ஆகிய இடங்களில் நோய், மலம், சிறுநீர் அதிகம் வருத்தத்தோடு வெளிப்படுதல், நாடி நடை, சுவாசம், இவை தீவிரமாயிருத்தல், இரைப்பையும், மூளையும் விகற்பப்படுதல் முதலியவைகளாம்.

குறிப்பு

தலையுச்சியிலும், அரையிலும் (மறைவிடத்தில்) நோயிருந்தால் கருப்பையின் முன்பக்கத்தில் வீக்கம் இருக்கிறதென்றும், இவ்வேதனையுடன் நீர் வருத்தத்தோடு இறங்கினால் கருப்பையின் முன்பக்கத்தின் மேற்புறத்தில் வீக்கம் இருக்கிறதென்றும் அறிய வேண்டியது.

திரிகஸ்தானம், புச்சம் ஆகிய இவ்விடங்களிலும், முதுகிலும் நோயிருந்தால் கருப்பையின் பின்பக்கத்தில் வீக்கமிருக்கிற தென்றும்,

இதனுடன் மலங்கழிகையில் அந்த நோயிருந்தால் கருப்பையின் பின்பக்கத்தின் கீழ்ப்புறத்தில் வீக்கம் இருக்கிறதென்றும் நிதானிக்க வேண்டியது.

மலம் சிறுநீர் கழிக்குங் காலங்களில் வேதனை எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அவ்வளவு அதிகம் கருப்பையிலும் வீக்கம் இருக்கிறதெனத் தெரிந்து கொள்ள வேண்டியது. அக்காலங்களில் நோய் குறையக் குறைய வீக்கமுங் குறைந்து கொண்டே வருகிறதெனவும் கண்டு கொள்ளலாம்.

பின்பக்கத்தில் புட்டங்கள் முழுவதிலும் நோயிருந்தால் கருப்பையின் இரண்டு பக்கங்களிலும் வீக்கமிருக்கிறதென நிதானிக்க வேண்டியது.

சிலவேளை, உந்தியில் அல்லது திரிகஸ்தானத்தில் நோய் ஆரம்பித்து தொடைகள், புட்டங்கள், இடுப்புச் சந்து ஆகிய இடங்களில் பரவும். இதனால் எழுந்திருக்கவும் அதிக கஷ்டமாயிருக்கும். பெரும்பாலும் உந்திக்குங்கீழ் ஆரம்பமாகிய நோய் துடைகளிலும் திரிகஸ்தானத்தில் உண்டாகிய நோய் இடுப்புச் சந்திலும் பரவும்.

இரண்டாவது கபநீர் அதிகரித்ததனாலுண்டான குளிர்ச்சியினாலும் கருப்பையில் வீக்கம் உண்டாகும்.

அடையாளம்:— இடைக்குழி ஸ்தானத்தில் நோயிருப்பதுமின்றி, அது கனத்திருக்கும்.

மூன்றாவது கெட்டியாகிய வண்டல் கருப்பையில் சேர்வதனாலும் வீக்கமுண்டாகும்.

காரணம்:— சூதகம் எரிந்து போவதினாலும், வேறு சில காரணங்களினாலும் உண்டாகும்.

குறிகள்:— கருப்பையில் பாரமாய்த் தோற்றல், நடை முதலிய அசைவுகளில் தடையுண்டாதல், வீக்கத்தின் தடிப்பு வெளிப் பக்கத்தில் நன்றாய்த் தெரிதல், தொடையில் கெண்டைச் சதையில் நோயுண்டாதல் (முக்கியம் கருப்பையின் எப்பக்கத்தில் வீக்கம் இருக்கிறதோ அப்பக்கத்துக் காலில்தான் நோயுண்டாதல்) இந்த வியாதிக்குச் சிகிச்சை உடனே செய்ய வேண்டியது; இல்லாவிட்டால் விபரீதமாய் முடியும்.

5-வது கருப்பையில் காயம், சிரங்கு முதலிய ஏதேனும் ரணமிருந்து உலர்ந்து போன நிமித்தத்தினால் அங்குள்ள நாடிகளின் வாய்களும் அவ்விரணங்களோடு முடப்பட்டுப் போவதனாலும் சூதகம் நிற்கும். இதற்குச் சிகிச்சை சாத்தியமல்ல.

6-வது கருப்பையின் வாயில் அல்லது மர்மஸ்தானத்தில் துர்மாமிசம் வளர்தல், இதனாலும் சூதகங் காணாது.

குறிகள்:— உடலுறவுக்குத் தடையாயிருப்பதுமன்றிச் சூதகங் காண வேண்டிய காலங்களில் சகிக்கக் கூடாத நோயுண்டாயிருக்கும்.

7-வது தேகம் மிகவும் அதிகமாய் ஸ்தூலிப்பதனால் கருப்பையின் வாய் அதிகமாய் நெருக்கப்பட்டிருக்கும். இக்காரணத்தினாலும் சூதகம் நிற்கும்.

8-வது கருப்பையின் வாய் மர்ம ஸ்தானத்திற்கு நேரேயிராமல் வேறு பக்கம் திரும்பி யிருப்பதனாலும் சூதகபந்தமுண்டாகும். (இதன் விவரம் மலட்டு லக்ஷணத்தில் பார்வையிடவும்.)

சூதக பந்தத்தினால் உண்டாகும் வியாதி பலவாயினும் அவைகளில் முக்கியமாவன:—

கருப்பை செயலற்று இருத்தல், கருப்பை வீக்கம், அடிவயிறு வீக்கம் முதலாகிய கருப்பை வியாதிகளும், ஜடராக்கினி குறைதல், பசியற்றுப் போதல், குன்மநோய், அதிதாக நோய், வாந்தி, குமட்டல் முதலாகிய இரைப்பையைப் பற்றின ரோகங்களும் காக்கை வலி, தலை சுழற்றல், தலை நோய், ஒருதலை நோய், அறிவு பயித்தியம், பக்ஷவாதம் முதலாகிய மூளையைச் சார்ந்த வியாதிகளும்; இருமல், க்ஷயம், காசம், இளைப்பு முதலாகிய மார்பு, புப்புசத்தைச் சார்ந்த வியாதிகளும், பாண்டுரோகம், முதுகு நோய், பிடரியிசிவு, கழுத்து நோய், சன்னிபாத சுரங்கள், கண்ரோகம், காது வியாதி, மூக்கைப் பற்றிய வியாதிகளுமேயாம்.

மலடு

மலடு என்பது கருவற்றுப் போகுதல். இது சுபாவ மலடு, அசுபாவ மலடு என இருவகைப்படும்.

இயற்கை மலடு — விருக்ஷங்களிற் சில காய் கனிகளைத் தராது வெறுமனாய் இருக்கிறது போல, சுபாவ மலடாயிருக்கிறவர்களுக்குப் புத்திர சம்பத்துண்டாகவே மாட்டாது. இதற்கு நிவர்த்தி தவிர்ப்பதே யாம்.

செயற்கை மலடு — என்பது சுக்கில சோணிதங்களில் வாதாதிகளினால் உண்டாகின்ற தோஷங்களினாலும், கருப்பை, கோசம் ஆகிய இவைகளில் உண்டாயிருக்கிற தோஷங்களினாலும் சந்ததியில்லாமற் போம். இத்தோஷங்களைப் பலவிதமாய்ப் பரீட்சித்துச் சிகிச்சை செய்ய வேண்டியது.

மேற்கண்ட குணங்கள் கணவனுக்கு உண்டாயிருந்தால் ஆண் மலடென்றும், மனைவிக்கு உண்டாயிருந்தால் பெண் மலடென்றும் பெயர்.

மலட்டுப் பொது குறிகள்

1. புருஷர்களின் விந்து தித்திப்பில்லாததும் வெந்நீரில் விட்டால், கரைந்து மிதப்பதும், அதைப் பூதக்கண்ணாடியால் பார்த்தால் உயிரில்லாக் கிருமிகள் காணப்படுதலுமாயிருந்தால், அதனால் ஒருகாலுங் கர்ப்பந் தரிக்காதென்றறிக.

இப்படியே சோணிதமும் வெந்நீரில் மிதந்தாலும், அல்லது அதிற் கரைந்தாலும், கர்ப்பந் தரிக்காதென்றறிக.

இத்தோஷத்தை உடலுறமாக்கும் மருந்துகளினால் நிவர்த்தி செய்ய வேண்டியது.

2. ஆண் பெண் இருவரின் சிறுநீரை, வெவ்வேறாய் சுரைக்கொடி அல்லது காஹூச் செடியில் 5 தினம் ஊற்றிக் கொண்டு வரவும், எந்த நீரினால் அவை பட்டுப் போகின்றனவோ அவர்களிடத்தில் தோஷமுண்டென்றறிக.

3. கொஞ்சம் மொச்சைக் கொட்டைகளை வெவ்வேறாய் மண்பாத்திரங்களிலிட்டு, ஆண் பெண் நீரைத் தனித்தனி விட்டு வருவதால், யார் நீரினால் அவை முளைக்கவில்லையோ அவர்களிடத்தில் தோஷமுண்டென வறிக.

பெண் மலட்டு குறிகள்

1. கருப்பையில், சுபாவமாய்க் குளிர்ச்சி அதிகரிப்பதால் விந்து உறைந்து, வறண்டு கருத்தரிக்காது.

குறிகள்:— மாதாந்த ருது காலத்தில் வெளியாகும் உதிரமானது தாமதமாகவும், அளவிற் குறைவாகவும்; சிவந்து, தெளிவாகவும் வெளிப்படும்; உதிரம் அளவிற் குறையினும் மறைய நாட்செல்லும். அரையில் உரோமங் குறைவாயிருக்கும்.

தேகத்தில் குளிர்ச்சியதிகரித்து அதனால் கருப்பையிற் குளிர்ச்சி யுண்டானாலுங் கருத்தரிக்காது.

குறிகள்:— மேற்கண்ட குணங்களுடன் தாகமின்மை, எரிவின்மை, சிறுநீர், மலம், கண்கள், நா, சருமம் இவைகள் கறுத்தல் அல்லது வெளுத்திருக்கலாம்.

கபநீர் மிகுதியினாலும் வாதநீர் மிகுதியினாலும் தேகத்தில் குளிர்ச்சி யதிகரிக்கும்.

a. கபநீர் மிகுதியினால் அதிகரித்த குளிர்ச்சியின் லக்ஷணம்.

சருமங் குளிர்ந்தும் தளர்ந்தும் மிருதுவாயிருத்தல், புலன்கள் குன்றல், வாய் நீரோடல், மூக்கில் தெளிந்த நீரொழுகல், சோம்பல், ஆகாரக் குறைவு, அதிக நித்திரை, கால்களில் வேர்வை, செரியாமை, புளியேப்பம், மலப்போக்கு, தேக வெளுப்பு முதலியவைகளாம்.

b. வாதநீர் மிகுதியினால், அதிகரித்த குளிர்ச்சியின் அடையாளம்.

தேகமிளைத்தல், இரத்தங்கறுத்தல், இரத்தஞ் சுண்டல், வறட்சி, வயிறுப்பல், சிறுநீர் எண்ணெயைப் போலிறங்கல், மூலரோகமுண்டாதல், கீல் நோயுண்டாதல், அதிக யோசனை, பொய்ப்பசி, சோம்பல் முதலியவைகளாம்.

2-வது கருப்பையில் சூடு அதிகரிப்பதனால் விந்துவையெரித்துக் கரித்து விடும். அதனாலுங் கருத்தரிக்காது.

குறிகள்:— மாதாந்த உதிரமானது, சூடுள்ளதாகவும், கறுத்தும், கலங்கலுமாயிருக்கும். அரையில் உரோமம் மிகுதியாயிருக்கும்.

இச்சூடு பித்தநீர் மிகுதியினாலும் அதிகரிக்கும். அதன் அடையாளங்கள்:—

தேகம் இளைத்தல், கண்கள், நா, சிறுநீர், சருமம் இவைகள் மஞ்சள் நிறமாதல்; அதிக தாகம், வாய் கசப்பு, வாயுலர்தல், கண்ணெரிவு, பார்வை மந்தம், தலை சுழற்றல், நா சுரசுரத்தல், நாசி வறளல், அரோசகம் ஓக்காளம், தீபனக் குறைவு, திமிர் முருத்தல், நாடி படபடத்திருத்தல் முதலியவைகளாம்.

3-வது கருப்பையில் வறட்சி யதிகரித்திருந்தால் விந்துவையுலர்த்தி விடும்; இதனாலும் கருத்தரிக்காது.

குறிகள்:— மாதாந்த அழுக்குக் காணாது. ஒருவேளை கண்டாலும் மிகக் குறைவாயிருக்கும். தேகத்தில் வரட்சியதிகரித்தும், தேகமெலிந்தும், துர்ப்பலப்பட்டுமிருக்கும்; மர்மஸ்தானம் சதா வறண்டிருக்கும்.

4-வது கருப்பையில் கொழுமை யதிகரிப்பதனால். கருப்பை விந்துவையிழுக்கும் சக்தி துர்ப்பலப்பட்டும், அதில் வழவழப்பு மிகுந்தும், விந்து தங்காது நழுவி விழுந்து போம். இதனாலும் கருத்தரிக்காது.

குறிகள்:— எந்நேரமும் வழவழப்பாகிய நீர் கருப்பையி லிருந்து ஒழுகிக் கொண்டேயிருக்கும். இன்னும் கருவுந்தரிக்காது. ஒருவேளை

தரித்தாலும், பெரும்பாலும் இரண்டு மூன்று மாதங்களுக் கதிகம் தங்கி இராது.

5-வது கருப்பையில் வாத தோஷஞ் சேர்வதனாலும் கருத்தரிக்காது.

குறிகள்:— கருப்பாஸயத்திலிருந்து வெளிப்படுகிற மாதாந்த உதிரமானது கறுத்திருக்கும்; தேகம் இளைத்தல், தேஜசு கெட்டுக் கறுத்தல், விடவிடவென்று நடுக்குதல், ஓய்ச்சல், பலஹீனம், அதிவெப்பம், வயிற்றுப்பிசம், பஞ்சேந்திரியங்களுக்குத் துர்ப்பலம், நித்திரை பிடியாதிருத்தல், ஒருவேளை பிதற்றல், பிரமை, அதைரியம், சகல பொருள்களிலு;ம், அதிக விருப்பம் முதலியவைகளாம்.

6-வது கருப்பையில் பித்த தோஷம் சேர்வதனாலும், கருத்தரிக்காது.

குறிகள்:— கருப்பையிலிருந்து மாதாந்தம் வெளிப்படுகிற தலைமுழுக்கு மஞ்சள் நிறமாயும், நீலநிறமாயும் இருக்கும். மலம், சிறுநீர், கண்கள், சருமம் இவைகள் மஞ்சள் வருணமாயிருக்கும்; அதிகப்பசி, தேகவெரிச்சல், தாகம் உண்டாதல் போலிருத்தல், சொற்ப நித்திரை முதலியவைகளாம்.

7-வது கருப்பையில் சிலேஷ்ம குறைபாடு சேர்வதனாலும் கருத்தரிக்காது.

குறிகள்:— கர்ப்பக் கோளறையிலிருந்து மாதாந்தம் வெளிப்ப்டுகிற உதிரம், சீழைப் போல வெளுப்பாக விழும்; மேலும் அக்கினி மந்தம், வாய் நீருறல், தாமசம், வெண்மை நிறத்துடன் தேகபாரிப்பு, தேகம் ஜில்லிடல், ஒருவேளை உடல் முழுவதும் கட்டுவிட்டுப் போவது போலிருத்தல், இரைப்பு, உப்பிசம், இருமல், மிகுந்த நித்திரை முதலியனவாம்.

8-வது தேகத்திற் கொழுப்பு மிதத்திற் கதிகமாகிக் கருப்பாஸயத்திலும் கொழுப்பு அதிகப்பட்டுக் கருத்தரிக்காது.

குறிகள்:— வயிறு அளவிற்கதிகப்பட்டு உயர்ந்திருக்கும்; அசைதல், நடத்தல் முதலிய இயக்கங்களினால் கஷ்ட சுவாசம், வயிற்றில் காற்று கொஞ்சம் அதிகரித்தாலும், மலங்கழியாது தங்கியிருந்தாலும், அதிக வருத்தமுண்டாகும்; இடைக்குழி அதிக நெருக்கமாயிருக்கும்; கருத்தரித்தாலும் அங்கே அது வளர இடமில்லாதபடியால் கொஞ்சம் பருத்தவுடன் விழுந்து போம்.

9-வது கருப்பையில் சூட்டினாலுண்டாகிய வீக்கம், கொப்புளம், கட்டி முதலியவைகள் உண்டாவதனாலும் கருத்தரிக்காது; ஏனெனில் பிண்டமானது கருப்பாஸயத்தில் விர்த்தியாகிக் கொண்டேயிருக்கும்.

இப்படி விர்த்தியாகிறதற்குக் கருப்பையின் தொழிலும் கருப்பையும் நல்ல நிலையிலிருக்க வேண்டியது.

10-வது கருப்பாஸயத்தில் அசுத்தக் காற்று உண்டாகி விந்துவையும் கருவையும் தங்கியிருக்க விடாது.

குறிகள்:— எந்நேரமும் அரை ஊதி உப்பியிருக்கும், வாயு வஸ்துக்களினால் வேதனை யதிகரிக்கும்; ஒரு வேளை கருத்தரித்தாலும் வளர்ந்து பெரிதாவதற்கு முன் விழுந்து போம்; சேர்க்கை காலத்திலே அபானத்தில் காற்றுப் பரிகிறது போல, மறைவிடத்திலும் காற்றுப் பரியும்.

11-வது கருப்பாஸயத்தின் வாயில் வீக்கம் முதலியவைகளுண்டாகிக் கருப்பையின் வாயை நெருக்கி மூடிக் கொள்ளும். இதனால் விந்துவானது கருப்பைக்குட் செல்லத் தடையுண்டாகிக் கருத்தரிக்காது.

12-வது கருப்பையின் வாய், மர்ம ஸ்தானத்தின் வாய்க்கு நேராயிராமல் பிறழ்ந்திருக்கும்; அதனால் விந்துவானது கருப்பைக்குட் செல்ல வாய்ப்பில்லாமல் கருத்தரிக்காது.

குறிகள்:— உடலுறவின் போது கருப்பாஸயத்திலே நோயுண்டாகும். மருத்துவப் பெண், தன் அங்குலியால் ஸ்பரிசிக்கக் கருப்பையின் வாய் எப்பக்கம் பிறழ்ந்திருக்கிறது என்று நன்றாய்த் தெரியும்; சிலருக்கு இதனால் வயிறு பெருத்து மலசலக்கட்டு முண்டாகும்.

13-வது கருப்பையிலும், தேகத்திலும் யாதொரு வியாதியில்லாதிருந்தும், புறச் செய்கைகளினாலும், அகச் செய்கைகளினாலும் விந்து நஷ்டமடைந்து கருத்தரிக்காமற் போம். இதற்குக் காரணம் அநேகமுண்டு. அவைகளில் முக்கியமானவைகளாவன:—

a. உடலுறவு முடிந்தவுடன் யெழுந்து நிற்குதல்; ஏனெனில், அந்நேரத்தில் கருப்பையில் விந்து தங்கியும் தங்காததுமாயிருக்கும், உடனே எழுந்து நிற்பதனால் விந்து வெளிப்பட வாய்ப்பாகிறது.

b. சேர்க்கைக்குப் பின் பெண்களுக்குக் கடினமாகிய அதிர்ச்சி சம்பவிப்பதனாலும் அல்லது கடும் பசியாயிருக்கும்படி நேரிடுவதனாலும், அல்லது அகக்கிரியை புறக்கிரியைகளினால் கருப்பாஸயத்திற்கு விபத்துண்டாவதனாலும், இந்திரியம் தங்காது வெளிப்பட்டுப் போம்.

c. மலமிளக்கி முதலியவைகளால் சத்துக்கள் அதிகமாய் வெளிப்படுவதனாலே குடல்கள் தளர்வடைந்துப் போம். அப்பொழுது கருப்பையும் அவைகளுக்கடுத்திருக்கிறபடியால், தானுந் துர்ப்பலப்பட்டு, தனக்குச் சுபாவமாயுண்டாயிருக்கிற விந்துவையிழுக்குஞ் சக்தியை இழந்து போம். இதனாலும் சுக்கிலந் தங்காது வெளிப்பட்டுப் போகும்.

d. பொருத்தமற்ற சேர்க்கையினாலும் கருத்தரிக்காது; எப்படியெனில், கருப்பாஸயத்தின் சுபாவ குணமானது, சுக்கிலத்தை யிழுத்துத் தன்னில் ஐக்கியப்படுத்திக் கொள்ளும் விருப்பமேயாம்; ஆகையால், சேர்க்கையான ஒவ்வொரு தடவையிலும் கருப்பைக்கு வெளிப்பக்கமே சலனம் உண்டாகும், அப்படி யடிக்கடி யுண்டாவதனால் முன்தங்கிய கருவிற்கு அசைவுண்டாகி அங்கு தங்காது விழுந்து போம்.

e. அதிகுளிர்ச்சியாகிய நீரில் அடிக்கடித் தங்கியிருக்கும்படி நேரிடுவதனாலும் அல்லது அந்த சலத்தில் மிதத்திற்கதிகமாய் குளியல்கள் செய்வதனாலும் கருப்பை மெதுவாகித் துவண்டு கருவை ஏந்திக் கொள்ளுஞ் சக்தியை யிழந்துவிடும்; இதனாலும் கருப்பம் நழுவி விழுந்து போம்.

f. அளவிற்கதிகமாகிய கோபம், கவலை, சந்தோஷம் முதலியவைகள், சிறுபான்மை கர்ப்பம் அழிவதற்கும், மலடாயிருப்பதற்குங் காரணமாம்.

ஆனால் திடீரென உண்டாகிய அதிக பயத்தினால் கர்ப்பம் அழிந்து விழுந்து விடும். இதனைப் பேய் அறைந்து விட்டதென்று சொல்வது பெண்டுகள் வழக்கம்.

14-வது சூதகபந்தத்தினாலும் கருத்தரிக்காது.

இன்னும் தேகத்தில் உண்டாகும் வியாதிகளில் எந்தெந்த வியாதிகளினால் கருப்பை துர்ப்பலப்படுமோ அந்த வியாதிகளினாலும், கருப்பையைப் பற்றிய வேறு சில வியாதிகளினாலுங் கருத்தரிக்காமற் போம். அவைகளில் முக்கியமானவைகளான:—

பெரும்பாடு, பொய்ச் சூதகம் அல்லது மேக வியாதி, கருப்பை ஸ்தம்பித்தல், கருப்பை கழம்தல் முதலான வியாதிகளே.

இவைகளின் காரணம், குறிகள் முதலாகியவைகள் மிகவும் விரிவானதாகையால் நமது யூநாநி வைத்திய சிகிச்சா போதினியில் பார்வையிடவும்; ஆனால் இவற்றுள் முக்கியமாய்ச் சிலவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானபடியால் இவ்விடம் சுருக்கமாய்ச் சொல்வோம்.

பெரும்பாடு

உதிரமானது அளவிலும், காலத்திலும் அதிகமாயிருப்பதற்குப் பெரும்பாடென்று பெயர்.

சூதக பந்தத்தினால் அநேக வியாதிகளுண்டாகித் தேகம் அபாயத்திற்குள்ளாவது போலவே, பெரும்பாட்டினாலும் அனேக வியாதிகளுண்டாகித் தேகம் அபாயத்திற்குள்ளாகும். மேலும் அது அனேக ரோகங்களுக்கு ஓர் அறிகுறி.

காரணங்கள்:— கண்டமாலை, மூத்திரக் குண்டிக்காய், ரோகம், பீலிகரோகம், நாள்பட பால் சுரப்பதனால் காணுகிற பாண்டு இவைகளால் பிறக்கிற இரத்தக் குறைபாடு, சினைப்பைக்கும் கருப்பைக்கும் அதிக ரத்தம் ஏறுதல், சூதகம் வெளிப்படப் போகிற காலங்களில் கருப்பை அழலை கொள்ளல், அதிக உடலுறவு, புற்று, கட்டி ஆகிய இவைகளே; அழி கர்ப்பத்தில் இரத்தம் முதல் காணுமென்றும் அறிந்திருக்க வேண்டியது.

பொதுவான குறிகள்:— பசி மந்தப்படுதல், கருத்தரிக்காமற் போதல், ஒவ்வொரு அவயவங்களின் தொழில் குன்றல், பாதம் வீங்கியிருத்தல், முகநிறம் மாறுதல் முதலாகியவைகளாம். கருக்குழியிலிருந்து இரத்தம் அதிகமாய்ப் போக இன்னும் பல காரணங்களுண்டு அவையாவன:—

a) தேகத்தில் இரத்தம் அதிகப்படுவதனால் சுபாவமாகவே சூதகத்தின் அளவில் அதிகமாய்க் காணும்.

குறிகள்:— உதிரம் அளவில் அதிகமாய்க் காணினும் யாதொரு குறைவின்றித் தேகம் புஷ்டியாகவேயிருத்தல், தேக வருணத்தில், தேக பலத்திலும் யாதொரு விகற்பமில்லாதிருத்தல் முதலியவைகளாம்.

தேகவருணமும், தேகபலமும் வித்தியாசப்பட்டாலொழிய இவ்வுதிரத்தை நிறுத்த முயற்சி செய்யலாகாது. ஏனெனில் தேகசுபாவமே அதை வெளிப்படுத்துகிறபடியால் அதற்கு மாறாகத் தடை செய்வதனால் ஏதேனும் வேறு வியாதிக்கு இடமுண்டாகும்.

b) அதிஉஷ்ண தேசத்திலும், அதிஉஷ்ண காலத்திலும், அதிஉஷ்ண வஸ்துக்களினாலும், இரத்தத்தில் உஷ்ணம் மிகுதியினால் இரத்தம் செல்லும் வழிகள் விரிந்தும் இரத்தத்தைத் தாங்குஞ் சக்தி வலுவிழந்து போகிறபடியாலும் இரத்தம் அளவிற்கதிகமாகும்.

குறிகள்:— இரத்தங் கொஞ்சமும் மஞ்சள் வருணமாயிருத்தல், எரிமந்தம், இரத்தம் நீற்றிருத்தல், சீக்கிரம் வெளிப்படுதல், தேகம் மஞ்சணித்துத் துர்ப்பலப்படுதல் முதலியவைகளாம்.

c) இரத்தத்தில் நீர்ச்சத்து அதிகப்படுவதினாலும் அதன் பதங்கெட்டுத் தெளிந்தும், நரம்புகளின் வாய் தளர்ந்தும் அளவிலதிகங் காணும்.

குறிகள்:— இரத்தம் வெளுத்துத் தெளிவாயிருத்தலும் கபாதிக்கத்தின் லட்சணங்களுண்டாயிருத்தலுமாம்.

d) சூட்டினாலுண்டாகிய வாயுவினாலும் நரம்புகளின் வாய்கள் விரிந்து உதிரம் அளவிலதிகமாய்க் காணும்.

குறிகள்:— உதிரம் வெண்மையாய், அல்லது பசுமை கலந்த வெண்மையாயிருத்தலும், வாதாதிக்கத்தின் லட்சணங்களுண்டாயிருத்தலுமாம்.

e) கருப்பையில் * (ஆர்ஸாரோகம்) உண்டாவதனாலும் கட்டி, கொப்புளங்கள் உண்டாயிருப்பதனாலும், கன்னித் திரை கிழிந்து போவதனாலும் பளுவான சுமையை உயர்த்துதல் அல்லது அதைச் சுமத்தலினாலும், அகாலப் பிரசவத்தினாலும் இவ்வியாதியுண்டாகும்.

குறிகள்:— இரத்தம் அதிகமாய்க் காண்பதுடன் நோய், எரிவந்தம், சீழ் முதலானவை யுண்டாயிருத்தல் முதலியவைகளே.

இவ்வுதிரத்தில் சுத்தமாகிய மெல்லிய வெள்ளை துணியை நனைத்து உலர்த்தினபின் அது கறுத்திருக்கில், வாதத்தினாலுண்டானதென்றும், வெளுத்திருக்கில் கபத்தினால் உண்டானதென்றும், தெரிந்து கொள்ள வேண்டியது.

இரத்தம் அளவில் அதிகமாய்க் காண்பதுடன், கைகாலில் இசிவுண்டாயிருந்தால் நுண்மையாகிய பாகங்களுக்கு விபத்துண்டாயிருக்கிறதென்று தெரிந்துடனே சிகிச்சை செய்ய வேண்டியது.

உதிரம் எத்தனை நாள் நீடித்துக் காண்கிறதோ அவ்வளவு தாமதமாகச் சுவஸ்தப்படுமென்றும், எத்தனை நாள் குறைவாய்க் காண்கிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் வியாதி குணமாக்க முடியுமென்று தெரிந்து கொள்ள வேண்டியது.

---

* குதஸ்தானத்திலிருக்கிற நாளம் இன்னும் இரத்த நரம்பு பருத்து உருண்டு கிழங்கு முளை போலக் காண்கிறதற்கு ஆர்ஸாரோகமென்று பெயர்.

இந்த வியாதி வெகுநாள் தொடர்ந்து காண்பதனால் இத்துடன் அநேக வியாதிகளும் உண்டாகிக் கொண்டேயிருக்கும். இவ்வியாதிகள் மருந்தினால் தீர்வது கஷ்டத்திலும் கஷ்டமே.

கருப்பை ஸ்தம்பித்தல்

(இத்தினா குர் றிஹம்) என்றும், Suffocation of the Mother (ஸப்போகேஷன் ஆப்தி மதெர்) என்றும் பெயர்.

காரணம்:— பெண்களுக்கு நாதக் குழலில் சோணிதம் தங்கியிருந்து விஷமித்துப் போவதனால் அல்லது விந்துவும் சோணிதமுஞ் சேர்ந்தபின், இவ்விரண்டிலொன்று அல்லது இரண்டும் கெட்டு விஷமித்துப் போவதனால் அல்லது இவைகளினின்றும் கெட்ட ஆவியுண்டாவதனால் அல்லது சூதகம் நாட்படத் தங்கியிருந்து விஷமித்துப் போவதனால் இந்த வியாதியுண்டாகும்.

குறிகள்:— இது ஆரம்பிக்கும் போது சிலருக்கு அறிவு குன்றல், கெட்ட யோசனை, தலைநோய், கண்ணிருளல், தேகவருணம் மஞ்சணித்தல் தேகவுறுப்புக்களில் அசதி அல்லது சோர்வுண்டாதல், கண்ணில் நீர்வடிதல், குதிகாலிரண்டும் துர்ப்பலப்பட்டுப் போதல் முதலியவைகளாம். இவ்வியாதி காணுந் தருணத்தில் கீழ் வயிற்றிலிருந்து இருதய ஸ்தானத்திற்கு ஏதோ செல்கிறது போலத் தோன்றி, வாய், மூக்கு இவை தம்வயமின்றி இழுக்கிறது போலிருந்து திடீரென ஸ்மரணை யில்லாமல் கீழே விழுந்து விடுவார்கள். சப்தமும், எண்ணப்படி யுண்டாகும் அசைவுகளும், இயற்கையாயுண்டாகும் கை, கால்களின் அசைவும் நின்று போம். ஆயினும், இந்த வியாதி கண்டிருக்கும் போது அறிவு முழுதும் குன்றிப் போகிறதில்லை. இவ்வியாதி சம்பவித்தவர்கள் தங்களுக்குச் சமீபத்தில் நடந்த அநேக விஷயங்களைப் பின்பு ஞாபகத்தோடு சொல்லக்கூடும். இந்த வியாதியில் வாயினால் நுரை தள்ளாது. நுரை தள்ளப்படுவதும், அறிவு முற்றிலும் குன்றிப் போவதும் காக்கை வலிக்குடைய குறிகளாம்.

இன்னும் ஹக்கீம் அரஸ்தாலீஸ் என்னும் பண்டிதர் சொல்லுகிறார்: "இவ்வியாதியில் முதல் முதல், கருப்பையானது மேலுக்குச் சுருக்கப்படுவதனால், இரைப்பை, புப்புசம் ஆகியவை நெருக்கப்பட்டு மூச்சு நின்று போகும்; அப்படியானவுடன் தேக சுபாவத் தொழிலும் நின்று, தேகஞ் சில்லிட்டுச் சவத்தைப் போலத் திடீரெனக் கீழே விழுவார்கள். மேற்கண்டபடி ஸ்மரணையில்லாதிருத்தல் முதலியனவு முண்டாயிருக்கும். இந்த நிலையில் சிலர் கொஞ்ச நாளும், சிலர் அதிக நாளுங் கிடப்பார்கள். இப்படியிருக்க, உயிர் நீங்கிற்றென்று தகனஞ் செய்து மோசம் போவாருமுண்டு.

இவ்வாறு ஏற்பட்டவர்களுக்கு உயிர் இருக்கிறதென்றும் இல்லையென்றுந் தெரிந்து கொள்ளச் சில குறிகளுண்டு. அவையாவன:—

1. நுண்மையாகிய இறகை வாய்க்குச் சமீபமாகப் பிடித்து அது அசைந்தால் உயிரிருக்கிறதென்பதும், அசையாவிட்டால் உயிரில்லை என்பதும்.

2. ஒரு கிளாசில் சலம் வார்த்து அவர்கள் மார்பில் வைத்து, தண்ணீர் அசைந்தால் உயிரிருக்கிறதென்பதும், இல்லாவிட்டால் இல்லையென்பதும்.

3. ஒரு கண்ணாடியை அவர்கள் வாய், மூக்கு என்னும் இவைகளின் சமீபமாய்ப் பிடித்து, அக்கண்ணாடியில் சலவை சலம் விட்டால் உயிரிருக்கிறதென்பதும், இல்லாவிட்டால் இல்லையென்பதுமாம்.

ஆயினும் இவை திட்டமாய் முழுவதும் நம்பத்தக்கவைகளல்ல. ஏனெனில் சிலருக்குப் புப்புசத்தின் மேற்றொழில் அக்காலங்களில் நின்றிருந்த போதிலும் உள்ளே புப்புசத்தின் தொழிலும், நாடி நடையும் நடந்துக் கொண்டிருக்கும்; இக்காரணத்தினாலே தான் மழைக் காலங்களில் ஈ, கொசு முதலிய சில ஜெந்துக்கள் அசைதல் முதலிய வெளி இயக்கங்கள் அற்றுக் கிடக்கும். ஆனால் அவைகளுடைய புப்புசங்களின் நடையும் நாடி நடையும் உள்ளே நடந்து கொண்டிருக்கிறபடியால்தான் வெயிற் காலங்களில் சூடுண்டாகி, அந்தச்சூடு, உட்சூட்டையெழுப்பி அவயவங்கள் முழுவதுஞ் செல்ல, உடனே உயிர்த்துப் பறக்கின்றன.

இக்காரணத்திற்காகத்தான், இவ்வியாதி சம்பவித்த பெண்களை இரண்டொரு நாள் நிதானித்துத் தகனஞ் செய்வதே நலமெனக் கண்டிருக்கிறது.

இவ்வியாதிக்கும், காக்கை வலிக்கும், சூதக சன்னிக்கும் சில வித்தியாசங்களுண்டு. இவைகளின் விவரங்களை நமது யூநாநி வைத்திய சிகிச்சா போதினியிற் காணலாம்.

இன்னும் அகஸ்திய மஹாமுனிவர் அருளிச் செய்த 1500ல் சொல்லியிருக்கிறபடி மலட்டு ரோகம் ஏழு விதப்படும். அவையாவன:

1—வது, கணவன் மருவும் போது அந்த ஸ்திரீக்குத் தலைநோய் காணில், கர்ப்பப்பையில் பாசு பற்றி விளக்கமற்றிருக்கும். அதனால் கர்ப்பந் தரிக்காது.

2—வது, அக்காலங்களில் பெண்களுக்குச் சர்வாங்கத்திலும் நோயுண்டாகில், கருக்குழியில் வாயு வியாபித்திருக்கும். இதனாலும் கருவுண்டாகாமற் போம்.

3—வது, அத்தருணத்தில் நெஞ்சில் வலிகாணுமாகில், மறைவிடத்தை சுருக்கித் தசை வளர்ந்திருக்கும். ஆதலால் விந்து செல்ல வழியில்லாமல் கருத்தரிக்காது.

4—வது, அச்சமயங்களில் முதுகில் நோயுண்டாகில் கர்ப்பக் கோளறையில் கிருமிகள் நிறைந்திருக்கும். அவை கருவை தின்று விடுகிறபடியால் கருத்தரிக்காது.

5—வது, அந்நேரங்களில் கண்டச் சதையில் நோயுண்டாகில் கர்ப்பப்பையில் இரத்தங் கட்டிக் கொண்டிருக்கும். விந்து நாதமும் சேர இடமில்லாமல் கருத்தரிக்காது.

6—வது, அப்பொழுது பெண்களுக்கு ஏப்பங்காணில் கர்ப்பப்பை மதர்த்துக் கொழுப்படைந்திருக்கும். அதனால் விந்து தங்காது நழுவி விழுந்து போம்; ஆகையால் கருப்பந் தரிக்காது.

7—வது யாதொரு காரணமுமின்றி விந்து கருப்பையிற் சேராமல் நஷ்டம் அடையுமாகில், பேயினாலும் பய முதலிய புறக்கிரியைகளினாலும், விபத்துண்டாகிக் கருத்தரிக்காது.

மேற்கண்டவைகளின் விசேஷ குணங்களையும், அவைகளின் சிகிச்சைகளையும், எனது பெரிய தந்தையும் ஆயுள்வேத பாஸ்கர பண்டிதருமாகிய, மகா கனம் பொருந்திய ஹக்கீம் முகம்மது சாயபு அவர்களால் இயற்றப்பட்டுள்ள "கர்ப்பக்கோள் லக்ஷணம்" என்னும் சாஸ்திரத்திற் காண்க.

அழகும் பலமுமுள்ள சந்ததியுண்டாகும் விதம்

இக்காலத்தில் நம்மவர்களுள் அநேகர் நவநாகரீகக் (New fashion) காரர்களாக யிருக்கியபடியால் நமது முன்னோர்களாகிய ஹிந்து வைத்திய சாஸ்திரிகள், யூநாநி வைத்திய சாஸ்திரிகளாகிய, அகஸ்தியர், தேரையர், தன்வந்திரி, பக்ராத், ஸொக்ராத், பூ அலி சீனா முதலிய பெரியோர்கள் உள்ளதுள்ளபடியே எடுத்துரைத்து நிரூபித்தாலும் நமது நூதன நாகரீகர்கள் அணுவளவேனும் நம்பார்கள். ஆனால் அவற்றையே ஓர் ஐரோப்பிய அமெரிக்க டாக்டர் அல்லது சாஸ்திரி சொல்வாராயின் அந்த

க்ஷணமே மனப்பூர்வமாய் முழு நம்பிக்கையோடும் ஒப்புக் கொள்கிறார்கள். அதற்குத் திருஷ்டாந்தமாக ஜீவ சக்தியைப் பற்றி (Mesmerism) நம்மவர்கள் எவ்வளவோ சாஸ்திரங்களை எழுதி வைத்திருந்தும், அவற்றைப் பழக்கப்படுத்த அநேக சுலபமான மார்க்கங்களையுண்டாக்கி வைத்தும், அப்படிப் பழகினவர்கள் அநேக வகைக் காரணங்களைக் காண்பித்தும் நம்மவர்கள் நம்பாது எல்லாம் சூதும் தந்திரமுமென்று பலவிதமாய் உதாசனித்து வந்தார்கள்; ஆனால் (Col Olcott) துரையவர்கள் அமெரிக்காவிலிருந்து இவ்விடம் வந்த போது அவர் நடவடிக்கைகளைப் பார்த்த பின்பே அவ்விஷயங்களில் நம்மவர்களுக்கு நம்பிக்கை யுண்டாயிற்று. ஆனால் நமது தேசத்து பக்கீர்கள், யோகிகள் அந்த சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்திருந்தது போல, இக்காலத்திலுள்ளவர்கள் அவ்வளவு பூரணத் தேர்ச்சியடைந்தவரென்று சொல்ல விடமில்லை.

இன்னும் இரத்த விர்த்திக்காக நண்டு பஸ்பமும், வீரியக் குறைவு, நரம்புகளின் துர்ப்பலம் ஆகிய இவைகளுக்கு நாகப்பூச்சி பஸ்பமுங் கொடுப்பது அப்பிரயோசமானதென்றும் அவை வீண் என்றும் நமது தேசத்து வைத்தியர்கள், நம் பெரியோர் அநுபவ சித்தமாய் எழுதி வைத்தவைகளை நம்பாமலேயிருந்தார்கள். ஆனால் நண்டிலும், நாகப் பூச்சியிலும் பாஸ்பரெஸ் இருக்கிறபடியால் மேற்கண்ட வியாதிகளுக்கு அவை மிக்க உபயோகமுள்ளவையென இப்பொழுது அமெரிக்கர், ஐரோப்பியர் கண்டு ஒப்புக் கொண்டு பாஸ்பரஸ் பிரயோகங்களை உபயோகிக்க ஆரம்பித்த பின், நமது ஹிந்து தேச வைத்தியர்களும் அதிக சந்தோஷமாக மிகவும் நம்பிக்கையோடும் அவ்வியாதிகளுக்கு அவற்றை யுபயோகிக்க ஆரம்பித்து விட்டார்கள். அந்த பாஸ்பரெஸ் எல்லாவிடங்களிலும் அகப்படுகிறதில்லை. ஆனால் நண்டும் நாகப்பூச்சியும் எங்கும் இலகுவாக விலை அதிக சரசமாகவும் கிடைப்பதாயிருக்கின்றன; அப்படி இருந்தும் நம்மவர்கள் முன்னர் எப்படி யிருந்தார்களென்றும், ஐரோப்பியர்கள் ஒப்புக் கொண்டபின் எப்படியிருக்கிறார்களென்றும் நன்றாய்த் தெரிய வருகிறது.

ஆக்கல், அழித்தல், காத்தல் முதலிய எல்லாச் சக்திகளும் சகல வல்லமையுள்ள கடவுளுக்கே தகும். இன்னும் ஒவ்வொரு விஷயங்களிலும் பிரதானமான சக்திகளைத் தாமே உடைத்ததாயிருக்கினும் சில சக்திகளை நமக்கும் கொடுத்திருக்கிறார். அப்படியே அழகு, பலம், நற்குணம், நற்செய்கை முதலிய விசேஷங்களைப் பெறத்தக்க சில சக்திகளை நமக்குக் கொடுத்திருக்கிறார். அதன் விவரமாவது:—

சிசுவை உற்பத்தியாக்கும் சக்தி நமக்கில்லை; எந்தெந்த உறுப்புக்களை எவ்வெவ்விதம் அமைக்க வேண்டுமோ அப்படி அமைக்கவும் நமக்குச் சக்தி இல்லை; இன்னும் சுக்கிலம் இன்னின்ன உறுப்புக்களுக்காகுமென்றும் சோணிதம் இன்னின்ன உறுப்புக்களுக்காகுமென்றும் ஏற்படுத்தவும் சக்தியில்லை.

இன்னும் சுக்கிலம் சோணிதம் ஆகிய இவைகளின் சில பாகங்கள் அளவில் அதிகமாய் விடுவதனால் சிலருக்கு ஆறு விரல்களுண்டாயிருக்கின்றன. சில பாகங்களில் அளவு குறைந்து போவதனால் ஏதேனும் உறுப்புக்கள் குறைந்து விடுவதுண்டு. இவ்விதம் நேரிடாவண்ணம் சுக்கில சோணிதம் அதிகப்படாமலும் குறையாமலு மிருக்கச் செய்ய நமக்குச் சக்தி கிடையாது.

இன்னும் சுக்கில சோணிதத்தின் பாகம் அதிகந்தடித்து அல்லது நீர்த்துப் போவதனால் கருத்தரிக்காது; ஆகையால் அதைச் சமமாக்குவது நமது சக்திக்கியன்றதன்று; இவ்விதம் மேற்கண்ட சக்திகளெல்லாம் நமக்குள் ளகப்பட்டதல்லவாயினும் இவற்றைச்சார்ந்த அனேக காரியங்களைக் கிருபா கடாட்சராகிய கடவுள் நமக்குக் கிருபை செய்திருக்கிறார். ஆகையால் அவரை முழுநம்பிக்கையோடு நம்பிக் கீழ்க்கண்டவைகளை அநுஷ்டித்து வருவதனால், லட்சணம், நற்குணம், நற்செய்கை, பலம் முதலியவைகளுள்ள சிசுவே பிறக்குமென்பதிற் சந்தேகமில்லை.

இதையனுசரித்தே பலமும் அழகுமுள்ள பிள்ளையைப் பெறும் விதத்தைக் குறித்து நமது சாஸ்திரிகளும் தக்கபடி விவரமாய் எழுதி வைத்திருக்கிறார்கள். அதாவது பெண்கள் மாதாந்த குளியலுக்குப் பின்பும்; கர்ப்பவதியாய் இருக்குங் காலங்களிலும் மனைவி கணவன் இருவரும் உடலுறவு காலங்களிலும் மனம் எண்ணம் ஆகியவைகள் பரிசுத்தமாக வைத்தவர்களாயும், தேவ பயபக்தியுள்ளவர்களாய்க் கடவுளிடத்தில் நல்ல சந்ததியைக் கொடுத்தருளும்படி பிரார்த்திக்கிறவர்களாயுமிருக்க வேண்டும்; அப்படியிருப்பதனால் நல்ல அழகும், வல்லமையும், சன்மார்க்கமுமான சந்ததி யுண்டாகும்; அப்படிக்கில்லாமல் கெட்ட எண்ணமுள்ள வர்களாயும் விகார ரூப முதலியவைகளைச் சிந்தித்தவர்களாயு மிருப்பதால் அவர்களெண்ணப்படி துஷ்டத்தனமும் குருபமுமுள்ள சந்ததியேயுண்டாகும்.

இச்செய்தியை நமது நூதன நாகரீகர்கள் சில காலத்திற்கு வீண் என்றும் நம்பத் தக்கதன்றென்றும் எண்ணியிருந்தாலும்

அமெரிக்காவிலுள்ள சாஸ்திரிகளின் பிரசங்கத்தைக் கேட்டு இப்பொழுது அது வீணன்று என்றும் அதிக உண்மையென்றும் குதூகலிப்புடன் ஒப்புக் கொள்வார்கள்.

இதன் உண்மையைப் பற்றி அமெரிக்கா தேசத்தில் டூரி என்னும் பட்டணத்தில் பூதோடட்டஸ் துரையவர்கள் பெண்களின் சங்கத்தில் ஒரு பிரசங்கம் செய்தார்; அதை மகர்ஷி காசினாத் பண்டிதர் ஹிந்துஸ்தானி பேப்பரில் எழுதினதின் கருத்தைப் பின்வருமாறு எழுதுவாம்.

1. பெண்கள் கருப்பவதிகளாவதற்கு முன் களங்கமற்ற மனதோடு தம் புருஷர்களுடைய முக வடிவையல்லது தங்களுடைய ரூபத்தை மனதில் அமைத்துத் தம்முடைய சந்ததியும் இப்படியே யுண்டாக வேண்டுமெனக் கடவுளைத் தியானித்தவர்களாயிருக்க வேண்டும்.

மேற்கண்டவருடைய அபிப்பிராயப்படியே நம் முன்னோர்களும் விவரமாக எழுதி வைத்திருக்கிறார்கள்.

இன்னும் மாதாந்தர தீட்டு சுத்தியானபின் பெண்களின் பார்வை எதன்மேல் விழுகிறதோ அந்த விதமே புத்திர சந்தானமும் உண்டாகும். ஆகையினாலேதான் நம்மவர்களுள் சாதாரணமானவர்களும், பெண்கள் ஸ்நானம் செய்தவுடன் கண்ணாடியில் தன் முகத்தை அல்லது அழகிய குழந்தைகளின் முகத்தைப் பார்க்க வேண்டுமெனச் சொல்லுகிறார்கள்.

இதை அனுசரித்தே மகம்மதியர்கள் சொல்லுகிறார்கள். ஸ்திரீகள் ஸ்நானத்திற்குப் பின் தன்னாயகனோடு (முஸ்கபர்) செய்ய வேண்டும், அதாவது கைகளோடு கைகளைச் சேர்த்துப் பிடிக்க வேண்டும். பின்பு ஒருவரை ஒருவர் நன்றாய் நோக்கி (அஸ்ஸலாமு அலைக்கும்) அதாவது மங்களகரமுண்டாகவென ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொள்ள வேண்டும். ஆனால், இவ்விந்துதேச மகம்மதியர்களுள் பெரும்பாலார் அப்படிச் செய்கிறதேயில்லை. அரபி, காபூல் தேசத்தார்கள் மத விஷயங்களை அவசியம் அனுசரித்தே வருகிறார்கள்.

அப்படியே ஹிந்து சாஸ்திரிகள் சொல்லுகிறதாவது ஹிந்து பெண்கள் தீட்டு நீங்கி குளித்த பின்பு டாகர்ஜீயை ஸ்தோத்திரத்திரஞ் செய்து அவரைத் தியானிக்க வேண்டும்.

மிகவும் அருமையானதும் சிறந்ததுமான "புத்திர சந்தான விருத்தி" என்னும் கிரந்த கர்த்தாவாகிய டாக்டர் ஸையதுகுலாம் ஹஸேன் சாயபு

சொல்லுகிறதாவது, என்னுடைய சினேகிதராகிய கோவிந்த ஜீயூன் பண்டிதரவர்கள் சொல்லுகிறார். ஹிந்துக்களில் பெரும்பாலார் இவ்விதியை அனுசரித்து நடக்கிறதில்லை. ஆனால், மத்ராஜில்லா கோகிலத்தில் உள்ள பிராமணர்கள் இவ்விதியை தப்பாது அனுஷ்டித்து வருகிறார்கள். ஆகையினால், அவர்கள் அதிக சவுந்தரியமுள்ளவர்களாகவும் பலசாலிகளாகவும் ஆகிறார்கள். இதற்கு அத்தாட்சியாகப் பின்வருகிற சரித்திரத்தையும் சொல்கிறார்.

முற்காலத்தில் வயது சென்ற கிழவன் ஒருவன் கல்யாணம் செய்து கொண்டான். ஆனால், அவனுக்குத் தாது நஷ்டப்பட்டு வீரிய விர்த்தி இல்லையெனப் பரீட்சையினால் தெரிய வந்தது. பின்பு அதற்கு மீன் லேகியம் செய்து கொடுக்கப்பட்டுச் சாப்பிட, இரத்தம் ஊறி, வீரிய விர்த்தி உண்டாகி விட்டது. பின்னர் அவன் பெண்சாதியும் கருப்பவதியாகி வழக்கப்படி பத்தாம் மாதம் ஆண் பிள்ளை ஒன்று பெற்றாள்; ஆனால், அப்பிள்ளையனாது அயல் வீட்டிலிருந்த ஒரு வாலிபனைப் போல ரூபமுள்ளதாயிருந்தது. அப்பிள்ளைக்கு மூன்று நான்கு வயதான பின் வெளியில் வந்து விளையாடவும் அயல் வீட்டுக்கு வரவும் தலைப்பட்டது. அயல் வீட்டானாகிய அந்த வாலிபன் அந்தக் குழந்தையைப் பறித்துக் கொள்ள உத்தேசித்து, அப்பிள்ளைக்குப் பலவித தின்பண்டம் முதலியவைகளைக் கொடுத்துத் தன்னை விரும்பும்படி செய்து கொண்டு, அந்தப் பிள்ளை தன்னுடையதென வழக்கிட, நியாயாதிபதியும், புருஷன் பெண்சாதி இருவரும் வாலிபராய் இருக்கிறபடியாலும், அப்பிள்ளையும் அவ்வாலிபனும் உருவத்தில் ஒத்திருக்கின்றபடியாலும், அந்தப் பிள்ளையும் அவர்களிடத்திலேயே அதிகம் பிரியமாயிருக்கிறபடியாலும், பிள்ளையைப் பெற்றவன் கிழவனாய் இருக்கிறவன் அவன் தாது நஷ்டம் அடைந்திருந்தான் என்று தெரியவந்தபடியாலும், தன் பிள்ளையென அவன் சொல்வதொழிய வேறு தகுந்த சாட்சியும் இல்லாதபடியினாலும் அந்த வாலிபனுடைய பிள்ளையென்றே தீர்மானித்தார்.

ஆனால், அந்தக் கிழவன் முன்னர் தனக்கு வீரிய விருத்தி இல்லாதிருந்தது வாஸ்தவமென்றும், பின்பு மீன் லேகியம் சாப்பிட்டு சவுக்கியமடைந்தது உண்மை என்றும், மிகவும் பரிதாபமாய்ச் சொன்னான். அப்பால் அவன் பெண்சாதியை விசாரித்தபோது, அவள், தான் தீட்டு நீங்கி ஸ்நானஞ் செய்து மீளும்போது முதலில் தன் கண்ணுக்கு அந்த அயலான் எதிர்பட்டது மாத்திரமுண்டு. அதுவன்றி வேறு யாதும் அறியேன் என்று சொன்னாள். இதைக் கேட்ட நியாயாதிபதி சாஸ்திரப் பழக்கமுள்ளவராகையால், அந்தச் சிறுவனை

விரைவாய் ஓடச் செய்து அவன் வேர்வையை முகர, அது மீன் நாற்றமாயிருந்தபடியால் கிழவனின் சொந்தப் பிள்ளை என்றே தீர்மானித்தார்.

அந்த அமெரிக்கா தேசத்துச் சாஸ்திரி சொல்லுகிறார். பைபிளில் ஆதியாகமம் 30-வது அதிகாரம் 37 &C வாக்கியங்கள்: — பின்பு யாக்கூபு பச்சையாயிருக்கிற புன்னை, வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் கொம்புகளை வெட்டி, இடை இடையே வெண்மை தோன்றும்படி, பட்டையை உரித்து, தான் உரித்த கொம்புகளை ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும் கால்வாய்களிலும் தொட்டிகளிலும் ஆடுகளுக்கு எதிராகப் போட்டு வைப்பார்; ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும்போது சஞ்சரிப்பதுண்டு. ஆடுகள் அந்தக் கொம்புகளுக்கு முன்பாகச் சேர்ந்தபடியால், அவைகள் கலப்பு நிறமுள்ளதும் புள்ளி உள்ளதும் வரியுள்ளதுமான குட்டிகளைப் போட்டன. பலத்த ஆடுகள் சஞ்சரிக்கும்போது அந்தக் கொம்புகளுக்கு எதிரே சஞ்சரிக்கும்படி யாக்கூபு அவைகளை அந்த ஆடுகளின் கண்களுக்கு முன்பாகக் கால்வாய்களில் போட்டு வைப்பார். இதனால் பலமான குட்டிகளைப் போட்டன.

அமெரிக்கா தேசத்து அந்தச் சாஸ்திரியானவர் இப்பொழுது இவ்வாறு சொன்னாலும் இவ்விதி பண்டைக் காலமாய் அரபு, இந்து முதலிய தேசங்களில் நடந்து வருகிறதாகக் காணப்படுகிறது; அதாவது குதிரைகள் சஞ்சரிக்கும்போது அழகும், நல்ல வருணமும், நல்ல பலம் உள்ள வேறொரு குதிரையை அவற்றிற்கு எதிரில் நிறுத்தி வைக்கிறார்கள். அவ்வகைச் சேர்க்கையால் உண்டாகும் குட்டியும் எதிரில் இருந்த குதிரையைப் போலவே பெரும்பாலும் பிறக்கின்றது.

நமது முன்னோர்களின் கிரந்தங்களில் மிகவும் விவரமாய் எழுதியிருக்கிறதாவது: உடலுறவு காலங்களில் ஆண், பெண் இருவரின் எண்ணமும் வடிவமும் எவ்விதமோ அவ்விதமே அப்பொழுது தரிக்கும் சிசுவும் அமைகிறது. ஆண் பெண்களுக்கு வஸ்திரங்கள் அசுத்தமானவைகளாகவும், விசனம், பயங்கரம், மனக் கலக்கம், கெட்ட எண்ணம் முதலியவைகள் உண்டாயிருந்தால் அந்தச் சிசுவும் அவலக்ஷணமுள்ளதாகவும், விசனம், விகார குணமுடையதாகவும் இருக்கும்; ஆகையால், அக்காலங்களில் ஸ்திரீ புருஷர்கள் இருவரும் தம்மாலியன்ற வரைக்கும் நல்ல ஆடைகள் தரித்தவர்களாகவும் பரிசுத்தமான எண்ணத்தோடு தேவ பக்தியுள்ளவர்களாகவும், வாசனை முதலிய சுகந்தமணிந்தவர்களாகவும் இருக்க வேண்டும்; இப்படியிருப்பதனால் லக்ஷணம், நன்னடக்கை, புத்தி பலமுடைய குழந்தைகளுண்டாகும்.

பாரதத்திலே திருதராஷ்டிரனும் பாண்டுவும் முறையே குருடனாகவும் வெண்ணிறமுடையவனாகவும் பிறந்தமைக்குக் காரணம், அக்காலத்தில் தாய் கூச்சமுற்றுக் கண்ணை மூடிக் கொண்டதும், அச்சத்தால் மனம் வேறுபட்டு உடல் வெண்மை அடைந்ததும் ஆகிய இரண்டும் முறையே கூறப்பட்டிருத்தலுங் காண்க.

(ஸியாவுல் அப்ஸார்) என்னும் கிரந்த கர்த்தாவனவர் தன்னுடைய கிரந்தத்தில் எழுதுகிறார். ஆண், பெண் இருவரின் உடலுறவுக் காலங்களிலுண்டாகும் கெட்ட சிந்தை, நல்ல சிந்தையின் குணம் அப்பொழுது தரிக்கும் கருவையும் சார்கிறதெனப் பின்வரும் காரணங்களினால் நிரூபிக்கிறார். அவையாவன:

1. துருக்க ஸ்தானிலுள்ளவரும் மகாத்துமாவுமான ஜமாலுந்தீன் சாகிபு சொல்லுகிறார்: ஓர் பெண்ணுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதன் தலை மனுஷத் தலையாயும், மற்றைத் தேகம் பாம்பின் தேகமாயுமிருந்தது. ஆனால், எந்நேரமும் அது ஓர் பள்ளத்திலிருக்கிறதும், வேண்டிய காலங்களில் தன் தாயிடம் வந்து பால் குடித்துவிட்டு மறுபடியும் அப்பள்ளத்தில் போய் வசிக்கிறதுமாய் இருந்தது. அது துஷ்ட ஜந்துவின் இனத்தில் சேர்ந்ததாகையால் அதனால் கெடுதி நேரிடும் என்பதும் திண்ணம். ஆகையால் மார்க்க விதிப்படி அது கொல்லப்பட்டது. அக்காலத்தில் உள்ள அறிவாளிகள் அப்பிள்ளை பிறந்த காரணத்தை அறிய விசாரித்தபோது, அப்பிள்ளையின் தாயானவள் சொன்னதாவது:— உடலுறவின்போது ஒரு பாம்பைப் பார்த்து, தான் பயந்து, திடுக்கமுற்று அக்கால முழுவதும் பயம், தன் மனதை விட்டகலாது அப்பாம்பின் ஞாபகமே தன் மனதில் குடி கொண்டிருந்தது என்பதே.

மகா பெருமை தங்கிய இமாம் புக்ருந்தீன் ராஜி சாகிப் அவர்களுடைய தந்தையானவர் அவலக்ஷணமான ரூபமுள்ளவராயிருந்தார்; ஆனால், தம் மனைவியோடு வாழும் காலத்தில் தம் இருதயத்தில் வேறெண்ணங்கள் உண்டாகாமல் பரிசுத்தமான எண்ணத்தோடும், லக்ஷணமுள்ள பிள்ளையைத் தந்தருளும்படி கடவுளிடத்தில் ஒரே நாட்டத்தைச் செலுத்தினவராகவும் இருந்தபடியால் மேற்சொன்ன மஹான் அக்காலங்களிலுள்ள யாவரிலும் அதிக சவுந்தரியமுள்ளவராய்ப் பிறந்தார். இவ்விதம் தம் பிள்ளை அதிக சுந்தரமுள்ளதாய்ப் பிறந்த காரணத்தைத் தாம் பிரசித்தப்படுத்தியும், அக்காலத்தில் உள்ளவர்கள் இந்த நுண்ணிய கருத்தை அறியாதபடியால் அவர் பேச்சை நம்பவில்லை. ஆனால், உண்மையில் அக்காலத்தில் தன் மனதை நிஷ்களங்கமாய் வைத்திருந்ததுவே காரணம்.

2. பூதேடாட்ஸ் துரை சொல்லுகிறார்: பெண்கள் கருப்பவதியான ஆரம்ப முதல் சிசு ஜனனமாகிற வரையில் தன்னுடைய இருதயத்தை அலைய விடாமல் சமாதானமாய் வைத்திருக்க வேண்டும். கெட்ட எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல் பரிசுத்தமான எண்ணமுள்ளவளாயிருக்க வேண்டும். இப்படிச் செய்வதனால் அழகு, நல்ல ரூபம், நற் செய்கை, பலம், நன்னடத்தை உள்ள குழந்தையே பிறக்கும் என எனக்கு நிச்சயப்படுகிறது.

இக்கருத்தை யநுசரித்தே நம் பண்டிதர்களினால் சொல்லப்பட்டிருக்கிறதாவது: கருப்பவதிகளுக்குத் திடீரென ஏதேனும் ஓர் பெரிய பயங்கரம், சந்தோஷம் உண்டானால் கரு சிதைவுறும் அல்லது கருப்பத்தில் உள்ள குழந்தைக்கு அதன் குணம் சாரும் என்பதே. இவற்றிற்கு சான்றுகள் பலவுள. ஆயினும் சிலவற்றை மாத்திரம் இவ்விடம் கூறுவோம்.

a. ஓர் பெண்ணுக்கு 11 பெண் பிள்ளைகள் சவுக்கியமுள்ளவர்களாகவும், நல்ல புத்திமான்களாகவும் பிறந்தார்கள். 12ஆம் பிள்ளையானது நலிவுடையதாகவும், கரடியின் இயற்கைக் குணமுள்ளதாகவும் இருந்தது. இதற்குக் காரணத்தை நிச்சயிக்கும் போது தெரிய வந்ததாவது. 12ஆம் குழந்தை உண்டாயிருந்த மூன்றாம் மாதத்தில் அவள் ஓர் கரடிக் குட்டியினால் பயமுறுத்தப்பட்டு அப்பயமே அவள் மனதில் குடி கொண்டிருந்ததென்பதே.

b. யூஸ்டின் என்னும் பட்டணத்தில் ஓர் கருப்பவதி கிளிப் பிள்ளையினால் பயமுறுத்தப்பட்டு அந்தப் பயமே அவள் மனதில் குடி கொண்டிருந்தது. அந்தப் பயனாக அவளுக்குப் பிறந்த குழந்தையின் பேச்சு, நடவடிக்கைகள் யாவும் கிளிப் பிள்ளையின் நடவடிக்கை, பேச்சு ஆகிய இவைகளை ஒத்திருந்தன.

c. நான்கு மாதம் சென்ற ஓர் கர்ப்பவதியானவள் ஓர் சிறுத்தைக் குட்டியின் தலையைப் பலமாய் அமுத்தி நசுக்கி விட்டு, அதைப் பற்றி மிகப் பரிதாபப்பட்டாள். அதன் பின்பு ஆறு மாதம் சென்று ஓர் ஆண் மகவைப் பெற்றாள். அதன் தலையானது முன் நசுக்கப்பட்ட சிறுத்தைக் குட்டியின் தலையைப் போல முன்னிற்குப் பிதுங்கி நசுக்கப்பட்டதாய் இருந்தது. இதற்குக் காரணம் முன் நடந்ததுவே.

d. 2 மாதத்துக் கருப்பவதி ஒருத்தி விபரீதமான ஓர் குழந்தையைக் கவனமாய்ப் பார்த்து ஆச்சரியப்பட்டு அவள் மனதில் உண்டானதாவது. என் வயிற்றில் இருக்கிற குழந்தையும் ஒரு வேளை இப்படித் தானாகுமோ எனப் பயமுற்றவளானாள். ஈற்றில் முன் கண்ட

குழந்தையைப் போலவே ஓர் கையும் ஓர் காலும் இல்லாத குழந்தையே பிறந்தது.

இவ்விதம் கருப்பவதிகளானவர்கள், மிருகம், ஊர்வன, பறவை முதலியவைகளால் பயமுறுத்தப்பட்டு அக்காலங்களில் கருப்பத்தில் இருந்த சிசுக்கள் அனேகமாய் அம்மிருகங்களின் ரூபம், நடவடிக்கை முதலியவைகளை ஒத்திருந்தன. இவையெல்லாம் கருப்பவதிகளுக்கு நேரிடும் மன வியப்பின் காரியமே ஒழிய வேறொன்றும் அல்லவென்பதற்கு இன்னும் உண்மைச் சம்பவங்கள் உண்டு.

இன்னும் இருட்டில் கருப்பவதியாய், பிள்ளை பிறக்கிற வரையில் தன் புருஷனுடைய ஞாபகம் இல்லாதிருந்தால் அப்பிள்ளையானது தாயைப் போலவே இருக்கும்.

பெண்சாதி சதா காலமும், தன் கணவனுடைய ஞாபகமாகவும், தன் கணவன் மேல் அதிக அன்புள்ள வளாகவுமிருந்தால் பிள்ளையானது தகப்பனைப்போலவே இருக்கும்.

தன் கணவனுடைய ஞாபகமும் தன் ஞாபகமும் சமமாய் இருந்தால் தந்தை, தாய் இருவருடைய அங்க அடையாளம் உள்ளதாயிருக்கும்.

உறவின் முறையார், வைத்தியர்கள், உபாத்தியாயர், குரு ஆகிய இவர்களின் மரியாதை, கருப்பவதியின் மனதில் அதிகமாயிருந்தால் அவர்களைப் போன்ற குழந்தையே பிறக்கும்.

இவையன்றி, சாப்பிடுகிற வஸ்துக்களில், சாராயம், திராக்ஷி முதலிய எந்தத் தின்பண்டத்திலே கருப்பவதிக்கு அதிக இஷ்டமுண்டாகிறதோ அந்த வஸ்துக்களின் குணமும் குழந்தைக்கு உண்டாயிருக்கிறது. ஆனால், சில டாக்டர்கள் இதைப் பற்றி வாதிக்கிறார்கள். அவர்கள் ஜீவ சக்தி, மனம் இவைகளின் பலத்தைப் பற்றித் தெரியாதவர்கள்.

2. மேற்படி பூதோடட்ஸ் துரையவர்கள் மேற்கண்ட விஷயங்களை எடுத்துக் காண்பித்துக் கருப்ப ஸ்திரீயானவள் பரிசுத்தமான எண்ணம், நல்ல வஸ்திரம், பரிசுத்தமான வீடு, மனமகிழ்ச்சி முதலிவைகள் உள்ளவர்களாயிருக்க வேண்டியது, பரிசுத்தமான ஆகாரங்களைச் சாப்பிட வேண்டியது, நல்ல தோட்டம் முதலிய உல்லாசமான இடங்களில் உலாவ வேண்டியது, குரோதம், பகை, பொறாமை முதலியவைகளுக்குச் சற்றும் இடம் கொடுக்கலாகாது, கெட்ட வார்த்தைகளை ஒருக்காலும் உபயோகிக்கலாகாதெனக் கண்டிப்பாய்ச் சொல்லுகிறார். இப்படியே நம்மவர்களும் மிகவும் கண்டிப்பாய் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் நம் முன்னோர்கள் எழுதியிருக்கிறதாவது. கருப்பவதிகளுக்கு ராஜாவைப் பார்க்க வேண்டுமென்கிற பிரியம் அதிகப்பட, தன் பிள்ளையானது அதிர்ஷ்டசாலியாகவும், செல்வமுள்ளவனாகவும் இருப்பான்.

உயர்ந்த பட்டு வஸ்திரங்கள், முத்து, மாணிக்கம் முதலியவைகளை அணிந்து கொள்ளும் விருப்பம் அதிகமாயின் பிள்ளைக்கும் இவ்விச்சை அதிகமாகும்.

சன்மார்க்கர்கள், நல்லோர்கள் ஆகியவர்களைத் தரிசிக்கும் இஷ்டம் அதிகமாயின் குழந்தையும் சன்மார்க்க நடையுள்ளதாயிருக்கும்.

ஹஜ்ஜு செய்யும் இஷ்டம் அதிகமாயின் பிள்ளை ஹாஜியாவான் (ஸ்தல யாத்திரைப் பிரியம் அதிகப்படின் அப்பிள்ளை யாத்திரியாவான்).

புலி, கழுதைப் புலி முதலிய துஷ்ட மிருகங்களின் ஞாபகம் அதிகமாயிருக்கில், பிள்ளை துஷ்ட நடவடிக்கை உள்ளவனாகவும், பிறருக்குத் துன்பம் உண்டாக்குகிறவனா கவுமிருப்பான்.

கடற் பன்றிக் கறியில் இச்சை அதிகமாயிருந்தால், பிள்ளை அதிகமாய்த் தூங்குகிறவனாகவும், அதிக மறதி உள்ளவனாகவும் இருப்பான்.

சுருக்கிச் சொல்லில், கருப்பவதிக்கு ஒரு பொருளின் மீது அதிகப் பிரியமுண்டாகி அதுவே மனதில் குடி கொண்டு விட்டால், அக்காலத்தில் கருப்பத்தில் இருக்கிற பிள்ளைகளிலும் அந்தப் பொருள்களின் ரூபம், குணம், நடவடிக்கை முதலியவைகள் பெரும்பாலும் உண்டாகியிருக்கும்.

யூநானி வைத்திய பண்டிதர்கள் சொல்லுகிறார்கள்: கருவானது சுக்கில சோணிதத்தினால் உண்டாகிறது. ஆனால், சுக்கிலத்தினால் உண்டாகும் சக்தி அதிகம் இருக்கிறது. சிசுவின் உறுப்புகளில் பெரும்பாகம் சோணிதத்தினால் உண்டாக்கப் படுகிறது; இக்காரணத்தினாலேயே பிள்ளைகளில் பெரும்பாலோர் தாய்ச் சாயலாகவே இருக்கிறார்கள். ஆகையினாலேதான் கூடிய வரையில் நல்ல சந்ததிக்காக லக்ஷணமுள்ள பெண்களை விவாகம் செய்ய வேண்டுமென மகம்மதிய சாஸ்திரம் முறையிடுகிறது.

இன்னும் தாய் தந்தையருடைய சிந்தையின் காரியம் அக்குழந்தைக்கும் சித்தமாகிறது. ஆனால், பெரும்பாகம் தாய்ச் சிந்தையின் பலனே; ஆகையால், மாதாந்தர ருது காலம் தொடங்கிப் பிள்ளைப் பெறுகிற வரையில், பரிசுத்தமான சிந்தை உடையவர்களாகவும், மனக் களிப்பு, நற்செய்கை, நற்குணம்

ஆகியவைகளுடையவர்களாகவும், சிங்கார வனங்களில் உலாவும் உல்லாசமுடையவர்களாகவும், நல்லதும் சீக்கிரம் சீரணிக்கத் தக்கதுமான ஆகாரங்களைப் புசிக்கிறவர்களாகவும், மன வருத்தம், வியசனம், கோபம் முதலியவைகளை நீக்கினவர் களாகவும் இருக்க வேண்டும்.

இந்தியாவிலுள்ள சாதாரண மக்களும் வழக்கமாய்ச் சூரிய சந்திர கிரகண காலங்களில் கருப்பவதிகளை வெளியில் அனுப்புகிறதில்லை; பாட்டு முதலியவைகளைப் பாடி, அவர்கள் சிந்தையானது சூரிய சந்திரர்கள் குறைவதில் செல்லா வண்ணமாய்ச் செய்து வருகிறார்கள்.

ஆனால், சிலர் இப்படிச் செய்வதற்குப் பதிலாய், கிரகண காலங்களில் கருப்பவதியைப் படுத்திருக்கச் செய்து உலக்கையையும், அம்மிக் குழவியையும், சமீபத்தில் போட்டு வைத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம், அக்கருப்பவதிகளின் எண்ணம் அவற்றின்மேல் செல்லுமென்பதோ, ஏதோ தெரியவில்லை.

சக்கரவர்த்தியின் 'சரித்திர சங்கிரகம்' என்னும் கிரந்தத்தில் எழுதியிருக்கிறதாவது:- இந்தியாவில் செங்கோல் செலுத்திய மஹா சக்கரவர்த்தியாகிய அக்பரை, அவர் தாய் கருப்பமாய் இருக்கையில், அந்த அம்மாள் தன் குதிகாலில் ஊசியினால் அழகிய புட்பங்கள் தானே செதுக்கிக் கொள்வது வழக்கமாய் இருந்தது. ஒரு நாள் அக்பரின் தந்தையாகிய ஹுமாயூன் இதைக் கண்ணுற்று இப்படிச் செய்வதன் காரணத்தைக் கேட்டார்; அதற்கு அந்த அம்மணி, என் வயிற்றில் இருக்கிற பிள்ளையின் காலில் இவ்வித புட்பங்கள் இருக்க வேண்டுமென்பது பிரியமாய் இருக்கிறபடியால் இவ்விதம் செய்கிறேன் என்றார்கள். பிள்ளை பிறந்த பின் அப்படியே இருந்ததாம்.

இன்னும் அக்பருடைய காலத்தில் கருப்பவதியாயிருந்த ஒரு கணவன், மனைவி சண்டையில் வெட்டப்பட்டான். பிள்ளை பிறந்தபின் தகப்பனுக்கு எவ்விடத்தில் காயம் பட்டதோ அதே இடத்தில் பிள்ளைக்கும் வெட்டுண்ட அடையாளம் இருந்தது என்பதே.

ஆகையால், சுருக்கிச் சொல்லில் மாதா ஸ்நானத்தில் இருந்து சுத்தியான பின் மகம்மதிய ஸ்திரீகள், தன் புருஷனுடன் (முஸ்ஹபா) செய்ய வேண்டியது; இத்தேசத்தில் அதை அனுசரிப்பது சிரமமாகையால் (அஸ்ஸலாமு அலைக்கும்) என்று தம் மனதில் சொல்லிக் கொண்டாயினும் தம் கணவருடைய முகத்தைப் பார்க்க வேண்டியது.

ஹிந்துப் பெண்கள் தம் கணவரைத் தொழுது அவர்கள் முகத்தை உற்றுப் பார்த்து மனதில் தியானிக்க வேண்டியது.

சூதகத்திலிருந்து சுத்தியாகி ஸ்நானஞ் செய்தபின், சுத்தமான நல்ல உடைகளைத் தரித்துக் கொள்ள வேண்டும். தன் சக்திக்கேற்றபடி படுக்கை அறையை அலங்கரித்துக் கொள்ள வேண்டும். தன் சக்திக்கேற்றபடியும், தன் தேச வழக்கம் போலவும், சுகந்த திரவியங்களைச் சேகரித்துக் கொள்ள வேண்டியது. அப்படியே கணவனும் முன் சொன்னவைகளை அனுஷ்டித்து வர வேண்டியது. மேலும், அவரவர்கள் மதக் கொள்கையைப் போல மணந்து வாழ வேண்டியது, அக்காலங்களில் கணவன், மனைவி ஆகிய இருவரின் இருதயமும் பரிசுத்தமாய் இருக்க வேண்டியது.

கருப்பவதியாய் இருக்கிறவரையில் தன்னாலியன்ற மட்டும், பொறாமை, குரோதம், விரோதம், கோபம், லோபத் தனம் முதலிய தீய செயல்களை நீக்க வேண்டியது. தன் சக்திக்கேற்றபடி நல்ல உடைகளைத் தரித்துக் கொள்ள வேண்டும். எப்போதும் மனதைச் சந்தோஷமாய் வைத்திருக்க வேண்டும். நற்குணம், நன்னடத்தையுள்ள தோழிகள் அல்லது பெண்களுடன் சகவாசம் செய்ய வேண்டியது. சீக்கிரம் செரிக்கத் தக்கதும் சத்துள்ளதுமான ஆகாரங்களைச் சாப்பிட வேண்டும். மண், கல் முதலிய கடின பதார்த்தங்களை ஒருக்காலும் சாப்பிடலாகாது. ஒருவர் மேல் கோபித்துக் கொள்ளுதலும் கோள் சொல்லுதலுமாகாது. தங்கள் மத ஆசாரப்படி தொழுகை, நோன்பு (பூசை, விரதம்) முதலியவைகளைத் தப்பாது அனுஷ்டித்து வர வேண்டியது. வேறு மாறான காரியங்களுக்கு இடந்தரலாகாது.

குறிப்பு

நம்மவர்களுள் அநேகர் ஆசிய, ஐரோப்பிய முதலிய சாஸ்திரிகள் பண்டிதர்களாகிய இவர்களின் சொற்களைத் தம் வழக்கம்போல எல்லாம் பொய்யெனச் சொல்வது வழக்கம். ஆகையால் சாஸ்திரத்திற்கும் அவர்களுக்கும் வெகு தூரம்.

ஆனால், பல கனவான்கள் மேற்குறித்த ஆசிய ஐரோப்பிய சாஸ்திரிகளின் கொள்கையை நம்பி அனுஷ்டிக்கலாம். அதனாலும் அதிகப் பிரயோசனத்திற்கு இடமில்லை. ஏனெனில், நமது தேசத்திலுள்ள மகம்மதிய பெண்கள், ஹிந்து பெண்கள் ஆகிய இவர்கள் கல்வியில்லாதவர்களாய் இருக்கிறார்கள்; ஆகையால், மேற்கண்ட விதமாய் நடப்பார்களென நம்ப இடமில்லை. அப்படி நடக்காவிட்டால் நற்செய்கை, நற்குணமுள்ள பிள்ளைகள் பிறவார்கள். ஆகையால் கனவான்களே! நமது பெண்களைக் கல்வியுடையவர்களாக்கப் பின்னடையாதீர்கள். அப்படிச் செய்வீர்களேல் இவ்விதிகளை

அனுஷ்டித்துக் கடவுளினது கிருபையால் அழகும் பலமும் நன்னடத்தையுமுள்ள பிள்ளைகளைப் பெற்றுச் சுகமாய் வாழ்வீர்கள்.

கருத்தரிக்கும் விபரம்

புத்திர பலனுண்டாக பெண்களுக்கு தலை முழுக்கு நின்றபின் பத்து அல்லது பதின்மூன்று தினங்களுக்குள் அவர்களோடு மணந்து வாழ வேண்டியது. இன்னும், கணவன் மனைவி இருவருக்கும் ஆசை ஒன்றாயிருக்கும்படி வாழ வேண்டியது. இருவர் இஷ்டமும் முன்பின் ஆகிறதனால் அதன் பலனாகிற புத்திர சம்பத்து இல்லாமல் போவதுமன்றி, வியாதிக்கும் இடமாகும். ஆகையினால் மணந்து வாழுமுன் தாடன முதலிவைகளினால் இச்சையை உண்டாக்கி, பின்பு வாழ வேண்டியது. தாடன முதலிவைகளினால் இச்சை உண்டாயிற்றென்பதற்கறிகுறிகளாவன. அக்காலங்களில் அவர்களுடைய கண்கள் கொஞ்சம் சிவத்தல், கொஞ்சம் சோர்வடைதல், அவர்கள் கருப்பையில் அத்தருணத்தில் ஓர்வித உணர்ச்சியுண்டாகிறபடியால் கட்டித் தழுவுதல் முதலானவைகளாம்.

பெண்களுக்குக் கர்ப்பப் பையும் சோணிதமும், ஆண்களுக்கு சுக்கிலமும், இருதயமும் சுத்தமாய் இருக்க வேண்டும். இவ்விதம் மணந்து வாழ்வதனால், சுக்கிலமானது சோணிதத்திற் சேர்ந்து, பாலை மோரினால் பிரைக் குத்தினதுபோல, இரண்டும் ஒன்றாக உறைந்து வேறு சுபாவத்தை உடையனவாகி வளர ஆரம்பித்து, உருண்ட அணுவாகி, சுருண்டு ரூபங்களேற்படாதிருந்து சிலநாட் சென்றபிறகு, சிரசு உடல் என்கிற பேதங்காணப்பட்டு, முள்ளந்தண்டு ஏற்பட்டு, கை கால், ஜாடை அகப்படும். பின்பு அஸ்தி ஜனிக்க ஆரம்பிக்கும். சுருண்ட அணுவின்பின் உட்பக்கத்திலிருந்து, முகம், இருதயம், புப்புசம், அன்னாசயம் முதலிய உறுப்புகள் கிளைக்கும். நேத்திரம், வாய், மூக்குத் துவாரங்கள், செவித் துவாரங்கள் ஆகிய இவை ஒன்றன்பின் ஒன்றாய் முறையே ஏற்படும்.

இரண்டாவது மூன்றாம் மாதம் பிறப்பு உறுப்புக்கள் காணப்படும்; நான்காம் மாதங்களில் மூக்கு, உதடுகள், கண் மடல்கள், காதுகள் ஆகிய இவைகள் உண்டாகும். கை கால்கள் வளர்ந்து நுனிகளில் விரல்கள் அகப்படும். ஐந்தாம் மாத முடிவில் பிண்ட உறுப்புக்களெல்லாம் ஒரு விதமாய்ப் பூரணமடையும். அது முதல் அவைகள் விர்த்தித்துக் கொண்டே வந்து, பத்தாம் மாதம், அல்லது நாற்பது வாரங்கள் சென்ற பின்பு சிசு ஜனிக்கும்; இவ்வேற்பாடுகளில் வித்தியாசப்படுவதுண்டு.

கருப்பையானது இந்திரியத்தை ஓர் தடவை கிரகித்த பின், தன் வாயைப் பலமாய் மூடிக் கொள்ளுமாகையால், மறுபடி அதற்குள் இந்திரியம் போய்ச் சேர இடமில்லை. ஆனால், சில டாக்டர்கள் சொல்லுகிறதாவது; கருப்பையின் வாயானது கெட்டியான சளியைப் போன்றதும் பிசின் போன்றதுமான ஓர் பதார்த்தத்தினால் மாத்திரம் மூடப்பட்டிருக்கிறபடியால் கருத்தரித்த பின்னும் இந்திரியம் செல்ல இடமுண்டு. ஏனெனில், கருப்பவதிகளுள் சிலருக்கு மாதாந்தர போக்கு அல்லது வெட்டை நீர், அல்லது உதிரம் காண்பதுண்டு.

இது எப்படியாயினும் ஒரு கருப்பத்தில் 2, 3 பிள்ளை பிறக்கக் கூடுமென்பதில் சந்தேகமில்லை. மேலும் இவை ஏக காலத்தில் பிறப்பதுண்டு. அல்லது ஒன்று பிறந்தபின் இடையில் சில நாள் தாமதித்து மற்றது பிறந்ததாகவும் தெரிய வந்திருக்கிறது.

பீக் துரையவர்கள் தாம் பார்த்ததாகச் சொல்லுகிறதாவது.

a. 1814ஆம் ஆண்டில் ஒரு ஐரோப்பிய துரையின் பெண்சாதி முதலில் ஒரு ஆண் பிள்ளையைப் பெற்று, பின் சில நாள் சென்ற பின் வேறொரு குழந்தையையும் பெற்றாள். ஒன்று சிவப்பாயும், மற்றொன்று கருப்பாயுமிருந்தது. இதன் உண்மையை விசாரித்தபோது, புருஷன் கூடினபின் ஒரு (அப்ஷி) காபிரி கூடியிருந்ததாகத் தெரிய வந்தது.

b. ஒரு பெண்ணுக்கு விகற்ப வருணமுள்ள மூன்று குழந்தைகள் ஒரே தடவையில் பிறந்தன என்பதே.

டாக்டர் பீடன்துரை சொல்லுகிறார், ஒரு பெண்ணுக்கு ஒரு குழந்தை பிறந்தது. பின் மூன்று மாதஞ் சென்று அவளுக்கு இன்னொரு குழந்தையும் பிறந்தது. இவ்விரண்டு குழந்தையும் சுகமாய் வளர்ந்து வந்தன என்பதே.

கணவனின் இந்திரியமானது கருப்பைக்குட் சென்றே கருத்தரிக்க வேண்டுமென்பதும் அவசியமல்ல. ஆனால், அது நிதம்பங்களின் மத்தியில் முன் பக்கத்தில் மாத்திரம் விழுந்தாலும் கருத்தரிக்கக் கூடுமென அனுபவத்தினால் தெரிய வந்திருக்கிறது.

இதைக் குறித்துச் சில டாக்டர்கள் சொல்லுகிறதாவது: நிதம்பங்களின் ஓரத்தில் வந்து விழுந்தவுடனே (நேரே செல்லத் தடையில்லாத பக்ஷத்தில்) விந்துக் கிருமிகள் முன்னோக்கிப் போய் தாம் சேர வேண்டிய இடமாகிய கருப்பையில் சேர்ந்து விடுகின்றன என்பதே.

வேறு சில டாக்டர்கள் சொல்லுகிறதாவது: விந்துக் கிருமிகளுக்கு அவ்வளவு தூரம் நகர்ந்து போகச் சக்தியில்லை. ஆனால் நிதம்பங்களின் ஓரத்தில் விந்துவானது விழுந்தவுடனே விசை நரம்புகளினால் இழுக்கப்பட்டுக் கருப்பையில் சேர்க்கப்படுகின்றது.

இது எப்படியாயினும் நிதம்பங்களின் ஓரத்தில் விழும் விந்துவினாலும் கருப்பந் தரிக்குமென்பதில் சந்தேகமில்லை என அனுபவமாய் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பு

சில நாள்களுக்கு முன் ஒரு கனவான் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதை இங்கு எழுதுவாம்.

ஐயா!

நான் கொஞ்சம் வயது தளர்ந்தவன் யானை முகத்தோனிலும் எனக்குப் பருத்த தொந்தி வயிறுண்டு. என்னிலும் பருத்த வயிறு என் மனைவிக்குண்டு. புருஷ ஜனன இந்திரியங்களில் பிரதானமானது கொக்கோக நூல் முதலியவைகளில் சொல்லியிருப்பதிலுங் குறைந்த அளவுள்ளது. எவ்வித முயற்சியினாலும் நிதம்பங்களின் ஓரம் வரையில் செல்லக் கூடும். ஸ்கலிதம் முதலியவைகளுக்குக் குறைவில்லை. பெண்கள், பிள்ளைகள், ஐந்தாறிற்குக் குறைவில்லை. என் மனைவியின் நடவடிக்கை முதலியவைகள் உத்தமமானவைகளும் சத்தியமானவைகளும் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இந்திரியமானது கருப்பையில் சேர இடமில்லையே, எப்படி புத்திர சந்தானமுண்டாயின எனச் சில நேரங்களில் ஒரு சந்தேகம் போராடுகிறது. ஆகையால், இதைச் சாஸ்திர யுக்தமாய்த் தெரிவித்தருளும்படி பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

&C. &C.

மேற்கண்ட கடிதத்திற்கு உடனே விடை பகர்ந்தும், நமது நண்பர்களுள் அநேகர் அவ்வித கேள்விகளை எழுதியிருந்தபடியால் அவர்கள் சந்தேகம் நிவர்த்தியாகும்படி இவ்விடத்தும் எழுதப்பட்டது.

இப்படியே துர்ப்பலமாயிருகிறவர்களுக்கும், ஆண் குறி வளைந்திருப்பவர்களுக்கும், அவசரமாய்க் கூடியிருந்தவர்களுக்கும் இவ்வாறான மற்றவர்களுக்கும் கருத்தரித்தலுக்கிடமாம்.

தலைமுழுக்குக் காண்பதற்கு 1, 2 நாளைக்கு முந்தியுண்டான மண வாழ்க்கையினாலும், இஷ்டம் முதலியவை ஒன்றாகாதுண்டான மண வாழ்க்கையினால், அருவருப்புடன் உண்டான மண வாழ்க்கையினாலும் கருப்பம் தரிக்க இடம் உண்டு.

டாக்டர் காக்பரன் துரையவர்கள் சொல்லுகிறார். ஒருவனுக்குப் பீஜங்களுக்கும் ஆசனத்திற்கும் இடையிலே விந்து நாளங்களில் துவாரங்கள் விழுந்திருந்தன. அத்துவாரங்கள் மூலமாய்ச் சேகரிக்கப்பட்ட புதிதாகிய இந்திரியத்தை ஒரு பெண்ணின் கருப்பையில் பீய்ச்சாங்குழலினால் செலுத்திக் கருத்தரித்து, 9 மாதங்களுக்குப் பின் யாதொரு விதத்திலும் குறைவில்லாமல் சுகமாய் ஒரு ஆண் குழந்தை பிறந்து சீவித்திருந்தது.

கணவனின் இந்திரியமானது, மனைவியின் நாதத்தைப் பார்க்கிலும் அளவில் அதிகப்பட்டும், அதன் சக்தியானது சோணிதத்தின் சக்தியைப் பார்க்கிலும் அதிகப்பட்டுமிருந்தால், பிள்ளை ஆணாவதுமின்றி, அதிக ஊக்கமுடையதாகவும் சூரத்தன்மை உடையதாகவும் இருக்கும். இந்திரியம் அளவில் அதிகப்பட்டுச் சோணிதம் சக்தியில் அதிகப்பட்டால் குழந்தை ஆணாகும். ஆனால், பெண் தன்மையே அதிகமாய்க் காணப்படும்.

இவ்வாறே, சுக்கிலத்தைப் பார்க்கிலும் நாதம் அளவில் அதிகப்பட்டால் சிசு பெண்ணாகும்; நாதம் அதிகப்பட்டும் சுக்கிலத்தின் சக்தி அதிகமாயிருந்தால் குழந்தை பெண்ணாகியும் ஆண் மக்களின் ஊக்கமும் வீரத் தன்மையும் உடையதாயிருக்கும்.

கெர்ப்ப ஏற்பாட்டைப் பற்றி *யூநாநி, மிஸ்ரி, கர்யாதி, வைத்திய பண்டிதர்கள், தங்கள் தங்கள் கருத்தில் விகற்பப்படுகிறபடியால், இனி அச்சிடப்படும் ''யூநாநி வைத்திய கெர்ப்பக் கோள்'' சாஸ்திரத்தில் கெர்ப்பத்தின் ஏற்பாடுகளையும், பண்டிதர்களின் விகற்பத்தின் தர்க்கங்களையும் விபரமாய் எழுத உத்தேசித்திருக்கின்றேன். அதைப் பார்வையிட்டால் சகல விபரமும் நன்றாய் விளங்கும்.

கருப்பக் குறிகள்

பெண்களுக்குக் கருத்தரித்தவுடன் அவர்கள் தேக சுபாவத்தில் பல வித்தியாசங்கள் உண்டாகும். அப்படியுண்டானது

* யூநானி — மஹம்மதீய (வைத்தியம்), மிஸ்ரி — ஹிந்து (வைத்தியம்), கர்யாதி — இங்கிலீஷ் (வைத்தியம்)

கருத்தரித்ததினாலுண்டானதென்று அறியாத, அனேக பெண்கள் தங்களுக்கு ஏதோ வியாதி சம்பவித்ததென்று கண்ட அவுடதங்களைச் சாப்பிடுகிறார்கள். அதனால் கருவழிந்து நாசமாய்ப் போவதுமன்றி அவர்கள் தேகமும் அபாயத்துக் குள்ளாகின்றது. இவ்விதம் சிசு வதையும் தேக கஷ்டமும் உண்டாகின்றன. மேலும் சில வைத்தியர்கள் கருத்தரித்த தினாலுண்டாகும் இயல்பான மாறுதல்கள் இன்னனவென்றும், வியாதி இன்னதென்றும் அறியாது, நின்றபடி பேதி, நீர்ப்பேதி, வாந்தி முதலாகிய ஔஷதங்களைக் கொடுக்கிறார்கள்.

இதனாலும் கருவழிந்து தேகத்திற்கு அபாயம் உண்டாகும். இவ்வகையார்கள் சிசுவதை செய்த குற்றத்திற்குள்ளாகிறார்கள். ஆகையினால், கருத்தரித்த லக்ஷணங்களையும், கருப்ப அடையாளங்களையும், அதைச் சார்ந்த மற்ற விபரங்களையும் யாவரும் தெரிந்திருப்பது, இவ்வளவு பிரயோசனமுள்ளதென இவ்விடம் நாம் சொல்ல வேண்டியதில்லை.

கருப்பச் சின்னங்கள்

கருத்தரிக்கும்போதும், கருத்தரித்த பிறகும் பெண்ணுக்குக் காணுகிற குறிகள் அநேகம். அவைகளில் முக்கியமானவைகள் இவ்விடம் கூறப்படும்.

உடலுறவில் பெண்ணுக்கு முன் வழக்கப்படி யிரேதசு முழுவதும் வெளிப்படாமல் உள்ளிடத்துத் தங்கியிருக்கும்.

உடலுறவின் முடிவில் பெண்ணுக்குத் தேகம் அருக்களித்துக் குளிர்ச்சி அடைந்ததாகத் தோற்றின் உஷ்ணம் நீங்கி, கருத்தரிக்கத் தக்க குளிர்ச்சி உண்டானதென்றறியவும்.

பெண்ணுக்கு அடிவயிறு கருக்குழியைச் சார்ந்து ஒட்டியுள்ளடங்கும்; நாபிக்கும் இடைக்குழிக்கும் இடையில் நோவுண்டாயிருக்கும்; நாடி பெருத்துத் தீவிரப்படும்; குணம், நடவடிக்கை இவைகள் மாறும்; சரீர மேனி மாறும்.

தின் பண்டங்களில் அதிக பிரமையுண்டாகும்; கரி, மண் முதலாகிய வெறுக்கத் தக்க பதார்த்தங்களில் விருப்பும், உணவில் வெறுப்பும் உண்டாகும்; கண்களில் வெண்மைக்குப் பதிலாக மஞ்சள் வருணம் அல்லது ஊதா வருணம் தோன்றும்.

தலை முழுக்கு நிற்குதல், காலை வாந்தி (இது சுமார் சாதாரணமாய்க் கருத்தரித்த ஒரு மாதத்திற்குப் பின் காணும். சில வேளை அதற்கு

முன்னும் காணும்) மயக்கம், கண்ணிருளல், வாயில் அதிக நீர் சுரத்தல், ஸ்தனங்கள் விம்மிக் கொஞ்சம் நோவெடுத்தல், ஸ்தனங்கள் விம்மல் (இது கருத்தரித்த பின்பு சுமார் ஒரு மாதத்திற்குப் பின் காணும்; சிலருக்குக் கருத்தரித்த சில நாட்களுக்குள்ளே காணும்) ஸ்தனக் காம்புக்கடியிலிருக்கிற விருத்தவடிவு அதிகமாய்க் கருத்தல், பால் சுரத்தல், வயிறு படிப்படியாய்ப் பெருத்தல், பிண்டத்தின் அசைவு தாய்க்குத் தோற்றல் முதலிய குறிகளும் காணும். இக்குறிகள் உடல்வாகிற்குத் தக்கபடி வித்தியாசப்படுவதுமுண்டு.

பொய்க் கருப்பம் (ரஜா)

இதற்கு ரத்த குன்மக் கட்டி, சோணிதக் கட்டி என்றும் பெயர்.

ருது காலத்திலும், முதல் பிரசவ காலத்திலும் மர்ம ஸ்தானத்தில் மேகம் முதலிய ரோகங்கள் காணும் காலத்திலும் மாப்பண்டம், மாங்காய் முதலிய வஸ்துக்களை மிகவும் புசித்தலினாலும், உபவாசத்தினாலும், தகாக் காரியங்களினாலும், வாயுவானது அதிகரித்து மாதாந்த உதிரத்தை ஒரு துளியேனும் மறைவிடத்தின் வழியில் வரவொட்டாமல் உள்ளேயே மறித்து வயிற்றைப் பருக்கப் பண்ணிக் கருப்ப மாதருக்குள்ள குறிகளாகிய சூதக பந்தம், பசிமந்தம், தேக வருண மாறுதல், மண வாழ்க்கையில் வெறுப்பு, மார்பகங்கள் பெருத்தல், மார்பு அதிரல், மசக்கை, தனத்தில் கொஞ்சம் பால், ஆயாசம் முதலிய குணங்களை உண்டாக்கும்.

முன்பு மறிபட்டுத் தோய்ந்து மாமிச மொத்தையைப் போல் கெட்டியாகத் திரண்டு கட்டிய கெட்ட ரத்தக் கட்டியாகையால் இது வயிற்றில் கருப்பத்தைப் போலவே இருக்கும். அப்படியிருந்தாலும், கரசரணாதி அவயவங்களுள்ள சிசுவைப் போலிராது; ஆயினும் அச்சிசுவைப் போலவே பக்கங்களில் பாய்வதும், மிகுந்து அசைவதும் சில வேளை கொஞ்சம் அசைவதுமாயிருக்கும். இது நாட்சென்று மருந்தினால் விழுவது, சில வேளை வீழாததுமாயிருக்கும். சிலருக்கு அதினாலேயே மிருத்து உண்டாகும். சிலருக்குப் பிரசவ வேதனைபோல் கண்டு இத்தசைக் கட்டி வெளிப்படுவதுமுண்டு.

கருப்பத்திற்கும், பொய்க் கருப்பத்திற்கும் இடையிலுள்ள விகற்பங்கள்

1-வது அசைதல், பொய்க் கருப்பமானது மூன்றாம் மாதத்திற்கு முன்பே அசைய ஆரம்பிக்கும்; மேலும் அதன் அசைவு உரத்ததாயிராது;

கருப்பமானது மூன்றாம் மாதத்திற்கு முன்பு அசையாது, அதன் அசைவு உரத்ததாயிருக்கும்.

2-வது வயிறு பெருத்தல்; கட்டியானால் ஆரம்பத்திலேயே வயிறு பெருக்கும். ஆனால், கருப்பமாயிருந்தால் ஆரம்பத்தில் அடி வயிறு கருக்குழியைச் சார்ந்து ஒட்டியுள்ளடங்கும். பின்பு நாளடைவில் கரு வளர வளர வயிறும் முறையே பெருத்துக் கொண்டு வரும்.

3-வது ஸ்பரிசித்தல்; வயிற்றைக் கையினால் மெதுவாய் அழுத்தினால், கட்டியானால் உடனே உள்ளே அழுந்தும். கையை எடுத்தவுடனேயே பழையபடி வந்துவிடும். ஆனால், கருப்பமோ கையினால் அழுத்தினாலும் உடனே அழுந்தாது. இன்னும் கையை எடுத்த உடனேயே முன்னிருந்தபடி வராது. ஒரு வேளை வந்தாலும் மிகத் தாமதமாக வரும்.

4-வது கால அளவு; கருவானால் பதினொரு மாதங்களுக்கதிகம் கருப்பத்திலிராது. ஆனால், கட்டியானது நான்கு அல்லது ஐந்து வருஷமட்டும் தங்கியிருக்கும். இக்காலத்திற்கு அதிகப்படுவதும் குறைவதுமுண்டு.

கெர்ப்பமென்றும் அதல்லவென்றும் எளிதில் தெரிந்து கொள்ள சில பரீக்ஷைகள் கூறப்படும்.

1. நல்ல கெட்டித் தேன் ஒரு பங்கு, மழைச் சலம் அல்லது தண்ணீர் ஒரு பங்கு, இவையிரண்டையுங் கலந்து சயனிக்கப் போகையில் சாப்பிடக் கொடுக்கவும். காலையில் வயிறு நொந்தால் கெர்ப்பமென்றும், நோவில்லாவிட்டால் கெர்ப்பமல்லவென்றும் நிதானிக்க வேண்டும்.

2, பூண்டுத் திரி ஒன்றை உரித்து, சயனிக்கப் போகும் போது மர்ம ஸ்தானத்தில் வைத்துக் கொள்ளச் செய்து காலையில் எடுத்துப் பார்க்க, பூண்டின் வாசனை இல்லாவிட்டால் கெர்ப்பம் என்றும், வாசனையிருந்தால் கெர்ப்பமல்லவென்றும் நிதானித்துக் கொள்ளவும்.

3. பெண்ணின் சிறுநீரை ஒரு பாத்திரத்தில் பிடித்து நாலு நாள் சென்றபின் மெல்லிய சீலையில் வடிகட்டிப் பார்க்க, சிறு கிருமிகள் தோற்றினால் கெர்ப்பமென்றறியவும்.

4. பெண்ணின் சிறுநீரை யேற்று அதில் பூனைக் காஞ்சோறி இலையைப் போட்டு, ஓரிரவு முழுவதும் வைத்துக் காலையில் பரீக்ஷிக்க அவ்விலைகளில் செம்புள்ளி தோன்றின் கெர்ப்ப மென்றும், கரும்புள்ளி தோன்றின் கெர்ப்பமல்லவென்றும் தெரிந்து கொள்ளலாம்.

கருப்பம் ஆண் பெண்ணென்றறிதல்

கெர்ப்பத்திலிருக்கிறது ஆணென்றும், பெண்ணென்றும் அறிய சில குறிகளைப் பெரியோர்கள் அனுபோகத்தினால் கண்டிருக்கிறார்கள்; அவை பின்வரும் விதமாயிருக்கும்.

ஆண் சிசுவின் சின்னங்கள்

பசி, தீபனம் சுபாவம் போலிருத்தல், வலது மார்பகம் இடது மார்பகத்தைப் பார்க்கிலும் பெருத்தும் விம்மியிருத்தல், பால் மங்கலாய் வெண்மையாயிருத்தல், சிறுநீர் பல வருணமாயிருத்தல், பிண்டம் கருப்பத்தின் வலது பாரிசத்தில் இருப்பதாகத் தோற்றுதல், எழுந்திருக்கையிலும் உட்காருகையிலும் அல்லது மற்றெந்த வேளையிலும் வலது கையை அடிக்கடி ஊன்றுதல், பிரசவ காலத்தில் நாபிக்கும் மர்மத்திற்கும் இடையில் நோவாரம்பித்து இடுப்பில் பரவுதல் முதலியவைகளாம்.

ஒரு பாத்திரத்தில் தெளிந்த நல்ல ஜலத்தை வார்த்து அதில் கருப்பவதியின் ஒரு துளி முலைப் பாலை விட, அது பரவி மிதக்குமாயின் ஆண் என்றும், பரவாமல் அப்படியே உள்ளே அமுந்துமாயின் பெண் என்றும், இது நிச்சயமான குறியென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

பெண் சிசுவின் சின்னங்கள்

பெண் அதிக சோம்பலாயிருத்தல், இடது மார்பகம் பெருத்திருத்தல், உபயோகமற்ற பதார்த்தங்களில் விருப்பம், பொய்ப் பசி, முக வருணம் மாறுதல், பிரசவ காலத்தில் நாபிக்கும் மர்மத்திற்கும் இடையில் நோவாரம்பித்து வயிற்றில் பரவுதல் முதலியவைகளாம்.

அழி கருப்ப அடையாளங்கள்

வயிற்றில் உருவம் ஏற்படாத இளங்கருவாயிருக்கும்போது, விலா, கீழ்வயிறு, மேல்வயிறு, புட்டம் ஆகிய இவ்விடங்களில் அதிக உக்கிரமான வேதனையும், மார்பு நோவும், முக வெளுப்பும், நாபியின் கீழ் உபத்திரவமும், ஆயாசமும், வயிற்றில் வாளால் அறுப்பது போல் உறுத்தலுமாம்; இக்குணங்கள் உண்டானால் கருப்பம் கரைந்து விழுமென நிதானித்துச் சிகிச்சை செய்ய வேண்டியது.

கருப்பம் மரிக்கும் அடையாளங்கள்

கருவுற்ற பெண்களுக்கு மல முத்திர பந்தம், வளையல் ஓட்டை போல் தேகம் கறுத்தல், வாயில் அதிக துர்க்கந்தம் வீசுதல், கையும் காலும்

மிகவும் கறுக்குதல், தலையிலும் முகத்திலும் வீக்கம், அடிக்கடி கெட்டுயிர்ப்பு ஆகியவைகளாம். இக்குணங்கள் உண்டாகில் சிசு மரிக்கும் என்றறிக.

வயிற்றில் மரித்த கருப்ப அடையாளங்கள்

திரிதோஷ விஷமத்தினாலும், அபத்தியங்களினாலும் வயிற்றுக்குள் சிசு இறக்கும். இதனால், நாபியைச் சுற்றிலும் சீதளம், மார்பு தளரல், வயிறு கெட்டியாக உப்புதல், துர்க்கந்தத்துடன் தடிப்பாக அல்லது குழம்பாக நீரிறங்கல், எந்தப் பக்கம் திரும்பினாலும் அந்தப் பக்கத்தில் பிண்டமானது கனமாகத் தோற்றல், பிரமை, துக்கம், அதிக சங்கடம், வெந்நீர் ஆவி பிடித்த கையை வயிற்றின் மேல் வைக்கில் அதிரல் இல்லாதிருத்தல், இளைப்பு வருத்தலுமாய்ச் சுவாசம் வருதல், மயக்கிய நித்திரையில் இறந்தவர்களைக் காணுகின்ற கனவு என்னும் இக்குணங்களாம். இவை உண்டான போது சிசு இறந்தது என அறிந்து தாய்க்குச் சேதமில்லாமல் அந்தச் சிசுவைக் கைப் பழக்கத்தினாலாவது ஆயுதங்களின் உதவியாலும், மருந்தினாலாவது நஞ்சுக் கொடியுடன் சீக்கிரத்தில் வெளிப்படுத்த வேண்டும்.

கருப்ப ஸ்திரீகள் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியவைகள்

எந்தப் பெண்களுக்கும் கருப்பமடைந்த முதல் கருவானது இளநீர் வழுக்கையின் தன்மையை ஒத்து வளருகின்ற இளங்கருவாகையால் வாதாதிகளினாலும் தகாத நடத்தைகளினாலும் ஒரு வேளை கரைந்தும் கரையாமலும் விழுந்து போவதுமன்றி அவர்களும் அநேக வித அபாயத்துக் குள்ளவார்கள். ஏனெனில், பிள்ளை உண்டாயிருப்பது ஒன்பது மாதத்திய ஓர்வித வியாதியாகையால், கருப்பவதிகள் நல்ல நிலையிலிருந்த போதிலும் நோயுற்றோரென்றே கருதப்படுவார்கள்.

ஆகையால், கருப்பமாயிருக்கும் காலமெல்லாம் அதிக சாக்கிரதையோடும், மிக ஒழுங்கோடும் காக்கப்பட வேண்டும். அப்படிக் காக்கப்புடாதவர்களுக்கு அநேகவித அசவுக்கியங்களும் அபாயங்களும் நேரிடும் என்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை.

கரடுமுரடான குன்றுகள் நிறைந்த அலை மிகுந்த கடலில், கப்பலோட்டியானவன் தன் கப்பலைச் சற்றும் ஏமாறாது அதிகக் கவனத்தோடும் மிகு சாமர்த்தியத்தோடும் செலுத்த வேண்டியது. அப்படி நடத்தினாற்றான் தானும் தன் கப்பலும் அதில் உள்ளவைகளும்

சேதமின்றிக் கரை சேரக் கூடும். அப்படிக்கில்லாமல் கொஞ்சமேனும் தவறினால் கப்பலோட்டி அபாயத்துக்குள்ளாகாதிருக்கான்.

இன்னும் பீங்கான் பாத்திரங்கள் நிறைந்த ஓர் வண்டியை மேடு பள்ளங்கள் அதிகமாயுள்ள வழியில் அதிக சாக்கிரதையோடும் அதிக உபாயத்தோடும் நடத்தும் வண்டிக்காரன்தான் தன் வண்டிக்கும் அதிலுள்ள சாமானுக்கும் தனக்கும் யாதொரு குறைவின்றிப்போய்ச் சேரலாம்; கவனக் குறைவாலும் மூடத் தன்மையுமுள்ள வண்டிக்காரனோ அவசியம் வண்டியைக் கவிழ்த்து, வண்டிக்கும் அதிலுள்ள சாமானுக்கும் தனக்கும் நஷ்டம் விளைவிக்கிறான்.

இவர்களைப் போலவே கருப்ப ஸ்திரீகள் உண்பதிலும், நடவடிக்கைகளிலும், தங்களுக்கு நேரிடும் அபாயங்களைத் தடுத்துக் கொள்வதிலும், மற்றக் காரியங்களிலும் அதிக சாக்கிரதையாகவும், ஒழுங்காகவும் இராவிட்டால், கருச் சிதைவிற்கும், தங்கள் உயிர்களை இழக்கச் செய்யும் அபாயங்களுக்கும் இடமுண்டு. ஆகையால், அக்காலங்களில் அவர்கள் தங்களைப் பற்றியும் தங்கள் உதரத்தில் தங்கியிருக்கும் கருவைப் பற்றியும் கவலை எடுத்துக் கொள்ள வேண்டியது. அவ்வாறில்லாது ஓர் சிறிய தவறும் ஏற்பட்டால் இருவருக்கும் அபாயத்தை விளைவிக்கும் எப்படியென்றால் தாய்க்கோர் கெடுதி சம்பவித்தால் அது பிள்ளைக்குமாம்; பிள்ளைக்கோர் கெடுதி சம்பவித்தால் அது தாய்க்குமாம். ஆகையால் கருப்பவதிகள் தங்கள் தேக சுபாவத்திற்கேற்றதும், வழக்கமானதும், காலத்திற்கடுத்ததுமான பதார்த்தங்களைப் பத்தியத்தோடு உபயோகித்து வர வேண்டியது.

கூடுமானால் சுத்தமான காற்றுள்ள இடத்தில் சஞ்சரிக்கவும் வேண்டியது. அதிக சூடு அல்லது அதிக குளிர்ச்சியாகிய காற்றாகாது; ஏனெனில் அதிக சூடான காற்றினால் காரணாக்கினி அதிகப்பட்டு ஆன்மாக்களின் சக்திகளைக் குறைத்து விடுவதால் பலவித துர்ப்பலமுண்டாகும்; இவ்விதமே அதிக குளிர்ச்சியாகிய காற்றானது சலதோஷத்தையும், கடினமான இருமலையும் உண்டாக்கும்; கடினமான இருமலினால் ஒரு வேளை கருப்பச் சிதைவுண்டாகும்.

கருப்பவதிகளின் மனதிற்கு அருவருப்பான வஸ்துக்களையும், துர்வாசனையுள்ள வஸ்துக்களையும் எப்பொழுதும் அவர்களிடமிருந்து நீக்க வேண்டியது; கெந்தகப் புகை முதலான கெட்ட நாற்றத்தை உடைய புகையைச் சுவாசித்தலுமாகாது.

கருப்பவதிகளுக்குச் சாதாரணமாய் வாந்தி, அரோசிகம், அன்னத்துவேசம் முதலான குணங்களிருப்பதால் அவர்களுக்கின்ன ஆகாரந்தான் தகுதியனாதென்று நிச்சயமாய்ச் சொல்வது மிகவும் அரிதே.

ஆகையினால் பத்தியமாகிய பதார்த்தங்களில் அவர்களுக்கு இஷ்டமானதே தகுதியானதென்று சொல்லலாம். ஆகிலும், அந்த வஸ்துக்களிலுங்கூட அதிகமில்லாது சமமாகவே இருத்தல் வேண்டும். ஆனால், மேற்கண்ட வாந்தி முதலான குணங்கள் இல்லாதிருக்கிறவர்கள் தம்மையும் தன் கருவையும் ரக்ஷிக்கத் தக்கதும், தம் பசிக்கேற்றதுமான சாதாரணமாகிய உணவருந்த வேண்டியது. அடிக்கடி சாப்பிடுவதும், அதிக நேரம் வரைக்கும் சாப்பிடாமல் இருப்பதும், அதிகமாய்ச் சாப்பிடுவதும் கெடுதியே. முக்கியமாய் இராக் காலங்களில் அதிகம் சாப்பிடுவது ஒருக்காலும் கூடாது; ஏனெனில், இரைப்பை அதிகம் கனத்துப் போவதால் விதானத்தை நெருக்கும். அதனால் மூச்சுவிடக் கஷ்டமாயிருக்கும்.

கருப்பவதிகளுக்குத் தகுந்த இறைச்சி வகைகளாவன, ஆட்டின் நுண்மையான பாகத்திலுள்ள இறைச்சி, கோழிக் குஞ்சு, புறாக்குஞ்சு, கவுதாரி, காடைகளாம்; இவைகளை அவர்களின் விருப்பப்படி பொரித்தாகிலும் அல்லது சமைத்தாகிலும் கொடுக்கலாம். சூப்பாகவும் செய்து கொடுக்கலாம். கோழி முட்டைகள் புதிதானவைகளும் ஆகும்.

காசினிக் கீரை முதலாகிய நல்ல கீரையினங்களையும் எளிதாக மலத்தை வெளிப்படுத்தும் கீரையினங்களையும் சமைத்துச் சாப்பிடுவதனால் இரத்த சுத்தி யுண்டாகி தேச சவுக்கியமுண்டாகும். பத்தியமாகிய பிஞ்சு காயினங்களுமாகும்.

கடலை முதலாகிய சூடான பதார்த்தங்களையம், மந்தப்படுத்தும் பதார்த்தங்களையும், தாமதமாய்ச் சீரணமாகும் பதார்த்தங்களையும் நீக்க வேண்டியது.

கருப்ப ஸ்திரீகளுக்கு மீன் சாப்பிட இச்சையுண்டானால் நல்ல ஜலத்து மீன்களில் புதிதாகப் பிடித்ததைச் சமைத்தல்லது பொரித்துக் கொடுக்கலாம்; கெண்டை உல்ல மீன் முதலாகிய பேதியை யுண்டாக்கும் மீன்களைக் கொடுக்கலாகாது.

கிச்சிலிப்பாகு சாப்பிடுவதனால் கருப்பம் பலப்படும். இன்னும் பாதம் பருப்பு, தேன், சீமை யிலந்தைப்பழம், நன்றாய்ப் பழுத்த திராக்ஷைப்பழம் ஆகியவைகளும் நன்றே.

அதிக காரம், அதிக புளிப்பு, அதிக கசப்பு, அதிக உவர்ப்புமான பதார்த்தங்களையும் நீக்க வேண்டியது. பூண்டு, வெங்காயம், கடுகு, மிளகு, சதகுப்பை, வாசனைத் திரவியங்கள் ஆகிய இவைகளை அடிக்கடியும் விசேஷமாகவும் உபயோகிப்பது நலமன்று. வாசனைத் திரவியங்களில் லவங்கப் பட்டையை மட்டும் 8-ஆம் மாதம், 9-ஆம் மாதம் உபயோகப்படுத்தலாம். அதனால் பிரயோசனமுண்டாகும்.

கருப்ப ஸ்திரீகளுக்கு ஆரம்பத்தில் உணவு அளவில் குறைவாயிருந்தாலும் நாட்செல்லச் செல்ல உணவை அளவிலும் அதிகப்படுத்திக் கொண்டே போக வேண்டியது. ஏனெனில், கருப்பத்தில் சிசு வளர்ந்து கொண்டே வருகிறபடியால் அதற்குந் தாய்க்கும் போதுமான அளவு வேண்டியிருக்கும்.

அதிக சூடான பானங்களும் ஆகா. நீரை அதிகப்படுத்தும் நீர்பேதி, ருதுவர்த்தனகாரி முதலானவற்றையும் நீக்க வேண்டியது. எப்போதும் சாந்தமான தேகப் பயிற்சி விடாது செய்து வரவேண்டியது. மூலை, முடுக்கில் படுத்துக் கொண்டும், உட்கார்ந்திருக்கிற விடத்தை விட்டு எழுந்திருக்காமலும் இருக்கலாகாது. குடித்தன வேலை செய்து கொண்டும், நன்றாய் நடந்து திரிந்து கொண்டுமிருக்க வேண்டியது. கூத்தாடுவதும், தேகம் அதிரும்படி வண்டியில் போவதுங் கூடா. தேகங் குலுங்கும்படியான வேலைகளையும் செய்யலாகாது. இவை மிகவும் முக்கியமாய் முதல் மாதத்தில் கவனிக்கத்தக்க விஷயங்கள்.

கருப்ப ஸ்திரீயின் நோய்கள்

கருப்பிணிகளுக்குக் காண்கிற வியாதிகளனந்தம்; அவைகளில் மிகவும் முக்கியமானவைகளாவன:—

காலை வாந்தி, பசிமந்தம், தனமெரிவு, இருமல், மார்பு துடித்தல், மார்பு அதிரல், நெஞ்செரிவு, மூர்ச்சை, நித்திராபங்கம், இடுப்பு நோய், மலபந்தம், மூலரோகம், கால்வீக்கம், கால்வாதம், மூத்திரக்கிரிச்சரம், தலைவலி, பேதி, உமிழ்நீர்ப் பெருக்கு, மர்மஸ்தான நமைச்சல், கருச்சிதைவு முதலியவைகளாம்.

இவ்வியாதிகளைப் பற்றியும், கருப்பிணிகள் ஒவ்வொரு மாதத்தில் நடந்து கொள்ள வேண்டியவைகளைப் பற்றியும் இங்ஙனம் கூறுவோம்.

முதல் மாதமும், 2-ஆம் மாதமும்.

அடியிற் கூறும் விஷயங்களை பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டியது; தங்களுக்கு பிறந்த குழந்தையானது தங்களுடைய உடல் வாகிற்கு ஒத்ததாயிருக்கும். தாய் தந்தைகள் சௌக்கியமாயிருந்தால் அவர்களுக்குண்டாகும் சந்ததியும் ஆரோக்கிய முடையதாகவேயிருக்கும். ஆகையால் பெண்கள் கருப்பவதிகளாயிருக்கும் போது தங்களுடைய தேக சௌக்கியத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது, புத்தியும் விவேகமுமுள்ளவர்கள் தங்களுடைய தேக சௌக்கியத்தைப் பேணும் முறையைத் தெரிந்து நடந்து கொள்வார்கள்.

முதல் பிரசவத்தில் பெண்ணுக்கு ஒன்றுந் தெரியாதாகையால் என்னமோ, ஏதோ, எப்படி முடியுமோவென்று ஏக்கமுற்றுத் திகிலடைவது வழக்கம். விவேகிகள் அந்தப் பயத்தை வைக்கார்கள். பிள்ளைப் பேறானது சாதாரண இயல்பான செய்கை; ஆயினும் புத்தியும், விவேகமுமுள்ள பெண்கள் எவ்வளவும் அசட்டையாயிராமல், பின்வரும் விதிகளை யனுசரித்துத் தங்களுடைய சுகத்தைக் காப்பாற்றிக் கொள்வார்கள்.

பெண்ணுக்குக் கருப்பந் தரித்தது தெரிந்தது முதல் அல்லது கருப்பந் தரித்த குறிகளுண்டானது முதல் கஷ்ட வேலை, ஓட்டம், அதிர்ச்சியை யுண்டாக்கும் முயற்சிகள், அலறிச் சப்தமிடுதல் முதலாகியவைகளை நிறுத்த வேண்டியது. நடையிலும், வண்டி முதலாகிய வாகனங்களில் ஏறிப் போகையிலும் அமைதியாகவும் மெதுவாகவும் போக வேண்டியது. தம் கைகளை உயர்த்தலாகாது; பளுவான சுமைகளைச் சுமக்கலாகாது; உட்கார்ந்திருக்கையிலும், படுத்திருக்கையிலும், தாறுமாறான விதமாயிருக்கலாகாது. எந்த வஸ்துக்களையும் அதிகமாய்ச் சாப்பிடலாகாது. இலகுவான போஜனத்தையும் அதிக சத்துள்ளதுமான பதார்த்தங்களையும் உபயோகித்து வரவேண்டியது; இன்னும் சூடுங்குளிர்ச்சியும் சமமான பதார்த்தங்களாகவும் இருக்க வேண்டியது.

பசித்திருத்தல், தாகித்திருத்தல், இராக் காலங்களில் அதிக நேரம் விழித்திருத்தல், துயரப்படுதல், விசனத்தினால் அழுது கொண்டிருத்தல், கோபித்தல், பயப்படுதல், சந்தேகப்படுதல் முதலாகிய மனதிற்குச் சங்கடத்தையுண்டு பண்ணுங் கிரியைகளைத் தவிர்த்தல் வேண்டும்.

இந்தப் பெண்களிடத்தில் அபூர்வமாகிய வஸ்துக்களின் அல்லது ஆகாத வஸ்துக்களின் நாமத்தையும் சொல்லலாகாது. ஏனெனில் அவர்கள் அந்தப் பதார்த்தங்களை இச்சிப்பார்கள்; அல்லது அந்த வஸ்துக்கள் அடையக் கூடாமையாயிருக்கும்; இச்சித்த வஸ்துவை அடையாவிட்டால் கருவிற்கேதேனும் ஓர் இடையூறு உண்டாகலாம்; அல்லது கருப்பைச் சிதைவிற்குக் காரணமாகலாம்.

மலப்போக்கைப் பற்றியும் கவனிக்க வேண்டியது; மலச்சிக்கலுண்டாயிருந்தால், திராக்ஷை, கிஷ்மிஷ், ஆலுபகாரா, ஜரிஷ்க் முதலாகியவைகளையும், மலத்தையிளக்கி இலகுவாய்க் கழிக்குங் கீரையினங்களையும் போஜனத்தோடு சாப்பிட்டு வரவேண்டியது. கருப்பையையும், கருவையும் பலப்படுத்தும் அவுடதங்களையும், பதார்த்தங்களையும் உபயோகித்து வரவேண்டியது.

கருவுற்ற பெண்களில் அநேகர், மண், செங்கல், சாம்பல், கரி முதலிய கெட்ட வஸ்துக்களில் அதிகப் பிரியமுள்ளவர்களா

யிருப்பார்கள்; இவைகளைச் சாப்பிடுவது அவர்களுக்கும் கருவிற்கும் கெடுதியை விளைவிக்காதிராது. ஆகையால் இவர்கள் பத்தியமாகிய பயறு இனங்களில் ஒன்றை நன்றாக வேக வைத்துச் சருக்கரைச் சேர்த்துச் சாப்பிடலாம். இவை முன் குறித்தவைகளை விட சிறந்தவையே கிடைக்கக்கூடாத வஸ்துவில் கர்ப்பவதிகளுக்கு விருப்பம் உண்டானால் குளிர்ந்த ஜலத்தை வயிறு நிறைய குடிக்கும்படி சில பண்டிதர்கள் எழுதியிருக்கிறார்கள்.

குறிப்பு

காலை வாந்தி:— இது பெரும்பாலும் கருத்தரித்த ஆறாம் வாரம் ஆரம்பித்து பன்னிரண்டாம் வாரம் நின்று விடுவது வழக்கம். ஆனால் சிலருக்கு இதற்கு முன்னதாக ஆரம்பிப்பதும் பிரஸவம் வரைக்கும் இருப்பதும் உண்டு. கருப்பவதிகளிற் பெரும்பாலோர் அரோசிகம், வாந்தி ஆகிய இவைகளினால், அதிகமாயினும், அல்லது கொஞ்சமாயினும் வருத்தப் படாதிரார்கள். இவ்வருத்தம் முக்கியமாய்க் காலையிலேயே உண்டாகின்றது; காலை வாந்தியானது குறைந்த அளவாயிருப்பது கருப்பவதிகளுக்கு நற்குறியின் அடையாளமாகும். ஏனெனில் உணவு மாறுபாட்டினால்தான் கெடுதி நேரிடுமென்று கண்டதைப் புசிக்காமல், கருவுற்ற பெண்களுக்குக் காலை வாந்தியானது ஸாக்ஷாத் பண்டிதரால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. கடவுளின் ஏற்பாட்டை நாம் என்னவென்று கூறலாம். இன்னும் கருப்பவதிகள் அதிகமாய்ச் சாப்பிடுவதனால் குழந்தைக்கு இரத்தம் அதிகமாய்ப் பரவிக் கெடுதி சம்பவிக்குமென்றே ஈஸ்வரச் செயலால் அவை நன்மைக்கே உண்டாகின்றன. ஆனால் ஒருவேளை சரீரப் பிரகிருதியினால் வாந்தி பிரபலமாகக் கண்டால் அதைத் தடுக்க முயற்சி செய்ய வேண்டியது.

இதற்குச் சிகிச்சை முக்கியமாய் ஆகாரத்தில் பக்குவப்படுத்த வேண்டியதே. இது அநேகமாகப் படுக்கையிலிருந்து எழுந்தவுடனே காண்கிறபடியால், இப்பழக்கமுள்ளவர்கள் படுக்கையிலிருந்தபடியே தங்களுக்கு வழக்கமாகிய காலை உணவை அருந்தி எழுந்திருப்பதனால் சுகம் உண்டாகும்.

மலக்கட்டு இருந்தால் இலகு மலமிளக்கிகளால் நீக்க வேண்டியது.

மார்பக எரிவு:— கருத்தரித்த இரண்டாம் மாதம் கருப்பவதிகள் தங்களுடைய மார்பகங்களை கவனிக்க நேரிடும். ஏனெனில் அக்காலங்களில் அவை நிறைந்து விரிந்து போவது போன்ற ஓர் உணர்ச்சியும், எரிவந்தமும் மார்பகங்களில் உண்டாகும்; சிலவேளை இடது மார்பின் கீழ் நோயுமுண்டு. மார்பு பருத்து வரும்; அவைகளில்

முடிச்சு விழுவது போலவுந் தெரியும்; முலைக் காம்புக்கடியில் வட்டமாகிய கருநிறந் தோன்றும். கலங்கலான பாலும் வருவதுண்டு.

எரிவந்தம்:— நோய் பிரபலமாயிருந்தால் மலச்சிக்கலை நீக்கிவிட வேண்டியது, வெந்நீர் ஒற்றடங் கொடுத்து வருவது நலம்.

மகப்பேற்றிற்குப் பின்பு பால் குடியில் சிலருக்கு முலைக் காம்பு வெடிப்பதுண்டு. ஆகையால் இப்பொழுதிலிருந்தே காலையிலும் மாலையிலும் மார்பகங்களை வெந்நீர், படிக்கார ஜலம், தேயிலைக் கஷாயம் ஆகிய இவைகளில் ஒன்றினால் கழுவி வந்தால் வெடிப்புக் காணாது.

கருப்பப் பெண்களுக்கு வயிறு பருத்திருப்பது இந்த மாதத்தில்தான் நன்றாய் வெளிப்படையாகத் தெரியும்; மேலும் ஸ்தனத்தின் காம்பு கறுத்து நோவு மெடுக்கும். ஸ்தனங்களிலிருந்து கலங்கலாகிய பாலும் வரும்; ஆனால் அநேகருக்குப் பெரும்பாலும் இம்மாதத்திற்குப் பிற்பட்டே வரும்.

3ஆம் மாதம்

கருப்பவதிகளுக்குக் கருச்சிதைவானது எந்த மாதத்திலும் உண்டாகும். ஆனால் முக்கியமாய் 3ஆம் 4ஆம் மாதங்களில் சம்பவிக்கும். ஏனெனில் கருப்பைக்குத் தன் தொழிலைத் தடை செய்யும்படியாகிய ஓர் உணர்ச்சி இந்த மாதங்களில்தான் உண்டாகின்றது. இந்த மாதங்களுக்கு முன்பும் இவைகளுக்குப் பின்பும் இந்த உணர்ச்சி கருப்பைக்கு உண்டாகிறதில்லை; ஆகையால் கருப்பிணிகள் கருப்பந்தரித்த 10ஆம் வார முதல் 19ஆம் வாரம் வரையிலும் மற்ற காலங்களைப் பார்க்கிலும் இரண்டத்தனை சாக்கிரதை யுள்ளவர்களாகவும், அவ்வளவு கவலையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டியது.

இந்த மாதத்திலும் இதற்கடுத்த மாதத்திலும் கர்ப்பவதிகளுக்குக் கட்டி முதலியவை கண்டிருந்த போதிலும் இரத்தங் கட்டியிருந்த போதிலும், இரத்தங் குத்தி, வாங்குவதையும், சத்திரமிடுவதையும், கொம்பினால் இரத்த மெடுப்பதையும் தவிர்க்க வேண்டியது.

இந்த மாதத்திலும், இதற்கடுத்த மாதத்திலும், இதற்கு முந்தின மாதங்களிலும், பேதிக்குஞ் சாப்பிடலாகாது; பேதிக்குச் சாப்பிடும்படி நேரிட்ட போதிலும் இலகு விரோசன காரிகளை உபயோகிக்க வேண்டியது.

இரத்தம் வாங்குவதனாலும், பேதியாவதினாலும், கருவழிவிற்கும், அகால பிரசவத்திற்கும், வேறு அபாயத்திற்கு மிடமாம்.

மல்லாந்து படுத்துக் கொள்வது நன்றன்று; ஏனெனில் சிசு சீக்கிரம் வளர வாய்ப்பில்லாமற் போகலாம்.

4ஆம் மாதம்

முன் சொன்னபடி இந்த மாதத்தில் இரத்தங் குத்தி வாங்குதல் முதலியவை செய்யலாகாது; ஆனால் கட்டி முதலாகியவை கண்டு, சத்திரமிடாததனால் அபாயம் நேரிடுகிறதா யிருந்தால் அக்காலத்தில் மட்டும் சத்திர முதலியவை கூடும். ஏனெனில் சத்திரமிடாமல் வரும் அபாயத்தைப் பார்க்கிலும் அப்படிச் செய்து வருகிற அபாயம் சுலபமே.

ஆயினும் இந்த மாதத்தின் பிற்பாதியில் அப்படி நேரிடுவதனால் ஏதேனும் ஓர் அபாயமுண்டாகுமென நம்ப இடமுண்டு. இந்த மாத முதல், கருப்பத்திற்கு யாதொரு கெடுதியும் விளைவிக்காத சாந்தமான இலகு விரோசனகாரிகளை உபயோகிக்கலாமெனச் சில பண்டிதர்கள் சொல்லியிருக்கினும், இதற்கடுத்த மாதந் துவக்கி ஆறாமாத முடிவு வரையில் கொடுப்பதுதான் நலமென அனுபவத்தினால் தெரிய வருகின்றது; அப்படி அவசியம் மலம் போக வேண்டியதா யிருந்தால், சூரத்து நில ஆவாரை, ரோஜாப்பூ, ரேவல் சீனி, திராக்ஷி இவைகளில் ஒன்றைச் சாந்தமாய் உபயோகிக்க வேண்டியது.

அப்படிக்கில்லாமல் அருவருப்பாகிய மருந்துகளையும், கசப்பான மருந்துகளையும் கொடுக்கலாகாது. போளத்தை அல்லது அது சேர்ந்த மருந்துகளையும் உபயோகிக்கலாகாது. ஏனெனில் போளத்திற்கு, கருப்பை நரம்புகளின் வாயைத் திறக்கிற குணமும் கருப்பத்தைக் கரைக்கிற குணமுமுண்டு.

5ஆம், 6ஆம், 7ஆம் மாதங்கள்

இந்த மாதங்களில் கருப்பவதிகள் இருமல், மார்பு துடித்தல், மூர்ச்சை, நித்திரையின்மை, இடுப்பிலும் சந்துகளிலும் நோவு, உதிரம் வெளிப்படுதல் ஆகிய இவைகளில் ஒன்றினால் அல்லது பலவற்றால் வாதிக்கப் படுவார்கள்.

இருமலானது ஓர்வித தீக்ஷணியமான ஆவியினாலுண்டாகிறது; இந்த ஆவியானது பப்புசத்தின் நாளத்தில் இரத்தம் போய்ச் சேரும் போது அதிலிருந்தாவது அல்லது மார்பின் நாளங்களின் இரத்தத்திலிருந்தாவது, அல்லது மார்பிலிருந்து மேற்பக்கஞ் செல்லும் நாளத்தின் இரத்தத்திலிருந்தாவ துண்டாகும்; இருமல் அதிகப்படுவதனால் கருவிற்கேதாகிலும் கெடுதியுண்டாகும்.

இந்த ஆவி யெழாதிருக்கும்படி இலகுவிரோசனகாரிகளை உபயோகப்படுத்த வேண்டியது; இரத்தத்தைச் சுத்தி செய்யும் மருந்துகளையும், மூளைக்குப் பலங் கொடுக்கும் மருந்துகளையும், உபயோகிக்க வேண்டியது. பின்பு இருமலை நீக்கும்படியாய்த் தூதுவளைப் பூக்கிருதம், பாதாம் ஷர்பத், கசகசா ஷர்பத் முதலியவைகளில் ஒன்றை உபயோகிக்க வேண்டியது.

மார்பு துடித்தல், மூர்ச்சை இவை 12ஆம் வாரத்திற்கும் 17ஆம் வாரத்திற்கும் இடையில் காண்பதுண்டு; ஆனால் அனேகமாய் கருவில் சிசுவானது முதல் முதல் அசைய ஆரம்பிக்குங் காலத்தில் காண்பது வழக்கம். இருதயத்திற்கு நாளத்தின் வழியாய்ச் செல்லும் கெட்ட இரத்தத்தினின்றெழும் ஆவியினாலு முண்டாகும். ஏனெனில் இவை இருதயத்தை நெருக்குகிறபடியால், மார்புத் துடிப்பும், மூர்ச்சையு முண்டாகின்றன. இன்னும் மூர்ச்சையானது காற்றில்லாது சூடாகிய அறைகளில் நித்திரை செய்வதனாலும், பசியாயிருப்பதனாலும், திடும்பிரவேசமாய்ச் சந்தோஷம் அல்லது வியசன முண்டாவதனாலும் காண்பதுண்டு.

இவைகளுக்கு இருதயத்தைப் பலப்படுத்திச் சந்தோஷத்தை யுண்டாக்கும் மருந்துகளை உபயோகித்து நீக்க வேண்டியது.

இதற்குடனே சுத்தமான காற்று வீசும்படி செய்வதும், தேகத்தில் இறுகக் கட்டியிருக்கும் வஸ்திரங்களை அல்லது கட்டுகளை உடனே அவிழ்த்து விடுவதும், இது உண்டான காரணத்தை நீக்குவதுமே மிகவும் முக்கியமான சிகிச்சை, இதற்குடனே தகுந்த சிகிச்சைகள் செய்யாவிடில் ஏதேனும் கெடுதி நேரிடும்.

நித்திரைபங்கம்:— இது இரத்தத்தினின்றெழுஞ் சூடாகிய ஆவியினால் ஆன்மாக்கள் தொந்தரவு படுவதனால் உண்டாகிறது.

இது போஸ்தக்காய், ரோஜாப்பூ இவைகளின் கஷாயம் பாதுமைப் பருப்பு, கசகசா இவைகளின் ஹல்வாவைச் சாப்பிடுவதனாலும், படுக்க போகையில் மெதுவாகத் தேகத்தை நன்றாய்த் தேய்த்துக் கொண்டு படுத்துக் கொள்வதனாலும், அல்லது இரண்டு கால்களையும் நன்றாய்த் தேய்த்துக் கழுவிப் படுத்துக் கொள்வதனாலும் நித்திரையுண்டாகும்; தேகத்திற்கு ஆரோக்கியமு முண்டாகும். கருப்பவதிகளுக்கு அபினி சேர்ந்த அவுடதங்கள் கொடுக்கக் கூடாதெனத் தெரிந்திருக்க வேண்டியது.

இடுப்பு நோய்:— கருப்பவதிகளுக்கு இடுப்பிலும் சந்துகளிலும் நோயுண்டாகும்; ஏனெனில் கருவானது பருக்க பருக்க, கருப்பையும் அதின் நரம்புகளும் நீளவேண்டி யிருக்கின்றன. ஆகையால் அவர்கள் கழுத்திலே கச்சையை, அல்லது பட்டு வஸ்திரத்தைக் கொஞ்சம் இறுகச் சுற்றிவைப்பதனால் சுகம் உண்டாகும்.

மலச்சிக்கல், முலவியாதி:— இவை கருப்பை அதிகமாய்க் கீழிறங்கி ஆசனம் நெருங்கப்பட்டுப் போவதனால் உண்டாகும். ஆகையால் ஒரு மருந்தினாலும் அதிக பிரயோசன முண்டாகாது. குழந்தை பிறப்பிற்குப் பின்பு தானே நீங்கி விடும்; ஆனால் அதிக நேரம் நின்று கொண்டிருப்பதனாலும் அடிக்கடி படுத்திருப்பதனாலும், குளிர்ந்த நீரினால் அடிக்கடி கழுவுதலாலும் பயன் உண்டு. மலச்சிக்கல் அதிகமாயிருந்தால், சூரத்து நில ஆவாரை, ரோஜாப்பூ முதலிய இலகு மலமிளக்கிகளை நாளடைவில் உபயோகித்து நீக்க வேண்டியது.

8ஆம் மாதம்

இயல்பாகவே இம்மாதத்தில் அதிக அபாயம் நேரிடுவது வழக்கம். ஆகையினால் அதிக விழிப்போடும் அதிக ஒழுங்கோடுமிருக்க வேண்டியது. இவர்கள் அதிகமாய்க் கவனிக்க வேண்டியதெல்லாம் சாப்பாட்டிலேயே; அதாவது முன்னர் வழக்கமாகிய சாப்பாட்டின் அளவிற்கு அதிகங் கூடாது; முன்னளவிலும் குறைப்பதுவே நலம். ஆகாரம் அளவில் குறைக்க வேண்டியது எப்படி அவசியமோ அப்படியே தேக பயிற்சியை அதிகப்படுத்த வேண்டியதும் அவசியமே. ஆனால் சில சோம்பேறிப் பெண்கள் பிள்ளையுண்டாயிருப்பது வாய்ப்பென்று ஒரு வேலையுஞ் செய்யாமல் சும்மாய் இருப்பதுண்டு. அவர்களுக்குப் பின்னிட்டுப் பிரஸவமாகும் போது வருத்தமுண்டாகும்.

நாட்டுப்புறத்துப் பெண்கள் கடினமான வேலைகளைச் செய்து காலங் கழிப்பதால் அவர்கள் வருத்தப்படாமல் பிரஸவிப்பார்கள். நாணயமும், நாகரீகமும், வசதியும் உள்ள பெண்களுக்கே பிரஸவ வருத்தம் அதிகம்; இந்த ஏற்பாட்டைக் கெர்ப்பமாயிருக்குங் காலமெல்லாம் கவனிக்க வேண்டியது. ஆனால் இந்த மாதத்தில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியமே; ஏனெனில் இந்தக் காலத்தில் கருப்பவதிகளின் வயிற்றில் ஓர்வித தீக்ஷண்யமான கெட்ட ஆவியுண்டாகிக் கருவைத் துர்ப்பலப்படுத்தி அனேகமாய் அகாலப்பிரஸவ முண்டாக்கும்; மேலும் ஆன்மாக்களின் பலத்தையும் தேக பலத்தையுங் குறைத்து விடுகின்றது. ஆகையினால் இவர்கள் சாப்பாட்டிற்கு முன் சிறிதளவு தேன் சாப்பிடுவதனாலும், சிலருக்கு ஆகாரத்தில் அருவருப்பும், ஒக்காளமும் இருப்பதால் இஞ்சிமுரப்பா

சாப்பிடுவதனாலும் நன்மையுண்டாகும்; குழந்தையைப் பலப்படுத்த அடிக்கடி நல்ல கெட்டித்தேன் சிறிதளவு சாப்பிட்டு வரலாம்.

உப்பிட்டுலர்த்தின மாமிசமும், மச்சமும், தாய்க்கும், பிள்ளைக்கும் கெடுதியை விளைவிக்குமென்று அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

கால்வீக்கம், கால்வாதம்:— இவை கருப்பவதிகளுக்குப் பிந்தின மாதங்களில் காணும்; இவைகளுடன் நாளங்கள் பெருத்திருப்பமுண்டு. இதன் காரணமாவது, பிண்டம் அதிகமாய்க் கீழிறங்கிப் போவதினால், தேகத்திலிருந்து கீழ்ப்பாகத்திற்குச் செல்லும் இரத்தத் தாரைகள் நெருக்கப்பட்டு இரத்தந் தாராளமாய்ச் செல்லாமற் போவதே; இதனால் கால்வீக்கம், கணுக்காலில் வீக்கம், மறைவிடத்தில் வீக்கம், அல்லது எரிவந்தம் முதலானவையுமுண்டாகும்.

கால்வீக்கமா யிருந்தால் அழுத்தினால் குழி விழும். காலையில் வீக்கம் சிறிதளவாகயிருக்கும்; சிலவேளை கீழே படுத்துக் கொண்டவுடனே வீக்கம் இல்லாதிருக்கும். ஆனால் எழுந்து நின்றவுடனே வீக்கம் வந்து விடும்.

கருப்பவதிகள் வீக்கத்திற்குத் தகுந்த மருந்து கிடையாதெனவே சொல்லல் வேண்டும். ஏனெனில் கரு வெளிப்பட்டால் வீக்கம் தானாய்ப் போய் விடும்; ஆனால் படுத்திருப்பதனாலும், உட்கார்ந்திருக்கையில் காலை நீட்டி வைத்திருப்பதனாலும் சுகமாக யிருக்கும். நல்ல காடியை மேல்பூசி வருவதனாலும் பிரயோசனமுண்டாகும்.

குறிப்பு

கருப்பவதிகளுக்கு முகத்தில் அல்லது தேகத்தின் வேறு பக்கங்களில் வீக்கங் கண்டால் ஏதோ ஓர் விபரீத வியாதிக்கு இடமுண்டு; ஆகையால் உடனே சிகிச்சை செய்வித்துக் கொள்ள வேண்டியது.

நீர்ப்பை அழற்சி, நீர்க்கட்டு:— இவை கருப்பிணிகளுக்கு மூத்திரப் பையைக் கருப்பையானது அழுத்துவதனால் இந்த ரோகம் பிறக்கும்.

நீர்ப்பை அழற்சியின் அடையாளம்:— அடிக்கடி நீரிறங்கும் அந்த நீரை அடக்க முடியாது. ஒருவேளை அடக்கின போதிலும் வேதனையும் சிரமமும் உண்டாகும்.

பார்லி அரிசிக் கஞ்சி, ஆழிவிதைக் கஞ்சி, இசுப கோல்விதை யூறவைத்த நீர், ஆகிய இவைகளைச் சுண்ணாம்புத் தெளிவுடன் பால் சேர்த்து சாப்பிட்டால் சுகுணமுண்டாகும்.

நீர்க்கட்டு, நீர்க்கிரிச்சரம்:— கருப்ப ஆரம்பத்தில் பெண்கள் சிறுநீர் சுரக்கும் உணர்ச்சியானவுடனே, சோம்பலினால் அடக்கிக் கொண்டிருப்பதனால், பெண்கள் புகை வண்டியில் பிரயாணஞ் செய்கையில் அல்லது வேறு காரணங்களினால் நீரைக் கழிக்க வசதியில்லாமல் அடக்கிக் கொண்டிருப்பதனாலும், நீரை வெளிப்படுத்தும் நீர்ப்பையின் சக்தியானது குறைந்து போய் நீர்க்கட்டு உண்டாகும்.

இதற்கு உடனே வெந்நீர் ஸ்நானம் செய்வதனால் நீரிறங்கும். அப்படியாகா விட்டால் வியர்வையை யுண்டாக்கும் மருந்துகளைச் சாப்பிட்டுப் போர்வை அல்லது கனமாகிய ஆடையைப் போர்த்துக் கொண்டு சற்று தூங்கி விழிக்கின் நீரிறங்கும். இதனாலும் நீரிறங்காவிட்டால் மருத்துவர்களிடத்தில்தான் சிகிச்சை செய்து கொள்ளல் வேண்டும்.

கருப்பிணிகள் வியாதிகளைப் பற்றியும் அவைகளின் சிகிச்சைகளைப் பற்றியும், அதிக விவரமாகத் தெரிந்து கொள்ள இஷ்டமுள்ளவர்கள் எனது "யூநானி வைத்திய கெர்ப்பக்கோள்" என்னும் சாஸ்திரத்தைப் பார்வையிடவும்.

9-ஆம் மாதம்

இம்மாதம் மகப்பேறு மாதமாகையால் கருவிற்கு அபாயத்தை யுண்டாக்கா செய்கைகளையும், பேறு காலத்தில் அதிக வருத்தத்தைத் தராமல், சுகமான மகப்பேறு அமையும்படி செய்யும் விதிகளையும் கவனித்து நடக்க வேண்டியது.

பளுவான மூட்டைகளை அல்லது பொருட்களை கையினால் தூக்கி உயர்த்தலாகாது. ஏனெனில், அப்படிச் செய்வதற்கு அதிகமாய் மூச்சுப் பிடிக்க வேண்டியிருக்கும்; அதனால் அகாலப் பிரஸவத்திற்கிடமுண்டு. ஆனால் தேக சுபாவ உஷ்ணத்தை அதிகரிக்கச் செய்வதற்காக அவைகளைச் சற்று நகர்த்தலாம்; மேலும் அக்காரணத்திற்காகவே அங்குமிங்கும் நடந்து திரிய வேண்டியது.

கூனி நிற்பதும், அதிக நேரம் உட்கார்ந்திருப்பதும், ஒரு பக்கமாய் ஒருக்கணித்துப் படுத்துக் கொள்வதுங் கூடாது. தேகத்தை அதிகமாய் வளையச் செய்வதனால் கருப்பத்திற் கபாயமுண்டாகும்.

படிகளில் கீழிறங்குவதிலும் மேலேறுவது நலமாம். படிகளில் கீழிறங்கும் போது தடதடவென ஓடிவராமல் மெதுவாய் நிதானித்து இறங்கி வரவேண்டியது.

இலகு உணவு அருந்தியதும்; சீக்கிரம் செரிமானமாகத் தக்கதுமான ஆகாரத்தையே. இவர்கள் உபயோகிக்க வேண்டியது. தேனில் ஊறவைத்த பழங்கள் சீமை அத்திப் பழம், முட்டை மஞ்சட்கரு, ஆட்டிறைச்சி, கோழிக் குஞ்சுச் சூப்பு, பறவைகள், காடை, கௌதாரி, பொரித்த கறியினங்கள் இன்னும் இவை போலவனவும் இவர்களுக்கு உபயோகப்படும்.

சுத்தமான நீரில் குளித்தல், இடையில் இரண்டொரு நாள் விட்டு விட்டுச் செய்து வரவேண்டியது; இன்னும் குளித்ததற்குப் பிறகு குய்யம், அடிவயிறு ஆகிய அவயங்களில் கோழிக் கொழுப்பு அல்லது வாத்துக் கொழுப்பு, நீலோற்பல புஷ்ப எண்ணெய் ஆகிய இவைகளில் ஒன்றைத் தனியாயாவது அல்லது ஆளிவிதைக் கஷாயத்தோடு சேர்த்தாவது தடவி வருவதனால் நலமான மகப்பேறு ஏற்படும்.

பேறு காலம் நெருங்க நெருங்கக் காலையிலும், மாலையிலும் துளசியிலையிட்டுக் கொதிக்க வைத்த நீரினாலே வயிற்றைக் கழுவி வருவதால் குழந்தை பலப்படும்; சுகப் பிரஸவமுமாகும். இன்னும் புதிதாய்ச் செய்த ரொட்டி அல்லது கோதுமை ரொட்டியைத் துண்டுகளாகச் செய்து கரி நெருப்பில் வாட்டிச் சாப்பிட்டு வருவதனால் குழந்தைக்கு நல்ல பலமுண்டாகும். மேலும் கொடிய வியாதிகளாலும் அதிக துன்பமுண்டாகாது. இன்னும் அடிவயிற்றை ஆளிவிதை அல்லது அதன் எண்ணெயால் ஒற்றிடம் கொடுப்பதனாலும் பெரிதும் பயன் உண்டு.

மேற்கண்ட விதிகளை யனுசரித்து நடந்து கொள்ளும் நுண்ணறிவாற்றல் விவேகமுமுள்ள பெண்கள் கடவுளது கிருபையால் நலமான மகப்பேறு, தேகபலம், உடல் வலிமை, அறிவு, பூரண வயது, சுகம் முதலாகியவைகளுள்ள குழந்தைகளைப் பெற்றுச் சுகமாக வாழ்ந்திருப்பார்கள்.

ஆண் மலட்டு அடையாளங்கள்

1-வது — a) விந்தின் சுபாவ குணம் அதிக தீக்ஷணியமான சூடாயிருப்பதனால், அவ்விந்து நாதத்தோடு சேர்ந்து கருப்பற்றச் செய்யுந் தனக்குண்டாகிய சக்தியை இழந்து போதல்;

இதன் அடையாளம்:— விந்து மஞ்சள் வருணமாயிருத்தல், அளவிற் குறைதல், துர்வாசனை, விந்து வெளிப்படும் போது எரிவந்தமுண்டா யிருத்தலுமாம்.

b) விந்துவில் குளிர்ச்சி யதிகரிப்பதினாலும் அந்தக் கருப்பற்றும் சக்தி இல்லாமற் போம்.

குறிகள்:— விந்து தெளிவாய் வெண்மையா யிருத்தல்.

c) விந்துவில் கொழுமை யதிகரித்திருப்பதினால் அது கருப்பையிற்றங்கி நிற்காமல் உடனே நழுவி விழுந்து போமாகையால் கருத்தரிக்காது.

d) விந்துவில் வரட்சி யதிகரிப்பதனால் அது இயக்கமற்று உறைந்து போகும்; ஆகையினால் அது நாதத்தோடு சேர்ந்து கருப்பற்றுஞ் சக்தியை இழந்து போம்.

சிகிச்சை:— சூட்டிற்குங் குளிர்ச்சிக்குந் தக்கபடி மருந்து, ஆகாரம் முதலியவைகளை உபயோகித்து நிவர்த்தி செய்ய வேண்டியது. மேலும் ஆண்கள் சுபாவத்தின் எதிரிடையான சுபாவ குணமுள்ள பெண் சேர்க்கை வேண்டியது. இவ்விதம் செய்வதனால் இருவர் தேக சுபாவமும் சமரசப்பட்டுக் கருத்தரிக்கக் கூடும்.

2-வது — ஆண்குறியின் நரம்புகள் குறுகி, அது நீண்டு விந்துவைக் கருப்பைக்குட் செலுத்த வாய்ப்பில்லாமற் போவதனாலும் கருத்தரிக்காது.

குறிகள்:— ஆண் குறியானது பீஜங்களின் பக்கமாய் அல்லது வேறு பக்கமாய் வளைந்திருத்தல்.

சிகிச்சை:— கொழுப்பினங்கள், பருப்பினங்கள், எண்ணெயினங்கள் இவைகளைப் பூசி நிமிரும்படி செய்ய வேண்டியது.

3-வது:— விந்து குழல்கள், விந்துவாகிகள் சுருங்கிப் போவதனாலும், அறுந்து போவதனாலும், காதுகளுக்குப் பின்னிருக்கிற சுக்கில நரம்புகள் அறுபட்டுப் போவதனாலும் சந்ததி யில்லாமற் போம் இவைகளுக்குச் சிகிச்சை சாத்தியமானதல்ல.

4ம் அத்தியாயம்
ஆண்மைக் குறைவு

விந்து நஷ்டம் எனினும், லேபனக் குறைவு எனினும், வீரியக் குறைவு எனினும், மணவாழ்க்கைக் குறைவு எனினும் ஆண்மைக் குறைவு எனினும் ஒன்றேயாகும்.

இது அனேகவித காரணங்களினால் உண்டாகின்றது; ஆனால் அந்தக் காரணங்களை நன்றாய் அறிந்து அதற்குத் தக்க சிகிச்சை செய்து

கொள்ளாமல், பல மருந்துகளைச் சாப்பிட்டு, சூடதிகரித்து, தங்களுக்குண்டாகிய குறையை நீக்கிக் கொள்வதற்கு மாறாகப் பலவித நோய்களை யடைந்து முன்னிலும் சுக்கிலத்தைச் சோர்வடையச் செய்து, நிராசையாகி ஏங்கி ஏமாந்திருப்பவர்கள் மிகுதியாக உள்ளனர். ஆகையால் அவரவர்களுக்கு நேரிட்ட குறைகளின் காரணத்தைத் தாங்களே நன்றாய் அறிந்து அதற்குத் தக்க சிகிச்சைகளைச் செய்து தங்கள் குறைகளை நீக்கி, தாதுவை விருத்தி செய்து கொண்டு மகிழ்வடையும் பொருட்டு, மேற்படி குறைகளையும், அவைகளின் பரிகாரங்களையும் இன்னும் தாதுவை விருத்தி செய்யும் அனுபோகமானதும் மிக நேர்த்தியானதுமான அநேக பாகங்களையும், இன்னும் வேறு அக்கீம்களும் பண்டிதர்களுக்கும் அவரவர்களுக்கிஷ்டமாகிய சில பாகங்களைக் கொடுத்து, அவைகளுக்குப் பதிலாக அவர்களால் கொடுக்கப்பட்டுப் பல தடவைகளிலும் அனுபோகமாகிய சில முறைகளையும், சில பெரியோர்களிடத்தில் தொண்டு செய்து பெற்றுக் கொண்ட சில முறைகளையும் சில சமயங்களில் கைப்பொருட் செலவிட்டுச் சம்பாதித்த சில முறைகளையும் இவ்வேழையின் முன்னோர்களினால் எழுதி வைக்கப்பட்டிருந்ததும் மிகவும் அருமையானதுமாகிய அநேக முறைகளையும், சில உயர்ந்த முறைகளையும் தாது நட்டத்தைப் பற்றிய பல செய்திகளையும், ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும், வாலிபர்களுக்கும், வயது மூத்தோர்களுக்கும், பெண்களுக்கும், சகல வருணத்தாருக்கும், இன்னும் மற்றவர்களுக்கும் உபயோகப்படும்படியாக பல செய்திகளையும், பிறருக்கு உதவிடும் எண்ணத்துடன் வெளியிடத் துணிந்தனன்.

வைத்திய சகோதரர்களே! இதிற் கண்டிருக்கிற ஒவ்வொரு பாகமும் மிகவும் அருமையானதும், பலதடவை உபயோகப்பட்டதும், தேகத்திற்கு ஒரு கெடுதியையும் விளைவிக்காதது மாகையால் இந்த முறைகளில் ஒன்றையும் அற்பமாக எண்ணாதீர்கள். ஒவ்வொன்றும் மிகவும் பயன் தரத்தக்கதே; ஆனால் நீங்கள் கவனிக்க வேண்டிய தொன்றுளது. அது யாதெனில்:—

வியாதியின் காரணத்தையும் உடல்வாகையும் தெரிந்து சிகிச்சை செய்ய வேண்டியதே.

ஆகையால் உடல் வாகையும் வியாதியின் காரணங்களையும், குறிகளையும், பரிகாரங்களையும் முடிந்த அளவு விவரமாய் எழுதுகிறேன்; அவைகளை நன்றாயறிந்த பின், அவைகளுக்குத் தக்கபடி இங்கு கூறப்படும் பரிகாரங்களைச் செய்து குறைகளை நீக்கிக் கொண்டு எப்பொழுதும் மகிழ்வடையும்படி மிகவும் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி நீங்கள் தெரிந்து செய்தால் ஒவ்வொன்றும் மிகவும் பிரயோசனமுள்ளதென அனுபவப் பூர்வமாய்த் தெரிந்து கொள்வீர்கள்.

ஏனெனில் தாது நஷ்டத்தின் காரணத்தையும் தேக சுபாவத்தையும் தெரிந்து சிகிச்சை செய்யாததனாற்றான் மருந்தின் பெருமையும் கெட்டு வைத்தியர்களின் கீர்த்திக்கும் குறை நேரிடுகிறது. இக்காரணத்தினாலேயே சிலர் ஆண்மை அதிகரிப்பு சிகிச்சை கிடையாதெனவே சாதிக்கிறார்கள்.

ஆகையால் சகோதரர்களே! அவ்வித மோசத்திற் குள்ளாகாமல் பின் வருகிறவைகளைக் கவனித்து அறிந்து நடத்திச் சந்தோஷமடையும் படியாய் விவரமாய் எழுதுகிறேன்.

ஆண்மைக் குறைவின் காரணத்தைத் தெரிந்து கொள்ளப் பொது விதி

இதைப் பற்றி முதல் முதல் முக்கியமாய் நாம் கவனிக்க வேண்டியதாவது:—

மணவாழ்க்கைக்குரிய ஆண்குறியைப் பற்றியும், கோசத்தைப் பற்றியும், ஆண்மைக்கு ஆதாரமாகிய விந்துவைப் பற்றியுமாம்.

இவைகளைப் பற்றி முன்னர் சொல்லியிருந்தும், அவ்விஷயங்களை வற்புறுத்தும் படியாகவும், அவசியம் கவனிக்க வேண்டியும், இன்னும் சில விசேஷமானவைகளையும் இவ்விடம் கூறுவோம்.

ஆண்குறியின் இயல்பான குணம்

இஃது இரத்தத்தைப் பக்குவப்படுத்தி விந்துவாக்குகின்றது.

1. ஆண்குறியின் இயல்பான குணம் சூடாயிருக்கிறவர்களுடைய அடையாளங்கள்.

மணவாழ்க்கை இச்சை அதிகமாயிருப்பதும், மண வாழ்க்கைக்குப் பின் சோர்வில்லாதிருப்பதும், பெண் மக்களைப் பார்க்கிலும் ஆண்மக்கள் அதிகமா யுண்டாவதும், அரையில் தடித்த உரோமம் மிகுந்திருப்பதும், அவை சீக்கிரம் முளைத்தலுமாம்.

2. ஆண்குறியின் இயல்பான குணம் குளிர்ச்சியா யிருக்கிறவர்களுடைய அடையாளங்கள்.

மணவாழ்க்கை இச்சை குறைவாயிருத்தலும், மண வாழ்க்கைக்குப் பின் ஆயாசமுண்டாவதும், அரையில் மெல்லிய உரோமம் குறைவாயிருத்தலும், அவை தாமதமாய் முளைத்தலுமாகும்.

3. ஆண்குறியின் இயல்பான குணம் கொழுமையா யிருக்கிறவர்களுடைய அடையாளங்கள் —

மணவாழ்க்கை இச்சை மிதமாயிருத்தலும்; மணவாழ்க்கைக்குப் பின் சோர்வு அதிகமாயிருத்தலும், விந்து அளவில் அதிகமாயிருத்தலும், அதிக வழுவழுப்பா யிருத்தலும், அதனால் கர்ப்பந்தரிக்கா திருத்தலுமாம்.

4. ஆண்குறியின் இயல்பான குணம் வரட்சியா யிருப்பவர்களுடைய அடையாளங்கள் —

உடலுறவு இச்சை மிகக் குறைவாயிருத்தலும், உடலுறவுக்குப் பின் ஆயாசம் மிகவும் அதிகமாயிருத்தலும், விந்து அளவில் அதிகங் குறைந்து கெட்டியாயிருத்தலும், அதனால் கர்ப்பந் தரிக்காதிருத்தலுமாம்.

குறிப்பு

இந்த இயல்பான குணமென்னும், (இயல்பான) குணம் தனியாயுடையவர்கள் மிகவும் சொற்பமே; ஆனால் தொந்தமாகிய குணத்தையுடைவர்கள் அனேகர்; ஆகையால் அவர்களின் அடையாளங்களை இவ்விடங் கூறுவாம்.

1. சூடும் கொழுமையுமாகிய அல்லது இரத்த குணமதிகரித்த ஆண்குறியை யுடையவர்களுக்கு விந்து தடித்தும், மணவாழ்க்கைக்குப் பின் சோர்வு உண்டாகாமலும், மணவாழ்க்கை இச்சை அதிகமாகவும், ஆண்மை மிகுந்தும், அரையில் உரோமம் தடித்தும் மிகுந்தும் இருத்தல், அவை சீக்கிர முளைத்தல் சொப்பன ஸ்கலிதம் அடிக்கடி யுண்டாதல் ஆகிய குணங்களுண்டாயிருக்கும்.

2. ஆண்குறியின் இயல்பான குணம் குளிர்ச்சியும் வரட்சியுமான அல்லது வாத குணமதிகரித்த ஆண்குறியை உடைய அடையாளம்.

அரையில் உரோமக் குறைவு, மாதர்களிடத்தில் அற்ப இச்சை, சொற்ப மணவாழ்க்கை இச்சை, ஆண்மை கொஞ்சந் தாமதமா யுண்டாதல், விந்து தடித்துக் கொஞ்சமா யிருத்தல், சந்தான விருத்தி ஆகிய இவைகளாம்.

3. ஆண்குறியின் இயல்பான குணம் சூடும் வரட்சியுமாய் அல்லது பித்தகுண மதிகரித்திருப்பவர்களுடைய லக்ஷணமாவது.

அற்ப சுக்கிலமும், அற்ப காமமும் மாதர்களித்தில் அற்ப விருப்பமும், உடல் உறவு விருப்பம் அதிகமும், மணவாழ்க்கைக்குப் பின் சோர்வில்லாததும், கனவில் விந்து வெளிப்படல் அடிக்கடி யுண்டாவதுமாம்.

4. ஆண்குறியின் இயல்பான குணம் கொழுமையுங் குளிர்ச்சியுமாய் அல்லது சேத்தும குணம் அதிகமாயிருப்பவர்களுடைய அடையாளங்கள்:—

அரையில் உரோமம் கறுத்தும் நெருங்கியும் வெண்மையாயுமிருக்கும்; தாமதமாய் முளைக்கும்; உடலுறவு விருப்பம் குறைவாகும்; மணவாழ்க்கைக்குப் பின் சோர்வுமுண்டாகும்; சந்தானம் விருத்தியாம். ஆனால் பெண் மக்களே அதிகம் உற்பவிப்பார்கள்.

இவையெல்லாம் இயல்பான குணங்கள்; ஆனால் இடையில் உண்டாகும் வியாதியினாலும், வயதினாலும், கால வித்தியாசத்தினாலும், பெண்களின் தேகமாறுபாட்டினாலும் இக்குணங்கள் மாறுவதும், குறைவதும் அதிகப்படுவது முண்டென்று அறிந்திருக்க வேண்டியது.

விந்து, விந்துவாகி இவைகளின் குணம்

விந்துவினின்றெழும் ஆவியினால் அல்லது அதன் இயக்கத்தினால் மணவாழ்க்கை சக்தியுண்டாகிறது; ஆகையால் விந்து குறைந்து போவதனாலும், விந்து உறைந்து போவதனாலும் நீர்த்துப் போவதனாலும், விந்தில் அல்லது விந்துவாகியில் சூடு, வரட்சி, குளர்ச்சி, கொழுமை குறைவதனாலும், அதிகப்படுவதனாலும், தாது நஷ்டமுண்டாகும். இவைகளின் விவரமும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆகையால் அவை இங்கெழுதப்படும்.

ஆண்குறியின் குணம்

இஃது ஈரல், நரம்புகள், குண்டிக்காய், பீஜங்கள், விந்துவாகிகள் ஆகிய இவைகளிலுள்ள மேன்மிச்சமாகிய கழிவுகளை வெளிப்படுத்தவும், விந்துவைக் கருப்பையில் சேர்க்கவும், ஏற்படுத்தப்பட்ட ஓர் சூஸ்திரக் குழலாயிருக்கும்.

இன்னும் இது மூளை, இருதயம், ஈரல் முதலாகிய இராஜ கருவிகளோடு சம்பந்தப்பட்டிருக்கிறது என்றும், இதற்கு மூளையிலிருந்து எழுங்குணமும், இருதயத்திலிருந்து பருக்கிற குணமும்: ஈரலிலிருந்து கெட்டியாகிற குணமும் உண்டாகிறதென்றும் நாம் முன்னர் வாசித்திருக்கிறோம்.

தேக சுபாவ குணம் விகற்பப்பட்டாலும், ஆண்குறியில் வீக்கம், காயம் உண்டாயிருந்தாலும், அதற்குச் சமீபத்திலிருக்கிற நரம்புகள் துண்டிக்கப்பட்டாலும், அல்லது அவை அறுபட்டிருந்தாலும், ஆண்குறியின் சுபாவ குணங் கெட்டு, தாது நஷ்டமுண்டாகும். அதெப்படியெனில் தேக குணம் விகற்பப் படுவதனால் இராஜ

கருவிகளிலும் வேறுபாடு உண்டாகும். மூளைக்கு விகற்பமுண்டாயிருந்தால் எழுச்சி, அசைதல் முதலிய இயக்கங்களில் விகற்பமுண்டாகும். இருதயத்தில் வியாதி கண்டால், ஆண்குறி பருத்திருப்பதில் வேறுபாடுகள் உண்டாகும். ஈரலில் வியாதியிருந்தால் ஆண்குறி கெட்டியாயிருப்பதில் வித்தியாசமுண்டாகும். ஆண்குறியில் வீக்கமும் காயமு முண்டாயிருப்பதும். அதற்குச் சமீபமானவைகள் துண்டிக்கப்பட்டிருத்தலும் நன்றாய்த் தெரியத் தக்கவைகளே.

தாது நஷ்டத்தின் காரணங்களைக் கண்டு கொள்ளும் வகைகள்

ஒருவனுக்கு ஆண்மை வலுவாயிருப்பதற்கும், அது அதிக நேரம் நிலைத்திருப்பதற்கும் கொழுமையும், சூடும் சமரசமாயிருக்க வேண்டியது அவசியமாகும்.

இவையன்றி மற்றவை ஒன்றோடொன்று அதிகப்படினும், சமமாயினும், குறையினும் அதற்கேற்ப உடலுறவு சக்தியும் மாறுபடும்.

ஒருவனுக்கு உடலுறவு சக்தி குறையினும் அல்லது நஷ்டப்படினும் அவன் யூகித்தறிய வேண்டியவை:—

உடலுறவு சக்திக் குறைவானது வயது அதிகமானதனால் சம்பவித்ததா? அல்லது மிதமிஞ்சின மணவாழ்க்கையா லுண்டானதா? அல்லது, நடுவில் நெடுநாள் உடலுறவை விட்டிருந்ததனால் நேர்ந்ததாவென்பதும்;

பின்பு விந்துவை நிதானித்து அது அளவிற்கு குறைவாயிருக்கிறதா? அல்லது, அதிகமாயிருக்கிறதாவென்பதும்;

அது அளவிற் குறைவாயிருந்தால் வரட்சி அதிகரித்து உறைந்து குறைந்ததா? அல்லது, தடித்திருப்பதனால் குறைந்திருக்கிறதா? என்று நிதானிக்க வேண்டியதும்;

அது அளவிற்கு அதிகமாயிருந்தால் நீர்த்துப் போனதனால் அதிகப்பட்டதா? அல்லது, கொழுமை அதிகரித்திருப் பதனால் அதிகப்பட்டதா? என்று தெரிந்து கொள்ள வேண்டியதும்;

அது அளவில் வித்தியாசப்படாதிருந்து தாது நஷ்டமுண்டாயிருந்தால் அதில் சூடு குறைந்து குளிர்ச்சி அதிகரித்திருக்கிறதா? என்று நிதானிக்க வேண்டியதும்;

பின்பு ஆண்குறியை நோக்குமிடத்து அதன் எழுச்சி, அசைவு ஆகிய இவற்றில் மாறுதல் உண்டாயிருந்தால்

மூளை, முதுகந்தண்டு இவைகளின் வியாதியினாலா? என்றும் அல்லது கெட்டியாயிருத்தலில் வித்தியாசப்பட்டால், இருதயத்தில் வியாதியினாலா? என்றும் பருமனில் வித்தியாசப்பட்டால், ஈரலின் வியாதியினாலா? என்றும் நிதானிப்பதும் ஆகிய இவைகளே.

இவ்விதம் மேற்கண்டவைகளை நிதானித்து அதற்குண்டாகியிருக்கிற காரணத்தை நன்றாய்த் தெரிந்து கொண்டுதான் சிகிச்சை செய்ய வேண்டும்.

முதல் முதல் தேகத்திற்கு, அல்லது இராஜ கருவிகளுக்கு அல்லது ஆண்குறி கோசம் ஆகிய இவைகளுக்கு உண்டாயிருக்கிற வியாதியை நீக்கி பின்பு உடலுறவு சக்தியை அதிகப்படுத்தும் மருந்துகளைச் செய்ய வேண்டியது. ஆகையால் ஒவ்வொன்றின் விவரங்களையும் பின்னர் எழுதுவோம்.

ஆண்மைக்குறைவின் முக்கிய பிரிவுகள்

தாது நஷ்டமானது (1) மணவாழ்க்கை இச்சையை அல்லது காமத்தைப் பற்றினது என்னும் முக்கியமான இரண்டு வகைகளாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

I-ஆம் பிரிவு

மணவாழ்க்கை இச்சையைப் பற்றினது.

மணவாழ்க்கை இச்சை அல்லது காமமானது விந்துவினின் றெழும் ஆவியினால் அல்லது அதன் இயக்கத்தினாலுண்டாகின்றது. ஆகையால் விந்துவைப் பற்றின ஆண்மைக் குறைவு மெனவுஞ் சொல்லலாம். இது பதினான்கு உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

1-வது, இரத்தக் குறைவினால் உண்டான தாது நஷ்டம்:— ஆகாரக் குறைவினால் தேகம் இளைத்துத் துர்ப்பலப்பட்டும் உண்டாகும். ஏனெனில், ஆகாரம் குறைந்து போவதனால் உடலுறவுக்குரிய விந்து ஆன்மா, காற்று ஆகியவை தம்மியற்கையிற் குறையும்.

2-வது, விந்து குறைவதனால் அல்லது விந்துவின் சக்தி குறைவதனால் உண்டாகும் தாது நஷ்டம், — உடலுறவிற்குரிய உறுப்புக்களில் விந்து அதிகப்பட்டாலொழிய போக சக்தியுண்டாகாது.

3-வது, விந்து அசைவற்றுண்டாகும் தாது நஷ்டம்:— எப்படியெனில் தம்பனம் அதாவது உடலுறவு அதிக நேரம் இருக்க வேண்டுமென்று, அபினி, கஞ்சா முதலியவைகள் சேர்ந்த மருந்துகளை உபயோகப்படுத்தி வந்ததனால் விந்து கெட்டியாய் உறைந்து அசையுஞ் சக்தியற்றுப் போகும்.

4-வது, இடையில் வெகுநாள் மணவாழ்க்கையைத் தவிர்த்ததனாலுண்டாகும் ஆண்மைக் குறைவு.

5-வது, மூளை பலஹீனப்பட்டுண்டாகும் ஆண்மைக் குறைவு.

6-வது, ஈரல் பலஹீனத்தாலுண்டாகும் ஆண்மைக் குறைவு.

7-வது, இருதயத்தின் பலஹீனத்தாலுண்டாகும் ஆண்மைக் குறைவு.

8-வது, குண்டிக்காய்களின் பலஹீனத்தைப் பற்றிய ஆண்மைக் குறைவு.

9-வது, அவலக்ஷணம் அல்லது வியாதியுள்ள ஸ்திரீகளின் சேர்க்கையாலும், அருவருக்கத்தக்க துர்க்கந்தமுள்ள ஸ்திரீகளின் சேர்க்கையாலும், மணவாழ்க்கையில் அருவருப்புண்டாயிருப்பதனால் உண்டாகும் ஆண்மைக் குறைவு.

10-வது, விந்து தெளிந்து அல்லது நீர்த்துப் போவதனாலுண்டாகும் ஆண்மைக் குறைவு.

11-வது, அழகிகள் அல்லது தன் மனதிற்கேற்ற ஒரு பெண்ணின் மேலேயே விருப்பமிருப்பதனால் மற்ற பெண்களிடத்தில் விருப்பம் எழாததனாலே உண்டான ஆண்மைக் குறைவு.

12-வது, சொப்பன ஸ்கலிதம் அதிகப்படுவதனாலுண்டான ஆண்மைக் குறைவு.

13-வது, இந்திரிய இழிவினால் அல்லது இந்திரிய ஒழுக்கினால் உண்டாகும் ஆண்மைக் குறைவு.

14-வது, விரைவாக விந்து வெளிப்படுவதால் உண்டாகும் ஆண்மைக் குறைவாகும்.

இவைகளின் அடையாளங்கள் முதலாகியவைகளையும் சிகிச்சைகளையும் ஆங்காங்கு கூறப்படும்; சில சிகிச்சைகளில் யோக முறையாய்ச் செய்து கொள்ள வேண்டியவைகளின் பெயரை மட்டும் இங்கும் அவற்றின் யோக முறையை மருந்து பாகத்திலும் பார்வையிட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

1-வது:— இரத்தக் குறைவினால் உண்டாகும்.

விந்து இன்னதென்பதும், அது உண்டாகும் விதம் இன்னதென்பதும், அதனின்றெழும் ஆவியினால் அல்லது அதன் இயக்கத்தினால் போக இச்சையும், அதனளவிற்குத் தக்கபடி உடலுறவு சக்தியுமுண்டாகிறதென்பதை நாமறிந்திருக்கிறோம்.

ஆகையால் ஆகாரக் குறைவினாலே இரத்தக் குறைவு உண்டாகி, தேகம் துர்ப்பலப்பட்டு, இளைத்துப் போய் விடுகிறபடியால் இரத்தத்திலிருந்துண்டாகும் விந்து குறைந்து போவதுமன்றி, ஆவி முதலாகியவைகளும் குறைந்து போம்.

அடையாளங்கள்:— அசக்தி, தேகம் வற்றிப் போதல் தேகம் மஞ்சள் வருணமாயிருத்தல், ஆகாரக் குறைவு முதலாகியவைகளாம். மற்ற குறிகள் வெளிப்படையானவையே.

சிகிச்சை:— செரிமானம் இல்லாதிருந்தால் முதல் முதலில் செரிக்கும் உணவு வகை அவுடதங்களைக் கொடுத்து, உதராக்கினியைக் கிரமப்படுத்தி, சத்துள்ளதும் சீக்கிரம் செரிமானம் ஆகக்கூடியதுமான ஆகாரங்களை உபயோகித்துச் செரிமான சக்தியைச் சரிப்படுத்திக் கொண்டு, பின்பு, வாதுமைப் பருப்பு, பிஸ்தா பருப்பு, (Kernel of the pistachio nut), பால், கொழுத்த ஆட்டிறைச்சி, முட்டை மஞ்சட்கரு முதலாகிய உடல் உரமாக்கத்தக்க ஆகாரங்களை அதிகம் சாப்பிட்டு வரவேண்டியது. நல்ல சுகமான நித்திரை அதிக நேரம் செய்ய வேண்டியது.

பரிசுத்தமான காற்றுள்ள இடங்களிலும், கூடுமானால் சிங்கார வனங்களிலும் வசிக்க வேண்டியது. மனதிற்கு ஆனந்தத்தையுண்டாக்கும் விளையாட்டுகள், கேளிக்கைகள், ஜாலவித்தைகள், வினோதக் கதைகள் முதலானவைகளால் மனதைச் சந்தோஷப்படுத்த வேண்டியது. தேகத்தில் சுபாவ பலமுண்டாகிற வரையில் உடலுறவை நீக்க வேண்டியது.

இரத்தத்தை விர்த்தியாக்கி விந்துவை விளைவிக்கும் லேகியங்களையும், லுபூபு (Luboob) களையும், பால் தீநீர் (extract of milk) மாங்கிஷத் தீநீர் (மாஉல்லிஹம்) (extract of mutton) ஆட்டிறைச்சி ரசம் (essence of mutton) முதலியவைகளை உபயோகித்து இரத்தத்தை விர்த்தி செய்து கொள்ள வேண்டியது.

இன்னும் அயசம்பந்தமான சிந்தூரம் திராவக முதலியவைகளையுங் கொடுத்துச் சுகுணமுண்டாயிருக்கிறது. சிவப்பு முள்ளங்கியில், 20-புடம் வைத்த அயச்செந்தூரம், சொர்ண லோக செந்தூரம், அயக்காந்த செந்தூரம் ஆகிய இவைகளும் உபயோகப்படும்.

2-வது, விந்து குறைவினால் அல்லது விந்துவின் சக்திக் குறைவினால் உண்டாகும்.

தாது நஷ்டம்

விந்து விந்துவாகி, விந்துக் குழல்கள் முதலியவைகளில் வரட்சி, கொழுமை, குளிர்ச்சி, சூடு ஆகிய இவைகள் அதிகப்படுவதனால் விந்துவின் சக்தி குறைந்து போம்.

a. விந்து, விந்துவாகி, விந்துக் குழல், ஆகிய இவைகளில் வரட்சியதிகரித்த அடையாளம்:—

விந்து அளவிற் குறைந்து தடித்ததாயிருத்தல் விந்து வருத்தத்தோடு வெளிப்படுதல், இலேசாயிருத்தல், கொழுமையாகிய பதார்த்தங்களாலும், குளிர்ந்த சலத்தில் இறங்கி உட்கார்ந்திருப்பதாலும் அதில் ஸ்நானம் செய்வதாலும் சுகம் ஏற்படும்.

சிகிச்சை:— கொழுமையாகிய பதார்த்தங்கள், காரங்கள், அவுடதங்கள், பானங்கள் ஆகிய இவைகளைக் கையாடி வருவதாலும், குளிர்ச்சியாகிய குளியல்கள் செய்து வருவதாலும், வேடிக்கைக் கதைகள், விநோத வித்தைகள் முதலாகியவைகளால் மனதைச் சந்தோஷப்படுத்தியும், ஆண் மறைவிடத்தில் சம்பங்கி எண்ணெய் முதலாகியவைகளைப் பூசி வருவதாலும், பசும்பால், அதிற்செய்த லேகியம், பசும்பால் தீநீர் முதலியவைகளை உபயோகிப்பதாலும் நிவர்த்தி செய்ய வேண்டும்.

b. விந்து, (விந்துவாகி) முதலியவைகளில் கொழுமை அதிகரிப்பதனால் விந்துவில் அதிக வழுவழுப்புண்டாகி விந்துவின் சக்தி குறைந்து தாது நஷ்டமுண்டாகும், அதன் அடையாளம்:—

விந்து அளவிலும், வழுவழுப்பிலும் அதிகமாயிருத்தல், சீக்கிரம் வெளிப்படுதல், ஆண்குறி சோர்வாயிருத்தல், குளிர்ந்த நீரில் குளிப்பதாலும் தண்ணீரில் உட்கார்ந்திருப்பதாலும் ஏதேனும் கெடுதி உண்டாதல், சூடான பதார்த்தங்களானால் சுகம் தோற்றல், சிறுநீர் வெண்மையாய்த் தடித்துக் கலங்கலாயிருத்தல் ஆகிய இவைகளாம்.

சிகிச்சை:— சீரகம், இலவங்கப் பட்டை முதலான சூடும் வரட்சியுமாகிய சரக்குகளாலும், திரிபலாதி லேகியத்தாலும் கொழுத்த சேவல் இறைச்சி, காடை, கௌதாரி முதலாகிய பறவைகளின் இறைச்சியில் இலவங்கப்பட்டை, சீரகம், சதாபிலை, (ஸஅத்தர்) இவைகளில் வேண்டிய இரண்டொன்றைச் சேர்த்து பொரித்துச் சாப்பிடுவதாலும், இன்னும் அவுடதபாகத்தில் சொல்லியிருப்பதில் சூடான அவுடதங்களை உபயோகிப்பதாலும் நிவர்த்தியாகும்.

c. விந்து, விந்துவாகி முதலியவைகளில் சூடதிகரிப்பதால்; சுக்கிலத்தின் சக்தி குறைந்துண்டான தாது நஷ்டத்தின் அடையாளங்கள்:—

சுக்கிலமானது நீர்த்து, மஞ்சள் வருணமாய் வருத்தமின்றி இலகுவாய் வெளிப்படுதல்; குளிர்ச்சியாகிய பொருள்கள், ஆகாரங்கள், பானங்கள், குளியல்கள் ஆகிய இவைகளால் சுகம் தோன்றுதல்.

சிகிச்சை:— காஹூ விதை, பருப்புக் கீரை விதை, சீமை வெள்ளரி விதை, கெக்கரிவிதை, பசும்பால், தயிர் முதலாகிய வஸ்துக்களை, விருப்பப்படி, லேகியமாயாவது கஷாயமாயாவது அரைத்துப் பிழிந்து பாலாயாவது தேகத்திற்குத் தக்கபடி சாப்பிட்டும்; பீஜங்களுக்கு (பனப்ஷா) வயிலெட்டு எண்ணெய், (Oil of violet flower) வாதுமை நெய் முதலியவை பூசி நயப்பாக்கியும், ஆட்டுக்குட்டி இறைச்சியோடு கீரையினங்களைச் சேர்த்துச் சமைத்துச் சாப்பிட்டும் குணமடையச் செய்ய வேண்டும்.

d.விந்து, விந்துவாகி முதலியவைகளில் குளிர்ச்சி அதிகரித்துண்டான தாது நஷ்டத்தின் அடையாளங்கள்:—

விந்து அதிகமாயுறைந்து அளவிற்குறைந்து தடித்திருக்கும், பசியாயிருப்பதாலும் சூடாகிய பொருள்களாலும் சுகம் தோற்றும், அதிக நேரம் இயக்க வேண்டும். சுகம் விந்துவும் அதிக வருத்தத்தோடு வெளிப்படும். அது அதிக குளிர்ச்சியாயுமிருக்கும்.

சிகிச்சை:— இஞ்சி முறப்பா, சருக்கரை சேர்ந்த பலகாரங்கள், கோழியிறைச்சியுடன் வால் மிளகு, லவங்கப்பட்டை, கோஷ்டம், சந்நராட்டகம் முதலாகிய சூடானவைகளைச் சேர்த்துச் சமைக்கப்பட்ட கறி, பெருங்காய லேகியம், மதன விந்துவாதி மாஜூன் மஹாலுபூபு லேகியம் என்னும் இவை முதலாகியவைகளைச் சாப்பிடுவதாலும், சூடான பதார்த்தங்களை இழைத்துப் பீஜ முதலாகிய ஸ்தானங்களில் பூசுவதாலும், கடலையூற வைத்த ஜலத்தைச் சூடான அவுடதங்களோடு சேர்த்துச் சாப்பிடுவதாலும், ஆண்சிட்டுக் குருவி, புறாக் குஞ்சு முதலாகியவைகளை அதிகமாய் உபயோகிப்பதாலும், புலிக் கொழுப்பை கோசத்தில் பூசுவதாலும், நிவர்த்தி செய்ய வேண்டியது.

குறிப்பு

சிலருக்கு உள்ளே சென்று சற்று நேரஞ் சென்ற பின்பு தான் விம்மல் உண்டாகும்; ஏனெனில் அவர்களுக்கு விந்து, விந்துவாகி முதலாகியவைகளில் குளிர்ச்சி யதிகரித்திருக்கும். ஆகையால் பெண்ணுட் சூடும், பல தடவையுண்டாகிய இயக்கத்தின் சூடும் உறைத்த பின் விம்மல் உண்டாகிறதென அறிய வேண்டியது.

இவ்விதம் தனித்தனியாகவும், குளிர்ச்சி வரட்சியாலும் அல்லது குளிர்ச்சி கொழுமையாலும், அல்லது சூடு வரட்சியாலும், சுக்கிலத்தின் தத்துவங் குறைந்து தாது நட்டப்படும் அவற்றின் விவரம் பின்வருகிற விதமாயிருக்கும்.

e. குளிர்ச்சி வரட்சி அல்லது வாதகுண மதிகரித்து விந்துவின் சக்தி குறைந்துண்டான தாது நட்டத்தின் அடையாளம்.

மணவாழ்க்கை அற்பமாயிருக்கும், இந்திரியம் குறைவாயிருக்கும்.

சிகிச்சை:— கொழுத்த சேவலிறைச்சியைத் துண்டுகளாய்ச் செய்து நன்றாய்ச் சலத்தினாற் கழுவி நெய்யிற் பொரித்து, கோதுமை ரொட்டியோடு சாப்பிட்டு வருவதாலும், வாதுமைப் பருப்பு, பிஸ்தாப் பருப்பு, பிந்தஃ பருப்பு, (Kernal of the filbertnut) கொப்பரைத் தேங்காய் ஆகியவைகளையும் மேற்றோல் நீக்கி நெய்யில் வறுத்துத் தினம் சாப்பிடுவதனாலும், பால் சாதத்திற் சருக்கரை சேர்த்தும், பால் பாயசம், பால் சருக்கரை (Milk Sugar) பால் லேகியங்கள் சாப்பிடுவதாலும், மாமிச பதார்த்தங்களில் சுக்கு, லவங்கப்பட்டை, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி ஆகிய இவைகளில் ஒன்றை அல்லது பலவற்றைச் சேர்த்துச் சமைத்துச் சாப்பிடுவதாலும், (ஹப்புல்பான்) (Habbul-ban) என்னும் விதையைக் கஷாயமிட்டுச் சாப்பிடுவதாலும் நிவர்த்தியாகும்.

f. சூடு வரட்சி, அல்லது பித்தகுண மதிகரித்து விந்துவின் சக்தி குறைந்துண்டான தாது நட்டத்தின் அடையாளம்.

மணவாழ்க்கையும், ஆண்மையும் அதிகமாயிருக்கும். விந்து குறைந்த அளவாய் வெளிப்படும்.

சிகிச்சை:— குல்கந்து (Confection of Roses) சீமை இலந்தைப் பழம்; புளிப்பு மாதுளங்கனி, சுரைக்காய், நெல்லிக்காய் முதலாகியவைகளின் முறப்பாக்களும்; (Murabbah) (Confections) கோழிக் கீரை, புளியாரைக் கீரை முதலாகியவைகளும் குறவை, வரால், உழுவை முதலிய நல்ல சத்து மீன்களும், ஆட்டின் தலையிறைச்சியும், வெங்காய ஷர்பத்து, சருக்கரை சேர்த்துக் காய்ச்சின பாலும், திராக்ஷப்பழம், சீமையத்திப் பழம், இனிப்பு மாதுளம் பழம், முலாம் பழம் முதலிய கனி வருக்கங்களும் ஆகிய இவைகளில் அவரவர்களின் தேகத்திற்குத் தக்கபடியாய்த் தினம் சேர்த்து வருவதால் நீங்கும்.

g. குளிர்ச்சி கொழுமை அல்லது சிலேத்தும குணமதிகரித்து விந்துவின் சக்தி குறைந்துண்டான தாது நட்டத்தின் அடையாளம்.

விந்து நீர்த்து அதிகமாய் வெளிப்படும்; மணவாழ்க்கையும் ஆண்மையும் குறைவாக இருக்கும்.

சிகிச்சை:— இஞ்சி முறப்பா, திரிபலாதி லேகியம், மேதாபிவிர்த்தி ஸ்தூலமாஜூன், முத்துமாஜூன், மஹாலுபூப் லேகியம்

முதலாகியவைகளும், அரைவேக்காடாக வேக வைத்த கோழி முட்டை (Half boiled eggs) யுடனே கொஞ்சம் லவங்கப்பட்டைத்தூள் சேர்த்தும் காடை, கௌதாரி, புறா, ஊர்க்குருவி இவைகளின் இறைச்சியில் லவங்கப்பட்டை, மிளகு, இஞ்சி, ஷாஜீறா, கடுகு, லவங்கம், வால் மிளகு, ஓமம், சீரகம், கடலைப் பருப்பு முதலியவைகளில் ஒன்றையல்லது இரண்டைச் சேர்த்துச் சாப்பிட்டு வருவதனால் இவ்வியாதி நீங்கும்.

இவ்விதம் மேற்கண்ட காரணங்களையும், குறிகளையும் தனித்தனியாக உணர்ந்தும், இரண்டிரண்டாய்த் தொந்தித்து அறிந்தும், அவ்வவற்றிற்குத் தக்கபடிக்கும் அவரவர்கள் உடல்வாகிற்கு ஏற்ப சாப்பிட்டு நிவர்த்தி செய்து கொள்ள வேண்டியது.

சுக்கிலத்தை அதிகம் விளைவிக்கிற அவுடதங்களையும், சுக்கிலத்திலுள்ள விகற்பங்களை நிவர்த்தி செய்யும் அவுடதங்களையும் அவுடதபாகத்திற் காண்க.

குறிப்பு

சூடுங் கொழுமையும் அதிகரிப்பதனால் விந்து குறையாது. ஏனெனில் இவற்றில் ஒன்றிற்கொன்று மாறுபடாமலிருப்பதால் ஆண்மை அதிக வலுவாயிருக்கும். இன்னும் சமரசமாகிய சூடானது விந்துவை யிளக்கி அதில் இயக்கத்தை யுண்டுபண்ணும். ஆனால் சூடானது அளவிற் அதிகப்பட்டால்தான் விந்துவை யெரித்துக் கரித்து விடும். கொழுமை தனியாய் அதிகரிப்பதாலும், விந்து குறையாமல் அளவில் அதிகமாகவே யிருக்கும். ஆனால் விந்துவின் சக்தி குறைந்திருக்கும். ஆகையால் சூடுங்கொழுமையும் அதிகரிப்பதால் விந்து குறைந்த அளவாயிராது எனத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

3-வது சுக்கில முறைந்துண்டான ஆண்மைக் குறைவு

சுக்கிலம் அசைவற்று உறைந்து போவதனால் ஆண்மைக் குறைவு உண்டாகும் எப்படியெனில், சுக்கிலத்தின் இயக்கத்தினால் சூடுண்டாகி உடல் உறவில் விருப்பம் உண்டாகும். ஆகையால் சுக்கிலம் அசைவற்றுப் போவதனால் அவசியம் வீரிய விர்த்தி குறையும்.

காரணம்:— இது பெரும்பாலும் தம்பனத்திற்கென்று அபினி, கஞ்சா, போஸ்தக்காய் முதலாகிய கட்டுவாதிகள் அல்லது அவை சேர்ந்த

அவுடதங்கள் ஆகிய இவைகளைச் சாப்பிடுவதால் உண்டாகும். இந்த அவுடதங்களினால் நரம்புகள் உற்சாகப்பட்டுக் குறுகிப் போமே தவிர, தம்பனத்திற்கு வேண்டிய கொழுமையும் சூடும் சமரசப்படாது. மேலும் இந்த அவுடதங்களினால் நரம்பு உற்சாகப்பட்டுக் குறுகிப் போவதாலே விந்து வெளிப்பட வேண்டிய விதமாய் நன்றாய் வெளிப்படாமல் உள்ளே தங்கி, அதன் சூடானது மூளை, இருதய முதலாகியவைகளில் தாக்குவதால் பலவித வியாதிகள் சம்பவிக்கும்.

ஆகையால் தம்பனத்திற்காக இவ்வகை அவுடதங்களை ஒருபோதும் பழக்கப்படுத்தப்படாது. இன்னும் இந்த அவுடதங்கள் தேகத்தில் பற்றியிருக்கிற வரையிற்றான் ஏதோ பலமாயிருப்பது போல் தோற்றும். பின்பு முன்னிலும் இரண்டத்தனை சோர்வை உண்டாக்குமென நன்றாயறிந்திருக்க வேண்டியது. ஆகையால் இரத்த விர்த்தி செய்து சூட்டையும் கொழுமையையும் சமரசப்படுத்தி, தம்பனத்தையுண்டாக்கும் அவுடதங்களைக் கையாடி வரவேண்டியது.

அடையாளங்கள்:— சுக்கிலம் ஒருவேளை அதிகமாய் வெளிப்பட்டாலும் உறைந்து கெட்டியாயிருக்கும். கோசத்தில் விம்மல் பூரணமாயுண்டாகாது. அதிக நேரம் இயக்கின பின் மிகு வருத்தத்தோடு விந்து வெளிப்படும். அது வெளிப்பட்டவுடன் மனக்கலக்கம் உண்டாகும்; ஒன்றிலும் ஆறுதலிராது.

சிகிச்சை:— சுக்கிலத்தைச் சூடாக்கி, இளக்கி உற்சாகப்படுத்தும் மருந்துகளை உபயோகிக்க வேண்டியது. அம்மருந்துகளாவன:—

மேதாபி விர்த்திஸ்தூல மாஜூன், விந்தாதி மாஜூன், மாஜூனேபுஜூர் முதலாகியவைகளாம்.

நெருஞ்சில் முள்ளு, சுக்கு இவை வகை ஒன்றுக்கு 20 கிராம். இதில் கால்படி தண்ணீர் விட்டு மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சி இறுத்து வடிகட்டி, அதற்குச் சமமாகப் பால் சேர்த்து அதில் 10 கிராம் அக்றோட் (Walnut) எண்ணெய் சேர்த்து, பீச்சாங் குழலால் ஆசனத்தில் செலுத்த வேண்டியது.

கின்னா (Khinna) அல்லது பீர்ஜட் (Berzad) அல்லது (Galbanam) என்னும் பிசின், புலிக் கொழுப்பு, அக்கிராகாரம், பருத்திக் கொட்டைப் பருப்பு இவை எல்லாம் சமமாய்ச் சேர்த்து அரைத்து, வேண்டிய தேங்காயெண்ணெயில் குழைத்து, துணியில் நனைத்துத் திரியாகச் செய்து ஆசனத்தில் செலுத்தி வருவதனாலும் சுகம் உண்டாகும்.

4வது இடையில் வெகுநாள் காரணமின்றி மணவாழ்க்கையைத் தவிர்ப்பதால் உண்டாகும் தாதுநஷ்டம்

வெகுநாள் ஒருவன் தகுந்த காரணமில்லாமல் மணவாழ்க்கை யில்லாதிருப்பதினால் சுக்கில விளைவிற் குறைவுண்டாகும். அப்படி விந்து குறைந்தவுடன் அவசியம் ஆண்மையு மில்லாமற் போம்.

அடையாளங்கள்:— வெகுநாள் மணவாழ்க்கை இல்லாதிருத்தல், கனவில் விந்து வெளியாதல் அற்பமாயுண்டாயிருத்தல், மணவாழ்க்கையில் மனதிற்குச் சந்தோஷமில்லாதிருத்தல் முதலியவைகளாம்.

சிகிச்சை:— பெண் ஆட்டக் கச்சேரியைப் பார்த்தல், அவர்கள் பாட்டுக் கச்சேரியைக் கேட்டல், வீணை முதலாகிய வாத்தியங்களை வாசித்தல், அழகிய ஸ்திரீகளின் படத்தைப் பார்வையிடல், பெண் அலங்கார நூல்களைப் பார்வையிடுதல் இவை முதலாகியவைகளாலும்.

இரத்தத்தை யுண்டாக்கி ஆண்மையை அதிகரிக்கச் செய்யும் ஆகாரங்களாகிய முட்டை மஞ்சட்கரு, ஆட்டுக் குட்டியிறைச்சி, பறவைக் குஞ்சுகள், பாயசங்கள், ஆட்டின் தலை, கால் இவைகளின் இறைச்சி முதலியவைகளை அதிகமாய்ச் சாப்பிடுவதினாலும் —

சம்பங்கி யெண்ணெய், மெழுக்குத் தைலம் முதலியவைகளைத் தனியாயாவது, ஒன்றோடொன்று சேர்த்தாவது, அல்லது ஆடு அல்லது மாட்டுப் பிச்சுநீர் சேர்த்தாவது அக்கராகாரத்தைப் பருத்திக் கொட்டைத் தைலத்திலிழைத்து, ஆண்குறி, பீஜம், அரை முதலிய ஸ்தானங்களில் பூசுவதினாலும் நிவர்த்தி செய்ய வேண்டியது.

5வது

இராஜ கருவிகளாகிய தலைமூளை, ஈரல், இருதயம், குண்டிக்காய் ஆகியவைகள் பலஹீனப்படுவதினாலும், சுக்கில சக்தி குறைந்து வீரிய விருத்தி குறையும்; ஆகையால் இவ்வகை வியாதிகளில் முதலில் வியாதியுள்ள உறுப்பிற்குச் சிகிச்சை செய்து பின்பு தாதுவிர்த்திக்கு அவுடதப் பிரயோகம் செய்ய வேண்டியது.

மூளையைப் பற்றின தாதுநஷ்டம்

மூளையானது தேகத்தோடும், போகத்திற்குரிய உறுப்புகளோடும், மற்ற உறுப்புகளோடும் எப்படிச் சம்பந்தப்பட்டிருக்கிறதென்றும், அதனுடைய தொழில் இன்னதென்றும் நம் முன்னர் தெரிந்து கொள்ள

வேண்டியது; ஏனெனில் போக சக்தியை யுண்டாக்கி, ஆண்குறியில் விம்மல் முதலானவையு முண்டுபண்ணி, போகத்தினால் உண்டாகும் இன்பம் ஆனந்தம் முதலியவைகளை மனதிற்குத் தெரியப்படுத்தும் கருவிகளில் பிரதானமானது மூளையேயாம். எல்லா நரம்புகளுக்கும் மூல ஸ்தானம் மூளையேயென்பது யாவருக்குந் தெரிந்த விசயம்.

சகல உணர்ச்சிகளுக்கும் மூளையே பிரதானம்; சரீரத்தின் மேற்படுகிற உணர்ச்சியை ஸ்பரிச நரம்புகளினால் மூளை யுணருகிறபடியால், மூளைக்கும் சதைகளுக்கும் ஸ்பரிச நரம்புகளால் சம்பந்தமுண்டு; எப்படியெனில் ஒரு வஸ்துவை யெடுக்க விரும்பும் போது புத்தியினாலுண்டாகின்ற தோற்றத்தை மூளை உணர்ந்து நரம்புகளுக்கு அறிவிக்கும்; அவை சதைகளைத் தூண்டி சலனத்தையுண்டாக்கி வஸ்துவைப் பற்றியெடுக்கச் செய்கின்றன. மூளையின் தொழில் மந்தப்படும். இவ்விதம் மூளைக்கும் மாம்சங்களுக்கும் சம்பந்தமுண்டாயிருத்தல் நமக்குத் தெரிந்திருக்கிறது.

இன்னும் மூளைக்கும் மனதிற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. எப்படியெனில், நரம்பு மண்டலத்தில் எப்பகுதியிலும் வியாதி காண அது மனசில் தாக்குவதினால் புத்தி தடுமாறும்; பைத்தியங் காணும் மனதிற்கு விகற்பசேஷ்டை நேரிடும்.

சிலவேளை அற்பமருந்து கொடுத்து மனதிற்குத் தைரியமும், வியாதியை மறக்கத்தக்கதான வேறு சில பராக்குகளையும் காட்டி வருவதினால் வியாதி முற்றிலும் மாறிவிடும். இவ்விதமே மனதில் உண்டாகும் பயம், கிலேசம், கோபம், சந்தோசம் முதலியவற்றினால் சிலவேளை மரணம் சம்பவிப்பதுமுண்டு. குண்டு போடாத துப்பாக்கியை ஆளுக்கு நேரே நீட்டி வெடி தீர்த்ததினால் அவர்கள் விழுந்து இறந்ததுமுண்டு. இன்ன நாளிலே இன்ன வியாதியால் ஒருவன் சாவான் என்றும், அல்லது இன்ன நாளில் அவன் இறந்து போவானென்றும் ஜாதகத்தில் குறிக்கப்பட்டிருத்தலால், சொன்ன தவணை கிட்டிவர அவ்வியாதிக்குரிய குணங்களெல்லாம் அவனுக்குண்டாகிறதென அஞ்சி, உண்ணாமல், உறங்காமல் சோர்வடைந்து ஐம்புலன்களும் கெட்டு இறந்து போவதுமுண்டு. ஆகையால், மூளைக்கும் மனதிற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு என்பது இவற்றால் நன்றாய்த் தெரிகிறது.

இன்னும் மூளைக்கும் இரைப்பைக்கும் ஓர் நரம்பினால் சம்பந்தமுண்டா யிருக்கிறது; எப்படியெனில், தலையில் அடிபடுவதனாலும், அசுத்தமான பதார்த்தங்களைப் பார்ப்பதனாலும், துர்க்கந்தமுடைய வஸ்துக்களை முகர்வதனாலும் வாந்தி யுண்டாகிறது. இப்படியே, சூடான பதார்த்தங்களைச் சாப்பிடுவதனாலும்,

பசியினாலும் தலை நோயுண்டாகிறது. ஆகையால் மூளைக்கும் இரைப்பைக்கும் சம்பந்த முண்டாயிருக்கிறது என்பதிலும் சந்தேகமில்லை.

மூளைக்கும் ஆண்மைக்குரிய கோசம் முதலாகியவைகளுக்கும் எவ்விதம் சம்பந்தமுண்டாயிருக்கிறதென்பது முன்பே நமக்குத் தெரிந்திருக்கிறது.

மூளையானது மாம்சம் முதலாகியவைகளோடு எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்வதனால் விந்துவிற்கும், கோசத்தின் இயக்க முதலாகியவைகளுக்கும் முக்கிய ஸ்தானமாகிய மூளைக்கும், மற்றவைகளுக்கும், மணவாழ்க்கைக்கு முன், அல்லது அக்காலங்களில் அல்லது அதன்பின் இன்னது செய்வதனால் இன்ன கெடுதி நேரிடுமென்பதும், இன்னது செய்வதனால் இன்ன நன்மை விளையுமென்பதும் நமக்கு நன்றாய் விளங்கும்.

மூளையும் இரைப்பையும் சம்பந்தப்பட்டிருப்பதால், மணவாழ்க்கைக்கு முன் இரத்தவிர்த்தியுள்ள ஆகாரங்களைச் சாப்பிட வேண்டுமென்பதும், சாப்பிட்ட உடனேயும் பசியாயிருக்கையிலும், மணவாழ்க்கை கூடாதென்று முன்னர்ச் சொல்லியிருக்கிற விவரமும் நன்கு விளங்கும்.

மூளைக்கும், மனம், மாம்சம் ஆகிய இவைகளுக்கும், நெருங்கிய சம்பந்தமுண்டாயிருப்பதால், மண வாழ்க்கைக்கு முன் ஆண் பெண் இருவரும் சந்தனம், ஜவ்வாது, அத்தர், பன்னீர் முதலாகிய நல்ல பரிமளாதிகளைப் பூசிக் கொள்வதனாலும், நல்ல வாசனையுள்ள வர்த்திகள் முதலாகிய தூபத்தினாலும், புஷ்பம் முதலாகியவைகளை அணிந்து கொள்வதனாலும் மூளைக்குப் பலமுண்டாகி, மனதிற்கு அதிக சந்தோஷமுண்டாகும். இவ்விதம் இருவர் மூளையும் பலப்பட்டும், மனம் சந்தோஷப்பட்டும், இருக்குங் காலங்களில் தரிக்கும் கருவானது பூரண வயதும், நல்ல விவேகமுள்ளதாகவும் அதிக ஊக்கமுடையதாகவும் நற்குணங்களை உடையதாகவுமிருக்கும்.

இருவரில், ஒருவருக்கு அல்லது புருஷன் ஸ்திரீயாகிய அவ்விருவருக்குமே மனதிற்கு வெறுப்பு அல்லது வெறுப்பை கொடுக்கத் தக்கதாகிய வியர்வை நாற்றம், வாய் நாற்றம், கற்றாழை நாற்றம் முதலியவைகளை நீக்கி, மனதிற்கு விருப்பை உண்டாக்கத் தக்கதான வாஸநா வஸ்துக்களையும், தாம்பூலம் முதலாகியவைகளையும் முக்கியமாய் அக்காலங்களில் உபயோகிக்கும்படி நமது சாஸ்திரம் கூறுகின்றது; ஆனால், சில

வைத்தியர்கள் பள்ளியறையில் புஷ்பம் வைப்பது கூடாதெனச் சொல்லியிருப்பதால் அவ்விடம் எப்போதும் கூடாதெனச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஏனெனில், இராக்காலங்களில் கெட்ட காற்று உண்டாக இடமாகும்.

ஆயினும், படுக்கையில் புஷ்பம் வைத்திருப்பது கூடாதெனச் சொல்வதுதான் நியாயமென்றும், மண வாழ்க்கை காலங்களில் புஷ்பம் முதலியவை அணிந்திருப்பது மனதிற்குச் சந்தோஷம் முதலாகியவைகளுக்குக் காரணமாயிருக்கிறபடியால் அக்காலங்களில் கூடாதென்பது நியாயமல்ல என்பதும் யாவரும் ஒப்புக் கொள்ளத் தக்கதே.

இன்னும் மூளையானது மாம்சாதிகளோடு எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பது நமக்குத் தெரிந்திருப்பதனால் அதன் வியாதியையும், அதன் பரிகாரங்களையும் தெரிந்து கொள்வதும் மிகப் பிரயோசனமுடையதாகவே இருக்கும்.

தலை மூளையின் பலவீனத்தைப் பற்றிய தாது நட்டத்தின் லக்ஷணமாவது:—

ஆண் குறியில் உணர்ச்சி குறைந்து தாமதமாகவும் வருத்தத்தோடும் இயக்கமுண்டாகும். மண வாழ்க்கையில் விருப்பமற்றேயிருக்கும். சில வேளை விருப்பமிருந்தாலும் அதி சீக்கிரத்தில் விந்து வெளியாகும். மண வாழ்க்கை இன்பம் தராது. சிலருக்குக் கொஞ்சமும் விம்மல் உண்டாகாது, ஆண் குறி தளர்ந்தே இருக்கும்.

காரணம்:- இராக் காலங்களில் நித்திரையின்றி அதிக நேரம் விழித்திருக்கும்படி பல தடவைகள் நேரிடுதல், வாசித்தல் முதலாகிய மனப் பயிற்சி அதிகமாய்ச் செய்தல், ஒன்றைப் பற்றிச் சற்றும் மறக்காது ஒரே கவலையாயிருத்தல், கடூரமான வெய்யிலில் அதிகமாய்த் திரிதல், என்னும் இவை போன்ற பல செய்கைகளாலும் சூடு, குளிர்ச்சி, கொழுமை, வறட்சி முதலியவை அதிகப்படுவதாலும் மூளை கெட்டு விடும்; அதனால் நரம்பு முதலியவைகளின் தொழிலில் வித்தியாசமுண்டாகும். இவ்வித்தியாசத்தால் விந்துக் கருவிகளின் சலனம் குறையும். அந்தச் சலனம் குறைவதனால் காமத்திற்குக் காரணமாகிய இந்திரியத்தினின்றெழும் ஆவியும், விந்துக்குள்ள ஓர் உற்சாகத் தன்மையும் குறைந்து போய்த் தாது நஷ்டமுண்டாம். குளிர்ச்சி, கொழுமை, சூடு, வறட்சி ஆகிய இவைகள் அதிகரித்து, மூளைச் சோர்வு ஏற்பட்டிருந்தால் அவ்வவ்வகை குணமுமுள்ள பதார்த்தங்களினால் நன்மையும் உண்டாகும். எப்படியெனில், குளிர்ச்சி அதிகரித்திருந்தால்

குளிர்ச்சியுள்ள வஸ்துக்களால் கெடுதியும், சூடான வஸ்துவினால் நன்மையும், சூடு அதிகரித்திருந்தால் இதற்கு மாறாகவும், கொழுமை அதிகரித்திருந்தால் கொழுமையான பதார்த்தங்களால் கெடுதியும், சூடானவைகளால் சுகுணமும், வரட்சி அதிகரித்திருந்தால் இதற்கெதிரான குணமும் தோன்றும்.

சிகிச்சை:- நித்திரையில்லாமை, மனப் பயிற்சி மிகுதி முதலிய காரணங்களாலே உண்டானால் அவற்றை உடனே நீக்க வேண்டியது. அசுத்த சத்துக்கள் மூளையில் சேர்ந்திருந்தால் திரிபலாதி லேகியம், கடுக்காய் லேகியம் முதலிய எளிதில் செரிமானமாகக் கூடிய பொருள்களைக் கொடுத்து அசுத்த சத்துக்களை நீக்க வேண்டியது. குளிர்ச்சி முதலாகியவை அதிகரித்திருந்தால் அதற்குத் தக்கப்படி அதற்கெதிரிடையான பதார்த்தங்கள் உபயோகித்துச் சரிப்படுத்த வேண்டியது. இவ்விதம் செய்த பின் மூளைக்குப் பலத்தைத் தரத்தக்க லேகியங்கள், மாஜூன்கள், லுபூப்கள் முதலியவைகளாலும், முகருகிற மருந்துகளாலும் மூளையைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டியது. மூளையைப் பலப்படுத்தித் தாருட்ய விர்த்தியை உண்டாக்கும் மருந்துகளை மருந்து செய்முறை பாகத்தில் காண்க.

6வது
ஈரலின் பலஹீனத்தைப் பற்றிய தாது நஷ்டம்

அதைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன் ஈரலின் அமைப்பைக் குறித்தும் அது மணவாழ்க்கைக்குரிய கருவிகளோடு எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பதையும் சிறிதளவு தெரிந்து கொள்ள வேண்டியது.

ஈரலானது உடம்பின் வலது பக்கத்தில் மேல் வயிற்றில் வலது விலாவுக்குள், வல சுவாசப் பையின் கீழே ஒரு அடி நீளம் குறுக்களவுள்ளதாகவும், மேற்புறம் உப்பலாயும், அடி வளைவாயும், முன் ஓரம் கூர்மையாயும், பின் பக்கம் உருளையாயும், நிறையில் நாலு இராத்தலுள்ளதாயும், கருஞ்சிவப்பு நிறமான ஒருறுப்பு. தேக உறுப்புக்களுக்குள் இது பெரிது. இராஜ கருவிகளில் இதுவும் ஒன்று. தேகான்மா இதிற்றான் உற்பத்தியாகிறது; யூநாநி சாஸ்திரப்படி, துடை நரம்புகளுக்கு இதுவே மூல தானம்; மேலும், இரைப்பையில் சீரணித்த அன்னரசத்தை இது இரத்தமாக்கி, சுத்தப்படுத்தித் தேக போஷணைக்காதாரமாகச் செய்யும். இதற்கும் குண்டிக் காய்களுக்கும் நரம்புகளினால் சம்பந்தமுண்டாயிருக்கிறது; இவ்விதமே இதற்கும் இருதயத்திற்கும் ஓர் நரம்பினால் சம்பந்தமுண்டு; இவ்விதம் ஈரலானது

தேகத்தை தேகான்மாவினால் போஷித்துக் காம இச்சையை உண்டாக்கி, ஆண் மர்ம ஸ்தானத்தைப் பருக்கச் செய்யும் குணமுடையது.

ஈரலின் சோர்வு

லக்ஷணம்:- ஈரலின் சோர்விற்குக் காரணம், அனேகமிருப்பது போலவே அதன் அடையாளங்களும் அநேகம்; அவைகளில் மிகவும் முக்கியமானவைகளாவன:—

மலமும், சிறுநீரும், ஊன் கழுவின நீரைப் போலிருத்தல், தேகமிளைத்தல், பசி தீபனக் குறைவு, அல்லது சுத்தமாய் பசி தீபனமில்லாமலே இருத்தல், வலது பாகத்து மேல் விலாவிலிருந்து கீழ் விலா மட்டும் நெடுகவும் நோயுண்டாதல் முக்கியமாய்ச் சாப்பிட்டுச் சற்று நேரம் சென்றபின் நோயுண்டாதல், தேகம் முக்கியமாய் வெளுத்தும், கொஞ்சம் மஞ்சள் வருணமாகவும் சில வேளை அதிகமாய் மஞ்சள் வருணமாகவும் இருத்தல்.

சில வேளை இரைப்பையின் சோர்வினாலும் ஈரல் சோர்வேற்படும்.

இரைப்பையின் சோர்வின் முக்கிய அடையாளங்களாவன:

மந்தப் பசி, ஈரற் குழியில் வேதனை, வாயுவிர்த்தி, வயிறு உப்பிசம், அக்கிரமமான மலம், புளித்த ஏப்பம், பித்த நீர், வாந்தி இவை முதலியவைகளாம்.

இரைப்பையும், ஈரலும் சோர்வடைவதால் நல்லுதிரக் குறைவுண்டாகும்; அதனால் சுக்கிலக் குறைவுண்டாகும்; இவ்விதம் சுக்கில சக்தி குறைந்து தாது நஷ்டம் உண்டாகும்.

ஈரலில் சோர்வு பற்றிய ஆண்மைக் குறைவின் அடையாளங்கள்:—

பசிதீபனக் குறைவு, உடலுறவில் குறைந்த விருப்பம், செரியாமை, இந்திரியம் அதிசீக்கிரம் வெளிப்படுதல், அப்படி வெளிப்பட்டும் உடலுறவிற்குப் பின் அதிக ஆயாசமும் களைப்பும் உண்டாயிருத்தல், இருந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவும் சக்தி அற்றிருத்தல் ஆகிய இவைகளாம்.

சிகிச்சை:— ஈரலில் சோர்வுண்டானால் அவசியம் இரைப்பையிலும் துர்ப்பலமுண்டாயிருக்கும். இவ்விதமே இரைப்பை துர்ப்பலப்பட்டால் ஈரலும் அவசியம் துர்பலப்பட்டு வியாதி காணும். எப்படியெனில் இரைப்பைதான் எல்லாவற்றிற்கும் ஆதாரமானதென்ச் சொல்ல வேண்டும்; ஏனெனில், மற்ற உறுப்புக்களின் நல்ல நிலை அதைச் சார்ந்ததாயிருக்கிறது. எந்த ஆகாரமும் முதல் முதல் இரைப்பைக்குள் செல்ல அதை இரைப்பை பக்குவப்படுத்தி மற்றவைகளுக்கு ஆகாரமாகும்படி செய்கிறது.

ஆகையால், முதல் முதல் எந்த வியாதிகளிலும் இரைப்பையைக் கவனிக்க வேண்டும்.

அப்படியே இரைப்பைக்கும் பலத்தைக் கொடுக்கும் மருந்துகளை உபயோகித்து அதன் சோர்வை நிவர்த்தி செய்து, பின்பு தாருட்ய விர்த்தி அவுடதங்களை உபயோகிக்க வேண்டியது. இரைப்பைக்குப் பலத்தைத் தரும் அவுடதத்தின் விவரம் அவுடத பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பின்பு ஈரலுக்கும் பலத்தைத் தரும் தனி அல்லதுயோக முறையாய்ச் சொல்லப்பட்டிருக்கிற அவுடதங்களை உபயோகித்து அதனது சோர்வை நீக்கி, பின்பு தாருட்ய விர்த்தி அவுடதங்களையுபயோகிக்க வேண்டியது.

7-வது இருதயத்தின் சோர்வைப் பற்றிய ஆண்மைக் குறைவு

இதைப் பற்றி நாம் அறிந்து கொள்வதற்கு முன் இருதயத்தின் அமைப்பையும், அதுவும் தேகத்தோடு, எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பதையும் சுருக்கமாய்த் தெரிந்து கொள்வோமாக:—

இருதயமானது உரத்த தசை முதலியவைகளால் ஏற்பட்டு தாமரை முகை, அல்லது கொட்டைப் பாக்கு வடிவமுள்ளதாய் உரத்த சவ்வினால் திரையிடப்பட்டிருக்கிறது. ஒருவனுடைய இருதயம் அவனுடைய பொத்திய கையளவாயிருக்கும். இருதயமானது, மார்புக்குள் கொஞ்சம் குறைய நடுவிலே, இடப் பக்கமாக, நுரையீரல் இரண்டிற்கும் இடையே வைக்கப் பட்டிருக்கிறது. இது சாய்ந்து அடியானது வலது புஜத்தை நோக்கியும், நுனியானது கீழுக்கிறங்கியும், இடது பக்கம், 5,6-பழுவெலும்புகளுக்கும் மத்தியிலும் இருக்கும். கீழ்ப்புறம் தட்டையாய் ஈரல் தாங்கியின்மேல் படுத்துக் கொண்டு மேற்புறம் உபுக்கலாயும் இருக்கும். இன்னும் இது இரண்டு அறைகளாக வகுக்கப்பட்ட ஓர் சவ்வினால் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இருதயத்தின் இடது ஜடரத்திலிருந்து ஒரு பெரிய குழல் உற்பத்தியாகும். அதற்கு (ஷராயின்) பெருநாடி என்று பெயர். அந்த நாடியானது அனேக கிளைகளாய்ப் பிரிந்து தேகம் எங்கும் போய்ப் பரவியிருக்கின்றது. வலது ஜடரத்தில் இருந்து வேறொரு குழல் உற்பத்தியாகி நுரையீரலுக்குப் போகும். அதற்குப் புப்புஸ நாடி என்று பெயர். இவை இருதயத்தின் ஏவற் கருவி எனப்படும். இருதய கமலமானது துடி நரம்பு முதலிய தனது ஏவற் கருவிகளினால் ஆத்ம சக்தியைத் தேகமெங்கும் பரவச் செய்து உயிர்ப்பிக்கும்.

தேகத்தின் எல்லா உறுப்புக்களிலும் முக்கியமானவை மூளை, இருதயம், ஈரல், குண்டிக்காய் ஆகியவைகளாம். அவற்றிற்கு இராஜ கருவிகள் என்று பெயர். இவ்விராஜ கருவிகளில் சிரேஷ்டமானது இருதயமேயாம்; ஏனெனில், இது நல்ல நிலையிலிருந்தால் மட்டுந்தான் மற்றெல்லா உறுப்புக்களும் நல்ல நிலையிலிருக்கும். ஆகையால் தேகத்தில் இதைத்தான் இராஜா என்று சொல்ல வேண்டும். ஆத்ம சக்தியைத் தரும்படியாக இது தேகத்தின் நடுவில் வைக்கப்பட்டிருக்கிறது. அப்படிக்கில்லாமல் ஒரு உறுப்பிற்குச் சமீபமாய் வைக்கப்பட்டிருந்தால் சூடு, குளிர்ச்சி ஆகிய இவைகள் அதிகப்பட்டும் குறைந்தும் வியாதியுண்டாகும். எப்படியெனில் ஈரலின் சூடும், இருதயத்தின் சூடும் ஒன்றாகித் தேகத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரந்தான் அதிக சூடாயிருக்கும். அப்பொழுது மறு பக்கத்தில் சூடு குறைந்து போய் பல கெடுதிக்கிடமாகும்; அல்லது மண்ணீரலுக்கே சமீபமாய் இருதயமானது வைக்கப்பட்டிருந்தால் மண்ணீரலின் சுபாவ குணமாகிய குளிர்ச்சி அதிகம் குறைந்து போம்; அதனாலும் பல கெடுதிகள் விளையும்.

இன்னும் சில பண்டிதர்கள் இருதயத்தைச் சூரியனுக்கொப்பிடுகிறார்கள். ஏனெனில், சூரியனானவன் எல்லாக் கிரகங்களுக்கும் மத்தியிலிருந்து கொண்டு அவைகளுக்கு ஒளியைக் கொடுக்கிறதுபோல, இருதயமானது தேகத்தின் மத்தியிலிருந்து கொண்டு எல்லா உறுப்புக்களுக்கும் ஆத்தும சக்தியைச் செலுத்தி உயிர்ப்பிக்கிறது.

இருதயமானது மிகவும் உரத்தும், நெருக்கமுள்ளதுமான தசையினால் ஏற்பட்டிருப்பதேனெனில், நெருக்கமாய் உரத்திருக்கிற வஸ்துவில் சூடானது ஸ்திரமாய் நிற்கும். இன்னும் இருதயமானது தன் சூட்டினால் மூளையின் குளிர்ச்சியைச் சமப்படுத்த வேண்டியதிருக்கிறது. இஃது மற்ற உறுப்புக்களைப் போல ஓர் அபாயத்தைச் சகிக்க முடியாது. அதில் அபாயம் வெகு சீக்கிரம் நேரிடும். இதற்காகவே இருதயமானது இவ்விதமாய் அமைக்கப்பட்டு உரத்த திரைக்குள்ளிடப்பட்டு அதிக பத்திரமாய் வைக்கப்பட்டிருக்கிறது.

தேகத்திலுள்ள எல்லா உறுப்புக்களைப் பார்க்கிலும் முதல் முதல் இருதயத்திற்றான் உயிர் உண்டாகிறது. ஆனால், எல்லா உறுப்புக்களைப் பார்க்கிலும் பின்னால் இருயதத்திலிருந்து உயிர் நீங்குகிறது. எல்லா உறுப்புக்களைப் பார்க்கிலும் இருதயத்தில் இருந்து கடைசியில் உயிர் நீங்குவதற்குத் திருஷ்டாந்தம், தலையறுப்புண்ட சில கோழிகளை அல்லது சில பறவைகளைப் பார்வையிட்டால் விளங்கும்.

மூளையானது நமது புத்தி, ஞாபகம், சித்தம் ஆகிய இவைகள் தோன்றுமிடமாகவும், சகல உணர்வுகளுக்கும் இருப்பிடமாகவும் இருந்தபோதிலும் ஆளுக்கு வருத்தமில்லாமல் மூளையை வெட்டி

அதிலுள்ள சில பங்கை எடுத்து விடலாம். அப்படி எடுக்கையில் அது எடுக்கப்படும் ஆள் தன்னறிவோடிருக்கலாம். ஆனால், இருதயத்தில் அவ்விதம் வெட்டி எடுத்துச் சீவிப்பது அரிதாய் முடியும்.

யாருக்கு இருதயமானது பெரிதாகவும் அதிக சூடாகவும் இருக்கிறதோ அவரவர்களுக்குத்தான் அதிக தைரியமும், அதிக பலமும், அதிக ஆண்மையும் உண்டாயிருக்கும். இருதயம் பெரிதாயிருந்து, அதற்குத் தக்க சூடில்லாது குறைந்திருந்தால் அவ்வளவு தைரியம் முதலியவை காணப்படா. இவை முயலிலும் ஒட்டையிலும் காணலாம். இருதயம் சிறிதாயிருந்தாலும் சூடு அதிகப்பட்டிருப்பவர்களுக்கு அதிக தைரியமும் ஊக்கமும் இருக்கும்.

இக்காரணங்களாலேயே இருதயமானது இராஜ கருவிகளில் முதன்மையானதென்றும், ஜீவாக்கினியின் ஊற்றுக் கண் என்றும், ஜீவான்மாவின் களஞ்சியமென்றும் சொல்லப்படும்.

இவ்வருமை பொருந்திய பெருமை தங்கிய இருதயமானது ஆண் மறைவிடத்தோடு எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிற தென்பதும், அதனால் மண வாழ்க்கைக் காலத்தில் ஆண் மறைவிடத்திற்கு விம்மல் முதலிய சக்தி எவ்விதம் உண்டாகிறதென்பதும் நாம் முன்னர் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

இன்னும் இருதயமானது மூளையோடு நெருங்கிய சம்பந்தமுடையதாயிருப்பதுவும் நமக்குத் தெரியும்.

ஆகையினால், ஆத்தும சவுக்கியத்திற்காக அவசியம் இவ்வுறுப்பை எவ்வளவு விழிப்போடு காப்பாற்றல் வேண்டுமென்பது நன்கு விளங்கும்.

இனி அதன் சோர்வினால் உண்டாகும் ஆண்மைக் குறைவின் காரணத்தைக் கூறுவாம். அவையாவன:—

அதிகக் கஷ்டப்படுவதாலும், நெடுநாளாக உண்டாயிருக்கிற வியாதியாலும், அதிகமாய் பசித்திருப்பதாலும், அதிக வாந்தியாலும், அதிக சந்தோஷத்தாலும், அளவிற்கதிகமாகிய மண வாழ்க்கையாலும், இன்னும் இதைப் போலொத்தவைகளாலும் கடினமான தேக துன்பத்தாலும், சூடான நஞ்சினங்களைச் சாப்பிடுவதாலும், இருதயத்தில் உள்ள ஆத்ம சக்தி கரைந்து குறைந்து போய் ஜீவாக்கினியும் குறைந்து இருதயம் கெட்டு விடும்.

இன்னும் சாராய இனங்களை அருந்துவதாலும், விரைவில் உண்டான அதிக கவலையாலும் அல்லது அதிக வருத்தத்தாலும், இருதயமானது சுருங்கி, அதிலுண்டாயிருக்கிற சன்ன துவாரங்கள்

அடைப்பட்டுப் போவதால் ஆத்ம சக்தி குறைந்து இருதயம் சோர்வடையும்.

குளிர்ச்சியாகிய நஞ்சினங்களினாலும், துடி நரம்பு, புடை நரம்பு முதலியவைகளில் வறட்சி உண்டாவதாலும், ஆத்ம சக்தி குறைந்து இருதயம் கெட்டு விடும்.

குறிப்பு

அதிக சந்தேஷத்தினாலும், அதிக இன்பத்தினாலும், இருதயமானது மலர்ந்து போவதாலும், ஆத்ம சக்தி அதிகம் வெளிப்பட்டுக் குறைந்து போகிறது.

தேகத்தில் அதிக நோயிருக்குங் காலங்களில், அவைகளை எதிர்க்கும்படியாகவும், தாங்கிக் கொள்ளும் தேக சுபாவ பலம், மனமுயற்சி ஆகிய இவைகளைப் பிரயோகிப்பதால் இருதயத்திலுள்ள ஆத்தும சக்தி குறைந்துபோம்.

இவ்விதம் ஆத்தும சக்திகளும், ஜீவாக்கினியும் குறைந்து பலத்தைக் குறைக்கும். இவை குறையும்படி சம்பவிப்பதால் இருதயம் துர்ப்பலப்பட்டுப் போய் இருதயமும் மூளையும் சீர்கேடடைந்தவுடன் ஆண்மையை உண்டாக்கும் ஆத்ம சக்தியும், ஆண் மர்ம ஸ்தானத்தின் எழுச்சி, பருத்தல் முதலாகியவைகளை உண்டாக்கும் சக்தியும் சுத்தமாயுண்டாகாது. ஒருக்கால் உண்டாயினும் குறைவாயுண்டாகும். அப்பொழுது அவசியம் தாது நஷ்டமுண்டாகும்.

இருதய சோர்வினால் ஆண்மைக் குறைவுக்கு அடையாளங்கள்

நாடியோட்டம் சுஷ்கித்துத் துர்ப்பலப்பட்டிருக்கும். ஆண் மர்ம ஸ்தானமானது மண வாழ்க்கைக்கெத்தனித்துத் தேகமொன்றோடொன்று சந்திக்கும்போது சோர்வடைந்து சுக்கிலம் வெளியாகும். அதிக நேரஞ் சென்று கெட்டியாகும். ஆண்மை மிகவும் அற்பமாயுண்டாகும். மண வாழ்க்கையினால் சொற்ப இன்பமுண்டாகும். மண வாழ்க்கைக்குப் பின் மயக்கம் காண்பதுபோல் தோன்றும். இருதயம் துர்ப்பலப்பட்டு சூடு அதிகரிப்பவர்களுக்குத் தாகமும், இருதயத் துடிப்பும் உண்டாகும்.

இந்த வியாதிக்காரர்களின் சுபாவ குணமாவது: வெட்கத்தாலும், பயத்தாலும், சந்தோஷத்தாலும், மண வாழ்க்கைக்கு அஞ்சி சும்மாயிருப்பதுவேயாம்.

சிகிச்சை:— வியாதியுண்டான காரணத்தைத் தெரிந்து அப்பழக்கங்களை யுடனே நீக்க வேண்டியது; பின்பு இருதயத்திற்கு வலிமையை உண்டாக்கச் சந்தோஷப்படுத்தும் அவுடதங்களையும், துளையிடாத நல்ல முத்து, பட்டு இரத்தினங்கள் ஆகிய இவைகளின் பஸ்பங்களாலும், அல்லது அவை சேர்ந்த மாஜூன், லேகியம் முதலாகிய

மருந்துகளாலும், பிடில் முதலிய நல்ல வாத்தியங்களை வாசிப்பதில் அல்லது கேட்பதில் மனதைச் செலுத்துவதாலும், வியசனம், மனக்கிலேசம், மன வருத்தம் முதலியவைகளை நீக்குவதாலும், கொத்துமல்லிக் கீரைச் சாறு அரை ஆழாக்கு, பசும்பால் கால் ஆழாக்கு, இவற்றில் 35 கிராம் சீனாக் கற்கண்டைத் தூள் செய்துபோட்டு காலையில் மட்டும் சிலநாள் சாப்பிட்டு வருதலாலும் குணமாகும். இன்னும் இருதயத்திற்குப் பலத்தைக் கொடுக்கும் தனி அவுடதங்களையும், யோக முறையான அவுடதங்களையும் அவுடத பாகத்தில் காண்க.

குறிப்பு

இராஜ கருவிகள் தங்களில் ஒன்றுக்கொன்றும் தேகத்தோடும் சம்பந்தப்பட்டிருப்பதால் இருதயத்திற்கும் மூளைக்கும் நெருங்கிய சம்பந்தமும், இரைப்பைக்கும் ஈரலுக்கும் குண்டிக்காய்களுக்கும் நெருங்கிய சம்பந்தமும் உண்டென அறிதல் வேண்டும். ஆகையால், இருதயம் சோர்வடைந்தால் மூளையும் சோர்வடையும்; மூளை சோர்வடைந்தால் இருதயமும் சோர்வடையும். ஆகையால், ஒன்றிற்குச் சிகிச்சை செய்தால் மற்றொன்றிற்கும் தக்கதாகவே செய்ய வேண்டும். இவ்விதமே ஈரல் இரைப்பை வியாதிகளிலும் காண்க.

8வது குண்டிக்காய்களின் சோர்வைப் பற்றிய தாது நஷ்டம்

குண்டிக்காய்கள் எனினும், மூத்திரக் குண்டிக்காய்கள் எனினும், மூத்திரப் பிண்டங்கள் எனினும், பிருக்கங்கள் எனினும் ஒன்றேயாகும்.

இதைப் பற்றித் தெரிந்து கொள்ளுமுன் குண்டிக்காய்களைப் பற்றிச் சிறிதளவு தெரிந்து கொள்வோம்.

குண்டிக்காய்கள் இரண்டுள; இவை இடுப்பில் முதுகு முள்ளந்தண்டிற்கு வலமிடமென்னும் இரண்டு பக்கத்திலும் பக்கத்திற்கொவ்வொன்றாக ஒட்டிக் கொண்டிருக்கின்றன. இவை ஹஸ்திபந்தனியால் தம்மிடமாகிய முதுகின் கீழ்த் தொடுக்கப் பட்டிருக்கின்றன. தசை, கொழுப்பு,நரம்பு, நாடி ஆகிய இவைகளால் பொதியப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குச் சுய இச்சையாய் அசையும் சக்தி கிடையாது. ஆனால், தன் மேலுள்ள திரைக்கு அந்த சக்தி அதிகமுண்டு.

இவை ஒவ்வொன்றும் ஈரலோடு நரம்புகளினால் சம்பந்தப்பட்டிருக்கிறது. இவ்விதம் இந்திரியத்திற்காதாரமாகிய இரத்தமானது குண்டிக்காய்களில் வரும். குண்டிக்காய்கள் இரத்தத்திலிருக்கிற கெட்டநீரையும், உப்புகளையும் பிரித்து மூத்திரமாய்

வெளிப்படுத்தி இரத்தத்தைப் பரிசுத்தமாக்குகின்றன. இவற்றிற்கும் சருமத்திற்கும் அதிக சம்பந்தமுண்டு. ஆகையினால்தான் மூத்திரம் அதிகமானால் வியர்வை குறைகின்றது; வியர்வை அதிகமானால் மூத்திரம் குறையும். இன்னும் குண்டிக்காய்களுக்கும் மூளைக்கும் சுக்கில நரம்புகளினால் சம்பந்தமுண்டு. இதுவுமன்றி அவை பீஜங்களோடு விந்து வாகிகளாலும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. விந்துவிற்காதாரமாகிய இரத்தமானது மூத்திரப் பிண்டங்களில் வரும். ஈரலிலிருந்து முன் விவரித்தபடி அப்பிருங்கங்கள் அந்தச் சத்திலுள்ள நீரையும் உப்பையும் பிரித்துச் சுத்தமாக்கினபின் அவைகளுக்கும் பீஜங்களுக்கும் இடையிலுள்ள நரம்புகளில் வரும்.

(இந்த நரம்புகள் அதிக வளைவுகளுள்ளவைகளாக சர்வ வல்லமையுள்ள உண்மைப் பண்டிதரால் உண்டாக்கப் பட்டிருப்பதன் காரணமாவது; இரத்தமானது அதிகம் பக்குவப்பட வேண்டியதற்காகவே) இவ்விதம் பக்குவப்பட்டுச் சிவப்பு மாறி, சற்று வெண்மையாகி முடிவில் பீஜங்களில் சென்று அவற்றின் சூட்டினால்தான் முழுவதும் நன்றாய்ப் பக்குவப்பட்டுச் சுயமாகிய விந்துவாகிறது. இக்காரணத்தினாலேயே குண்டிக்காய்களும் பீஜங்களும் சமரசமாகிய சூடாக இருக்கப் பெற்றவர்களுக்கு விந்து அதிகமாக வளைவதுந்தவிர சங்கம சக்தியும் அதிகமாயிருக்கிறது.

குண்டிக்காய்களுடைய சோர்வினால் ஆண்மைக் குறைவின் காரணமாவது:—

நீர்ப்பேதிக்கு அடிக்கடி சாப்பிடுவதாலும், மிதமற்ற மண வாழ்க்கையாலும், அவைகளில் அடிபடுவதாலும் அல்லது குண்டு, நெருப்பு முதலியவைகளால் உண்டான காயங்களாலும், சதா நடையாலும், நெடுந்தூரம் பிரயாணம் செய்து உண்டான வருத்தத்தாலும், குதிரை முதலியவைகளில் தாறுமாறாய் ஏறி அதிகமாய்ச் சவாரி செய்வதாலும், இவ்விதமாகிய வேறு வருத்தங்களாலும், அவை அதிகங்குலுங்கி, குண்டிக்காய்களின் திரை தளர்ந்து, நரம்புகளின் துவாரங்கள் விரிந்தகன்று போவதாலும் அவை துர்ப்பலப்பட்டு ஆண்மைக் குறைவு ஏற்படும்.

இன்னும் குண்டிக்காய்கள் மெலிந்து போவதாலும், அவை துர்ப்பலப்பட்டு ஆண்மைக் குறைவ ஏற்படும். குண்டிக்காய் மெலிவதற்குக் காரணமுமனேகம். அவற்றில் முக்கிய மானவைகளாவன.

அவற்றில் சூடு முதலியவை அதிகப்படுவதாலும், மிதமற்ற மண வாழ்க்கையாலும், அதிக வாந்தியாதல், அதிக பேதியாதல் முதலியவைகளாலும் அவை மெலிந்து போம்; ஆனால் பெரும்பாலும் சூட்டினாலேயே மெலிவதுண்டு.

குண்டிக்காய்கள் மெலிந்து போவதாலும் வேறு காரணங்களாலும் அவை துர்ப்பலப்பட்டுண்டான ஆண்மைக் குறைவின் அடையாளம்.

அவை மெலிந்து துர்ப்பலப்பட்டிருந்தால், பெரும்பாலும் நீர் வெளுத்திருத்தல், சிறுநீர் கழிக்கும்போது வலி, தேகத்தில் அசக்தி, உடலுறவில் சக்திக் குறைவு, இடுப்பின் பின் பக்கத்தில் சதா காலமும் நச்சு வலி ஆகிய இக்குறிகள் உண்டாயிருக்கும்.

அபாய முதலாகிய காரணங்களினால் குண்டிக்காய்கள் துர்ப்பலப்பட்டிருந்தால், சுபாவமாயுண்டாகும் மண வாழ்க்கை இச்சை குறையும். விந்து நன்றாய்ப் பக்குவப்பட்டு வெண்மை ஆகாதிருக்கும். மண வாழ்க்கைக்கெத்தனிக்கும்போது, பயங்கரமான சப்தம் கேட்பது போல் தோன்றும்; ஆண் மறைவிடம் சோர்வடைந்து போகும்.

சில சமயம் குனியும்போது அல்லது நிமிரும்போது அல்லது ஒரு பக்கமிருந்து மறு பக்கம் திரும்பும்போது முக்கியமாய் நோயுண்டாதல், மண வாழ்க்கை சக்தியும் சிறுநீர் கழிக்கும்பொழுது சக்தியும் மிகக் குறைதல், புதிய மாமிசத்தைக் கழுவின நீரைப் போன்ற நீரிறங்கல், அந்த நீரை அசையாமல் அதிக நேரம் வைத்துப் பார்த்தால் அடியில் வண்டல் படிதல், நீரின் மேல் கடல் நுரையைப் போல் நுரையுண்டாதல் ஆகிய இவைகளாம்.

குறிப்பு

சாப்பிட்டு ஆகாரம் இரைப்பையில் சீரணித்த பின்பே மேற்கண்ட விதமாய் இறைச்சியைக் கழுவின நீரைப் போல நீரிறங்கும். சாப்பிட்டவுடனே இருக்கும் நீரானது தண்ணீரைப் போலவேயிருக்கும்.

சிகிச்சை:— இவற்றிற்குத் துர்ப்பலமுண்டாகுங் காரணங்களை யுடனே நீக்க வேண்டியது; அவை மெலிந்து போனதால் தாது நஷ்டமுண்டாயிருந்தால், அவை மெலிவதற்கான காரணங்களை முதன்முதலில் நீக்கி, பின் அவை கொழுக்கும்படி உடல் வலிவூட்டும் மருந்துகளை உபயோகிக்க வேண்டியது, அவையாவன– பாதுமைப் பருப்பு, பிஸ்தாப் பருப்பு (பிந்தஃ) (Fiddakh) பருப்பு என்னும் இவைகளைச் சாப்பிடுவதனாலும் தேங்காயுடன் சர்க்கரையைச் சேர்த்து அதிகமாய்ச் சாப்பிடுவதனாலும் கோழிக் கொழுப்பு, வாத்துக் கொழுப்பு ஆகிய இவைகளை நெய்யில் வறுத்துச் சாப்பிடுவதனாலும் குணமாம்.

இப்படி முக்கியமாய்க் கோதுமை ரொட்டியோடு சாப்பிட வேண்டியது; கொழுப்பினங்களைச் சாப்பிடும் போது அவை இளஞ்சூடாயிருக்க வேண்டியது; அப்படிக்கில்லாமல் ஆறினபின் சாப்பிடுதல் கூடாது; ஏனெனில், குளிர்ந்திருப்பதனால்

இரைப்பையிலேயே தங்கி நன்றாய்ச் சீரணமாகாமல் கெடுதி செய்வதுமன்றி, அதன் சத்து குண்டிக்காய்கள் வரையில் செல்ல முடியாது. பாயாசங்கள், ஆட்டுக் கால் சூப்பு, அரை வேக்காடாய் வேக வைத்த கோழி முட்டை முதலியவைகள் மிகவும் உபயோகப்படும்; இதற்கு (தவாவுத்துரிஞ்சபீன்) மிகவும் உபயோகப்படும்.

குண்டிக்காய்கள் சூடு குளிர்ச்சி முதலாகிய இவைகள் அதிகரித்து அல்லது குறைந்திருந்து சோர்வடைந்திருந்தால், சூட்டையும் குளிர்ச்சியைக் கவனித்து அவைகளைச் சமப்படுத்தும் மருந்துகளை உபயோகப்படுத்தி நிவர்த்தி செய்ய வேண்டியது

வாதநீர் முதலாகிய அசுத்த சத்துகளினால் உண்டாயிருந்தால் முதலில் அதை வெளிப்படுத்த முயல வேண்டியது. பேதி, நீர்ப் பேதி, இரத்தங்குத்தி வாங்குதல் முதலியவைகளைப் பார்க்கிலும் வாந்திக்குக் கொடுப்பது மிகவும் உத்தமமானது.

பலஹீனத்துடன் சூடதிகரித்திருந்தால், வேங்கை மரப் பிசின் (Kino) பூமாதளைப் பூ, பூங்காவி, கருவேலம்பிசின் இவைகளின் தூள்வகை ஒன்றுக்கு 2 கிராம் எடை இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து (பார்தங்கு) அல்லது இசுபகோல் விதை ஊற வைத்த சலத்தினால் அரைத்துக் கலக்கிப் பானஞ் செய்ய வேண்டும்.

காடி, ரோஜாப்பூ எண்ணெய் ஆகிய இவைகளை இடுப்பிலும், முதுகிலும் தடவுவதனாலும் சந்தனம், ரோஜாப்பூ, கருவேலம்பிசின், உப்பு ஆகிய இவைகளைத் தனித்தனியாகிலும், சேர்த்தாகிலும் தண்ணீரில் அரைத்து, பற்றுப் போடுவதனாலும் நிவர்த்தியாகும்.

குளிர்ச்சியினால் சோர்வு ஏற்பட்டிருந்தால் சூடான பதார்த்தங்களைக் கொடுத்து நிவர்த்தி செய்ய வேண்டியது. ஆனால், சூடு அதிகரித்துப் போகாமல் மிகவும் சாக்கிரதையாயிருக்க வேண்டியது. சூடு அதிகப்படுவதனால் நரம்புகளின் துவாரங்கள் விசாலமாய் அதிக சோர்வு உண்டாகும். ஆகையால் சூடு சமமாயிருக்கும்படி சிகிச்சை செய்ய வேண்டியது.

அவற்றின் நரம்புகள் விசாலப்பட்டு கெட்டியாயிருந்தால் அவ்விதம் நேரிட உண்டான காரணத்தை நீக்கி, உடல் தேற்றி, நரம்புகளைச் சுருங்கச் செய்யும் மருந்துகளையும் உபயோகிக்க வேண்டியது. விந்தாதி மாஜூன் மிகப் பிரயோசனப்படும். இதற்குச் செம்மறியாட்டுப் பால், அல்லது ஒட்டைப் பால் பயன்படுவதுபோல மற்றொன்றும் பயன்படாது. முக்கியமாய் இத்துடன் பூங்காவி அல்லது அது போன்றதைச் சேர்த்துச் சாப்பிட வேண்டியது.

திராக்ஷக் கொடியைச் சிறு கத்தியினால் பல இடங்களில் கீறிவிட அவற்றில் புறப்படுகிற சலத்தில் கொஞ்சம் உப்பிட்டு 9 நாள் சாப்பிடக் குண்டிக்காய்களின் சகல வியாதிகளும் தீரும்.

இந்த வியாதியில் எல்லாப் பதார்த்தத்திலும் விசேஷமானது மாதுளம் கனி சேர்மானம் ஆனதேயாம். ஆட்டின் குண்டிக்காய்களோடு திராக்ஷியைச் சேர்த்துச் சமைத்தும், ஆட்டின் கால், தலை, இவற்றின் இறைச்சியில் புளி வார்த்துச் சமைத்துச் சாப்பிடுவதனாலும், இன்னும் பலாவு, பாற்சாதம், அரிசிப் பொரிமா, கோதுமைப் பொரிமா முதலியவைகளைச் சாப்பிடுவதனாலும் மிகு பிரயோசனம் உண்டாகும்.

9-வது

மனதுக்கு நேரிட்ட சங்கடத்தினால் உண்டான தாது நஷ்டம்

தேகத்தின் எல்லா உறுப்புக்களிலும் இருதயமே ராஜா என்பது தெரிந்த விஷயம். இதற்கு யாதொரு பின்னம் நேரிடாதிருந்தால் அவரவர்களின் தன்மையும் சுபாவமாயிருக்கும்; அப்படிக்கில்லாது ஏதேனும் ஒன்று நேரிட்டு விட்டால் தன்னால் சுபாவ காலங்களில் கூடாமையியிருப்பதும் அக்காலங்களில் செய்து முடிக்கக் கூடும் சிலவேளை தன்னால் சுபாவமாய்ச் செய்து முடிக்கும் படியாகியவைகளையும் அக்காலங்களில் கொஞ்சமும் செய்யக் கூடமையாய்ப் போம்; ஆகையால் மனதில் ஏதேனும் ஓர் வித்தியாசமுண்டாவதனால் மேற்கண்ட இரண்டு வித காரியங்களிலொன்றாகும்.

இவற்றிற்குக் காரணம் யாதெனில், விரைவாக ஏதேனும் மனதிற்கு நேரிடும் விபத்தினால் சில வேளை இருதயம் சுருங்கி, சோர்ந்து போக நேரிடும்; உடனேயே இரத்த ஓட்டம் நின்று, மூர்ச்சை, மயக்கம், உடல் சீர்கேடு முதலானவை நேரிடுகின்றன.

சில வேளை மனதிற்கு நேரிடும் எதிர்பாராத விஷயங்களினால் அதிக பலம் உண்டாகி, சாதாரணமாய் மனிதர் செய்யக் கூடாத காரியங்களையும் செய்து விடுகிறார்கள்.

இதன் விபரம் பின்வரும் சம்பவங்களினால் நன்கு விளங்கும். இவை உண்மையாய் நடந்தவைகளேயல்லாமல் கட்டுக் கதைகள் அல்லன.

ஓர் சிப்பாய் இரவில் பராக் கொடுத்துக் கொண்டிருக்கையில் அவனால் சகிக்கக் கூடாத நித்திரை மேலிட்டு விட்டபடியால், நின்றபடி துப்பாக்கியைப் பிடித்து கொண்டே தூங்கிக் கொண்டிருந்தான். அன்று தற்செயலாகவே மேலதிகாரி பரிசோதனைக்கு வந்தபோது, அவன் நின்று கொண்டே தூங்குகிறதைக் கண்டு மெதுவாய் வந்து, மெல்லெனத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு போய், பின்பு சற்று நேரம் சென்று அவ்வதிகாரி குதிரை மீதேறிக் கொண்டு நன்றாய்ச்சச் சப்தம் கேட்கும்படியாக வெகு ஆரவாரத்துடன் வர, தூங்கிக் கொண்டிருந்த சிப்பாய் திடுக்கென்று விழித்து, சுடும் பீரங்கியைத் தூக்கிக் கொண்டு பாராவில் எவ்விதம் நிற்க வேண்டியதோ, அம்முறையே நின்று கொண்டிருந்ததனால் அவ்வதிகாரி இதைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு அங்கு சற்றும் நிற்காது நேரே போகிறது போல் போய்விட்டான்; அவன் போனவுடன் சிப்பாய்க்குத் தன்னறிவு வந்து, கையில் இருந்தது துப்பாக்கி யல்லவென்றும், அது பீரங்கியென்றும் தெரிந்து கொண்டு, தான் நின்ற இடத்திலேயே போட்டு விட்டான்.

மறுநாள் காலையில் அவ்வதிகாரி வந்து விசாரித்ததில், சிப்பாய் தான் தூங்கிக் கொண்டிருந்தபோது குதிரைச் சப்தம் கேட்டு விழித்துக் கொண்டதாகவும், அங்கே கிடந்தது தன்னுடைய துப்பாக்கியென்றே தூக்கிக் கொண்டதாகவும், அவ்வதிகாரி போனபின் பீரங்கி என்று தெரிந்தவுடன் அதைச் சற்றும் நகர்த்தச் சக்தியற்றவராயிருந்ததாகவும் உண்மையைச் சொன்னான். அந்த பீரங்கியைத் தூக்க நாலாட்கள் வேண்டும்; இந்த நாலாட்களுடைய பலம் ஒருவனுக்கு எப்படி வந்தது? திகிலினாலன்றா?

சில மன நோயாளிகளுக்கு அதிக நல்ல அவுடதங் கொடாமலே வியாதிக்காரர்களை நல்ல மாதிரியாகவும் பக்ஷமாகவும், பயமுறுத்தியும் நடத்தி வருவதால் அவ்வியாதி முழுவதும் சவுக்கியப்பட்டுப் போகுமென முன் சொல்லப்பட்டிருக்கிறது.

அம்மாதிரியாகவே சிலருக்குப் பயம் முதலிவைகளால் அவ்வியாதி குணமடைந்திருக்கிறது. அதற்குச் சம்பவங்கள்:—

எனக்கரிய நண்பரின் சினேகிதராகிய, ம-ள-ள-ஸ்ரீ டாக்டர் வரதப்ப நாயுடுகாரு அவர்கள் இரண்டு வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தினார். அவர் செய்த சமயோசிதச் சிகிச்சை அவர் புத்தி சாதுரியத்தைக் காண்பிக்கிறது. இதை நினைக்கும் போதெல்லாம் எனக்கு அதிக ஆனந்தத்தை யுண்டு பண்ணுவதால் தக்க இடத்தில் இதை உதாரணமாகக் கொண்டு வரமலிருக்கக் கூடவில்லை. அவை யாவன:

சில நாட்களுக்கு முன்னே இச்சென்னையில் ஓர் சிறுவனுக்கு, தினமொன்றிற்கு ஏழெட்டுமுறை வலி கண்டு கொண்டிருந்தது. அதில் கை காலை இழுத்தல், மூர்ச்சையாய் விடுதல் முதலாகிய பல கோலங்களுண்டாயிருந்தன. பெற்றோர் அதற்காகச் செய்யாத சிகிச்சையும், கொடுக்காத அவுடதங்களுக்கிடையா. அச்சிறுவன் தாயுடு அவர்களிடம் கொண்டு வரப்பட்டபோது, அதைப்பற்றி நாலைந்து தினம் யோசித்துத் தீர்மானித்ததாவது:-

மருந்தைக் கொடுப்பதைவிட தந்திரச் சிகிச்சை செய்ய வெண்ணி, அச்சிறுவனுக்கெதிரிலேயே மூட்டம் போட்டு இரும்பு ஈட்டிகளைக் காயவைத்து விட்டுப் பேசிக் கொண்டேயிருந்தார். இவ்விதம் 2-3 மணி நேரம் இருந்தும் அவ்வலிப்பு வரவில்லை. அதன்மேல் இதுதான் தகுந்த சிகிச்சையெனத் தினம் அங்கே இரண்டு மணிநேரம் இருந்து வந்தார். இவர் இருக்கிற வரையில் அந்நோய் தலைகாட்டுகிறதில்லை; அவர் போனபின்பு வருவதுண்டு.

அதன்மேல் அந்தப் பையனைச் சிலநாள் தன்னுடன் கூடவே வைத்திருந்து முழுவதும் சுவஸ்தப்பட்ட பின்பு பெற்றோரிடத்தில் ஒப்புவித்தார். அச்சிறுவன் இன்னும் நல்ல நிலையிலிருக்கிறான்.

இவ்விதமே இன்னுமொரு அம்மாளுக்கு வாய் திறக்கவும், உணவருந்தவும் வாய்ப்பில்லாமல் மனப்போய் பிடித்திருந்தது; இதுவும் மேற்படியார் தந்திரச் சிகிச்சையினாலேயே நிவர்த்தியாயிற்று.

இன்னும் கொக்கோக் சாஸ்திரியாரும் சொல்லுகிறதாவது, பெண்ணிற்கு முன் ஆணிற்கு ஸ்கலிதம் உண்டானால் அதைத் தடுப்பதற்காக அக்காலங்களில் தன்மனதை வேறு திசையிற் செலுத்தி, மண வாழ்க்கயில் இல்லாததுபோல் பாவித்திருப்பதனால் முந்தி ஆணிற்கு ஸ்கலிதம் ஆகாதெனச் சொல்லியிருக்கிறார்.

ஒரு வியாதியஸ்தனை நோக்கி உனக்கு ரசத்தில் மருந்து கொடுக்கிறேன்; உன்வாய் ரணமாகி விடுமெனச் சொல்லி, சாதாரணமாகிய வெண்ணெய் ரொட்டி முதலாகிய உணவுகளில் யாதொரு மருந்தையும் கலக்காமல் அரைத்துருட்டிச் சாப்பிடக் கொடுக்க வாய் ரணமாய்விடும்.

மேற்காட்டிய சம்பவங்களினால் மனிதருக்குண்டாகும் சில விஷயங்களினாலே சுபாவமாயுண்டாயிருப்பது இல்லாமற் போய்விடுவதும், சிலவேளை அவர்கள் சக்திக்கு அதிகமாகச் செய்யக்கூடிய வல்லமை உண்டாகிறதுங் கூடுமெனத் தெரிய வருகிறது.

ஆகையால் ஒருவனுக்குச் சுக்கில விளைவு முதலாகிய ஆண்மை இருந்த போதிலும், சிற்சில சமயங்களில் சுத்தமாய் ஆண்மை இல்லாமல் போய்விடும். அதற்குக் காரணமாவன.

தன் பெண்சாதியானவள் சிறப்பினாலேனும், அதிகாரம் முதலியவைகளினாலேனும் தனக்கு மேம்பட்டவளாயிருக்கிறாளே என்கிற எண்ணம் உண்டாய் விடுவதனாலும், அல்லது அவளுக்குண்டாயிருக்கிற வியாதி, அவலக்ஷணம் முதலியவைகளினால் மனதில் வெறுப்புண்டாய் விடுவதனாலும், தனக்குண்டாயிருக்கிற அங்கஹீனம் வியாதி முதலியவைகளால் பயம், சந்தேகம் முதலியவை உண்டாய் விடுவதாலும் அல்லது பெண்ணின் கெட்ட நட்சத்திரத்தில் புஷ்பவதியானவளாச்சுதே, இவளோடு வாழ்ந்தால் மரணம்அல்லது ஏதேனும் கெடுதி நேரிடுமென்கிற பயமுண்டாய் விடுவதாலும், இவ்விதமே பெண் தீர்க்கப் பொருத்தம், பிராணிப் பொருத்தம் முதலியவைகளில் மாறுதல் உண்டாயிருந்தால் என்னவாகுமோ என்கிற பயத்தினாலும், பெண்களிடத்தில் பிசாசு, காட்டேரி, வீட்டேரி இருக்கிறதோ, நெருங்கினால் அவை என்ன செய்யுமோ என்கிற எண்ணத்தினாலும், இன்னான் நம்மேல் பில்லி, சூனியம் வைத்திருக்கிறானே, நெருங்கினால் என்ன குற்றம் நேரிடுமோ என்கிற சந்தேகத்தாலும், இன்னும் இவை போன்ற மனமாறுபாடுகள் எந்த அளவு மனதில் உதிக்குமோ அந்த அளவு மண வாழ்க்கை இச்சை குறைவதும், முழுவதும் இல்லாமல் போவதுமுண்டு.

அவனுக்குச் சுக்கில விளைவு அதிகமாயும், ஆண் மறைவிடம் முதலாகிய மண வாழ்க்கைக்குரிய கருவிகளில் யாதொரு மாறுதலுமில்லாமலும் இருந்த போதிலும் மேற்கண்ட காரணங்களினால் ஆத்ம சக்திக்குக் குறை உண்டாகிறது. ஆகையால், எல்லா வகை நஷ்டங்களிலும் ஆத்ம சக்திக்கு உண்டாகும் நஷ்டமே மிகப் பெரியதென்றும், எல்லாவற்றையும்விட அது குணத்தைக் காண்பிப்பதில் மிகு துரிதமானதென்றும் அறிய வேண்டியது.

சிகிச்சை:— கெட்ட எண்ணங்களும், விபரீத யோசனைகளும், மனதைத் தாக்காதபடி அதை வேறு வழியில் செலுத்துவதானாலும், வீர தத்துவம் பொருந்தியவர்களின் சரித்திரத்தை வாசிப்பதாலும் குஸ்தி, மல் யுத்தம் பார்த்தல், வேட்டையாடுதல் முதலியவைகளாலும் நீக்க வேண்டியது. பின்பு மூளைக்கும், இருதயத்திற்கும் பலத்தைத் கொடுக்கும் அவுடதங்களை உபயோகித்து அவைகளைப் பலப்படுத்த வேண்டியது. ஏனெனில் அவை சோர்வு ஏற்பட்டிருந்தால் மேற்கண்டபடி உண்டாகும் பயம், வெட்கம், சந்தேகம் முதலியவைகள்

இலகுவில் உண்டாகும். ஒரு வேளை மண வாழ்க்கை விருப்பம் இல்லாமல் போய் விட்டாலும், வாழுங் காலங்களில் சோர்வுண்டானாலும், வேறு வித பயந் தோன்றினாலும், மனிதனுடைய தேக சுபாவம் ஒரே விதமாயிராது ஆதலால் இன்னும் வேறு விதமாகவும் மனதைத் தைரியப்படுத்தி அவ்வித சந்தேகம், பயம், வெட்கம் முதலியவைகளை நீக்க வேண்டியது; ஏனெனில், பயமும் வெட்கமும் மனிதனை மிகவும் சோர்வடையச் செய்கின்றன.

10-வது சுக்கிலம் தெளிந்து அல்லது நீர்த்துப் போவதனால் உண்டாகும் ஆண்மைக் குறைவு

சுக்கிலம், சுக்கிலவாகி முதலியவைகளில் சூடு அளவிற்கதிப்படுவதால், சுக்கிலத்தின் பதத்தைக் கெடுத்து நீர்க்கச் செய்யும். இன்னும் இவற்றில் குளிர்ச்சியும் கொழுமையும் சேர்வதாலும் சுக்கிலம் நீர்த்துப் போகும். இக்காரணங்களில் சுக்கிலம் தீர்ந்து சுக்கிலத்தின் சக்தி குறைந்து ஆண்மை இல்லாமற் போம்.

இவற்றின் லக்ஷணங்களையும் சிகிச்சைகளையும் முறையே பக்கம் (195) பிரிவு (c)இலும் பக்கம் (197) பிரிவு (g)இலும் பார்த்துக் கொள்ளவும்.

11வது தனக்கேற்ற ஓரிடத்தில் மனங்கொண்டிருந்தால் மறுவிடத்தில் இஷ்டமுண்டாகாதாகையால், அதனாலும் ஆண்மைக் குறைவு உண்டாகும்

இன்னும் பின்னர் கூறப்படும் இந்திரிய இழிவு அல்லது இந்திரிய ஒழுக்கிலுள்ள சிகிச்சைகளையும் செய்யலாம்.

இருதயமானது தேக உறுப்புகளிலும், மண வாழ்க்கைக்குரிய உறுப்புக்களிலும், இராஜ கருவிகளிலும் முதன்மையானதும், ஆத்ம சக்திகளுக்குக் களஞ்சியமென்பதும் நமக்குத் தெரிந்த விஷயமே. ஆகையால் மற்றவைகளுக்குச் சம்பவிக்கும் மாறுதலைப் பார்க்கிலும் இருதயத்திற்குச் சொற்ப மாறுதல் நேரிட்ட போதிலும் உடனே விசேஷமாகிய கெடுதியை உண்டாக்குமென்பதில் சந்தேகமில்லை.

இக்காரணங்களினாலேயே இரண்டு பெண்சாதியுள்ள ஒருவனுக்கு ஓரிடத்தில் மனஞ் சென்றிருப்பதால் மறுவிடத்தில் வாழ மனமெழாமல் போகும். அப்பொழுது மூளை, ஈரல் முதலியவைகளும் மனதைச்

சார்ந்தேயிருக்கும். ஆகையால், ஆண்மைக் குறைவும் உண்டாகும். இதைப் பற்றிய விவரத்தை (பக்கம் 214 பிரிவு 9)இல் பார்வையிடவும்.

12வது சொப்பன ஸ்கலிதம் அதிகப் படுவதனாலுண்டான ஆண்மைக் குறைவு

நித்திரையில் ஒழுவுதல்போல அல்லது கைச்சரச முதலாகிய செயல்களைச் செய்வதுபோலக் கனவு கண்டு இந்திரியமானது தற்செயலாய் வெளியாவதற்கு, 'கனவில் விந்து வெளியாதல்' என்று பெயர். இது அடிக்கடி உண்டாவதனால் ஆண்மைக் குறைவும் உண்டாகும்.

காரணங்கள்:—மண வாழ்க்கைக்குரிய கருவிகளில் குளிர்ச்சி அதிகப்படுவதனாலும், தேக சுபாவத்திற்கு வேண்டிய அளவிற்கு குறைவாகிய உடலுறவினாலும், சுக்கிலம் வெளிப்படுகிற சமயத்தில் அதை வெளிப்படுத்தாமல் அடக்கிக் கொள்வதனாலும், இந்திரிய கமலங்கள் சுக்கிலத்தை ஏந்திக் கொண்டிருக்கும் சக்தியை இழந்து துர்ப்பலப்பட்டுப் போவதனாலும், சுக்கிலம் அதிகமாய்த் தெளிந்து நீர்த்துப் போவதாலும், சுக்கிலத்தில் தீக்ஷணியம் உண்டாகி விடுவதாலும், இந்திரியக் குழல்கள் தளர்ந்து போவதாலும், உடலுறவில் ஞாபகமாகவே இருத்தலாலும், கனவில் விந்து வெளியாதல் அதிகப்பட்டு தாது நஷ்டப்படும்.

சிகிச்சை:— உடலுறவிற்குரிய கருவிகளில் குளிர்ச்சி அதிகப்பட்டிருந்தால் சூடான மருந்துகளைக் கொடுத்து நிவர்த்தி செய்ய வேண்டியது.

இந்திரியக் குழலிற்குரிய சுக்கிலத்தை ஏந்திக் கொள்ளும் சக்தியின் துர்ப்பலத்தினால் உண்டானால், சூடாகிய அவுடதங்களினாலும், தீக்ஷணியமாகிய சூட்டினால் உண்டானால், காஹு விதை, கொத்துமல்லி விதை, இவற்றில் ஒன்றையேனும் அல்லது இவையனைத்துமேனும் சேர்த்துக் கியாழம், ஷர்பத் முதலியவைகளாய்ச் செய்து சாப்பிடுவதனாலும், புளியை ஊற வைத்த சலத்தில் நீலோற்பல புஷ்ப ஷர்பத்தை விட்டுச் சாப்பிடுவதானாலும், காஹு விதையை (புஜூரி) ஷர்பத்தோடு சேர்த்துச் சாப்பிடுவதானாலும், கொத்துமல்லியைத் தூள் செய்து வடிகட்டி அதற்குச் சமனாகச் சருக்கரை சேர்த்து வேளைக்கு ரூபாய் எடை வீதம் சாப்பிட்டு வருவதனாலும் நிவர்த்தி செய்ய வேண்டியது.

சுக்கிலம் நீர்த்துப் போனதனால் உண்டானால் விந்துவைத் தடிப்பாக்கும் படியாகிய உளுந்துமா அல்வா, மாஜூன் முதலாகிய

மருந்துகளை உபயோகித்து நிவர்த்தி செய்ய வேண்டியது. இந்திரியக் குழல்கள் தளர்ந்ததனால் உண்டானால் பொதினா, பஹமனே சுபேத் முதலாகியவைகளை உபயோகிக்க வேண்டியது.

சதா சங்கமத்தில் ஞாபகமாய் இருத்தலினால் உண்டானால் அவ்வெண்ணத்தை நீக்கும்படியான முயற்சியைத் தேட வேண்டியது.

இன்னும் மேற்சொல்லியிருக்கிற சிகிச்சையுடன் பின் வருபவைகளையும் கையாடி வருவதனால் அதிகப் பிரயோசனமுண்டாகும்.

வெள்ளீயம் அல்லது காரீயத்தின் துண்டு உள்ளங்கை அகலமும், கால் அங்குலமும் கனமுமுள்ள தகட்டை இடுப்பின் பின்னால் குண்டிக்காய்களுக்கு நேரே வைத்துக் கட்டிக் கொண்டு வருவதனால் அதிக பிரயோசனமுண்டாகும்.

பிரம்பிலைப் பாயில் அல்லது தாழம்பாயில் அல்லது கித்தான் படுக்கையில் நித்திரை செய்து வருவதனாலும், வலப் பக்கமாய் ஒருக்களித்துப் படுத்துக் கொள்வதனாலும், பட்டு வஸ்திரத்தின் மீது தூங்குவதனாலும் சுகமுண்டாகும்.

மல்லாந்து படுத்துக் கொள்வதும் கூடாது. பச்சைப் பட்டு விரிப்பில் படுத்துக் கொள்வதும் கூடாது. ஏனெனில், அப்படிச் செல்வதனால் பெரு நரம்பிலும் குண்டிக்காய்களிலும் சூடு அதிகரித்து வியாதி அதிகரிக்கும்.

குறிப்பு

சிலருக்குத் தாமதமான விந்து வெளிப்படுவதாலும், மணவாழ்க்கை சக்தி சோர்வும் உண்டாயிருந்தும் கனவில் விந்து வெளிப்படுவது அதிகமாய் இருப்பதுண்டு. இதற்குக் காரணம் யாதெனின் அவர்களுக்கு விந்துவானது உறைந்து தங்கியிருக்கும்; நித்திரையினால் சூடுண்டாகுமாகையால், அதனால் உறைந்து தங்கியிருக்கிற சுக்கிலமானது உருகி விடுகிறது. உடனே தேக சுபாவமானது வெளிப்படுத்தி விடும். ஏனெனில், சுக்கிலம் உருகினவுடன் அளவில் அதிகமாய் வேறிடங்களில் பரவி அதனால் ஏதேனும் கெடுதி அல்லது அதிக எரிவந்தம் உண்டாய் விடும். இப்படி உண்டாகாது காப்பது அதன் இயல்பு; ஆகையால், அது உடனே வெளிப்படுத்த முயலும். இவ்விதம் கனவில் விந்து வெளியாதல் உண்டாவதுண்டு.

13வது இந்திரிய இழிவு அல்லது இந்திரிய ஒழுக்கினால் உண்டான ஆண்மைக் குறைவு

இது இரண்டு வகையுடையது. ஒன்று யூநாநி முறை; மற்றொன்று தமிழ் முறை. முன்னர் யூநாநி முறையைச் சொல்லுவோம். இந்திரிய இழிவைப் பற்றித் தெரிந்து கொள்ளுமுன் சுக்கிலத்தைப் பற்றியும் (மஜி) (mazi) சுகநீரைப் பற்றியும், வெட்ட நீரைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியது. ஏனெனில், இக்காலங்களில் தாது நஷ்டத்திற்குச் சிகிச்சையில்லை என்று சொல்லுகிறது போலவே இந்திரிய இழிவிற்கும் சிகிச்சை கிடையாதெனச் சொல்லுகிறவர்களுமுண்டு. இவற்றிற்குக் காரணம் வைத்தியர்களின் அறியாமையும், அனுபவக் குறைவுமேயாம். இவற்றிற்குச் சிகிச்சை கிடையாதெனச் சொல்வது ஒரு போதுங்கூடாது. வைத்தியர் அனுபவமில்லாமல் வெளியில் வருவதனால்தான் இவ்வித குறைபாடு கிடைக்கிறது. ஆகையால், வைத்தியர்கள் பல சாஸ்திரங்களை வாசிப்பதுமின்றி அனுபவசாலிகளுக்குட்பட்டிருந்து பயில வேண்டும், அப்படி இல்லாமல் தேகத் தன்மை, வியாதியின் கூறு, காரணம், மாறுபாடு முதலியவைகளை நிதானித்தறியாமல், கண்டபடி மருந்துகளை ஒரேயடியாய் உபயோகித்து விடுகிறார்கள். அதனால் நிந்தனைக் குள்ளாகிறார்கள். அவ்விதம் நிந்தனைக்குள்ளாகாமல் இந்திரிய இழிவு, சுகநீர்ப் பெருக்கு, வெட்டை நீர்ப் பெருக்கு ஆகிய இவைகள், இன்னவென்பதும், அவற்றின் வித்தியாசங்களின்னவென்பதும், தெரிந்து கொள்வதனால் அவற்றிற்குத் தகுந்த சிகிச்சை செய்து வெற்றி பெறலாம். ஆகையால், அவைகளைப் பற்றி இவ்விடம் சுருக்கமாய்க் கூறுவோம்.

சுக்கிலம் இன்னதென்பதும் அதன் ஏற்பாட்டின் விவரங்கள் இன்னவென்பதும் அதன் சுபாவ லக்ஷணங்களும் நமக்குத் தெரியும். மேலும் சுக்கிலமானது மண வாழ்க்கையினாலும், மண வாழ்க்கையைப் போன்றதனாலும் வெளிப்படும்.

சுகநீர்:—காமத்தைப் பற்றிய விஷயங்கள், கைச்சரச முதலியவைகள், ஆகிய இவைகளினால் கோசம் விம்மின போது, அதன் வாயிலிருந்து வழுவழுப்புள்ளதும், தடித்ததும் வெள்ளையுமான ஓர் நீர் வெளிப்படும். அதற்குத்தான் சுகநீரென்று பெயர். நீர்ப் பையின் கழுத்தில் ஒரு கோளம் சுற்றிக் கொண்டிருக்கும். காமத்தினால் கோசத்தைச் சார்ந்த பாகங்கள் இயக்கப்பட்டு கோசம் விம்மும்போது அக்கோளமானது நெருக்கப்பட்டு அதிலிருந்து அந்த நீர் புறப்பட்டு ஸ்கலிதக் குழல் மூலமாய் நீர் துவாரத்தில் வந்து வெளிப்படும்.

மேற்கண்ட காலங்களில், மேற்கண்ட விதமாய், இந்த நீர் வெளிப்படாதிருக்கப் பெற்றவர்கள் மிகவும் சொற்பமே. இதன் உபயோகமாவது சுக்கிலம் வெளிப்படுவதற்கு முன் இது வெளிப்பட்டு சுக்கிலக் குழல், நீர்த் துவாரம் முதலியவைகளில் நெய் பூசியது போலாகி, சுக்கிலம் வெளிப்படும்போது அதன் தீக்ஷணியம், சூடு முதலியவை மேற்கண்டவைகளில் சீக்கிரம் தாக்காமல் காக்கப்படும் பொருட்டென்பதேயாம். ஆகையால் இந்த நீர் எவ்விதத்திலுங் கெடுதி செய்கிறதில்லை. ஆனால், அளவிற்கதிகமானால்தான் ஆண் குறியானது எழுச்சியில் விகற்பப்படும். அப்பொழுது சிகிச்சை அவசியம் செய்ய வேண்டியது.

வெட்டை நீரானது மேற்கண்ட கமலத்திற்குச் சமீபத்திலும், நீர்ப்பையின் கழுத்தினகத்திலுமுள்ள கலமத்திலுள்ளதே. ஆனால், அது அநேகமாய் சுக்கிலத்தைப் போன்றதாயும், பிசுபிசுப்புள்ளதாயுமிருக்கும். இது வெளிப்படும் வழியும், சுகநீர் வெளிப்படும் வழியும் ஒன்றே. ஆனால், வியாதியினாலே நீருடனும், சிலருக்கு ஜலஸ்பரிசம் செய்த பின்பும் இது வெளிப்படும். ஜலஸ்பரிச உணர்ச்சி உண்டானவுடன் மேற்கண்ட கமலம் விரியும். விரிந்தவுடன் அதிலுள்ள நீர் வெளிப்படும்; இக்காரணத்தினாற்றான் சில சமயம் நீருடனும், சில சமயத்தில் நீரினது விசையால் வெளிப்படக் கூடாமையாயிருக்கிறபடியால் நீரிற்குப்பின்னும் அவ்வெட்டை நீர் வெளிப்படுகிறது.

இவ்விரு வகை நீர்ப் பெருக்கிலும், சுக்கில இழிவிலும் முன்னர் வித்தியாசத்தைக் கண்டு கொண்டு பின்னர் சிகிச்சை செய்ய வேண்டியது.

சுக்கில இழிவின் வகை பல. அவற்றில் முக்கிய மானவையாவன:—

1. சுக்கிலத்தை அதிகப்படுத்தும் ஆகாரங்கள், அவுடதங்கள் ஆகிய இவைகளை அதிகமாய் உபயோகித்து வருவதனாலும், தேகத்தில் பலமிருந்தும் மண வாழ்க்கையை நீக்கி வைப்பதாலும் உண்டாகும்.

அடையாளம்:— சுக்கிலமானது மணவாழ்க்கையில் வழக்கத்தைவிட அளவிற்கதிகமாய் வெளிப்படுதல், அப்படி அதிகமாய் வெளிப்பட்டும் தேகத்திற்கு யாதொரு துர்ப்பலமும் நேரிடாதிருத்தல், சுக்கிலமானது அதிகம் கெட்டியாயிராமலும் அதிக தெளிவாயிராமலும் மிதமாய்ப் பதமாயிருத்தல் ஆகிய இவைகளாம்.

சிகிச்சை:—வலியுள்ள தேகமாயிருந்தால் ஆகாரத்தைக் குறைப்பதுமன்றி, சுக்கில விளைவை அதிகப்படுத்தும் அவுடதங்களையும் குறைக்க வேண்டும். அல்லது முற்றிலும் நீக்க வேண்டும்; மிதமாகிய மண வாழ்க்கைப் பயிற்சியும் செய்ய வேண்டியது

சுக்கிலத்தைக் குறைக்கும் அவுடதங்களையும் உபயோகித்து நிவர்த்தி செய்து கொள்ள வேண்டியது.

2. சுரத சுக்கிலத்தில் சூடதிகரித்து விடுவதாலும் இந்திரிய இழிவு உண்டாகும்.

அடையாளம்:— சுக்கிலமானது மஞ்சள் வருணமுள்ள தாயிருக்கும். அது வெளிப்படும்போது எரிவந்தமுண்டா யிருக்கும். சில வேளை ஜல ஸ்பரிசத்தின் போதும் எரிச்சல் உண்டாகும்.

சிகிச்சை:— நீலோற்பல ஷர்பத், சீமை இலந்தம்பழ ஷர்பத், பனப்ஷா ஷர்பத் ஆகிய இவைகளில் ஒன்றை வேளைக்கு 10 கிராம் அல்லது 15 கிராம் வீதம் சாப்பிடுவதனாலும், மாதுளம்பூ, காஹூ விதை, பருப்புக் கீரை விதை, இசுபகோல் விதை, காசினி விதை, நிலோற்பல புஷ்பம், கொத்துமல்லி விதை முதலியவைகளில் ஒன்றை அல்லது இரண்டு மூன்று வகைகளைச் சேர்த்து கியாழம், சூரணம் முதலியவைகளில் தேகத்திற்கேற்றதை அளவாய் உபயோகிப்பதனாலும் நிவர்த்தியாகும்.

3. சுக்கிலக் குழல்களில் குளிர்ச்சியும், கொழுமையும் அதிகப்படுவதனால் அவை தளர்ச்சி அடைந்து அவற்றிற்குண்டாகிய சுக்கிலத்தை ஏந்திக் கொள்ளும் சக்தி குறைய, சுக்கிலம் தானாய் வெளிப்படும்.

அடையாளம்:— சுக்கிலம் தெளிந்திருக்கும். கோசத்தில் விம்மல் உண்டாகாது. விம்மலுண்டாகாமலே சுக்கிலம் வெளிப்படும். சுக்கிலக் குழல்களின் சுக்கிலத்தை ஏந்திக் கொண்டிருக்கும் சக்தி துர்ப்பலப்பட்டிருந்தால் சொற்ப இயக்கத்தினால் சுக்கிலம் வெளிப்படும். அதிகமாய்த் துர்ப்பலப்பட்டிருந்தால் அதிக இயக்கத்தினால் சுக்கிலம் வெளிப்படும். இவ்விதம் சுக்கிலக் குழல்களின் சுக்கிலத்தை ஏந்திக் கொண்டிருக்கும் சக்தியின் பலத்திற்குத் தக்க அளவாய்ச் சொற்ப இயக்கத்தாலும் அதிக இயக்கத்தாலும், சுக்கிலம் வெளிப்படும்.

சில வேளை கோசத்தில் பூரணமாய் விம்மல் உண்டானபின் சுக்கிலம் வெளிப்படும். சில வேளை கோசத்தில் எழுச்சியுண்டான தக்ஷணமே வெளிப்பட்டு விடும். சில வேளை வாழ்க்கைக்கு எத்தனித்துத் தேகத்தோடு தேகம் சேர்ந்ததென்று சொல்வதற்கு முன்பே புறப்பட்டுப் போம். தேகம் நாளடைவில் இளைத்துக் கொண்டே வரும்.

சிகிச்சை: பொதினா, கோரைக்கிழங்கு, மாதுளம்பூ, சதாப் விதை முதலான சூடாகிய பதார்த்தங்களின் கியாழம், லேகியம் முதலியவைகளாலும், சீரக மாஜூனாலும், இவை போன்ற அவுடதங்களாலும் நிவர்த்தி செய்து கொள்ள வேண்டியது.

4. இந்திரிய நரம்புகளில் வலிப்பு (Contraction of the nerves) உண்டாவதால் இந்திரிய இழிவுண்டாகித் தாது நஷ்டமுண்டாகும்.

அடையாளம்:— சுக்கிலம் அளவில் அதிகமாகவும் சீக்கிரமாகவும் வெளிப்படும். கோசம் விம்மும்போது கடினமாயிருக்கும்; சில வேளை நடுக்கமுண்டாகும்.

சிகிச்சை:—வலிப்பை நீக்கும்படியாய், ஆண் குறியிலும் பீஜங்களிலும் தைல முதலியவைகளைத் தேய்த்து நிவர்த்தி செய்ய வேண்டியது. இவ்வகை அவுடதங்களை அவுடத பாகத்தில் காண்க.

5. குண்டிக்காய்கள் துர்ப்பலப்பட்டு அவற்றின் கொழுப்பு காமத் தீயின் சூட்டினால் அல்லது விசேஷ மண வாழ்க்கையினாலுண்டான சூட்டினாலே உருகி வெளிப்படும். இதையும் சிலர் இந்திரிய இழிவு என்கிறார்கள். ஆனால், உண்மையில் இது சுக்கிலமல்ல; குண்டிக்காய்களின் கொழுப்பானது உருகி இந்திரியத்தைப் போலப் புலப்படுகிறது. இதனாலும் ஆண்மைக் குறைவு ஏற்படும்.

அடையாளம்:— மண வாழ்க்கையினால் சுக்கிலமானது அதிகமாய் வெளிப்படும். உடலுறவிற்குப் பின் சிறுநீர் கழிவு செய்தால் வெண்மையாய்க் கலங்கலான நீர் வெளிப்படும். உடலுறவினால் இன்பமுண்டாகாது. சுக்கிலமானது குதித்து வெளிப்படாது.

சிகிச்சை:— குண்டிக்காய்களுக்குப் பலத்தைக் கொடுக்கும் மாஜூன்கள், லேகியங்கள், லுபூப்கள், ஷர்பத்து முதலியவைகளாலும் வசப்படுத்த வேண்டியது. இந்த வியாதிக்கு உடனே சிகிச்சை செய்ய வேண்டியது. அப்படிச் செய்யாமல் தாமதித்தால், தேகம் அதிக சீக்கிரத்தில் இளைத்துத் துர்ப்பலப்பட்டுச் சிகிச்சைக்கு வசப்படாது. ஆகையால், சற்றும் தாமதம் செய்யலாகாது.

6. சிற்றின்பக் கதைகளை வாசிக்கும்போதும், கேட்கும்போதும் மண வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கும் போதும், ஓர் பெண்ணைப் பற்றிப் பேசும் போதும் சுகநீர், வெட்டை நீர், இந்திரியம் ஆகிய இவைகளின் ஒழுக்குண்டாகும்.

காரணம்:— சூடு அதிகப்படுவதாலும், இந்திரியக் குழலின் சுக்கிலத்தை ஏந்திக் கொள்ளும் சக்தி துர்ப்பலப்பட்டுப் போவதாலும், இது நேரிடும். சூடு மிகவும் அதிகப்பட்டால் சுக்கிலமும், சூடு கொஞ்சம் அதிகப்பட்டால் சுக நீரும் வெளிப்படும் (இதன் விவரம் நமது சிராகவ நிவாரண போதினியிற் காண்க).

சிகிச்சை: சிற்றின்பக் கதை முதலியவைகளைக் கேட்பதையும், வாசிப்பதையும் அதைப் பற்றிச் சிந்திப்பதையும் தவிர்க்க வேண்டியது.

மணவாழ்க்கை விருப்பத்தை மாற்றி, மனதை வேறு காரியங்களில் செலுத்த வேண்டியது. விவாகமில்லாதவனாயிருந்தால் விவாகம் செய்து கொள்ள வேண்டியது. விவாகம் செய்து கொண்டும் வேறு யாதொரு தொந்தரவில்லாமல் சுக்கிலம் அதிகமாய் வெளிப்பட்டால் விசேஷ மண வாழ்க்கை வேண்டியது. சுக்கிலத்தைக் குறைக்கப்பட்ட பொருள்களை உபயோகிக்க வேண்டியது; சுக்கிலக் குழலின் சுக்கிலத்தை ஏந்திக் கொள்ளும் சக்தி துர்ப்பலப்பட்டிருந்தால் அதைப் பலப்படுத்தும்படியாகிய அவுடதங்களை உபயோகிக்க வேண்டியது. கோசம், பீஜம் முதலிய இடங்களில், அவுடத பாகத்தில் சொல்லியிருக்கும் மருந்துகளிலே தேகத்திற்குத் தக்கவைகளைப் பூசி வர வேண்டியது. பனப்ஷாபூ எண்ணெய் பூசி வருவதாலும் சுகுணமுண்டாகும். சுக்கிலத்தில் தீக்ஷணியம் உண்டாயிருந்தால் அதைத் தணித்துக் குளிர்ச்சியாகும்படி செய்ய வேண்டியது.

குறிப்பு

பெண்களும் மேற்கண்ட காரணங்களாலும் கருப்பையின் வாய் தளர்ந்து போவதாலும் இந்திரிய இழிவு காண்பதுண்டு.

சிகிச்சை:—ஆண்களுக்கு சிகிச்சை செய்வது போலவே ஒவ்வொன்றின் காரணம், அடையாளம் முதலாகியவைகளுக்குத் தக்கபடி பெண்களுக்கும் செய்ய வேண்டியது; ஆனால், கருப்பையின் வாய் தளர்ந்து போயிருந்தால், அத்திப்பட்டை, நாவற்பட்டை, மருதம்பட்டை, படிக்காரம், காய்ச்சுக்கட்டி முதலிய துவர்ப்பான வஸ்துக்களில் தேகத்திற்குத் தக்கபடி. வேண்டியவைகளை நீரிலிட்டுக் காய்ச்சி அதில் பெண்ணை கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கும்படி செய்யவும். இவ்விதம் தினம் 2 அல்லது 3 அல்லது 4 தடவை செய்யச் சொல்லவும். பலத்தைத் தரத் தக்க அவுடதங்களைக் கொடுப்பதாலும், சில வேளை வாந்தி செய்யச் சொல்வதாலும் தீரும்.

வெட்டை நீரிழிவிற்கு

சிகிச்சை:— சதாப் விதை, வெள்ளை நொச்சி விதை (அது அகப்படா விட்டால் அதற்கிரண்டு பங்கு கஞ்சா விதையைச் சேர்த்துக் கொள்ளவும்). பூ, மாதுளம்பூ, இவைகளின் தூள் சமனெடை எடுத்து எல்லாம் ஒன்றாய்க் கலந்து கொள்ளவும்.

திராக்ஷக்காடி 1 பங்கு, தேன் 1 பங்கு இவ்விரண்டையும் காய்ச்சி, பாகு பதத்தில் எடுத்துக் கொள்ளவும். இந்த ஷர்பத்து விராகனெடை இரண்டில் மேற்படி சூரணம் ஒரு வராகனெடை சாப்பிடவும்; இவ்விதம் இரண்டு வேளையும் சில நாள் சாப்பிட மேற்படி வியாதி தீரும்.

சுகநீர்ப் பெருக்கிற்கு

சிகிச்சை:— கஞ்சா விதையைக் கொஞ்சம் இளவறுப்பாய் வறுத்துத் தூள் செய்து வடி கட்டி மூன்றரை கிராம் தேனில் கலந்துண்ண மேற்கண்ட இரண்டு நீர்ப் பெருக்குந் தீரும்.

அர்வதா விதை 3 பங்கு, வெள்ளை நொச்சி விதை, நீலோற்பலக் கிழங்கு, வகை ஒன்றுக்கு 2 பங்கு, பூ மாதுளம் பூ, ரோஜாப் பூ, வகை ஒன்றுக்கு ஒன்றரை பங்கு, வெவ்வேறாய்த் தூள் செய்து பங்கு கணக்காயெடுத்து ஒன்றாய்ச் சேர்த்துக் கொள்ளவும். தயிரில் வேளை ஒன்றுக்கு 2 வராகனெடை சாப்பிட மேற்கண்ட மூவகைப் பெருக்கும் தீரும்.

தமிழ்ச் சாஸ்திர முறைப்படி இந்திரிய ஒழுக்கின் சிகிச்சை

இது வாத பித்த சிலேத்தும ஆதிக்கத்தால் சுக்கிலமானது நீர்த்து, கரைந்து அல்லது அதன் பதத்தில் விகற்பப்பட்டு, நீரோடு சேர்ந்தாவது அல்லது தனியாயாவது வெளிப்படும். இதனால் தாது நஷ்டமுண்டாகும்.

வாத இந்திரிய ஒழுக்கு

குறிகள்:— சிலருக்கு நீரில் ஈ மொய்க்கும், நீரின் சிறு துளிகள் வெவ்வேறாய் விழாமல் ஒன்றோடொன்று சேர்ந்து விழும். சிலருக்கு நீர் எண்ணெயைப் போலும் கொழுப்பு போலுமிருக்கும். சிலருக்கு நீரானது எலும்புருக்கியைப் போல் இறங்கும். சிலருக்கு நீர் தடித்தும், பசையுள்ளதாயுமிருக்கும்.

சிகிச்சை:— பசுவின் நெய் பலம் 1ல் மிளகுத் தூள் வராகனெடை மூன்றரை கிராம் கலந்து இரண்டு வேளையும் சாப்பிடுவதாலும், மஞ்சள், நெல்லிமுள்ளி வகை ஒன்றுக்கு 15 கிராம் இவைகளை இரண்டொன்றாய் இடித்துக் காற்படி சலம் வார்த்து நான்கில் ஒரு பாகமாய்க் காய்ச்சி, வடிகட்டி அதில் ஒரு ரூபாயெடை தேன் கலந்து சாப்பிடுவதாலும் சுகம் உண்டாகும்.

குறிப்பு

வாத இந்திரிய இழிவின் சிகிச்சையைத் தவிர, தமிழ்ச் சாஸ்திர முறைப்படி, மற்ற வகைகளின் சிகிச்சைகள் மிகவம் சிறந்தவைகள். வாத இந்திரிய இழிவானது தீர்வதும் கஷ்டமாகையால் அதற்குத் தக்க சிகிச்சைகளும் நிச்சயிக்கப்படவில்லை.

பித்த இந்திரிய ஒழுக்கு

குறிகள்:—சிலருக்கு நீர் உவர்ப்பாயும், சிலருக்கு நீருடன் சுக்கிலமானது வெளுத்தும் வெளிப்படும். சிலருக்கு நீர் கறுத்தும், சிலருக்கு நீர் குசும்பாப்பூ வருணமாயும், சிலருக்கு நீர் மஞ்சள் வருணமாயும், சிலருக்கு நீர் எண்ணெயைப் போலும் இறங்கும்.

சிகிச்சை:— வாய்விளங்கம், மஞ்சட் கடுக்காய்த் தோல், வெட்டிவேர், நாகேசரம் என்னும் இவைகளின் தூள் சமனெடை எடுத்து எல்லாம் ஒன்றாய்க் கலந்து கொள்ளவும். வேளை ஒன்றிற்கு 8 கிராம் தேனில் 2 கிராம் மேற்படி சூரணத்தைக் கலந்து இரண்டு வேளையும் சில நாள் சாப்பிடுவதால் தீரும்.

கருவேலங்கொழுந்து, வேப்பங்கொழுந்து, மேல் தோல் நீக்கிய சீந்திற்கொடி, நெல்லி முள்ளி, கோரைக்கிழங்கு வகை ஒன்றுக்கு விராகனெடை மூன்றரை கிராம், இரண்டு கொழுந்துகளையும், கொடியையும் மெல்லிதாய் அரிந்து கொண்டு மற்றவைகளை இரண்டொன்றாய் இடித்து எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துப் போட்டு, அதில் அரைப்படி ஜலம் வார்த்து எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி வடிகட்டிச் சாப்பிடவும்; இவ்விதம் இரண்டு வேளையும் சில நாள் சாப்பிடத் தீரும்.

பூவாலுக செந்தூரம்

நன்றாய் வெந்த பழஞ் செங்கல்லை மிகவும் நுண்மையாய்ப் பொடி செய்து மெல்லிய சீலையில் வடிகட்டிய தூள் தேவையானதை ஒரு பீங்கான் பாத்திரத்திலிட்டு அதன் மேல் ஓர் அங்குலம் இருக்கும்படி செம்மறியாட்டுப் பாலை அல்லது வெள்ளாட்டுப் பாலை விட்டு நிழலில் அல்லது வெய்யிலில் வைத்து வற்றியபின் முன் போலவே புதிய பாலை வார்த்து வற்ற வைக்கவும்; இவ்விதம் ஏழு தடவை செய்து உலர்ந்த பின்பு கல்வத்தில் பொடித்துச் சீஷாவில் வைத்துக் கொள்ளவும்.

வேளை ஒன்றிற்கு 2 கிராமெடை செந்தூரம் தேனில் அல்லது நெய்யில் அல்லது வேறு அனுபானங்களில் 2 வேளையும் சாப்பிடவும். இது எந்த வகை இந்திரிய இழிவிற்கும் உபயோகப்படுகின்றது. மிகவும் அனுபோகமானது.

சிலேத்தும இந்திரிய ஒழுக்கு

அடையாளம்:— சிலருக்கு நீரானது கரும்புச் சாற்றைப் போலும், சிலருக்கு நீர் கள்ளைப் போலும், சிலருக்கு நீர் வெண்மையாய்த்

தெளிந்தும், சிலருக்கு நீர் வாய் நீரைப் போலும் இறங்கும். சிலருக்கு நீருடன் மணல்களும் காணும். சிலருக்கு நீருடன் சுக்கிலம் கம்பி கம்பியாகவும், சிலருக்கு நீர் மாவைப்போல் உறைந்தும் போகும்.

சிகிச்சை:— சீமை மருதணை விதை, தோல்நீக்கின சுக்கு, கடுக்காய்த் தோல் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து 2 ஆழாக்கு சலத்திலிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடிகட்டிச் சாப்பிடவும். இவ்விதம் 2 வேளையும் சாப்பிடுவதாலும், மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கடுக்காய்த் தோல், சுக்கு, இவை வகை ஒன்றுக்குப் பத்து கிராம், இவற்றை இரண்டொன்றாய் நறுக்கி அரைப்படி ஜலத்தில் ஓரிரவு ஊற வைத்துக் காலையில் எட்டொன்றாய்க் காய்ச்சி வடி கட்டி அதில் 4 கிராம் தேன் விட்டுச் சாப்பிடவும்; இவ்விதம் இரண்டு வேளையும் சில நாள் சாப்பிடத் தீரும்.

கடுக்காய்த் தோல், நெல்லி முள்ளி, தான்றிக்காய்த் தோல், மஞ்சள் என்னும் இவைகளின் தூள் சமனெடை, எல்லாம் ஒன்றாய்க் கலந்து அதற்கு சமனாய்ச் சீனி சேர்த்து வேளை ஒன்றுக்கு ஒரு வராகனெடை காலையில் மட்டும் சாப்பிடவும். எவ்வித இந்திரிய இழிவும் தீரும். இன்னும் வியாதிகளுக்கு உபயோகப்படத்தக்க அவுடதங்களை அவுடத பாகத்தில் காண்க.

14வது

விரைவில் விந்து வெளியாவதால் ஆண்மைக் குறைவு

இது அனேக காரணங்களினால் நேரிடும்.

a. சுக்கிலவாகி, சுக்கிலக் குழல் ஆகிய இகைவளின் சுக்கிலத்தை ஏந்திக் கொள்ளுஞ் சக்தியானது. குளிர்ச்சி அதிகரிப்பதாலும், கொழுமை அதிகரிப்பதாலும், துர்ப்பலப்பட்டுப் போவதால் துரித ஸ்கலிதம் உண்டாகும்.

அடையாளம்: இந்திரியமானது நீர்த்து, வெளுத்து அளவில் அதிகரித்து வெளிப்படும். அதில் கொஞ்சமும் சூடிராது, மேலும் சூட்டின் குணமும் ஒன்றுமிராது.

சிகிச்சை:— முன்னர் (மாமூதா) * (scammany) சேர்ந்த அவுடதங்களினால் அசுத்த சத்துக்களை வெளிப்படுத்த வேண்டியது; வாந்தி அவுடதங்களைக் கொடுத்து வாந்தி செய்விக்க வேண்டியது.

---

* இது நஞ்சின் குணமுடையதாகையால் மிகவும் சாக்கிரதையுடன் உபயோகப்படுத்த வேண்டும்.

அரையிலும், சந்துக்களிலும், ஆண் குறியிலும், குங்குமப்பூ, நீலோற்பல புஷ்பம், கோஷ்டம் (ஆஸ்) (Myrtle) ஆகிய இவைகளில் ஒன்றின் எண்ணையைப் பூசி வர வேண்டியது. (பஞ்சோஷ) (Fanjoshe) பாவனத் திராவகம், அரப்பொடி, மாஜூன் முதலிய அவுடதங்களினால் மிகு பிரயோஜனமுண்டாகும். அரைப்பலம் கஞ்சா விதையை ஆழாக்கு சலத்தில் ஊற வைத்து மூன்றில் ஒன்றாய்க் காய்ச்சி வடிகட்டி ஒரு துலா எடை தேன்விட்டு இரண்டு வேளையும் சில நாள் சாப்பிடுவதாலும் நிவர்த்தி ஆகும்.

கிச்சடிச் சாதமும், ஆட்டிறைச்சியோடு கோரைக் கிழங்கு, சீரகம் ஆகிய இவற்றில் ஒன்றைச் சேர்த்துச் சமைத்த கறியும், சாப்பிடுவதனாலும் மிகு பிரயோசனமுண்டாகும்.

b. தேகத்தில் இரத்தம் அதிகரிப்பதாலும், சுக்கிலம் அதிகம் விளைவதாலும் நெடுநாள் மண வாழ்க்கையை நீக்கி வைப்பதாலும் துரித ஸ்கலிதமுண்டாகித் தாது நஷ்டப்படும்.

குறிகள்:— இந்திரியம் சீக்கிரம் வெளிப்படுவதுடன் சுக்கிலம் அளவில் அதிகமாயிருக்கும். அது மிதமாய்ப் பக்குவப் பட்டதாயிருக்கும்; ஆண் மர்ம ஸ்தானத்தின் சக்தியும் மிதமாயிருக்கும். சிலருக்குச் சொப்பன ஸ்கலிதம் அதிகமுண்டாகும். அப்படி யுண்டானாலும் தேக சக்தி குறையாது. தேகம் வலுவாகவே இருக்கும்.

சிகிச்சை: நெடுநாள் மண வாழ்க்கையை விட்டிருந்ததால் உண்டாயிருந்தால், அடிக்கடி வாழ்வதனால் நிவர்த்தியாகும். இரத்த மிகுதியினால் உண்டாயிருந்தால் இரத்தத்தை அதிகப்படுத்தும் ஆகாரங்களாகிய மாமிச இனங்களையும், பருப்பினங்களையும் நீக்கிவிட வேண்டியது; அல்லது அவைகளை மிகவும் குறைந்த அளவாய் உபயோகித்து வர வேண்டியது.

சாதாரணமாகிய ஆகாரத்திலும் கொஞ்சம் குறைவாய்ச் சாப்பிட்டு வர வேண்டியது காடி ஷர்பத், புளிப்பு மாதுளை ஷர்பத், நாரத்தை ஷர்பத், திராக்ஷக்காய் அல்லது பச்சைப் பேரீச்சங்காய் ஷர்பத் முதலியவைகளில் ஒன்றை உபயோகித்தும் நிவர்த்தி செய்து கொள்ள வேண்டியது.

c. சுக்கிலத்தில் சூடும் தீக்ஷணிய குணமுமுண்டாகி விடுவதனாலும் துரித ஸ்கலிதமுண்டாகும். எப்படியெனில் மண வாழ்க்கைக்கெத்தனித்த தக்ஷணத்தில் அல்லது தேகம் ஒன்றோடொன்று சேர்ந்தவுடன், ஆண் மர்ம ஸ்தானத்தில் எழுச்சி உண்டாவதனால் பலம், துர்ப்பலம் ஆகிவைகளுக்குத் தக்கபடி சூடும் தீக்ஷணியமும் அதிகரிக்கும். அதனால்

சுக்கிலக் குழலில் வருத்தமுண்டாகும். ஆகையால், அவை உடனே சுக்கிலத்தை வெளிப்படுத்தி விடும்.

அடையாளம்:— சுக்கிலம் வெளிப்படும்போது வருத்தமும் எரிச்சலுண்டாகும். சுக்கிலத்தின் வருணம் மஞ்சள் வருணமாகவும், இலேசானதாகவுமிருக்கும்.

சிகிச்சை:— பருப்புக் கீரை விதை, காஹூ விதை, புளிச்சக் கீரை விதை ஆகிய இவைகளில் ஒன்றில் அரைப்பலம் அரைத்துப் பிழிந்த ரசம் அரை ஆழாக்கில் ஒரு பலம் கசகசா ஷர்பத்து விட்டுச் சாப்பிடுவதனாலும் அரிசியும் மசூரிப் பருப்பும் சேர்த்துச் சமைத்த சாதத்தில் கசகசாவை வறுத்து (சட்னி) சுண்டாங்கியாகவாவது அல்லது குழம்பாகவாவது செய்து சேர்த்துச் சாப்பிடுவதனாலும், மேற்கண்ட சரக்குகளில் இஷ்டமானதை அரைத்து மேலே பூசுவதானாலும் நிவர்த்தியாகும்.

d. தலை, மூளை முதலாகிய இராஜ கருவிகள் பலஹீனப்பட்டு போவதனால் மற்ற உறுப்புக்களும் துர்ப்பலப்பட்டுத் துரித ஸ்கலிதமுண்டாகும். இவ்வகையான துரித ஸ்கலிதத்தினால் தாது நஷ்டப்படாதிராது. ஏனெனில், இராஜ கருவிகள் பலஹீனப்பட்டால் அவற்றோடு நெருங்கிய சம்பந்தமுடைய சுக்கிலத்திற்கும் அவசியம் நஷ்டம் நேரிடும். ஆகையால், இராஜ கருவிகள் ஒவ்வொன்றிற்குமுரிய பலஹீனத்தின் காரணம் அடையாளம், சிகிச்சை முதலியவைகளைச் சகலரும் அறிந்திருத்தல் வேண்டும்; இவை முன்னர் சொல்லப்பட்டன.

குறிப்பு

அவுடதங்களினாலும், ஆகாரங்களினாலும், தாருட்ய விருத்தியும், தாருட்ய நஷ்டமுமுண்டாவது போல, மனைவியின் தன்மையினாலும் புருஷனுக்குத் தாருட்ய விருத்தியும் தாருட்ய நஷ்டமுமுண்டாகும். அதாவது இரண்டு மனைவிகளுடைய ஒருவன் ஒரு மனைவியோடு சம்பந்தப்பட்டால், ஆண்மை அதிகப்பட்டிருத்தல், சுகானுபவம் அதிகரித்திருத்தல், தம்பன சக்தி ஆகிய இவைகள் உண்டாகும். அவனே வேறு மனைவியோடு வாழ்ந்தால் மேற்கண்டவைகளுக்கு மாறாக ஆண்மையும், சுகானுபவம் ஆகிய இவை அதிகம் குறைந்து துரித ஸ்கலிதமுண்டாகும்.

இதன் காரணம் பெண் மறைவிடத்தின் தன்மையே. ஆகையால், அதிக அனுபோகசாலிகளாகிய பண்டிதர்கள் சொல்லியிருக்கிறதாவது, துரித ஸ்கலிதமுள்ளவர்கள் தாங்கள் சுபாவத்திற்கு எதிரான சுபாவத்தையுடைய அவலக்ஷணம் பொருந்திய மனைவியோடு அல்லது

வயது சென்ற மனைவியோடு வாழ்வதினால் நிவர்த்தியாகும். எப்படியெனில், துரித ஸ்கலிதத்தின் காரணம் சூடாயிருந்தால் குளிர்ச்சியான சுபாவத்தை உடையவர்களோடும், அதன் காரணம் குளிர்ச்சியாயிருந்தால் சூடான சுபாவத்தை யுடையவர்களோடும் வாழ வேண்டியது. இவ்வித மாறுதல் வேண்டிய போது, அதற்கு ஹேதுவில்லாதவர்கள், சூடு வேண்டிய போது சூடான பதார்த்தங்களையும், குளிர்ச்சி வேண்டிய போது குளிர்ச்சியான பதார்த்தங்களையும் ஆண் பெண் இருவரும் மேற்பூச்சாக உபயோகித்துக் கூடி வாழ்ந்தால் மேற்கண்ட குணத்தை உண்டாக்கும். முக்கியமாய் விரைவில் நாதம் வெளிப்படும். பெண் தன்மையை நன்றாயறிந்து சிகிச்சை செய்து நிவர்த்தி செய்து கொள்ள வேண்டியது.

மேலும், இவ்வியாதியில் தம்பன அவுடதங்களை ஒரு போதும் உபயோகிக்கலாகாது; ஏனெனில், அவ்விதம் உபயோகிப்பதனால் அவ்வியாதி அதிகப்படும்; ஒரு வேளை வேறு வியாதிகளுக்கும் இடமாகும்.

மேற்கண்ட இடங்களை குளிர்ச்சியாக்கச் சந்தனமும், கர்ப்பூரமும், சூடாக்கக் கோஷ்டமும், வால் மிளகும் போதுமானவை.

விண்ணப்பம்

இதுவரையில் சுக்கிலத்தைப் பற்றிய பல விஷயங்களையும் கூடிய மட்டும் விவரமாகவும் சுருக்கமாகவும் எழுதினோம். ஆனால், சிலர் இவ்வளவு விஷயங்களை எப்படி ஞாபகத்தில் வைப்பது இது கூடுமானதாவென்று ஆலோசிப்பார்கள். இது ஒரு போதும் யுக்தமானதல்ல; எந்தெந்த விஷயங்களை எவ்வளவு மட்டும் சொல்ல வேண்டியதோ அவ்வளவு சொல்வது மிகவும் அவசியமே. நன்றாய் நிதானித்துக் கவனத்தோடு வாசிப்பதனால் இவ்விஷயங்களை நன்றாய்த் தெரிவதில் சந்தேகமில்லை. மனித தேகத்தில் சுக்கிலமானது மிகவும் அருமையானதால் ஒவ்வொருவரும் அதைப் பற்றி முக்கியம் தெரிந்து கொள்ள வேண்டியது. இது மிகவும் அவசியம் என்பது அகத்தியர் முதலிய சித்தர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

விருத்தம்

காணடா தாதுகெட்டால் மனுஷனல்ல
　　காரிகையார் தங்களுக்குப் புருஷனல்ல
வீணடா தாதுகெட்டால் தேகம் போச்சு
　　வெறுவாயை மெல்லாதே மின்னாராசை

பூணடாவென்றாலும் பூணப்போமோ
புந்தியினால் தாதுவகை யறிந்துநீயும்
தாணடா தாதுமிக வுண்டாகத்தான்
தன்மையுட னவ்வகையைத் தயவாய்ப்பாரே

தாது நஷ்டத்தின் முக்கியப் பிரிவுகளில் இரண்டாம் பிரிவானது ஆண் மறைவிடத்தைப் பற்றிய ஆண்மைக் குறைவு

இது எட்டு உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

1-வது இரத்தக் குறைவினால் ஆண் மர்ம ஸ்தானம் தளர்ந்து அல்லது சோர்ந்து போய் உண்டாகும் ஆண்மைக் குறைவு.

2-வது வெகு காலம் சுபாவத்திற்கு விரோதமாய் மணவாழ்க்கை இல்லாதிருப்பதால் ஆண் மர்ம ஸ்தானம் மெலிந்து உண்டாகும் ஆண்மைக் குறைவு.

3-வது தேகத்தின் கீழ்ப்பாகத்தில் ஆவி குறைவாயுண்டாவதனாலுண்டாகும் ஆண்மைக் குறைவு.

4-வது ஆண் மறைவிடத்தின் நரம்புகளின் வியாதியினால் உண்டாகும் ஆண்மைக் குறைவு.

5-வது முஷ்டிக்கிரியையா லுண்டாகும் ஆண்மைக் குறைவு.

6-வது ஆசனக் கிரியை (Sodomy) செய்வதனாலுண்டான ஆண்மைக் குறைவு.

7-வது ஆசனக் கிரியை செய்து கொள்வதனால் உண்டாகும் ஆண்மைக் குறைவு.

8-வது வெள்ளையென்னும் பிரமேக வியாதியினால் உண்டாகும் ஆண்மைக் குறைவு.

இவற்றின் காரணங்கள், அடையாளங்கள், சிகிச்சைகள் முதலியவைகளையும் முறையே இங்ஙனங் கூறுலாம்.

1வது

இரத்தக் குறைவினால் ஆண் மறைவிடம் தளர்ந்துண்டாகும் சுக்கில நட்டம்.

ஆகாரக் குறைவினால் இரத்தக் குறைவு உண்டாகும். இரத்தக் குறைவினால் தேகந் துர்ப்பலப்பட்டுத் தேகத்தின் எல்லா உறுப்புக்களிலும் பலக் குறைவு உண்டாகும். அப்பொழுது ஆண்

மறைவிடம் தளர்ந்து, சோர்ந்து போம்; இதனால் ஆண்மை குறைந்து போம்.

இதன் அடையாளங்களையும் சிகிச்சைகளையும் இரத்தக் குறைவினாலுண்டான தாது நட்டம் என்னும் பாடத்தைப் பார்வையிடவும்.

2-வது

வெகுகாலம் போகியாதிருப்பதனால் ஆணுடம்பு மெலிந்துண்டான சுக்கில நட்டம்.

இதைப் பற்றித் தெரிந்து கொள்ளுமுன் சில விஷயங்களை அத்தியாவசியமாய்த் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அவையாவன:—

ஜீவகாருண்ணியராகிய உண்மைப் பண்டிதர் நமது சுகத்திற்கேற்ற சில பிரமாணங்களை ஏற்படுத்தியிருக்கிறார். அவைகளை நாமறிந்து அப்பிரமாணங்களின்படியே நடந்து வருகிற காலத்தில் நமக்குப் போதுமான சுகமுண்டாகிறது, அவைகளை நாம் மீறுவதனாலும், தவறி நடப்பதனாலும், சுகவீனம் உண்டாகிறதுந் தவிரப் பல துன்பங்களும் நேரிடுகின்றன.

எப்படியெனில், ஒருவன் தனக்கு வேண்டிய அளவிற்கு மேம்பட்ட உணவையாவது, சுகத்திற்கு பொருத்தமில்லாத கெட்ட ஆகாரங்களையாவது சாப்பிட்டு வருவதனால், அவனது ஜீரணக் கருவிகளாகிய இரைப்பை முதலாகியவைகள் தந்தந்தொழில் அக்கிரமப்பட்டு ஆரோக்கிய கேடு உண்டாகிறது.

இன்னும் அளவிற்கு மேற்பட்ட கவலை, சந்தேகம், சந்தோஷம், பயம் முதலிய மனமுயற்சிகளுக்கு இடங்கொடுப்பதனால், அவைகளுக்கு ஆதாரமாகிய மூளை, இருதயம் ஆகிய இவைகள் மிகவும் சேதப்படும். இவ்விதமே வேண்டிய அளவிற்குக் குறைவாகிய மனமுயற்சிகளினாலும் நமது தேகத்திலுள்ள எல்லா உறுப்புக்களும் அளவிற்குரிய தொழிலை இழந்து, சுபாவங் குறைந்து நாளடைவில் சோர்வு ஏற்பட்டு உபயோகமற்றுப்போம்.

நமது தேகமானது தன்னாலே அசைவாடிக் கொண்டிருக்கும் ஓர் பெரிய கடியாரத்தைப் போல மஹா சக்தியும், நுட்பமும், விசித்திரமுமான யந்திரத்திற் கொப்பா யிருக்கின்றது. அக்கடியாரத்தில் மாதம், தேதி, வாரம், நாள், மணி, அரைமணி, நிமிஷம், விநாடி முதலியவைகளைக் காணத்தக்க பல சூத்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

அப்பிரமாணப்படியே அவைகளும் அசைவாடிக் கொண்டிருப்பதால் மாத முதலாகியவைகள் தப்பாது காண்பிக்கப்படுகின்றன. கடியாரமானது எப்பொழுதும் அசைவாடிக் கொண்டிராமல் நிறுத்தப்பட்டிருக்குமானால் துருப்பிடித்துப் பழுதாய்ப்போம்.

இவ்விதமே நமது தேகத்திலும் பலவித யந்திரங்களாகிய பல உறுப்புக்களுண்டு. அவைகளுக்குங் கெடியாரத்தின் யந்திரங்களைப் போலவே பல பிராமணங்களுள. அவையாவன — இன்னின்ன காலங்களில் இன்னின்ன உறுப்புக்கள் இவ்விதம் உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்பதே. அப்பிரமாணப்படி உபயோகப்படுத்தப் படாவிட்டால் அவ்வுறுப்பிற்குரிய தொழிலும் கெடுவதுமின்றி, அவ்வுறுப்பும் கெட இடமாகும்.

மிதமற்ற ஓட்டத்தினால் கடியாரத்தின் நுட்ப யந்திரங்கள் கெட்டுப் போவது போலவே, அளவிற்கு மேம்பட்டதும், கடினமானதுமான முயற்சிகளினாலே தேகயந்திரங்களாகிய சில உறுப்புக்களும் கெட்டுப் போகுமென அறிய வேண்டியது.

அவ்வவ் வுறுப்புக்குரிய முயற்சி, அவ்வவற்றின் சக்திக்கேற்ப செய்து வருவதால் அவைகளின் இரத்த ஓட்டம் இலகுவாய் நடந்தேறுவதற் கிடமுண்டு; அவ்விதம் அவைகளும் அவைகளின் தொழில்களும் நிலைத்திருக்கும். அப்படி இல்லாமற் போவதனால் நல்ல இரத்த ஓட்டம் நாளடைவில் குறைந்து அவைகளின் தொழிலுங் கெட்டு அவைகளும் துன்பப்பட்டுப் போம்.

ஆண்குறியானது ஈரல், நரம்புகள், குண்டிக்காய்கள், பீஜங்கள், சுக்கிலவாகிகள் ஆகிய இவைகளிலுள்ள மேன் மிச்சமாகிய கழிவுகளை வெளிப்படுத்தவும், சுக்கிலத்தைக் கருப்பையிற் சேர்க்கிறதற்காகவும், ஏற்படுத்தப்பட்ட ஓர் சூத்திரக் குழலாயிருக்கிறதென முன்னர் வாசித்திருக்கிறோம்.

இக்காரணங்களினால் வெகுநாள் வரையில் சுபாவ விரோதமாய் மணவாழ்க்கையை விட்டவர்களுக்கு, ஆணுடம்பானது தொழிலை முற்றிலும் தவிர்த்ததால் நாளடைவில் மெலிந்து சுருங்கிப் போகும், ஏனெனில் மேற்கண்ட விதமாய் எல்லா வுறுப்புக்களும் அவ்வவற்றிற்குரிய ஓர் தொழிலினால் பலப்படுவதும், அத்தொழிலற்றிருப்பதால் அவ்வுறுப்பு துர்ப்பலப்பட்டு மெலிந்து போவதும் சுபாவமே. ஆகையால், வெகுநாள் மணவாழ்க்கையை

விட்டதால் அது மெலிந்து அல்லது தளர்ந்து அல்லது சோர்ந்து ஆண்மைக் குறைவு உண்டாகும்.

சிகிச்சை:— கோசத்தை இளஞ்சூடான வெந்நீரினாற் கழுவ வேண்டியது. அப்படிச் செய்வதால் அதில் ரோமக் கால்கள் அகன்று விரிந்து இரத்த ஓட்டத்திற்கிடமாகும். பின்பு மெதுவாய்ப் புலிக்கொழுப்பைத் தடவ வேண்டியது. அதைச் சார்ந்த பாகங்களிலும் தடவ வேண்டியது.

பின்பு சில நாள் வரையில் தொடர்ச்சியாய் செம்மறியாட்டுப் பாலை கோசத்திலும் அதைச் சுற்றிலும் மெதுவாய்ப் பூசிக் கொண்டு வரவேண்டியது. (ஸிப்தேருமியை) Zift-i-roomi) அரைத்துக் கட்டுவதால் அல்லது தார் தைலம் பூசுவதால் நரம்புகளுக்கு உற்சாகமுண்டாகிச் சோர்வு நீங்கி சுவஸ்தப்படும்.

இவையன்றிச் சுக்கில விர்த்தியை யுண்டாக்குகிற ஆகார பானங்களாகிய பால், சருக்கரை, மாமிசம், கோழி, கோழி முட்டை ஆகிய இவைகளை அதிகமாய் உபயோகித்து வரவேண்டியது.

இவ்வியாதியஸ்தர்கள் பெண்களின் அலங்காரம், சிறப்பு, உடலுறவின் பெருமை முதலியவைகளைப் பற்றிய கதைகளையும் சதாகாலமும் வாசித்து வருவதாலும் இவ்வியாதி தீர்ந்திருக்கிறதாக அனுபோக சாலிகள் எழுதியிருக்கிறார்கள். நீலோற்பல எண்ணெய், பருத்திக் கொட்டை எண்ணெய், அக்கராகாரத்தூள் வகை ஒன்றுக்கு பலம் ஒன்று, இவற்றையொன்றாய்க் கலந்து பத்திரஞ் செய்யவும். ஆண் அங்கத்தை இளஞ்சூடாகிய வெந்நீரினால் கழுவி, சூடுண்டாகத் துணியினால் கொஞ்சம் அழுத்தித் துடைத்து மேற்படி மருந்தைப் பூசிவரக் குணப்படும்.

3-வது

தேகத்தின் கீழ்ப்பாகத்தில் ஆவி குறைவாயுண்டாவதால் உண்டான தாதுநஷ்டம்.

சகோதரர்களே! ஆண் அங்கத்தில் விம்மல் உண்டாகாமல் சம்போகம் கூடாமையென்பது தெரிந்த விஷயம். அதன் விம்மலுக்கு ஆவி, ஆத்மசத்து, இரத்தம் ஆகிய மூன்றும் ஆதாரம்.

இதன் விவரம் முன் கூறப்பட்ட பக்கங்களைப் பார்வையிடவும். இம்மூன்றில் ஆவியானது சுக்கிலத்தின் கொழுமையினின்று உண்டாகும். அதனால் உடலுறவில் விருப்பம் உண்டாகி ஆண்குறியின் எழுச்சிக்கும் ஆதாரமாகும். சில காரணங்களால் ஆவி குறைவாயுண்டாவதால்

ஆண்குறியின் எழுச்சியும் குறைவாயுண்டாகி மணவாழ்க்கை சக்தி குறையும்.

காரணமும், குறிகளும்:— தேகத்தின் கீழ்ப்பாகத்தில் குளிர்ச்சி, அல்லது சூடு அல்லது வரட்சி மிகவும் அதிகமாகி, ஆவியும் ஊதலும் மிகவும் குறைவாயுண்டாவதனால் ஆணங்கத்தில், பூரண எழுச்சியுண்டாகாமல் அரைவிறைப்பாகவேயிருக்கும். அதனால் ஒருபோதும் போகிக்கக் கூடாது. தேகமும் மற்ற உறுப்புக்களும் நல்ல நிலையிலிருந்தும் ஊதலுண்டாகாது. இரைப்பையை உப்பச் செய்யும் பட்டாணிக் கடலை முதலியவைகளினாலும், ஆகாரங்களினாலும், குணமாயிருப்பதுபோற் தோன்றும். சுக்கிலம் அதிகமாய் வெளிப்படும். ஆயினும் கோசத்தில் முற்றிலும் எழுச்சியில்லையெனச் சொல்ல இடந்தராது. சற்று விம்மலுண்டாகும்; ஆனால் சோர்வினால் போகிக்கக் கூடாமையாயிருக்கும்.

இன்னும் சூடு அல்லது கொழுமை குறைந்து போவதாலும் விம்மலுண்டாகாது; அதன் அடையாளமாவது, முக்கியமாய்க் கொழுமையையும், சூட்டையும் அதிகமுண்டாக்கும்படியான ஆகாரங்களைச் சாப்பிடும் போது அதிக விம்மல் உண்டாகும்.

சிலருக்குச் சூடுண்டாகாத காரணத்தினாலேயே விம்மலுண்டாகாது. அதன் குறியானது, பசியாயிருக்கும் போதும் இரைப்பை வெறுமையாயிருக்கும் போதும் கடினமாய் இயக்கப்பட்ட போதும், சூடான அவுடதங்களை அல்லது உபயோகித்த போதும் பலமான விம்மல் உண்டாகி விடும்.

சிகிச்சை:- குளிர்ச்சி, சூடு, வரட்சி என்னும் இவைகளில் ஏதாவதொன்று அதிகரித்திருந்தால் அதற்கு எதிரிடையானவைகளில் தேகத்திற்கு ஏற்றுக் கொள்ளும் படியாகியவைகளினால் நிவர்த்தி செய்து, வெங்காயம், கடலை, பச்சைத் திராக்ஷி, பிஸ்தாப் பருப்பு முதலியவைகளையும் உபயோகிக்க வேண்டியது.

சூடு குறைந்த அளவாய் அல்லது சுத்தமாயுண்டாகாதிருந்தால் சூட்டைத் தரும் லேகியங்கள், தைலங்கள் ஆகிய இவைகளை உபயோகிக்க வேண்டியது. கொழுமை குறைவாயிருந்தால் மொச்சை, கடலை ஆகிய இவைகளைப் பக்குவப்படுத்திச் சாப்பிடுவதனாலும், புதிய பாலில் கொஞ்சம் லவங்கப் பட்டைத் தூளைச் சேர்த்துச் சாப்பிடுவதனாலும், குளிர்ச்சியாகிய ஸ்நானங்களினாலும், அவ்வித தைலங்கள் பூசி வருவதனாலும் நிவர்த்தி செய்ய வேண்டியது. மற்ற அவுடதங்களை அவுடத பாகத்திற் காண்க.

4-வது

ஆண் மறைவிடத்தின் நரம்புகளின் வியாதியினாலுண்டாகும் தாது நஷ்டம்.

a. ஆண்குறியில் தசை கொஞ்சமாகவும் நரம்புகள் அதிகமாகவும் இருக்கின்றன; (அதன் விவரம் கோசத்தின் பாடத்தைப் பார்வையிடவும்) இவற்றில் கபநீர் முதலியவை இறங்கி விடுவதனால் இரத்தம் முறிபட்டும் தக்க அளவாய் இரத்தஞ் செல்லாததனாலும் ஸ்பரிசம், சலனம் ஆகிய இவைகள் அற்றும் தாது நஷ்டப்படும்.

அடையாளம்:- சுக்கிலம் அதிகம் தெளிந்தும் அளவில் அதிகப்பட்டுமிருக்கும். ஆண்குறியில் ஸ்பரிசமும் சலனமும் பலவீனப்பட்டுத் தளர்ந்து போதும். அதன் விம்மலின்றியே சுக்கிலம் வெளிப்படும். நாளடைவில் மெலிந்து சிறுத்துக் கொண்டே வரும்; அதில் தண்ணீர் பட்டால் சுருங்குங் குணமிருக்காது;

இவ்வியாதி கண்டு அதிகநாள் ஆகிவிட்டாலும், அது அதிகமாய் மெலிந்து சிறுத்து சோர்வடைந்து விட்டாலும் தீர்வது கடினம், அதற்குச் சிகிச்சையில்லை. ஆனால் வியாதி கண்டு அதிக நாளாகாதிருந்தாலும், தண்ணீர் படுவதனால் அது சுருக்கங் கொடுத்தாலும், அது அதிகம் மெலிந்து சிறுக்காதிருந்தாலும் சிகிச்சைக்கு வசப்படும்; சிகிச்சையை அடுத்த பாராவில் பார்வையிடவும்.

b. ஆண்குறியில் வாதரோகங் காண்பதனாலும் ஸ்பரிசம், சலனம் கெட்டு மெலிந்து தளர்ந்து சோர்ந்து போம்.

காரணம்:— மூத்திரக் குண்டிக்காய்களின் வியாதியினாலும், மேகவியாதியினாலும், மூளையின் பாகத்தில் விப்புருதிக் கட்டி முதலிய வியாதியுண்டாவதனாலும், முள்ளந்தண்டுக் கொடியின் வியாதியினாலும், தம்பனத்திற்கென வங்கம், அபினி, கஞ்சா ஆகிய இவைகளைச் சாப்பிட்டதனாலும் ஸ்பரிச நரம்பில் அழுத்தங் காண்பதனாலும் இந்தக் கொடிய வியாதி பிறக்கும்.

சிகிச்சை:— வேறு வியாதியினால் இந்த வியாதி கண்டால் முன்னர் அந்த வியாதியை நீக்கும்படியான சிகிச்சை செய்து கொள்ள வேண்டியது.

இன்னும் அவுடத பாகத்திற் சொல்லியிருக்கிறபடி, மேற்பூச்சுத் தைலம் முதலியவைகளினால் நிவர்த்தி செய்ய வேண்டியது. இந்த வியாதிக்கு உள்ளுக்கு அவுடதம் சாப்பிடுவதைப் பார்க்கிலும் ஆண் மர்மஸ்தானத்தின் மேல் பூசும் தைலம் முதலியவை பூசி வருவதனால் அதிகப் பிரயோசனமுண்டாகும்.

c. குளிர்ச்சியாகிய தண்ணீரில் அடிக்கடி இறங்கி நிற்பதனாலும், பனிக்கட்டி முதலாகியவைகளின் மேல் உட்காருவதனாலும் கோசம் தளர்ந்து, சோர்ந்து மெலிந்து போம்.

இதைப் பற்றி விவரமாய்த் தெரிந்து கொள்வதற்கு முன் சில முக்கிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அவையாவன:—

நமது தேகத்திலுள்ள அஸ்திகளையும் தசைகளையும் மூடிக் கொண்டிருக்கிற போர்வைக்குத் தோலென்று பெயர், இது வயதிற்குத் தக்கபடி வித்தியாசப்பட்டிருக்கும். எப்படியெனில் சிறுவர்களிலும் பெண்களிலுமுள்ள தோல் மினுமினுப்பும் மெதுவாயுமிருக்கும்; நடுவயதுள்ள புருஷர்களில் அது சற்று வயிரிப்பும் முரணுமுள்ளதாயிருக்கும். விருத்தர்களுடையவும், அதிகமாய் மெலிந்து தளர்ந்தவர்களுடையவும், சரீரத்தின் பொருத்துக்களிலுள்ள தோல் திரைந்து சுருங்கியிருக்கும்.

இவ்விதமே தேகத்தின் சில பாகங்களில் அந்தந்த அவயவங்களின் காரியத்துக் கிசைய வெளித் தோலானது காய்த்து மரத்து விரைத்துப் போயும், மிருதுவும் நுண்மையுமாம் இருக்கும். எப்படியெனில், சரீரத்திலே உணர்ச்சி எவ்விடத்தில் எவ்வளவு கூர்மையோ அவ்விடத்திலுள்ள வெளித்தோலும் அவ்வளவு மிருதுவும் நுண்மையுமாயிருக்கும். சரீரத்திலுள்ள பொருத்துக்கள் அங்குமிங்கும் அசையை வேண்டியபடியினாலே அவ்விடங்களிலுள்ள வெளித்தோல் தளரவும் சுருக்கமுமாயிருக்கின்றது. உறைஞ்சப்படுகிற இடங்களாகிய உள்ளங்கை, உள்ளங்கால் முதலியவைகளிலுள்ள வெளித்தோல் மிகவும் காய்த்து மரத்து, விறைத்துப் போயிருக்கிறது.

வெளித்தோல் இப்படி அந்தந்த இடங்களில் காய்ப்பது அவைகளுக்கு ஓர் பாதுகாப்பும், வெளித்தோல், உள்தோல் என்னும் இரண்டு படைகளிலும் பின்னுள்ளதே விசேஷமானது. அது சரீரத்தின் முன்பக்கமாகிய நெஞ்சு, வயிறு என்பவைகளில் இருக்கிறதைப் பார்க்க முதுகிலே தளமாயும், கை கால்களின் அகத்திலும் புறத்திலும் அதிக தடிப்பாகவும் தேகத்தின் எப்பகுதியிலும் உள்ளங்கை உள்ளங்கால்களில் அதிக உரப்பாகவும் இருக்கின்றது.

ஆனால், தேகத்தின் மற்ற உறுப்புகளைப் பார்க்கிலும் கோசத்தின் நரம்பு முதலியவைகள் விசேஷமான குணத்தோடு உண்டாக்கப்பட்டிருக்கிறது நமக்குத் தெரியும்; (இதுக்கு முன்னர் கூறப்பட்ட கோசம் என்னும் பாடத்தைப் பார்வையிடவும்.) அவ்விதமே இதன் தோலிலும், மிகவும் ஆச்சரியமான விசேஷ குணமும் இருக்கிறது; அதென்னவெனில், அதற்குரித்தாகிற ஓர்வித உணர்ச்சியே.

மேலும் ஆண்மக்களுக்கு ஆண்குறி எவ்விதம் சிரேஷ்டமானதோ அவ்விதமே ஆண்குறிக்கு அதன் நுனியாகிய லிங்கம் மிகவும் சிரேஷ்டமானது; ஏனெனில், கோசமின்றி மணவாழ்க்கையில்லை; அதன் லிங்கமின்றி மணவாழ்க்கையில் இன்பமில்லை. ஆகையால், அதிக இன்பத்தை அனுபவிக்கத்தக்கது இப்பாகமே. இவ்வித உணர்ச்சிகளால் மனதிற்கு ஆனந்த முதலியவையுண்டாகின்றன. இந்த ஓர் விசேஷ குணமே பெண் அங்கத்திலும் உண்டாயிருக்கிறது.

இவ்வித உணர்ச்சிகள் இவ்விரண்டு உறுப்புக்களுக்கும் சொந்தமானது; எப்படியெனில், தேகத்தின் மற்ற உறுப்புக்கள் ஒன்றோடொன்று அல்லது இந்த உறுப்புக்களில் ஒன்று மற்றொன்றோடு ஸ்பரிசிப்பதால் உண்டாகும் அவ்வளவு ஆனந்தமும் இன்பமும் உண்டாகா, ஆகையால் மற்ற உறுப்புக்களைப் பார்க்கினும் இவ்வுறுப்புக்களில் விசேஷ குணமொன்றிருக்கிறது நன்கு விளங்கும், இதற்கு முதற்காரணம் அதன் மேலுள்ள தோல் என்பதிற் சந்தேகமில்லை.

இன்னும் சீதோஷ்ணத்தின் சொற்ப விகற்பத்தினாலும் ஆண்குறியானது நீள்வதும் குறுகுவதும் யாவருக்குந் தெரிந்த விஷயமே; ஆனால் மற்ற உறுப்புக்கள் அவ்விதமாகா; மற்ற உறுப்புக்களைப் போலவே தோலிலும், நாடி, நாளம், மாசயனிகள், நிணக்கோளங்கள் சுவேதக் கோளங்களுண்டு. நாடிகளும் நாளங்களும் ஒன்றோடொன்று பரந்து, தந்துகிகளாய் ஒன்றுடனே யொன்று பின்னி வலை போலக் கிடக்கின்றன. ஆகையினால்தான் எப்பகுதியில் வெட்டினாலும் அப்பகுதியிலே இரத்தங் காண்கிறது.

மேனியெங்கும் வெளித்தோலுக்குள்ள மாசயனிகள் என்னும் சிறு குழல்களுண்டு. இவைகளின் வழியாய் உடம்பில் பூசின தைலங்கள் இரத்தத்திலே கலக்கும்.

மேற்கண்ட காரணங்களினால் அந்தப் பாகத்திலுள்ள தோல் மிகவும் நுண்ணியதெனவும் அதிசீக்கிரத்தில் விகற்பப்படுகிறதெனவுந் தெரிகிறது.

ஆகையால், அதிக குளிர்ச்சியான தண்ணீரானது தேகத்தின் மேல் பட்டவுடனே தேகத்தில் சற்று தளர்ச்சியுண்டாகும். இதற்கே இப்படியானால் மிகவும் நுண்மையான பாகத்தில் இவ்வளவு தளர்ச்சியுண்டாகுமெனச் சொல்லல் வேண்டுமா?

இன்னும் குளிர்ந்த ஜலத்திற்போய் நின்று கொண்டு அரை முதலிய கீழ்ப்பாகங்கள் வெகுநேரமாக நனையும்படி அடிக்கடி இடங்கொடுப்பதால் ஆணங்கம் தளர்ச்சியடைவதுமின்றி, இரத்தாசய

முதலிய மத்திய யந்திரங்களில் இரத்தம் அதிகமாய்ப்போய்க் கட்டுகிறதனால், தேக அனலுங்கெட்டு அதிக தீமையுண்டாகும். இவ்விதம் சரீர அனல் அதிகமாய்க் குறைந்து தேகத்திலுள்ள பிரதான யந்திரங்களும் தளர்ச்சியடையும்.

இதற்குதாரணமாக ஜாலி நியூஸ் என்னும் பண்டிதர் எழுதுகிறதாவது:– அவருடைய காலத்தில் ஓர் வலையன் அதிக குளிர்ச்சியாகிய சலத்தில் நாள்தோறும் கொஞ்ச நேரம்வரையில் நின்றுகொண்டு மீன்பிடித்து வந்தான். அதனால் சொற்ப் நாளைக்குள்ளாக அவன் குதமும், நீர்ப்பையும் தளர்ந்து அவன் பிரியமில்லாமலே தானாய் மலஞ்சலம் போய்க் கொண்டிருந்தது என்பதே.

ஆகையால், அதிக குளிர்ச்சியான சலத்தில் அடிக்கடி இறங்கி அரைமுதலிய கீழ்ப்பாகங்கள் வெகுநேரம் நனையும் படியாக நிற்பதனால் மேற்கண்ட விதமாய் தாதுநஷ்டமுண்டாகும். இவ்விதமே பனிக்கட்டியின்மேல் உட்கார்வதனாலும் தாதுநஷ்டமுண்டாகும்.

சிகிச்சை:– அவ்வித கிரியைகளை உடனே நீக்க வேண்டியதுத் தவிர சோர்வுநீங்கி இரத்த ஓட்டம் சரியாயுண்டாகும்படி தைல முதலியவைகளைப் பூசி நிவர்த்தி செய்யவேண்டியது.

கவனிப்பு

தோலெங்கும் நிறைந்திருக்கிற மேலே சொல்லப்பட்ட சுவேதக் குழல்களும், நிணக் குழல்களும், அசுத்தமும் விஷமுமான பதார்த்தங்களை நிமிஷந்தோறும் வெளியே கொண்டுவந்து தள்ளும்; முக்கியமாய் அவை அடிவயிறு முதலிய பாகங்களில் அதிகமாய்ச் சேருக்கிறபடியால் அதை அடிக்கடி சுத்தம் பண்ணிக்கொண்டு வரவேண்டியது. இப்படி அவைகளைச் சுத்தம் பண்ணிக்கொண்டு வராவிட்டால் அவைகளில் படிந்திருக்கும் அசுத்தமும் விஷமுமான பதார்த்தங்கள் மறுபடியும் தோலின் வழியாகத் தேகத்திற்குள் பிரவேசிக்கிறதற்கும், தோலின் மேலுள்ள சிறுதுவாரங்கள் அழுக்கினால் அடைப்பட்டுப் போகிறதற்கும், இடமுண்டாகி, கோசம் முதலியவைகளின் நரம்புகளிலும் அதன் குணத்தைக் காட்டி அவைகளின் தொழிலைமாற்றும்.

இவ்விதமாக அது சோர்ந்து மெலிந்து தளர்ந்துவிடுவதாலும் தாதுநஷ்டமுண்டாகும். ஆகையினால், சோம்பல், சாவகாசமின்மை, வெட்கம் முதலியவைகளினால், சும்மாவிருந்துவிடாமல் மற்ற பாகங்களைப் போல இதையும் நன்றாய்த் தேய்த்துக் கழுவிச் சுத்தம்

பண்ண வேண்டியது. ஏனெனில் சிலர் ஸ்நானம் செய்யும்போதும் மற்ற காலங்களிலும் மேற்கண்ட காரணங்களினால் இப்பாகத்தையுங் கவனிக்காது கவனக்குறைவாக யிருந்துவிடுகிறார்கள். அப்படிச் சிலநாளிருந்து விடுபவர்களுக்கு மேற்கண்ட விதமாய் கோசம் தளர்ந்துபோமென்பதிற் சந்தேகமில்லை. விரைவாதம், அண்டவாதம் முதலிய வியாதி யுண்டாவதற்கு மிடமுண்டாகும்.

ஆகையால், அந்தப் பாகத்தை நன்றாய்த் தேய்த்துக் கழுவி வருவதால் இரத்தமானது வேகத்தையும் பலத்தையும் அடைந்து அந்தப் பாகங்களில் கதிப்பாயோடும். இதனால் அந்தப் பாகம் சுகநிலையில் ஆண்குறி முதலியதும் பருத்தும் பலத்துமிருக்கும்.

அதிதேக முயற்சியுள்ள பயில்வான்களில் அனேகர் உருண்டு திரண்டகை கால்கள், அகன்ற மார்பு முதலிய அவயவங்களோடு சிற்றானைக்குட்டியைப் போலொத்து ஜட்டிகளாயிருந்தும் மணவாழ்க்கையில் பூனைக்குட்டிகளாகவே யிருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் தேகமுயற்சி செய்யும்போது சிலவிதிகளைக் கவனியாமற்போவதால் அவர்கள் கோசம் சிறுத்து அல்லது தளர்ந்து அல்லது சோர்ந்து போவதே.

அதெப்படியெனில்:—

தேக முயற்சியானது மனிதராகிய ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியமானது. ஏனெனில், தேகமுயற்சி செய்வதால் சுத்த இரத்தமானது தேகத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் கதித்தோடி உடலெங்கும் நன்றாய் வியாபிக்கும்; புத்திக்காதாரமாகிய மூளையில் சுத்தமான இரத்தங் கதித்தோடி வருமானால் மனோதத்துவங்கள், மனோற்சாகம், சந்தோஷம் முதலியன வுண்டாகும். நுரையீரலாகிய சுவாச யந்திரத்துக்கு அதிக பிரயோசனமுண்டாகும் சுவாசத்தின் மூலமாய் விஷமுள்ள தேகக்கழிவு தேக முயற்சிக்குத்தக்கபடி சரீரத்தை விட்டு நீங்கும் இன்னும் இரத்தமும் அதிக சுத்தமாகித் தேக முழுமைக்கும் பரவிச் சுகத்தையும் பலத்தையும் உண்டாக்கும்.

இவ்விதமாய்ச் சரீரத்தின் ஒவ்வொரு அவயவங்களிலும் சுத்தமான இரத்தங் கதித்தோடுமானால் அதனுடைய தொழிலும் நன்றாய் நடந்தேறி அதிக பலமுள்ளதாகும். ஆனால் முக்கியமாய் இக்காலங்களில் ஒவ்வொரு உறுப்பிற்கும் இரத்தமானது தடையின்றிச் செல்லத்தக்கதாக உடுத்திருக்க வேண்டியது ஏனெனில் சிலர் கழுத்தில்மணி முதலியவைகளை இறுக்கிக் கட்டுவதால் தலைக்குப்போய் இரத்தாசயத்திற்கு மீளும் இரத்தம் தலையிலே தடைப்பட்டு, தலைச் சுழற்றல், தலைக்கனம் முதலிய உண்டாகின்றன; வேறு சிலருக்கு

இக்குணங்கள் அதிகரித்துச் சன்னிதோஷமுண்டாவதுண்டு; சிலருக்கு வேறு காரணங்களால் உண்டான சன்னிதோஷமும் மேற்கண்ட காரணத்தினால் அதிகரிப்பதுமுண்டு.

இவ்விதமாய் எந்த உறுப்பில் இரத்தம் பரவத் தடையுண்டாகிறதோ அந்த உறுப்பு நாளடைவில் துர்ப்பலப்பட்டுத் தன் தொழிலை இழந்து விடுகிறது.

இந்தப் பயில்வான்கள் தேகமுயற்சி செய்யும்போது ஜட்டியால் கோசம், பீஜம் முதலியவைகளைத் தேகத்தோடு தேகமாயிருக்கும்படி இறுகக் கட்டிவிடுகிறார்கள். ஆகையால் தேகமுயற்சியில் தேகமெங்கும் இரத்தம் பரவும்போது ஜட்டியினால் கட்டுண்ட இந்தப் பாகத்தில் இரத்தம் பரவுவதற்கு வாய்ப்பில்லாமற்போம். இவ்விதம் மற்ற பாகங்களெல்லாம் விருத்தியடைந்து பலத்துக்கொண்டு வர, மணவாழ்க்கைகுரிய பாகமோ, நாளடைவில் இரத்தக்குறைவுண்டாகி மெலிந்து அல்லது சிறுத்து அல்லது தளர்ந்து மணவாழ்க்கைக் குபயோகமற்றுப்போம்.

ஆகையால் முக்கியமாய்த் தேகமுயற்சி செய்யும்போதும் பானின் (Gurnsey cloth) போட்டுக் கொள்வதால் அனேக வித சுகுணமுண்டு. இன்னும் அண்டவாதமுண்டாமென்கிற சந்தேகத்தால் அனேகர் சதாகாலமும் லங்கூட்டையிறுக்கிக்கட்டிக் கொண்டேயிருக்கிறார்கள்.

மேற்கண்ட விதமாய் இவர்களுக்கும் கோசம் துர்ப்பலப்பட்டு மணவாழ்க்கை சக்தி குறைய இடமுண்டு. ஆனால் அந்தச் சந்தேகமுள்ளவர்கள் அதைக் கொஞ்சந் தளர்வாய்க் கட்டியிருக்க வேண்டியது. சந்நியாசிகள் இரத்தவிருத்தியையுண்டாக்கும், புஷ்டியாகிய ஆகாரங்களைக் குறைத்துவருவதுபோல அவர்கள் கௌபீனம் தரித்திருப்பதும் மணவாழ்க்கை சக்தியைக் குறைக்கவேண்டுமென்கிற கருத்தெனவே புலப்படுகிறது.

5– வது

முஷ்டிக் கிரியையினாலுண்டாகும் தாதுநஷ்டம்

இதற்கு கரசுரதம் என்றும் (ஜலூீ) என்றும் (Self polution,) என்றும், இன்னும் பலவகைப் பெயர்களுண்டு.

மானிட வழக்கத்திற்கு விரோதமாகக் கை முஷ்டியினால் இந்திரியத்தை வெளிப்படுத்துவதற்கு முஷ்டிக்கிரியை எனப் பெயர்.

இக்கொடிய பழக்கம் எல்லாவிதத்திலும் தீங்கை விளைவிக்கத்தக்கது. இத்தகாக்கிரியையைச் செய்பவர்கள் பல

வகையினாலும் நஷ்டவாளிகளாவார்கள். இவர்கள் பார்ப்போருங் கேட்போரும் நகைக்கும்படியாகிய கஷ்டத்திற்குட்படுவார்கள். இப்பாதகச் செய்கையினால் தேகத்திற்குச் சம்பவிக்கும் கெடுதிகளைப் போல் வேறெவ்வகையினாலும் இவ்வளவு கெடுதி நேரிடாது. ஆகையாற்றான் இத்தகையினர்களுக்கு அவுடதங் கிடையாதெனவே பல சாஸ்திரங்களும் கூறுகின்றன, இவ்வழக்கத்தாலுண்டான வியாதிகள் தீர்வதும் கஷ்டமே.

காமவிகாரம் அதிகரித்திருக்கும் ஏழைகள், சந்நியாசிகள், விவாகமில்லாதவர்கள் முதலாகியவர்கள்தான் முக்கியமாய் இக்கொடிய பழக்கத்தைக் கையாடுவார்கள்.

அனேக இளைஞர்கள் சகவாசக் கெடுதியால் இத்தகாக்கிரியையை அனுசரித்து ஏதோ இன்பமடைகிறதுபோல எண்ணி முடிவில் துன்பத்திற் காளாகிறார்கள்.

கோசத்தில் நரம்புகள் அதிகமெனவும், தசைமிகவும் குறைந்த அளவென்பதும் நமக்குத் தெரியும், மேலும் அதன் தொழிலும், அதையுபயோகிக்குங் கருவி வேறென்பதும், இக்கருவிகள் ஒன்றிற்கொன்று தக்கதாய்ச் சர்வ வல்லமையுள்ள கடவுளால் உண்டாக்கப்பட்டிருக்கிறதென்பதும் நமக்குத் தெரியும்.

ஆகையால், கோசத்தின் சுபாவத் தொழிலுக்கு விரோதமாய்ச் செய்வதால் நரம்புகள் அதிவேகமாய் இயக்கப்பட்டுத் தளர்ந்துபோகும். இவ்விதம் நரம்புகளுக்கு அதிகவிபத்துண்டாகி நட்டமடைந்தும் அதைச் சார்ந்த பாகங்களெல்லாம் க்ஷீணிக்க ஆரம்பிக்கும்.

கொலை செய்த ஒருவனுக்குப் பிரமஹத்தி யுண்டாகிக் கொலை செய்வதிலேயே கவனமாயிருப்பது போலவும், குடிக்கக் கற்றவர்களுக்கு ஆரம்பத்தில் அது மிகவும் சொற்பமாயினும் வர வரக் குடி மீறி இராப் பகலாக அதே கவனமாகி விடுவது போலவும், இக்கொடிய கிரியையை ஆரம்பித்தவர்களுக்கு வெகு விரைவாய் அக்கவனந் தலைக்கேறி மீறிப் போய், அதை எவ்விதத்திலும் அடக்க முடியாமற் போய் அத்தொழிலுக்கே ஆளாய் விடுவார்கள்.

ஆகையால் கோசம் நரம்புகளில் அதிக அதிர்ச்சியுண்டாகித் தளர்ந்து சோர்வடைந்து போகும், பெரும்பாலும் கோசத்தின் அடி மிகவும் சிறுத்துப் போகும். இதனால் கோசத்தில் விம்மல் அற்று மணவாழ்க்கையிற் உபயோகப்படுத்த ஹேதுவில்லாமற் போம். பின்பு

பீஜங்கள், நீர்ப்பை, குண்டிக்காய்கள், துர்ப்பலப்படும். இதனால் மணவாழ்க்கை இச்சையற்றுப் போகும்.

கோசம் எழுச்சியின்றியே இந்திரியம் வெளிப்பட ஆரம்பிக்கும்; இதனால் இந்திரிய இழிவும் மணவாழ்க்கையைப் போன்றதால் உண்டாகும் இன்பமும் போய் விடும். பின்பு இந்திரிய விளைவும் குறைந்து போம், ஏனெனில் அது அளவில் அதிகமாய்ச் செலவாகிறபடியால் இந்திரிய விளைவு குறைந்து முடிவில் சுபாவமாகவே தாது விளைவு குறைந்து அற்றுப் போம்; இதனால் தாதுவை வெளிப்படுத்தும் சக்தியுங் குறைந்து அதனாலுண்டாகும் ஓர்வித இன்பமும் இல்லாமற் போம். பின்பு குண்டிக்காய்களிலிருந்து ஊன் நீர் வெளிப்பட ஆரம்பிக்கும்; பின்பு தேகத்தின் கொழுமை குறையும்; பின்பு ஜீவாக்கினியும் குறையக் காரணாக்கினி அதிகரிக்கும். பின்பு விடாச் சுரங் கண்டு தேகம் வரண்டு யாதொரு சிகிச்சைக்கும் கைவசப்படாது.

இவ்விதம் ஆண்குறி, பீஜங்கள், விந்துக்குழல், விந்துவாகி, குண்டிக்காய்கள், ஈரல், இரைப்பை துர்ப்பலப்பட்டுத் தத்தந் தொழில்களிலும் மாறுதலேற்பட்டு அனேகவித துன்பங்களுண்டாகும்; அவைகளில் முக்கியமனாவை—

சந்ததிக்குரிய தாதுவின் சக்தி முந்திப் போய்விடும். நல்லறிவு குன்றிப் பலவித கவலைகள், கெட்ட எண்ணங்கள், சந்தேகங்கள் உண்டாகும். தன் கண்ணிற்கெதிர்ப்படுவதெல்லாம் வெறுப்பாகவே இருக்கும். எப்பொழுதும் தனியாகவே இருக்கப் பிரியமாம். அசுத்த ஆவிகளெல்லாம் தன்னையே சூழ்ந்து தன்னை ஆழ்த்திக் கொண்டிருக்கிறதெனத் தோற்றும்; நல்லறிவு, நல்ல யோசனை முழுவதும் போய் விடும். கெட்ட கனவு முதலிய உபத்திரவங்களால் நித்திரை பிடியாதிருக்கும்; தான் செய்கிறதும் பிறர் செய்கிறதும் சற்றும் தனக்குப் பிடிக்காதிருக்கும். பசி, தேகத்திலுள்ள தசை, தேகபலம், காந்தி, ஊக்கம், மனோபலம், அறிவு முதலிய யாவும் ஒன்றாய்ப் பறந்து போகும்.

நற்காரியங்களைச் செய்ய உண்டாகும் எல்லா எண்ணங்களும் காற்றாகப் பறந்து போகும்; ஒருவரிடத்திலும் நட்பில்லாமற் போகும்; மூளை வரண்டு அறிவு அகன்று பயித்திய மேலிடும்; முடிவில் இக்கொடிய செய்கையைத் தங்களால் சகிக்க முடியாது. தங்களுயிரைத் தாங்களே மாய்த்துக் கொள்ள நேரிடும். சிலர் தாம் சாகுமளவுந் துன்பமுற்றே சாகவும் நேரிடும்; இன்னும் இவைபோன்றவைகள் பலவாம்.

இவ்விதம் இக்கொடிய செய்கையால் முடிவில் தங்களைத் தாங்களே வதை செய்து கொண்டு இங்கு இருக்கிற வரையில் தீராத் துன்பமுடையவர்களாகி, மாய்ந்து அங்கு நரகத்திற்கும் ஆளாகிறார்கள். ஆகையால் முஷ்டிக் கிரியையினால் உண்டாகும் துன்பத்திற்கு அளவில்லை. இதனால் இன்ன வியாதியுண்டாகும், இன்ன வியாதியுண்டாகாதெனச் சொல்ல முடியாது.

இதற்காகவே இதைப் பற்றி எழுதவும் எனக்கிஷ்டமில்லை. ஆனால் இந்தப் பழக்கத்தினாலுண்டான வியாதியினால் துன்புற்றோர்களைப் பார்த்து மனஞ் சகிக்காமலும், மற்றவர்களுக்கு இந்த துஷ்டக் கிரியைகளிலிருந்து, விலகிக் கொள்ளும் பொருட்டும் மிகவும் சொற்பமாய் எழுதினேன். மேலும் சில பண்டிதர்கள் இதற்கு அவுடதமில்லையெனக் கண்டித்து விட்ட போதிலும், வேறு சில பண்டிதர்களும் பெரியோர்களும் அனுபவ யுக்தமாய்க் கண்டுபிடித்ததும், பல்விடங்களில் உபயோகிக்கப்பட்டனவுமாகிய பல அவுடதங்களையும் இரண்டாம் பாகத்தில் எழுதியிருக்கின்றேன்.

6– வது

ஆசனக்கிரியை (Sodomy) செய்வதனால் உண்டாகும் ஆண்மைக் குறைவு.

அருவெறுக்கத்தக்கதும் முறைகேடான இத்தகாச் செய்கைக்கு மிருகங்களும் இணங்கா; வேத சாஸ்திரங்களும் ஆயுள் வேத சாஸ்திரங்களும் இத்துன்மார்க்கச் செய்கை கூடாதென விலக்குகின்றன.

ஆடு மாடு முதலிய மிருகங்களிலும் இக்கெட்ட பழக்கங் கிடையாது.

ஆணிற்குப் பெண் துணையாகவும், உலகம் பெருகும் படியாகவுமே ஆண் பெண்ணென இரண்டு சாதிகளாயுண்டாக்கப் பட்டிருக்கின்றன.

நன்மை, தீமையெனப் பகுத்தறியுஞ் சக்தி இல்லாத மிருகங்களிலும் ஆணானது பெட்டையைத் தேடுமே யொழிய ஆண் ஆணைத் தேடுகிறதில்லை. ஆகையால் நன்மை தீமையெனப் பகுத்தறியுஞ் சக்தியுள்ள மனிதர்கள் எவ்வளவு விழிப்போடும், முறையோடும் நடக்க வேண்டியது. அப்படிக்கு முறை பிறழ்ந்து நடப்பவர்கள் அம்மிருகங்களிலும் கடையானவர்களென யாவராலும் மதிக்கப்பட்டு, பலவித துன்பங்களுக்கும் ஆளாகாதிரார்கள். எப்படியெனில், நாம் உட்கொள்ளும் ஆகாரமானது இரைப்பையிற் சென்று பக்குவப்பட்டுச் சுத்தசத்து, அசுத்த சத்தென இருவகையாகப் பிரியும்.

சுத்த சத்தானது பல மாறுதல்கள் அடைந்து முடிவில் நல்லிரத்தமாகித் தேகத்தைப் பாதுகாக்கும்; ஆனால் அசுத்த சத்தானது துணைக்குக்கி, சிறுகுடல், ஆகிய இவற்றிலும் பக்குவப்பட்டு, நிண முதலியவைகள் எல்லாம், சற்றும் பாக்கியில்லாது முற்றும் நன்றாய்ப் பிழியப்பட்டு முடிவில் மலக்குடலில் வந்து புளிப்பையும், ஓர்வித கெட்ட நாற்றத்தையுமடைந்தும்; இச்சக்கையானது இன்னும் முன் நோக்கிக் கீழ்ச் செல்லச் செல்ல அப்புளிப்பும், துர்நாற்றமும் அதிகரித்துக் கொண்டே முடிவில் மலாந்திரத்தில் வந்து தங்கியிருக்கும்; இந்தப் பாகத்திற்குக் குதமென்றும், (Rectum) (இம் ஆயே முஸ்தகீம்) என்றும் பெயர்;

இப்பாகம் அதிக நீண்டதாயிராவிட்டாலும் சற்றேறக் குறைய இரைப்பையின் அகலமுள்ளதாயிருக்கும்; இஃதிவ்வளவு அகன்றிருப்பதன் காரணமாவது, அசுத்த சத்தெல்லாம் தன்னில் ஒன்றாய்ச் சேர்த்து ஒருமிக்கத் தள்ளுவதன் பொருட்டு என்பதேயாம்.

கழிக்கப்பட்ட அசுத்த சத்துக்களை யெல்லாம் தன்னில் ஒன்றாய்ச் சேர்த்து வைத்துக் கொள்வதனாற்றான் இதன் பெயர் மலக் களஞ்சியமெனச் சொல்லப்படுகின்றது. இப்பாகத்தின் குணமாவது தனக்கு முந்தியிருக்கும் பாகத்திலுள்ள அசுத்த சத்துக்களையெல்லாம் உறிஞ்சியிழுத்துத் தன்னில் சேர்த்துக் கொள்வதேயாம். மேலும் தன் மூலமாய்ச் செல்வதனிடத்திலும் தன் குணத்தைக் காண்பித்து அதை அசுத்த நிலையில் ஆக்கி விடுவதுமாம். இது அதன் வழியாயுண்டாகும் காற்றினால் தெரிந்து கொள்ளலாம். இக்காற்றிற்கு வாய்வுப் பரிதலெனப் பெயர்.

இந்த மலப் பொக்கிஷத்தின் வாயிலுக்குத்தான் ஆசன மென்றும், அபானமென்றும் பெயர். மேலும் இவ்வாயிலானது, மலம் வெளிப்படும் போது மட்டும் விரியும், மற்ற நேரங்களிலெல்லாம் சுருக்கப்பட்டிருப்பதுவே அதன் சுபாவம்; பெண் மர்ம ஸ்தான சுபாவம் இவ்விதமானதல்ல.

மேற்கண்ட விதத்தால் ஆசனமும் அதைச் சார்ந்த பாகமும் கழிவிலும் மஹா கழிவாகிய மலம் நிறைந்ததென்பதும், தன்னைச் சார்ந்தவைகளையும் தன்னைப் போலாக்குங் குணமுள்ளதென்பதும், ஆசனமானது மலம் வெளிப்படுங் காலத்தில் மாத்திரந்தான் விரியும் என்பதும், தனக்கு முன்னுள்ளதிலிருந்து அசுத்தங்களை யுறிஞ்சும் சுபாவமுள்ளதென்பதும், நன்கு விளங்கும்.

பெண்களுடன் வாழ்வது முறை மேலும் மறைவிடங்களை அதற்காகவே ஒன்றிற்கொன்று தக்கதாய் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும் கொஞ்சம் வியாதியுள்ள பெண்ணின் உடலுறவு

செய்தவுடனே பஞ்சில் நெருப்பு பற்றிக் கொள்வது போல அந்த ஸ்திரீயின் வியாதி அவனைப் பற்றி கொள்வதுமன்றி அதுவே பல வியாதிகளுக்கோர் வித்தாய் விடுகின்றன.

அதற்கே இப்படியானால் மேற்கண்ட விதமாய்ச் சகல வியாதிகளுக்கும் மூலமாகிய அசுத்தமும், கழிவும் நிறைந்த ஸ்தானத்தில் சுபாவத்திற்கு விரோதமான கிரியையினால் எவ்வித கெடுதிகள் விளையுமென இதை வாசிப்பவர்களே அறிந்து கொள்ள வேண்டியது.

இன்னும் இத்தகைச் செய்கையில் ஓர் விசேஷ குணமுள்ளது; அது யாதெனின், இத்தகாச் செய்கையுடைய இருவரிலொருவரை மட்டும் ஓர் வியாதியாகத் தாக்காது. அவ்விருவரையும் பல வியாதி தொடர்வது என்பதே.

மேற்கண்ட விதமாய் அந்த ஸ்தானத்தின் குணத்தினால் ஆண் உறுப்புகளின் நரம்புகளின் சக்தி குறைந்து சுத்தமாய் இயக்கமற்றுப் போம். அதிக சூடானது மூளை, இருதய முதலாகிய இடங்களில் தாக்கி அவற்றின் சக்தியுங் குறைந்து ஆண்மைக் குறைவு ஏற்படும். இவர்களுக்கு இச்செய்கையிலேயே நாளுக்கு நாள் அதிகப் பிரியமுண்டாகிக் கொண்டிருக்கும். மணவாழ்க்கையில் சற்றும் விருப்பம் இருக்காது. இவ்விதமாகவும், இன்னுமோர் விதமாகவும் ஆண்மைக் குறைவு உண்டாகும். அதன் விபரம் அடுத்த பிரிவில் எழுதப்படும்.

இம்முறைகேடான பழக்கமுடையவர்கள் அவர்களின் முதல் இரவு காலங்களில் தங்கள் மனைவியர்களுக்கு வணக்கம் கூறி அம்மா, தாயே என்னைக் காப்பாற்று, என் மனதைக் காப்பாற்று என்று பல்லைக் காட்டிக் கெஞ்சிச் சொல்லவும், விரதம், சரதம் எனச் சொல்லித் தப்பித்துக் கொள்ளவும், பெண்யென்றால் மெய்நடுங்கி, தேகமொடுங்கி, மெல்லெனப் பின் செல்லவும் இடமாகும். சிலர் மருந்துங் கையுமாயிருந்து முடிவில் ஓய்ந்து மாய்ந்தவருமுண்டு; இவர்களை இவ்விதம் பார்த்திருந்தும், கேள்வியுற்றுமிருக்கிறோம். சகோதரர்களே தங்களில் அனேகரும் பார்த்தும் கேள்வியுற்றுமிருக்கலாம்.

சிகிச்சை:– இவ்வகைக் கொடிய வியாதி தீர்வது கஷ்டமென அநேக பண்டிதர்கள் கண்டிருந்த போதிலும், சிலர் ஒற்றிடம், மேற்பூச்சுத் தைலம் முதலிய அவுடதங்களை உபயோகித்திருக்கிறார்கள். ஆனால்–அவை முழுவதுமான குணத்தைத் தராவிட்டாலும் மிகவும் உபயோகமுள்ளன; ஆகையால் அவைகளை இரண்டாம் பாகத்திற் காண்க.

7–வது
ஆசனக்கிரியை செய்து கொள்வதனால் உண்டாகும் ஆண்மைக் குறைவு

இதற்கு விருத்த மஹாரோகமென்றும் சொல்வதுண்டு, ஏனெனில் இவ்வியாதி பெரும்பாலும் முதியவர்களிடத்தில் உண்டாகின்றன. எப்படியெனில், அவர்கள் ஆசனத்திற்குப் பக்கத்தில் கபநீர் முதலியவை சேர்வதனால் ஓர் வித தினவுண்டாகும். அக்காலங்களில் ஆண் உறுப்பை அல்லது அதைப் போன்ற வேறெவ்வகை பொருளையாவது அதற்குள் செலுத்திக் கொள்ளாத வரையில் அத்தினவு தணியாது. அதைச் சகிக்க முடியாது. ஆனால் மற்றவர்களும் கற்பனையால் அப்பழக்கம் சொற்ப நாள் செய்யினும் அப்பழக்கத்திலே விருப்பமுண்டாகி அதே கவலையாய் முடிவில் தேக முடிவோடே முடிவாகும்.

காரணம்:– (கோஜாக்களோடும்) ஆண் பெண்ணல்லாத அலிகளோடும் சிறுவயதிலிருந்தே சிநேகிக்கும்படி நேரிடுவதனாலும்; அல்லது அவர்களோடு அதிகமாய்ப் பழகுவதனாலும், இத்தகாக்கிரியை இவர்களுக்கும் பழக்கமாய் விடுகிறது.

சில ஆண் மக்களில் பெண் மக்களின் தன்மையே மிகுந்திருக்கும். பெண்களுக்கு இந்திரியக் கொழுமையினால் அவர்களின் கருப்பை முதலிய ஸ்தானங்களின் உட்பக்கமாய் ஓர் வித உணர்ச்சியுண்டாகும். அதுவே உடலுறவு உணர்ச்சியாம் ஆகையால், அது உடலுறவினில் தணிந்து போகும். அவ்விதமே பெண் தன்மை மிகுந்த ஆண் மக்களும், இந்திரியக் கொழுமை யினால் அவர்களின் உட்பக்கத்தில் ஓர்வித உணர்ச்சியுண்டாகிறது; அக்காலங்களில் மேற்படி பாகங்களுக்கு அடுத்திருக்கிற மலாந்திரத்தில் இயக்கமுண்டாவதனால் அந்த உணர்ச்சி தணியும். இவ்விதமாகவும் இத்தகாக்கிரியைக் கிடமாகின்றது.

சிலருக்கு இதற்கு முன் பிரிவில் விவரித்தபடி குதத்தில் விழுந்த விந்துவினால் அல்லது வேறெவ்விதமாயினும் அங்குப் புழுக்களுண்டாய் விடும். பின்பு விந்துவைப் புசிக்க ஆரம்பிக்கும் அவற்றிற்குப் பசியுண்டானவுடன் ஆசனத்தைக் கோதிக்கடிக்கும்; அப்பொழுது அக்கிரியை உண்டானால்தான் அது தணியும்.

சிலருக்குக் குதத்தில் கபநீர்வந்து தங்கி விடுவதனாலும் அங்கோர் தினவுண்டாகி இத்தொழிலுக்கு ஆளாவாருமுண்டு.

அக்கீம் அலி கீலானி என்பவர் சொல்லுகிறார்: ‘‘இவ்வியாதி பரம்பரையானது; எப்படியெனில் ஒருவனுக்கு மேற்கண்ட விதத்தினால்

எவ்விதமேனும் இப்பழக்கம் உண்டாகி விட்டால் அவனுக்குண்டாகும் சந்ததிக்கும் அதுவே பழக்கமாய் விடும்'' என்பதே.

ஜீர்ஜானி என்னும் பண்டிதர் சொல்லுகிறதாவது; ''மனைவிமார் கருப்பவதிகளாயிருக்கும் போது அவர்களோடு ஆசனக்கிரியை உண்டாயிருந்தாலும் அக்கருப்பத்திலுள்ள சிசு ஜனனமாகிச் சிறுவயதிலேயே இத்தொழிலுக்கு ஆளாய் விடும்'' என்பதே.

சிலர் சிறு வயதிலேயே இத்தகாத செய்கையை பழகிக் கொள்வார்கள்; அப்படிப்பட்டவர்களுக்கு இருதயமானது துர்ப்பலப்பட்டு, ஆண் உறுப்பு சிறுத்து மரத்துப் போய்விடும்; இன்னும் சுக்கிலம் இயக்கமற்றுப் போம். இவ்விதமானவர்களுக்கு வயது வந்து மணவாழ்க்கையில் இச்சையுண்டாகும் போது, அதற்குத் தன்னிடத்தில் சக்தியில்லாதபடியால், பாலியத்தில் உண்டாயிருந்த பழக்கத்தினாலே பழையபடியே அத்தொழிலை ஆரம்பித்துக் கொள்வார்கள்.

எவ்விதத்திலேனும் இத்தகாத் தொழிலாளிகளுக்கு முன் சொன்னபடி மலாந்திரத்திலுள்ள சூடுமுதலிய அசுத்தங்கள் யாவும் இருவரின் இருதயம், மூளை, ஈரல், கோசம் பீஜம் முதலிய உறுப்புக்களில் தாக்கி அவைகளில் மாறுபடும். ஆகையால் தேகத்தின் எல்லாத் தொழிலும் வேறுபட்டு இருவருக்கும் ஆண்மைக் குறைவு ஏற்பட்டு பல துன்பங்கள் நேரிட இடமாகும். இன்னும் இதைப் பற்றிய காரணம், குறிப்புகளை மிகவும் விரிவாய் எழுதலாம். ஆனால் இச்சிறிய நூல் மிகவும் விரிவாய் விடுமெனவும், அந்த தகாத செயலால் உண்டாகும் துன்பங்களை அநேகர் அறிந்தே யிருக்கிறார்களாகையினால் அதிகம் எழுத வேண்டியது அவசியம் இல்லை. என இவ்வளவில் நிறுத்தலாயிற்று.

சிகிச்சை:— இச்செய்கை பழக்கமாய்விட்டவர்களையும். பெண்தன்மை மிகுந்தவர்களையும் கடுங்காவலில் வைப்பதனாலும்; அவர்களுக்குப் பலவித கவலையை உண்டாக்குவதாலும் துன்பப்படுத்துவதனாலும், அடி முதலிய பயமுறுத்துவதனாலும்; அவமானப்படுத்துவதனாலும், இன்னும் இவைகளைப் போன்ற கண்டிப்பாகிய தண்டிப்பினால் அவர்கள் மனதை அச்செயலில் செல்ல விடாது திரும்பும்படி மாற்றி நிவர்த்தி செய்ய வேண்டியது. இன்னும் சில பண்டிதர்கள் சில அவுடதங்களை உடயோகித்துக் குணம் கண்டிருக்கிறார்கள்.

குதத்தில் கபநீர் சேர்வதனால் உண்டாயிருந்தால் பேதி முதலியவைகளினால் அந்நீரை வெளிப்படுத்தித் தினவு தணியும்படி, (பனப்ஷா) எண்ணெயைத் துணியில் நனைத்துத் திரியாய்ச் செய்து

கொள்வதனாலும், இவ்விதமே (பனப்ஷா) பூ ஊற வைத்த ஜலத்தில் துணியை நனைத்து வர்த்தி செய்து கொள்வதனாலும் நீக்க வேண்டியது.

8—வது—மேகவெட்டை வியாதியினால் உண்டாகும் ஆண்மைக் குறைவு

முன்னர் இந்த வியாதியின் காரணம், குறிகள் சிகிச்சை முதலாகியவைகளையறிந்து கொண்டால் இதனால் உண்டாகும் ஆண்மைக் குறைவை நிவர்த்தி செய்து கொள்ளக் கூடும்.

இந்த வியாதி பெரும்பாலார்க்குக் காண்பதுண்டு. இதற்குச் சிகிச்சையும் அநேக விதம், சிலர் பச்சிலைகளை அரைத்துச் சாப்பிடுவதும், சிலர் எண்ணெயினங்களைப் பிழிந்துச் சாப்பிடுவதும், சிலர் வித்தினங்களையரைத்துப் பிழிந்து சாப்பிடுவதும் இவ்விதம் பலவிதங்களுண்டு. ஆனால் இதற்கு நம்பத்தக்க தகுந்த அவுடதம் இதுதானென்று சொல்வது கூடாமையெனச் சொல்ல இடமுண்டு. ஏனெனில், சிலருக்குச் சில அவுடதங்களினால் உடனே குணமாகும். வேறு சிலருக்கு அவ்வவுடதம் ஒரு பிரயோசனத்தையுந் தருகிறதில்லை. மற்றும் சிலருக்கு ஒரு மருந்திலும் தீருகிறதேயில்லை. இப்படி பலவிதமாயினும் அதன் காரணம் லக்ஷண முதலியவைகளை நன்றாய்த் தெரிந்து சிகிச்சை செய்வதால் அவ்வித சந்தேகத்திற்கிடமாகாமல் சுகம் உண்டாகும், மேலும் இதற்காக இங்கு எழுதப்படும் பாகங்கள் மிகவும் அனுபவமானவைகளும் தேகத்திற்குக் கெடுதியை விளைவிக்காதவைகளுமே.

பிரமேகமென்பது கோசத்தில் அல்லது நீர்ப்பையில் சீழ்க்கட்டி அல்லது விரணங்கண்டு வெளுத்த சீழ், இரத்த முதலியன வடிவதற்குப் பெயர். இதற்கு வெள்ளையென்றும், பிரமேகம் என்றும், பிரமியமென்றும், மேக காங்கை என்றும், வெட்டையென்றும், சீழ்ப் பிரமேகம் என்றும், மேகச் சூடு என்றும் பல நாமங்களுண்டு.

இந்த ரணமானது கோசத்தின் அடி, நடு, முடி என்னும் எந்தப் பாகங்களிலிருந்தாலும் சரியே அல்லது நீர்ப்பையிலிருந்தாலும் சரியே.

காரணம்:— (1) மணவாழ்க்கை காலங்களில் அல்லது மற்ற காலங்களிலும் இந்திரியம் வெளிப்படும் போது கொஞ்ச பாகம் கோசத்தில் தங்கிப்போகும், அப்படி தங்கின இந்திரியமானது அழுகி, காரணச் சூடு அதிகரித்து தான் தங்கியிருந்த இடத்தையும் அழுகச் செய்து புண்ணாக்கிவிடும்.

குறிகள்:— ஆண்குறியில் சீழ்க்கட்டி கண்டிருந்தால் சிறுநீர் கழிக்கும் பொழுது வலியும் வேதனையும் உண்டாகும், வருத்தத்தோடு நீர் வெளிப்படும். சீழும் இரத்தமும், தனியாகவும் சேர்ந்தும் வெளிப்படும். சிலவேளை கசிந்து கொண்டேயிருக்கும்.

நீர்ப்பையில் சீழ்க்கட்டி உண்டாயிருந்தால் நீர் அதிகவருத்தத்தோடு வெளிப்படும்; நீர் சொட்டுச் சொட்டாயிறங்கும்; நீரில் துர்வாசனையிருக்கும், மேலும் நீரில் உமியைப் போன்ற அணுக்களும் வந்து விழும்; இன்னும் அரையில் நோய், கோசம் அடியில் நோய், இரண்டு துடைகளில் பிகுவாயிருத்தல் போல் தோற்றுதல், மஞ்சள் வருணமான நீர் வெளிப்படுதல் முதலியவைகளாம். மேற்கண்ட குறிகளை நிதானித்தறிந்து நீர்ப்பையின் சீழ்க்கட்டி அல்லது கோசத்தின் சீழ்க்கட்டியெனக் கண்டு சிகிச்சை செய்ய வேண்டியது.

2—வது ஓயாத உடலுறவாலும் குய்யத்தில் சூடதிகரித்த பெண்களுடன் உடலுறவு கொள்வதாலும், மாதப்பூப் படைந்த மகளிரோடும், பிரசவித்து இரத்த ஒழுக்காயிருக்கிற பெண்களோடும், வெள்ளை கண்டிருக்கிற பெண்களோடும் உடலுறவு கொள்வதாலும், வெறு வயிற்றில் சாராயங் குடிப்பதாலும், வெப்பமுள்ள ஆகாரங்கள், மருந்துகள் சாப்பிடுவதாலும், வெய்யிலில் அதிகமாய் நடத்தலினாலும், (சுண்ணாம்பில் ஜலஸ்பரிசம் செய்வதாலும்), உடலுறவில் இந்திரியம் வெளிப்படுமுன் பெண்ணை விட்டு நீங்கி விடுவதாலும், சிறுநீரை அடிக்கடி அடக்குவதாலும், மோகத்துடன் பட்டினியாயிருப்பதாலும், தம்பனச்சூட்டினாலும், நீர்த்தாரை, நீர்ப்பை ஆகிய இவைகளில் இரணமுண்டாகி இவ்வியாதியுண்டாகும்.

லக்ஷணம், நீர்ப்பையில் ரணமிருந்தால் ஜலஸ்பரிசஞ் செய்ய உணர்ச்சியானவுடன் நோயுண்டாகும். வருத்தத்துடன் நீர் வெளிப்படும். சீழும் இரத்தமும் வெளிப்படும். ரணமதிகமாயிருந்தால் எந்நேரமும் சீழ் வடிவதுண்டு.

இந்த வியாதிகண்டு வெளிக்காண்பது இத்தனை நாளில் என்று சொல்வது கஷ்டம்; ஏனெனில் சிலருக்ககு 3–4 நாளையிலும், சிலருக்கு இரண்டொரு வாரங்களுக்குப் பின்பும், வெளிக் காண்பதுண்டு. ஆகையால் 6–நாளிலிருந்து 14–நாளைக்குள் வெளிக் காணுமெனப் பொதுவாய்ச் சொல்லலாம். வியாதி ஆரம்பித்தில் ஆண் குறியிலும் அதைச் சார்ந்த பாகங்களிலும் புண்ணாகி நோகிறது போலிருக்கும். லிங்கத்தில் நமைச்சலெடுக்கும். சலம் வடியும். அதற்குடனே சிகிச்சை செய்யாவிட்டால் அது சீழாய்விடும்; கோசமும் மூத்திரத் துவாரத்தின் சளி

சவ்வும் வீங்கி, நீரானது சன்ன தாரையாய் இரண்டு பிரிவுகளாய் மூக்கலுடன், அதிக வேதனையுடன் நீர் இறங்கும் நீர்த் துவாரத்தில் எரிச்சலுமிருக்கும். இராத்திரி காலங்களில் ஆண்குறி விம்மலுற்று வளைந்து அதிக நோயெடுத்து நித்திராபங்கமுண்டாகும். இது நாட்பட்டு விட்டால் குறிகளெல்லாந் தணிந்து; வடிகிற மூக்குச் சளிபோலாகி விடும். அதற்குத் தந்தி மேகமென்று பெயர். இந்த வியாதியில் மூத்திரத் துவாரத்திலிருந்து இரத்தம் வந்தால் இரத்தப் பிரமேகம் என்று பெயர். இந்த ரோகம் சிலருக்குச் சீழ் வடியாமல் மூத்திரம் விடும் போது எரிவுங் கடுப்பும் மூத்திரத் துவார வீக்கமும், சிவப்புமிருக்கும்; இதற்கு வரட்சி மேகமென்று பெயர்.

மேகவெட்டையானது நாளடைவில் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். மேலும் அந்தச் சீழானது பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய நிறங்களில் ஒன்றாய் நாறும், பிசுபிசுப்பு நீங்கியும் போகும்.

ஆண்குறி, நீர்ப்பை முதலிய இடங்களில் அழலை கண்டு இம்மாதிரியாய்க் காண்பதுமுண்டு; ஆனால் இது நாளடைவில் தணிந்து கொண்டே வந்து விடும்.

சிகிச்சை:— இவ்வியாதிக் குபயோகப்படுத்தும் பீச்சிடு மருந்து முதலாகிய அவுடதங்களை இரண்டாம் பாகத்திலும் பிரமேக நிவாரண போதினியில் அதிக விபரமாகவும் காண்க.

இதுவரையில் ஆண் குறியைப் பற்றிய வியாதிகளையும் அவைகளின் அடையாளம் காரணம் முதலியவைகளையும் எழுதினோம். மேலும் இந்திரியம், கோசம் ஆகிய இவைகளைப் பற்றி வேறு சில வியாதிகளில் முக்கியமானவைகளைப் பற்றிச் சுருக்கமாய் எழுதுவதனால் அவ்வியாதி அதிகரித்துத் தாது நட்டப்படாமல் காப்பாற்றிக் கொள்ள வாய்ப்பில்லாமற் போகாது. அவையாவன:

இரத்த வெளிப்பாடு

உடலுறவில் அல்லது வேறு காரணத்தால் இந்திரியத்திற்குப் பதிலாக இரத்தம் வெளிப்படுவதற்கு இரத்த வெளிப்பாடு எனப் பெயர். இவ்விதமே கனவில் விந்து வெளியாதலில் இரத்தம் காண்பதுண்டு, சிலருக்குச் சுத்த இரத்தமாகவும், சிலருக்கு இந்திரியமும் இரத்தமும் கலந்ததாகவும் காண்பதுண்டு.

காரணம், முன்னர்ச் சொல்லியிருக்கிறபடி இரத்தமானது பெண்களின் தனத்தில் பாலாக மாறுவது போலப் புருஷர்களுக்கு இந்திரியமானது முடிவில் பீஜங்களில் நன்றாய்ப் பக்குவப்பட்ட

பின்புதான் வெண்மையாகிறது. இப்படி இரத்தத்தைப் பக்குவம் பண்ணி வெண்மையாக்க பீஜங்கள் நல்ல நிலையில் பலமுள்ளவைகளாயிருக்க வேண்டும். அவ்விதமில்லாமல் துர்ப்பலப்பட்டு போனால், இரத்தத்தை நன்றாய் பக்குவம் பண்ணச் சக்தியற்றுப்போம். இவ்விதம் இரத்தம் நன்றாய்ப் பக்குவப்படாமல் உடலுறவு காலங்களில் வெளிப்படுவதால் சிவந்தேயிருக்கும்.

சிலவேளை நீரிலும் இரத்தங் காண்பதுண்டு; ஆனால் அது மூத்திரக் குண்டிக்காய்களின் துர்ப்பலத்தால் உண்டாகிறதென அறிதல்வேண்டும்.

சிகிச்சை: பீஜம், மூத்திரக் குண்டிக்காய் இவைகளைப் பலப்படுத்த வேண்டியது. துர்ப்பலத்திற்குக் காரணம் சூடாயிருந்தால், சூட்டை நீக்க முயல வேண்டியது, அதற்கு காரணம் சூடில்லாவிட்டால் ரூமி மஸ்தகி எண்ணெய் மிகவும் பிரயோசனப்படும்.

மல வெளிப்பாடு

உடலுறவு காலங்களில் இந்திரியம் ஸ்கலிதமாகும் போது இச்சை இன்றியே மலமும் வெளிப்படுவதுண்டு. இதற்கு யூநாநியில் கதீதா (Ghathetha) என்று பெயர்.

காரணம்: மணவாழ்க்கையில் மனமுழுவதையுஞ் செலுத்திச் சம்பூரண இன்பத்தை அனுபவிப்பதால் அவர்கள் இந்திரியம் தீர்க்கமாய் நீர்த்துச் சூடாகி இரத்தமும் நீராகிவிடும்; அதனால் ஹஸ்தி பந்தனிகளும் நரம்புகளும், ஆத்ம சக்திகளும் மிகவும் துர்ப்பலப்பட்டுத் தேகங் கெட்டுப்போம். இவ்விதமானவர்களின் சந்ததி பெரும்பாலும் அறிவீனராகவும், நிர்மூடராகவும் இருப்பார்கள். அக்கீம்கள், நல்ல விவேகிகள் மணவாழ்க்கை இன்பத்திலேயே மனதை முழுவதும் செலுத்திவிடார்கள். தக்க அளவாய்ச் செலுத்துவார்களாகையால் பெரும்பாலும் அவர்களுக்குண்டாகும் சந்ததி அதிக விவேகமும், நுண்ணறிவு முள்ளவர்களாயிருப்பார்கள். மேற்கண்ட காரணங்களால் பெண்களுக்கும் வெளிப்படும் காலங்களில் இந்திரியம் வெளிப்படுவதுடன் மலமும் வெளிப்படும்.

சிகிச்சை: இருதயம், மூளை, நரம்பு முதலியவைகளுக்குப் பலத்தை யுண்டுபண்ண வேண்டியது. மணவாழ்க்கையின் பேராசையை நீக்க வேண்டியது. மணவாழ்க்கைக்கு முன் நீரைக் கழித்துவிட வேண்டும். வயிறு வெறுமையாயிருக்க வேண்டும். துவர்ப்பாகிய நல்ல ஆகாரங்களைச் சாப்பிட வேண்டியது. மற்ற அவுடதங்களை இரண்டாம் பாகத்திற் பார்வையிடவும்.

கோச ஸ்தம்ப ரோகம்

சதாகாலமும் கோசமானது கெட்டியாய் விம்மினபடியே யிருந்து, சற்றேனும் சுருங்காமல் எந்நேரமும் விரைத்த மாதிரியிருக்கிற ரோகத்திற்குக் கோசஸ்தம்ப ரோகமெனப் பெயர்.

காரணம்..உ. உடலுறவிற்குரிய இந்திரியங்களிலும், அதைச் சார்ந்த பாகங்களிலும் அசுத்தமான வாயு சேர்வதால் அல்லது இளஞ் சூடோடு கூடிய அசுத்த நீர் வந்து தங்கி விடுவதால் இந்த நோய்கள் காணும்.

சிலருக்கு குறி, பீஜங்கள், அவற்றைச் சார்ந்த பாகங்கள் ஆகிய இவற்றின் சருமத்திலுள்ள ரோமத் துவாரங்கள் அடைபட்டுப் போவதால் தேகத்திலுண்டாகுங் கழிவானது வெளிப்படாமல் அதற்குள் தங்கி விடுவதாலும் இந்த வியாதிகாணும்.

சிலருக்கு மணவாழ்க்கைக்குரிய இந்திரிய முதலாகியவைகளின் நரம்புகள் அதிகமாய் அகன்று விரிந்து போவதால் அதிக கழிவுகள் வந்து சேரும், ஆனால் வரவிற்குத் தக்க அளவாய் வெளிப்பட வாய்ப்பில்லாமற் போகிறபடியாலும் இந்த வியாதி காணும்.

அதிகமாய் வாயுவையுண்டாக்கும் பதார்த்தங்களாகிய பெரும்பயறு, காராமணிப்பயறு, கடலை, திராக்ஷரசம், மாற்று சேர்க்காத அரைவேக்காடாய் வேகவைத்த முட்டை முதலியவைகளை அதிகமாய் உபயோகித்து வருவதாலும் அடிக்கடி கவிழ்ந்து படுத்துக்கொள்வதாலும், இவ்வியாதியுண்டாகிறது.

அடையாளம்:— ஆண்குறி நாளடைவில் நீளத்திலும் கனத்திலும், விருத்தியாகிக் கொண்டேயிருக்கும். இத்துடன் சிலருக்கு காம இச்சை இல்லாதிருப்பதுமுண்டு.

இந்தக் கொடிய வியாதியை உடனே குணப்படுத்த வேண்டியது. தாமதப்படுத்துவதால் அவ்வியாதி பலத்துப்போம். இந்த நோயானது இருதய முதலான உறுப்புக்களோடு அதிக சம்பந்தப்பட்டிருந்தால் அபாயத்திற்கிடமாகும்; மேலும் கோசமானது மிகவும் அதிகமாய்ப் பருத்துப் போவதால் இந்திரியக் குழல்களெல்லாம் இழுக்கப்பட்டுப் போம். வாயு நிலையாய்த் தங்கியிருந்து விடும், பின்பு குளிர்ச்சியாகிய வேர்வை காணும்; அது கண்டால் மரணம் சமீபமாகிவிடும்.

சிகிச்சை:— ஆரம்பத்தில் வாந்தி நன்றாய் ஆகும்படி அடுத்தடுத்துக் கொடுக்க வேண்டியது. கீழ்ப் பாகங்களில் வாயுவைக் கண்டிக்கும்படியாய்த் தைலத்தை அடிக்கடி நன்றாய்த் தேய்த்துவர வேண்டியது; சுத்தமாகிய ஆகாரம் சொற்பமாய்ச் சாப்பிட்டுவர வேண்டியது, வாயுவைக் கண்டிக்கும்படியானதும், இந்திரியத்தைக்

குறைக்கத் தக்கதுமான அவுஷதங்களையும் உபயோகிக்க வேண்டியது. வாயுவைக் கண்டிக்கும்படி பற்றுக்களையும் பூச வேண்டியது உடலுறவை தவிர்க்க வேண்டியது. அப்படித் தவிர்ப்பதால் ஏதேனும் கெடுதியுண்டானால் மிகவும் குறைந்த அளவாய் அனுபவித்து வரவேண்டியது.

இன்னும் சிலருக்குக் கீழ்ப்பாகங்களில் இரத்த ஓட்டம் மிகுதியாவதால் அவ்வுறுப்பு அதிகம் பருத்தும் நீண்டும் வருவதுண்டு, அதன் லக்ஷணமாவது அப்பாகம் எந்நேரமும் சூடாயிருத்தல், அவ்விடம் அதிகஞ் சிவந்திருத்தல் முதலிய இரத்தாதிக்கத்தின் குணங்களுண்டாயிருக்கும்.

சிகிச்சை:— இதற்கு இரத்தத்தை வரளச் செய்வதே முக்கிய சிகிச்சை.

குறிப்பு

இந்த வியாதி சென்னையிலேயே ஒரு கனவானுக்குச் சம்பவித்து, மிகு விரைவாய் கோசமானது நீளத்திலும், பருமனிலும், மிகுதியாய்க் கொண்டு வந்து, ஆனால் கடவுளினது கிருபையால் சில சிகிச்சையாலே விருத்தியான மட்டும் நின்றுவிட்டது. இதுவரையில் ஒரு கெடுதியும் உண்டாகாமல் சுகமாய் வாழ்ந்துவருகிறார்.

மஹா மோஹ ரோகம்

நமக்குப் பசி, தாகம், சுபாவமாயினும், சில காரணங்களால் அவை அளவிற் கதிகமாய் விடுவதுபோல், காமமும் அளவில் அதிகமாவதற்கும் பல காரணங்களுண்டு, அவைகளில் முக்கியமாவன:

இரத்தமிகுதி, இந்திரிய விளைவு அதிகரித்து இயக்கம் அல்லது ஆவி அதிகமாயுண்டாதல்; விந்துவாகியும், இந்திரியக் குழல்களும் இராஜ கருவிகளைப் பார்க்கினும் அதிகம் பலத்திருத்தல்; மேற்கண்ட நிலைகளில் சீழ்க்கட்டி முதலியவைகள் உண்டாயிருத்தல் முதலியவைகளாம்.

குறிப்பு

இவைகளின் காரணங்களும், அடையாளங்களும் விரிவானதாகையாலும் இவ்விதம் இடம் போதாதாகையாலும் குறிப்பாய்க் காண்பிக்கப்பட்டன. கடவுளினது கிருபையால் சமயம் வாய்க்கும் போது அவசியம் எழுதப்படும்.

ஷூநாரி வைத்திய தாருட்யவிர்த்தி போதினி

அவுடதபாகம்

செய்முறைகள்

எவ்வகைப் பதார்த்தமாயினும் எவ்வகை ஆகாரமாயினும், அவ்வவ்வகைக்குத் தக்கபடியாயும் பக்குவமாயும், செய்யப்பட்டா லொழிய அப்பதார்த்தங்களைச் சாப்பிடப் பிரியமும், சாப்பிடுவதனால் மனதிற்கு ஓர் இன்பமும் உண்டாகா. தித்திப்பு, காரம் முதலாகிய எச்சுவைப் பதார்த்தமாயினும் ஒவ்வொன்றிலும் ஓர் விசேஷ குணமும், சிலாகிக்கத்தக்க சுவையுமுண்டு. எப்படியெனில், பூந்தி, லட்டு, ஜிலாபி, இம்ருதி, அக்பரி முதலாகியவைகளில் முக்கியமாய்ச் சேரத் தக்கவைகள்; சருக்கரை, கடலைமா அல்லது அரிசிமா, நெய் முதலாகியவைகளே, ஆனால் அவைகளைச் சேர்க்கும் இடையும், அதைச் செய்யும் வகையும் மாறுபடும். அந்த மாறுதலினால் அவற்றின் சுவையும், அவற்றின் பெயரும் வேறுபடும்.

இன்னும் இவ்வளவாய்ச் சேர்த்துச் செய்யப்பட்ட இதே தின்பண்டங்கள் ஒவ்வொருவர் கைக்கும் வேறுபடுகின்றன. இதன் காரணம் அவரவர்களின் செய்முறையே.

இவ்விதமே காரமான தின்பண்டங்களாகிய பகோடா, ஓமப்பொடி, காராபூந்தி, முதலியவைகளிலும் காணலாம்.

இவ்விதம் எவ்வித சுவையுள்ள பதார்த்தங்களிலும் செய்பாகத்தினால் ஓர்வித முதன்மையான குணமுண்டாய் விடுகிறது.

இன்னும் நாம் சாதாரணமாய் தினந்தோறும் சாப்பிடுகிற பதார்த்தங்கள் பக்குவந் தப்பி நன்றாய் வேகாதிருந்தாலும், பதத்திற்கு மிஞ்சிக் காய்ந்து தீய்ந்து விட்டாலும் அவ்வித பதார்த்தங்களைக் கண்டவுடன் நமக்கோர் அருவருப்புண்டாய் விடுகிறது. ஒருவேளை மிஞ்சிச் சாப்பிட்டு விட்ட போதிலும் உடனே அவை நமது தேகத்திற்குக் கெடுதி செய்யாதிருக்கவில்லை.

இன்னும் அந்தப் பதார்த்தங்களில் கூட்டப்பட்ட சரக்குகளில் ஒன்று அளவில் அதிகப்படினும், அல்லது ஒன்று அதிகங் குறையினும் அப்பதார்த்தங்கள் அதிகம் உபயோகப்படா.

மேற்கண்ட காரணங்களினால் எவ்வகைப் பதார்த்தங்களிலும், எவ்வகை ஆகாரங்களிலும் அவற்றில் சேர்க்க வேண்டிய வஸ்துக்கள், அவைகளின் நிறை அவைகளைப் பக்குவப்படுத்தும் விதம் முதலியவைகளை நன்றாயறிய வேண்டுமென்கிறது தெளிவாக விளங்குகிறது.

சாதாரணமாகிய பதார்த்தங்களிலே பாகபேதத்தினால் இவ்வளவு வேறுபாடுகள் உண்டாகின்றன; ஆகையால் நமது தேகத்திலுள்ள வியாதிகளை நீக்கவும்; வேறு வியாதியுண்டாகாதிருக்கவும், நமது சுகத்தைக் காப்பாற்றவும் ஆதாரமாகிய அவுடத பாகங்களை நன்றாயறிந்து தக்கபடி பக்குவஞ் செய்து கொள்வதனால் எவ்வித நன்மையை நாம் அனுபவிப்போமென சொல்லல் வேண்டுமா? ஆகையால், கொஞ்சமும் அசட்டை செய்யாதும், மனந்தவராதும் மிகவும் சாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டியதிருக்கிறது.

ஆனால் சிலர் சோம்பலினால் சொல்லித் திரிகிறதாவது, "அவுடதமெல்லாம் மகாபண்டிதர்கள் செய்ய வேண்டியது, நமக்கெல்லாம் வருமா, போமா, நம்மாலாமா" என்பதே. அறிவாளிகள் அப்படிச் சொல்வது அழகன்று.

ஏனெனில், மகாபண்டிதர்களாயினும், யாவரேயாயினும் சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட ஒவ்வொரு பாகத்தையும் நன்றாயறிந்து அவ்விதமே செய்து கொள்பவர்கள்தான் சாமர்த்தியமுள்ளவர்கள்; எல்லாக் காரியங்களுக்கும் மனமே காரணமாகையால் மனதைச் செலுத்தி முயற்சி செய்வதனால் எவ்வித காரியத்திலும், எவ்விதமும் வெற்றி பெறலாம்; தொட்டால் துணை செய்வான்.

தெய்வத் தானாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலிதரும்.

இந்நூலானது சிகிச்சையைத் தேடும் யாவருக்கும் பிரயோசனப்படும்படி கருதப்பட்டிருப்பதால் ஒவ்வொரு பாகத்தையும் கூடிய மட்டும் மிகவும் விபரமாகவும், தெளிவாகவும், யாவருக்கும் விளங்கும் படியாகவும், பல பாகங்களின் பேரும், அவைகளைச் செய்யும் விபரமும், சேர்ப்பதில் உபயோகிக்க வேண்டிய நிறைகள், அளவுகள் முதலாகியவைகளையும் முன்னர் சொல்லுவாம்.

சூரணவிதி:— கடினமாகிய சில சரக்குகளை வெண்கலம் அல்லது இரும்பு உரலில் இடித்துத் தூள் செய்து கொள்ள வேண்டியது; மிருதுவான பதார்த்தங்களைக் கல்லுரலில் அல்லது கலுவத்தில் தூள் செய்து கொள்ள வேண்டியது.

சில சரக்குகளை அனலில் வெதுப்பியும், சில சரக்குகளை வெயிலில் காய வைத்துந் தூள் செய்து கொள்ள வேண்டியது. ஏனெனில் அவ்விதம் செய்வதனால் தூள் நன்றாயாகும்; தூள் செய்வதற்கு வேண்டிய கருவிகளாகிய கலுவம், கத்தி, உரல், உலக்கை முதலாகியவைகள் பரிசுத்தமாயிருக்க வேண்டியது.

இவ்விடம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியதொன்றுளது. அது யாதெனின், யோக முறைகளிற் சேருகிற சரக்குகளை முதலில் நன்றாய்ப் பொறுக்கி ஆய்ந்து, அதில் வேறு இனங்களில்லாமல், தனித்தனியாக இடித்து நன்றாய்த் தூள் செய்து வடிகட்டிய பின்புதான் நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டுமென்பதே. முதல் நிறுத்தெடுத்துப் பிறகு சூரணிப்பதனால் சேதமாகி சரக்கு நிறை குறையும். இவ்விதம் செய்யாததனால்தான் அவுடதத்தின் பெருமையும் மகிமையுங் குறைந்து போகின்றன.

கியாழ பாகவிதி:— கியாழம் பலவகையுண்டு. அவைகளில் முக்கியமான இரண்டொன்றை யிவ்விடம் கூறுவாம். கடினமாகியவேர், பட்டை, சரக்குகளை நைய நறுக்கி முறையில் கண்டிருக்கிற அளவான சலத்திலிட்டுக் காய்ச்சி அதிற் கண்டிருக்கிற பங்கு கணக்காய்ச் சுண்ட வைத்து வடிகட்டியிறுத்துக் கொள்ள வேண்டியது. கிஷாயங்களை இளஞ்சூடாயிருக்கும் போதே வடிகட்டிக் கொள்ள வேண்டியது.

ஏனெனில், குளிர்ந்து விட்டால் அதிலுள்ள சத்தெல்லாம் அடியில் படிந்து விடும். அளவு குறியிட்டிராத பாத்திரங்களிற் கியாழம் காய்ச்ச வேண்டிய போது அதில் சரக்குகளைவிட்டு அவை நன்றாய் நனையத் தக்க நீரை வார்த்து மட்டமாகப் பரப்பி பின்பு கியாழம் வேண்டிய அளவு நீரை வார்த்து ஒரு குச்சியை நட்டு மட்டமாய் பரப்பின சரக்குகளின் மேல் நிற்கிற நீரின் அளவைக் குறித்து, மற்ற நீரை வார்த்துக் காய்ச்சிக் குச்சியில் குறியிட்ட அளவிருக்கையில் இறக்கிக் கொள்ள வேண்டியது.

அனேக சரக்குகளைச் சேர்த்து கியாழம் செய்ய வேண்டிய போது நேரப்பட வெந்து சத்து இறங்குகிற சரக்குகளை நீரில் முதலில் போட்டு, போதுமான வரையில் காய்ச்சி, பின்பு சீக்கிரத்தில் வெந்து, சத்து இறங்குகிற சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ள வேண்டியது.

வெந்நீர் ஊறல் கியாழம்; சரக்குகளை வெந்நீரிலிட்டு ஊறவைத்து வடிகட்டிக் கொள்வதின் பெயர். கொழுந்து, இலை, பூ, நுண்ணிய வேர் முதலியவைகளை வெந்நீரிலிட்டு வேண்டிய நேரம் மூடி வைத்து வடிகட்டிக் கொள்ள வேண்டியது. அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சுவதனால் அவற்றின் சத்தெல்லாம் வீணாய்ப் போம்.

செய்முறை:—

சருக்கரை, கற்கண்டு, முதலாகியவைகளைப் பாகாகச் செய்ய வேண்டிய போது, தேவையானதில் கொஞ்சம் சலத்தைச் சேர்த்துக் காய்ச்ச வேண்டியது. அப்படி காய்ச்சும் போது கொஞ்சம் எடுத்து சற்று

ஆறவிட்டுப் பார்க்க, தேன் போலிருக்கிற பாகத்திற்கு மதுபாகமென்றும்; நூல் போல் வருகிற பாகத்திற்குத் தந்துபாகமென்றும், விரற்களைத் தண்ணீரில் நனைத்து பாகமெடுத்தால் மிருதுவான குளிகை போல் திரளுகிற பாகத்திற்குக் கரபாகமென்று பேர்.

லேகிய பாகவிதி:— சருக்கரையை கொஞ்சம் சலத்திற் கரைத்து அடுப்பிலேற்றிக் காய்ச்சி தந்துபாகத்திலிறக்கி அதில் சூரணங்களைக் கொட்டிக்கலந்து பிறகு தேன் நெய் சேர்த்துப் பிசைந்து கொள்வது.

மாஜூன் பாகவிதி:— (Majoon) தூள் செய்யவேண்டிய சரக்குகளைத் தனித்தனி சூரணித்து ஒன்றாய்ச் சேர்த்து, முறையில் சேருகிற சருக்கரையைக் கொஞ்சம் நீரில் கரைத்துக் காய்ச்சி நூல் பதமாய் வந்தபிறகு இறக்கிக் கொண்டு, மேற்படி சூரணத்தைக் கொட்டிக் கிண்டிக் கொள்ள வேண்டியது. அல்லது சருக்கரைக்குப் பதில் தேனாயிருந்தால் அதைக் காய்ச்சி நுரை நீக்கி இளஞ்சூடாயிருக்கும் போது மேற்படி சூரணத்தைக் கொட்டிக் கிண்டிக் கொள்ள வேண்டியது.

முறையில் தேனும் சருக்கரையும் சேருகிறதாயிருந்தால் சருக்கரையில் முன்னர் கொஞ்சம் சலம் வார்த்துப் பின்பு தேனும் விட்டுக் கலந்து கொஞ்சம் காய்ச்சித் துணியில் வடிகட்டி, பின்பு காய்ச்சு பதத்திலிறக்கிச் சூரணத்தைச் சேர்த்துக் கொள்ளவும். யோகத்தில் சில சரக்குகளை கியாழம்செய்து சேர்க்கிறதாயிருந்தால் அந்தக் கியாழத்தில் சருக்கரையைக் கரைத்துக் காய்ச்சி முன்போல செய்து கொள்ள வேண்டியது.

முபற்றிஹ் பாகவிதி (Mufurrih):— மனத்திற்கு ஆனந்தத்தையும் மகிழ்ச்சியையும் உண்டாக்கும் அவுடதத்திற்கு முபற்றிஹ் என்று பெயர். இந்த அவுடதத்தில் முத்து, பவளம், மாணிக்கம் முதலியன சேர்க்கப்படும். இதை மாஜூன் பாகப்படியே செய்து கொள்ள வேண்டியது. ஆனால், கொஞ்சம் இளம் பதமாயிருக்க வேண்டியது.

ஜவாரிஷ் பாகவிதி:— இதுவும் மாஜூன் பாகவிதி போலவே செய்து கொள்ள வேண்டியது. ஜவாரிஷ் என்பது சுவையின்மை நீக்கும் மருந்து (Astomachic Medicine)

ஹல்வா பாகவிதி:— சிலவற்றை லேகிய பாகவிதி போலவும், சிலவற்றை மாஜூன் பாகவிதி போலவும், செய்து கொள்ள வேண்டியது. மா, நெய், சருக்கரை முதலியவைகளினால் செய்யப்பட்ட தித்திப்பு பக்ஷணத்திற்கு ஹல்வா வென்று பெயர்.

லூபூப் பாகவிதி:— இது ஆதியில் வித்துக்களின் பருப்பையயரைத்துப் பிழிந்த ரசத்துடன் தேன் கலந்து காய்ச்சிக் கொள்வதற்குப் பேராயிருந்தது. இப்பொழுது வித்தினங்களை யரைத்துப் பிழிந்தும் அவைகளை நைய இடித்தும், அல்லது மெலிதாய்ச் சீவியும் சேர்த்து செய்து கொள்வதற்குப் பேராய் விளங்குகிறது. லூபூப் என்றால் வித்தின் பருப்புகள், ஆகையால் வித்தாதி அல்லது விந்தாதி அவுடதமெனப் பெயர் சொல்ல வேண்டும்.

பற்று:— உலர்ந்த சரக்குகளை அல்லது ஈரச் சரக்குகளை சலத்தில் அல்லது வேறு ரசத்தில் அரைத்து மேல் பூசுவதற்குப் பெயர்.

ஷர்பத்து பாகவிதி:— மாதுளம் பழம், கமலா முதலிய பழங்களின் ஷர்பத்திற்காக, அவைகளைப் பிழிந்த ரசத்திற்குச் சரிபங்கு சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி, மதுபாகத்தில் இறக்கிக் கொள்ள வேண்டியது.

ரோஜாப்பூ, தாமரை முதலிய புஷ்பங்களின் ஷர்பத்து வேண்டிய போது, நன்றாய்க் கொதிக்கிற சலத்திலிட்டு, அடுப்பிலேற்றி கொதிக்க வைத்து அரை பாகம் சுண்டின பின் இறக்கிப் புஷ்பங்களைப் பிசைந்து வடிகட்டிக் கொள்ள வேண்டியது; புதிய புஷ்பங்களாயிருந்தால் மேற்படி கியாழத்திற்குச் சரிபங்கு சருக்கரையும் சேர்த்து முன்போல் செய்து கொள்ள வேண்டியது. வேர் பட்டை, வித்து, உலர்ந்த இலைகள் ஆகிய இனங்களாயிருந்தால் அவைகளை நறுக்கி, வேண்டிய அளவு நீரில் 12 மணி நேரம் வைத்து மூன்றிலொன்றாய் அல்லது 4ல் ஒன்றாய்க் காய்ச்சி வடிகட்டிக் கொள்ள வேண்டியது. இக்கிஷாயத்திற்கு 2 அல்லது 3 பங்கு சருக்கரை சேர்க்க வேண்டியது.

திராக்ஷை, சீமையிலந்தப் பழம் முதலிய உலர்ந்த பழங்களை முன் மாதிரியே 2 அல்லது 3 நாள் ஊற வைத்துப் பின்பு காய்ச்சி, அரை பாகமாய் சுண்டின பின் நன்றாய்ப் பிசைந்து வடிகட்டி அதற்கு 2 அல்லது 3 பங்கு சர்க்கரை சேர்த்துப் பதமாய் காய்ச்சிக் கொள்ள வேண்டியது.

முறப்பா:— பழவருக்கம், காய்கள் முதலானவைகளைப் பக்குவப்படுத்தி, சருக்கரைப் பாகு அல்லது தேனில் விட்டு வைத்திருப்பதற்கு முறப்பாவென்று பெயர்.

எண்ணெய் பாகவிதி:— இது பல விதங்களுண்டு, ஆனால் முக்கியமானவைகளை இவ்விடம் சொல்லப்படும்.

பூ எண்ணெய்:— மல்லிகை, முல்லை முதலிய புஷ்பங்களின் எண்ணெய் வேண்டிய போது இலை, அரும்பு, காம்பு முதலியவைகளை

நீக்கின புதிய புஷ்பம் 4 பங்கை கழுவின எண்ணெய் 5 பங்கில் இட்டு மண், தூசு முதலியது விழாமல் வெய்யிலில் வைத்து பூக்களின் நிறம் முதலியவை மாறின பின்பு எண்ணெயில் அந்தப் புஷ்பங்களின் வாசனை வந்து விடும்.

அதன் பின்பு நன்றாய் பிசைந்து பிழிந்தெடுத்து விட்டு, மறுபடியும் அந்த எண்ணெயிலேயே அதேவித புதிய புஷ்பம் 2 பங்கு சேர்த்து முன்போலவே வெய்யிலில் வைத்து, பூக்கள் நன்றாய் நிறம் மாறினபின் முன்போலப் பிழிந்து, சக்கையை நீக்கி, அந்த எண்ணெயில் மறுபடியும் அவ்வகை புதிய புஷ்பம் 2 பங்கு சேர்த்து வெய்யிலில் வைத்து முன்போலவே செய்து, பின்பு 1 பங்கு புதிய புஷ்பம் போட்டு முன்போல் செய்து நன்றாய் நீர்வற்றின் பின்பு, வடிகட்டிக் கொள்ள வேண்டியது.

இவ்வகை யெண்ணெயானது மிகவும் திறமானது அதிக குணமுள்ளதுமாகும்.

இன்னொரு வகை:— புதிய பூக்களின் ரசம் 2 பங்கும், எண்ணெய் ஒரு பங்கும் சேர்த்து நீர் சுண்ட காய்ச்சிக் கொள்ள வேண்டியது.

உலர்ந்த புஷ்பம், பட்டை, வேர், விதை முதலியவைகளைக் கிஷாயமாகச் செய்து அக்கியாழம் 3 பங்கும் எண்ணெய் 1 பங்கும் சேர்த்து நீர் சுண்ட காய்ச்சிக் கொள்ள வேண்டியது.

குறிப்பு

எண்ணெயின் பலமானது சரக்குகள் அதிகம், குறைவுக்குத் தக்கபடியாயிருக்கும். சூரிய புடமாய் ஆவதுதான் சிரேஷ்ட குணமுடையது.

தீநீர்—வேர், பட்டை, விதை முதலிய இனங்களை நைய நறுக்கியும், பழவருக்கங்களைத் துண்டுகளாகச் செய்தும், பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிற அளவுக்கு எடுத்து அதில் சொல்லியிருக்கிற அளவு நீரில் 12 மணி நேரம் ஊறவைத்து, வாலையிலிட்டுத் திராவகம் இறக்கிக் கொள்ள வேண்டியது.

வாலையிலிட்ட சரக்குகள் தீய்ந்து போகும் படியாக அதிக நேரம் வைப்பதும், வாலையிலிட்ட பதார்த்தங்கள் நன்றாய் வேகாது அதிக நீர் மீந்திருக்கும்படியாக சீக்கிரம எடுப்பதுங்கூடாது. ஆகையால், மிதமாயிருக்க வேண்டியது. இப்படி யிறக்கின திராவகத்திலேயே முன் சரக்குகளையிட்டு பழையபடி யிறக்குவதால் திராவகம் அதிகம் காரமாய் நல்ல குணமுடையதாயிருக்கும்.

ஒற்றிடம்:— இலை அல்லது வேறு சில பதார்த்தங்களை வறுத்து வேதனையுள்ள இடத்தில் ஒற்றுகிறதற்கு ஒற்றிடமெனப் பெயர்.

மேற்பூச்சுத் தைலம்:— சரீரத்தின் மேல் தேய்க்கத் தைல ரூபமாகச் செய்து கொள்ளுகிற பாகத்துக்கு மேற்பூச்சுத் தைலமெனப் பெயர்.

பட்டிகட்டல்:— மெல்லிய சீலையைத் தக்கபடி பாளமாய்க் கிழித்து, தைலத்தில் நனைத்து அல்லது அவுடதத்தைத் தடவி வியாதியுள்ள உறுப்பில் சுற்றுதலுக்குப் பட்டி கட்டலென்று பெயர்.

ஆசனவர்த்தி:— ஆசனத்தில் பிரயோகிக்கப் பெரிய வர்த்தி ரூபமாய்ச் செய்து கொள்வதற்கு ஆசனவர்த்தியென்று பெயர்.

பீச்சிடு மருந்து:— நீர்த்தாரை விரணம், நீர்த்தாரைச் சீழ்க்கட்டி முதலியவைகளுக்குப் பீச்சாங் குழலால் பீச்ச நீர் ரூபமாகச் செய்து கொள்ளும் அவுடதத்திற்குப் பீச்சிடு மருந்தெனப் பெயர்.

பக்குவ முறைகள்

சில சரக்குகளைப் பக்குவப்படுத்தாமல் உபயோகப் படுத்துவதால் துர்க்குணங்களுண்டாகும். ஆனால், அவைகளைப் பக்குவப்படுத்தி உபயோகிப்பதால் அதிக குணமுண்டாவதுந் தவிர சீக்கிரமும் குணத்தைத் தரும். ஆகையால், பக்குவப்படுத்தாது உபயோகிப்பது நலமன்று.

நல்லமுத்து:— துளையிடாத நல்லமுத்துகள் தேவையானது ஓர் சிறிய மண் கலயத்திலிட்டு, அதன்மேல் 4 அங்குலம் இருக்கும்படியாக பசும்பால் விட்டு, அப்பாத்திரத்தின் வாய்க்குச் சில்லிட்டு 3 சீலைமண் செய்து நெருப்பின் மேல் வைத்துப் பால் சுண்டுகிற வரையில் ஊதியெடுத்து ஆறவைத்துத் திறந்து பார்க்கப் பால் சுண்டியிருந்தால் பதம், சுண்டாது கொஞ்சம் பாக்கியிருந்தால் முன்போலவே மூடிச் சீலைசெய்து நெருப்பில் வைத்து ஊதியெடுக்க பால் சுண்டிப்போகும்.

பின்பு ஆறவைத்து எடுத்துத் தண்ணீரிற் கழுவித் துணியால் துடைத்துவிட்டு நன்னிக்கல் கலுவத்திலிட்டு பன்னீர் விட்டு நிறைக்குத் தக்கபடி 2,3 நாள் நன்றாய் அரைத்து, சிறு பில்லைகளாய்ச் செய்து சீஷாவில் வைத்துக் கொள்ள வேண்டியது.

நற்பவளம், பவளக்கொடி:— இவற்றில் தேவையானதை சிறு துண்டுகளாய்ச் செய்து ஓர் மண் கலையத்திலிட்டு வாய்க்குச் சில்லிட்டு 3 சீலை மண் செய்து கரிநெருப்பின் மேல் வைத்து விசிறவும். 2 மணி அல்லது இரண்டரை மணி நேரத்திற்குப் பின் எடுத்துச் சற்று ஆறவிட்டுப் பார்க்க வெண்ணிறச் சாயலாயிருந்தால் அதுதான் பதமென அறிய வேண்டியது.

ஆனால், அந்நிற மாகாதிருந்தால் முன்போலவே செய்து கொள்ளவும். பின்பு எடுத்து இளஞ்சூட்டுடனே கலுவத்திலிட்டு மெதுவாய் நன்றாய்த் தூள் செய்து பன்னீர் விட்டுப் பிசைந்து சிறு பில்லைகளாய்ச் செய்து கொள்ள வேண்டியது.

மாணிக்கம், எமனி என்னும் இரத்தினம் (Cornelain) யஷப் என்னும் கல் முதலாகியவைகளை நெருப்பில் காய்ச்சி வெள்ளாட்டு நீரில் பல முறையும் குளிர்ந்த நீரில் பல முறையும் நனைக்கவும்.

இவ்விதம் பலமுறை செய்வதனால் தூள் தூளாகி அரைக்கப் பக்குவமாயிருக்கும்; அப்பதமான பின் அரைத்துப் பன்னீர் விட்டு பில்லை செய்து வைத்துக் கொள்ளலாம். அல்லது அப்போதைக்கப்போது இழைத்தும் உபயோகிக்கலாம்.

கஹரூபா:— இதைச் சிறு துண்டுகளாய்ச் செய்து ஓர் சிறிய மண் கலையத்திலிட்டு வாய்மூடி சீலைசெய்து கரிநெருப்பின் மேல் வைத்துக் கொஞ்ச நேரம் விசிறி அப்படியே 12 மணிநேரம் ஆறும்படியாக விட்டு விடவும்; பின்பு எடுத்து கலுவத்தில் நன்றாய்ப் பொடிசெய்து பன்னீர் விட்டுக் குழைத்துச் சிறு பில்லைகளாய்ச் செய்து வைத்துக் கொள்ளவும்.

தங்கம்:— பூங்காவியை எலுமிச்சம்பழ ரசத்தினாலரைத்து தங்கக் கட்டியின் கீழ்மேல் இரண்டு பக்கமும் நன்றாய்ப் பூசி உலர்த்தி நெருப்பைப் போற் காய்ச்ச சுத்தியாம். இவ்விதம் சுத்தி செய்த தங்கம் ஒரு விராகனெடை நுண்ணிய பொடியாக ராவி, அத்தூளிற்குச் சமனெடை இந்துப்பு சேர்த்து, கொஞ்சம் நீர்விட்டு நன்றாயரைத்த பின், ஒரு பில்லையாகச் செய்து கொள்ளவும். பின்பு, அப்பில்லையில் அரை நிறை நவாச்சாரம், அரைநிறை வெண்காரம் ஆகிய இவ்விரண்டையும் அரைத்துத் தூள் செய்து நீரில் கரைத்து ஒரு மண் கலையத்திற்குள் இந்த நீரையெல்லாம் உலர உலரப் பூசி பின்பு கொஞ்சங் காய்ந்த பின்பு முன்தங்க பில்லையை வைத்து வாய்க்குச் சில்லிட்டு மூடி 3 சீலை மண் செய்து 350 கிராம் நிறையுள்ள 4 அல்லது 5 விராட்டியில் புடம் போடவும்.

பின்பு இவ்விதம் 3 புடம் போட்டு எடுத்துத் தூள் செய்ய பக்குவமாயிருந்தால் நல்லது. இல்லாவிட்டால் முன்போலவே இன்னும் இரண்டொரு தடவை செய்து பின்பெடுத்து நன்றாய்த் தூள் செய்து சீசாவில் வைத்து கொள்ள வேண்டியது.

வெள்ளி:— இதையும் தங்கத்தைப் போலவே செய்து கொள்ள வேண்டியது.

மேற்கண்ட இந்த 2 பாகங்களும் மிகவும் திறமானவை. இவை தேகத்திலுள்ள மாசுகள், கழிவுகள் முதலியவைகளை நீக்கி ஆத்ம சக்தியை விர்த்தி செய்து தேகத்தைப் பலப்படுத்தி மனத்திற்கு அதிக சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் உண்டு பண்ணுகின்றன.

இரும்பு, எஃகு:— இவைகளில் ஒன்றின் அரபொடியை இராப்பகல் மூன்று நாள் பசுக்கோமயத்தில் ஊற்றி வைத்துக் கழுவின தூள் தேவையானதை ஒரு பீங்கான் பாத்திரத்திலிட்டு எலுமிச்சம்பழ ரசம் விட்டு, பொடியின் மேல் மூன்று விரல் அளவு நிற்கும்படியாகப் பார்த்து வாய்மூடி கெட்டியாய் 5 சீலை செய்து ஒரு கஜம் குழி வெட்டி குதிரை லத்தியால் அல்லது சாணத்தால் நிரப்பி மேற்படி பாத்திரத்தைப் புதைத்து வைத்து 3 வாரங்களுக்குப் பின் எடுத்து கடுக்காய், நெல்லி முள்ளி, தான்றிக்காய் வகைக்கு சமனெடை சேர்த்து, அவ்வெடைக்கு ஆறு பங்கு நீர் வார்த்து மூன்றிலொன்றாய்க் காய்ச்சின கியாழத்தால் முன் மருந்தை அரைக்க வேண்டியது.

இவ்விதம் மூன்று நாள் அரைத்து பில்லைகள் செய்து காய வைத்து மண் ஓட்டிலிட்டு 5 சீலை செய்து அரை கஜம் குழிவெட்டி, புளியம் புறணி அல்லது காட்டு எருமுட்டை நிரப்பி அதற்குள் வைத்துப் புடம் போடவும். இவ்விதம் 2 தடவை செய்து எடுத்துக் கொள்ளவும். இதைத் தனியாகவும் சாப்பிடலாம். அவுடதங்களோடுச் சேர்த்துக் கொள்ளலாம். இந்த மருந்தின் உபயோகத்தை எழுதி முடியாது. இரத்தத்தை யுண்டாக்குவதில் இதற்குச் சமமானதில்லையெனச் சொல்லல் வேண்டும்; ஆனால் இது செந்தூரமல்ல.

பட்டு*:— வருணம் போடாததும் இழைக்காததுமாக இருக்க வேண்டியது; இது கூண்டு கூண்டாயிருக்கும்; இதைக் கத்தரித்துப் புரட்டி உள்ளே வெங்காயத் தோல் போலிருக்கிறதை நீக்கிவிட வேண்டியது. இவ்விதம் சுத்தி செய்து ஒரு பாத்திரத்திலிட்டு இளஞ் சூடாயிருக்கும்படி சிறு தீயின் மேல் அந்தப் பாத்திரத்தை வைத்து, பட்டு கருகித் தூள் செய்யப் பக்குவப்படும் பதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது.

தேன் மெழுகு:— இதை ஒரு பாத்திரத்திலிட்டு நெருப்பின் மேல் வைத்து உருகின உடன், உப்பைக் கரைத்த நீரில் விட்டு மெழுக்கையும் தண்ணீரையும் ஒரு குச்சியினால் அசைத்துக் கொண்டிருக்க வேண்டியது. இப்படிச் செய்வதனால் அதிலுள்ள அழுக்குகள் எல்லாம் கீழிறங்கி விடும் மெழுகு மேலே நிற்கும்.

* இதற்குக் கோராப் பட்டெனப் பெயர்.

இவ்விதம் சில தடவைகள் செய்வதனால் மெழுகு சுத்தமாய் விடுகிறது. இது சொற்ப வஸ்துவாயிருந்த போதிலும் தம்பன மருந்துகளில் அபினி, கஞ்சா, ஊமத்தை முதலானவைகளை விட விசேஷமானது. ஏனெனில், அவை தேகத்திற்குக் கெடுதியை யுண்டாக்கும். இதுவோ அவ்வித கெடுதியைச் செய்யாது. மேலும் அவைகளின் குணத்தைவிட இதன் குணமே சிரேட்டமானது. ஆனால், இது பெரும்பான்மையும் மேற்பூச்சு அவுடதமாகவே உபயோகிக்கப்படுகின்றது.

தேன்:— இதில் சருக்கரைப் பாகு முதலியவைகளைச் சேர்த்து விற்கப்படுகிறபடியாலும், மெழுகு முதலியவைகளும் சேர்ந்திருப்பதாலும் சுத்தி செய்யாமல் உபயோகிப்பது நலமன்று. வேண்டிய அளவு தேனை ஒரு மண் பாத்திரத்திலிட்டுக் காய்ச்ச நுரையெழும்பிப் பொங்கி வரும், அதில் ஓர்வித சுழியுண்டாகும்.

அதுவே பதமெனக் கீழிறக்கிப் பாத்திரத்தைக் கொஞ்சம் சாய்த்து வைத்து நுரையை நீக்கிவிட வேண்டியது; பின்பு எடுத்து வைத்துத் தனியாயேனும், அவுடதத்தோடேனும் உபயோகிக்க வேண்டியது.

அறிக்கை

கைபாகம், செய்பாகம், எரிப்பு முதலிய பாகமுறைகளாய், பிரதி ஔடதத்தையும் விதிப்படியறிந்து செய்ய வேண்டியது. கடைக்காரர்கள் கொடுக்கிறதை வாங்கி வந்து விருப்பப்படி உபயோகிக்கக் கூடாது.

அவர்கள் கொடுக்கும் மருந்தை வாங்கி வந்து நன்றாய்க் கவனமாய்ப் பொறுக்கி ஆய்ந்து, வேறு தினுசுகள் கலந்திருப்பதை நீக்க வேண்டியது. ஏனெனில், கடைச் சரக்குகளுடன் வேறு சரக்குகள் கலந்திருப்பதுமன்றி, வளையல், சீசா இவைகளின் சிறிய துண்டுகளும், பாஷாணம், வீரம் முதலாகிய துஷ்டச் சரக்குகளின் துண்டுகளும்; கலந்து கிடப்பதுமுண்டு. இவ்விதம் பலமுறை யாம் கண்டிக்கின்றனம். அவைகளினால் அபாயம் நேரிடும்; ஆகையால் கலந்திருப்பதை நன்றாய் ஆய்ந்து கொள்ள வேண்டும்.

இவ்விதமே மூலிகைகளையும் வேறு சாதி இலையில்லாமலும் விஷப் பூச்சிகள், சிலந்திப் பூச்சிகள் முதலியவைகளின் கூடுகள் இல்லாமலும் நன்றாய் ஆய்ந்தெடுத்து உபயோகிக்க வேண்டியது. தூள் செய்வதை யிடித்தும், மைபோலாக்குவதை அரைத்தும், திப்பி நீக்க வேண்டியதை வஸ்திர காயஞ் செய்தும், வடிகட்டியும், ரசமெடுப்பதைப் பிழிந்தும், நீர் போக்க வேண்டியதைச் சுண்ட வைத்தும், சுண்ணமாக்குவதை நீற்றியும், செந்தூரமாக்குவதைச் செந்தூரித்தும்,

கெட்டி ரூபமானவைகளை யுருக்கிச் சேர்த்தும், உப்புகளிலிருக்கிற நீரைப் போக்கப் பொரித்தும், அவைகளைச் சுத்தி செய்ய, நீரில் கரைத்துத் தெளிவெடுத்து உப்பு கட்டச் செய்தும், தீநீர் முதலியவைகளை வாலையிலிட்டிறக்கியும் பிரயோக ரூபங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டியது.

பூர்வயோகங்கள் எல்லாவற்றிலும் மாற்றலாகாதென்பது அறிவீனம். ஏனெனில், ஒவ்வொருவர் உடல்வாகு வித்தியாசப்பட்டிருக்குமாகையால் அவ்வித்தியாசத்திற்குத் தக்கபடியும், அந்தச் சமயங்களில் காணுகிற வியாதிகளுக்குத் தகுந்தபடியும், யோகங்களில் சரக்குகளைச் சேர்த்து உபயோகித்தால்தான் வியாதி வசப்படும்.

இன்னும் யோகங்களில் நூற்றுக்கணக்கான சரக்குகளைச் சேர்ப்பது நலமென்று சிலர் எண்ணுவார்கள். அது எப்போதும் நல்லதன்று. ஆனால், தனியான ஒரு யோகத்திற்கு ஓர் சரக்கு அல்லது இரண்டு மூன்று முக்கிய சரக்குகளைச் சேர்த்து, இந்த முக்கிய சரக்குகளின் குணத்தை அதிகப்படுத்த வேறு உபசரக்குகள் இரண்டொன்றும், அந்த முக்கிய சரக்குகளின் துர்க்குணத்தைச் சுத்தப்படுத்த ஒன்றிரண்டு வேறு சரக்குகளும் சேர்த்தால் போதும். இன்னும் உபசரக்குகள் சேர்க்க வேண்டியதற்கு விபரமாவது. முக்கிய சரக்கின் வாசனை அல்லது அதின் கார முதலியவைகளைச் சமனப்படுத்தவாவது அல்லது அவற்றை மாற்றவாவது சேர்க்க வேண்டும்;

சரக்குகளின் பலத்தை அதிகப்படுத்தவாவது அல்லது குறைக்கவாவது சேர்க்க வேண்டியது; அல்லது அவற்றின் குணத்தைத் தேகத்தில் சீக்கிரம் அல்லது தாமதமாய்ப் பற்றச் செய்யவாவது அல்லது அதன் குணம் சொந்தமாய் ஓர் அவயவத்தில் செல்லச் செய்யவாவது அல்லது மருந்தின் குணத்தை அதிக நாளிருக்கச் செய்யவாவது சேர்க்க வேண்டியது; அல்லது அவுடதத்தை யிலகுவாய் உபயோகிக்கும் படியான ரூபமாய்ச் செய்து கொள்ளவாவது சேர்த்துக் கொள்ள வேண்டியதென்பதே.

அவுடதங்களைச் செய்யவும், வைத்திருக்கவும், கண்ணாடி பீங்கான், மண் ஆகியவைகளாற் செய்த பாத்திரங்களே மிகவும் சிரேஷ்டமானவை.

வைத்திய பரிபாஷை

இப்புத்தகத்தில் அவ்வகை வார்த்தைகளை அதிகம் உபயோகப்படுத்தாமலே மிகவும் தெளிவாய் எழுதப் பட்டிருக்கிறது.

ஆனால், கீழ்க்கண்ட வார்த்தைகளை அவசியம் உபயோகிக்க வேண்டியதிருப்பதால் அவற்றின் அருத்தங்களைக் கூறுவோம்.

யோகம்:— இதற்குக் கூட்டல் என்றும் கூட்டம் என்றும் பொருள்; ஆகையால் ஓர் அவுடதபாகத்தில் சேர்க்க வேண்டிய பல அவுடதங்களின் விபரத்திற்குப் பெயர்.

மாத்திரை:— சாப்பிட வேண்டிய பிரமாணம்.

உபயோகம்:—ஒன்றினால் உண்டாகும் பிரயோசனம்; அதாவது ஓர் அவுடதத்தினால் இன்னின்ன வியாதிகள் நீங்குமென்பது.

நிறைகள்

காலங்கள் தோறும், தேசங்கள் தோறும், நிறை, அளவு முதலியன பேதப்படுகிறபடியால் அவுடத பாகங்களின் நிறையில் அநேகவித சந்தேகங்களுண்டாகி விடுகிறது. ஆகையால், கீழ்க்கண்ட விதமாய் இதிலுள்ள பாகங்களி லெல்லாம் ஒரே விதமான நிறை அளவே சொல்லப் பட்டிருக்கின்றன.

அவையாவன

2 உளுந்து நிறை சுமார்	...	1 குன்றுமணி—130 மில்லி கிராம்
8 குன்றுமணி	...	1 மாஷா—1040 மி.கிராம்
4 மாஷா	...	1 வராகனெடை—3.5 கிராம்
38 வராகனெடை	...	1 துலா—1,330 கிராம்
6 துலா	...	1 பலம்—35 கிராம்
8 பலம்	...	1 சேர்—280 கிராம்
5 சேர்	...	1 வீசை—1,400 கிராம்

ஜல அளவு

15 ரூபாய் நிறை சுமார்	...	1 ஆழாக்கு—168 மி.லிட்டர்
8 ஆழாக்கு	...	1 படி—1344 மி.லிட்டர்

ஆண்மையை விருத்தி செய்யும் ஆகாரம் அவுடதம் ஆகியவைகளின் ஏற்பாடுகள்

இந்திரியத்தால் ஆண்மை முதலானவைகளும், இரத்தம் ஆவி, காற்று முதலாகியவைகளால் ஆணின் உடலிற்கு விம்மலும்

உண்டாவதால்தான் மணவாழ்க்கை கூடுமென்பது முன்னமே நமக்குத் தெரியும்.

ஆகையால், எந்தப் பதார்த்தம், * அதிக உணவாகுங் குணம், ஆவியையுண்டாக்குங் குணம் இந்திரியத்தைச் சுபாவப்படுத்தும் படியான சூட்டைத் தரத்தக்க குணமாகிய மூன்று குணங்களையுடையதோ அதற்கே தாருட்யவிர்த்தித் தனி பதார்த்த ஆகாரமெனப் பெயர்.

ஓர் பதார்த்தத்திற்கு மேற்கண்ட மூன்று குணங்களில் இரண்டொன்றிருந்து இரண்டொன்று விகற்ப்பப்பட்டால் அதற்கிருக்கிற குணத்தை அதிகப்படுத்தவும், விகற்பப்படுகிற குணத்தைச் சமப்படுத்தவும் அதனோடு ஒரு அல்லது பல சரக்குகளைச் சேர்த்து பாகமுறையாய்ச் செய்கின்றோம். இங்ஙனம் செய்யப்பட்டதற்குத் தாருட்யவிர்த்தி அவுடதமெனப் பெயர்.

எப்படியெனில்:—

a) கடலை:— இதற்கு அதிக உணவாகுதல், ஆவியையுண்டாக்குதல், விந்துவைச் சமப்படுத்தும் சூட்டையுண்டாக்குதல் ஆகிய மூன்று குணங்களுமுண்டு. ஆகையால், இதற்கு தாருட்யவிர்த்தித் தனி ஆகாரப் பதார்த்தமெனப் பெயர்.

இவ்விதமே அரைவேக்காடாய் வேக வைத்த முட்டை மஞ்சட் கருவிற்கும் மேற்கண்ட மூன்று குணங்களும் உண்டாயிருப்பதால் அதற்கும் தாருட்யவிர்த்தித் தனி ஆகாரப் பதார்த்தமெனப் பெயர்.

b) மொச்சை:— இதற்கு அதிக உணவாகிற குணமும், ஆவியையுண்டாக்குகிற குணமும் ஆகிய இரண்டு குணங்கள் மட்டும் இருக்கின்றன. ஆனால் குளிர்ச்சியையும், சிலிர்ப்பையும் உண்டாக்குகிறபடியால் விந்துவைச் சுபாவப்படுத்தும் சூட்டையுண்டாக்குகிற குணம் இதனிடத்திற் கிடையாது.

ஆகையால், அதன் துர்க்குணமாகிய குளிர்ச்சியையும், சிலிர்ப்பையும் நீக்கும்படியாகிய மிளகு, இஞ்சி, இலவங்கப்பட்டை முதலாகியவைகளில் ஒன்றை அத்துடன் சேர்த்து உபயோகிப்பதால் மேற்கண்ட மூன்று குணங்களுமுண்டாகி விடும்; இவ்விதம் பாகம் செய்வதற்குத்தான் தாருட்யவிர்த்தி அவுடதமெனப் பெயர்.

---

* அதிகவுணவு பதார்த்தம் என்பது, எதனால் பரிசுத்தமாகிய இரத்தமுண்டாகி இலகுவாய்த் தசை முதலாகிய உறுப்புகளாக மாறுமோ அதற்கு அதிக உணவு பதார்த்தமெனப்பெயர்.

c) வெங்காயம்:— இதற்கு ஆவியையுண்டாக்குங் குணமும், விந்துவைச் சமப்படுத்துஞ் சூட்டையுண்டாக்குங் குணமுமாகிய இரண்டு குணங்களிருக்கின்றன; ஆனால், அதிகவுணவாகுங் குணமில்லை; ஆகையால், கொழுத்த ஆட்டிறைச்சியோடு இதைச் சேர்த்துச் சமைத்துச் சாப்பிடுவதால் அதிக உணவாகுங் குணமும் உண்டாய் விடுகின்றது.

d) சீமைதேவதாரி:— இதற்கு அதிக உணவாகுங் குணம், விந்துவைச் சமப்படுத்துஞ் சூட்டையுண்டாக்குங் குணமாகிய இரண்டு குணங்களுண்டு; ஆனால், ஆவியையுண்டாக்குங் குணங்கிடையாது; ஆகையால், அத்துடன் திராக்ஷை ரசத்தால் செய்யப்பட்ட (அகீது) என்னும் அவுடதத்தைச் சேர்ப்பதால் மேற்கண்ட மூன்று குணங்களுமுண்டாகின்றன.

இவ்வாறு தாருட்யவிர்த்தியை யுண்டாக்கும் அவுடதங்களை, அறிவாளிகளாகிய மஹா பண்டிதர்கள் அனுபவத்தால் நிச்சயித்திருக்கிறார்கள். ஆகையால், நாம் அந்தப் பாகங்களை நன்றாய் யூகித்து அறிவதால் நமது தேகத்திற்குத் தக்கவைகளை, நம் விருப்பப்படி செய்து கொள்ளத்தக்க ஞானமுண்டாய் விடும்; இதினுண்மையை அனுபவத்தால் தெரிந்து கொள்ளலாம்.

இன்னும் ஆண் பெண்களின் தேகசுபாவ விகற்பத்தாலும் ஆண்மை அதிகப்படும். எப்படியெனில், சூடான தேகமுள்ள ஆண்களுக்குக் குளிர்ச்சியான தேகமுள்ள பெண்களின் உறவாலும், குளிர்ச்சியான தேகமுள்ள ஆண்களுக்கு சூடான தேகமுள்ள பெண்களின் சம்பந்தத்தாலும் அனுபவப் பயன் இருவருக்கும் அதிகப்படும்.

இன்னும் கால பேதத்தாலும் ஆண்மை யதிகமாவதுமுண்டு. அதெப்படியெனில், அதிக குளிர்ச்சியாகிய தேகிகளுக்குக் கோடை காலத்திலும், சூடான தேகிகளுக்கு மாரி காலத்திலும் அது அதிகமாயிருக்கும்.

ஆகையால், தாது நஷ்ட சிகிச்சைக்கு முன் இக்காரணங்களையும் முன் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களையும் நன்றாயறிந்து கொண்டு, பின்பு சொல்லப்படும் அவுடதங்களையும் நிதானித்தறிந்து தேகத்திற்கேற்றவைகளைப் பாகப்படிச் செய்து சாப்பிட்டு சுகமடைய வேண்டியது.

வீரிய விர்த்தியை யுண்டாக்குவதில் தனியாகவும், யோக முறையாகவும், அதிகமாய் உபயோகப்படும்.

ஆகார அவுடத பதார்த்தங்களின் விபரம்

பசும்பால், வெள்ளாட்டுப் பால், ஆலம்பால், பருத்தி விதைப்பால், தேங்காய்ப் பால், பாற்சாதம், பாயசங்கள், நெய், நன்றாய்க் கனிந்த

வாழைப் பழம், சீமை அத்திப் பழம், திராக்ஷைப் பழம், பிஸ்தாப் பருப்பு, பாதம் பருப்பு, முந்திரிப் பருப்பு, பிந்தூ பருப்பு, சுரை விதைப் பருப்பு, வெள்ளரி விதைப் பருப்பு, சீமை வெள்ளரி விதைப் பருப்பு, தேங்காய், பேரீச்சங்காய்.

கடலை, மொச்சை, காராமணி, கழுகின எள்ளு, வருஷத்திற்கு மேற்படாத கொழுத்த ஆட்டிறைச்சி, கொழுந்த சேவலினிறைச்சி, காடைகள், கௌதாரி, உடும்பு ஆகிய இவைகளின் இறைச்சி, புதிதாய்ப் பிடித்த நல்ல சலத்து மீன், விலாங்கு மீன், மீன் முட்டைகள், கோழி முட்டைகள், பறவைகளின் முட்டைகள், அவைகளின் தலை மூளைகள், சாலா மிஸ்ரி, ஷகாகுல்மிஸ்ரி, போஜிதான் மிஸ்ரி, பஹமனே சுபேத், பஹமனே சுருூதூதரி சுபேத், தூதரிசுருூ.

முருங்கை விதை, முள்ளங்கி விதை, நாயுருவி விதை, மஞ்சள் முள்ளங்கி விதை, சிவப்பு முள்ளங்கி விதை, வெங்காய விதை, கசகசா, இன்னும் இவை போன்ற வித்தினங்களும், தண்ணீர் விட்டான் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, பூமிசருக்கரைக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, சுக்கு, மிளகு, வெள்ளை மிளகு, திப்பிலி, அக்கிராகாரம், லவங்கம், கோஷ்டம், வெந்தயம், பெருங்காயம், அனிசூன், சாதிபத்திரி.

வெட்பாலையரிசி, லவங்கப்பட்டை, அகர்கட்டை, குந்தரிக்கம், முருங்கைப் பிசின், கருவேலம் பிசின், ஆவாரம் பிசின், கஸ்தூரி, அம்பர் முதலாகியவைகளும் இன்னும் இவை போன்றவைகளுமே.

குறிப்பு

பெரும்பாலும் ஆண்மைக் குறைவு இராஜ கருவிகளின் சோர்வால் உண்டாகிறதாகையால், அவைகளைப் பலப்படுத்தும் தனி அவுடதங்களையும், அவைகளின் முக்கியமான சூடு குளிர்ச்சியையும் அறிவதால் மருந்துகளைக் குறிக்கும் போது அவரவர்களின் தேகத்திற்கேற்றவைகளைச் சேர்த்துக் கொள்ளவும், ஏற்காதவைகளை நீக்கவும். மிகவும் பிரயோசனப்படுமெனக் கருதியே மேலே அட்டவணையாகக் காண்பித்திருக்கிறது.

குளிர்ச்சியாகிய பதார்த்தங்களைச் சூட்டினாலுண்டான வியாதிகளிலும்; சூடான பதார்த்தங்களை, குளிர்ச்சியால் உண்டான வியாதிகளிலும் உபயோகப்படுத்த வேண்டியது.

சூடுங் குளிர்ச்சியும் சமமாயிருக்க வேண்டிய போது இருவகைப் பதார்த்தங்களையும் ஒன்றாய்ச் சேர்த்து, உபயோகிப்பதால் சமமான குணத்தைத் தரும். எப்படியெனில், காசினி விதை குளிர்ச்சியானது, சோம்பு சூடானது இரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்து உபயோகிப்பதால் சூடுங் குளிர்ச்சியும் சமமான குணத்தைத் தரும். இவ்விஷயத்திலும் கொஞ்சம் அனுபோகம் வேண்டியது.

இராஜகருவிகள் பலகாரி

தலைமூளை பலகாரி		இருதய பலகாரி		ஈரல் பலகாரி	
1	2	3	4	5	6
குளிர்ச்சியானவை	சூடானவை	குளிர்ச்சியானவை	சூடானவை	குளிர்ச்சியானவை	சூடானவை
அம்ருத்பழம்	அகர்கட்டை	இரோஜாப்பூ கஹரூபா	அகிர்கட்டை அம்பர்	காசினி விதை	இலவங்கப் பட்டை
அம்ருத்பூ	அகில்	கமலாப்பழம் கல்தாமரை	உஸ்துகுத்தூஸ் ஏலக்காய்	”	இலவங்கம்
இரோஜாப்பூ	அம்பர்	கொத்துமல்லி காவுஸுபான்	காட்டுத்துளசி குங்குமப்பூ	ஜரிஷ்க்	”
சேப்புப்பழம்	இலவங்கம்	சந்தனம் சேப்புப்பழம்	கோரைக் கிழங்கு சடாமாஞ்சில்	மாதுளங் கனி	சாதிக்காய்
சேப்புப்பூ	கஸ்தூரி	தித்திப்பூ மாதுளங்கனி	துரிஞ்சிப்பழத் தோல்	”	பல்சான்விதை
துளையிடாத நல்ல முத்து	காடைகளின் மாமிசம்	துளையிடாத நல்ல முத்து	பட்டு பஹமனேசுபேத்		பெரு லவங்கப் பட்டை
நெல்லிமுள்ளி	குந்திரிக்கம்	நற்பவளம்	பஹமனேசுருஃ		ரூமி மஸ்தகி

பன்னீர்	கோரைக் கிழங்கு	நெல்லிக்காய்	பிஸ்பாயஜ், பொதினா
பிஹியின் பூ	சடாமாஞ்சி சுக்கு	பச்சை கர்ப்பூரம் புளி	,,
	சேவலின் மாமிசம்	பூங்காவி	பொன் ரேக்கு
	பறவைகளின் தலைமூளை வெள்ளாட்டுப் பால்	மாணிக்கங்கள் மூங்கிலுப்பு வெள்ளி ரேக்கு	மெஜத்து லவங்கப்பட்டை

இரைப்பை பலகாரி

குளிர்ச்சியானவை	சூடானவை	ஆன்ம சத்திவிர்த்தினி	ருதுவர்த்தனசகாரி; அதாவது ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் காணுகிற அழுக்கைக் கிரமப்படுத்துகிற மருந்து
1	2	3	4
இரோஜாப்பூ	அகர்கட்டை இலவங்கப்பட்டை	அம்பர்	இலவங்கப்பட்டை
ஸமாக்பழம்	இலவங்கம் ஏலக்காய்	கஸ்தூரி	எள்ளு
ஜரிஷ்க்	கருவேலம்பிசின் காட்டுத்துளசி	குங்குமப்பூ	ஓமம்

கடுக்காய் முறப்பா	கிச்சிலித்தோல் குர்வாவிரை	தங்கம்	கருஞ்சீரகம்
தான்றிக்காய்	கோரைக்கிழங்கு கோஷ்டம்	துளையிடாத நல்லமுத்து	காட்டுப்பொதினா
நெல்லிக்காய்	சடாமாஞ்சில் சாதிக்காய்	நற்பவளம்	குங்குமப்பூ
பிஹிபழம்	சீமைச்சீரகம்	பட்டு	குந்திரிக்கம்
பேரிக்காய்	பட்டு	மாணிக்கங்கள்	கோஷ்டம் கோரைக்கிழங்கு
மாதுளம்பழம்	பூலாங்கிழங்கு	வெள்ளி	சதாபிலை சதாப்விதை
மூங்கிலுப்பு	பெருலவங்கப்பட்டை	முதலியவைகள்	சித்திரமூலம் சீமை சாந்திப்பூ
முதலாகியவைகள்	பொதினா		பெருங்காயம் பொட்லுப்பு
	மேனா		வாய்விளங்கம் வால்மிளகு
	ரூமிமஸ்தகி		வெண்காரம்
	வால்மிளகு		வெட்டிவேர்
	முதலியவைகளாம்		முதலியவைகள்

ஆண்மையைக் குறைக்கும் கிரியைகளும் பதார்த்தங்களும்

ஆண்மையை அதிகப்படுத்த பல அவுடதங்களிருப்பது போலவே அதைக் குறைக்கவும் பலவிதமுண்டு.

ஆகாரக் குறைவாலும், அடுத்தடுத்து பேதியாவதாலும், வாந்தியாவதாலும், இந்திரிய விளைவு குறைந்து போம்.

அதிக மனக்கவலை, நீங்காவிசனம், கணுக்களிலெல்லாம் திமிர் வாதம், இந்திரிய கோளங்கள் வியாதியால் அல்லது காய்த்தால் கிழிந்து போதல், நசுங்கிப் போதல், நீர்த்தாரை வீக்கம், அல்லது அதில் கட்டி முதலியவையுண்டாதல் ஆகியவைகளால் ஆண்மை முற்றும் போய் விடும்.

சதாபிலை, அதன் விதை, புளிப்பு மாதுளம் பழம், போக்கிழங்கு, கர்ப்பூரம், இசுபகோல் விதை, குராசானி யோமம், பொதினாயிலை, சீரகம், கம்பிளிப் பூச்சிச் செடி விதை, பேரிக்காய், மிஷ்மிஷ், காசினி விதை அதிகக் குளிர்ச்சியாகிய சலம், காடி சலம், கொள்ளு, எலுமிச்சம்பழம், புளிப்பு வஸ்துக்கள், அதிக சூடாகிய இரொட்டியினங்கள் என்னும் இவைகளையும் இவை போன்றவைகளையும் தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வருவதால் ஆண்மை குறையும். ஆகையால் இவ்வகைப் பதார்த்தங்களை அவைகளுக்குத் தக்க மாற்று சேர்க்காது தொடர்ச்சியாகச் சாப்பிடலாகாதென அறிந்திருக்க வேண்டும்.

ஓர் விண்ணப்பம்

சில அவுடதங்களைப் பற்றிச் சிலர் இது நாம் உபயோகப்படுத்துகிற வஸ்துக்கள் தானே இதற்கிவ்வளவு குணமெவ்வித முண்டாயினவென்றும் சந்தேகிப்பார்கள். அதற்கு உத்தரமாவது அந்த வஸ்துக்களைப் பக்குவப்படுத்தும் முறை என்பதேயாம்.

ஆகையால் அவர்கள் அவற்றைச் சாதாரணமாய் உபயோகப்படுத்துவதிலும் அவற்றையே பக்குவம் பண்ணி உபயோகப்படுத்துவதிலும் பெருத்த வித்தியாசமுண்டு. இவை பின்வரும் உதாரணத்தால் நன்கு விளங்கும்.

சாதாரணமாய்க் கடைகளிலெல்லாம் கிடைக்கத்தக்கதுவும், பெரும்பாலும் அநேகருக்குத் தெரிந்ததுவுமான கந்தகம், பொட்லுப்பு, சுண்ணாம்பு, கரி ஆகியவைகளைப் பற்றி யோசிப்போம்.

கெந்தகம், பொட்லுப்பு இவைகளைத் தனியாக ஒரு வராகனெடை வரையில் சாப்பிடலாம். இவைகளினால் ஒரு தீங்குமுண்டாகாது. ஆனால் கந்தகம் 1 பங்கையும் பொட்லுப்பு 3 பங்கையுஞ் சேர்த்து பாகஞ் செய்வதால் இரண்டுவித பதார்த்தங்களுண்டாகும்.

ஒன்று வாயு ரூபமானது, இதை ஆக்கிராணித்தவுடன் இருமலையும், மூச்சடைப்பையும் உண்டாக்கும். மற்றொன்று திரவ ரூபமானது, இந்தக் கெந்தக திராவகம் மிகக் கொடியது. எல்லாவற்றையும் நாசப்படுத்தி விடும்; ஆயினும் இவற்றை முறைப் பிரகாரம் உபயோகித்தால் நன்மை செய்யுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

கெந்தகம் 1 பங்கு, பொட்லுப்பு 3 பங்கு ஆகிய இரண்டுடன் சுண்ணாம்பு 1 பங்கை சேர்ப்பதால் மத்தாப்பு மருந்து ஆகின்றது. சுண்ணாம்புக்கு பதில் கரி ஓர் பிரமாணஞ் சேர்க்க பாண மருந்தும், வேறொரு பிரமாணஞ் சேர்க்க ஆகாச பாண மருந்தும் ஆகின்றன.

இவ்விதம் அநேக வினோத பாண மருந்துகள் ஆகின்றன. இன்னும் கந்தகம், பொட்லுப்பு, கரி ஆகியவைகளை இன்னோர் முறையாகச் சேர்க்க வெடி மருந்தாகி, உயர்ந்த மலை முதலியவைகளையும் தவிடு பொடியாக்கிப் பலவித விபரீதங்களைச் செய்து விடுகின்றது. இவை எல்லோரும் தெரிந்த விஷயமே.

ஆகையால், மேற்கண்டவை சாதாரணமான சரக்காயினும் அவற்றைச் செய்முறையால் இவ்வளவு சக்தியுண்டாய் விடுகிறது. ஆகையால், எல்லாவற்றையும் அவமதிப்பதும் அலட்சியஞ் செய்வதுங் கூடாது. அதன் செய்முறையில் அதற்குண்டாகிய குணம் விசேஷமாவதும், அதற்கில்லாத குணமுண்டாய் விடுகிறதுமுண்டு.

ஆகையால், இந்தப் பாகங்களை இலேசாய் எண்ணாமல், கவனித்துச் செய்து உபயோகித்து அதன் குணத்தை அனுபவிக்க வேண்டியது. ஆனால், சிலருக்கு எல்லாவற்றிலும், எல்லாரிடத்திலும் தீராச் சந்தேகமுண்டு. இவ்வகையார்களுக்குச் சந்தேகத்திலும் சந்தேகமுண்டென்பதில் சந்தேகமில்லை. மனதை யிவ்வித கவலையில் அலைய விடாது நிலை நிறுத்த வேண்டியது. மனதை நிலை நிறுத்தியே, யோகம் மோக்ஷம் முதலியவைகளையும் பெற வேண்டியது. தீராச் சந்தேகிகளோடு போராட யாரால் தான் கூடும்?

விவேகிகள் இச்சிறிய புஸ்தகத்திலுள்ளவைகளை நன்றாய் வாசித்தறிவதுமன்றி அனுபவத்தினால் இவற்றின் குணங்களை யூகித்தறிந்து, உபயோகித்துக் கொள்வார்கள். ஏனெனில், இவற்றிலுள்ள பல முறைகளும் மிகவும் அனுபவமானதும் சிறந்த பண்டிதர்களால் கண்டுபிடிக்கப்பட்டனவுமானவைகள். ஆகையால், கெட்ட எண்ணமாகிய வீண் சந்தேகங்களுக்கு அறிவாளிகள் இடங் கொடுக்க மாட்டார்கள் என நம்புகிறோம்.

இன்னும் இதில் கண்டிருக்கிற சில பாகங்களை வேறு பழமையாகிய சிறந்த கிரந்தங்களிலும் காணலாம். ஆனால், அவற்றுள் சில பாகங்களிலுள்ள சரக்குகளிலும், நிறைகளிலும் வித்தியாசப் பட்டிருக்கும். ஏனெனில், நாளடைவில் அனுபோகத்தினால் சரக்குகளை மாற்றி யுபயோகித்து அதிகங் குணங் கண்டிருப்பதனாலும், இத்தேசத்தில் அபூர்வமாய் கிடைக்கத்தக்க சில சரக்குகளுக்குப் பதிலாக வேறு சரக்குகள் உபயோகித்து குணங்கண்டிருப்பதனாலும், அனுபவ முறையாகவே எழுதப்பட்டிருக்கின்றன.

இலகுவாய் சீரணிக்கத்தக்கதும் இரத்த விருத்தியை யுண்டாக்கும்படியானதுமான ஆகார வகைகள்

1. யவையரிசி சலம் செய்முறை:— கல் முதலியவைகளைப் பொறுக்கிச் சுத்தி செய்ததும், புதியதுமான யவைக் கோதுமையரிசி 35 கிராம் நல்ல நீரில் படிகால் இட்டுக் கொஞ்ச நேரங் காய்ச்சித் தண்ணீர் சிவந்தவுடன் இறக்கி, அந்த சலத்தை இறுத்து விட்டு வேறு சலம் படி-கால் விட்டுக் காய்ச்சி அந்த சலமும் சிவந்தவுடன் இறக்கி, முன்போலவே அந்த சலத்தை வடிகட்டி, மறுசலம் வார்த்துக் காய்ச்ச வேண்டியது.

இப்படி 3—4 தடவைகள் செய்வதனால் சலம் செகப் பாகாதிருக்கும். பின்பு நன்றாய் அரிசி மலரும் படியாக வேக வைத்து இறக்கி ஆறவிட்டு, கொஞ்சம் சர்க்கரை சேர்த்து அல்லது ஏதேனும் ஓர்வித ஷர்பத்து சேர்த்துச் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— தேகத்திற்குக் குளிர்ச்சியையுண்டாக்கும், நரம்பு முதலியவைகளிலுள்ள மாசுகள், மலச்சிக்கல், மலவறட்சி முதலியவைகளை நீக்கும்; இரைப்பையிலுள்ள மாசுகளை நீக்கிச் சுத்தி செய்யும், எந்த தேகிக்கும் பொருந்தும். வாய்க்கு ருசியாயிருக்கும். சீதள தேகிகள் குல்கந்து சேர்த்துச் சாப்பிட வேண்டியது.

2. வேறு விதம்

தேகத்திற்கு அதிக பலமுண்டாக்க வேண்டியதிருந்தால், முன் முறைப்படியே செய்து கடைசியில வார்க்கிற சலத்திற்குப் பதிலாய் பின் சொல்கிற இறைச்சிச் சத்தை அல்லது மாமிசத் தீநீரைச் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ள வேண்டியது.

குறிப்பு

மலத்தைக் கட்ட வேண்டிய போது அந்த அரிசியை வறுத்துக் கொள்ள வேண்டியது. அல்லது முடிவாக வேக வைக்கிற சலத்தில் 10 கிராம் போஸ்தக் காயைச் சீலையில் பொட்டலமாய்க் கட்டிப் போட்டு வேக வைக்க வேண்டியது.

3. ஆட்டிறைச்சிச் சத்து

ஆட்டிறைச்சி பலம் 6 சன்னமாய்க் கொந்தி, அரைப்படி குளிர்ந்த நீரிலிட்டு அதில் 3 அல்லது 4 வெண்டைக்காய்களைச் சிறு துண்டுகளாய் அரிந்துப் போட்டு 1-மணி நேரம் அசையாது வைத்துப் பின்பு வாயைக் கெட்டியாய் மூடி மிகவும் சிறு தீயாக எரிக்க, அதில் ஓர்வித சப்தமுண்டாகும். அதன் பின்பு கால் மணிநேரம் அதிக தீயிடாமல் சமமாகிய தீயிட்டுக் காய்ச்சி வடிகட்டி ருசி கொடுக்க உப்புமிட்டுச் சாப்பிடவும்.

உபயோகம்:— எந்தக் காரணத்தினாலேனும் உண்டான துர்ப்பலத்தை நீக்கி நலம் பலம் கொடுக்கும். தேகத்திற்கு வலுவைக் கொடுத்துச் சூடுண்டாக்கும். (இங்கிலீஷ் முறை)

4. வேறு வகை

கொழுப்பு முதலாகியவைகளைச் சுத்தி செய்த இறைச்சி அரை கிலோ சிறு துண்டுகளாய்ச் செய்து ஓர் சிறுமண் பாத்திரத்தில் அல்லது சாடியிலிட்டு அந்தப் பாத்திரத்தின் வாயை மூடி, கோதுமை மாவைக் கெட்டியாய்க் குழைத்துச் சீலையில் தடவி வாய்க்குச் சீலை செய்து ஒரு துணியில் நன்றாய் இறுக்கிக் கட்டிவிட வேண்டியது. பின்பு இந்தப் பாத்திரங் கொள்ளும்படியான வேறு பாத்திரத்தில் முக்கால் பங்கு நீர் வார்த்துக் கொதிக்கையில் சீலையில் முடிந்திருக்கிறதை இதில் விட்டுவிட வேண்டியது. 2-மணி நேரம் நன்றாய்க் கொதித்த பின்பு எடுத்து அம்மூட்டையை அவிழ்த்து அப்பாத்திரத்தை திறந்து பார்க்க உள்ளே சத்து இறங்கியிருக்கும். அந்தச் சத்தைச் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— தேகத்திற்கும் பலத்தைக் கொடுக்கும்; இரத்த விருத்தியையு முண்டாக்கும்.

5. ஆட்டிறைச்சிக் கஞ்சி

கொழுப்பு முதலியவைகளைச் சுத்தி செய்த ஆட்டிறைச்சி 200 கிராம் நன்றாய்க் கொந்தி மெல்லிய சீலைத் துண்டில் வைத்து அதன் நடுவில் தோல் நீக்கின இஞ்சி 12 கிராம் இதனை நறுக்கி வைக்க வேண்டும்.

பச்சைக் கடலைப் பருப்பு 6 கிராம், பச்சைக் கொத்துமல்லித் தழை 3 கிராம் கூட வைத்து மூட்டையாகக் கட்டிக் கொண்டு, ஒரு பானையில் அரைப்படி சலம் வார்த்து, அதில் இந்த மூட்டையைப் போட்டு கால்படி சலமாகச் சுண்டக் காய்ச்சியிறக்கி மெதுவாய் அந்த மூட்டையை எடுத்துவிட வேண்டியது. மூட்டையை அழுத்திப் பிழியலாகாது;

பின்பு அந்த நீரில் கோதுமை நொய் ஒரு பலமிட்டுக் காய்ச்சி நன்றாய் வெந்த பின்பு இறக்கி வேறு பாத்திரத்தில் ஒரு 12 கிராம் நெய் வார்த்து, அதில் 5 லவங்கமும் வீசம் துலா யெடை லவங்கப்பட்டையும் போட்டு வறுக்கையில் சிவந்து வரும் போது முன் தயார் செய்ததை விட்டு இறக்கி 2 ஏலக்காயைக் கொஞ்சம் நறுக்கிப் போட்டுச் சற்று ஆறின பின் சாப்பிடவும்.

உபயோகம்:— இரைப்பைக்குப் பலத்தை யுண்டாக்கி, ஜீரண சக்தியை அதிகப்படுத்தி இரத்த விருத்தியாக்கிப் பலத்தைக் கொடுக்கும்.

6. மாங்கிஷத் தீநீர்

கொழுப்பு முதலியவைகளைச் சுத்தி செய்த இறைச்சி பலம் - 700 கிராம், சுத்த சலம் படி - 1 விட்டு வாலையிலிட்டு திராவகம் இறக்கிக் கொள்ள வேண்டியது, இது சாதாரணமானது. இத்துடன் அநேக சரக்குகளைச் சேர்த்து இறக்குவதுமுண்டு.

உபயோகம்:— தேகபலத்தை யுண்டாக்கும்; அஜீரணப் படுத்தாது; சீக்கிரம் ஜீரணமாகி நல்ல இரத்தமுண்டாகும்.

இதைச் சார்ந்த மற்ற பாகங்களும் 2-ம் பாகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

பாயசங்கள்

7. பாதம் பருப்புப் பாயசம்

தோல் நீக்கினதும், கசப்புள்ளவை நீக்கினதுமான வாதுமைப் பருப்பு 200 கிராம், சுகந்த வாசனையுள்ளப் பச்சையரிசி 70 கிராம், கற்கண்டு பலம் - 26, அரிசியையும் பாதம் பருப்பையும் தண்ணீர் விட்டு நன்றாயரைத்து மெல்லிய சீலையில் முடிந்து முக்கால்படி நீரில் கையினால் நன்றாய்ப் பிசைந்து அரைத்துக் காய்ச்ச வேண்டியது. அப்பொழுது அகப்பையினால் துளாவிக் கொண்டிருக்க வேண்டியது. மூன்று கொதி வந்த பின்பு, கற்கண்டை வேறே பாகாகச் செய்து இதில் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கித் தேவையான கஸ்தூரி, பன்னீர் முதலியன சேர்த்துச் சிறுசூடுகையா யிருக்கும் போதே ஜீரண சக்திக்கேற்ற அளவு சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— தாதுக்களின் விருத்தி, தேகபுஷ்டி ஆகியவையுண்டாகும்; இருமல் தீரும்; தேகத்தின் சூடு சாந்தமாகும்; இரத்த விருத்தியுண்டாகி தேக வெளுப்பு மாறும்.

8. கோதுமைப் பாயசம்

யவைக் கோதுமையைக் குத்தி உமிபோக்கினது 12 கிராம், 3 நாள் நீரில் ஊறவைத்துக் கையினால் நன்றாய்ப் பிசைந்து தேய்த்து, கால் படி பாலெடுத்து வடிகட்டிக் கொள்ளவும்; பசும்பால் 100 கிராம் தோல் நீக்கிச் சுத்தி செய்த வாதுமைப் பருப்பு 12 கிராம் அரைத்துத் துணியில் முடிந்து பிசைந்தெடுத்து வடிகட்டின பால் படி கால் ஆகிய இம்மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்துக் காய்ச்சி மூன்று கொதி வந்தவுடன் கற்கண்டு 700 கிராம் வேறே பாகாகச் செய்து இதனுடன் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி, கஸ்தூரி தேவையானது சேர்த்து உபயோகிக்க வேண்டியது.

உபயோகம்:— மார்பிற்குப் பலத்தைக் கொடுக்கும்; இரத்த விருத்தியை யுண்டாக்கும்; தேகந் தழைக்கும். இந்திரிய விர்த்தியுமாம்.

9. பாற்பாயசம்

பசும்பால் படி அரை, * நிஷாஸ்தா 40 கிராம், தோல் நீக்கின வாதுமைப் பருப்பு 25 கிராம், கற்கண்டு 700 கிராம், வாதுமைப் பருப்பை முன்பாக அரைத்துப் பிழிந்து வடிகட்டி கால் படி பாலெடுத்து, பசும்பாலுடன் சேர்த்துக் கொள்ளவும்;

நிஷாஸ்தாவைப் பொடி செய்து தக்க நெய்யில் வறுத்து மேற்படி பாலிலிட்டு அகப்பையினால் துளாவிக் கொண்டே காய்ச்சி, மூன்று கொதி வந்தவுடன் கற்கண்டுப் பாகையும் சேர்த்துப் பாகுபதத்தில் இறக்கிக் கொஞ்சம் கஸ்தூரி சேர்த்துக் கொண்டு சாப்பிடவும்.

உபயோகம்:— மூளைக்கு பலத்தை யுண்டாக்கும். ஆண்மையை அதிகப்படுத்தும்; இந்திரியத்தைக் கெட்டி யாக்கும்.

10. காஜர்ப் பாயசம்

காஜர்க் கிழங்கின் மேல்தோல், கரடு முதலியன சுத்தி செய்து மூன்றரை, அரிசியைப் போல சிறு துண்டுகளாய்ச் செய்து தண்ணீர் விட்டு வேக வைத்து நீரை இறுத்து விட்டு வைத்துக் கொள்ள வேண்டியது.

சுத்தி செய்த பாதம் பருப்பு 120 கிராம், அரிசி 120 கிராம் இரண்டையும் தனித்தனி நீரில் அரைத்து முன்போல பாலெடுத்து அடுப்பிலேற்றிக் காய்ச்சி அரைப் பாகமாக சுண்டினவுடன் மேற்படி

---

* கோதுமையை 3 நாள் ஊறவைத்துப் பிசைந்து பால் எடுத்து உலர்த்தினதற்கு நிஷாஸ்தாவென்று பெயர்.

காஜர்த் துண்டுகளையிட்டு ஒரு கொதி வந்தவுடன் கற்கண்டுப் பாகைச் சேர்த்துப் பாகுபதத்தில் இறக்கி உபயோகிக்க வேண்டியது.

உபயோகம்:— இரத்த விர்த்தியுண்டாகும்; தேகம் மினுமினுக்கும், இந்திரிய விர்த்தியுமாம்.

11. கசகசாப் பாயசம்

கசகசா 12 கிராம் அம்மியிலரைத்துத் துணியில் கட்டிப் பிசைந்து கால் படி பாலெடுத்து அடுப்பிலேற்றித் துளாவிக் கொண்டே காய்ச்சி மூன்று கொதி வந்தவுடன், தேன் 350 கிராம் சுத்தி செய்து சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி ஆகாரங்களுடன் சேர்த்துச் சாப்பிடவும்.

உபயோகம்:— பாதம் பாயசத்தின் குணமே இதற்கு முண்டு.

12. பூண்டுப் பாயசம்

ஒரு தலைப் பூண்டு உரித்துச் சுத்தி செய்தது 120 கிராம் 4 தடவை குளிர்ந்த நீரில் கழுவி, தண்ணீரிலிட்டு வேக வைத்து ஒரு கொதி வந்தவுடனே யிறக்கித் தண்ணீரை வடிகட்டி வேறே சலம் வார்த்துக் காய்ச்சி ஒரு கொதி வந்தவுடன் இறக்கிச் சலத்தை வடிகட்டிவிட வேண்டியது.

இவ்விதம் ஐந்து தடவைகள் செய்ய பூண்டு வாசனை போய் விடும். பின்பு கொஞ்சம் பசும்பாலில் பூண்டையிட்டு வேக வைத்து எடுத்துக் குளிர்ந்த சலத்தினாற் கழுவி சிறு துண்டுகளாய்ச் செய்து குளிர்ந்த சலத்திலிட்டு வைத்து விடவும்.

பசும்பால் முக்கால் லிட்டர் அடுப்பிலேற்றி மூன்று கொதி வந்தவுடன் சீனி 250 கிராம் பாலிலிட்டுப் பாகு செய்து பாகுபதத்தில் மேற்படி பூண்டைச் சேர்த்து, ஏலக்காய் இரண்டொன்று சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்:— கபத்தைக் கண்டித்து இருமலை நீக்கும், இராஜ கருவிகளுக்குப் பலத்தைக் கொடுக்கும் நரம்புகளின் மாசை நீக்கிப் பலப்படுத்தும், இரத்த சுத்தியும் இரத்த விருத்தியும் உண்டாகும்.

குறிப்பு

தேகத்தில் இரத்த விருத்தியை யுண்டாக்கி இந்திரியவாகி, இந்திரிய நரம்புகள் முதலியவைகளைப் பலப்படுத்தி, இந்திரியத்தைச் சார்ந்த வியாதிகளை நீக்கி இந்திரியத்தை அதிகப்படுத்தும்படியான ஆகார அவுடத பாகங்களைச் சொல்வாம்.

13. பால் ஹல்வா

புதிதாய்க் கறந்த பசும்பால் 500 மில்லி, நெய் 300 கிராம், சீனா கற்கண்டு 500 கிராம், குங்குமப்பூ விராகனெடை 4 கிராம், கஸ்தூரி குண்டுமணியெடை-2, பாலை அடுப்பிலேற்றி, ஏடு விழாது துளாவிக் கொண்டே காய்ச்சிப் பாலெல்லாம் சுண்டித் திரண்ட பின்பு நெய்யை விட்டுப் புரட்ட வேண்டியது. இதற்கு முன்பே கற்கண்டைப் பாகு காய்ச்சி மதுபாகத்தில் இறக்கி வைத்திருக்க வேண்டியது. கற்கண்டு பாகை விட்டுக் கிண்டி, கெட்டிப் பதமானவுடன் குங்குமப்பூவை பன்னீராலரைத்துச் சேர்க்க வேண்டியது; கஸ்தூரியைத் தூள் செய்து தூவி, எல்லாம் ஒன்றாக நன்றாய்ப் புரட்டிப் பதனஞ் செய்ய வேண்டியது.

மாத்திரை — வேளை ஒன்றுக்கு 1 முதல் 2 பலம் வரையில் இரண்டு வேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்:— இரத்த விர்த்தியுண்டாகும், இந்திரிய நஷ்டந் தீரும்; தேகங் கொழுக்கும்.

14. அண்டஹாதி ஹல்வா

முட்டை மஞ்சட் கருக்கள் 875, நெய் 875 கிராம், கற்கண்டு 1750 கிராம், கஸ்தூரி 2 கிராம், குங்குமப்பூ 4 கிராம், கோஷ்டம், மேல்தோல் நீக்கப்பட்ட சுக்கு இவற்றின் தூள் வகை ஒன்றுக்கு 10 கிராம், பன்னீர் பலம் 440, கற்கண்டில் பன்னீரும் கொஞ்சம் நீரும் சேர்த்துப் பாகு காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கிக் கொள்ளவும்; கஸ்தூரி, குங்குமப்பூ இரண்டையும் பன்னீரால் நன்றாய் அரைத்துக் கருவில் சேர்த்துக் கம்பி போல் வருகிற மட்டும் கையால் நன்றாய் மிஸ்ரமித்து ஒன்றாய்ச் சேர்ந்த பின்பு மேற்படி கற்கண்டுப் பாகை அடுப்பிலேற்றிக் கருக்கள் கலவையை மெல்லிய கம்பி போல் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பாகில் விட்டு இரும்பு அகப்பையால் துழாவவும். இச்சேர்வையானவுடன் நெய்யைத் தனியாக வேறேயுருக்கி, சூட்டுடன் இதில் விட்டு நன்றாய்க் கிளறி கொதி வந்த பின்பு, இறக்கி, ஆறின பின்பு பத்திரப்படுத்த வேண்டியது.

மாத்திரை — வேளை ஒன்றுக்கு 35 கிராம் முதல் 50 கிராம் வரையிற் கூடும்.

உபயோகம்:— இந்திரிய நஷ்டந் தீரும்; தேகங்கொழுக்கும்; நீர்த்துப் போன விந்து கெட்டியாகும்; இடுப்பிற்கு பலமுண்டாகும்.

15. நாகராதி ஹல்வா

மேல்தோல் நீக்கி இடித்து வஸ்திரகாயம் செய்த சுக்குத் தூள் 70 கிராம், பன்னீர் 350 கிராம், சீனா கற்கண்டு 700 கிராம், கோதுமையின்

அல்லது அரிசியின் பூ நொய் 450 கிராம், நெய் 200 கிராம், பாதம் பருப்பு மேல் தோல் நீக்கினது நூறு கிராம், குங்குமப்பூ 2 கிராம், கஸ்தூரி 1 கிராம்.

செய்முறை:—

கற்கண்டைப் பன்னீரிலிட்டு அடுப்பிலேற்றி, பாகு செய்து, சுக்குத் தூளை பன்னீர் விட்டு நன்றாயரைத்துக் கொண்டு, பின்பு மேற்படி பாகில் இட்டு, நொய்யை நெய்யில் பொன் வருணமாய் வறுத்து முன்பாகத்தோடு சேர்த்துக் கொள்ள வேண்டியது; குங்குமப் பூவையும், கஸ்தூரியையும் வெவ்வேறாய்ப் பன்னீரால் அரைத்துச் சேர்க்கவும், பின்பு பாதம் பருப்பை யரைத்துச் சேர்க்க வேண்டியது; முடிவில் எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்துக் காய்ச்சித் திரளும் பதத்திலிறக்கி ஆறவைத்து பத்திரப்படுத்த வேண்டியது.

மாத்திரை — 10 கிராம் - 15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— இந்திரிய நரம்புகளின் குளிர்ச்சியை நீக்கும். குளிர்ச்சியால் விந்து உறைந்துண்டாகிய தாது நஷ்டத்தை நீக்கி ஆண்மையை யுண்டாக்கும்; தீபாக்கினியை அதிகப்படுத்தி, பசி தீபனத்தை யுண்டாக்கும்.

16. மேதியாதி ஹல்வா

வெந்தயத்தை இளவறுப்பாய் வறுத்துப் பொடி செய்து வஸ்திர காயஞ் செய்தது 90 கிராம், பாதம் பருப்புத் தோல் நீக்கினது 35 கிராம், பிஸ்தாப் பருப்பு 35 கிராம், பிந்தஃ பருப்பு 40 கிராம், சில்கூஜா பருப்பு 40 கிராம், இனிப்புப் பூசனிக்காய் விதைப் பருப்பு 20 கிராம், கழுகின எள்ளு 12 கிராம், கசகசா 15 கிராம், கோதுமை மெல்லிய நொய் 200 கிராம், நெய் 500 கிராம், சருக்கரை 1 கிலோ, குங்குமப்பூ 4 கிராம், கஸ்தூரி 1 கிராம், பன்னீர் 140 கிராம்.

செய்முறை:—

பருப்பினங்களை ஓர் இரவு ஊற வைத்துக் காலையில் அரைத்து வைத்துக் கொள்ளவும்; குங்குமப் பூவையும், கஸ்தூரியையும் கொஞ்சம் பன்னீர் விட்டு அரைத்துக் கொள்ள வேண்டியது; நொய்யில் சருக்கரைப் பாகைச் சிறுகச் சிறுக விட்டு மேல் கீழாகப் புரட்டி, முன் அரைத்த பருப்பினங்களையும் வெந்தயச் சூரணத்தையுஞ் சேர்த்து நன்றாய்க் கிளறி நெய்யைக் காய்ச்சி அதில் விட்டுப் புரட்டி சிறு தீயாகச் சற்று நேரம் எரித்துப் பதத்தில் கீழிறக்கி கஸ்தூரியையும், குங்குமப் பூவையும் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை — 12 கிராம் 15 கிராம் இரண்டு வேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்:— தேகம் பருக்கும், தேகபுஷ்டி, தேகசக்தி, அழகு ஆகிய இவையுண்டாகும்; தேகத்தின் சூடு, அஸ்திச் சூடு, கணச்சூடு முதலியன தீரும்; இந்திரிய நஷ்டந் தீரும்.

குறிப்பு

தேகம் இளைத்திருக்கிற குழந்தைகளுக்கு இது மிகவும் உபயோகப்படுகிறது.

17. போஸ்துபீஜா ஹல்வா

வெள்ளைக் கசகசாவைக் குத்தி உமி நீக்கி 500 கிராம், கொப்பரைத் தேங்காய் மேல் தோல் நீக்கி 245 கிராம், மேல் தோல் நீக்கின பாதம் பருப்பு 125 கிராம், விதை நீக்கிச் சுத்தி செய்த பேரீச்சங்காய் 125 கிராம், நெய் 125 கிராம், சீனி சருக்கரை 700 கிராம், கஸ்தூரி 1 கிராம்.

செய்முறை:—

கசகசா, தேங்காய், பேரீச்சங்காய், பாதம் பருப்பு ஆகியவைகளை இரவில் ஊற வைத்துக் காலையில் கொஞ்சம் நீர் விட்டு அரைத்து நீரில் கரைத்துச் சீலையால் வடிகட்டிக் கொள்ள வேண்டியது. அந்தப் பாலில் சருக்கரையைக் கரைத்து அடுப்பிலேற்றித் துழாவிக் கொண்டே காய்ச்ச வேண்டியது. பாகுபதத்தில் நெய்யை விட்டுக் கஸ்தூரியைப் பன்னீரால் அரைத்துச் சேர்த்து இறக்கிப் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை — 35 கிராம், 50 கிராம் காலையில் மட்டும் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— தேகத்தில் தேஜசும், சவுந்தரியமு முண்டாகும். நீர்த்தாரையைப் பற்றிய புண், பிரமேகம் நீங்கும்.

18. வசந்த மலருரி ஹல்வா

இலவங்கத்தூள் பொடி, பாதம் பருப்பு, அக்ரோட் பருப்பு, சில்கூஜா பருப்பு, பிஸ்தாப் பருப்பு, முலாம்பழ விதைப் பருப்பு, பாதம் பிசின் இவை வகை ஒன்றுக்குப் பலம்—1, ரூமிமஸ்தகி 20 கிராம், சப்ஜா விதை 10 கிராம், குங்குமப்பூ 3 கிராம், சாதிக்காய், சாதிபத்திரி இவை வகை ஒன்றுக்கு 3 கிராம், கஸ்தூரி அம்பர் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், நிஷாஸ்தா உலர்ந்தது 105 கிராம், சுத்தி செய்த தேன் 500 கிராம், பசுவின் நெய் 500 கிராம், சருக்கரை 500 கிராம்.

செய்முறை:—

நிஷாஸ்த்தாவைப் பொடி செய்து நெய்யில் வறுத்துக் கொள்ள வேண்டியது குங்குமப்பூ, அம்பர், கஸ்தூரி, சாதிக்காய், சாதிபத்திரி

ஆகிய இவைகளைத் தனியாகப் பொடி செய்து ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள வேண்டியது. மற்றவைகளை 12 மணி நேரம் ஊறவைத்து அரைத்து நீரிற் கரைத்து, வடிகட்டிப் பாலெடுத்துக் கொள்ள வேண்டியது. பருப்புகளின் பாலில் தேனை விட்டுத் துழாவிக் காய்ச்சிப் பாகுபதத்தில், வறுத்த நிஷாஸ்த்தாவையும் சருக்கரையையும் அதிற் கலந்து கிளறி இறக்கி, குங்குமப்பூ முதலிய பொடிப் போட்டு நன்றாய் மிஸ்ரமித்து, ஆறின பின் ரூமிமஸ்தகிப் பொடியைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது.

மாத்திரை — 15 கிராம், 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— இந்திரிய ஒழுக்கு, குண்டிக்காய்களின் பலஹீனம், இடுப்பு நோய் முதலியன தீரும்; நீர்த்துப் போன இந்திரியமிறுகித் தாருட்யவிர்த்தியுண்டாகும்.

19. ஹிம்மஸ் அல்வா

இலவங்கப்பட்டை, மேல் தோல் நீக்கின சுக்கு, நாயுருவி விதை, இவைகளின் பொடி 25 கிராம், கசகசா பலம் அரையை அரைத்துப் பால் எடுத்துக் கொள்ள வேண்டியது. கடலை மாவு பலம்-6, இதனைக் கொஞ்சம் நெய் வார்த்து வறுத்துக் கொள்ள வேண்டியது. சீனிசருக்கரை 350 கிராம், நெய் 200 கிராம்.

செய்முறை:—

சீனியில் கசகசாப் பாலைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகு செய்து கடலை மாவு, முன் சூரணம் எல்லாம் அதிலிட்டுக் கிண்டி நெய்யையும் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை — வேளை ஒன்றுக்கு 8 கிராம், 10 வரையில் சாப்பிடவும்.

உபயோகம் — தேகபுஷ்டி, இரத்தவிர்த்தி, தாருட்யவிர்த்தி முதலியன உண்டாகும்.

20. ஹிம்மஸ் அல்வா (வேறு விதம்)

கடலை மாவு 210 கிராம், நெய் 210 கிராம், பசும்பால் 100 கிராம், சுத்தி செய்த நல்ல தேன் 100 கிராம், சீனிசருக்கரை 525 கிராம்.

செய்முறை:—

கடலை மாவை நெய்யில் வறுத்துச் சருக்கரையைப் பாலில் சேர்த்துப் பாகு செய்து பாகுபதத்தில் மாவையும் தேனையும் சேர்த்து நன்றாகக் கிண்டி ஆறவிட்டு எடுத்துக் கொள்ள வேண்டியது.

மாத்திரை:— காலையில் 30 கிராம், 35 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்:— தேகம் பருக்கும், தேகங் கொழுத்துப் பலப்படும், இந்திரிய நஷ்டந் தீர்ந்து தாருட்யவிர்த்தி யுண்டாகும்.

21. ஹப்பத்துஸ் ஸ்வுதா அல்வா

இது உஸ்தாதினா, மவுலானா மவுல்வி, ஹலரத் ஷேக்யூசுபு, ஆலிம்சாய்பு அவர்கள் முறை.

கருஞ்சீரகத்தை நீரில் ஓரிராப்பகல் ஊற வைத்து நன்றாய்த் தேய்த்துத் தோல் போக்கி நிழிலில் உலர்த்தினது 85 கிராம், சாதிக்காய் 85 கிராம், சாதிப்பத்திரி 85 கிராம், பசும்பால் படி மூன்று, நாட்டுச் சருக்கரை 525 கிராம், சீனா கற்கண்டு 69 கிராம், பசுவின் நெய் 300 கிராம்.

செய்முறை:—

கருஞ்சீரகத்தை கால் அல்லது அரை படி செவ்விள நீரில் அவித்து உலர்த்தி பின்பு அரை படி பசும்பாலிலிட்டு அவித்து, மேற்படி பால் விட்டரைத்துக் கொள்ளவும். சாதிக்காய், சாதிப்பத்திரி ஆகிய இரண்டையும் பால் விட்டரைத்துக் கொள்ளவும்; முன் மருந்தையும் இம்மருந்தையும் மேற்கண்ட மூன்று படி பாலில் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாயெரித்துக் கிண்டிக் கொண்டு வருகையில் குழம்பான பதத்தில் கற்கண்டைப் பொடி செய்து போட்டுக் கிளறவும். திரளும் பதத்தில் சிறுகச் சிறுக நெய்யை விட்டுக் கிளறி மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை — 20, 25 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— தேகத்திலுள்ள மாசுகள், அசுத்த சத்துகள் முதலியன சுத்தியாம். இரத்தத்திலுள்ள சகல விகற்பங்களும் நீங்கி இரத்தம் சுத்தியாகி, தேகபலம், காந்தி, தேஜசு முதலியவைகளுண்டாகும். தேக நிறமாறும், ஆண்மை விர்த்தியாகும்.

முறப்பாக்கள்

22. நாராயண வீரியவிர்த்தி முறப்பா

அதிக முற்றலும், அதிக இளசும் அல்லாததாய் நடுத்தரமும், மொத்தமுமான தண்ணீர் விட்டான் கிழங்கு வேண்டியதை ஒரு வாரம் வரையில் தண்ணீரில் ஊறப் போட்டெடுத்து மேல் தோல், உள்நரம்பு ஆகிய இவைகளை நீக்கி, சிறு பில்லைகளாகத் துண்டித்து அதற்குத் தக்க பால் விட்டு வேக வைத்து எடுத்துக் கொள்ளவும்.

பின்பு அக்கிழங்கிற் கிரண்டு பங்கு தேனைக் காய்ச்சி நுரை நீக்கிச் சூடாயிருக்கும் போது முன் பில்லைகளை இட்டுப் புரட்டி ஜாடியில் வைத்துக் கொள்ளவும். பின்பு பாகமுடைந்து நீராகி விட்டால், பில்லைகளை எடுத்துக் கொண்டு பாகை மட்டும் மறுபடியும் காய்ச்சிப் பதத்தில் சேர்த்துக் கொள்ளவும். இவ்விதம் 2-3 தடவை செய்ய பிறகு நீராகாது.

உபயோகம்:— ஆன்ம சக்தியையும், ஆண்மையையும் அதிகப்படுத்தும்; இந்திரிய நஷ்டத்தை அறத்தீர்க்கும், இது சொற்ப வஸ்துவாயினும் மிகவும் அனுபவப்பட்டது.

23. ஆமலக முறப்பா

முதிருந்தருணமானதும், காயம்படாததும், நாருமற்றதுமான பெருநெல்லிக்காய்கள் தேவையானவைகளைப் பொறுக்கி எடுத்து 6 ஈச்சன் முள்ளுகள் கட்டிய கத்தையால், அவைகளை ஒவ்வொன்றாக நன்றாகக் குத்தி, சுண்ணாம்பு நீரில் மூன்று நாள் ஊறவைத்து எடுத்து, நீரில் கழுவி ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி மிகவும் சிறு தீயாக எரித்து, நீர் சுண்டின பின் கொஞ்சம் நெய் வார்த்து இளஞ்சூடாய் வறுத்தெடுத்து, நெய்ப் பசையில்லாது நன்றாய்த் துடைத்து, காய்களின் இடைக்கு இரண்டு பங்கு சருக்கரையைப் பாகு செய்து அதில் போட்டுக் காய்ச்சித் தந்து பாகத்தில் இறக்கிக் கொள்ளவும்.

இரண்டொரு நாளைக்குப் பின் பாகமுடைந்து நீராயிருந்தால், காய்களை யெடுத்துக் கொண்டு பாகில் கொஞ்சம் சருக்கரை சேர்த்துக் காய்ச்சிக் காய்களைப் போட்டுக் கொள்ளவும். இவ்விதம் பாகமுடைந்து நீராகும் போதெல்லாம் கொஞ்சம் சருக்கரை சேர்த்துப் பதமாய்க் காய்ச்சிக் கொள்ள வேண்டியது.

மாத்திரை — 70, 100, 140 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— இருதயம், மூளை, இரைப்பை ஆகிய இவைகளைப் பலப்படுத்தும், தேகத்திற் காரோக்கியத்தை யுண்டாக்கும்; ஆண்மையையும் சீரண சக்தியையும் அதிகப்படுத்தும்.

24. அரிசனஹத்தி தந்திமுறப்பா

மேல் தோல், உள்நரம்புகள் முதலியன நீக்கிச் சுத்தி செய்த மஞ்சள் முள்ளங்கி தேவையானதை பில்லைகளாகத் துண்டித்துப் பசும்பாலிலிட்டு வேக வைத்து, நன்றாக வெந்தபின் இறக்கி உலரப்போட்டு, அரைபங்கு உலர்ந்த பின் நெய்யில் அரைவறலாக வறுத்து, கிழங்கிற் கிரண்டு பங்கு சருக்கரையைப் பாகமாகச் செய்தாவது அல்லது ஒன்றரை பங்கு தேனைக் காய்ச்சி நுரை நீக்கியாவது அதில்

முன் கிழங்கைப் போடவும். பாகமுடைந்து நீரானால் முன்னர் சொல்லியிருக்கிறது போலவே செய்து கொள்ளவும்.

மாத்திரை — 35, 70 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— ஆண்மையை அதிகப்படுத்தும்; மிகவும் பரிசுத்தமான இரத்தத்தை யுண்டாக்கி மனதிற்கானந்தத்தை யுண்டாக்கும்.

25. ஆரத்திரக முறப்பா

நாரற்றதும், பருமனுமான இஞ்சி தேவையானது ஒரு பாத்திரத்திலிட்டு அதன் மேல் நான்கு அங்குலம் மணல் கொட்டி மூடி தினந்தோறும் நீர் விட்டு வந்து 22—ஆம் நாள் எடுத்து நன்றாய்த் தேய்த்துக் கழுவி, ஈச்சன் முள்ளுக் கத்தையினால் நன்றாகக் கொத்தி, தேன் அதற்கிரண்டு பங்கும் நீர் ஒரு பங்கும் சேர்த்து, அதிலிட்டுக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டியது.

மாத்திரை — 6 முதல் 12 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்:— இது சூடானதாகையால் இரைப்பை, மூத்திரக் குண்டிக்காய்கள், பீஜங்கள் முதலியவைகளிலுள்ள குளிர்ச்சியை நீக்கும். நீர்க்கட்டு நீங்கும்; ஆண்மையை யுண்டாக்கும். கபசுரங்கள் தீரும்.

26. சாலாமிஸ்ரி முறப்பா (Salep)

தேவையான சாலாமிஸ்ரியை 1, 2 நாள் இராப்பகல் நீரில் ஊறவைத்து எடுத்து மொத்த ஊசியினால் ஒவ்வொன்றிலும் 9, 10 இடங்களில் பொத்து, கையால் நன்றாய் அழுத்த அவைகளினின்று வழுவழுப்பான நீர் வெளிப்படும். அதைத் துடைத்து விட்டுப் பழையபடி நீரில் ஊறப் போட்டு மறுநாள் எடுத்துப் பிழிய வழுவழுப்புள்ள நீர் புறப்படும். அதைத் துடைத்து விட்டு நீரில் ஊறப் போட்டு முன்போலவே பிழிய வேண்டியது;

இவ்விதம் வழுவழுப்பான நீர் வெளிப்படுகிறது நிற்கிற வரையில் ஊறவைத்துப் பிழிய வேண்டியது; பின்பு நன்றாய்த் துடைத்து விட்டு, அதற்கிரண்டு பங்கு தேனைக் காய்ச்சி நுரை நீக்கிச் சுத்தி செய்து அதிலிட்டு மூன்றிராப் பகல் வைத்து விடவும். 4-ஆம் நாள் அடுப்பிலேற்றிக் கமலாக்கினியாக பொங்காமல், இரண்டு நாழிகை நேரம் எரித்து, இறக்கி மூன்று நாள் வைத்துப் பின்பு முன்போல அடுப்பில் வைத்து, முன் திட்டமாகவே பொங்காமல் இரண்டு நாழிகையெரித்து இறக்கி, மூன்று நாள் வைத்துப் பின்பு அடுப்பிலேற்றி முன்போலவே செய்ய வேண்டியது.

இவ்விதம் அந்தத் தேன், பாகுபதமாகிற வரையிற் செய்து பாகு பதம் வந்த பின்பு பத்திரப்படுத்தி நாற்பது நாட் சென்ற பின்பு உபயோகிக்க வேண்டியது.

மாத்திரை — 1, 2 சாப்பிடலாம்.

உபயோகம்:— எவ்வித இந்திரிய நஷ்டமுந் தீரும். இந்திரிய உற்பத்தி பெருகும். ஆண்மை, தேகபலம், காமம் ஆகிய இவைகளை அதிகப்படுத்தும், மூத்திரக் குண்டிக்காய்கள், இடுப்பு, முதுகு ஆகியவைகளுக்கு அதிக பலத்தையுண்டாக்கும்; மூளைக்குப் பூரண சக்தியை யுண்டாக்கும் மனதிற்கானந்தத்தை தரும்.

குறிப்பு

தாருட்யவிர்த்திக்காக சாலாமிஸ்ரியைப் பாலிலிட்டுக் காய்ச்சி சாப்பிடுவது வழக்கமாகையால் இது பெரும்பாலும் பலருக்குத் தெரிந்த சரக்கே. ஆனால், உண்மையாகிய சரக்கை வாங்குபவர்கள் சிலரே. எப்படியெனில் உருளைக்கிழங்கு, சேமைக்கிழங்கு இவைகளைப் பக்குவம் பண்ணி பெரிஷ்யா தேசத்திலிருந்து நேரே வந்ததெனச் சிலரால் விற்கப்படுவதால் அதை நம்பி அவைகளை வாங்கி யேமாந்தேங்குகிறார்கள். ஆகையால் அவ்வித மோசச் சரக்குகளை வாங்காது உண்மையானதைப் பார்த்து வாங்க வேண்டியது.

மேற்கண்ட அவுடதம் பாகப்படுத்த சுமார் மூன்று மாதம் செல்கின்றன; ஆனால் குணம் மிகவும் சிறந்ததாகும்.

27. பஹமனே சுபேத் (Bahman-i sufaid) முறப்பா

இது ஓர் வகையான வேர், சாதாரணமாய் யூநாநி மருந்துக் கடைகளிலெல்லாம் அகப்படும். புதிதானதும் நல்ல வாசனையுள்ளதும் இலேசானதுமானதாய்ப் பார்த்து வாங்க வேண்டும்.

மேற்கண்ட சரக்கு 350 கிராம் வாங்கி, சிறு பில்லைகளாகத் துண்டித்து மூன்றிராப்பகல் நீரில் ஊறவைக்க வேண்டியது; பிரதி தினமும் பழைய நீரை நீக்கி விட்டுப் புதிய நீர் வார்த்து வரவேண்டியது. நான்காம் நாள் அந்த பில்லைகளில் துவாரமிட்டு, ஓரிராப் பகலூற வைத்து எடுத்துப் பிழிய நீரெல்லாம் வெளிப்பட்டுப் போம். பின்பு காய்ச்சி நுரை நீக்கிச் சுத்தி செய்த தேன் 350 கிராம், நீர் 700 கிராம் இரண்டையும் சேர்த்து அதில் முன் பக்குவஞ் செய்தவைகளையிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துப் பாகுபதத்தில் இறக்கிப் பத்திரப்படுத்த வேண்டியது.

மாத்திரை — 12, 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— இந்திரியத்தை அதிகமாய் விளையச் செய்யும். மூத்திரக் குண்டிக்காய், இடுப்பு, முதுகு ஆகியவைகளுக்குப் பலத்தைத் தரும். ஆண்மையை அதிகப்படுத்தும்; இரைப்பை, தலைமூளை ஆகிய இவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கும்.

இந்திரியத்தை அதிகப்படுத்தும் உசித முறை முதலியவைகள்

28. பாதம் சட்னி

தோல் நீக்கின தித்திப்பு பாதம் பருப்பு 11ல் கொஞ்சம் நீர் வார்த்து நன்றாய் அரைத்துப் பின்பு சுத்தி செய்த தேன் 25 கிராம் விட்டு நன்றாயரைத்துக் காலையில் மட்டும் சாப்பிட வேண்டியது. இவ்விதம் 11 நாள் அல்லது 21 நாள் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— இந்திரியம் அதிகமாய் ஊறும்.

குறிப்பு

சீரண சக்தி குறைவாயிருக்கிறவர்கள் ஆரம்பத்தில் 11 பருப்புகள் சாப்பிட்டால் சிலருக்கு பேதி காணும். ஆகையால் முதலில் ஒன்று சாப்பிட ஆரம்பித்து நாளடைவில் சிறிது சிறிதாக அத்தொகைக்குக் கொண்டு வரவேண்டியது. இதுதான் வைத்தியர்களின் தந்திரம்.

29. தஞ்சை குஞ்சிஷ்க் முறப்பா

ஆண் அடைக்கலங்குருவி 10 அறுத்து தலை கால் குடல் உரோம முதலியவைகளை நீக்கிச் சுத்தி செய்து தண்ணீரில் நன்றாய்க் கழுவி, துணியினால் துடைத்து விட்டு சக்திக்குத் தக்கபடி நெய் விட்டுச் சிவக்க வறுக்க வேண்டியது. நல்ல கெட்டித்தேன் வீசை-1, வாங்கிக் காய்ச்சி நுரை நீக்கி, சுத்தி செய்து மேற்படி குருவிகளையெல்லாம் அதில் விட்டு வாய் மூடி பத்திரம் செய்ய வேண்டியது.

காலையில் தோல் நீக்கின இரண்டு பாதம் பருப்புகளைக் கொஞ்சம் கற்கண்டுடன் மென்று சாப்பிட்டு விட்டு, ஒரு குருவியைச் சாப்பிட வேண்டியது. இரவில் படுக்கைக்குப் போக சற்று முன்னர் ஒரு குருவியையும் கொஞ்சந் தேனும் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— இந்திரிய விர்த்தியுண்டாம். இரத்த சுத்தியுண்டாகும், ஆண்மை அதிகமுண்டாகும்.

குறிப்பு

குருவிகளைச் சாப்பிடும் போது கடினமான எலும்பு களை நீக்கிச் சாப்பிடத் தக்கவைகளை மட்டும் சாப்பிட வேண்டும்.

30. கடலை நீர்ப்பானம்

60 கிராம் கடலையை இரவில் ஓர் ஆழாக்கு நீரில் ஊறவைத்துக் காலையில் ஓர் மெல்லிய சேலைத் துண்டில் கட்டித் தொங்கவிட, நீர்

வடியும். அந்த நீரோடு சுத்தி செய்த நல்ல கெட்டித் தேன் 25 கிராம் சேர்த்து சாப்பிடவும்; இவ்விதம் 10 நாள் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— இந்திரியத்தை அதிகப்படுத்தும், நீற்றுப் போன இந்திரியம் கெட்டியாகி தம்பனமுண்டாகும், ஆண்மையும் அதிகப்படும்.

குறிப்பு

தாருட்ய விருத்திக்கு உபயோகப்படும் தனி அவுடதங்களில் கடலைக்கு மிஞ்சின தொன்றுமில்லையென்பது யூநாநி வைத்திய சித்தாந்தம்.

31. சில்கூஜா நாஷ்தா

ஊறவைத்த கறுப்புக் கடலை 25 கிராம், மேல் தோல் நீக்கின சுக்கு 1 கிராம், போஸ்தக்காய்த் தோல் 1 கிராம், இவற்றைத் தேன் விட்டரைத்துக் காலையில் தினம் சாப்பிட வேண்டியது. இவ்விதம் 10-நாள் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— இந்திரிய நஷ்டந் தீரும். நீற்றுப் போன இந்திரியம் கெட்டியாகி தாருட்யவிருத்தியுண்டாகும், நாஷ்தா என்பது சிற்றுண்டி.

32. சில்கூஜா நாஷ்தா

சில்கூஜா பருப்பு 20 கிராம், விதையுள்ள திராக்ஷையை விதை நீக்கினது 20 கிராம் இவை இரண்டையும் ஒன்றாகக் கலந்து ஒரு பாத்திரத்திலிட்டு சலம் மீந்திராமல் சுவரிப் போகும் படியாகக் கொஞ்சம் நீர் வார்த்து ஓரிரவு ஊறவைத்துக் காலையில் 12 கிராம் சீனிசருக்கரை சேர்த்துச் சாப்பிடவும். இவ்விதம் இரண்டு மாதம் சாப்பிடவும்.

உபயோகம்:— இந்திரிய விருத்தியும், வீரிய விருத்தியுமுண்டாகும்.

33. வச்சகத் தண்டுலாதி யுச்சிதப் பிரயோகம்

தேவையான வெட்பாலையரிசியை நீரில் ஒரு நாள் ஊறவைத்து தோல் போக்கி நிழலில் உலர்த்தி அதற்கு ஒன்றரை பங்கு நல்ல திறமான தேனைக் காய்ச்சி நுரை நீக்கி, சூடாயிருக்கையிலேயே மேற்படி பருப்புகளைப் போட்டு வாய்மூடி எட்டு நாள் ஏதேனும் ஒரு தானியத்துக்குள் வைத்து எடுத்துக் கொள்ளவும்.

மாத்திரை — 12, 20, 25 கிராம் காலையில் மட்டும் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— ஊற்றைப் போல் இரத்த விர்த்தியாம், காமம் அதிகப்படும். இந்திரிய விளைவை யுண்டாக்குவதில் மிகவும் உபயோகமுள்ளது.

34. பிண்டல திண்டி

தேறினதும் பருமனுமான மரவள்ளிக் கிழங்கு தேவையானது கொண்டு வந்து 2—3 மணிநேரம் சுத்த நீரிலிட்டு வைத்துப் பின்பு நன்றாக தேய்த்துக் கழுவி ஒரு பாத்திரத்திலிட்டு சலம் வார்த்து நன்றாய் வேக வைத்து இறக்கி மேல் தோல் நீக்கி துண்டுகளாகச் செய்து வெய்யிலில் உலர்த்தி யிடித்து தூளாக்கி, வாய் சிறுத்த பானையில் பசும்பாலுடன் நீர் சேர்த்து விட்டு வாய்க்கு வேடுகட்டி அதன் மேல் மேற்படி மாவை வைத்து மாவின் மேற்படாது வேறு சட்டியினால் மூடி அடுப்பேற்றிப் பால் பொங்காது சிறு தீயாக எரித்து நன்றாக வெந்த பின், எடுத்து உலர்த்த வேண்டியது.

பின்பு கொஞ்சம் நெய்யில் இளவறுப்பாக மேற்படி மாவை வறுத்து மாவிற்கு 2—3 பங்கு, திறமான கெட்டித் தேனைக் காய்ச்சி, சுத்தி செய்து இளஞ் சூடாயிருக்கையில் மேற்படி மாவைச் சேர்த்துக் கிளறிக் கொள்ள வேண்டியது.

மாத்திரை — 20, 35 கிராம் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— நீர்த்துப் போன இந்திரியம் கெட்டியாகி, ஆண்மையதிகப்படும்; இரத்த சத்து அதிகப்பட்டுக் கருத்தரிக்கும்.

குறிப்பு

சக்தியுள்ள கனவான்கள் கஸ்தூரி, அம்பர், தங்க ரேக்கு, வெள்ளி ரேக்கு ஆகிய இவைகளிலொன்றை அல்லது எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

35. சரச விந்துவாதிச் சூரணம்

காட்டு வாகை விதை தேவையானவை ஓர் பீங்கானில் அல்லது மண்பாத்திரத்திலிட்டு விதைகள் நன்றாக அமிழ்ந்திருக்கும்படி குளிர்ந்த சலம் விட்டு ஓரிராப்பகல் ஊறவைத்து மேல் தோல் போக்கி நிழலில் நன்றாக உலர்த்திச் சூரணித்துப் பாலில் பிட்ட வித்து உலர்த்தி இதற்குச் சமன் சீனிசருக்கரை சேர்த்துப் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை — 16, 20 கிராம் காலையில் மட்டும் சாப்பிடவும்.

உபயோகம்:— இரத்த விர்த்தியுண்டாகும், ஆண்மை பெருகும்.

36. பம்பா பானம்

பருத்தி விதைப் பருப்பு 25 கிராம், பசும்பால் ஆழாக்கு-1 விதையைக் கொஞ்சம் பால் விட்டு அரைத்துப் பாலில் கரைத்து வடிகட்டி சீனிசருக்கரை பலம் - ஒன்று போட்டு காலையில் சாப்பிடவும். இவ்விதம் 10 நாள் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— இரத்தம் அதிகமாக யூறி, ஆண்மை அதிகப்படும்; தேகச்சூடும், மேகச்சூடும் தணியும்.

குறிப்பு

சிலருக்கு ஆரம்பத்தில் இரண்டொரு தடவை மலம் போகும்; ஆகையால், அவர்கள் குறைந்த அளவாய் ஆரம்பித்து நாளடைவில் அதிகப்படுத்திக் கொள்ள வேண்டியது. முன் பாகத்தையே கொஞ்சம் காய்ச்சியும் சாப்பிடலாம்.

37. கொட்டி மூலகப் பிட்டு

கொட்டிக் கிழங்கை மேல் தோல் சீவி உலர்த்தி யிடித்து வஸ்திர காயஞ் செய்து பாலில் பிட்டவித்து உலர்த்தவும்; பின்பு முன்போலவே பாலில் பிட்டவித்து உலர்த்தவும். இவ்விதம் மூன்று தடவை செய்து திறமான தேன், சூரணத்திற்கு ஒன்றரை பங்கு எடுத்து, தேனைக் காய்ச்சி நுரை நீக்கிச் சூரணத்தைக் கொட்டிக் கிண்டிக் கொள்ளவும்.

மாத்திரை — 20, 35 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்:— இரத்தம், இரத்த சத்து ஆகியவை அதிகப்பட்டு, தேகம் வலுத்து ஆண்மையும் அதிகம் உண்டாகும்; மூத்திரக் குண்டிக்காய்களுக்கும், இடுப்பிற்கும் அதிக பலமுண்டாகும், மூளைக்குப் பூரண சக்தியை யுண்டாக்கும்; மனதிற்குச் சந்தோஷத்தை யுண்டாக்கும்.

38. கிரிஞ்சன அல்வா

காஜர்க் கிழங்கை மேல் தோல் முதலியன சீவி சுத்தி செய்து ஒன்றரை கிலோ, 1-படி பசுவின் பாலிலிட்டு நன்றாய் வேக வைத்து வெண்ணெய் போலான பின்பு கையால் பிசைந்து கடினமானவைகளை நீக்கி, பாலுடனே நன்றாய் அரைத்துக் கொள்ளவும். கோதுமை நொய் பலம்-ஆறரை. இதை நெய்யில் சிவந்த வருணமாய் வறுத்துக் கொள்ளவும்; ஏலக்காய் 12 கிராம், மேல் தோல் நீக்கின வாதுமைப் பருப்பு, மேல் தோல் நீக்கின பிஸ்தாப் பருப்பு, மேல் தோல் நீக்கின கொப்பரைத் தேங்காய், விதையில்லாத திராக்ஷை, விதை நீக்கின பேரீச்சங்காய் இவை வகை ஒன்றுக்கு 50 கிராம், இவற்றை நன்றாய் அரைத்துக் கொள்ள வேண்டியது. பூரா சருக்கரை 700 கிராம், நெய் அரை கிலோ.

செய்முறை:—

சருக்கரையைப் பாகு செய்து மேற்படி கிழங்கையும், நொய்யையுமிட்டு, பருப்பினங்களைச் சேர்த்து நெய்யையும் சேர்த்து,

பதமான பின் இறக்கி ஒரு பலம் சுமாருள்ளதாக உண்டைகள் செய்து வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை — 1, 2 சாப்பிடலாம்.

உபயோகம்:— நல்ல இரத்தமுண்டாகி, இந்திரிய விர்த்தியுண்டாகும்; தேக புஷ்டியுண்டாகி, மனதிற்கு ஆனந்தத்தை தரும்.

39. மஞ்சள் முள்ளங்கி (Carrot) அல்வா

காஜர் கிழங்கு 840 கிராம் இதன் மேல் தோலை சீவி நன்றாய் வேக வைத்துப் பிசைந்து அவற்றிற்குள்ளிருக்கப்பட்ட நரம்புகளை நீக்கி மர உரலில் இடித்துக் கொள்ளவும். பிஸ்தாப் பருப்பு, வாதுமைப் பருப்பு, அக்றோட் பருப்பு, பருத்தி விதை பருப்பு, கொப்பரைத் தேங்காய், பிந்தஃ பருப்பு, கழுகின எள்ளு, கசகசா, முருங்கை விதைப் பருப்பு, சாரப் பருப்பு, இவற்றுள் மேல் தோல் நீக்க வேண்டியவைகளை நீக்கி வகை ஒன்றுக்கு 20 கிராம் எடுத்து அரைத்துக் கொள்ளவும். வால் மிளகு, மேல் தோல் நீக்கின சுக்கு, அரிசித் திப்பிலி, லவங்கப்பட்டை, சாலாமிஸ்ரி, சாதிக்காய், சாதிபத்திரி, பூலாங்கிழங்கு இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு பலம் - கால், சுத்தி செய்த தேன் 350 கிராம், சீனி சருக்கரை பலம் - 420, பசுவின் நெய் 150 கிராம், முட்டை மஞ்சட் கரு வேக வைத்தது 50.

செய்முறை:—

சருக்கரையுடன் கொஞ்சம் நீரும், தேனும் சேர்த்து பாகு செய்து சூரணங்கள், பருப்பினங்கள் முட்டைக்கரு முதலானவைகளையும் ஒன்றாகச் சேர்த்து நன்றாகப் புரட்டிக் கிண்டி, பதமானவுடன் நெய்யும் வார்த்து இறக்கிக் கொள்ள வேண்டியது.

மாத்திரை — 10, 12 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்:— இந்திரிய விர்த்தியும், ஆண்மையுமுண்டாம்; தேக புஷ்டியும் மனக்களிப்பு முண்டாகும்.

40. காஜர் அல்வா

மேல் தோல், உள்நரம்பு முதலியன நீக்கின காஜர்க் கிழங்கி சேர் - நாலேகால், ஷல்கம் (Turnip) தோல் முதலியன சீவிச் சுத்தி செய்தது 1190 கிராம், பேரீச்சங்காய், விதை நீக்கின திராக்ஷை, கிஷ்மிஷ் பழம், வகை ஒன்றுக்கு 1160 கிராம், நெய் 700 கிராம், சீனி 850 கிராம்.

செய்முறை:—

இவற்றை வேண்டிய பசுவின் பாலில் நன்றாய் வேக வைத்து (தனித்தனியாக வேக வைத்தால் நலம்) பின்பு நெய்யில் வறுத்துக் கொள்ளவும். (இதுவும் தனித்தனியாக வறுத்துக் கொள்வது மிகவும்

நலமே) பின்பு சருக்கரையைப் பாகு செய்து பாகுபதத்தில் மேற்படி சூரணத்தைச் சேர்த்து நன்றாய்க் கிண்டிக் கொள்ள வேண்டியது.

மாத்திரை — 12, 15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— தேகத்தில் அசுத்தமாகிய சத்துக்களை நீக்கி, சுத்தமான சத்துக்களையும் இரத்த விர்த்தியையும் உண்டாக்கும்.

41. ஷீகாமூல லேஹியம்

மேல் தோல், உள்நரம்பு முதலியன நீக்கிச் சுத்தி செய்து கல்லுரலில் நறுக்கி பிழிந்து நீர் நீக்கின மஞ்சள் முள்ளங்கி 1400 கிராம், சீனிசருக்கரை 850 கிராம், பிஸ்தாப் பருப்பு, சில்கூஜா பருப்பு, அக்றோட் பருப்பு, வாதுமைப் பருப்பு, பிந்தஃ பருப்பு, முருங்கை விதைப் பருப்பு இவற்றை மேல் தோல் நீக்கி வகை ஒன்றுக்கு 175 கிராம்.

செய்முறை:—

பருப்பினங்களை நன்றாய் இடித்து தூள் செய்து கொள்ளவும். சருக்கரையை பாகு செய்து அதில் கிழங்கை போட்டு பின்பு பருப்பின் தூள்களை போட்டுக் கிளறியெடுத்துக் கொள்ளவும்.

மாத்திரை — 12, 17 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— இரத்த விர்த்தியுண்டாகி இந்திரிய விர்த்தியாம், உறுப்புகளுக்கு பலத்தைக் கொடுக்கும்.

42. மஹா ஜஸர் அல்வா

சிவந்த நிறமுள்ள திறமான காஜர் மேல் தோல், நடுநரம்பு முதலியன நீக்கி நன்றாய்ச் சுத்தி செய்தது 840 கிராம், பேரீச்சங்காய் சதையுள்ளதும், பருமனுமானதாக பொறுக்கி, உள் விதை நீக்கினது 420 கிராம் வறுத்த பொட்டுக் கடலை மாவு, கோதுமை நொய் இவை வகை ஒன்றுக்கு கிராம் 55 பூரா சருக்கரை 840 கிராம், கெட்டித் தேன் 400 கிராம், முட்டை மஞ்சட்கரு 20, பிந்தஃ பருப்பு, வாதுமைப் பருப்பு, பிஸ்தா பருப்பு, அக்றோட் பருப்பு, கொப்பரை தேங்காய் இவற்றின் மேல் தோல் நீக்கி வகை ஒன்றுக்கு 35 கிராம், சிறு நெருஞ்சி முள்ளு, லவங்கப்பட்டை, மேல் தோல் நீக்கின சுக்கு, பேரரத்தை இவைகளின் தனித்தனி சூரணம் வகை ஒன்றுக்கு 10 கிராம், குங்குமப்பூ, உயர்ந்த கஸ்தூரி, வகை ஒன்றுக்கு 4 கிராம்.

செய்முறை:—

கிழங்கையும் பேரீச்சங்காயையும், பசும்பாலில் வேக வைத்து, நன்றாய்க் குழைந்தபின் எடுத்து மரஉரலில் மெழுகு போல இடித்துக் கொள்ளவும்; கடலை மாவு, கோதுமை நெய் வார்த்து தனித்தனி வறுத்துக் கொள்ளவும்.

தோலோடு முழு முட்டைகளை நீரிலிட்டு வேக வைத்து மஞ்சட் கருவையெடுத்துக் கொள்ளவும். பருப்பினங்களை நன்றாய் அரைத்து மாவுடன் கலந்து கொள்ளவும். சருக்கரையுடன் தண்ணீரும், தேனும் சேர்த்து சற்றுக் காய்ச்சி வடிகட்டி பின்பு அடுப்பேற்றி, பாகுபதத்தில் முன் கிழங்கையும், பேரீச்சங்காய்களையும் அதிலிட்டு மூன்று கொதி வந்த பின் கீழிறக்கி முட்டைக் கருக்களைச் சேர்த்து, நன்றாகக் கீழ் மேலாகப் புரட்டி, பருப்பினங்களையும், சூரணத்தையுஞ் சேர்த்து குங்குமப்பூ, கஸ்தூரி இவற்றையும் நன்றாகப் பொடி செய்து சேர்த்துப் புரட்டி யிறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை — 12 கிராம், 15 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்:— எவ்வித இந்திரிய நஷ்டமுந் தீரும், எவ்வித சோர்வும் நீங்கி ஆண்மையுண்டாகும், தேகத்தின் சூடு, குளிர்ச்சி முதலியவைகளைச் சமப்படுத்தும், மனதிற்குச் சந்தோஷத்தை யுண்டாக்கும்; இடுப்பு நோய், மூத்திரக் குண்டிக்காய்கள், ஆண்குறி ஆகியவைகளின் சோர்வு முதலியவற்றை போக்கும். (இது பல தடவை செய்து அனுபவப்பட்டது.)

43. பீதகந் தாதுவிர்த்தினி

மேல் தோல், உள்நரம்பு முதலியன சுத்தி செய்த மஞ்சள் முள்ளங்கி 1150, பசும்பால் 1150 கிராம், பசுவின் நெய் சேர் - மூணேகால், சாரப் பருப்பு 130 கிராம், வாதுமை பருப்பு, தேங்காய் இவற்றின் மேல் தோல் நீக்கி வகைக்கு 450 கிராம், சீனிசருக்கரை சேர் மூணேகால் = 910 கிராம்.

செய்முறை:— கிழங்கை பாலிலிட்டு நன்றாக வேக வைத்து, அம்மியில் மேற்படி பாலுடன் அரைத்து நெய்யில் வறுத்து, ஈரமில்லாமல் நீரெல்லாஞ் சுண்டினபின் இறக்கிக் கொள்ளவும். சாரப் பருப்பு முதலியவற்றை நன்றாகயிடித்து முன் தூளுடன் சேர்த்துச் சருக்கரையை பாகு செய்து பதத்தில் சேர்த்திறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை — 12 கிராம் 15 கிராம் ஆகும்.

உபயோகம்:— இந்திரியத்தை ஒழுங்குபடுத்தி ராஜ உறுப்புகளை பலப்படுத்தி, தேகபலம், உடல் வலிவு ஆகிய இவைகளையுண்டாக்கும்.

44. விந்தோதர வீரியவிர்த்தினி

நொய்யோடு கலந்திருக்கிற கோதுமைமா 280 கிராம் பசுவின் நெய் 350 கிராம், கற்கண்டு 450 கிராம், வாதுமை பருப்பு, பிந்தஃ பருப்பு, பிஸ்தா பருப்பு, சில்கூஜா பருப்பு, கொப்பரை தேங்காய், அக்றோட் பருப்பு, இவற்றை மேல் தோல் நீக்கி வகை 1க்கு 12 கிராம், குங்குமப்பூ 4 கிராம், கஸ்தூரி 3 கிராம் அம்பர் 6 கிராம், லவங்கப்பட்டை, சாதிபத்திரி,

லவங்கம், ஏலக்காய், கஞ்சா விதை, வெட்பாலையரிசி, (ஆஸ்விதை) (Seeds of the myrtle) சாலாமிஸ்ரி, மேல் தோல் நீக்கின சுக்கு, பூமி சருக்கரைக் கிழங்கு, சந்தனம், இவற்றின் சூரணம் வகை 1க்கு 3 கிராம்.

செய்முறை:— மாவை நெய்யில் வறுத்து, கற்கண்டைத் தூள் செய்து இரண்டையும் ஒன்றாகக் கலந்து ஓர் பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து துழாவி வர லேகியம் போலாம். பின்பு வாதுமை பருப்பு முதலிய நான்கு வகையையும் நன்றாகயிடித்துச் சேர்க்கவும், நெய் கக்கும் சமயத்தில் குங்குமப்பூ முதலிய மூன்று சரக்கையும் தனிதனி பன்னீர் விட்டரைத்து ஒன்றாக சேர்த்து, அம்பர் கரைகிற வரையில் நன்றாகக் கீழ் மேலாக புரட்டிக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டியது. பின்பு சற்று தாமதித்து லவங்கப்பட்டை முதலியவைகளை மருந்திற் சேர்த்து எல்லாம் ஒன்றாக புரட்டிக் கிண்டிக் கீழிறக்கி, பீங்கானில் பரப்பி துண்டுகளாகச் செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை — ஒரு நாளைக் கிரண்டு நேரமும் 12 கிராம் 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— இந்திரிய நஷ்டந் தீர்ந்து, ஆண்மை அதிகமாகும்; கருப்பையின் துர்ப்பலத்தை நீக்கி பலத்தையுண்டாக்கும். பெண்களில் சிலருக்கு மணவாழ்க்கைக்கு பின் வழுவழுப்பான நீர் வெளிப்படுவதுண்டு; அந்த நீரைக் கட்டும். இடுப்பின் நோயை நீக்கும். கருப்பையின் குளிர்ச்சியை நீக்கிச் சூடுண்டாக்கி பலத்தைக் கொடுக்கும்.

45. கந்துமாதி விந்துவாதி லேகியம்

கோதுமை நொய் 60 கிராம், தோல் நீக்கி யரைத்த கடலைமா 60 கிராம், பசுவின் நெய் 60 கிராம், வாதுமை பருப்பு, பிஸ்தா பருப்பு, சில்கூஜா பருப்பு, கொப்பரை தேங்காய், சார பருப்பு, பூமி சருக்கரைக் கிழங்கு இவை வகைக்கு 12 கிராம் பஹமனேசுபேத், பஹமனேசுருஂ, திறமான கஸ்தூரி, லவங்கப்பட்டை வகை 1க்கு 3 கிராம், சாலாமிஸ்ரி 12 கிராம், சீனா கற்கண்டு 120 கிராம் நுரை நீக்கிச் சுத்தி செய்த கெட்டித் தேன் 60 கிராம், பன்னீர் 120 கிராம், தாழம்பூ திராவகம் 60 கிராம், குங்குமம்பூ 10 கிராம், அகர்கட்டை 1 கிராம்.

செய்முறை:—

நொய்யையும், மாவையும் நெய்யில் வறுத்துக் கொண்டு, வாதுமை பருப்பு முதலிய பருப்பினங்களை நன்றாயரைத்து தூள் செய்து, மற்றவைகளைச் சூரணித்தும் எல்லாம் ஒன்றாகக் கலந்து கொண்டு கற்கண்டில் பன்னீர், தாழம்பூ திராவகம் ஆகியவைகளை விட்டு பாகு காய்ச்சி பதத்தில் மேற்படி சூரணமிட்டு லேகியம் செய்து கொள்ளவும்.

மாத்திரை — 20, 25 கிராம் இரண்டு வேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்:— இந்திரியம் விர்த்தியாம். ஆண்மையும் இரத்த விர்த்தியும் அதிகப்படும்.

46. வேறு வகை

கசகசாவுள்ள போஸ்தக்காய் 1400 கிராம், உரலில் நன்றாயிடித்து இரண்டரைப்படி நீர் வார்த்து ஓரிராப்பகல் ஊறவைத்துப் பிழிந்து சக்கை நீக்கி, உரலில் குத்தி உமிநீக்கிச் சுத்தி செய்து 7.750 கிராம் கோதுமையை அந்த சலத்திலிட்டு நீர் எல்லாம் சுவறின பின் நிழலிலுலர்த்தி அரைத்து மாவாக்கிக் கொள்ளவும். நெய் 840 கிராம் பூரா சருக்கரை 1.120 கிராம், திறமான தேன் 1.120 கிராம், வாதுமை பருப்பு 35 கிராம், மேல் தோல் நீக்கின சுக்குத் தூள் வராகனெடை 25 கிராம், குங்குமப்பூ 2 கிராம்.

செய்முறை:—

மேற்படி மாவை நெய்யில் வறுத்துக் கொள்ளவும், தேனுடன் கொஞ்சந் தண்ணீர் கலந்து சருக்கரையைக் கரைத்துக் காய்ச்சி நுரை நீக்கி யிறக்கி மாவைச் சேர்த்து அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்து நெய் கக்கும் பதத்தில் பருப்பை நன்றாயரைத்து, சுக்குச் சூரணத்துடன் கலந்து அதில் இட்டு நன்றாகக் கிளறி, குங்குமப்பூவை பன்னீரினால் இளகலாயில்லாமல் கெட்டி பதமாயரைத்துச் சேர்த்து நன்றாகக் கிளறி அகலமாகிய பீங்கானிலிட்டு பரப்பிக் கத்தியினால் துண்டுகளாகச் செய்து கொள்ள வேண்டியது.

மாத்திரை — தேக சக்திக்கு தக்க அளவு சாப்பிடலாம்.

உபயோகம்:— இந்திரிய விளைவு அதிகப்படும், நீர்த்துப் போன இந்திரியம் தடிப்பாகும்; தம்பன முண்டாகும்; தேக புஷ்டியுண்டாகும்.

47. வெள்ளை வெட்டை நோய் நிவர்த்தி தாதுவிர்த்தி லேகியம்

கோதுமைமா பலம் 13 கழுகின எள்ளெண்ணெய் பசுவின் நெய் வகை ஒன்றுக்கு 100 கிராம் பரங்கிச்சக்கையை யிடித்து தூளாக்கி வஸ்திர காயஞ் செய்து பாலில் பிட்டவித்து நிழலில் உலர்த்தினது 140 கிராம் வெட்பாலையரிசி, சாலாமிஸ்ரி, சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்கு, லவங்கப்பட்டை, சன்னராஷ்டம், கோரைக் கிழங்கு, பஹமனேசுபேத், இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம் சருக்கரை 200 கிராம்.

செய்முறை:—

நெய்யையும் எள்ளெண்ணையையும் சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றிக் கோதுமை மாவைத் தீய்ந்து போகாமல் பக்குவமாய்

வறுத்துக் கொள்ளவும், சரக்குகளில் சூரணஞ் செய்ய வேண்டியவைகளைச் சூரணித்தும், அரைக்க வேண்டியவைகளை அரைத்தும், மாவுடன் எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து, சருக்கரையில் கொஞ்சம் சலம் விட்டுக் காய்ச்சிப் பாகுபதத்தில் மேற்படி யோகத்தை கொட்டிக் கிளறி ஆறினபின் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை — 12, 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— மேக வியாதி சம்பந்தங்களினாலுண்டான தாது நஷ்டத்தை நிவர்த்தி செய்யும், தாது விர்த்தியாகும், பிரமேகத்தினால் அசுத்த சத்து அதிகரித்துண்டாகிய தாது நஷ்டம் தீரும். மேற்கண்டவைகளுக்கு இது சஞ்சீவியெனச் சொல்லும்படியான அதிவிசேஷமான குணத்தையுண்டாக்குகின்றது.

48. வெட்டை நீக்கிட தாருட்யவிர்த்தினி

முன்சொன்ன விதமாய்ப் பாலில் சுத்தி செய்து பரங்கிச் சக்கைத் தூள் 500 கிராம், நிஷாஸ்தா 350 கிராம், சருக்கரை 700, தேன் 1400 கிராம், நெய் 700 கிராம், வெள்ளைக் குன்றிமணிப் பருப்பு, சாலாமிஸ்ரி, அக்கராகாரம், மேல் தோல் நீக்கின சுக்கு, ரூமிமஸ்தகி, பஹமனேசுருஃ, பஃமனேசுபேத், தூதரிசுபேத், தூதரிசுருஃ, ஏலம், லவங்கப்பட்டை, துத்தி விதை அமுக்கறாக் கிழங்கு, உட்டங்கு விதைப் பருப்பு, பாதரஞ்சு பேயா உலர்ந்தது, கசகசா, சீரகம், மிளகு ஆகிய இவைகளைத் தனித்தனி யிடித்து வஸ்திர காயஞ் செய்த தூள் வகை ஒன்றுக்கு 20 கிராம் இலவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 10 கிராம் மேல் தோல் நீக்கின கொப்பரைத் தேங்காய் 10 கிராம் இதைச் சிறு துண்டுகளாய்ச் செய்து நெய்யில் வறுத்து தூள் செய்து கொள்ளவும்.

செய்முறை:—

சூரணங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவும். சருக்கரையைப் பாகு செய்து பாகுபதத்தில் சூரணங் கொட்டிக் கிளறி தேன் நெய் சேர்த்து பத்திரப்படுத்தவும்.

மாத்திரை — 6, 12 கிராம் இரண்டு வேளையும் 40 நாள் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— மேகரணம், மேகக்கட்டிகள், மேகச்சூலை, மேகவாயு, மேக ஊறல் முதலாகிய பல மேக ரோகங்கள் தீரும். இரத்தவிருத்தியுண்டாகி இந்திரியம் விளைந்து ஆண்மை அதிகப்படும்.

49. மதுஸ் மிகாதி விந்துவாதி மாஜூன்

பாலில் பிட்டவித்து, சுத்தி செய்த பரங்கிப் பட்டைத் தூள் 120 கிராம், மேல் தோல் நீக்கின பாதாம் பருப்பு 120 கிராம், நீர்முள்ளி விதை 75 கிராம், பிஸ்தாப் பருப்பு, சில்கூஜா பருப்பு வகை ஒன்றுக்கு 55

கிராம், சிறு நெருஞ்சி முள், பெரு நெருஞ்சிமுள், நிலப்பனைக் கிழங்கு, தூதரிசுபேத், தூதரிசுருஃப், பூமி சருக்கரைக் கிழங்கு, காவுஜுபொான் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 25 கிராம், பஹமனேசபேத், பஹமனேசுருஃ இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 25 கிராம், முள்ளங்கி விதை, வெட்பாலையரிசி * ஆவாரம் பிசின் வெள்ளேலம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு துலா-1, லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, மேல்தோல் நீக்கின சுக்கு, வெள்ளை மூங்கிலுப்பு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 15 கிராம் போஜிஸ்தான் மிஸ்ரிச் சூரணம் 2 கிராம், மேல் தோல் நீக்கியிடித்துப் பிழிந்த தண்ணீர் விட்டான் கிழங்கு ரசம் ஆழாக்கு-1, முற்றினதும் பருமனான தேங்காய்-1, சருக்கரை பலம் 14.

செய்முறை:—

தேங்காயைக் கண் திறந்து நீர்முள்ளி விதையை அதற்குள்ளிட்டு, திறந்த கண்ணைத் தேங்காய் நாரினால் நன்றாய் மூடி, கோதுமை மாவில் தண்ணீர் விட்டுக் கெட்டியாய்க் குழைத்து தேங்காயின் மேல் சுமார் ஓர் அங்குலம் இருக்கும்படியாக முழுவதும் பூசி பந்தைப் போல் பல தடவை நன்றாய்க் கையினால் உருட்டிச் சுமாரான தீயிலிட்டு எரிக்கவும்.

அப்பொழுது மேல் பூசியிருக்கிற மாவு பற்றி எரிந்துச் சிவந்து போனவுடன் எடுத்து, மாவு, மேலோடு முதலியவைகளை நீக்கித் தேங்காயையும் நீர்முள்ளி விதையையும் வெவ்வேறாய்ப் பிரித்துத் தனித்தனி சூரணித்துக் கொள்ளவும். மற்ற சரக்குகளில் சூரணிக்க வேண்டியவைகளை சூரணித்தும் அரைக்க வேண்டியவைகளை அரைத்தும் முன் சூரணங்கள் முதலாகிய எல்லாவற்றையும் ஒன்றாய் நன்றாகக் கலந்து, சருக்கரைப் பாகு செய்து பாகுபதத்தில் சூரணஞ் சேர்த்துக் கிளறி மாஜூன் செய்து கொள்ளவும்.

மாத்திரை — காலையில் மட்டும் 12, 15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— மேக சம்பந்தமான வியாதிகள் தீரும், இந்திரிய நரம்பு முதலியவைகளிலுள்ள விஷ நீர்களை நீக்கி, இரத்த சுத்தி, இரத்த விருத்தி, இந்திரிய விருத்தி, ஆண்மை முதலியவைகளுண்டாகும்.

50. தீகமோகநாத லேகியம்

யௌவனமானதும் கொழுத்ததுமான சேவலின் மார்பு மாமிசத்தில், எலும்புகளை நீக்கி மாமிச மட்டும் 450 கிராம், பூறா சக்கரை 450 கிராம், கெட்டித் தேன் 125 கிராம், பசுவின் நெய் 70 கிராம், மேல் தோல் நீக்கின பாதாம் பருப்பு 70 கிராம், கஸ்தூரி, குங்குமப்பூ வகைக்கு 2 கிராம்.

---

* இது மதராஸ் மருந்துக் கடைகளில் சின்னியா கொழுந்து என்று வழங்கப்படுகின்றது.

செய்முறை:—

மாமிசத்தை உரலிலிட்டு நைய நன்றாயிடித்துக் கொள்ளவும். தேனையும், சருக்கரையையும் அடுப்பிலேற்றிச் சற்றுச் சூடேறியவுடன் இடித்த மாமிசத்தையிட்டு, துழாவிக் கொண்டு சிறு தீயாக எரித்து வெந்த பின், நெய்யை விட்டு சற்று நேரஞ் சென்று, நன்றாக வெந்து வறுக்கப்பட்ட பதத்தில் பாதாம் பருப்பை நன்றாயிடித்துச் சேர்த்து, பின்பு கஸ்தூரி, குங்குமப்பூ ஆகியவைகளைப் பன்னீர் விட்டரைத்துச் சேர்த்து, ஆறின பின்பு பத்திரப்படுத்தவும்.

மாத்திரை — அரை அல்லது 1 பலம் சாப்பிடலாம்.

உபயோகம்:— இந்திரிய விர்த்தியுண்டாகி, ஆண்மை அதிக பலப்படும், தேகம் இறுகிப் பெருக்கும்.

51. இலகு தீகமோகநாத லேகியம்

கொழுத்ததும் யௌவனமானதுமான சேவல் மாமிசம் 200 கிராம் கொழுப்பையும், சவ்வையும் நீக்க வேண்டியது. ஏலம், லவங்கப்பட்டை, கொத்துமல்லி விதை வகை ஒன்றுக்கு 12 கிராம், தோலுரித்த வெங்காயம், 125 கிராம் சீனிசருக்கரை 1050 கிராம், மேல் தோல் நீக்கின பாதம் பருப்பு, சாராப் பருப்பு வகை ஒன்றுக்கு 100 கிராம், பிஸ்தாப் பருப்பு, சில்கூஜாப் பருப்பு வகை ஒன்றுக்கு 50 கிராம்.

செய்முறை:—

முப்பதுபடி ஜலம் கொள்ளும்படியான ஓர் மண்பாத்திரத்தில் மாமிசத்தையிட்டு, அதன் மேல் ஏலம், லவங்கப்பட்டை, கொத்துமல்லி விதை, வெங்காயம் ஆகியவைகளையிட்டு 5 படி சுத்த சலம் வார்த்து வாய்மூடி, 7 சீலைமண் செய்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரிக்க வேண்டியது. தீ அதிகமானால் பொங்கி ஆவி வெளிப்படும். 2 அல்லது 3 சாமம் எரித்து அப்படியே ஆறவிட்டு நன்றாய்க் குளிர்ந்த பின் திறந்து, கையினால் நன்றாகப் பிசைந்து வஸ்திரத்தினால் வடிகட்டிக் கொள்ள வேண்டியது. இந்த ரசம் தடிப்பாயிருக்க வேண்டும். அல்லது சுமார் முணேகால் படியிருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் முன்போல செய்து பின்னும் எரித்துச் சுண்டக் காய்ச்சிக் கொள்ள வேண்டியது. அந்த ரசத்தில் சருக்கரையைக் கரைத்துப் பாகு செய்து பாகுபதத்தில் பருப்பினங்களை நன்றாயரைத்துச் சேர்த்து லேகியமாகக் கிளறிக் கொள்ளவும்.

மாத்திரை — 12—20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— இந்திரியத்தை அதிகமாய் விளைவித்து ஆண்மையை அதிகப்படுத்தும். தேகங் கொழுக்கும், புஷ்டியுண்டாகும்.

52. மஹா தீகமோக நாதலேகியம்

மூடு கிளிஞ்சல்களை கொதி வெந்நீரிலிட்டு ஆறவிட்டெடுத்து அதனுள்ளிருக்கிற மாமிசம் 1 பங்கு ஆட்டின் கழுத்திறைச்சி 1 பங்கு, இரண்டையும் நன்றாகக் கொந்தி, வேண்டிய முட்டையின் வெள்ளை அம்புலி விட்டுக் குழைத்து தேங்காய், வெங்காயம், லவங்கப்பட்டை, கொத்துமல்லி விதை, பச்சை மிளகாய், கொத்துமல்லிக் கீரை, பூண்டு, மிளகாய் முதலியவைகளை மேற்படி கூட்டிற்குத் தக்க அளவாக யரைத்துச் சேர்த்து, இஞ்சி கொஞ்சம் நறுக்கியிட்டு நன்றாகச் சேர்த்து உண்டைகள் செய்து நெய்யில் வறுத்துக் கொள்ள வேண்டியது.

நல்ல சாதியானதும், யௌவனமும், செவந்ததுமான ஓர் சேவலை, கெட்டியானதும் நன்றாக உலாவித் திரிய கொஞ்சம் விசாலமுமான ஒரு கூண்டிலடைத்து மேற்படி உண்டைகளுடன் கோதுமைமா அல்லது கடலைமா சேர்த்து நெய் விட்டுப் பிசைந்து சேவலிற்குத் தீனி கொடுக்க வேண்டியது. இவ்விதம் நாளொன்றிற்கு 2 அல்லது 3 தடவை கொடுக்க வேண்டும். தண்ணீருக்குப் பதிலாக பால் கொடுக்க வேண்டியது. இவையன்றி வேறு தீனிகள் கொடுத்தல், பெட்டைக் கோழியை அதற்கெதிரில் விடல், மண்ணில் அதன் மூக்கைச் சீய்க்கும்படியாய் வெளியில் விடுதல் ஆகிய கிரியைகள் ஆகா; இவ்விதம் 40 நாள் அல்லது இஷ்டமான வரையில் தீனி கொடுத்து வந்து அறுத்து குடல், கால், உரோமம் முதலியவைகளை நீக்கிச் சுத்தி செய்து, சாதிக்காய், சாதிப்பத்திரி, சீமை மருதணை விதை, குராசானியோமம், மஞ்சள் முள்ளங்கி விதை, சீமை வெள்ளரி விதைப் பருப்பு, நீர்முள்ளி விதை, இசுபகோல் விதை, அமுக்கிராக் கிழங்கு, சடாமாஞ்சில், லவங்கம், ஏலம், ரூமிமஸ்தகி, கருவேலம் பிசின், இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம் கற்பூர வெற்றிலைச் சாற்றை விட்டு 6 மணிநேரம் சாமரைத்து முன் கோழி வயிற்றுகுட் செலுத்தி வாய் முதலாகிய துவாரங்களையெல்லாம் நன்றாகத் தைத்து நெய்யில் வறுத்தெடுத்து, ஆறவிட்டு, எலும்பு முதலாகியவைகளை நீக்கி; மற்றவைகளையெல்லாம் ஒன்றாகப் பொடித்துச் சூரணத்திற்கு ஒன்றரை பங்கு தேனைக் காய்ச்சி நுரை நீக்கி, அந்தச் சூரணத்தை அதிலிட்டு நன்றாகக் கிளறி, வெள்ளி ரேக்கு, கஸ்தூரி, குங்குமப்பூ, பவளம், வகை ஒன்றுக்கு 4 கிராம் தங்க ரேக்கு, அம்பர், பாகஞ் செய்த நல்ல முத்து வகை ஒன்றுக்கு 2 கிராம், ஆகிய இவைகளைத் தனித்தனி பன்னீர் விட்டரைத்துச் சேர்த்துக் கொள்ளவும். மேல் மூடியுள்ள பீங்கான் ஜாடியிலிட்டு, வாயைக் கெட்டியாய் மூடி நாற்பது நாள் வரையில் வெயிலில் வைத்து வந்து, பின்பு உபயோகப்படுத்தவும்.

மாத்திரை — தேகத்திற்குத் தக்கபடி 2, 3, 4 கிராம் சாப்பிடலாம்.

பத்தியம்:— புலாவு, கிச்சடிச் சாதம், மாமிசம், பறவைகளின் மாமிசம், முட்டை, பால், நெய் முதலாகிய பொருள்களை அதிகமாய் உபயோகித்து,

மணவாழ்க்கையைத் தவிர்த்தும் வரவேண்டியது.

உபயோகம்:— இதன் உபயோகத்தை எழுதுவதனால் சிலர் சாதாரணமானது எண்ணுவார்கள். ஆகையால், அவையிவ்விடம் எழுதப்படவில்லை. ஆயினும் புத்திமான்கள் இதைச் செய்து உபயோகித்துச் சுகத்தை அனுபவிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. சுருக்கமாய்ச் சொல்லில் இதனால் பரிசுத்த இரத்தமுண்டாகி தேக வலிமையாகும்.

குறிப்பு

இதைப் பற்றி சந்தேகிப்பவர்கள் 7-நாள் வரையில் மேற்கண்ட தீனியைச் சேவலுக்குக் கொடுத்து அதை வெளியில் விட்டுப் பரீக்ஷித்துக் கொள்ளலாம்.

இந்த அவுடதஞ் செய்வதில் அதிகப் பிரயாசையாயினும் குணம் மிகவும் விசேஷிக்கத்தக்கது. இதனால் கருமேகம், குஷ்டம் முதலியனவும் பலருக்கு சவுக்கியமாகியிருக்கின்றன. இதனுடன் பாகமாய்ச் செய்யப்பட்ட தங்கம், வெள்ளி, வங்கம் முதலியவைகளின் சிந்தூர பஸ்பங்களைச் சேர்த்துச் சாப்பிடலாம்.

ஆனால், இவை வைத்தியர்களுக்குத் தகுமாகையால் இவ்விடம் அவை எழுதப்படவில்லை, இது இச்சென்னையில் ஹிஸ்ஹைனெஸ் நபாபு சாயபு பஹாதுர் அவர்கள் வைத்தியரும், மிகு வல்லமைசாலியானவரும், பண்டித சிரோன்மணியுமான மகாகனம் பொருந்திய குல் ஹக்கீம் என்பவர் முறை (தீக், தீகம் — சேவல்.)

53. மஹா தீகமோகநாதன் (வேறு வகை)

* (இது ஓர் சிறந்த யோகியினால் அனுக்கிரகம் செய்யப்பட்டது.)

நல்ல சாதியும் யௌவனமுமான கருங்கோழி-1, நெல்லிக்காய் கெந்தகம் 175 கிராம், ரசம் 175 கிராம் கொழுத்த ஆட்டுக்கிடாய்களின் கோசங்கள் 140 கிராம். முதலில் ரசத்தையும், கெந்தகத்தையும் சேர்த்து அரைக்கக் கறுப்பு வர்ணமுள்ள சூர்ணமாகும்; பின்பு கோசத்தை நன்றாகக் கொந்தி வெண்ணை போலான பின் முன் மருந்தோடு சேர்த்து, கர்ப்பூர வெற்றிலை ரசத்தால் ஆறு மணி நேரம் அரைத்து 80 மாத்திரைகளாகச் செய்து கொள்ள வேண்டும்.

முன் கோழியை ஒரு விசாலமான கூண்டிலடைத்து, இந்த உண்டையில் 1 நெய்யில் நனைத்துக் கோதுமை மாவில் புரட்டிக்

* இவர் பெயரை வெளியிட உத்தரவில்லை. ஆகையால் யோகியென குறிப்பால் காண்பிக்கப்பட்டது.

கோழிக்குத் தீத்த வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் கொடுக்க வேண்டியது. சேவலுக்குக் கோதுமை மாவு, கோதுமை நொய், பசுவின் நெய், இவையன்றி வேறொன்றுங் கூடாது. பெட்டைக் கோழிகளை அதின் எதிரில் விடலாகாது. பால் அல்லது நீர் குடிப்பாட்ட வேண்டியது. இவைகளுக்குப் பதிலாக நெய் குடிப்பாட்டினாலும் நலமே;

இவ்விதம் 20 நாளானால் சில கோழிகளுக்கு உரோமமெல்லாம் உதிர்ந்து, சுத்தமாகச் சிவந்த மாமிசமாகவே யிருக்கும்; சிலவற்றிற்கு உரோமம் கொஞ்சம் உதிர்ந்தும் கொஞ்சம் உதிராமலுமிருக்கிறது; ஆனால் கொழுத்துத் தடித்ததாய் விடுகிறது. சில சமயம் 40 நாளும் தீனி கொடுக்கலாம்.

அவ்விதம் செய்கையில் கொழுப்பு அதிகப்பட்டுக் கோழி சேதமாகி விடுகிறபடியால், சமயோசிதமாய்ப் பார்த்து நிதானிக்க வேண்டியது. பின்பு அறுத்துத் தலை, கால், குடல், உரோமம் முதலியவைகளைச் சுத்தி செய்ய வேண்டியது; (கொதி வெந்நீரிலிட்டு உரோமம் நீக்கலாது) பின்பு சாதிக்காய், சாதிப்பத்திரி, அரிசித் திப்பிலி, கருவாப் பட்டை, ஏலக்காய், சீமை மருதணை விதை, சடாமாஞ்சில், லவங்கம், முள்ளங்கி விதை, நீர்முள்ளி விதை, பூமி சருக்கரைக் கிழங்கு, கருவேலம்பிசின்; இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 12 கிராம்.

அயச் செந்தூரம், வெள்ளி, பஸ்பம், இரசபஸ்பம், வங்கபஸ்பம் வகை ஒன்றுக்கு 4 கிராம், மேற்படி சூரணங்களையும் இவற்றை ஒன்றாகக் கலந்து கோழி வயிற்றிலடைத்து, கழுத்து, அபானம் முதலாகிய ஸ்தானங்களைச் சந்தில்லாமல் நன்றாக நூலால் தைத்து நெய்யில் வறுத்தெடுத்து ஆறின பின் ஓர் பெரிய தட்டில் வைத்துப் பிரித்து எலும்புகளையெல்லாம் நீக்கி, மாமிசத்தை வேறாகவும், மருந்தை வேறாகவும், செய்து நன்றாக உலர்த்தவும்; உலர்ந்த பின் மாமிசத்தை நன்றாயிடித்து வஸ்திர காயஞ் செய்து முன் மருந்தையும் பொடித்து ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள வேண்டியது.

பின்பு இந்த எடைக்கு மூன்று பங்கு நல்ல தேனைக் காய்ச்சி நுரை நீக்கி யிறக்கிச் சூரணத்தைக் கொட்டிக் கிளறி; குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, அம்பர் முதலியவைகளை அவர் அவர்கள் சக்திக்கேற்ற அளவு பொடித்துப் போட்டுக் கலந்து, ஒரு சாடியில் வைத்து வாய்மூடி பந்தனம் செய்து 40-நாள் வைத்துப் பின்பெடுத்து உபயோகித்துக் கொள்ள வேண்டியது.

மாத்திரை — மூன்று, ஆறு, ஒன்பது கிராம் சாப்பிட வேண்டியது.

ஆகாரம்:— புலாவு, கிச்சடி, நெய், ரொட்டி முதலியவைகளைப் புஷ்டியாகச் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— இந்திரிய விர்த்தி, ஆண்மை; தாது புஷ்டி ஆகிய இவைகள் முற்றிலும் நஷ்டமடைந்தவர்களுக்கு அவை முன்போலவே உண்டாகும். இவையன்றி; மேக ரோகங்கள் முதலிய கொடிய ரோகங்கள் நீங்கும். இதைப் பற்றி அதிகம் எழுத வேண்டியதில்லை. இதைச் செய்பவர்கள் தாங்களே தெரிந்து கொள்வார்கள்.

குறிப்பு

ஆட்டுக் கோசத்திற்குப் பதிலாக, நாக சர்ப்பத்தைக் கொன்று தோலுரித்து, விஷப்பை, பிச்சு முதலியவைகளை நீக்கி அதன் மாமிசத்தைச் சேர்த்து முன்பாகப்படி செய்து சாப்பிட்டு, குஷ்ட முதலிய வியாதிகள் தீர்ந்திருக்கின்றன. மேலும் மேற்கண்ட அவுடதம் சாப்பிடும் போது சூடான தேகிகள் சீமையிலந்தம் பழம்; சீமை அத்திப்பழம் முதலிய கனி வருக்கங்களை உபயோகிக்க வேண்டியது; அப்படி உபயோகிக்கா விட்டால் அதிகப் பிரயோசனத்தைத் தருகிறதில்லை; கப தேகிகள், வாத தேகிகள் ஆகிய இவர்களுக்கு அதிகப் பிரயோசனத்தைத் தந்திருக்கிறது. மேற்கண்ட பஸ்பங்கள் முதலியவைகள் தெரிந்த பண்டிதர்கள் மூலமாக நல்ல பாகமாயிருக்க வேண்டும். இல்லாவிடில் கெடுதியை யுண்டாக்கும்.

54. சுக்கிலவிர்த்தி லேகியம்

ஆண் அடைக்கலாங் குருவிகளை அறுத்துத் தலை, கால், குடல், உரோமம் முதலியவைகளை நீக்கிச் சுத்தி செய்து வெயிலில் 2—3 மணி நேரம் உலர்த்தி நெய்யில் பொன் வருணமாய் வறுத்து எலும்பு முதலியவைகளை நீக்கியிடித்த சூரணம் 150 கிராம், சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், சன்னராஷ்டகம், சிறுதேக்கு, பளிங்கு சாம்பிராணி, கருங் குங்கிலியம், கருவாப்பட்டை, வெட்பாலையரிசி, இந்துப்பு, செங்கத்தாரிப் பட்டை, தேவதாரிப் பட்டை, மரமஞ்சள் இவைகளைத் தனித்தனி இடித்து வஸ்திர காயஞ் செய்த தூள் வகை ஒன்றுக்கு 20 கிராம், நல்ல தேன் 1400 கிராம்.

செய்முறை:—

தேனைக் காய்ச்சி நுரை நீக்கிப் பாகுபதத்தில் சூரணங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கொட்டி நன்றாகக் கிளறி ஆறின பின் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை — 12, 15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— சூலைக்கட்டு, திமிர் வாதம், கிரந்தி, சேஷ்டை, காட்டுச்சூலை, முடக்குவாதம், சில்விஷம், மேக சம்பந்தமான வியாதிகள் தீரும். இரத்தசுத்தி, இரத்தி விர்த்தியுண்டாகி, இந்திரியவிர்த்தி தாதுபுஷ்டி ஆகியவை யுண்டாகும்.

55. விந்துவாதிச் சூரணம்

ஆண் அடைக்கலாங்குருவித் தலை மூளை 30 கிராம், முட்டை மஞ்சட்கரு 30 கிராம், சாலாமிஸ்ரி, சீமை நாயுருவி விதை, சந்நராஷ்டகம், பூமி சருக்கரைக் கிழங்கு, சடாமாஞ்சில், பூலாங்கிழங்கு, பஹமனேசுபேத், பஹமனேசுருஃ இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு பலம் அரை, சிறுநாகப்பூ, போஜிதான்மிஸ்ரி, தூதரிசுருஃ, தூதரிசுபேத், சாதிக்காய், தாளிசப்பத்திரி, குங்குமப்பூ, ரூமிமஸ்தகி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு பலம் 10 கிராம், கஸ்தூரி, அம்பர் வகை ஒன்றுக்கு வராகனெடை 12 கிராம், நல்ல கெட்டித்தேன் 700 கிராம்.

செய்முறை:—

முன் இரண்டு வஸ்துக்களையும் நெய்யில் வறுத்துச் சூரணித்துக் கொள்ளவும். மற்ற சூரணங்களையும், ஒன்றாகச் சேர்த்துத் தேனைக் காய்ச்சி நுரை நீக்கிச் சூரணமிட்டுக் கிண்டி அம்பர், கஸ்தூரி ஆகிய இவைகளைப் பொடித்திட்டு நன்றாக மிஸ்ரமித்துப் பத்திரஞ் செய்ய வேண்டியது.

மாத்திரை — காலையில் 6 கிராம், சாப்பிட்டு அதன் மேல் உடனே கறந்த பசும்பாலில் கொஞ்சம் சீனிசருக்கரையைச் சேர்த்துச் சாப்பிடவும். சீரணசக்தி அதிகம் உண்டாகும். அதற்குத் தக்கபடி பால் அரை, ஒன்று, ஒன்றரை, இரண்டு ஆழாக்குச் சாப்பிட வேண்டியது. பாலுடன் முன்னர் சொல்லியபடி கடலை நீரும் சேர்த்துச் சாப்பிட்டால் அதிக பிரயோசனமுண்டாகும்.

உபயோகம்:— இந்திரியம் அதிகமாயுண்டாகும். சரீரம் ஸ்தூலித்து பலம் உண்டாகும். இது மிகவும் அனுபோகப்பட்டது.

56. சுக்கிலாதி வீரியவிர்த்தி லேகியம்

ஆண் அடைக்கலாங்குருவித் தலைமூளை 7, சாலாமிஸ்ரி 50 கிராம், பருத்திக் கொட்டைப் பருப்பு 35 கிராம், சில்கூஜாப் பருப்பு, கழுவின எள்ளு, சீமை நாயுருவி விதைத் தூள், அரிசித் திப்பிலித் தூள் வகை ஒன்றுக்கு 20 கிராம், முள்ளங்கி விதை, மஞ்சள் முள்ளங்கி விதை, பூமி சருக்கரைக் கிழங்கு இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 15 கிராம் நல்ல கெட்டித்தேன் 1050 கிராம்.

செய்முறை:—

மூளைகளை நெய்யில் வறுத்துச் சூரணித்தும், மற்ற சரக்குகளில் அரைக்க வேண்டியவைகளை அரைத்தும் எல்லாச் சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து, தேனைக் காய்ச்சி நுரை நீக்கிப் பதத்தில் சூரணத்தையிட்டுக் கிளறி வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை — 25, 35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— இந்திரிய விர்த்தி அதிகப்பட்டு ஆண்மை அதிகமாகும். தேகம் வலுக்கும்.

57. இலகு அமிர்த விந்துவாதி

புதிதாய்க் கறந்த பசும்பால் படி-2, குழித்தைலம் இறக்கின 105 கிராம் வாலுழுவையரிசித் தைலம் பலம் 30, பசுவின் நெய் பலம் 30, வெள்ளி ரேக்கு 30, தங்க ரேக்கு 10.

செய்முறை:—

* புதன்கிழமையில் இரும்பு சட்டியை வெளுக்கும் படியாக நன்றாகத் தேய்த்துக் கழுவி, பாலை விட்டு அடுப்பேற்றி இலந்தை, நாரத்தை, எலுமிச்சை ஆகிய இவைகளின் ஓர் வகை விறகால் சிறு தீயாக எரிக்கையில் கைவிடாது துழாவிக் கொண்டேயிருக்க வேண்டியது. (கைவிட்டால் ஏடு விழும்) அப்படிச் செய்வதால் பாலெல்லாம் வற்றிப் பால்கவ்வா ஆகிவிடும். பின்பிறக்கி மற்றவைகளையும் இதிற் சேர்த்துக் கிளறிக் கொள்ள வேண்டியது.

மாத்திரை — 12, 20 கிராம் சாப்பிடலாம். தேகசக்திக்குத் தக்கபடி யின்னும் அதிக அளவாகவும் சாப்பிடலாம்.

உபயோகம்:— நல்ல இரத்தவிர்த்தியுண்டாகி, இந்திரியவிர்த்தி ஆண்மை முதலியவை அதிகப்படும். இதன் உபயோகம் அநேகம். சாப்பிடுகிறவர்கள் தாங்களே அறிந்து கொள்வார்கள்.

குறிப்பு

இந்த லேகியத்தில் வெள்ளி முதலியவைகளின் பஸ்பங்கள், செந்தூரங்கள் சேர்த்துக் கொடுத்து அதிக குணங் காணப்பட்டிருக்கிறது.

58. அமிர்த விந்துவாதி லேகியம்

புதிதாய்க் கறந்த பசும்பால் படி இரண்டரை, உள் விதை நீக்கிய புதிதான பேரீச்சங்காய் 70 கிராம், வாதுமைப் பருப்பு, சில்கூஜாப் பருப்பு, பிஸ்தாப் பருப்பு, சாரப்பருப்பு, வகை ஒன்றுக்கு 35 கிராம், நீர்முள்ளி விதை 30 கிராம், சன்னராஷ்டகம், பூமி சருக்கரைக் கிழங்கு, இவைகளின் தூள் ஒன்றுக்கு 20 கிராம், தோல் நீக்கியிடித்துப் பிழிந்த தண்ணீர் விட்டான் கிழங்கின் ரசம் ஆழாக்கு-1, சீனிசருக்கரை 1050 கிராம்.

---

* இது அந்தத் தினத்திலதான் ஏன் செய்ய வேண்டு மென்கிற காரணம் செம்மையாய் விளங்கவில்லை; ஆனால் மற்ற தினங்களில் செய்து பார்த்ததில் அவ்வளவு குணங் காணவில்லை.

செய்முறை:—

பாலில் சருக்கரையையிட்டுத் தண்ணீர் விட்டான் கிழங்கு ரசத்தையும் விட்டு துழாவிக் கொண்டே சிறுதீயாக எரித்துப் பால் உலர்ந்து கவ்வாவானவுடன் கர்ச்சூரத்தைப் பாலில் வேக வைத்து அந்தப் பால் விட்டே அரைத்து, பருப்பினங்களையும் நன்றாக மெல்லியதாக அரைத்து, மற்ற சரக்குகளையும் சூரணித்து எல்லாம் ஒன்றாகச் சேர்த்து மேற்படி கவ்வாவுடன் இச்சேர்வையைக் கூட்டிக் கிளறி, லேகியம் போல் செய்துக் கொள்ளவும்.

மாத்திரை — 12, 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— கனவில் விந்து வெளியாதல் விரைவில் விந்து வெளியாதல் குணமாகும். நீற்றிருக்கிற இந்திரியம் தடித்துக் கெட்டியாம். இந்திரிய விர்த்தியுண்டாகி ஆண்மை அதிகமாகும்.

(இது மிகவும் அனுபோகப்பட்டது.)

59. மஹா அமிர்த விந்துவாதி லேகியம்

புதிதாகக் கறந்த பசும்பால் படி ஒன்றரை, நல்ல கெட்டித் தேன் 250 கிராம், * தரஞ்சபீன், (Manna of the desert) சீனி சருக்கரை வகை ஒன்றுக்கு 140 கிராம், பஹமனேசுபேத், பஹமனேசுருஃ, பூனைக்காலி விதைப் பருப்பு, இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், பூமி சருக்கரைக் கிழங்குத் தூள், வாதுமைப் பருப்பு, சில்கூஜாப் பருப்பு, பிஸ்தாப் பருப்பு இவை வகை ஒன்றுக்கு 30 கிராம், பூலாங்கிழங்கு, சாதிப்பத்திரி வகை ஒன்றுக்கு 12 கிராம், குங்குமப்பூ 9 கிராம், கஸ்தூரி 6 கிராம், அம்பர் 9 கிராம்.

செய்முறை:—

பாலில் தேன், தரஞ்சபீன், சீனிசருக்கரை ஆகிய மூன்றையுங் கலந்து சற்றுக் காய்ச்சி, மெல்லிய சீலையில் வடிகட்டிப் பின்பு அடுப்பேற்றித் துழாவிக் கொண்டே காய்ச்சி, கவ்வா செய்து கொள்ள வேண்டியது; மற்ற சரக்குகளிற் சூரணம் செய்ய வேண்டியவைகளைச் சூரணித்து, குங்குமப்பூ முதலியவைகளைப் பன்னீர் விட்டரைத்து எல்லாம் ஒன்றாகக் கலந்து மேற்படி கவ்வாவில் சேர்த்து நன்றாகக் கிளறிக் கொள்ள வேண்டியது.

மாத்திரை — 6, 12 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்:— பீஜம், குண்டிக்காய்கள் ஆகிய இவைகளின் துர்ப்பலத்தை நீக்கிப் பலப்படுத்தும், துரிதஸ்கலிதத்தை நிவர்த்தி செய்யும், இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி ஆண்மையை அதிகப்படுத்தும்.

---

* தரஞ்சபீன் கிடைக்காவிட்டால், மேனா சேர்த்துக் கொள்ளவும். மேனாவிற்குப் பதில் கற்கண்டும் சேர்த்துக் கொள்ளலாம்.

60. இலகிந்திரிய விர்த்தினி

முட்டை மஞ்சட்கரு-3, வெண்ணிறமான வெங்காயச் சாறு, நல்ல தேன் வகை ஒன்றுக்கு 35 கிராம், எடுத்து ஒன்றாகச் சேர்த்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து நீர் சுண்டின பதத்தில் இறக்கி ஆறவிட்டுச் சாப்பிடவும். இவ்விதம் நாற்பது நாள் காலையில் மட்டும் சாப்பிட வேண்டியது.

உபயோகம்:— இந்திரியம் அதிகமாய் விளைந்து ஆண்மை அதிகப்படும்.

பத்தியம் — புளி, பெண் உறவு அவசியம் நீக்க வேண்டியது.

61. விந்துவாதி நாராயணி லேகியம்

தண்ணீரில் ஊறவைத்து மேல் தோல், உள்நரம்பு ஆகிய இவைகளை நீக்கியிடித்துப் பிழிந்த தண்ணீர் விட்டான் கிழங்கு ரசம் படி அரை, சாதிப்பத்திரி 6 கிராம், பஹமனேசுபேத் தூள், மேல் தோல் நீக்கின சுக்குப் பொடி வகை ஒன்றுக்கு 4 கிராம், சில்கூஜா பருப்பு, முற்றல் தேங்காய், சடாமாஞ்சில், சிறு நெருஞ்சி முள்ளு, லவங்கப்பட்டை, நாயுருவி விதை வகை ஒன்றுக்கு துலா ஒன்றரை, பிஸ்தா எண்ணெய் 45 கிராம், ஆண் உடும்பின் மாமிசத்தை உலர்த்தி, நெய்யில் வறுத்துப் பொடி செய்தது 45 கிராம், சீனிசருக்கரை 15 பலம்.

செய்முறை:—

கிழங்கு ரசத்தில் சருக்கரையை விட்டு அடுப்பேற்றிப் பாகுபதத்தில் பருப்பினங்களை அரைத்தும், சூரணம் செய்ய வேண்டியவைகளைச் சூரணித்தும், மாமிசத்தின் சூரணத்தையும் எல்லாம் ஒன்றாய் சேர்த்துப் பாகில் இட்டு நன்றாய்க் கிளறி இறக்கும் போது பிஸ்தா எண்ணெய் விட்டு ஆறின பின்பு பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

மாத்திரை — ஒன்று, ஒன்றரை சாப்பிடவும்.

உபயோகம்:— நல்ல இரத்தம் பெருகி விந்து விளைந்து போக சக்தி அதிகப்படும்.

குறிப்பு

இது சாப்பிடும் போது அதிக பசி தீபனமுண்டாகும். ஆகையால் பொலவு, கிச்சடி, நெய், மஸ்கூத் ஹல்வா, பாதம் அல்வா முதலாகியவைகளை அதிகம் உபயோகப்படுத்த வேண்டியது. அவற்றிற்குச் சக்தியில்லாதவர்கள் இதைச் சாப்பிடுகிறது உத்தமமன்று.

62. கர்ச்சூராதி வீரிய விர்த்தினி

சதையுள்ளதும், விதை நீக்கினதுமான பேரீச்சங்காய் 15 பலம், பசும்பால் படி முக்கால், நிஷாஸ்தா, கடலை மாவு வகை ஒன்றுக்கு

ஏழரை பலம், பாதம் பருப்பு, பிந்தபருப்பு, சில்கூஜாப் பருப்பு, அக்ரோட் பருப்பு, தோல் நீக்கி வகை ஒன்றுக்கு பலம்-2, சீனிசருக்கரை பலம்-25, நெய் பலம்-பதினைந்து.

செய்முறை:—

கர்ச்சூரக்காய்களைப் பாலிலிட்டு நன்றாய் வேக வைத்து அரைத்துக் கொள்ள வேண்டியது. பின்பு கடலை மாவு, நிஷாஸ்தா ஆகிய இரண்டையும் ஓட்டில் அரை வறுவலாக வறுத்து எடுத்துக் கர்ச்சூரத்தையும் சேர்த்துப் புரட்டி, பாகத்திற் கண்டிருக்கிற நெய்யில் தீய்ந்து போகாமல் வறுத்துக் கொள்ள வேண்டியது. பின்பு சருக்கரையைப் பாகு செய்து பதத்தில் முன் பக்குவப்படுத்தினதையிட்டு கிளறி, பருப்பினங்களை நைய நறுக்கியிட்டுப் புரட்டியிறக்கிக் கொள்ள வேண்டியது.

மாத்திரை — 12, 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— விந்து ஊறும், தேகபுஷ்டி, தேகபலம், ஆத்மசக்தி முதலியவையுண்டாகும்.

63. கர்ச்சூர யோக விர்த்தினி

உள்விதை நீக்கி, உலர்த்தியிடித்த பேரீச்சங்காய்ச் சூரணம், கருவேலம் பிசின் நெய்யில் வறுத்து இடித்த தூள், சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்கை மேல் தோல் நீக்கி, பாலில் வேக வைத்து உலர்த்தியிடித்த தூள், வகை ஒன்றுக்கு 10 பலம், பாதம் பருப்பு, சாரப்பருப்பு, கொப்பரைத் தேங்காய், இவற்றில் தோல் போக்க வேண்டியவைகளின் தோலை நீக்கி வகை ஒன்றுக்கு ஒன்றரை பலம், மேல் தோல் நீக்கின சுக்கு, லவங்கப்பட்டை, ஏலம், சந்நராஷ்டம், அக்கிராகாரம், மிளகு, அரிசித் திப்பிலி, லவங்கம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 5 கிராம், சீனிசருக்கரை 400 கிராம், தேன் தேவையான அளவு.

செய்முறை:—

தேனையும், சருக்கரையையும், பாகு செய்து பதத்தில் பருப்பினங்களை நன்றாயரைத்தும்; பாகத்தில் பின் கண்டிருக்கிற சூரணங்களையும் முன்மூன்று சூரணங்களோடு சேர்த்துப் பாகிலிட்டுக் கிளறியிறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை — 12 கிராம், 25 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்:— இரத்த விர்த்தியையும், ஆண்மையையும் அதிகப்படுத்தித் தேகத்தை வலுக்கச் செய்யும்.

64. இரத்தாதி யிந்திரிய விர்த்தினி

சாதிக்கோழி முட்டை 12, தண்ணீர் விட்டு வேக வைத்து மஞ்சட் கருக்களையெடுத்துக் கொள்ளவும். மெல்லிய கோதுமை நொய் 100 கிராம், இதை நெய்யில் வறுத்துக் கொள்ள வேண்டியது. ஏலக்காய்த் தூள், முள்ளங்கி விதைத் தூள், வெங்காய விதைத்தூள், பாதாம் பருப்பு, பிஸ்தா பருப்பு, பிந்தஃ பருப்பு, கொப்பரைத் தேங்காய், விதையில்லாத் திராக்ஷை, விதை நீக்கின பேரீச்சங்காய் வகை ஒன்றுக்கு 30 கிராம், இவற்றில் பாதம் பருப்பு முதலியவைகளை அம்மியில் நன்றாய் அரைத்து, கருக்கள், சூரணங்கள் ஆகிய இவைகளோடு கையினால் நன்றாய் மிஸ்ரமித்துக் கொள்ளவும். சருக்கரை 400 கிராம், நெய் 250 கிராம்.

செய்முறை:—

சருக்கரையைப் பாகு செய்து, பாகுபதத்தில் மேற்படி கலவையைக் கொட்டிக் கிளறி பதமான பின் நெய்யையும் சேர்த்து இறக்கி ஆறின பின் ஜாடியில் வைக்கவும்.

மாத்திரை — 35 கிராம், 55 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— இரத்த விர்த்தியுண்டாகி தேகபுஷ்டி, தேகபலம், இந்திரியவிர்த்தி முதலியனவுண்டாகும். தாது புஷ்டியுண்டாகும்.

65. சிற்றண்ட விந்துவாதி லேகியம்

முட்டை மஞ்சட்கரு 4, மேல் தோல் நீக்கின கொப்பரைத் தேங்காய் 15 கிராம், முள்ளங்கி விதை 15 கிராம், குராசானி ஓமம் 20 கிராம், நல்ல கெட்டித்தேன் 25 கிராம்.

செய்முறை:—

ஈயம் பூசின செம்புப் பாத்திரத்தில் கருவை விட்டு அடுப்பேற்றி, சிறு தீயாயெரித்து, கருக்கள் குழம்பாகி கெட்டியான பின்; தேங்காயை அரைத்து, முள்ளங்கி விதையில் அரைப் பங்கை வறுத்தும் அரைப் பங்கை வறுக்காதும் ஓமத்தோடு சேர்த்திடித்து வஸ்திர காயம் செய்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து, முன் கருவிலிட்டுத் தேன் வார்த்துக் கிளறி இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை — காலையில் அரைவாசி மாலையில் அரைவாசி சாப்பிடவும். மறுநாள் புதிதாகச் செய்து கொள்ள வேண்டும். இவ்விதம் 20, 30, 40 நாட்கள் சாப்பிடவும்.

வாரத்திற்கோர் தடவை பன்னீர்ப்பூக்கியாழம் பேதிக்குச் சாப்பிடவும்.

உபயோகம்:— ஆச்சரியப்படத் தக்கவிதமாய் இந்திரிய நஷ்டத்தைத் தீர்க்கும், ஆண்மை அதிகப்படும். (இதன் உபயோகம்) அதிகம்; இவ்விடம் எழுதவில்லை; செய்து சாப்பிடுகிறவர்களே தெரிந்து கொள்ளுவார்கள்.

66. மேகாதி யோஷ்ண நிவாரணி

சிறு நெருஞ்சியைச் சமூலமும் இடித்துப் பிழிந்த சாறு 5 பங்கில், ஒரு பங்கு நெருஞ்சில் முள்ளையிட்டு வெய்யிலில் வைத்து; ரசம் சுண்டின பின், மறுபடியும் அவ்வளவே அந்தச் சாறு விட்டுச் சுண்ட வைக்கவும். இவ்விதம் 4, 5 தடவை செய்துலர்த்தி யிடித்த சூரணம் 5 பங்கு, தோல் நீக்கின சுக்குத் தூள் - 2 பங்கு, அக்கிராகாரத் தூள் 1 பங்கு, சீனிசருக்கரை - 8 பங்கு.

செய்முறை:—

சருக்கரையைப் பாகு செய்து சூரணங்களையெல்லாம் சேர்த்து இட்டு லேகியம் செய்து கொள்ளவும்.

மாத்திரை — 12 கிராம் ஆரம்பித்து இரண்டு நாளைக்கோர் தடவை 1 கிராம் அதிகப்படுத்திச் சாப்பிட்டு வரவேண்டியது.

உபயோகம்:— இந்திரிய நஷ்டந் தீரும். ஆண்மை அதிகப்படும். வெட்டைச் சூடுகள் முதலியனவும் அதைச் சேர்ந்த மற்ற வியாதிகளும் தீரும்.

67. மல்கோபா மஹா குலகலிநி

தேர்ந்து பழுத்ததும் அதிக மதுரமானதுமான மல்கோபா பழச்சதை 2 800 கிராம், தோல் நீக்கின சுக்கு; பஹமனேசுபேத்; பஹமனேசுருஂ; பூமி சருக்கரைக் கிழங்கு; நிலப்பனைக் கிழங்கு; இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 60 கிராம், அரிசித் திப்பிலி; சந்நராஷ்டகம், இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 5 கிராம், சாலாமிஸ்ரி; வாதுமைப் பருப்பு; பரங்கிச் சக்கை, மூலாம்பழ விதைப் பருப்பு, கொட்டிக் கிழங்கு; பேரீச்சங்காய் (விதை நீக்கினவை) வகை ஒன்றுக்கு 60 கிராம், சீனிசருக்கரை 1 கிலோ, நல்ல கெட்டித்தேன் 300 கிராம் பசுவின் நெய் 500 கிராம், பசும்பால் 1 படி.

செய்முறை:—

மாம்பழச் சதையில் முக்கால் பங்கு பாலை விட்டு நன்றாகப் பிசைந்து மெல்லிய சீலையில் வடிகட்ட வேண்டியது. அந்தத் திப்பியில் மறுபடியும் கொஞ்சம் பால் விட்டுப் பிசைந்து பிழிய வேண்டியது. இவ்விதம் திப்பியில் சத்து கொஞ்சமும் இல்லாமல் பால் விட்டுப் பிசைந்து ரசத்தையெடுத்துக் கொண்டு திப்பியை நீக்கிவிட வேண்டியது. இவ்விதம் எடுத்த ரசத்தில்; சருக்கரை; தேன் ஆகியவைகளை விட்டுக் காய்ச்சி பாகுபதமான பின்; சரக்குகளில் அம்மியில் அரைக்க வேண்டியவைகளை

அரைத்தும் உரலில் இடித்துச் சூரணம் செய்ய வேண்டியவைகளைச் சூரணித்தும் ஒன்றாக கலந்து மேற்படி பாலில் சேர்த்து நன்றாகக் கிளறி நெய்யும் விட்டு இறக்கி ஆறினபின் ஜாடியில் வைத்துப் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை — 20, 30 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— அதிக மதுரமாகவும் மனதிற்கு அதிகப் பிரியமாகவுமிருக்கும், இரத்த சுத்தி யுண்டாகி இந்திரிய நஷ்டந் தீரும்; ஆண்மை பலப்படும்.

குறிப்பு

நல்ல தினுசு மாம்பழம் எந்த வகைகளிலும் செய்து கொள்ளலாம். பால் இன்னும் அதிகமாகவும் சேர்த்துக் கொள்ளலாம்.

68. ஹம்மஸ் விந்துவாதி லேகியம்

400 கிராம் கடலைப் பருப்பை எருமைப்பால் அரைபடி இட்டுக் காய்ச்சிச் சுண்டின பின் இரண்டாந் தடவையும் முன்போலவே கடலையில் அரைப்படி பால் விட்டுக் காய்ச்சிச் சுண்டினபின் 3ம் தடவையும் அரைத்து பால் விட்டுச் சுண்டினபின்; நெய்யில் வறுத்துத் தூள் செய்து 175 கிராம் வாதுமைப் பருப்பு; பிஸ்தாப் பருப்பு; முந்திரிப் பருப்பு; பருத்தி விதைப் பருப்பு; முருங்கை விதைப் பருப்பு; தோல் நீக்கின தேங்காய்; வகை ஒன்றுக்கு 35 கிராம். திராக்ஷை 60 கிராம், குங்குமப்பூ 1 கிராம், கஸ்தூரி 1 கிராம், சருக்கரை 525 கிராம், நெய் 175 கிராம்.

செய்முறை:—

பருப்பினங்களை நெய்யில் வறுத்துத் தூள் செய்து கொள்ளவும்; சருக்கரையைப் பாகு செய்து பருப்புகளின் சூரணத்தைக் கொட்டிக் கிளறி; பதத்திலிறக்கி நெய் வார்த்து, கஸ்தூரி, குங்குமப்பூ, ஆகிய இவைகளைப் பன்னீர் விட்டரைத்துச் சேர்த்து இறக்கிக் கொள்ள வேண்டியது.

மாத்திரை — 12 கிராம், 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— இரத்தவிர்த்தி யுண்டாகி; இந்திரிய நஷ்டந் தீரும்; தேகபுஷ்டி; தேகபலம் ஆகியவையுண்டாகும்.

69. சிற்றண்ட சிந்தாமணி லேகியம்

கோழி முட்டையின் வெள்ளை அம்புலி 30, இவற்றை ஒரு பாத்திரத்திலிட்டு 4 அல்லது 5 மூங்கில் பத்தைகளை மத்தைப் போல் கட்டிக் கொண்டு நன்றாய்க் கடைய வேண்டியது. பசுவின் நெய் 35

கிராம் விட்டு அடுப்பேற்றி மிகவும் சிறுதீயாக எரித்து மேற்படி மத்தால் கடைந்து கொண்டிருக்க வேண்டியது. பின்பு சீனிசருக்கரை 500 கிராம், வேறே பாகு செய்து அதில் விட்டுக் கிளறி, லவங்கப்பட்டை, சாதிப்பத்திரி, குங்குமப்பூ, இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 4 கிராம், ஏலக்காயை யிடித்து வஸ்திர காயம் செய்த தூள் 2 கிராம், பூமி சருக்கரைக் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, சாலாமிஸ்ரி, இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 20 கிராம். இவைகளையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து மேற்படி பாகத்தில் கூட்டி நன்றாய் வெந்து பக்குவமான பின் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை — 12 அல்லது 20 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்:— இரத்தவிருத்தி அதிகமாகி, இந்திரிய நஷ்டந் தீர்ந்து ஆண்மை அதிகப்படும்; மனதைச் சந்தோஷப்படுத்தும். இது மிகவும் உபயோகமுள்ளது.

70. ஆண்மை ஹீன நிவாரணி

வெள்ளை நிறமான வெங்காயத்தை இடித்துப் பிழிந்த ரசம் 2 பங்கு, உயர்ந்த தேன் 2 பங்கு; இரண்டையும் சேர்த்து அடுப்பில் வைத்து மிகவும் மெதுவாயெரித்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி ஆறினபின் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை — 30 அல்லது 45 கிராம் படுக்கைக்குப் போகும் போது சாப்பிடவும்.

உபயோகம்:— இந்திரிய நஷ்டந் தீர்ந்து; ஆண்மை அதிகப்படும் மணவாழ்க்கைக்குப் பின் உண்டாகும் சோர்வு துர்ப்பலம், ஆயாசம், மற்ற சோர்வு முதலியன தீரும். இது குளிர்ச்சியான தேகிகளுக்கு மிகவும் உபயோகமுள்ளது.

குறிப்பு

உடலுறவிற்குப் பின் தாகத்திற்கு தண்ணீர் சாப்பிடுகிற வழக்கம் அனேகருக்குண்டு. அதனால் பல வியாதியுண்டாக இடமுண்டு, ஆனால், இந்த ஷர்பத்தைச் சாப்பிடுவதனால் மேற்கண்ட வியாதிகள் நீங்குவதுமன்றி (முன்னிருந்த பலம் வந்து விடும்) எவ்வித வியாதியும் உண்டாகாமல் தடுக்கும் மேலும் இதன் பயன் பல உண்டு.

71. காஜராண்ட யோக போக விருத்தி மாஜூன்

முழு முட்டையைத் தண்ணீரிலிட்டு வேக வைத்தெடுத்து அதற்குள்ளிருக்கிற மஞ்சட்கரு 840 கிராம், மஞ்சள் முள்ளங்கிக் கிழங்கு, (மேல் தோல், உள்நரம்பு முதலியன சீவின பின்) 950 கிராம், அரைப்படி

பாலில் நன்றாய் வேக வைத்துக் கையினால் பிசைந்து கடினமாகியவைகளை நீக்கிப் பாலுடன் அரைத்துக் கொள்ள வேண்டியது. கோதுமை நொய் பலம் 150 கிராம், இதனை நெய்யில் சிவக்க வறுத்துக் கொள்ள வேண்டியது, மேல் தோல் நீக்கின சுக்கு, வால் மிளகு, ஏலக்காய், முள்ளங்கி விதை, வெங்காயவிதை, சாதிக்காய், சாதிப்பத்திரி, பூலாக்கிழங்கு இவைகளைத் தனித்தனி யிடித்து வஸ்திர காயஞ் செய்த சூரணம் வகை ஒன்றுக்கு 30 கிராம், பாதம் பருப்பு, பிஸ்தாப் பருப்பு, அக்றோட் பருப்பு, பிந்தஃ பருப்பு, கொப்பரைத் தேங்காய், கழுகின எள், சாலாமிஸ்ரி ஆகிய இவற்றில் மேல் தோல் நீக்க வேண்டியவைகளை மேல்தோல் நீக்கி வகை ஒன்றுக்கு 35 கிராம், தனித்தனி அம்மியில் நன்றாய் அரைத்து முன் தயார் செய்தவைகளோடு சேர்த்து நன்றாய்க் கையினால் மிஸ்ரமித்துக் கொள்ளவும். நல்ல கெட்டித் தேன் 700 கிராம், நெய் 700 கிராம், சீனிசருக்கரை 700 கிராம், பசும்பால் அரை படி.

செய்முறை:—

பாலில் சருக்கரையைக் கரைத்துத் தேனையும் விட்டு அடுப்பேற்றிக் காய்ச்சிப் பாகுபதத்தில் முன்சேர்வையையிட்டு நன்றாய்க் கிளறி நெய் விட்டு இறக்கிக் கொள்ள வேண்டியது.

மாத்திரை — 12 அல்லது 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:— பரிசுத்தமான இரத்தவிருத்தி யுண்டாகும். ஆத்ம சக்தி பலப்படும், தேக நிறமாறும், முகவசீகரமுண்டாகும். கண்ணிற் கொளியுண்டாகும், மன ஊக்கம், சந்தோஷம் முதலியன உண்டாகும்.

72. வீந்துவாதி மாஜூன்

பாதம் பருப்பு 70 கிராம், அக்றோட் பருப்பு 70 கிராம், தேவதாரு விதைப் பருப்பு, பிந்தஃப் பருப்பு, கசகசா பிஸ்தாப் பருப்பு, புதிதான முற்றல் தேங்காய், கழுவின எள்ளு, பேரீச்சம் பழச்சதை, வகை ஒன்றுக்கு 35 கிராம், தூதரிசுபேத், தூதரிசுருஃ, சீமை நாயுருவி விதை, மஞ்சள் முள்ளங்கி விதை, வெங்காய விதை, (ஷல்கம்) Turnip விதை, பஹமனே சுபேத், பஹமனேசுருஃ, மேல் தோல் நீக்கின சுக்கு, அரிசித் திப்பிலி, சிறுநாகப்பூ, பருப்புக் கீரை விதை, லவங்கப்பட்டை, அலிஸி விதை, சந்நராஷ்டகம் இவைகளைத் தனித்தனியிடித்து வஸ்திர காயஞ் செய்த தூள் வகை ஒன்றுக்கு 35 கிராம். உயர்ந்த தேன் வீசை 2 கிலோ.

செய்முறை:—

பருப்பினங்களில் தோல் நீக்க வேண்டியவைகளின் தோலை நீக்கி நிறுத்தெடுத்து, தனித்தனி நன்றாய் அரைத்துச் சூரணங்களோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். பின்பு தேனைக் காய்ச்சி நுரை நீக்கியிறக்கிச் சூரணத்தைக் கொட்டிக் கிண்டிக் கொள்ளவும்.

மாத்திரை — 12 கிராம் அல்லது 20 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்:— இந்திரிய கருவினில் வறட்சி யதிகரித்து அல்லது வேறு காரணங்களினால் அவை துர்ப்பலப்பட்டு உண்டான தாதுநஷ்டம் தீரும், இந்திரியம் அதிகமாயுண்டாகி ஆண்மை அதிகப்படும்.

73. இலகு விந்துவாதிலுபூப் லேகியம்

பாதாம் பருப்பு, அக்றோட் பருப்பு, கொப்பரைத் தேங்காய், பிந்தஃ பருப்பு, சில்கூஜா பருப்பு, பிஸ்தாப் பருப்பு, இவற்றில் தோல் நீக்க வேண்டியவைகளின் தோலை நீக்கி வகை ஒன்றுக்கு 35 கிராம். சாரப்பருப்பு 70 கிராம் இவைகளை நன்றாய் மெல்லியதாய் இடித்துக் கொள்ள வேண்டியது. லவங்கப்பட்டை, சிற்றரத்தை, மேல் தோல் நீக்கின சுக்கு, ஆளிவிதை, வெள்ளை பஹமன், செகப்பு பஹமன், வெள்ளை தூதரி, சிகப்பு தூதரி இவைகளைத் தனித்தனியிடித்து வஸ்திர காயஞ் செய்த தூள் வகை ஒன்றுக்கு 20 கிராம்; உலர்ந்த பொதினாயிலைச் சூரணம் 12 கிராம், மிளகு, அக்கிரகாரம்; சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம் இவற்றைத் தனித்தனி இடித்து வஸ்திர காயம் செய்த சூரணம் 3 கிராம், சீனிசருக்கரை 1200 கிராம், திறமான தேன் 1200 கிராம்.

செய்முறை:—

தேனையும் சருக்கரையையுங் கலந்து பாகுசெய்து, லவங்கப்பட்டை முதல் லவங்கம் ஈறாகவுள்ள சூரணங்களையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து மிஸ்ரமித்துப் பாகில் கொட்டிக்கிளறி, பாதம்பருப்பு முதலாகிய பருப்பினங்களையும் சேர்த்து நன்றாய் மிஸ்ரமித்த பின் இறக்கிக் கொள்ள வேண்டியது.

மாத்திரை- 12, அல்லது 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இந்திரிய விளைவுண்டாகும், மூத்திரக்குண்டிக்காய்கள், நீர்ப்பை, ஆண்மை ஆகியவைகள் மிகவும் பலப்படும்.

74. சீத விந்துவாதி லுபூப் லேகியம்

கழுவின எள், சுரைவிதை, முலாம்பழவிதை, வெள்ளரிவிதை, சீமை வெள்ளரிவிதை, தர்பூஜிவிதை, இவற்றின் பருப்பு வகை ஒன்றுக்கு 35 கிராம், சாலாமிஸ்ரி, பூமிசருக்கரைக்கிழங்கு, இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 25 கிராம், சருக்கரை 350 கிராம், தரஞ்சபீன் 175 கிராம் நல்ல தேன் 175 கிராம் கசகசா 250 கிராம் இதை ஓரிரவு ஊற வைத்துக் காலையில் அரைத்துப் பிழிந்து வடிகட்டிப் பின்பு எடுத்துக் கொள்ளவும்.

செய்முறை-

கசகசாப்பாலில், சருக்கரை, தரஞ்சபீன், தேன் ஆகியவைகளை விட்டுப் பாகுசெய்து, அதில் பருப்பினங்களை அரைத்துக் கலக்கி சாலாமிஸ்ரி முதலியவைகளையும் சேர்த்துக் கிளறிக் கொள்ளவும்.

மாத்திரை- 12 கிராம், அல்லது 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- சூடாதிக்கத்தினால் உண்டாகிய இந்திரிய நஷ்டம், ஆண்மைக்குறைவு ஆகியவை தீரும்.

குறிப்பு

பருப்பினங்களை அரைத்துப் பால்பிழிந்தும் செய்து கொள்ளலாம்.

75. மஹாவிந்துவாதி லூபூப் லேகியம்

பாதாம்பருப்பு, பிஸ்தாப்பருப்பு, அக்றோட்பருப்பு, சில் கூஜாபருப்பு, பருத்தி விதைப்பருப்பு, சாரப்பருப்பு, கசகசா, கழுவின எள். இவற்றுள் மேல்தோல் நீக்க வேண்டியவைகளின் தோலை நீக்கி வகை ஒன்றுக்கு 35 கிராம், மஞ்சள் முள்ளங்கிவிதை, முள்ளங்கிவிதை, முருங்கைவிதைப்பருப்பு, சிறுகாஞ்சோரிவிதை, நாயுருவி விதை ஆவாரை விதை, வெட்பாலையரிசி, கோதுமை நொய், வெங்காயவிதை, சந்தனவிதை வகை ஒன்றுக்கு 60 கிராம் சந்நராஷ்டம், பூமிசருக்கரைக் கிழங்கு, பஹமனேசுபேத், பஹமனேசுருஃ, தூதரிசுபேத் தூதரிசுபேஃ, சாலாமிஸ்ரி இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 12 கிராம், சீனிசருக்கரை 700 கிராம், தேன் 175 கிராம்.

செய்முறை-

பருப்பினங்களையும் வித்தினங்களையும் தனித்தனி மிகவும் மெல்லியதாய்த் தண்ணீர் விட்டு வெண்ணெய்போல் அரைக்க வேண்டியது. அரைத்ததைத் தண்ணீரில் கலக்கி, சீலையில் வடிகட்டினால் திப்பி நிற்காதிருக்க வேண்டும். இவ்விதம் அரைத்து எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துக் கொஞ்சம் சலம்விட்டு அதில் சருக்கரையையும் தேனையும் விட்டு அடுப்பேற்றி பாகுகாய்ச்சி நீர்சுண்டிப் பாகு பதமானவுடன் சந்நராஷ்டம் முதலாகிய சூரணங்களையிட்டுக் கிளறிக் கொள்ள வேண்டியது.

மாத்திரை:- 12, 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:- மூத்திரக் குண்டிக்காய்களுக்குச் சூட்டைத் தந்து பலப்படுத்தும், ஆண்மையையும் இந்திரிய விளைவையும் புதுப்பிக்கும், இருதயம் மூளை ஆகியவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். தேகபுஷ்டி, தேகபலம், ஆண்மை இந்திரியங்களின் வன்மை, மனதிற்கானந்தம் முதலியவைகளை யுண்டாகும். இந்திரியத்தைச் சமரசப்படுத்தும்.

76. இலகு லூபூப் லேகியம்

தோல்நீக்கின பாதம்பருப்பு 175 கிராம், பிஸ்தாபருப்பு 90 கிராம் கசகசா 350 கிராம், கோதுமை நொய் 350 கிராம், கஸ்தூரி 3 கிராம், குங்குமப்பூ 2 கிராம், பன்னீர் 60 கிராம், சீனிசருக்கரை 1 கிலோ.

செய்முறை-

முன்னிருக்கும் நான்கையும் தண்ணீர் விட்டு மைபோலரைத்துத் தண்ணீரிற் கலந்து வஸ்திரத்தில் வடிகட்டிச் சருக்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் நெய்விட்டு, கஸ்தூரி, குங்குமப்பூ ஆகிய இரண்டையும் பன்னீர்விட்டு நன்றாயரைத்து மேற்படி பாகில்விட்டு இறக்கிக் கொள்ளவும்.

உபயோகம்:- இந்திரியம் ஊறும், இரத்த விர்த்தியுண்டாகும். மூளை, மார்பு, முதலியவைகளுக்கு அதிக பலமுண்டாகும்.

77. மகா லூபூப் லேகியம்

பாதாம்பருப்பு, பிஸ்தாபருப்பு, அக்ரோட்பருப்பு, பிந்தஃபருப்பு, சாரப்பருப்பு, முருங்கைவிதைப்பருப்பு, ஆலம்விதை, ஷல்கம்விதை, முள்ளங்கிவிதை, வெங்காயவிதை நாயுருவிவிதை, நத்தைச்சூரிவிதை, கசகசா, கழுகின எள், சந்தனவிதை, செவ்வகத்திவிதை, நீர்முள்ளி விதை தாமரைவிதைப்பருப்பு, தித்திப்பு மாதுளைவித்து, தேற்றான் கொட்டை, துத்திவிதை, சொகதாஸ் அரிசி, வெட்பாலை அரிசி, கொப்பரைத் தேங்காய், கோதுமைநொய், பருத்தி விதைப்பருப்பு, சந்நராஷ்டகம், சீமை தண்ணீர் விட்டான் கிழங்கு, வெள்ளை பஹமன்,சிகப்பு பஹமன், பொதினா, வெள்ளை தூதரிவிதை, சிகப்புதூதரி விதை இவற்றில் தனித்தனி இடித்து நன்றாகத் தூள் செய்ய வேண்டியவைகளைத் தூள் செய்தும், இடித்து வஸ்திரகாயஞ் செய்து சூரணஞ் செய்ய வேண்டியவைகளைத் தனித்தனியிடித்துச் சூரணித்தும் வகை ஒன்றுக்கு 20 கிராம் லவங்கப்பட்டை, சடாமாஞ்சில் கோரைக்கிழங்கு, லவங்கம், வால்மிளகு, மிளகு, குங்குமப்பூ, பால் சாம்பிராணி, கோஷ்டம், ரூமிமஸ்தகி, பூலாங்கிழங்கு, சாதிக்காய், சாதிபத்திரி, அரிசிதிப்பிலி, இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 30 வெள்ளிரேக்கு 40 தங்கரேக்கு 20 அம்பர் 3 கிராம், கஸ்தூரி வராகனெடை ஒன்று, தேன் 1 கிலோ.

செய்முறை-

பருப்பினங்களையெல்லாம் தனித்தனி நன்றாயரைத்துப் பால்பிழிந்து கொள்ளவும். அந்தப் பாலில் தேனைவிட்டுக் காய்ச்சிப் பாகுபதத்தில் சரக்குகளின் சூரணங்களைக் கொட்டிக் கிளறி, குங்குமப்பூ, கஸ்தூரி, அம்பர் ஆகியவைகளை பன்னீர் விட்டரைத்துச் சேர்த்துக் கொள்ளவும். பின்பு ரேக்குகளையிட்டு நன்றாகக் கடைந்து எடுத்துக் கொள்ளவும்.

மாத்திரை- 35 கிராம், 50 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இரத்தவிர்த்தி யுண்டாகி இந்திரியம் அதிகப்படும். தேகபுஷ்டி, தேக காந்தி, மனோற்சாகம், மனோபலம், மன ஊக்க முதலியவைகளுண்டாகும்.

78. மஹாமதன விந்தவாதி மாஜூன்

ஆளிவிதை பத்துப்பலம் அரைப்படி சலத்தில் ஓர் நாள் ஊறவைத்தெடுத்த ஜலத்தில் 140 கிராம் கடலையை தோலுடன் ஊறவைத்துச் சலம் வற்றினபின் நன்றாய் உலர்த்தியிடித்த தூள் 100 கிராம், 150 கிராம் நெருஞ்சி முள்ளை நெருஞ்சி சமூலமிடித்துப் பிழிந்த ரசம் பலம் பத்திலிட்டு, சாறுவற்றினபின் உலர்த்தி யிடித்த தூள் 100 கிராம், முள்ளங்கிவிதை, மஞ்சள் முள்ளங்கிவிதை, பிஸ்தாப்பருப்பு, பிந்தஃபருப்பு, ஷல்கம்பருப்பு, சில்கூஜாப் பருப்பு, தோல் நீக்கின தேங்காய், சாரப்பருப்பு, பூனைக்காலி விதைத்தூள், பருத்தி விதை பருப்பு, நீர்முள்ளி விதைத்தூள், வெள்ளை பஹமன் தூள், சிகப்பு பஹமன் தூள், முருங்கை விதை பருப்பு, அலிசி விதைத்தூள், இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், அக்கிரகாரம், மேல்தோல் நீக்கின சுக்கு இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 30 கிராம், லவங்கப்பட்டை, சந்நராஷ்டகம் இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 20 கிராம், பூமிசருக்கரைக் கிழங்கு, லவங்கம், சோம்பு, மிளகு இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 50 கிராம், தரஞ்சபீன் 45 கிராம், வேக வைத்த முட்டை மஞ்சட்கரு இருபது, ஆண் அடைக்கலங் குருவித் தலை மூளை இருபது உலர்த்திக் கொள்ளவும். (நெய்யிலும் பொரித்துக் கொள்ளலாம்) அம்பர் வராகனெடை ஒன்று, கஸ்தூரி 3 கிராம், குங்குமப்பூ 2 கிராம், திறமான தேன் 700 கிராம், வெண்மையான வெங்காயரசம் 350 கிராம்.

செய்முறை

பருப்பினங்களை நன்றாக அரைத்துக் கொள்ள வேண்டும். சூரணம் செய்ய வேண்டியவைகளைச் சூரணித்து, முட்டைகள், மூளைகள் முதலியவைகளெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து நன்றாக மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும். தேனையும் வெங்காயச்சாற்றையும், சேர்த்துக் காய்ச்சி, பாகுபதத்தில் மேற்படி சேர்மானத்தையிட்டுக் கிளறி இறக்கி, அம்பர் முதலியவைகளை பன்னீரினாலரைத்துச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை- 4, 6 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- இந்திரிய விர்த்தியை அதிகப்படுத்தி அதினின்றுண்டாகும் ஆவியை உற்சாகித்து, ஆண்மையையெழுப்பும். தேகத்தைக் கொழுக்க வைத்துப் பலப்படுத்திப் பருக்கச் செய்யும்.

79. மேதாபிவிர்த்தி ஸ்தூலமாஜூன்

சுக்கு, மிளகு, திப்பிலி, பெருலவங்கப்படை, சந்ந லவங்கப்பட்டை, லவங்கம், சந்நராஷ்டம் இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு பங்கு ஒன்று, சீமை வெள்ளை நீர்முள்ளி விதை, சீமை சிகப்பு நீர்முள்ளி விதை, வெள்ளை பஹமன், சிகப்பு பஹமன், போஜீதான் மிஸ்ரி,

வெட்பாலையரிசி, பூமி சருக்கரைக் கிழங்கு, கோரைக்கிழங்கு, சடாமாஞ்சில் ஆகியவைகளைத் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ் செய்த தூள் வகை ஒன்றுக்கு பங்கு மூன்று. இச்சூரணங்களின் மொத்த எடைக்கு இரண்டு பங்கு தேனைக்காய்ச்சி நுரை நீக்கிச் சூரணத்தை யிட்டுக் கிளறி மாஜூன் செய்து கொள்ளவும்.

மாத்திரை- 6, 9 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இந்திரிய விர்த்தி உண்டாகும். மூத்திரக் குண்டிக்காய்கள், இடுப்பு, முதுகு முதலியவைகளுக்கு பலத்தைக் கொடுக்கும். நீர்ப்பையிலுள்ள நீரை வெளிப்படுத்தும். தேகத்தை போஷித்து வலுவாக்கும்.

80. மதன விந்துவாதி மாஜூன்

ஆளிவிதை, நாயுருவிவிதை, சில்கூஜா பருப்பு, வகை ஒன்றுக்கு 50 கிராம், மேல்தோல் நீக்கின சுக்கு, சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்கு, போஜிதான் மிஸ்ரி, சாலாமிஸ்ரி இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு இருபது கிராம், பெருங்காயம் 5 கிராம் வறுத்துத் தூள் செய்து கொள்ளவும். தேங்காயெண்ணெய் 50 கிராம், தேன் 40 கிராம், சீனிசருக்கரை 140 கிராம்.

செய்முறை :-

பருப்பினங்களை நன்றாயரைத்து, மற்ற சரக்குகளை யிடித்து வஸ்திரகாயம் செய்து எல்லாம் ஒன்றாகச் சேர்த்து, எண்ணெய் விட்டுப் பிசறி, தேன், சருக்கரை யிரண்டையும் பாகு செய்து, பாகுபதத்தில் சூரணமிட்டுக் கிளறிக் கொள்ளவும்.

மாத்திரை- 9, 12 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இந்திரிய விருத்தி அதிகமா யுண்டாகும். ஆண்மை பலப்படும்.

குறிப்பு

இது பண்டிதர்களின் இரகசிய முறைகளி லொன்று, செலவு சொற்பம் பலன் விசேஷம்.

இதுவரையில் இந்திரிய நரம்பு, விந்துவாகி முதலிய ஸ்தானங்களின் வியாதிகளையும், இரத்தத்தை பற்றிய வியாதிகளையும் நீக்கி, நல்லிரத்த முண்டாக்கி விந்து விளைவை அதிகப்படுத்தும்படியான அவுடதங்களில் பலவற்றைச் சொன்னோம். அவற்றுள் சில சொற்ப சிலவும், சொற்ப கஷ்டமும், சில மிக்க செலவும், மிக்க கஷ்டமு முள்ளவைகள் ஆகையால்அவரவர்களின் சக்திக்குத் தக்கபடி செய்து கொள்ளவும்.

இனி இராஜகருவிகளின் துர்ப்பலத்தை நீக்கித் தாதுபுஷ்டியை யுண்டாக்கும் அவுடதங்களைச் சொல்லலாம்.

81. ஊஷ்ணசாந்தி கபால ரக்ஷணி

போஸ்தக்காய், கசகசா, மேல்தோல் நீக்கின பாதாம் பருப்பு, வகை ஒன்றுக்கு 50 கிராம், குங்குமப்பூ 1 கிராம், பன்னீர் 120 கிராம், சீனி சருக்கரை 350 கிராம்.

செய்முறை

போஸ்தக்காயை நைய நறுக்கி ஒண்ணே கால்படி சலத்தில் ஓரிரவு பகல் ஊறவைத்து அடுப்பேற்றி நாலிலொன்றாகக் காய்ச்சி இறக்கி இளஞ்சூடாயிருக்கையில் கையினால் நன்றாகப் பிசைந்து வடிகட்டிக் கொள்ளவும். பாதாம் பருப்பு, கசகசா ஆகியவைகளைத் தனித்தனி தண்ணீர் விட்டு நன்றாயரைத்துக் கரைத்து வடிகட்டி மேற்படி சலத்தில் சேர்த்து சருக்கரையையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் குங்குமப்பூவைப் பன்னீர்விட்டரைத்துப் பன்னீரில் கலக்கிச் சேர்த்திறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை:- 12,15 கிராம் சாப்பிடலாம்

உபயோகம்:- மூளையின் வரட்சி நீங்கி,குளிர்ச்சியாகும். மூளைக்குப் பலமுண்டாகி, ஆண்மையுண்டாகும், நித்திரை நன்றாய்ப் பிடிக்கும், சுகமுண்டாகும்.

82. சுகுணாதிச் சூரணம்

சூரத்து நில ஆவாரை, பனப்ஷாபூ, பஸ்பாயிஜ், (Basfayij) [Polypody] பிஸ்தாப்பருப்பு, சுத்தி செய்த சீமைச் சிவதைவேர், பிஞ்சுக்கடுக்காய், இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், மேல்தோல் நீக்கின சுக்கு, மைசாக்ஷி, அனிசூன், அதிமதுரம், இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 3 கிராம் மொத்த எடைக்குச் சமன் சீனி சருக்கரையைச் சேர்த்துக் கொள்ளவும்

மாத்திரை- வராகனெடை 3,4, சாப்பிட்டு அதன் மேல் காவுஜுபான் தீநீர் 35,45 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- மூளையிற் சேர்ந்திருக்கிற வாதபித்த சிலேற்பனமாகிய மூன்றினால் அதிகரித்திருக்கிற அசுத்தசத்துக்களை நீக்கிச் சுத்திசெய்து மூளைக்குப் பலங்கொடுக்கும். முக்கியமாய்க் கபசத்தை நீக்க மிக்க உபயோகமுள்ளது.

குறிப்பு

மேற்படி சூரணத்துடன் சுத்திசெய்த மாமூதா (Scammony) 4 கிராம் சேர்த்துக்கொண்டால் அதிக குணமாயிருக்கும். 3 கிராம் சுத்திசெய்த

சீமைபோளத்தைச் சேர்த்துக் கொண்டால் இன்னும் அதிக குணமுள்ளதாயிருக்கும்.

83. திரிபலாதி சரீரஹிம்ச சங்காரி

காபுலி கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, கருப்புக்கடுககாய் இவை வகை ஒன்றுக்குப் பலம்- 1, சுத்திசெய்த சீமைச்சிவதைவேர், பஸ்பாயிஜ், ஆகாசகெருடன் கிழங்கை உலர்த்தியிடித்தசூரணம், உஸ்து குத்துஸ் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்துச் சூரணித்து அதற்கிரண்டு பங்கு நல்ல தேனைக்காய்ச்சி நுரைநீக்கி, சூரணத்தைக் கொட்டிக் கிளறிக் கொள்ளவும்.

மாத்திரை- 6,8 கிராம் சாப்பிவும்.

உபயோகம்- மூளையின் துர்ப்பலத்தை நீக்கும் பயித்தியம், காக்கைவலி, மூளையின் வியாதிகள் ஆகியவைகளைக் கண்டிக்கும், இரத்தத்திலுள்ள வாயுவைச் சுத்தியாக்கும், வாயுவை நீக்கும். கருப்பை ஸ்தம்பித்தல், குன்மவலி, அசுத்த கபநீர் முதலிய வியாதிகள் தீரும்.

84. இரசித கபால வீரிய விர்த்தினி

வெள்ளிரேக்கு 75 கிராம், துளையிடாத நல்லமுத்து, நற்பவளம், மூங்கிலுப்புச் சூரணம், கஹரூபா; முருங்கை வேர்ச் சூரணம் வகை ஒன்றுக்கு வராகனெடை ஒன்றரை, கத்தரித்த வெள்ளைப்பட்டு 12 கிராம், சீமை இலந்தம் பழம் (Apple) சாறு 500 கிராம், சீனி சருக்கரை 250 கிராம், பன்னீர் 50 கிராம், கோழிமுட்டை 1, கஸ்தூரி 3 கிராம், அம்பர் நான்கு கிராம்.

செய்முறை-

முத்தைக் கல்வத்தில் பன்னீர்விட்டு பன்னிரெண்டு சாமங்களுக்குக் குறையாமல் அரைக்க வேண்டும். கஹரூபா, பவளம் ஆகியவைகளையும் பன்னீர் விட்டுத் தனித்தனி மிகவும் நுண்மையாய் அரைத்துக் கொள்ள வேண்டும். அல்லது இவற்றை முன்னர் கூறியுள்ள பக்கத்தில் சொல்லி யிருக்கிறபடி பக்குவப்படுத்திக் கொள்வது உத்தமம். வெள்ளைப்பட்டையும் முன்னர் கூறியுள்ள பக்கத்தில் சொல்லியபடி பக்குவம் பண்ணிக்கொள்ள வேண்டும்.

கல்வத்தில் பன்னீர்விட்டு அம்பரை நன்றாயரைத்து அதில் வெள்ளிரேக்கு 1-2 இட்டு அரைத்து எல்லாரேக்கையுமிட்டு அரைத்து மசித்து முத்து, பவளம், கஹரூபா, பட்டு, மூங்கிலுப்பு, முருங்கைவேர், கஸ்தூரி ஆகியவைகளை இதிற்கண்டிருக்கிற முறைப்படியே யிட்டரைத்து முட்டையின் வெள்ளை அம்புலியையும்விட்டு அரைத்தெடுத்துக் கொள்ளவும்.

முன் இலந்தைப்பழ ரசத்தில் கற்கண்டையும் பன்னீரையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் மேற்படி கலவையையிட்டு வெண்ணெய் போலாகும்படி சந்தனக்கட்டை மத்தினால் நன்றாகக் கடைந்து எடுத்துக் கொள்ளவும்.

மாத்திரை- 2,4 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- மூளையை பலப்படுத்தி ஆண்மையை யுண்டாக்கும்; உன்மத்தம், பயித்தியம், மூளைவரட்சி, மயக்கம், தலைசுழற்றல், கிறுகிறுப்பு முதலிய மூளைவியாதி தீரும். சூடான தேகிகளுக்கு மிகவும் அநுகூலமானது.

85. கஸ்தூரி மஸ்தக ரக்ஷிணி

கஸ்தூரி 4 கிராம், அரிசித்திப்பிலி, மிளகு, மேல்தோல் நீக்கின சுக்கு, வெட்பாலையரிசி, உலர்ந்தபொதினா இலை, உஸ்துகுத்தூஸ் நிலக்கடம்பு, லவங்கப்பத்திரி, பெரு லவங்கப் பட்டை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், அகிற்கட்டை, வெள்ளை பஹமன், சிகப்புபஹமன், சாஞ்சான் மிஸ்ரி, கசகசா, காபுலி கடுக்காய்த்தோல் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், லவங்கப்பட்டை, சாலாமிஸ்ரி இவைகளின் தூள் வகைக்கு 3 கிராம், காவுஜூபான், சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்கு, ஏலம், ராமதுளசி, ரூமி மஸ்தகி, ப்ாதரஞ்சுபோயோ, சடாமாஞ்சில், சிற்றரத்தை, சாதிப்பத்திரி, போஜிதான் மிஸ்ரி, உலர்ந்த பூமி சருக்கரைக் கிழங்கு, கோரைக்கிழங்கு, அகர் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு காலே அரைக்கால் கிராம், தேன், சூரணத்தின் மொத்த எடைக்கு மூன்று பங்கு.

செய்முறை-

கஸ்தூரியைப் பன்னீர் விட்டரைத்துக் கொள்ளவும், தேனைக் காய்ச்சி நுரை நீக்கிச் சூரணத்தைக் கொட்டிக் கிளறி, கஸ்தூரியைச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை- 12,15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மூளையிலுள்ள மாசுகளையும், கபநீர் வாதநீர் முதலியவைகளையும் நீக்கும்; காக்கைவலி, மூர்ச்சை, தலைசுழற்றல், மயக்கம், குதிரைவலி முதலியவற்றைக் கண்டிக்கும். மூளைக்கும், நரம்புகளுக்கும் அதிக பலத்தைக் கொடுக்கும், (இது சூடானது) ஆகையால் குளிர்ச்சியான தேத்திகளுக்கு மிகப் பொருந்தும்.

கீழ்க்கண்ட மகா அருமையான பாகங்களை, மகாகனம் பொருந்திய சேதுபதி மஹாராஜா அவர்கள் வைத்தியரின் சந்ததியிலுள்ளவரும் கீழக்கரை யிலிருந்து வந்து இலங்கை நைனாமடத்தில் தற்காலம் வாசம் பண்ணும். ம-ள-ள-ஸ்ரீ, எஸ்கே, காதிரொலிப் பரிகாரியவர்கள், தம் மூதாதை முதலியவர்களினாலும் தம்மாலும் அனுபோக சித்தமாகக் கைகண்டு பிறரையும் தம்மைப்போல் நேசித்து பரோபகாரச் சிந்தையுடன் யாவருக்கும் பிரயோசனப்படும் படி அனுக்கிரகஞ் செய்தனர்.

ஜீவகாருண்ணியமுள்ள இக்கனவானுக்கு இப்பாகங்களை அனுபவிக்கும் ஒவ்வொருவரும் இருதய பூருவமாய் நன்றியறிந்த வர்களாயிருக்கக் கடவார்களாகவும்.

86. கூபத்தண்டம்

பருமனானதும் புதிதானதுமான கோழி முட்டைகள் - 10 கொடுக்காய்ப்புளி நூறு கிராம், பிரண்டைச்சாறு படிஒன்று, கடலையூற வைத்த சலம் படி- 8 (5- படி கடலையில் பத்துப் படி ஆற்று நீரைவிட்டு, இரண்டு நாள் ஊறவைத்து எட்டு படி சலம் வடிகட்டிக் கொள்ளவும்) திறமான பன்னீர் பலம் இருபது, பசுவின் நெய் 1200 கிராம், காய்ச்சி நுரை நீக்கிச் சுத்தி செய்த தேன் இரண்டு கிலோ, ஓமம் படி- ஒன்று, கசகசா, கருவேலம்பிசின், முருங்கைப்பிசின் வகை ஒன்றுக்கு 120 கிராம்,சாதிப்பத்திரி 70 கிராம், சாதிக்காய், லவங்கம், அபின், லவங்கப்பட்டை, கோஷ்டம் வகை ஒன்றுக்கு 25 கிராம்.

செய்முறை-

கொடுக்காய்ப் புளியை இரண்டு பாகமாகச் செய்து ஒருபாகத்தை, ஓர் வாயகண்ட மண் பாண்டத்திலிட்டுக் கையினால் சமமாகப்பரவி, அதன்மேல் முட்டைகளை ஒவ்வொன்றாய் ஒன்றோடொன்று சேராமல் அடுக்கி, மற்றப்பாதிகொடுக்காய்ப்புளியை முட்டைகளின் மேலிட்டு முட்டைகள் தெரியாமல் மூடிவிடவேண்டியது.பின்பு புளியின்மேல் நாலங்குலமிருக்கும்படியாகச் சுத்தசலம் மெதுவாகவிட்டு பாண்டத்தை அடுப்பிலேற்றி அவிக்கவேண்டியது. முட்டைத்தோல்களெல்லாங் கரைந்து முட்டைகள் கறுத்தால் பதம். அப்போது முட்டைகளை மாத்திரம் எடுத்து வேறுபாத்திரத்திலிட்டு பிரண்டை ரசம், சுவறச்சுவற கொஞ்சங்கொஞ்சமாய் விட்டுப்புரட்டி, சாறெல்லாம் சுண்டினபின், மறுபாண்டத்திலிட்டு, சுத்தசலம்வார்த்து அவிக்கத் துய்யமாய் வெள்ளையாம்; அதுவே பக்குவமென கீழேயிறக்கி முட்டைகளை ஓர் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

ஓமத்தை தண்ணீர்விட்டு 2 சாமம் ஊறவைத்து விளாங்கொம்புனால் கடைந்து உமியை நீக்கி அரிசியை எடுத்துக் கொள்ளவும் (இப்படிக் கடைவது அதிகப் பிரயாசையாயிருப்பதால் ஓமத்தையூறவைத்து உரலிலிட்டு விளாங்கொம்பு உலக்கையால் குத்தி உமிநீக்கி அரிசியையெடுத்துக் கொள்வது சுலப மார்க்கம்) கசகசா முதல் கோஷ்டம் ஈறாகவுள்ள சரக்குகளைப் பன்னீர்விட்டு மைபோலரைத்துப், பன்னீரிற் கரைத்து முட்டைகளையிட்டு நன்றாகப் புரட்டி வைத்துக் கொள்ளவும்.

கடலையூறின சலத்தில் ஓம அரிசியையிட்டு அடுப்பேற்றி நான்குபடியாக சுண்டினபின் முட்டைகளையிட்டு, குழம்படியாகச் சுண்டிவரும்போது, நெய்யைவிட்டு, அதில் நன்றாய் வெந்துபொரிந்தது போலிருக்குஞ்சமயத்திலிறக்கி, நன்றாய்ப் பழகிய நெய்ப்பசையுள்ள ஓர் பாத்திரத்தில் முட்டைகளுடன் மருந்தையும் வழித்துவிட்டு முட்டைகள் மிதக்கும்படியாய் முன் சுத்திசெய்த தேனையும் விட்டு, வாய் மூடி சீலைமண் செய்து தானியபுடம் இருபதுநாள் வைக்க வேண்டியது இருபத்தோரானாள் எடுத்து ஏழை முதலியவர்களுக்கு அவரவர்கள் சக்திக்கியன்றவரையில் சாப்பாடு முதலியவைகள் செய்து வைக்கவேண்டியது.

மாத்திரை- சுபதினத்தில் சாப்பிடத் துவங்கவேண்டியது. காலையில் மாத்திரம் ஓர் முட்டைசாப்பிட வேண்டியது; முழுவதும் ஆண்மை யிழந்தவர்கள் நாற்பதுநாளும் அரைகுறையாய் இழந்தவர்கள் பத்துநாள் இருபது நாள் சாப்பிடலாம்.

பத்தியம்- அவுடதம் சாப்பிடும்போது ஸ்தீரிசகவாசம், மீன் ஆகியவை ஆகா. அதிகநாள் சாப்பிட்டுத் தாங்க முடியாது

உபயோகம்- இதனால் உண்டாகும் பிரயோசனம் அனந்தம்; ஆயினும் சுருக்கிச் சொல்லில், இரத்தச்சத்தானது ஊற்றைப்போல் ஊறிப்பெருகி, தேகம் இறுகி, வச்சிரம் போற் கட்டுப்படும்; ஆண்மை, சந்தானவிருத்தி, தேககாந்தி முதலியன உண்டாவதுந் தவிர இன்னும் அனேக பிரயோசனமு முண்டாமென்பது திண்ணம்.

87. தீகானந்த லேகியம்

வில்வக்கொழுந்து 50 கிராம், தோலுரித்த வெங்காயம் 150 கிராம், சாரப்பருப்பு 70 கிராம், அதிமதுரம், வெட்பாலையரிசி, முந்திரிப்பருப்பு, பேரீச்சம்பழம், திராஷை வகை ஒன்றுக்கு 70 கிராம், சன்னலவங்கப்பட்டை, கோஷ்டம்; சாதிக்காய்; மேல்தோல் நீக்கின சுக்கு, வகை ஒன்றுக்கு இருபத்தைந்து கிராம், வீட்டில் வளர்த்த சேவல், அல்லது கோழி 1, ஊறவைத்து மேல்தோல் நீக்கிச் சுத்தி செய்த எள முக்கால் படி, பனஞ்சாறு, அல்லது, பனம் பதனி 4 படி, சீனிசருக்கரை 350 கிராம், பசுவின் நெய் 140 கிராம்.

செய்முறை-

சேவலையறுத்துக்குடல்கள்; கால்; மூக்கு; இறகு முதலியவைகளை நீக்கிச் சுத்தி செய்து துண்டுகளாகச் செய்து, பத்துபடி சலத்திற்போட்டு அதனுடன் வெங்காயம் எள் ஆகிய இரண்டையும் போட்டு ஒருபடியாய்ச் சுண்ட வைத்து; கெட்டித்துணியினால், அல்லது, பிளானெல் கம்பளியினால் வடிகட்டிப் பிழிந்துகொள்ளவும். மற்ற சரக்குகளைப் பனஞ்சாறுவிட்டு நன்றாய் மைபோலரைத்து; பனஞ்சாற்றில் கரைத்து அதில் முன் மாமிச ரசத்தையும் விட்டு சீனியையுங் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயிட்டு மெதுவாய் எரிக்கவேண்டியது. சற்றுநேரஞ் சென்று நெய்யையும்விட்டு கைவிடாமல் கிளறவேண்டியது. அப்படி செய்யாவிட்டால் அடிபிடிக்கும். மெழுகு பதத்திலிறக்கிச் சாக்கிரதையாகப் பத்திரப்படுத்த வேண்டியது.

மாத்திரை- காலை, மாலை இரண்டுவேளையும் தான்றிக்கா யளவாகச் சாப்பிடவும்.

உபயோகம்- இரத்தபுஷ்டி, ஆண்மை, மனப்பூரிப்பு, தேககாந்தி முதலியன வுண்டாம்.

88. மதன மெழுகு

முருங்கைவேர்ப்பட்டை, முருங்கைப்பிசின், கரும்வேலம் பிசின், வெண்சந்தனத்தூள், தேத்தாங்கொட்டை, கசகசா, முருங்கை விதைத் தூள், சுரை விதைப் பருப்பு, மேல்தோல் நீக்கின முற்றின தேங்காய், சீனிசருக்கரை இவை வகை ஒன்றுக்கு பத்து கிராம். தண்ணீர் விட்டான் கிழங்கின் ரசம் படி காலே அரைக்கால்.

செய்முறை-

சரக்குகளையெல்லாம் கல்வத்திலிட்டு மேற்படி ரசத்தால் நான்கு சாமம் அல்லது நன்றாக மெழுகுபதமாகிற வரையில் அரைக்க வேண்டியது; பின்பு டப்பியில் அல்லது சிமிழில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:- இராப்போசனம் செய்தபின் வராகனெடை ஒன்று முதல் இரண்டுவரையில் சாப்பிடலாம். அதன்மேல் முருங்கைப் பிஞ்சுகளும் கற்கண்டும் போட்டுக் காய்ச்சின பால் சாப்பிட்டால் அதிகப் பிரயோசன முண்டாகும்.

உபயோகம்- இரத்தசத்து அதிகப்படும். தாதுக்கள் இறுகிக் கெட்டியாகும்.

மருந்தருந்தும்போது உடலுவை நீக்கி வைப்பது உத்தமம்.

89. மதன காமரசம் அல்லது மதன காமமலர்

மலராத முருங்கைப்பூ படிஇரண்டு, கருங்குருவை அவல் படி இரண்டு, ஆலம்விழுதுச் சூரணம் படி அரை, முருங்கைவேர்ப்பட்டைச் சாறு படி இரண்டு, பசுவின் பால் படி இரண்டு, சீனி சருக்கரை இரண்டு கிலோ, திறமான நறு நெய் இரண்டு கிலோ, காய்ச்சி நுரைநீக்கிச் சுத்திசெய்த தேன் 1400 கிராம், அபின் 60 கிராம், சாதிக்காய் 50 கிராம், குங்குமப்பூ பன்னிரெண்டு கிராம்.

செய்முறை

முருங்கைப்பூவை நிழலிலுலர்த்தி நெய்யில் பொரித்துக் கொள்ளவும். அவலையும் நெய்யில் பொரித்துக் கொள்ளவும்; முருங்கை வேர்ப்பட்டைச் சாற்றில் சீனியைக் கரைத்து, அபின் முதலிய எல்லாவற்றையும் மைபோலரைத்து மேற்படி சாற்றில் கரைத்து அடுப்பேற்றிக் கிண்டிக் கொண்டிருந்து மெழுகுபதத்தில் பாக்கி நெய்யையும் விட்டுக் கீழிறக்கி ஆறினபின தேனைவிட்டு மிஸ்ரமித்துப் பழகிய பாண்டத் திலிட்டு மூடி சீலைமண் செய்து ஒரு வாரத்திற்குப்பின் எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை- 12, 25 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இந்திரியவிர்த்தியாம்; தாதுக்கள் இறுகும்; ஆண்மை அதிகப்படும்.

குறிப்பு

இந்தப் பாகத்தில் அபின்சேர்ந்திருப்பதால் லாகிரி பதார்த்த பழக்கமுள்ளவர்களுக்கே அதிகப் பிரயோசனமுள்ளது. சூடான தேகிகளுக்கும், சுகுமார தேகிகளுக்கும் அபினாகாது; ஆகையால் அபினியை நீக்கிச் சுத்தம் செய்து கொள்ளவும். அபினியைமுற்றிலும் நீக்கிவிடுவதே உத்தமம்; புத்திமான்கள் சமயோசிதமாகச் செய்து கொள்வார்களாகையால் பூர்வபாகப்படியே எழுதலாயிற்று.

90. மதனகாம வச்சிரகண்டம்

ஆண் அடைக்கலாங்குருவி 40, கடலைமாவு 450 கிராம், சாதிப்பத்திரி 120 கிராம், சாதிக்காய் 60 கிராம், * நிலதாளிக்கிழங்கு அறுபது கிராம், அசுவகெந்திக் கிழங்கு அறுபது கிராம், நெருஞ்சி முள்ளு அறுபது கிராம், ஆவாரை விதை அறுபது கிராம், முருங்கைவிதை அறுபது கிராம்,

* நிலதாளியென்பது நிலப்பனை.

கசகசா 60 கிராம், குங்குமப்பூ பனிரெண்டு கிராம், கஸ்தூரி 4 கிராம், கோழிமுட்டை மஞ்சட்கரு 120 கிராம், அவித்து மஞ்சட் கருக்களைப் பொடித்துக் கடலைமாவிற் கலந்து கொள்ளவும்; சீனி 450 கிராம், நெய் 1400 கிராம்.

செய்முறை:-

குருவிகளை யறுத்துத் தலை, கால், குடல் முதலியவைகளை நீக்கிச் சுத்திசெய்து, நெய்யில் பொரித்துக் கொள்ளவும். மற்றச் சரக்குகளையும் பொடி செய்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்; குங்குமப்பூவையும், கஸ்தூரியையும் தனித்தனி பால் வார்த்தரைத்துக் கொள்ளவும்.

எல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு நெய், தேன், சிறுகச் சிறுகவிட்டுபலமான ஆள்களாலும் மாற்றி மாற்றி பனிரெண்டு சாமம் அரைக்கும்படி செய்ய வேண்டியது. பின்பெடுத்துப்பீங்கான் பாத்திரத்திலிட்டுச் சூரியபுடம் வைத்துப் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை-இரண்டு கிராம், ஐந்து கிராம் மாலையில் சாப்பிடவேண்டும். மணவாழ்க்கை காலங்களில் இருபத்தி நாலு கிராம் சாப்பிடவும். மருந்து சாப்பிட்டவுடன் பசும்பாலைக் காய்ச்சிக் கற்கண்டிட்டு, சீரண சக்திக்கேற்ற அளவாகச் சாப்பிடவும்.

உபயோகம்:- மேகவெட்டை, கைகால் முடக்கு, காசம், க்ஷயம், பெரும்பாடு, நீரிழிவு, பெண்மலடு, ஆண்மலடு, திரிதோஷ தொந்தம் முதலியவைகள் தீரும். தம்பன சக்தி யுண்டாகும்; சிலருக்கு எலுமிச்சம்பழ ரசம் சாப்பிட்டாலொழிய தம்பனம் நீங்காது; சுமார் மூன்று மாதம் சாப்பிட வேண்டும்.

குறிப்பு

மகாகனம் பொருந்திய சேதுபதி மகாராஜா அவர்கள் மேற்கண்ட அவுடதத்தைச் சாப்பிட்டு இருபத்தோர் புருஷர் பலமடைந்து ஜெயம் பெற்ற முறையாம்

91. மதனகாம வச்சிர உண்டை

கல் முதலியவை நீக்கிச் சுத்திசெய்த காற்படி கடலையை, நல்ல பாம்பைப் பிடித்து விஷப்பல் நஞ்சுப்பை முதலியவைகளை நீக்கி அதின் வாயில் கொஞ்சங் கொஞ்சமாய் மேற்கண்ட கடலை முழுவதையும்போட்டு வாயையும், அபானத்தையும் தைத்து ஒரு பாண்டத்திலிட்டு மூடி யானை அல்லது குதிரை கட்டுமிடத்தில் நாற்பது நாளைக்குப் புதைத்து எடுத்து அரைத்து உருட்டிச் சருக்கரை அல்லது

பனைவெல்லத்தோடு கலந்து தினந்தோறுங் கொஞ்சங் கொஞ்சமாய், முட்டையிடாத கோழி ஒன்றிற்குக் கொடுத்து ஒரு கூட்டிலடைத்து விடவும்.

கோழிக்குத் தினந்தோறும் கோதுமை நொய்யில் முலைப்பால் அல்லது தேங்காய்ப் பால் விட்டுக் கலந்து, தீத்தி மேற்படி பாலைக் குடிப்பாட்டி வரவும்; இப்படி இருபதுநாட் சென்றபின் மேற்படி கோழியை அறுத்து, தலை, கால், குடல், ரோமம் முதலியவைகளை நீக்கி, நல்ல நெய்யிற் பொரித்துக் கல்லுரலிலிட்டு நன்றாகப் பொடி செய்து முலைப்பால்விட்டு அரைத்துப் பருத்திக்கொட்டைப் பிரமாணம் உண்டை செய்து சீனி சருக்கரையும் நெய்யும் கலந்து அதிற்பிசைந்து முன்போல வேறொரு கோழிக்குத்தின்ன கொடுக்கவும்; கடலைமாவும் சீனிசருக்கரையுங் கலந்து முன்போல இருபது நாளைக்குக் கொடுக்கவும்.

பின்பு கோழியை அறுத்து முன்போல் நெய்யில் பொரித்து துளையிடாத முத்து, பொன்னரிதாரம், தாம்பர அரப்பொடி, வங்க அரப்பொடி, வெங்கல அரப்பொடி, இரும்பு அரப்பொடி, எஃகு அரப்பொடி, அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ, சங்குத்தூள், பருத்திக்கொட்டைப்பருப்பு, ஏலம், சந்தனம், கோஷ்டம், லவங்கம், கடுக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், எல்லாச் சரக்குகளையும் ஒன்றாகச் சேர்த்து பன்னீர்விட்டரைத்து முன்போல பயறளவாக உருட்டித் தேங்காய்ப்பூவும் கலந்து வேறொரு கோழிக்குத் தின்னக் கொடுக்கவும்.

எள்ளையும், சீனியையும் கலந்து 28 -நாள் கொடுத்து பிறகு அதை அறுத்து முன்போல் பொரித்தெடுத்து இடித்துப் பொடிசெய்து நல்ல கெட்டித் தேன் விட்டரைத்து ஒவ்வொரு வராகனெடைக் குளிகைகளாகச் செய்து கொள்ளவும்.

மாத்திரை:-மாலையில் ஒரு குளிகை சாப்பிடவும். பத்தியம் பால், நெய், கறிவகைகள், கோழிமுட்டை, துவரம்பருப்பு, கனிவகைகள், வெங்காய ஷர்பத்து, நன்னாரி ஷர்பத்து, வல்லாரை ஷர்பத்து, கொள்ளுக்கஞ்சி, பாற்கஞ்சி, பாதங்கொட்டைப் பருப்புக் கஞ்சி, பருத்தி விதைக் கஞ்சி, இன்னும் பலவகைப் பாயசங்கள், லட்டு மிட்டாய்கள், முதலிய இனிப்பு வஸ்துக்களை அதிகமாயுபயோகிக்கவும்.

உபயோகம்:- இதனால் உண்டாகும் பிரயோசனம் அதிகம். முக்கியமாகச் சந்தானவிர்த்தி, ஆயுள்விர்த்தி, ஆண்மை, தேககாந்தி முதலியவை யுண்டாகும். இதற்குத் திருஷ்டாந்தரமாகப் பின் கண்டிருக்கிறபடி பரீட்சித்துப் பார்த்துக் கொள்ளலாம்

ஒரு கிழச்சேவலை ஒரு கூட்டிலடைத்து இருபது நாளைக்கு மேற்படி மருந்தையுங் கொடுத்து தீனியுங் கொடுத்துவர மேற்படி சேவலின்

வெண்மயிர்கள் உதிர்ந்து கறுப்பு மயிர்கள் முளைத்து விடையைப் போலாய்விடும். அவிழ்த்து விட்டுப் பார்த்தால் அதன் பெலம் தெரிய வரும். (இதற்குத்தரவாதி யாமன்று.)

குறிப்பு

மேற்கண்ட அவுடதங்களுள் சிலவற்றை யாம் செய்து பரீக்ஷித்ததில் அதிகப்பிரயோசன முள்ளனவாகக் காணப்பட்ட படியாலும், மற்றவைகளும் சாஸ்திரம், அனுபவம் ஆகியவற்றிற்கு ஒத்திருக்கின்ற படியாலும் இவற்றுடன் சேர்க்கப்பட்டன.

கீழ்க்கண்ட ஔஷதங்கள், முஷ்டிப்பிரயோகம் முதலிய துர்க்கிரியைகளினால் நலிந்தோர்களுக்கு உபயோகப்படுவன . இதன் சிகிச்சை விபரமாய் இரண்டாம் பாகத்தில் எழுதப்பட்டிருக்கினும் இவ்விடமும் அனுபவமாகிய சில பாகங்களை எழுதுவாம்.

92. பூண்டுத் தைலம்

பூண்டையிடித்து ரசம் பிழிந்து வஸ்திரகாயம் செய்தது ஒரு பங்கு, எள்ளெண்ணெய் ஒரு பங்கு இரண்டையும் சேர்த்து அடுப்பேற்றி நீர்சுண்டினபின் வடிகட்டி சீஷாவில் அடைத்து வாயைக் கெட்டியாய் மூடி வாயில் சந்தில்லாமல் மெழுக்கினால் பந்தனஞ்செய்து, ஒருகஜம் அகலம், ஒரு கஜம் ஆழமுள்ள பள்ளத்தில் குதிரைலத்தியை அல்லது வெள்ளாட்டுப் புழுக்கையை நிறைத்து அதற்குள் மேற்படி சீஷாவை வைத்து ஒருவாரஞ் சென்ற பின்னெடுத்து சாவகாச காலங்களில் தனியாகவும், ஜவ்வாதுடன் சேர்த்தும் ஆண் அங்கங்களிலும், அரையிலும், அரைகளின் சந்துகளிலும் பூசிவரவேண்டியது

உபயோகம்:- நரம்புத் தளர்ச்சி, ஆணங்கத் தளர்ச்சி இவை நீங்கி நரம்புகளில் முருக்கேறி சோர்வு நீங்கி பல முண்டாகும். நரம்புகளிலுள்ள கபநீர் முதலியன நீங்கும்.

இத்துடன் இரத்தவிருத்தியை யுண்டாக்கும் அவுடதங்களை உபயோகிக்க வேண்டியது.

குறிப்பு

சிலர் புஸ்தகத்தின் கருத்தை யறியாமலே முஷ்டிப்பிரயோகத்திற்கு அவுடதம் எதுவெனக் கேட்கிறார்கள். இதற்கு இரத்தத்தை விருத்தியாக்குகிற அவுடதமே பொதுவாய் எல்லாவற்றிற்கும் உபயோகப்படும். அவற்றுள் முக்கியமானவை:- அண்டாஹாதி அல்வா, பால்ஹல்வா, மாங்கிஷத்தீநீர் முதலியவைகளே; இன்னும் பூண்டுப்பாயசம் முதலியவைகளும் ஆம்.

93. திலா எண்ணெய்

அக்கிராகாரம் ஆறு கிராம், லவங்கம்,சடாமாஞ்சில் சம்பங்கிவேர், பருப்புக்கீரை விதை, சீமை நன்னாரிவேர், மரமஞ்சள், அரிசித்திப்பிலி, சீமையோமம், சொர்யோமம், நிலக்கடம்பு, சுக்கு, தாளிசப்பத்திரி, குந்திரிக்கம், ரூமிமஸ்தகி இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், சீமைசாமந்திப்பூ 12 கிராம், கசப்பு வாதுமைப்பருப்பு 50 கிராம், காட்டு எள்ளெண்ணெய் படி- முக்கால்.

செய்முறை:-

சரக்குகளையெல்லாம் ஒன்றாயிடித்து நான்குபடி, நீரிலிட்டு அடுப்பேற்றி, எட்டொன்றாய்க் காய்ச்சி வடிக்கட்டி யெண்ணெயுடன் சேர்த்து நீர்வற்றக்காய்ச்சி சீஷாவில் வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்:- நரம்புத் தளர்ச்சி, ஆணங்கச் சோர்வு ஆகியவை நீங்கும், சிலருக்குக் கோசம் ஒரு பக்கமாய் வளைந்திருப்பதுண்டு; அவ்வித வியாதியும் நீங்கும்.

94. வேறு திலா எண்ணெய்

அல்ஸிஎண்ணெய் 700 கிராம், ஒருத்தலைப்பூண்டு தோல்நீக்கினது 500 கிராம் எண்ணெயிலிட்டு அடுப்பேற்றிப் பூண்டு சிவந்தபின் வடிகட்டி, கடுகு, அக்கிராகாரம், எலுமிச்சன்விதை, வாலுழுவையரிசி, வகை ஒன்றுக்கு 4 கிராம், எல்லாவற்றையும் ஒன்றாயிடித்து வஸ்திரகாயம் செய்து அல்லது எண்ணெயிலிட்டுக் காய்ச்சியிறக்கி ஆறினபின் சீஷாவில் வைத்துக்கொள்ளவும்.

குறிப்பு

உபயோகம்:- விடாமல் சிலநாள் இந்த எண்ணெயை ஆணங்கங்கள், அரைமுதலிய இடங்களில் பூசி வருவதனால், ஆணங்கச்சோர்வு, நரம்புகள் தளர்ச்சி முதலியன நீங்கும்.

95. பைரவிப் பட்டி

குல்டு என்னும் நிலக்காடையின் மார்புக்கறியையெடுத்து நல்ல கெட்டித் தேனைவிட்டுக் கைவிடாமல் நான்கு சாம மரைத்து டப்பியில் வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்- ஆண் குறியில் பூசி, கர்ப்பூரவெற்றிலையை வைத்து நூலினால் தளர்ச்சியாகக் கட்டிவைக்கவும். காலையில் அவிழ்த்து வெந்நீரினால் சுத்திசெய்து மறுராத்திரி கட்டவும்; இப்படி ஒருவாரம்

செய்வதனால், முஷ்டி முதலியவைகளினால் மெலிந்துபோயிருக்கும் ஆண் அவயவங்கள் பருமனாகி முன் சக்தி யுண்டாகிவிடும்.

96. பால்திலா

வெள்ளலரிப்பாலை மெல்லிய சீலையிலூட்டி உலர்த்தி வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது கொஞ்ச சலத்தில் ஒரு துண்டையிட்டுக் கசக்கிப்பிழிந்து அதில் கொஞ்சம் அக்கிராகாரத்தைத் தூள் செய்து போட்டு நன்றாய் மத்தித்து ஆண் உறுப்பில் காலை மாலை பூசிவரவும், ஆண் குறியின் நரம்புகளிலுள்ள கபநீர், விஷநீர், நீங்கி நல்லிரத்த முண்டாகி பலமுண்டாகும்; ஆணங்கங்களின் சோர்வு நீங்கும்; அவை பருமனாகி பூரண சக்தியுண்டாகும்.

97. சுகுமாரதிலா

தண்ணீர்படாத புதுசெங்கல்லை கரிநெருப்பிலிட்டு, நெருப்பாய் நன்றாய் சிவக்கக் காய்ச்சி ஜைத்தூன் (Olive Oil) எண்ணெயில் விடவும். செங்கல் முழுகும்படியெண்ணெ யிருக்கவேண்டியது. ஆறினபின் எடுத்துச் செங்கல்லைப் பொடித்து, 7 சீலைமண் செய்யப்பட்ட காசிக்குப்பியிலிட்டு, குப்பிவாய்க்குக் குதிரைமயிர் சொருகி ஓர் சட்டியின் நடுவில் சீஷா வாய்கொள்ளும்படி துவாரமிட்டு சீஷாவை தலை கீழாகக் கவிழ்த்துப் பின்பு சீஷாவின் கீழ் சிறு பாத்திரம் வைத்து தைலத்தில் மண்விழாமல் பத்திரப்படுத்திக் குழித்தைல மிறக்கவும். இந்தத்தைலம் மிகவும் திறமானது.

உபயோகம்:- நரம்புகளிலுள்ள குளிர்ச்சி, கபநீர் முதலியவைகளை நீக்கி ஆணங்கங்களுக்குப் பூரண சக்தியைக் கொடுக்கும். நரம்புகளிலுள்ள மாசு முதலியவைகளை நீக்கும். (சுயானுபோகம்)

98. ஊஷ்ண நிவாரணி

சுரைக்காயை விதை முதலியவைகளோடு இடித்துப் பிழிந்து ரசமெடுத்து வடிகட்டின சலம் 2 பங்கு, கழுவின எள்ளெண்ணெய் 1 பங்கு இரண்டையும் சேர்த்துத் தண்ணீரில் சுண்டக்காய்ச்சி வடிகட்டிச் சீஷாவில் வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்:- தலையிற் பூசலாம், முகரலாம், இப்படி உபயோகித்து வருவதினால் மூளைவரட்சி கபால வரட்சி ஆகியவை தீரும், நித்திரையுண்டாகும்.

குறிப்பு

சுரைவிதைப்பருப்பின் எண்ணெய் மிகவும் உபயோகப் படத்தக்கது; அது அகப்படாத சமயங்களில் மேற்கண்ட விதமாய்ச் செய்து கொள்ளலாம்.

99. மைனதிலா

மஞ்சள்மெழுக்கு 500 கிராம், வறுத்த உப்பு 100 கிராம், ஆற்றுமணல் (நன்றாய்க் கழுவியுலர்த்தப்பட்டது) 125 கிராம், ரசம் 12 கிராம், கஸ்தூரி 12 கிராம், வெள்ளைக் குன்றிமணிப்பருப்பு 12 கிராம், பெருங்காயம் 12 கிராம் பின் சொன்ன நான்கையும் நன்றாய்ப் பொடித்து ஓர் அடையாய்ச்செய்து வாலையில்வைத்துத் திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

உபயோகம் :- சோர்வு, கோணல், நரம்புத்தளர்ச்சி முதலியவைகள் உள்ள பாகங்களிற் பூச அவை நீங்கும். நரம்புகளுக்கு அதிக பலமுண்டாகி ஆண்மை அதிகப்படும்

100. அம்பர்திலா

உயர்ந்த அம்பர் 3 கிராம், ஜவ்வாது வராகனெடை 3 கிராம், இரண்டையும் கரு ஊமத்தான்சாறு மூன்று துளிவிட்டு நன்றாய் மத்தித்து ஆவசியகமான பாகத்தில் தடவி மேலே சிற்றாமணக்கிலையைக் கட்டிவைக்க வேண்டியது. காலையில் அவிழ்த்து விடவும். பின்பு முன்போலவே ஒரு வாரம், அல்லது, இரண்டுவாரம் செய்யவேண்டியது. (ஊமத்தன் சாறு அதிகமானால் மயக்கமுண்டாகும்)

உபயோகம்:- அப்பாகம், பெருத்து பல முண்டாகும்; லேபனசக்தி அதிகப்படும்.

யூநாநி வைத்திய தாருட்ய விர்த்தி போதினி முதற்பாகம் முற்றிற்று

தாதுவிருத்தி போதினி

இரண்டாம் பாகம்

முகவுரை

இல்வாழ்க்கையானது, ஆன்ம சுகத்திற்கும், புத்திர சந்தானத்திற்கும் ஆதாரமாயிருப்பதினாலேயே உலகத்திலுள்ள எல்லாத் தர்மங்களைப் பார்க்கிலும் மேன்மையான தர்மமெனச் சொல்லப்பட்டிருக்கின்றது; ஆனால், மேற்கண்ட இரண்டு காரியத்திற்கும் அனுகூலமாக ஒவ்வொரு வரும் அவரவர்களின் தேகதிடம், மனோதிடம், காத்திரம், வயது முதலியவற்றிற்கும் ஏற்றபடி அனுபவிக்கவேண்டும் என்பது வெளிப்படையான விஷயம். அவ்விதிகளைக் கவனித்துணராமல், தங்கள் தங்கள் இஷ்டப்படி நடப்பவர்கள் அநேகவித நோய்களுக்கு ஆளாய் வருகின்றார்கள். இவர்களில் பலர் அகால மரணத்திற் குள்ளாய் வருவதும் அப்பிரசித்தமல்ல. அனேகர் தங்களுக்குள்ள இன்னன இடைஞ்சல்களை வெளிப்படுத்த வெட்கப்பட்டு மௌனஞ்சாதித்து, தீயிலிட்ட மெழுகைப்போல் உருகி வாடி மெலிந்து துன்புற்றழுங்கி வருகின்றார்கள் இவ்விவரங்களை யெல்லாம் "ஜீநாநி வைத்திய தாருட்டியவிர்த்தி போதினி" முதற்பாகத்தில தெளிவுறக் கூறியிருக்கின்றமையால் அவற்றை வைத்தியர்களும் சிகிச்சகர்களும் ஆகிய எல்லா வகுப்பினர்களும், தமிழ், தெலுங்கு தேசத்தினர்களும், அவை அல்லாத தேசவாசிகளும், இலங்கை, பினாங்கு, சிங்கப்பூர், ரங்கூன் மோரிஷ் முதலிய நானாப்பிரதேசங்களிலுள்ள அனேகர்களும் மனப்பூர்வமாய் அங்கீகரித்து அதனால் ஒவ்வொருவரும் எண்ணிறந்த சுகிர்தங்களை யடைந்து, அனேகர்தாங்கள் நெடுநாள் முதற்கொண்டு அப்பியாசித்து வந்து கொடிய துர்ப்பழக்க வழக்கங்களுக்கு ஆட்பட்டு வந்ததை முன்குறித்த கிரந்தவாயிலாய் அவற்றின் முடிவுகளைத் தெள்ளத் தெளியத் தெரிந்து நீங்கிச் சுகமடைந்தும் வருகின்றார்கள். சுருங்கச் சொல்லில்,மேற்கண்ட ஒவ்வொருவரும் தாம் அடைந்து வரும் நன்மையாதிகளைக் கடித மூலமாகவும் அடிக்கடி அறிக்கை செய்து வருகின்றார்கள். இவற்றிற்கு அத்தாட்சியாக அக்கிரந்தம் தமிழ், தெலுங்கு பாஷைகளில் அச்சடிப்பிக்கப்பட்டு அனேகமாயிரம் பிரதிகள் செலவாய் ஏழாம் பதிப்பிற்கும் சமீபித்திருக்கின்றது. மேலும் கன்னடம்,

மலையாளம், சிங்களம் முதலிய இதர பாஷைகளிலும் அப்பாஷைகளைத் தேறக் கற்றுத் தெளிந்த அனேகர்களுடைய வேண்டுகோளின்படி மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றது.

ஆகையால் நமக்கு அதிக மனோற்சாகமும், மனக்களிப்பும் உண்டாய், முதற்பாகக் கிரந்தத்தில் நோயாளிகளின் சிகிச்சாகிரம விவரங்களைக் குறித்து ஒருவாறு பொதுப்பட வகுத்துக் கூறியிருப்பினும், அதனிலும் தீர்க்கமாகவும், தெளிவாகவும், விரிவாகவும்,லகுவாகவும் மேற்கண்ட ஒவ்வொருவரும் எளிதிலுணர்ந்து தங்களுக்கும் மற்றவர்களுக்கு முற்ற பிணியாதிகளை நிவர்த்தித்துக் கொள்ளத் தக்கவர்களாக வேண்டும் என்னும் நோக்கத்தைக் கடைப்பிடியாய்க் கொண்டு வியாதிகளுக்கு மூலகாரணங்களாயுள்ள சுபாவாசுபாவ சத்துக்களின் லக்ஷணங்கள் முதலியவகை விவரங்களையும், வியாதிகளின் குணங்குறிகளை நன்கு தெரிந்து கொள்வதற்கு ஏற்ற பொது லக்ஷணாதிகளையும், பின்பு சிகிச்சாக்கிரமப் பொதுவிதிகளையும், வியாதிகளுக்கு ஏதுவாயுள்ள வாதபித்த சிலேட்டும முதலிய சத்தாதிகள் அதிகரித்த லக்ஷணங்களையும், அவற்றைச் சாந்தப்படுத்துவதற்காம் பக்குவங்களையும், அசுத்த சத்துக்கள் அதிகரித்தால் அவற்றைப் பக்குவப்படுத்தி வெளியாக்கும் முறைகளுமாகிய சிகிச்சாக்கிரமங்களையும், ஒவ்வொருவர் தேக சுபாவத்திற்கு இன்னவை ஏற்றவை இன்னவை ஏற்காதவை என நிச்சயித்தறிந்து, இஷ்டப்பிரகாரம் ஔஷதாதிகள் செய்து உபயோகிக்க உதவியாம்படி தனிச் சரக்குகளின் உபயோகங்களையும், அச்சரக்குகளை யறிய அவற்றின் உருவம், வர்ணம், சுவை, மணம்,இயற்கைக் குணம், செய்கை, துர்க்குணம், பரிகாரம், பதில், பிரமாணம் கிரகசம்பந்தம் முதலியவற்றையும், அவற்றிற்குப் பின் ஒவ்வொருவர் இஷ்டப்படிக்கும், தேக சுபாவத்திற்கு ஏற்றபடிக்கும் செய்துபயோகிக்கும் பொருட்டு அச்சரக்குகளின் நானாவித யோகமுறைகளையும்,வியாதிகளை நீக்கத் தொடங்குமுன் கவனங்கூர வேண்டுவது அசுத்த சத்துக்களை வெளிப்படுத்துவதற்கு முன்பேயாகலின், அவற்றிற்காக மலஜலபேதிகள் வாந்தி முதலிய அசுத்த சத்துக்களை வெளிப்படுத்தும் விரேசன சிகிச்சைகளையும், அதிவிரிவாகவும், தெளிவாகவும் சிறுவர்களும்தெற்றென அறியத்தக்க விதமாகவும், சுகுமார தேகிகளுக்கு உரிய ராஜபக்ஷண பேதிகள் முதலிய பலவகைகளையும், மானிடதேகத்தின் முக்கிய கருவிகளாகிய தலைமூளை, இருதயம், ஈரல், இரைப்பை ஆகிய இவற்றைப் பற்றி நிற்கும் பிரபல வியாதிகளை நீக்கும் முறைகளையும், அவ்விதம் நீக்கின பின், அவற்றைப் பலப்பித்து, தாருட்டிய விர்த்தி, போகசக்தி முதலியவற்றை யுண்டாக்கும் அநேகவிதமான தவ்விய ஔஷத முறைகளையும், மூத்திரக் குண்டிக்காய்களின் பலவீனத்தை நிவர்த்திசெய்து, தாருட்டிய விர்த்தியை

யுண்டாக்கும் முறைகளையும், மதுமேக முதலியவற்றைப் போக்கி, தாருட்டியவிர்த்தியை யுண்டாக்கும் முறைகளையும், மூத்திரக்குண்டிக் காய்களில் விளையும் கற்களை(ஹஸ்மரி ரோகங்களை) நிவாரணஞ்செய்து, தாருட்டியவிர்த்தியை யுண்டாக்கும் முறைகளையும், மனதிற்குநேர்ந்த சங்கடத்தால் உண்டாம் தாருட்டிய நஷ்டத்தை நிர்மூலமாக்கி, தாருட்டியவிர்த்தியை யுண்டாக்கும் முறைகளையும், ரூபவதி அல்லது தம்மனதிற்கு ஏற்ற ஸ்திரியாகிய இவர்கள் மேலேயே மோகித்திருப்பதனால் வேறு ஸ்திரீகளிடத்தில் சமீபிக்க இச்சையெழாமல் உண்டாம் தாருட்டிய நஷ்டத்தைப் போக்கித் தாருட்டிய விர்த்தியை யுண்டாக்கும் முறைகளையும், சொர்ப்பனஸ்கலிதம் அதிகப்படுவதனால் உண்டாம் தாருட்டிய நஷ்டத்தைத் தவிர்த்துத் தாருட்டியவிர்த்தியை யுண்டாக்கும் முறைகளையும், இந்திரிய இழிவு அல்லது இந்திரிய வொழுக்கால் உண்டாம் தாருட்டிய நஷ்டத்தைத் தொலைத்துத் தாருட்டிய புஷ்டியை யுண்டாக்கும் முறைகளையும், துரிதஸ்கலிதத்தால் உண்டாம் தாருட்டிய நஷ்டத்தை யகற்றித் தாருட்டிய விர்த்தியையுண்டாக்கும் முறைகளையும், புருஷஜனன இந்திரியங்களில் பிரதான பாகங்கள், சிறுத்தல், மெலிதல், தளர்தல், சுருங்கல், ஸ்பரிச சலனங்குறைதல், கோணல், அடிசிறுத்து நுனிபருத்தல் ஆகிய இவ்வகைக்குணங்களால் அவை பெரும்பாலும் துர்ப்பலப்பட்டுத் தாருட்டிய நஷ்டமுண்டாய், ஆண்மை நிர்வாக ஏதுவற்றுப் போமாகையால், அவற்றை அறத்தவிர்த்துப் பலப்படுத்திஅச்சக்தியை யுண்டாக்கும் முறைகளாகிய மேற்பூச்சு மருந்துகள் ; திலாக்கள், பட்டிகள்,குழித் தைலங்கள், சுடர்த்தைலங்கள், ஒற்றிடங்கள் ஆகிய யூநாநி, ஹிந்து, ஆங்கிலேய முறைகளாகிய இவற்றையும், இவற்றைப் பலப்பிக்க உட்கொள்ளும் பாயசங்கள், ஹல்வாக்கள், ஆகாரங்கள் முதலிய அனேக நூதனோசித முறைகளையும், முஷ்டிப் பிரயோகத் துர்ப்பழக்க வழக்கங்களினிமித்தம் பலவிதக் கொடிய வியாதிகளாற் பீடிக்கப்பட்டுத் துன்புற்று வருந்தி வாடுவோர் பலர் என்றும், அத்தகைய வியாதிகளைப் பற்றறத் தீர்ப்பது அசாத்தியம் என்றும் கண்டு, அவற்றிற்குத் தக்க சிகிச்சைகள் இல்லையென்று அனேகரால் கைவிடப்பட்டிருந்த போதிலும், நமக்கும் நமது முன்னோர்களுக்கும் அனுபவசித்தமாய்க் கைகண்டவைகளும், அந்தப் பிரதான உறுப்புகளின் சிகிச்சைகளில் அதிகோன்னத மானவைகளும், பூர்வந்தொடங்கி. பரமரகசியமாய் வைக்கப்பட்டும் வந்தவைகளுமான பலமுறைகளையும், நரஜீவகாருண்யமிகுதி பற்றி இங்கு எழுத மனமுவந்தோம், ஏனென்றால், நமது அநுபவாராய்ச்சியாற் கண்டறிந்தமட்டும் இக்கொடிய நோய்களால் வருத்தப்பட்டுவருந்தி மருண்டு மயங்கிச் சுழன்று அவற்றை வெளியிட நாணிப் பரிதவித்து நிற்போர் பலராகலின், அப்பரிதாபக் காட்சியைப் பார்த்துச் சகிக்கவசமற்று; அவர்களின்மீது இரக்கங்கூர்ந்து பரோபகாரார்த்தம் வெளியிட

நேர்ந்தனவேயன்றி மற்றப்படியல்ல ஆகவே இவை, அத்தரத்தோர்க்குப் பலவழியாலும் உற்றசமயத்தில் ஒப்பற்ற ஊன்று கோலாய் நின்று உதவி பயக்காதிரா என்பது திண்ணம். இன்னும் முஷ்டிப்பிரயோக துஷ்டகிரியைகளால் பலபல வகைக்கஷ்ட சாத்திய வியாதிகள் நேரிட்டு, அவற்றால் துன்பமெய்தி வருந்தித் தவிப்பவர்களில் சிலர்க்குச் செய்யும் எவ்விதச் சிகிச்சைகளாலும் தீராமல், இனி வேறு வகைகளாலும் தீரும் என்னும் நம்பிக்கையற்றிருப்பதைப் பிரத்தியக்ஷப் பிரமாணமாய்க் கண்டுணர்ந்து, அவ்வித வியாதிகளுக்கு ஏற்ற முறைகளையும், பெரும்பான்மையோரை இடையறாமல் வருத்தி மெலித்து வரும் மஹாரோகமாகிய பிரமேகரோகத்தை நிவர்த்தி செய்வதற்காம் பல நூதன முறைகளையும், ரத்த ஸ்கலிதம், மலஸ்கலிதம், கோசஸ்தம்ப ரோகம் மகாமோஹரோகம் முதலியவற்றைக் கண்டித்தொதுக்கும் முறைகளையும், அடுத்தடுத்து ஸ்திரீகளைத் துன்பப்படுத்திவரும், சூதக பந்தத்தைப் போக்கும் முறைகளையும், தேக பலத்தையடக்கி யொடுக்கி நாளாவர்த்தியில் பக்ஷணஞ் செய்து வரும் பெரும்பாடு என்னும் ரத்தஸ்ராவக ரோகத்தை அற நிறுத்தி சீர்படுத்தும் முறைகளையும் அடிக்கொருமுறையுண்டாம் கருச்சிதைவு முதலியவற்றைத் தடுத்து அவற்றை ரக்ஷித்து வளர்ப்பதற்காம் பல முறைகளையும், ஸ்திரீ புருஷர்களுக்குச் சிறுபான்மை இயற்கையா யுண்டுபட்டிருக்கும் முக அவலக்ஷணம், வாய்நாற்றம், அக்குள் நாற்றம், வியர்வை நாற்றம், படர்தேமல் முதலியன ஸ்திரீ புருஷ இச்சைக்குப் பலவாற்றாலும் இடையூறுகளாயிருப்பனவாகலின் அவற்றை மாற்றி, இருதரத்தார்க்கும் இச்சை பெருகவுண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் கூந்தல், மயிருதிர்வது தீர்ந்து, தீவிரமாய் முளைத்துக் கறுத்து நீண்டு ஓங்கி வளர்ந்து மினுமினுப்பேறச் செய்வதற்காம் பலமுறைகளையும், கூந்தல் கமகமென்று பரிமளிக்கச் செய்யும் பலவகைக் கூந்தற்சுகந்த தூபமுறைகளையும், முகத்திற்குப் பளபளப்பையும் மினுமினுப்பையும் வசீகரம் முதலியவற்றையும் உண்டாக்கும் முக வசீகரப் பிரயோகங்களையும், வாய் நாற்ற முதலிய அருவருக்கத்தக்க துற்கந்தத்தை நீக்குவதற்காக வாய் சுகந்த முறைகளையும் பல்லிலுள்ள ஊத்தையை அறப்போக்கி முத்தைப் போல் வெளுத்துப் பிரகாசிக்கச் செய்து வாயில் சுகந்தத்தை யுண்டாக்கும் சுகந்ததந்தப் பொடி முறைகளையும், கைக்குழி முதலியவற்றிலுள்ள அரோசிக நாற்றங்களைப் போக்கும் பலவகையான சுகந்த முறைகளையும், ரோமங்களை நீக்க வேண்டும்போது யாதொரு கஷ்டமுமின்றி, மேற்பூசுவதனால் ரோமம் லகுவாக நீக்கப்படும் ரோம சங்கார முறைகளையும், கடிதடம் முதலியவற்றில் உண்டுபடும் துர்கந்தத்தைப் போக்கி சுகுணத்தைத் தரவல்ல சில உசித முறைகளையும், தொண்டையில் கோழைக்கட்டு முதலியவற்றால் உண்டாம் குரற்கம்மல், குரற்கட்டு முதலியவற்றை போக்கி, இனிய குரலோசையை உண்டாக்கும் முறைகளையும் உரூபமான தேகத்தையும் குரூபமாய்க் காட்டும் வெண்தேமல் கருந்தேமல், பல்வித்தேமல் முதலியவற்றைப் போக்கும்

முறைகளையும், தேகத்திலுள்ள அழுக்காதிகளைப் போக்கி, அதற்கு மிருதுவும் மினுமினுப்பும் உண்டாக்கும்படி செய்து வஜீகரத்தைத் தரும் தேகவஜீகர முறைகளையும், தேகத்தில் தேய்த்து ஸ்நானம் செய்து வருவதனால் அதன் துர்க்கந்தங்களை யொழித்துச் சுகந்தத்தை யுண்டாக்கும் ஸ்நான பரிமள முறைகளையும், தேகத்திலும் சிரசிலும் பூசிக்கொள்வதனால் சுகந்தத்தையும், ஆரோக்கிய கரத்தையும், மன மகிழ்ச்சியையும் கொடுத்துதவும் சம்பங்கி யெண்ணெய் முதலிய முறைகளையும், உட்கொள்வதனாலும் மேலே பூசுவதனாலும் தாருட்டிய புஷ்டியைத் தரும் சுகந்த அகருதைல வர்க்க முறைகளையும், தூபக்கலசத்திலிட்டுப் புகைக்க துர்க்கந்ததம், தொற்றுவியாதி முதலியவற்றை யகற்றி வீடுமுழுவதிலும் சுகந்த வாசனையை யுண்டாக்கி மனோரம்மியத்தைக் கொடுக்கும் சுகந்த தூபப்பொடி, சுகந்த தூபத்திரி ஆகிய இவற்றின் முறைகளையும், கொளுத்தி வைப்பதனால் நறுமண வாசனையைத் தந்து மூளை, இருதய முதலியவற்றைப் பலப்படுத்திப் பரமானந்தத்தை யுண்டு பண்ணும் ஊதுவத்தி, சாம்பிராணிவர்த்தி முதலிய பரிமளவர்த்தி முறைகளையும், தேகத்தில் பூசிக்கொள்வதனால் தேககாந்தித் தேகவசீகரம், தேகவன்மை, தேஜஸ், ஆயுள்விர்த்தி முதலியவற்றையுண்டாக்கும் அகரு சந்தனபில்லை முறைகளையும், சந்தோஷ காலங்களில் பூசிக்கொள்ள அற்புத சுகந்த வாசனையைக் கொடுக்கும் சந்தன முறைகளையும், ஆச்சரியப்படத்தக்க விதமான நறுமணந் தரும் பன்னீர் முறைகளையும், வஸ்திராதிகளில் தடவியணிந்து கொள்வதனால் வாசனையேறி, பலநாள் வரையும் மாறாதச் சுகந்தத்தைக் கொடுக்கும் முறைகளையும், நறுமணப்பாக்குப் பிரயோகம், நறுமணச் சுண்ணப்பிரயோகம், தாம்பூலத்துடன் சேர்த்துப் போட்டுக் கொள்வதனால் சுகந்தத்தைத் தந்து, மனக்களிப்பை யுண்டாக்கி, தாருட்டிய விர்த்தியையும் நிர்வாக சக்தியையும் கொடுத்துவும் தாம்பூல பரிமள மாத்திரை முறைகளையும் இன்னும் இவைபோன்ற அனேகவிதம் விதமான முறைகளை ஒழுங்குற இதில் எழுதியிருக்கின்றோம்.

இப்படிப்பட்ட அருமை பெருமையான பாகமுறைகளெல்லாம் இவ்வுலகத்தில் ஒப்பற்ற பிரக்யாதியைப் பெற்ற பண்டிதர்கள் என்று பேர் வாங்கின ஹக்கீம்களின் கைகண்டபாகங்களும், சந்நியாசிகள், யோகிகள் கோஷாயிகள் முதலிய மஹானுபாவர்களால் அனுக்கிரகம் செய்யப்பட்டு, அவற்றைப் பலதடவையும் பரீக்ஷித்து அனுபவ சித்தமான அபூர்வோன்னத முறைகளுமானவைகளே தவிர, கண்ட கண்டபடி ஏட்டில் எழுதிவிடுத்தனவல்ல. இவ்வொவ்வொரு முறையும் தகுந்த பண்டித சிரோமணிகளாற் செய்யப்பட்டுப் பலமுறையும் அனுபவத்தில் வந்து வழங்கினவைகளும், பல சிறந்த பாரிய கிரந்தங்களினின்று ஆதார பலத்தோடு தெரிந்தெடுக்கப்பட்டவைகளுமே. இவ்வபூர்வ பாகமுறைகளை ஒன்றுபடத் திரட்டவும், அவற்றைக் கிரமப்படுத்ததவுமானவைகளில், எத்தனை பிரயாசையும் எத்தனை

திரவிய விரயமும் வேண்டும் என்பதைக் கல்வி மான்களாயுள்ளோர் நாம் எடுத்துச் சொல்லாமலே வலிய அறிந்து கொள்வார்கள்.

ஆன தன்மையினாலே; இக்கிரந்தத்திலும் இதற்கு முந்தின கிரந்தத்திலுமுள்ள விதிகளையும் பாகங்களையும் ஒவ்வொருவரும் கட்டாயம் அறிந்தொழுக வேண்டும்; ஏனென்றால் அனேகர் இவ்வித முறைகளை அறிந்துணர்ந் தொழுகாமல் தங்கள் அரிய வுயிர்களைக் கஷ்டநிலைக்குட்படுத்தியும் அனேகர் தாங்கரிய கஷ்டத்திற்குட்சிக்கி வெளிவர சக்தி குன்றினவர்களாயும், அனேகர் படுரோகங்களிற் சிக்குண்டுழன்று மரணத்தறுவாயிலு மிருக்கின்றார்கள்; அத்தன்மையினர்களும் மற்றவர்களும் இக்கிரந்தங்களின் விதிமுறைகளால் அளவிறந்த பயன்களைப் பெற்றுய்வதுமின்றி, தங்கள் தங்கள் உயிர்க்கும் உற்ற பெருந்துணையாய்க் கொண்டு ரத்தவிர்த்தி தேகபலாபி விர்த்தி, சந்தான விர்த்தி முதலியவற்றை யடைந்து நோயற்ற வாழ்க்கை யுடையவர்களாய் வீற்றிருப்பார்கள் என்பது நிச்சயம்; ஏனென்றால், தாதுநஷ்ட முதலிய வியாதிகளுக்காம் சிகிச்சாகிரமங்களையும், அவ்வொவ்வொன்றிற்கு ஏற்ற ஔஷத முறைகளையும் சொல்லியிருக்கின்றன, இதில் சொல்லப்பட்டிருக்கும், ஔஷதாதிகளெல்லாம் இவற்றின் பாகக்கிரம விதிப்படி உபயோகித்து வந்தால், பிரமாதமான வியாதிகளையெல்லாம் அறக்கண்டித்து படிப்படியாய் ரத்தவிர்த்தியை யுண்டாக்கி, தேகபலத்தைக் கொடுத்து ஆயுள் விர்த்தியை யுண்டுபடுத்தும். யூநாநி ஔஷதங்களோ தேகபலத்தைக் குறைவுபடுத்தாமல், சாந்த குணமாய் நோய்களைக் கண்டித்தகற்றி எவ்விதக் கெடுதியும் செய்யாமல் சொஸ்தஞ் செய்வதில் பேர் போனவை, மற்ற ஔஷதங்களோ வெனில், பெரும்பாலும் தேகபலத்தைக் குன்றச்செய்து, நோய்களைப் போக்கும் என்பது வெளிப்படையான விஷயம், யூநாநி மருந்துகளோ மனத்திற்கு அதிவிருப்பத்தையும் ருசிகரத்தையும் தரத்தக்கவை, இன்னும் கஷ்டசாத்தியமான வியாதிகளிலும் இம்மருந்துகளை உபயோகித்த போதிலும், நிலைமைக்கு ஏற்றபடி சுகுணத்தையே தரும்; அவை பெரும்பாலும் ஆகாரங்களை யொத்தவைகளே, தனுஷ்டிகர்கள், வறிஞர்கள் முதலிய எவ்வகுப்பினர்களும் அவரவர்கள் சக்திக்கு இயன்ற வண்ணம் செய்து கொள்ளத் தக்கவைகள். இதில் சொல்லப்பட்டிருக்கும் ஔஷதங்கள் தக்க செல்வப் பிரபுக்களால் செய்யப்பட்டுப் பல தடவைகளிலும் குணங்கண்டறியப் பெற்றவை.

சந்தனம், நறுமணவர்த்தி முதலிய சுகந்த வர்க்கமுறைகள், இவ்வகைகளில் பிரபலமான தில்லி, மைசூர், தஞ்சை, புதுக்கோட்டை முதலிய தேசாதிபதிகளினால் அங்கீகரித்தேற்று உபயோகப் படுத்தப்பட்டவைகள்.

இம்முறைகளை ஒவ்வொருவரும் பிறர் சகாயமின்றித் தாங்களே செய்து உபயோகிக்கும் வண்ணம் கைபாகம், செய்பாகம், நிறை, மாத்திரை முதலியவைகளை வெகு தெளிவாய் விவரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இம்முறைகளில் குறிக்கப்பட்டிருக்கும் இதர பாஷைகளில் பேரில்லாத சில யூநாநி மருந்துகளுக்கு அவற்றை லகுவாய்த் தெரிந்து கொள்ளும்படி அவற்றின் உருவம், அடையாள முதலியவற்றையும் சமயோசிதமாய் ஆங்காங்கு வரையப்பட்டிருக்கின்றன அவை கொள்பவர்களுக்கு எவ்விதமயக்கத்தையும் கொடா.

இக்கிரந்தத்திற்கு உபபலமாக அநேக வைத்தியக் கிரந்தங்களின் சகாயமும், அனேக பண்டிதர்களின் உதவியும் வேண்டியிருந்தன; அந்தச் சாஸ்திரங்களுக்கும், அவற்றை ஆக்கியோர்களுக்கும், இதற்குதவியாய் நின்ற பண்டிதர்களுக்கும் சீருஞ்சிறப்பும், பெருமையும், கீர்த்தியும் உண்டாகாமற் போகா என்பது சத்தியம்.

முதற்பாகம் இரண்டாம்பாகம் ஆகிய இக்கிரந்தங்களால் ஸ்திரி புருஷர்களாகிய ஒவ்வொருவரும் அடையும் பிரயோஜங்களாவன:- பல வைத்தியசாஸ்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்றறிந்து தேறித்தெளிந்து அனுபவப்பட்ட பாரம்பரிய சிகிச்சைகளைப் பார்க்கிலும் இக்கிரந்தங்களானவை வகைவகையான பொருட்களைத் தன்னகத்தே யடக்கிக் களங்கமறத் துலக்கிக் காட்டும் பளிங்கைப்போல், மனத்தூய்மையுடனே நம்பிக்கை வைத்து அறிய விரும்புகின்றவர் களுக்கெல்லாம் பிரதானமாய்த் தாதுநஷ்டத்தைப் பற்றியுள்ள சகல விவரங்களையும், அவற்றைப் போக்கி, தாருட்டிய விர்த்தியை யுண்டாக்கும் பலவித சிகிச்சா கிரமங்களையும் திட்பநுட்பமாய்த் தெளியவிளக்குவனவாம் என்பதே.

ஆனதுபற்றி, ஆயுள்விர்த்தி, பலாபிவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய இம்மைக்குரிய பலவிர்த்திகளை விரும்புகின்ற ஒவ்வொருவரும் இவ்விரண்டு பாகக்கிரந்தங்களையும் அலக்ஷியம் செய்யாமல் ஆதியந்தமாய் மனங்கவிந்து ஆழ்ந்த கருத்துடனே ஊன்றி வாசித்தாராய்ந்து, தங்கள் தங்கள் ஆன்மாவிற்கு உற்றாண்மையாகப் பூரணசம்மதத்துடன் மனப்பூர்வமாய் அங்கீகரித்தேற்று இவற்றில் விவரிக்கப்பட்டிருக்கின்ற வியாதிகளின் சிகிச்சாகிரம பாகங்களை முறைபட வாசித்து அவதானப்படுத்திக் கிரமப்பிரகாரம் சிகிச்சை செய்து கொள்வதனால் இம்மைக்குரிய பலன்களை இனிது பெற்றனுபவித்துத் திடகாத்திர திண்ணியதேகிகளாய்ச் சுகித்து வாழ்வடைந் தோங்குவார்களாக.

ஆமீன் யாறப்பல் ஆலமீன்

பிஸ்மில்லா ஹிர்றகுமா நிர்றஹீம்

யூநாநி வைத்திய தாருட்யவிர்த்தி போதினி

இரண்டாம் பாகம்

''யூநாநி வைத்திய தாதுவிர்த்தி போதினி'' முதற்பாகத்தில் தாது நஷ்டத்தின் காரணங்களை அதிக விரிவாயெழுதி, அவற்றைப் பற்றியுள்ள சிகிச்சாக் கிரம நெறிமுறைகளை ஒருவாறு பொதுவாய்ச் சொன்னோம். தாதுநஷ்ட வகை பதினான்கில்; நான்குவகை சிகிச்சைகளை மாத்திரம் விரிவுபடச் சொன்னோம். அவ்வாறே மீந்தவகைகளின் சிகிச்சாக்கிரம யோகங்களை எழுதி வருகையில், அவற்றுடன் அவற்றிற்கு அனுசரணையாக வியாதிகளின் பொதுவான குறிகுணங்களை பொது சிகிச்சை முதலியவைகளும் கூடியிருக்க வேண்டுமென்று அனேகர் கேட்டுக் கொண்டமையால், அவை உத்தமமானவை என்றும், அவசியகமானவை என்றும், அவற்றால் அளவிறந்த நற்பலன்கள் உண்டாம் என்றும் நமக்குத் தோன்றினபடியாலும், முகவுரையில் தொகுத்துக் காட்டின வண்ணம் நமக்கு அடங்கா மனவெழுச்சியும், விருப்பமும் உண்டானபடியாலும்; முன்னிலும் அதிகத் தெளிவாகவும் கூடின மட்டும் சுருக்கமாகவும் எழுதத்துணிவு கொண்டோம்.

முதற்பாகத்தில் 5-வது மூளையைப் பற்றின தாதுநஷ்ட சிகிச்சை யென்பதில் அசுத்த சத்துக்களாவன:- வாதநீர், பித்தநீர், சிலேட்டுமநீர் ஆகியவைகளாம்.

சகோதரர்களே, அவற்றை நிவர்த்தி செய்யும் அவுடத பாகங்களை யெழுதுமுன், சுத்த சத்துக்கள் அல்லது இயல்பான சத்துக்கள்; அசுத்த சத்துக்கள் அல்லது அசுபாவ சத்துக்கள் இன்னவென்றும்; அவை யுண்டாகும் விதம் இவ்வாறென்றும் அவை இத்தனை யென்றும் அவற்றின் சுபாவகுணம், தொழில் முதலியவை யின்னின்ன வென்றும்; அவை தேகத்திற்கு எவ்விதம் உபயோகப்படுகின்றன வென்றும், அவற்றில் ஒவ்வொன்றின் அளவுப்படி யிருப்பதுவே தேகத்தின் சுகமான நிலை, அவற்றின் வேறுபாடுகளே வியாதி யென்றும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆனால் அ;வற்றின் விபரம் மிகவும் விரிவான தாகையால் கூடினமட்டுந் தெளிவாய்த் தனியேயெழுத உத்தேசித் திருக்கினும், தாது நஷ்டத்திற்குக் காரணமாகிய சில வியாதிகளுக்குச் சிகிச்சை எழுத வேண்டியிருக்கிறது. வியாதியின் காரணத்தை அறியாமல் சிசிச்சை செய்வது குருடன் அம்பெய்தது போலவே முடியும். ஆகையால் வைத்தியர்களும், வைத்தியர்களல்லார்களும் அல்லது தமிழ் வாசிக்கத் தெரிந்த யாரேனும்,

வியாதியின் காரணத்தை நன்றாய் அறிந்து கொள்ளத் தக்கதாய்க் கூடினமட்டும் விபரமாய் இவ்விடமும் எழுதப்படும். ஆனால் வியாதியின் காரணத்தை நன்றாயறிந்து கொள்ளப் பிரியமுள்ள ஒவ்வொருவரும் இதில் சொல்லப்பட்ட பொதுவிதிகளையும் சிறப்பு விதிகளையும் தெரிந்து கொண்டு ஞாபகத்தில் வைக்க வேண்டியது, அப்படிவைக்காமல் மேற்போக்காக பார்த்துவிட்டு நாமும் புத்தகத்தை வாசித்து விட்டோமென்று சொல்லி, வியாதியின் காரணம் விளங்கவில்லையென்பது அவர்களது குற்றமென்பதும் எமது குற்றமென்பதும் வாசிப்பவர்களே சொல்ல வேண்டும். நாம் எந்த விஷயங்களையும் ஆழ்ந்த கருத்துடன் நன்றாய் வாசித்தறிய வேண்டியது. அப்படிச் செய்யாததினாலேயே நாம் பல அவதூறுக்குள்ளாகின்றோம்.

சில நவீன போலி நாகரீகிகள் தங்கள் முன்னோர்களினால் அனுபவ யுக்தமாகவும் சாஸ்திர யுக்தமாகவும் கண்டு உண்டாக்கி யிருக்கிற அரிய நூற்களின் விஷயங்களின் உண்மையை அணுத்துணையேனும் அறியாது அவ நம்பிக்கையுற்று, தாம் நடித்துவரும் நடையே சிரேஷ்டமானதென்றும், அந்தப் பாஷையிலுள்ளதே வேதவாக்கியமென்றும் நம்பி, சுதேச வைத்திய மாவதென்ன, யூநாநி வைத்திய மாவதென்ன, சுதேசிகளுக் கென்ன தெரியும் என்றும் நிந்தித்து, சுதேச பாஷையிலுள்ள எவ்வகை நூற்களையும் கையினாலும் தொடார்கள். ஏனெனில், அவர்கள் தம் சொந்த பாஷைகளாகிய தமிழ், ஹிந்தி முதலியவைகளை எவ்வளவும் கவனிப்பதில்லை. சிலர் அப்பாஷைகளை வாசிப்பதும், பேசுவதும் தமக்கு கௌரவக் குறைவாய் எண்ணுவார்கள். உண்மையில் தம் பாஷைகளின் நெடுங்கணக்கும் பூரணமாய்த் தெரியாது அவர்களுக்கு எப்படி சுதேச பாஷா ஞானம் இல்லாமற் போய் விடுகிறதோ அப்படியே சுதேசாபிமானமும் போய்விடுகிறது. நம் தேசாசாரங்களை யிகழ்ந்து, அன்னிய தேசா சாரங்களையும் புகழ்ந்து திரிதலே அவர்கள் தொழில்.

இந்தப் போலி நாகரீக வாதிகள் இப்படி நொடித்தாலும் கற்றறிந்த வல்லமைசாலிகளாகிய ஆங்கிலேய பண்டிதர்கள் நமது சாஸ்திரங்களை இகழ்ச்சியாய்த் தள்ளிவிடாமல் மிகுந்த ஆவலுடன் கற்று அவற்றின் உண்மையை யறிந்தும், தங்கள் புத்தியினுட்பத்தின் வல்லமையினாலும் நூதன காரியங்களைக் கண்டுபிடிக்கிறார்கள்; இன்னும் அந்த நாகரீகிகளும், மற்றும் சிலரும் அவுடதத்தின் குணம் எவ்வித மாயினும் கவனியாமல் இங்கிலீஷ் பேரிடப்பட்டு, பத்திரிகைகளிலும் வேறு மாதிரியாகவும் இங்கிலீஷில் பிரசுரிக்கப்பட்டிருந்தால் அதன் நிமித்தமாகவே அதை நம்பி வாங்குவார்கள். அன்னிய தேசங்களிலிருந்து அவ்விதம் வரும் பாடென்ட்

(Patent) அவுடதமெல்லாம் உண்மையானதே யென்று நம்பலாமென்றால் அவைகளைப் பற்றி வெகுநாள் அனுபவசாலியாகிய ஓர் சிறந்த ஆங்கிலேய டாக்டர் எழுதுகிறதாவது,

இந்தியர்கள் அன்னிய தேசத்து பாடென்ட் அவுடதங்களை (Patent) உபயோகிக்கும் அறிவீனத்தைக் காண மேலான மதியீன மொன்றுமில்லை.

அவை உண்மையில் பாடென்ட் அவுடதமா யில்லாவிட்டாலும் அவர்கள் அதை உபயோகிப்பதெல்லாம், அவ்வவுடதங்கள் பாடென்ட் என பேரிடப்பட்டிருப்பதுவே காரணம்.

அவ்வகை அவுடதங்களில் பதிப்பித்திருக்கிற முத்திரைகள், வியாபாரிகளினால் செலுத்தப்பட்ட வரிப்பணத்திற்காகப் பதிக்கப்பட்டவைகளே யொழிய வேறல்லவென்றும், இன்னும் அந்த அவுடதங்களினால் இராஜாங்கத்தார்களினால் நியமிக்கப்பட்ட வல்லமை சாலிகளாகிய பண்டிதர்களினால் சோதனை செய்யப்பட்டு அவற்றால் நேரிடும் மோசம் அபாயம் முதலியவைகளில் நின்றும் காக்கப்படாதவைகளென்றும் அறியார்கள்! இன்னும் முக்கியமாய் பிறப்பு உறுப்புகளின் வியாதிகளுக்கு உபயோகப்படும்படியாய் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் அன்னிய தேசத்து அவுடதங்களின் விளம்பரங்களில் பலவற்றின் கீழ் கௌரவம் பொருந்திய பட்டப் பெயராகிய டாக்டர் என்றும் எம்.டி.யென்றும் கையொப்ப மிட்டிருக்கிறது உண்மையை விளங்கப்புகின் ஒன்றிரண்டும் தேறுவதும் அரிதே ஆகையால், தேகசுபாவத்தை யறியாமலும், மருந்தினது தன்மையைத் தெரிந்து கொள்ளாமலும் அவ்வித அவுடதங்களை உபயோகிப்பது அபாயத்திற் கிடமாகும். ஏனெனில் மேற்கண்ட விதமாய் சில வகுப்பிலுள்ள பாமர வைத்தியர்களினால் செய்யப்பட்டு அந்த டாக்டர் தீநீர், இந்த டாக்டர் லேகியம், ஆன்மவிருத்தி திராவகம் "Elixir of Life" ஆன்ம ரட்சணி "Lite Drops", மனோரஞ்சித பரிமளதைலம் "Cardial Balm" எனப் பலவகைப் பெயரிடப்பட்டு விற்கப்படுகின்றன. உண்மையான அவுடத மிதுவென்றும் அநுபவமின்றி அறிவது அதிகக் கஷ்டமாகையால் இவ்வகை அவுடதங்களை அனுபவப்படும் வரையில் நீக்குவதே உத்தமம்.

இவ்விதமாய்க் கண்டித்துப் பாமர வைத்திய சிகாமணிகளைப் பற்றி வெகுவாய் எழுதியிருக்கிறார். அங்கப்படியெனில் இங்கதற்கு ஆயிரமடங் கதிகமே! ஆகையினால் தேகசுபாவம், தனிச்சரக்குகளின் குணம் முதலியவைகளைப் பற்றிக் குறைந்த பக்ஷம் சொற்ப ஞானமேனும் ஒவ்வொருவரும் அடைய வேண்டியது அவசியம்.

இன்னும் வேறு சில கனவான்கள் அதிக ஆவலுடன் நூல்களை வாங்கி, வாங்கின அன்றே ஒருவாறு வாசித்து முடித்துவிடுகின்றார்கள். பின்பு அதைப் பார்வையிட நேரிடுகிறதில்லை. இப்படிச் செய்வதினாலும் அதிக பிரயோசன முண்டாகா தென்பது திண்ணம். இதனால் இங்கிலீஷ் முதலிய இராஜ பாஷைகளைப் படிக்கக்கூடாதென்பது அடியேன் கருத்தல்ல. ஆனால் சொந்தப் பாஷைகளை நன்றாய்ப் படித்து அதிலுள்ள சாஸ்திரங்களைக் கற்காமல் அலட்சியம் செய்து, அன்னிய பாஷைகளை மட்டும் விரும்பிக் காலத்தைக் கழிப்பதும், இந்தியர்களாகிய நமது தேகக் கூறுபாட்டிற் கேற்றவைகளும், குணத்தில் சிரேஷ்டமானவைகளும், மிகவும் சொற்பக் கிரயத்திற் கிடைக்கத்தக்கவைகளுமாகிய இத்தேசத்து மூலிகை முதலிய அவுடதத்தை விரும்பாமல், விலை பெற்றவைகளும் அனுபவ யுக்தமாய்க் குணாகுணங்கள் நிச்சயிக்கப்படாதவைகளுமாகிய அவுடதங்களை, கையிலில்லா விட்டாலும், கடன்பட்டு பெருமைக்குச் செலவிட்டு, வாங்கி வருவதுமே மறுப்பு. ஆகையால் இது தமிழ் நூல்தானே யென்று அலட்சியம் செய்யாது சிரத்தையோடு வாசித்து இதிலுள்ள உண்மையை யறிய வேண்டுமென்பதே முதன்மையானது.

மேலும் நாம் ஒவ்வொருவரும் அறிய வேண்டிய விஷயம் அநேகமாயினும் முக்கியம் இரண்டு விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். ஒன்று அவரவர்களின் தேகசம்பந்தமானது, மற்றொன்று அவரவர்களின் மத சம்பந்தமானது, இவ்விரண்டிலும் அதிக முக்கியமானது தேகசம்பந்தமானதே, தேகசம்பந்த மானதிலும் பிறப்பு உறுப்புக்கள் பற்றினவைகளே அதிக முக்கியமானவை.

ஆகையால் ஒவ்வொருவரும் அவரவர்கள் சாவகாசத்திற்கும் சக்திக்கும் ஏற்றபடி ஒவ்வொன்றாய் நன்றாய்த் தெரிந்து கொள்ள வேண்டியது. பின் காணும் விஷயங்கள் சற்று கடினமானதா யிருந்தாலும் அவற்றைக் கவனித்துத் தாங்களேயாயினும் அல்லது தெரிந்தவர்களைக் கொண்டாயினும் கற்க நன்றாய் விளங்கும். அஃபடி விளக்கிக் கொண்டால் எந்த வியாதியாயினும் அவற்றின் காரணத்தைக் கண்டுகொள்ளக்கூடும். காரணத்தைக் கண்டுகொண்டால் சிகிச்சையும் எளிதில் செய்து கொள்ளலாம். இன்னும் பலவிதத்திலும் உபயோகப்படும்; எப்படியெனில் பலநாள் அநுபவமுள்ள நல்ல வைத்தியர்களுக்கும் ஒருவன் தேக சுபாவத்தைக் கண்டுகொள்ள குறைந்தபட்சம் இரண்டு மூன்று தடவையேனும் பரீட்சிக்க நேரிடும்; ஆனால் சற்று விவேகமுள்ளவர்களுக்கு அனுபோகத்தினால் தங்கள் தேகம் சூடானதென்றும், குளிர்ச்சியானதென்றும், சூடுங் குளர்ச்சியும் சமமான தேகமென்றும் தெரிந்திருக்கிறது. அத்துடன் சிறிது சாஸ்திரப் பயிற்சியும் இருந்தால் "பொன்மலர் நாற்ற முடைத்து" என்பது

போலிருக்கும். தேக சுபாவம் நன்றாய்த் தெரிந்திருந்தால் தங்கள் தேகத்திற் கேற்றவைகளைச் சேர்த்தும், ஏற்காதவைகளை நீக்கியும் வியாதி வராமல் தடுத்துக் கொள்ளவும், அப்படி வியாதி வந்தவிடத்திலும் தக்க பரிகாரம் செய்து கொள்ளவுங்கூடும், ஒருவேளை தங்களால் நீக்கிக் கொள்ளாத வியாதியுற்ற காலத்தும் பாமர வைத்தியர் கைப்பட்டு படுகுழியில் விழாமல் தப்பித்துக் கொள்ளவும், தக்க வைத்தியர்களைத் தெரிந்து கொள்ளவும், தமக்கு இன்னின்ன வஸ்துக்களினால் அதிக கெடுதியு முண்டாகின்றன வென்று தமது தேக சுபாவத்தைப் பற்றி விபரமாய்ச் சொல்லவுங்கூடும். இப்படிச் செய்வது வைத்தியர்களுக்குப் பேருதவியா யிருப்பதுமன்றி வியாதியஸ்தர்களுக்கும் எண்ணிறந்த பிரயோசனத்தையு முண்டாக்கும் எப்படியெனில் ஒரு சுபாவத்திற்கு அபினி கொடிய நஞ்சாய் விரைவான மரணத்தை யுண்டாக்குகிறது. சிலருக்குக் காப்பிக் கொட்டையானது நீரிழிவையும், பித்தாதிக்கத்தையு முண்டாக்குகிறது. சிலருக்கு ஊமத்தன் உன்மத்தத்தை யுண்டாக்கி விடுகிறது. சிலருக்கு பசும்பால் பேதி முதலியவைகளை யுண்டாக்கி விடுகிறது. இப்படிச் சாதாரணமாகிய பதார்த்தங்களும் ஒவ்வொருவருக்கு அதிக தீங்கை விளைவிக்கிறது. விஷயம் அதிகம் விரிவாகிறபடியால் முடிவான விண்ணப்பம் யாதெனில் தங்கள் தேகசுகத்தை விரும்பும் ஒவ்வொருவரும் அத்யாவசியம் பின்வரும் விஷயங்களைப் பாடஞ்செய்து ஞாபகத்தில் வைக்க வேண்டும் என்பதே. இவ்விஷயங்களையெல்லாம் மஹா வல்லமைசாலிகளாகிய பண்டித சிரோன்மணிகளினால் உண்டாக்கப்பட்ட அருமையான நூற்களினின்று தெரிந்தெடுத்தும், அனேக ஆண்டாய்ப் பலரால் அனுபவயுக்தமாய்ப் பிரத்தியக்ஷமான விஷயங்களையும் ஒன்றாய்ச் சேர்த்துத் திரட்டி பரிபூரணமாயப் பரோபகாரச் சிந்தையுடன் யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளும்படி கூடினவரையில் விபரமாய் எழுதத் துணிந்தேன்.

சுபாவப் பிரகிருதிகள் இயல்பான மூலப்பகுதிகள்

தேக உற்பத்திக்கும் தேக ஏற்பாட்டிற்கும் ஆதி கட்டளையா யிருக்கப்பட்டவைகளுக்கு தேகசுபாவப் பிரகிருதிகளெனப் பெயர். அவற்றுள் ஒன்றேனும் இல்லையாயின் தேகத்தோற்றம் ஒருக்காலுமுண்டாகாது.

அவை 7. 1-வது பூதங்கள் அல்லது மூலப்பொருட்கள், 2-வது குணங்கள், 3-வது சத்துக்கள், 4-வது உறுப்புக்கள், 5-வது ஆன்மாக்கள், 6-வது சக்திகள், 7-வது தொழில்கள்.

பூதங்கள், குணங்கள், சத்துக்கள், உறுப்புக்கள், ஆன்மாக்கள் ஆகிய இவ்வைந்தும் தேகசுபாவமுடையதற்கு முதன்மையானவைகள்.

குணங்கள், சக்திகள் ஆகிய இரண்டும் அதற்கு கண்கூடானவைகள்.

தொழில் அதற்குத் தீர்ச்சியா யிருக்கிறது.

ஆகையினாற்றான் இவ்வேழிற்கும் தேகசுபாவப் பிரகிருதியெனப் பேராயிற்று.

தொழிலானது தேகசுபாவத்திற்குப் புறப்படுத்தப்பட்ட தாயினும் சக்திக்கும் தொழிலிற்கும் அதிக நெருங்கிய சம்பந்தமுண்டா யிருப்பதினாலேயே தொழிலையும் தேக சுபாவப் பிரகிருதிகளோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன.

தேகசுபாவம் இன்னதென்பதிலும் பல அபிப்பிராயங்களுண்டு.

"பண்டிதர் பக்ராத் சொல்கின்றார் உணர்ச்சி, முயற்சியின்றி அசைவு, அமைதி முதலிய எல்லா இயக்கத்திற்கும் முதற்காரணமாகிய மனிதருடைய தேகசம்பந்தமானவைகளை ஒழுங்காக நடத்திவரும் சக்திக்கு தேகசுபாவமெனப் பெயர்."

பலர்தூன் பண்டிதர் சொல்லுகின்றார் தேகத்திலுண்டாகும் மாறுபாடுகளைச் சமரசப்படுத்தி, அதைக் காப்பாற்றும் பொருட்டுக் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஓர் சக்திக்குத் தேகசுபாவம் என்று பெயர்.

அக்கீம் அல்லாமா சொல்கிறார். வைத்திய பரிபாஷையில் தேகசுபாவ மென்பதற்கு நான்கு அர்த்தமாம். 1. தேகத்தின் குணங்களுக்குப் பெயர். 2. தேக ஏற்பாட்டின் விபரத்திற்குப் பெயர். 3. தேகத்தின் விகற்பங்களைச் சமரசப்படுத்திச் சீராய் பதிப்பிக்கும் சக்திக்குப் பெயர். 4. ஆன்மாக்களின் இயக்கத்திற்கு பெயராம்.

இன்னும் சிலர் பலவிதமாய் மாறுபடுகின்றார்கள்.

ஆனால் பெரும்பாலோர் சம்மதமாவது இயக்கத்திற்கும் அமைதிக்கும் முதற் காரணமாகி முயற்சியும் உணர்ச்சியுமின்றித் தனக்குத்தானே நின்று தேகத்திற்கு வருந்தீமையை நோக்கி, நன்மையைந் தருவதற்குக் கர்த்தாவாகிய சக்தியே தேகசுபாவ மெனப்படும்.

நாம் நமது அனுபவத்திலும் அவ்விதசக்தி நம் உடல் பாதுகாப்பிற்காக உண்டாயிருக்கிறதாகத் தெரிந்துகொள்ளலாம்.

நமது கண்ணிற்கு அல்லது தலைக்கு நேரே ஏதேனும் கல் எறியப்பட்டால் அதனால் நமக்கு ஒரு கெடுதி நேரா வண்ணம் முன் அவயவத்திலும் பலமானதாகிய கையினால் தடுத்துக் கொள்கிறோம். அல்லது தலையைச் சாய்த்துக் கொண்டாகிலும், வேறு எவ்விதமாகிலும் அதினின்றுந் தப்பித்துக் கொள்வோம். இப்படித் தூண்டுதல் செய்வதற்கு அடிப்படையானது தேகசுபாவம்.

இப்படி வெளி அபாயத்தினின்று காப்பாற்றுவது போலவே உள்ளிலும் செய்கிறது. சிலவேளை தேகத்திற் கொவ்வாதவைகளை மலம் வழியாகவும், சிறுநீர் வழியாகவும், இரத்தமாகவும் அல்லது தன்சமயத்திற்கும் சக்திக்கும் ஏற்ற அளவாய் வெளிப்படுத்தும், யாதொரு காரணமின்றிச் சில சமயங்களில் பேதியாய் நின்றுவிடுகிறது. பேதியான பின் தேகத்திற்கு அதிக சவுக்கியமா யிருக்கிறது.

சிலவேளை யாதொரு காரணமுமின்றி மூக்கிலிருந்து இரத்தம் ஓடி வருவதுமுண்டு. அப்படி வந்தபின், காக்கை வலி, உன்மத்தம் முதலிய மகாவியாதிகள் அனேகருக்கு குணமடைந்திருக்கின்றன. இன்னும் சில நோய்கள் யாதொரு மருந்துங் கொடாமலே குணமடைந்துவிடுகின்றன. அப்படி குணமடைவதற்குக் காரணம் தேகசுபாவமானது நாளடைவில் தேக விகற்பத்தைச் சீர்ப்படுத்தி வந்ததினாலேயாம்.

மேற்கண்ட உதாரணங்களினால் நாம் அறிய வேண்டியது யாதெனில், தேகத்தில் ஏதேனும் ஓர் மாறுதல் நேரிடில் தேகசுபாவமானது அதை ஒழுங்காக்க முயற்சி செய்கிறது அப்பொழுது மாறுபட்டதின் சக்தி அதிகரித்திருந்தால் அதை எதிர்க்கத் தன் சக்தியோடு உதவி தேடுகிறது; அப்பொழுதுதான் நாம் வியாதியுற்றதாகத் தெரிந்து வைத்தியத்தைத் தேடுகிறோம். பின்பு மருந்தாவ தென்னவெனில், தேகசுபாவத்திற்கு வேண்டிய உதவியைத் தரவாவது அல்லது வியாதியின் பலத்தை குறைக்கவாவது உபயோகிக்கும் ஒன்றே மருந்தாம். அப்படி யொன்றை உபயோகிப்பதனால் தேகசுபாவமானது அதைமீறி வெற்றி பெறுவதே குணமடைவதாகும்.

இப்பொழுது நாம் தேகசுபாவம் இன்னதென்றும், அது தேகத்தோடு எப்படி சம்பந்தப்பட்டிருக்கிறதென்றும், அதனால் உண்டாகும் பயன்கள் இன்னதென்றும், தேகத்தில் வியாதியுற்றபோது அதைத்தடுக்க முயலுகிறதென்றும், இதற்கு அதிக பலத்தை யுண்டாக்கவாவது அல்லது வியாதியின் பலத்தை குறைக்கவாவது அவுடதப் பிரயோகம் வேண்டுமென்றும், அப்படிச் செய்வதினால் தேகசுபாவ மீறி அதை வென்று கீழ்ப்படுத்தி விடுகிறதென்றும் அறிந்தோம்.

தேகசுபாவப் பிரகிருதிகள் அல்லது தேகசுபாவ அங்கங்கள் ஏழின் விபரம் I-வது பூதங்கள்

(Elements)

இந்து, மகம்மதிய தத்துவ சாஸ்திரிகளால் பூதம் ஐந்தெனச் சொல்லப்படுகின்றது.

அவையாவன:- ஆகாயம், தேயு, வாயு, அப்பு, பிரிதிவி ஆகியவைகளாம்.

ஆனால் யூநாநி வைத்திய சாஸ்திரிகளோ அப்பூதம் நான்கென்றே சொல்லுகிறார்கள். எப்படியெனில் முந்தினதாகிய ஆகாயத்திற்கு உருவமில்லாதபடியாலும், அது மற்றெந்த பூதத்தோடு சேர்கிறதோ அதன் குணமேயன்றி அதற்கு வேறு சொந்த குணமில்லை யாதலாலும் அதை பூதமென்றென வொழித்து நான்கெனச் சொல்லுகின்றார்கள்.

பூதம் என்பது ஜீவவர்க்கம், தாவரவர்க்கம், தாதுவர்க்கம் முதலிய எல்லாவற்றின் ஆதி அம்சமும் பகுக்கப்படாததுமாகிய சங்கத்திற்குப் பேர். இஃது சுபாவமும் பிரத்தியக்ஷமுமாகிய பல கோலமுள்ள வைகளாய்ப் பக்குவப்படாதிருக்கும்.

தேயு-சூடும் வரட்சியும், வாயு-சூடுங் கொழுமையும், அப்பு-குளிர்ச்சியும் கொழுமையும், பிரிதிவி-குளிர்ச்சியும், வரட்சியும், உடையனவாயிருக்கும்.

2-வது பூதகுணங்கள்
(Temperament)

பூதங்களின் அம்சங்கள் சிறுத்து ஒன்று மற்றொன்றோடு சேரும்போது, அவ்வொவ்வொன்றும், ஒன்றிற்கொன்று தம் தம் விகற்பமாகிய சக்தியினால் அவை ஒன்றிற்கொன்று தம் மிகுதியையும் தீக்ஷண்ணியத்தையும் முறையே குறைத்தும் சாந்தி செய்தும் அவ்வொவ் வொன்றும் செய்பொருள் செய்யப்படு பொருளையும், செயப்படுபொருள் செய்பொருளையும் மருவி அவ்வவற்றின் மூலாதாரத்தின் சார்பையே அடைந்து ஓர் முடிவைப்பெறும். இப்படி முடிவெய்திய பயனுக்குத்தான் பூதகுணங்களெனப்பேர்; இதன் கருத்தாவது; சூடு குளிர்ச்சியிலும், குளிர்ச்சி சூட்டிலும் சேர்வதினால் உண்டாகும் ஓர் முடிவாகிய பயனுக்குத்தான் பூதகுணமெனப் பெயர்.

இவற்றின் விபரம் மிக்க விரிவான தாகையாலும், இவற்றைக் கல்லாதார்க்கும் உணர்த்தப் புகுந்தால் அநேக உதாரணங்கள் எடுத்துக்காட்ட வேண்டியிருந்தாலும் இம்மட்டில் நிறுத்தப்பட்டது.

3-வது சத்துக்கள்
(Humours)

இரைப்பையை அடைந்த உணவுகள் அப்பையினது செயலால் புனர்ப்பாகம் பண்ணப்படும்போது மாசுநீங்கிச் சுத்தரூபமாக

எஞ்சிநிற்கும் ரசமே சத்தெனப்படுவது. முக்கியமாய் இவற்றைப்பற்றி நாம் விவரமாய்த் தெரிந்து கொள்ள வேண்டியிருத்தலால் பின்னர் அவற்றைப் பற்றிச் சொல்வோம்.

4-உறுப்புகள்

(Organs)

நாம் ஏற்றுக் கொள்ளும் உணவு முதலியவைகளின் சத்துக்களாலுண்டாகி அவற்றையே கையாளும் கருவிகளே உறுப்புக்களென்று கொள்ளப்படும்.

5-வது ஆன்மாக்கள்

(Souls)

சுத்த சத்துக்களின் காரியமாய் உடம்பெங்கும் அந்தர் வியாபியாய் நிற்கும் சுத்த சூக்கும தத்துவமே ஆன்மா.

6-வது காரணங்கள்

(Life Functions)

தேகத்தில் நின்று ஆன்மாவோடு கூடி இந்திரியங்களைத் தொழிற்படுத்து மவைகள் காரணங்களெனப்படும்.

7-வது தொழில்கள்

(Actions)

காரணங்களின் செயலே தொழிலெனப்படும்.

மேற்கண்ட இவ்வேழுங் கூடினதே தேகசுபாவம்; இவைகளைப் பற்றிய விவரங்களெல்லாம் ''பூநாறி வைத்திய பாலபோதினியில்'' விவரித்து எழுதப்படும்.

சத்துக்கள்

நாம் உட்கொள்ளும் எவ்வகை பதார்த்தங்களும் முதலில் இரைப்பையிற் செல்லும். இரைப்பை அவற்றைப் புனர்ப்பாகம் செய்யும். பின்பு அப்பதார்த்தங்கள் தம் சுயரூபத்தையொழித்து நீர் வடிவை யடையும். இன்னும் இரைப்பையானது இதிலுள்ள சக்கையைப் பிழிந்து மலமாகத் தள்ளிவிடும். சக்கைநீங்கி மிகுந்த பாகமானது நீர்த்துவமாகவேயிருக்கும். இவ்விதமாய் பதார்த்தங்கள் இரைப்பையில் முதல் முதல் அடைந்த வேறுபாட்டிற்கே சத்தெனப்படும்.

சத்தெனினும், சாரம் எனினும் ஒன்றே; ஆனால் இரைப்பையிற் பக்குவப்பட்டதற்கே சத்தென்னுஞ் சொல் வழங்கப்படுகின்றது.

நமது உடலானது பூத சம்பந்தங்களினால் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றதென்பது தெரிந்த விஷயமே.

அப்படியே எல்லா பதார்த்தங்களும் அந்நான்கின் தொந்தங்களே யென்பது பிரசித்தம். ஆனால் சில பதார்த்தங்களில் பூதங்களுள் ஒவ்வொன்றின் குணம் அதிகரித்தும், சில பதார்த்தங்களில் சமமாயு மிருக்கும். எந்தப் பதார்த்தத்தில் எப்பூதத்தின் குணம் அதிகரித்திருக்கிறதோ, அது மிகுதிபற்றி அப்பூதத்தின் குணமுடைய பதார்த்தமென்று சொல்லப்படும். எப்படியெனில், வாயுவின்குணம் அதிகரித்திருக்கிற பதார்த்தங்கள் வாயுபதார்த்தமென்றும், தேயுவின் குணம் அதிகரித்திருக்கிற பதார்த்தங்கள் சூடான பதார்த்தமென்றும், அப்புவின் குணம் மதிகரித்திருக்கிற பதார்த்தங்கள் சீதள பதார்த்தமென்றும், சமமாகிய குணமுடையவைகள் இரத்தவிர்த்தி பதார்த்தமென்றும் சொல்லப்படுகின்றன.

முன் சொன்னபடி நமது தேகமும் இந்நான்கின் சம்பந்தமாயிருக்கிறபடியாலும் நமது திருஷ்டிக்குத் தோற்றுகின்ற தாது மூலஜீவப் பொருள்கள் யாவும் இந்நான்கு பூதங்களின் வகையே யாகையாலும் இந்நான்கின் உதவியே நமக்கு அவசியமானது. ஆகையினால் நாம் வாழும் பொருட்டு இப்பதார்த்தங்களைப் பலவகையாக உபயோகிக்கின்றோம்.

நாம் ஒன்றைச் சமைத்தால் அதில் மேலே நுரையும், அடியில் வண்டலும், நடுவில் உத்தமபாகமும் மத்திம பாகமுமாயிருக்க, நான்குவிதமாய்க் காண்கின்றோம், அது நிற்க.

மேலே கூறியபடி இரைப்பையினது செயலால் சூக்ஷ்மரூபமாக மாறின அன்னரசமானது ஈரலிற்சென்று மீண்டும் பாகம் பண்ணப்படுகிறது. அப்பொழுது மேலே நுரைத்தெழும் கல்மிஷத்திற்கு பித்தமென்றும், அடியிற் படிந்திருக்கும் வண்டலுக்கு வாதமென்றும், உத்தமபாகமாய் நடுவில் தெளிந்திருக்கும் செந்நீருக்கு இரத்தமென்றும், மத்திய பாகமாய் நிற்பதற்குக் கபமென்றும் பெயர்.

இச்சத்துக்கள் நான்கினுள் இரத்தமே பிரதானமானது. இரண்டாவது கபம், மூன்றாவது பித்தம்; நான்காவது வாதயாம்.

1-வது இரத்தம்

இது பூதங்களுள் ஒன்றாகிய வாயுவின் சுபாவமுடையது: குணம், சூடுங் கொழுமையுமானது அதற்கு திருஷ்டாந்தம். இரத்தம் அதிகரித்தால் சூடுங் கொழுமையும் அதிகரித்து அவற்றின் சம்பந்தமான வியாதிகளுண்டாகின்றன; இறைச்சி; திராஷா சத்து முதலிய சூடுங் கொழுமையுமாகிய வஸ்துக்களினால் முக்கியமாய் அவ்வியாதிகளுண்டாகின்றன. அல்லது அவை அதிகரிக்கின்றன. இன்னும் யௌவனத்திலும் வசந்தகாலத்திலும் அவ்வியாதிகள் அதிகப்படுகின்றன. அல்லது அவ்வியாதிகள் சம்பவிக்கின்றன. ஏனெனில், யௌவனமும் வசந்த காலமும் சூடுங் கொழுமையுமான காலங்கள். சூட்டுக்கும் கொழுமைக்கும் எதிரான குளிர்ச்சியும் வரட்சியுமான பதார்த்தங்களினால் அவ்வியாதிகள் நீங்குகின்றன.

இரத்தத்தின் பயன் உடலின் எல்லாபாகத்தையும் வளர்த்தல்; அதாவது தேக வளர்ச்சிக்கு எப்பருவத்தில் எவ்வளவாக நிற்றல் வேண்டுமோ அப்பருவத்தில் அவ்வளவாக நின்று பயன்படுவது. நூதன சம்பவமும் வளர்ச்சியும் வேண்டிய காலமாகிய பால்யத்தில் அதிகமாகவும், யௌவனத்தில் சமமாகவும், விருத்தாப்பியத்தில் குறைவாகவும் உபயோகப்படுகின்றது. இப்படி நமது தேகத்திற்கு எப்பொழுதும் உதவுகிறபடியாலும், ஜீவ நிலைக்கு இரத்தமே காரணமாயிருப்பதினாலேயும், உண்மையில் நமது தேகத்திற்கு இரத்தமே மூலவேர் போலவும் மற்றச் சத்துக்கள் பக்கவேர் போலவுமிருக்கின்றன.

2-வது பித்தம்

இது தேயுவின் சுபாவமுடையது; இதன் குணம் சூடும் வரட்சியுமானது. அதற்கு திருஷ்டாந்தம் - இது மலத்தோடு வெளிப்படும்போது ஆசனத்தில் எரிவந்தத்தை யுண்டாக்குகிறது; வாந்தியாகும்போது இரைப்பையில் எரிவந்தமும், வாயில்கசப்பும் தோன்றுகின்றன. இது அதிகரித்தால் சூடும் வரட்சியுமாகிய வியாதிகளை யுண்டாக்குகிறது, இதற்கெதிரான குளிர்ச்சியுங் கொழுமையுமாகிய பதார்த்தங்களினால் அவ்வியாதிகள் சாந்தப்படுகின்றன.

இதன் உபயோகமாவது 1-வது இரத்தத்தை யிளக்கி நுண்மையான நரம்புகளிற்செலுத்தும்; இரத்தமானது கபம், வண்டல் ஆகிய இரண்டைக் காட்டிலும் நீர்த்துவ முடையதாயினும், பித்தநீரைக் காட்டிலும் தடித்திருப்பதினாலும், இரத்தத்துடன் கபமும், வண்டலும் சேர்வதினால் முன்னுள்ள தன் சொந்த தன்மையைக்காண அதிக தடிப்பாய் விடுவதினாலும் நுண்ணிய பாகங்களில் செல்ல முடியாது; ஆகையினாற்றான் அதை

யிளக்கி அப்படிச் செலுத்தும் படியாகவே கடவுள் (உண்மைப் பண்டிதர்) இரத்தத்துடன் பித்தநீரையும் உண்டாக்கி யிருக்கிறார்.

2-வது இரத்தமானது எல்லா உறுப்புக்களுக்கும் ஆதாரமாயிருப்பினும், சில உறுப்புகளுக்குத் தனிச்சத்துகள் முக்கிய ஆகாரமாய் நிற்பது அவசியம். பித்தமானது தனிச் சத்தா யிருப்பதினால் அவ்வித உறுப்புகளுக்கு ஆகாரமாய் உபயோகப்படுகின்றது. இக்காரணத்தினாலுமே இரத்தத்தோடு பித்தநீர் உண்டாக்கப்பட்டிருக்கிறது.

3-வது மலத்தைக் கழிக்கத் தூண்டுவது:- நாம் மலத்தைக் கழிக்க வேண்டியபோது துணைக்குக்ஷிக்கு அடுத்திருக்கும், (இம் ஆயே ஸாயிம்) லங்கணதாரை என்னும் குடலில் முன்னர் பித்தநீர் விழுந்து, அங்கு ஆகாரத்தின் கழிவு சொல்லும்போது அதற்கு ஓர் பின்னமும் உண்டாகாது வழுக்கிச் செல்லும்படியாக உண்டாக்கப்பட்டிருக்கிற வழுவழுப்பான சவ்வில் பரவும்; அதனால் அங்குச் சற்று எரிவந்தமும் தீக்ஷணமுமாகிய ஓர் உணர்ச்சி உண்டாகும். இதனால் சிறுகுடல் முதலியவைகள் அங்குள்ளதை வெளிப்படுத்த முயலும். அப்பொழுது உடனே மலத்தைக் கழிக்க நாம் எத்தனிக்கிறோம்.

முன் விவரித்தபடி பித்த நீரானது ஈரலிலுண்டாகி, ஈரலுக்குக் கீழ்ப்புறத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிற பித்தப்பையில் வந்து சேர்ந்திருக்கும். இப்பித்த நீர்ப்பைக்கும் துணைக்குட்சிக்கும் சம்பந்தமுண்டு; அவசியமானபோது இவ்வழியாய் பித்தநீர் குடலிற்சென்று அங்கு தங்கியிருக்கும் கபத்தையும், நன்றாய்ச் செரியா ஆகார முதலியவைகளையும் தகித்து நீக்கும். ஈரலில் சனிக்கிற பித்தநீரில் அரைப்பாகம் இரத்தத்துடனும், அரைப்பாகம் அப்பித்துப் பைக்குள்ளும் போய்ச் சேருகிறதாய் உத்தேசம். அப்படி அது இரைப்பைக்குள் வந்த சேராத காலங்களில் ஈரலிலேயே தங்கிவிடுமாகையால் அதன் தீக்ஷணத்தினால் ஈரலில் வீக்கமுண்டாகும். சிலநேரம் அந்த நீர் அங்கு அழுகித் துர்க்கந்தமடையும்; அப்பொழுது சுரம், நடுக்கல் முதலியன உண்டாகும். அளவிற்கதிகமாய்ச் சுரந்தால் சிறுநீர் ஸ்தானங்களில் வரும்; அப்படி வருவதினால் நீரெரிச்சல், நீர்ப்பை அழற்சி முதலியன உண்டாகும். இன்னும் மற்ற உறுப்பிற் சென்று அளவிற்கதிகமாய்த் தங்கினால் எரிவந்தமும் கொப்புளங்களுமுண்டாகும். தேகமெங்கும் பரவினால் மஞ்சட்காமாலையென்னும் வியாதி யுண்டாகிறது. இவையன்றி, பித்த நீரானது அளவிற்கதிகமாய்க் குடலில் வந்து விழுந்தால் பித்தக் கழிச்சல், பேதி முதலியவைகளும் இலேசத் துவமும் உண்டாம்.

3. சிலேத்துமம்

இது அப்புவின் சுபாவமுடையது. குளிர்ச்சியும் கொழுமையுமான குணமுடையது. ஏனெனில் கபமதிகரித்தால் குளிர்ச்சியும் கொழுமையுமான வியாதிகளே யுண்டாகின்றன. அவ்வியாதிகள் அவற்றிற் கெதிரான சூடும் வரட்சியுமான பொருட்களினால் சாந்தப்படுகின்றன. இன்னும் குளிர்ச்சியும் கொழுமையுமான தேகத்தில் அக்காலங்களிலும், அவ்வகையான பொருள்களாலும் கபம் அதிகரிக்கிறது.

இதன் உபயோகம், உடல்வளர்ச்சிக்காக ஆகார முதலியன இல்லாமலிரத்தங் குறைந்த அளவாயுண்டானாலும் அல்லது எக்காரணத்தினாலேனும் இரத்தம் போதாத போதும் சிலேத்துமமானது இரத்தமாக மாறி உபயோகப்படுகிறது. 2-வது உறுப்புக்களும் கீல்களும் வரண்டுபோகாதிருக்கும்படி பசையாக உபயோகப்படுகிறது. 3-வது மூளை, மூளைக்கொடி, இவை போன்றவைகளுக்கு ஆகாரமாகிறது. ஏனெனில் இவை கப சுபாவகுண முடையவைகளான படியால் அவற்றிற்கு அவ்வகை ஆகாரமே ஏற்றது. 4-வது இரத்தமானது உறுப்புக்களில் தங்கி அவற்றை இறுகும்படி, அதற்குப் பலத்தையும் பசைத்தன்மையையு முண்டாக்குகின்றது.

4. வண்டல் அல்லது வாதம்

இது பிரிதிவியின் சுபாவமுடையது, குளிர்ச்சியும் வரட்சியுமான குணமுடையது. ஏனெனில் குளிர்ச்சியும் வரட்சியுமாகிய பொருட்களினால் அது அதிகரிப்பதும் அவற்றின் சம்பந்தமான வியாதிகளே உண்டாவதும் அவற்றிற்கெதிரான குணமுடைய சூடுங் கொழுமையுமான பொருட்களினால் அவை சாந்தப்படுவதும் இயல்பு.

இரத்தத்தின் சூடானது பித்தத்தின் சூட்டைக் காட்டிலும் குறைந்த அளவாயிருப்பது போலவே வாதத்தின் குளிர்ச்சியானது சிலேத்துமத்தின் குளிர்ச்சியைக் காட்டிலும் குறைந்த அளவுள்ளது.

இதன் உபயோகம்:- 1-வது நமது தேகத்தின் உறுப்புக்களுக்கு வளர்ச்சி முதலியன நூதன சம்பவங்களைத் தர இரத்தமானது அங்கங்கு செல்லும்போது அவ்வவ் விடங்களுக்குத் தக்கபடி வண்டலானது இரத்தத்தை கெட்டியாக்கி பலப்படுத்துகிறது; 2-வது பாலைப் பிரைக்கலந்து உறையச் செய்வதுபோல வண்டலானது இரத்தத்தைக் கலந்து உறையச் செய்கின்றது.

குறிப்பு

பித்தமானது இரத்தத்தை யிளக்கி நுண்ணிய நரம்புகளிற் செலுத்துகிறதென்று முன்சொல்லப்பட்டது; இவ்விடம் வண்டல் இரத்தத்தை உறையச் செய்கிறதெனத் தெரிகிறது. இளகுதலும், உறைதலும் ஒன்றிற்கொன்று மாறுபாடானவை யாகையால், இவ்விரண்டு தன்மையும் ஒன்றில் எப்படிச் சம்பவிக்கக்கூடுமென யோசிக்க நேரிடும். அதற்கு சமாதானமாவது இவ்விரண்டு சங்கற்பமும் ஏக காலத்தில் நேரிடுவனவல்ல; ஒருவேளை இளகுகிறதும் மறுவேளை உறைகிறதுமாயிருக்கிறது.

இன்னும் அப்பு, தேயு முதலிய பூதங்கள் தம்முள் ஒன்றிற்கொன்று மாறுபாடு உள்ளவை என்றாலும் அவை ஒன்றாய்க் கூடியிருக்கும்படி கடவுளால் ஏற்பட்டிருப்பது போலவே அந்தச் சத்துக்களும் இரத்தத் தோடே யிருந்து கொண்டு ஒருவேளை பித்தத்தின் சக்தியும், ஒருவேளை வண்டலின் சக்தியும் அதிகம் காண்பிக்கப்படுகின்றன. அதாவது நுண்ணிய பாகங்களில் செல்ல வேண்டியிருக்கிற போது பித்தமும், எலும்பு, நரம்பு முதலிய கெட்டி உறுப்புகளுக்கு நூதன சம்பவமு முண்டாகும்போது வண்டலும் உபயோகப்படுகின்றன.

3வது பசியறிவித்தல் - எப்படியெனில் வண்டல் தங்கியிருக்குமிடமாகிய மண்ணீரலுக்கும் இரைப்பை வாயிலுக்கும் ஓர் நரம்பினால் சம்பந்த முண்டாயிருக்கிறது. தேகத்திற்கு ஆகாரம் வேண்டியபோது அதன் மூலமாய் வண்டலின் சொற்ப பாகம் இரைப்பையில் விழும். இவ்வண்டல் நீரானது அதிக புளிப்பு துவர்ப்புமானதாகையால் அப்படி விழுந்த நீரின் புளிப்பினாலும் துவர்ப்பினாலும் இரைப்பை சுருங்கி இயக்கப்படும். இரைப்பையானது மிக்க நரம்பு சம்பந்தமுடைய தாகையாலும் பலமான இயக்கமுடைய தாகையாலும் தன்னைச் சுருக்கி முறுக்க ஆரம்பிக்கிறது. அப்பொழுது நமக்குப் பலமான ஓர் உணர்ச்சி யுண்டாகிறது, அதற்குத்தான் நாம் பசியெனச் சொல்கிறோம்.

ஆகையினாற்றான் சில தேசங்களிலுள்ளவர்களுக்கும், நமது தேசத்தில் பலருக்கும் புளிப்பு வஸ்துவைச் சாப்பிட்டால்தான் பசியுண்டாகிறது. அப்படிச் சாப்பிடாவிட்டால் பசியுண்டாகிறதே யில்லை.

வாதநீராகிறது இரத்தத்துடன் சொற்பமாகக் கலந்திருக்கும்; மற்றவை தேகத்தின் சில இடங்களில் தங்கியிருக்கும். ஆனால் மண்ணீரலிலே அதற்கு முக்கிய இடம். பித்த நீரைப் போலவே வாத நீரும் ஈரலில்தான்

உண்டாகிறது. மண்ணீரலானது தசை, புழை நரம்பு ஆகியவைகளினால் ஏற்பட்டு மேலே ஜவ்வினால் மூடப்பட்டதா யிருக்கிறது. இதன் கவசத்தின் மூலமாகவே அது தன் இயக்கமெல்லாம் பெறுகின்றது. சுயமாய் அதற்கு யாதொரு இயக்கமுங் கிடையாது. இன்னும் அக்கவசத்தில் துவாரமுமுண்டு. மண்ணீரலானது அத்துவாரத்தின் மூலமாய் ஈரலில் சனிக்கிற வாத நீரைக் கிரகித்துக் கொள்ளும். மண்ணீரலுக்கும் இரைப்பைக்கும் ஓர் நரம்பினால் சம்பந்தமுண்டு. இதன் மூலமாய்த்தான் அங்கு தங்கியிருக்கும் வாதநீரானது இரைப்பையில் விழ, முன் விவரித்தபடி பசியுண்டாகிறது; ஈரலில் சனிக்கிற வாதநீரானது மண்ணீரலினால் கிரகிக்கப் படாவிட்டாலும் அல்லது அளவிற் கதிகமாய் சனித்தாலும், அது ரத்தத்துடன் செல்லுமாகையால் தேகத்தில் படையாகவும், தழும்புகளாகவும், புள்ளிகளாகவும் இவ்விதம் பலவிதமாகத் தேகத்தில் மாறுதல்கள் காணும். சிலருக்குக் குலைநோயும், சிலருக்கு யானைக்கால் முதலிய பலரூபமான வியாதிகள் தேகக் கூறுக்கேற்றது போல் காணும். மண்ணீரலிலிருந்து வாதநீர் இரைப்பைக்குச் செல்லத் தடைப்பட்டால் பசியற்றுப்போம். இரைப்பையில் அளவிற்கதிகமான வாதநீர் விழுந்தால் பொய்ப்பசி காணும். இரைப்பையில் அளவிற் குறைந்த வாதநீர் வந்தால் மெய்மறதி போன்றவை யுண்டாகும். இரைப்பையில் அது அபரிமிதமாய் விழுந்தால் வாதவாந்தி யுண்டாகும். இன்னும் இது சிறுகுடலிற் சென்றால் வாதபேதி, வாதக்கழிச்சல் இலேசத்துவம் முதலியன உண்டாகும்.

குறிப்பு

இரத்தமானது தேகமெல்லாம் நிறைந்திருக்கிறது. இரத்தமில்லாத சமயங்களில் உபயோகப்பட வேண்டிச் சிலேத்துமம் மற்ற சத்துக்களைக் காட்டிலும் அதிக அளவாய் இரத்தத்துடனே யிருக்கிறது. ஆனால் பித்தமும் வாதமும் சொற்பபாகம் இரத்தத்துடன் சேர்ந்திருப்பதுமன்றி முன் விவரித்தபடி அவற்றிற்குத் தனித்தனி உரிய ஸ்தானமுமுண்டு.

சுபாவ அசுபாவ சத்துக்கள்

சகோதரர்களே! இதுவரையில் நமது தேகத்தில் சத்துக்கள் எப்படி யுண்டாகின்றன வென்றும் அவற்றின் உபயோகம் இவ்விதமென்றும் ஒருவாறு பொதுவாய்த் தெரிந்து கொண்டோம். இனி இவற்றின் பேதங்களையும் தெரிந்து கொண்டால்தான் திட்டமாகச் சிகிச்சை செய்யக்கூடும்.

சத்துக்கள்

சுபாவசத்து, அசுபாவ சத்தென இருவகைப்படும்.

சுபாவ சத்தென்பது ஈரலில் பக்குவப்பட்டு முக்கியமாய்த் தேகத்தை வளர்ப்பதற்கே யுபயோகப்படும் ரசத்திற்கே சுபாவசத்தெனப் பெயர்.

அப்படி ஈரலில் உண்டாகாமல் வேறுறுப்பில் உண்டானாலும் அல்லது ஈரலில் உண்டாகித் தேக உடல் வளர்ச்சிக்கு உபயோகப் படாவிட்டாலும் அதற்கு அசுபாவ சத்தெனப் பெயர்.

சுபாவ இரத்தம்

நன்றாய்ச் சிவந்தவருணம், மதுரமான ருசி, நற்கந்தம், அதிக தடிப்பாயிராமலும் அதிக நீர்த்துவமாயிராமலும் சமமாகிய பாகம் ஆகிய இவ்வைகள் அதன் குணம்.

அசுபாவ இரத்தம்

துர்க்கந்தம், அளவிற்கதிகம் தடித்தல் அல்லது நீர்த்திருத்தல், கறுப்பு அல்லது வெண்மை சேர்ந்த வருணமாயிருத்தல் முதலியவைகள் அதன் குணம்.

சுபாவ பித்தம்

வருணம் மஞ்சள் கலந்த சிவப்பு; அது குங்கும இழையைப் போன்றிருக்கும்; இலேசத்துவம், தீக்ஷண்ணியம் முதலியவைகள் அதன் குணம், இது 5 விதப்படும்.

அதி பித்தம்

பித்த நீருடன் வெளிவாகிய கபநீர் சேர்வதினால் இஃது உண்டாகிறது; இதன் சுயரூபமாகிய மஞ்சள் கலந்த சிவப்புடன் வெண்மை சேருகிறபடியால் இது அதிக மஞ்சள் நிறமாகியிருக்கும். ஆகையால் இதற்கு அதிபித்தமெனப் பெயரிடப்பட்டது.

பீத பித்தம்

பித்த நீருடன் தடிப்பாகிய கபநீர் சேருவதினால் இஃது உண்டாகிறது; இது முட்டை மஞ்சட்கருவைப் போன்றிருக்கும்; யூநாநி பண்டிதர் இதனை முஹிய பித்தமென்பர். முஹிய என்பது முட்டை மஞ்சட்கரு.

கடார பித்தம்

பித்தத்தின் ஓர்பாகம் தீய்ந்து கறுத்து அதிபித்தத்துடன் சேர்ந்திருப்பதற்கும் பெயர். மஞ்சள் வருணத்துடன் கறுப்பு வருணம்

சேர்வதால் இது பசுமையாயிருக்கும். யூநாநி பண்டிதர் இதனைக் "குர்றாஸிபித்தம்" என்பர். குர்றாஸி என்பது வெங்காயத்தாள் போன்ற ஓர்வகைப் பூண்டினது இலை. இவை முக்கியமாய் இரைப்பையில் சனிக்கும்.

சாமள பித்தம்

பித்த நீரானது அளவிற் கதிகமாய்த் தீய்ந்து, பக்குவமாயிருக்கிற பித்தத்துடன் சேர்ந்திருப்பதற்குப் பேர், நன்றாய் எரிந்து போன வஸ்து சாம்பலாய் விடுகிறதுபோல பித்தமானது எரிந்து சுபாவமாகிய பித்தத்துடன் சேருகிறபடியால் பச்சை நீல வருணமாயிருக்கும். யூநாநி பண்டிதர் இதனை ஜ‌ங்காரி பித்தம் என்பர், இது ஜங்கால் பச்சையைப் போன்றிருப்பதால் இந்தப் பேரிடப்பட்டது; ஜங்காரியென்பது ஜங்கால் பச்சை இது மற்றவைகளைக் காட்டிலும் அதிக தீக்ஷணியமானதாகையால் நஞ்சிற்குச் சமமானது.

கரி பித்தம்

பித்தத்துடன் எரிந்துபோன வண்டல் சேருவதினால் இது உண்டாகிறது. இது நீலங்கலந்த சிவப்புவருணமாயிருக்கும்.

சுபாவ கபம்

வருணம்-வெள்ளை, ருசி-இலைப்பு; இரத்தத்தைக் காட்டிலும் சற்று தடிப்புள்ளது.

அசுபாவ கபம்

இரத்தமாக மாற அபக்குவமா யிருக்கிறதற்கு அசுபாவ கபமெனப் பெயர். இது ருசியைப் பற்றினது, பாகத்தை பற்றினதென இருவகைப்படும்.

(a) ருசியைப் பற்றினது

1-வது மதுரகபம்

கபநீரில் இரத்தம் சேர்வதினால் இது உண்டாகிறது.

2-வது உவர்க்கபம்

கபநீருடன் எரிந்துபோன பித்தநீர் சேர்வதினால் இது உண்டாகிறது.

3-வது ஆமிலகபம்

ஜீவாக்கினியினது சக்தி கபநீரில் அதிகமாய்ச் சார்வதினால் இது உண்டாகும்.

4-வது வெகுட்டுகபம்

கபநீருடன் கொஞ்சம் வண்டல் சேர்ந்தாலும் அல்லது அதில் சூடு தாக்காவிட்டாலும் இது உண்டாகிறது.

5-வது இலைப்பு கபம்

கபநீரில் நீர்த்துவம் அதிகமாய்விடும்போது ஈதுண்டாகும்.

(b) பாகத்தைப் பற்றினது

1-வது நீர்க்கபம்

கபத்தின் பாகமானது ஒரே தன்மையாய்த் தெளிந்த நீரைப் போன்றிருக்கும்; இது நீர்த்துவம் அதிகமாவதினால் உண்டாகிறது.

2-வது கடின கபம்

இது ஒரே தன்மையாய் தடித்திருக்கும். இது மலர்ந்த சுண்ணாம்பைப் போன்றிருக்கும்.

3-வது திருஷ்டி கபம்

கண்ணுக்குச் சளியைப்போல் தோற்றுகிறதற்கு திருஷ்டி கபமெனப் பெயர். ஏனெனில் திருஷ்டியினால் உடனே அறிந்து கொள்ளக் கூடியதாயிருக்கிறபடியால் இப்பேரிடப்பட்டது.

4-வது பரீக்ஷா கபம்

இதன் பாகபேதம் பார்வை யிடுவதனால் மட்டுந் தெரிந்து கொள்ளக்கூடாது. ஆகையால் வஸ்திரத்தில் அல்லது மண்ணின்மேல் விட்டுப் பார்த்தால் நீர்த்துவ பாகம் வஸ்திரத்தில் அல்லது மண்ணில் சுவறி, தடிப்பாகிய பாக மட்டும் மேலே நிற்கும். சோதித்து அறியப்படுகிறபடியால் பரீக்ஷா கபமெனப் பெயர்.

வியாதிகளை நிதானித்தறிய எட்டுவிதப் பரீக்ஷைகளுண்டு அவற்றுள் சலம், மலம், கண், நாவு முதலியவைகளைப் பெரும்பாலும்

சேர்வதால் இது பசுமையாயிருக்கும். யூநாநி பண்டிதர் இதனைக் "குர்றாஸிபித்தம்" என்பர். குர்றாஸி என்பது வெங்காயத்தாள் போன்ற ஓர்வகைப் பூண்டினது இலை. இவை முக்கியமாய் இரைப்பையில் சனிக்கும்.

சாமள பித்தம்

பித்த நீரானது அளவிற் கதிகமாய்த் தீய்ந்து, பக்குவமாயிருக்கிற பித்தத்துடன் சேர்ந்திருப்பதற்குப் பேர், நன்றாய் எரிந்து போன வஸ்து சாம்பலாய் விடுகிறதுபோல பித்தமானது எரிந்து சுபாவமாகிய பித்தத்துடன் சேருகிறபடியால் பச்சை நீல வருணமாயிருக்கும். யூநாநி பண்டிதர் இதனை ஜூங்காரி பித்தம் என்பர், இது ஜங்கால் பச்சையைப் போன்றிருப்பதால் இந்தப் பேரிடப்பட்டது; ஜூங்காரியென்பது ஜங்கால் பச்சை இது மற்றவைகளைக் காட்டிலும் அதிக தீக்ஷணியமானதாகையால் நஞ்சிற்குச் சமமானது.

கரி பித்தம்

பித்தத்துடன் எரிந்துபோன வண்டல் சேருவதினால் இது உண்டாகிறது. இது நீலங்கலந்த சிவப்புவருணமாயிருக்கும்.

சுபாவ கபம்

வருணம்-வெள்ளை, ருசி-இலைப்பு; இரத்தத்தைக் காட்டிலும் சற்று தடிப்புள்ளது.

அசுபாவ கபம்

இரத்தமாக மாற அபக்குவமா யிருக்கிறதற்கு அசுபாவ கபமெனப் பெயர். இது ருசியைப் பற்றினது, பாகத்தை பற்றினதென இருவகைப்படும்.

(a) ருசியைப் பற்றினது

1-வது மதுரகபம்

கபநீரில் இரத்தம் சேர்வதினால் இது உண்டாகிறது.

2-வது உவர்க்கபம்

கபநீருடன் எரிந்துபோன பித்தநீர் சேர்வதினால் இது உண்டாகிறது.

3-வது ஆமிலகபம்

ஜீவாக்கினியினது சக்தி கபநீரில் அதிகமாய்ச் சார்வதினால் இது உண்டாகும்.

4-வது வெகுட்டுகபம்

கபநீருடன் கொஞ்சம் வண்டல் சேர்ந்தாலும் அல்லது அதில் சூடு தாக்காவிட்டாலும் இது உண்டாகிறது.

5-வது இலைப்பு கபம்

கபநீரில் நீர்த்துவம் அதிகமாய்விடும்போது ஈதுண்டாகும்.

(b) பாகத்தைப் பற்றினது

1-வது நீர்க்கபம்

கபத்தின் பாகமானது ஒரே தன்மையாய்த் தெளிந்த நீரைப் போன்றிருக்கும்; இது நீர்த்துவம் அதிகமாவதினால் உண்டாகிறது.

2-வது கடின கபம்

இது ஒரே தன்மையாய் தடித்திருக்கும். இது மலர்ந்த சுண்ணாம்பைப் போன்றிருக்கும்.

3-வது திருஷ்டி கபம்

கண்ணுக்குச் சளியைப்போல் தோற்றுகிறதற்கு திருஷ்டி கபமெனப் பெயர். ஏனெனில் திருஷ்டியினால் உடனே அறிந்து கொள்ளக் கூடியதாயிருக்கிறபடியால் இப்பேரிடப்பட்டது.

4-வது பரீக்ஷா கபம்

இதன் பாகபேதம் பார்வை யிடுவதனால் மட்டுந் தெரிந்து கொள்ளக்கூடாது. ஆகையால் வஸ்திரத்தில் அல்லது மண்ணின்மேல் விட்டுப் பார்த்தால் நீர்த்துவ பாகம் வஸ்திரத்தில் அல்லது மண்ணில் சுவறி, தடிப்பாகிய பாக மட்டும் மேலே நிற்கும். சோதித்து அறியப்படுகிறபடியால் பரீக்ஷா கபமெனப் பெயர்.

வியாதிகளை நிதானித்தறிய எட்டுவிதப் பரீக்ஷைகளுண்டு அவற்றுள் சலம், மலம், கண், நாவு முதலியவைகளைப் பெரும்பாலும்

கண்ணினாற் பார்த்து வருண முதலிய பேதங்களைக் கண்டு நிதானிக்க வேண்டிய படியாலும், அநேகமாய் வியாதிகளெல்லாம் தனிச்சத்துக்களின் பேதத்தினா லுண்டாகாமல், அவற்றின் தொந்தத்தினாலுண்டாவதினாலும், மேற்கண்ட சத்துக்களைப் பற்றி முன்னர் ஒருவாறு சொல்லப்பட்டாலும் கண்ணோட்டத்தில் அவ்வொன்றையும் இலகுவாய்த் தெரிந்து கொள்ள அட்டவணை ரூபமாய் எழுதுவாம்.

இரத்த சுபாவம்

தன்மை-வாயு; குணம் சூடுங் கொழுமையும்; வருணம்-நற்சிவப்பு; ருசி-அதிதித்திப்பு பாகம்-சமம்.

உபயோகம்- தேகத்தை வளர்த்து ஆன்மவிருத்தி முதலியவைகளை யுண்டாக்குதல்.

இரத்த அசுபாவம்

* அழுகல்-நீர்த்தல், தடித்தல், வெண்மையாய் அல்லது கருமையாய் இருத்தல்.

கபம் அல்லது சிலேத்தும சுபாவம்

தன்மை-அப்பு; குணம்-குளிர்ச்சியும் கொழுமையும் வருணம்-வெண்மை; ருசி-இலைப்பு.

உபயோகம்:- இரத்தத்தைக் காட்டிலும் சற்று தடித்ததாய், இரத்தமாகமாறும் பக்குவமானதாகையால் இரத்தங் குறைந்த காலங்களில் இரத்தமாகமாறி, தேகத்தைப் போஷிக்க உதவுதல்; கணுக்கள், மூட்டுகள் முதலியவைகள் நீட்டல், முடக்கல் ஆகிய இயக்கங்களினா லுண்டாகும் சூட்டினால் வறண்டுபோகாது பசையாக உபயோகப்படுதல். மூளை, மூளைக்கொடி முதலிய கபசுபாவ முடையவைகளுக்கு ஆகாரமாயும் உபயோகப்படுதல்.

மேற்படி அசுபாவம்
ருசியைப் பற்றினது

1. இனிப்பானது. 2. உவர்ப்பானது. 3. புளிப்பானது 4. வெகுட்டலானது. 5. இலைப்பானது.

---

* இரத்தமானது நரம்புகளுக்குள் துர்க்கந்த மடைந்தால் முறைக்காய்ச்ச லுண்டாம், மற்ற பாகங்களில் நாற்றமடைந்தால் வீக்கமுதலானவை யுண்டாகும்.

பாகத்தைப் பற்றினது

1. நீர்த்துவமானது 2. தடிப்பானது 3. திருஷ்டியினால் அறியத்தக்கது 4. சம்பவங்களினால் அறியத்தக்கது.

பித்த சுபாவம்

தன்மை-தேயு; குணம்-சூடும் வரட்சியும்; வருணம்-மஞ்சள் கலந்த சிவப்பு; ருசி-கசப்பு.

உபயோகம்- ஆகாரத்தைச் சூடாக்கி சுத்தி செய்தல், இரத்தத்தையிளக்கி நுண்மையாகிய பாகங்களிற் செலுத்தல், நுரையீரல் முதலிய சில உறுப்புகளுக்கு ஆகாரமாதல், குடல்களில் தங்கும் கபமுதலியவைகளை நீக்கிச் சுத்தி செய்தல், மலத்தை வெளிப்படுத்தல் முதலியவைகள்.

பித்த அசுபாவம்

அதிபித்தம் அல்லது மிர்றாபித்தம்

அதிக மஞ்சள் வருணமான நிறமுடையது.

பீதபித்தம் அல்லது முஹியபித்தம்

பாகத்திலும் வருணத்திலும் முட்டை மஞ்சட்கருவைப் போன்றது.

கடாரபித்தம் அல்லது குர்றாஸியித்தம்

கருமை கலந்த பசுமை வருணமுள்ளது.

சாமளபித்தம் அல்லது ஜஙெகாரிபித்தம்

வெண்மைகலந்த பசுமை வருணமுள்ளது. இது அதிக சூடானது.

கரிபித்தம் அல்லது முஹதரிகா பித்தம்

நீலங்கலந்த சிவப்பு வருணமானது

வண்டல் அல்லது வாதசுபாவம்

தன்மை-பிருதிவி; குணம்-குளிர்ச்சியும், வரட்சியும்; வருணம்-கறுப்பு; ருசி-புளிப்பு, துவர்ப்பு.

உபயோகம்- எலும்புகளுக்கு ஆகாரமாகி அவைகளை போஷித்தல், இரத்தத்தை இளக்க பித்தநீர் உபயோகப்படுவதுபோல வேண்டியபோது இரத்தத்தோடு சேர்ந்து தடிப்பாக்கி யிறுக்கிக் கொள்ளுதல், இரைப்பையில் முள் போன்றிருக்கும் வஸ்துக்களில் இது வீழ்ந்து அவைகளைக் கூர்மையாக்குதல்.

மேற்படி அசுபாவம்

இரத்தம், பித்தம், கபம் முதலியவை எரிந்துவிட்டாலும் அல்லது வண்டலே எரிந்து விட்டாலும் அவற்றிற்கு அசுபாவ வண்டலெனப் பெயர்.

வியாதிகளைத் தெரிந்து கொள்ளப் பொது லக்ஷணங்கள்

ஓர் வியாதியின் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் சுபாவமாகிய சூடு, குளிர்ச்சி, கொழுமை, வரட்சி ஆகியவைகளுள் ஒன்று தனியே யதிகரித்துண்டானதா? அல்லது அவற்றுள் ஒன்றோடொன்றின் கலவையினால் உண்டானதா? என்று அறியவேண்டியது, இப்படியே, இரத்தம், சிலேற்பனம், பித்தம், வண்டல் ஆகிய சத்துக்களுள் ஒன்று அதிகரித்துண்டானதா? அல்லது அவற்றின் தொந்தத்தினா லுண்டானதா? என்று அறிய வேண்டியது. அதற்காக முக்கியமாய், முகவருணம், தேக வருணம், தேகத்தின் தன்மை, நாடி, மலம், மூத்திரம் முதலியவைகளைப் பரீக்ஷிக்க வேண்டும்.

தனிச்சூடு அதிகரித்த லக்ஷணம்

தேகம், முகம் இவைகளின் வருணம் சிவந்திருத்தல் அல்லது மஞ்சணித்திருத்தல், தேகத்தைப் பரீக்ஷித்தால் சூடாயிருத்தல்; இதில் காலம், தேசம், ஆகியவைகளின் தன்மையையும் நிதானிக்க வேண்டியது; நாடி பட படத்திருத்தல்; மூத்திரம் மஞ்சனித் திருத்தல்; தாகமாயிருத்தல், சூடான பதார்த்தங்களினால் கெடுதியும், குளிர்ச்சியான பதார்த்தங்களினால் சுகுணமுமுண்டாதல், சூடான காலங்களில் சுகங்கெடுதல் முதலியவைகளாம்.

குறிப்பு

சூடானது இருவகைப்படும். ஒன்று இரத்த மதிகரித்துண்டாவது. மற்றொன்று பித்தம் அதிகரித்துண்டாவது; ஆகையால் இரத்தச்சூடு அல்லது பித்தச்சூடு இரத்தாதிக்கத்தின் லக்ஷணம், பித்தாதிக்கத்தின் லக்ஷணம் ஆகியவைகளினால் முறையே தெரிந்து கொள்ளல் வேண்டும்.

இரத்தமதிகரித்த அடையாளம்

தேகம், முக்கியமாய் முகம், நா, கண்கள் சிவந்திருத்தல், புத்தி மந்தப்படுதல், அசதி, சோம்பல், நரம்புகள் உப்பியிருத்தல், சருமம் தடித்திருத்தல், நாடி நிறைந்து பெருத்து நடத்தல், மூத்திரம் சிவந்து

கலங்கலாயிருத்தல், சொற்பப்பசி, தேகங் கனத்திருத்தல், முக்கியமாய் புருவங்கள், தலை, பொறிகள் ஆகியவைகள்; கொட்டாவி வருதல், அடிக்கடி திமிர்விடுதல், வாயினித்திருத்தல், தேகத்திற் கட்டிகள், சிரங்குகள் அடிக்கடி யுண்டாதல், மூக்கு, பல்லீறுகள், ஆசனம், முதலிய நுண்ணிய ஸ்தானங்களிலிருந்து இரத்தம் வடிதல், இறைச்சி, முதலிய சூடுங் கொழுமையுமான ஆகாரங்களிலும், மதுரமாகிய பானங்களிலும் அதிக விருப்பம், சிவந்த வஸ்துக்கள், இரத்த ஆறுகள், இரத்தத்தில் அமிழ்ந்து போதல் போல் தோன்றல் முதலியவைகளைக் கனவில் அதிகமாய்க் காணல் முதலியவைகளாம்.

பித்தமதிகரித்த அடையாளம்

தேகம், முக்கியமாய் கண், நா, மூத்திரம் இவை மஞ்சணித்திருத்தல், வாய்கசப்பு, நா சுரசுரப்பாயிருத்தல்; வாய், மூக்குத் துவாரங்கள் இவை வரண்டிருத்தல், தாகம் அதிகமாயிருத்தல்; (உவர்க் கபத்தினாலும் தாகமுண்டாகும், ஆனால் அது குறைந்த அளவா யிருப்பதுமன்றி குளிர்ந்த ஜலம் சாப்பிட்டால் தனியாமல் வெந்நீரை சிறுகச் சிறுக சாப்பிடத்தணியும். பித்ததாதிக் கத்தினால் உண்டாகும் தாகமோ குளிர்ந்த சலஞ் சாப்பிடத் தணியும்.) குளிர்ச்சியான பதார்த்தங்களில் அதிக இச்சை, ஓக்காளம், மஞ்சள் வருணம் அல்லது பச்சை வருணமான வாந்தி, மனந் தடுமாறல், அடிவயிற்றில் எரிவந்தம், எரிவந்தத்துடன் கூடியபேதி, ஊசியினால் குத்துகிறது போன்ற குத்துக்கள்; நெருப்பு, மஞ்சள் வருணமான வஸ்துக்கள் ஆகியவைகளைக் கனவில் அதிகமாய்க் காணல் தேகத்தை ஸ்பரிசித்துப் பார்த்தால் சூடாயிருத்தல், ஆகியவைகளாம்.

தனிக் குளிர்ச்சியதிகரித்த அடையாளம்

தேகம், நீர் இவைகள் வெளுத்திருத்தல், தேகம் பாரமாயிருத்தல், முக்கியமாய் சிரசு மூக்கடைத்தல், கண் சுரந்திருத்தல், தேகம் ஜில்லிட்டிருத்தல், நாடி மந்தமாய் நடத்தல், தாகமின்மை, பசி மந்தம், சோம்பல், கபத்தைச் சார்ந்த சுரம் அடிக்கடி காணல், குளிர்ச்சியான வஸ்துக்களினால் கெடுதியும், சூடான வஸ்துக்களினால் குணமு முண்டாதல், மழை காலத்திலும், குளிர் காலத்திலும் சுகங்கெடுதல் ஆகியவைகளாம்.

குளிர்ச்சியானது, வண்டல் அல்லது வாதசத்து அதிகரிப்பதினாலும், கபசத்து அதிகரிப்பதினாலும் உண்டாம். ஆகையால் அதுவும் இருவகைப்படும்.

தனிக் கொழுமை யதிகரித்த அடையாளம்

தேகம், முக்கியமாய் கண், நா இவை வெளுத்திருத்தல், கண்ணிமைகள் தளர்ந்து மிருதுவா யிருத்தல், வாயில் நீர் அதிகமாய் சுரத்தல், மூக்கில் நீர்வடிதல், வயிறு மிருதுவாயிருத்தல், பசிமந்தப்படுதல், அதிநித்திரை, நாடி மந்தமாய் நடத்தல், கொழுமையான பதார்த்தங்களினாற் கெடுதியும் வரட்சியாகியவைகளால் சுகுணமு முண்டாதல் ஆகியவைகளாம்.

கொழுமையும் இருவகைப்படும்

1. இரத்தப்பெருக்கினால் உண்டாவது. 2. கபப்பெருக்கினால் உண்டாவது.

கபமதிகரித்த அடையாளம்

தேகம் வெளுத்திருத்தல், முக்கியமாய் கண்கள், நா, சிறுநீர் ஆகியவைகள், தேகத்தை தொட்டால் மிருதுவாயிருத்தல், முக்கியமாய் முகம், புளிப்பான வாந்தி, புளிப்பான ஏப்பம், சோம்பல், அறிவுகுன்றல், நாடி நிறைந்து மெதுவாயிருப்பது மின்றி மெதுவாய் நடத்தல், தண்ணீர், ஆறுகள், குளங்கள், பனிக்கட்டி, ஆலங்கட்டி, மின்னல், மழை முதலியவைகளைக் கனவில் அதிகமாய்க் காணல் ஆகியவைகளாம்.

தனிவரக்ஷி அதிகரித்த அடையாளம்.

மூக்குத் துவாரங்கள் வரண்டிருத்தல், நித்திரை பிடியாமை, வரட்சியான பதார்த்தங்களைச் சாப்பிடுவதனால் கெடுதியுண்டாதல், சூடான காலங்களில் தன் சுகம் விகற்பப்படுதல், கொழுமையான பதார்த்தங்களினால் சுகம் தோற்றுதல், கொழுமையான எண்ணெய் இனங்களினால் சாந்தப்படுதல் முதலியவைகளாம்.

வரக்ஷியும் இருவகைப்படும்

1. வண்டல் அல்லது வாதசத்து அதிகரித்துண்டாவது. 2. பித்த சத்ததிகரித்துண்டாவது.

வண்டல் அல்லது வாதமதிகரித்த லக்ஷணம்

தேகவருணம் கருத்திருத்தல்; தேகம், மூக்குத்துவாரங்கள், ஆகியவை வரண்டிருத்தல், அசதி, சோம்பல், இரத்தங் கறுத்துத்

தடித்திருத்தல்; மனக்கவலை, வீண் எண்ணங்க ளிவையுண்டாதல்; அடிவயிற்றிலெரிதல், பொய்ப்பசி, மூத்திரமும் கறுத்துத் தடித்திருந்தல், முகத்தில் கறுப்புப் புள்ளிகள் தோன்றல், சொறி சிரங்கு, தினவு அதிகமாய்த் தேகத்திற் காணல், கெட்ட கொப்புளங்கள் உண்டாதல்; மண்ணீரலைப் பற்றின வியாதிகளுண்டாதல், அதிக பயங்கரமான கனவுகள், நித்திரை பிடியாமை; கறுப்பு வஸ்துக்களை அதிகமாய்க் கனவிற் காணல் முதலியவைகளாம்.

குறிப்பு

சூடு, குளிர்ச்சி, கொழுமை, வரட்சி ஆகியவைகள் தனித்தனி அதிகரித்த லக்ஷணமும், இரத்தம், பித்தம், சிலேற்பனம், வாதம் முதலிய சத்துக்கள் அதிகரித்த லக்ஷணமும் சொல்லப்பட்டன. இவற்றுள் ஒன்றோடொன்று தொந்தப்படும்போது அவற்றின் குணங்களும் தொந்தப்பட்டிருக்கு மாகையால் அவை யின்னவையென விபரமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

மேற்கண்ட சத்துக்கள் மீறியிருக்கும் அளவிற் கேற்றபடியே அவற்றின் லக்ஷணங்களும் இருக்கும்.

இரண்டு சத்துக்கள் தொந்தப்பட்டிருக்கும்போது அவற்றுள் அளவில் அதிகமாயிருப்பதின் லக்ஷணங்களே மிகுந்திருக்கும். மிகுதி பற்றி முன்னர் அதன் பேரிடப்படும். வாதபித்த தொந்தத்தில் பித்த சத்ததிகரித்திருந்தால், பித்தவாத மெனவும், வாதசத்ததிகரித்திருந்தால் வாதபித்த மெனவுஞ் சொல்லப்படும்.

வியாதிகளின் காரணத்தை அறிய வேண்டியபோது இதிற் கண்டிருக்கிற அடையாளங்களெல்லாம் இருக்கக் காணோமென மலைக்காமல் பெரும்பான்மையான அடையாளங்களினால் நிதானிக்க வேண்டும். அறிவாளிகள் மிகவும் எளிதில் மாறுபாட்டை ஊகித்துக் கொள்வார்கள். மற்றவர்களும் சற்று கவனித்தால் அநுபவத்தால் தெரிந்து கொள்ளக்கூடும்.

தற்கால ஆங்கிலேய பண்டிதர்கள் சத்தென வேறாய்ப் பிரித்துச் சொல்லாவிட்டாலும், வாததேகம், பித்ததேகம், சிலேத்தும தேகம், இரத்த தேகமென நான்கு விதமும், இவற்றோடு பொருந்தாத விசேஷ குணமுள்ள ஓர் வகையான தேகமெனவும் ஐந்து வகையாய்ப் பிரித்திருக்கின்றார்கள். அவையாவன:-

1-வது இரத்த தேகக் கூறு
(Sanguine Temperament)

பேசி அல்லது சதைகள் வலுவாகவும் அழுத்தமாகவுமிருக்கும். தேகம் தடித்திருக்கும், நரம்புகள் உப்பியிருக்கும். ரோமங்கள் சிவந்திருக்கும் இரத்தாதிக்கத்தினால் முகம் சிவந்திருக்கும். தேகத்தின் தோல் மிருதுவாகவும், மெல்லியதாவு மிருக்கும். இரத்த ஓட்டம் அதிகமாயிருக்கு மாகையால் நாடி விரைவாய் நடக்கும். தேகத்தில் அதிக ரத்தமும், கோபதாபங்கள், காமக்குரோதிகள் ஆகியவை அதிகரித்திருக்கும்; இந்த தேகிக்குத் தாபிதம், ரத்த பித்த ரோகம், கடுஞ்சுரம் முதலிய ரோகங்கள் அநேகமாய்க் காணும்.

2-வது கப தேகக் கூறு
(Phlegmatic Temperament)

தேக சம்பந்தமான வேலைகளில் சோம்பலும் அசதியும், புத்தி முதலியவைகள் சம்பந்தமான காரியங்களில் மந்தமாகவுமிருக்கும். நாடி மந்தமாய் நடக்கும். ரோமம், உதடுகள் ஆகியவைகள் தடித்திருக்கும். தசைகள் சற்று வெண்மையாய் மிருதுவாயிருக்கும், கொழுப்பு அதிகமாகவும், நீர்த்தன்மை அதிகமாகவு மிருக்கும். தேகத்தில் குளிர்ச்சி அதிகமாய்த் தோற்றும். இத்தேகிகளுக்கு கண்ட மாலை, நீர்க்கோவை, பாண்டு, தீர்க்கரோகம் முதலியவைகள் அநேகமாய்க் காணும்.

3-வது பித்த தேகக் கூறு
(Bilious Temperament)

எந்தக் காரியங்களையும் சாதிக்கிற சக்தியும், கூர்மையும் திரமுமான புத்தியும், திடத்துவமு முண்டா யிருக்கும் நரம்புகள் பெருத்து, தேக மெல்லாம் நிறைந்திருக்கும். தசைகள் சமமான விதமாய்க் கெட்டியாயிருக்கும். நாடி தீவிரமாயிருக்கும். இத்தேகிகளுக்குச் சீரண உறுப்புகளைச் சார்ந்த வியாதிகளே முக்கியமா யுண்டாகும்.

4-வது வண்டல் அல்லது வாததேகக்கூறு
(Melancholic Temperament)

பித்த தேககுணத்தை யொத்தே யிருக்கும். ஆனால் சிலவேளை தடுமாற்றமான புத்தியும், பொறுமையு முண்டாயிருக்கும்.

5-வது மிருது தேகக்கூறு
(Nervous Temperament)

இது மூன்று வகைப்படும்.

a. சிவந்து மலர்ந்த முகம், அழகான தேக ஏற்பாடு, சொகுசான சுபாவம், மெல்லிய உதடுகள், மிருதுவான தசைகள், மெல்லிய ரோமங்கள், கருமையும் பிரகாசமும் இன்பமுமான கண்கள், மெலிந்த நாடி, சாதுரியம், புத்தி நுட்பம், விற்பன சக்தி, நன்னோக்கம், சொற்ப விகற்பத்தினால் வியாதியுண்டாவது அல்லது சுகமடைவதுமாகிய குணங்கள் ஆம்.

b. அவுதடங்களின் செய்கை தக்ஷணம் வெளிப்படுதல் அல்லது அவுடதத்தினால் யாதொரு பிரயோசனமு முண்டாகாதிருத்தல். *1)* சிலர் ஓர் அரிசியிடை ரசபஸ்பத்தைச் சாப்பிட்ட உடனேயே அவர்கள் வாய், ஈறு முதலியவைகள் ரணமாய் விடுதல், *2)* வேறு சிலர் அப்பஸ்பத்தையே அளவில் அதிகமாயும், தொடர்ச்சியாயும் எத்தனை நாள் சாப்பிட்டாலும் அது அவர்களுக்கு எவ்வித பிரயோசனத்தை அல்லது கெடுதியை யுண்டாக்காதிருத்தல்.

c. *1)* இன்னும் சிலருக்கு, மீன், இறைச்சி முதலிய ஆகாரங்கள் நஞ்சின் குணத்தை யுண்டு பண்ணி வாந்தி, பேதி, முதலிய துர்க்குணங்களை யுண்டாக்கி விடுதல்.

2) வேறு சிலருக்கு பேதியாகக் கொடுத்தால் பேதி கட்டுதலும், நிற்க அவுடதங் கொடுத்தால் பேதியாதலுமாம்.

குறிப்பு

தேக சுபாவத்தைப் பற்றி சாஸ்திரிகளுள் அநேகவித மாறுபட்ட தர்க்கங்களு மிருக்கின்றபடியால் இச்சிறிய கிரந்தத்தில் அவற்றை யெல்லாம் எழுதுவது சரியாகாது என நீக்கப்பட்டதெனினும், மேற்கண்ட விபரீதமான தேகசுபாவமுடையவர்களும் இருக்கிறார்களென அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகையால் அவர்களைப் பற்றி இவ்விடம் சுருக்கமாய் எழுதப்பட்டன.

விஞ்ஞாபனம்

இரத்தத்தின் சுபாவம் சூடுங் கொழுமையும், பித்தத்தின் சுபாவம் சூடும் வரட்சியு மாகையால், சூடானது இரத்தப் பெருக்கினாலும், பித்தப் பெருக்கினாலும் அதிகரிக்கும்; இக்காரணத்தினாலும் சூடதிகரித்தால் இரத்த சம்பந்தமா அல்லது பித்த சம்பந்தமா அல்லது இரண்டின் சம்பந்தமாவென நிதானித்து அறிய வேண்டியது.

சிலேற்றுமத்தின் சுபாவம் குளிர்ச்சியும் கொழுமையும், வண்டலின் சுபாவம் குளிர்ச்சியும் வரட்சியுமாகையால், குளிர்ச்சியானது சிலேற்றுமம் அதிகரித்ததினால் உண்டானதா அல்லது வண்டல் அல்லது

வாதப்பெருக்கினா லுண்டானதா அல்லது இரண்டின் சம்பந்தத்தினா லுண்டானதாவென நிச்சயிக்க வேண்டியது.

கொழுமையானது இரத்தம் சிலேற்றுமம் ஆகிய இரண்டோடு சம்பந்தப்பட்ட தாயினும் முக்கியமாய் இரத்தப் பெருக்கினால் கொழுமை யதிகரிக்குமெனத் தெரிந்திருக்க வேண்டியது.

வரட்சியானது பித்தம் வண்டல் ஆகிய இரண்டோடு சம்பந்தப்பட்ட தானதால், பித்தாதிக்கத்தினாலும் வண்டலாதிக்கத்தினாலும் வரட்சியதிகரிக்குமென நிதானிக்க வேண்டியது.

பொது சிகிச்சை

இவ்வாறு நிதானித்தறிந்த பின்னர் சத்துக்களின் விகற்பங்களை சமப்படத்த வேண்டியதா அல்லது அசுபாவசத்துக்களைப் பக்குவப்படுத்தி வெளிப்படுத்த வேண்டியதா அல்லது உடனே பேதிக்குக் கொடுத்து வெளிப்படுத்த வேண்டியதா என நிச்சயித்து அந்தந்தத் தலைப்பின் கீழ்க்காணும் சரக்குகளில் ஒன்றை அல்லது பலவற்றை, தமக்கிஷ்டமானபடி கிஷாயம், ஷர்பத்து, லேகியம் முதலிய பாகங்களாகச் செய்து சமயோசிதமாக உபயோகித்துச் சுகுணம் அடைய வேண்டும். இதற்காக ஒவ்வொருவரும் தாம் உபயோகப்படுத்தும் சரக்குகளின் இயற்கைக் குணம் செயற்கைக் குணம் முதலியவைகளை நன்றாய்த் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமானது, ஆகையினால் அவற்றின் விபரங்கள் கூடியமட்டும் ஒருவாறு மிகவும் தெளிவாய் இவ்விடம் எழுதப்படும்.

நாம் ஒரு சரக்கை உபயோகப்படுத்த வேண்டியிருந்தால் அதன் உருவம், நிறம், மணம், ருசி, இயற்கைக் குணம், செய்கை, உபயோகம், துர்க்குணம், பரிகாரம், பதில், மாற்று, மாத்திரை, கிரகசம்பந்தம் முதலிய யாவற்றையும் நன்றாயறிந்தே உபயோகிக்க வேண்டியது. அவற்றின் விபரம் பின்வருகிற விதமாயிருக்கும்.

1. உருவம்:- வைத்தியர்களேனும் வைத்தியரல்லாத பிறரேனும் தாங்கள் உபயோகிக்கும் சரக்குகள் இன்னது தானென நன்றாய்த் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் கடைக்காரர்களிடத்தில் ஒரு சரக்கின் பெயரைச் சொன்னால் அதையாவது, அது இல்லாத பட்சத்தில் அவர்களுக்கிஷ்டமான வேறேதையாவது, சிலவேளை அச்சரக்கு விலையுயர்ந்ததானால் அதைப்போன்ற சரக்கையாவது, இவ்விதம் பலவாறு மாற்றிக் கொடுப்பதுண்டு. அவர்கள் தங்கள் நயத்தை விரும்பியோ அல்லது வேறெவ்விதத்தினாலோ இப்படிச் செய்ய நேரிடுகிறது. ஆகையால் அவர்கள் கொடுப்பதையே நாம் கோரினதென நம்பி வாங்கி அநேகமாய் யாதொரு பிரயோஜனமும் அடையாமல்

ஏமாந்து போகின்றோம். எப்படியெனில் சுக்கு, சந்தனம், நிலவாகை, லவங்கம், சோம்பு, குங்கிலியம் என்பவற்றுள் சுக்கென்பது வித்தினமா, பூவினமா, இலையினமா, சக்கையினமா, பிசின் இனமா, வேர் அல்லது கிழங்கினமா எனத் தெரியாத ஒருவர் பிறரையே நம்ப வேண்டிய திருக்கிறபடியால் மோசத்திற் கிடமாகும். ஆனால் சுக்கென்பது கிழங்கினமென்றும் உலர்த்தப்பட்டதென்றும் அது இவ்வகை வருணம், ருசி, மணம் உள்ளதென்றும், சந்தன முதல் குங்கிலிய மீறாக முறையே சக்கையினம், இலையினம், பூவினம், வித்தினம், பிசின் இனமென்றும் இவ்வடிவமுள்ளன வென்றும் அவை இன்னின்ன வருணம், ருசி, மணமுடையவையென அறிந்திருந்தால், பெரும்பாலும் மோசத்திற் கிடமாகாது. மேலும், தமிழ்ப் பேருள்ள சரக்குகள் நம்மவர்களிற் பெரும்பாலார்க்கு ஒருவேளை தெரிந்தாலும், இதரபாஷைப் பேருள்ள சரக்குகளைத் தெரிந்தவர்கள் மிகவும் சொற்பமெனச் சந்தேகமில்லை. இக்காரணங்களினால் ஒவ்வொரு சரக்கினுடைய உருவம் முதலியன அவசியம் தெரிந்திருக்க வேண்டுமென்பது யாவருக்கும் நன்கு விளங்கும். ஆகையினால் நமது தமிழ்நாட்டில் வழங்கப்படும் சரக்குகளைப் பற்றிச் சிறிது விபரமாகவும் இதர பாஷைப் பேருள்ள சரக்குகளைப் பற்றி அதிக விபரமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன.

2. வருணம்:- சரக்குகள் உருவத்தில் ஒன்றையொன்று ஒத்திருக்கலாம் ஆகையால் அவற்றின் நிறத்தையும் அவசியமாக அறிய வேண்டியது. எப்படியெனில் சுக்கு, சந்நராஷ்டகம் (சிற்றரத்தை) அதிமதுரம், ஆகிய இம்மூன்றும் வேரினமாயும் வடிவத்தில் சற்றேறக்குறைய ஒத்திருத்தாலும் நிறம் வேறுபட்டிருக்கும். சுக்கு வெண்மையாயும், சந்நராஷ்டம் சற்று சிவந்த வருணமாயுமிருக்கும். ஆகையால், ஓர் சரக்கின் உருவத்தை யறிந்திருப்பதுடன் அதன் வருணத்தையும் அறிய வேண்டியது அவசியமாயிற்று.

3. கந்தமும் ருசியும்:- சரக்குகள் உருவம் வருணம் ஆகிய இரண்டிலும் ஒன்றையொன்று ஒத்திருக்கலாம்; ஆகையால் அவற்றின் கந்தத்தையும், ருசியையும் அறிய வேண்டியது, எப்படியெனில், சங்குப் பாஷாணம், சீமைச் சுண்ணாம்பு ஆகிய இரண்டும், உருவம் வருணம் ஆகியவைகளில் ஒத்திருக்கின்றன; ஆனால் அவற்றை நெருப்பிலிட உண்டாகும் வாசனையினாலாவது அல்லது ருசியினாலாவது முன்னது நஞ்சின் குணமுடையதென்றும், பின்னது இன்னதென்றும் அறிந்து கொள்ளக்கூடுமாகையால் அவைகளும் முக்கியமாய்த் தெரிந்திருக்க வேண்டியதே.

4. இயற்கைக் குணமும், தரமும்- எல்லாப் பதார்த்தங்களும், தேயு, வாயு, அப்பு, பிரிதிவி இந்நான்கின் சம்பந்தமுடையவென்றும்; தேயுவின்

குணம் சூடும் வரட்சியும்; வாயுவின் குணம் சூடுங் கொழுமையும்; அப்புவின் குணம் குளிர்ச்சியும், கொழுமையும்; பிரிதிவியின் குணம் சூடும் வறட்சியுமென்றும் முன்னர் அறிந்திருக்கிறோம். ஆகையால் எவ்வகைப் பதார்த்தமும் ஒவ்வொரு பூதத்திற்குரிய இரண்டு குணங்களையே பெற்றிருக்கும். இதுதான் இயற்கைக் குணமெனப்படும்.

மேலும் அக்குணங்கள் சிலவற்றில் அதிகமாகவும் சிலவற்றில் குறைவாகவும் வேறுபட்டிருக்குமாகையால், இவ்வேறுபாட்டை அறியும் பொருட்டு அக்குணங்களை நான்கு தரம் (டிக்ரி) ஆகப் பண்டிதர்கள் வகுத்திருக்கின்றார்கள். அதன் விபரம் பின் வருமாறு.

தேகத்தில் சீதோஷ்ணம், சீரணசக்தி, அவயவங்களின் தொழில் முதலிய யாவற்றிலும் சமரசமாயிருக்கும் சுபாவமுடைய ஒருவன், ஓர் பதார்த்தத்தை உட்கொள்ள, அது அவனுக்கு யாதொரு கெடுதியை அல்லது சுகத்தையுண்டாக்காமல் முக்கியமாய் சீதோஷ்ணத்தை அதிகப்படுத்தாதிருத்தால் அது சமரசகுண முடையதெனச் சொல்லப்படும். ஆனால் அது அவன் சுபாவத்தைக் காட்டிலும் சற்று அதிகமாய்ச் சூட்டையுண்டாக்கினால் அது முதல் தரச் சூடு, அல்லது மந்த தரச்சூடென்றும்; அதிலும் அதிகமான சூட்டையுண்டாக்கிச் சிறிது கெடுதி செய்ய ஆரம்பிக்குமானால் அச்சூடு இரண்டாந்தரச் சூடு அல்லது தீவிர தரச் சூடு என்றும், அதிலும் அதிகமாகிக் கெடுதியைச் செய்து மரணாரம்பம் பண்ணும் சூடு மூன்றாந்தரச்சூடு அல்லது துங்கதரச் சூடென்றும், அதிலும் மேலதிகரித்து மரணத்தையே தருஞ் சூடு நான்காந்தரச் சூடு அல்லது உத்துங்க தரச் சூடென்றும் சொல்லப்படும்.

இப்படியே, குளிர்ச்சி, கொழுமை, முதலியவைகளிலும் குறிக்கப்படும். இவ்விதம் ஏற்படுத்தினதற்கே தரமெனப் பெயர். பின்னர் இவைகளின் மாறுபாட்டை தக்க இடத்தில் அதிக விபரமாய் எழுதுவாம்.

5. செய்கையும் உபயோகமும்- ஒவ்வொரு சரக்குகளின் செய்கை முதலியவைகளை நன்றாயறிந்திருந்தால் மாத்திரமே, வியாதிக்கேற்ற விதமாகவும், சமயோசிதமாகவும் உபயோகிக்கக் கூடும். ஏனெனில் ஒவ்வொரு மனுஷதேகப் பிரகிருதியானது வித்தியாசப்படுகிறபடியாலும் ஓர் வியாதியே பலவித வித்தியாச லக்ஷணங்களோடு காணுகிற படியாலும் அவ்வவ் மாறுதலுக்கேற்ற விதமாய்ச் சரக்குகளைச் சேர்த்துக் கொடுத்தாலொழிய வியாதிவசப்படாது; ஆகையால் சரக்குகளின் உபயோகம், செய்கை முதலியவை நன்றாய்த் தெரிந்து கொள்ள வேண்டியது மகாமுக்கியமானது; அப்படி நன்றாய்த் தெரிந்து கொண்டவர்களுக்கே; தனிச் சரக்கை அல்லது பல சரக்குகளைத் தாமே யுபயோகித்துக் கொள்ளவும்; பூர்வ யோகங்களில் உள்ள சரக்குகளில் அந்தச் சமயத்திற் கொவ்வாதவைகளை நீக்கி ஒவ்வினவைகளைச்

சேர்த்துக் கொள்ளவும் ஞானமுண்டாகும். இவ்விதம், தேகப்பிரகிருதி; காலம்; ரோகலக்ஷணம் முதலியவைகளுக்கேற்ற விதமாய் உபயோகிப் பதற்காக ஒவ்வொன்றின் செய்கையையும் உபயோகத்தையும் நன்றாய்த் தெரிந்து கொள்ள வேண்டியதென்பது எவ்வளவு முக்கியமானதென நாமிவ்விடம் விரித்துரைத்தால் அநாவசியம்.

6. *துர்க்குணம் அல்லது வியாதி:-* எல்லாப் பதார்த்தங்களிலும் அநேக நற்குணங்களுண்டாயிருக்கினும் அவற்றுடன் சில துர்க்குணமு மிராதொழியாது; ஆகையால் நாம் உபயோகிக்க உத்தேசிக்கும் பதார்த்தங்களின் நற்குணங்களைத் தெரிந்து கொள்வதுபோலவே அவற்றின் துர்க்குணங்களையுந் தெரிந்து கொள்ள முயல வேண்டும். ஏனெனில் அப்படி முன்னதாகத் தெரிந்து கொண்டால் மாத்திரமே அவற்றாலுண்டாகுங் கெடுதிகளை முன்னர் அல்லது பின்னர் தடுத்துக் கொள்ளலாம்.

7. *நிவர்த்தி அல்லது பரிகாரம்:-* மேல் விவரித்தபடி ஒவ்வொரு சரக்குகளிலும் இருக்கும் துர்க்குணத்தை முற்றிலும் நீக்கவாவது அல்லது அது அதிகப்படாதிருக்கவாவது அல்லது அதன் தீக்ஷணியத்தைத் தணிக்கவாவது முயற்சி செய்வதே பரிகாரமாம். இவ்விவரத்தைச் சந்தேகமறத் தெரிந்து உபயோகிக்கும் அவுடதங்களினால் அநேகவித பிரயோஜமுண்டாவதுந் தவிர அதனால் யாதொரு தீங்கும் நேரிடாது. யாவருக்கும் தெரிந்த சுக்கானது அநேக வியாதிகளுக்குபயோகப்படுகிறது. ஆனால் அது தொண்டை அல்லது தொண்டையிலுண்டாயிருக்கும் வியாதிகளுக்காகாது; ஆகையால் அதனுடன் தேனை அல்லது வாதுமை எண்ணெயை அல்லது நெய்யைச் சேர்த்து உபயோகிப்பதினால் யாதொரு கெடுதியையு முண்டாக்காமல் தன்னுடைய நற்குணங்களையே தரும்.

8. *பதில் அல்லது ஒப்பு:-* சில சமயங்களில் நமக்கு வேண்டிய சரக்கு பல காரணங்களினால் அகப்படாமற் போகலாம். அந்தச் சமயத்தில் அதற்குப் பதிலாக, சற்றேறக்குறைய அதின் குணத்தையுடைய வேறொன்றை யுபயோகித்துக் கொள்ள நிர்ணயிக்கப்பட்டதே பதில் ஆம்; இவ்விபரங்களையும் அறிய வேண்டியது முக்கியமே.

9. *பிரமாணம் அல்லது மாத்திரை:-* வயதிற்கேற்ற அளவாகவும்; தேகசுபாவத்திற்கேற்ற அளவாகவும் உபயோகிக்கும் அளவே பிரமாணமாம். அவுடதங்களை யுபயோகப் படுத்தும்போது நாம் கவனிக்க வேண்டியவைகளில் இவ்விஷயம் மிகவும் முக்கியமானது. ஏனெனில், வயது, தேகம், காலம் முதலியவைகளுக்கேற்றபடி யுபயோகிக்கும் கிரமத்தை யறியாததினால் உண்டாகும் கெடுதி பல உள; பின்வரும் சரக்குகளிற் சொல்லப்பட்டிருக்கும் பிரமாணமானது யௌவனமுடைய சமதேகிகளுக்கேயாம். ஆகையால் நுண்மையான தேகிகளுக்கும்; பாலர்கள், விருத்தர்கள், பெண்கள் முதலியவர்களுக்கும்

குறைத்தும், வலுவான தேகிகளுக்குத் தக்கபடி அதிகப்படுத்தியும் உபயோகிக்க வேண்டியது.

10. கிரகசம்பந்தம்- ஒவ்வொரு சரக்குகளுக்குரிய கிரகங்கள், எல்லாப் பதார்த்தங்களும்; சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி முதலிய கிரகங்களுள் ஒன்றல்லது இரண்டோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவரவர்களின் சுப கிரகங்களுக்குரியவும் அவற்றின் நட்பு முதலிய சுப கிரகங்களிற் குரியவும் பதார்த்தங்களைத் தனியாக உபயோகிப்பதினாலும் அல்லது அவற்றினால் யோக முறையாய்ச் செய்யப்பட்ட அவுடதங்களினாலும் வியாதி நீங்கிச் சுகமுண்டாகும். அவ்வாறின்றி பகை, நீசம் முதலிய அசுப கிரகங்களுக்குரிய பதார்த்தங்களை அல்லது அவைகளினால் யோகமுறையாய்ச் செய்யப்பட்ட அவுடதங்களை உபயோகிப்பதினால் அவ்வளவு சுகமும் பலனுமுண்டாகாது. ஆகையால் இந்தச் சாஸ்திரப் பயிற்சியுள்ள வயித்தியர்கள் முதலியயாவருக்கும் இவ்விபரந் தெரிந்திருந்தால் மிகவும் அனுகூலமென்பது நன்கு விளங்கும். ஆனால் அவ்வாறு நிச்சயித்துச் செய்ய அவகாசமில்லாச் சமயங்களிலும் அப்படிச் செய்ய வேண்டுமென்பது அநாவசியம்.

இரத்த விகற்பத்தைச் சமப்படுத்தி இரத்தத்தைச் சுத்தி செய்யும் பதார்த்தங்கள்

சந்தனம்

ஓர்வகை மரமினம் வருணம்-வெண்மை. சுவை, மணம்-சிறு கசப்பு; சுகந்தம். இயற்கைக் குணமும் தரமும், 3-ம் தரக் குளிர்ச்சியும்; 2-ம் தரச்சூடும்.

செய்கையும் உபயோகமும்- சந்தோஷ முண்டாகும்; இருதயத்திற்கும் இரைப்பைக்கும் பெலத்தை யுண்டாக்கும், அசுத்த சத்துக்களைப் பக்குவப்படுத்தும்; வீக்கங்களைக் கரைக்கும்; இரத்தத்தைச் சுத்தி செய்யும்; மயக்கம், இரைப்பையின் எரிவந்தம், பித்தபேதி, இவைகளைக் கண்டிக்கும். இதனை முகர்வதினால் விசூழிக்காற்று நீங்கும். சந்தனத்தை யரைத்துப் பற்றிடச் சுரத் தலைநோய்போம்.

(துர்க்குணம்) போகசக்தியைக் குறைக்கும். (பரிகாரம்) தேன் அல்லது கற்கண்டு (பதில்) சிகப்புசந்தனம் அதாவது செம்மரம்- (பிரமாணம்) சூரணம் 4 கிராம். (கிரகசம்பந்தம்) சனி.

கல்தாமரை

தண்ணீரிலுண்டாகும் ஓர் வகைக் கொடிப்பூ; தாமரைப்பூ இனம், (வருணம்) வெளியில் வெளுத்தும் உட்புறத்தில் மஞ்சணித்தும் இருக்கும்

சுவை- இலைப்பு. இயற்கைக் குணமும் தரமும் 2-ம் தரக் குளிர்ச்சியும் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்:- இருதயம்; தலைமூளை, இவற்றிற்குப் பலத்தைக் கொடுக்கும்; உஷ்ணத்தைத் தணிக்கும்; சூட்டைப் பற்றிய பீநசம்; இருமல், மார்புவரட்சி, இவற்றைக் கண்டிக்கும்; இப்புஷ்பத்தை மலர்ந்தவுடன் முகர்வதினாலும் சூடானதேகிகளின் இருதயம், மூளை இவைகளுக்குப் பெலத்தையுண்டாக்கும்; நித்திரை யுண்டாக்கும்; சூட்டின் தலைநோயையும் தணிக்கும்.

துர்க்குணம்- போக சக்திக்கும், நீர்ப்பைக்கும் ஆகாது. பரிகாரம்-தேன், கற்கண்டு. பதில்-கித்மி, வெண்தாமரைப் பூ, செந்தாமரைப்பூ, பிரமாணம்- உலர்த்தினது 10 கிராம், கிரகசம்பந்தம்-குரு.

ரோஜாப்பூ

ஓர்வகை முட்செடியின் பூ வருணம்-வெண் செகப்பு சுவை-இலைப்புடன் சிறு தித்திப்பு, இயற்கைக் குணமும் தரமும்-1ந் தரக் குளிர்ச்சியும் 2ந் தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்- ஜீவசக்தியை விருத்தி செய்யும். சந்தோஷ முண்டாக்கும். தேகத்தைச் சுத்தி செய்யும். வாயுவைக் கண்டிக்கும். பித்தநீர், கபநீர் இவைகளின் கொதிப்பைச் சாந்தப்படுத்தும். இவற்றைப் பேதி மூலமாகவும் கண்டிக்கும். தலைநோய், குண்டிக்காய் நோய் இவற்றைக் கண்டிக்கும். சுரம், பைத்தியம், மயக்கம் ஆகியவைகளைக் கண்டிக்கும். இதை அரைத்துப் பற்றுப்போட ஈரலின் நோய் நீங்கும்.

துர்க்குணம்-போகசக்தியைக் குறைக்கும். பரிகாரம்- சோம்பு. பதில்-பனப்ஷா பூ, பிரமாணம்-12 கிராம். கிரக சம்பந்தம்-குரு.

சோம்பு அல்லது பெருஞ்சீரகம்

ஓர் பூண்டின்விதை. வருணம்-பசுமை சாயலான மஞ்சள் வருணமுள்ளது, சுவை, மணம்-சிறுதித்திப்பு, காரம், காரமான வாசனை. இயற்கை குணமும் தரமும்- 2-ந்தரச் சூடும். 1-ந்தரக் குளிர்ச்சியும்.

செய்கையும் உபயோகமும்- வயிற்று நோயைச் சாந்தப்படுத்தும், கண்பார்வைக்கும் இரைப்பைக்கும் பெலத்தைக் கொடுக்கும், வாயுவைக்

கண்டிக்கும். கபத்தைக் கழிக்கும், இரைப்பையிலிருந்து எழும்புங் கெட்ட ஆவிகளைத் தடுக்கும் நீரை அதிகப்படுத்தும், அசுத்த சத்துக்களைப் பாகப்படுத்தும், பாலை அதிகப்படுத்தும் சிறுகுடல் வாதம், வயிற்றுப் போக்கு இருமல் ஆகியவைகளைக் கண்டிக்கும்.

துர்க்குணம்-தாகமுண்டாகும். சூட்டுடம்பிற்குதவாது பரிகாரம் - சந்தனம், கர்ப்பூரம், சிகஞ்சபீன், பதில்-கரபஸ் விதை. பிரமாணம்-8 அல்லது 10 கிராம். கிரகசம்பந்தம்-அங்காரகன்.

சீமை இலந்தைப் பழம்

நாட்டு இலந்தைப் பழத்தைப் போலிருக்கும், ஆனால் சற்று பருமனாயிருக்கும், வருணம்-செகப்பு, உள்ளே கொட்டையுண்டு, சுவை-தித்திப்பு, இயற்கைக் குணமும் தரமும்-1-ந்தரக் குளிர்ச்சி,

செய்கையும் உபயோகமும்:- தடிப்பாகிய அசுத்த சத்துக்களைப் பாகப்படுத்தும், தேகசுபாவத்தைச் சாந்தப்படுத்தும்; மார்பிலுள்ள உறுப்புகளின் கொதிப்பைத் தணிக்கும், எல்லாவித அசுத்த சத்துக்களையும் பேதி மூலமாக வெளிப்படுத்தும்; மார்பு தொண்டை இவைகளின் வரட்சியை நீக்கும், இரத்தத்திலிருக்கிற குற்றங்களை நீக்கிச் சுத்தப்படுத்தும், தாகம், எரிச்சல் இவைகளைத் தணிக்கும். வரட்சியான இருமல், சிணுக்கிருமல் முதலியவைகளை நீக்கும், ஈரல், மார்பு, இடுப்பு ஆகிய இவ்விடங்களிலுள்ள நோயையுங் கண்டிக்கும்.

துர்க்குணம்-குளிர்ச்சியான இரைப்பைக்கும், போக சக்திக்கும் உதவாது, பரிகாரம்-சருக்கரையும் திராக்ஷையும், பதில்-திராக்ஷை, சீமை நறுவிலிப்பழம், பிரமாணம் 10 அல்லது 15 பழங்கள்; கிரகசம்பந்தம்-சனி.

காஹூக்கீரை

சிறுசெடி, கீரையினம், வருணம்-பச்சை, சுவை-இலைப்புடன் சிறுதித்திப்பு, இயற்கை குணமும் தரமும்-2ம்தரக்குளிர்ச்சி கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்- சுத்தமான சத்துக்களை யுண்டாக்கும், தடிப்பாகிய அசுத்த சத்துக்களைப் பாகப்படுத்தி இளகச் செய்யும், பித்தத்தின் தீக்ஷணியத்தைச் சாந்தப்படுத்தும், இரத்தத்தைச் சுத்தியாக்கும். ஊழிக்காற்றை நீக்கும்.

துர்க்குணம்-போகசக்தியைக் குறைக்கும். சூட்டுடம்பிற் காகாது பரிகாரம்-பொதினா; கரபஸ், பதில்-பருப்புக் கீரை. பிரமாணம்-இலையின் ரசம் 35, அல்லது 45 கிராம், கிரகசம்பந்தம்-சந்திரன்.

காசினிக்கீரை

ஓர் செடியின் இலைகள், கீரையினம், முள்ளங்கியிலை போன்றது, வருணம்-பச்சை, சுவை-இலைப்பும் சிறுகசப்பும், இயற்கைக் குணமும் தரமும்-1-ம் தரக் குளிர்ச்சியும் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்- வரட்சியை நீக்கும், ரோமத் துவாரங்களை விரியச் செய்யும், இரத்தம் பித்தம் ஆகியவைகளின் தீக்ஷணியத்தையும், உஷ்ணத்தையும், தாகத்தையுந் தணிக்கும். இரத்தம் பித்தம் இவைகளின் தொந்தத்தினா லுண்டாகும் சூட்டைக் கண்டிக்கும்.

துர்க்குணம்-இருமலுக்காகாது, பரிகாரம்-பனப்ஷாவின் ஷர்பத், பதில்-தராயிலை, பிரமாணம்-இலையின் ரசம் 60 கிராம். கிரகசம்பந்தம்-சந்திரன்.

காசினிவிதை

சீரகத்திலும் சிறிதானது, வருணம்-வெண்ணிறச்சாயல், சுவை - இலைப்பு, இயற்கைக்குணம் தரமும்-2-ம் தரக் குளிர்ச்சியும் வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்-வரட்சியை நீக்கும், நீரைப் போக்கும். தலைநோய், வைத்தியரோகம் முதலியவைகளுக்குபயோகப்படும், ஈரலின் சூடு, தாகம், சுரம் இவற்றையும் குண்டிக்காய், மண்ணீரல் இவைகளின் பலஹீனத்தையும் நீக்கும்; வாயிலிருந்துவரும் இரத்தத்தை நிறுத்தும், பசிதீபனத்தை தூண்டும்.

துர்க்குணம்-மண்ணீரலுக் குதவாது, பரிகாரம்-அனிசூன், சிக்கஞ்சபீன், பதில்-தராயிலை அல்லது, கஷுஸ்விதை, பிரமாணம் - விராகநிறை 18 அல்லது 25 கிராம், கிரகசம்பந்தம்-சந்திரன்.

பனப்ஷாபூ

மலை நாடுகளிலுண்டாகும் ஓர் பூண்டின் பூ. சிறியதாயிருக்கும், வருணம்-மஞ்சள் வருணம், சுவை-இலைப்பு. இயற்கை குணமும் தரமும்-2-ம் தரக்குளிர்ச்சியுங் கொழுமையும் சிலர் 2ம் தர வரட்சி யென்பார்கள்.

செய்கையும் உபயோகமும்:- மிகவும் இலகுவாக பேதி மூலமாய்ப் பித்தசத்தை வெளிப்படுத்துவதில் மிகவும் உபயோகமானது; தாகம் இரத்தத்தின் தீக்ஷணியம், மார்பு தொண்டை இவைகளின் வரட்சி ஆகியவைகளைக் கண்டிக்கும். வீக்கங்களைக் கரைக்கும், நீர்ப்பையின் அழலையை நீக்கும். இருமலைக் கண்டிக்கும், நித்திரையை யுண்டாக்கும்.

துர்க்குணம்-இருதயத்திற் காகாது, பரிகாரம்-அதிமதுரம், ரோஜாப்பூ, பதில்-கல்தாமரைப்பூ, குப்பாசிப்பூ, பிரமாணம்-விராகனெடை பதினெட்டுகிராம் கிரகசம்பந்தம்- குரு.

காஜர்க் கிழங்கு

ஓர் செடியின் கிழங்கு; முள்ளங்கியினம், வருணம்-கருப்பு, ஊதா. சுவை-தித்திப்புடன் இலைப்பு. இயற்கைக் குணமும் தரமும்-2ம் தரச்சூடுங் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்:- பரிசுத்த ஆவியை யுண்டாக்கி ஜீவசக்தியை அதிகப்படுத்தும், ஈரலின்வரட்சியை நீக்கும்; இரைப்பைக்குள் பலத்தை யுண்டாக்கும், மலத்தை இளக்கும்; விந்து விளைவை அதிகப்படுத்தும்; ஆண்குறி எழுச்சியை அதிகப்படுத்தும். கபத்தை நீக்கும். இருமல், மார்புநோய் இவற்றிற்கு உபயோகப்படும். நீர் நன்றாயிறங்கும் குண்டிக்காயைச் சுத்தி செய்யும், நீர்ப்பை முதலியவைகளிலுள்ள கற்களையுடைத்து வெளிப்படுத்தும். நீர்ப்பாண்டிற் குபயோகமாகும். இதின் லேகியம் இன்பத்தைக் கொடுத்துப் பலத்தையு முண்டாக்கும்.

துர்க்குணம்-வயிறுப்பும், தாமதமாய் ஜீரணமாம், பரிகாரம்-வெல்லம், சருக்கரை, பதில்-ஷல்கம் கிழங்கு, பிரமாணம்-35, 60 கிராம் கிரகசம்பந்தம்-குரு.

எலுமிச்சம்பழம்

ஓர் மரத்தின் பழம். வருணம்-மஞ்சள் வருணம். சுவை-புளிப்பு; இயற்கைக் குணமும் தரமும்-3ம் தரக்குளிர்ச்சியும், 2ம் தரக் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்:- ஈரலுக்கு பெலத்தைக் கொடுக்கும். தாகம், எரிவந்தம், அரோசகம், பித்தம் முதலியவைகளைக் கண்டிக்கும்; சத்துக்களை வெளிப்படுத்தும். பித்த சுரத்திற் குபயோகப்படும், விஷபேதிக்காற்றைத் தடுக்கும், பூச்சிக்கடி முதலிய விஷங்களுக் குபயோகப்படும்.

துர்க்குணம்-நரம்புகளுக்கும், மார்பிற்கும் ஆகாது, போகசக்தியைக் குறைக்கும். பரிகாரம்-சீமையிலந்தை, சருக்கரை, பதில்-நாரத்தம்பழம், பிராமணம்-ரசம் 20, 35 கிராம், கிரகசம்பந்தம்-சனி.

வேம்பு

பிரசித்தமானது, வருணம்-பிரசித்தமானது, சுவை-கசப்பு, இயற்கைக் குணம்-1ந் தரச் சூடுங் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்:- இதன் சமூலத்தின் கியாழத்தினால் இரத்த சுத்தியாம், இரத்தத்தைச் சுத்தி செய்வதில் இது மிகவும் உபயோகமானது. வீக்கங்களையும், வாயுக்களையும் கண்டிக்கும், அசுத்த சத்துக்களைப் பாகப்படுத்தும், சத்துக்களை பழுக்கச் செய்யும் குட்டம், வெண்மேகம், சொரி சிரங்கு, சிரங்குகள் ஆகியவைகளுக் குபயோகப்படும். வாதபித்த சிலேத்துமங்களின் பெருக்கைக் கண்டிக்கும், சருமத்தைப் பற்றிய அனேக வியாதிகளுக் குபயோகப்படுகின்றது. நமது தேசத்து அவுடதங்களில் இது மிகவும் சிறந்தது.

துர்க்குணம்-இல்லை, பரிகாரம்-இல்லை, பதில்-இல்லை, பிரமாணம்-சமூலத்தின் தூள் 12 கிராம். கிரகசம்பந்தம்-குரு.

பிரமதண்டு

முள் நிறைந்த சிறுசெடியினம், வருணம்-கருஞ்சாய பச்சை. சுவை-கசப்பு. இயற்கைக் குணம்-1-ந் தரக்குளிர்ச்சி சிலரிடத்தில் வரட்சி.

செய்கையும் உபயோகமும்:- இதன் வேர்க்கிஷாயம் இரத்தத்தைச் சுத்தி செய்யும், இதன் சமூலம் இரணங்களை யாற்றும். இரைப்பை, ஈரல் முதலிய ராஜகருவிகளுக்குப் பலத்தைத் தருகிறது; சப்தக்கருவியைச் சுத்தி செய்கிறது; இருமல், க்ஷயம், கபம் முதலியவைகளைக் கண்டிக்கும்; வெண்ணரம்புகளுடைய வியாதிகளுக்கும் உபயோகப்படுகின்றது; மூத்திர அடைப்பை நீக்கும்; தாதுவிர்த்திக்குபயோகப்படும்.

துர்க்குணம்-இல்லை, பரிகாரம்-இல்லை, பதில்-கொட்டைக்கரந்தை, பிரமாணம்-இரசம் 8 கிராம், கிரகசம்பந்தம் குரு.

தராயிலை அல்லது துராயிலை

கொத்துமல்லி இலையைப் போன்று சற்று தடிப்பாயிருக்கும், வருணம்-கருஞ்சாயலான பசுமை. சுவை-கொஞ்சம் உரைப்புடன் கசப்பு, இயற்கைக் குணமும் தரமும்-1ந் தரச் சூடுங் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்:- ஈரல், மண்ணீரல் இவைகளின் வரட்சியை நீக்கும், இரைப்பைக்கும் ஈரலுக்கும் பலத்தைக் கொடுக்கும். வாதம், பித்தம், சிலேஷ்மம், இரத்தம் இவைகளின் மாசுகளை நன்றாய்க் கண்டிக்கும், சுரங்களைக் கண்டிக்கும். பசி தீபனத்தை யுண்டாக்கும், மலத்தைத் தள்ளும்.

துர்க்குணம்-நுரை ஈரலுக்காகாது, பரிகாரம்-காசினி, பதில்-நில ஆவாரை, கடுக்காய்த் தோல்; பிரமாணம்- பத்து கிராம், கிரகசம்பந்தம்-குரு.

ஆலுபுகாரா

ஓர் வகைப்பழம்; தேனிலூறவைக்கப் பட்டவைகள் வருணம்-கருஞ்சாயலான சிவப்பு, சுவை, மணம்-புளிப்பும் தித்திப்பும், இயற்கைக்குணம், தரம்-1ம் தரக் குளிர்ச்சியும், 2ம் தரக் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்:- மலத்தை இளக்கும், சிறுகுடலில் வழுவழுப்பை யுண்டாக்கும், பித்தச்சூடு, இரத்தச் சூடு ஆகியவைகளைத் தணிப்பதில் மிகவும் உபயோகமானது; இரத்தக் கொதிப்பை யடக்கும்; சுரங்களைக் கண்டிக்கும்; அரோசிகத்தை நீக்கும், சொரி சிரங்கு முதலியவைகளை யுண்டாக்கும், அசுத்த நீரை நீக்கும், எல்லாவித அசுத்த சத்துகளைப் பழுக்கச் செய்து பக்குவப்படுத்தும், தாகத்தை யடக்கும், இது புளிப்பா யிருக்கினும் இருமலை யதிகப்படுத்தாது; புளி முதலிய மற்றப் புளிப்பு வஸ்துக்கள் இருமலை யதிகப்படுத்தும்.

துர்க்குணம்-மூளை, இரைப்பை, நரம்புகள் ஆகியவைகளுக்காகாது, பரிகாரம்-சீமையிலந்தைப்பழம், றூமிமஸ்தகி, குல்கந்து, பதில்-புளி, பிரமாணம்-பழம் 15, 30. கிரகசம்பந்தம்-சனி.

கபத்தைச் சாந்தப்படுத்தும் பதார்த்தங்கள்
ஏலக்காய்

ஓர் செடியின் காய்கள். இச்செடி மஞ்சள் செடியைப் போல் குத்துகுத்தா யிருக்கும், வருணம்-வெண்மை, விதைகள் கருமை. மணம்-வெடிப்புடன் கூடின சுகந்த வாசனை, இயற்கைக் குணம் தரம்-2ம் தரச்சூடும் வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்:- ஜீவசக்திகளைப் பலப்படுத்திப் பரிசுத்தமாக்கும்; வாயுவைக் கண்டிக்கும்; மார்பு, தொண்டை, இரைப்பை இவ்விடங்களிலுள்ள கட்டுகளை நீக்கி வரட்டும்; இரைப்பைக்கும் இருதயத்திற்கும் பலத்தைக் கொடுக்கும். மயக்கம், வாந்தி, அரோசகம் ஆகியவைகளை நீக்கும்; வாய் நாற்றத்தை நீக்கும்; காற்றைச் சுத்தப்படுத்தும், குண்டிக்காயை சுத்தப்படுத்தும், நீர்ப்பையிலுள்ள கற்களை நீக்கும்.

துர்க்குணம்-மார்பு, நுரை ஈரல், சிறுகுடல் ஆகியவைகளுக்காகாது. பரிகாரம்-பாதம்பிசின், மூங்கிலுப்பு, பதில்-வால்மிளகு, பேரேலம், லவங்கம். பிரமாணம்-2-4 கிராம். கிரகசம்பந்தம்-குரு, சூரியன்.

பேரேலக்காய்

மலை நாட்டிலுள்ளது. நீரிலிட்டு வேகவைத்தனுப்பப் படுகிறது. வருணம்-மேற்புறமும் உள்விதைகளும் கறுப்பு. மணம்-அதிக வெடிப்புடன் கூடிய மணம். இயற்கைக் குணம் தரம்-1ம் தரச்சூடும், 2ம் தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்:- இருதயத்திற்குக் களிப்பை யுண்டாக்குகிறது; இரைப்பையைப் பெலப்படுத்தித் தீபாக்கினியை அதிகப்படுத்தும்; மலத்தைக் கட்டும்; அரோசிகம், இரைப்பையில் தங்கியிருக்கும் வாயு முதலியவைகளைக் கண்டிக்கும்.

துர்க்குணம்-சிறுகுடல், நுரைஈரல் ஆகியவைகளுக்குதவாது பரிகாரம்-பாதம் பிசின். பதில்-வால்மிளகு, ஏலம். பிரமாணம்- பதினைந்து கிராம், கிரகசம்பந்தம்-குரு, சூரியன்.

லவங்கப்பட்டை

ஓர் மரத்தின் குச்சியின் பட்டை. வருணம்-சற்று சிவப்புச் சாயலானது. சுவை, மணம்-உறைப்புடன் சிறுதித்திப்பு காரமான வாசனையுடையது. இயற்கைக் குணம் தரம்-2ம் தரச் சூடும் வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்:- ஜீவ சக்தியை விருத்தியாக்கிப் பாதுகாக்கும். வரட்சியை நீக்கும், சந்தோஷத்தை யுண்டாக்கும், எல்லாச் சத்துக்களையும் சமமாய்ப் பாகப்படுத்தும், வாயுவைக் கண்டிக்கும். நீர்க்கட்டு, சூதகபந்தம், இவற்றைப் போக்கும். போகசக்திக்குப் பலத்தைத் தரும். பைத்தியம், மூர்ச்சை முதலியவைகளை நீக்கும். அதன் தைலம் குளிர்ச்சியினா லுண்டான சகல வியாதிகளுக்கும் உபயோகப்படும். முக்கியமாய்க் குளிர்ச்சியினாலான வீக்கம், நோவு, தலைநோய் ஆகியவைகளுக்காம்.

துர்க்குணம்-நீர்ப்பைக்கு ஆகாது; சூடான தேகிக்குத் தலைநோயுண்டாம், பரிகாரம்- றூமிமஸ்தகி, பாதம்பிசின், பதில்-பெருலவங்கப்பட்டை, வால்மிளகு. பிரமாணம்12, 24 கிராம். கிரகசம்பந்தம்-சூரியன்.

சீரகம்

ஓர் செடியின் விதைகள், வருணம்-வெண்மை. சுவை, மணம்-காரம், காரமான வாசனை. இயற்கைக் குணம்-2ம் தரச் சூடும், 3ம் தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்:- இரைப்பை, ஈரல், சிறுகுடல் ஆகியவைகளுக்குப் பெலத்தைக் கொடுக்கும். குண்டிக்காய்களுக்குப்

பலத்தைக் கொடுக்கும்; சூடுண்டாக்கும், வாயு, வீக்கம் ஆகியவைகளைக் கண்டிக்கும். கபத்தை வெளிப்படுத்தும், போக சக்தியை அதிகப்படுத்தும்; இதை ஊறவைத்து அதன் சலத்தைச் சாப்பிட அந்திமாலை, கண்ணோய், கண்கோணல், முடமயிர் முதலியவைகளுக்கும் பிரமேகத்திற்கும் உபயோகப்படும்.

துர்க்குணம்-நுரை ஈரலுக்காகாது; பரிகாரம்-பாதம் பிசின், பதில்-ஓமம், கருஞ்சீரகம். பிரமாணம்-24 கிராம், கிரகசம்பந்தம்-அங்காரகன்.

அதிமதுரம்

ஓர்வகைக் கொடியின் வேர். வருணம்-மஞ்சள் சாயலானது சுவை-சிறுதித்திப்பு. இயற்கைக்குணம் தரம்-2ம் தர சூடும், 1ம் தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்:- தடிப்பாகிய சத்துக்களை யிளக்கிப் பாகப்படுத்தும். தாகம், இரைப்பையின் அழலை இவைகளைத் தணிக்கும். சீதக்கட்டுகளை பேதி மூலமாக வெளிப்படுத்தும். பேசி நரம்புகளுக்குப் பலத்தைத் தரும். மார்பு, தொண்டை ஆகியவைகளின் வரட்சியை நீக்கும். மார்பிலுள்ள வியாதிகள், இருமல், மூச்சுத்தங்கல், இரைப்பு ஆகியவைகளை நீக்கும். சில சர்ப்பங்கள் இவ்வேரைச் சுத்திக் கொண்டிருக்குமாம்; ஆகையால் இதன் மேல்தோலை நீக்கி உபயோகிக்க வேண்டும்.

துர்க்குணம்-குண்டிக்காய், மண்ணீரல் இவற்றிற்காகாது. பரிகாரம்-சீமையிலந்தை, பாதம்பிசின், ரோஜாப்பூ, பதில்-அதிமதுரப்பால் அரைப்பங்கு. பிரமாணம்-12, 8, கிராம். கிரகசம்பந்தம்-அங்காரகன்.

சடாமாஞ்சில்

புல்லினம், பூ-காய் ஆகியவைகளிரா, சடையுள்ளது, வருணம்-சற்று மஞ்சள் சாயலான கருமை. சுவை, மணம்-காரம், காரமான வாசனை. இயற்கைக் குணமும் தரமும்-2ம் தரச்சூடும் வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்- மூளை, இரைப்பை, ஈரல் ஆகியவைகளுக்கு வலுவை உண்டாக்கும். உதிரச் சிக்கலை யறுக்கும்; கல்லடைப்பை நீக்கும். காக்கைவலி, உன்மத்தம் ஆகிய இவைகளைக் கண்டிக்கும். இரைப்பையிலும், மார்பிலுள்ள நீரைவறட்டும்.

மஞ்சட்காமாலை, பெருவயிறு ஆகியவைகளுக்கும் ஆம்; இன்னும் பலவித உள் அவயவங்களின் வீக்கத்திற் குபயோகப்படும். இதனைக் கொத்துமல்லி ரசத்திலிழைத்துக் கண்ணிலிட, பார்வை சக்தியை அதிகப்படுத்தும்.

துர்க்குணம்-குண்டிக்காய்களுக் காகாது. பரிகாரம்- பாதம்பிசின், மூங்கிலுப்பு, பதில்-லவங்கப்பத்திரி, பிரமாணம்-சூரணம் நான்கு கிராம், கிரகசம்பந்தம்- சூரியன்.

சீமைத் துத்திவிதை

நாட்டுத் துத்திவிதையிலும் கொஞ்சம் பெரிதானது. வருணம்-கருமை; சுவை-இலைப்பு, இயற்கைக் குணமும் தரமும்-1ம் தரக் குளிர்ச்சியும் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்- சூட்டினாலுண்டாகும் இருமலைச் சாந்தப்படுத்தும்; மாசுகளையும் அசுத்த நீர்களையும் பழுக்கச் செய்யும்; வீக்கங்களைக் குறைக்கும்; அவயவங்களைத் துவளச் செய்யும்; வேதனைகளைச் சாந்தி செய்யும். மலத்தை யிளக்கும்.

துர்க்குணம்-இரைப்பைக்கும் நுரை யீரலுக்கும் ஆகாது. பரிகாரம்-தேன், சோம்பு. பதில்-சிறுதுத்தி விதை, கல் தாமரைப்பூ. பிரமாணம்12, 20 கிராம். கிரகசம்பந்தம்-சந்திரன்.

கருஞ்சீரகம்

சீரகத்தைப் போன்று, சோம்பிலும் சிறிதானது. வருணம்- கருமை, சுவையும் மணமும்-சிறுகசப்புடன் காரம், காரமான வாசனை, இயற்கைக் குணமும் தரமும்-2ம் தரச்சூடும் வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்- சிலேற்றுமத்தை நன்றாய்க் கண்டித்து வெளிப்படுத்தும். இரைப்பை, குடல்கள் ஆகியவைகளிலுள்ள எல்லா வகைக் கிருமிகளையும் வெளிப்படுத்தும். இதை யரைத்துப் பற்றிடக் குளிர்ச்சியினா லுண்டான வீக்கம் கரைந்துபோம். பசிதீபனத்தையும் சீரண சக்தியையு முண்டாக்கும். இதன் சூரணம்-பொரித்த வெண்காரம் இவை சமன் சேர்த்தரைத்து 1 கிராம் முதல் 75 கிராம் வரையில் பசும்பாலில் சாப்பிட மூலநோய்சுகுணப்படுகிறது. (சுயானு பவம்)

துர்க்குணம்-குண்டிக்காய்கள், நுரையீரல், சூடான தேகம் ஆகியவைகளுக்காகாது, பரிகாரம்-பொதினா இலை. பதில்-சீரகம், சீமைச்சோம்பு, சோம்பு, பிரமாணம்-6 கிராம் கிரகசம்பந்தம்-அங்காரகன்.

அனிசூன் அல்லது றூமிச் சோம்பு

சோம்பைப் போன்று சற்று முக்கோண வடிவுள்ளது. ஆனால் அதிலும் சற்று சிறிதானது. வருணம்-வெண்மஞ்சள் சாயலுடன் அதிக பசுமையானது. சுவை-நற்கந்தமுடையது. இயற்கைக் குணமும் தரமும்-2ம் தரச்சூடும், 3ம் தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்- பரிசுத்த ஆவியை யுண்டாக்கும். வாயுகளைக் கண்டிக்கும். மூட்டின் வாய்வுகள், கீல்வாய்வுகள் இவற்றைக் கண்டிக்கும். மூத்திரம், பால், வேர்வை, சூதகம் ஆகியவைகளை அதிகப்படுத்தும். முகவசீகரத்தை அதிகப்படுத்தும். கண்படலம், பூ முதலியவைகளுக்குக் குபயோகப்படும்.

துர்க்குணம்-சிறுகுடற்களுக் காகாது. பரிகாரம்- சோம்பு, சூடானவர்களுக்குக் காடி, பதில்-ஓமம், போக சக்திக்காக அஞ்சுரா. பிரமாணம்-8, 20 கிராம். கிரகசம்பந்தம்-அங்காரகன்.

திராக்ஷப் பழம்

பழுத்துக் கொடியிலேயே யுலர்ந்தது, இது பிரசித்தமானது வருணம்-கருமை, சுவை-தித்திப்பு. இயற்கைக் குணம், தரம்-1ம் தரச்சூடும் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்:- பித்தத்தின் கொதிப்பையும் தீக்ஷணியத்தையும் தணிக்கும். கபத்தை நன்றாய் வெளிப்படுத்தும், சத்துக்களை நன்றாய் முதிரச் செய்து பாகப்படுத்தும், மலமிளகும், வாயுவைக் கண்டிக்கும். இரைப்பை, குடல்கள் ஆகிய இவைகளைச் சுத்தப்படுத்தும். தேக புஷ்டியைத் தரும். ஈரலுக்குப் பலத்தையும், குளிர்ச்சியான தேகசுபாவ முடையவர்களுக்குத் தாதுவிர்த்தியை யுண்டாக்கும். நுரையீரலின் புண்ணை யாற்றும். இதனுடன் மிருகங்களின் கொழுப்பைச் சேர்த்தரைத்துப் பூச, வீக்க முதலியவைகள் போம். இதனை வறுத்துச் சாப்பிட சூடான இருமல் போம்.

துர்க்குணம்-சூட்டுடம்பிற்கும், குண்டிக்காய்களுக்கும் ஆகாது பரிகாரம்-சீமை யிலந்தைப் பழம், காடியும் சருக்கரையும் சேர்த்துக் காய்ச்சின ஷர்பத்து; பதில்-கிஷ்மிஷ், விதையில்லா திராக்ஷை. பிரமாணம்-5, 45 கிராம். கிரகசம்பந்தம்-சனி.

துளசி

பூண்டினம் 2 வகை; ஒன்று சிறியயிலை யுடையது. இலைகள் அதிகமாயிருக்கும்; மற்றொன்று பெரிய யிலை யுடையது.

வருணம்-சின்னது சற்று மஞ்சள் சாயலான பசுமை. சுவை, மணம்-காரம், காரமான வாசனை. இயற்கைக் குணமும் தரமும்-1ம் தரச்சூடும், 2ம் தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்- மூளையைச் சுத்தப்படுத்தி வீக்கங்களைக் கரைக்கும். வாயுவை நீக்கும். இருதயத்திற்கும் இரைப்பைக்கும் பலத்தை யுண்டாக்கும். கெட்டு அசுத்தமான இரத்தத்தை வெளிப்படுத்தும். இதனை வீட்டில் பயிராக்குவதினால் மூட்டுப்பூசி, பேன் ஆகியவைகளை யோட்டுவது மின்றி விசூழிக்காற்றையும் தடுக்கும். சுரம் இருமல் இவைகளையுங் கண்டிக்கும்.

துர்க்குணம்-அளவில் அதிகமானால் தலைசுழற்றல், கண் புகைச்சலுண்டாம். பரிகாரம்-கொத்துமல்லி விதை, பன்னீர், பதில்-காட்டுத் துளசி பிரமாணம்-இலையின் ரசம் 20, 45 கிராம். கிரகசம்பந்தம்-சனி.

பித்தத்தைச் சாந்தப்படுத்தும் பதார்த்தங்கள்

வெள்ளரி விதை

வெள்ளரிப் பழத்தின் விதைகள் பிரசித்தமானது. வருணம்-வெண்மை. சுவை-தித்திப்பு. இயற்கைக் குணமும் தரமும்-2ம் தரக் குளிர்ச்சியுங் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்-சிறுநீரை அதிகப்படுத்தும். வரட்சிகளை நீக்கும். நீர்ப்பை, இரைப்பை இவைகளைச் சுத்தி செய்யும். வ்ழவழப்பான அசுத்த நீர் நரம்புகளில் தங்கியிருப்பதைச் சுத்தி செய்யும் சூட்டினாலுண்டான சுரங்கள், இரத்தக் கொதிப்பு, தாகம் ஆகியவைகளைக் கண்டிக்கும்; வெட்டைச்சூடு, நீர்ச்சுருக்கு, நீரருகல், பிரமியம், கல்லடைப்பு இவைகளை நீக்கும்.

துர்க்குணம்-குளிர்ச்சியான தேகிகளுக்கு வாயுவை அதிகப்படுத்தும். பரிகாரம்-காடியும் சருக்கரையும் சேர்த்துக் காய்ச்சின ஷர்பத்து பதில்-கொக்கரி விதை, பிரமாணம்-பருப்பு 10 கிராம். கிரகசம்பந்தம்-சனி.

குர்வா அல்லது பருப்புக்கீரை விதை

பிரசித்தமானது வருணம்-கருமை. சுவை-இலைப்பு இயற்கைக்குணமும் தரமும்-3ம் தரக் குளிர்ச்சியும், 2ம் தரக் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்- பித்தசுரம், சூடதிகரித்துண்டான சுரம் ஆகியவைகளுக்குபயோகப்படும். தாகத்தைத் தணிக்கும். சூட்டினாலுண்டான தலைநோய், இரைப்பையிலுள்ள சூடு, கருப்பையின் சூடு, ஈரலின் சூடு சூட்டினாலுண்டான இருமல், வாயுவினால் இரத்தம் விழுதல், நீரிழிவு ஆகியவைகளுக்குதவும்.

துர்க்குணம்-போகசக்தி, மண்ணீரல், குளிர்ச்சியான இரைப்பை ஆகியவைகளுக்காகாது. பரிகாரம்-சர்க்கரை. பதில்-பரங்கி விதைப் பருப்பு, இசுபகோல், பிரமாணம்-10 கிராம். கிரகசம்பந்தம்-சனி.

இசுபகோல் விதை

வித்துகள். வருணம்-வெண்சாயலான வருணம்; சுவை-இலைப்பு; இயற்கைக் குணமும் தரமும்-3ம் தரக் குளிர்ச்சியும், 2ம் தரக் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்:- சூடதிகரித் துண்டான சுரம், இரத்தக் கொதிப்பு ஆகியவைகளைத் தணிக்கும், மலத்தை யிளக்கும். சிறு குடல்களில் வழுக்கலை யுண்டாக்கும். வயிற்றுக்கடுப்பு, உதிரபேதி இவைகளை நீக்கும். நாவரட்சி, தொண்டை வரட்சி ஆகியவைகளை நீக்கும். இதை வறுத்து ஜலத்திற் கலந்து சாப்பிட, சகலவித பேதிகளைக் கட்டும். தண்ணீரிலூறவைத்து வாய் கொப்புளிப்பதனால் வாய்ரணம், தொண்டை ரணம் ஆறும், காடியிலரைத்துப் பூச, கீல்வாதம், வீக்கங்கள் தீரும், விதையை நசுக்கிச் சாப்பிட நஞ்சின் குணத்தைத் தரும்.

துர்க்குணம்-வெண் நரம்புகளுக்காகாது, பசி தீபனத்தை மந்தப்படுத்தும், பரிகாரம்-தேன். பதில்-பேதானா, பிரமாணம்-எட்டு கிராம், கிரகசம்பந்தம்-சந்திரன்.

பேதானா விதை

வித்துக்கள். வருணம்-கருமையும் சிவப்பும், சுவை-இலைப்பும் பிசுபிசுப்புமுள்ளது, இயற்கைக் குணமும் தரமும்-2ம் தரக்குளிர்ச்சியுங் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும்- இதை நீரில் ஊறவைத்து, அதன் கோழையைக் குடிக்க, தொண்டை வரட்சி, சூட்டைப் பற்றிய இருமல், வயிற்றெரிவு, பித்தச்சூடு, கை கால் எரிவு ஆகியவை நீங்கும்; நுரையீரல் ரணத்தை யாற்றும்; தீப்பட்டவுடன் தடவினால் எரிவந்தத்தை யாற்றிக் கொப்பளிக்காமற் செய்யும். பித்த வியாதிகளுக்கு அதிக முபயோகப்படும்.

துர்க்குணம்-இரைப்பையைத் துர்ப்பலப்படுத்தும். பரிகாரம் - சோம்பு, சருக்கரை. பதில்-இசுபகோல். பிரமாணம்-8 கிராம். கிரகசம்பந்தம்-சந்திரன்.

கொத்துமல்லி விதை அல்லது தனியான்

வித்துக்கள். வருணம்-வெண்சாயலான சிவப்பு. மணம்-சுகந்த வாசனையுள்ளது. இயற்கைக் குணமும் தரமும் 2ம் தரக் குளிர்ச்சியும், வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்- இரைப்பைக்கும், இருதயத்திற்கும், மூளைக்கும், பலத்தைக் கொடுக்கும். வயிற்றுக்குள் பிறக்கும் கெட்ட ஆவிகளைக் கபாலத்துக் கேறாமல் தடுக்கும். மயக்கம், அருவருப்பு ஆகியவைகளைக் கண்டிக்கும். உதிரபேதி, அஜீரண பேதிகளை கண்டிக்கும். இந்திரிய ஒழுங்கைக் கண்டிக்கும். நித்திரையை யுண்டாக்கும். இது முக்கியமாய் மூளையைப் பற்றின வியாதிகளுக்கு அதிகம் உபயோகப்படும்.

துர்க்குணம்-தாதுநஷ்டம், மறதி இவற்றையுண்டாக்கும், பரிகாரம்-தேன், காடி ஷர்பத்து. பதில்-காஹூ விதை அல்லது கசகசா பிரமாணம்-8, 15 கிராம், கிரகசம்பந்தம்-சனி

கெக்கரி விதை

வெள்ளரி விதையைப் போலிருக்கும். இதன் காய் வெள்ளரிக்காயைப் போன்றும் மேலே முள்களுமுண்டு. வருணம்-வெண்மை; சுவை -இலைப்பு. இயற்கைக் குணமும் தரமும்-குளிர்ச்சியுங் கொழுமையுமானது.

செய்கையும் உபயோகமும் - நீரை நன்றாய் வெளிப்படுத்தும், கரிந்து போன பித்தத்தை நீரின் மூலமாய்ப் பரிகாரப்படுத்தும். நீர் எரிச்சல், நீர்ச்சுருக்கு, ஈரலின் வீக்கம், மண்ணீரலின் வீக்கம் ஆகியவைகளைக் கரைக்கும். சூட்டினாலுண்டான சுரங்களைத் தணிக்கும்.

துர்க்குணம்- குளிர்ச்சியான தேகிகளுக்காகாது, பரிகாரம் சோம்பு, பதில் - வெள்ளரிவிதை, பிரமாணம் -8 கிராம், கிரகசம்பந்தம் - சந்திரன்.

முலாம்பழ விதை

வெள்ளரி விதையைப் போன்றது. வருணம் - வெண்மை, சுவை - இலைப்பு, இயற்கைக் குணமும் தரமும்-2ம் தரச்சூடும் 1ம் தரக் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும் - ஈரலின் வரட்சியை நீக்கும். சிறுநீரை அதிகப்படுத்தும், மூத்திரக் குண்டிக்காய், நீர்ப்பை, சிறுகுடல் ஆகியவைகளிலுள்ள மாசுகளைச் சுத்தி செய்யும் ;மலத்தை யிளக்கும்; நீர்ச்சுருக்கைப் போக்கும்; பால்; விந்து ஆகியவைகளை அதிகப்படுத்தும்; ஆண்குறியின் எழுச்சி பலப்படும். இதை அரைத்துப் பூசுவதினால் முகத்திலுள்ள கருப்புப்புள்ளி நீங்கும்.

துர்க்குணம்- மண்ணீரல், குடல்கள் ஆகியவைகளுக்காகாது. பரிகாரம் - தேன், பனப்ஷாபூ, பதில் - சில் கூஜா பருப்பு. பிரமாணம் - 8 கிராம், கிரகசம்பந்தம் - சந்திரன்.

காஹூ விதை

பிரபலமானது. வருணம் - வெண்மை. சுவை- இலைப்பு. இயற்கைக் குணமும் தரமும் -2ம் தரக் குளிர்ச்சியும் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும் - பித்தக் கொதிப்பையும், இரத்தக் கொதிப்பையும், தாகத்தையும், இரைப்பையின் எரிவந்தத்தையுந் தணிக்கும் வயிற்றிலுண்டாகும் ஆவி கபாலத்திற் கேறாது தடுக்கும். மலத்தை யிளக்கும். சிறுநீரை அதிகப்படுத்தும், நித்திரையை யுண்டாக்கும். இரத்தத்தைச் சுத்தி செய்யும், கனவில் விந்து வெளிப்படுதற் குபயோகப்படும்.

துர்க்குணம் - தாது நஷ்டப்படும், மறதியையுண்டாக்கும், பரிகாரம்- ரூமிமஸ்தகி. பதில் - கசகசா. பிரமாணம் - 4, 8, 10 கிராம். கிரகசம்பந்தம் - சந்திரன்.

பச்சைக் கருப்பூரம்

ஓர் வகைப் பிசின். வருணம் - வெண்மை. சுவை - கைப்பு. மணம் - ஓர்வகைக் காரமும் சுகந்தமு முடையது; இயற்கைக் குணமும் தரமும் -3ம் தரக் குளிர்ச்சியும் வரட்சியும்.

செய்கையும் உபயோகமும் - சந்தோஷமுண்டாக்கும். இருதயத்திற்கும் மூளைக்கும் பலங்கொடுக்கும். நுரையீரல்களின் ரணத்தை ஆற்றும், தாகம், ஈரலின் அழலை ஆகியவைகளை நீக்கும்.

துர்க்குணம் -போகசக்தி, நீர்ப்பை, மூத்திரக்குண்டிக்காய் ஆகியவைகளுக்காகாது. பரிகாரம் -கஸ்தூரி குங்குமப்பூ. பதில்- சந்தனமும் மூங்கிலுப்பும், பிரமாணம் - 660 மி.கிராம். கிரகசம்பந்தம் - சனி.

காசினிவிதை, சந்தனம், வெள்ளரிவிதை ஆகியவைகளும் பித்தத்தைச் சாந்தப்படுத்தும் பதார்த்தங்களுமாம். இவற்றைப் பற்றி முறையே சம்பந்தப்பட்ட பக்கங்களைப் பார்க்கவும்.

வண்டலைச் சமப்படுத்தும் பதார்த்தங்கள்
சீமை நறுவிலி அல்லது நறுவுளி

ஓர் மரத்தின் காய்கள். வருணம் - உலர்ந்தது. சுவை- பிசுபிசுப்புள்ளது இலைப்பு; பழம் சிறு தித்திப்புள்ளது இயற்கைக் குணமும் தரமும் - சூடுங்குளிர்ச்சியும் சமமானது.

செய்கையும் உபயோகமும் - மார்பிலுள்ள கபத்தை யறுக்கும்; வயிற்றை இளக்கும்; தொண்டையின் கரகரப்பையும் தொண்டையின் வீக்கத்தையும் கண்டிக்கும்; பித்த சத்தையும் பேதியால் வெளிப்படுத்தும்; கபத்தைக் கண்டிக்கும்; சூட்டினா லுண்டான சுரம்,சிறுகுடல் அழலை, நீர் எரிச்சல் ஆகியவைகளுக் குபயோகப்படும். வரட்சி யிருமல் இரைப்பு, மார்புவலி ஆகியவைகளுக் குபயோகப்படும், மருந்துகளின் வேகத்தைத் தணிக்கும்; வயிற்றுக்கடுப்பை நீக்கும்.

துர்க்குணம்- ஈரலுக்கும் இரைப்பைக்குமாகாது. பரிகாரம் - சிலேத்தும தேகிக்கு ரோஜாப்பூ, வாதபித்த தேகிக்கு சீமையிலந்தைப்பழம், பதில்- சீமை துத்திவிதை, பிரமாணம் 15 -20 காய்கள், கிரகசம்பந்தம்- குரு.

காவு ஜூ பான்

ஒரு பூண்டின் இலைகள், வெண்புள்ளியுள்ளதும், தடிப்புமானது, வருணம்- பச்சை சாயலானது, சுவை- இலைப்பும் சிறுகசப்பும், இயற்கைக் குணமும் தரமும் 1-ம் தரச் சூடுங் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும் - தலைமூளை, இருதயம் முதலிய இராஜ உறுப்புகளுக்கும், பார்வை, கேள்வி முதலிய ஐம்புலன்களுக்கும் அதிக பலத்தைக் கொடுக்கும். ஆத்ம சக்தியைக் காப்பாற்றும். மனதிற்குச் சந்தோஷ முண்டாக்கும், பித்த ரோகங்களையும் நாசமாக்கும். ஜன்னி, சயித்தியம், பயித்தியம், காமாலை, மாரெரிவு, இருமல், மூச்சடைப்பு, கல்லடைப்பு இவைகளை நீக்கும்; அழகைக் கொடுக்கும்.

துர்க்குணம் -மண்ணீரலுக்காகாது. பரிகாரம் - சந்தனம், பதில்- பட்டு நூல், ரோஜாப்பூ, பிரமாணம்-4, 6 கிராம். கிரக சம்பந்தம் -குரு.

சீமை யத்திப்பழம்

பிரசித்திமானது, வருணம் - செம்மை கருமை, சுவை- இனிப்பு, இயற்கைக் குணமும் தரமும் -1ம் தரச் சூடும் 2ம் தரக் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும் - நூதன களிப்பை யுண்டாக்குகிறது. வாயுவைக் கண்டிக்கும், அழகுண்டாக்கும். காக்கைவலி, பக்ஷவாதம் முதலிய பல கபரோகங்களுக் குபயோகப்படும், மலத்தை யிளக்கும், தாமதித்துத் தாமதித்து மலத்தைத் தள்ளும், மண்ணீரலின் வரட்சி, அதின் வீக்கம், நீரடைப்பு, மூத்திரக்குண்டிக்காயின் துர்ப்பலம் ஆகிய வைகளை கண்டிக்கும், இதன் ஷர்பத்து இருமலுக்கு நல்லது.

துர்க்குணம் - ஈரலுக்காகாது, துர்ப்பலப்பட்ட இரைப்பைக்கு மாகாது. பரிகாரம் - பாதம்பருப்பு, பதில்- சில்கூஜா பருப்பும் திராக்ஷையும், பிரமாணம்-பழங்கள் 5-8, கிரக சம்பந்தம் - குரு.

முலாம்பழ விதை அதிமதுரம் திராக்ஷை இவைகளும் வண்டலைச் சமப்படுத்தும் பதார்த்தங்கள்.

பக்குவப்படுத்தல்

அஃதாவது - தேகத்தில் கட்டி முதலியவைகளுண்டானால் அவற்றை உடையச் செய்வதற்கு முன் அல்லது சஸ்திரம் செய்வதற்குமுன் அவற்றிலுள்ள அசுபாவசத்தை முதிரச்செய்யப் போல்டீஸ் வகையராக்கள் உபயோகிப்பது போல, உள்ளுறுப்புகளில் மாசுகள் சேர்ந்து விகற்பித்த அசுபாவசத்துக்களைப் பிரித்து, கெட்டியா யிருக்கிறவைகளை இளகலாகவும் நீர்த்துப் போயிருக்கிறவைகளை தடிப்பாகவும் செய்வதாம். இவ்விதம் பக்குவப்படுத்தின பின்பே அவற்றைப் பேதியால் வெளிப்படுத்த வேண்டியது.

கபத்தைப் பக்குவப்படுத்தும் பதார்த்தங்கள்
காசினி வேர்

ஓர் செடியின் வேர், வருணம் - மண் வருணம். சுவை - இலைப்பும், சிறுகசப்பும், இயற்கைக் குணமும் தரமும் - 1ம் தரச் சூடும் 2 ம் தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும் - மாசுகளை நீக்கும்; ஆகாரஞ் செல்லுங் குடலை சுத்திசெய்யும். நீரை அதிகப்படுத்தும், உள்ளுறுப்புகளிலுள்ள வீக்கங்களை நீக்கும்; பழைய சுரங்களையும் தொந்த சுரங்களையும் நீக்கும்.

துர்க்குணம் - மயக்க முண்டாகும், பரிகாரம்- காடி ஷர்பத்து; பதில் - சோம்புவேர்; பிரமாணம் -4 -6 கிராம், கிரக சம்பந்தம் -சந்திரன்.

மயிர்ச்சிக்கி

ஓர் வகைப் புல்லினம், இலை கொத்தமல்லி இலையைப் போலிருக்கும், காய்கள் இரா, கிளைகள் மிகவும் மெல்லியதாய் அழுத்தமா யிருக்கும். வருணம் - செஞ்சாயலான வருணம், சுவை -சிறு சிகப்பு, இயற்கைக் குணமும் தரமும் - சூடுங் குளிர்ச்சியும் சமம்.

செய்கையும் உபயோகமும் - சத்துக்களை சுத்திசெய்கிறது; அசுபாவசத்துக்களை முதிரச்செய்கிறது. வாய்வு வீக்கம் ஆகியவைகளைக் கண்டிக்கிறது, வண்டலையும், கபத்தையும் மலத்தின் மூலமாய் வெளிப்படுத்தும், மார்பிலுள்ள கபத்தை வெளிப்படுத்தும்;

சூதகபந்தம் நீரடைப்பு பிரசவமானபின் காணும் அழுக்கு தங்கிவிடுதல் ஆகியவைகளுக்கு நன்றாய் உபயோகப்படுகின்றது

துர்க்குணம் - மண்ணீரலுக் காகாது. பரிகாரம் -ரூமி மஸ்தகி, பனப்ஷாபூவும் அதிமதுரமும், பிரமாணம் - 12 கிராம், கிரகசம்பந்தம் - அங்காரகன்.

திராக்ஷை, சீமை துத்திவிதை, சோம்பு, அதிமதுரம், சீமை அத்திப்பழம், ரோஜாப்பூ (முன்னர் கூறப்பட்டுள்ள பக்கங்கள்.) இவைகளும் கபத்தைப் பக்குவப்படுத்தும் பதார்த்தங்கள்.

பித்தத்தைப் பக்குவப்படுத்தும் பதார்த்தங்கள்

சீமை யிலந்தைப்பழம், ரோஜாப்பூ, பனப்ஷாபூ, காசினிவிதை, காசினிவேர் முன்னர் கூறப்பட்டுள்ளவைதான்.

வண்டலைப் பாகப்படுத்தும் பதார்த்தங்கள்

சீமைநறுவிலி, சீமையிலந்தை, காவுஜூபான், சடாமாஞ்சி, மயிர்ச்சிக்கு, அதிமதுரம், சோம்பு முன்னர் கூறப்பட்டுள்ளவைதான்.

இலகுபேதி பதார்த்தங்கள்

இலகுபேதி யென்பது குடல் முதலியவைகளை யிளக்கி மலத்தைத் தள்ளுவது; அதனால் இரைப்பை, சிறுகுடல், அவற்றைச் சார்ந்தவிடங்கள் ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் மாசை நீக்கும்படி செய்வதினால் தேகத்திற்கொரு கெடுதியும் நேரிடாது. இது கருப்ப ஸ்திரீகளுக்கும், சிசுக்களுக்கும் சுகுமார தேகிகளுக்கும் அதிக முபயோகப்படும். சுரங்களிலும் வீக்கங்களிலும் கொடுக்கலாம். இதை யடிக்கடி சாப்பிடுவதுங் கூடும்; பேதிக்கு அடிக்கடி சாப்பிடலாகாது. மேலும் பேதிக்குச் சாப்பிடுமுன் பக்குவ பதார்த்தம் சாப்பிடவேண்டியது மிகவும் அவசியமானது. ஆனால் இலகுபேதிக்குச் சாப்பிடுமுன் பக்குவ பதார்த்தம் சாப்பிடவேண்டு மென்பது அவசியமல்ல.

இலகுபேதி பதார்த்தங்கள் - சாரப்பருப்பு

மலைப்பிர தேசங்களில் விளையும் ஓர் பழத்தின் விதையின் பருப்பு, வருணம் -செம்மையும் வெண்மையுமானது, சுவை - இலைப்பு, நாவிற்குரிசையானது, பசையுள்ளது, இயற்கைக் குணமும் தரமும் - 2ம் தரக் கொழுமையும் வரட்சியும்.

செய்கையும் உபயோகமும் -அதிக வுணவானது, தேகத்தைக் கொழுக்கச் செய்யும், கபத்தை மலத்தோடு வெளிப்படுத்தும், பித்தத்தையும் கண்டிக்கும், ஆண்குறியின் எழுச்சியை அதிகப்படுத்தும், தேகத்திலழகை யுண்டாக்கும், முகவஜீகரத்தை யுண்டாக்கும், இரத்தக்கொதிப்பு, தாகம், சுரவேகம் ஆகியவைகளைத் தணிக்கும். இதுனுடன் பாதம் பருப்பு சருக்கரை ஆகியவைகளைச் சேர்த்துப் பாயசம் செய்து சாப்பிட தாதுவிர்த்தி யுண்டாகும், தாமதமாய்ச் சீரணமாகும்.

துர்க்குணம் - அசீரணப்படுத்தும், பரிகாரம்-தேன், காடி ஷர்பத்து. பதில் - பிஸ்தாப்பருப்பு, எள்.பிரமாணம்-35,45 கிராம். கிரகசம்பந்தம்-குரு.

முள்ளங்கிக் கிழங்கு

பிரசித்தமானது, வருணம் - பசுமை கலந்த வெண்மை, சுவை, காரமும் சிறு தித்திப்பும். இயற்கைக் குணமும் தரமும் - 2ம் தரச் சூடு.

செய்கையும் உபயோகமும் - தான் தாமதமாய்ச் சீரணமாயினும் மற்றப் பதார்த்தங்களைச் சீக்கிரம் சீரணிக்கச் செய்யும், மூலவியாதிக் குபயோகப்படும், நீரை அதிகப்படுத்தும், சூதக பந்தத்தை நீக்கும், நீர்ப்பையிலுள்ள கற்களை யுடைக்கும், புராதன இருமல்களையும் சீரணமாகாத சத்துக்களையும் நீக்கும், கபத்தைக் கண்டிக்கும்.

துர்க்குணம் - உப்பிசத்தை யுண்டாக்கும்.பரிகாரம்- உப்பு, சீரகம், பதில்- ஷல்கம், பிரமாணம்4-8 கிராம். கிரக சம்பந்தம் - அங்காரகன்.

பருத்திவிதை பருப்பு

பிரசித்தமானது, வருணம் -பசுமைசாயலான வெண்மை. சுவை-சிறு கசப்புள்ளது. இயற்கைக் குணமும் தரமும் - 2ம் தரச் சூடுங் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும் :- வீரிய விர்த்தியை யுண்டாக்கும், தாது தம்பனமாகும். அசுத்த சத்துக்களை நீக்கும், மார்பிலுள்ள கபத்தைச் சாந்தப்படுத்தும், மலத்தை இளக்கும் சூட்டினாலுண்டான இருமலைநீக்கும். விந்துவையிறுகச் செய்யும்; பால், நெய், ஆகியவைகளை அதிகப் படுத்தும்; இதன் எண்ணெய் ஆண் அங்கங்களிற் பூசிவர அவற்றின் எழுச்சி அதிகப்படும்.

துர்க்குணம் -மூத்திரக் குண்டிக்காய்களுக்காகாது, பரிகாரம் -சருக்கரை, பதில் - குசும்பாவிதை, பிரமாணம் -6-8 கிராம், கிரகசம்பந்தம் - சனி.

கரும்பு ரசம்

பிரசித்தமானது, வருணம் - பிரசித்தமானது, சுவை - அதிகத்தித்திப்பு, இயற்கைக் குணமும் தரமும் -1ம் தரச் சூடும், 2ம் தரக் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும் - இரத்தத்தை சுத்தி செய்யும் தேகந்தழைக்கும் கட்டுகளையவிழ்க்கும், வரட்சிகளை நீக்கும், மார்புவரட்சி, இருமல், தொண்டைக்கட்டு ஆகியகளை நீக்கும், புஷ்டியை யுண்டாக்கும். நீரைப் பெருக்கும், நீர்த்தாரையைச் சுத்திசெய்யும்,வீரியவிருத்தி அதிகப்படும், வயிற்றிலுள்ள சிக்கலை நீக்கும்.

துர்க்குணம் - காற்றை விளைவிக்கும், வயிறுப்பும், தீபனத்தைக் குறைக்கும், பரிகாரம் ,வடிகட்டிச் சுடவைத்துச் சாப்பிடவேண்டும். பதில் - இல்லை, பிரமாணம் - கால், ஆழாக்கு கிரகசம்பந்தம் -குரு.

தேன்

திரவரூபமானது; தேனீக்களினால் சேர்க்கப்பட்டது, வருணம் - மஞ்சள் வருணம், வெண்மையான சிவப்பு, சுவை- அதிகதித்திப்பு, இயற்கைக் குணமும் தரமும் 2-ம் தரச்சூடும் 1ம் தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும் - தேகத்திலுள்ள மாசுகளை நரம்புகள் வழியாயிழுத்துத் தேகத்தை சுத்தப் படுத்தும், தாதுவிருத்தியாகும், பசிதீபனமுண்டாம், பிசுபிசுப்பான கபத்தைக் கண்டிக்கும். வீக்கம், காமாலை, கல்லடைப்பு, நீரடைப்பு, பக்கவாதம், இவைகளுக் குபயோகப்படும், சூதகபந்தத்தை பெலத்தைக் கொடுக்கும், விஷங்களை முறிக்கும், அவுடதங்களின் குணம் கெடாமல் காக்கும், இதை ஜலத்தோடு சேர்த்துச் சாப்பிட நீர் பெருகும், நீர்த்தாரையின் புண்களை யாற்றும், வயிற்றுக்கடுப்பைச் சாந்திசெய்யும், இது தனியவுடதத்தில் மிகச் சிறந்தது. குறைந்த அளவானால் பேதியாகும். இது புதிதாயிருக்கவேண்டும், அல்லது காய்ச்சி நுரை நீக்கப்பட வேண்டும்.

துர்க்குணம் - சூடான தேகிகளுக்குப் பித்தமதிகரிக்கும், தலைவலி யுண்டாகும். மூலரோகிகளுக் காகாது. பரிகாரம்- காடி, வாதுமைப்பிசின், கொத்துமல்லி விதை. பதில் - திராக்ஷாபானம், இது நன்றாய்ப் பழுத்த கொடி முந்திரிப்பழத்தின் ரசத்தை மூன்றிலொரு பாகமாக வெயிலில் சுண்ட வைக்கப்பட்டது. பிரமாணம் -25 கிராம். கிரகசம்பந்தம் - சந்திரன், குரு, சுக்கிரன்.

குல்கந்து

சருக்கரைப்பாகில் அல்லது தேனில் பக்குவஞ் செய்யப்பட்ட ரோஜாப்பூக்கள், இலேகியம் போன்றது. வருணம் -சிகப்பு, சுவை -அதிகத் தித்திப்பு, இயற்கைக்குணமும், தரமும் -2ம் தரச்சூடும், 1 ம் தரக் குளிர்ச்சியும்.

செய்கையும் உபயோகமும் - இரைப்பைக்கும் தலை மூளைக்கும் பலத்தைக் கொடுக்கும்; ஆகாரத்தின் பின் இதை சாப்பிடுவதினால் மூளைக்கேறும், கெட்ட ஆவிகளைத் தடுக்கும். தேனில் பாகஞ்செய்யப்பட்டதானால் குளிர்ச்சியான தேகிகளுக்கும், மூப்பர்களுக்கும், மூளையின் சுபாவம் கொழுமையா யிருக்கப் பெற்றவர்களுக்கும் அதிக குணத்தைத் தரத்தக்கது, பக்ஷவாதம்,நரம்பைப் பற்றிய வியாதிகள் ஆகியவைகளுக்கு ஆகும்; இரத்தக் கக்கலைத் தடுக்கும்; நீர்ப்பையிலுள்ள கற்களை வெளிப்படுத்தும்.

துர்க்குணம் - ஈரலுக்காகாது, பரிகாரம் - கசகசா, பதில்- ரோஜாப்பூவும் கற்கண்டும், பிரமாணம் -35 கிராம், கிரக சம்பந்தம் - சந்திரன்.

ஆட்டுப்பால்

பிரசித்தமானது, வருணம் -பிரசித்தமானது,சுவை- சிறு தித்திப்பு, இயற்கைக் குணமும் தரமும் - சாந்தமான சூட்டுடன் கூடிய குளிர்ச்சியும் கொழுமையும்

செய்கையும் உபயோகமும் - தேகத்திற்கு ஆரோக்கிய முண்டாகும்; தேகத்தில் மினுமினுப்பை யுண்டாக்கும். வாயிலிருந்து இரத்தம் வருதல், நுரையீரலிலிருந்து இரத்தம் வருதல், நுரையீரலின் ரணம், தொண்டை வரட்சி, நீர்ப்பையின் ரணம் ஆகியவைகளை நீக்கும்; நீரை அதிகப்படுத்தும்; மலத்தை யிளக்கும். சூடான அநேக வியாதிகளுக் குபயோகப்படுகின்றது. இதை வாயிலிட்டுக் கொப்பளிப்பதினால் தொண்டையின் வியாதிகளைத் தப்பாது கண்டிக்கிறது.

துர்க்குணம் -வயிற்றுப்பிச முண்டாம். குளிர்ச்சியான தேகிகளுக் காகாது. பரிகாரம்- தேனும், சோம்பும், பதில்- மாட்டுப்பால், பிரமாணம் 105 கிராம், கிரகசம்பந்தம் - சனி.

பன்னீர்

ரோஜாப்பூவிலிருந்து இறக்கப்படுகிற திராவகம். வருணம் - தண்ணீரைப் போலிருக்கும். சுவை, மணம்- சுகந்தமுள்ளது, சிறுகசப்பு,

இயற்கைக் குணமும் தரமும்- சாங்கரிக சக்தியுள்ளது, கொஞ்சம் குளிர்ச்சி சாயலானது.

செய்கையும் உபயோகமும் - தலைமூளை, இருதயம் ஆகியவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கும்; தலைவலி, மூர்ச்சை, மயக்கம் ஆகியவைகள் நீங்கும், சந்தோஷம், மனக்களிப் புண்டாகும், வயிற்றுநோய், வயிற்றுக்கடுப்பு, ஈரலைப் பற்றிய நோய்கள் ஆகியவைகளுக்கு உதவும், பேதிச் சூரணங்கள் கொடுக்க அநுபானத்திற்கு யேற்றது.

துர்க்குணம் - பீனிசநோ யுள்ளவர்களுக் காகாது, பரிகாரம் - கற்கண்டு, பதில் - சோம்பு திராவகம், பிரமாணம் - 50, 100 கிராம், கிரகசம்பந்தம் - சந்திரன்.

புளி

ஓர் பெரிய மரத்தின் பழம். பிரசித்தமானது; வருணம்- புதிதான சிவப்பு; பழமையானது கறுப்பு ; சுவை - புளிப்பு. இயற்கைக் குணமும் தரமும் - 1ம் தரக் குளிர்ச்சியும் 2ம் தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும் - இரைப்பைக்கும் இருதயத்திற்கும் பலத்தைக் கொடுக்கும்; அரோசிகத்தை நீக்கும், கரிந்துபோன சத்துக்களையும், பித்தத்தையும் மலம் வழியாய் வெளிப்படுத்தும்; இரத்தத்தின் கொதிப்பைத் தணிக்கும்; வாந்தி தாகம், மயக்கம், தலைச்சுழற்றல் ஆகியவைகளை நீக்கும்; விஷபேதியின் காற்று பரவாதபடி தடுக்கும். இதைக் கரைத்துக் தெளிவெடுத்து உபயோகிக்க வேண்டும்.

துர்க்குணம் - இருமலை யுண்டாக்கும்; தொண்டைக் காகாது. பரிகாரம் - சீமை இலந்தைப் பழமும், பனப்ஷாவும். பதில் - ஆலுபுகாராப் பழம்.பிரமாணம் - 50 -85 கிராம், கிரக சம்பந்தம் - சுக்கிரன்.

சோம்பு, ஆலுபுகாரா, பருப்புகீரை விதை ஆகிய இவைகளும் இலகுபேதி பதார்த்தங்கள்.

விரேசன காரிகள் பேதியாகச் செய்கிற மருந்துகள்

அசுபாவ சத்துக்களை அதாவது துர்மலங்களை வெளிபடுத்துவனவாம்; இரைப்பை, குடல்கள், தேகத்தின் உட்பாகங்களிலுள்ள நரம்புகள் ஆகிய இவைகளிலுள்ள விஷமித்த நீர்களையும், அசுத்த சத்துக்களையும் பேதியால் வெளிப் படுத்துவனவாம்.

பித்த விரேசனி

ஆலுபுகாரா, தரா இலை, புளி, பனப்ஷாபூ, ரோஜாப்பூ, மஞ்சள் கடுக்காய்த் தோல், சூரத்துநில ஆவாரை, தரஞ்சபீன், மேனா, அப்திமுன், சரக்கொன்றைப் புளி, பாமாமூதா, கரியபோளம்.

ஆலுபுகாரா, தராவிலை, புளி, பனப்ஷாபூ, ரோஜாப்பூ பற்றி ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கின்றன.

கடுக்காய்களின் பொது

இவை யிந்து முதலிய தேசங்களி லுண்டாகும் ஓர் பெரிய மரத்தின் காய்கள்; பலவகையுண்டு -காபுலிக்கடுக்காய், மஞ்சட் கடுக்காய். கடுக்காய்ப் பிஞ்சு அல்லது கருப்புக் கடுக்காய், சீனாகடுக்காய், சீரகக் கடுக்காய் என்னும் வகைகளும் இன்னும் சில வகைகளுமுண்டு. இவற்றுள் ஒவ்வொன்றும் தம்மில் ஒத்திருக்கிற வெவ்வேறு விதமரங்களிலுண்டாகிறதென்று சிலர் சொல்லுகின்றார்கள். ஆனால் நிச்சயிக்கப்பட்டதாவது மேற்கண்ட வகைகளெல்லாம் ஒரு மரத்தின் காய்களென்பதே, ஆனால் பூசாரத்தின் தன்மையினால் வருணத்திலும் பரிமாணத்திலும் வித்தியாசப்படும் மேலும் அதன் பூப்பிஞ்சிலிருந்து நன்றாய் முற்றிப் பழுக்கிற வரையிலும் ஒவ்வொரு பருவத்திற்கு வெவ்வேறு பெயர் உடையவைகளே தவிர வேறல்ல. அவையாவன பூப்பிஞ்சில் உலர்ந்துபோனதற்குச் சீரகக் கடுக்காய் என்றும், அதிலும் கொஞ்சம் பெருத்துலர்ந்ததற்கு ஜவ்வுக் கடுக்காய் என்றும், அதிலும் கொஞ்சம் பெருத்துத் திராக்ஷா போன்றிருப்பதற்கு ஜங்கிக் கடுக்காய், இந்து கடுக்காய், கருப்புக் கடுக்காய் என்று பேர். இவ்வகைகளி லெல்லாம் விதைகள் இராது; இவற்றிலும் பெரிதாய் நன்றாய் முதிர்ந்து மஞ்சள் சாயலான பச்சை வருணமாயிருப்பதற்குச் சீனாக்கடுக்காய் என்றும், அதிலும் அதிகம் முதிர்ந்து அரைப்பங்கு பழுத்து மஞ்சள் வருணமா யிருப்பதற்கு மஞ்சள் கடுக்காயென்றும் பேர். முழுவதும் நன்றாய்ப் பழுத்துச் சிவந்த வருணமாயிருப்பதற்குக் காபுலி அல்லது சீமைக் கடுக்காய் என்று பேர். அவ்வகை கடுக்காயே சிறந்தது காபுலி கடுக்காய், சீமைக்கடுக்காய், சீனக்கடுக்காய் என பேரிடப்பட்டதின் காரணம் அத்தேசங்களில் விளை கின்றனவென்பதல்ல. ஆனால் அவை இந்து தேசத்தில் விளைகின்றவைகளே. முன் சொன்ன வகைகளுள் ஓர் காலத்தில் காபுல் தேச மூலமாய் அதிகம் செலவானது காபுலிக் கடுக்காயென்றும், கப்பல் மூலமாய் அதிகங் கொண்டு போகப்பட்டது சீனாக் கடுக்காய், சீமைக்கடுக்கா யென்றும் பேர் வழங்கப்படுகிறது. அக்காலத்தில் கப்பல் மூலமாய் கொண்டு போகப்படுவதெல்லாம் சீனா அல்லது சீமைச் சரக்கெனப் பேர் வழங்கும், அப்படியே இதற்குச் சீனா

அல்லது சீமைக்கடுக்காய் எனப்பேரிடப்பட்டது கடுக்காயில் அநேக சாதிகளிருந்த போதிலும் குணத்தில் மெத்த வித்தியாசமிராது.

மஞ்சட் கடுக்காய்

இவ் வுலர்ந்த காய்கள் பிரசித்தமானவைகள். வருணம் - மஞ்கள், சுவை - துவர்ப்பிலைப்பு. இயற்கைக் குணமுந்தரமும் - 1ம் தரக் குளிர்ச்சியும், 2ம் தர வரட்சியு முள்ளது.

செய்கையும் உபயோகமும் - மூளை, இரைப்பை ஆகியவைகளுக்கும் பஞ்சேந்திரியங்களுக்கும் பலங்கொடுக்கும், கட்டுகளை நீக்கும், பைத்திய ரோகம், வீண்கவலை, உன் மத்தம், மார்பு துடித்தல், குஷ்டம், தொந்த சுரங்கள் வீக்கம் மூலரோகம் ஆகியவைகளுக் குபயோகப்படுகின்றது, கபத்தையும் வரட்டும்.

துர்க்குணம்- குடற்பிடுங்கல், வயிற்று நோவு ஆகியவைகளையுண்டாக்கும். பரிகாரம் - பாதம் நெய் அல்லது பசுவின் நெய், கடுக்காயை யிடித்துத் தூள்செய் து தெள்ளிக் கொள்ள வேண்டியது. அதிக மெல்லியதாய் இடித்த வஸ்திரகாயம் செய்யலாகாது; பின்பு நெய்யில் அல்லது பாதம் நெய்யில் புரட்டிப் பசையுண்டாக்கி அவுடதங்களோடு சேர்க்க வேண்டியது; கிஷாயமானால், சீமையிலந்தைப் பழம் சீமை நறுவிளிப்பழம் லவங்கம் இவைகளில் ஒன்றைச் சேர்க்க வேண்டியது, பதில் - காபுலிக் கடுக்காய், பிரமாணம் -20 கிராம், கஷாயமானால் 28 முதல் 40 கிராம். கிரகசம்பந்தம் - சனி.

சூரத்துநில ஆவாரை

மருதாணை யிலையிலும் சற்று பெரிதான உலர்ந்த இலைகள் பல தேசத்திலிருந்து விளைந்து வருகின்றன. திருநெல்வேலியில் விளைந்து வருகிறது சிறப்பானது. அவைகள் ரூபத்தில் வித்தியாசப்படும். உலர்ந்த இலைகள் மஞ்சள் சாய்லா யிருக்கும். சுவை- கசப்பும் வெகுட்டலு முள்ளது. இயற்கைக் குணமும் தரமும் - 2ம் தரச்சூடும் 1ம் தர வரட்சியு முடையது.

செய்கையும் உபயோகமும் - கபம், பித்தம், வண்டல் ஆகிய அசுத்தமாசுகளைப் பேதிமூலமாய் வெளிப்படுத்தும், எரிந்துபோன எல்லாச் சத்துக்களையும் வெளிப்படுத்தும், மூளையில் தங்கியிருக்கும் கபத்தையும் பித்தநீரையும் நீக்கி அதைச் சுத்தி செய்யும், காசநோய், அதிமூச்சு முதலியவைகளைக் கண்டிக்கும், வயிற்றுவலி, வாயுவையும் நிவர்த்தி செய்யும். கீல்வாதம் முதலியவைகளையும் நீக்கும்; வரட்சியினா லுண்டான அரிப்பு, பக்கநோவு, குலைநோய் ஆகியவைகளைக்

கண்டிக்கும், தேகத்தினுள் ஆழ்ந்து கிடக்கும் துர்நீர்களை நீக்கித் தேகத்தைப் பலப்படுத்தும்; நரம்பிழுப்பை நீக்கும், வயிற்றிலுள்ள புழுக்களைக் கொல்லும். இதன் செய்முறை பின்னர் எழுதப்படும்.

துர்க்குணம் -வயிறு பிடுங்கல், குமட்டல், கடுப்பு ஆகியவைகள், பரிகாரம்- காம்புகளை நீக்கி விடவேண்டியது; இடித்து வஸ்திரகாயஞ் செய்தபின் பாதம் நெய் சேர்த்துப் புரட்டிக் கொள்ள வேண்டியது. பனப்ஷா, ரோஜாப்பூ, பாதம் நெய் சேர்க்காமல் உபயோகிக்கலாகாது.

பதில்- சீமைச்சிவதை; அதன் பிரமாணம் - மஞ்சள் கடுக்காய்த்தோல் அரைபாகம், பனப்ஷா கால்பாகம் ஆகியவைகளை யொன்றாய்ச் சேர்த்த முறை, இது சில தேகிகளுக்கு அதிக அளவானது, மாத்திரை-சூரணம் 8-10 கிராம், கஷாயமானால் 12- 20 கிராம், கிரகசம்பந்தம் - சனி

தரஞ்சபீன்

குராஸான், ஹமதான், குரடிஸ்தான் முதலிய தேசங்களில் ஓர்வகை முட்செடிகளின் மேல் உறைந்திருக்கும் ஓர்வகைப்பனி. இது கற்கண்டு துண்டுகளைப் போலிருக்கும். புதிதானதும் வெண்மையானதும் கலப்பற்றதுமா யிருப்பதுதான் திறமானது. மேற்கண்ட செடிகளின் இலை, சிறு கிளை முதலியவைகளை மெல்லிய வஸ்திரங்களிற் போட்டு குலுக்குவதினால் வெளிப்படும் சரக்குத்தான் மேலானது, இப்படிச் செய்து நீக்கினபின் திப்பிகளைக் காய்ச்சி வடிகட்டிப் பாகுசெய்தும் விற்பதுமுண்டு. கிளையிலைகளோடும் விற்பதுமுண்டு. வருணம் - கொஞ்சம் மஞ்சள் சாயலான வெண்மை. சுவை -இனிப்பு, இயற்கைக் குணமும் தரமும் - 1ந் தரச் சூடுங் கொழுமையும்.

செய்கையும் உபயோகமும் - மலத்தை யிளக்கும். பித்தத்தைப் பேதிமூலமாய் வெளிப்படுத்தும், மற்றச்சத்துக்களையும் இளக்கும். இருமல், மார்புவலி வெகுட்டல், சூட்டினாலுண்டான சுரம், தாகம் ஆகியவைகளுக்கேற்றது. 35 கிராம் தரஞ்சபீனை 210 கிராம் எருமைப்பாலில் கரைத்துச் சாப்பிடுவதினால் தேகத்திற் சூட்டையுண்டாக்கும். பசும்பாலில் தொடர்ச்சியாய்ச் சாப்பிட்டு வருவதினால் தாது விருத்தி யுண்டாகும்.

துர்க்குணம் - மண்ணீரலுக்கும், சூட்டுடம்பிற்கு மாகாது. பரிகாரம் - சீமை யிலந்தைப் பழம், புளி, பதில்- மேனா அல்லது சருக்கரை. பிரமாணம் - 35 - 40 கிராம், கிரக சம்பந்தம் - குரு.

மேனா

ஐரோப்பா, குராசான், குஜராத் முதலிய தேசங்களில் விளைகிற ஓர் வகைச் செடிகளைக் கீறி யெடுக்கும் இந்தப்பாலானது உறைந்து கட்டிகளா

யிருக்கும், இது துண்டுகளாய் ஒரு பக்கம் பள்ளமாயிருக்கும்; இதைச் சிலர் உறைந்த பனி யென்கின்றார்கள். அது சரியல்ல; இது ஓர் வகைப் பிசினே.

வருணம் - வெண்மை, சுவை - தித்திப்பானது, தேன் சருக்கரை ஆகியவைகளின் தித்திப்பல்ல. சவ்வரிசிமாவும் சருக்கரையும் சேர்த்ததுபோ லிருக்கும் இயற்கைக் குணமும் தரமும் - 1ம் தரச் சூடும் சமரச குணமு முடையது. கைச் சூடுபட்டால் மிருதுவாகும்.

செய்கையும் உபயோகமும் - தேகத்தைச் சுத்தி செய்யும் , மலத்தை யிளக்கும் பித்தத்தையும், எரிந்துபோன சத்துக்களையும், தொந்தமாகிய சத்துக்களையும், தெளிந்த சத்துக்களையும் பேதியால் வெளிப்படுத்தும். ஈரல். இரைப்பை, குடல்கள் ஆகியவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கும்; சூடு, எரிவந்தம், இரைப்பையின் வீக்கம் முதலியவைகளை நீக்கும்; இருமல், தொண்டை வரட்சி, சில சுரங்கள் ஆகியவைகளுக் குபயோகப்படும்; வயிற்று நோவு கடுப்பு, வெகுட்டுதல், சூடு செய்தல் முதலிய யாதொரு துர்க்குணமு மில்லாது பேதியாகிற படியால் குழந்தைகளுக்கும், மூப்பர்களுக்கும், துர்ப்பலப்பட்டவர்களுக்கும் அதிக உபயோகமுள்ளது.

துர்க்குணம் - வாயுவை யுண்டாக்கும்; குடலிரையும், வயிறுப்பும், பரிகாரம் - சோம்பு, பாதம் நெய். பதில் - தாது விர்த்திக்கல்லாத மற்ற அவுடதங்களில் தரஞ்சபீன். பிரமாணம் -குழந்தைகளுக்கு 4-12 கிராம், பெரியவர்களுக்கு 35 -50 கிராம் பலம் வீதங் கொடுக்கலாம். கிரகசம்பந்தம் - சந்திரன்.

அப்திமூன்
(Aftimoon)

ஓர்வகைக் கொடி, அதன் கவைகளும், கிளைகளும் முறையே மெல்லிய கயிறுகளைப் போலும், நூலைப் போலுமிருக்கும். இலைகள் மிகவும் சிறிதாயிருக்கும் முக்கியமாய் மரங்களிலும் தன்னை யடுத்திருப்பவைகளின் பேரிலும் படர்ந்து கவர்ந்து கொண்டுமிருக்கு மாகையால் கலப்பற்றதா யிருக்க வேண்டும்; அதிக தீக்ஷணியமான கோடையிலும் காய்ந்து போகாது.

வருணம் - உலராதிருந்தால் செவந்தும்; உலர்ந்திருந்தால் மஞ்சள் வருணமாயு மிருக்கும். சுவை -கசப்பும் கொஞ்சம் சுகந்த வாசனையுமுடையது, இயற்கைக்குணமும் தரமும் - 3ம் தரச்சூடும் வரட்சியும்.

செய்கையும் உபயோகமும் - வண்டல், கபம் ஆகியவைகளைப் பேதியால் வெளிபடுத்தும், கட்டுகளை நீக்கிச் சுத்தி செய்யும். இதனுடன்,

பனப்ஷாவைச் சேர்த்தால் பித்தத்தை அதிக நன்றாய் வெளிப்படுத்தும், மூளையைப் பற்றின வியாதிகள், நரம்புகளைப் பற்றின வியாதிகள், ஒருத்தலை நோய், தேகங்கனத்தல், இசிவுகள், காக்கை வலி, வீண்கவலை, பைத்தியம், அமுக்கன் ரோகம், புத்தி தடுமாறல், முகவாதம், பக்ஷவாதம், மேக வியாதிகள், தேகமரத்தல், கருங்குஷ்டம், வெண்குஷ்டம், கீல்வாய்வு, பிளவைகள் ஆகியவைகளுக்குபயோகப்படும். இருதயத்திலுள்ள வாயுவை நீக்கி சந்தோஷ முண்டாக்கும்; இரைப்பையிலுள்ள கிருமிகள், வாயுவுகள், வயிற்றுப்பிசம் ஆகியவைகளைக் கண்டிக்கும். 250 கிராம் பாலில், 35 கிராம் அப்திமூனை ஒருநாள் ஊறவைத்து வடிகட்டி அதில் 72 கிராம் காடிஷர்பத்தைவிட்டுச் சாப்பிட தலைநோய், வண்டலைப் பற்றிய பயித்தியம், இசிவு, தேகங்கனத்தல், மார்புதுடித்தல், கிலேசம் முதலியவை தீரும். இப்படியே அப்திமூனை 25 கிராம் ஆட்டுப்பாலிற் சேர்த்துச் சாப்பிட, வண்டலினாலுண்டான தலைநோய் நீங்கும், தகுந்த அவுடதங்களினால் வண்டலை பாகப்படுத்தின பின் மேற்கண்டபடி சாப்பிட வண்டலைச் சுத்திசெய்யும், அப்திமூன் 25 கிராம், திராக்ஷாப் பழம் 40 கிராம் இவ்விரண்டையும் சேர்த்து ஒன்றரை ஆழாக்கு ஜலம் வார்த்து மெதுவாய்த்தீயெரித்து, 4-5 கொதி வந்தபின் இறக்கி, வடிகட்டிச் சாப்பிட, சாராயம் முதலியவைகளை அதிகங் குடித்துண்டான பைத்திய ரோகம் (Delirium Tremeus) தீரும், இதனுடன் பனப்ஷாவையும் சேர்த்துக் கியாழம் செய்து சாப்பிட வண்டலினா லுண்டான பைத்தியம் தீரும், வயிற்றிலுண்டான நாகப்பூச்சிகள் வெளிப்படும்; அப்திமூன் 1 பங்கு, திரக்ஷாப்பழம் 2 பங்கு இரண்டையும் சேர்த்திடித்து அதில் 4 கிராம் சாப்பிட வண்டலைப் பற்றிய கவலைரோகம் நீங்கும். இன்னும் இதன் உபயோகம் அநேகமுண்டு. இது அதிக சுத்தமானதும் மிருதுவுமான பாகமுடைய தாகையாலும் இதை அதிக மெல்லிய சூரணமாகவும் இடிக்கலாகாது. அதிக நேரம் அல்லது அதிக சூடாகவும் கொதிக்கவைக்க லாகாது, ஏனெனில் இப்படிச் செய்வதினால் அதன் குணம் மாறிப்போகும். இரண்டொரு கொதி வருமளவும் காய்ச்சினால் போதுமானது. இதை ஒரு வஸ்திரத்தில் முடிந்து கஷாயத்தை யிறக்கப்போகுஞ் சமயத்தில் இம்முடிச்சை அதிலிட்டு ஒரு கொதி வந்தபின் கீழிறக்கி, நன்றாய் ஆறினபின், முடிச்சைப் பிழிந்து கொண்டு எறிந்து விடவும்.

துர்க்குணம் - சூட்டைப் பற்றிய தேகத்தோருக்கும், பித்த தேகத்தோருக்கும் ஆகாது. பரிகாரம் - குங்குமப்பூ, கதீரா, வாதுமை நெய். பதில் - இராஜவர்த்திக்கல், சீமை சிவதை, தரா இலை.

பிரமாணம் - 6 கிராம், 15 கிராம், கிரகசம்பந்தம் -குரு.

சரக்கொன்றை

இது மிகவும் பிரசித்தமானது. இதன் காய்கள் முருங்கைக் காய்களைப் போல் நீண்டு, திரண்டுமிருக்கும், இரண்டுமுழ நீளமிருப்பது முண்டு. உள்ளில் அறைகளாக வகுக்கப்பட்டு மிருக்கும். இவ்வறைகளில் உரைந்தும் பசை யுள்ளதுமானதும் வஸ்து விருக்கும். அதற்குத்தான் சரக்கொன்றைப் புளியென்று பேர். இதுதான் அவுடதங்களிலதிக முபயோக மாகிறது. 450 கிராம் உலர்ந்த காய்களைச் சதைத்து, அவை முழுகும்படி சலம்விட்டு அடிக்கடிக் குலுக்கி, 6 மணிநேரம் ஊறவைத்து, ரோமச்சல்லடையில் வடிகட்டி சலயந்திரத்தில் வைத்து லேகிய பதத்துக்கு வரும்படி சுண்டவைத்துக் கொள்ளவும்.

வருணம் - கருப்பாயிருக்கும். சுவை,மணம் - கைப்பு, ஓர்வித வாசனையுள்ளது. இயற்கைக் குணமுந் தரமும் - 1ம் தரச் சூடுங் கொழுமையு முள்ளது. இன்னும் சூடுங் கொழுமையும் சமமான தெனவும் சொல்லப்படுகிறது.

செய்கையும் உபயோகமும் - மலத்தை யிளக்கும், மார்பிலுள்ள மாசுகளை நீக்கும் இரத்தக் கொதிப்பைத் தணிக்கும், நரம்புகளிலுள்ள மாசுகளை நீக்கி அவற்றை சுத்தி செய்யும்; வாய், தொண்டை, குடல்கள் முதலியவைகளின் சூடான வீக்கங்களைக் கரைக்கும், யாதொரு வருத்தமு மில்லாமல் சுகமாய் பேதி யாகிறபடியால் கருப்பவதிகளுக்கும் பாலருக்கும் கொடுக்க மிகவும் ஏற்றது. புளியைக் கரைத்துத் தெளிய வைத்த நீரில் கலந்து சாப்பிட பித்தநீரையும், சீமைச் சிவதையோடு கலந்து சாப்பிட கபத்தையும், தரா இலைரசம் அல்லது காசினிக்கீரை ரசம், அல்லது பிரப்ப மிலை ரசம் ஆகியவைகளில் ஒன்றுடன் அநுபானித்துச் சாப்பிட வண்டலையும் வெளிப்படுத்தும். துத்திவிதை, பேதானா, இசுபகோல் இவற்றுள் ஒன்றின் கோழையிலும், பாதம் நெய்யிலும் சேர்த்துச் சாப்பிட குடல்களின் கட்டுகளை நீக்கும். வயிற்றுக் கடுப்பு, மலபந்தத்தோடு கூடிய வயிற்றுநோய் ஆகியவைகளை நீக்கும். காசினிக்கீரை ரசத்தில் சாப்பிட ஈரலின் வரட்சி, காமாலை, சூட்டினா லுண்டான சுரம் ஆகிய இவை தீரும்; கொத்தமல்லிக்கீரை ரசத்தில் கரைத்து வாய் கொப்பளிக்க தொண்டையின் வீக்கம் கடினமானதாயினும் கரைந்து போகும். தகுந்த அனுபானத்துடன் மேல்பற்றிட கீல்வாய்வு, கணுவாதம் ஆகியவை தீரும் வீக்கங்களைக் கரைக்கும். சூட்டினாலுண்டான சகல கட்டிகளையும் கரைக்கும். இதைச் சுடவைத்தால் இதன் குணம் கெடும்.

துர்க்குணம் - இரைப்பைக்காகாது. சிலருக்கு மயக்கத்தைக் கொடுக்கும். சிறுகுடலில் பிடுங்கலையுண்டாக்கும். பரிகாரம் -

றூமிமஸ்தகி, பாதம் நெய் அல்லது நெய், புளி தெளிநீர். பதில் - விதையில்லாத திராக்ஷை அதனினும் மூன்றுபங்கும் தரஞ்சபீன் ஒரு பங்கும். கிரகசம்பந்தம் - குரு.

மஹ்மூதா -மமூதா
(Scammony)

இது மலைப் பிரதேசங்களி லுண்டாகும் ஓர்வகைச் செடியின் பிசின். வருணம் - சாம்பல் படிந்த கறுத்த நிறமாயிருக்கும். சுவை -மென்றால் காரமாயும், தொண்டையில் கர கரப்பாயு மிருக்கும், இயற்கைக் குணமும் தரமும் - 3ம் தரச் சூடும் 2ம் தர வறட்சியும்.

செய்கையும் உபயோகமும் - அசுத்த மாசுகளைச் சுத்தி செய்யும்; வாயுவைக் கண்டிக்கும்; வீக்கங்களைக் கரைக்கும்; கட்டுகளை நீக்கும்; மாமூதா 1 பங்கு, சீமைச் சிவதைவேர் 2 பங்கு சேர்த்துப் புதிதாய்க் கறந்த பாலில், வெறும் வயிற்றில் சாப்பிட்டால் இரைப்பை சிறுகுடல் முதலியவைகளிலுள்ள பூச்சிகள் நாசமாகும். ராஜவர்த்திக் கல்லுடன் மமூதாவைச் சேர்த்துச் சாப்பிட வண்டலினா லுண்டான நோய் நீங்கும் கபத்தை வெளிப்படுத்த மாமூதாவோடு சுக்கு சீமைச்சிவதை ஆகியவைகளைச் சேர்த்துச் சாப்பிட வேண்டும். இரைப்பையைப் பலப்படுத்த ரோஜாப்பூவுடன் சேர்த்துச் சாப்பிடவேண்டும். அசமதா ஓமசலத்துடன் சாப்பிட இரைப்பையிலுள்ள மாசுகள் சீக்கிரம் வெளிப்படும். கருவழிக்கு மாகையால் கருப்ப ஸ்திரீகளுக்குக் கொடுக்கலாகாது. இதைப் பாதம் நெய்யில் கலந்து பற்றுப்போட தலைவலி போம். காடியில் கலந்து போட ஒருத்தலைநோய், நாள்பட்ட தலைநோய் ஆகியவைகள் போம்.

துர்க்குணம் - இருதயம், இரைப்பை, ஈரல் ஆகியவைகளுக்காகாது மயக்கமுண்டாகும். பரிகாரம் -சுத்தி செய்யவேண்டும். பாதம்பிசின், சீமையிலந்தைப்பழம் ஆகியவைகளை அனுபானித்துச் சாப்பிடவேண்டும். ரோஜாப்பூ, பனப்ஷா, பாதம் நெய் முதலிய தக்க அநுபானமில்லாது உபயோகிக்கலாகாது. பதில்- மஞ்சள் போளம் ஒன்றரை பங்கும், மஞ்சள் கடுக்காய்த் தோல் ஒன்றரை பங்கும், பிரமாணம் - அரை, ஒரு கிராம். கிரகசம்பந்தம் - அங்காரகன்.

மஹமூதாவின் சுத்திக்கிரமும் அதன் யோக முறைகளும் பின்னர் எழுதப்படும்.

கரியபோளம்

இதற்கு மூஷாம்பரமென்றும் பேர். இது பல வகைப்படும். சோற்றுக்கற்றாழையின் ரசம் பக்குவஞ் செய்யப்பட்டது. சிலர் அதன்

பால் பக்குவஞ் செய்யப்பட்டதென்கிறார்கள். யூநாநி சாஸ்திர யுக்தமாய் இது மூன்று வகைப் படும். 1. ஸோகொட்ரைன் அல்லது அரபிபோளம்; இது மஞ்சள் வருணமாம். குங்குமப்பூ சாயலாய் சற்றுசிவந்து, பரிசுத்தமாய் பளபளப்புள்ளதாய், ஈரல் துண்டுகளைப்போன்றும் இலகுவாய் ஒடியத்தக்கதாயும், ஒடியும்போது சிறு துண்டுகளாகுந் தன்மையுடையதாகவு மிருக்கும். இதுவே எல்லாவகைகளிலும் சிறந்தது. 2. இந்துபோளம். இது கருஞ்சாயலானது மஞ்சள் வருணம். அரபிபோளத்தைப் பார்க்கிலும் பளபளப்பில் குறைவானது, முன்னதிலும் இது தாழ்ந்தது. 3. பார்ஸி போளம். இது கறுத்திருக்கும். இலகுவாய் ஒடியாது. துர்க்கந்தமுடையது,இலேசத்துவமுடையது. சுவை - அதிக கசப்பு.இயற்கைக் குணமுந் தரமும் -2ம் தரச்சூடும், வரட்சியு முடையது.

செய்கையும் உபயோகமும் - ஈரலின் கட்டுகளையும் மற்ற உள்ளுறுப்பின் கட்டுகளையும் நீக்கும். குடல்களிலுள்ள வாயுகளைக் கண்டிக்கும்; மூவகை அசுபாவ சத்துக்களையும் பேதிமூலமாய் நன்றாய்க் கண்டிக்கும்; கணுக்கால், தலை, இரைப்பை ஆகியவைகளிலுள்ள அசுத்த மாசுகளை நீக்க இது உகந்த சரக்கு. இரைப்பையிலுள்ள மாசுகளையும் அழுக்குகளையும் சுத்திசெய்ய இது உயர்ந்த அவுடதம்; கண்பார்வை முதலிய ஐம்புலன்களை பலப்படுத்தும்; மஞ்சட் காமாலை ரோகம், வீண்கவலை ஆகியவைகள் சுவஸ்தப்படும்; இளஞ்சூடான வெந்நீருடன் 6 கிராம் சாப்பிட நன்றாய்ப் பேதியாகி வயிற்றிலுள்ள மாசுகளையெல்லாம் நீக்கிச் சுத்தி செய்யும். பித்த கிஷாயத்தில் சாப்பிட பித்தமும், சிலேத்துமகிஷாயத்தில் சாப்பிட கபமும் வெளிப்படும். ரூமிமஸ்தகியுடன் சாப்பிட தலைமூளையிலுள்ள மாசுகளை நீக்கும்; காரிகியூன் என்னும் சரக்குடன் சேர்த்துச் சாப்பிட கணுக்களிலுள்ள வாயுவுகளைக் கண்டிக்கும்; மார்பைச் சுத்தி செய்யும். குளிர்ந்த சலத்தில் ஒரு வராகனெடை சாப்பிட இரத்தங் கக்கல் மஞ்சட்காமாலை ரோகந் தீரும். ரூமிமஸ்தகி, ரோஜாப்பூ ஆகியவைகளுடன் சாப்பிட இரைப்பையின் வியாதி நீங்கும். தக்க அநுபானத்துடன் உபயோகிக்க, வண்டலைப் பற்றின சகல ரோகங்களையும், வயிற்றிலுள்ள கிருமிகளை நீக்கவும், மண்ணீரல், மூத்திரக் குண்டிக்காய் ஆகியவைகளின் வியாதிகளுக்கும், கபமும் பித்தமுந்தொந்தப்பட்டுண்டான தாகத்தையும் அழலையையுந் தணிக்கவும்,கெட்டுப்போன பசிதீபனத்தை பழையபடி யுண்டாக்கவும்; அடிபட்டுக் கட்டுப்பட்ட இரத்தத்தைக் கரைக்கவும், அஸ்தி முறிவுகளைப் பொருத்தவும், சிலையோடும் ரணங்களை யாற்றவும், மேக ரணங்களை யாற்றவும் இது மேலான அவுடதம். குழந்தைகளுக்குக் காணும் செவ்வாப்பு (அக்கி முதலிய கொப்புளங்கள்) இதைகொத்து மல்லியிலை ரசத்திலரைத்துப் பூச சவுக்கியப்படும்.

கண்களிற் காணும் சிறு கொப்புளங்கள் முதலிய கண் ரோகங்களுக்கு இதைக் காடியில் அரைத்துப்பூசலாம். மூக்குப் புண்ணிற்கு நெல்லிக்காய்ச் சாற்றில் இதை அரைத்துப் பூசலாம். மூலமுளை விழவும், ஆண்குறியின் மேலுள்ள கிரந்திப்புண்கள் சீக்கிரம் ஆறவும் இதை வெங்காயத்தாள் ரசத்தில் அரைத்துப் போடவேண்டும். குறைந்த அளவாகக் கொடுத்தால் குடல்களைப் பலப்படுத்திப் பசி தீபனத்தை யுண்டாக்கும். மூலரோகிகளுக்கும், கருப்பவதிகளுக்கும் அதிக எச்சரிக்கையுடன் கொடுக்க வேண்டும்.

துர்க்குணம் - இரைப்பை, சிறுகுடல் ஆகியவைகள் மரத்துப்போம். பரிகாரம் - பாதம்பிசின், ரோஜாப்பூ, ரூமிமஸ்தகி. பதில்- சீமைச் சிவதை, மாமூதா. பிரமாணம் 4 கிராம், கிரகசம்பந்தம் - சூரியன்.

கபவிரேசனி

சரக்கொன்றைப்புளி, கருஞ்சீரகம், ஆற்றுத்தும்மட்டிக்காய், ஆமணக்கு, நேர்வாளம், காரிகியூன், கொடி காக்கட்டான் விதை , ரேவல் சீனி, சுரிஞ்சான்மிஸ்ரி, சீமை மருதோன்றி விதை , மைசாக்ஷி அல்லது குக்கில் சீமைச்சிவதை ஆகியவைகளாம்.

சரக்கொன்றைப் புளி கருஞ்சீரகம் ஆகியவை பற்றி ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

ஆற்றுத் தும்மட்டிக்காய்

கலிங்கம், பேய்க்கும்மட்டிக்கா யென்றும் பேர் . இந்தக்காய் உருண்டு, மஞ்சள், வெள்ளை பச்சை கலந்தபுள்ளிகள் மேலே யுள்ளதாய், வாசனை யற்றதாய், அதிக கசப்புள்ளதாய்க் குமட்டலை யுண்டாக்குகிறதாயிருக்கும். ஆண், பெண், என இரண்டு வகையுண்டு.ஆண் சாதியானது அதிக கடினமானதாகவும், அதிக நார்கள் உள்ளதாகவும், அதிக சின்ன தாகவுமிருக்கும்,பெண் வகையானது ஆணிலும் பெரிதாகவும், அதிக நாரில்லாததாகவும் சற்றுவெண்மை அதிகமானதாகவும், மிருதுவானதாகவுமிருக்கும். இந்தவகையின் காய்களே மருந்திற்கு ஏற்றது. ஒரு கொடியில் ஒரேகாய் காய்த்தால் அது கொடிய நஞ்சின் குணத்தைத் தரும். ஆகையால் அதை உபயோகிக்கலாகாது.

இக்காய்கள் பச்சை நிறமாறி மஞ்சள் வருணமாகிறவரையில் பறிக்கலாகாது. நன்றாய் முற்றி முதிர்ந்தால் இவ்விதமாகும். நன்றாய் முதிராத காய்களை உபயோகிப்பதினால் சிறுகுடலில் ரணம், அருவருப்பு,

கஷ்டசுவாசம் முதலிய அநேக கெடுதிகளை விளைவிக்கிறது. இதன் சதையானது தோலில் ஒட்டிக்கொண்டிருக்கிறவரையில் அதன் குணங்கெடாது, ஆகையால் புதிதாகச் சேகரித்துக்கொள்ளவேண்டும் . வருணம் உள்ளேயிருக்கிற சதை யுலர்ந்தால், லேசாகச் செல்லரித்தது போலேயிருக்கும்.சுவை - அதிக கசப்பு. இயற்கைக் குணமும் தரமும் - 4ம் தரச்சூடும், 2ம் தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும் - வீக்கங்களையும், வாயுக்களையும் நீக்கும்; தடிப்பாகிய கபத்தையும், வண்டலையும் பேதி மூலமாய் வெளிப்படுத்தும்; உள்ளாழ்ந்து கிடக்கிற மாசுகளை யிழுத்து வெளிப்படுத்தும்; காக்கை வலி, நடுக்கல், பக்ஷவாதம், பாண்டு முதலியவைகள் போன்ற குளிர்ச்சியைப் பற்றிய சகல வியாதிகளுக்கும் உபயோகப்படும். மூளையிலுள்ள மாசுகளை நீக்கி அதைச் சுத்திசெய்யும். வயிற்றிலுள்ள பலவகைக் கிருமிகளை நாசப்படுத்தும்; கபத்தினா லுண்டான குன்ம ரோகத்திற்கும், ஈரல், இரைப்பை, சிறுகுடல் ஆகியவைகளின் ரோகங்களுக்கும் உபயோகப்படத்தக்கது. வாயு, வண்டல், கபம் ஆகியவைகளுள் ஒன்றின் பேதத்தால் அல்லது அவற்றின் தொந்தத்தா லுண்டான சூதகபந்தத்தை நிவர்த்தி செய்ய ஏற்ற மருந்து.

துர்க்குணம் - வயிற்றுக் கடுப்பை யுண்டாக்கும். பரிகாரம் - கருவேலம் பிசின், பாதம் பிசின், நிஷாஸ்தா, பதில் - காக்கட்டான் விதை. மாமூதா. பிரமாணம் - ஒன்று- முக்கால் கிராம். கிரகசம்பந்தம் - அங்காரகன்.

ஆமணக்கு

இது இவ்விந்து தேசத்தில் அதிகம் விளைகிறபடியால் அநேகருக்குத் தெரிந்ததே. இது சிற்றாமணக்கு பேராமணக்கு என முக்கியமாய் இரண்டு வகைப்படும். இரண்டின் குணமும் சற்றேறக் குறைய சரியாயினும் அவுடதங்களுக்குச் சிற்றாமணக்கே அதிகம் உபயோகப் படுத்தப்படுகிறது வருணம்- பருப்பு,வெண்மையாயிருக்கும், எண்ணெய்ப் பசையுள்ளது, சுவை- கசப்பு, வெகுட்டலா யிருக்கும். இயற்கைக் குணமும் தரமும் -2ம் தரச் சூடும் வரட்சியும்.

செய்கையும் உபயோகமும் - துர்நீர்களை யகற்றும், நரம்புகளை தளர்ச்சியாக்கும், குளிர்ச்சியான அசுபாவசத்துகளை நன்றாய் வெளிப்படுத்தும். முகவாதம், பக்ஷவாதம், நடுக்கல், குன்மநோய், பாண்டுரோகம், கீல்வாய்வு, உதிரச்சிக்கல் ஆகிய ரோகங்களுக் குபயோகப்படும், நீறுருப்புகள், பிறப்பு உறுப்புகள் இவைகளின் வியாதிக்கும்; மூலரோகம், மலச்சிக்கல் உள்ளவர்களுக்கும், கர்ப்பிணிகள்,பிரசவித்த பெண்கள் ஆகிய இவர்களுக்கும், வியாதியுள்ள குழந்தைகளுக்கும் பேதிக்கு கொடுக்க ஏற்ற மருந்து.

துர்க்குணம் -பசி தீபனத்தை மந்தப்படுத்தும், அருவருப்பையும், வாந்தியையு முண்டாக்கும். பரிகாரம்- பாதம்பிசின், ரூமிமஸ்தகி. பதில்- முள்ளங்கிவித்தின்தைலம், சுத்தி செய்த நேர்வாளம் பத்திலொருபாகம். பிரமாணம் - பருப்புகள் 5, 10 கிரகசம்பந்தம் - சூரியன்.

ஆமணக் கெண்ணெய்

ஆமணக்குப் பருப்பைப் பார்க்கிலும் எண்ணெய்க்கு அதிக குணமுண்டு. ஆகையால் இதை உபயோகிப்பதே உத்தமம். பிரமாணம் - 16, 40 கிராம், குழந்தைகளுக்கு 4 கிராம்.

நேர்வாளம்

இந்த வித்தானது மூன்று வகைப்படும். 1.பிஸ்தா வித்தைப்போலப் பெரிதாயிருப்பதற்கு சீனா நேர்வாளம் என்றும், 2. சற்றேறக்குறைய ஆமணக்கு வித்தைப்போ லிருப்பதற்கு இந்து நேர்வாளம் என்றும், 3. அதிக சிறிதாயிருப்பதற்கு சஞ்சரி நேர்வாளமென்றும் பேர். மூன்றிற்கும் குணம்ஒத்திருக்கினும் முன்னிரண்டு வகைகள் தான் சிறந்தது பருப்பில் தைலமுண்டு. பருப்பைப் பிளந்து உள்ளிருக்கிற முளையிலையை யெடுக்காது உபயோகித்தால் வயிறுகடி அதிகமாகும், வாந்தியு முண்டாகும். இதை வெகு சாக்கிரதையாய் உபயோகிக்க வேண்டியது.

வருணம் - பருப்பானது புதிதாயிருந்தால் சற்று பசுமையான வெண்மை, நன்றாய் நீர்வற்றிப் பழசானால் மஞ்சளாகவும் கறுப்பாகவும் இருக்கும். அதிக பழசானால் நஞ்சின் குணமுண்டாகிவிடும். சுவை- கசப்பு, கரகரப்புண்டு இயற்கைக் குணமும் தரமும் - 3ம் தரச்சூடும் வரட்சியு முள்ளது.

செய்கையும் உபயோகமும் - உபத்திரவத்தோடு பேதியை யுண்டாக்கும், குளிர்ச்சியினா லுண்டான வியாதிகளையும், சருமரோகங்களையும், கீல்வாதம், கால் நரம்புகளின் இழுப்பு முதலியவைகளையும் நீக்கும். இதன் தைலத்திற்கும் இதுவே குணம், தைலத்தை ஆண்குறியில் பூச அதற்கு சக்தி அதிகப்படும். ஆனால் கொப்புளங்களும் எரிவந்தமு முண்டாக்கும். ஆகையால் நல்ல அநுபானங்களோடு சேர்த்துப் பூசவேண்டும். குழந்தைகளின் அள்ளுமாந்தம் முதலிய சில வியாதிகள் தீரும். இதை நன்றாய்ச் சுத்திசெய்யாது உபயோகிக்க லாகாது.

துர்க்குணம்- வயிற்றுவலி யுண்டாகும். நெஞ்செரிவு, வாந்தி, அதிக பேதியாதல் முதலிய சிலகெடுதிகளை விளைவிக்கும். சூடான் தேகிகளுக்கு அதிக வாந்தியை யுண்டாக்கும். தோலையும் முளையிலையையும் நீக்கி, நெய், பால், எலுமிச்சம் பழச்சாறு

ஆகியவைகளில் சுத்தி செய்யவும். பரிகாரம் -வசம்பைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேனி லிழைத்துச் சாப்பிடவும், பதில் - சீமைச் சிவதை அல்லது ஆமணக்கு வித்து. பிரமாணம் - அரைப் பருப்பு, கிரகசம்பந்தம்- அங்காரகன்.

காரிகியூன்

இது திராக்ஷசெடி முதலியவைகளின் அடிபாகம் உட்கி யுண்டாகும் ஒரு வஸ்து, இதை மரக்காளான் என்றே சொல்லலாம். இலேசாகவும், கையினால் சற்று தேய்த்தால் உதிர்கிறதாகவும் இருக்கவேண்டும். வருணம் - வெண்மை, சுவை- கசப்பு, இயற்கைக் குணமும் தரமும் - 1ம் தரச்சூடும் 2ம் தரவரட்சியும்

செய்கையும் உபயோகமும் - வண்டல், பித்தம் ஆகிய வைகளையும் பேதியினால் வெளிப்படுத்தித் தேகத்தைச் சுத்திசெய்யும். தடிப்பாகிய சத்துக்களையும் பாகப்படுத்தி சுத்திசெய்யும்; அதிகரித்த சத்துக்களையும் வெளிப்படுத்தி விடும். வாயு, வீக்கம், குடல்முருக்கோ டுண்டாகும் வயிற்று நோவு ஆகியவைகளை நீக்கும். நீர், சூதக இரத்தம், ஆகியவைகளை அதிகப்படுத்தும் தலைமூளை, இருதயம், நரம்புகள் ஆகிய இவற்றைப் பலப்படுத்தும், பலவித விஷங்களை முறிக்கும்; கபசுரத்திற் குபயோகப்படும், இதை மயிர்ச் சல்லடையில் அல்லது உரத்த துணியில் வைத்துத் தேய்த்துக் கீழே விழும் தூள்களை மாத்திரம் உபயோகிக்க வேண்டும். இதை உரலிலிட்டு இடிக்க லாகாது அல்லது மேற்சொன்னபடி செய்யாது வேறெவ்விதமாயாவது அரைத்து உபயோகிக்கலாகாது. ஏனெனில் சிறுநகங்களைப் போன்ற வஸ்துக்கள் அதிலிருக்கின்றன. அவை நசுங்கினால் நஞ்சின் குணத்தை யுண்டாக்கும்.

துர்க்குணம்-வயிற்றுவலி யுண்டாகும், குரல்வளையில் வீக்கமுண்டாகும். பரிகாரம்-பால், ஜூந்து,பதில்-சீமைச் சிவதைவேர், ஆற்றுத் தும்மட்டிக்காய்ச் சதை; பிரமாணம்-3 கிராம், கிரகசம்பந்தம்-சூரியன்.

காக்கட்டான் விதை

இதன் புஷ்பம் சங்கைப்போ லிருப்பதால் இதற்குச் சங்கு புஷ்பச் செடியென்றும் பேர். வித்துகள் முக்கோண வடிவுள்ளது; வருணம்-கருப்பு, சுவை-கசப்பு, இயற்கைக் குணமும் தரமும்-2ம் தரச் சூடும் வரட்சியும்.

செய்கையும் உபயோகமும் - வண்டல், கபம் ஆகியவைகள் தடிப்பாயிருந்தாலும் அவறறைப் பேதி வழியாய் வெளிப்படுத்தித்

தேகத்தைச் சுத்தி செய்யும். ஈரல், மண்ணீரல் ஆகியவைகளின் கட்டுகளை யுடைக்கும்; வயிற்றிலுள்ள கிருமிகளையும், ரணங்களிலுள்ள கிருமிகளையும் நீக்கும். பெருவிரல் வாதம், கீல்வாதம், துர் நீரினாலுண்டான சொறிகள், அதி புராதன அழிரணங்கள் ஆகிய இவை தீரும். வெண்புள்ளி, கரும்புள்ளி, ஆகியவைகளை நீக்கவும் உபயோகப்படும்.

துர்க்குணம்-வயிற்று பிடுங்கல், கடுப்பு, குடல் முறுக்கு ஆகியவைகளை யுண்டாக்கும், பரிகாரம்-கடுக்காய்த் தோல் அல்லது இதை பாதம் எண்ணெய் அல்லது நெய்யில் வறுத்துக் கொள்ள வேண்டும். பதில்-ஆற்றுத் தும்மட்டிக் காய்ச் சதை, பிரமாணம்-2 கிராம் கிரகசம்பந்தம்-அங்காரகன்.

ரேவல் சீனி

சீனா, திபெத், துர்கிஸ்தான், குரோசான் முதலிய தேசங்களில் மலையடிவாரங்களில் உண்டாகின்ற ஓர் வகைச் செடியின் கிழங்குகள். இதனுடன் பலவகைகள் கலந்திருப்பதால், அங்குள்ளவர்கள் அந்த வகைகளைத் தேடி வெட்டியெடுத்து அக்கிழங்குகள் சீக்கிரம் உலரும்படியாக 2 அல்லது 3 துண்டுகளாகச் செய்து சிறிய கயிற்றில் கோர்த்துக்கட்டி மிருகங்களின் மீதேற்றிவந்து பட்டணங்களில் விற்பார்கள். இது உருண்டாவது தட்டையாயாவது இருக்கும். குதிரைக் குளம்பைப்போன்று பெரிதாயிருக்கின்றதுதான் நல்லது. அநேகத்தில் ஒரு துவார மிருப்பதுண்டு. அதன் காரணம் முன் சொல்லப்பட்டதே, வருணம் வெளிக்கு மஞ்சளாயும், உள்ளே வரிவரியாயு மிருக்கும். சுவை மணம்-மென்றால் மணலைப்போல நறநறவென்று இருக்கும்; கொஞ்ச துவர்ப்பாய்க் கசக்கும், ஒருவித வாசனையுமுண்டு, இயற்கைக் குணமும் தரமும் 2ம் தரச்சூடும் வரட்சியும். ஆனால் கொழுமையுண்டு.

செய்கையும் உபயோகமும்:- வரட்சியுண்டாக்கும், மாசுகளை நீக்கித் தேகத்தைச் சுத்திச்செய்யும், அசுபாவ சத்துக்கள் தடிப்பாயிருந்தாலும் தெளிவாயிருந்தாலும் பாகப்படுத்தி அவைகளை வெளிப்படுத்தும், நீர்க்கட்டு, உதிரச் சிக்கல், வயிற்றுப்பிசம், வயிற்றுக்கடுப்பு, காமாலை, இவைகளைக் கண்டிக்கும், கட்டுகளை யுடைக்கும், குடல்களில் விஷமித்த மாசுகளை நீக்கிச் சுத்திசெய்யும், இதை நன்றாய்த் தூள்செய்து பேதனாக் கோழையைவிட்டுக்குழப்பி உருண்டைகள் செய்து வாயிலடக்கிக் கொண்டு அதன் ரசத்தைச் சாப்பிட குளிர்ச்சி, கொழுமையினா லுண்டான மூச்சு முதலியவைகள் தீரும். காபுலிக் கடுக்காய், காரிகியூன், சீமை கரியபோளம், இவைகளைச் சேர்த்தரைத்து மாத்திரைகளாகச் செய்து சாப்பிட, சிரசைப்பற்றிய

ரோகங்கள் குளிர்ச்சியினா லுண்டான பலவகைத் தலைநோய்கள், ஒருத்தலைநோய், பக்கவாதம், பைத்தியம், கண்வலி முதலிய நோய்கள் தீரும்.

துர்க்குணம்- தேகத்தின் கீழ் உறுப்புகளுக்காகாது. குழந்தைகள், துர்ப்பலப்பட்டவர்கள் ஆகிய இவர்களுக்கு அதிகம் உபயோகிக் கலாகாது. பரிகாரம்-விளாம்பிசின், சீமையிலந்தைப் பழம். பதில்-ரோஜாப்பூ, சடாமஞ்சி, பிரமாணம்-4 கிராம் அல்லது 5 கிராம். கிரகசம்பந்தம்-குரு.

சுரிஞ்சான் மிஸ்ரி

இக்கிழங்கானது காட்டுப் பூண்டைப் போன்றும், சற்று விரிந்த தாமரை மொக்கைப் போன்ற வடிவமுள்ளதாயு மிருக்கும். இது மூன்றுவகைப்படும். 1. உள்ளும் புறமும் வெண்மையாகவும் சுவை தித்திப்பாகவுமிருக்கும். 2. உள்ளும் புறமும் கருஞ்செம்மை சாயலான மஞ்சள் வருணமாயிருக்கும். 3. உள்ளும் புறமும் கருஞ் சாயலாயிருக்கும். ஆனால் வெளிப்புறம் அதிக கறுப்பா யிருக்கும். முதலாவதுதான் சாப்பிடும் அவுடதங்களில் உபயோகிக்கத்தக்கது. உள்ளும் புறமும் வெண்மையாயிருப்பதுடன் சற்று கடினமானதாகவும் புழுக்காதவை களாவும் துர்க்கத்தமில்லாதவைகளாகவும் இருக்க வேண்டும், மற்ற இரண்டு வகையும் நஞ்சின் குணமுடையவைகளாகையால் சாப்பிடும் அவுடதங்களில் உபயோகிக்க லாகாது. இயற்கைக் குணமும் தரமும்-2ம் தரச் சூடும் வரட்சியுமானது. வெண்மையானது சமமான சூட்டை யுடையது என சொல்லுகிறார்கள்.

செய்கையும் உபயோகமும்:- தேகத்தின் உள் அவயங்களிலுள்ள எவ்வகைக் கபங்களையும் பேதி மூலமாய் வெளிப்படுத்தும்; கட்டுகளை நீக்கும்; பிசுபிசுப்பான நீர்களை கிரகித்து வெளிப்படுத்தும்; தாதுவிர்த்தியுண்டாகும்; பெருவிரல்வாதம், சந்து வாதம், கீல்வாயு ஆகியவைகளுக்குபயோகப்படும்; இது 2 பங்கு, குங்குமப்பூ, 1 பங்கு இரண்டையும் முட்டை வெள்ளை கருவால் அரைத்துப்பூச, எலும்புக்குள்ளிருக்கும் வலியை உடனே நிறுத்தும். வீக்கங்களையும் கரைக்கும். இதன் செய்முறை பின்னர் எழுதப்படும்.

துர்க்குணம்-இரைப்பை, ஈரல் ஆகியவைகளுக்காகாது, பரிகாரம்-பாதாம்பிசின், குங்குமப்பூ; பதில்-சீமைச் சிவதையும், சுக்கும். பிரமாணம்-4 கிராம். கிரகசம்பந்தம்-குரு.

சீமைமருதோன்றி விதை

இவ்வித்துகள் கடுகைப்போலும் ஆனால் அதனிலும் சற்று கனமுள்ளதாகவும் அழுத்தமான தாகவுமிருக்கும், வருணம்-கறுப்பு. சுவை, மணம்-சிறு கசப்பு; ஒருவித வாசனை யுடையதாயிருக்கும். இயற்கைக் குணமும் தரமும்-3ம் தரச் சூடும் 2ம் தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்- மார்பு, நுரையீரல் இவைகளிலுள்ள பிசுபிசுப்பான கோழைகளைச் சுத்தி செய்யும், குடலிலுள்ள வாய்வுகளையும் அசுத்த மாசுகளையும் படிப்படியாகக் கண்டிக்கும்; தாதுவிருத்தியும் தேகபுஷ்டியுமுண்டாகும்; நீர் பால், சூதகம் இவற்றை அதிகப்படுத்தும்; வண்டலையும், தடிப்பாகிய கபத்தையும் பேதியால் வெளிப்படுத்தும்; கிருமிகளை நாசப்படுத்தும், இதன் கஷாயமானது, மூர்ச்சை ரோகம், பக்கவாதம், பயித்தியம், மறதி ரோகம் மூளையையும் நரம்புகளையும் பற்றிய குளிர்ச்சியிலான வியாதிகள் ஆகியவைகளுக்கும், தேகத்திற்கும் மூளை ஸ்தானங்கட்கும் சூட்டை அதிகப்படுத்த உதவும் பாண்டு, காமாலை, கட்டுகள், குடல்கள் முறுக்கோடுண்டாகும் வயிற்றுநோவு, கால்நரம்புவலி, ஆகியவைகளைக் குணப்படுத்தும்; இதை ஊறல் கஷாயம் செய்து சாப்பிட, வண்டலானது படிப்படியாய் நீங்கி இரத்த சுத்தியுண்டாகும், மலமிளகும், 35 கிராம் வித்துகளையிடித்து, 140 கிராம் சலத்திலிட்டுக்காய்ச்சி அரைபாகம் சுண்டினபின் வடிகட்டி, அதில் மூன்றுபலம் தேனும் இரண்டுபலம் நல்லெண்ணையும் சேர்த்துச் சாப்பிட நன்றாய் வாந்தியாகி, மார்பிலுள்ள மாசுகளும், பிசுபிசுப்பான கோழைகளும் வெளிப்படும்; இரைப்பு, கொழுமையான இருமல் ஆகிய இவை தீரும். ஒருபலம் விதைகளை 1 கிலோ திராஷாசாராயம், அல்லது திராஷாரசத்தில் இட்டுக் காய்ச்சி, நாலிலொரு பாகமாய்ச் சுண்டினபின் இறக்கிப் பத்திரமாய் வைத்துக் கொண்டு, ஒருவேளைக்கு 70 கிராம் வீதம், காலை மாலை 2-வேளையும் சாப்பிட நாள்பட்ட தலைநோய், காக்கைவலி ஆகிய ரோகங்கள் தீருகின்றன. இது அநுபவமான முறை. நடுவில் கருப்பந் தரிக்காத ஸ்திரீகளுக்குத் தொடர்ச்சியாய் மும்மூன்று நாள் மேற்படி வித்துக்களின் கஷாயம் சாப்பிட வழமைபோல் கருப்பமுண்டாகும்; மூச்சிழுப் புள்ளவர்கள் இவ்வித்துடன் அல்ஸிவித்தும் சேர்த்துத் தேன் விட்டரைத்துச் சாப்பிட, அது தீரும்; இது மிகவும் அநுபவப்பட்டமுறை. கால் நரம்பு வலியுள்ளவர்கள் 5 இரவு தொடர்ச்சியாக சாப்பிடத் தீரும். இதைக் கடுகெண்ணையிலிட்டுக் காய்ச்சி நாபியில் தடவ நாள்பட்ட குன்மரோகந்தீரும். இவ்வித்து மூன்றுபங்கு, சுக்கு ஒரு பங்கு இரண்டையும் தூள்செய்து,

மணத்தக்காளியிலை ரசத்திலிட்டுக் கரைத்து வெய்யிலில் வைத்துக் குழம்பு பதத்தில் பற்றிட, கீல்வாதம் முதலிய நோய்கள் தீரும், ஆனால் இதைத் தொடர்ச்சியாகச் சிலநாள் கையாடி வரவேண்டும். இவ்வித்து, குங்குமப்பூ, கோழிப்பித்து, தேன், திராக்ஷா சாராயம் என்னும் இவைகளைச் சமமாய் ஒன்றாய் அரைத்து மைபோலானபின் இரண்டுதுளி சோம்புத் தயிலம் விட்டுக் குழைத்து அரிசி எடை தொடர்ச்சியாய்க் கண்ணிலிட வயது மூப்பால் உண்டான பார்வை குறைவு குணமாகும்; இதன் பிரயோசனம் பலவுள.

துர்க்குணம்-சூடான தேகிகளுக்காகாது; தலை நோயுண்டாகும். பரிகாரம்-புளிப்பான பழங்களின் ரசம், காடிஷர்பத், பதில்-சதாபுவிதை, முள்ளங்கிவிதை. பிரமாணம்-5-8 கிராம், கிரகசம்பந்தம்-அங்காரகன்.

குக்கில்

இதற்கு மதராஸ் மருந்து கடைகளில் மைசாக்ஷியென்றும் தஞ்சை முதலிய தென்னாட்டில் குக்கில் என்றும், பங்காளம் முதலிய வடநாடுகளில் கோகில் என்றும், வழங்கப்படுகிறது. இது ஒருவகை மரத்தின் பிசின். இது பலவகைப்படும். ஆயினும் மணல், குச்சிகள், கற்கள் ஆகிய பிறவஸ்துகள் கலப்பில்லாமல் சுத்தமானதாகவும், கொஞ்சம் பளபளப்பும் பிசுபிசுப்பு முள்ளதாகவும், மிருதுவாகவும், மஞ்சள் சாயலாகவும், கசப்பாகவும், தண்ணீரிலிட்டுக் காய்ச்சினால் சீக்கிரம் உருகுங் குணமுள்ளதாகவும் இருக்க வேண்டும். இதுவே சிறந்தது. மற்ற வகைகள் அவ்வளவு சிறந்ததல்ல. இயற்கைக் குணமும் தரமும்-3ம் தரச்சூடும் 2ம் தரவரட்சியுமானது.

செய்கையும் உபயோகமும்- நரம்பிழும்பு, கழுத்து நோய், நாள்பட்ட இருமல், ஆகிய இவை தீரும்; மார்பிலுள்ள கோழைகளைச் சுத்தி செய்யும், சுவாசம், ஈரலின் துர்ப்பலம் ஆகியவைகளுக்காம், வாயுவினால் உண்டான மூலம், சிறுகுடலிலுள்ள இரத்தக் கசிவு, உதிரச்சிக்கல், நீரடைப்பு, கல்லடைப்பு, பக்கசூலை, கணுவாதம் ஆகியவை தீரும். முலைப்பால் சுரக்கும். தொண்டை வீக்கத்திற்கு இதைப்பற்றிட அநுகூலப்படும், தக்க அநுபானங்களுடன் பற்றிட அண்டவாதம், ஈரலின் வீக்கம், கட்டிகள், விசூபி, காளை முதலியவைகள் சவுக்கியப்படும். இப்படி இதன் விசேஷ குணத்தைப்பற்றி ஹிந்து வைத்திய சாஸ்திரங்களிலும் கூறப்பட்டிருக்கிறது இப்படியே அநுபவமுமாகிறது.

துர்க்குணம்-நுரையீரலுக்கும், ஈரலுக்குமாகாது. பரிகாரம் - பாதம்பிசின், குங்குமப்பூ, பதில்-கரியபோளம், வாலேந்திரபோளம், பிரமாணம்-3 கிராம், கிரகசம்பந்தம்-சனி.

சீமைச் சிவதை

இது குராஸான், சிந்து, இந்து முதலிய தேசங்களில் உண்டாகும் ஓர் செடியின் வேர், லேசாயிருக்கும், நடுவில் துவாரமுள்ள, வெட்டுண்ட இரண்டு பக்கங்களிலும் பிசின் படிந்திருக்கும். வருணம்-வெளிப்புறத்தில் கருஞ்சாயல், உள்புறத்தில் வெண்மை. சிலவகை மஞ்சள் வருணமாயிருப்பதுமுண்டு. கறுமையான சாதி நஞ்சின் குணமுடையது, ஆகையால் அதை நீக்க வேண்டியது. சுவை-அதிக கைப்பு, இயற்கைக் குணமும் தரமும்-3ந் தரச்சூடும் வரட்சியுமானது.

செய்கையும் உபயோகமும்- கபத்தைப் பேதியால் வெளிப்படுத்தும், தெளிவாகிய நீர்களையும், எரிந்துபோன சத்துக்களையும், பித்தநீரில் சிலபாகத்தையும் பேதியால் வெளிப்படுத்தும். மூளை, இரைப்பை, ஈரல், கருப்பை ஆகியவைகளிலுள்ள கபத்தை வெளிப்படுத்தும்; கட்டுகளையுடைக்கும், பக்கவாதம், முகவாதம் முதலிய நரம்பைப் பற்றிய அநேக வியாதிகளுக்குக் குணத்தைத் தரும். மார்பு வலிக்குபயோகப்படும்; கோழையோடு கூடிய இருமலுக்கு உதவும். காபுலிக்கடுக்காயோடு உபயோகித்தால், காக்கை வலி, பைத்தியம், உன்மத்தம் முதலிய ரோகங்கள் குணப்படும். காலின் நரம்பு வலிக்கும் உதவும். சுக்குடன் சேர்த்து இதை உபயோகிக்க, அதிக பலனைக் கொடுக்கும். கிஷாயங்களுக்கானால் நறுக்கிப்போட்டால் போதுமானது. லேகியங்களுக்கானால் நன்றாயிடித்துத் தூள்செய்ய வேண்டும். இதைச் சூரணமாய் உபயோகித்தால் சுக்கு, சருக்கரை சேர்த்துச் சாப்பிட்டு அதன்மேல் வெந்நீர் அருந்த வேண்டும். சுக்கு சிவதை யிவைகளைச் சேர்த்துக்காய்ச்சி வடிகட்டி கற்கண்டிட்டு காப்பி மாதிரி சாப்பிட, கொழுமையினாலுண்டான கபத்தையும், இருமலையும் நீக்கும். பாதம் நெய், ஆளிவிதை யிவற்றோடு சாப்பிட மார்புவலி தீரும்.

துர்க்குணம்-குடல்களுக் குதவாது, பரிகாரம்-சூரணத்தை வாதுமை நெய்யில் பிரட்டிக் கொள்ளவேண்டும்; மேல்தோல், உள் நரம்புகள் ஆகியவைகளை நீக்கிப் பசும்பாலில் வேகவைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். பதில்-காரிகியூன், காக்கட்டான் விதை. பிரமாணம்-5 கிராம், கிரகசம்பந்தம்-அங்காரகன்.

வண்டல் விரேசனி

அப்திமூன், காபுலிக்கடுக்காய்த்தோல், கறுப்புக்கடுக்காய், சூரத்து நில ஆவாரை, காரிகியூன், காக்கட்டான் விதை; பாலங்கூ, உஸ்துகுதூள், பஸ்பாயிஜ், சீமை காவிக்கல்.

அப்திமுன், காபுலிக் கடுக்காய், கறுப்புக் கடுக்காய், சூரத்துநில ஆவாரை, காரிகியூன், காக்காட்டான் விதை பற்றி முன்னர் கூறியுள்ளதை பார்வையிடவும்.

பாலங்கூ

இது திருநீற்றுப் பச்சையினத்திற் சேர்ந்த ஒரு வித்துக்கள். பூண்டின் திருநீற்றுப்பச்சை வித்துக்களிலும் பெரிதாகவுமிருக்கும். வருணம்-கறுப்பு, சுவை-இலைப்பு, பிசுபிசுப்புள்ளது. இயற்கைக் குணமும் தரமும்-1ந்தரச் சூடுங் கொழுமையுமானது. சிலர் 1ந்தரக் குளிர்ச்சி கொழுமை யென்கின்றார்கள்.

செய்கையும் உபயோகமும்-இருதயத்திற்குப் பலத்தை யுண்டாக்குகிறது. பைத்தியம், பயங்கரம் ஆகிய ரோகங்களைக் கண்டிக்கும். இதைப் பன்னீரி லூறவைத்து அதன் கோழையை யெடுத்துச் சாப்பிட பேதி, இரத்தபேதி தீரும். இதனுடன் சீனி சருக்கரையைச் சேர்த்துச் சாப்பிட சீதபேதி, வயிற்றுக்கடுப்பு ஆகியவை தீரும். தாகத்தைத் தணிக்கும்.

துர்க்குணம்-இரைப்பைக் காகாது, பரிகாரம்-கற்கண்டு சீனிசருக்கரை பதில்-திருநீற்றுப் பச்சை வித்து, பிரமாணம் 9 கிராம், கிரகசம்பந்தம்-சந்திரன்.

உஸ்துகுதூஸ்

இப்பூண்டிற்கு ஆத்மரக்ஷணி யென்றும் பெயர். இதன் சிறந்த குணத்தைப்பற்றியே இப்படி பேரிடப்பட்டது.

அரபு தேச முதலிய இடங்களிலும், இந்தியாவில் அஜீமாபாத் முதலிய இடங்களிலும் வேனிற் காலங்களில், கறுப்பு நிலங்களில் இப்பூண்டுண்டாகிறது. அரபு தேசத்தில் உண்டாவது அதிக குணமுடையது. அவ்விடங்களிலிருந்து உலர்த்தி இவ்விடங்கொண்டு வரப்படுகிறது. வருணம்-கருஞ்சாயலான பசுமை, சுவை மணம்-சிறுகசப்பு, காரமுள்ள வாசனை, இயற்கைக் குணமும் தரமும்-1ந்தரச் சூடும், 2ந்தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்-தேகத்திலுள்ள வியாதிகளைப் படிப்படியாய் நிவர்த்தி செய்து சௌக்கியத்தையுண்டாக்கும். கட்டு, வரட்சி, சிக்கல் ஆகியவைகளை நீக்கும், தலைமூளை, குடல்கள் முதலியவைகளைப் பலப்படுத்தும், தேகத்தின் அகப்புறத்துச் சக்திகளை விருத்திசெய்யும், சுத்தமாகிய ஆவிகளை யுண்டாக்கும். விசனத்தை நீக்கிச் சந்தோஷ முண்டாக்கும். ஆண்மையை விருத்தி செய்யும், மார்பின்

வியாதிகள், இருமல், பீனிசரோகங்கள், துர்க்கந்த வியாதிகள், நரம்புகளின் வியாதிகள், கபநீர், வண்டல், முதலிய வியாதிகளுக்கு உதவும், மூளை, ஈரல் மண்ணீரல், நீர் உறுப்புகள் ஆகியவைகளின் வியாதிகளுக்கு அதிகம் உபயோகப்படும்.

உஸ்துகுதூஸ் 4 கிராம். இதனைக்கியாழம் செய்து தொடர்ச்சியாய் சாப்பிட்டுவர அடி முதலியவைகள் ஏற்பட்டு மூளையதிர்ந் துண்டான நடுக்கம், மயக்கம், தலைசுழற்றல் முதலியவைகள் தீரும். தேனுந் தண்ணீரும் சேர்த்துக் காய்ச்சி நுரைநீக்கி, அதில் உஸ்துகுதூசின் சூரணம், அல்லது கியாழம் ஆகியவைகளில் ஒன்றைச் சேர்த்துச் சாப்பிட நினைவாற்றலை அதிகப்படுத்தும்; கூர்மையாக்கும். இதன் பிரயோசனம் பலவுள. இதன் செய்முறைகள் பின்னர் எழுதப்படும்.

துர்க்குணம்-நுரையீரலுக்கும் சூடான தேகிகளுக்கும் உதவாது. பரிகாரம்-பாதம்பிசின் பதில்-அப்திமூன், பிரமாணம்-8 அல்லது 20 கிராம். கிரகசம்பந்தம்-சூரியன்

பஸ்பாயிஜ்

இது ஓர்வகைப் பூண்டின்வேர்; சிம்புகளுள்ளதாகவும் மெல்லியதாகவும் முடிச்சுகளுள்ளதாகவும் முடிச்சுக்களிலும் சிம்புகளுள்ளதாகவுமிருக்கும். வருணம்-கருஞ்சாயலான மண்வருணம். அதை ஒடித்தால் பிஸ்தாப் பருப்பினது பசுமையைப் போலிருக்கும்; பழசாகவாக கருமை செம்மை சாயலாம். சுவை-லவங்கத்தின் சுவையுள்ளதாகவும் சற்று தித்திப்புள்ளதாகவு மிருக்கும். இயற்கைக் குணமும் தரமும்-2ம் தரச்சூடும், 1ம் தர வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்:- தடிப்பாகிய கபத்தையும் எரிந்துபோன வண்டலையும் பேதியால் வெளிப்படுத்தும், வயிற்றுப்பிசத்தை நீக்கும். வயிற்றில் உறைந்துபோன பாலையும், வயிற்றில் பாலை உறையச் செய்பவைகளையும் நீக்கும்; குடல்முறுக்கோடுண்டாகும் வயிற்று நோய் தீரும். வண்டல், வண்டலைப் பற்றிய வியாதிகள், பெரும் வியாதி, கணுக்கள், கீல்கள் ஆகியவைகளின் வியாதி தீரும். குடலிலுள்ள துர்மலங்களை நீக்கி அதைச் சுத்திசெய்யும், மருந்துகள் சாப்பிட்ட பின் உண்டாகும் வெகுட்டல் முதலியவைகளை நீக்க இதைச் சருக்கரையோடு சேர்த்தும் சாப்பிடலாம். தேனையும் தண்ணீரையும் சேர்த்துக் காய்ச்சி நுரை நீக்கி, அதில் இதைச் சாப்பிட யாதொரு சங்கடமில்லாது வண்டலையும், தடிப்பானதும் பிசுபிசுப்பானதுமான சத்துக்களையும் நீக்கும். பஸ்பாயிஜ், அதிமதுரம், சோம்பு ஆகியவைகளைச் சேர்த்துக் கியாழம் செய்து சாப்பிட இருமல், இரைப்பு, கஷ்டசுவாசந் தீரும். பஸ்பாயிஜுடன் சீமையிலந்தைப்

பழத்தைச் சேர்த்து கியாழஞ்செய்து தொடர்ச்சியாகச் சாப்பிட மூல முளைகள் கரைந்து விழுகின்றன. இது அநுபவப்பட்ட முறை 15 கிராம் பஸ்பாயிஜைக் கியாழஞ் செய்து அதில் தரஞ்சபீன் அல்லது சரக்கொன்றைப் புளியைக் கரைத்துச் சாப்பிட மூலவாயு,நாள்பட்ட வயிற்று நோவு, காக்கைவலி ஆகியவைகள் குணப்படும். பஸ்பாயிஜ் வராகனெடை 6 சரக்கொன்றைப் புளி 120 கிராம் ஆகியவைகளைப் பாகஞ் செய்து 7 நாள் சாப்பிட பைத்தியரோகம், பெருவியாதி இவை சாந்தப்படும்.

துர்க்குணம்-மார்பிற்கும், நீர்க் குண்டிக்காய்களுக்கும் உதவாது. பரிகாரம்-மார்பின் வியாதிகளுக்கு, மயிர்ச்சிக்கி, நீர்க் குண்டிக்காய்களின் வியாதிகளுக்குக் கடுக்காய். பதில்-அப்திமூன் அரைப்பங்கு இந்துப்பு கால்பங்கு; பிரமாணம்-8-24 கிராம் கிரகசம்பந்தம்-சனி.

இதன் மேல்தோலை நீக்கிவிட்டு நன்றாயிடித்து உபயோகிக்க வேண்டியது. இதன் கியாழம் முதலியவைகள் பின்னால் சொல்லப்படும்.

சீமைக் காவிக்கல்

இது ஸ்பரிசத்திற்கு மிருதுவாகவும் நொய்மையுள்ளதாகவும் இருக்கும். இது அர்மீனியா தேசத்திலிருந்து கொண்டு வரப்படுகிறபடியால் அரமீனி கல்லென்று வழங்கப்படுகிறது. இதில் சீக்கிரம் ஒடியத் தக்கதும் கொஞ்சம் லவணசுவையுள்ளதுமே சிறந்தது. வருணம்-மண்வருணச் சாயலானதும் கொஞ்சம் ஊதா வருணமுள்ளது. கருஞ்சாயலான செகப்பு வருணமுள்ள ஒருவகையுமுண்டு. இயற்கைக் குணமும் தரமும்-2ம் தரச்சூடும் வரட்சியும்.

செய்கையும் உபயோகமும்-மனதிற்குக் களிப்பை யுண்டாக்கும்; வண்டலை நீக்குகிறபடியால் இருதயத்திற்குக் குதூகலிப்பைக் கொடுக்கும். கடுகுரோகிணி, ராஜவர்த்திக்கல் ஆகியவைகளைக் காட்டிலும் பலமாகவும் சவுக்கியமாகவும் வண்டலை பேதிவழியால் வெளிப்படுத்திவிடும், நீர்க்குண்டிக்காய், நீர்ப்பை ஆகியவைகளிலுள்ள மாசுகளை நீக்கிச் சுத்தி செய்யும். பெரு வியாதிக்கும் உபயோகப்படும்.

துர்க்குணம்-இரைப்பைக்கு உதவாது. மயக்கமுண்டாகும், பரிகாரம்-சுத்தி செய்து உபயோகிக்க வேண்டியது. கதீரா, தேன், பெருவலங்கப்பட்டை, அனிசூன். பிரமாணம்-2 கிராம் வரையில் ஆம். பதில்-சுத்தி செய்த ராஜவர்த்திக்கல் அதன் அளவிற்கு ஒன்றரை பங்கு, கடுகுரோகணியானால் சமம். கிரகசம்பந்தம்-சனி.

வமனகாரிகள்

வாந்தியை யுண்டாக்குகிற மருந்துகளுக்கு வமனகாரிகள் என்று பேர். இரைப்பை, அதைச் சார்ந்த இடங்கள் ஆகிய இந்த இடங்களிலுள்ள மூவகைத் துர்நீர்களையுமாவது அல்லது அவற்றுள் ஒன்றையாவது மேல் நோக்கச் செய்து, வாயினால் வெளிப்படுத்துவனவாம்.

ஆமணக்கெண்ணெய், குங்குலியத் தைலம் முதலிய சில அவுடதங்கள் சிலருக்கு வாந்தியை யுண்டாக்கும். பார்வைக்கு அசங்கியமான வஸ்துக்கள் துர்வாசனை, இவைகளினாலும் சிலருக்கு வாந்தியுண்டாக்கும்; எந்த வஸ்துவையும் மிதத்துக்கு அதிகமாய்ச் சாப்பிட்டாலும் வாந்தியாகும். இவையெல்லாம் வமனகாரிகள் அல்ல.

வாந்தியை யுண்டாக்குந் தனி அவுடதங்களில் முக்கியமானவைகளாவன. முள்ளங்கி விதை, கடுகு, கடுகுரோகணி, உப்பு முதலியவைகளும், இளஞ்சூடான வெந்நீர், தேன், காடியும் தேனும் சேர்த்துக் காய்ச்சின ஷர்பத்து இவை போன்றவைகளுமே.

வாந்திக்குச் சாப்பிடுங்காலம், முறை முதலியவைகளை பின்னர் எழுதப்படும்.

மூத்திரபேதிப் பதார்த்தங்கள்

மூத்திரத்தை அதிகமாய் உண்டாக்குகிற மருந்துகளுக்கு மூத்திரபேதி யென்றுபேர். தேகத்திலுள்ள நுண்ணிய மாசுகளையும், ஈரலிலுள்ள நீர்களையும், நீர்ப்பையிலுள்ள மாசுகள் மஷ்டுகள் முதலியவைகளைச் சுத்தி செய்யவும், வியாதியால் அளவில் குறைந்த மூத்திரத்தை சுவாபீகஸ்திதியில் கொண்டுவரவும், விஷபதார்த்தங்களைத் தேகத்திலிருந்து வெளிப்படுத்தவும், தாபன குணத்தையுடைய ரோகங்களைப் போக்கவும், தேகத்தில் ஏறிய நீரைவற்றச் செய்யவும், உபயோகப்படும்.

குளிர்ச்சியான மூத்திரபேதிப் பதார்த்தங்கள்

வெள்ளரிவிதை, கெக்கரிவிதை, பருப்புக்கீரை விதை, முலாம்பழவிதை, காசினி விதை, எலுமிச்சம்பழம், நெருஞ்சில், சவ்வரிசிக்கஞ்சி முதலியவைகள்.

சூடான மூத்திரபேதிப் பதார்த்தங்கள்

சிவப்பு முள்ளங்கியின் விதை, மயிர்ச்சிக்கி, சடாமாஞ்சி, சோம்பு, குங்குமப்பூ, சிவதைவேர், சீரகம், கருஞ்சீரகம், அகர்கட்டை, அஜமூதா ஓமம், பொதினா இவை போன்றவைகள்.

சிகிச்சைகளின் பொது லக்ஷணம்

சகோதரர்களே யிதுவரையில் வாதம், பித்தம், சிலேற்பனம் முதலிய சத்துக்களின் மாறுபாட்டைச் சமப்படுத்தும் தனிப் பதார்த்தங்கள், பக்குவப்படுத்தும் தனி பதார்த்தங்கள், இலகுபேதிப் பதார்த்தங்கள், விரோசனகாரிகள், வமனகாரிகள், ஜலவர்த்தனகாரிகள் ஆகியவைகளைத் தெரிந்து கொண்டோம். இனி அவைகளை யெந்தந்த காலங்களில் எவ்வெவ்விதம் உபயோகப்படுத்த வேண்டும் என்னும் விதிகளைத் தெரிந்து கொள்வோமாக.

வியாதிகளின் பொதுசிகிச்சை மூன்று விதப்படும். 1. சுகாதார நிலைக்கு முக்கியமான ஆறு காரியங்களைக் காத்தல், 2. அவுடதம் உபயோகித்தல், 3. அஸ்த சிகிச்சை என்பனவாம்.

சுகாதார நிலைக்கு முக்கியமான ஆறு காரியங்களாவன. 1. சுபாவமாகிய, காற்று, 2. ஆகாரம், பானம், 3. தேகப்பயிற்சி 4. மனப்பயிற்சி, மனஅமைதி, 5. நித்திரை, விழிப்பு, 6. மலஞ் சலம் முதலியவைகளைக் கழித்தல், காத்தல் ஆகியவைகளாம்.

குறிப்பு

ஆகாரமானது மேற்கண்ட ஆறு காரியங்களுள் ஒன்றாயிருந்தாலும் அதைப்பற்றித் தனியாகக் கொஞ்சம் தெரிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது ஏனெனில் சிலநேரம் அவுடதங்களை உபயோகிக்க ஏற்பட்டிருக்கிற விதிகளும் இதற்கும் ஏற்கும், மேலும் இது அளவில் பிரத்தியேக ஏற்பாடுடையதே. ஆகையால் சிலசமயம் ஆகாரத்தை முற்றிலும் நீக்கி இலங்கனம் செய்யும்படியாகிறது, சில சமயம் ஆகாரம் குறைந்த அளவாய்க் கொடுக்கப்படுகிறது. சில சமயம் வழமையைப்போல சமமான அளவாகக் கொடுக்கப்படுகிறது; சிலநேரம் அளவில் அதிகமாகக் கொடுக்க வேண்டியதிருக்கிறது.

இலங்கனமானது வியாதியஸ்தனது தேகசுபாவம் துர்நீர் ஆகியவைகளைப் பாகப்படுத்த வேண்டிய காலங்களில் அவசியம்.

ஆகாரம் குறைந்த அளவாகக் கொடுக்க வேண்டிய சமயமாவது, வியாதிஸ்தனின் பலங்குறைந்து போகாதபடியும், துர்நீர்கள் பாகப்படும்படியாகவும் ஆகிய இரண்டு காரியங்களும் வேண்டிய காலங்களிலாம். ஆகாரம் எவ்வளவு குறைத்துக் கொடுக்கிறோமோ அவ்வளவு அதிகமாய் துர்நீர்கள் பாகப்படுத்தப்படும். ஆகாரம் அதிகமானால் அதைச் சீரணப்படுத்த தேகத்தின் சக்தியெல்லாம் அதிக நோக்கமுடையதாகும், அப்பொழுது சத்துக்களைப் பாகப்படுத்துவதில்

குறைந்த நோக்கமுடையதாம், ஆகையால் இவ்விரண்டு காரியங்களிலும் முன்னர் எதைச் செய்ய வேண்டுமோ அதைத் தெரிந்து செய்ய வேண்டும். தேகபலம் அதிகங் குறைந்திருந்தால் முன்னர் அதை விருத்தி செய்ய முயலவேண்டும், வியாதி அதிக பலமாயிருந்தால் அதை நீக்க முன்னர் முயற்சி செய்ய வேண்டும். ஆகாரத்தைக் குறைத்தல் இரண்டு வகைப்படும், குறைந்த சத்துள்ள பதார்த்தத்தைக் குறைந்த அளவாக அல்லது அதிகமாக உபயோகிப்பது ஒன்று, அதிக சத்துள்ள பதார்த்தத்தைக் குறைந்த அளவாக உபயோகிப்பதொன்று, அதன் விவரமாவது, குறைந்த சத்துள்ள காய்கள் அளவில் அதிகமாயினும் தேகசம்பந்தமான சத்துக்களைக் குறைந்த அளவாகவே யுண்டாகும்; முட்டை முதலியவைகளைப் போன்ற அதிக சத்துக்கள் பதார்த்தங்கள் அளவில் குறையினும் தேகசம்பந்தமான சத்துக்கள் அதிகமாக உண்டாக்கும்.

நோயாளியின் பசிதீபனம் அதிகமாகவும், பாகப்படாத துர்நீர்கள் நரம்புகளில் நிறைந்திருந்து அவை பக்குவப்பட வேண்டியிருந்தால் அந்தத் தீபாக்கினியைச் சாந்தப்படுத்தவும் துர்மலங்கள் பக்குவப்படும் படியாகவும் இவ்விரண்டு காரியமும் ஏக காலத்தில் நிறைவேறும்படி குறைந்த சத்துள்ள வஸ்துக்களினால் இரைப்பையை நிறையச் செய்ய முயலுகிறோம். ஏனெனில் இந்த வஸ்துகள் அளவில் அதிகமாயினும் அவற்றாலுண்டாகும் சத்து குறைந்தபாகம் நரம்புகளிற் செல்லும். அதனால் துர்நீர்கள் பக்குவப்பட யாதொரு தடையுமிராது. இவ்விதம் நாம் விரும்பும் இரண்டு காரியங்களும் சித்தமாகும். இவையன்றி அதனால் அநேக குணங்களுமுண்டு என்பதே.

ஆகாரங்குறைந்த அளவாக உபயோகிக்க வேண்டிய சமயமாவது பிணியாளியின் தேகபலத்தை அதிகப்படுத்தவும், அவன் இரைப்பை அதிக அளவான ஆகாரத்தை ஜீரணப்படுத்த சக்தியற்றிருக்கும் காலத்திலும், அதிகசத்துள்ளதும் குறைந்த அளவுள்ளதுமான ஆகாரத்தை உபயோகிக்க வேண்டியது.

தீவிர ரோகங்களின் சிகிச்சையில் ஆகாரத்தை முற்றிலும் நீக்கி இல்ங்கனமாக வைக்கிறோம் அல்லது கொஞ்ச ஆகாரத்தைக் கொடுக்கிறோம். தீர்க்கரோகங்களின் சிகிச்சையில், தீவிரரோக சிகிச்சையில் உபயோகிப்பதைக் காட்டிலும் அதிக அளவான ஆகாரங்கொடுக்க நேரிடும், ஏனெனில் தீர்க்க ரோகங்களில் ரோகியின் தேகபலத்தை முன்னர் காப்பாற்ற முயலவேண்டும்.

மேல் சொன்னதின் கருத்தாவது மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்னே சுகாதாரத்திற்கு முக்கியமானதாகிய முன் சொல்லப்பட்ட ஆறு காரியங்களையும் முன்னர் கவனித்து, அவற்றுள் விகற்பப்பட்டிருப்பதை

சமப்படுத்தவாவது. அதிகப்படுத்தவாவது, அளவிலதிகமானதைக் குறைக்கவாவது முயல வேண்டியது. அவற்றினுடன் அதனிலும் அதிகமாய் ஆகார விஷயங்களைக் கவனித்து வர வேண்டியது. இவற்றின் பின்பு மருந்தை கவனிக்க வேண்டியது என்பதே.

நோயாளியின் ஆகாரம், பத்தியம் முதலியவைகளைப் பற்றித் தனியே ஓர் கிரந்தம் அவசியம் வேண்டியது, கடவுளினது கிருபையினால் தக்க சாவகாசம் நேரிடும்போது அவ்வித கிரந்தமும் எழுதப்படும்.

மருந்தை உபயோகிக்குமுன் முக்கியமாய் பின்வரும் பத்து விதிகளையும் கவனிக்க வேண்டியது.

1. சிகிச்சைசெய்ய உத்தேசிக்கும் வியாதியானது, சூடானதா, குளிர்ச்சியானதா, கொழுமையானதா, வரட்சியானதா வென்றும், சூடு, குளிர்ச்சி, கொழுமை, வரட்சி ஆகிய ஒன்று தனியே அதிகரித்துண்டானதா வென்றும், அவற்றுள் ஒவ்வொன்றின் தொந்தங்களினால் உண்டானதாவென்றும், துர்நீர்களினாலுண்டானதா, அல்லது சாதாரணமானதா வென்றும் நிதானிக்க வேண்டியது. அதாவது வாத,பித்த, சிலேத்துமமாகிய மூன்றின் மாறுபாட்டிலோ அல்லது அவற்றின் தொந்தங்களினால் உண்டானதாவென அறிய வேண்டியதே. அதற்கு எதிரிடையாய் சிகிச்சை செய்ய வேண்டியது அதாவது அதிகமாயின் சமப்படுத்தவும் குறைக்கவும், குறைவாயின் அதிகப்படுத்தவும் முயல வேண்டும்.

2. அது தேக சம்மந்தமானதா, ஆத்ம சம்பந்தமானதா பரம்பரையானதா, தொற்றுவியாதியா வென்றும் நிதானித்தறிய வேண்டியது; அப்படியறிந்த பின் அதற்குரிய காரணங்களை நீக்க முயற்சி செய்ய வேண்டியது.

3. நோயாளியின் பலம்- அவன் பலமுள்ளவனாயிருந்து தேகத்திலுள்ள துர்நீர்களை வெளிப்படுத்துவது அவசியமாயிருந்தால், விரேசனம், வமனம் முதலிய சுத்திக்கிரம அவுடத முறைகளினால் சுத்தி செய்ய முயலவேண்டும். அவன் துர்ப்பலப்பட்டிருந்தால், துர்நீர்களை வெளிப்படுத்த அவசியமாயினும் பேதி முதலியவைகள் கொடுக்கலாகா. இவ்விதமே பலமான அவுடதம், இலகுவான அவுடதம் ஆகியவைகளை உபயோகிக்கவும் தேக பலத்தை நிதானிக்க வேண்டியது. ஆனால் துர்ப்பலமானது சுபாவமா யுண்டானதா யிருக்க வேண்டும். அதாவது வியாதி தீர்க்கமாயிருத்தலினாலாவது, பட்டினியா யிருத்தலினாலாவது உண்டானதுதான் உண்மையான துர்ப்பலம் அப்படி இல்லாது வியாதியின் பலத்தினால் அல்லது துர்மல ஆதிக்கத்தினால் துர்ப்பல முண்டாயிருந்தால் அது உண்மையானதல்ல; ஏனெனில் துர்நீர்கள்

அதிகரித்து அதனால் துர்ப்பலம் நேரிட்டால் அக்காலங்களில் துர்நீர்கள் நீக்கித் தேகத்தைச் சுத்தி செய்வதினால் துர்ப்பலத்தின் காரணம் நீங்கி பலமுண்டாகவே யேதுவாகும்.

4. வியாதியுண்டான காரணத்திற்கும் தேக சுபாவத்திற்கு மிடையிலுள்ள பேதம், அதாவது வியாதியின் காரணமாகிய, சூடு, குளிர்ச்சி; கொழுமை, வரட்சி ஆகியவைகள் தேக சுபாவத்திற்கு எவ்வளவாய் வித்தியாசப்பட்டிருக்கிறதென நிதானிப்பது; அப்படி நிதானித்தால்தான் அவுடதங்களின் குணம், அளவு ஆகியவைகளுக்கேற்றபடி உபயோகிக்கலாம். எப்படியெனில் சூடான சுபாவமுடைய ஒருவனுக்குச் சூடான வியாதி சம்பவித்தால் இது உண்டான காரணம் சொற்பச் சூடாயிருக்கிறது; ஆனால் அதன் சிகிச்சைக்காக அதிக குளிர்ச்சியானதை அதிக அளவாய் உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது.

சூடான தேகிகளுக்குக் குளிர்ச்சியான வியாதியுண்டானால் இதன் காரணம் பலமான குளிர்ச்சியா யிருக்க வேண்டும். அப்பொழுதும் அதிக உஷ்ணமானதும் தீக்ஷணியமானதுமான அவுடதத்தை உபயோகிக்க வேண்டியிருக்கும்.

5. வயது:- நோயாளி குழந்தை யாயினும் விருத்தனாயிலும் கடின விரேசனங்கள் கொடுக்கலாகாது. மேலும் இவர்களுக்குச் சூடான வியாதிகண்டால் அதிக குளிர்ச்சியான அவுடதங்களையும் உபயோகிக்கலாகாது.

6. வழமை:- வாந்திக்கு, பேதிக்குச் சாப்பிடுகிற வழமையுண்டோவென்றும், அப்படிச் சாப்பிட்டால் அவற்றின் குணம் கோரினபடி காண்பிக்கப்படுகிறதுண்டோ வென்றுந் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானது. ஏனெனில் வழமையை யனுசரித்துச் சிகிச்சை செய்வதே மிகவும் மேலானதும் அபாய மில்லாததுமான மார்க்கம். இது அநுபவத்தினால் மாத்திரம் தெரிந்து கொள்ளக்கூடுமே யொழிய, வேறுவிதமாகத் தெரிந்து கொள்வது கடினம். ஆகையால் அநுபவத்தை யனுசரித்தே சிகிச்சை செய்ய கூடினவரையில் முயற்சி செய்ய வேண்டுமென அனேக பண்டிதர்கள் கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் விரேசன மருந்து கொடுக்க வேண்டுமானால் முன்னர் இலகு விரேசனகாரியைக் கொடுத்து தேகசுபாவத்தை நிதானித்துக் கொள்ள வேண்டும். அப்படி நிதானித்த பின்பே பேதி அவுடதங்கொடுக்க வேண்டும். இன்னும் அவர்களுடைய அநுபவங்களையும் முன்னர் தெரிந்து கொண்டால் மிகவும் நன்மையே. ஏனெனில்,

இலகு பேதியாகிய சீமையிலந்தை 175 கிராம், சீமை நறுவிலி 6 பழம், ரோஜாப்பூ 4 கிராம். இவற்றைக் கியாழஞ் செய்து சாப்பிட்டு சிலருக்கு 20 தடவை பேதியாகி யிருக்கின்றது.

இஸ்பகோல் 12 கிராம் கொடுத்து சிலருக்கு 20 தடவை பேதியாகி யிருக்கின்றன, மேலும் பலவித துர்நீர்களும் வெளிப்பட்டிருக்கின்றன, ஈதிப்படி யிருக்க,

நேர்வாளம், சீமைச்சிவதை ஆகிய இவற்றை அதன் பிரமாணத்திற்கு 4 பங்கு அதிகமாய்ச் சாப்பிட்ட சிலருக்கு ஒருதடவையும் பேதியானதில்லை.

சிலருக்கு சரக்கொன்றைப் புளி பலம் அரைபோதுமானதாகக் காணப்பட்டிருக்கிறது.

சூடான தேக சுபாவத்தை யுடைய ஒருவன் எந்நாளும் குளிர்ச்சியான அவுடதங்களை உபயோகித்து வந்தான். ஆனால் பருப்புக்கீரை வித்தை யரைத்துப் பிழிந்த ரசம் சாப்பிட்டவுடன் தேகாதியந்தமும் எறும்பு ஊறுகிறது போலும் மார்பு நெருக்கப்பட்டு சுவாசிக்கக்கஷ்டமும் ஆகி விடுகிறது. மேலும் வாய், நா, முதலியவைகள் விரைத்துப் போவதுமுண்டு; இத்துர்க்குணங்களெல்லாம் ஒருதடவை வாந்தியானபின்பே நிவர்த்தியாவது வழமையாயிருந்தது. பருப்புக் கீரைவிதை குளிர்ச்சியாயிருந்தாலும் இப்படியுண்டாவதற்குக் காரணம் விளங்காமல், இவன் சந்தேகத்தினாலேயே வேணுமென்றிப்படிச் செய்கிறானென்னும் கருத்தோடு, அவன் சாப்பிடப் போகிற தின்னதென தெரிந்துகொள்ளாதபடி அந்த விதையின் ரசம் கொடுக்கப்பட்ட போதும் முன் கண்ட துர்க்குணங்களே யிப்பொழுதும் காணப்பட்டன. அப்பொழுது இது பிறப்பிலிருந்து சுபாவத்தை அநுசரித்ததே யொழிய நடுவில் உண்டானதல்ல வென நிச்சயிக்கப்பட்டது.

ஒவ்வொரு சுவாபீக விகற்பத்தின் காரணம் மனிதர்களின் சிற்றறிவிற் கெட்டினதல்ல வென்பது நிச்சயம். இக்காரணத்தினாலேயே மனிதர்கள் ஒவ்வொருவரும் பூதகுணங்களுக்குள் ஒன்றின் சுபாவமுடையவர் களாகவே யிருக்கின்றார்கள். வழமையிலும், சூடான தேகமென்றும், குளிர்ச்சியான தேகமென்றும், கொழுமையான தேகமென்றும், வரட்சியான தேகமென்றும் அவரவர்கள் சுபாவத்தைச் சொல்லிக் கொள்ளுகின்றார்கள். ஆகையினால் "பழக்கம் பாதி சுபாவம்" எனப் பண்டிதர்கள் கண்டு நிச்சயித்திருக்கிறார்கள்.

7. தேகம் சுபாவம்:- சூடான தேகமா, குளிர்ச்சியான தேகமாவென அறிந்து கொள்ள வேண்டும் அல்லது பிணியாளி எந்த தேகத்திலுள்ளவனென்றும் அறிந்து அதற்குத்தக்க சிகிச்சை செய்ய

வேண்டும். அதிக உஷ்ணமான தேசத்தில் கடினபேதி, வாந்தி ஆகியவைகளைக் கொடுக்கலாகாது. அதிக குளிர்ச்சியான தேசங்களிலும் கடினபேதி உபயோகிக்கலாகாது. மேலும் ஒரு தேசத்தில் ஒரு அவுடதமே அதிக குணத்தைத் தருகிறது. அதுவே மற்றோர் தேசத்தில் சுவல்ப குணத்தைக் கொடுக்கிறது. அதுவே சில தேசங்களில் கொஞ்சமுங் குணத்தைத் தருகிறதேயில்லை ஒரு தேசத்தில் ஒன்று நஞ்சின் குணத்தைத் தருகிறது, அதுவே மற்றொரு தேசத்தில் சிறிதளவும் நஞ்சின் குணத்தைத் தருகிறதில்லை, மேற்கண்ட வஸ்துக்களை யெவ்வளவு சாக்கிரதையுடன் தண்ணீர், காற்று முதலியவைகளினின்றும் காப்பாற்றிக் கொண்டுபோகப்பட்டாலும் இந்த வித்தியாசங் காணப்படுகிறது. குணத்திலிருப்பது மாத்திரம் ஒர் அறிதல்ல; உருவம், வடிவம், வருணம் சுவை ஆகியவைகளிலும் மண்ணின் விகற்பம் காணப்படுகிறது; காரிகியூன் என்னும் சரக்கானது 13ம் தேசத்தில் குணத்தை தருகிறதுபோல மற்றெந்த தேசத்திலும் அவ்வித குணந்தருகிறதில்லை. பொற்றலைக் கையாந்தகரையானது பர்மா உள்தேசப் பிரகரணங்களில் கொடுக்கும் பலனை இவ்விந்தியாவில் கொடுக்கிறதில்லை. மலைப் பிரதேசங்களில் உண்டாகும் நத்தைச் சூரியென்னு மூலிகை உபயோகப்படுவது போல மற்றவிடங்களில் உண்டாகும் மூலிகை அவ்வளவு உபயோகப்படுவதில்லை.

இவ்விஷயங்களையும் சிகிச்சகர்கள் அறிய வேண்டியது அவசியம்.

8. காலம்:- கோடைகாலம், குளிர்காலம் முதலிய காலங்களின் வேறுபாடுகளையும் நிதானிக்க வேண்டியது.

9-10. வேளை, காற்றின் தன்மை ஆகியவைகளாம். விஷக்காற்றினால் பல வியாதி யுண்டாகுகையினாலும், சேராங்கொட்டை, நேர்வாளம் முதலிய காடுகளின் காற்றினால் அவற்றிற்கடுத்திருக்கிற ஊர்களில் பலவியாதி யுண்டாகுமாகையாலும், நல்ல பூஞ்சோலை, தண்ணீர், கடற்காற்று முதலியவைகளின் காற்றினால் பலவியாதி நீங்குமாகையாலும், காலை மாலை நேரங்களினும் சில விகற்பம் நேரிடுமாகையாலும் இவ்விஷயங்களையும் கவனிக்க வேண்டியது அவசியம்.

இத்தியாதி விஷயங்களையும் நமது புத்திக்கு எட்டின வரையில் நன்றாய் நிதானித்து சிகிச்சைக்கு ஆரம்பிக்க வேண்டும். முன் சொன்னபடி தனியாய்ச் சூடு, குளிர்ச்சி முதலியவைகள் அதிகரித்தா லதற்கேற்றபடி சிகிச்சை செய்ய வேண்டும். இதன் விபரம் முன்னர் கூறியிருப்பதைப் பார்வையிடவும்.

அப்படி நிதானித்த பின்னர் வெயில், காற்று, மழை, பனி முதலிய கால பேதம், ஆகார பேதம், தேச பேதம், அப்பியாசபேதம்

ஆகியவைகளினால் ரத்தம், சிலேத்துமம், பித்தம், வண்டல் ஆகிய நான்கும் சடுதியில் விகற்பப்பட நேரிடும், அவ்விகற்பத்தை நீக்கி தத்தம் சுபாவ நிலையில் வைப்பதே சாந்தப்படுத்துவதாம்.

இதற்காக மேற்கண்ட காரணங்களை முன்னர் நீக்க வேண்டியது. பின்பு சாந்த பதார்த்தங்களில் அவரவர்களுக்கு ஏற்றது அல்லது அவரவர்களுக்கிஷ்டமானது, அல்லது இலகுவாகக் கிடைக்கத்தக்கது ஆகிய இவற்றுள் ஒன்றை அல்லது பலவற்றை நிதானித்துத் தங்களுக்கிஷ்டமானபடி கியாழம், லேகியம், ஷர்பத்து முதலியவைகளைப் பாகக்கிரமமாய்ச் செய்து சாப்பிட்டு சுகமடையலாம் கியாழம் லேகியம் முதலிய செய்முறையை முதற் பாகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

ஆயினும் அடியேனுக்கும் மற்றும் சிறந்த பண்டிதர்களுக்கும் பலதடவை அநுபவசித்தமான பலமுறைகளையும் எழுதுவாம்.

சத்துக்களைச் சாந்தப்படுத்துவதுடன் உஷ்ண வியாதி முதலியவைகளை நீக்கும் முறைகள்

சந்தன ஷர்பத்து

செய்முறை- திறமான சந்தனத்தூள் 280 கிராம், சுத்த்சலம் படி இரண்டரை, இதனை ஒரு சுத்தியான பாத்திரத்திலூற்றி அதில் மேற்படி தூளையிட்டு ஓரிரவு ஊறவைத்துக் காலையில், அடுப்பேற்றி முக்கால் படியாகச் சுண்டின பின் இறுத்து வடிகட்டி, வேறு பாத்திரத்தில் ஊற்றி, சீனிசருக்கரை 525 கிராம் மேற்படி கியாழத்திலிட்டு அடுப்பேற்றி, சருக்கரை கரைந்தபின் மறுபடியும் வடிகட்டி, அந்தப் பாத்திரத்தை நன்றாகச் சுத்திசெய்து அதில்விட்டுக் காய்ச்சிப் பாகு பதமாகும் சமயத்தில் சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், லவங்கம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 1 கிராம் குங்குமப்பூ 2 கிராம், இதனைக் கொஞ்சம் சலம் வார்த்துக் கல்வத்தில் நன்றாயரைத்து முன் சூரணங்களுடன் கலந்து மேற்படி ஷர்பத்தில் சேர்த்திறக்கி நன்றாய் ஆறினபின் சீஷாவில் அடைத்துப் பத்திரப்படுத்த வேண்டியது.

மாத்திரை- வேளை ஒன்றுக்கு 12-18 கிராம். காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்- இரத்தக் கொதிப்பைத் தணித்து இரத்தத்தைச் சுத்தி செய்யும், தேகங் குளிர்ச்சியாம்.

சந்தன ஷர்பத்து (வேறு வகை)

சந்தனக் கட்டையை கடைச்சலில் பிடித்த தூள் அல்லது இழைத்து நன்றாயிடித்து தூள் 90 கிராம், பன்னீர் 450 கிராம் இட்டு இரண்டு இராப்பகல் ஊற வைத்து அதில் உள்ள பன்னீரைச் சேலையில் வடிகட்டிச் சுத்திசெய்து வைத்துக் கொள்ளவும். ஊறின சந்தனத்தில் சுத்தஜலம் முக்கால்படி விட்டு அடுப்பேற்றி மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இதை வடிகட்டித் திப்பியை நீக்கிவிட்டு முன் சுத்தி செய்து வைத்திருக்கிற பன்னீரோட சேர்த்து, சீனிசருக்கரை 450 கிராம் இதனுடன் சேர்த்துக் காய்ச்சி சருக்கரை கரைந்தபின் மறுபடியும் வடிகட்டி அடுப்பேற்றிப் பாகுபதத்தில் இறக்கி ஆறினபின் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை- 12-20 கிராம் ஆக இருவேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்- சூடதிகரித் துண்டான மார்பு துடித்தலை நீக்கும். இரைப்பை, ஈரல் ஆகியவைகளின் உஷ்ணத்தைச் சாந்தி செய்யும், தாகத்தை யடக்கும்; வயிறு கட்டும்.

சந்தன ஆமில ஷர்பத்து

சந்தனத்தூள் 115 கிராம், கொத்துமல்லி விதைத் தூள் 20 கிராம், இவ்விரண்டையுஞ் சேர்த்துப் பச்சைதிராக்ஷப் பழரசம் 350 கிராம், சீமைக்காடி 175 கிராம் சுத்த ஜலம் 840 கிராம் இம்மூன்றையும் ஒன்றாய் ஒரு பாத்திரத்தில் விட்டு அதில் முன்னிரண்டு வகைத்தூளையுமிட்டு ஓரிராப் பகல் ஊறவைத்து, பின்பு அடுப்பேற்றி மூன்றிலொரு பாகமாய்ச் சுண்ட வைத்து நன்றாய்ப் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கி விடவும். இந்தக் கிஷாயத்தில் சீனிசருக்கரை 840 கிராம் சேர்த்து அடுப்பேற்றி சருக்கரை கரைந்தபின் மறுபடியும் வடிகட்டி மஷ்டு நீக்க வேண்டியது. பின்பு அடுப்பேற்றி அதில் குங்குமப்பூ 2 கிராம் ஒரு சேலைத் துண்டில் முடிந்து அதிலிட்டு அதை பலதடவை கசக்கிப் பிழிந்து கொண்டிருக்க வேண்டும். அதிலுள்ள குங்குமப்பூ கரைந்த பின் அதை நீக்கி விடவேண்டும். காய்ச்சும்பொழுது நுரையெழும்பினால் அதை நீக்கி விடவும். பின்பு பாகுபதமான பின் கீழிறக்கி பச்சைக் கர்ப்பூரம் 3 கிராம். இதனைப் பொடித்துக் கொள்ளவும். மூங்கிலுப்புத்தூள், பன்னீர்விட்டிழைத்துலர்த்தின சந்தனத்தூள் வகை ஒன்றுக்கு 8 கிராம், இம்மூன்றையும் ஒன்றாய்க் கலந்து இளஞ்சூடாயிருக்கையில் சேர்த்துக் கலக்கி சீஷாவில் வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை- 20 கிராம் பருப்புக்கீரை ரசத்தில், அல்லது சீமையிலந்தைப் பழ ரசத்தில் சாப்பிடவும். இந்த அனுபான மில்லாமலும் சாப்பிடலாம்.

உபயோகம்- துர்ப்பலப்பட்ட இருதயத்தைப் பலப்படுத்தும்; சூட்டினாலுண்டான இருதய அதிர்ச்சியைச் சுகப்படுத்தும்; தேக ஆரோக்கிய முண்டாக்கும்.

சந்தன ஜவாரிஷ்

பன்னீர்விட்டிழைத் துலர்த்தின சந்தனத்தூள் 35 கிராம், பன்னீர்விட்டிழைத் துலர்த்தின செஞ்சந்தனத்தூள் 20 கிராம், பருப்புக்கீரை விதைச் சூரணம் இதை வறுத்திடித்து சூரணம் செய்து கொள்ளல் வேண்டும்; மூங்கிலுப்புச் சூரணம், பிஸ்தா மேல்தோல் இடித்த சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், ரூமிமஸ்தகி, குங்குமப்பூ வகை ஒன்றுக்கு 4 கிராம், துரிஞ்சி நார்த்தம் பழ ரசம் 175 கிராம், பன்னீர் 100 கிராம், சீனி சருக்கரை 700 கிராம்.

செய்முறை- பன்னீருடன் சருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சி, சருக்கரை கரைந்தபின் வஸ்திரகாயஞ் செய்து திப்பி நீக்கி, அடுப்பேற்றிப் பதமாகும் சமயத்தில் துரிஞ்சி நாரத்தம்பழ ரசஞ்சேர்த்து, சற்றுக் காய்ச்சித் தேன்பதத்தில் மேற்படி சூரணங்களெல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து குங்குமப்பூவை பன்னீர்விட்டு நன்றாயரைத்துச் சூரணத்தில் மிஸ்ரமித்துப் பாகில் கொட்டிக் கிளறி, மாஜூன் செய்து ஜாடியில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை- 8-20 கிராம் வரையில் சாப்பிடலாம்.

உபயோகம்- இருதயத்திற்கும் மூளைக்கும் பலத்தை கொடுக்கும், பித்தத்தினா லுண்டான பேதியைக் கட்டும்; இருதய அதிரலை நீக்கும்.

இந்த முறையில் துளையிடாத நல்லமுத்து, நற்பவளம் வகை ஒன்றுக்கு 8 கிராம், இவற்றைப் பன்னீர்விட்டு நன்றாய் அரைத்தும், கஸ்தூரி 2 கிராம் இதனைப் பொடித்தும் சேர்த்துச் செய்வதும் உண்டு. அப்படியானால் இதன் குணமும் அதிகமாகவே காணப்படுகிறது.

சந்தன இரசித ஆமில ஷர்பத்து

சந்தனத்தூள் 90 கிராம், இதனை 500 கிராம் சுத்த சலத்தில் இட்டு ஓரிராப்பகல் ஊறவைத்து, அடுப்பேற்றி மூன்றிலொரு பாகமாய்ச் சுண்ட வைத்திறக்கிப் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கி, தித்திப்பு மாதுளங்கனி ரசம் 100 கிராம், சீமையிலந்தைப் பழரசம் 100 கிராம்கூடச் சேர்த்து அதில் சீனிசருக்கரை 560 கிராம் சேர்த்துக் காய்ச்சிச் சுத்தி செய்து, மறுபடியும் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி அதில் வெள்ளி ரேக்கு 8 கிராம் சேர்த்து ஆறினபின் சீசாவில் பத்திரப்படுத்தவும். சலத்திற்குப் பதில் பன்னீர் சேர்த்துக் கொண்டால் மிக விசேஷமே.

மாத்திரை- 12-24 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இருதயத் துடிப்பை நீக்கும். இருதயத்தைப் பலப்படுத்தும். ஈரலின் சூட்டைத் தணிக்கும். எவ்வித தாகத்தையும் தணிக்கும், அதிதாகத்தைத் தணிப்பதில் இது சஞ்சீவிக் கொப்பானது.

மஹா சுகந்த ஹல்வா

பன்னீர் விட்டிழைத் துலர்த்திய சந்தனம் 90 கிராம், சீனிசருக்கரை 650 கிராம், அம்பர் 2 கிராம், கஸ்தூரி 1 கிராம், வெள்ளிரேக்கு, தங்கரேக்கு வகை ஒன்றுக்கு 2 கிராம், பன்னீர் 630 கிராம்.

செய்முறை- பன்னீரில் சருக்கரையைச் சேர்த்து அடுப்பேற்றி சருக்கரை கரைந்தபின் வடிகட்டி சுத்தி செய்து திப்பி நீக்கி அடுப்பேற்றி மெதுவாக எரிக்கவும், முட்டை வெண்கரு 1, அதற்கிரண்டு பங்கு பசும்பால், அவ்வளவு தண்ணீர் இம்மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கைவிரல்களினால் நன்றாய் மிஸ்ரமித்து அடிக்க நுரையெழும்பும், இந்தக் கலவையில் கொஞ்சம் எடுத்து அடுப்பின் மீதிருக்கிற பாகில் தெளிக்க அழுக்கு நுரைகளாக எழும்பும்; அதை நீக்கி விடவும், இப்படி சில பலதடவைகள் செய்ய நன்றாகச் சுத்தியாகும், பின்பு பாகுபதத்தில் கீழிறக்கி, அம்பர் கஸ்தூரி இவற்றில் கொஞ்சம் சீனி சருக்கரையைச் சேர்த்து அரைத்து மேற்படி பாகில் கொட்டி நன்றாய்க் கிளறி, பின் ரேக்குகளைப் போட்டு மேலுங் கீழுமாய் நன்றாய்ப் புரட்டி, பின்பு சந்தனச் சூரணத்தைச் சேர்த்துக் கிளறி பத்திரப்படுத்தவும்.

மாத்திரை- 10-20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இருதயத்திற்கும் தலை மூளைக்கும் பலத்தைக் கொடுக்கும் சூட்டினாலுண்டான இருதயத்துடிப்பைச் சவுக்கியப்படுத்தும்.

வேறு வகை

சந்தனத்தூள், கத்தரித்த கோராப்பட்டு வகை ஒன்றுக்கு 10 கிராம் காவுஸுபான் பூ, உலர்ந்த தாமரைப்பூ வகை ஒன்றுக்கு 12 கிராம், லவங்கப்பட்டை, குங்கும்பூ வகை ஒன்றுக்கு 2 கிராம். சீனி சருக்கரை 125 கிராம்.

செய்முறை- குங்குமப்பூவைக் கொஞ்சம் பால் வார்த்து அரைத்துக் கொள்ளவேண்டும். பட்டு தவிர மற்றவைகளை ஒன்றாய்ச் சேர்த்திடித்து வஸ்திரகாயஞ் செய்து, குங்குமப்பூ, பட்டு இவற்றையும் சூரணத்தோடு சேர்த்து சருக்கரையைப் பாகு செய்து பாகுபதத்தில் சூரணங் கொட்டி கிளறி பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - வேளை ஒன்றுக்கு 10 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- இருதயத்தின் துர்ப்பலத்தை நீக்கிப் பலப்படுத்தும்.

சந்தன பில்லை மாத்திரை

வெள்ளரிவிதைப் பருப்பு, *பார்தங்குவிதைச் சூரணம், பச்சை கருப்பூரம், வாதுமைப் பிசின் வகை ஒன்றுக்கு 20 கிராம், சந்தனத்தூள், செஞ்சந்தனத்தூள், அதிமதுரப்பால், பருப்புக்கீரை விதை சூரணம் வகை ஒன்றுக்கு எட்டு கிராம், ரோஜாப்பூ, மூங்கிலுப்பு இவற்றின் தனித்தனிச் சூரணம் வகை ஒன்றுக்கு பதினைந்து கிராம், சீனிசருக்கரை இருபது கிராம்

செய்முறை- எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து கல்வத்தில் அல்லது அம்மியில் வைத்து, பன்னீரும், மாதுளம் பழ ரசமும் சமமாய்க் கலந்து அதில் தேவையான இசுபகோல் விதையை ஊறப்போட்டு எடுத்த கோழையை விட்டு வெண்ணெய்போல் நன்றாயரைத்து, 4 கிராம் உள்ள பில்லைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டியது.

மாத்திரை- ஒன்று, ஒன்றரை சாப்பிடவும்.

உபயோகம்- விஷசுரத்தில் காணும் அதிதாகத்தையும், ஈரலின் உஷ்ணம், இரைப்பையின் உஷ்ணம் ஆகியவைகளையுந் தணிக்கும், நாவரட்சியை நீக்கும்; பித்தக்கொதிப்பையும் அடக்கும்.

சந்தன மாஜூன்

சுத்தஜலம் விட்டிழைத்த சந்தனம் 125 கிராம், புளியைக் கரைத்துத் தெளிய வைத்த சலம், மாதுளம் பழரசம், வகை ஒன்றுக்கு 230 கிராம், மூங்கிலுப்புச் சூரணம் 15 கிராம் அகர்கட்டைச் சூரணம் 4 கிராம், குங்குமப்பூ நான்கு கிராம்.

செய்முறை- முன்னர் சருக்கரையில் கொஞ்சம் சலம் வார்த்து அடுப்பேற்றி ஒரு கொதி வந்தபின்பு வடிகட்டி திப்பிநீக்கி காய்ச்சி, அரைபாகமா யிருக்கும் சமயத்தில் சந்தனத்தை அதில் கரைத்து துழாவவும். பாகுபதமாகும் சமயத்தில் புளிநீரையும், மாதுளம்பழ ரசத்தையும் விட்டு மாஜூன் பதத்தில் கீழிறக்கி, மற்ற சூரணங்களையும் சேர்த்து, குங்குமப்பூவைப் பன்னீர்விட்டு நன்றாய் அரைத்துச் சேர்த்து நன்றாய்ப் புரட்டிவைத்து ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் அல்லது வெள்ளிப் பாத்திரத்தில் பத்திரப் படுத்த வேண்டியது.

மாத்திரை - 8, 16 கிராம் வரையில் சாப்பிடலாம்.

உபயோகம் - சூட்டினாலுண்டான இருதயத் துடிப்பு, வாந்தி ஆகியவைகளைக் குணப்படுத்தும், இரைப்பையிலிருந்தெழும்பும்

---

*இது சிறிதாகவும் உருண்டையாகவுமிருக்கும், வருணம் கருஞ்சாயலான பசுமை, சுவை- கைப்பு, பதில் - சுக்கான் கீரை விதை.

கெட்ட ஆவிகளையும், இரைப்பையைச் சார்ந்த இடங்களிலிருந் தெழும்பும் கெட்ட ஆவிகளினாலுண்டாகும் பைத்திய ரோகத்தையும், நன்றாய்க் கண்டிக்கும். (அநுபவமுறை)

சந்தன மாத்திரை

சந்தனம், நிஷாஸ்தா, கோரைக்கிழங்கு, துரிஞ்சு நாரத்தந்தோல், எலுமிச்சந் துளசி, இவைகளைத் தனித்தனி யிடித்தசூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், மூங்கிலுப்புச் சூரணம், பச்சைக் கற்பூரம், *உஷ்நா சூரணம் வகை ஒன்றுக்கு 3 கிராம், கஸ்தூரி அரை கிராம்.

செய்முறை- எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கல்வத்திலிட்டு சலத்தில் கருவேலம் பிசினை ஊறவைத்து அந்த சலத்தைவிட்டு அரைத்து சுண்டைக்காய் பிரமாண மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

உபயோகம் - மாத்திரைகளை வாயிலிட்டு அடக்கி வைத்திருப்பதினால், வாய்நாற்றம், நாக்குத்தடிப்பு, வாய்ரணம், வாய்ப்புண், வாயில் உண்டாகும் எரிவந்தம் இவை தீரும்.

துவசந்தனாதி ஷர்பத்து

சந்தனம் 100 கிராம், செஞ்சந்தனம் 60 கிராம், சீனி சருக்கரை 525 கிராம், பன்னீர் 420 கிராம்.

செய்முறை - சந்தன மிரண்டையும் நன்றாயிடித்துக் தூள் செய்து பன்னீரிலிட்டு ஓரிராப்பகல் ஊறவைத்துக்காய்ச்சி, அரைபாகமாகச் சுண்டினபின்பு வடிகட்டி,திப்பிநீக்கி சருக்கரை சேர்த்து ஷர்பத்து காய்ச்சிக் கொள்ளவும்.

மாத்திரை - 50 கிராம் சாப்பிடாலாம்.

உபயோகம் - இருதய அதிரல், வண்டலினாலுண்டான மனக்கலக்கம் இவை தீரும்.

---

*இது சற்று அகலமுள்ளதாக மெல்லிய கயிறுகள் போன்ற வஸ்து, இது எல்லா மரங்களின் மேலுண்டாகும், இலைகளிரா; ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு மரங்களின் கிளைகளில் சுத்திக்கொண்டிருக்கும். இது உலர வைத்துக் கொண்டு வரப்படுகிறது. இரண்டு பக்கமும் வெண்மையாயிருப்பதுதான் உயர்ந்தது. கறுப்பாயிருப்பது உபயோகமற்றது சிறுகைப்புள்ளதும் சுகந்தவாசனை யுள்ளதுமா யிருக்கும், பதில் - சடாமஞ்சி.

சந்தனபலாதி ஷர்பத்து

சந்தனக் கட்டையை ராவின தூள் நூறு கிராம், பன்னீர் 700 கிராம்,தித்திப்பு மாதுளம்பழ ரசம்,புளிப்பு மாதுளம்பழ ரசம், புளியைக் கரைத்துத் தெளியவைத்த நீர், பேரிக்காய் ரசம், சீமையிலந்தைப்பழ ரசம் வகை ஒன்றுக்கு 230 கிராம், சீனிசருக்கரை 420 கிராம், பன்னீர் விட்டிழைத் துலர்த்தின சந்தனத்தூள், மூங்கிலுப்புச் சூரணம் வகை ஒன்றுக்கு 50 கிராம், துளையிடாத நல்லமுத்து, கர்ப்பூரமணி வகை ஒன்றுக்கு 8 கிராம், இவ்விரண்டையும் தனித்தனி பன்னீர்விட்டு மிக நுண்மையாயிருக்கும்படி அரைத்துக் கொள்ளவேண்டும். பச்சைக் கர்ப்பூரம் 4 கிராம் இதையும் பொடித்துக் கொள்ளவும்.

செய்முறை- முன்னுள்ள சந்தனத்தூளை ஒரு இரட்டுத் துணியில் பொட்லமாகக் கட்டி பன்னீரில் இட்டு ஓரிராப் பகல் ஊறவைத்து, வேறொரு கற்பாத்திரத்தில் அல்லது மண்பாத்திரத்தில் சுத்தஜலம் 700 கிராம் வார்த்து அதில் மேற்படி முட்டையை பன்னீருடன் வார்த்து அடுப்பேற்றி மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டித்திப்பி நீக்கி ஆறவைத்துப் பின்பு ரசங்களையெல்லாம் ஒன்றாய்விட்டு சருக்கரை சேர்த்து முறைப்படி பாகஞ்செய்து, பதத்தில் கீழிறக்கிச் சூரணங்களையும் மேற்கண்டபடி முறையே சேர்த்து நன்றாகப் புரட்டிப் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

மாத்திரை - 4 கிராம் வெள்ளரிவிதைப் பருப்பை அரைத்துப் பிழிந்து வடிகட்டின பாலில் சாப்பிடவும்.

உபயோகம் - இருதயம், ஈரல், இரைப்பை, ஆகியவைகளைப் பலப்படுத்தும், விஷசுரம், விடாசுரம் ஆகியவை தீரும். உஷ்ணத்தைத் தணிக்கும்.

சந்தன சொர்ணாதி ஷர்பத்து

பன்னீர் விட்டிழைத்த சந்தனம் 90 கிராம், காவு ஜுபான்பூ, ரோஜாப்பூ வகை ஒன்றுக்கு 17 கிராம், காவுஜுபான், கோராப்பட்டு, கோது கொட்டை நீக்கிய புளி வகை ஒன்றுக்கு 420 கிராம், ஆலுபுகாறாப் பழம் 140 கிராம், பன்னீர் 850 கிராம், காவுஸுபொன் தீநீர் 450 கிராம், சுத்தஜலம் படி ஒன்று, சீனிசருக்கரை 1400 கிராம், *தித்திப்பு மாதுளம்பழ ஷர்பத்து, சீமையிலந்தைப்பழ ஷர்பத்து வகை ஒன்றுக்கு 450 கிராம், அகர்கட்டைச் சூரணம், வெள்ளிரேக்கு, தங்கரேக்கு, கஸ்தூரி,

*இவை செய்யும் விபரம் முதல் பாகத்தில் ஷர்பத்து என்னும் பாகவிதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

துளையிடாத நல்லமுத்து, (முத்தைப் பன்னீர்விட்டு முன் சொல்லப்பட்ட முறைப்படி அரைத்துக் கொள்ளவேண்டியது) இவை வகை ஒன்றுக்கு 4 கிராம்.

செய்முறை - பன்னீர் முதலிய மூன்று திரவத்தையும் ஒன்றாய்ச் சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு, சந்தனமுதலான ஒன்பது வஸ்துக்களையும் அதிலிட்டு ஓரிராப்பகல் ஊறவைத்து, மறுநாள் அடுப்பேற்றி மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கி நன்றாய்ப் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கிவிட்டு, அதில் சீனிசருக்கரையையும் ஷர்பத்துகளை யும் சேர்த்துப் பாகப்படி செய்து கீழிறக்கி, சூரணங்களைச் சேர்த்துக்கிளறி பின்பு ரேக்குகளைச் சேர்த்துப் பின்பு கஸ்தூரியை நன்றாயரைத்துச் சேர்த்துப் பின்பு முத்தைச் சேர்த்து நன்றாய்க்கிளறிக் கொள்ள வேண்டியது, பீங்கான் அல்லது வெள்ளிப் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டியது.

மாத்திரை - 5,10 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - எவ்வித சூடான தேகிகளுக்கும் அதிக பலனைக் கொடுக்கும். இருதயத்திற்குப் பலத்தைக் கொடுக்கும். பைத்தியரோகம், வண்டலினா லுண்டான பைத்தியரோகம் இருதயத் துடிப்பு ஆகியவைகளை நீக்கும்.

சந்தனோபய சர்பத்து

இராவின சந்தனத்தூள் 350 கிராம், பன்னீர் 1650 கிராம் பன்னீர்விட்டிழைத் துலர்த்தின சந்தனம் 350 கிராம், சீனி, சருக்கரை 700 கிராம்.

செய்முறை - சந்தனத்தூளைப் பன்னீரிலிட்டு ஓரிராப் பகல் ஊறவைத்து மறுநாள் அடுப்பேற்றி அரைப்பாகமாகச் சுண்டினபின் இறக்கி வடிகட்டித் திப்பி நீக்கி இழைத்த சந்தனத்தைக் கரைத்து இதில் மூன்றிலொன்றாகச் சுண்டினபின் வடிகட்டித் திப்பிநீக்கி, சீனிசேர்த்து ஷர்பத்து பாகப்படி செய்து கொள்ளவும்.

மாத்திரை - 35, 70 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தைப் பலப்படுத்தும், ஈரலிலுள்ள சூட்டைத் தணித்து அதைப் பலப்படுத்தும், இருதயத் துடிப்பு முதலிய இருதயத்தைப் பற்றின வியாதிகளையும், இரத்த சம்பந்தமான எல்லா அவயவங்களின் வியாதிகளையும் சுவஸ்தப்படுத்தும், பேதி, பித்தவாந்தி, இரத்தபேதி ஆகியவைகளைக் கண்டிக்கும்.

சந்தன அத்தர்

இது மதராஸ் மருந்து கடைகளில் சாதாரணமாகக் கிடைக்கும். ஆகையால் நாம் செய்வதைவிட வாங்கிக் கொள்வதே மேன்மை.

உபயோகம்- மேல் பூசுவதினால் மூளை, இருதயம் முதலிய வைகளைப் பலப்படுத்தும்.

சந்தன திராவகம்

சந்தனத்தூள் 700 கிராம் இதனை 4 படி சுத்தஜலத்தில் ஓரிராப்பகல் ஊறவைத்து வாலையிலிட்டு இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம் - இருதயம், மூளை முதலியவைகளைப் பலப்படுத்தும், இதில் மிதக்கும் எண்ணெயைக் கையினால் அல்லது இறகினால் வழித்து எடுத்துக் கொள்ளவும். இப்படி யெடுக்கப்பட்ட எண்ணெயை அத்தர் எனச் சொல்லப்படுகிறது.

தாமரைப்பூ எண்ணெய்

முதற்பாகத்தில் பாகலக்ஷணம் என்னும் பாடத்தில் பூ எண்ணெய் என்னும் தலைப்பில் கண்டிருக்கிற பாகப்படி செய்து கொள்ளவும்.

இதை மேலுக்குபயோகிப்பதினால் சூட்டினாலுண்டான அதிக பலமான தலைநோவும் சவுக்கியப்படும். சூட்டைத் தணிக்கும், நித்திரையை யுண்டாக்கும்.

தாமரைப்பூ ஷர்பத்து

புதிதான தாமரைப்பூ இதழ்கள் 450 கிராம், சுத்தசலம் 450 கிராம், சீனிசருக்கரை 450 கிராம்.

முதற் பாகத்தில் சொல்லப்பட்ட ஷர்பத்து பாகவிதிப்படி செய்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - 35-50 சாப்பிடலாம்.

உபயோகம் - சூட்டினா லுண்டான ஒருத்தலைநோய்,பித்தவாந்தி, வரட்சியினாலுண்டான இருமல், விலாவீக்கம், நுரையீரலின் வீக்கம், மார்பு வரட்சி ஆகியவைகளைக் குணப்படுத்தும், மலம் இளகும்.

தாமரைப்பூ திராவகம்

புதிதான தாமரைப்பூ இதழ் 1050 கிராம், சுத்தசலம் படி மூன்றரை முதற்பாகத்திற் சொல்லப்பட்ட தீ நீர் பாகப் படி 2 சீஷா திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 70 - 100 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - சூட்டினா லுண்டான ஒருத்தலைநோய், பித்தசுரம், இரத்தக் கொதிப்பினா லுண்டான சுரம், விடா சுரம், வரட்சியான இருமல், விலாவின் வீக்கம், நுரையீரலின் வீக்கம், சூட்டினா லுண்டான இருதயத்துடிப்பு ஆகிய இவை தீரும்.

சரோருக ஷர்பத்து

புதிதான தாமரை யிதழ் 800 கிராம், உலர்ந்ததானால் 450 கிராம், சுத்தசலம் 840 கிராம், சீனிசருக்கரை 840 கிராம் முதற்பாகம் ஷர்பத்து முறையின்படி செய்யவும்.

மாத்திரை - 35-55 கிராம்.

உபயோகம் - தலைவலி, பித்த சுரம், விலாவீக்கம், நுரையீரல் வீக்கம் ஆகிய இவை தீரும்.

தாமரைத் தீநீர்

புதிதான தாமரையிதழ் 140 கிராம், உலர்ந்ததானால் 50 கிராம் காஹூவிதை, பருப்புக்கீரை விதை, வகை ஒன்றுக்கு 50 கிராம் சவ்வரிசி 100 கிராம் கொத்துமல்லி விதை 35 கிரரம் சந்தனம் 25 கிராம் இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து கொஞ்சம் சலம்விட்டு நான்குசாமம் ஊறவைத்துப்பின்பு வெள்ளாட்டின் பால் 300 கிராம். (முதற்பாகத்திற் சொல்லப்பட்டிருக்கிற தீநீர்) முறைப்படி வாலையிலிட்டு செய்து கொள்ளவும்.

மாத்திரை- 35-50 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - நாள்பட்ட உஷ்ணசுரம் அதாவது எந்நேரமுந் தேகம் சுவல்ப சூடாயிருத்தல், அல்லது சாப்பிட்டவுடன் சுவல்ப சுரங்காணல் இது தீரும்.

ரோஜாப்பூ மாத்திரை

பூவரும்பு, உள்விதை முதலியன நீக்கிச் சுத்தி செய்து உலர்ந்த இதழ்களை எடுத்துத் தூள் செய்து வஸ்திரகாயம் செய்த சூரணம், கொத்துமல்லி விதைச் சூரணம், மூங்கிலுப்புச் சூரணம் வகை ஒன்றுக்கு 25 கிராம்வரையிலும், பச்சைக் கர்ப்பூரம் 30 கிராம், 65 முதல் 260 கிராம் எடை வரையிலும், சுத்தி செய்த மாமூதா குன்றிமணியெடை 3 முதல் 6 வரையிலும், கதீரா 25 கிராம்.

செய்முறை - இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து சுத்தசலம் விட்டு நன்றாயரைத்து மாத்திரையாக செய்து கொள்ளவும்.

மாத்திரை - மேற்கண்ட பாகம் அவ்வளவும் ஒருமுறை சாப்பிட வேண்டிய அளவு.

உபயோகம் -உஷ்ணத்தைத் தணிக்கும், பேதியாம்.

ரோஜாப்பூ எண்ணெய்

புதிதான ரோஜாப்பூ இதழ்கள் (இவை நல்ல வாசனை யுள்ளவைகளாக இருக்க வேண்டும்) கழுவின எள்ளெண்ணெய் (இதுவும்புதிதாயிருக்க வேண்டும் பழமையானால் அதிக குணத்தைத் தராது) இந்த எண்ணெய்க்குப் பதிலாய் ஜயித்தூன் (Olive)எண்ணெய் சேர்த்தால் மிக சிரேஷ்டமாயிருக்கும்.

செய்முறை - முதற்பாகம் (பூ எண்ணெய் என்னும் பாடத்தைப் பார்வையிடவும்) அவ்விடம் சொன்னபடி தடவைக்குத் தடவை பூவின் எடையைக் குறைக்காமல் முதல் தடவை எடுத்த யெடையே மறுதடவையும் சேர்த்துக் கொள்ளவும்.

உபயோகம் - கலப்பு சக்தியுடையது, துவர்ப்புப் பொருள். சூடான துர்நீர்கள், குளிர்ச்சியான துர்நீர்கள் ஆகிய இரண்டையும் அதிக பலத்தோடு படிப்படியாய் வெளிப்படுத்தித் தேகத்தைச் சுத்திசெய்ய மிகவும் ஏற்றது. இரைப்பையின் வெப்பத்தை நீக்கும். அதிக பித்தத்தினா லுண்டான பேதியைக் கட்டும் பிசுபிசுப்பான நீர்களை இலகுவாய் வெளிப்படுத்தும். அவயவங்களுக்குப் பலத்தைக் கொடுக்கும். கெட்டுப்போன நீர்களை வெளிப்படுத்தும். இதை மேற்பூச குழிகள் விழுந்திருக்கிற புண்களின் நீரை வரட்டி,சீழ் முதலியவைகளை நீக்கி தசையை வளர்த்துக் குழியை மூடி ரணத்தை ஆற்றும். நோவு, வலி இவற்றை நீக்குவதில் மிகவும் மேன்மையானது அதை ஆசனத்தில் வர்த்திசெய்ய சிறுகுடலின் இரணத்தை யாற்றும், இதை வாய் கொப்பளிக்க பல்நோய், ஈறுநோய் போம், இதை மூக்கில் நசியம்செய்ய மூளையைப் பலப்படுத்தும்; இதைக் காடியுடன் சேர்த்துப் பூசுவதினா லும் அதிக குணமுண்டு. இந்த எண்ணெயுடன் சமனெடை பன்னீர்சேர்த்து, நெருப்பிலிட்டு ஆவி பிடிக்க தலைநோய், மூளை தாபனத்தாலுண்டான சுரம், அதனாலுண்டான வீக்கங்கள் தீரும். வயிற்றுக்கடுப்பு சிறுகுடல் வலி இவை தீரும். காதில் துளித் துளியாய்விட காதுநோயை நீக்கும். சரக்குகளை இந்த எண்ணெயில் புரட்டி யுபயோகிப்பதால் நல்ல குணத்தைத் தரும். அதிவெயர்வைரோகம், கட்டி, பிளவை, இவற்றினாலுண்டாகும் எரிவந்தம் ஆகிய இவ்வியாதிகளுக்கும் மேல்பூசலாம். சுண்ணாம்பு, அரிதாரம், முதலிய நஞ்சுண்டோர் இதைச் சாப்பிட விஷமுறிந்து போம். இதன் பிரயோசனம் பலவுள.

வேறு வகை

பூவின் இதழ்களை யிடித்துப் பிழிந்து வடிகட்டின ரசம்; நல்லெண்ணெய் ஆகிய இரண்டையும் சேர்த்து மெதுவாக எரித்து நீர்சுண்டினபின் இறக்கிக் கொண்டு உபயோகிக்கவும். (முதற்பாகம் இன்னோர் வகை பூ எண்ணெய் என்பதைப் பார்வையிடவும்)

மகா கஸ்தூரி சுகந்த எண்ணெய்

வேண்டிய எடை ரோஜாப்பூ இதழ்கள் இவற்றை மெல்லிய வஸ்திரத்தினால் ஈரமில்லாமல் நன்றாகத் துடைத்து,ஒன்று அல்லது இரண்டு, மூன்று பாத்திரங்களில் அரைவாசி யிருக்கும்படி யிதழ்களைப் போட்டு, பாத்திரங்களில் முக்கால்வாசி யிருக்கும்படி பன்னீர்விட்டுத் துணியினால் அல்லது மிருதுவான வஸ்துக்களினால் அந்தப் பாத்திரங்களின் வாய் பந்தனஞ் செய்து, பெருங்குழி வெட்டி கீழே குதிரை லத்திபோட்டு அதன்மேல் பாத்திரங்களை வைத்து அதன்மேலும் குதிரை லத்தி போட்டு நன்றாய்மூடி விடவேண்டும். இருபது நாள் அல்லது முப்பதுநாள் சென்ற பின்பு எடுத்துப் பிழிந்து திப்பியை நீக்கிவிட்டு, அந்த ரசத்தை வாலையிலிட்டு, திராவகம் இறக்கி, அந்தத் திராவகத்தின்மேல் மிதக்கும் எண்ணெயை எடுத்துசீஷாவில் வைத்துக் கொள்ளவும்.

உபயோகம் - இதை முகர்ந்தாலும் உள்ளுக்குச் சாப்பிட்டாலும் மூளையைப் பலப்படுத்தி பஞ்சேந்திரியங்களின் சக்திகளையும், உள் அவயவங்களின் சக்தியையும் விருத்தி செய்வதில் மிகவும் பிரசித்த குணமுடையது. கஸ்தூரியின் வாசனையைப் பார்க்கிலும் இதில் அதிக வாசனை யுண்டு.

குறிப்பு

இந்தப் பாகம் செய்வதற்கு அதிகசெலவு பிடிக்கும், அரசர்களும், கனவான்களும் செய்யக்கூடும். இதனால் அடையும் பிரயோசனமும் அதிகமே, ஏழைகள் இதற்குப்பதிலாய் ரோஜாப்பூ அத்தரை உபயோகிக்கலாம்.

ரோஜாப்பூ பானம்

* சுத்திசெய்த ரோஜாப்பூ இதழ் 560 கிராம், இதனை நான்கு படி சுத்த நீரில் இட்டு ஒருபடி சலம் சுண்டினபின் ஆறவிட்டுக் கீழிறக்கி,

---

*இலை, அரும்பு,காம்பு முதலியவைகளை நீக்கிவிடுவதே ரோஜாப்பூ சுத்தியாகும்.

நன்றாகப் பிசைந்து பிழிந்து திப்பி நீக்கி மறுபடியும் முன்போல சுத்திசெய்த ரோஜாப்பூ இதழ்560 கிராம் இட்டு அடுப்பேற்றி சுண்டினபின், மறுபடியும் முன் மாதிரி செய்து ஒருபடி சுண்டினபின் மறுபடியும் முன்மாதிரி செய்து அரைபடியாக இறுத்து அந்தக் கிஷாய நிறையே சருக்கரை சேர்த்து அடுப்பேற்றி, காஹூவிதை, மூங்கிலுப்பு, ரூமிமஸ்தகி, அனிசூன் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம் இவற்றை நன்றாயிடித்து ஒரு கித்தான் துணியில் முடிந்து அதில் போட்டுக் காய்ச்சும்போது அந்த முடிச்சை அடிக்கடி அமுத்திப் பிழிந்துவந்து எல்லாமாயினபின் நன்றாகப் பிழிந்து முடிச்சை நீக்கிவிட்டு, பாகப்படி ஷர்பத்து செய்து கொள்ளவும்.

மாத்திரை - 18 அல்லது 35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - எரிந்துபோன சத்துக்களையும், சொரி சிரங்கு, படை இவ்வியாதிகளையும் நீக்கும். முக்கியம்எரிந்துபோன வண்டலை வெளிப்படுத்தித் தேகத்தைச்சுத்தி செய்யும், வரட்சி, மலச்சிக்கல் கட்டுகள் இவைகளை நீக்கும். நீர்க்குண்டிக்காயின் துர்ப்பலத்தை நீக்கும். இவை மழை காலத்தில் உபயோகிக்கலாகாது.

குறிப்பு

மலம், இரத்தம் முதலியவைகளைக் கட்டும்படி துவர்ப்புப் பொருளாக செய்துகொள்ளவேண்டுமானால் பூவை ஓர் தடவை கியாழம் செய்துகொண்டால் போதுமானது. மடக்க வேண்டியதில்லை. பலமானபேதி அவுடதமாகச் செய்து கொள்ள வேண்டுமானால், ஆறு அல்லது ஏழு தடவை மடக்கி மடக்கிக் கிஷாயஞ் செய்துகொள்ள வேண்டும். ஆனால் ஷேகுர்ரயீஸ் பண்டிதர் சொல்லுகிறார். ரோஜாப்பூவை அஞ்சுதடவைக் கதிகம் மடக்குவதினால் அதன் குணங்கெட்டுப்போகும். ஆகையால் அஞ்சுதடவைக்கதிகம் மடக்கலாகா தென்பதே. ஆனால் மேற்படி பண்டிதர்க்குப் பின்னுள்ள அனேகர் அப்படிச் செய்வதில் குணங்கெடவில்லை யெனத் தங்களுடைய அநுபவத்தில் வந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், அது வாஸ்தவமே.

வேறு

சுத்திசெய்து ரோஜாப்பூ இதழ் 490 கிராம், இதனை ஒன்னே முக்கால் படி சுத்தநீரில் இட்டு முக்கால்படிசுண்டினபின் இறக்கிப் பிழிந்து திப்பி நீக்கி மறுபடியும் முன்னெடைப்பூ சேர்த்து முக்கால்படி சுண்டவைக்கவும். இவ்விதம் எத்தனை தடவை செய்கிறோமோ அவ்வளவும் நலந்தான். பின்பு பூவின் பாதி எடை, தரஞ்சபீன் அல்லது சுத்திசெய்த தேன்சேர்த்துப் பாகப்படி செய்து கொள்ளவும்.

மாத்திரை - 35-70 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இரைப்பையிலுள்ள எல்லாவிதத் துர்மலங்களையும் நீக்கிச் சுத்திசெய்யும். நன்றாகப் பேதியாம்.

பித்தி நிவாரணி

மேற் கண்ட முறைப்படி செய்து தரஞ்சபீனுக்கு அல்லது தேனிற்கு பதிலாகச் சீனிசர்க்கரை சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளவும்.

மாத்திரை - 35, 50 கிராம் காடிஷர்பத்தில் சாப்பிடவும்.

உபயோகம்- பித்தத்தைப் பேதியால் வெளிப்படுத்தும், தொந்த சுரங்களைக் கண்டிக்கும்.

சிலேத்தும பித்த நிவாரணி

சுத்திசெய்த ரோஜாப்பூ இதழ் 840 கிராம், இதனை நாலரை படி சுத்தநீரில் ஊறவைத்து, கிஷாயஞ் செய்து 1 படி சலமாக சுண்டினபின். மறுபடியும் பூ இதழ் 840 கிராம் போட்டு முன்போலச் செய்து கொள்ளவும். இப்படி ஐந்து தடவை செய்து சுத்திசெய்த தேன் 840 கிராம் சேர்த்துக் காய்ச்சி பதத்தில் இறக்கிப் பக்குவஞ் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - கபத்தையும் பித்தத்தையும் பேதியால் நன்றாக வெளிப்படுத்தும்.

வேறு

சுத்திசெய்து உலர்ந்த ரோஜாப்பூ இதழ் 450 கிராம், ஒன்னேகால்படி சுத்தநீரிலிட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி, பிசைந்து பிழிந்து சக்கை நீக்கி வடிகட்டி, பூரா சருக்கரை 450 கிராம், சேர்த்து ஷர்பத்து பதமாகச் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 140 கிராம், அவ்வெடை சலத்திற் கலந்து சாப்பிடலாம், அவ்வளவு காடி ஷர்பத்திலும் கலந்து சாப்பிடலாம். இதைச் சாப்பிட்டபின் ஒருதடவை தண்ணீர் குடித்தால் ஒருதடவை பேதியாகும். இப்படி எத்தனை தடவை தண்ணீர் குடிக்கிறோமோ அத்தனை தடவை பேதியாகும்.

இருதயரோக நிவாரணி

சுத்திசெய்ததும் புதிதுமான ரோஜாப்பூ இதழ் 560 கிராம், உலர்ந்ததானால் 350 கிராம், சுத்தசலம் படி 4-ல் இட்டு, அரைப்பாகம்

சுண்டினபின் பிசைந்து பிழிந்து திப்பி நீக்கி வடித்து முன்போல் மறுபடியும் பூவைப் போட்டுக் காய்ச்சி ஒரு படியாகச் சுண்ட வைத்திறக்கி அதில் பூரா சருக்கரை 1050 கிராம் பாகமாய்ச் செய்துக் கொள்ளவும்.

மாத்திரை - 35, 70 கிராம் தண்ணீரிற் கலந்து சாப்பிடவும்.

உபயோகம் - பித்தத்தையும், வண்டலையும், பேதியால் வெளிப்படுத்தும். பித்தாதிக்கத்தினாலும் எரிந்து போன வண்டலினாலும் உண்டான இருதயரோகத்தை நீக்கும். வாதபித்த தொந்தத்தினா லுண்டான இருதயரோகத்தையும், இரைப்பையிலிருந் தெழும்பும் கெட்ட ஆவிகளினா லுண்டாகும் தலைநோய் முதலியவைகளையும் நீக்கும்.

பானு வீரேசனி

சூரத்து நில ஆவாரை (குச்சி முதலியவை நீக்கி) 105 கிராம், சுத்தசலம் படி அரையிலிட்டு மெதுவாகத் தீயெரித்து மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சினபின் இறக்கிப் பிசைந்து வடித்து திப்பிநீக்கி (இருதய ரோக நிவாரணி) பாகப்படி செய்த ஷர்பத்து 700 கிராம் இரண்டையும் சேர்த்துப் பதமாகச் செய்துகொள்ளவும். பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டியது.

மாத்திரை - 35,70 கிராம், குளிர்ந்த சலத்தில் கலக்கிச் சாப்பிடவும். தாகம் எடுக்கும்போதெல்லாம் குளிர்ந்த சலம் சாப்பிடவேண்டும். அப்படிச் சாப்பிட்டால் நன்றாய் பேதியாகும்.

உபயோகம் - அதி பித்தரோகம், வண்டலைப்பற்றின ரோகம், பித்த சிலேட்டுமரோகம் முதலிய ரோகந் தீரும்.

இதைச் சாப்பிட்டபின் வேறுபேதி அவுடதம் அவசியமிராது.

மஹாபானு வீரேசனி

சுத்திசெய்த சிவதைவேர் 350 கிராம், சீமை அத்திப்பழம், சோம்பு, ரேவல்சீனி வகை ஒன்றுக்கு எழுநாறு கிராம், பன்னீர் படி எட்டு, சுத்திசெய்த ரோஜாப்பூ ரசம் படி முக்கால் சீனிசருக்கரை 1400 கிராம்.

செய்முறை - முதல் நான்கு சரக்குகளையும் நைய நறுக்கிப் பன்னீரிலிட்டு ஓரிரவுப் பகல் ஊறவைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக யெரித்து, மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து பிழிந்து திப்பிநீக்கி வடித்து அதில் ரோஜாப்பூ ரசம், சீனி ஆகிய இரண்டையும் முன் கியாழத்தில் சேர்த்துப் பாகமாய்ச் செய்து கொள்ளவும்.

மாத்திரை- 45, 70 கிராம், பசுவெண்ணெயுடன் சாப்பிடலாம்.

உபயோகம் - குண்டிக்காய், நீர்ப்பை, ஈரல், கருப்பை ஆகிய இவற்றின் வலியை நீக்கும். சீதபேதி, மண்ணீரலின் வீக்கம், கால் நரம்பின் நோவு, இரத்தங் கக்கல், கஷ்டசுவாசம், விக்கல், இருதயத்துடிப்பு, சிறுகுடலில் ரணம், முறைக்காய்ச்சல், இடுப்புவலி, மிருகங்களின் கடிவிஷம் முதலியவைகள் தீரும்.

சயா ரோஜா சர்பத்து

நன்றாகப் பருத்ததும், சொத்தை முதலியவைகளில்லாததுமான மஞ்சள் கடுக்காய் தோல் இருபது கிராம், பன்னீர் 350 கிராம் இட்டு ஒரு பீங்கான் கிளாஸில் அல்லது பாத்திரத்தில் விட்டு தூசி, மண்முதலியன விழாதிருக்கும்படி சுத்தமான வஸ்திரத்தைப் பாத்திரத்தின் வாய்க்குக் கட்டி மூன்று நாள் வெய்யிலில் வைக்க வேண்டியது. நாலாம் நாள் துணியை அவிழ்த்து நன்றாகப் பிசைந்து பிழிந்து திப்பி நீக்கி வடிகட்டி முன்பாத்திரத்தையே நன்றாகச் சுத்தி செய்து அதில் முன்வஸ்திகாயஞ்செய்த ஊறல்கியாழத்தை விட்டு, அதில் முன்போல இருபது கிராம், கடுக்காய்த்தோலைப்போட்டு வாய்க்குச் சீலைகட்டி மூன்று நாள் வெயிலில் வைத்து, முன்போல வடிகட்டிக் கொள்ளவும் பின்பும், கடுக்காய்த்தோல் இருபது கிராம் அந்த ஊறல் கியாழத்தில் போட்டு மூன்று நாள் வெயிலில் வைத்து முன்போற் செய்து கொள்ளவும்.

இவ்விதம் அஞ்சு தடவை அஞ்சு இருபது கிராம், கடுக்காய்த் தோலை மடக்கி மடக்கிப்போட்ட ஊறல் கியாழத்தை வடித்து சுத்திசெய்ததும் முன்சொல்லப்பட்ட மஹாபானு விரேசனி அல்லது பானுவிரேசனி பாகப்படி செய்த ஷர்பத்து 525 கிராம் ஆகிய இவ்விரண்டையும்ஒன்றாகச் சேர்த்து அடுப்பேற்றி சிறுதீயாக எரித்துப் பாகப்படி செய்து கொள்ளவும். சீஷாவில் அல்லது பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டியது.

மாத்திரை - 45 கிராம் முதல் 70 கிராம் வரையில் குளிர்ந்த நீரில் சாப்பிடலாம்.

உபயோகம் - பித்தரோகங்கள், பித்தசுரங்கள், பித்தவாய்வு சம்பந்தமான கீல்வாய்வுகள் முதலியவைகளை குணப்படுத்துவதில் மிக அநுபவப்பட்டது. இதினுடைய பெருமையைப் பண்டிதர்கள் பரமரகசியமாக வைத்து வந்தார்கள். இதற்குச் சமானமானதொன்றுமில்லை. இது சஞ்சீவிக் கொப்பானது. இதைப்பற்றி அதிகம் எழுத வேண்டுவதில்லை; அவரவர்களே அநுபவத்தில் கண்டு கொள்வார்கள்; இதன் குணம் அதிகஞ் சிறந்ததாகையால்,பண்டிதர்கள் பிறர்க்குச் சொல்லுகிறதில்லை.

வாயுசங்காரன்

புதிதானதும் சுத்திசெய்ததுமான ரோஜாப்பூ இதழ் 2 கிலோ இதிற்பாதியை ஐந்து படி சுத்தசலத்திலிட்டு அடுப்பேற்றி அரை பாகம் சுண்டினபின்பு மீதி அரைவாசிப்பூவையும், அதிலிட்டுக் காய்ச்சி ஒருபடியாழமா யிறக்கிப் பிசைந்து வடித்துத் திப்பிநீக்கி சீனிசருக்கரை 1400 கிராம், சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும். சருக்கரைக்குப் பதிலாகத் தரஞ்சபீன் வீசை ஒண்ணரை சேர்த்தால் ஆச்சரியப்படும் படியான குணத்தைத் தரும்.

மாத்திரை - 45, 90 கிராம் வரையில் சாப்பிடலாம்.

உபயோகம்-வாயுவைப் பற்றிய சகலரோகங்களையுங்கண்டிக்கும்.

ஸ்நான பில்லை

உலர்ந்து போவாததும் ஈரமற்றதுமான புதியரோஜாப்பூ இதழ் 175 கிராம், சடாமாஞ்சி 35 கிராம், வெள்ளைப்போளம் முப்பது கிராம், இவற்றை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்து மெதுவாக நன்றாய் அரைத்து, பன்னீர்விட்டுக் கலந்து பெரியபில்லைகளாகச் செய்துலர்த்தி ஸ்நானம் செய்யும்போது தேய்த்து ஸ்நானம் செய்யவும்.

இதனுடன் கோஷ்டம், நிலக்கடம்பு, சந்தனத்தூள், அகர்கட்டை வகை ஒன்றுக்குப் பத்து கிராம் சேர்த்துக் கொள்வது நல்லமுறை.

உபயோகம் - புருஷர்கள், ஸ்திரீகள் இவர்களின் வெயர்வை நாற்றம், கற்றாழை நாற்றம் ஆகியவை நீங்கும்.

அஷ்டிபூத ரோஜா பில்லை

சுத்திசெய்த உலர்ந்த ரோஜாப்பூ இதழ்கள் இருபது கிராம், மேல்தோல் நீக்கின அதிமதுரம், சடாமாஞ்சில் வகை ஒன்றுக்கு 35 கிராம், இம்மூன்றையு மிடித்து வஸ்திரகாயஞ் செய்து பன்னீர்விட்டு அரைத்துப் பில்லைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டியது.

மாத்திரை - வேளை ஒன்றுக்கு 8 கிராம் காடி ஷர்பத்தில் அநுபானித்துச் சாப்பிடவும்.

உபயோகம் - வயிற்றுநோவுதீரும் வயிற்றிலுள்ள துர் மலங்களை வெளிப்படுத்திச் சுத்திசெய்யும். சிலேத்துமசுரம், பழையசுரம் ஆகியவை தீரும்

இது சற்று சூடான அவுடதம். இதனுடன் சுத்திசெய்த மாமூதா முப்பது கிராம், சேர்த்தால் பித்தபேதி அவுடதமாம்.

அஷ்டிகீர ரோஜா பில்லை

சுத்திசெய்த உலர்த்த ரோஜாப்பூ இதழ் 35 கிராம், அதிமதுரப்பால் எட்டு கிராம், சடாமாஞ்சி, ரூமிமஸ்தகி, வகை ஒன்றுக்கு நான்கு கிராம், இசுபகோல் விதை தேவையானது.

செய்முறை-எல்லாவற்றையுந் தூள் செய்து கோழையை விட்டு அரைத்து, பில்லையாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை- 8, 10 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்-இலகுபேதியாம், மலச்சிக்கல், வரட்சி இவைகளைக் கண்டிக்கும்.

கொங்காரா ரோஜா பில்லை

சுத்திசெய்த உலர்ந்த ரோஜாப்பூ இதழ் சூரணம், நிஷாஸ்தா, அதிமதுரப்பால், குங்குமப்பூ, கருவேலம் பிசின் வகை ஒன்றுக்குச் சமனெடை, இவற்றின் மொத்த நிறையளவு சீனிசருக்கரை.

செய்முறை-எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்து பில்லைசெய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும், அவசியமானால் கொஞ்சம் பன்னீர் விட்டரைத்துக் கொள்ளவும்.

மாத்திரை-6-10 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்-மூன்றா முறைக் காய்ச்சல், அதிதாகம் இவை தீரும், மலமிளகும்.

வேறு

சுத்திசெய்த ரோஜாப்பூ இதழ் 35 கிராம், சடாமாஞ்சில் 4 கிராம், அதிமதுரப்பால் வெள்ளரிவிதைப் பருப்பு, கெக்கரிவிதைப் பருப்பு, காசினி விதை, வகை ஒன்றுக்கு 8 கிராம், பன்னீர் தேவையானது.

செய்முறை-சூரணஞ் செய்ய வேண்டியவைகளைச் சூரணஞ் செய்து எல்லாம் ஒன்றாகச் சேர்த்து அரைத்துப் பாகப்படி பில்லைகள் செய்து கொள்ளவும்.

மாத்திரை-6, 12 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்-இரைப்பை வலி, ஈரல் வலி, பித்த சிலேற்பன தொந்த சுரம் முதலியன தீரும்.

பேதிபில்லை

சுத்திசெய்த உலர்த்த ரோஜாப்பூ இதழ் சூரணம் 35 கிராம், வெள்ளரி விதைப் பருப்பு, கெக்கரி விதைப் பருப்பு, வகை ஒன்றுக்கு 20 கிராம்,

மாமுதா (சுத்தி செய்தது) 3 கிராம் பச்சைக் கற்பூரம் ஒன்றரை கிராம், பருப்புக்கீரை ரசம் தேவையானது.

செய்முறை-எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து மேற்படி யிலையின் ரசம் தேவையானது விட்டு அரைத்துப் பில்லைசெய்து கொள்ளவும்.

மாத்திரை- 4-5 கிராம், திராக்ஷப்பழங்களை ரசம் பிழிந்து வெய்யிலில் வைத்து மூன்றிலொரு பாகமாகச் சுண்டின ஷர்பத்தில் அனுபானித்துச் சாப்பிடவேண்டும், பன்னீரிலும் சாப்பிடலாம்.

உபயோகம்-பித்த நீர்களைப் பேதியால் வெளிப்படுத்தும். சூடு செய்யாது, உஷ்ண ரோகங்களுக்கேற்றது.

பில்லை மாத்திரை

மூங்கிலுப்பு 35 கிராம், சுத்தி செய்த உலர்ந்த ரோஜாப்பூ இதழ்ச் சூரணம் 12 கிராம், காஹூ விதைச் சூரணம், வெள்ளரிவிதை, கெக்கரி விதை, சுரை விதை பரங்கி (இனிப்பு பூசினி) விதை இவைகளின் பருப்பு வகை ஒன்றுக்கு 8 கிராம், அதிமதுரப்பால் 4 கிராம், நிஷாஸ்தா, பாதம் பிசின் வகை ஒன்றுக்கு 2 கிராம், தரஞ்சபீன் 20 கிராம், இதை இசுபகோல் கோழையில் கலக்கி வடித்துக் கொள்ள வேண்டும்.

செய்முறை-எல்லாம் ஒன்றாகச் சேர்த்தரைத்து மேல் வடிகட்டின கோழையை விட்டு பில்லைகள் செய்து கொள்ளவும்.

மாத்திரை- 6-10 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்-இரைப்பைவலி, ஈரல்வலி, பித்த சிலேற்பன சுரம், பழைய சுரம் ஆகியவைபோம்.

மதுபாக குல்கந்து

புதிதான ரோஜாப்பூ இதழ் சுத்திசெய்தது 1 கிலோ, காய்ச்சி நுரைநீக்கிச் சுத்தி செய்து தேன் 2 கிலோ பஸ்பாயிஜ் சூரணம் 45 கிராம் பாலில் அவித்துச் சுத்திசெய்த சீமைச்சிவதைச் சூரணம் 60 கிராம், மேல்தோல் நீக்கி சுத்தி செய்திடித்த சுக்குச் சூரணம் 5 கிராம்.

செய்முறை-தேனில் இதழ்களைப் போட்டுப்பிசைந்து மற்றச் சூரணங்களையும் சேர்த்துப் பிசைந்து நாற்பது நாள் வெயிலில் வைத்து பின்பு உபயோகப்படுத்தவும்.

மாத்திரை-35, 50 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்-கப சம்பந்தமான வியாதிகள், வண்டல் சம்பந்தமான வியாதிகள் ஆகிய இவற்றைக் கண்டிக்கும்; எரிந்துபோன கபம், எரிந்து போன வண்டல் ஆகியவைகளும் குணப்படும்.

வேறு

மேற்கண்ட விதமாகச் செய்யக்கூடாத காலங்களில் கடையில் விற்கும் குல்கந்து 35 கிராம், பஸ்பாயிஜ் சூரணம் 2 கிராம், சுத்திசெய்த சீமைச்சிவதைச் சூரணம் நான்கு குன்றி மணியெடை, சுக்குத்தூள், குன்றிமணியெடை 3 எல்லாம் ஒன்றாகச் சேர்த்துச் சாப்பிட முன்கண்ட ரோகங்கள் குணப்படும்.

ரோஜா மாஜூன்

உலர்ந்த ரோஜாப்பூ இதழ், கோரைக்கிழங்கு, லவங்கம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம் சாதிப்பத்திரி, துரிஞ்சு நாரத்தந்தோல், எலுமிச்சந்துளசி, பெருலவங்கப்பட்டை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம் கஸ்தூரி குன்றிமணியெடை 4; கஸ்தூரியைக் கொஞ்சம் பன்னீர் விட்டரைத்துச் சூரணத்திற் கலந்து கொள்ளவும். திரக்ஷாசாராயம் அல்லது சீனி 1 கிலோ.

செய்முறை-திராக்ஷாபானத்தை அடுப்பேற்றி நன்றாகக் கொதித்தபின் சூரணங்களைக் கொட்டிக்கிளறி கொள்ளவும், அல்லது சருக்கரையைப் பாகுசெய்து அதிற்போட்டுக் கிளறிக் கொள்ளவும்.

மாத்திரை - 6, 8 கிராம், சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தைப் பலப்படுத்தும் பைத்திய ரோகந்தீரும்.

சோம்புத் தயிலம்

சோம்பை வாலையிலிட்டு எரித்து இறக்கப்படும் இத்தயிலமானது மெத்த மஞ்சள் நிறமுள்ளது. மெத்த வாசனையாயும் இனிப்பாயுமிருக்கும்.

இது சாதாரணமான மதராஸ் மருந்துக்கடைகளிலெல்லாம் அகப்படும். வெளியில் முக்கியமாக இங்கிலீஷ் மருந்துக்கடைகளில் அகப்படலாம். ஆகையால் நாம் செய்வதை விட கலப்பற்றதாகக் கடைகளில் வாங்கிக் கொள்வதே சுலப மார்க்கம்.

மாத்திரை - 5. முதல் 15 துளி வரையில் கொஞ்சம் வெந்நீரில் அல்லது சருக்கரையில் கலந்து கொடுக்கலாம்.

உபயோகம்: வயிற்றில் சூட்டை பிறப்பித்து தீபனத்தை அதிகப்படுத்தும் வாயு சேர்ந்து உண்டாகிற வயிற்று வலிக்கு கொடுக்கலாம்.

சோம்புத் தீநீர்

செய்முறை- 350 கிராம் சோம்பை யிடித்து மூணேகால் படி சலத்தில் ஒரு நாள் ஊறவைத்து, வாலையிலிட்டு எரித்து ஒன்றரை படிக்கு இறக்கிக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 20, 50 கிராம் வரையில் கொடுக்கலாம்.

கலவை சோம்புத் தீநீர்

சோம்பு 840 கிராம் அகர்கட்டைத் தூள் 35 கிராம், இடித்த ஓமம், உலர்ந்த பொதினா, வகை ஒன்றுக்கு 60 கிராம் சுத்த சலம் படி 4.

செய்முறை - சரக்குகளையெல்லாம் சலத்திற் போட்டு ஒருநாள் ஊறவைத்து, மறுநாள் வாலையிலிட்டு எரித்து, இரண்டரைபடி அல்லது 3 படிக்கு இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 20 கிராம், முதல் 45 கிராம் வரையில் சாப்பிடலாம்.

உபயோகம் - வயிற்றுப்பிசத்தையும் வயிற்றிலுள்ள வாயுவையும் கண்டிக்கும்; பசிதீபன முண்டாகும்.

சோம்புக் கியாழம்

இடித்த சோம்பு 20 கிராம் காவுஜுபான் பூ 20 கிராம், இரண்டையும் இரண்டு ஆழாக்கு சலத்திற் போட்டு மண் பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி எரித்து நாலிலொன்றாகச் சுண்டவைத்திறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - மேற்கண்ட எடை ஒருவேளை சாப்பிட வேண்டிய அளவு; இவ்விதம் காலை, மாலை யிரண்டு வேளையும் சாப்பிடலாம். அப்போதைக் கப்போது செய்து கொள்ள வேண்டும்.

உபயோகம் - மயக்கம், மார்பு அதிரல் இவை தீரும்.

வேறு

இடித்த சோம்பு 20 கிராம், மயிர்ச்சிக்கி 12 கிராம், உலர்ந்த சீமை அத்திப்பழம், 12 கிராம், சலம் ஆழாக்கு 2.

செய்முறை - மேற்கண்ட பாகப்படியே செய்து கொள்ளவும்.

மாத்திரை - மேற்கண்ட அளவே.

உபயோகம் - இருமல், கஷ்டசுவாசம், நெஞ்சிற்கபம் அடைத்துக் கொண்டிருத்தல் இவை தீரும்.

குறிப்பு

சோம்பைத் தனியாயாவது அல்லது தக்கசரக்குகளோடாவது பின் வரும் வியாதிகளுக்குக் கொடுத்து அவை சவுக்கியப்பட்டிருக்கின்றன; அவையாவன, அசுத்தமான வாயுக்கள், பக்கநோவு, குடல்முறுக் கோடுண்டாகும் வயிற்று நோவு, இரைப்பையிலுள்ள கபம் ஆகியவைகளாம்.

மற்ற அவுடதங்களுக்கு இவை அநுபானமாக உபயோகித்தால் அந்த அவுடதங்களின் குணத்தை அதிகப்படுத்தும்.

இதன் சூரணம் 4 கிராம்; தேனில் அல்லது காடி ஷர்பத்தில் சாப்பிட நாட்பட்ட சுரம்போம்.

சுரமிருக்கையில் இதை ஊறல் கியாழமாகச் செய்து சாப்பிட அரோசிகம், இரைப்பை எரிவந்தம் இவை தீரும்.

இதன் சூரணம் 4 கிராம் குல்கந்து 20 கிராம் கலந்து சாப்பிட, வயிற்றிலுள்ள வாயுகளைக் கண்டித்து இரைப்பையைப் பலப்படுத்தும். அல்லது அரைப்பலம் சோம்பை அம்மியில் அரைத்து ரசம் பிழிந்து சற்றுச்சுடவைத்து வடித்து அதில் குல்கந்தைக் கரைத்து சாப்பிடலாம்.

அதை அரைத்து வயிற்றுப்பிசம், வாயுவினாலுண்டான நோவு ஆகியவைகளுக்குப் பற்றிடலாம்.

குழந்தைகளின் வயிற்றுப்பிசம், வயிற்றுநோவு ஆகியவைகளுக்குச் சோம்பின் சூரணத்தை வயிற்றின்மேல் மெதுவாகத் தேய்க்க குணப்படும்.

இலந்தை பானம்

உன்னாப் அல்லது *சீமை யிலந்தைப்பழம் 230 கிராம் சுத்த சலம் கால்படி. சீனிசருக்கரை 450 கிராம்.

செய்முறை - கொட்டையை நீக்கிப் பழங்களை சலத்திலிட்டு அடுப்பேற்றி மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின்னிறக்கிக் கையினால் நன்றாகப் பிசைந்து வடித்துத் திப்பிநீக்கின கியாழத்தில் சீனிசேர்த்து ஷர்பத்து பாகப்படிசெய்து பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - 30, 55 கிராம் வரையில் சாப்பிடலாம்.

உபயோகம் - இரத்தக்கொதிப்பு, மார்புநோவு, வரட்சியான இருமல், கொப்புளங்கள் ஆகியவைகள் தீரும்.

வேறு

உன்னாப் அல்லது சீமை இலந்தைப்பழம் 170 கிராம் கொத்துமல்லிவிதை, உடைக்காத மசூரிப்பயறு, காசினிவிதை வகை

*இங்கு சீமையிலந்தை என்பது இங்கிலீஷ் Apple அன்று, ஆனால் இதற்கு Thorn Apple என்றும் அரபியில் உன்னாப் என்றும் பேர்; இது உலர்த்தியே கொண்டுவரப்படுகிறது. இங்கிலீஷில்; Apple பார்ஸிசியில் சேப் என்பது முக்கியமாகப் பச்சையாக உபயோகப்படுத்தப்படுகிறது.

ஒன்றுக்கு 35 கிராம், மழை சலம் இரண்டரை படி. மழைசலம் இல்லாவிட்டால் சுத்தசலம் சேர்த்துக் கொள்ளவும்.

செய்முறை - எல்லா சரக்குகளையும் சலத்திலிட்டு அடுப்பேற்றி மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி பிசைந்து வடித்துத் திப்பிநீக்கின கியாழம் எடை சீனிசர்க்கரை சேர்த்துக் காய்ச்சி நுரை நீக்கிப் பாகுபதத்தில் இறக்கிப் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - 35, 55 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இரத்தத்கொதிப்பை சாந்தி செய்யும்; மார்பின் வியாதிகளையும் தேகத்தின் கீழ்ப்பாகங்களிலுள்ள வியாதிகளையும் சாந்தப்படுத்தும்; தாகத்தை யடக்கும்.

குறிப்பு

முக்கியமாக இது குழந்தைகளுக் கேற்றது; இதன் சக்தி இரண்டு மாதம் வரையி லிருக்கும். அதற்கதிகமானால் உபயோகப்படாது.

அதி யிரத்தரோக நிவாரணி

பருமனானதும் விதை நீக்கினதுமான உன்னாப் 40, விதை நீக்கின ஆலுபுகாறா 20, குச்சி முதலியவைகள் நீக்கிச் சுத்திசெய்த *ஜரிஷ்க, சுத்திசெய்த **ஸ்ெம்மாக் வகை ஒன்றுக்கும் 70 கிராம், உலர்ந்த ரோஜாப்பூ இதழ் 20 கிராம், சீனிசருக்கரை 450 கிராம் பன்னீர் 120 கிராம்.

---

*இதற்கு இங்கிலீஷில் Berries என்றுபேர். இது ஓர் வகைப்பழம்; இது கடலைப் பிரமாணம் சிறியதும் செஞ்சாயலான கருமை வருணமு முள்ளது. சுவை- புளிப்புடன் கூடிய சிறு தித்திப்பு. பதில் - அதனெடைக்குச் சமன் ரோஜாப்பூவும் அதனெடையில் மூன்றிலிரண்டு பாகம் சந்தனமுமாம்.

**ஸெம்மாக் அல்லது ஸமாக் என்பது ஓர்வகைப்பழம்; இது மசூரிப்பயறிலும் சிறியது, ஆனால் அதனிலும் சற்று அகலமானது; சங்கோசன காரிகளில் மிகவும் உபயோகமானவைகளில் இதுவுமொன்று; இதன்மேல் மெல்லியதோல் மூடிக்கொண்டிருக்கும். அதற்குத் தமிழில் ஸமாக் புறணி அல்லது ஸமாக் உமியென்றும், பார்சியில் கர்தே ஸமாக் என்றும்பேர். இதுதான் முக்கியமாக அவுடதங்களில் உபயோகிக்கப்படுகிறது. சுவை- புளிப்பு, வருணம்- செஞ்சாயலானது. பதில்- சீமைக்காடி.

செய்முறை - சீனி, பன்னீர் ஆகிய இரண்டுந் தவிர மற்றவைகளை யெல்லாம் ஒன்றரைபடி சலத்திலிட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்து, இறக்கி வடித்துத் திப்பிநீக்கின கியாழத்தில் சீனியையும், பன்னீரையும் சேர்த்துப் பாகப்படிக் காய்ச்சிக் கொள்ளவும்.

மாத்திரை - 35- 45 கிராம், தக்க அனுபானங்களுடன் சாப்பிடவும்.

உபயோகம் - இரத்தாதிக்கத்தா லுண்டாகும் சகல வியாதிகளையும் குணப்படுத்தும்

வேறு

விதை நீக்கின உன்னாப் 230 கிராம், பனப்ஷாபூ, தாமரைப்பூ, காவுஜபொன்பூ, ரோஜாப்பூ இதழ், இவை வகை ஒன்றுக்கு 115 கிராம், பன்னீர் இரண்டேமுக்கால் கிலோ, *பேதமிஷ்க் திராவகம் 3 கிலோ, சுத்திசெய்த தரஞ்சபீன், சீனிசருக்கரை, மேனா இவை வகை ஒன்றுக்கு 450 கிராம்.

செய்முறை - முன் ஐந்து சரக்குகளையும் தனித்தனி யிரண்டு பாகமாய்ச் செய்து ஒரு பங்கை எடுத்து வைத்துக் கொண்டு, மேற்படி பன்னீர், திராவகம் ஆகிய இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து மற்றொரு பங்கை அதில் இட்டுக்காய்ச்சி அரைபாகமாய்ச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து திப்பி நீக்கிவிட்டு முன்னெடுத்து வைத்திருக்கிற பாகத்தையும் இந்தக் கியாழத்திலிட்டு ஒரு வீசையாகச் சுண்ட வைத்துக் கீழிறக்கிப் பிசைந்து திப்பிநீக்கி வடித்து, தரஞ்சபீன் முதலிய மூன்றையும், சேர்த்துக் காய்ச்சி ஒரு கொதிவந்தபின் வடித்து அந்தப் பாத்திரத்தைச் சுத்தி செய்து மறுபடியும் அதில்விட்டு ஷர்பத்து பாகமாய்ச்செய்து பத்திரப்படுத்தவும்.

---

*பேதமிஷ்க் என்பதற்குத் தமிழில் கஸ்தூரிப் பிரம்பு, என்றுபேர். இது சாதாரணப் பிரம்பிலும் பருமனில் சிறியது. இதன் இலை சாதாரணப் பிரம்பினிலையிலும் சிறியதும், அதிக வெண்மையானதும், அதிக அகலமானதும், குட்டையானதுமாம். இதில் முதலில் பூவுண்டாகிப் பின்பு இல்லைகளுண்டாகும். பூவானது பூனையின் கையைப்போன்று, அதன்மேல் நீண்ட கிளைகளுண்டு. பூவின் வருணம்- செஞ்சாயலான மஞ்சள் வருணம்; மணம்- அதிக சுகந்தவாசனை' மஞ்சள் வருணம் அதிகமாகவாக, சுகந்த வாசனையும் அதிகமாகும். இதன் திராவகமானது, பன்னீர் முதலிய திராவகத்தைப் பார்க்கிலும் பலமானது இதன் திராவகத்திற்குப் பதில் தாமரைப்பூ திராவகம் அல்லது சாதாரணப் பிரம்புப்பூத் திராவகமாம்.

மாத்திரை - இரத்தாதிக்கத்தா லுண்டான சகலவியாதியும் முக்கியமாக இருதயத்துடிப்பு இரத்தாதிகத்தா லுண்டான இருதய நோய்கள், இரத்தாதிக்க இருதய சம்பந்தமான தலைநோய், மயக்கம் கிறுகிறுப்பு ஆகியவை தீரும்.

இலந்தைப்பாகு

உன்னாப் 50, விதை நீக்கிடவும். *கித்மிவிதை 35 கிராம், கதிரா 25 கிராம், விதை நீக்கிச் சுத்திசெய்த திராக்ஷப்பழம் 90 கிராம். பனப்ஷா, மேல்தோல் நீக்கி நையநறுக்கின அதிமதுரம், இவை வகை ஒன்றுக்கு 45 கிராம், இசுபகோல்விதை 70 கிராம், சுத்திசெய்த சீனி சருக்கரை 450 கிராம்.

செய்முறை - சருக்கரை தவிர மற்ற சரக்குகளையெல்லாம் 2¼ படி சுத்தசலத்திலிட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டவைத்து இறக்கிப் பிசைந்து வடித்துத் திப்பிநீக்கி, சருக்கரையைச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை - 12, 24 கிராம், பாதம் நெய் 12 கிராம் சேர்த்து மிஸ்ரமித்துச் சாப்பிடலாம்.

உபயோகம் - தொண்டையின் விக்கம், சுரம், தாகம் ஆகியவைகளைக் குணப்படுத்தும்; நாவரட்சியை நீக்கும், வரட்சியான இருமல், மார்பின் வியாதிகள் ஆகியவைகளை நீக்கும்.

இலந்தைக் கியாழம்

உன்னாப், சீமை நறுவிலி வகை ஒன்றுக்கு 55 கிராம், கித்மிவிதை **குப்பாஜிவிதை வகை ஒன்றுக்கு 8 கிராம் வரையில், பனப்ஷாபூ 12 கிராம் மேல்தோல் நீக்கி நைய நறுக்கின அதிமதுரம் ஐந்து கிராம், புதிதான தாமரைப்பூ மூன்று முதல் ஐந்து வரையில், மயிர்ச்சிக்கி 8 கிராம், இரண்டொன்றாக இடித்த சோம்பு 8 கிராம், பேதானா 2 முதல் 4 கிராம்.

---

*இது மதராஸ் மருந்துக் கடைகளில் சீமைத்துத்தி விதையென வழங்கப்படுகின்றது. இது தட்டையாகவும். துவரம் பருப்பைப் பார்க்கிலும் சற்று அகலமாகவுமிருக்கும்; வருணம் - கறுப்பு. சுவை- இலைப்பு. பதில் -தாமரைப்பூ அல்லது குப்பாஜிவிதை.

**இதைச் சிறு சீமைத்துத்தி யென்று சொல்வாருமுண்டு. இது சக்கரமாகவும் நடுவில் பள்ளமுள்ளதாகவும் உருவத்தில் மருதோன்றி விதையைப்போலு மிருக்கும். வருணம்- வெண்மை; சிலசாதி கருஞ்சாயலாக விருப்பது முண்டு. பதில்- சீமை துத்திவிதை; அசமதா ஓமம்; கடுக்காய் முரப்பா.

செய்முறை - அரைப்படி சலத்தில் மேற்கண்ட சரக்குகளை யெல்லாம் போட்டு ஓரிரவு ஊறவைத்துக் காலையில் மெதுவாக எரித்து மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி வடித்து இளஞ்சூடா யிருக்கையில் அவ்வளவையும் சாப்பிடலாம், பிரியமுள்ளவர்கள் இதில் கொஞ்சம் சருக்கரையைச் சேர்த்துக் கொள்ளலாம்.

உபயோகம் - உறைந்து போனதும் சூடானதுமான அசுத்த சத்துக்கள், சூடதிகரித்துண்டான வரட்டிருமல் ஆகியவை தீரும்.

இலந்தை யூறல் கியாழம்

உன்னாப் 20, திராக்ஷப்பழம் 30, சீமை நறுவிலி 30, பனப்ஷா 30 கிராம், சுத்தசலம் 13 படி மேற்படி சரக்குகளையெல்லாம் இட்டு ஓரிரவு ஊற வைத்துக் காலையிற் பிசைந்து வடிகட்டி, அதில் மேனா 70 கிராம், தரஞ்சபீன் 70 கிராம் இவ்விரண்டையும் கரைத்து வடிகட்டி அதில் பன்னீர் கொஞ்சமும், பேதமிஷ் திராவகம் கொஞ்சமும் சேர்த்துச் சாப்பிடவும்.

உபயோகம் - பித்தத்தைப் பேதியால் வெளிப்படுத்தும் தலைநோய் சுவஸ்தப்படும்.

காஹூ எண்ணெய்

காஹூ இலையையிடித்துப் பிழிந்தரசம் 2 பங்கு, கழுவின எள்ளெண்ணெய் ஒரு பங்கு, இரண்டையும் சேர்த்துக் காய்ச்சி நீர் சுண்டினபின் வடிகட்டி யெடுத்துக்கொள்ள வேண்டியது.

உபயோகம் - இதைத் தலை நெற்றி முதலிய இடங்களில் பூசி வருவதினால் சூட்டினாலுண்டான தலைநோய்போம். சூடதிகரித்து நித்திரை யில்லாதிருந்தால் சூட்டைத்தணித்து நித்திரையை யுண்டாக்கும்.

நல்லெண்ணெய்க்குப் பதிலாக பாதம் நெய்யைச் சேர்த்துக் கொண்டால் விசேஷ குணத்தைக் கொடுக்கும்.

காசினிக்கீரை ரசம் சாப்பிடும் விபரம்

புதிதான காசினிக்கீரையிலுள்ள மண் முதலியவைகளை உதறியே நீக்க வேண்டியது, சலத்திலிட்டுக் கழுவலாகாது, கழுவினால் அதன் சக்தி குறைந்து பிரயோசனப்படாது. இவ்விதம் சுத்திசெய்த கீரையை இடித்து ரசம் பிழிந்து ஓரிரவு வைத்திருந்து காலையில் வடித்துக் கொள்ள வேண்டியது.

மாத்திரை - 175 முதல் 210 கிராம் வரையில் தேகத்திற்கேற்ற அளவு தரஞ்சபீன் அல்லது மேனா சேர்த்துச் சாப்பிடவும்.

உபயோகம் - ஈரலின் நரம்புகளின் கட்டுவரட்சி ஆகியவைகளை நீக்கும்; இரத்தாதிக்கத்தாலும், பித்தாதிக் கத்தாலும் உண்டான சுரங்களைக் கண்டிக்கும்.

காசினித் தெளிநீர்

முன் சொன்னபடி சுத்திசெய்த புதிதான இலையையிடித்துப் பிழிந்தரசம் தேவையானதைச் சுத்தமான வெள்ளிப்பாத்திரத்தில், அல்லது ஈயம்பூசின தாம்பிரப் பாத்திரத்திலூற்றி நெருப்புத் தணலில் வைத்து பல கொதிகள் வந்து பசுமைநிறம் மாறின பின்னிறக்கி வடித்து உபயோகிக்க வேண்டியது.

காசினிரசத்தை அதிகமான நெருப்பில் காய்ச்சலாகாது. காய்ச்சினால் அதன்பலங் குறைந்துபோம்.

காசினித் தீநீர்

முன் சொன்னபடி சுத்திசெய்த காசினியிலை தேவையானதை வாலையிலிட்டு சுத்தசலம் இலையின் எடைக்கு மூன்று பங்குவிட்டு வழக்கம் போல் இறக்கிக் கொள்ளவும்.

உலர்ந்த இலையானால் இலையின் எடை ஒன்றுக்கு அஞ்சு எடை சுத்தசலம் விட்டு ஓரிரவு, ஒரு பகல் ஊறவைத்து வாலையில் திராவகம் இறக்கிக் கொள்ளவும். ஆனால் பச்சையிலையின் திராவகத்தைப் பார்க்கிலும் உலர்ந்த இலைத் திராவகம் குறைவான சக்தியுடையது.

காசினிவித்தையும் உலர்ந்த இலையின் திராவகத்தைப் போலவே இறக்கிக்கொள்ள வேண்டும்.

ஹிந்துபா சூரணம்

காசினிவேர்த்தோல், சோம்பு வேர்த்தோல் இவை வகை ஒன்றுக்கு 28 கிராம், காசினி விதை, சோம்பு இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், *குஷ்ஒஸ் விதை 12 கிராம், ரூமி மஸ்தகி, சடாமாஞ்சி இவை வகை ஒன்றுக்கு 5 கிராம், தாமரைப்பூ மேல்தோல் நீக்கிச் சுத்தி செய்த அதிமதுரம், பனப்ஷாபூ இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், குச்சி, காம்பு முதலியன நீக்கிச் சுத்திசெய்த சூரத்து நிலஆவாரை 28 கிராம்.

---

*இது முள்ளங்கி விதையைப் பார்க்கிலும் சிறியதாக விருக்கும். சுவை- இலைப்பு, வருணம்- செஞ்சாயல். பதில் துளசி விதையும் மாசிப்பத்திரியும்.

செய்முறை - எல்லாவற்றையும் ஒன்றாயிடித்து வஸ்திரகாயஞ் செய்து சீனிசருக்கரை சமனெடை சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை - குழந்தைகளுக்கு ஐந்து கிராமில் பருப்புக் கீரை விதையை அரைத்துப் பிழிந்து இரசத்தில் அல்லது காவுஜூபான் தீ நீரில் அல்லது தாமரைத் தீநீரில் கொடுக்க வேண்டும். பெரியவர்களுக்கு மேற்கண்ட அநுபானத்தில் 20 கிராம் கொடுக்கலாம்.

உபயோகம் - வாயுகளைக் கண்டிக்கும், மலமிளக்கும், மலக்கட்டு, வரட்சி ஆகியவைகளை நீக்கும்.

ஹிந்துபா மாஜூன்

காசினிவிதை, கிச்சிலிக்கிழங்கு, மேல்தோல் நீக்கின சுக்கு, அரிசித்திப்பிலி, துரிஞ்சுநாரத்தந்தோல், உஸ்துகுதூஸ், மிளகு, ஜன்னியானா (Gentian root) ஏலக்காய்,ரேவல்சீனி, சதாபிலை, குந்திரிக்கம், (ஸூஅத்தர்பூ) இவை வகை ஒன்றுக்கு 25 கிராம், அசமதா ஓமம், ஓமம், சதகுப்பை, சோம்பு, கோரைக்கிழங்கு, வசம்பு, காக்கரட்டான் விதை இவை வகை ஒன்றுக்கு 45 கிராம், பெருலவங்கப் பட்டை, சன்னாரஷ்டம் இவை வ்கை ஒன்றுக்கு 10 கிராம்,நீர் நாய் விதை 5 கிராம்.

செய்முறை- எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்திடித்து வஸ்திரகாயம் செய்த சூரணத்திற்கு மூன்று பங்கு சுத்திசெய்த தேன்.பாகப்படி மாஜூன் செய்து கொள்ளவும்.

மாத்திரை - ஐந்து முதல் பத்து கிராம் வரையில் சாப்பிடலாம்.

உபயோகம் - வாயுகளைக் கண்டிக்கும், முக்கியமாக அண்டவாயுவை நாசமாக்கும். வாயுவினால் உணடான உப்பிசம் தீரும். கெட்டியான கபத்தை வெளிப்படுத்தும்.

குளிர்ச்சி புஜூரி சர்பத்து

காசினிவேர், காசினிவிதை, வெள்ளரிவிதை, முலாம்பழவிதை, சீமைவெள்ளரிவிதை, இவை எல்லாம் சமனெடை. இந்த எடைக்கு நான்குபங்கு சீமை திராட்சாக்காடி, இவ்விரண்டினெடைக்குச் சமன் சீனி சருக்கரை.

செய்முறை - எல்லாச் சரக்குகளையும் இடித்துக் காடியில் ஓரிராப் பகல் ஊறவைத்து மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்து இறக்கிப் பிசைந்து வடித்துத் திப்பிநீக்கி, சீனிசருக்கரையைச் சேர்த்து ஷர்பத்து பாகப்படி செய்து கொள்ளவும்.

மாத்திரை- 55, 70 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - சூடான தேகிகளினுடைய ஈரலின் வரட்சி, கட்டு ஆகியவைகளை நீக்கும். சிறுநீரை அதிகப்படுத்தும், பாண்டுரோகம், சூட்டினாலுண்டான ஈரம் இவை தீரும்.

ஊஷ்ண புஜூரி ஷர்பத்து

காசினிவிதை, அசமதா ஓமம், சோம்பு, ரூமிசோம்பு, இவற்றைத் தனித்தனி யிரண்டொன்றாயிடித்துக் கொள்ளவும், குஷூஸ்விதை இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், சீமை திராட்சக்காடி 245 கிராம், சுத்த சலம் 245 கிராம், சீனிசருக்கரை 420 கிராம்.

செய்முறை - காடி, சலம், ஆகிய இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து அதில் சரக்குகளைப் போட்டு ஓரிராப்பகல் ஊறவைத்து மறுநாள் மூன்றிலொன்றாகச் சுண்ட வைத்துப் பிசைந்து பிழிந்து திப்பி நீக்கி சீனிசேர்த்துப் பாகப்படி ஷர்பத்து செய்து கொள்ளவும்.

மாத்திரை - 45, 70 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - குளிர்ச்சியான தேகிகளுக் குண்டாயிருக்கிற ஈரல்வரட்சி, கட்டு ஆகியவைகளை நீக்கும், நீரை அதிகப்படுத்தும், பாண்டுரோகிகளுக்கு உபயோகப்படும்.

சம புஜூரி சர்பத்து

காசினிவிதை, காசினி வேர்த்தோல், சோம்பு, அசமதா ஓமம் இவை வகை ஒன்றுக்கு 24 கிராம், சுத்தசலம் 500 கிராம், சீமை திராக்ஷா காடி 210 கிராம், சீனி சருக்கரை 420 கிராம்.

செய்முறை- தண்ணீர், காடி இவ்விரண்டையும் சேர்த்துச் சரக்குகளை ஒருநாள் ஊறவைத்து மூன்றி லொன்றாகச் சுண்டவைத்து இறக்கிப் பிசைந்து பிழிந்து வடித்து சீனிசேர்த்து பாகப்படி செய்து கொள்ளவும்.

மாத்திரை- 35-45 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- ஈரல், மண்ணீரல் இவற்றின் கட்டு, வரட்சி ஆகியவைகளை நீக்கும். தொந்தசுரங்கள் குணப்படும், நீரை அதிகப்படுத்தும்.

பனப்ஷா பானம்

பனப்ஷா பூ, காவுஜூபான், ரோஜாப்பூ, இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், சீனிசருக்கரை 350 கிராம், பன்னீர் 420 கிராம்.

செய்முறை- முன் மூன்று சரக்குகளையும் பன்னீரிலிட்டு ஊறவைத்துக் கொஞ்சம் சலமும் சேர்த்து மூன்றிலொரு பாகமாகச்

சுண்டவைத்திறக்கிக் கையினால் நன்றாய்ப்பிசைந்து வடித்த திப்பிநீக்கி சீனி சேர்த்து பாகப்படி காய்ச்சிக்கொள்ளவும்.

மாத்திரை- 35, 70 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- மார்பிலுள்ள வியாதிகள், பக்கநோவு, விலாவீக்கம் ஆகியவைகளைக் கண்டிக்கும். பித்தத்தைக் கண்டிக்கும்.

பனப்ஷா ஷர்பத்து

பனப்ஷா 105 கிராம், சுத்த சலம் 450 கிராம், இவற்றை ஒரு பாத்திரத்திலிட்டு 1 பகல் ஊறவைத்து மூன்றிலொருபாகமாகச் சுண்டவைத்துப் பிசைந்துப் பிழிந்து வடித்து, சீனி சருக்கரை நானூறு கிராம் சேர்த்து ஷர்பத்து பாகமாகச் செய்துக் கொள்ளவும்.

மாத்திரை- 24-48 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- விலாவீக்கம், நுரையீரல், வீக்கம், தலை நோய்கள் ஆகியவை தீரும்.

பனப்ஷா மாஜூன்

பனப்ஷா, சுத்திசெய்த சிவதைவேர், ரோஜாப்பூஇதழ், அதிமதுரப் பால் இவை வகை ஒன்றுக்கு விராகனெடை-1, * சுத்தி செய்த மாமூதா சுத்திசெய்த காரிகியூன் இவைவகை ஒன்றுக்கு 2 கிராம். முன் மூன்று வஸ்துக்களைத் தூள் செய்து வஸ்திரகாயஞ் செய்து மற்றவைகளையும் ஒன்றாய்ச் சேர்த்து நீர் வார்த்தரைத்து நான்கு மாத்திரை செய்து கொள்ளவும். காலையில் ஒன்று இரண்டு மாத்திரை சாப்பிட வேண்டியது.

உபயோகம்- பேதியாகி மூளையிலுள்ள மாசுகளை நீக்கிச் சுத்திசெய்யும்; சூட்டினாலுண்டான பீனிசம், ஜலிப்பு ஆகியவை தீரும்.

இலகு பனப்ஷா ஷர்பத்து

உலர்ந்த பனப்ஷாபூ முப்பத்தைந்து கிராம், அரைப்படி சலத்திலூறவைத்து மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்துப் பிசைந்து இறக்கி, சீனிசருக்கரை 420 கிராம், சேர்த்துக் காய்ச்சி ஷர்பத்து பாகப்படி செய்துக் கொள்ளவும்.

மாத்திரை- 24-36 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- சூட்டினாலுண்டான பீனிச ரோகம், சூட்டினாலுண்டான ஜலிப்பு முதலிய சூடான வியாதிகள் தீரும்.

---

* இவைகளின் சுத்தியை அதனதன் தலைப்பில் பார்க்கவும்.

பனப்ஷா மாத்திரை

மேல்தோல் நீக்கின சுக்கு, ரூமமிஸ்தகி, லவங்கம், ரோஜாப்பூ இதழ், ஏலக்காய் இவை வகை ஒன்றுக்கு 36 கிராம், பஸ்பாயிஜ், சூரத்துநில ஆவாரை, சுத்திசெய்த மாமூதா இவை வகை ஒன்றுக்கு 18 கிராம், சுத்திசெய்த சீமைச்சிவதை வேர், பனப்ஷாபூ இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், * தாமரைப்பூ ஷர்பத்து ** காவுஜூபான் ஷர்பத்து இவை வகை ஒன்றுக்கு 70 கிராம், மேனா நூறு கிராம், தரஞ்சபீன், ஆலுபுக்காறா, கோது, கொட்டை நீக்கின புளி இவை வகை ஒன்றுக்கு 175 கிராம், பன்னீர் எழுநூறுகிராம் சீனி சருக்கரை 1400 கிராம்.

செய்முறை- உரலில் இடிக்க வேண்டியவைகளை யிடித்தும், கல்வத்தில் அரைக்க வேண்டியவைகளை அரைத்தும் தரஞ்சபீன், மேனா இரண்டையும் பன்னீரில் கரைத்தும் வடித்தும் இரண்டுவகை ஷர்பத்துடன் சேர்த்துக் கொள்ளவும். புளியையும், ஆலுபுகாராவையும் சலத்தில் கரைத்து வடித்து சருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகு பதமாகுஞ் சமயத்தில் பன்னீர் முதலிய ஷர்பத்தையும் சேர்த்துப் பாகுபதத்தில் கீழிறக்கிச் சூரணங்களைக் கொட்டிக்கிளறிப் பத்திரப்ப்டுத்தவும்.

மாத்திரை- 18, 27 கிராம் காலையில் மாத்திரம் சாப்பிடவும்.

உபயோகம்- மூன்றுவகை துர்நீர்களையும் பேதி மூலமாக வெளிப்படுத்தும். இது அதிக உபயோகமானது.

காஜர் மிட்டாய்

வேண்டிய திறமான மஞ்சள் முள்ளங்கியை மேல்தோல் நீக்கி திருவுமணையில் அல்லது தகரத்தினால் செய்யப்பட்டிருக்கிற திருவு யந்திரத்தில் திருவி உள்ளிருக்கிற நரம்பை நீக்கிவிடவும்; இப்படிச் செய்தெடுத்த திருவல் 700 கிராம், பன்னீர் 350 கிராம், சுத்தசலம் 350 கிராம் சீனிசருக்கரை எழுநூறு கிராம், சுத்திசெய்த தேன் 350 கிராம், மேல்தோல் நீக்கிச் சுத்தி செய்து பாகப்படுத்தின பாதம் பருப்பு 175 கிராம், மேல்தோல் நீக்கிச் சுத்திசெய்து * பாகப்படுத்தின பிஸ்தாப்பருப்பு 175 கிராம், கஸ்தூரி, அம்பர் இவ்விரண்டும் சக்திக்கேற்ற அளவு, இவ்விரண்டையும் தனித்தனி கொஞ்சம் சருக்கரைச் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

---

* இவைகளின் முறையை இதன் முதற்பாகம் பாகலக்ஷணத்திற் காணலாம்.

** பருப்பினங்களைப் பாகப்படுத்தல்:- ஓட்டில் அல்லது இரும்புவாணையில் தக்க அளவாகக் கோதுமை மாவைப் போட்டு அதில் பருப்பினங்களையுமிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து வறுத்துக் கொள்வதேயாம்.

செய்முறை- பன்னீரையும் சலத்தையும் சேர்த்து காஜர் திருவலில் விட்டு ஒரு மண் பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றித் தீயெரித்து, அகப்பையினால் துளாவிக் கொண்டிருந்து நன்றாக வெந்தபின் கீழிறக்கி வைத்துக்கொள்ளவும். சீனியையும் தேனையும் சேர்த்துப் பாகுசெய்து, பாகத்தில் இறக்கி, முன் பாத்திரத்தில் விட்டு நன்றாய் மிஸ்ரமித்துக் கெட்டியாகுமளவாய், கீழ்மேலாகப் புறட்டிப் பருப்புகளைச் சிறுதுண்டுகளாக அறுத்து இதில் சேர்த்துப் புறட்டி முன்னர் அரைத்து வைத்திருக்கும் கஸ்தூரி அம்பரையும் சேர்த்து ஒரு ஈயம் பூசின தாம்பளத்தில் அல்லது பீங்கானில் பரப்பிக் கத்தியினால் துண்டுகளாகச் செய்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை- வேளை ஒன்றுக்கு 70 கிராம் முதல் 100 வரையில் இருவேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்- தேகங்கொழுக்கும், இரத்தவிர்த்தியுண்டாகும் ஈரலின் வரட்சியை நீக்கும். நீர்க்கட்டையுடைக்கும், சூட்டினாலுண்டான இருமலைத் தணிக்கும். நீர்ப்பை, குண்டிக்காய் இவைகளிலுண்டாகும் கற்களை நீக்கும்.

காஜர் பானம்

காஜரை மேல்தோல் நீக்கி, நேராகப் பிளந்து உள்நரம்பை நீக்கி ஓலைக்கனமுள்ள சிறுதுண்டுகளாகச் செய்யப்பட்டது 910 கிராம், ஆறுபடி சலம் கொள்ளும்படியான ஒரு மண் பாத்திரத்திற்போட்டு, அதில் வெந்தயம் பனிரெண்டு கிராம் சேர்த்து, ஆற்று சலம் படி இரண்டரைவிட்டு, வாயை மண்பாத்திரத்தினால் மூடி கோதுமை மாவைச் சீலையிற் தடவி வாய்பந்தனம் செய்து, மெதுவாகத் தீயெரித்து சுமார் 2-3 மணிக்குப் பின் குளிரயாறவிட்டுக் கையினால் நன்றாகப் பிசைந்து வடித்து அதற்கச்சமன் சுத்தி செய்த தேன் சேர்த்து வேறொரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி அதில் சிகப்பு தூதரிவித்து, மஞ்சள் தூதரிவித்து இவை வகை ஒன்றுக்கு பதினெட்டு கிராம், மேல்தோல் நீக்கின சுக்கு பதினாறு கிராம், லவங்கம், சன்னராஷ்டம் இவை வகை ஒன்றுக்கு பனிரெண்டு கிராம், சாதிக்காய், சாதிப்பத்திரி இவை வகை ஒன்றுக்கு இருபத்தெட்டு கிராம், இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து இரண்டொன்றாயிடித்துக் கித்தான் துணியில் முடிந்து மேற்படி கலவையிற் போட்டுத் தீயெரிக்கையில் அடிக்கடி இந்த முடிச்சை நசுக்கிக் கொண்டு வரவும்; இந்த முடிச்சிலுள்ள மருந்தின் சத்து வரும்படியாகச் செய்து, முடிச்சைப் பிழிந்து நீக்கிப் பதமான பின்பு கீழிறக்கி நன்றாக ஆறவிட்டு சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை- நாளொன்றிற்கு எழுபது கிராம் ஷர்பத்தைச் சலத்தில் வார்த்து சாப்பிடவும். (இதில் சிறு மயக்கமுண்டு.)

உபயோகம்- தேகத்திற்கு அதிக பலங்கொடுக்கும், இரத்த சுத்தி யுண்டாகும்.

குறிப்பு- சலத்திற்குப் பதிலாகத் திராக்ஷா சாராயம் சேர்த்துக் கொள்வாருமுண்டு.

மஹா காஜர் பானம்

திறமான மஞ்சள் முள்ளங்கியை மேல்தோல், உள்நரம்பு முதலியவைகளை நீக்கிச் சுத்தி செய்து அதிகசன்னத் துண்டுகளாகச் செய்து, அதிக சுத்தியான பாத்திரத்திற் போட்டு அந்த எடை சுத்தசலம் வார்த்து அடுப்பேற்றிக் காஜர் நன்றாக வெந்தபின் கீழிறக்கி நன்றாக ஆறினபின் கையினாற் பிசைந்து சேலையில் வடித்துத் திப்பிநீக்கி வடிகட்டின சலம் ஒரு பங்கு, சுத்திசெய்த திறமான தேன் ஒரு பங்கு, திராக்ஷா சாராயம் 1 பங்கு, மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து அடுப்பேற்றி அதில், ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், சன்னலவங்கப்பட்டை இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், சந்நராஷ்டம், சடாமாஞ்சி இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், சோம்பு, ஷாஜீரா, பெருவலங்கப்பட்டை, நிலக்கடம்பு இவை வகை ஒன்றுக்கு 16 கிராம், குங்குமப்பூ, கஸ்தூரி வகை ஒன்றுக்கு 2 கிராம், இவற்றுள் பின்னிரண்டைத் தவிர மற்றவைகளை யெல்லாம் இடித்துத் தூள் செய்து கித்தான் துணியிலிட்டுக் கட்டி, மேற்படி கலவையிட்டுத் தீயெரிக்கையில் அடிக்கடி இந்த முடிச்சை நசுக்கிக் கொண்டு வரவும். இம்முடிச்சிலுள்ள சரக்குகளின் சத்தெல்லாம் வந்துவிட்டால் அதையெடுத்து விட்டு எரித்துப் பதத்திற் கீழிறக்கி குங்குமப்பூ கஸ்தூரி ஆகிய விரண்டையும் சருக்கரை சேர்த்தரைத்து ஆறினபின் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை- நாளொன்றிற்கு இருவேளை; வேளை ஒன்றுக்கு எழுபது கிராம், ஷர்பத்தைச் சலத்தில் வார்த்துச் சேர்த்துச் சாப்பிடவும்.

உபயோகம்- இரத்த விளைவை யுண்டாக்கி தேகத்தைக் கொழுக்கச் செய்யும். தேகபலம், மனோபலம், ஆண்மை ஆகியவைகளை அதிகமுண்டாக்கும். இது மிகவும் அநுபவமானது.

ஷஷவருண மதுர காஜர் மிட்டாய்

திறமான காஜரை முன் சொல்லியபடி திருவி மெல்லிய துண்டுகளாகச் செய்து நன்றாய்க் கொதிக்கிற வெந்நீரிலிட்டுச் சற்றுநேரம் மூடிவைத்து எடுத்து வஸ்திரத்திலிட்டுப் பிழிந்து எடுத்த காஜர் திருவல் 250 கிராம், ஒரு பாத்திரத்தில் நூறுகிராம் நெய்விட்டு அதில்போட்டு, ஒன்றரைப்பலம் பொடியாயரிந்த வெங்காயமுமிட்டு வதக்கி, அஞ்சு கோழி முட்டைகளை யுடைத்து அதில்விட்டு பத்து கிராம் லவங்கத்தூளும் சேர்த்து இஷ்டப்படி

புளிப்பு அல்லது இனிப்புச் சேர்த்து அரைவேக்காடாக முட்டை வெந்த தருணத்தில் இறக்கி, ஜீரணசக்திக் கேற்றபடி சாப்பிடவும். காலையிலும் மாலையிலும் சாப்பிடலாம்; ஆகாரத்துடனும் சாப்பிடலாம்.

உபயோகம்- இது இரத்த விருத்திக்கு அதிக உபயோகமானது.

காஜர் திராவகம்

பன்னீர், கஸ்தூரிப் பிரம்பு திராவகம் இவை வகை ஒன்றுக்கு 250 கிராம், தண்ணீர் 2 படி, காஜர்விதை பாதரஞ்சுபோயா, காவுஜபொன்பூ இவை வகை ஒன்றுக்கு நாற்பத்தைந்து கிராம், மஞ்சள் முள்ளங்கிவிதை 35 கிராம், பிஸ்தாப்பருப்பு, பஸ்பாயிஜ், சீமைவசம்பு இவை வகை ஒன்றுக்கு பதினைந்து கிராம், சித்திரமூல வேர், பஹமனே சுபேத், பஹமனே சுர்க், சாதிக்காய், சாதிப்பத்திரி இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், சந்நராஷ்டம் பனிரெண்டு கிராம், ரூமிச்சோம்பு எட்டு கிராம் இவற்றையெல்லாம் இடித்து மேற்படி கலவையிற் சேர்த்து அடுப்பேற்றி மூன்றிலொன்றாகக் காய்ச்சி யிறக்கிவடித்து அந்தக் கியாழத்தில் சன்னத் துண்டுகளாகச் செய்த மஞ்சள் முள்ளங்கி 950 கிராம் சேர்த்து திராவகம் வடிக்கும் வாலையிலிட்டுத் திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை- 70-100 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இரத்திவிருத்தியாகி வீரிய விருத்தி அதிகப்படும்.

நிம்பாதி மனோரஞ்சித பானம்

திறமான வெள்ளை சருக்கரை பத்து பங்கு பீங்கான் கிளாசில் போட்டு கரும்புரசம் ஒரு பங்கு அல்லது அந்தச் சருக்கரை நனையும்படியாகச் செல்லத்தக்க அளவு கரும்பு ரசம்விடவும், கரும்புரச மில்லாவிட்டால் மழை சலம்விடவும். வாயைத் துணியால் வேடுகட்டி மூன்று அல்லது நான்கு நாள் வெய்யிலில் வைத்து ஐந்துநாளைக்கு அதிகப்படக் கூடாது; பின்பு புதிதாகக் கறந்த பசுவின் பால் நூறு பங்கு விட்டு நன்றாகக் கலந்து அடுப்பில் வைக்கவும், கொதி வராததற்குமுன்பே நன்றாகக் கலந்துவிடவும். தீயெரித்து வர மேலெழும்பும் நுரையை யெடுத்துவரவும். நுரைநின்று பாகுபதமாகியபின்பு சிறுதீயாயெரித்து 23 பங்கு எலுமிச்சம் பழரசம் எடுத்து கொஞ்சம் கொஞ்சமாக மேற்படி பாகில் தெளித்துக் காய்ச்சி வரவும். ரசமெல்லாம் சென்ற பின்பு பதத்திலிறக்கி சீஷாவில் விட்டு வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 12-18 கிராம் காலை மாலை இருவேளையும் சாப்பிடலாம்.

உபயோகம் - சீரணசக்தியை யதிகப்படுத்தும். இரைப்பைக்கும், இருதயத்திற்கும் வலுவையுண்டாக்கும், மார்பு துடித்தலை நீக்கும்; கஷ்டசுவாசம், மூச்சு, பழைய இருமல் ஆகிய இவைகளை நீக்கும், மார்நோய், சொட்டு மூத்திரம், நீர்க்குண்டிக்காயின் நோய் இவைகளை யொழிக்கும். மேற்படி ஷர்பத்துடன் பொதினாவின் ரசத்தை அல்லது அதன் திராவகத்தைச் சேர்த்துச் சாப்பிடுவதினால் மனக்கிலேசம், மனக்கலக்கம், பயித்தியம், உன்மத்தம் ஆகிய இவைகளைக் கண்டிக்கும். கெட்ட ஆவிகள் மூளையிற் செல்லாது தடுக்கும். இது குழந்தைகளுக்கும் ப ழைய சுரக்காரர்களுக்கும் உபயோகப்படும். ஆனால் அதிக புளிப்புத் தட்டும்படி யிருத்தல்கூடாது. அப்படியிருக்கில், நரம்புகளுக்கும் தாதுவிற்கும் பீனிசநோய் ஆகிய இவைகளுக்கும் கெடுதி சம்பவிக்கும், அதற்குப் பரிகாரம் பாதம்பருப்பையுங் கசகசாவையும் சேர்த்துச் சாப்பிட நீங்கும்.

எலுமிச்சம்பழ முறப்பா

இரசமுள்ள பெரிய எலுமிச்சம்பழம் ஐம்பது வாங்கி மேல் மஞ்சள் நிறம் மாறும்படி கல்லில் தேய்த்துப் பத்து அல்லது பதினைந்துநாள் உப்பு ஜலத்தி லூறப்போட்டு எடுத்து நல்ல சலத்தினால் நன்றாகக் கழுவிப் பின்பு நல்ல ஜலத்திலிட்டு கைப்பு மாறுகிற வரையில் வேகவைத்தெடுத்து மூங்கில்குச்சி அல்லது மரத்தினால் செய்யப்பட்ட ஊசிகளினால் குத்திக் குத்திச் சித்தப்படுத்திக் கொள்ளவும். சருக்கரை 1400 கிராம், தேன் 1400 கிராம் இவ்விரண்டையும் சேர்த்துப் பாகுசெய்து முதிர்ந்த பதத்தில் மேற்படி பழங்களைப் பாகிலிட்டு வெய்யிலில் வைத்து வரவும். அதில் தண்ணீர் கசிவு கொடுத்தால் மறுபடியும் அடுப்பில் வைத்துக் காய்ச்சிப் பதமாக்கி வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை - ஒன்னேகால்- ஒன்னேமுக்கால் இரண்டு வேளையுண்டு சாப்பிடலாம்.

உபயோகம் - அதிகச்சூடான தேகிகளின் பித்தச் சூட்டைத் தணிக்கும், இரைப்பைக்கும் வலுவையுண்டாக்கும்.

நிம்பாதி ஷர்பத்து

எலுமிச்சம்பழ ரசம், சீமை யிலந்தைப்பழ ரசம், பேரிக்காயின் ரசம், புளிப்பு மாதுளம்பழ ரசம், இனிப்புமாதுளம் பழரசம் இவை வகை ஒன்றுக்கு 450 கிராம், எல்லாவற்றையுமொன்றாகச் சேர்த்து நன்றாக வடித்து அதில் 450 கிராம், சீனிசருக்கரையைச் சேர்த்து அடுப்பேற்றி, ஒரு கொதி வந்தவுடன் மறுபடியும் வடித்து, அடுப்பேற்றி நல்ல அகர்கட்டைச் சூரணம் எட்டு கிராம், பிஸ்தா மேலோட்டின் சூரணம்

இரண்டு கிராம், றூமிமஸ்தகியை கல்வத்திலரைத்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் 4 கிராம், இந்தச் சூரணங்களை யெல்லாம் மேற்படி ஷர்பத்தில் சேர்த்து எரித்துப் பாகுபதத்திலிறக்கி, சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை -18-30 கிராம் காலையிலும் மாலையிலும் சாப்பிடலாம்.

உபயோகம்- பித்தச்சூடு, இரத்தச்சூடு இவைகள் நீங்கும். ஈரல், இருதயம், இரைப்பை ஆகிய இவைகளுக்குப் பலத்தை யுண்டாக்கும். எரிவந்தம், பித்தம், மயக்கம், அரோசிகம் ஆகிய இவைகளை நீக்கும், விஷசுரங்களைக் கண்டிக்கும்; போதை வஸ்துக்களை உபயோகிக்கும் சாதனக்காரர்களுக்கு மற்ற அவுடதங்கள் உபயோகப் படாமலிருக்கிற வேளையிலும் இந்த ஷர்பத்து உபயோகப்படும்.

தேசிபொதினா ஷர்பத்து

எலுமிச்சம்பழ ரசம் அரைப்பங்கு, பொதினாயிலை ரசம் ஒருபங்கு, சருக்கரை யொருபங்கு.

செய்முறை- முன்னிரண்டு ரசத்தையு மொன்றாகச் சேர்த்துக் காய்ச்சும்போது சருக்கரையைக் கொஞ்சங்கொஞ்சமாகப் போட்டுக் கைவிடாது துளாவிக் கொண்டுவரவும்; சருக்கரையெல்லாம் போட்டானபின் பாகுபதத்திலிறக்கிச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - 12-18 கிராம் இருவேளையும் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரல், இரைப்பை ஆகிய இவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். பசிதீபனத்தையுண்டாக்கும்; குடலிலுள்ள வாயுகள், மாசுகள் ஆகியவைகளைக் கண்டிக்கும்.

தேசிக்காய் பில்லைகள்

எலுமிச்சம்பழ ரசம் 4 பங்கு, சீனிசருக்கரை ஒரு பங்கு சருக்கரையைப் பாகுசெய்து கெட்டிப் பதமாகுந்தருணத்தில் கோழிமுட்டையின் வெள்ளை அம்பிலி இரண்டு மூன்றுவிட்டு சற்று நேரங் கிண்டிப் பீங்கான் பாத்திரத்தில் பாதம் நெய் அல்லது பனப்ஷா எண்ணெயை அல்லது பசுவின் நெய்யைத்தடவி அதில் போட்டுப் பரப்பி ஆறினபின் சிறுபில்லைகளாயறுத்து வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை- 12-18 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- பித்தச்சூடு, இரத்தச்சூடு ஆகியவைகளைத் தணித்துப் பசி தீபனத்தை யுண்டாக்கும்.

நிம்பப்பத்திரி லேகியம்

வேம்பினிலையை உருவி நரம்புகள் குச்சிகள் ஆகியவைகளில்லாமல் நீக்கி யிலைகளை மட்டும் மண்பாத்திரத்திலிட்டு அதின்மேல் நாலங்குலம் ஜலமிருக்கும்படியாக சுத்தசலம்விட்டு நன்றாக வேகவைத்து ஜலத்தை யிறுத்துவிட்டு மறுபடியும் முன்போலவே ஜலம்விட்டு நன்றாக வேகவைத்து முன்போலவே ஜலத்தை யிறுத்துவிடவும். இவ்விதம் இரண்டு அல்லது மூன்றுதரம் செய்தால் இலைகளின் கசப்பு அரைவாசி அல்லது முக்கால்வாசி நீங்கும்; அதையெடுத்து வைத்துக் கொண்டு அந்த இலைக்கிரண்டு பங்கு சருக்கரையைப் பாகுசெய்து பாகுபதத்தில் மேற்படியிலையை ஒவ்வொன்றாயெடுத்து, மேற்படி பாகில் நனைத்துத் தனித்தனியாக ஆறவைத்துக் கொள்ளவும். சருக்கரைப் பாகுபதத்தில் கஸ்தூரி, அம்பர், குங்குமப்பூ ஆகியவைகளைத் தத்தம் சக்தியானுசாரம் சேர்த்துக் கொண்டால் அதிகக் குணத்தைத் தரும்.

மாத்திரை- 35-70 கிராம் ஆக இரண்டு வேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்- இரைப்பைக்கு வலுவைக் கொடுத்துத் தீபனத்தை யதிகப்படுத்தும், தேகத்திலுள்ள அசுத்த மாசுகளை நீக்கி யிரத்தசுத்தியாக்கி வீரிய விர்த்தியை யுண்டாக்கும்; தேகத்திலுள்ள மாசுகளை வேர்வையினாலும், நீரினாலும் வெளிப்படுத்தும், குஷ்டம் முதலிய மகாநோய்களை குணப்படுத்தும்.

வேம்பின் எண்ணெய்

வேப்பிலை ஒரு பங்கு, ஜலம் ஆறுபங்கு, இவ்விரண்டையும் ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக யெரித்த ஜலம் மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின்னிறக்கி வைத்து இளஞ்சூடா யிருக்கையில் நன்றாகப் பிசைந்து வடித்த கியாழத்தின் அளவிற்கு அரைபாகம் நல்லெண்ணையைச் சேர்த்து சிறுதீயாயெரித்து நீர்சுண்டின பின் எண்ணெயை சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்- தேகத்தின் மேல்பூசுவதினால் விஷநீர்கள், வீக்கங்கள், வாயுகள், அசுத்த சத்துக்கள் ஆகிய இவைகளை நீக்கும்.

வேப்பம்பூ திராவகம்

மலாக்கா சந்தனத்தூள், செஞ்சந்தனத்தூள், சாலாமிஸ்றி, செந்தாமரைப்பூ, செந்தாழம்பூ இவை வகையொன்றுக்கு 210 கிராம், நாரத்தம்பூ அல்லது நாரத்தங் கொழுந்து ஐம்பதுகிராம், ரோஜாப்பூ, பனப்ஷாபூ, காவுஜுபான், கறுப்புக்கடுக்கா யிரண்டொன்றாய்

நறுக்கினது, இவை வகை யொன்றுக்கு நூறு கிராம், நன்னாரி வேர் 125 கிராம், காசினிவிதை 120 கிராம், உஸ்தூகுதூஸ், காவுஜுபான்பூ, வெள்ளைத் தாமரைப்பூ இவை வகையொன்றுக்கு இருபது கிராம், ஏலம் இரண்டொன்றாக நறுக்கினது பத்து கிராம், சீமையிலந்தைப்பழம் 50 கிராம், சீமைநறுவிலிப்பழம் 50 கிராம், திராக்ஷப்பழம் நூறுகிராம், பச்சை திராக்ஷப்பழம் 10 கிராம், வேப்பம்பூ 1500 கிராம், சருக்கரை 3.5 கிலோ, எல்லாவற்றையு மொன்றாகச் சேர்த்துப் பத்துபடி ஜலம் வார்த்து, 24 மணிநேரம் ஊறவைத்து வாலையிலிட்டு மூன்று மூன்றரைப்படி திராவகமிறக்கி சீஷாவில் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

மாத்திரை- முதல் மூன்றுநாளும் 50 கிராம் சாப்பிடவும். அடுத்து மூன்று நாள் 60 கிராம், அதற்கடுத்த மூன்றுநாள் 75 கிராம், மறுபடி 100 கிராம் வீதமாகச் சாப்பிட்டு வரவும்.

உபயோகம்- குஷ்டம், குறைநோய், மேகம், சொரி, சிரங்கு, சருமத்தைப் பற்றிய அநேகவியாதிகள் இவைகள் நீங்குவதுமின்றி, வாதபித்த சிலேற்றும நீர்களைக் கண்டித்து, இரத்தத்தை சுத்திசெய்து தேகத்திற்குத் தேஜஸை யுண்டாக்கும்.

நிம்பப்பட்டைத் திராவகம்

வேப்பம்பூ உலர்த்தினது 400 கிராம், வேப்பம்பட்டை, துராயிலை, சீமை நன்னாரிவேர், தாழம்பூ, காசினிவிதை, கிஷ்மிஷ்பழம், சீந்தில்கொடி இவை வகை ஒன்றுக்கு 200 கிராம், சீமை யிலந்தைப் பழம் 25, மருதோன்றியிலை, கல்தாமரைப்பூ, சீமை துத்திப்பூ, காவுஜுபொன்பூ, கறுப்புக்கடுக்காய், விலாமிச்சம்வேர், மஞ்சள் கடுக்காய்த்தோல், மகிழம்பட்டை, அத்திப்பட்டை, அரசம்பட்டை, பிரப்பங்கிழங்கு, கொத்துமல்லி, கருங்காலி மரத்தூள், சிறுநெருஞ்சி முள்ளு, சோம்பு, தாழை விழுதின் ரசம், வெள்ளரிவிதை, கெக்கரிவிதை, இவை வகை ஒன்றுக்கு 225 கிராம், கொட்டைச் கரந்தைப்பூ, மணத்தக்காளிக்காய், ரோஜாப்பூ, பனப்ஷா, தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, அப்திமூன், பஸ்பாயிஜ், இவை வகை ஒன்றுக்கு 24 கிராம் குசும்பாபூ 12 கிராம், சீமைநறுவிலிப்பழம் மூன்று; இந்தச் சரக்குகளை யெல்லாம் இடித்து எட்டுப்படி ஜலத்திற்போட்டு 24 மணிநேரம் ஊறவைத்து வாலையிலிட்டு மூன்றுபடி திராவக மிறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை- வேளை யொன்றுக்கு 35 கிராம், முதல் 100 கிராம் வரையில் இருவேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்- முன்சொன்ன வியாதிகள் சகலமுந்தீரும்.

வேப்பம் பட்டைக் கியாழம்

முத்தின நூறுவருஷத்திய வேப்பம்பட்டை 175 கிராம். சிறுகாஞ்சொறிவேர், பேய்ப்புடல், நிலவேம்பு, இவை வகை யொன்றுக்கு 35 கிராம், சீமை சாமந்திப்பூ, பார்க் பவுடர் என்கிற ஸின்கோனாபட்டைச் சூரணம் இவை வகை யொன்றுக்கு 18 கிராம், இவைகளை யிடித்து 1¼ படி ஜலத்திலிட்டு மெதுவாயெரித்துக் காய்ச்சி நாலிலொரு பாகமாகச் சுண்டவைத்து இளஞ்சூடா யிருக்கையில் வடித்து கொள்ளவும்.

மாத்திரை- 40மி லிட்டர் முதல் 80 மில்லிலிட்டர் அரை ஆழாக்கு வரையில் இருவேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்- பழையசுரங்கள், முறைச்சுரங்கள், விஷசுரங்கள் முதலியன தீரும், சுரத்தினா லுண்டாகிய துர்ப்பலம் நீங்கி இரத்தவிர்த்தி யுண்டாகி தேகம் பலப்படும்.

குஷ்ட நிவாரணி

முதிர்ந்த வேப்பம்பட்டை, வேப்பங்காய், வேப்பம்பிஞ்சு, வேப்பம்பூ, வேப்பிலை, வேப்பங் கொழுந்து, வேப்பம் வேர்த்தோல், இவ்வேழையும் தனித்தனி நிழலில் உலர்த்தித் தனித்தனி யிடித்த சூரணம் இவை வகை ஒன்றுக்குச் சமனெடையாகச் சேர்த்து 2 கிராம் ஆரம்பித்து மூன்று நாளைக் கொருதடவை 2 கிராம் அதிகப்படுத்தி யிரண்டு 4 கிராம் ஆனபின் அவ்வளவே அறுபது நாள், தொண்ணூறு நாள் சாப்பிட, குஷ்டநோய், குறைநோய் ஆறாதரிணங்கள், தீராதமேகச்சிரங்குகள் ஆகியவை தீரும்.

குறிப்பு

இம்முறை ஒரு பெரியவர் சொன்னபடி செய்து பல தடவை அநேகருக்குக் கொடுத்துக் கைகண்ட முறை; மேற்படி குஷ்டநோய் ஆரம்பத்தில் இதைக் கையாடினால் அவ்வியாதி தலையெ, டுக்காது வேரற்றுப்போம்.

பிரமதண்டெண்ணெய்

பிரமதண்டு சமூலமிடித்த ரசம் ஒருபடி, ஆமணக்கெண்ணெய் முக்கால்படி, வெள்ளறுகுரசம் அரைபடி, வெந்தயம், சீரகம், அதிமதுரம் இவை வகை ஒன்றுக்கு 175 கிராம்.

செய்முறை- எண்ணெயில் மேற்கண்ட இரண்டு ரசங்களையும் விட்டு, மூன்று சரக்குகளையும் தனித்தனி யிடித்துப் போட்டு,

நாளொன்றிற்கு 4 நாழிகைநேரம் சிறுதீயாக எரித்துச் சாறெல்லாம் வற்றினபின்வடித்து பத்திரப்படுத்தவும்.

மாத்திரை- தேகபலம், வியாதி பலத்திற் கேற்றபடி 5, 10, 15 கிராம் காலையில் இளநீரில், அல்லது தக்க கிஷாயத்தில்விட்டுச் சாப்பிடவும். பேதியாகும். பத்தியம், புளி, கடுகு, ஆகியவைகளைத் தள்ளிவைத்தால் வியாதி சீக்கிரத்தில் குணப்படும்.

உபயோகம்- புண்கள், புரைகள், மேகவியாதிகள், கைகால்பிடிப்பு, வாத நோய்கள் முதலியவைகள் நாட்பட்டவைகளாயினுந் தீரும்.

குறிப்பு

இப்பாகத்தில் வெள்ளறுகு ரசத்தை நீக்கியும் செய்வதுமுண்டு.

பிரமதண்டந் திராவகம்

பிரமதண்டு சமூலம் உலர்த்தினது 1400 கிராம், வெள்ளறுகு உலர்த்தினது 1400 கிராம், வல்லாரை சமூலம் உலர்த்தினது 700 கிராம், ஆற்று ஜலம் ஏழரைபடி.

செய்முறை- ஒரு பாத்திரத்தில் எல்லாவற்றையும் போட்டு ஓரிராப்பகல் ஊறவைத்து மறுநாள் வாலையிலிட்டு 4 அல்லது 5 சீஷா திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை- இந்தத் திராவகம் தேகசக்திக்கு ஏற்றபடி 35, 50, 70 கிராம் எடுத்து வாதுமைநெய் அல்லது எள்ளெண்ணெய் 20 கிராம் சேர்த்து நன்றாகக் கலக்கி அதில் மருத்து வெள்ளைச் சூரணம் 4 கிராம் போட்டுச் சாப்பிடவும்; இவ்விதம் தேகசக்தி, வியாதிபலம் ஆகியவைகளுக்கேற்ற படிகாலை மாலை யிரண்டு வேளையும் சாப்பிடலாம். தேகபல முள்ளவர்களுக்குப் பத்தியமும் வைக்கலாம்.

உபயோகம்- சீழ்மேகம், தந்திமேகம், இரத்தமேகம், நீர்ப்பையின் அழலை, இந்திரிய ஒழுக்கு ஆகியவைகள் நாட்பட்டிருந்தாலும் தீரும்.

குறிப்பு

இந்தத் திராவகத்தை 5 நாள், 7 நாள் சாப்பிட்டுப் பத்துநாள் விட்டுவிடவும்; பின்பும் அவசியமானால் சாப்பிடவும். தொடர்ச்சியாகச் சாப்பிடுவதைக் காண இடையில் விட்டு விட்டுச் சாப்பிடுவதில் குணம் விசேஷமாகக் காணப்பட்டிருக்கிறது.

பிரமாதி விரண பைரவி

பிரமதண்டு வித்து 700 கிராம், பூவரசம் வித்து 700 கிராம், விளாம் புறணி 700 கிராம்.

செய்முறை- ஒரு தோண்டியின் அடியில் சன்னதுவாரங்கள் 15, 20 செய்து அதில் மேற்படி வஸ்துக்களைப் போட்டு வாய்க்குச் சில்லிட்டு சீலை செய்து அந்தத் தோண்டி கொள்ளும்படியானதும் அதன் சுற்றிலும் 3 அங்குலமிடம் இருக்கும் படியானதுமான ஒரு குழி தோண்டி அதன் மத்தியில் வேறொரு சிறு குழிதோண்டி அதில் ஒரு பீங்கான் பாத்திரத்தை வைத்துத் தோண்டியை அதன் துவாரங்களெல்லாம் அந்தப் பீங்கான் பாத்திரத்திற் குள்ளிருக்கும்படியாகப் பொருத்திச் சீலைசெய்து, பீங்கானைப் புதைத்து பீங்கான் மறையும்படி மண்மூடி தோண்டியின் பக்கங்களில் விராட்டியடுக்கிப் புடம் போட்டு ஆறவிட்டுச் சாம்பலை நீக்கி மெதுவாக பீங்கான் பாத்திரத்தையெடுக்க அதில் தைலமிருக்கும். இப்படி புடம் போட்டுத் தைலமிறக்குவதே குழித்தைல மெனப்பேர்.

உபயோகம்- இந்தத் தைலத்தை மேற்பூச மேகப்புண்கள், படைகள், கருமேகங்கள், மேகத்தடிப்பு முதலியன தீரும்.

வேறு

பிரமதண்டு சமூலமிடித்த ரசம் படி அரை, சீமை அகத்தியிலை ரசம் கால்படி, நாகமல்லியிலை ரசம் கால்படி, நல்லெண்ணெய் அரை படி.

செய்முறை- எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து நீர் சுண்டக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

உபயோகம்- இத்தைலத்தை மேற் பூசிவர, முன் கண்ட வியாதிகள் தீரும்.

வேறு

பிரமதண்டு சமூலத்தை நிழலில் உலர்த்தினது ஒரு பங்கை, ஜலம் நாலு பங்கிலிட்டு, அடுப்பில் வைத்தெரிந்து எட்டிலொன்றாகக் காய்ச்சி வடித்து இதில் அரைப்பங்கு நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

இதைத் தேகத்திற் பூசுவதினால் சிரங்கு, சொரி, விரணம், வாயுக்கட்டிகள் முதலானவைகள் தீரும்.

ஷாத்ரா எண்ணெய்

துராயிலையையிடித்து வஸ்திரகாயஞ் செய்த ரசம் இரண்டு பங்கும், நல்ல எள்ளெண்ணெய் ஒரு பங்கும் இரண்டையும் சேர்த்து அடுப்பில் வைத்து மெதுவா எரித்து நீர் சுண்டினபின் சீஷாவில் வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்- தேகத்திலிதைப் பூசி வருவதினால் பித்தச்சூடு ஆகியவைகளைத் தணிக்கும்; வாதபித்த சிலேற்றுமம் முதலிய துர்நீர்களை நீக்கும், ஈரலுக்கும் இரைப்பைக்கும் பலத்தைக் கொடுக்கும்.

குறிப்பு

பச்சையிலை அகப்படாவிட்டால் உலர்ந்த இலை ஒரு பங்கும், ஜலம் எட்டுப்பங்கும் சேர்த்துக் காய்ச்சின கியாழம் மூன்று பங்கும், நல்ல எள்ளெண்ணெய் ஒரு பங்கும் சேர்த்து முன்போலச் செய்துக் கொள்ளவும்.

தராயிலைத் தீநீர்

தராயிலை, காம்பு, மறுசாதியிலை முதலியன நீக்கிச் சுத்தி செய்தது 1400 கிராம், நல்ல சலம் பங்கு 4 இரண்டையும் வாலையிலிட்டு ஒன்றரைப்படி திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை- வேளை ஒன்றுக்கு 70 கிராம் பானஞ் செய்யலாம்.

உபயோகம்- மேகச்சூடு, பித்தச்சூடு, இரத்தச்சூடு, அஸ்திச்சூடு முதலியவைகள் நீங்கும்; ஈரல், இரைப்பை ஆகியவைகளுக்கும் பலமுண்டாகும்.

குறிப்பு

பச்சை யகப்படாவிட்டாலும் உலர்ந்தது 1400 கிராம், நல்லசலம் ஆறுபடி சேர்த்து ஓரிராப்பகல் ஊறவைத்து மறுநாள் வாலையிலிட்டு ஒன்றரைபடி திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

தராயிலைக் கியாழம்

மஞ்சள் கடுக்காய்த்தோல் 35 கிராம், சூரத்து நில ஆவாரை, உலர்ந்த துராயிலை இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், காசினி வித்து 12 கிராம், விதை நீக்கின சீமையிலந்தைப் பழம், விதை நீக்கின சீமை நறுவிலிப்பழம் இவை வகை ஒன்றுக்கு 27 கிராம், ரோஜாப்பூ, அப்திமூன், பஸ்பாயிஜ், பிஸ்தாப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், பனப்ஷா 12 கிராம்.

செய்முறை- இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்திடித்து இரண்டு பாகமாகச் செய்து ஒரு பாகத்தில் அரைப்படி ஜலம் வார்த்து மூன்றிலொன்றாகக் காய்ச்சி இறுத்து அதில் தரஞ்சபீன் அல்லது சீனி சருக்கரை 20 கிராம் போட்டுச் சாப்பிடவும்.

உபயோகம்- மேற்கண்ட விதமாய் தேக ஸ்திதிக்குத் தக்கபடி ஒருவேளை அல்லது இரண்டு வேளையாக 7, 9, 11 அல்லது தொடச்சியாகச் சாப்பிட்டு வர, இரத்தக் கெடுதியினால் அல்லது மேக நீரினால் உண்டாயிருக்கிற தடிப்பு, பூடை, கண்டமாலை, விகாரம் முதலியவைகளும், விஷகடி, சொரி சிரங்கு, நமைச்சல் முதலியவைகளும் தீரும்.

வேறு

மஞ்சள் கடுக்காய்த்தோல் 35 கிராம், உலர்ந்த துராயிலை 30 கிராம், கோது, கொட்டை நீக்கிய புளி 35 கிராம், பிஞ்சு கடுக்காய், அதிமதுரம், சோம்பு இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், காசினிவித்து, காசினிவேர் இவை வகை ஒன்றுக்கு 50 கிராம், குல்கந்து 35 கிராம்.

செய்முறை- குல்கந்து நீங்கலாக மற்றவைகளை யிடித்து அரைப்படி ஜலத்தில் ஒரு இரவு ஊற வைத்துக் காலையில் அடுப்பில் வைத்து ஐந்திலொன்றாகக் காய்ச்சி யிறுத்து மேற்படி குல்கந்தைப் போட்டுக் கலக்கிக் காலையிலொரு வேளை சாப்பிடவும்.

உபயோகமும்- முன் பாகத்தில் சொல்லிய வியாதிகளில், பித்த சம்பந்தமான வியாதிகள் சகலமுந் தீரும்.

வேறு

மஞ்சள் கடுக்காய்த்தோல், உலர்ந்த துராயிலை, காசினிவித்து, காசினிவேர், சூரத்து நில ஆவாரை இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், ரோஜாப்பூ 35 கிராம்,மணத்தக்காளிக்காய் உலர்ந்தது இருபது கிராம், ஆலுபுகாரா அறுபது கிராம், புளி 55 கிராம், தரஞ்சபீன் அல்லது சீனிசருக்கரை 35 கிராம், சருக்கரை நீங்கலாக மற்றவைகளை ஒன்றிரண்டாக இடித்து இரண்டு பங்காக்கி ஒரு பங்கில் அரைப்படி ஜலம்விட்டு மூன்றிலொரு பங்காகக் காய்ச்சி வடித்து முன்சொன்ன சருக்கரையில் பாதியிட்டு காலையில் சாப்பிடவும். இவ்விதம் மாலையில் செய்து கொள்ளவும்.

உபயோகம்- முன்கண்ட வியாதிகளுட்ன சம்பந்தப்பட்டிருப் பதெல்லாம் நீங்கும்.

ஆலுபுகாரா இலகுபேதி ஷர்பத்து

ஆலுபுகாரா நூறுகிராம், புளியங்கொட்டை கோது நீக்கி, ஜலத்தில் கரைத்துத் துணியில்கட்டி தொங்க வைத்து, அதில் வடித்த சலம் 840 கிராம், சுத்தி செய்து நைய நறுக்கின சீமைச் சிவதைவேதை வேர், பனப்ஷா இவை வகை ஒன்றுக்கு 70 கிராம், இரண்டையும் கித்தான் துணியில் கட்டிக்கொள்ளவும், இரண்டரைப்படி ஜலத்தில் முன் சொன்னவைகளையும், கட்டினதையும் போட்டுக் காய்ச்சும்போது அந்தப் பையையொரு சிறு துடுப்பினால் நசுக்கிக் கொண்டு வரவும், அரைப்படியாகச் சுண்ட வைத்து அதில் 875 கிராம், சருக்கரை சேர்த்துக் காய்ச்சி நுரை நீக்கிப் பதத்திலிறக்கி ஆறவிட்டுச் சீஷாவில் வைத்துக் கொள்ளவும், அதனுடன் சுத்தி செய்த மஹ்மூதா குங்குமப்பூ இவை வகை ஒன்றுக்கு 2 கிராம் இவை யிரண்டையுந் தூள் செய்து சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை- 18-25 கிராம் சாப்பிடவும் இரண்டொரு தடவை மலமாகும்.

உபயோகம்- இரத்தச்சூடு, பித்தச்சூடு முதலானவைகள் போகும்.

ஆலுபுகாரா பேதி ஷர்பத்து

பருமனானதும் சதைப்பற்று மானதுமான ஆலுபுகாரா நூறு கிராம், கொட்டை, கோது முதலியவைகளை நீக்கிய புளி ஐநூறு கிராம், புதிதான சீமை இலந்தைப்பழம் 30, பனப்ஷாபூ எழுபது கிராம், சுத்தி செய்த சீமைச்சிவதை வேர் எழுபது கிராம், இந்தவேரை நைய நறுக்கிக் கித்தான் துணியில் முடிந்து மற்றவைகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒன்றரைப்படி ஜலம்விட்டு ஓரிரவு பகல் ஊற வைத்து மறுநாள் காய்ச்சி வடித்து சீனி 700 அல்லது தரஞ்சபீன் சுத்திசெய்தது அவ்வெடை சேர்த்து அதில் கொஞ்சம் ஜலம்விட்டும் பாகுசெய்யும்போது, கொஞ்சம் கோழிமுட்டை வெள்ளையம்புலியை அல்லது பசும்பாலை விட்டுக் காய்ச்ச நுரையெழும்பும் அதை நீக்கிவிடவும், இவ்விதம் இரண்டு மூன்றுதரம் செய்துவரும் நுரையை நீக்கிச் சுத்திசெய்து முன் கியாழத்துடன் சேர்த்துக் காய்ச்சி பாகுபதத்தில் இறக்கிச் சுத்திசெய்த மஹ்மூதா 5 கிராம், குங்குமப்பூ 2 கிராம், மஹமூதாவை, பேரிக்காய் அல்லது சீமை அத்திப்பழத்தின் ரசம்விட்டு அரைத்தும், ஷர்பத்தில் கலந்து நன்றாக மிஸ்ரமித்துக் கொள்ளவும்.

மாத்திரை- 35 கிராம், 55 கிராம் ஒன்றரை சாப்பிடலாம், நாலைந்து தடவை பேதியாம்.

உபயோகம்- இரத்தச்சூடு, பித்தச்சூடு, இரத்தச் சூட்டினாலுண்டான சுரங்கள், பித்த சம்பந்தமான வியாதிகள், கபசம்பந்தமான வியாதிகள் ஆகிய இவைகள் நீங்கும்.

ஆலுபுகாரா ஷர்பத்து

ஆலுபுகாரா, கோது, கொட்டைநீக்கின புளி, இவை வகை ஒன்றுக்கு 70 கிராம், தரஞ்சபீன், மேனா, இவை வகை ஒன்றுக்கு 55 கிராம், இந்நான்கையும் முக்காற்படி ஜலத்தில் ஒரு இராத்திரி ஊறவைத்து மறுநாள் காலையில் மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சி வடித்து 525 கிராம் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கி வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை- 12 கிராம், 18 கிராம் இரு வேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்- பித்தசுரங்கள் நீங்கும், சூடான சுபாவமுடைய வாலிபர்களுக்கு அதிகப் பிரயோசனப்படும்.

ஆலுபுகாரா கியாழம்

ஆலுபுகாரா இருபது, கோது கொட்டை நீக்கின புளி எழுபது கிராம், ரோஜாப்பூ முப்பத்தைந்து கிராம், காசினி வித்து இருபது கிராம், பச்சைப் பொதினாயிலை ஐந்து கிராம் இவற்றை ஒன்றாகச் சேர்த்து அரைப்படி பன்னீரில் அல்லது நீரில் ஒரு இரவுஊறவைத்து மறுநாள் காலையில் மூன்றிலொன்றாகக் காய்ச்சி வடித்து தரஞ்சபீன் அல்லது சருக்கரை நூறு கிராம் அதில் கலந்துக் கொள்ளவும்.

மாத்திரை- தேகத்திற்குத் தகுந்தபடி பத்து அல்லது இருபது கிராம் காலையில் சாப்பிடவும்; இந்தப்படி 3-6-7 நாள் சாப்பிடவும்.

உபயோகம்- சகலவித பித்தத்தையும், இரைப்பையில் தாழ்ந்திருக்கும் பித்தத்தையும் நன்றாக வெளிப்படுத்தும்.

ஆலுபுகாரா மாஜூன்

ஆலுபுகாரா 225 கிராம், கோது கொட்டை நீக்கிய புளி 225 கிராம், சீமை இலந்தைப்பழம், சீமை நறுவிலிப்பழம், திராக்ஷிப்பழம் இவை வகை ஒன்றுக்கு ஐம்பதுகிராம், மஞ்சள் கடுக்காய்த்தோல், குஷூஸ்விதை, மாசிப்பத்திரி, பனப்ஷா இவை வகை ஒன்றுக்கு முப்பதுகிராம், ரோஜாப்பூ முப்பத்தைந்து கிராம், சீமை துத்திவிதை, குப்பாஜிவிதை, சோம்பு, சந்தனம் இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், இவைகளை முக்கால்படி நீரில் ஊறப்போட்டு மறுநாள் காலையில் தரஞ்சபீன் நூறு கிராம் போட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாக்கிப்

பிசைந்து வடித்து, கியாழத்தெடை சருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் மூங்கிலுப்பு, பாதம்பிசின், விளாம்பிசின், சுத்திசெய்த மஹ்மூதா, நிஷாஸ்தா இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், இவைகளையெல்லாம் நன்றாகப் பொடி செய்து மேற்படி பாகில் சேர்த்துக் கிளறி வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை- 30-35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- சூடாகியதும், எரிந்து போனதுமான மாசுகளையும், பெருவியாதியின் நீரையும், விஷநீர்களினாலுண்டாகும் சுரங்களையும், தாக சம்பந்த வியாதிகளையும் நீக்கும்.

குறிப்பு

இதைப் பெலமான பேதி அவுஷதமாகச் செய்துகொள்ள வேண்டுமானால் மஹ்மூதா, தரஞ்சபீன் இவை வகை ஒன்றுக்கு 6 அல்லது 8 கிராம் அதிகப்படுத்திக் கொள்ளவும்.

ஏலக்காய் மாஜூன்

ஏலக்காய், பேரேலக்காய், இலவங்கப்பட்டை, மேல் தோல் நீக்கின சுக்கு, அரிசித்திப்பிலி, குங்குமப்பூ, இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், அகருகட்டை, இலவங்கம் இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 2 கிராம், தேன் மொத்த எடைக்கு 3 பங்கு.

செய்முறை- எல்லாச் சூரணங்களையும் ஒன்றாகச் சேர்த்துத் தேனைக் காய்ச்சி அதில்விட்டுக் கிளறிப் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை- வேளை யொன்றுக்கு 4-5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இரைப்பையிலுள்ள மாசுகளை நீக்கி அதைப் பலப்படுத்தும்.

ஏலாதிச் சூரணம்

ஏலக்காயை யிடித்துத் தூள்செய்து வடித்த சூரணம் 35 கிராம், ஏலரிசிச் சூரணம் முப்பது கிராம், சாதிக்காய்ச் சூரணம் இருபது கிராம், சாதிப்பத்திரிச் சூரணம் பத்து கிராம், பெருவலங்கப்பட்டைச் சூரணம் பதினைந்துகிராம், தாளிசப்பத்திரிச் சூரணம் இருபது கிராம், நிலக்கடம்புச் சூரணம் இருபத்தைந்து கிராம், சடாமாஞ்சிச் சூரணம் 30 கிராம், ரூமிமஸ்தகிச் சூரணம் 25 கிராம், சீனிசருக்கரையெல்லாவற்றிற்கும் சமன்.

செய்முறை- எல்லாச் சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து சருக்கரையும் கலந்துக் கொள்ளவும்.

மாத்திரை- காலை, மாலை 2 வேளையும் 12 கிராம் சாப்பிட்டு அதன்மேல் காவுஜுபான் தீநீர் அல்லது சுத்தநீர் சாப்பிடவும்.

உபயோகம்- இருதயம், இரைப்பை, ஈரல் ஆகியவைகளைப் பலப்படுத்தும், மனவுற்சாக முண்டாக்கும். தேகத்திற்கு வலிவைத்தரும். சுவாசக் குழல்களைப் பலப்படுத்தும். வாய் நாற்றத்தை நீக்கிச் சுகந்தமுண்டாக்கும். முகவஜீகரமாம்.

ஏலாதி லேகியம்

ஏலக்காய்ச் சூரணம் 35 கிராம், ஏலரிசிச் சூரணம் 35 கிராம், துருஞ்சி நாரத்தம்பழத்தோல் சூரணம் 35 கிராம், சீரகச்சூரணம் முப்பத்தைந்து கிராம், ஜரிஷ்க்பழம் 70 கிராம் சீனிசருக்கரை 280 கிராம்.

செய்முறை- சருக்கரையில் கொஞ்சம் சலம்விட்டு ஜரிஷ்க்பழத்தையும் போட்டுக் காய்ச்சி 2-3 கொதி வந்த பின்பு மெதுவாய் நன்றாய் அகப்பையினால் நசுக்கிப்பிழிந்து வடிகட்டி மறுபடியும் கொஞ்சம் சலம்விட்டு நசுக்கிப் பிழிந்து வடித்து மறுபடியும் அடுப்பேற்றிக் காய்ச்சிப் பாகுபதத்தில் மேற்படிச் சூரணங்களைப் போட்டு நன்றாகக் கிளறி எடுத்துக் கொள்ளவும்.

மாத்திரை- 12-15 கிராம் இரண்டு வேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்- பித்தாதிக்க ரோகங்கள், வாந்தி, பித்தத்தினா லுண்டான மலப்போக்கு, ஈரலைப்பற்றின சூடு ஆகியவைகள் நீங்கும்.

ஏலாதி ஷர்பத்து

ஏலக்காய், ஏலரிசி, சந்தனம், நெல்லிவற்றல், கொத்து மல்லிவிதை இவை வகை ஒன்றுக்கு ஐம்பது கிராம். இவைகளையெல்லாம் நையநறுக்கி ஒருபடி சலத்திலிட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாள் காலையில் அடுப்பேற்றி மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சிப் பிசைந்து வடித்து சீனிசருக்கரை 350 கிராம் சேர்த்துக் காய்ச்சி ஒரு கொதி வந்தபின் மறுபடியும் வடித்து அடுப்பேற்றிப் பாகுபதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை- 12-18 கிராம் இரண்டு வேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்- மேற்கண்ட வியாதிகள் தீரும்.

ஏலாதித் தீநீர்

ஏலக்காய் 175 கிராம், வெட்டிவேர் 175 கிராம், சடாமாஞ்சில் 175 கிராம், சந்தனத்தூள் 175 கிராம், எலுமிச்சம்பழத்தோல் உலர்ந்தது 105 கிராம்.

செய்முறை- இவைகளையெல்லாம் நையநறுக்கி 4 படி சலத்திலிட்டு ஒரு இராப்பகல் ஊறவைத்து மறுநாள் வாலையிலிட்டுத் தீநீர் 2-படி யிறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை- 2-3 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இரைப்பை, ஈரல், இருதயம் முதலியவைகளைப் பலப்படுத்தும்; நரம்புகளிலுள்ள அசுத்தங்களை நீக்கி உற்சாக முண்டாக்கும்.

இலவங்கப்பட்டை ஜவாரிஷ்

இலவங்கப்பட்டைச் சூரணம் பலம் ஏழரை, மேல்தோல் நீக்கின சுக்கு, மிளகு, திப்பிலி, ஜாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், குங்குமப்பூ இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 15 கிராம், கஸ்தூரி 3 கிராம், தேன் 450 கிராம், சருக்கரை 450 கிராம்.

செய்முறை- தேனையும் சருக்கரையையும் பாகு செய்து மேற்படி சூரணங்களைக் கொட்டி, கஸ்தூரியைப் பன்னீர் விட்டரைத்துச் சேர்த்துக் கிளறிப் பாகப்படுத்தி யெடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை- 4-5 கிராம் இரண்டு வேளையும் சாப்பிடவும்.

உபயோகம்- இரைப்பையைப் பலப்படுத்தி, சீரண சக்தியை யதிகப்படுத்தும் வரட்சிகளை நீக்கும்; ஈரல்வரட்சியையும் பாண்டு காமாலையையும் நீக்கிப் புருஷசக்தியை யுண்டாக்கும்.

வேறு

இலவங்கப்பட்டை, ஜாதிக்காய், மேல்தோல் நீக்கின சுக்கு, ஏலக்காய், சந்நராஷ்டம், மிளகு, திப்பிலி, குங்குமப்பூ, இலவங்கப்பத்திரி, சடாமாஞ்சி, பஹமனேசுருஃ, பஹமனே சுபேத் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு ஐந்து கிராம், கஸ்தூரி குன்றுமணியெடை ஆறு, சோம்பு, கரபஸ்ஓமம், காவுஜுபான், றூமிமஸ்தகி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு மூன்று கிராம், உலர்த்தின துருஞ்சித்தோல் சூரணம் பதினைந்து கிராம், சீனி நூறு கிராம், தேன் எல்லாவற்றிற்கும் மூன்று பங்கெடை.

செய்முறை- எல்லாச் சூரணங்களையும் ஒன்றாகச் சேர்த்து சீனியையும், தேனையுங் கலந்துக் காய்ச்சி பாகுபதத்தில் சூரணங்களைக் கொட்டிக் கிளறிப் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை- 5-7 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- சூடுங்குளிர்ச்சியும் சமமானது; சீரண சக்தி அதிகமாகும்; வாயின் துர்நாற்றம் நீங்கும். பலவித வாயுகளைக் கண்டிக்கும்; புருஷசக்தி அதிகப்படும்.

இலவங்கப்பட்டை மாத்திரை

இலவங்கப்பட்டை, அகருகட்டை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு இருபது கிராம், உலர்ந்த செம்பைப்பூ, லவங்கம், ஏலக்காய், காட்டேலக்காய், மிளகு, திப்பிலி, சடாமாஞ்சில், நிலக்கடம்பு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், மேல்தோல் நீக்கின சுக்கு, உலர்ந்த புதினா, அனிசூன், றூமிமஸ்தகி, சோம்பு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், பெருவலங்கப்பட்டை, தாளிசப்பத்திரி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு எட்டு கிராம், இலவங்கப்பட்டைத் தீநீர் தேவையான அளவு.

செய்முறை- சூரணங்களை யொன்றாகக் கலந்து, மேற்படி நீர் விட்டுப்பிசைந்து, பில்லை மாத்திரை செய்து கொள்ளவும்.

மாத்திரை- வேளை யொன்றுக்கு 4 கிராம். 10 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- இரைப்பை, ஈரல் இவைகளைப் பலப்படுத்தும், அசுத்த மாசுகளை நீக்கும், பசிதீபன சக்தியை விர்த்தி செய்யும்.

இலவங்கப்பட்டைச் சூரணம்

உயர்ந்த லவங்கப்பட்டை, றூமிமஸ்தகி, சோம்பு இவைகளின் சூரணம் சமனெடை, இவற்றிற்குச் சமனெடை கற்கண்டுச் சூரணத்தைச் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும்.

மாத்திரை- மூன்று விரல் கொண்டது சாப்பிடவும்.

உபயோகம்- இரைப்பையைப் பலப்படுத்தும், அசுத்த மாசுகளை நீக்கும், பசிதீபனத்தை யதிகப்படுத்தும், சீதபேதியைத் தடுக்கும், குளிர்ச்சியினா லதிகப்பட்ட நீரைக்கட்டும்.

இலவங்கப்பட்டை எண்ணெய்

மெல்லியதும் காரமுள்ளதுமான லவங்கப்பட்டையை யிடித்த தூள் 1050 கிராம், ஜைத்தூன் எண்ணெய், அல்லது திறமான நல்லெண்ணெய் 525 கிராம் விட்டு, கடும் வெய்யிலில், இருபது நாள் வைக்கவும். ஒவ்வொரு தினமும் நன்றாகக் கலக்கி வரவும், பின்பு வடித்து வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்- தேகத்திற் பூசுவதினால் கைகால் நடுக்கல், வாய்கோணல், முகங் கோணல், தேள் விஷம், விரியன் விஷம், மயிர்க் கூச்சு இவைகள் போகும்.

சீரகத்தைப் பக்குவப்படுத்தல்

புதிதான சீரகத்தில் கல், குச்சு முதலானவைகளை நீக்கிச் சுத்திசெய்து, மண் அல்லது பீங்கான் பாத்திரத்திலிட்டு சீமை திராக்ஷாக்காடியை சீரகத்தின் மேல் நாலங்குலம் நிற்கும்படியாக விட்டு ஒரு பாத்திரத்தில் ஊறவைத்து, நிழலிலுலர்த்தி யெடுத்துக் கொள்க.

கமூனி மாஜூன் அல்லது வாயுசங்காரி

பாகப்படுத்திய சீரகம் 28 கிராம், நிழலில் உலர்த்திய சதாபிலை, றூமிமஸ்தகி இவை வகை ஒன்றுக்கு 5 கிராம், லவங்கம், ரோஜாப்பூ, றூமிச்சோம்பு, வசம்பு, ஓமம், பிஸ்தா மேல்தோல், பூங்காவி, இவை வகை ஒன்றுக்கு 9 கிராம் இவையெல்லாவற்றையு மிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணத்திற்கு மூன்று பங்கு தேனைக் காய்ச்சி நுரை நீக்கி, சுத்திசெய்து, அதில் மேற்படி சூரணங்களைப் போட்டுக் கிளறி, பாகப்படி மாஜூன் செய்து கொள்ளவும்.

மாத்திரை- 2, 4 கிராம் உபயோகப்படுத்திக் கொள்ளவும்.

உபயோகம்- வாய்வு சம்பந்தமான வியாதிகள், குடலைப்புரட்டி நோவுகிற வாயு, இரைப்பையிலுள்ள வாயு, வாயுவினாலுண்டாகும் இரைப்பையின் துர்ப்பலம், வாயுவினாலுண்டான சூதகபந்தம் கீல்வாயு, கால்நரம்பின் நோய், நீரடைப்பு முதலியவைகளைத் தீர்க்கும். இப்பாகத்தைச் செய்து இரண்டு மாதம் வைத்திருந்து பின்பு உபயோகப்படுத்த வேண்டும்.

அசையாதி மாஜூன்

பாகப்படுத்தின சீரகம் 35 கிராம், மேல் தோல் நீக்கின சுக்கு, லவங்கப்பட்டை இவை வகை ஒன்றுக்கு 16 கிராம் லவங்கம், அகரு, ஜாதிப்பத்திரி இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், சன்னராஷ்டகம் 16 கிராம், கஸ்தூரி 4 கிராம், கஸ்தூரி நீங்கலாக மற்றவைகளைச் சூரணம் செய்துவடித்து சூரணத்தின் எடைக்கு மூன்று பங்கு எடையுள்ள தேனைக் காய்ச்சிச் சுத்தி செய்து, அதில் சூரணத்தைக் கொட்டிக் கிளறி கஸ்தூரியைப் பன்னீர் விட்டு அரைத்து அதனுடன் சேர்த்துப் பாகப்படி மாஜூன் செய்து கொள்ளவும்.

மாத்திரை- 6, 12 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- வாயுகளை நன்றாய்க் கண்டிக்கும், ஈரல், இரைப்பை முதலிய இராஜ உறுப்புகளுக்குப் பலனைக் கொடுத்துச் சரீரத்தைக் காப்பாற்றும்.

கிறுமானி மாஜூன்

பாகப்படுத்திய பிளப்பு சீரகம் 1 கிலோ இதனை வறுத்துக் கொள்ளவும். மிளகு 130 கிராம், மேல்தோல் நீக்கின சுக்கு; நிழலில் உலர்த்திய சதாபிலை, இவை வகை ஒன்றுக்கு 160 கிராம், பூங்காவி 35 கிராம் இவைகளையிடித்து வடித்து அவ்வெடைக்கு மூன்று பங்கு சுத்தி செய்து தேனைச் சேர்த்துப் பாகப்படி மாஜூன் செய்து கொள்ளவும்.

மாத்திரை- 3, 5 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- இரைப்பையி லுண்டாகிய குளிர்ச்சி, புளித்தேப்பம், இரைப்பையில் கபம், அசுத்தமாசுகள் இவைகள் சேர்ந்து மேலேயெழும்பும் கெட்ட ஆவிகள், நீர் குண்டிக்காயிலுள்ள குளிர்ச்சி, கபசுரம், வாதசுரம் இவைகள் முதலானவை நீங்கும்.

உதரரோக நிவாரணி

பாகப்படுத்தின சீரகத்தூள் 350 கிராம் சடாமாஞ்சி, ஊதேபல்ஸான், இலவங்கப்பட்டை, பெருலவங்கப்பட்டை, பல்ஸான் விதை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 10 கிராம், பாதம் நெய் 20 கிராம், பூங்காவி 35 கிராம், மிளகுச் சூரணம் 105 கிராம், உலர்ந்த சதாபிலை சூரணம் மேல்தோல் நீக்கின சுக்குச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 150 கிராம், மேல் தோல் நீக்கிச் சுத்தி செய்திடித்த சீமைச் சிவதை வேர் சூரணம் 800 கிராம், காய்ச்சி நுரை நீக்கிச் சுத்திசெய்த தேன் 5 கிலோ சூரணங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து தேனைக்காய்ச்சி அதிலிட்டு மாஜூன் செய்து கொள்ளவும்.

மாத்திரை- 6 கிராம், 12 கிராம் சாப்பிடவும். பேதி அதிகமானால் குறைந்த அளவாகவும், இரண்டு வேளைக்குப் பதிலாக ஒருவேளையும் சாப்பிடவும்.

உபயோகம்- இரைப்பை நோய், மலபந்தம், வயிறுப்பிசம்; குடல்வாதம் முதலிய வயிற்றிலுள்ள வியாதிகள் தீரும் (சுயானுபோகம்)

அன்னசயரக்ஷணி

பாகப்படுத்தின பிளப்பு சீரகம் 175 கிராம், லவங்கப்பட்டை, பூங்காவி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம்,

வெள்ளைமிளகு, கறிமிளகு, இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 30 கிராம், உலர்ந்த சதாயிலைச் சூரணம் 55 கிராம், இஞ்சி முறப்பா 140 கிராம், குல்கந்து 350 கிராம். முறப்பாக்களையும் குல்கந்தையும் சேர்த்திடித்து மற்றச் சூரணங்களையும் சேர்த்து மேற்கண்ட எடைக்கு மூன்று பங்கு தேனைக்காய்ச்சி நுரைநீக்கி எல்லாம் சேர்த்துப் பாகப்படி மாஜூன் செய்து கொள்ளவும்.

குறிப்பு

இஞ்சி முறப்பா அகப்படாத காலத்தில் அந்த எடை சுக்குச் சூரணத்தையும், கடுக்காய் முறப்பா இல்லாவிட்டால் சுத்திசெய்த சீமைச் சிவதைச் சூரணம் அந்த எடையும் சேர்த்துக் கொள்ளலாம்.

மாத்திரை- வேளை ஒன்றுக்கு 16, 25 கிராம் சாப்பிடலாம். தேகத்திற்கேற்றது போலவும், சமயத்திற்கேற்றது போலவும் குறைத்தும் அதிகப்படுத்தியுங் கொள்ளலாம்.

உபயோகம்- இரைப்பை, இருதயம், மூளை ஆகிய இவைகளைப் பலப்படுத்தும். மலச்சிக்கலை நீக்கும். இதைத் தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வந்தால் இரைப்பை நோய், குடல் முறுக்குநோய் முதலியவைகள் தீரும்.

அதிமதுர மாத்திரை

அதிமதுரப்பால் 2 பங்கு, வெண்காரப் பொடி, ஹப்புல் ஆஸ்சூரணம், கர்க்கடகசிங்கிச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு ஒரு பங்கு இவையெல்லாவற்றையும் ஒரு புதுக்கலயத்தில் போட்டு வாய்மூடி ஒரு ராத்திரி வைத்திருந்து மறுநாள் கல்வத்திலரைத்துத் தேவையானால் கொஞ்சம் சலம்விட்டரைத்து சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரை செய்துலர்த்திக் கொள்ளவும்.

உபயோகம்- இந்த மாத்திரையிலொன்றை வாயிலடக்கிக் கொண்டிருப்பதனால் இருமல், இரைப்பு; சுவாசம், கஷ்ட சுவாசம் முதலியவைகளைக் கண்டிக்கும்.

மதுராதிச் சூரணம்

மேல்தோல் நீக்கின அதிமதுரச் சூரணம் 9 கிராம், சீனிசருக்கரை 9 கிராம் இவ்விரண்டையுஞ் சேர்த்து, மூன்று பாகமாகச் செய்து, காலை, மத்தியானம், மாலை மூன்று வேளை சாப்பிட இரைப்பையிலிருந்தெழும்பும் கெட்ட ஆவிகள் தீரும்.

யாஷ்டிமதுராதிச் சூரணம்

மேல்தோல் நீக்கின அதிமதுரம் இரண்டு பங்கு, சோம்பு ஒரு பங்கு, சருக்கரை மூன்றுபங்கு இரண்டு சரக்கையும் சூரணம் செய்து, சருக்கரையையும் கூடச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை- வேளையொன்றுக்கு 12 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- சித்திரை மாதமுதல் ஆடிமாதம் வரையில் தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வந்தால், சீதளநோய், பீனிசநோய், இரைப்பு, இவைகள் அணுகா.

மதுயாஷ்டிகாதிச் சூரணம்

மேல்தோல் நீக்கின அதிமதுரம், கருவேலம்பிசின் இவை வகை ஒன்றுக்கு நாலுபங்கு, அரிசித்திப்பிலி ஒரு பங்கு, சருக்கரை ஒன்பதுபங்கு. மேற்படி சரக்குகளைச் சூரணம் செய்து, சருக்கரையைச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை- வேளை யொன்றுக்கு 9 கிராம் ஆகச் சிலநாள் சாப்பிடவும்.

உபயோகம்- சித்திரை மாதமுதல் ஆடிமாதம் வரையில் தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வந்தால், சீதளநோய், பீனிசநோய்; இருமல், இருமல், இரைப்பு, இவைகள் அணுகா.

மதுயாஷ்டிகாதிச் சூரணம்

மேல்தோல் நீக்கின அதிமதுரம், கருவேலம்பிசின் இவை வகை ஒன்றுக்கு நாலுபங்கு, அரிசித்திப்பிலி ஒரு பங்கு, சருக்கரை ஒன்பது பங்கு. மேற்படி சரக்குகளைச் சூரணம் செய்து, சருக்கரையைச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை- வேளை யொன்றுக்கு 9 கிராம் ஆகச் சிலநாள் சாப்பிடவும்.

உபயோகம்- இருமல், இரைப்பு இவை தீரும்.

ஸூஸாதி ஷர்பத்து

அதிமதுரத்தை மேல்தோல் நீக்கிச் சுத்திசெய்தது 100 கிராம், வெள்ளரிவித்து, கொத்துமல்லிவிதை, பருப்புக்கீரைவித்து, உலர்ந்த சீமை அத்திப்பழம், ஸூபா இவை வகை ஒன்றுக்கு 3 கிராம், சீனிசருக்கரை

525 கிராம்

செய்முறை- சருக்கரை தவிர மற்றெல்லாவற்றையும் நைய நறுக்கி 2படி சலத்தில் அரைமணி நேரம் ஊறவைத்து அடுப்பேற்றிக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டின பின் இறக்கிப் பிசைந்து வடித்து சருக்கரைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை- 24, 36 கிராம், சாப்பிடலாம்.

உபயோகம்- இருமல், நீர்ச்சுருக்கு, இரைப்பு, நீரெரிச்சல் ஆகியவைகள் தீரும்.

சடாமாஞ்சில் ஜவாரிஷ்

ஜடாமஞ்சில் சூரணம் 8 கிராம், ரோஜாப்பூ சூரணம் 15 கிராம், அகரு, றூமிமஸ்தகி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, வால்மிளகு, ரூமிசோம்பு; முலாம்பழத்தின் மேல்தோல் உலர்ந்தது, இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், சீமை தேவதாரிவித்து, பிஸ்தாப் பருப்பு பாதாம்பருப்பு, இவை வகையொன்றுக்கு 20 கிராம், கஸ்தூரி 3 கிராம், கருவேலம்பிசின், பாதம்பிசின் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், சீனிசருக்கரை 350 கிராம்.

செய்முறை- சூரணங்களை யொன்றாகச் சேர்த்துப் பருப்பினங்களை யரைத்து அதில் கலந்து, சருக்கரையைப் பாகுசெய்து அதில் சூரணங்களைத் தூவிக்கிளறி, கஸ்தூரியைப் பன்னீர் விட்டரைத்து அதில் சேர்த்துப் பாகம் செய்து எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை- 3, 5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இராஜ கருவிகளைப் பலப்படுத்தி வாயுகளைக் கண்டித்துச் சீரணசக்தியை யதிகப்படுத்தும்.

சடாமாஞ்சில் எண்ணெய்

சடாமாஞ்சில் ஒருபங்கு சலம் பத்துபங்குவிட்டு யூறவைத்துச் சிறுதீயாக யெரித்துக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாக வடித்த கியாழம் இரண்டு பங்கு, நல்லெண்ணெய் ஒரு பங்கு இரண்டையும் சேர்த்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடித்துக் கொள்ளவும்.

உபயோகம்- வயிற்றின் மேல் பூசுவதினால், வயிற்றுப்பிசமும் வயிற்றுநோயும்; ஈரல் ஸ்தானத்திற் பூசுவதினால் மண்ணீரல் வீக்கமும்,

ஸ்திரீகள் அடிவயிற்றிலும் பின்பக்கத்திலும் பூசுவதினால், சூதகபந்தனமும், நீர்க்குண்டிக்காயின் ஸ்தானத்தில் பூசுவதினால் நீரடைப்பு, கல்லடைப்பு முதலியவைகளும், மஞ்சள் காமாலை, வரட் காமாலை முதலியவைகளும் தீரும்.

சடாமாஞ்சில் பானம்

சடாமாஞ்சில் 140 கிராம், சுத்தசலம் ஒன்றேமுக்கால்படி விட்டு ஒரு இரவும் பகலும் ஊறவைத்து அடுப்பேற்றி மூன்றில் இரண்டு பாகமாகக் காய்ச்சி வடித்து அதினுடன் சீனிசருக்கரை 700 கிராம், சேர்த்துக் கரைத்துக் காய்ச்சிப் பாகுபதத்தி லிறக்கிச் சீஷாவில் வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை- 20 கிராம், 30 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- இரைப்பைநோய், ஈரலின்நோய், மண்ணீரல் நோய், பழையசுரங்கள் ஆகிய இவைகள் தீரும்.

சடாமாஞ்சில் பில்லை மாத்திரை

சடாமாஞ்சில், பெருவலங்கப்பட்டை, ரேவல்சீனி, நிலவேம்பு இவை வகை ஒன்றுக்கு 15 கிராம், குக்கில், ரூமிமஸ்தகி இவை வகை ஒன்றுக்கு 9 கிராம், சுத்தி செய்த வெள்ளைப் போளம், கோஷ்டம், மிளகு, ரூமிச்சோம்பு, குங்குமப்பூ இவை வகை ஒன்றுக்கு 5 கிராம், வெண்கடுகு 22 கிராம்.

செய்முறை:- கடுகையும், குக்கிலையும் கல்வத்தில் வெந்நீர் விட்டரைத்துக் கொண்டு மற்றவைகளைச் சூரணஞ் செய்து முன் மருந்தோடு சேர்த்து அரைத்து, பில்லை மாத்திரை செய்து கொள்ளவும்.

மாத்திரை- 6 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- ஈரல் வீக்கத்திற்கு ஸிகாமது பானம் பலம் ஒன்றிற்கரைத்துச் சாப்பிடவும். இரைப்பை வீக்கத்திற்குத் தகுந்த அனுபானங்களில் சாப்பிடவும்.

சடாமாஞ்சில் மாஜூன்

சடாமாஞ்சில், கோஷ்டம், சீமை அசுவகெந்தி, நிலவேம்பு, திராக்ஷப்பழம் இவை வகை ஒன்றுக்கு 16 கிராம், பெருலவங்கப்பட்டை 20 கிராம், குக்கில் 8 கிராம், சுத்தி செய்த வெள்ளைப்போளம், குங்குமப்பூ, றூமிச்சோம்பு இவை வகை ஒன்றுக்கு 6 கிராம். தேன் எல்லாச்சரக்கி னெடைக்கு மூன்று பங்கு.

செய்முறை- சூரணம் செய்ய வேண்டியவைகளைச் சூரணம் செய்து குக்கிலைத் தண்ணீர் விட்டு அரைத்து எல்லாவற்றையுஞ்சேர்த்துத் கொட்டி கிளறிப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

மாத்திரை- 20, 25 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இரைப்பை, ஈரல் இவைகளிலுள்ள வியாதிகளை நீக்கி அவ்வுறுப்புகளைப் பலப்படுத்தும்.

சீமைத் துத்திவிதைக் குளிகை

சீமைத் துத்திவிதை 8 கிராம், கருவேலம்பிசின், பூங்காவி, பாதம்பிசின், மூங்கிலுப்பு இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், அதிமதுரப்பால், பேதனாவிதை, நிஷாஸ்தா, பாதம்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 3 கிராம், கசகசா, மொச்சைபருப்புமா இவை வகை ஒன்றுக்கு 4 கிராம். இவையெல்லாவற்றையும் இடித்துச் சூரணம்செய்து தேன்விட்டுக் குழைத்து 6 கிராம் உண்டைகளாக உருட்டிக் கொள்ளவும்.

மாத்திரை- வேளை ஒன்றுக்கு 6 கிராம், 9 கிராம் வாயில் அடக்கிக் கொண்டு இதின் ரசத்தை விழுங்கவும்.

உபயோகம்- வரட்டிருமல், இருமல் தீரும்.

சீமைத் துத்திவிதை மாஜூன்

சீமைத் துத்திவிதைச் சூரணம் 105 கிராம், மிளகு, மேல்தோல்நீக்கின சுக்கு; லவங்கப்பட்டை, மஞ்சட்கடுக்காய்த் தோல், சூரத்து நெல்லிக்காய், சித்திரமூலவேர்ப்பட்டை, பெருமரத்துப்பட்டை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 50 கிராம், சீமைச் சாமந்திப்பூச் சூரணம், சாரப்பருப்பு, தேங்காய், சாலாமிஸ்ரிச் சூரணம் வகையொன்றுக்கு 35 கிராம், திராட்சப்பழம் 90 கிராம், தேன் எல்லாச் சரக்கினெடைக்கு 3 பங்கு.

செய்முறை- சூரணங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து மற்றவைகளையும் அரைத்துச் சேர்த்துக் கொள்ளவும். தேனைக்காய்ச்சி நுரைநீக்கிப் பாகுபதத்திலிறக்கிச் சூரணஞ் சேர்த்துக் கிளறிவைத்துக் கொள்ளவும்.

மாத்திரை- 12, 18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இருதயம், விந்துஸ்தானங்கள் ஆகிய இவற்றைப்பலப்படுத்தும்; கபம், வாயு ஆகியவைகளைக் கண்டிக்கும், சொட்டுமூத்திரம், இடுப்புநோய் கீல்நோய் இவைகளைக் கண்டிக்கும். புத்தி தீட்சணியப்படும், பசி தீபன முண்டாகும்.

சீமைத் துத்திவிதைச் சூரணம்

சீமைத்துத்தி சமூலத்தை இடித்த சூரணம் 1 பங்கு, சீனிசருக்கரை 1 பங்கு இவைகளை யொன்றாகச் சேர்த்து வேளையொன்றுக்கு 12 கிராம், சாப்பிட்டு அதன்மேலே அரை ஆழாக்குப்பசும்பால் சாப்பிடவும். தாது நஷ்டந்தீரும் இந்திரியவிளைவு உண்டாகும்.

சீமைத் துத்திவிதைத் தீநீர்

உலர்த்த சீமைத்துத்தி சமூலம் (இதைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்) பச்சை வெட்டிவேர் (இதையும் சன்னத்துண்டுகளாகச் செய்து கொள்ளவும்.) சந்தனத்தூள், இவை வகை ஒன்றுக்கு 350 கிராம், இவற்றைச்சுத்தசலம் 3 படியில் ஓரிரவு ஊற வைத்து வாலையிலிட்டு ஒருபடி திராவகமாக இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 70 கிராம், 80 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மேகவியாதி, நீரெரிச்சல், ஈரலின் சூடு இவை நீங்கும். இருதயம், ஈரல் இவைகளை பலப்படுத்தும்.

பால்சருக்கரை

சீமைத் துத்திவேர் பருமனாகவும், ஒரு முழத்திற்குக் குறைவில்லாததாகவும், மூன்றுவிரல் கனத்திற்கதிகப் பட்டதாகவு முள்ளதை எடுத்து, ஒரு முனையில் நையநசுக்கிப் பசும்பால் தேவையான அளவு ஒரு பாத்திரத்தில் வார்த்து அடுப்பிலேற்றி மேற்படி வேரால் இடைவிடாதுபாலைக்கிளறி வரவும். பாலுறைந்து கட்டியான பின்பு கீழிறக்கி இதற்குச்சமன் சீனிசருக்கரை சேர்த்து மிஸ்ரமித்துக் கொள்வதே பால் சருக்கரை எனப்படும்.

மாத்திரை - 12, 35 கிராம் சாப்பிட்டு அதன்மேல் சீமைத் துத்திவிதை 3, 6 கிராம் அரைத்து அதன் பால் பிழிந்து சாப்பிடவும்.

உபயோகம் - மூலம், வெள்ளை வியாதி இவை நீங்கும்.

கருஞ்சீரக ஜவாரிஷ்

கருஞ்சீரகம், சூரத்துக்கடுக்காய்த்தோல் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், மேல்தோல் நீக்கின சுக்கு ஓமம் இவைகளின் சூரணம் வகை யொன்றுக்கு 35 கிராம், நல்ல தேன் 245 கிராம்.

செய்முறை- சூரணங்களை யொன்றாகச் சேர்த்துத் தேனைக்காய்ச்சிப் பதத்தில் சூரணஞ் சேர்த்து நன்றாகக் கிளறிப் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - வேளையொன்றுக்கு 4 கிராம், 5 சாப்பிடலாம்.

உபயோகம் - ஞாபகசக்தி அதிகமாகும், மறதியை நீக்கும்.

கருஞ்சீரக மாஜூன்

கருஞ்சீரகம் 175 கிராம், முன்னர் சொல்லப்பட்டிருக்கிறபடி சீமைக்காடியில் பக்குவப்படுத்தி உலர்த்தி வறுத்து இடித்த சூரணம் 140 கிராம், சதாபிலைச் சூரணம் மிளகுச் சூரணம், மேல்தோல் நீக்கிச் சுத்தி செய்திடித்த சுக்குச் சூரணம் இவை வகை ஒன்றுக்க 105 கிராம், வெண்பூங்காவி 35 கிராம், தேன் எல்லாவற்றிற்கும் 3 பங்கு, மாஜூன் பாகப்படி செய்து கொள்ளவும்.

மாத்திரை - 4,5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் -கபசுரம், பித்தசுரம், இரைப்பையின் குளிர்ச்சி, குடலில் கபந்தங்கி நோவுண்டாதல் ஆகியவை தீரும்.

வேறு

கருஞ்சீரகம் 35 கிராம், துரிஞ்சி நாரத்தம் பழரசம் 70 கிராம் இந்த ரசத்தில் சீரகத்தைப் போட்டு அதனுடன் கறுப்புப்பு, வளையலுப்பு, இந்துப்பு, இவை வகை ஒன்றுக்கு 10 கிராம் தூள் செய்து போட்டு நீர் சுண்ட உலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை- காலையில் மூன்று விரற்கள் கொண்ட அளவு வாயில் போட்டு மெல்லாமல் மேலே தண்ணீர் குடித்து விழுங்கி விடவும்.

உபயோகம் - மலப்போக்கு, வாந்தி, உஷ்ணம் இவைகளைக் கண்டிக்கும், பசிதீபன முண்டாகும்.

றூமிச்சோம்பு ஜவாரிஷ்

சுக்கு, வெள்ளைமிளகு, றூமிமஸ்தகி, சாதிக்காய் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 15 கிராம் றூமிச்சோம்பு, இலவங்கப்பட்டை, ஓமம், சீரகம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 25 கிராம், சடாமாஞ்சில், இலவங்கம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 10 கிராம், சோம்புச் சூரணம் 20 கிராம், உலர்ந்த சதாபிலைச் சூரணம் அரிசித்திப்பிலிச் சூரணம், இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், சுத்திசெய்த தேன், எல்லாவற்றினெடைக்கு மூன்று பங்கு.

செய்முறை- சூரணங்களை யொன்றாகச் சேர்த்து, தேனை அடுப்பில் வைத்து யெரித்து சூரணங்களைச் சிறுகச் சிறுகத்தூவிக் கிளறிப் பாகப்படி ஜவாரிஷ் செய்து வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 15 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - வாயுகளைக் கண்டிக்கும், பிசுபிசுப்பான கபத்தை போக்கும், அசுத்த மாசுகளை நீக்கும். பழைய இருமல்களைச் சாந்தப்படுத்தும்.

றூமிச் சோம்பை பாகப்படுத்தல்

இது தேவையான அளவில் வேண்டிய தேன் விட்டுப் பிசறி முடிந்து கட்டி அதன்மேல் மண்பூசித்திட்டமாயெரியும் அடுப்பின் கீழ் ஓரிராப்பகல் புதைத்து வழமைபோல் சமையல் முதலானது செய்து மறு நாட் காலையில் எடுத்துக் கொள்ளவும். சூரணம் முதலியவைகளில் பாகப்படுத்தியே உபயோகிக்க வேண்டும்.

அனிசூன் ஜவாரிஷ்

அனிசூன் 70 கிராம், அதிமதுரம், றூமிமஸ்தகி, இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 30 கிராம், கேக்விதை அல்லது ஷாஜீரா, சோம்பு, சாதிப்பத்திரி, சந்நராஷ்டம், மேல்தோல் நீக்கின சுக்கு, லவங்கப்பட்டை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம் வெள்ளைமிளகு, கறி மிளகு, அரிசித்திப்பிலி, அக்கிராகாரம், உலர்ந்த பொதினா இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், ஏலக்காய், வால்மிளகு, குங்குமப்பூ, சடாமாஞ்சில், இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், சீனி 210 கிராம், தேன் 210 கிராம்.

செய்முறை - சூரணங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துத் தேனையும் சருக்கரையும் சேர்த்துப் பாகுசெய்து பதத்தில் சூரணத்தைக் கொட்டி கிளறிப் பாகப்படி ஜவாரிஷ் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 6, 12 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- வாயுகளைக் கண்டிக்கும்; பிசுபிசுப்பான கபத்தைக் கண்டிக்கும்; அசுத்த மாசுகளை நீக்கும், நாள்பட்ட இருமலைப் போக்கும்.

அனிசூன் மாத்திரை

அனிசூன், றூமிமஸ்தகி, அசமதா ஓமம், சீமை மருதோன்றிவிதை, குங்குமப்பூ, கின்னா, குக்கில் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், பிஞ்சுகடுக்காய், தான்றிக்காய், சீமைநெல்லி முள்ளி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம்; உலர்ந்த பொதினா, அசுவகெந்தி, கோஷ்டம், நிலக்கடம்பு, கிச்சிலிக் கிழங்கு, வசம்புக் கரி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம் சதாபிலை ரசம் தேவையானது.

செய்முறை - சூரணங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு முன் கண்ட ரசத்தில் ஒரு சாமம் அரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை -1, 2 சாப்பிடலாம்.

உபயோகம்- வாயுகளை நாசமாக்கும், இசிவு வலிகளைக் கண்டிக்கும், நீர்க்குண்டிக்காயின் வீக்கம் கீல்களின் நோய் ஆகியவைகள் போம்.

அனிசூன் தீநீர்

அனிசூன் ஒருபங்கு, இதனைச் சுத்தஜலம் 6 பங்கில் ஓரிராப்பகல் ஊறவைத்து வழமைபோல் வாலையிலிட்டுத் திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 40,50 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - வாயுகளைக் கரைத்துக் கண்டிக்கும், ஆகாரங்களைச் சீரணிக்கும், ஈரல்மண்ணீரல் ஆகியவைகளின் வரட்சியைக் கண்டிக்கும். சுவாசக் குடிலைச் சுத்தி செய்யும், பாண்டு, காமாலை யிவைகளுக்குமாம். பக்ஷவாதம் வாய்க்கோணல் முதலிய சீதளவியாதிகள் போம்.

அனிசூன் தைலம்

அனிசூன் தைலம் 9 கிராம், வெந்நீர்படி 6, உப்பு 105 கிராம் ஒருநாள் ஊறவைத்து வாலையிலிட்டெரித்துத் திராவக மிறக்கித் திராவகத்தில் மிதக்கும் தைலத்தை வழித்துக் கொள்ளவும்.

மாத்திரை - 2 கிராம், மாங்கிஷத் தீநீரில் அல்லது தகுந்த அநுபானத்தில் சாப்பிடலாம்.

உபயோகம் - பாண்டு முக்கியமாக மகோதரம் நீங்கும்.

குறிப்பு

ஓமத்தில் தைலமெடுப்பது போலும் இதில் தைலம் எடுத்துக் கொள்ளலாம்.

திராக்ஷப்பழ ஷர்பத்து

பச்சைத் திராக்ஷப்பழம் 350 கிராம், உலர்ந்த சீமை அத்திப்பழம் 280 கிராம், இவ்விரண்டையும் 3 படி ஜலத்திற் போட்டுக் காய்ச்சி அரைப்பாகமாக சுண்டின பின் ஒரு மெல்லிய துணியில் முடிந்து கட்டி

தொங்கவிடத் தெளிவான சலம் வடியும். அதில் சீனி 175 கிராம் சேர்த்துப் பாகப்படி ஷர்பத்து செய்து கொள்ளவும்.

மாத்திரை - 12, 15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- மனத்திடுக்கமும், இருதயம், ஈரல் இவைகளின் சூடும் நீங்கும், நல்லிரத்தமுண்டாகும்.

திராக்ஷாதி மாஜூன்

விதை நீக்கிச் சுத்திசெய்த உலர்ந்த திராக்ஷிப்பழம், 700 கிராம், விதை நீக்கின பேரீச்சங்காய் 175 கிராம் பால் சாம்பிராணி 70 கிராம் தேன் எல்லாவற்றி னெடைக்கும் 2 பங்கு, பசும்பால் படி 1 இந்தப் பாலில் அரைப்பங்கில் முன்னிரண்டையும் போட்டு மெதுவாயெரித்து வேகவைத்து நன்றாகக் கடைந்து கெட்டியானபின், தேனைச் சுத்தி செய்து பாகு செய்து அதில் போட்டு சாம்பிராணியைத் தூள் செய்து போட்டு, நெய் பலம் 175, 200 கிராம் விட்டுக் கலந்து கொள்ளவும்.

மாத்திரை- 12 கிராம் காலையில் மாத்திரம் சாப்பிடவும்.

உபயோகம் - இடுப்புநோய் நீங்கும், ஆண்மையுண்டாகும்.

வேறு

உலர்ந்த திராக்ஷப்பழம் 175 கிராம், காட்டுவாகைப் பட்டைச் சூரணம் 90 கிராம், வெண்டைக்காய் வேர்த்தோல் சூரணம் 90 கிராம், சீரகச் சூரணம் 35 கிராம், தேங்காய்ப்பால் 175 கிராம், ஆலம்பால் 90 கிராம் தேன் எல்லாவற்றிற்கும் சமனெடை.

செய்முறை - விதைகளை நீக்கி திராக்ஷப்பழங்களை அம்மியிலரைத்துச் சூரணங்களையும் சேர்த்துக் கொண்டு, ஆலம்பாலையும் தேங்காய்ப்பாலையும் சேர்த்துக் காய்ச்சி ஆலம்பால் உருகினவுடன் தேனை சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் முன்கலவையைச் சேர்த்து மத்தினால் நன்றாய்க்கடைந்துக் கொள்ளவும். இது பிசின் போலிருக்கும்.

மாத்திரை - 2 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் -தாது நஷ்டந் தீரும். இடுப்பு நோய் தீரும்.

திராக்ஷாதி மாத்திரை

கரு ஊமத்தம் விதை 35 கிராம், குறாசானி ஓமம் 20 கிராம், இவ்விரண்டையும் ஒன்றரைப்படி சலத்திலிட்டு அடுப்பேற்றிச்

கொதிக்கவைத்து, அரைப்படியாக சுண்டினபின் துணியால் வடித்து அந்த நீரை மறுபாத்திரத்திலிட்டு அசையாமல் வைத்து வண்டல் கீழ்ப்படிந்தபின், தெளிவை மேலாக இறுத்து மறுபடியும் துணியில் வடித்து, உலர்ந்து சிவந்த வருணமான திராக்ஷப்பழம் 210 கிராம், விதைகளை நீக்கி மேற்படி கியாழத்திலிட்டு, அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து ஒரு துடுப்பினாற் கிளறி (அடிபிடித்துத் தீய்ந்து போகாமல்) தண்ணீர் சுண்டினபின் கீழிறக்கி வெய்யிலில் வைத்து நன்றாய் உலர்த்திக் கொள்ளவும், அல்லது அரைத்து மாத்திரை செய்து உலர்த்திக் கொள்ளவும். 2-3 தினத்தில் உலர்ந்துபோம்.

மாத்திரை - 3-12 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - சளிப்பு, நீர்ப்பீனிசம், சளிப்பினால் உண்டாகும் சகலவியாதிகள், தலைநோய், பல்நோய் இவைகள் தீரும் குளிர்ச்சியினாலுண்டான தலைநோய், சூட்டினா லுண்டான தலைநோய் ஆகிய இரண்டிற்கும் உபயோகப் படினும், குளிர்ச்சியினாலுண்டான வியாதிக்கு அதிகம் உபயோகப்படாது, ஆனால் சூட்டினாலுண்டான வியாதிகளைக் கண்டிக்கும்; விந்து நீர்த்தல் தீரும்.

குறிப்பு

இந்த மருந்தினால் வாந்தி, வயிறு நோயுண்டானால் 2 கிராம் கடுகுரோகணியைக் கியாழம் செய்து சாப்பிடத்தீரும்.

திராக்ஷாதி பானம்

உலர்ந்த திராக்ஷப்பழம் 6 கிராம், பன்னீர் 50 கிராம், இரவு ஊறவைத்து மறுநாள் காலையில் ஊசியினாற் கீறி விதைநீக்கி ஒவ்வொன்றாகச் சாப்பிட்டு மீந்த பன்னீரையும் சாப்பிடவும்.

உபயோகம் - நெஞ்செரிச்சல், இரைப்பையின்எரிச்சல் ஆகியவை தீரும்.

துளசி ஷர்பத்து

துளசியிலை ரசம் பங்கு ஒன்று, சீனிசருக்கரை பங்கு ஒன்று.

செய்முறை- ஷர்பத்துப் பாகப்படி செய்துக் கொள்ளவும்.

மாத்திரை - வேளை ஒன்றுக்கு 12 - 24 கிராம் ஆக; இரண்டு வேளையும் சாப்பிடவும்.

உபயோகம் - இருதயத்திற்கும், இரைப்பைக்கும்பலத்தைக் கொடுக்கும். இருமல், இரைப்பு, சுரம் ஆகியவைகளை நீக்கும். மூளையைச் சுத்தப்படுத்தும். தொற்று வியாதியைத் தடுக்கும்.

குறிப்பு

இதில் அனேக ஜாதிகளுண்டு. ஆனால் கருந்துளசியே சிரேஷ்டகுணமுடையது அந்தச் சாதியில் அகப்படுஞ் சாதியைச் சேர்த்துக்கொள்ளலாம்.

பச்சையிலை அகப்படாவிட்டால் உலர்ந்த இலை 350 கிராம், சுத்தசலம் படி ஒன்றரை, இதில்போட்டுக் காய்ச்சி மூன்றிலொருபாகமாய்ச் சுண்டினபின் இறுத்து வடித்து, சீனிசருக்கரை 350 கிராம் சேர்த்து ஷர்பத்து பாகப்படி செய்து கொள்ளவும்.

பரந்தாதி பானம்

துளசி பச்சையிலை எழுபது கிராம், துளசிவிதை, எலுமிச்சந் துளசிவிதை, காசினிவிதை இவை வகை ஒன்றுக்கு ஐம்பது கிராம், காவுஜுபான், அதிமதுரம் இவை வகை ஒன்றுக்கு 25 கிராம், சோம்பு, பஸ்பாயிஜ் இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், பனப்ஷா வேர்த்தோல் பதினைந்து கிராம், பன்னீர் 950 கிராம், சீமையிலந்தைப்பழம் ரசம் 90 கிராம், சீனிசருக்கரை 700 கிராம், சுத்தசலம் படி அரை.

செய்முறை - சருக்கரை தவிர மற்றவைகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து 12 மணிநேரம் ஊறவைத்து அடுப்பேற்றி மெதுவா யெரித்து மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் நன்றாகப் பிசைந்து வடித்து சீனி சேர்த்து ஷர்பத்து பாகப்படி செய்து கொள்ளவும்.

மாத்திரை 12-25 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மூளையிலுள்ள மாசுகளை நீக்கி அதைச் சுத்திசெய்யும். இருதயத்தைப் பலப்படுத்திச் சந்தோஷப் படுத்தும். சூட்டினாலுண்டாகும் இருமல், ஏங்கல், சூடான வியாதிகள் ஆகிய இவை தீரும்.

விரந்தாதி இருதய குதூகலநி

துளசியிலை 45 கிராம், காசினிவிதை, கருந்துளசி விதை, எலுமிச்சந் துளசிவிதை, இவை வகை ஒன்றுக்கு நாற்பது கிராம், காவுஜுபான், காவுஜுபான்பூ, சோம்பு, பனப்ஷாவேர், மேல்தோல் நீக்கின அதிமதுரம் இவை வகை ஒன்றுக்கு பதினைந்து கிராம், மயிர்ச்சிக்கி, பஸ்பாயிஜ் மாசிப்பத்திரி இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், பன்னீர் எழுநூறு

கிராம், கஸ்தூரிப்பிரம்பு திராவகம் எழு நூறு கிராம், சீமையிலந்தைப்பழம் (Apple) ரசம் 175 கிராம், சுத்தசலம் 525 கிராம், சீனிசருக்கரை 650 கிராம்.

செய்முறை- சருக்கரை தவிர மற்றச் சரக்குகளை நையநறுக்கிப் பன்னீர் முதலிய சலத்தில் ஒருநாள் ஊற வைத்து அடுப்பேற்றி மெதுவாயெரித்து மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கிப் பிசைந்து வடித்துச் சருக்கரை சேர்த்துப் பாகப்படி ஷர்பத்து செய்து கொள்ளவும்.

மாத்திரை - 12-24-36 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - தலைமூளை இருதயம் ஆகிய இவைகளிலுள்ள அசுத்த மாசுகளை நீக்கி, அவற்றைச் சுத்திசெய்து அவைகளைப் பலப்படுத்தும்.

துளசித் திராவகம்

கருந்துளசி (பச்சையிலை) 1400 கிராம், சுத்தசலம் படி ஆறு.

செய்முறை- மேற்படி இரண்டையும் திராவக வாலையிலிட்டு 3-படி திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை- 70- 100 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மூளை, இருதயம், இரைப்பை, ஆகியவைகளைப் பலப்படுத்தும்; சித்த பிரமையை நீக்கும். ஜீரணசக்தி, ஞாபகசத்தி ஆகிய இவைகளை அதிகப்படுத்தும்.

குறிப்பு

திராவகம் அதிகம் காரமாக வேண்டுமானால் சலத்தைக் குறைத்துக் கொள்ளவும், உலர்ந்த இலையானால் இலை பங்கு -1, சுத்தஜலம் பங்கு -4 சேர்க்க வேண்டும்.

மேற்கண்ட விதமாகத் திராவகம் இறக்கி அதற்கு அரைபங்கு சருக்கரைசேர்த்து ஷர்பத்து செய்து கொள்ளலாம்.

வெள்ளரிவிதைச் சூரணம்

வெள்ளரிவிதைப்பருப்பு, கெக்கரிவிதைப்பருப்பு, மூலாம் பழவிதைப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், காசினிவிதை, கஷ்ஒஸ்விதை இவை வகை ஒன்றுக்கு பதினைந்து கிராம், அஸ்மதாஓமம், றூமிச்சோம்பு இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், ஜரிஷ்க் இருபது கிராம், ரேவல்சீனி ஐந்து கிராம், மூங்கிலுப்பு 12 கிராம், ரோஜாப்பூ பதினைந்து கிராம், இவையெல்லாவற்றையுமிடித்துச் சூரணம் செய்துக் கொள்ளவும்.

மாத்திரை - வேளை ஒன்றுக்கு 8 கிராம், காடி மது ஷர்பத்து முப்பத்தைந்து கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - ஈரல் வீக்கத்தைக் கண்டிக்கும், நீர்க்கட்டு, நீரடைப்பு ஆகியவைகளை நீக்கும்.

வெள்ளரிவிதை ஷர்பத்து

நாட்டு வெள்ளரிவிதை 175 கிராம், சீமைவெள்ளரிவிதை 175 கிராம், சீரகம் இருபது கிராம், சிறுநெருஞ்சிமுள் அறுபது கிராம், பருப்புக்கீரைவிதை நூறு கிராம், காசினிவிதை நூறு கிராம், காஹூவிதை நூற்றியைந்து கிராம், கொத்துமல்லி விதை நூறு கிராம்.

செய்முறை - இவற்றையெல்லாம் ஓரிறவு ஊறவைத்து அம்மியில் அரைத்து ஒருபடி சலத்தில் கரைத்துப் பிழிந்த பாலுக்குச் சமனெடை சீனி சேர்த்து பாகப்படி ஷர்பத்து செய்து கொள்ளவும்.

மாத்திரை - 40- 60 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- மேகவியாதி, நீரடைப்பு, நீரெரிச்சல், நீர்க்கட்டு ஆகிய இவை தீரும்.

கியாறைன் பில்லை மாத்திரை

சீமை வெள்ளரிவிதைப் பருப்பு எழுபது கிராம், நாட்டு வெள்ளரிவிதைப் பருப்பு எழுபது கிராம்,கரபஸ்ஓமம், கஞ்சாவிதை இவை வகை ஒன்றுக்கு பதினாறு கிராம், சோம்பு முப்பத்தைந்து கிராம், சீமைதேவதாரிவித்து, குங்குமப்பூ, சுக்காங் கீரைவித்து, மேல்தோல் நீக்கின பாதம் பருப்பு, இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், அபினி 4 கிராம், மருவின் விதை 20 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையு மிடித்துச் சூரணம் செய்து வஸ்திரகாயஞ் செய்த சோம்பையரைத்துக் கரைத்து வடித்த சலம் விட்டு அரைத்துப் பில்லை மாத்திரை செய்து கொள்ளவும்.

மாத்திரை - 4, 6 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மேற்கண்ட வியாதிகள் தீரும்.

சீத குதூகலனி

சீமை வெள்ளரிவித்துப்பருப்பு 70 கிராம், நாட்டு வெள்ளரிவித்துப்பருப்பு 70 கிராம், சுரைவிதைப்பருப்பு 60 கிராம், முலாம்பழவிதைப் பருப்பு 60 கிராம், ரோஜாப்பூ, மூங்கிலுப்பு,

பஹமனேசுபேத், காவுஜ-பான், இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், சந்தனம் கொத்துமல்லிவிதை 10 கிராம், பருப்புக்கீரை விதை 35 கிராம், ஜரிஷ்க் 60 கிராம் சீனி 1 கிலோ

செய்முறை - பருப்பினங்களை அரைத்துச் சூரணத்திற் கலந்து, சீனியுடன் ஜரிஷ்க்கைச் சேர்த்துக் கொஞ்சம் சலம் விட்டுக் காய்ச்சிப் பாகுபதத்தில் சூரணஞ் சேர்த்துச் சந்தனக்கட்டையின் மத்தினாற் கடைந்து எடுத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 12, 15 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- சூடு, விடாச்சுரம், அஸ்திவெட்டை, தேக அழலை, நீர்ச்சுருக்கு இவைகளை நீக்கித் தேகபலம் முதலியவைகளை யுண்டாக்கும்.

மஹாசீத குதூகலனி

மேற்படி சாமான்களுடன் முதற்பாகத்தின் பக்குவலக்ஷணத்திற் சொல்லியபடி பக்குவப்படுத்தின துளையிடாத நன்முத்து, நற்பவளம், கஹருபா இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், சேர்த்துக்கொள்ளவும்.

மாத்திரை - 6, 9 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- மேற்கண்ட வியாதிகளை நீக்கி தேகபலம், மனோபலம், மனோற்சாகம், மனக்களிப்பு முதலியவைகளை யுண்டாக்கும்.

சொர்ண மகாசீத குதூகலனி

மேற்கண்ட வஸ்துக்களுடன் முதற்பாகத்தின் பக்குவ லக்ஷணத்திற் சொல்லியபடி பாகப்படுத்தின தங்கம், வெள்ளி இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், அல்லது தங்கரேக்கு 10, வெள்ளிரேக்கு 10 சேர்த்துப் பாகப்படுத்திக் கொள்ளவும்.

மாத்திரை- 5 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் -மேற்கண்ட குணங்களுடன் முகவஜீகரம், தேஜஸ-, இரத்தச்சுத்தி முதலிய அனேக குணங்கள் உண்டாகும்.

பருப்புக்கீரை வித்துச் சூரணம்

பருப்புக்கீரை வித்தை யிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் 60 கிராம், சந்தனம், கொத்துமல்லி வித்து, மூங்கிலுப்பு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம். சீனிசருக்கரை 160 கிராம்.

செய்முறை - சூரணங்களை ஒன்றாகச் சேர்த்துச் சருக்கரையையும் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும்.

மாத்திரை - 2, 3, 4 கிராம் இரண்டுவேளையும் சாப்பிடலாம்.

உபயோகம் - வாயிலிருந்து இரத்தம் விழுதல், நுரையீரலின் புண், ஈரலின்சூடு, பித்தச்சூடு முதலியவைகள் தீரும்.

பருப்புக்கீரை வித்து ஹல்வா

பருப்புக்கீரைவித்துச் சூரணம் 70 கிராம், வெந்தயம் வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம், கருவேலம்பிசினை நெய்யில்வறுத்தரைத்த சூரணம், காறலில்லாத சாரப்பருப்பு, மேல்தோல் நீக்கின பாதம்பருப்பு, பன்னீர் விட்டிழைத்துலர்த்தின சந்தனம், மூங்கிலுப்புச் சூரணம், காசினிவிதைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 30 கிராம், சீனாகற்கண்டு 350 கிராம் நல்ல பசுவின் நெய் 175 கிராம்.

செய்முறை- கற்கண்டைப் பாகுசெய்து பதத்தில் சூரணங்களை யெல்லாம் கொட்டிக்கிளறி நெய்வார்த்திறக்கி கொள்ளவும்.

மாத்திரை - 12 கிராம் 18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - தேகச்சூடு, அஸ்திச்சூடு முதலியவைகள் தணிந்து தேகங் கொழுக்கும். மார்நோய் ஈரற்சூடு முதலியவைகள் தீரும்.

பருப்புக்கீரை வித்து ஷர்பத்து

பருப்புக்கீரை வித்து 260 கிராம், இதை யிடித்துப் பாலெடுத்து வடித்து ஒரு மண்பாத்திரத்தில் ஒருமணிநேரம் அசையாமல் வைத்துப்பாலை மெதுவாக இறுத்துக்கொண்டு அடியிற் படிந்திருக்கும் கருமையான வண்டலை நீக்கி விட்டுப் பாலெடைக்குச் சமனெடை சீனிசேர்த்துப் பாகப்படி ஷர்பத்து செய்து கொள்ளவும்.

மாத்திரை- 12, 15 கிராம், இருவேளையும் சாப்பிடலாம்.

உபயோகம் - சூட்டினாலுண்டான இருமல் நோய் மலச்சிக்கல், நீரடைப்பு இவை நீங்கும்.

சாந்தி சமனபில்லை மாத்திரை

பருப்புக்கீரை விதை 35 கிராம், ரோஜாப்பூ இதழ் 15 கிராம் கருவேலம்பிசின், மூங்கிலுப்பு இவை வகைக்கு 15 கிராம், சீமை வெள்ளரி விதைப்பருப்பு, மூலாம்பழ விதைப்பருப்பு, சுரை விதைப்பருப்பு,

அதிமதுரம் இவை வகைக்கு 20 கிராம் நிஷாஸ்தா 12 கிராம் குங்குமப்பூ 4 கிராம், பச்சைக் கற்பூரம் 3 கிராம்.

செய்முறை - மேற்படி சரக்குகளையும் ஒன்றாகச் சேர்த்தரைத்து இசுபகோல் விதையை ஊறவைத்தெடுத்த கோழையின் நீரைவிட்டரைத்துப் பில்லை மாத்திரைகள் செய்யவும்.

மாத்திரை - 3 கிராம் 6 கிராம் வரை சாப்பிடலாம்.

உபயோகம் -விடாச்சுரம், அஸ்திச்சூடு, அஸ்திவெட்டை இவை தீரும்.

இசுபகோல் விதைச் சூரணம்

இஸ்பகோல் விதை 25 கிராம், கொத்துமல்லி 8 கிராம், மூங்கிலுப்பு 12 கிராம், இஸ்பகோல் விதையைத் தவிர மற்ற இரண்டையும் இடித்துக் தூள்செய்து இஸ்பகோல் விதையை இடிக்காமல் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை - ஆகாரம் சாப்பிட்டபின் 4 கிராம், சாப்பிடவும்.

உபயோகம் - சுரத்தோடு காணும் தலைநோய் சுரம் இவை தீரும்.

வேறு

இஸ்பகோல் விதை 20 கிராம் சப்ஜாவிதை, மருவின் விதை, காட்டுப்புளிச்சக்கீரை விதை இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், பூங்காவி, கருவேலம்பிசின், கசகசா இவை வகை யொன்றுக்கு 15 கிராம், பருப்புக்கீரைவிதை, குறுவாவிதை, நிஷாஸ்தா இவை வகை யொன்றுக்கு 4 கிராம்.

செய்முறை - வித்துகளை வறுத்தும், மற்றச் சரக்குகளை வறுக்காமலும் இடித்துச் சூரணம் செய்து சேர்த்துக் கொள்ளவும்.

உபயோகம்- வயிற்றுக்கடுப்பு, வயிற்றுளைச்சல், சீதபேதியிவைகள் தீரும்;

இசுபகோல் உமிச் சூரணம்

இசுபகோல்விதை 70 கிராம், கொஞ்சம் சலம் தெளித்து ஊறவைத்துக் கையினால் தேய்த்து உமியை யெடுத்துக் கொள்ளவும், கொத்துமல்லி விதையை இடித்து மேல்தோல் நீக்கி உள்விதையின் தூள் மேற்படி உமிக்குச் சமனெடை; இரண்டையும் சேர்த்திடித்துச் சூரணஞ் செய்து, அந்த எடையிற்பாதி சீனிசேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை -6 கிராம் வெண்ணெயில் அல்லது நெய்யில் சாப்பிடவும்.

உபயோகம்-வயிற்றுளைவு, சீதபேதி இவைகள் போம்.

இசுபகோல் ஊறற் கியாழம்

இசுபகோல் விதை 20 கிராம், புதுப்பானையிலிட்டுக் கொஞ்சம் நீர்வார்த்து அவித்து இரவில் பனியில் வைத்துக் காலையில் நீர்க்குறியை உள்ளில் செலுத்தி நீருக்கிருப்பதினால் நீரெரிச்சல், நீரடைப்பு இவை தீரும்.

வேறு

இசுபகோல்விதை 8 கிராம்,பார்த்தங்கு, ஸப்ஜாவித்து, கற்கண்டு, பாலங்கு இவை வகை ஒன்றுக்கு 3 கிராம், ஒரு சிறங்கைத் தண்ணீரி லூறவைத்துச் சாப்பிடச் சீதபேதி சிறுகுடல் முறுக்கு, வயிற்றுளைவு இவை தீரும்.

குறிப்பு.இவ்வித்துக்கள் மலத்துடன் வெளிப்பட்டுப் போம்,

பேதனாவித்து 35 கிராம்; 168 மி.லிட்டர் சலத்தில் 4 மணிநேரம் ஊறவைத்து வடித்த கோழை நீரில் கற்கண்டு 35 கிராம், பொடித்துப் போட்டு சாப்பிட வயிற்றெரிவு, நுரையீரல் ரணம், தொண்டை வரட்சி முதலியவைகள் தீரும்.

மேற்கண்ட விதமாய் ஊறவைத்தெடுத்த பேதானாக் கோழைநீர் 90 கிராம் பன்னீர் 175 கிராம் மலாக்கா சந்தன தூள் 50 கிராம், இட்டு 6 மணி நேரம் ஊறவைத்து அடுப்பில் வைத்துக்காய்ச்சி அரைபாகம் சுண்டினபின் இறக்கி வடித்த கியாழம், சீனிசருக்கரை 175 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து ஷர்பத்து பாகப்படி காய்ச்சிக் கொள்ளவும்.

மாத்திரை - 24, 36 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- நீரெரிச்சல், மார்பு எரிச்சல், தொண்டை யெரிச்சல் முதலிய சூடான வியாதிகள் தீரும்.

பேதானா ஷர்பத்து வேறுவகை

பேதானா சூரணம் 55 கிராம், சந்தனத்தூள், பருப்புக் கீரை விதைச் சூரணம், மூங்கிலுப்புச் சூரணம் இவை ஒன்றுக்கு 18 கிராம், சீனிசருக்கரை 70 கிராம்.

செய்முறை - சருக்கரையைப் பாகுசெய்து பதத்தில் மேற்படி சூரணங்களைப் போட்டு நன்றாய்க் கிளறிப் பத்திரப் படுத்தவும்.

மாத்திரை -24- 30 கிராம் சாப்பிடவும்

பேதானா கலவைச் சூரணம்

பேதானாச் சூரணம் 18 கிராம் நெல்லிமுள்ளிச் சூரணம், பாதம்பிசின் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், சீனி சருக்கரை 35 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் ஒன்றாய் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை - 3, 6, 9 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - வயிற்று முறுக்குடனுண்டாகும் இரத்த பேதி சூட்டினாலுண்டான மலப்போக்கு பித்தத்தினாலுண்டான பேதி ஆகியவைகள் தீரும்.

கொத்துமல்லி விதைக் கியாழம்

கொத்துமல்லி விதை 10 கிராம். இதனை ஒன்றிரண்டா யிடித்துக் கொள்ளவும், சீமை நெல்லிமுள்ளி 20 கிராம், தண்ணீரில் ஊறவைத்து நன்றாய்ப் பிசைந்து பிழிந்து வடித்து அதில் எலுமிச்சம்பழ ஷர்பத்து 12 கிராம் விட்டுச் சாப்பிட தீராத வாந்தி தீரும்.

கொத்துமல்லி விதைச் சூரணம்

கொத்துமல்லிவிதை, சீமை வெள்ளரிவிதைப் பருப்பு, வெள்ளரிவிதைப்பருப்பு, இனிப்புப் பூசனிக்காய் விதை, பருப்புக்கீரை விதை, இவை வகை ஒன்றுக்கு சமனெடை, எல்லாவற்யையும் ஒன்றாய்த்தூள் செய்து இந்தச் சூரணத்திற்கு சமன்சருக்கரை கலந்து ஒன்றாய்ச் சேர்த்துக் கொள்ளலாம்.

மாத்திரை - 15, 18 கிராம் காலையில் அல்லது மாலையில் படுக்கைக்குப் போகும் பொழுது சாப்பிடவும்.

உபயோகம் - பித்தத் தலைநோய், மயக்கம், இவைகள் நீங்கும்.

வேறு

கொத்தமல்லிவிதை 25 கிராம், சீமைநெல்லி முள்ளி, 12 கிராம், காவுஜூபான், ரோஜாப்பூ, சந்தனம் இவை வகை ஒன்றுக்கு 9 கிராம், சருக்கரை 100 கிராம் மேற்படி சரக்குகளைச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை - 12-15 கிராம், இருவேளையும் சாப்பிடவும்.

உபயோகம் - மயக்கத்துடன் காணுகிற தலைநோய், சுரத்தோடு காணுகிற தலைநோய், மனக்கலக்கம், இருதய துடிப்பு இவைகள் தீரும்.

வேறு

இஸ்பகோல், சப்ஜாவிதை, மருள்விதை, நிஷாஸ்தா வறுத்த பருப்புக் கீரை விதை, கருவேலம் பிசின், மூங்கிலுப்பு இவை வகை ஒன்றுக்குச் சமனெடை முன் மூன்று சரக்குகளைத் தவிர மற்றவைகளையிடித்துச் சூரணம் செய்து எல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை - 8 கிராம், 10 கிராம் நெய்யில் சாப்பிடவும்.

உபயோகம் - சீதபேதி, இரத்தபேதி, இவைகள் தீரும்.

வேறு

பன்னீரில் ஊறவைத்து உலர்த்தின கொத்துமல்லி விதை, இளவறுப்பாய் வறுத்த கசகசா, காஹ்ஹுவிதை, மேல்தோல்நீக்கின பாதாம்பருப்பு, மேல் தோல் நீக்கின இனிப்புப் பூசனிவிதைப் பருப்பு இவை வகை ஒன்றுக்கு சமனெடை, இதற்குச் சமன் சருக்கரை மேற்கண்ட சரக்கெல்லாவற்றையும் சூரணித்து, சருக்கரையைச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை - வேளையொன்றுக்கு விராகனெடை 10, 15 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - வரட்சிகளை நீக்கி மூளையைப் பலப்படுத்தும், கண்ணில் பித்தநீர் இறங்குவதைத் தடுப்பதிற் சிறந்தது, மறதி வியாதியை நீக்கும்.

வேறு

கொத்துமல்லிவிதை, காஹ்ஹுவிதை, கசகசா, இவை வகை ஒன்றுக்கு 8 கிராம் அதிமதுரம்சோம்பு, லவங்கப் பட்டை, இவை வகை ஒன்றுக்கு 4 கிராம் இவைகளைச் சூரணம் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 10, 15 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - பீனிச நோய், மூளைவரட்சி இவை தீரும்.

கெக்கரிவிதை முலாம்பழ விதை

இவ்விரண்டின் யோகங்களை வெள்ளரிவிதையின் யோகங்களின் சொல்லியிருக்கப்பட்ட யோகங்களைப் போலவே செய்து கொள்ள வேண்டும்.

காஹூவிதை அல்லது சல்லாத்து விதை மாத்திரை

மேற்படி விதைச் சூரணம் 18 கிராம், பன்னீர் விட்டிழைத்துலர்த்தின சந்தனம் 12 கிராம், பச்சைக் கற்பூரம் 3 கிராம், பச்சிலை, சாஸ்திரபேதி, இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 5 கிராம், கஸ்தூரி 2 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திற் போட்டு, அஞ்சுபலம் சலத்தில் ஒன்றரைப்பல பேதானாவித்தை 12 மணி நேரம் ஊறவைத்தெடுத்த கோழை நீர் விட்டு 4 மணிநேரம் அரைத்துக் குன்றிமணி யெடையுள்ள மாத்திரைகள் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 1, 2, 3 சாப்பிடலாம்.

உபயோகம் - வரட்சியினாலுண்டான தாகத்தைத் தணிக்கும், பித்தக் கொதிப்பு, இரத்தக் கொதிப்பு அஸ்திச் சூடு ஆகியவைகள் தீரும்.

சல்லாத்துவிதைச்சூரணம்

மேற்படி விதைச் சூரணம் 90 கிராம், கொத்துமல்லி விதைச் சூரணம் 60 கிராம், மூங்கிலுப்புச் சூரணம் 20 கிராம், றூமிமஸ்தகிச் சூரணம் 35 கிராம், கற்கண்டு சூரணம் 210 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

உபயோகம் - இரைப்பையிலிருந்து மேலெழும்பும் ஆவியைத் தடுக்கும்.

சல்லாத்துவிதை ஷர்பத்து

கற்கண்டு 260 கிராம்,இதில் கொஞ்சம் பன்னீர் விட்டுப் பாகுசெய்து பாகு பதத்தில் சல்லாத்து விதைச் சூரணம் 70 கிராம், றூமிமஸ்தகிச் சூரணம் 10 கிராம், போட்டு நன்றாக மிஸ்ரமித்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - 12, 15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - பித்தக் கொதிப்பு இரத்தக்கொதிப்பு' தாகம், இரைப்பையின் எரிவந்தம் முதலியவைகள் தீரும்.

குறிப்பு

றூமிமஸ்தகியை யோகங்களில் சேர்க்கவேண்டியிருந்தால் அவை சூடாயிருக்கையில் சேர்த்தால் அவை அதிகக் கசப்பாய்விடும், ஆகையால் நன்றாகக் குளிர்ந்தபின் சேர்க்கவேண்டியது.

பச்சைக் கர்ப்பூர லேகியம்

பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ, சாதிக்காய், மேல்தோல் நீக்கின சுக்கு, ஜாதிபத்திரி, லவங்கப்பட்டை, பெருலவங்கப் பட்டை,லவங்கம், திப்பிலிமூலம், எலுமிச்சந் துளசியிலை இவகைளின் சூரணம் வகைக்குச் சமனெடை; சூரணத்திற்கு மூன்றெடைத் தேன்.

செய்முறை - சூரணங்களை யொன்றாகச் சேர்த்து தேனைக்காய்ச்சி நுரைநீக்கி அதில்மேற்படி சூரணங்களைக் கொட்டி கிண்டி லேகியம் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 12, 15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இரைப்பையின் துர்ப்பலம், ஈரலின் துர்ப்பலம் இவைகள் தீரும், வாயுகளைக் கண்டிக்கும்.

பச்சைச் கர்ப்பூர மாத்திரை

பச்சைக்கர்ப்பூரம் 8 கிராம், மூங்கிலுப்பு, துளையிடாத நன்முத்து, சந்தனம், கொத்துமல்லிவிதை இவை வகை ஒன்றுக்கு 5 கிராம், சுரைவிதைப்பருப்பு, பேதனா விதைப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், பூங்காவி 5 கிராம், கருவேலம்பிசின் நான்கு குன்றிமணியெடை, இவைகளில் சூரணம் செய்ய வேண்டியவைகளைச் சூரணம் செய்து அதினுடன் பருப்பினங்களையும் சேர்த்துச் சந்தனத்திராவகம், அல்லது சந்தனக் கியாழத்தினா லரைத்து மாத்திரைசெய்து வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 4, 5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- விடாச்சுரம், அஸ்திவெட்டை,அஸ்திசுரம், பேதியுடன் கூடிய காசநோய் இவைகள் தீரும்.

தீபகர்ப்பூர எண்ணெய்

புதிதான எள்ளெண்ணெய் 350 கிராம், கர்ப்பூரம் 50 கிராம், சாம்பிராணி, பூலாங்கிழங்கு, கோரைக்கிழங்கு இவை வகை ஒன்றுக்குப் 10 கிராம், சந்தனத்தூள் 10 கிராம், ஏலரிசி 30 கிராம், இவைகளையெல்லாம் பொடித்து மேற்படி எண்ணெயிற் போட்டு, ஒரு சட்டியில்வார்த்து சட்டிவாய்மூடிச் சீலைமண்செய்து மூன்றுநாள் வைத்து, நாலாநாள்

பிரித்துச் சூரியபுடமாக பத்து நாள்வைத்து, சீஷாவில் ஊற்றிவைத்துக் கொள்ளவும்.

உபயோகம் - இதைத் தேகத்திற்பூசுவதினால், உஷ்ண வியாதிகளும், வாயுகளும் தீரும்.

பச்சைக் கர்ப்பூர திராவகம்

உலராத தாமரைப்பூ,உலராத ரோஜாப்பூ மொக்கு, காவுஜுபான் இவை வகை ஒன்றுக்கு 280 கிராம், காசினிக் கீரை, பிரப்பமிலை, காஹுக்கீரை, சீமை யிலந்தைப்பழம், சுரைக்கொடி, வெள்ளரிக்கொடி இவை வகை ஒன்றுக்கு 840 கிராம், கொத்துமல்லிவிதை, சுரைவிதைப்பருப்பு, சந்தனம், காசினிவித்து, வெள்ளரிவிதைப்பருப்பு, மூலாம் பழவிதைப்பருப்பு, சோம்பு; சாஹுவித்து, பருப்புக்கீரை வித்து, பனப்ஷாபூ, மூங்கிலுப்பு இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், பச்சைக்கர்ப்பூரம் 80 கிராம் , பன்னீர் 1400 கிராம், சுத்தசலம் படி பத்து.

செய்முறை - பாகப்படி வாலையிலிட்டுப் பத்து சீஷா திராவகம் இறக்கிக்கொள்ள வேண்டியது.

மாத்திரை - 70 - 90 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - முன்பாகத்தில் கூறிய வியாதிகள் போம்.

பச்சைக் கர்ப்பூர பில்லை மாத்திரை

சுரைவிதைப்பருப்பு,வெள்ளரிவிதைப் பருப்பு, மூலாம் விதைப்பருப்பு, பருப்புக்கீரை விதை, பேதனாவிதைப் பருப்பு இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், ரோஜாப்பூ மொக்கு, கருவேலம்பிசின், சந்தனம், நிஷாஸ்தா, பாதம் பிசின் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம்,அதிமதுரப்பால், மூங்கிலுப்பு இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், காஹுவிதை 12 கிராம், பச்சைக் கர்ப்பூரம் 2 கிராம்.

செய்முறை- சூரணம் செய்ய வேண்டியவைகளைச் சூரணம் செய்து, பருப்பினங்களையும் சேர்த்துப் பேதானா விதைக் கோழையை விட்டரைத்துப் பில்லை மாத்திரை செய்து கொள்ளவும்.

மாத்திரை - 4 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரற்சூடு, இருதயச்சூடு, நீரில் இரத்தம் விழுதல், வாயில் இரத்தம் விழுதல், விடாச்சுரம்,காசம் இவைகள் நீங்கும்.

சீமை நறுவிலிப்பழப் பிரயோகம்

விதை நீக்கின சீமை நறுவிலிப்பழம் 1400 கிராம், விதை நீக்கின திராக்ஷைப்பழம் 140 கிராம், சரக்கொன்றை புளி 60 கிராம் இதை பாதம் எண்ணெயில் அல்லது பசுவின் நெய்யின் புரட்டி வைத்துக்கொள்ளவும். எல்லாவற்றையும் ஒன்னேமுக்கால்படி சலத்திலிட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து, கையினாற் பிசைந்து வடித்துச் சீனிசருக்கரை 450 கிராம், சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 12, 15 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - இருமல், தொண்டை வரட்சி, நுரையீரல் வரட்சிஆகியவைகளுக் குப்யோகப்படும்.

நறுவிலிப்பழ ஷர்பத்து

தேவையான அளவு சீமை நறுவிலிப்பழத்தைத் தேவையான சலத்திலிட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்துப்பிசைந்து வடித்து, சீனி சமன் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தி லிறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 12, 18 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - வரட்சியினா லுண்டான இருமல், வரட்சியினா லுண்டான சளிப்பு இவை தீரும்.

நறுவிலிப்பழ லேகியம்

சீமை நறுவிலிப்பழம் 350 கிராம். இதனை ஒருபடி சலத்திலிட்டு வேக வைத்து மூன்றிலொரு பாகமான பின் இறக்கிக் கையினால் பிசைந்து வடித்து,தண்ணீர்விட்டான் கிழங்கின் சாறு 140 கிராம், (சூரியகாந்தி ஓரிலைத்தாமரை வேறுவேறு மூலிகைகள் ஆண்மை உண்டாகும் என குறிப்பிடுவது இங்கு ஓரிலைத் தாமரை எடுத்துக் கொள்ளலாம். முதல் பதிப்பில் தாமரை இலைச் சூரணம் என இருப்பதால் சூரியகாந்தி இலை என்று எடுத்துக்கொள்ளலாம்.) சூரியகாந்தி இலைச் சூரணம் 70 கிராம், நிலப்பனைக் கிழங்கின் சூரணம் 70 கிராம், சீமை நீர்முள்ளி விதைச் சூரணம் 70 கிராம், மேற்படி கஷாயத்தில் தேனையும் சாற்றையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகு செய்து சூரணங்களைச் சேர்த்து பாகப்படி லேகியஞ் செய்துக் கொள்ளவும்.

மாத்திரை - 12 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - ஆண்மை யுண்டாகும், தாது நஷ்டம் இந்திரிய நஷ்டம் இவை தீரும்.

காவுஜுபான் ஷர்பத்து

காவுஜுபான் நூறு கிராம் பனப்ஷா 55 கிராம், உலர்ந்த காட்டுத் துளசியிலை 35 கிராம், மஞ்சட்கடுக்காய், அப்திமூன், பஸ்பாயிஜ், உஸ்துகுதூஸ் இவை வகை ஒன்றுக்கு கிராம் 35, இவைகளை நறுக்கிச் சிதைத்து மூன்றுபடி சலத்திலிட்டு, மூன்றிலொரு பாகமாகச் சுண்டக் காய்ச்சி நன்றாகப் பிழிந்து வடித்து அதில் 1 கிலோ சருக்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 30- 35 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - கரும்பித்தம், இருதயத் துடிப்பு, இருதய பலவீனம், பைத்தியரோகம், மனக்கலக்கம் இவைகள் தீரும்.

காவுஜுபான் தீநீர்

தேவையான அளவு காவுஜுபான், இதை அந்த அளவுக்குப் பத்து பங்கு ஜலத்தில் ஓரிரவு ஊறவைத்து மறுநாள் துணியில் முடிந்து வாலையிலிட்டு அது ஊறின ஜலத்தையும் வார்த்துக் தீநீரிறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 35- 60 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - உறுப்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கும், பைத்தியரோகம், மனந்தடுமாறுல், மார்பு துடித்தல், மனக்கலக்கம், இருதயத்துடிப்பு, மூர்ச்சை ரோகம் முதலியவை போகும், தேகசுபாவச் சூட்டை விர்த்தி செய்யும்.

வேறு

காவுஜுபான் இலை 160 கிராம், காவுஜுபான்பூ 32கிராம், காட்டுத் துளசியிலை, கோராப்பட்டு, தாமரைப்பூ இவை வகை ஒன்றுக்கு 60 கிராம், சந்தனம் 35 கிராம், ரோஜாப்பூ 90 கிராம், நன்னாரிவேர், அகருகட்டை இவை வகை ஒன்றுக்கு 25 கிராம், சுத்தஜலம் படி இரண்டரை, சரக்குகளை யெல்லாம் ஜலத்தில் ஒருநாள் ஊறவைத்து வாலையிலிட்டு ஒன்னேகால் படி திராவகமிறக்கி அதில் லவங்கம், ஜாதிக்காய், இவை வகை ஒன்றுக்கு 25 கிராம், ஸாலாமிஸ்றி, பஹமனேசுறுக், போஜிதான்மிஸ்றி, பூமிச்சருக்கரைக் கிழங்கு, சடாமாஞ்சி, றூமிமஸ்தகி, லவங்கப்பட்டை இவை வகை ஒன்றுக்கு 35கிராம், இச்சரக்குகளையெல்லா மிடித்து நைய நறுக்கி முன்திராவகத்திற் போட்டு அதனுடன் பன்னீர் 700 கிராம் விட்டு வாலையிலிட்டு அரை அல்லது முக்கால் படி திராவக மிறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 70 -90 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் -மேற்கண்ட வியாதிகள் நீங்கித் தேகபலம், தேககாந்தி, ஆண்மை ஆகிய இவைகளுண்டாகும்.

காவுஜூபான்பூவின் ஷர்பத்து

காவுஜூபான்பூ 180 கிராம், தாமரைப்பூ, காட்டுத்துளசியிலை, பன்னீர் விட்டிமைத் துலர்த்தின சந்தனம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம்,பன்னீர், கஸ்தூரிப் பிரம்புத்திராவகம், தராஇலைத் திராவகம், காவுஜூபான் திராவகம் இவை வகை ஒன்றுக்கு 350 கிராம், சருக்கரை 350 கிராம், கற்கண்டு 350 கிராம், வெள்ளிரேக்கு, தங்கரேக்கு சக்திக் கேற்ற அளவு.

செய்முறை - சரக்குகளை யெல்லாமிடித்து அவ்வெடைக்கு, எட்டு பங்கு தண்ணீர் விட்டுக் காய்ச்சி அரைப்பாகமாகச் சுண்ட வைத்து இறக்கிப் பிழிந்து இறுத்து வடித்த கிஷாயத்துடன் முன் திராவகங்களையும் சேர்த்து அதிற் சருக்கரையும் கற்கண்டையும் கரைத்துப் பாகுபதத்தில் இறக்கி அதில் ரேக்குகளைச் சேர்த்துச் சந்தனக்கட்டை மத்தினாற்கடைந் தெடுத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 12- 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தைப் பலப்படுத்தும், மனந்தடுமாறல், மனக்கலக்கம், பைத்தியரோகம் இவை தீரும்.

சீமையத்திப்பழப் பிரயோகம்

மேற்படி பழத்தின் மேல்தோலை நீக்கிச் சிறு பில்லைகளாக அறுத்து ஒவ்வொரு பில்லையையும் பாதம் நெய்யில் நனைத்துச் சீனாகற்கண்டுப் பொடியில் புரட்டி ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைத்து 1-மணி நேரம் சென்றபின் ஒவ்வொன்றாகச் சாப்பிடவும். இவ்விதம் 2 வேளையும் சாப்பிடலாம்.

உபயோகம் - மலபந்தம் நீங்கும், இரத்தவிருத்தி அதிகமாகும். மனதிற்குக் களிப்பை யுண்டாக்கும்.

அத்திப்பழக் கியாழம்

உலர்ந்த அத்திப்பழம் எட்டு கிராம், சோம்பு, அதிமதுரம், மஞ்சட் கடுக்காய்த்தோல் இவை வகை ஒன்றுக்கு 5 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் 255 மில்லி லிட்டர் சலத்திலிட்டுக் காய்ச்சி,மூன்றிலொரு பாகமாகச் சுண்டின பின் இறக்கிப் பிசைந்து

வடித்துச் சாப்பிடவும். இப்படி வேளைக்கு வேளைப் புதிதாகச் செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 1-2 பழங்கள் சாப்பிட்டு வரலாம்.

உபயோகம் - மலபந்தம் நீங்கும். கபத்தைக் கண்டிக்கும், இரத்தவிருத்தி உண்டாகும்.

பித்தத்தைப் பக்குவப்படுத்தும் கிஷாயம்

ரோஜாப்பூ ஆறு கிராம், சோம்பு ஆறு கிராம், அதிமதுரம் ஆறு கிராம், காவுஸுபான் மூன்று கிராம், உலர்ந்த சீமையிலந்தைப்பழம் 5, சீமைநறுவிலிப்பழம் 5, ஆலுபுகாராப்பழம் 5, நெல்லிமுள்ளி மூன்று கிராம், உலர்ந்த தாமரைப்பூ மூன்று கிராம், மயிர்ச்சிக்கி மூன்று கிராம், திராக்ஷைப்பழம் 11, இவற்றையெல்லாம் 225 மில்லி லிட்டர் சுத்த ஜலத்திற்போட்டு, அரைபாகம் சுண்டவைத்துத் தேவையானால் கொஞ்சம் சருக்கரை சேர்த்துக் காலையில் மாத்திரம் சாப்பிடவும். இவ்விதம் ஐந்து நாள் காலையில் சாப்பிட பித்தநீர்கள் பக்குவமாம். ஆறாம்நாள் இந்தக் கிஷாயத்தில் சரக்கொன்றைப் புளி 12 கிராம், கடினமான தேகியானால் 6 கிராம் இதை பாதம் நெய் அல்லது பசுவின் நெய் சேர்த்துப் புரட்டிமேற்படி கிழாயத்திற்கரைத்து வடித்துச் சாப்பிடவும்.

உபயோகம் - பித்தநீர்கள், பித்தசுரம், பித்தச் சூட்டினாலுண்டான ரோகம் முதலியவைகளுக்காகும்.

வேறு

சூரத்து நில ஆவாரை 3 கிராம், அதிமதுரம் 15 கிராம், மஞ்சட் கடுக்காய்த்தோல் 2 கிராம், சூரத்துக் கடுக்காய்த் தோல் இரண்டு கிராம் காசினிவித்து, தாமரைப்பூ,பனப்ஷா இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், திராக்ஷப்பழம் ஆறு கிராம், சீமையிலந்தைப்பழம் 5, சீமை நறுவிலிப்பழம், ஆலுபுகாராப்பழம் இவை வகை ஒன்றுக்கு 5, சரக்கொன்றைப்புளி, தரஞ்சபீன் இவை வகை ஒன்றுக்கு பத்து கிராம், முன்சொன்னபடி செய்துக் கொண்டு, ஐந்து நாள்காலையில் சாப்பிட்டு ஆறாம் நாள்பின்சொன்னபடி செய்த சரக்கொன்றைப் புளியை அதிகமாகச் சேர்த்துச் சாப்பிட பித்த பேதியாகும்.

வேறு

உலர்ந்த மணத்தக்காளியிலை, பனப்ஷாபூ, ரோஜாப்பூ, சீமை துத்திவிதை, தராஇலை, காசினிவிதை இவற்றைத் தனித்தனி நையநறுக்கினது இவைவகை ஒன்றுக்கு நான்கு கிராம், தாமரைப்பூ

உலர்ந்த இதழ் 5 கிராம், சீமையிலந்தைப்பழம் விதை நீக்கினது 5, ஆலுபுகாரப்பழம் விதை நீக்கினது 5 எல்லாவற்றையும் வெந்நீரிலிட்டு ஓரிரவு ஊற வைத்துக் காலையில் நன்றாகப் பிசைந்து, குல்கந்து 12 கிராம், அல்லது சருக்கரை இருபது கிராம் இரண்டையும் சேர்த்துச் சாப்பிடவேண்டும். இவ்விதம் 4-5 நாள் சாப்பிட்டுப் பின்பு பேதிக்குச் சாப்பிடவேண்டும். பேதிக்காக மேற்கண்ட கிஷாயத்துடன், சரக்கொன்றைப்புளி 12 கிராம், தரஞ்சபீன் அல்லது மேனா, புளி, குல்கந்து இவை வகை ஒன்றுக்கு ஆறு கிராம், நான்கு பாதம்பருப்பை அரைத்துப் பிழிந்தபால் சேர்த்துக்கரைத்து வடித்துச் சாப்பிட பேதியாகும். இது குளிர்ச்சியான பேதி.

விண்ணப்பம்

பித்தத்தைச் சேர்ந்த வியாதிகளில் முன்னர் பித்தநீரைப் பக்குவப்படுத்தி அதை வெளிப்படுத்தியே சிகிச்சை செய்ய வேண்டியது. பித்த நீரைப் பக்குவப்படுத்த முன்சொன்ன கிஷாயங்களிலொன்றை ஐந்து அல்லது ஆறு நாள் கொடுக்க வேண்டும்.

பேதிக்குச் சாப்பிட்டதினம் தாகமிருந்தால் மணத்தக்காளித் தீநீர், காசினித்தீநீர், கொஞ்சங் கொஞ்சம் கொடுக்கவும்.

சாப்பாடுமத்தியானம் ரவைக்கோதுமைக் கஞ்சி கொடுக்கவும். பின்பு 3 மணிநேரத்திற்குப்பின் பச்சைப்பயற்றம் பருப்பைச் சேர்த்துப் பொங்கின கிச்சடிச் சாதங் கொடுக்கவும்.

பேதியான அடுத்ததினம் மறுபேதிக்குக் கொடுக்கலாகாது; இடையில் ஒருநாள், இரண்டு நாள் விட்டுக்கொடுக்க வேண்டும். அக்காலங்களில் பேதானாவிதையை யூறவைத்தெடுத்த கோழைநீர் 9 கிராம், பனப்ஷா ஷர்பத்து 25 கிராம், இசுபகோல்விதை யூறவைத்தெடுத்த கோழைநீர் 4 கிராம் சேர்த்துக்கொடுக்கவும்.

சிலசமயம் வாந்தியானால் அல்லது வாந்தியாகு மெனச் சந்தேகமுண்டானால் சரக்கொன்றைப் புளி, குல்கந்து, தரஞ்சபீன், புளி இவற்றைக் கிஷாயத்திற்கரைத்து வடித்து பாதம் பருப்பை யரைத்துப் பிழிந்த பாலை அதன் மேல்விட்டுச் சாப்பிட வாந்தியாகாது.

பேதிக்குச் சாப்பிட்டும் பேதியாகாவிட்டால் வெந்நீர் குடிப்பதனால் அல்லது ஆசனத்தில் திரிசெலுத்துவதினால் அல்லது ரோஜாப்பூ ஷர்பத்து 50 கிராம், குளிர்ந்த சலத்தில் விட்டுச் சாப்பிடுவதினால் பேதியாகும். தரஞ்சபீன் 10 கிராம் சவுக்காரம், சீமை துத்திவிதை, கறியுப்பு இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், நாட்டுச் சருக்கரை 60 கிராம், இவற்றை பாகப்படி திரிசெய்து ஆசனத்தில் செலுத்துவதினாலும் பேதியா

பேதிக்குச் சாப்பிட்ட தினம் தூங்கலாகாது. பேதிக்குச் சாப்பிட்டால்வாந்தியாகும்வழமையுள்ளவர்கள் பேதிக்குச் சாப்பிடும் முன் இரண்டுநாள் வாந்திக்குச் சாப்பிட்டு இரைப்பையைச் சுத்தி செய்ய வேண்டும். பேதிக்குச் சாப்பிடுந் தினத்திற்கு முந்தின நாள் இரைப்பைக்குப்பலத்தைக்கொடுக்கும்படியானதான, மாதுளம்பழ ஷர்பத்து முதலியவைகள் போன்றனவற்றைச் சாப்பிடவும். பித்த சமகாரியாகிய இசுபகோல், பேதனா இவைகளிலொன்றை ஊறவைத்தெடுத்த கோழைநீர், பருப்புக்கீரை விதை, காசினி விதை இவைகளிலொன்றை யரைத்துப் பிழிந்த ரசத்தில் அல்லது கொத்து மல்லிவிதை ஊறல் கிஷாயத்தில் கொஞ்சம் சருக்கரை சேர்த்துச் சாப்பிடுவதினாலும், பன்னீர்விட்டிழைத்த சந்தனத்தைப் பூசுவதினாலும், சுகம் உண்டாகும். முக்கியமாய் பித்த சமனகாரியாகிய காசினிக் கீரையின் ரசத்தை முறித்தரசத்தில் சருக்கரை அல்லது புளிசேர்த்துச் சாப்பிடுவதும் உசிதமே.

கபத்தைப் பக்குவப் படுத்தும் கிஷாயம்

கபவியாதிகளின் சிகிச்சையிலும் முன்னர் கபத்தைப் பக்குவப்படுத்தி வெளிப்படுத்தியே அவைகளை நீக்க வேண்டும்.

கபத்தை பக்குவப்படுத்த கீழ்க்காணும் சூடான முறைகள் உபயோகப்படும்.

காசினிவேர்,சோம்புவேர், கரபஸ் ஓமம், சீமைவிலாமிச்சம் வேர், சோம்பு, இச்சரக்குகள் ஒவ்வொன்றையும் நறுக்கிக் கொள்ளவும். மயிர்ச்சிக்கி இவை வகை ஒன்றுக்கு 7 கிராம், மேல் தோல் நீக்கின அதிமதுரம் 5 கிராம், திராட்சைப் பழம் 6, உலர்ந்த சீமை அத்திப்பழம் 5, உஸ்துகுதூஸ் 7 கிராம் இவற்றை இரவில் சலத்தில் ஊற வைத்துக் காலையில் அடுப்பில் வைத்துக் காய்ச்சி வடித்து மதுகுல்கந்து 50 கிராம், அதிற்கரைத்து வடித்துச் சாப்பிடவும். இவ்விதம் 7 நாள் சென்றபின் சீமைச்சிவதைவேர், மேல்தோல் உள்நரம்பு ஆகியவைகளை நீக்கிச் சுத்திசெய்தது 5 கிராம். காரிகியூன் 2 கிராம், சூரத்து நில ஆவாரை 12 கிராம், மேற்கண்ட கிஷாயத்தில் போட்டு, சரக்கொன்றைப் புளி 25 கிராம், சருக்கரை 50 கிராம், எல்லாவற்றையும் கிஷாயத்தில் கரைத்து வடித்து, சிற்றா மணக்கெண்ணெய் 12 கிராம் சேர்த்துச் சாப்பிடவும்: பேதியாகும். தண்ணீருக்குப்பதில், சுடவைத்த சோம்புத் திராவகம் சாப்பிடலாம்; பேதியாகாவிட்டால் ரூமிமஸ்தகி, சோம்பு இவை வகை ஒன்றுக்கு 3 கிராம், அரைத்துச் சருக்கரை சமனில் சோம்பு திராவகத்துடன் அல்லது வெந்நீருடன் சாப்பிடவும்.

பேதிக்குச் சாப்பிட்ட தினம், கறிசூப்பும், மாமிக்ஷ பக்ஷணியல்லாதவர்கள் துவரம்பருப்பை வேகவைத்தெடுத்த தெளிநீர் ரசமும் சாப்பிட்டு மத்தியானம் கிச்சடிச்சாதம் சாப்பிடவும்.

மறுநாள் குல்கந்து 25 கிராம், சோம்புத் திராவகம் 70 கிராம், கரைத்து வடித்து, சப்ஜாவிதை 4 கிராம் அதில் போட்டுச் சாப்பிடவும்.

வண்டலைப் பக்குவப்படுத்தும் கிஷாயம்

மஞ்சட் கடுக்காய்த் தோல், சூரத்துக்கடுக்காய்த்தோல் ரோஜாப்பூ, அப்திமூன், இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், தாமரைப்பூ, பனப்ஷாபூ,காசினிவித்து, இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், பாலங்கூ, காவுஜூபான், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, உஸ்துகுதூஸ், பஸ்பாயிஜ், அதிமதுரம் குஷூஸ்விதை, தராயிலை, இவை வகை ஒன்றுக்கு 12 கிராம். சீமைச் சிவதைவேர் 8 கிராம், திராக்ஷைப்பழம் 20 கிராம், அப்திமூனைத் தவிர மற்றவைகளை யெல்லாம்அரைபடி சலத்தில் போட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டி இறக்குந் தருணத்தில் அப்திமூனைத் துணியில் முடிந்து அதிற்போட்டு இரண்டு மூன்று கொதிவந்தபின் இறக்கித் தரஞ்சபீன் 8 கிராம், சரக்கொன்றைப்புளி 20 கிராம் இரண்டையும் கிஷாயத்திற் கரைத்து வடித்துச் சாப்பிட பேதியாம்.

வேறு

சீமையிலந்தைப்பழம், சீமைநறுவிலிப்பழம், காவுஜூபான், எலுமிச்சந் துளசி, அதிமதுரம், இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், மயிர்ச்சிக்கி, சோம்பு, தராயிலை, உஸ்துகுதூஸ் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், இரவில் ஊறவைத்துக் காலையில் அடுப்பேற்றிக் காய்ச்சி வடித்து குல்கந்து 25 கிராம் கரைத்துச் சாப்பிடவும்.

பித்தம் சுண்டின வண்டலானால் பித்தத்தைப் பக்குவப்படுத்தும் வஸ்துக்களையும் அதிகப்படுத்திக் கொடுக்கவும். வண்டலின் தீக்ஷணியம் அதிகப்பட்டிருந்தால் பித்தத்தைப் பக்குவப்படுத்தவும் வஸ்துக்களை மாத்திரம் கொடுக்க வேண்டும்.

நாடி விரிவாய்। மிருதுவாகவும் சிறுநீர் கலங்கலாகத் தடிப்பாகவும், வெண்சாயலான கறுப்பு வருணமாகவும் இருந்தால், நன்னாரிவேர், உஸ்துகுதூஸ், பஸ்பாயிஜ், பிஸ்தாப்பருப்பு, இவை வகை ஒன்றுக்கு 7 கிராம், மாசிப்பத்திரி, மஞ்சட் கடுக்காய்த்தோல்,சூரத்துக் கடுக்காய்த்தோல், கடுக்காய்ப் பிஞ்சு இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், சூரத்து நில ஆவாரை, அப்திமூன் இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், இவ்விரண்டையும் துணியில் முடிந்து போடவும் பேதிக்குச் சாப்பிடுந்தினம் காரிகியூன் 2 கிராம் அதிகப் படுத்திக் கொள்ளவும்.

பித்தவண்டலானால் குளிர்ச்சியானவைகளையும், சாந்தமானவைகளையும் அதிகம் உபயோகிக்க வேண்டும்.

வாதவண்டலில், கபவண்டலில் ஆலுபுகாராப்பழம் 5, காவுஜுபான் 5 கிராம், ரோஜாப்பூ, காசினிவிதை, சீமைத் துத்திவிதை, காசினிவேர், சோம்புவேர் இவை வகை ஒன்றுக்கு 7 கிராம்; திராக்ஷப்பழம் 6, உலர்ந்த சீமை அத்திப்பழம் 5, இவற்றை வண்டல் பக்குவக்கிஷாயத்தில் அதிகப்படுத்தி வாதவண்டலையும், கபவண்டலையும் பக்குவப்படுத்தவும்.

வண்டல் பக்குவப்பட்டபின் பேதிக்குச் சாப்பிடுந்தினம் பஸ்பாயிஜ், பிஸ்தாப்பருப்பு, அப்திமூன் (இதைத் துணியில் முடிந்து போடவேண்டும்) நன்னாரிவேர், மஞ்சட்கடுக்காய்த் தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல், பிஞ்சுகடுக்காய், காரிகியூன், சுத்திசெய்த சீமைச் சிவதைவேர், சூரத்து நில ஆவாரை, சரக்கொன்றைப்புளி, பாதம் நெய் அல்லது பாதம் பருப்பை அரைத்துப் பிழிந்தபால் தேகசக்திக் கேற்றபடி சேர்த்துக்கொடுக்க பேதியாம்.

வண்டல் அதிகமாகப் பக்குவபடவேண்டியிருந்தால் பக்குவகியாழம் அதிகநாள் கொடுக்கவேண்டும் இடையில் பேதிக்குக் கொடுத்து வெளிப்படுத்தவும் வேண்டும். இன்னும் பேதிகளுக் கிடையில் அவசியமானால் நெல்லிக்காய் முறப்பர், காவுஜுபான் கோழைநீர், மாதுளம்பழ ஷர்பத்து, சப்ஜாவிதையின் கோழைநீர் இவற்றுள் ஒன்றைச் சாப்பிட்டுச் சாந்தப்படுத்தவும்.

விண்ணப்பம்

ஒவ்வொரு தேகசுபாவமும் மாறுபடுமாகையமால் மேற்கண்ட பக்குவ கியாழங்களிலும், பேதிக்கியாழங்களிலும் தங்கள் தங்கள் தேகசுபாவப் பிரகிருதிக்கேற்ற அளவாக அப்பாகங்களிற்கண்ட சரக்குகளை எடையில் குறைத்தும் அதிகப்படுத்தியுங் கொள்ளவேண்டியதுந் தவிர, தங்கள் தேகத்திற் கனுகூலமான சரக்குகளைச் சேர்த்தும், ஏற்காத சரக்குகளை நீக்கியும் விடவேண்டும். ஏனெனில், சிலருக்குப் பேதியதிகமாகும், சிலருக்குச் சுத்தமாய் பேதியாகாது. ஆகையால் முன்னர் நன்றாக நிதானித்துச் செய்ய வேண்டியது மிகவும் முக்கியம்.

இலகுபேதி முறைகள்

அட்டவணையிற் கண்டிருக்கிறபடி தத்தம் சுகானுபவத்திற் கேற்றதாகிய சாரப்பருப்பு, பருத்தி விதைப் பருப்பு, இவற்றிலொன்றை அம்மியில் சலம் வார்த்தரைத்து சலத்திற் கரைத்துப் பிழிந்தபால்,

கரும்புரசம், முள்ளங்கிக் கிழங்கின்ரசம், ஆட்டுப்பால், பன்னீர்; புளியைக் கரைத்து வைத்தெடுத்த தெளிநீர் ஆகிய இவற்றுள் ஒன்றை தத்தம் சமயத்திற் கேற்றபடி 45- 85- 130- 170 மி.லிட்டர் அதில் சருக்கரை போட்டு சாப்பிடுவதினாலும், தேனைச் சுத்தி செய்து தேகபலத்திற் கேற்றபடி 44- 60- 65 கிராம் சாப்பிடுவதினாலும், குல்கந்து 35- 55 கிராம் உடன் வெண்ணெய் 35- 55 கிராம் சேர்த்துச் சாப்பிடுவதினாலும் இலகு பேதியாம்.

குல்கந்து

ரோஜாப் புஷ்பத்தின் பச்சை யிதழ்கள் 1 பங்கு, சீனி சருக்கரை பங்கு 2. இவைகளை யுரலில் நன்றாக இடித்து அல்லது கத்தரியினால் சன்னமாகக் கத்தரித்து ஒருநாள் வைத்திருந்து நீர் சுண்டினபின் சருக்கரை சேர்த்து நன்றாகப் பிசைந்து வெய்யிலில் வைக்கவும். இவ்விதம் காலை மாலை 2 வேளையும் செய்து மூன்று நாள் வெய்யிலில்வைத்தெடுத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 35- 70 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இது சூடான தேகிகளுக் கதிகம் உபயோகமானது; மனக்கலக்கம்; பைத்தியரோகம்; ஆகியவைகள் தீரும். சீமையிலந்தைப்பழம், புளி இவையிரண்டையும் சமனெடை சேர்த்துச் சிறு தீயாயெரித்துப் பிசைந்து பிழிந்து வடித்த கியாழத்தில் மேற்படி குல்கந்து 35 கிராம் சேர்த்துப் பிசைந்து வடித்துச் சாப்பிட்டு வர, ஆரம்பமாகிய தலைச் சுழற்றல், கிறுகிறுப்பு ஆகியவை தீரும்.

மதுகுல்கந்து

மேற்சொன்ன பாகத்தில் சருக்கரைக்குப் பதில் தேன் சேர்த்து அதிற் கண்டபடி செய்து நாற்பது நாள் வெய்யிலில் வைத்து எடுத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 35- 55 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இது குளிர்ச்சியான தேகிகளுக்கு அதிக உபயோகமானது, கீல்வாய்வுகள், வாய்கோணல், நீரடைப்பு, கல்லடைப்பு ஆகியவைகள் தீரும் இந்த குல்கந்துடன் அதன் எடையில் கால்பங்கு பிளப்புச் சீரகம் சேர்த்துச் சாப்பிட்டு வரப் பலமான வாயுகள், இடுப்புநோய் இவை தீரும். ஜீரணசக்தி அதிகப்படும். சுத்திசெய்த சீமைச் சிவதைவேர் கால் பங்கு, கரபஸ் ஓமம் கால்பங்கு, இவ்விரண்டையும்

8 பங்கு சலத்திலிட்டு நாலிலொன்றாகக் காய்ச்சிப் பிசைந்து வடித்து அதில் 1 பங்கு குல்கந்தைக் கரைத்து வடித்துச் சில நாள் தொடர்ச்சியாகச் சாப்பிட்டுவர பக்ஷவாதம், வாய்கோணல், நாவின் தளர்ச்சி, கீல்களின் தளர்ச்சி ஆகியவைகள் நீங்கும்.

தேன் பானம்

திராக்ஷாதிமது 2 பங்கு. நல்ல புதுத்தேன் 1 பங்கு இவ்விரண்டையும்சேர்த்து அடுப்பேற்றி மெதுவா யெரித்துப் பாகுபதத்தில் இறக்கி ஆறவிட்டுச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - 12- 18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இரத்தவிருத்தி, தீபனசக்தி, தேகசக்தி ஆகியவைகளுண்டாம்.

மஹா மதுபானம்

சடாமாஞ்சில், லவங்கப்பட்டை, ரூமிமஸ்தகி, ஏலக்காய், காட்டேலக்காய், அகருகட்டை, மாசிப்பத்திரி இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், லவங்கம் 4 கிராம், மழைத்தண்ணீர் படி 2,தேன் நாலேகால் கிலோ.

செய்முறை- சலத்தில் எல்லாச் சரக்குகளையும் நைய நறுக்கிப் போட்டு அரைபங்காகச் சுண்டினபின் பிசைந்து வடித்து, சக்கைநீக்கி, கிஷாயமும் தேனும் சேர்த்துச் சிறு தீயாயெரித்துப் பாகுபதத்திலிறக்கி ஆறவிட்டுச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - 12- 18- 24 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - குளிர்ச்சியினா லுண்டான இரைப்பை யின் நோய், ஈரல்நோய் ஆகியவைகளும், குளிர்ச்சியிலுண்டான நரம்பின் நோய்களும் தீரும்.

மது கமலபானம்

திறமான தேன் 1 பங்கு, மழைத்தண்ணீர், அல்லது சுத்தசலம் 2 பங்கு இவ்விரண்டையும் சேர்த்துச் சிறுதீயாயெரித்துக் காய்ச்சி நீர் சுண்டினபின் சீஷாவில் பத்திரப் படுத்தவும்.

மாத்திரை - 12-18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மலமிளகும், வாந்தி, மருந்தின் துர்க்குணம், வயிற்றின்நோய் ஆகியவைகள் தீரும், குளிர்ச்சியான அவயவங்கள் ,

இரைப்பை இவைகளைப் பலப்படுத்தும், தீபன சக்தியை அதிகப்படுத்தும், நீரைப் பெருக்கும், சூதகத்தை யுடைக்கும், ஸ்திரீ சங்கமத்திற்குப்பின் உண்டாகும் துர்பலத்தை நீக்கும். ஆனால் பித்த தேகிகளுக்கும், சிறுகுடலில் சூட்டினாலுண்டான வீக்கத்திற்கும் ஆகாது அதற்குப் பரிகாரம், புளிப்புப் பழ வர்க்கங்களைச் சாப்பிடத் தீரும்.

சிகா மதுபானம்

சீமை திராக்ஷைக்காடி 2 பங்கு, நல்ல தேன் பங்கு 1 இவ்விரண்டையும் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கிச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - 12- 24 - 36 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - பித்தரோகங்கள், வாந்தி, பித்தபேதி முதலியவைகள் நீங்கும்.

சிகாபாளித பானம்

சீமை திராக்ஷைக்காடி ஒன்றரை பங்கு சீனிசருக்கரை அரைப்பங்கு இவ்விரண்டையும் சேர்த்து பாகப்படிகாய்ச்சிக் கொள்ளவும்.

மாத்திரை :- 24- 36 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் :- பித்தரோகங்கள் முதலியவைகள் தீரும்.

ரோஜாப்பூத் தீநீர் ஷர்பத்து

பன்னீர் 700 கிராம், சீனாகற்கண்டு 700 கிராம், கற்கண்டைப் பன்னீரிற்கரைத்து வடித்துச் சிறு தீயாயெரித்துப் பதத்தில் இறக்கி ஆறவிட்டுச் சீஷாவில் வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை:- 35- 70 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் :- மலம்போகும் வாயுகளைக் கண்டிக்கும். உஷ்ணதேகிகளுக்கும் சுகுமார தேகிகளுக்கும், பேதிமாத்திரைகள், சூரணங்கள் முதலிய பேதிமருந்துகளின் அநுபானத்திற்கும் ஏற்றது.

திந்திருணி ஷர்பத்து

கோது, கொட்டை முதலியவைகளை நீக்கின புதுப்புளி 175 கிராம், சுத்தசலம் படி அரை சீனாகற்கண்டு அல்லது சீனி சருக்கரை 350 கிராம்.

செய்முறை - புளியைச் சலத்திற் கரைத்து வடித்துத் தெளியவைத்துத் தெளிவை யிருத்துக் கற்கண்டு அல்லது சீனிசருக்கரை சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 20- 40- 50 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - சூடு, பித்தச்சூடு முதலியவைகளை நீக்கும், இலகுபேதியாம். இரைப்பையைப் பலப்படுத்தும்.

குறிப்பு

புளியைக் கரைத்துக் கெட்டித்துணியில் கட்டித் தொங்கவிட்டுச் சற்றுநேரஞ் சென்று சொட்டுச் சொட்டாய் வடியும் சலத்திற்குப் புளித் தெளிநீரெனப் பெயர். அவுடதப் பிரயோகங்களில் புளியைச் சேர்க்க வேண்டியபோது மேற்கண்ட விதமாகச் செய்தெடுத்தத் தெளிநீரைச் சேர்க்க வேண்டியதே உத்தமம்.

அரிதகி வீரியவிர்த்தித் திராவகம்

பனைவெல்லம் 11 கிலோ, மஞ்சட் கடுக்காய்த்தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல், கர்க்கடகசிங்கி, தான்றிக்காய்த்தோல், சீமை நெல்லிமுள்ளி இவை வகை ஒன்றுக்கு 560 கிராம், கருவேலம்பட்டை-120 கிராம், இவற்றையெல்லாம் ஒரு வாய்குவிந்த ஜாடியிற்போட்டுப் பத்து படி சலம் விட்டு ஜாடிவாய்க்குச் சில்லிட்டுச் சீலைசெய்து ஒருகஜ அகலம்; ஒருகஜ ஆழமுள்ள குழியில் ஒருசாண் உயரம் குதிரை லத்திகளைப் போட்டு அதன்மேல் முன் ஜாடியை வைத்துக் குழிநிறையவும் லத்திகளைப் போட்டு மூடி விடவும்.

நாற்பது நாள் சென்றெடுத்துத் திராவக வாலையிலிட்டு ஜாடியிலிருக்கிற சலத்திற் பாதியளவு திராவகம் இறக்கி, அதில் ரோஜப்பூ 560 கிராம், லவங்கப்பட்டை, பஹமனே சுபேத், பஹமனே சுருஃ, சந்நராஷ்டம், சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்கு இவை வகை ஒன்றுக்கு 60 கிராம், உலர்ந்த துளசியிலை, காவுஜுபான் பூ, இவை வகை ஒன்றுக்கு 350 கிராம், சாலாமிஸ்ரி 60 கிராம், கோராப்பட்டு நூறு கிராம் இவையெல்லாவற்றையும் முன்னிறக்கின திராவகத்தோடு சேர்த்து மறுபடியும் திராவக வாலையிலிட்டுத் திராவகம் இறக்கிக் கொள்ளவும். கஸ்தூரி இரண்டு கிராம், ஒரு துணியில் முடிந்து திராவகமிறங்கும் குழலின்வாய் ஓரத்தில் அக்குழலிலிருந்து வடியும்திராவகமானது இந்த முடிச்சில் தங்கி வடியும் விதமாகக் கட்ட வேண்டியது.

மாத்திரை - தேகத்திற் கேற்றபடி 35- 55 கிராம் இரண்டுவேளையும் சாப்பிடவும்.

உபயோகம்- ஆண்மைசக்தி; மன எழுச்சி ஆகியவைகளுண்டாகும்; சிறுமயக்கமுண்டு. மனவுற்சாக முண்டாகும்.

பித்தஹாரி அரிதகிக் கியாழம்

மஞ்சட்கடுக்காய்த்தோல், சூரத்துக்கடுக்காய்த்தோல் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், பனப்ஷா, தாமரைப்பூ,காசினிவிதை, சூரத்துநில ஆவாரை இவை வகை ஒன்றுக்கு 60 கிராம், மேல்தோல் நீக்கின அதிமதுரம் 8 கிராம், உலர்ந்து திராக்ஷைப்பழம் 35 கிராம், உலர்ந்த சீமையிலந்தைப்பழம், சீமை நறுவிலிப்பழம்; ஆலுபுகாராப்பழம் இவை வகை ஒன்றுக்கு இருபது.

செய்முறை - முக்கால்படி சலத்தில் எல்லாவற்றையும் போட்டு அடுப்பேற்றி மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்து வடித்த கிஷாயத்தில் சரக்கொன்றைப்புளி இருபது கிராம், பாதம் நெய் 10 கிராம், சேர்த்துக் காலையில் சாப்பிடவும்.

உபயோகம் - பித்தத்தைப் பேதிமூலமாக வெளிப்படுத்தும்; இரைப்பையிலும் சிரசிலுமுள்ள எரிந்துபோன சத்துக்களை நீக்கும்.

சிறு திரிபலாதி லேகியம்

மஞ்சட் கடுக்காய்த்தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல், கர்க்கடசிங்கி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 25 கிராம், தான்றிக்காய்த்தோல், சீமை நெல்லிமுள்ளி அல்லது நெல்லிமுள்ளி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 75 கிராம், காய்ச்சி நுரைநீக்கிச் சுத்திசெய்த தேன் 300 கிராம், பாதம் நெய் சுமார் 75 கிராம்.

செய்முறை - சூரணங்களை ஒன்றாகச் சேர்த்துப் பாதம் நெய்யைச் சிறுகச் சிறுக விட்டுப் பிசறி, நெய்ப்பசை யுண்டாக்கிப் பின்பு தேன்சேர்த்து நன்றாகப் பிசறிக் கொள்ளவும்.

மாத்திரை - 10 கிராம் முதல் 20 கிராம் வரையில் சாப்பிடவும்.

சாப்பிடும் விதம்

தேகத்திற்குத் தக்க அளவாக நிறுத்தெடுத்து அதை நெய்யில் நன்றாகப்புரட்டி விழுங்கத்தக்கதாக இரண்டு அல்லது மூன்று உருண்டைகளாக உருட்டி, அதிகாலையிற் சாப்பிடவேண்டியது, இரண்டொரு தடவை மலம் போகும்.

பத்தியம்- வாயு பதார்த்தம், அதிக நீருள்ள வஸ்துக்கள் இவை ஆகா, இவ்விதம் 5-நாள் 7 -நாள் காலையில் மாத்திரை சாப்பிடவேண்டியது.

உபயோகம் - மூளையிலுள்ள மூவகை அசுத்த சத்துக்களை நீக்கும். மூளைக்கும், இரைப்பைக்கும் பலத்தைக் கொடுக்கும்.

இரைப்பையிலுள்ள மாசுகளை நீக்கிச் சுத்திசெய்யும், நாட்பட்ட பீனிச வியாதியை நீக்கும்.

குறிப்பு

திரிபலாதி லேகியத்திற்காகச் சேர்க்கப்பட்ட கடுக்காய் இனங்களை இடித்து வஸ்திரகாயம் செய்யலாகாது. ஆனால் முறத்தினால் மெல்லிய சூரணமாகத் தெள்ளியெடுத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வகை அவுடதங்களை அதிகநாள் வைத்திருக்க வேண்டிய திருந்தால் பாதம் நெய் சேர்க்கவும். அப்படி வேண்டாதபோது நெய்சேர்த்துக் கொள்ளலாம்.

திரிபலாதி லேகியங்களைத் தொடர்ச்சியாக அதிக நாள் சாப்பிடலாகாது, அப்படிச் செய்வதினால் இரைப்பை துர்ப்பலப்படும்.

உஷ்ணகாலங்களிலும், தேகத்தில் உஷ்ணம் அதிகரித்திருக்கும்போதும், தேனிற்குப்பதிலாகச் சீனிசரக்கரையைச் சேர்த்துக் கொள்ளவும்.

திரிபலை - (திரிபல்- இத்ரியல்) என மருவியது

திரிபலை - கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய்.

சுகுமார திரிபலாதி

மஞ்சட் கடுக்காய்த்தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல், பிஞ்சுக்கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய்த் தோல் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், ரோஜாப்பூ, சூரத்து நில ஆவாரை, சுத்திசெய்த சீமைச் சிவதைவேர் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், மேல்தோல் சீவியிடித்த சுக்குத்தூள் 2 கிராம், தேன் அல்லது சீனிசருக்கரை 80 கிராம்.

செய்முறை - சூரணங்களை ஒன்றாகச் சேர்த்துச் செல்லத்தக்க பாதம் நெய் அல்லது நெய்விட்டு நன்றாகப் பிசறிப் பின்பு தேன் சேர்த்துக் கொள்ளவும் சருக்கரையானால் பாகு செய்து பாகுபதத்தில் இறக்கிச் சூரணங் கொட்டிக் கிளறிக் கொள்ளவும்.

மாத்திரை - 8 கிராம், 20 கிராம் வரையில் காலையில் மாத்திரம் ஒருவேளை சாப்பிட வேண்டியது.

உபயோகம் - மலக்கட்டை நீக்கும். மூளை இரைப்பை இவைகளிலுள்ள அசுத்த மாசுகளை நீக்கும், காது, கண், தலை முதலியவைகளின் நோய்களுக்குப் பிரயோசனப் படும்.

மனோரஞ்சித திரிபலாதி

கடுக்காய் முறப்பா 10, நெல்லிக்காய் முறப்பா 10 இவற்றை விதைநீக்கி வெந்நீர் விட்டுக் கழுவிச் சிறுதுண்டுகளாகச் செய்து, தாழம்பூத் தீநீர் மூன்றுபலம் விட்டரைத்து மெல்லிய வஸ்திரத்தில் வைத்துப் பிழிந்த ரசமும், விதை நீக்கின திராக்ஷப்பழம் 210 கிராம் கொஞ்சம் சலம்வார்த்து அரைத்துச் சலத்தில் கரைத்துத் துணியில் பிழிந்தரசமும்; கிஷ்மிஷ்ப்பழம் 100 கிராம் அரைத்து நீரிற்கலக்கி வஸ்திரத்திற் பிழிந்த ரசமும் ஒன்றாகக் கலந்து அதில் பாதம்பருப்பு 100 கிராம் சுரைவிதைப் பருப்பு 25 கிராம் இவற்றை நன்றாக அரைத்துக் கலக்கி கண்ட எடைக்கு 3 பங்கு சீனிசருக்கரை சேர்த்துப் பாகுசெய்து கொள்ளவும். மஞ்சட்கடுக்காய்த்தோல், சூரத்துக்கடுக் காய்த்தோல், தான்றிக்காய்த் தோல் நெல்லிமுள்ளி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 50 கிராம் கொத்துமல்லிவிதைத்தூள் 35 கிராம், காவுஜுபான் தூள் 25 கிராம், சடாமாஞ்சில் தூள் 25 கிராம், உஸ்துகுத்தூஸ்தூள் 12 கிராம் இவைகளை ஒன்றாகச் சேர்த்துப் பாதம்நெய் விட்டு நன்றாகப் பிசறி மேற்படி பாகிற் கலந்து மிஸ்ரமித்துக் கொள்ளவும்.

மாத்திரை- 8 கிராம், முதல் 20 கிராம் வரையில் சாப்பிடலாம்.

உபயோகம் - மூளையிலுள்ள மாசுகளை நீக்கி அதைப் பலப்படுத்தும், பீனிச வியாதிகளை நன்றாகக் கண்டிக்கும்; சாப்பிட இன்பமாயிருக்கும்.

ஜமானி (Zamani) திரிபலாதி லேகியம்

மஞ்சட் கடுக்காய்த்தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல், கறுப்புக்கடுக்காய், பனப்ஷா பூ, இவைகளின் தூள் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், சீமைச் சிவதை வேர்ச்சூரணம், கொத்துமல்லிவிதைத் தூள் இவை வகை ஒன்றுக்கு 70 கிராம், தான்றிக்காய்த் தோல், நெல்லி முள்ளி, ரோஜாப்பூ, மூங்கிலுப்பு, கல்தாமரைப்பூ அல்லது வெண்தாமரைப்பூ விதழ் உலர்ந்தது இவைகளின் தூள் 30 கிராம், சந்தனம், பாதம் பிசின் இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு 12 கிராம், பாதம் நெய் 210 கிராம், சூரணங்களை ஒன்றாகச் சேர்த்து பாதம் நெய்விட்டு, நன்றாகப் பிசறிக் கொள்ளவும்.

சீமையிலந்தைப் பழம் உலர்ந்தது 100, நறுவிலிப்பழம் உலர்ந்தது-10, பனப்ஷாபூ 35 கிராம் மேற்படி பழங்களின் விதையைநீக்கி முக்கால் படி சலத்தில் மூன்று சரக்குகளையும் போட்டு மூன்றிலொரு

பாகமாகக் காய்ச்சி வடித்த கியாழத்துடன் தான்றிக்காய்த்தோல் 60 கிராம் முக்கால் படி சலத்தில் கரைத்து வடித்துப் பிழிந்து முன்கியாழமும் சேர்த்துக் காய்ச்சி அதில் நுரைநீக்கிச் சுத்தி செய்ததேன் 1 கிலோ சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் முன்னர் தயார் செய்த சூரணங்களைச் சேர்த்து மிஸ்ரமித்துக் கொள்ளவும்; பின்பு கஸ்தூரி வெள்ளிரேக்கு, தங்கரேக்கு ஆகியவைகளைச் சக்திக்கேற்றபடி சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டியது.

மாத்திரை - 4, 8 கிராம் தினம் காலையில் சாப்பிடலாம். பேதியாக வேணுமானால் 12, 16 கிராம் சாப்பிட வேண்டியது.

உபயோகம் - மூளையிலுள்ள மூவகை அசுத்த சத்துக்களை நீக்கிச் சுத்திசெய்யும், தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வருவதினால் நாட்பட்ட பீனிசநோய் நீங்கும், கெட்ட ஆவிகள் மூளையிற்செல்லாது தடுக்கும், புத்திதடுமாற்றம், பலவகைக் கெட்ட எண்ணங்கள் முதலியவைகளை நீக்கும், இரைப்பையிலுள்ள மாசுகளை நீக்குவதுமன்றி குன்மநோயைக் கண்டிக்கும். இதன் சக்தி 2வருஷம் வரையிலுமிருக்கும், மேலும் இது எல்லாத் தேகிகளுக்கும் ஒத்துக் கொள்ளும்.

ஆவாரைத் திரிபலாதி லேகியம்

காம்புகள், ஈர்க்குகள் முதலியன நீக்கிச் சுத்திசெய்த சூரத்து நில ஆவாரை, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக் காய்த்தோல், பாலிற் சுத்திசெய்த சீமைநெல்லி முள்ளி இவை வகை ஒன்றுக்கு 50 கிராம் சூரத்துக் கடுக்காய்த் தோல் 25 கிராம், ரேவல் சீனி 25 கிராம் இவைகளையெல்லாம் ஒன்றாயிடித்து வஸ்திரகாயஞ் செய்து பாதம் நெய் 50 கிராம் காய்ச்சி நுரை நீக்கிச் சுத்திசெய்த தேன் 175 கிராம், கொஞ்சங் கொஞ்சமாகத் தேன் விட்டு மேற்படி சூரணத்தைக் கையினாற் பிசைந்து கொள்ளவும்.

மாத்திரை - 20,25 கிராம் காலையில் மாத்திரம் சாப்பிடவும்.

உபயோகம் -வரட்சியினா லுண்டாகிற இருமல், சொறி சிரங்கு, சொறிகள், கரப்பான், கிரந்தி முதலிய தோலைப்பற்றின வியாதிகள் தீரும்.

வேறு

சுத்திசெய்த சூரத்துநில ஆவாரை, சூரத்துக் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்தோல் பாலிற் சுத்திசெய்த நெல்லிமுள்ளி இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், மாசிப்பத்திரி, கொடிவேலி வேர்ப்பட்டை, அப்திமூன், பஸ்பாயிஜ், சுத்திசெய்த சீமைச் சிவதைவேர், உஸ்துகுதூஸ் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம் சடாமாஞ்சில், ரூமிமஸ்தகி, ஜாதிக்காய் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், காவுஜபொான், எலுமிச்சந் துளசி, துளசி

இவை வகை ஒன்றுக்கு 5 கிராம் கரபஸ் ஓமம், அனிசூன் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், பாதம் நெய் 140 கிராம் திராக்ஷப்பழம் 350 கிராம் சுத்திசெய்த தேன் 1400 கிராம் சீமைக் காவிக்கல் 32 கிராம்.

செய்முறை - திராக்ஷப்பழம், தேன், பாதம்நெய் இம்மூன்றைத் தவிர மற்றசரக்குகளையெல்லாம் இடித்து வஸ்திரகாயஞ் செய்து, பாதம் நெய் விட்டு, நன்றாகப் புரட்டித் திராக்ஷைப்பழத்தையும் சூரணத்தையும் சேர்த்து உரலிலிட்டுச் சிறுகச் சிறுகக் தேன்விட்டு நன்றாயிடித்துத் தேன் மிஞ்சினால் அதையும் விட்டு நன்றாகப்பிசறி யெடுத்துக் கொள்ளவும்.

மாத்திரை - காலையில் மாத்திரம் 12- 20- 25 கிராம், தேகசக்திக்கு ஏற்ற அளவாகச் சாப்பிட்டு வரவும்.

உபயோகம்- மனக்கலக்கம், பைத்தியரோகம், வீண் சந்தேகம், மூலவியாதி இவைகள் தீரும். மலச் சிக்கலைக் கண்டிக்கும்.

வாயுசங்காரன்

குச்சி, காம்பு முதலியவை நீக்கிச் சுத்திசெய்த சூரத்து நில ஆவாரை 350 கிராம். இதை யிடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும். புதுப்பானையில் இரண்டரைப்படி, நீராகாரத்தைவிட்டு வாய்க்கு மெல்லிய சீலைகட்டி வெய்யிலில் வைக்கவும். மாலையில் வேறொரு புதுப்பானையில் அந்த ஜலத்தையூற்றி வெய்யிலிற் காயவைக்கவும், இவ்விதமாக மூன்று நாள் வரைக்கும் பானையை மாற்றி மாற்றி வெய்யிலில் வைத்துவரவும். நாலாம்நாள் இந்த ஜலத்தில் 170 மிலிட்டர் இறுத்து மேற்கண்ட சூரணம் 16-16-20 கிராம், தேகபலத்திற்கும் வியாதி பலத்திற்கும் ஏற்ற அளவாகச் சாப்பிட்டு அதன்மேல் அந்தநீராகாரத்தை சாப்பிடவும். புளியில்லாமற் சாப்பிட்டால் அதிக சீக்கிரத்தில் எத்தனை நாட்பட்ட வியாதிகளானாலும் குணமாகும்.

உபயோகம் - அதிக நாட்பட்ட கீல்வாய்வு. ஒன்றிலுந்தீராத மேகவாய்வு, கைகால் முடக்கு முதலிய மேகசம்பந்தமான எல்லா வாய்வுகளும் தீரும்.

இம்முறை ஒரு பெரியவர் சொன்னபடி பலதடவை செய்து பார்த்துக் கைகண்டது.

சூரத்து நில ஆவாரைப் பிரயோகங்கள்

குச்சி, காம்புகள் முதலிய நீக்கிச் சுத்தி செய்த சூரத்து நில ஆவாரை 525 கிராம், பசுவின்பால் படி அரையிற்போட்டு நன்றாகக்கலந்து ஓரிரவு வைத்து மறுநாள் நன்றாயுலர வைத்து இடித்துச் சூரணம் பண்ணி வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்ளவும். இதில் 12 கிராம், சுத்தி

செய்த தேன் 12 கிராம் சேர்த்துக் காலை மாலை நாற்பது நாள் சாப்பிட, தேகத்திலுள்ள வியாதிகள் நீங்கி ரத்தவிர்த்தி யுண்டாகும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 12 கிராம், இந்தப்புஸ்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிற பால் சர்க்கரை 12 கிராம் இவ்விரண்டையும் சேர்த்துக் காலை மாலை நாற்பது நாள் சாப்பிட்டுவரத் தேகத்திலுள்ள அனல், சூடு இவை நீங்கித் தேகம் வலுக்கும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 12 கிராம், இதை இப்புஸ்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிற மதுகுல்கந்து 12 கிராம் சேர்த்துக் காலை மாலை இரண்டுவேளையும் இவ்விதம் நாற்பது நாள் சாப்பிட தேகத்திலுள்ள சீதநோய் இரைப்பையிலுள்ள கபம் ஆகியவை நீங்கித் தீபாக்கினி யுண்டாகிப் பசிதீபன முண்டாகும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 12 கிராம், இதை சீனாக்கற்கண்டுச் சூரணம்12 கிராம் சேர்த்துக் காலை மாலை நாற்பது நாள் இவ்விதம் சாப்பிட, தேகம் பருத்துப் பலமுண்டாகித் தேகவஜீகர முண்டாகும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 12 கிராம், இதைப் பசுவின் நெய் 12 கிராம் சேர்த்துக் குழைத்து வழமையாகச் சாப்பிட்டு வந்தால் கடவுளின் கிருபையால், யாதொரு வியாதியும் அணுகாமல் சுகமான நிலையில் இருந்து வாழ்வதற்கு இடமுண்டாகும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 12 கிராம், இதைப்பசுவின் வெண்ணெயிற் கலந்து காலை மாலை இரண்டுவேளையும் சாப்பிட்டுவர, மூளையிலுள்ள மாசுகள் நீங்கிமூளை பலப்பட்டு ஞாபகசக்தி அதிகப்படும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 12 கிராம். இதைப்பசுவின் தயிர் 45 மி.லிட்டர் கலந்து சாப்பிட, தேகத்திலுள்ள விஷநீர் நீங்கும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 12 கிராம். பாலில் அவித்துலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ் செய்த பறங்கிப்பட்டைச் சூரணம் 8 கிராம், இவைகளை சேர்த்துக் காலை மாலை சாப்பிட்டுவர, மேகப்படைகள் நீங்கி ரத்த சுத்தி யுண்டாகித் தேகாரோக்கிய முண்டாகும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 6- 8 கிராம் தனியே காலையில் மாத்திரம் வழமையாகச் சாப்பிட்டுவர, சோம்பல், அசதி முதலியன நீங்கி சுருசுருப்புண்டாகும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 12- 18 கிராம் காய்ச்சின பசுவின் பால் ஆழாக்கில் ஒரு கிராம் சீனாகற்கண்டைப் போட்டுச்

சாப்பிட்டுவர, தேகங்கொழுத்துப் பலமுண்டாகும் ஜீரணசக்தி பலமுள்ளவர்கள் பாலைக் காய்ச்சாமலே சாப்பிடலாம்.

இவ்விதமே வெள்ளாட்டுப் பாலிற் சாப்பிட ஆண்மை அதிகரிக்கும்.

கழுதைப்பாலிற் சாப்பிட, கபவியாதிகள், உஷ்ண வியாதிகள் ஆகியவை தீரும்.

முலைப்பாலிற் சாப்பிடத் தேகத்தில் அதிகப்பலமுண்டாகும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 4-6 கிராம், விதை நீக்கின பேரீச்சங்காய் 8 கிராம், அல்லது 12 கிராம் சாப்பிட; வாயிலுண்டான துர்க்கந்தம் நீங்கிச் சுகந்தமுண்டாகும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 4- 12 கிராம், மாதுளம்பழ ஷர்பத்து 24- 36 கிராம் சேர்த்து சாப்பிட, பித்த ரோகங்கள் முதலியவை நீங்கும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 8- 12 கிராம். கையாந்தகரைச்சாறு 45 மி.லிட்டர் கறிமிளகுச் சூரணம் 2 கிராம் சேர்த்துச் சாப்பிட, பாண்டுரோகம், மலஜலக்கட்டு முதலியவை நீங்கி ரத்தவிருத்தியுண்டாகும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 8- 12 கிராம். நெல்லிக்காய் முறப்பா 20 கிராம் அல்லது நெல்லிக்காய் ரசம் 20 கிராம் சாப்பிடப் பித்தாதிக்கம், பித்தவாந்தி முதலியவை நீங்கி, பசிதீபனமுண்டாகும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 8- 12 கிராம். இஞ்சி மேல்தோல் நீக்கி இடித்துப் பிழிந்து ரசத்தை ஒரு மண்பாத்திரத்தில் விட்டுக் கீழ்ப்படிந்திருக்கும் சுண்ணாம்பை நீக்கியிறுத்ததில் இருபது கிராம் சாப்பிட, பழையசுரங்கள் , கபசுங்கள் நீங்கும்.

மேற்கண்ட சூரணம் வேளையொன்றுக்கு 8- 12 கிராம் வெள்ளரிவிதை, கெக்கரிவிதை, சுரைவிதை இவற்றில் தனியாகவாவது கலந்தாவது அரைத்துப் பிழிந்தெடுத்த 85 மி.லிட்டர் கலந்து சாப்பிட், நீரடைப்பு, நீரெரிச்சல் முதலிய நீர்ப்பையிலுள்ள வியாதிகள் ஆகியவை தீரும்.

குறிப்பு

மேற்கண்ட விதமாகச் சமயோசிதமாகவும், தேகபலம், வியாதிபலம், தேசம், காலம், வயது முதலியவைகளுக்கு ஏற்றபடி தக்க அனுபானங்களுடனும் மேற்கண்ட அளவில் குறைவாக அல்லது

அதிகமாக நாற்பது நாள் என்பதில் அதற்கு முந்தியே வியாதிகள் சௌக்கியப்பட்டு விட்டாலும் அல்லது நாற்பது நாளைக்கு அதிகப்பட்டு சௌக்கியமானாலும் வியாதிகள் தீரும் வரைக்கும் சமயத்திற்குத் தக்கபடி சாப்பிட்டு வரவும்.

தரஞ்சபீன் பேதி ஷர்பத்து

புளி 350 கிராம், சுத்தசலம் படி யொன்றிற் கரைத்து அழுத்தமான துணியிற் கட்டித் தொங்கவிட்டுச் சொட்டுச் சொட்டாய் வடியும் ஜலத்தை ஓர் பீங்கான் பாத்திரத்திற் பிடித்து அந்தப்புளித் தெளிநீர் எடை ஒரு பங்கில், தரஞ்சபீன் ஒன்றரைப்பங்கையிட்டுக் கரைத்து வடித்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 35- 70 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- மலம்போகும். பித்தத்தை அதிகமாகப் பேதிவழியே வெளிப்படுத்தும். சூட்டினாலுண்டான சுரம், வெகுட்டல் ஆகிய இவைகள் நீங்கும்.

குறிப்பு

சீமை யிலந்தைப் பழத்தைக் கிஷாயஞ் செய்து மேற் கண்டபடியே ஷர்பத்து செய்துக் கொள்ளலாம்.

மேனா ஷர்பத்து

சோம்புத் திராவகம் 700 கிராம், மேனா 350 கிராம், இவ்விரண்டையுஞ் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கி கொள்ளவும்.

மாத்திரை - 35- 70 கிராம், சாப்பிடலாம்.

உபயோகம் - மலம்போகும், சூடு, எரிவந்தம், தொண்டைவரட்சி முதலியவைகள் தீரும்.

அப்திமூன் மாத்திரை

அப்திமூன் 35 கிராம், *காரிகியூன், ச்ஸ்பாயிஜ், கர்க்கடகசிங்கி இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், **பரமௌஷம் 28 கிராம், சீமைக் காவிக்கல் 15 கிராம், சுத்திசெய்த மஹமூதா 4 கிராம், பாதம்நெய் அரை கிராம்.

---

* இதனை உபயோகப்படுத்தும் விதம் இதன் தலைப்பிற் பார்க்க.

** இதன் முறை பின்னர் எழுதப்படும்.

செய்முறை - சூரணஞ் செய்ய வேண்டியவற்றைச் சூரணஞ் செய்து மற்றவைகளையும் சேர்த்தரைத்துப் பாதம் நெய்விட்டுப் புரட்டிச்சுத்த ஜலம் விட்டு நன்றாயரைத்து 4 கிராம் மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

மாத்திரை - தேகத்திற்குத் தக்கபடி இரண்டு மூன்று மாத்திரைகளைக் காலையில் சாப்பிடவும்.

உபயோகம் - தேகத்திலும் சிரசிலுமுள்ள வண்டலை நீக்கும். எரிந்து போன வண்டலை நீக்கி, அதனாலுண்டான பைத்திய ரோகத்தைத் தீர்க்கும்.

அப்திமூன் ஸிகாமதுபானம்

அப்திமூன் 175 கிராம், இதனை ஒரு கித்தான் துணியில் தளர்ச்சியாக முடிந்து சுத்தஜலம் ஒரு படியிற் போட்டுக் காய்ச்சி இரண்டு மூன்று கொதி வந்தவுடன் கீழிறக்கி துடுப்பினால் அந்த முடிச்சை நன்றாக நசுக்கி நசுக்கி அதன் சத்து வெளிப்பட்டபின் பிழிந்து நீக்கிச் சீமை திராக்ஷக்காடி 700 கிராம், சேர்த்துச் சீனிசருக்கரை 700 கிராம் சேர்த்துப் பாகுபதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 60, 70 கிராம் வெந்நீருடன் அல்லது தனியே சாப்பிடவும்.

உபயோகம் - வீண்கவலை, பைத்தியம், புத்தி தடுமாற்றம், தேகம் மரத்தல் முதலியவைகள் நீங்கும்.

வேறு

அப்திமூன், பஸ்பாயிஜ் இவை வகை ஒன்றுக்கு 50 கிராம், நைய நறுக்கின கடுகுரோகணி 5 கிராம் சீமைத் திராக்ஷக்காடி 450 கிராம் சுத்தசலம் 500 கிராம் சீனிசருக்கரை 1400 கிராம்.

செய்முறை - காடியையும் ஜலத்தையும் ஒன்றாகச் சேர்த்து அதில் கடுகுரோகணியைப் போட்டு ஓரிரவு ஊறவைத்து அடுப்பேற்றி மெதுவாயெரித்து இரண்டு மூன்றுகொதி வந்தவுடன், பஸ்பாயிஜை மேல்தோல் சீவி நறுக்கிக் கித்தான் துணியிற் கட்டிப்போட்டு இரண்டு கொதிவந்தபின் அப்திமூனையும் மேற்படி துணியிற் கட்டிப்போட்டு இரண்டு கொதிவந்தபின் கீழிறக்கி, முன்னர் அப்திமூன் முடிச்சை நன்றாகப் பிசைந்து பிழிந்து, பின்னர் மற்றொரு முடிச்சையும் நன்றாகப் பிழிந்து முடிச்சை நீக்கிச் சீனிசருக்கரையைச் சேர்த்து மெதுவாகத் தீயிட்டெரித்துப் பாகுபதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 35, 55 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - முன் சொன்ன ரோகங்க ளனைத்தும் தீரும்.

அப்திமூன் கியாழம்

அப்திமூன், மஞ்சட்கடுக்காய்த் தோல், சூரத்துக் கடுக்காய் தோல், உஸ்துகுதூஸ், விதைநீக்கின திராக்ஷப் பழம் இவை வகை ஒன்றுக்கு 16 கிராம், அப்திமூனைத் துணியில் முடிந்து கொள்ளவும், பஸ்பாயிஜ் 12 கிராம் சுத்திசெய்த சீமைச் சிவதைவேர் 2 கிராம் மேல்தோல் நீக்கின சுக்கு 5 கிராம் காம்பு முதலியன நீக்கிச் சுத்தி செய்த சூரத்து நில ஆவாரை 20 கிராம் சுத்தசலம் 840 கிராம்.

செய்முறை- அப்திமூனைத் தவிர மற்றச் சரக்குகளையெல்லாம் ஜலத்திற்போட்டு அது மூன்றில் ஒருபங்காகச் சுண்டினபின் அப்திமூன் முடிச்சைப் போட்டு இரண்டு கொதி வந்தபின் கீழிறக்கி அப்திமூன் முடிச்சை நன்றாகப் பிழிந்து அதன் சத்தெல்லாம் வெளிப்பட்டபின் அதையெறிந்து விட்டுக் கியாழத்தை வடித்து இளஞ் சூடாயிருக்கும்போது பானஞ் செய்யவும்.

உபயோகம் - இதனைத் தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வந்தால் மேற்கண்ட வியாதிகள் நீங்கும்.

அப்திமூன் மாஜூன்

அப்திமூன் சூரணம் 35 கிராம் விதை நீக்கின திராக்ஷப் பழம் 100 கிராம், இவ்விரண்டையும் உரலிலிட்டு மெழுகு போல் நன்றாயிடித்துக் கொள்ளவும்.

மாத்திரை - 20 கிராம் சாப்பிடவும்.

உபயோகம - மேற்கண்ட வியாதிகளனைத்தும் தீரும்.

சரக்கொன்றைப்புளி மாத்திரை

சரக்கொன்றைப் புளியைப் பாகப்படி செய்தெடுத்த லேகியம் 70 கிராம், சுத்திசெய்த மகுமூதா 5 கிராம், பாதம் பிசின் 10 கிராம் மஞ்சட்கடுக்காய்த்தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல், கற்கடகசிங்கி, சூரத்து நில ஆவாரை, பனப்ஷாவின் பூ இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 18 கிராம், காம்பு முதலியவை நீக்கிச் சுத்திசெய்த ஜரிஷ்க் 20 கிராம், பாதம் நெய் 25 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து நன்றாயரைத்து பாதம் நெய் கூட்டி மத்தித்துக் கடலைப் பிரமாணம் மத்திரைகள் செய்து ஒவ்வொன்றையும் வெள்ளிரேக்கிற் சுருட்டி வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 8, 10 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இது பித்தத்தை வெளிப்படுத்துவதில் ஒப்பற்றது.

சரக்கொன்றைப் புளி ஷர்பத்து

பாகப்படுத்தின சரக்கொன்றைப்புளி, விதைநீக்கின திராக்ஷப்பழம். இவை வகை ஒன்றுக்கு 280 கிராம் மணத்தக்காளியிலை ரசம், காசினியிலைரசம் இவை வகை ஒன்றுக்கு 250 கிராம் சீனிசருக்கரை 350 கிராம்.

செய்முறை - மேற்படி ரசங்கள் இரண்டையும் சரக்குகள் இரண்டையும், ஒன்றாகக் கலந்து சத்து வெளிப்படும் வரையில் நன்றாகப் பிசைந்து வடித்துச் சீனிசருக்கரை சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 70- 90 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மலம் போகும், ஈரலைப் பலப்படுத்தும், குடல் முறுக்கும் நோயைக் கண்டிக்கும்.

சரக்கொன்றைப் புளி பானம்

உலர்ந்த சீமையிலந்தைப் பழம் 30 கிராம், உலர்ந்த சீமை யத்திப்பழம் 10 கிராம் உலர்ந்த சீமை நறுவிலிப்பழம் 40, மயிர்ச்சிக்கி, காவுஜூபான் இலை இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், பாகப்படுத்தின சரக்கொன்றைப் புளி 70 கிராம், பாதம் நெய் 35 கிராம், சீனிசருக்கரை 400 கிராம்.

செய்முறை - ஒருபடி ஜலத்தில், சரக்கொன்றைப்புளி, சீனிசருக்கரை, பாதம்நெய் இவை தவிர மற்றச் சரக்குகளையெல்லாம் போட்டுமூன்றிலொரு பாகமாகக் காய்ச்சிச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து வடித்த கிஷாயத்தில் மேற்படி புளியைக் கரைத்து வடித்து பாதம்நெய் சேர்த்துக் கலந்து சீனிசருக்கரையுஞ் சேர்த்து ஷர்பத்துப் பதமாகக் காய்ச்சிக் கொள்ளவும்.

மாத்திரை - 70- 90 கிராம் வெந்நீரிற் கலந்து சாப்பிடவும்.

உபயோகம் - வரட்சியினாலுண்டான இருமல் கஷ்ட சுவாசம் இவை தீரும்.

சரக்கொன்றைப் புளிச்சட்னி

பாகப்படி செய்த சரக்கொன்றைப் புளி 70 கிராம், பாதம்பிசின், மொச்சைமா இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், மேல்தோல் நீக்கின பாதம்பருப்பு, சீனிசருக்கரை இவை வகை ஒன்றுக்கு 35 கிராம் பாதம் நெய் 20 கிராம்.

செய்முறை - மேற்படி நெய்யைத் தவிர மற்றெல்லாவற்றையும் ஒன்றாயிடித்து, பாதம் நெய்யும் சேர்த்து மத்தித்துக் கொள்ளவும்.

மாத்திரை - 20, 30 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மார்புநோய், பக்கநோய், தொண்டை வீக்கம், குரற்கம்மல் முதலியவை தீரும்.

கொன்றைப்புளி மாஜூன்

பனப்ஷா, சுத்திசெய்த சீமைச்சிவதை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 140 கிராம், கறியுப்பு 250 கிராம், சோம்பு, றூமிச்சோம்பு, றூமிமஸ்தகி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், அதிமதுரப்பால் 18 கிராம், சுத்தி செய்த மகுமுதா 20 கிராம், பாகப்படுத்தின சரக்கொன்றைப் புளி 350 கிராம்.

செய்முறை - தேனையும், சீனி சருக்கரையையும் கலந்து காய்ச்சிப் பதத்திலிறக்கி மேற்கண்ட சரக்குகளை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்து நன்றாகக் கடைந்தெடுத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 18, 35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - சூட்டினாலுண்டான குடல்முறுக்கு நோய், சிறுகுடலிலுண்டான குடல்முறுக்கு நோய், சிறு குடலிலுள்ள கப சம்பந்தமான வியாதிகள், பித்த சம்பந்தமான வியாதிகள் இவை தீரும்.

மஹ்முதா, அல்லது ஸகுமூனியா (Scammony) வின் சுத்திக்கிரமம்

கொய்யாப்பழம், சீமை யிலந்தைப்பழம் Apple இவ்விரண்டில் ஒன்றைக் குடைந்து உள்ளிலிருக்கிற சதையை நீக்கிவிட்டு அது கொள்ளுமளவும் மஹ்மூதாவைச் செலுத்தி வாய்க்கு அந்தப் பழத்தின் துண்டையே வைத்து அழுத்தி மூடி உரத்த கெட்டித் துணியினாற் கட்டி, அரிசிமாவை அல்லது கோதுமை மாவைக் குழைத்து அதின்மேற்பொதிந்து நிதானமான கரி நெருப்புக்குள் வைத்து மாவானது சிவந்த வர்ணமாம் பதம்பார்த்தெடுத்துப் பிரித்து உருகி உள்ளேயிருக்கும் மஹ்முதாவை நிழலில் உலர்த்தியெடுத்துக் கொள்வதே மஹ்முதா சுத்தியாம்.

வேறு

மேற்கண்ட பழங்கள் அகப்படாத சமயங்களில் மஹ்மூதாவுக்குச் சமனெடை பனப்ஷாவைச் சேர்த்து, ஜலம் வார்த்தரைத்து உலர்த்திக் கொள்வதே அதன் சுத்தியாம். இவ்விரண்டில் முன்பாகமே சிறந்தது.

ஸகுமுனியா ஜவாரிஷ்

சுத்திசெய்த மஹ்மூதா, சுத்திசெய்து இடித்துச் சூரணம்செய்து வடித்து பாதம் நெய்யிற் புரட்டின சீமைச் சிவதை சூரணம் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், மிளகு , ஏலம், இவை வகை ஒன்றுக்கு 15 கிராம் மேல்தோல் நீக்கின சுக்கு, லவங்கப்பட்டை, நெல்லிமுள்ளி, ஜாதிப்பத்திரி, லவங்கம், ஜாதிக்காய் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 10 கிராம், வெள்ளைப்போளம் 10 கிராம், சீனிசருக்கரை 245 கிராம் காய்ச்சி நுரைநீக்கிச் சுத்தி செய்த தேன் 24 கிராம்.

செய்முறை- தேனுடன் சர்க்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் ஸகுமுனியா, போளம் இவ்விரண்டையும் தனித்தனியே சூரணஞ் செய்து, முன் சூரணங்களை யெல்லாம் ஒன்றாகச்சேர்த்து நன்றாகக்கலந்து அல்லது பாகிற்போட்டு நன்றாகக் கிண்டிக்கிளறிப் பக்குவப் படுத்தவும்.

மாத்திரை - 8 கிராம், முதல் 16 கிராம் வரையில் சாப்பிடலாம்.

உபயோகம் - வாயுகள், மார்புதுடித்தல்; மூலவியாதிகள், கீல்வாயுகள், தொடைநரம்பு வாயுகள் ; முறுக்குக் குடல் வாயு, இரைப்பையிலுள்ள பலவித வாயுகள் ஆகியவை நீங்கும்.

குறிப்பு

இதைத் தொடர்ச்சியாகச் சாப்பிடும் பொழுது தேக சக்திக்குத் தக்கபடி வேளையொன்றுக்கு 6- 8 கிராம், சாப்பிடவும். பேதியாக வேண்டுமானால் 20- 24 கிராம் சாப்பிட வேண்டும்.

ஹிந்தி ஜவாரிஷ்

சுத்திசெய்த மஹ்மூதா 35 கிராம், ஜாதிக்காய், காட்டேலம், லவங்கப்பட்டை, மேல்தோல் நீக்கின சுக்கு,பெருலவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, மிளகு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், மேல்தோல் போக்கிச் சுத்திசெய்து இடித்து வடித்துப் பாதம் நெய்ப்பசை யுண்டாக்கின சீமைச் சிவதைவேர்ச் சூரணம் 70கிராம், காய்ச்சி நுரைநீக்கிச் சுத்திசெய்த தேன் 600 கிராம்.

செய்முறை - ஸகுமூனியாவைச் சூரணஞ் செய்து மற்றச் சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து பாகப்படி ஜவாரிஷ் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 8- 12 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - கீல்வாயுகள், குதிகால் நரம்பின் வாயு, முதுகெலும்பின்வாயு, குடல் முறுக்குவாயு முதலியவை நீங்கும்.

சுகாதார மாஜூன்

சுத்திசெய்த ஸகுமூனியா, பனப்ஷா, காம்பு முதலியவை நீக்கின சூரத்து நில ஆவாரை, மஞ்சட்கடுக்காய்த்தோல், உலர்ந்த தாமரைப்பூ,ரோஜாப்பூ, இவற்றின் சூரணம் வகை யொன்றுக்கு 8 கிராம், சீனிசருக்கரை 75 கிராம் நுரைநீக்கிச் சுத்திசெய்த தேன் 75 கிராம்.

செய்முறை - சூரணங்களை யெல்லாம் ஒன்றாகக் கலந்து பனப்ஷா எண்ணெய் அல்லது பாதம் எண்ணெய்ப் பசையுண்டாக்கித் தேனையும் சர்க்கரையுஞ் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்திற்சேர்த்து பாகப்படி ஜவாரிஷ் செய்து கொள்ளவும்.

மாத்திரை -4-6 கிராம் சாப்பிடவும் .

உபயோகம் - மலச்சிக்கலை நீக்கும்; பித்தத்தலை நோய்களை நீக்கும், மூவகை அசுத்த மாசுகளை நீக்கித்தேகத்தைச் சுத்தப்படுத்தும். இதனைச் சூடான தேகிகளுக்கும் கோடைகாலத்திலும் உபயோகப் படுத்தலாம்.

ஆரோக்கிய மாஜூன்

சுத்திசெய்த ஸகுமூனியா, மேல்தோல் நீக்கிச் சுத்தி செய்த பாதம்பருப்பு, கழுவின எள், மேல்தோல் நீக்கின குசும்பாவிதைப் பருப்பு இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், வெள்ளைப்போளம் 40 கிராம், சீனிசருக்கரை 70 கிராம்.

செய்முறை - சீனிசருக்கரை தவிர மற்றவைகளெல்லா வற்றையும் ஒன்றாயரைத்துச்சேர்த்துச் சீனிசருக்கரையைப் பாகுசெய்து அதிற்போட்டு ஜவாரிஷ் செய்து கொள்ளவும்.

மாத்திரை - வேளை யொன்றுக்கு 4 கிராம், பன்னீர் 70 கிராம், அல்லது 90 கிராம் உடன் சாப்பிடவும்.

உபயோகம் - பித்தம், கபம் ஆகிய துர்நீர்களைக் கண்டித்து வெளிப்படுத்தும், பேதி யௌஷதம் சாப்பிட அருவருப்பு உள்ளவர்களுக்கும் இது உபயோகப்படத்தக்கது.

குறிப்பு

இந்த முறையில் வெள்ளைப்போளம் விராகனெடை இருபது சேர்த்துச் செய்வது முண்டு.

குன்மக்குடோரி ஜவாரிஷ்

சுத்திசெய்த ஸகுமூனியா 245 கிராம், அரிசித்திப்பிலி, மிளகு, மேல்தோல் நீக்கின சுக்கு, பிளப்புச்சீரகம், உலர்ந்த சதாபிலை, சன்னராஷ்டம், பெரு லவங்கப்பட்டை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், நுரை நீக்கிச் சுத்திசெய்த தேன் 490கிராம்.

செய்முறை - எல்லாச் சூரணங்களையும் ஒன்றாகச் சேர்த்துத் தேனைக்காய்ச்சிப் பாகுபதத்தில் சூரணத்தைக் கூட்டி ஜவாரிஷ் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 4.5 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - குடல்முறுக்கு, வாயுநோய் முதலியவைகள் ஒரு மணிக்குள் சௌக்கியப்படும்.

ஸூகுமார மாஜூன்

சுத்திசெய்த ஸகுமூனியா 4 கிராம், மிளகு, அரிசித்திப்பிலி, பிளப்புச்சீரகம், உலர்ந்த சதாபிலை, சன்னராஷ்டகம், பெருலவங்கப்பட்டை இவைகளின் சூரணம் வகை யொன்றுக்கு 35 கிராம், நுரைநீக்கிச் சுத்திசெய்த தேன் 490 கிராம்.

செய்முறை - பாகப்படி செய்து கொள்ளவும்.

உபயோகம் - குடல் முறுக்குநோய், முதுகின்நோய் முதலியவை தீரும்.

கரியபோளச் சுத்தி

தேவையான அளவு கரியபோளத்தை மேடுபள்ளங்களில்லாத கல்வத்தில் மெதுவாக நறுக்கித் தூள் செய்து ஒரு பட்டுத் துணியில் தளர்ச்சியாய் முடிந்து வைத்துக் கொள்ளவும், மாசிப்பத்திரி 490 கிராம், பல்ஸான்விதை, லவங்கப்பட்டை, ஊதேபல்ஸான், சடாமாஞ்சில், நிலக்கடம்பு, பெருலவங்கப்பட்டை; இவை வகை யொன்றுக்கு 12 கிராம், இவைகளை யெல்லாம் நையநறுக்கி ஒன்றேகாற்படி சுத்த ஜலத்திற் போட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கி வடித்துச் சக்கைநீக்கிக் கிஷாயத்தை எடுத்துக் கொள்ளவும். முன் கட்டின

முடிச்சைக் கல்வத்திலிட்டு இந்தக் கிஷாயத்திற் கொஞ்சம் ஊற்றிக் குழவியினால் நசுக்கி நசுக்கி சத்துவெளிப்பட மறுபீங்கான் பாத்திரத்தில் அதை யிறுத்துக் கொண்டு முன்போலவே கல்வத்திற் கிஷாயம் விட்டு நசுக்கிச் சத்து வெளிப்பட இறுத்துக் கொள்ளவும். இவ்வாறு சத்துவருகிற வரையுஞ் செய்து மீதியாய் நிற்கும் கல், மண் முதலியவைகளை எறிந்து விடவும். பீங்கான் பாத்திரத்திலுள்ளதை அசையாமல் தெளிய வைத்து அந்தத் தெளிநீரைச் சீலைத்திரி அல்லது நூல் திரியைக் கொண்டு நீக்கி விடவும். மெதுவா யிறுத்தும் நீக்கிவிடலாம். வேறொரு தட்டையான பீங்கான் பாத்திரத்திற் குங்குமப்பூவை நீர்விட்டரைத்துப் பூசி உலரவைத்து முன் பீங்கான் பாத்திரத்திலுள்ள வண்டலைப் போட்டுலர்த்திச் சீஷாவில் வைத்துக் கொள்ளவும். கரியபோளத்தை இவ்விதம் சுத்தி செய்து உபயோகிப்பதனால் அதன் துர்க்குணங்கள் நீக்கப்பட்டு அதிக குணத்தைத்தரும்.

வேறொரு முறை

சடாமாஞ்சில், நிலவேம்பு, ஊதேபல்ஸான், லவங்கப் பட்டை, நிலக்கடம்பு, றூமிமஸ்தகி, பஸ்ஸான்விதை, பெருலவங்கப்பட்டை, ஜாதிப்பத்திரி, ஜாதிக்காய், விலாமிச்சம் வேர்,இவை வகை யொன்றுக்கு 15 கிராம், இவைகளை யெல்லாம் நைய நறுக்கி ஒருபடி ஜலத்திற்போட்டு கரிய போளம் 875 கிராம் மேடு பள்ளங்களில்லாத கல்வத்திலிட்டு மேற்படி ஜலம் விட்டரைத்து அந்த ஜலத்திலேயே கரைத்துச் சேலையில் வடித்துச் சக்கையை நீக்கிவிடவும். வடித்த ஜலத்தைத் தெளியவைத்துத் தெளிந்த நீரை சீலைத்திரியினால் நீக்கி விடவும். அல்லது ஜாக்கிரதையாக மேலாக இறுத்து நீக்கிவிடவும். கீழ்ப்படிந்திருக்கும் வண்டலைப் புட்டியிற் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும். இப்பாகத்திற் கரியபோளத்தி னெடைக்கு காற்பங்கு மாசிப்பத்திரியைச் சேர்த்துக் கொண்டால் உத்தமமா யிருக்கும்.

குறிப்பு

கரியபோளத்தைச் சுத்தி செய்தே ஔஷதங்களிற் சேர்க்க வேண்டும். சுத்தி செய்வதினால் அதன் பலம் குறைந்து போகுமென்று சிலர் கருத்துக் கொண்டாலும், சுத்தி செய்வதினால் உண்டாகும் பிரயோஜனம் அதிகம் என்பது திண்ணம்.

பரமௌஷதம்

சடாமாஞ்சில், பெருலவங்கப்பட்டை, லவங்கப்பட்டை, றூமிமஸ்தகி, ஊதேபல்ஸான், பல்ஸான் விதை, நிலக்கடம்பு, குங்குமப்பூ

இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு ஒருபங்கு, சுத்திசெய்த அரபி போளம் (ஸோகொடரைன்) (Socotrine) சூரணம் பதினெட்டுப்பங்கு.

செய்முறை - இவற்றை யெல்லாம் தனித்தனி நிறுத்தெடுத்து ஒன்றாகச் சேர்த்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - 5- 10 கிராம் தேனில் அல்லது வெந்நீரில் அல்லது அப்திமூன் கிஷாயத்திற் சாப்பிடவும்.

உபயோகம் - பலவிதத் தலைநோய்களை நீக்கும். தலைமூளை, இரைப்பை இவைகளிலுள்ள எல்லாவித அசுத்தமாசுகளை நீக்கும், முகவாதம், பக்ஷவாதம், நாத்தளர்ச்சி, கீல்வாயுகள், குடல் முறுக்குவாயு, குடல் முறுக்கு வாயுவினாலுண்டாகும் வாந்தி இவைகள் தீரும்.

குறிப்பு

இது சிலருக்கு நீர்க்குண்டிக்காயில் கெடுதியை யுண்டாக்கும். அதற்குச் சீமையிலந்தைப்பழக் கிஷாயஞ் சாப்பிட நீங்கும். இதைத் திரிபலாதி லேகியத்துடன் சாப்பிட மூளையைச் சுத்திசெய்யும். குல்கந்துடன் சாப்பிட இரைப்பையை சுத்தி செய்யும். இவ்விதம் செய்து பல தடவையும் அனுபவப்பட்டது.

மஹா பரமௌஷதம்

பாதம்பிசின் 4 கிராம், இந்துப்பு 10 கிராம். ரோஜாப்பூ விதழ், மேல்தோல் நீக்கின சுக்கு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், உலர்த்தின ஆற்றுத் தும்மட்டிக் காய்ச்சதை 14 கிராம், சுத்தி செய்த மஹமூதா 16 கிராம், சூரத்துக் கடுக்காய்த்தோல் 20 கிராம், அப்திமூன் உஸ்துகுத்தூஸ் இவைகளின் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 24 கிராம்; மஞ்சட் கடுக்காய்த்தோல் சூரணம் 28 கிராம் பரமௌஷதம்; மேல்தோல் நீக்கிச் சுத்தி செய்திடித்த சீமைச்சிவதைவேர் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும்.

மாத்திரை - 16 கிராம் மேற்கண்ட அநுபானங்களிற் சாப்பிடவும்.

உபயோகம் - தலைமூளையின் எல்லாவித அசுத்த மாசுகளை நீக்கி அதைச் சுத்தப்படுத்தும். பித்தம் கபம் வண்டல் ஆகிய இவைகளினாலுண்டாகும் நோய்களை நீக்கும். இது சற்றேறக் குறையச் சூடு குளிர்ச்சியிற் சமமானது.

சீத பரமௌஷதம்

மஞ்சட் கடுக்காய்த்தோல், சுத்திசெய்திடித்து பாதம் நெய்ப் பசையுண்டாக்கின சீமைச் சிவதைவேர்ச் சூரணம்; பனப்ஷா சூரணம் இவை வகை ஒன்றுக்கு 48 கிராம் பரமௌஷதம் 35 கிராம், ரோஜாப்பூ விதழ், காசினிவிதை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், பாதம், சுத்திசெய்த மஹ்மூதா இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 13 கிராம், உலர்ந்த தாமரைப்பூ, வெள்ளரி விதைப்பருப்பு, கக்கரிவிதைப்பருப்பு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம்.

செய்முறை - இவற்றையெல்லாம் நன்றாகச் சேர்த்து நன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 12 கிராம், தரஞ்சபீன் அல்லது மேனா கரைத்த ஜலத்திற் சாப்பிடவும்.

உபயோகம் - சூட்டினாலுண்டான சிரநோயனைத்தும் தீரும். முக்கியமாகப் பலவிதத் தலை நோய்கள் தீரும்.

பரமௌஷத மாத்திரை

சூரத்துக்கடுக்காய்த்தோல் ஆறுபங்கு, இந்துப்பு; சீமை மாசிப்பத்திரி, காரிகியூன், சுத்திசெய்த மஹமூதா இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு மூன்றுபங்கு, நிலக்கடம்பு, அனிஸூன், கரபஸ்ஓமம் இவைகளின் சூரணம் வகைக்கு இரண்டுபங்கு, சுத்திசெய்திடித்துச் சூரணஞ் செய்து பாதம் நெய்ப் பசையுண்டாக்கின சீமைச்சிவதை வேர்சூரணம் பதினேழுபங்கு, அப்திமூன் ஐந்து பங்கு, பரமௌஷதம் ஏழுபங்கு, லவங்கச் சூரணம் ஏழுபங்கு எல்லா சூரணங்களையும் ஒன்றாகச் சே சேர்த்துக் கல்வத்திலிட்டு சிறுகச்சிறுகத் தண்ணீர்தெளித்து நன்றாயரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைகள் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 4-8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - இரைப்பைக்குப் பலத்தை யுண்டாக்கும், பசிதீபனத்தையுண்டாக்கும்; இரைப்பை, ஈரல், மண்ணீரல் இவைகளின் வியாதிகளுக்கும் உபயோகப்படும் பஞ்சேந்திரியங்களின் கெடுதிகளை நீக்கும். சிறுகுடற்களிலுள்ள மாசுகளை நீக்கிச் சுத்தப்படுத்தும், பித்தநீர், கபநீர், வண்டல்நீர் ஆகிய மூவகை அசுத்த நீர்களையும் சுத்தஞ் செய்யும், இதற்கு இன்னும் அநேகவிதமான குணங்களுண்டு.

இலகு பரமௌஷதம்

அரபி போளச் சூரணம் 18 கிராம், றூமிமஸ்தகி சூரணம் 9 கிராம், நிலக்கடம்பு, ரோஜாப்பூவிதழ், சீமை விலாமிச்சைவேர், சுத்திசெய்த வெள்ளைப்போளம், பெரு லவங்கப்பட்டை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 17 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் நன்றாகச் சூரணித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 9- 12 கிராம், தக்க அனுபானங்களிற் சாப்பிடவும்.

உபயோகம் - குளிர்ச்சியான இரைப்பையின் வாயு, குளிர்ச்சியான வாயுவினாலுண்டான வியாதிகளனைத்தும் தீரும்.

கலிங்க முறப்பா

அதிக நாரில்லாததும், சற்று வெண்மை யதிகமானதும் மிருதுவானதும், பச்சை நிறமாறி வர்ணமானதுமான ஆற்றுத் தும்மட்டிக்காய்களை வேண்டிய அளவு எடுத்து ஒவ்வொன்றையும் நன்நான்கு துண்டுகளாகப் பிளந்து விதைகளை நீக்கி விட்டுக் காயொன்றுக்கு அஞ்சு அல்லது ஆறுபலம் விகிதம் கற்சுண்ணாம்பைச் அல்லது கிளிஞ்சிற் சுண்ணாம்பைக் காற்படி விகிதம் சலத்திற்கரைத்து மேற்படி துண்டுகளை அதிற்போட்டு நான்குநாள் ஊறவைத்தெடுத்து சுத்தஜலம்விட்டு நாலு அல்லது அஞ்சு தடவை கழுவி யெடுக்கக் கசப்புநீங்கி வெள்ளரிக்காயைப் போலிருக்கும். இதை மெல்லிய வஸ்திரத்தினால் ஒத்தித் துடைத்து நீரைப் போக்கிவிடவும், இந்தத் துண்டுகளின் எடைக்கு மூன்றுபங்கு சீனிசருக்கரையைப் பாகுசெய்து இளம்பதமாக வருகையில் மேற்படி துண்டுகளைப் போட்டுப் பாகுஇறுகின பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

கூடுமானால் இதை நாள்தோறும் வெய்யிலில் வைத்துவரவும். ஜலம்விட்டுப் புளிப்பேறினால் அடுப்பில் வைத்துக் காய்ச்சி நீர் சுண்டின பிறகு எடுத்து வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 12- 18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - வீக்கங்கள், வாயுகள், பாண்டு, வாயுவினால் உண்டான சூதகக்கட்டு இவைகள் நீங்கும்.

கலிங்காதி லேகியம்

மேற்கண்ட முறைப்படி செய்து கசப்பை நீக்கின ஆற்றுத்தும்மட்டிக்காய் பத்துபங்கு லவங்கம், ஏலம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, சோம்பு, வால்மிளகு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு இரண்டு பங்கு. சீனி சருக்கரை இருபது பங்கு; தேன் பதினைந்து பங்கு, பசுவின் நெய் இருபது பங்கு.

செய்முறை - நெய்யைக் காய்ச்சி மேற்படி ஆற்றுத் தும்மட்டிக்காய்த் துண்டுகளைப் போட்டு வறுத்தெடுத்துச் சூரணஞ் செய்து தனியே வைத்துக்கொண்டு மற்றச் சூரணங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொள்ளவும். சீனி சருக்கரையையும் தேனையும் சேர்த்துப்பாகுசெய்து இளம்பதத்தில் மேற்படி ஆற்றுத் தும்மட்டிக் காய்ச் சூரணத்தைப்போட்டுக் கிண்டிக் கிளறி மற்றச் சூரணங்களையும் கொஞ்சங் கொஞ்சமாகத் தூவிக் கிண்டிக் கிளறி நெய்வார்த்து எடுத்துக்கொள்ளவும்.

மாத்திரை - 12- 18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - வயிற்று வலி, பெறுவயிறு, பாண்டு , வீக்கம், சூதகவாயு இவை முதலியன நீங்கும்.

கலிங்காதி குழம்பு

ஆற்றுத் தும்மட்டிக்காய்களை யெடுத்துஒவ்வொன்றின் மேல் வரகின் வைக்கோலைப் பந்துபோற் சுற்றிக் கட்டிக் கீழும் மேலும் வைக்கோலைப் போட்டுக் கொளுத்தியெடுத்து இடித்துப் பிழிந்து வடித்த சாறு படி - ஒன்று, வெண்மையான ஈரவெங்காயச்சாறு படி ஒன்று, பனைவெல்லம் 280 கிராம், பெருங்காயத்தை வறுத்துப் பொடித்த சூரணம், கடுகு ரோகணி, ஏலம்,வால்மிளகு, இந்துப்பு, சீரகம், மேல்தோல் நீக்கின சுக்கு, வெண்காரம், கறுப்புப்பு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம்.

செய்முறை - சாறுகளில் வெல்லத்தை விட்டுக் கரைத்துக் காய்ச்சிப் பாகுபதத்திற் சூரணங்களைச் சேர்த்துநன்றாகக் கிண்டிக்கிளறி எடுத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 1- 2 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - பாண்டு, கௌசைக்கட்டி, நீராமை, வயிற்றுவலி, மகோதரம், சூதகவாயு, சூதகஜன்னி இவை முதலியன தீரும்.

குறிப்பு

இம்மருந்தினால் உஷ்ணம் அதிகப்பட்டால் நாவற்பட்டை 35 கிராம், சுத்தஜலம் ஆழாக்கில் நைய நறுக்கிப் போட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து 4- 5 வேளை குடிக்க உஷ்ணந்தணியும்.

நிசி சிநேக மாத்திரை

ஆற்றுத் தும்மட்டிக் காய்களைப் பிளந்துலர்த்தின சதை, சூறத்துக் கடுக்காய்த்தோல், அப்திமூன் இவை வகை ஒன்றுக்கு ஒரு பங்கு, பரமௌஷதம் அரை பங்கு, உஸ்துகுத்தூஸ் முக்கால் பங்கு, கடுகுரோகணி கால் பங்கு, றூமிமஸ்தகி, அகரு, பஸ்பாயிஜ் இவை வகை ஒன்றுக்கு அரை பங்கு, சுத்திசெய்த சீமைக் காவிக்கல் முக்கால் பங்கு.

செய்முறை - இவைகளை யெல்லாம் சூரணித்துச் சீமை யிலந்தைப்பழ ரசம்விட்டு (Apple) நன்றாயரைத்து மாத்திரை கடலைப்பிரமாணம் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 6-8 கிராம், ஆகாரஞ் சாப்பிட்டு படுக்கைக்குப் போகும்போது தேனில் அல்லது சீனிசருக்கரையிற் புரட்டித் தின்னவும்.

உபயோகம் - மூளையிலுள்ள வண்டலைச் சுத்திசெய்யும். வண்டலினா லுண்டான பைத்தியரோகம், உன்மத்தம் முதலியவைகள் நீங்கும்.

காவலதிபதி மாத்திரை

உலர்த்தின ஆற்றுத் தும்மட்டிக்காய்ச் சதை, அரபிபோளம், சுத்திசெய்த மஹ்மூதா, *மாசிப்பத்திரியின் சத்து, றூமிமஸ்தகி இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், மைசாக்ஷி 2 கிராம், பாதம் பிசின் 1 கிராம்.

செய்முறை - இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துச் சுத்த ஜலம் விட்டரைத்து ஒரே மாத்திரையாகச் செய்து கொள்ளவும்.

---

*மாசிப்பத்திரியை இடித்து ரசம் பிழிந்து பீங்கான் பாத்திரத்திலிட்டு ஒரு அண்டாவில் ஜலம் வார்த்து அடுப்பேற்றி நீர் கொதிக்குந் தருணத்தில் மேற்படி பீங்கான் பாத்திரத்தை விட்டுச் சுண்டவைத்தெடுத்துக் கொள்வதே சத்தெனப்படும். மேற்படி இலையின் ரசத்தை வெய்யிலில் உலர்த்திக் கொள்வதும் சத்தாகும். ஆனால் முன்னதே சிறந்தது, பச்சிலை அகப்படாத காலங்களில் உலர்ந்ததைக் கிஷாயஞ் செய்து மேற்கண்ட விதங்களில் ஒருவிதமாகச் செய்து கொள்ளலாம்.

உபயோகம் - தலைமூளை, இரைப்பை, ஈரல், இருதயம் முதலிய ராஜகருவிகளைச் சுத்திசெய்யும் மேற்கண்ட மாத்திரையை 4 கிராம், பரமௌஷதத்திற் சேர்த்துச் சாப்பிட கண்ணொளியை அதிகப்படுத்தும். கண்ணில் இறங்கும் நீரைத்தடுக்கும். தேகத்திற் கெட்டுப்போன அசுத்தமாசுகளை நீக்கிச் சுத்தப்படுத்தும்.

வேறு

உலர்ந்த ஆற்றுத் தும்மட்டிக்காய் பத்து கிராம், கொட்டைக் கரந்தைப்பூ, பாகப்படுத்தின காரிகியூன் இவைகளின் சூரணம் 50 கிராம், சுத்திப்பண்ணின மஹ்முதா 16 கிராம்,சீமையதிவிடயம், லவங்கம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், கருவேலம்பிசின், சின்னியாகோந்து இவை வகை ஒன்றுக்கு 32 கிராம், நுரைநீக்கிச் சுத்திசெய்த தேன் 770 கிராம்.

செய்முறை - பின்குறித்த இரண்டு பிசின்களையும் அல்கோஹல் என்னும் சாராயத்தில் அல்லது வெந்நீரில்ஊற வைத்துக் கரைத்து வடித்துத்தேனுடன் சேர்த்துக்காய்ச்சிக் குழம்புபதத்தில் முன் சரக்குகளையெல்லாம் இடித்துச் சூரணம் செய்து வடித்துத் தேனிற் சேர்த்து, பாகப்படி மாஜூன் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 12- 16 கிராம் சாப்பிட்டு, அதன்மேல் அப்திமூன் கிஷாயம் சாப்பிடவேண்டும்.

உபயோகம் - முன் சொல்லியுள்ள வியாதிகளனைத்தும் நீங்கும்.

ஆமணக்குப் பிரயோகங்கள்

ஆமணக்குப் பருப்பையரைத்துப் பற்றுப்போடக் கபத்தினாலுண்டான வீக்கங்கள், கீல்வீக்கங்கள், கணுக்கால் வாதங்கள், கீல்வாயுகள் முதலிடியவைகளைச் சாந்தப் படுத்தும்.

காடிவிட்டரைத்துப் பற்றுப்போட ஸ்தனவீக்கங்கள்போம்.

விஷ நிவாரணி

ஆமணக்கிலையை யிடித்துப் பிழிந்தரசம் 85- 130- 170 மி.லிட்டர் கொடுத்து வாந்திசெய்விக்க, நாபிகள் விஷம், அபினிவிஷம், பேய்நாய்க்கடி முதலியவை தீரும்.

குறிப்பு

பேய்நாய் கடித்து அதிகநாட் போனவர்களுக்கு இதை நாலு ஐந்து தடவை கொடுத்து வாந்திசெய்வித்துப் பார்க்க அந்த வாந்தியில் சவ்வு உருண்டைகள் பல விழுந்தன. அவற்றைவிரித்துப் பார்க்கையில் சிறுநாய் குட்டிகள் போன்ற உருவங்கள் காணப்பட்டன.

ஹரித எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் 525 கிராம் , சீமைத்திராக்ஷக் காடி ஐநூறு கிராம், கற்றாழைச்சாறு ஐநூறு கிராம், சிறுகீரைச்சாறு 140 கிராம், சுத்திசெய்து நெய்யில் வறுத்த நேர்வாளப் பருப்பு 35 கிராம், *சுத்திசெய்த புரசம் விதை 35 கிராம், மஞ்சட்பொடி 20 கிராம்.

செய்முறை - சரக்குகளைக் காடிவிட்டரைத்து எண்ணெயிற் கலக்கிச் சாறுகளைவிட்டு நீர்சுண்டக் காய்ச்சிக் கொள்ளவும்.

மாத்திரை - பெரியவர்களுக்கு 12- 24 கிராம், எலுமிச்சம்பழ ஷர்பத்தில் அல்லது பன்னீர் ஷர்பத்தில் கொடுக்கலாம். பாலியர்களுக்கு வயதுக்குத் தக்கபடி 4- 10 துளி முலைப்பாலிற் கொடுக்கலாம்.

உபயோகம் - வாயுகள், மேகச்சூடு, சிரங்குகள், குழந்தையின் வியாதிகள் இவை தீரும். பலவகைப் பூச்சிகளும் விழும்.

மேகசஞ்சீவி யெண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் 1400 கிராம், ஆவாரை சமூலம் 2800 கிராம் நையநறுக்கி எட்டுப்படி ஜலத்திலிட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாகயிறுத்த கியாழம் படி 1 சிவகரந்தை அல்லது கொட்டைக்கரந்தை 9800 கிராம் நைய நறுக்கி 8 படி ஜலத்திலிட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாயிறுத்த கியாழம் படி - 1, ஈரவெங்காயச்சாறு படி - 1 தேட்கொடுக்கிலைச்சாறு படி -1 காட்டுச் சீரகம் 35 கிராம், கருஞ்சீரகம் 35 கிராம்.

செய்முறை - சரக்கு இரண்டையும் பசுவின்பால் அல்லது வெள்ளாட்டுப்பால் விட்டு அரைத்து மேற்படி எண்ணெயிற் கலக்கி மற்றச்சாறுகளையும் விட்டுக்காய்ச்சி நீர் சுண்டின பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

---

*சாணியைக் கரைத்து வடிகட்டி அதில் புரசம் விதைகளைப் போட்டு 3- நாள் ஊறவைத்து, மேல்தோலையும் விதையின் மத்தியிலிருக்கும் முளையையுமெடுத்து ஜலத்தில் ஏழெட்டு தரம் கழுவிக் கொள்வதே சுத்தியாம்.

மாத்திரை - 20- 40 கிராம், ரோஜாப்பூ ஷர்பத்தில் அல்லது அப்திமூன் கியாழத்தில் அல்லது தரா இலைக் கியாழத்தில் அல்லது இளநீரில் சாப்பிடலாம்.

உபயோகம் - பிரமேக வியாதிகள், நீர்ச்சுருக்கு, நீரெரிச்சல், நீரடைப்பு, எலும்புருக்கி மேகம் முதலியவைகள் தீரும்.

மேகநிவாரண எண்ணெய்

சிற்றாமணக் கெண்ணெய் ஒரு படி, முலைப்பால் அரை படி, செவ்விளநீர் அரைபடி, சிறுக்கீரை ரசம் கால்படி, சோற்றுக்கற்றாழஞ்சோறு கால்படி, சீரகம் 175 கிராம், கற்கண்டு 175 கிராம், மாசிக்காய் 35 கிராம், ஏலக்காய் 35 கிராம், ஜாதிக்காய் 20 கிராம், லவங்கம் 3 கிராம், குங்குமப்பூ 5 கிராம், ரஸ்தாளி வாழைப்பழம் 4.

செய்முறை - சரக்குகளை யெல்லாம் பன்னீர்விட்டரைத்து எண்ணெயிற் சேர்த்து மற்றவைகளையும் எண்ணெயிற் சேர்த்துச் சிறுதீயாயெரித்து நீர்சுண்டின பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 30- 55 கிராம் பன்னீர் ஷர்பத்தில் அல்லது காடி ஷர்பத்தில் அல்லது சந்தன ஷர்பத்தில் சாப்பிடவும்.

உபயோகம் - மேகவாயுகள், மேகப்படை; மேகசட்டைகள், பெருவியாதி, ஈரற்சூடு, நீர்ப்பையின் அழலை, மூத்திரவொழுக்கு முதலியவைகள் தீரும். இந்திரிய வொழுக்கும் துரித ஸ்கலிதமும் தீரும்.

தேகாரோக்கிய எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் 230 கிராம், பாதம்நெய் 100 கிராம், பசுவின்பால் 230 கிராம், மேனா 100 கிராம், குங்குமப்பூ 4 கிராம், எலும்பில்லா ஆட்டிறைச்சி ஒன்னரை கிலோ.

செய்முறை - இறைச்சியை நன்றாகக் கொத்தி இரண்டு பாகஞ்செய்து ஒரு பாகத்தில் 4 படி ஜலம்வார்த்து வாலையிலிட்டு 2 படி திராவக மிறக்கி இதில் மற்றப் பாதி யிறைச்சியைப்போட்டு வாலையிலிட்டு 1 படி திராவக மிறக்கிக் கொள்ளவும். இந்தத் திராவகத்தில் பாதம் நெய், பசுவின்பால், எண்ணெய் இவைகளையிட்டு நீர் சுண்டின பிறகு குங்குமப்பூவையும், மேனாவையும் அரைத்துப் போட்டு இறக்கிக்கொள்ளவும்.

மாத்திரை - 24- 36 கிராம் இரண்டுவேளையும் சாப்பிடலாம்.

உபயோகம் - தேகவரட்சி, தேக அழலை, மலச்சிக்கல், இவைகள் நீங்கி இரத்த சுத்தியுண்டாய்த் தேகம் பலக்கும்.

குறிப்பு

இறைச்சி உண்ணாதவர்கள் சிவகரந்தையை மேற்கண்ட விதமாகத் திராவகமிறக்கிச் சேர்த்துக் கொள்ளவும்.

நேர்வாளச் சுத்தி

இதில் பலவகை யுண்டு. ஆனால், அதிக அநுபவப்பட்டதும் குணத்திற் சிறந்ததுமாகிய பாகத்தைமாத்திரம் இங்கெழுதுகிறோம் :

நேர்வாளக் கொட்டையை யுடைத்து மேல்தோல் நீக்கிப் பருப்பையெடுத்து மெல்லிய வஸ்திரத்தில் தளர்ச்சியாய் முடிந்து எருமைச் சாணியை அல்லது கழுதை லத்தியைக் கரைத்து அதில்போட்டு ஒருநாள் ஊறவைத்து நன்றாகக் கொதிக்கக் காய்ச்சியிறக்கி ஏழுதடவை சலம் விட்டு நன்றாகக் கழுவி உள்முளையிலைகளையெடுத்து மறுபடியும் கழுவி யுலர்த்தி முன்போலவே மெல்லிய வஸ்திரத்தில் தளர்ச்சியாய் முடிந்து புளித்த தயிரிற் போட்டவித்துக் கழுவி யுலர்த்திக்கொள்ளவும்.

வேறு

நேர்வாளப்பருப்பு ஒருபங்கு, ரோஜாப்பூ, பாதம்பிசின் இவை வகை ஒன்றுக்கு கால்பங்கு, பூவையும் பிசினையும் இடித்த ஜலத்திற் போட்டுப் பருப்பை மெல்லிய வஸ்திரத்தில் தளர்ச்சியாகக்கட்டி அதில் மூன்று நாலு நாள் நன்றாக ஊறவிட்டுக் கொதிக்கவைத் தெடுத்துக் கொள்வதே சுத்தியாம்.

சந்நிபீநிச மாத்திரை

சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, கற்கடகசிங்கிச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 1 பங்கு; அரிசிமா அரை பங்கு.

செய்முறை - எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழ ரசம் விட்டு நன்றாயரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 1, 2 எலுமிச்சம்பழ ஷர்பத்தில் அல்லது சீனிசருக்கரையில் சாப்பிடவும்.

உபயோகம் - கபத்தை வெளிப்படுத்தும், தேகத்தில் ஆழ்ந்து கிடக்கும் வண்டலை வெளிப்படுத்தும், வாயுகளைக் கண்டிக்கும்.

பேதி மாத்திரை

சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு 8 கிராம், பனப்ஷாபூ, வெள்ளரிவிதைப்பருப்பு, கெக்கரிவிதைப் பருப்பு, சுரைவிதைப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 5 கிராம், தாமரைப்பூ 4 கிராம், பருப்புக்கீரை விதை 20 கிராம், உலர்த்தின ஆற்றுத் தும்மட்டிக்காய்விதை அரை கிராம், ரோஜாப்பூ, மூங்கிலுப்பு, பாதம்பிசின் இவை வகை ஒன்றுக்கு 10 கிராம் நிஷஸ்தா 15 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் சுத்தஜலம் விட்டரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 1-2 கிராம் எலுமிச்சம்பழ ஷர்பத்து,ரோஜாப்பூ ஷர்பத்து இவையொன்றிற் சாப்பிடவும்.

உபயோகம் - முன் சொல்லிய வியாதிகள் தீரும்.

சுகுமார பேதிநெய்

சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு 35 கிராம், பசுவின் பால் இரண்டுபடி, பருப்பிற் கொஞ்சம் சுத்தஜலம் விட்டரைத்துப் பாலிற் கரைத்துப் பாலைக்காய்ச்சிப் பிரைகுற்றிக் கடைந்து வெண்ணையெடுத்து நெய்யுருக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 3-6 கிராம் சீனிசர்க்கரையுடன் அல்லது பலகாரங்களுடன் சேர்த்துச் சாப்பிடப் பேதியாகும்.

உபயோகம்- ஸுகுமர தேகிகளுக்கு ஏற்றது.

சுகவிரேசன நெய்

பசுவின் நெய் 70 கிராம், சுத்திசெய்த நேர்வாளக் கொட்டை; மேல்தோல் நீக்கின பாதம்பருப்பு, மேல்தோல் நீக்கின கொப்பரைத்தேங்காய், பிஸ்தாப்பருப்பு, வறுத்த சிற்றாமணக்குப் பருப்பு, இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், வால்மிளகு, மேல்தோல் நீக்கின அதிமதுரம் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் பால்விட்டரைத்து நெய்யிற் சேர்த்துக் காய்ச்சி நீர் சுண்டின பதத்தில் இறக்கி வடித்துச் சீஷாவில் வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 6- 12 கிராம், சீனிசருக்கரையுடன், அல்லது தகுந்த அனுபானத்துடன் சாப்பிடவும்.

உபயோகம் - வண்டல்களையும் கபங்களையும் பேதிவழியாக வெளிப்படுத்தும்.

சீதஸுகுமார நெய்

பசுவின் நெய் 175 கிராம், சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு, மேல்தோல்நீக்கின பாதம்பருப்பு, மேல்தோல் நீக்கின முற்றின தேங்காய் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம் சுரைவிதைப்பருப்பு, கர்பூஜ்விதைப் பருப்பு, வெள்ளரிவிதைப் பருப்பு, முலாம்பழவிதைப்பருப்பு, இவை வகை ஒன்றுக்கு25 கிராம், பூசினிவிதைப்பருப்பு, குறுவாவிதை இவை வகை ஒன்றுக்கு 12 கிராம்,

செய்முறை - முன்பாகத்திற் சொல்லிய முறைப்படி செய்து கொள்ளவும்.

மாத்திரை - 6- 12 கிராம், சீனிசருக்கரையுடன் அல்லது தக்க அனுபானத்துடன் சாப்பிடவும்.

உபயோகம் - மேலே சொல்லிய வியாதிகள் தீரும்.

காரிகியூன் பக்குவம்

இதன் தலைப்பில் முன் சொல்லப்பட்டிருக்கிறபடி மயிர்ச்சல்லடையில் அல்லது உரத்த துணியில் அல்லது கம்பளியில் இதை வைத்துத் தேய்த்து மேல் நிற்கும் சக்கைகளை நீக்கிவிட்டு வஸ்திரத்தின் கீழ் விழுந்திருக்கும் தூட்களை மாத்திரம் எடுத்து கொள்வதாம். இதை உரலிலிட்டு இடிக்கவும் கூடாது. மேற்சொன்ன பாகப்படி, செய்யாமல் வேறெவ்விதமாக உபயோகிக்கவும் கூடாது. ஏனெனில், சிறுநகங்களைப் போன்ற வஸ்துகளிருக்கின்றன. அவைநசுங்கினால் நஞ்சின் குணத்தைத் தரும்.

காரிகியூன் மாத்திரை

மேற்சொன்னபடி பக்குவப்படுத்தின காரிகியூன் 35 கிராம், நிலக்கடம்பு, ரேவல்சீனி, இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், மாசிப்பத்திரிச் சூரணம் 4 கிராம் சீனி சருக்கரை 60 கிராம்.

செய்முறை - இவைகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, சலம்விட்டரைத்து மாத்திரை செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 4 கிராம் இரவு உணவிற்குப் பிறகு சாப்பிடவும்.

உபயோகம் - தேகத்திலுள்ள மாசுகளை நீக்கிச் சுத்தி செய்யும், மூளையில் எரிந்து போன வண்டலை நீக்கிச் சுத்தி செய்யும். பைத்திய ரோகம், வண்டலினாலுண்டான தலைநோய் முதலியவைகளுக்கு உபயோகப்படும்.

வேறு

பக்குவப்படுத்தின காரிகியூன் சூரணம், சுத்திசெய்த சீமைச் சிவதை வேர்ச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், மேல்தோல் நீக்கின அதிமதுரச்சூரணம், உலர்த்தின ஆற்றுத்தும்மட்டிக்காய்ச் சதை, பரமௌஷதம், வெள்ளைப்போளம் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம்.

செய்முறை - இவைகளையெல்லாம் கல்வத்திலிட்டுச் சுத்தஜலம் வார்த்தரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரை செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 4 கிராம் - மதுபானத்திற் சாப்பிடவும்.

உபயோகம் - கப வியாதிகள், மூச்செறிதல் இவை தீரும்.

கபகாரி மாத்திரை

பக்குவப்படுத்தின காரிகியூன் சூரணம், சுத்திசெய்த சிவதைவேர்ச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம் அதிமதுரப்பால், உலர்த்தின ஆற்றுத்தும்மட்டிக்காய்ச்சதை வெள்ளைப்போளம் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம் உலர்த்தின சீமையத்திப் பழம் 10 பனப்ஷாபூச் சூரணம் 4 கிராம், பெருமருந்துப்பட்டைச் சூரணம் 2 கிராம் சோம்பு ஜூபா (Zoofa) இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், பாதம்பிசின் 8 கிராம்.

செய்முறை - இவைகளையெல்லாம் கல்வத்திலிட்டுச் சுத்தஜலம் வார்த்தரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணமாக மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 6-8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - கபத்தைப் பேதிவழியாக வெளிப்படுத்தி, மார்பு, நுரையீரல் இவற்றைச் சுத்திசெய்யும். மேல்மூச்சு கஷ்டசுவாசம், பழைய இருமல், மார்பிலும் நுரையீரலிலும் அதைச் சார்ந்த பாகங்களிலும் குளிர்ச்சியான கபத்தினாலுண்டான வியாதிகளனைத்தும் தீரும்.

மேற்சுவாச நிவாரண மாத்திரை

பக்குவப்படுத்தின காரிகியூன் சூரணம், அதிமதுரப் பால், பனப்ஷாசூரணம் இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், பாதம் பிசின் 2 கிராம் பாதம் நெய் செல்லும் அளவு.

செய்முறை - எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்தரைத்து பாதம் நெய்விட்டுப் புரட்டி அவ்வளவையும் ஒரே மாத்திரையாகச் செய்துக் கொள்ளவும்.

மாத்திரை - மேற்கண்ட மாத்திரை அவ்வளவையும் ஒரே தடவையிற் சாப்பிட்டு விடவும்.

உபயோகம் - கஷ்டசுவாசம், இரைப்பு இவை தீரும். இது உஷ்ணதேகிகளுக்கும் அல்லது சுரத்தோடிருப்பவர்களுக்கும் அதிக குணந்தரும்.

கஷ்டசுவாச நிவாரணி

பக்குவப்படுத்தின காரிகியூன் சூரணம், பரமௌஷதம் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம் பனப்ஷாபூ, பனப்ஷாவேர் 2 கிராம் இவை வகை ஒன்றுக்கு சுத்திசெய்த சீமைச்சிவதை வேர்ச்சூரணம் 3 கிராம், சுத்தி செய்த மஹ்மூதா 1 கிராம்.

செய்முறை - இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் சேர்த்துச் சுத்தஜலம் வார்த்தரைத்து ஒரே மாத்திரையாகச் செய்து கொள்ளவும்.

மாத்திரை - மேற்கண்ட மாத்திரையை ஒரே வேளையிற் சாப்பிடவும்.

உபயோகம் - கஷ்டசுவாச முதலியவை தீரும்.

காக்கட்டான் பக்குவம்

காக்கட்டான் இலை இதில் பருமனான இலைகளை வேண்டுமளவிற்கு எடுத்து ஓர் பாத்திரத்தில் வைத்து அவை நனையும்படியாகத் திராக்ஷக் காடிவிட்டு ஓரிரவு ஊற வைத்து மறுநாட்காலையில் காடியையிறுத்துவிட்டு மறுபடியும் புதிதாகக் காடிவார்த்துச் சாயந்திரம் அந்தக் காடியை யிறுத்துவிட்டு மறுபடியும் காடிவார்த்து ஊற வைத்து மறுநாட்காலையில் இறுத்துவிட்டு நிழலிலுலர்த்திக் கொஞ்சம் இடித்து பாதம் நெய்யினால் நைப்புண்டாக்கிக் கொள்வதே காக்கட்டான் இலையைப் பக்குவப்படுத்துவதாம்.

காக்கட்டான் விதை - - முன் கண்டபடி விதைகளைத் திராக்ஷாக் காடியில் மூன்று தடவை யூறவைத்து நிழலிலுலர்த்தி பாதம் நெய்யில் வறுத்துச் சூரணஞ் செய்து கொள்வதே காக்கட்டான் விதைப் பக்குவமாம்.

சுகபேதீச் சூரணம்

பக்குவப்படுத்தின காக்கட்டான் வித்துச் சூரணம் 5 கிராம், மேல்தோல் நீக்கின அதிமதுரச் சூரணம், வறுத்திடித்த ஏலரிசிச் சூரணம், வறுத்திடித்த சோம்புச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், சீனிசருக்கரை 140 கிராம்.

இவையெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை - 8-10 கிராம் பன்னீர் ஷர்பத்தில் அல்லது எலுமிச்சம்பழரச ஷர்பத்தில் அல்லது புளித்தெளிநீர் ஷர்பத்தில் சாப்பிடவும்.

உபயோகம் - மலக்கட்டுகள் பேதிவழியாக நன்றாக வெளிப்படும். வயிற்றிலுள்ள கிருமிகள் நாசமாம். ஆசனக் கடுப்பு, வயிற்றுநோய் இவையிரா.

பாண்டு மாத்திரை

பக்குவப்படுத்தின காக்கட்டான் இலைச்சூரணம் அல்லது அதன் விதைச் சூரணம் 2 கிராம், சுத்திசெய்த சீமைச் சிவதைவேர், அப்திமூன், மஞ்சட் கடுக்காய்த்தோல், ரோஜாப்பூ, பக்குவப்படுத்தின சோம்பு, மேல் தோல் நீக்கின அதிமதுரம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம் , நவச்சாரம் 2 கிராம் மணத்தக்காளியிலைச்சாறு, சோம்புத் திராவகம் இவைசெல்லும் அளவு

செய்முறை - இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து இலைரசம் விட்டு இரண்டு சாமமும்; சோம்பு திராவகம் விட்டு இரண்டுசாமமும், அரைத்துமாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 4-6 கிராம், சாப்பிடவும்.

உபயோகம் -பாண்டு முதலிய ஈரல் நோய்கள் தீரும்.

மகோதர மாத்திரை

பக்குவப்படுத்தின காக்கட்டான் இலைச் சூரணம் அல்லது அதின் விதைச் சூரணம், சுத்திசெய்த சீமைச் சிவதைவேர், அப்திமூன் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், அனிசூன், கரபஸ் ஓமம், மஞ்சட்

கடுக்காய்த்தோல் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், பன்னீர் செல்லும் அளவு.

செய்முறை - இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டுப் பன்னீர் வார்த்தரைத்து மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 2 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மகோதர வியாதிகள் தீரும்.

வேறு

நிலக்கடம்பு, றேவல்சீனி, காசினிவிதை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், பக்குவப்படுத்தின காரிகியூன் சூரணம் 20 கிராம், பக்குவப்படுத்தின காக்கட்டான் இலை அல்லது விதைச் சூரணம் 15 கிராம் மேல்தோல் நீக்கின பாதம்பருப்பு 4 கிராம், மாசிப்பத்திரிச் சூரணம் 6 கிராம், பாதம் பிசின் 2 கிராம்.

செய்முறை - இவையெல்லாவற்றையும் சேர்த்துச் சுத்த ஜலம் வார்த்தரைத்து மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மேற்கண்ட வியாதிகள் தீரும்.

வேறு

றேவல்சீனி, நிலக்கடம்பு, கரபஸ் ஓமம் இவற்றின் சூரணம் வகை ஒன் றுக்கு 12 கிராம் பக்குவப்படுத்தின காரிகியூன், பக்குவப்படுத்தின காக்கட்டான் இலை அல்லது விதைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், மாசிப்பத்திரிச் சூரணம் 6 கிராம்.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் சுத்த ஜலம் வார்த்தரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மேற்கண்ட வியாதிகள் தீரும்.

குறிப்பு

சூடான தேகியானால், கரபஸ் ஓமத்துக்குப் பதில் காசினி விதையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

றேவல்சீனி ஸிகாமது பானம்

றேவல்சீனி 100 கிராம், கஷுஸ்விதை, தராஇலை, ரோஜாப்பூ இதழ் வகை ஒன்றுக்கு 35 கிராம், சீமைத்திராக்ஷக் காடி 420 கிராம், சீனிசருக்கரை 850 கிராம்.

செய்முறை- றேவல்சீனியைத் தூட்செய்து தளர்ச்சியாய் ஒரு துணியில் முடிந்து கொள்ளவும் இந்த முடிச்சு அரைவாசி வெறுமையாயிருக்கும்படி கட்டவேண்டும். இந்த முடிச்சை ஒருபடி ஜலத்திற்போட்டு அடுப்பேற்றிக் காய்ச்சும்போதுஅந்த முடிச்சை ஒரு துடுப்பினால் அல்லது அகப்பையினால் நசுக்கி அதன் சத்தெல்லாம் வெளிப்படும்படி செய்து அரைப்படியாய்ச்சுண்டினபின் இறக்கி முடிச்சை நன்றாகக் கசக்கிப் பிழிந்து கொஞ்சம் பன்னீரில் அந்த முடிச்சைக் கழுவி முடிச்சை நீக்கிவிட்டு அந்தப் பன்னீரையும் அந்தச் சலத்தையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். கஷுஸ்விதையை ஒரு துணியில் முடிந்து தராஇலை ரோஜாப்பூ இம்மூன்றையும் சுத்தஜலம் ஒருபடியிற்போட்டுக் காய்ச்சும்போது கஷுஸ்விதை முடிச்சையும் அடிக்கடி நசுக்கி அதின் சத்தெல்லாம் வெளிப்படுத்தி அரைப்பாகமாகச் சுண்டினவுடன் கீழிறக்கிப் பிசைந்து பிழிந்து வடித்துக் கொள்ளவும். முன் கிஷாயம்; பின்கிஷாயம், திராஷைக் காடி இம்மூன்றையும் ஒன்றாகக் கலந்து அதில் சீனிசருக்கரையைக் கரைத்து அடுப்பேற்றிப் பாகப்படி ஷர்பத்து செய்து கொள்ளவும்.

மாத்திரை - 35, 45 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - காமாலை, விஷசுரம், தலைநோய், சித்தபிரமை இவைகள் தீரும்.

சீனாசஞ்சீவிச் சூரணம்

தண்ணீரிற்போட்டால் ஆழும் அகருகட்டை, ரூமிமஸ்தகி, லவங்கப்பட்டை, உலர்ந்த துரிஞ்சு நாரத்தந்தோல், அனிஸூன் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 16 கிராம், சுத்திசெய்த சீமைச்சிவதைவேர், கோஷ்டம், நிலக்கடம்பு, கொத்துமல்லிவிதை, மூங்கிலுப்பு, ரோஜாப்பூவிதழ், சுத்தி செய்த மஹ்மூதா சூரத்துக் கடுக்காய்த்தோல் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், பூங்காவி ஸப்ஜாவிதை காசினிவிதை, கரபஸ் ஓமம், பக்குவப்படுத்தின *ராஜவர்த்திக்கல்லு, அல்லது சீமைக்காவிக்கல்லு, பாதம்பிசின்; ஏலக்காய் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், ரேவல்சீனி சூரணம் 20 கிராம், சீனிசருக்கரை 300 கிராம்.

---

*இதன் பக்குவபாகம் பின்னர் எழுதப்படும்.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை - 6-8 கிராம் குளிர்ந்த ஜலத்திற் சாப்பிடவும்.

உபயோகம் - மார்பு துடித்தல், காக்கைவலிப்பு, தலைநோய்கள், மயக்கங்கள்; கண்மங்கல், பசிதீபனக்கெடுதி, காமாலை,அவயவரட்சி, தேகதுர்ப்பலம், ராஜகருவிகளின் துர்ப்பலம் மூலவியாதிகளினால் சம்பவித்த மண்ணீரலின் துர்ப்பலம் ஆகியவைகள் தீரும். இந்தச் சூரணத்தின் வயது இரண்டு வருஷம்.

குறிப்பு

வண்டலினாலுண்டான வியாதியானால், துளையிடாத நன்முத்து, நற்பவளம், கஹ்ருபா, கோராப்பட்டு இவைகளை முதற்பாகத்தில் பாகலக்ஷணத்திற்கு சொல்லியிருக்கிறபடி பாகப்படுத்தி வகை ஒன்றுக்கு 8 கிராம், இந்த பாகத்தில் அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

தலைமூளையில் கெடுதியுண்டாயிருந்தால், உஸ்துகுத்தூஸ், உலர்ந்த எலுமிச்சந்துளசி, மஞ்சட்கடுக்காய்த்தோல், சீமை நெல்லிமுள்ளி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம். அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வாயு அதிகப்பட்டிருந்தால், கொத்துமல்லி விதை, காசினிவிதை இவை யிரண்டுக்குப் பதிலாகச் சன்னராஷ்டம் சேர்க்க வேண்டும்.

இன்னும் இந்தப்பாகத்தில் கஸ்தூரி, அம்பர், தங்கரேக்கு, வெள்ளிரேக்கு ஆகிய இவற்றையுஞ் சேர்த்துச் செய்வது முண்டு.

சீனாசிகாமது பானம்

சிதைத்த காசினிவிதை 70 கிராம், உலர்ந்த தராயிலை, கஷுஸ்விதை இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், றேவல் சீனி 20 கிராம் சீனிசருக்கரை அல்லது தேன் 700 கிராம்,சீமைத் திராக்ஷக்காடி 175 கிராம்.

செய்முறை - ரேவல்சீனியைப் பொடித்துத் துணியில் தளர்ச்சியாக முடிந்து கொள்ளவும். கஷுஸ் விதையையும் வேறொரு துணியில் போட்டு முடிந்து கொள்ளவும். ஒருபடி சுத்த ஜலத்தில் இவ்விரண்டு முடிச்சுகளையும் போட்டு மற்ற இரண்டுசரக்குகளையும் காய்ச்சும்போது முடிச்சுகளை அடிக்கடி நசுக்கிச் சத்துக்களைவெளிப்படுத்தி அரைப்பாகமாகச் சுண்டினபின் கீழிறக்கிப் பிழிந்து முடிச்சுகளையும் சக்கைகளையும் நீக்கி வடித்த கிஷாயத்தில் சீமைக் காடியைச் சேர்த்து அதில் சீனிசருக்கரையை அல்லது தேனைச் சேர்த்துக் காய்ச்சி ஷர்பத் பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 50- 60- 70 கிராம் அல்லது பன்னீரிற்கலந்து சாப்பிடலாம்.

உபயோகம் - வரட்சிகளையும், கட்டுகளையும் நீக்கும் வரட்சியினாலுண்டான காமாலைகள், தொந்த சுரங்கள், சூட்டினாலுண்டான ஈரல்நோய் இவைகள் தீரும்.

*சொர்ண சீனா ஷர்பத்து

காசினிவிதை, ரோஜாப்பூவிதழ் இவை வகை ஒன்றுக்கு 70 கிராம், காசினிவேர்த்தோல் 140 கிராம், உலர்ந்த தாமரைப்பூ, காவுஜூபான் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், கஷூஸ்விதை 100 கிராம், ரேவல் சீனி, சீனிசருக்கரை 840 கிராம்.

செய்முறை - முன்சொன்ன ஆறு சரக்குகளில் கஷூஸ்விதையைத் துணியில்முடிந்து மற்ற ஐந்துசரக்குகளையும் முக்காற்படி ஜலத்திற்போட்டுக் காய்ச்சும்போது முடிச்சை அடிக்கடி நசுக்கிச் சத்து வெளிப்படும்படி செய்து அரைப்பாகமாகச் சுண்டினபின்பு கீழிறக்கிப் பிசைந்து சக்கை நீக்கிக் கிஷாயத்தை வடித்து சீனிசருக்கரை சேர்த்துப் பாகுசெய்து பதத்தில் ரேவல் சீனியை நன்றாகப் பொடித்து போட்டுக் கலந்தபின் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 12- 18 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மலத்தை யிலகுபேதியாக்கும். சுரங்கள், குளிர்சுரங்கள், வரட்சிகள், கட்டுகள் இவைகளை நீக்கும். ஈரல்வீக்கம், பாண்டுரோகங்கள், விலாவீக்கம், வயிற்று நோய், ஈரல்நோய், கர்ப்பப்பைநோய், நீர்க்குண்டிக்காய் நோய் இவைகளை நீக்கும் நீரை யதிகப்படுத்தும்

வேறு

காசினிவிதை, காசினிவேர்த்தோல், இவை வகை ஒன்றுக்கு 150 கிராம், ரோஜாப்பூவிதழ் 50 கிராம், கஷூஸ்விதை 22 கிராம், ரேவல்சீனிச்சூரணம் 18 கிராம், சீனிசருக்கரை 825 கிராம்.

செய்முறை - முன் மூன்று சரக்குகளையும் சிதைத்தும் கஷூஸ்விதையைத் துணியில் முடிந்து முக்காற்படி சலத்திற் போட்டும் ஒருநாள் ஊறவைத்துக்காய்ச்சி வடித்துச் சீனி சருக்கரைசேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் ரேவல்சீனிச் சூரணத்தை நன்றாகக் கலந்து இறக்கிக் கொள்ளவும்.

---

*இதன் விசேஷகுணம் பற்றி:- தீனாஷர்பத் என்றுபெயர் பெற்றது. தீனார் என்பது அரபுதேசத்தில் வழங்கும் ஓர்விதத் தங்க நாணயம்.

மாத்திரை - 12- 18 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - தொந்தசுரங்கள், ஈரல் வியாதிகள், கட்டுகள் முதலியவை நீங்கும். இது சற்றேறக்குறைய சூடும்குளிர்ச்சியும் சமமானது.

ஸூரிஞ்சான்மிஸ்ரி மாத்திரை

வெண்மையான ஸூரிஞ்சான் மிஸ்றிச்சூரணம் 70 கிராம் அனிசூன், பிளப்புச்சீரகம், வெள்ளைமிளகு, அரிசித்திப்பிலி, குசும்பாவிதைப்பருப்பு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 16 கிராம், றூமிமஸ்தகி சூரணம் 20 கிராம்.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக்கலந்து சோம்புத்தீநீர் அல்லது சோம்புக் கியாழம் விட்டு அரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 8- 12 கிராம் சீரகக் கியாழத்திற் சாப்பிடவும்.

உபயோகம்- அங்குஷ்டவாதம், கணுவாதம் இவற்றைத் தக்ஷணம் சாந்தப்படுத்தும்.

கீல்வாதச் சங்காரன்

வெண்மையான சுரிஞ்சான் மிஸ்றி, மஞ்சட்கடுக்காய்த்தோல் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 70 கிராம், சுத்தி செய்த அரபிப்போளச் சூரணம் 140 கிராம்.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து மணத்தக்காளியிலை ரசம்விட்டு நன்றாக அரைத்து மாத்திரைகள் செய்துலர்த்தி கொள்ளவும்.

மாத்திரைகள்- 6-8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - கீல்வாயுகள், கீல்வாதங்கள், கால்வாதம் அங்குஷ்டவாதம் இவைகளைக் கண்டிப்பாக நீக்கும்.

சந்நிவாத நிவாரணி

வெண்மையான ஸூரிஞ்சான் மிஸ்றிச் சூரணம் 35 கிராம், சூரத்து நில ஆவாரைச் சூரணம் 28 கிராம், இவ்விரண்டையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

மாத்திரை - 6-8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - அங்குஷ்ட வாதம், கீல்களின் வாதம் முள்ளந்தண்டு வாதம், கால்வாதம், சந்துவாதம் இவைகள் தீரும்.

மாத்திரை - 50- 60- 70 கிராம் அல்லது பன்னீரிற்கலந்து சாப்பிடலாம்.

உபயோகம் - வரட்சிகளையும், கட்டுகளையும் நீக்கும் வரட்சியினாலுண்டான காமாலைகள், தொந்த சுரங்கள், சூட்டினாலுண்டான ஈரல்நோய் இவைகள் தீரும்.

*சொர்ண சீனா ஷர்பத்து

காசினிவிதை, ரோஜாப்பூவிதழ் இவை வகை ஒன்றுக்கு 70 கிராம், காசினிவேர்த்தோல் 140 கிராம், உலர்ந்த தாமரைப்பூ, காவுஜுபான் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், கஷூஸ்விதை 100 கிராம், ரேவல் சீனி, சீனிசருக்கரை 840 கிராம்.

செய்முறை - முன்சொன்ன ஆறு சரக்குகளில் கஷூஸ்விதையைத் துணியில்முடிந்து மற்ற ஐந்துசரக்குகளையும் முக்காற்படி ஜலத்திற்போட்டுக் காய்ச்சும்போது முடிச்சை அடிக்கடி நசுக்கிச் சத்து வெளிப்படும்படி செய்து அரைப்பாகமாகச் சுண்டினபின்பு கீழிறக்கிப் பிசைந்து சக்கை நீக்கிக் கிஷாயத்தை வடித்து சீனிசருக்கரை சேர்த்துப் பாகுசெய்து பதத்தில் ரேவல் சீனியை நன்றாகப் பொடித்து போட்டுக் கலந்தபின் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 12- 18 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மலத்தை யிலகுபேதியாக்கும். சுரங்கள், குளிர்சுரங்கள், வரட்சிகள், கட்டுகள் இவைகளை நீக்கும். ஈரல்வீக்கம், பாண்டுரோகங்கள், விலாவீக்கம், வயிற்று நோய், ஈரல்நோய், கர்ப்பப்பைநோய், நீர்க்குண்டிக்காய் நோய் இவைகளை நீக்கும் நீரை யதிகப்படுத்தும்

வேறு

காசினிவிதை, காசினிவேர்த்தோல், இவை வகை ஒன்றுக்கு 150 கிராம், ரோஜாப்பூவிதழ் 50 கிராம், கஷூஸ்விதை 22 கிராம், ரேவல்சீனிச்சூரணம் 18 கிராம், சீனிசருக்கரை 825 கிராம்.

செய்முறை - முன் மூன்று சரக்குகளையும் சிதைத்தும் கஷூஸ்விதையைத் துணியில் முடிந்து முக்காற்படி சலத்திற் போட்டும் ஒருநாள் ஊறவைத்துக்காய்ச்சி வடித்துச் சீனி சருக்கரைசேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் ரேவல்சீனிச் சூரணத்தை நன்றாகக் கலந்து இறக்கிக் கொள்ளவும்.

---

*இதன் விசேஷகுணம் பற்றி:- தீனாஷர்பத் என்றுபெயர் பெற்றது. தீனார் என்பது அரபுதேசத்தில் வழங்கும் ஓர்விதத் தங்க நாணயம்.

மாத்திரை - 12- 18 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - தொந்தசுரங்கள், ஈரல் வியாதிகள், கட்டுகள் முதலியவை நீங்கும். இது சற்றேறக்குறைய சூடும்குளிர்ச்சியும் சமமானது.

ஸுரிஞ்சான்மிஸ்ரி மாத்திரை

வெண்மையான ஸுரிஞ்சான் மிஸ்றிச்சூரணம் 70 கிராம் அனிசூன், பிளப்புச்சீரகம், வெள்ளைமிளகு, அரிசித்திப்பிலி, குசும்பாவிதைப்பருப்பு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 16 கிராம், றூமிமஸ்தகி சூரணம் 20 கிராம்.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக்கலந்து சோம்புத்தீநீர் அல்லது சோம்புக் கியாழம் விட்டு அரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 8- 12 கிராம் சீரகக் கியாழத்திற் சாப்பிடவும்.

உபயோகம்- அங்குஷ்டவாதம், கணுவாதம் இவற்றைத் தக்ஷணம் சாந்தப்படுத்தும்.

கீல்வாதச் சங்காரன்

வெண்மையான சுரிஞ்சான் மிஸ்றி, மஞ்சட்கடுக்காய்த்தோல் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 70 கிராம், சுத்தி செய்த அரபிப்போளச் சூரணம் 140 கிராம்.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து மணத்தக்காளியிலை ரசம்விட்டு நன்றாக அரைத்து மாத்திரைகள் செய்துலர்த்தி கொள்ளவும்.

மாத்திரைகள்- 6-8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - கீல்வாயுகள், கீல்வாதங்கள், கால்வாதம் அங்குஷ்டவாதம் இவைகளைக் கண்டிப்பாக நீக்கும்.

சந்திவாத நிவாரணி

வெண்மையான ஸுரிஞ்சான் மிஸ்றிச் சூரணம் 35 கிராம், சூரத்து நில ஆவாரைச் சூரணம் 28 கிராம், இவ்விரண்டையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

மாத்திரை - 6-8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - அங்குஷ்ட வாதம், கீல்களின் வாதம் முள்ளந்தண்டு வாதம், கால்வாதம், சந்துவாதம் இவைகள் தீரும்.

குறிப்பு

இவ்வியாதிகள் கப சம்பந்தத்தால் உண்டாயிருந்தால், சுத்தி செய்த சீமைச் சிவதைவேர்ச் சூரணம் இருபது கிராம் அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வாதஹரி சூரணம்

வெண்மையான ஸுரிஞ்சான் மிஸ்றிச் சூரணம் சூரத்து நில ஆவாரைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், மருதோன்றியிலைச் சூரணம் எட்டு கிராம், மேல்தோல் நீக்கின பாதம்பருப்பு பதினாறு கிராம், அதிமதுரப்பால் ஐந்து கிராம், குங்குமப்பூ 1 கிராம்.

செய்முறை - இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

மாத்திரை - 6-8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - கீல்வாயுகளையும், ஈரல், இரைப்பை இவற்றி லுண்டாகும் வாயுகள் முதலியவற்றையும் வண்டலினால் உண்டாகும் எல்லா வாயுகளையும் நீக்கும்.

ஸுரிஞ்சான்மிஸ்ரி மாஜுன்

வெண்மையான ஸுரிஞ்சான்மிஸ்றி, சுத்தி செய்த மஹ்முதா இவை வகை ஒன்றுக்கு 16 கிராம், மேல்தோல் நீக்கின சுக்கு, பாகப்படுத்தின பிளப்புச் சீரகம், லவங்கம், கோஷ்டம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், நுரைநீக்கிச் சுத்தி செய்த தேன் 250 கிராம்.

செய்முறை - தேனைக் காய்ச்சிப் பாகுபதத்திற் சூரணத்தைக் கலந்து கொள்ளவும்.

மாத்திரை - 8-12 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - கீல்வாயுகள், பைத்தியரோகம் இவை தீரும்.

சீமை மருதோன்றி விதை

இவற்றின் முறைகளை வந்தவிடத்திற் காண்க.

மைசாக்ஷி மாத்திரை

நெய்யில் வறுத்த சூரத்துக் கடுக்காய்த் தோல் சூரணம் 20 கிராம், மாசிக்காய்த்தோல் சூரணம் 12 கிராம், மைசாட்சி 55 கிராம்.

செய்முறை- பிரண்டையை வாட்டியிடித்துப் பிழிந்த ரசத்தில் மைசாட்சியைக் கரைத்து வடித்து முன் சூரணங்களைக் கல்வத்திற் கொட்டி அதில் சிறுகச் சிறுகவிட்டு ரசமெல்லாம் ஆகிறவரையும் அரைத்து மாத்திரைகள் செய்து உலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 8 - 12 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மூலத்திலிருந்து விழும் ரத்தத்தைக் கட்டும்.

குக்கிலாதி மாத்திரை

கற்கடகசிங்கி, தான்றிக்காய்த்தோல், சீமை நெல்லிமுள்ளி இவைகளின் சூரணம் வகை ஒன்று 8 கிராம், மைசாட்சி 18 கிராம்.

செய்முறை- பிரண்டை ரசத்தில் மைசாக்ஷியைக் கரைத்து வடித்து முன் சூரணங்களைக் கல்வத்திற்போட்டு அதில் சிறுகச் சிறுக விட்டு ரசம் எல்லாம் ஆகிறவரையும் அரைத்து மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 8- 2 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மூலக்கடுப்பு நீங்கும்.

மூலக் குடோரி

கற்கடகசிங்கி,சூரத்துக் கடுக்காய்த்தோல், சீமை நெல்லிமுள்ளி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு ஒரு பங்கு. மைசாட்சி அரபிபோளச் சூரணம், சுத்திசெய்த சீமைச்சிவதை வேர்ச் சூரணம் வகை ஒன்றுக்கு ஒன்றரை பங்கு.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்தரைத்துத் தூட்செய்து பாதம் நெய் பசையுண்டாக்கி ஜலம் விட்டரைத்து மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 3-4 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மூலவியாதிகள், மூலக்கடுப்பு, மூலச் சூடு, மூலச்சூட்டினா லுண்டான மலபந்தம் முதலியவை தீரும்.

மஹா கோகிலாதி மாத்திரை

பாதம் நெய்யில் வறுத்த மஞ்சட்கடுக்காய்த்தோல், கற்கடகசிங்கி, சீமை நெல்லிமுள்ளி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், பாகப்படுத்தின நற்பவளம், பாகப்படுத்தின கஹரூபா பாகப்படுத்தின கடல்நுரை இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், மைசாட்சி 35 கிராம்.

செய்முறை - மைசாட்சியை ஜலத்திற் கரைத்து வடித்து மற்றச் சரக்குகளை ஒன்றாகக் கலந்து கல்வத்திற் போட்டுச் சிறுக சிறுக விட்டரைத்து மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மூலசம்பந்தமான சீதபேதி, சீதக்கடுப்பு, இரத்த பேதி முதலியவைகள் நீங்கும்.

இரத்தமூலக் குடோரி

கற்கடகசிங்கி, தான்றிக்காய்த்தோல், நெல்லிக்காய்ச்சாறு இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், சீனாக்காரம் 4 கிராம், மைசாட்சி எட்டு கிராம்.

செய்முறை - நெல்லிக்காய்ச் சாற்றில் மைசாட்சியைக் கரைத்து மற்ற சரக்குகளையெல்லாம் சேர்த்தரைத்து மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மூலரத்தம் விழுவது நீங்கும்.

கோகில திரிபலாதி

மைசாட்சி, சரக்கொன்றைப்புளி இவை வகை ஒன்றுக்கு நூறு கிராம், சூரத்துக் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், கற்கடகசிங்கி, நெல்லி முள்ளி, அப்திமூன் உஸ்துகுத்தூஸ் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், தேன் 1200 கிராம்.

செய்முறை - சரக்கொன்றைப் புளியையும், மைசாட்சியையும் கரைத்து வடிகட்டிச் சூரணத்திற் சேர்த்துத் தேனைக் காய்ச்சி நுரைநீக்கி, பதத்தில் நெய்ப்பசையுண்டாக்கி வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை - 12- 20 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - மூலச்சூட்டினா லுண்டான மலச்சிக்கலை நீக்கி, மூல வியாதிகளைக் கண்டிக்கும்.

சீமைச்சிவதைவேர் சுத்தி

வெண்மையான வகையையெடுத்து மேல்தோல், உள்நரம்பு முதலியவை நீக்கிப் பசுவின்பாலில் வேக வைத்துலர்த்தி யிடித்துச் சூரணம் செய்து பாதம் நெய்ப்பசை யுண்டாக்கி ஔஷதங்களில் உபயோகப்படுத்தவும்.

திரிபலா ஜவாரிஷ்

சுத்தி செய்து நெய்ப்பசை யுண்டாக்கின சீமைச்சிவதை வேர்ச் சூரணம் 35கிராம், மேல்தோல் நீக்கின சுக்குச் சூரணம் 20 கிராம், சீனி சருக்கரை 175 கிராம்.

செய்முறை - சீனிசருக்கரையைப் பாகுசெய்து பதத்தில் சூரணங்களைக் கொட்டிக் கிண்டிக்கிளறி ஜவாரிஷ் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 12- 16 கிராம் சாப்பிட்டு அதன் மேல் வெந்நீர் குடிக்கவும்.

உபயோகம் - இரைப்பையிலுள்ள அசுத்த மாசுகளைப் பேதி வழியாய் வெளிப்படுத்தும்

குறிப்பு

இந்த பாகத்தில் தேகபல முதலியவைகளுக்கு ஏற்ற விதமான மஹ்மூதா, ரேவல்சீனி முதலிய பேதிச் சரக்குகளையும் சேர்த்துச் செய்து கொள்ளவும்.

சிவதை மாத்திரை

சுத்தி செய்துள்ள சீமைச்சிவதைச் சூரணம் 8 கிராம், பனப்ஷாபூச் சூரணம், பாதாம் பிசின் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், அதிமதுரப்பால், சுத்திசெய்த மஹமூதா இவை வகை ஒன்றுக்கு 2 கிராம்.

செய்முறை - பின் சொன்ன இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்து மற்ற சூரணங்களையும் சேர்த்துப் பாதம் நெய்ப்பசை யுண்டாக்கி, சுத்தஜலம் விட்டரைத்து மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை- 8 கிராம், வெந்நீரிற் கரைத்துச் சாப்பிடவும்.

உபயோகம் - கபம், பித்தம் இவை யிரண்டையும்பேதி வழியாய் வெளிப்படுத்தும்.

கபஹரிச் சூரணம்

சுத்திசெய்த சீமைச் சிவதைவேர்ச் சூரணம் 35 கிராம், மேல்தோல் நீக்கின சுக்கு, ரோஜாப்பூ, ரேவல் சீனி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம்.

செய்முறை - இவைகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை - 8 கிராம், பாதம் நெய்யில் அல்லது வெந்நீரிற் சாப்பிடவும்.

உபயோகம் - கபநீர்களை வெளிப்படுத்தி, கபவியாதிகளுக்கு உபயோகப்படும்.

சுகிர்தானந்த சிவதை மாஜூன்

சுத்திசெய்த சிவதைவேர்ச் சூரணம் 35 கிராம் ரோஜாப்பூச் சூரணம் 20 கிராம், குங்குமப்பூ, சுத்திசெய்த மஹமூதா சூரணம் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம் றூமிமஸ்தகிச் சூரணம் 4 கிராம், மேல்தோல்நீக்கின பாதம் பருப்பு 35 கிராம், சீனிசருக்கரை 125 கிராம், தேன் 125 கிராம்.

செய்முறை - குங்குமப்பூவை பன்னீர் விட்டரைத்துக் கொண்டு சூரணங்களைப் போட்டுப் புரட்டி, தேனையும் சீனி சருக்கரையையும் சேர்த்து இஷ்டமானால் கொஞ்சம் பன்னீரையும் விட்டுக் காய்ச்சிப் பாகுபதத்திற் சூரணங்களைத் தூவி, பாகப்படி மாஜூன் செய்து கொள்ளவும்.

மாத்திரை - 12, 16 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - வயிற்றுக்கடுப்பு, ஆசனஎரிச்சல், முதலியவை யொன்றுமில்லாமற் சுகபேதியாகும். சாப்பிடுவதற்கும் மதுரமாயிருக்கும்.

சிவதைத் திரிபலாதி

மஞ்சட் கடுக்காய்த்தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி இவை வகை ஒன்றுக்கு 25 கிராம், மேல்தோல் நீக்கின சுக்குச் சூரணம் 8 கிராம் பெரு லவங்கப்பட்டை, லவங்கப்பட்டை,ஏலக்காய், ஜாதிக்காய் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், தராயிலைச் சூரணம் 25 கிராம் ரோஜாப்பூச் சூரணம் மேல்தோல் நீக்கின அதிமதுரச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு பன்னிரெண்டு கிராம் சுத்திசெய்த சீமைச் சிவதைவேர்ச் சூரணம் 55 கிராம்; தேன் 500 கிராம், பாதம்நெய் 25 கிராம்.

செய்முறை- சூரணங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து பாதம் நெய்கலந்து பசையுண்டாக்கித் தேனைக் காய்ச்சி நுரை நீக்கிப் பதத்தில் சூரணங்களைச் சேர்த்து லேகியம் செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - 12- 16 கிராம் சாப்பிட்டு வெந்நீர் குடிக்கவும்.

உபயோகம் - இரைப்பையிலுள்ள பித்தம், கபம் இவற்றைப் பேதிவழியாக வெளிப்படுத்தும். தொந்தரசுரங்கள், சிலேத்தும சுரங்கள் ஆகியவைகளுக்கு உபயோகப்படும்.

பாலங்கூ

இதன் முறைகளை வந்தவிடத்திற் காண்க.

ஆத்மரக்ஷணி மாத்திரை

மஞ்சட் கடுக்காய்த்தோல், சூரத்துக்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், கற்கடகசிங்கி, அரபிபோளம், பஸ்பாயிஜ் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், பாகப்படுத்தின வெள்ளை காரிகியூன் 16 கிராம், உஸ்துகுதூஸ், அப்திமூன் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம் உலர்ந்த ஆற்றுத் தும்மட்டிக்காய்ச்சதை 8 கிராம், கடுகுரோகணிச் சூரணம் 8 கிராம் பாதம்நெய் தேவையான அளவு.

செய்முறை - சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து பாதம்நெய் சேர்த்துப் பசையுண்டாக்கிக் கல்வத்திற் கருந்துளசி ரசம்விட்டு 6 மணிநேரம் அரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 8 கிராம், 12 கிராம் வெந்நீருடன் சாப்பிடவும்.

உபயோகம் - சிரசிலுண்டாகும் வண்டல் சத்தை நீக்கியும் தேகத்திலுண்டாகும் வண்டல் சத்தைப் போக்கியும் அவற்றைச் சுத்திசெய்யும். முக்கியமாகச் சிரசைப் பற்றிய வண்டல் வியாதிகளைக் கண்டிக்கும்.

ஆத்மரக்ஷா பானம்

உஸ்துகுத்தூஸ், சூரத்து நில ஆவாரை; பஸ்பாயிஜ் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், ரோஜாப்பூ விதழ், பனப்ஷா, சீமைச் சிவதைவேர், மயிர்ச்சிக்கி இவை வகை ஒன்றுக்கு 25 கிராம், சீனிசருக்கரை 455 கிராம்.

செய்முறை - சரக்குகளையெல்லாம் சிதைத்து இரண்டேகால் படி ஜலத்தில் ஊறவைத்துக் காலையிற் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச்

சுண்டினபின் இறக்கிப் பிசைந்து வடிகட்டிச் சீனிசருக்கரை சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கிப் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை- 6-8 கிராம் வெந்நீரில் அல்லது பன்னீரில் சாப்பிடவும்.

உபயோகம் - சிரசிலும் தேகத்திலுமுள்ள கபநீரையும், வண்டல்நீரையும் பக்குவப்படுத்தி வெளியேற்றிச் சுத்தி செய்யும். கபம் அல்லது வாதம் சம்பந்தப்பட்டு இருதய தொந்தமான தலை நோய்களையும் கண்டிக்கும் மண்ணீரலைப் பற்றிய தலைநோய்களையும் போக்கும். முக்கியம் மூளையைப்பற்றியுள்ள வியாதிகளுக்காம்.

ஆத்மரக்ஷா திராவகம்

உஸ்துகுத்தூஸ் 1400 கிராம் சுத்தமான ஜலம் 4 படி.

செய்முறை - இதை ஜலத்தில் ஓரிரவு ஊறவைத்து காலையில் வாலையிலிட்டு மூன்று சீஷா திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை - 70, 100, 175 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - வரட்சிகளை நீக்கும், மூளையைப் பலப்படுத்திப் புலன்களைத் தெளிவாக்கும். தேகத்தில் அழுகிப் போன மாசுகளை போக்கும் பீனிசவியாதிகளை நீக்கும்.வாததேகிகளுக்கும், சிலேத்தும தேகிகளுக்கும் அதிக பலனைக் கொடுக்கும். முதியோர்களுக்கும் அதிக உபயோகமாம். நடுக்கல், கீல்வாயுகள் முதலியவற்றிற்கும் உபயோகமாகும். நாட்பட்டதலைநோய், காக்கைவலிப்பு இவற்றையும் சுவஸ்தப்படுத்தும்

ஆத்மரக்ஷா கியாழம்

உஸ்துகுத்தூஸ், அப்திமூன் இவை வகை ஒன்றுக்கு 20 கிலோ சுத்த ஜலம் 510 மி.லிட்டர்.

செய்முறை - இரவில் ஜலத்தில் உஸ்துகுதூஸைப் போட்டுக் காய்ச்சி அரைப்பாகம் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து பிழிந்து வடிகட்டி அப்திமூனை ஒரு துணியில் முடிந்து போட்டு அந்த ராத்திரியே ஊறவைத்துக் காலையில் அடுப்பேற்றிக் காய்ச்சி 170 மி.லிட்டர் ஜலமாகச் சுண்டவைத்திறக்கி முடிச்சைப் பிசைந்து பிழிந்து நீக்கி விட்டுக் கியாழத்தை மறுபடியும் வடித்து அதில் ஒரு பலம் ஸிகா மதுபானம் விட்டுச் சாப்பிடவும்.

உபயோகம் - மூளையிலுள்ள மாசுகளையெல்லாம் நீக்கும். முக்கியமாக எரிந்துபோன மாசுகளை நீக்கும்; பைத்திய ரோகங்களையும் நீக்கும்.

ஆத்ம ரக்ஷா திரிபலாதி

மஞ்சட் கடுக்காய்த்தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல், கற்கடகசிங்கி, தான்றிக்காய்த்தோல்,சீமைநெல்லிமுள்ளி, சூரத்து நில ஆவாரை, பாகப்படுத்தின சீமைச் சிவதைவேர், பஸ்பாயிஜ், உஸ்துகுத்தூஸ், இவைகளின் சூரணம் வகைக்கு 35 கிராம் பாதம் நெய் 450 கிராம் தேன் 1400 கிராம்.

செய்முறை -சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து பாதம்நெய் சேர்த்துப் பசையுண்டாக்கித் தேனைக் காய்ச்சிப் பதத்தில் சூரணங்களைத் தூவிக் கிளறி மாஜூன் பாகப்படி செய்து கொள்ளவும்.

மாத்திரை - 9 கிராம் சாப்பிடவும்

உபயோகம் - கபத்தினாலுண்டான காக்கைவலிப்பு தீரும்.

குறிப்பு

இந்த லேகியத்துடன் பரமௌஷதம் 4 கிராம் சேர்த்துச் சாப்பிட, அநேக சுகங்களை தரும். இதை வாய் கோணல் வியாதிக்கு 16 கிராம் சாப்பிடவும், இன்னும் இதனால் தீரும் வியாதிகள் மலச்சிக்கல், கபவியாதிகள், வண்டல் வியாதிகள், காக்கை வலிப்பு, பைத்தியரோகம், கரும்புள்ளி வெண்புள்ளி விழும் ரோகங்கள் ஆகியவைகளாம். முக்கியம் தலை, கண், காது, மூக்கு ஆகிய இவைகளைச் சேர்ந்த நோய்களும் தீரும். ஆனால், இந்த லேகியத்தை மாத்திரையில் அதிகப்படுத்தியும், பரமௌஷதத்துடன் சேர்த்தும் சாப்பிட்டுவரவேண்டும்.

பஸ்பாயிஜ் மாத்திரை

பரமௌஷதம், பஸ்பாயிஜ் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம் , உலர்ந்த ஆற்றுத் தும்மட்டிக்காய்ச் சதை 24 கிராம், உஸ்துகுத்தூஸ் அப்திமூன் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், சுத்திசெய்த சீமைச் சிவதைவேர்ச்சூரணம் 32 கிராம் சுத்திசெய்த மஹ்முதா சூரணம் 6 கிராம்.

செய்முறை - இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டுச் சுத்தமான ஜலம் வார்த்தரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை - 8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - இரைப்பையிலுள்ள வண்டலையும் கபத்தையும் நீக்கி, அவற்றையும் மூளையையும் சுத்தி செய்யும்.

பஸ்பாயிஜ் சூரணம்

பஸ்பாயிஜ் சூரணம், அப்திமூன் சூரணம் இவை வகை ஒன்றுக்கு ஒரு பங்கு, சீனிசருக்கரை இரண்டுபங்கு.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை - 16 கிராம் தகுந்த ஷர்பத்திற் சாப்பிடவும்.

உபயோகம் - வண்டலையும், எரிந்து போன வண்டலையும், அசுத்தமான வண்டலையும் பேதியால் வெளிப்படுத்தி வண்டல் வியாதிகளை நீக்கும்.

பஸ்பாயிஜ் சூரணம்

சிதைத்த பஸ்பாயிஜ் ஒரு பங்கு, சீமைத் திராக்ஷாமது மூன்று பங்கு.

செய்முறை - திராக்ஷா மதுவில் பஸ்பாயிஜை ஒரு துணியில் முடிந்து போட்டு 21 நாள் ஊறவைத்து முடிச்சையெடுத்துப் பிசைந்து பிழிந்து நீக்கிவிட்டுப் பானத்தைச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை - 140- 175 கிராம் சக்திக் கேற்றபடி போஜனம் செய்யுமுன் சாப்பிடவும்.

உபயோகம் - வண்டலைப் பேதிவழியாக வெளிப்படுத்தும்.

பஸ்பாயிஜ் கியாழம்

பஸ்பாயிஜ் 16 முதல் 24 வரையில் 340 மி.லிட்டர் ஜலத்தில் ஓரிரவு ஊற வைத்துக் காலையிற் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்துப் பிசைந்து பிழிந்து வடித்து இஷ்டமான மட்டும் சரக்கொன்றைப் புளி, பாதம் நெய் இவ்விரண்டையும் கலந்துவடித்துத் தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வர, வயிற்று நோய், மூலவாயு, காக்கை வலிப்பு, வண்டல் வியாதி முதலியவைகள் தீரும்.

விரேசனங்கள்

மானிட தேகத்திலுள்ள அசுத்த மாசுகளை வெளிப்படுத்த அனேக வகையுண்டு. அவையாவன:

மலபேதி, வாந்தி, நீர்பேதி, வேர்வையை வெளிப்படுத்தல், இரத்தங்குத்தி வாங்குதல் ஆகியவைகளாம். பேதிக்கு முன் தேகத்தில் எவ்வித அசுத்தமாசு அதிகரித்திருக்கிற தென்றும், அதனால் அதற்கு

என்ன கெடுதி சம்பவித்திருக்கிறதென்றும் நன்றாக ஆலோசிக்க வேண்டும். ஏனெனில், சுகஸ்திதியில் உள்ள ஒருவர் பேதிக்கு அல்லது வாந்திக்குச் சாப்பிடுவதனால் தக்ஷணம் மயக்க முண்டாக ஏதுவாகும். அதற்குக் காரணம், சாப்பிட ஔஷதம் வெளிப்படுத்த வேண்டிய அசுத்த மாசுகள் அங்கு இல்லாதபடியால், இரத்தத்திலும், தசைகளிலும் தன் உக்கிரத்தைக் காட்டி, அவற்றுள் சிலவற்றை வெளிப்படுத்த முயலுவதே யாம்.

இன்னும் அசுத்த ஆகாரங்களைச் சாப்பிடும் வழக்க முள்ளவர்களும் பேதிக்குச் சாப்பிட்டால் மயக்கங்காணும். ஏனெனில், நாளாவர்த்தியில் அவர்கள் தேகத்தில் அசுத்த மாசுகள் படிந்து சேர்ந்து நிறைந்திருக்கும். பேதிக்குச் சாப்பிட்ட ஔஷதமானது, அவ்வசுத்த மாசுகளை இயக்க முயலும். நிலையாயிருக்கிற வொன்றை இயக்குவதனால் அதன் பயன் வெளிப்படுவது போல, அடைந்து கிடக்கும் மாசுகளைக் கலக்கிவிடவே அவற்றினின்று எழும்பும் அசுத்த ஆவியானது இருதய முதலியவற்றில் தாக்கி,மயக்கத்தை யுண்டுபண்ணும். இக்காரணங்களினால் அசுத்த சத்துகளை நீக்க முயலுமுன் முக்கியமான நான்கு விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.

1-வது நமது தேகத்தில் எந்த மாசு அதிகரித்திருக்கிற தென்றும் அதனால் என்ன கெடுதிகள் நேரிடுகின்றன வென்றும் நிதானிக்க வேண்டியது. ஏனெனில், அவ்விதம் உண்மையான அதிகரித்திருக்கப்பட்ட மாசை நீக்குவதினால் சுகுணமேயுண்டாகும் அப்படிக்கல்லாது ஒன்றைவிட்டு ஒன்றை வெளிப்படுத்துவதனால் கெடுதி நேரிடாதிராது. எப்படியெனில்,பித்தாதிக்க வியாதியில் பித்த நீரை வெளிப்படுத்துவதற்குப் பதிலாகக் கபநீரை வெளிப்படுத்தினால், அந்த பித்தரோகம் விர்த்தியாகும். ஏனெனில், கபம் இருப்பதனால் கபத்தின் குளிர்ச்சியும் கொழுமையும் பித்தத்தின் சூட்டின் உக்கிரத்தை யெதிர்த்துச் சாந்தப்படுத்த முயலும். அங்ஙனன்றி, கபத்தை வெளிப்படுத்துவதனால் பித்தத்தின் உக்கிரம் முன்னிலும் அதிகப்பட்டு அபாயத்திற்கு இடமுண்டாம். ஆகையினால் எவ்விதசத்து தேகத்தில் அதிகரித்திருக்கிறது? வியாதிக்குக் காரணம் எவ்விதச்சத்து? என நன்றாகத் தெரிந்து நிதானித்து வெளிப்படுத்த முயல வேண்டும்.

இரத்தம் அதிகரித்திருந்தால், இரத்த பேதிக்குக் கொடுக்கலாகாது; இரத்தங்குத்தி வாங்க வேண்டும். முக்கியமாக இச்சமயங்களில் இரத்தாதிக்கத்தைச் சாந்தப்படுத்தும் ஔஷதங்களையும் ஆகாரங்களையும் உபயோகிக்க வேண்டும்.

கபம், பித்தம், வண்டல் ஆகிய அச்சத்துகளில் ஒவ்வொன்று தனித்தனி அதிகரித்திருந்தால், அந்தந்தச் சத்தை வெளிப்படுத்தும்

ஔஷதங்களை உபயோகிக்க வேண்டியது. மூன்று சத்துகளும் அதிகப்பட்டிருந்தால் அவற்றுள் எது மிகவும் அதிகரித்திருக்கிறதோ அதனை முன்னர் நீக்க வேண்டியது. ஏதேனும் ஒரு சத்து மிகவும் அதிகப்பட்டிருந்து அதை வெளிப்படுத்துவதனால் சிலசமயம் சிறு குடற்களிற் சோர்வு அல்லது சூடுஅதிகப்படுவதுண்டு. சிலவேளை சுரமும் காண்பதுண்டு.நீர்பேதியினால் நீர்ப்பையில் அழலையுண்டா வதுண்டு. இத்துர்குணங்கள் உண்டாயினும் அதிகரித்த சத்து வெளிப்படுவதனால் உண்டாகும் சுகுணமே அதிகமாம். அந்தச் சமயத்தில் சிற்சில துற்குணங்கள் வெளியாயிருந்தாலும், அசுத்த சத்துக்கள் வெளிப்பட்டதனால் உண்டாம் சுகுணம் அப்போது அந்தரங்கமாயினும் பின்னர் அது ஸ்திரமானதாகவும் அதிகமாகவு மிருக்கும்.

2-வது நாம் வெளிப்படுத்த வேண்டிய மாசு எந்த நோக்கமாயிருக்கிறதென நிதானித்து, அந்த நோக்கமாகவே வெளிப்படுத்த முயலவேண்டும் எப்படியெனில், அருக்களிப்பு குமட்டல் இவை யுண்டாயிருந்தால், அந்தச் சத்து மேல்நோக்குகின்றதென அதனை வாந்தியால் வெளிப்படுத்த முயல வேண்டும். அது அடிவயிற்றுப்பக்கம் நோக்கினால் மலபேதியால் வெளிபடுத்த வேண்டும் -மூளையிலிருந்தால் தும்மல் ஆக்கிராணத்தால் அல்லது வாய் கொப்பளிக்கும் மருந்தால் வெளிப்படுத்த வேண்டும். சிரசிலுள்ள மாசைத் தைலமிட்டுச் சீப்பினாற் சீவிக்கொள்வதனாலும் மேற்பூச்சுத் தைலங்களாலும் நீக்க வேண்டும். மாசானது மார்பு , தொண்டை முதலிய இடங்களிலிருந்தால் வாய் நீரைப் பெருக்கும் ஔஷதங்களால் வெளிப்படுத்தவேண்டும் சிறுநீரின் வழியாய் வெளிப்படுத்த வேண்டிய மாசுகளை நீர் பேதியால் வெளிப்படுத்த வேண்டும் தேகத்தின் மேற்புறத்தில் அல்லது தசைகளில் தங்கி நிற்கும் மாசுகளை மேற்பூச்சுத் தைலங்களைக் கொண்டு நன்றாகப் பூசித்தேய்த்தும், வியர்வைகளை யுண்டாக்கும் ஔஷதங்களை உபயோகித்தும் நீக்க வேண்டியது. ஆனால், இரைப்பையிலும், ஈரலிலும் மாசுகள் தங்கி நின்றால் மலபேதி, ஜலபேதி ஆகிய இவ்விரண்டினாலும் வெளிப்படுத்த வேண்டும்.

3-வது மாசுகளை இயல்பான வழியாக ஓர் அவயவத்திலிருந்து மற்றொரு அவயவத்தில் திருப்ப வேண்டும். மூத்திரக் குண்டிக்காய்களிலிருந்து நீர்ப்பைக்குத் திரும்புவதும் பெருங்குடலிலிருந்து சிறுகுடல் மார்க்கம் திரும்புவதும் இயல்பு. இதற்காக நாம் வேறொரு பிரயாசையெடுத்துக் கொள்ள வேண்டிய நிமித்தமில்லை சத்துக்கள் எப்பக்கம் நோக்கமாகிறதோ அதுவே சுபாவமென யூகித்துக் கொள்ள வேண்டியது.

4-வது தக்ஷணம் மாசுகளை வெளிப்படுத்துவது அவசியமா? அல்லது அவசியமில்லையா என்பது. இதைப் பற்றிப் பழமையான வியாதிகளானால் மாசுகளைப் பக்குவப்படுத்தியே வெளிப்படுத்த வேண்டும். தீக்ஷண்யமான வியாதிகளிலும் பக்குவப்படுத்துவது ஆவசியகமே. முக்கியம் கடின இருக்கமுள்ளதா யிருந்து மாசுகள் பக்குவப்பட்டிருந்தால், அவற்றை யுடனே வெளிப்படுத்த வேண்டும். மாசுகள் நரம்புகளி லிருந்தால் தேகமெங்கும் பரவாத படி எச்சரிக்கையா யிருக்க வேண்டும் தேகத்தின் ஒரு பாகத்தில் மாசுகள் தங்கியிருந்தால், அவை பக்குவப்படுகிற வரையிலும் அவற்றை இயக்கலாகாது. ஆனால்,மாசுகள் பக்குவப்படுவதற்குள் வியாதி மீறிப் பலப்படுமெனத் தோன்றுங்கால் வெளிப்படுத்தலாம். மாசுகள் இறுகிக் கட்டிப்போகாதபடி ஜாக்கிரதையா யிருக்க வேண்டும் எனப் பேர்போன ஜாலிநியூஸ் பண்டிதர் வெகு கண்டிப்பாகக் குறித்திருக்கிறார். பேதிமருந்துகள் அகாலத்திலும், தேவை யிராதபோதும் சாப்பிடுவதனால் அபாய முண்டாவது திண்ணம். ஏனெனில், விரேசனமருந்துகளெல்லாம் பெரும்பாலும் சூடும்வரட்சியுமானவைகளே சுரவியாதியால் ஒருவன் வருந்தும்போது பேதிக்குக் கொடுப்பது முறையன்று.

ஆனால் அந்தச் சுரவியாதியானது மா சுகளாலுண்டாகி, அவை வெளிப்பட்டாலொழிய, அந்தச் சுரவியாதி நீங்காதென நிச்சயப்பட்டபோது விரேசன மருந்து உபயோகப்படும். ஏனெனில், பேதிக்குச் சாப்பிடாததனால் உண்டாகும்கெடுதியைக் காட்டிலும், பேதிக்குச்சாப்பிட்டதனால் உண்டாகும் கெடுதி அதிகமாகாத காலங்களில் அவசியம் ஆகும்.கட்டிகள் வீக்கங்கள் முதலியன பழுக்காதவையா யிருக்குமுன், சத்திரம் வைப்பதும் கீறிப்பிளப்பதும் ஆகா. அப்படிச் செய்வதனால் பெரும்பாலும் அபாயமே நேரிடும். அதுபோலவே, மாசுகள் பக்குவப்படுத்தப் பட்டிராமுன் வெளிப்படுத்த முயலுவதும் அபாயத்திற்கே யிடமாம்.

அடிக்கடி பேதி, வாந்தி, நீர்பேதி ஆகியவைகளுக்கு ஔஷதங்கள் சாப்பிடலாகா. ஏனெனில், அப்படிச் சாப்பிடுவதனால் ஈரலில் உஷ்ணம் அதிகரிக்கும். ஒரு மாசத்திற் கொருதடவை அல்லது இரண்டு மாசத்திற்கு ஒருதடவைபேதி முதலியவற்றிற்குச் சாப்பிட்டுத் தேகத்தைச் சுத்திசெய்து கொள்ளலாம் என்னும் நம்பிக்கையுடன் அனுஷ்டித்து வரும் வழக்கம் மிகவும் கொடியது ஏனெனில், அடிக்கடி பேதிக்கு அல்லது வாந்திக்குச் சாப்பிடுவதனால் குடற்பலமும் தேகபலமும் குன்றிப்போவதுமன்றி, துர்பழக்கத்திற்கும் இடமாகிவிடும்.

மஹா வல்லமைசாலிகளாகிய பண்டித சிரோமணிகளாயினும், அவர்கள் இடத்திலும் திட்டமாக நிறுத்தறியும் தராசுக்கோலுங் கிடையாது. ஒருவனுடைய தேகத்தில் சுபாவசத்து எவ்வளவு இருக்கின்ற தென்றும்,

அசுபாவசத்து எவ்வளவு அதிகப்பட்டிருக்கின்ற தென்றும், அவற்றை எவ்வளவு குறைக்க வேண்டுமென்றும் திட்டமாகத் தூக்கிப் பார்க்கும் நிறைகல்லுங் கிடையாது. ஆனால், இவ்வளவிருக்கலாம், இவ்வளவு குறைக்கலாம் என்னும் உத்தேசமே யொழிய நிறைபடுத்தப் பட்டவையல்ல. மேலும் எவ்வளவு மருந்து சாப்பிடவேண்டும், எத்தனை தடவையிற் சுத்தமாக வெளிப்பட்டுப்போம் என்னும் நிச்சய நிறைவும் கிடையாது. ஆனால் இவையெல்லாம் பண்டிதர்களின் அறிவின் சக்திக்கேற்ற உத்தேசமேயன்றி, பிறிதன்று. ஆகையால், நோயாளிகள் குணங்குறிகளை நிதானித்து உண்மையைக் கடைப்பிடித்து அசுத்தமாசுகள் இவ்வளவு இருக்கலாம்; இவ்வளவு வெளிப்படுத்த வேண்டும் எனத் திட்டப்படுத்திக் கொள்கிறார்கள் ஆகையால், தேகாரோக்கியம் எவ்வளவு குறைந்திருக்கின்றது? அசுபாவசத்துகள் எவ்வளவு அதிகப்பட்டிருக்கின்றன? அவற்றை வெளிப்படுத்த ஏற்ற ஔஷதங்கள் யாவை ? என நிதானித்தறிந்து, குறித்த மருந்து முதலியவற்றை முன்னர் குறைந்த அளவாக உபயோகிக்க வேண்டியது. ஒரே தடவையில் தேகசுபாவம் பேதப்படும்படியாக உபயோகிக்க லாகாது. படிப்படியாகத் தேகசுபாவம் திருந்தும்படி செய்யவேண்டியது. அப்படிச் செய்ய இரண்டு வகையுண்டு. 1-வது மருந்துகளைப் பலதடவைகளாகக் கொடுப்பதினால்மாசுகள் படிப்படியாய் நீக்கப்பட்டு, தேகசுபாவம் சமரசப்படும். 2-வது வியாதியஸ்தன் பலவீனப் பட்டிருந்தாலும், மாசுகள் நீங்குவதனால் உண்டாம் பலவீனத்தினாற் கெடுதிநேரிடாது, படிப்படியாய் மாசுகள் வெளிப்படுவதனால் தேகபலமானது வியாதியின் பலத்தோடடெதிர்த்து அதனை வெல்லும். ஏன் இப்படிச் செய்யவேண்டும் என்றால், பேதிக்கு அல்லது வாந்திக்குச் சிகிச்சகன் ஔஷதம் கொடுத்தபின் அவனால் ஒன்றும்செய்யலாகாது ஏனெனில், அந்த ஔஷதத்தின் செய்கையை மாற்றமுடியாது. ஒருவேளை மாற்றமுயன்றாலும், அதனால் உண்டாம் நன்மையைக் காண கெடுதி அதிகமாகவேயிருக்கும். ஆகையால்,முன்னரே தீர்க்க ஆலோசித்துக் குறைந்த அளவாக ஆரம்பித்துக் கிரமமாய்க் கொண்டுவர வேண்டுமென்பது சித்தாந்தம். இரைப்பையில் உள்ள மாசை வாந்தியாலும் சிறுகுடற்களிலுள்ள வாயுவை அல்லது அசுத்தநீரை மலபேதியாலும், வெளிப்படுத்துவது உத்தமம். தேகத்தில் பித்தத்தால் எரிவந்தம் உண்டாயிருந்தால், அதனை வாந்தியால் வெளிப்படுத்துவது சுலபம்.ஏனெனில், பித்தத்தின் சுபாவம் மேனோக்குடையது. வண்டலானது கனமும் இறுகியதுமானதால், அதன் சுபாவம் கீழ்நோக்க முடையதால் அதை மலபேதியால் வெளிப்படுத்துவது அதிக சுலபம். இவ்விதம் ஒவ்வொரு சத்தையும் அவ்வவ்வுறுப்பிற்கு ஏற்ற விதமாகச் சமயத்திற்குத் தக்கபடி வெளிப்படுத்த முயலவேண்டியது முறையாகும்.

இன்னாருக்கு விரேசனமருந்து ஆம் ஆகாவெனல்

பேதிக்கு வாங்கு முன் பின்வரும் விஷயங்களை நன்கு கவனிக்க வேண்டும்.

1. தேகத்தில் அசுத்தமாசு அதிகரித்திருக்கின்றதா?இல்லையா? 2. தேகபலம் , 3.தேகசுபாவம், 4. வயது, 5. காலம், 6. ஸ்தான பேதம், 7. பேதிக்கு வாங்கும் வழக்கம், 8. தொழில், 9. தேகக்கட்டு முதலியவைகளாம்.

தேகத்திலும் , நரம்பாதிகளிலும் மாசு இல்லாதபோது பேதிக்கு வாங்குவதனால், நன்மைக்குப் பிரதியாகத் தீமைவிளையு மென்பது திண்ணம்.

ஆன்மசக்தி, தேகசக்தி ஆகியவற்றில் ஒன்று குறைந்திருக்கும்போது வாங்குவதனாலும் அப்படியே.

அமிதமான சூடு அல்லது குளிர்ச்சி அதிகரித்திருக்கும் போது பேதிக்கு வாங்கலாது. அல்லது அவ்விதத் தேகிகள் வாங்குவதும் ஆகாது. ஆனால், சூடும் கொழுமையுமான தேகிகளுக்கு ஆகும். துற்பலப்பட்டவர்களுக்கும், பித்ததேகிகளுக்கும் பேதிமருந்தை யுபயோகிப்பது நன்றன்று. அவசியமானால் ஸிகாமது பானத்துடனும் இரத்த விர்த்தி ஷர்பத்துடனும் சேர்த்து அநுபானித்து வாங்க வேண்டும்.

தம் ஆயுள் முழுவையும் பேதிக்கு வாங்க நேரிடாதவர்களும், பேதிமருந்துகளினால் அல்லது வேறுவிதமாகப் பேதியாகாதவர்களும், பேதிக்கு வாங்கினால் இசிவு, வலிப்பு முதலியவை காண்பவர்களும் பேதிக்கு வாங்கலாகாது.

பதினான்கு வயதிற்குட்பட்டவர் கடினபேதிக்கு வாங்குவது பொருத்தமானது.

குளிர்காலம், கோடைகாலம் ஆகிய இக்காலங்களில் மும்முரத்தில் பேதிக்கு வாங்கலாகாது. ஏனெனில், அதிகுளிர்காலத்தில் அசுத்த மாசுகளெல்லாம் உறைந்திருக்கு மாகையால், அவை நன்றாக வெளிப்பட ஏதுவிராது. அதிகோடை காலத்தில் சுத்த சத்து, அசுத்த சத்து ஆகிய இவ்விரண்டும் அளவில் அதிகமாக வெளிப்படும்; ஆகையால் அக்காலங்களிலும் ஆகாது.

உஷ்ணதேசத்தில் சூடான தேகிகளும், குளிர்ச்சியான தேகிகளும் வாங்கலாகாது. ஏனெனில், சூடான தேகிகள் காலத்தின் உஷ்ணாதிக்கத்தையும், மருந்தின் உஷ்ணத்தையும் சகிப்பது கடினம். மேலும் சூடான தேகங்களில் வியர்வை அதிகங்கண்டு சற்றுப் பலம்குறைவது வழக்கம். வியர்வையினால் மாசுகள் வெளிநோக்க

முயலும். பேதி மருந்துகளோ அவற்றை உட்பக்க மிழுக்க முயலும். இவ்விதம் ஒன்றிற்கொன் றொவ்வாது அப்பிரயோஜனப் பட்டும் கெடுதிக்கு இடமாம். ஆகையினாலேயே சூடான காலங்களில் பேதிக்கு வாங்குவது அவசியமல்ல. குளிர்ச்சியான காலங்களிலோ மாசுகள் உறைந்து போயிருப்பதனால் அதிகக்கடின பேதியினால் அவற்றை வெளிப்படுத்துவது அவசியமாகும். அதனால் தேகத்திற்கு யாதேனுமொரு கெடுதி நேரிடாதிராது.

பேதிக்கு வாங்கும் வழக்கமில்லாதவர்கள் பேதிக்கு வாங்குவதனாலும் கெடுதிநேரிடும். கடின தொழிலாளிகளும் பேதிக்கு வாங்குவது நன்றல்ல, ஆனாலும், அவரவர்களின் தொழிலுக்கு ஏற்றவிதமாகவும் அனுபவசித்தமாகவும் வாங்க வேண்டும்.

இன்னார் உடனே பேதிக்கு வாங்க வேண்டுமென்பது

தேகத்தில் அசுத்த சத்துகள் அதிகப்பட்டும், அவைகளைப் பக்குவப்படுத்தவாவது அல்லது சாந்தப்படுத்தவாவது கூடாததாயிருக்கும் சமயத்தில் உடனே பேதிக்கு வாங்கவேண்டும்.

கடுமையான வியாதிகளிலும் அவசியமானால், உடனே பேதிக்கு வாங்கவேண்டும். ஏனெனில், தாமதிப்பதனால் வியாதி பலப்பட இடமுண்டாம்.

பித்தாதிக்கத்தினால் உண்டாம் நடுக்கல் வியாதியில் பித்தநீரை உடனே வெளிப்படுத்த, சவுக்கியங்கண்டதுண்டு. ஆனால் நடுக்கல் வியாதி கபாதிக்கத்தினால் உண்டாயிருந்து கபசத்து அளவிற்கதிகமாயிராத பக்ஷத்தில் அதனைப் பக்குவப்படுத்தியே வெளிப்படுத்த வேண்டும். அது அளவிற்கதிகமாயிருந்தால், உடனே சொற்பபாகத்தை வெளிப்படுத்தி, மிஞ்சியபாகத்தைப் பக்குவப்படுத்தியே வெளிப்படுத்த வேண்டும்.

அசுத்த சத்துக்கள் மார்பில், நுரையீரலில் அல்லது அவற்றைச் சார்ந்த இடங்களிலிருந்தா லுடனே அதை வெளிப்படுத்தவேண்டும்.

கடுமையான நேரங்களில் ஆலுபுகாரா சேர்ந்த யோகங்களால் அசுத்த சத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். அல்லது அந்த யோகங்களுடன் கொஞ்சம் ஸகுமூனி யாவைத் தயிர்* நீரிற்கலந்து

* தயிர்நீர் என்பது பாலைக்காய்ச்சிப் பிரைகுற்றிக்கடைந்துதிரளும் வெண்ணெயை நீக்கியெடுத்த தயிரை அல்லது மோரை ஓர்பாத்திரத்தில் வார்த்துச் சற்றுச்சூடான இடத்தில் ஒரு நாள் வைக்க, அடியில் வண்டற்படிந்துமேலே தெளிந்து நிற்கும் நீரேயாம்.

கொடுப்பது உத்தமம். ஸகுமுனியாவை இந்நீரிற்கலந்து கொடுப்பதனால் அதன்சூடு சாந்தமாகும்.

வியாதிஆரம்பித்தவுடனே பேதிக்குவாங்குவது சுகுணமெனத் தோன்றும் நேரங்களில் உடனே வாங்கிக்கொள்ளலாம்.

தேகத்தில் கனதி, அல்லது ஓர் அவயவத்தில் கனதி, அல்லது சோர்வு, ஈரலில்வலி, மண்ணீரலின் பக்கத்தில்வலி, தலையிற்கனதி இரைப்பையிற் கனதி, அருவருப்பு, ஒக்காளம், அன்னத்துவேஷம், வழக்கத்திற்கு விரோதமாக நரம்புகளில் அசைவு ஆகியவைகள் உண்டானால், பேதிக்கு வாங்கத் தாமதிப்பது நல்லதல்ல.

பேதிக்குவாங்கி உண்டாகும் சுகுணா சுகுணங்களின் குறிகள்

மலத்தில் அல்லது வாந்தியில் பலவர்ணங் காணப்பட்டால், பலவகை அசுத்தமாசுகள் வெளிப்படுகின்றனவென அறிவிக்கும் அறிகுறியாம். ஆனால், அப்படி வெளிப்படுவதனால் ஓர்விதச் சோர்வும் உண்டாகாமல், ஆரோக்கியமும் தேகலேசுத்துவமும் உண்டாக்க வேண்டும். பேதியாம்போது அடிவயிற்றில் எரிவந்தமுண்டானாலும், அல்லது மலத்துடன் கொழுப்பு, அழுகினவஸ்து, கருமையான வஸ்து ஆகியவை விழுந்தாலும் நன்மையான குறியல்ல.

நாம் உத்தேசித்த சத்து வெளிப்பட்டு அதனால் யாதொரு சோர்வுமில்லாமல் இலேசுத்துவ முண்டாவதும் நன்மையே.

நன்றாகத் தூங்கியெழுந்தபின் உண்டாம் பேதியினால் அல்லது வாந்தியினால் யாதொரு களையுமில்லாமல் தேகம் இலேசாயிருக் குமாயின், அசுத்த மாசுகளெல்லாம் வெளிப்பட்டன என்பதற்கு அறிகுறியாம்.

பேதிமருந்தின் விபரம்

தேகத்திலுள்ள மாசுகளை வெளிப்படுத்த அததற்குரித்தான ஒளஷதமுண்டு. ஆனால், குறித்தமாசு அதன் அளவில் அதிகமாக வெளிப்படுவதுடன் மற்ற மாசுகளும் வெளிப்படும். இது,பேதிக்கு வாங்கினவனுடைய கைவிரல் மோதிரம் அன்று கழன்று போவதனால் விளங்கும். நாடின சத்தை மாத்திரம் வெளிப்படுத்துவது கஷ்டமே ஆகையால், முன் கண்ட விஷயங்களையும், உபயோகிக்கப்படும் ஒளஷதாதிகளின் தன்மைகளையும் நிதானிக்க வேண்டியது மிகவும் முக்கியம். ஏனெனில், ஒருவனுக்கு ஒரு சமயம் அதிகப்பலனைக்

கொடுத்த ஔஷதமே மற்றொரு சமயம் அவனுக்கே அதிகக்கெடுதியை விளைவிக்கின்றது. அப்படி நேரிடுவதற்காம் காரணமாவது, அவன் தேக சுபாவமும், காலத்தின் தன்மையும் சூடுங் கொழுமையுமாயிருக்க நேர்ந்து, மஹமூதா அல்லது சிவதைவேர் இதைப் போன்ற ஔஷதங்கள் கொடுக்கப்பட்டுச் சூடுங்கொழுமையுமான மாசுகள் நன்றாக வெளிப்பட்டு அதிகச் சுகுணமுண்டாயிருக்கும். ஆனால்,இன்னொரு சமயத்தில் அந்த மனிதனுடைய சுபாவமே சூடும் வரட்சியுமாக மாறி, அக்காலத்தின் கொடுமையானது திடீரென வரட்சியை யுண்டாக்க நேர்ந்து, முன் சாப்பிட்ட ம ஹ்மூதாவை அல்லது சிவதைவேரைச் சாப்பிட, அபாரக் கெடுதியை விளைத்திருக்கும் என்பதே, காலபேத நிமித்தமாக பேதிக்குச் சாப்பிட்டு மரணம் சம்பவித்ததுமுண்டு. இதன் உண்மை விஷபேதி வியாபித்திருக்குங் காலத்தில் பெரும்பாலும் விளங்கும்.

காலமானது வரட்சியாயின் சுகஸ்தியிலுள்ளவர்களின் இருதய பலத்தைக் காப்பாற்ற குளிர்ச்சியான ஷர்பத்துகளையும் சந்தோஷத்தை யுண்டாக்கும் ஷர்பத்துகளையும் உபயோகிக்கவும். கஷ்டமான வேலைகளை யொழித்து அமைதியாகவும் இருக்க வேண்டும். அதற்கு விரோதமாக சூடான பேதி மருந்தைச் சாப்பிட தேகபலத்தைக் குறைத்துக் கெடுதியை விளைவித்து அபாயத்தையுமுண்டாக்கும். ஆகையால், இருதயத்திற்கும் மூளைக்கும் பலத்தைக் கொடுக்கத்தக்க ஔஷதங்களையும், வாசனைத் திரவியங்களையும், இரைப்பையைப் பலப்பிக்கும் ஔஷதங்களையும் . இரைப்பையின் கழுத்திற்குண்டாகும் கெடுதிகளைத் தடுக்கும் ஔஷதங்களையும் சேர்க்க வேண்டியது அவையாவன: ரோஜாப்பூ, றூமிமஸ்தகி, பெருஞ்சீரகம், பொதினா, சுக்கு,சடாமாஞ்சி முதலியவைகளாம். ஒரு நாளில் இரண்டு தடவை பேதிக்கு வாங்கலாகாது; ஏனெனில் நரம்புகள் துர்ப்பலப்பட்டு; அவற்றின் மார்க்கம் தடைப்படும் பலவகைக் கெடுதிகளுக்கும் மூலமாம். சிலருக்கு வீக்கமு முண்டாகும்.

வியாதியின் மும்முரமான காலத்தில் பேதிக்குச் சாப்பிடுவது அவசியமானால், பேதியாவதுடன் அவ்வியாதியின் தீக்ஷண்யத்தைத் தணிக்கும்படியானதாகவும் இருக்க வேண்டும். எப்படியெனில், பித்தசுரம் விஷசுரம் இவற்றின் மும்முரமான காலங்களில் ஆலுபுகாரா ஊறற்கிஷாயம் சாப்பிட, மலம் போவதுடன் தேகத்தின் சூட்டையும் தணிக்கும்.

மூளையிலிருக்கப்பட்ட மாசை வெளிப்படுத்த வேண்டுமானால், பேதிமருந்தைப் பருமனான மாத்திரைகளாகச் செய்யவேண்டும். ஏனெனில், அவைஇரைப்பையில் உடனே ஜீரணமாகாது. கொஞ்சநேரம்

தங்கி நிற்குமாகையால், அதன் சக்தி மூளைவரையும் எட்டி மாசுகளை வெளிப்படுத்த உதவியாகும்.

தேகத்துச் சுற்றுப்பக்கங்களில் மாசுகள் இருக்குமானால் மாத்திரைகள் அதிகச்சிறிதாக இருக்கவேண்டும். ஏனெனில் அவை உடனே ஜீரணித்துக் தேகம் எங்கும் பரவி அவற்றை வெளிப்படுத்திக் போக்க உதவும்.

மாசுகளை முன்னர் பாகப்படுத்தியே வெளிப்படுத்த பேதிக்கு வாங்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால்,பெரும்பாலும் கெடுதிக்கே இடமாம்.பேதியான போதிலும் அதிக குணத்தைத் தராது ஏனெனில், அபக்குவமாசுகள் இயக்கப்பட்டால் தேகமெங்கும் பரவும். அவற்றுடன் வேறு அபக்குவமாசுகளும் சேர்ந்து தேகத்தில் தங்கியிருந்து பின்னர் வியாதியை அதிகப்படுத்தும்.

இன்னும் அம்மருந்தானது, தான் வெளிப்படுத்தக்கூடிய மாசுகளை நீக்கி அபக்குவமானதை விட்டுவிடுமாகையால், வியாதி அதிகரிக்க இடமாம், சிரசிலுள்ள மாசுகளை வெகுஜாக்கிரதையாக வெளிப்படுத்த வேண்டும். முக்கியமாக பூர்வரோகங்களில் முன்னினும் அதிகம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

மலபேதி இன்னார்க்கு ஆகும் ஆகாதெனல்

பலக்குறைவுள்ளவர்கள், நிறைந்த இரத்தவிர்த்தி யுள்ளவர்கள், குழந்தைகள், வயது முதிர்ந்தவர்கள்,இருதய துற்பலமுள்ளவர்கள், இரைப்பை துற்பலமுள்ளவர்கள், தசை குறைந்த வயிறுள்ளவர்கள், சுகஸ்திதியிலிருப்பவர்கள், குடல் துற்பலமுள்ளவர்கள். திக்கு நாவுடையவர்கள் ஆகிய இவர்களுக்கு மலபேதிக்குக் கொடுக்கலாகாது. மற்றவர்களுக்கு அவசியமானால் ஆகும்.

கடுங்கோடை காலத்திலும் கடுங்குளிர் காலத்திலும் அபாயம் நேரிடுவதா யிருந்தாலொழிய ஒருவரும் சாப்பிடலாகாது.

பலக்குறைவா யிருக்கும்போது பேதிக்கு வாங்கினால் முன்னிலும் அதிகம் பலம் குறைந்து கெடுதிக்கு இடமுண்டாம்.

இரத்தம் நிறைந்திருக்கும்போது பேதிக்கு வாங்கும் மருந்தினால் யாதொரு பிரயோஜனமும் உண்டாக மாட்டாது.

குழந்தைகள் வளர்பருவ முள்ளவர்களாகையால், மாசுகளை வெளிப்படுத்தல் அப்பொழுது அவசியமல்ல; ஒருக்கால் அவசியம் நேருமானால், பழவர்க்கங்களினால் நீக்க முயலவேண்டும் .

முதிர்ந்தவர்கள் பேதிக்கு வாங்குவதனால் கொழுமையும் சூடும் அளவில் அதிகம் குறையும். ஆனால் அவர்கள் கொழுமையையும் சூட்டையும் குறைக்காமல் பாதுகாக்க வேண்டும். அவசியமானால், அதி ஜாக்கிரதையுடன் வாங்க வேண்டும்.

இருதயம் துர்ப்பலப்பட்டவர்களுக்கு மயக்கம் முதலியவை யுண்டாம்.

இரைப்பை துர்ப்பலப்பட்டவர்களின் இரைப்பை பேதிமருந்தை ஏற்றுக்கொள்ளாது. ஒருவேளை ஏற்றுக்கொண்ட போதிலும் மயக்கம் முதலியவற்றை யுண்டாக்கும்.

தசைகுறைந்த வயிறுள்ளவர்கள் பேதிக்கு வாங்குவது நல்லதல்ல. ஏனெனில், பெரும்பாலும் அவர்கள் துர்ப்பல சுபாவமுள்ளவர்களா யிருப்பார்கள்.

சுகஸ்திதியி லுள்ளவர்களுக்கு அசுத்தமாசுகள் இல்லாமையால் சுத்தமாசுகள் வெளிப்படும். அதனாலும் பெருங்கெடுதி சம்பவிக்கும்.

சிறுகுடல் துர்ப்பலப்பட்டவர்கள் பேதிக்கு வாங்குவதனால் பெரும்பாலும் எம்மருந்திலும் தீராமல் போக்கு வியாதி யுண்டாகும்.

ஸ என்று சொல்லக்கூடாத திக்கு நாவுள்ளவர்கள் பேதிக்கு வாங்கக்கூடாது. ஏனெனில், இவர்கள் நாவுடன் சம்பந்தப்பட்ட நரம்புகள் அதிகொழுமையாகவும் மிருதுவாகவுமிருக்கும். ஆகையால், ஒருவேளை ஒன்றிலுந் தீராத போக்கு வியாதிக்கு இடமுண்டாம்.

கடுங்கோடை காலத்தில் துர்ப்பலம் அதிகப்படும்; இதன் விவரம் முன்னர் எழுதப்பட்டிருக்கிறது.

கடுங்குளிர் காலத்தில் மாசுகள் உறைந்திருக்குமாகையால், மருந்தின் குணம் வெளிப்படாது; அல்லது அளவில் அதிகமாய்க் கொடுக்க நேரிட்டுக் கெடுதிக்கு இடமாம்.

பேதிக்கு வாங்கு முன்னும் பின்னும் கவனிக்க வேண்டிய விஷயங்கள்

பேதிமருந்து சாப்பிடுமுன்னும் பத்தியமா யிருக்க வேண்டியது அவசியம் அசுத்தமாசுகளை விளைவிக்கும் ஆகாரங்கள், பானாதிகள் ஆகியவைகளைத் தவிர்க்க வேண்டும். இரைப்பை, ஈரல், சிறுகுடல் ஆகியவைகளுக்கு ஆகாவஸ்துக்களையும், இருதயத்தின் பலத்தைக் குறைக்கும் வஸ்துக்களையும் புசிக்கலாகாது. உபவாசவிரதமா யிருத்தல், பட்டினியா யிருத்தல், துன்பப்படுதல், ஸ்திரீ சங்கமம் முதலியவை போன்ற பலத்தைக் குறைக்கும் கிரியைகளையும், தேகசுபாவத்தை

மாற்றும் கிரியைகளையும் தவிர்க்க வேண்டும். மாசுகளைப் பாகப்படுத்தும்படியான வைகளும், சத்துகள் வெளிப்படத் தடையாகாது நரம்புகளின் துவாரங்களை விசாலமாக்கும் படியானவைகளும் வறட்சி, சிக்கல் முதலியவற்றை நீக்கும்படியானவைகளும், இரைப்பையைத் துர்ப்பலப்படுத்தா தவைகளும் ஆகிய வஸ்துக்களையே சாப்பிடவேண்டும்.

இவ்விஷயங்களைக் கவனிக்காவிட்டால் வயிற்றுளைச்சல், சீதபேதி, பெருந்தாகம், மயக்கம், அரோசிகம், தலை சுழற்சி முதலிய வியாதிகளுக்கிடமாகி நாடி துர்ப்பலப்பட்டுத் தேகாரோக்கியம் கெடும். இரைப்பை, ஈரல் இவை வெறுமையாய் ஆகாரமெல்லாம் ஜீரணமாகிப் பசியாரம்பமாகும் தருணமே பேதிக்கு வாங்க ஏற்ற சமயம். அப்படிக்கின்றி, வயிறு நிறைந்திருக்கும்போதும் பசியாயிருக்கும் போதும் பேதிக்கு வாங்கினால், ஏதேனும் ஒரு கெடுதி சம்பவிக்கும் என்பது நிச்சயம்.

இரைப்பை துற்பலப்பட்டிருக்கிறவர்களுக்கும், சூடான தேகிகளுக்கும் பேதிக்குக் கொடுக்குமுன், ரவைக்கோதுமைக் கஞ்சியில் அல்லது இனிப்பு மாதுளம்பழ ரசத்தில் கொஞ்சம் சீனிசருக்கரை கலந்த பானம் கொடுக்கலாம். பேதிக்குச் சாப்பிட்டபின் மருந்தின் வெகுட்டல்போகும் வரையில் இரைப்பையையும் பாதங்களையும் சற்றுச் சூடாகவைத்திருக்க வேண்டியது, இதற்காக அந்த ஸ்தானங்களில் துணியை அல்லது கம்பளியைச் சுற்றிவைப்பதே போதுமானது. பேதிக்குச் சாப்பிட்டபின், அம்மருந்து இயங்கும்படி குறுநடை கொள்ள வேண்டும். சில சமயம் வெந்நீர் சிறுகச் சிறுகக் குடிக்கவும் வேண்டும், அதிகம் சாப்பிட்டால் மருந்தின் வேகம் தணிந்துபோம்.

பேதிமருந்தானது மாத்திரைகளானால் வெந்நீர் அவசியம் குடிக்கவேண்டும். ஏனெனில், அது மாத்திரைகளை இரைப்பையில் இறக்கி அவற்றின் குணத்தைச் சீக்கிரத்தில் வெளிப்படுத்தும். பேதிக்குச் சாப்பிட்டு அதிக நேரமாகியும் அதன் குணம் வெளியாகாமல் இருக்கும்பொழுதும் வெந்நீர்குடிப்பதனால் அவசியம் அதன் குணம் வெளிப்படும். பேதிக்குச் சாப்பிட்டு அதன் குணமெல்லாம் வெளியானபின்பும் வெந்நீர் குடிப்பதனால் மருந்தின்வேகம் தணிவதுமன்றி, இரைப்பை, குடல்கள் ஆகியவற்றிலுள்ள மீதிச்சத்துகளும் வெளிப்படும்.

பேதிமருந்தானது கிஷாயமானால், வெந்நீர் குடிக்கலாகாது; ஏனெனில், அக்கிஷாயத்தை அதிகநீர்த்தன்மையதாக்கி, அதன்குணத்தை முறித்து, நரம்புகளில் தீவிரமாகப் பரவச் செய்யு மாகையால், அதன் குணம் செம்மையாக வெளியாகாது.

பேதிமருந்து சாப்பிட்ட உடனே இயக்கலாகாது தேகத்தில் ஔஷதம் பொருந்தும் வரையில் சற்று நிதானித்தே இயக்கவேண்டும் அப்படித் தேகத்தில் ஔஷதம் தங்கி நின்றதனால்தான் சூட்டையுண்டாக்கிக் குணத்தை வெளிப்படுத்தும். சரக்கொன்றைப்புளி, பனப்ஷாபூ, தாமரைப்பூ முதலியவை போன்ற நுண்ணியவற்றைச் சாப்பிட்டால் அதிக மெதுவா யியக்க வேண்டும் அப்படிச் செய்வதனால் அவை சற்றுநேரம் இரைப்பையில் தங்கி நின்று, அவற்றில் குணத்தை நன்றாகக் காண்பிக்கும். பேதிமருந்து, பலமானதா யிருந்தால் உடனே செய்யும் இயக்கம் அதற்கு உதவியாகுமாகையால், அசுத்தமாசுகள் நன்றாக வெளிப்படக்கூடும்.

பலமான ஔஷதத்திற்கு இயக்கமில்லாவிடில், அதன் குணம் அதிகம் வெளிப்படமாட்டாது. நித்திரையானது மருந்தின் வேகத்தை முறிக்குமாகையால், நித்திரைசெய்யக் கூடாது.பேதி தாராளமாக ஆகாதவரையில் அன்ன பானாதிகள் ஆகா; அதனால் இரைப்பை சூடாகி, அதில் பித்த நீர் விழுந்து அபாயம் நேரிடுமெனத் தோன்றினாலும், உபவாசம், விரதம் ஆகியவை அதிகம் செய்தவனாயிருந்தாலும், மருந்தின் குணத்தைக் காண்பிக்காததற்கு முன்னரே திராக்ஷாபானத்தில் நனைத்த சில ரொட்டித் துண்டுகளைக் கொடுக்கலாம். அதனால் மருந்தின் குணமும் கெடாது; தேகபலமும் குறையாது. பேதிக்குச் சாப்பிடுகிறவன் அன்னபானாதிகளில் உப்பை அதிகம் உபயோகிக்கலாகாது. பேதிமருந்து சாப்பிட்டு பேதியாகாமல் குடலில் இரைச்சலிருப்பது, இரைப்பையின் துர்ப்பலக் குறியென நிதானித்து மாதுளம்பழ ஷர்பத்து, குல்கந்து முதலிய மருந்துகளைச் சாப்பிடுவதனால் இரைப்பை பலப்பட்டு மாசுகளை நன்றாக வெளிப்படுத்தும். பேதியானபின் துர்ப்பலத்தை யுண்டு பண்ணும் கிரியைகளாகிய கஷ்டவேலை, மனோவிசனம் முதலியவை ஆகா. கட்டாயம் ஸ்திரீசம்பந்தத்தைத் தவிர்க்க வேண்டும், இப்படியே மதுபானாதிகளும், மஸ்துள்ளவைகளும் அறவே நீக்கப்பட வேண்டும். அதிகத்தித்திப்பு, அதிகப் புளிப்பு, அதிக உறைப்பு, அதிகக் குளிர்ச்சி ஆகியவற்றைச் சாப்பிடலாகாது.

பேதியானபின் தேகத்தை அமைதியாக வைக்கவேண்டும். சாப்பிடுவது நல்ல ஆகாரமாகவும் கொஞ்சமாகவும் இருக்கவேண்டும். சூடும், பித்தமும் அதிகரித்த தேகமாயிருந்தால், குளிர்ச்சியான பேதிமருந்தில் இஸ்பகோல் கோழைநீரைச் சேர்த்துக் கொடுக்கலாம். பேதியானபின் ரவைக்கோதுமைக் கஞ்சியும் கொடுக்கலாம். பேதிக்குச் சாப்பிட்டபின் குடற்களில் அழற்சி தங்கியிருந்தால், பூங்காவியை மாதுளம்பழ ரசத்திற் கலந்து கொடுக்க சுவஸ்தமாம்.

பேதி மருந்து சாப்பிடும் விதம்

குளிர்ச்சியான காலங்களில் கிஷாயமானால் இளஞ்சூடாகச் சாப்பிடவேண்டும். சாப்பிடுபவன் தேகசுபாவமும் குளிர்ச்சியானால் மேற்கண்ட விதமாகவே சாப்பிடவேண்டும் பேதிமருந்து மாத்திரையாயின், சுடவைத்த பன்னீரில் அல்லது வெந்நீரில் கரைத்துச் சாப்பிடவேண்டும். அல்லது மாத்திரைகளைச் சாப்பிட்டு அதன்மேல் மேற்கண்ட இரண்டிலொன்றைக் குடிக்கவேண்டும் பித்தத்தை வெளிப்படுத்தத் தரா இலைக் கிஷாயத்திலும்,வண்டலை வெளிப்படுத்த அப்திமூன் அல்லது சிவதைவேர்க் கிஷாயத்திலும், கபத்தை வெளிப்படுத்த ஸூரிஞ்சான் அல்லது சுக்குக் கிஷாயத்திலும் மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும்.

பேதிக்குச் சாப்பிடுபவர்களின் பலத்தைப் பாதுகாக்க. வெளிப்படுத்த வேண்டிய மாசுகள் அதிகரித்திருந்து பலவீனர்களாயிருக்கும்போது ஒரே காலத்தில் வெளிப்படுத்தும் பேதிமருந்தைக் கொடுக்காமல், பலதடவையாக வெளிப்பட நல்லமருந்தாகவும், லகுவானதாகவும் பார்த்துக் கொடுக்க வேண்டும்.

ஒருதடவை சாப்பிட்டபின்னும் மறு தடவை சாப்பிடு முன்னும் உள்ள இடைநாட்களில் நல்ல ஆகாரங்களாகவும், சீக்கிரம் ஜீரணிக்கத் தக்கவையாகவும் சாப்பிட வேண்டும். இப்படிச் செய்வதனால் முன்னர் கழிந்துபோன மாசுகளுக்குப் பதிலாகச் சுத்தசத்துகள் உண்டாம். அசுத்த மாசுகளதிகரித்துத் தேகம் பலத்திருந்தாலும் பலமான பேதிமருந்து பலதடவையாகக் கொடுத்து, அவற்றை நீக்கவேண்டியதே கிரமம். அசுத்த மாசு குறைந்தும் தேகம் துர்ப்பலப்பட்டிருந்தால், ஷர்பத்துகளினாலும் ஊறற் கிஷாயங்களினாலும் நீக்க முயலவேண்டும். பலமான ஔஷதங்கள் உபயோகிப்பது உசிதமல்ல.

பேதிக்குச் சாப்பிடுங்காலம்

வேனிற்காலமும் இலையுதிர் காலமுமே பேதிக்குச் சாப்பிட ஏற்றவை. ஏனெனில், வேனிற்காலத்திற்குப்பின் கோடைகால மாகையால் தேகத்திலுள்ள மாசுகள் வெளிப்பக்கம் நோக்க முடையவையா யிருப்பதுடன் அக்காலத்தின் தன்மையினால் மாசுகள் இளகி வியர்வை வழியாக வெளிப்படும். ஆகையால், இக்காலங்கள் லகுபேதிக்குத் தக்கவை. இன்னும் வியர்வையுண்டாக்கும் ஔஷதங்களினாலும், உஷ்ண ஸ்நானங்களினாலும், அத்தன்மையை ஔஷதங்களின் சிகிச்சையினாலும் நிவர்த்திக்க முயல வேண்டும். இலையுதிர் காலத்திற்குப்பின் குளிர்க்காலமாகையால், மாசுகள் உள்ளடங்கி, வெளிவராது தங்கிநிற்கும். இதனால் அனேகர் வாதரோக முதலிய நோய்களுக்குட்பட ஏதுவாயிருப்பார்களாகையால், பேதிக்குச் சாப்பிட இக்காலமும் ஏற்றதே.

ஸௌகுமார தேகிகளுக்கும், அதிகக்கஷ்டத்துடன் பேதிக்குச் சாப்பிடுகிறவர்களுக்கும் கொடுக்கும் வகை

பிரியமின்றி அதிகக் கஷ்டத்துடன் பேதிக்குச் சாப்பிடும் சுபாவமுள்ளவர்களுக்கு, முன்னர் ஆகாரப் பக்குவங்களின் வழியாகவே மாசுகளை வெளிப்படுத்த முயல வேண்டும். இதனால் சாத்தியப் படாவிட்டால், மேற்பூச்சான ஔஷதங்கள், பேதித்திரிகள் முதலியவற்றால் வெளிப்படுத்த வேண்டியது. இதனாலும் காரியம்பலிக்காது, பேதி மருந்தே கொடுப்பது அவசியமென்று தீர்மானிக்கப்பட்டால், முன்னர் பஞ்சை அத்தரில் நனைத்து நாக்கில் வைத்து லவங்கம், கோஷ்டம் முதலியவை போன்ற விறுவிறுப்புள்ள வஸ்துக்களை மெல்லச் செய்து நாவின் உணர்ச்சியை மாற்றி, பேதிமருந்தின் ருசி தெரியாது செய்து கொடுக்க வேண்டும்.மருந்து சாப்பிட்டபின் பொதினா, கரபஸ் ஓமம், பிளப்புச் சீரகம் இவை போன்றவைகளில் ஒன்றை மெல்லச் செய்து, ரோஜாப்பூ, மல்லிகைப்பூ முதலிய சுகந்த வாசனையுள்ள புஷ்பங்களில் பன்னீரை அல்லது காடியைத் தெளித்து முகரவும் செய்ய வேண்டியது. இவ்விதம் செய்வதனால் அருவருப்பு நீங்கிப்போம், ஒருவேளை நீங்காவிட்டால், இரண்டு புஜங்களையும் பட்டை நாடா அல்லது அதுபோன்ற வஸ்துவினால் சற்று இறுக்கிக் கட்டுவதினால் நீங்கிவிடும். தேனை அல்லது சீனிசருக்கரையை இறுகலான பாகஞ்செய்து மாத்திரைகளை அதற்குள் வைத்துப்பொதிந்து வாயில் தண்ணீரையடக்கி மாத்திரைகளைப் போட்டு விழுங்கப் பண்ணவேண்டும். இதுவும் கஷ்டமாயின், சுத்திசெய்த மஹ்முதாவைத் தயிர் நீரிற்கரைத்துத் தேகத்திற்குத் தக்க அளவு கொடுக்க உஷ்ணந்தணிந்து நன்றாக பேதியாகும்.மாதுளம்பழ ரசத்தில், அல்லது பேரீச்சங்காய் ஊறவைத்த ஜலத்தில் மஹ்முதாவைக் கரைத்துக் கொடுப்பதனாலும் நன்றாகப் பேதியாம். இவ்வகைப் பானங்களில் பிரியமில்லாது மாத்திரைகளில் பிரியம் உண்டானால், சுத்திசெய்த மஹ்முதா ஒரு பங்கு. தரஞ்சபீன் அல்லது சீனிசருக்கரை மூன்று பங்கு,இவ்விரண்டையும் சுத்தமான கல்வத்திலிட்டுச் சிறுக ஜலம் வார்த்து மெதுவாக நன்றாயரைத்துச் சிறுமாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திச் சாப்பிடக் கொடுக்க வேண்டும். இனிப்பில் பிரிய மில்லாதவர்களுக்குச் சீமை யிலந்தை (Apple) ரசத்தில் அல்லது புளித்தெளி நீரில் நனைத்து மாத்திரைகளாகச் செய்து கொடுக்கவேண்டும். சுகுமார தேகிகளுக்குக் கடுக்ககாய்ச்சத்து மிகவும் ஏற்றது.

கடுக்காய்ச்சத்து

பருமனான மஞ்சட்கடுக்காய் நூறு, இவற்றையுடைத்து உள்விதைகளை நீக்கி ஒரு வாயகன்ற ஜாடியிற் போட்டு ஒன்றிரண்டுபடி நீர்வார்த்து ஊற வைத்து நீரில் கடுக்காயின் வர்ணம் வந்தபின் வடித்துக் கொள்ள வேண்டும். பிரியமானால் இன்னொரு தடவை அந்தச் சக்கையில் ஜலம்வார்த்து முன்போற் செய்துகொள்ளலாம்.ஜலத்தையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒருபீங்கான் பாத்திரத்தில் விட்டுத் தூசி, மண் முதலியவை விழாமல் மெல்லிய வஸ்திரத்துண்டினால் வேடுகட்டி வெய்யிலில்வைத்து நாள் தோறும் நன்றாகக் கலக்கிவர, குழம்பாகி யுலர்ந்து கரியபோளத்தைப் போலாகும். இதில் விராகனெடை இரண்டரையைத் தக்கவிதமாக மாத்திரைசெய்து சாப்பிட நன்றாக பேதியாகும். இச்சத்து பலமானதாக வேண்டுமானால் கொஞ்சம், சுத்திசெய்த மஹ்மூதாவைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சீமைச்சிவதை வேர்ச்சத்து

முன்கடுக்காயைச் செய்ததுபோலவே இதனையும் செய்து கொள்ளவேண்டும். இந்தச்சத்து மஹ்மூதாவின் குணத்தை அடுத்தது. இதனைத் தேகத்திற்குத் தக்க அளவாயெடுத்துச் சீனிசருக்கரையுடன் சேர்த்துக் கொடுக்க ருசி, வாசனை ஆகியவைகள் தெரியாமல் சாப்பிட இதமாயிருக்கும். நன்றாக பேதியுமாம். இதுவும் மேற்கண்டவர்களுக்கு அனுகூலமானது.

கலிங்கச் சத்து

ஆற்றுத்தும்மட்டிக்காய் ரசத்தை மேற்கண்ட விதமாக வெய்யிலில் வைத்துலர்த்தின சத்துடன் மேல்தோல் நீக்கின வாதுமைப்பருப்பு, வாதுமைப்பிசின் ஆகியவற்றைச்சேர்த்து மாத்திரைகளாகச் செய்து தேகத்திற்குத் தக்க அளவாக அனேகருக்குக் கொடுத்து மருந்தின் அருவருப்பு அதன் ருசி முதலியவை தோன்றாமல் சாப்பிட இதமாயிருந்து நன்றாக பேதியாயிருக்கின்றது. இம்முறையினால் சிரசிலும் கண்ணிலும், உள்ள வியாதிகள் குணப்பட்டிருக்கின்றன.

அப்திமூன், பஸ்பாயிஜ், கடுக்காய்கள் இவற்றின் சத்து

இவற்றையும் கடுக்காய்ச் சத்துப்போலவே செய்து ஆகாரங்களுடன் சேர்த்து ஔஷத வித்தியாசமின்றிக் கொடுக்கலாம்.

சுத்திசெய்த மஹ்மூதாவையும் ரவைக்கோதுமைக் கஞ்சியிற் கலந்து கொடுக்கலாம். ஆயினும்,மஹ்மூதாவை அடிக்கடி கொடுப்பது நல்லதல்ல பேதி மருந்தினங்களெல்லாம் முக்கியமாய் இரைப்பையில் தங்கிநின்றே தேகத்திலுள்ள மாசுகளை யிழுத்து வெளிப்படுத்தும். மஹ்மூதாவோ இரைப்பையில் அப்படி அதிக நேரம் தங்காது வெகுசீக்கிரம் பேதியாய்விடும். அதிக நேரம் இரைப்பையில் தங்கிநிற்கும் மருந்தினால் தான் அருவருப்பு முதலிய துர்குணங்கள் உண்டாகின்றன.

மஹ்மூதா அதிகநேரம் இரைப்பையில் தங்காததனால் சுரவியாதிக்காரர்களுக்கும் மஹ்மூதாவைப் பேதிக்குக்கொடுக்கலாம். பசிதீபனக் குறைவுடன் இரைப்பை துர்ப் பலப்பட்டவர்களுக்குப் பேரிக்காய் ரசத்திலும், ஈரற்சூடுள்ளவர்களுக்குத் தயிர் நீரிலும்,காமாலை நோயாளிகளுக்குப் பால்நீரிலும் மஹ்மூதாவைப் பேதிக்குக் கொடுக்கலாம். பேதி மருந்து சாப்பிட்டு அதனால் அதிக அருவருப்பிருந்தால் மாதுளம்பழம், சேப்புப்பழம் இவற்றில் ஒன்றின் ஷர்பத்தில் கொஞ்சம் சாப்பிடக் கொடுக்கலாம். மஹ்மூதாவின் துர்க்குணம் பசிதீபனத்தைக் குறைத்தல், ஈரலை உஷ்ணப்படுத்தல் ஆகியவையாம். பேரிக்காய் ஷர்பத்தில் மஹ்மூதாவைக் கரைத்துச் சாப்பிட மேற்கண்ட இரண்டு துற்குணங்களும் நீங்கும்.

சுத்திசெய்த சீமைச் சிவதைவேர் 4- 6 கிராம் நைய நறுக்கி 3/8 படி ஜலத்திலிட்டு, அரைப்பாகமாகச் சுண்டக்காய்ச்சி வடித்து அதில் அஞ்சுகுன்றியெடை மஹ்மூதாவைக்கரைத்துச் சேப்புப் பழத்தைச் சிறுகீற்றுகளாகத் துண்டித்து அதிற்போட்டு ஓரிரவு வைத்து மறுநாட்காலையில் சேப்புப்பழத் துண்டுகளை நீக்கிச் சாப்பிட லகுவான பித்தநீர் வெளிப்படும்.

இராஜபேதி

மஹ்மூதா 4 கிராம், வெள்ளரி விதைப்பருப்பு, சுரைவிதைப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 20 கிராம் அதிமதுரப்பால் 35 கிராம், தரஞ்சபீன் அல்லது சீனிசருக்கரை 70 கிராம்.

செய்முறை- பருப்பினங்களை நன்றாக நையநறுக்கி அவற்றுடன் மஹ்மூதா, அதிமதுரப்பால் இவ்விரண்டையும் சேர்த்து நன்றாயரைத்து, தரஞ்சபீனை அல்லது சீனி சருக்கரையைப் பாகுசெய்து பதத்தில் மேற்படி கலவையைச் சேர்த்து நன்றாக மிஸ்ரமித்து வைத்துக் கொள்ள வேண்டியது.

மாத்திரை - இலகுபேதிக்கு 10 - 15 கிராம், சமரச பேதிக்கு 20 - 30 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - அசுத்த மாசுகளை நன்றாய் வெளிப்படுத்தும். தேகத்தில் சூட்டையுண்டாக்காது, பசிதீபனத்தை மந்தப்படுத்தாது.

வேறு

ரோஜாப்பூவிதழ் 20 கிராம், வாதுமைப்பிசின், அதிமதுரப்பால், நிஷாஸ்தா இவை வகை ஒன்றுக்கு 4 கிராம் சுத்திசெய்த சீமைச்சிவதை வேர்ச்சூரணம் நாற்பது கிராம், இடித்துவடித்த சந்தனத்தூள், பச்சைக் கர்ப்பூரம் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், சுத்திசெய்த மஹ்மூதா 15 கிராம்.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பன்னீர் விட்டரைத்து மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ள வேண்டியது.

மாத்திரை - 3-4-5 கிராம் சாப்பிடலாம்

உபயோகம் - இரத்தக் கொதிப்பால் உண்டான சுரம், பித்தசுரம் முதலிய சூடான வியாதிகளிலும் இதைக் கொடுத்துப் பேதியாகச் செய்யலாம். சூட்டுடம்பிற்கு மிகவும் ஏற்றது.

வேறு

ரோஜாப்பூச் சூரணம், மூங்கிலுப்புச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு எட்டு கிராம், காம்பு, முள்ளு முதலியவை நீக்கின ஜரிஷ்க் 32 கிராம், சுத்திசெய்த மஹமூதா 4 கிராம், பச்சைக் கர்ப்பூரம் 2 கிராம்.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்து நான்கு மாத்திரைகளாகச் செய்துலர்த்திக்கொள்ள வேண்டியது.

மாத்திரை - 1 சாப்பிடலாம்.

உபயோகம் - மேற்கண்ட நோயனைத்தும் போம்.

பேதி ஜவாரிஷ்

சேப்புப்பழ ரசம் பலம் அஞ்சை ஒரு பாத்திரத்தில்விட்டு மெதுவா யெரித்துச் சுண்டக்காய்ச்சி, தடித்த பதத்தில்சுத்தி செய்த சீமைச்சிவதை வேர்ச்சூரணம் 6 கிராம், சுத்திசெய்த மஹ்மூதா, றூமிமஸ்தகி, அகருகட்டை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 2 கிராம், இச்சூரணங்களை யெல்லாம்ஒன்றாகச் சேர்த்து மேற்படி பாகிற்போட்டு நன்றாக மிஸ்ரமித்து ஜவாரிஷ் பாகப்படி செய்துகொள்ள வேண்டியது.

மாத்திரை- 4 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - நன்றாக பேதியாம், இரைப்பைக்குப் பலத்தைக் கொடுக்கும்.

பக்ஷண பேதி

தரஞ்சபீன் 370 கிராம், இது அகப்படாவிட்டால் மேனா 90 கிராம், நாட்டுச்சருக்கரை 90 கிராம், சுத்திசெய்த மஹ்மூதா ஆறு கிராம், முட்டை வெள்ளைக்கரு ஒன்று அல்லது இரண்டு.

செய்முறை - தரஞ்சபீனானால் அதைக் கரைத்து வடித்துச் சக்கைபோக்கிப் பாகுசெய்ய வேண்டும். மேனா அல்லது சருக்கரையானாலும் அப்படிச் செய்து கொள்வதே உத்தமம். பாகுபதத்தில் மஹ்மூதாவைத் தூள்செய்து சேர்த்து மெதுவாயெரிக்கலாம். பின்பு, முட்டை வெள்ளைக் கருவைச் சேர்த்து நன்றாக மிஸ்ரமித்துப் பத்திரப்படுத்த வேண்டியது. இரைப்பைத் துற்பலப்பட்டிருப்போர்க்கானால், பன்னீர் அல்லது சேப்புப்பழ ரசம் அல்லது பேரிக்காய் ஜலம் அல்லது புளித்தெளிநீர் இவற்றுள் ஒன்றைச் சேர்த்துப் பாகு செய்ய வேண்டும்.

மாத்திரை - ஜீரணசக்திக்கேற்ற அளவாக 35- 50 - 70 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - நன்றாகப் பேதியாகும்.

பேதிக்கு கொன்றைப்புளிப் பிரயோகம்

பனப்ஷா சூரணம் 8 கிராம், அதிமதுரப்பால் 4 கிராம், சரக்கொன்றைப்புளி 2 கிராம், இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்தரைத்து ஒரு மாத்திரையாகச் செய்துலர்த்தி, தக்க அனுபானங்களுடன் சாப்பிட வேண்டியது. சுகமாகப் பேதியாம்.

பேதிக்குஅமஸ்தாஸ் சட்னி

சரக்கொன்றைப் புளியைக்கரைத்து வடித்துச் சக்கை நீக்கிக் கொஞ்சம் சீனிசருக்கரைசேர்த்து மெதுவாயெரித்துக் காய்ச்சித் தேன்பதத்தில் கொஞ்சம் பனப்ஷா தூள் சேர்த்துக்கிளறி வைத்துக்கொள்ள வேண்டியது. 4-6 கிராம் சாப்பிட நல்ல சுகபேதியாம்.

வேறு

குசும்பாவிதைப் பருப்பு 16 கிராம், றூமிச்சோம்பு 2 கிராம், மேல்தோல் நீக்கின வாதுமைப்பருப்பு 16 கிராம், இவை யெல்லாவற்றையும் நையநறுக்கி யரைத்துத் தேன் விட்டுப் பிசைந்து ஒரே மாத்திரையாகச் செய்து சாப்பிட நன்றாகப் பேதியாம். இப்பாகம் சாப்பிட ருசியாயிருப்பது மன்றி, தேகசுகமும் கெடாது.

இராபேதி மாத்திரை

றூமிமஸ்தகிச் சூரணம் 4 கிராம், சீனிசருக்கரை 10 கிராம், இவ்விரண்டையும் அரைத்து ஒரு மாத்திரையாகச் செய்து படுக்கைக்குப் போகுமுன் சாப்பிட்டு அதன்மேல் கொஞ்சம் குளிர்ந்தநீர் குடித்து நித்திரைசெய்ய, காலையில் நன்றாகப் பேதியாம். இது இரைப்பைக்கு மிகவும்உபயோக முள்ளது.

இலகு பேதி

போஜனத்திற்கு முன் சீமையத்திப்பழம் நாலைந்து சாப்பிட்டால் சுகமான இலகுபேதியாம்.

வேறு

அரை வேக்காடான முட்டையை வெறும்வயிற்றிற் சாப்பிட இலகு பேதியாம்.

மருந்து சாப்பிட்டு பேதியாகும்போது நிறுத்தும் வகை

பேதிமருந்தானது, தன் குணத்தை யெல்லாம் செவ்வையாகக் காட்டித் தாராளமாக மலம் இறங்கின பின்பு தாகம் கண்டால், அப்போது பேதியை நிறுத்த வேண்டும் என்னும் அறிகுறியாம். மருந்து தன்வேகத்தை அதிகம் காட்டியும் மலம் அதிகம் போகாமலிருந்து தாகம் காணாதிருந்தால், பேதியை நிறுத்தவும் பயப்படவும் வேண்டியதில்லை.

மருந்து சாப்பிட்டவுடன் சிலருக்குத் தாகம் காண்பது முண்டு. அவ்விதச் சுபாவிகளுக்கு இரைப்பையும், ஈரலும் வரண்டிருக்கும், சிலருக்கு மருந்தின் தீக்ஷண்யத்தினாலும் தாகம் எடுப்பதுமுண்டு. சிலருக்குப் பித்தநீர் இயக்கப்படுவதனாலும் தாகம் எடுப்பதுமுண்டு. ஆகையால், இவ்வகைகளை நன்றாக நிதானித்தறிய வேண்டியது.

ஆனால், தாகம் அதிகரித்து மலமும் அதிகமாகப் போய்க்கொண்டிருந்தால் தாகத்திற்குக் காரணம் மலம் போவதேயென்று உடனே அதனைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நாம் குறித்தசத்து வெளிப்பட்டபின்பு வேறுசத்து வெளிப்பட ஆரம்பித்தால், உடனே பேதியை நிறுத்தமுயல வேண்டும். உதாரணமாக, பித்தச்சத்தை வெளிப்படுத்த பேதிக்குச் சாப்பிட்டு அது நன்றாக வெளிப்பட்டபின்பு, கபசத்து வெளிப்பட ஆரம்பித்தால் உடனே பேதியை நிறுத்த வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், அளவில்

அதிகமாகப் பலங்குறைந்து கெடுதிக்கிடமாம். பித்தநீரையும் கபநீரையும் வெளிப்படுத்த பேதிக்குச் சாப்பிட்டு அவை வெளிப்பட்டபின், வண்டற்சத்து வெளிப்பட ஆரம்பித்தால், உடனே அதை நிறுத்தவேண்டும் அப்படிச் செய்யாவிட்டால், அதனாலும் கெடுதியுண்டாம்.

குறித்தசத்து வெளிப்பட அதற்குரிய ஔஷதம் சாப்பிட்டு அவ்விதமே அச்சத்து வெளிப்பட்ட பின்பும், அம்மருந்தில் வேகம் இருக்குமானால், அதிகத்தெளிவாயிருக்கும் வேறுசத்தையும் வெளிப்படுத்த முயலும். உதாரணமாக, வண்டற்சத்தை வெளிப்படுத்த அவ்வகை மருந்தைச் சாப்பிட, முன்னமே வண்டலை வெளிப்படுத்தி, பின்பு பித்தத்தையும் அதன் பின்பு கபத்தையும் வெளிப்படுத்தும். பித்தசத்தை வெளிப்படுத்த அவ்வகை ஔஷதம் சாப்பிட, முன்னர் பித்தத்தையும், பின்பு கபத்தையும், பின்பு வண்டலையும் வெளிப்படுத்தும். இரத்தமானது வண்டலையும் கபத்தையும் பார்க்கிலுந் தெளிந்திருந்தாலும் அது வெளிப்படாமல் பாதுகாக்கும்படி தேகசுபாவம் கடவுளால் ஏற்பட்டிருக்கின்றது.

மருந்தின் சுபாவம் தேகத்தின் சுபாவக்குணத்தை மீறாது. ஏனெனில், இரத்தமானது தேகபோஷணைக்கு ஆதாரமாகவும், தேகம் நிலைபெற்றிருக்கவும் முக்கியமா யுள்ளது. ஒருக்கால் தேகசுபாவத்தை மருந்தின் வேகம்மீறி யதிகரித்தால், தேகம் துற்பலப்பட்டு, அபாயத்திற்குள்ளாம். ஆனதுபற்றியே பேதிக்குச் சாப்பிடுமுன், தேகபலத்தைத் திட்டமாக அறியவேண்டியது மிகவும் முக்கியம். மருந்து சாப்பிட்டு அதிகபேதி யாவதனால் தேகபலம் குறையுமாயின் உடனே பேதியை நிறுத்திவிட வேண்டியது அவசியம். பேதி யதிகமாயும் தேகபலம் குறையாதிருந்தால், பேதியைக் கட்ட முயலுவது அவசியம்.

மிதமிஞ்சின பேதியுடன் உண்டாம் துற்குணங்களின் பரிகாரம்

பேதிமருந்து சாப்பிட்டுத் தாராளமாக பேதியானபின் விக்கலெடுத்தால் இஸ்பகோல் விதையைத் தண்ணீரில் ஊறவைத்தெடுத்த கோழைநீரைக் குடிக்க வேண்டும் அல்லது அக்கோழைநீருடன் கொஞ்சம் ரோஜாப்பூ எண்ணெயும் கலந்து கொடுக்கலாம். கைகால்களில் துணியினால் அல்லது கச்சையினால் சுற்றிவைக்க வேண்டும். தும்மல் தரும் மருந்துகளை முகரச்செய்ய வேண்டும்.

பேதியானபின் எரிவந்தம் வெப்பம் முதலியவை யுண்டானால், இஸ்பகோல் கோழைநீர், பேதானா கோழை நீர் இவற்றில் ஒன்றுடன் ரோஜாப்பூ எண்ணெய் அல்லது வாதுமை நெய் அல்லது சுரைவிதை

யெண்ணெய் ஆகிய இவற்றில் ஒன்றைக் கலந்து நாழிகைக்கொருதரம் குடிக்கச் செய்ய வேண்டும்.

காக்கட்டான்விதைவேர் முதலியவற்றின் யோகத்தைச் சாப்பிட்டு ஏதேனும் துற்குணங்கள் கண்டால், முன்சொன்ன படியே இஸ்பகோல் கோழைநீர், பேதானா கோழைநீர் ஆகிய இவற்றில் ஒன்றை அடிக்கடி சாப்பிட்டு அத்துற்குணங்களைத் தணித்து, குளிர்ந்தஜலத்திற் கொஞ்சம் காடி பெய்து கலக்கிச் சாப்பிடத் தீரும்.

ரேவல் சீனி, ரேவல் சீனிசத்து அல்லது மக்கி முதலியவைபோன்றவற்றைச் சாப்பிட்டுத் துற்குணமுண்டாயின், சேப்புப்பழ ரசம் அல்லது பேரிக்காய்ரசம் குடிப்பதனாலும், குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதனாலும், தலை குளிரச் சுத்தஜலத்தைத் தெளிப்பதனாலும் தீரும்.

கள்ளியினங்களின் யோகமுறையைச் சாப்பிட்டு எரிவந்தம்,தாகம் அதிகப்பட்டால் பசுவின்நெய், பசுவின் வெண்ணெய், இஸ்பகோல் கோழைநீர் பேதானாகோழை நீர், வாதுமைநெய், பன்னீர் ஆகிய இவற்றில் ஒன்றைத் தனியேயாயினும் பலவற்றைச் சேர்த்தாயினும் கொடுப்பதனாலும், ரவைக்கோதுமைக் கஞ்சியில் வாதுமைநெய் அல்லது பசுவின்நெய், கருவேலம் பிசின் ஆகியவைகளைச் சேர்த்துக் கொடுப்பதனாலும் தீரும். மாதுளம்பழரசம் அல்லது சேப்புப்பழரசங் கொடுக்கலாம். நன்றாகக் கொழுத்துப்பருத்த கோழிக்குஞ்சு சூப்பும் ஏற்றதுதான், கள்ளிப்பால் அளவிற்கதிகமானால் ரவைக்கோதுமைக் கஞ்சியில் அல்லது சவ்வரிசிக் கஞ்சியில் ரோஜாப்பூ எண்ணெய், கருவேலம்பிசின் சூரணம் இவ்விரண்டையும் சேர்த்துக் கொடுக்க உடனே அதன்வேகத்தை முறித்துத் துர்குணங்களை நிவர்த்திக்கும். சந்தனம், பன்னீர், பச்சைக்கற்பூரம் இவற்றை முகருவதனாலும் சுகம் உண்டாகும்.

பேதிமருந்து சாப்பிட்டு ரத்தவாந்தியானால் புதிதாகக் கறந்தபாலுடன் திராக்ஷரசபானத்தைக் குடிப்பாட்ட அவ்வாந்தி நிற்கும். இதில் பால் அதிகமாக இருக்க வேண்டும்.

பேதி மருந்து சாப்பிட்டபின் இருக்கும் அருவருப்பு, காடியிற்புரட்டின வெங்காயத்தைச் சாப்பிடத் தீரும்.

பேதிமருந்து மிதமிஞ்சினால் அதற்குப் பக்குவம்.

பேதிமருந்து அல்லது வாந்திமருந்தை அளவிற்கு அதிகமாகச் சாப்பிட்டுவிட்டால் தோளிலிருந்து கைவிரல் நுனிவிரல் வரைக்கும், தொடையிலிருந்து கால்விரல் நுனி வரைக்கும் துணிவாரினால் அல்லது கச்சையினால் நன்றாகயிருக்கிக் கட்டவேண்டும். மேற்பக்கம்

ஆரம்பித்துக் கீழ்ப்பக்கமாகக் கொண்டுவர வேண்டியதே தவிர, கிழ்பக்கமிருந்து மேற்பக்கமாகக் கட்டக்கூடாது. கூடுமானால், வியர்வையையுண்டாக்கும் கிரியைகளைச் செய்ய வேண்டியது. பிரம்புக் கட்டிலில் மல்லாத்திப் படுக்கச் செய்து கட்டிலின் கீழ் வெந்நீர் வைத்து அதன் ஆவி முதுகிற்படும் படி செய்தால் வியர்வை வெளிப்படும்.

சாப்பிட்ட மருந்தினால் வியர்வை அதிகப்பட்டால், சேப்புப்பழ ஷர்பத், பேரிக்காய் ஷர்பத், மாதுளம்பழ ஷர்பத் ஆகியவற்றில் ஒன்றுடன் மூங்கிலுப்புத்தூள் சேர்த்துக்கொடுக்க, பேதி நிற்கும் பேரிக்காய்ஜலம்,சேப்புப்பழ ரசம் முதலியவற்றில் ஒன்றை அவயவங்களில் முக்கியமாய் முதுகிற் பூசினாலும் நிற்கும். பச்சைக் கர்ப்பூரம், சந்தனம், பன்னீர் இவற்றில் ஒன்றை முகரவும் செய்யலாம்

பேதியதிகமானால், சவ்வரிசியுமி, பூமாதுளம்பூ, மூங்கிலுப்பு இவற்றில் ஒன்றைப் பேரிக்காய் ஜலத்தில் அரைத்து இரைப்பையின் மீது தடவ உடனே பேதி நிற்கும்

மருந்து சாப்பிட்டு துற்குணப்பட்டவன் இருக்கும் அறை வீட்டில் காற்றுச் சமமா யிருக்கவேண்டும். அதிககாற்று அல்லது குளிர்காற்று, மாசுகளை அகத்திலேயே ஜீரணிக்கச் செய்து துற்பலத்தை யுண்டாக்கும். சிலரொட்டித் துண்டுகளை மாதுளம் பழ ரசத்தில் நனைத்துச் சாப்பிடவும் கொடுக்கலாம். தேகத்தில் சூடு அதிகரித்தால், வறுத்த இஸ்பகோல் விதை, வறுத்த கருவேலம்பிசின், பூங்காவி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்குச் சமனெடையெடுத்து ரோஜாப்பூ எண்ணையாற் பசைப்பித்துக் கல்வத்தில் பேரிக்காய் ரசமிட்டு அரைத்துருட்டின மாத்திரைகளையும் கொடுக்கலாம் மருந்தின் வேகம் குடற்களில் தாக்காதிருக்க, பசுவின் நெய், பசுவின்வெண் ணெய் ஆகியவை மிகவும் உபயோகப்படத் தக்கவை.

பேதிக்குச் சாப்பிட்டும் அதன் குணம் வெளிப்படாதிருந்தால் அதற்குச் சிகிச்சை

பேதிமருந்து சாப்பிட்டும் பேதியாகாதிருந்தால். குடல் முறுக்கு, தலைசுழற்சி, தலைநோய். நாபிநோய் ஆகியவைகளுண்டாகும், சிலர்க்கு இசிவும் காண்பதுண்டு. இவ்விதத் துற்குணங்களில் ஏதேனும் ஒன்று கண்டால் உடனே ஆசனத்தில் பீச்சாங்குழலினால் மருந்தைச் செலுத்துவதனாலும், திரி வைப்பதனாலும் மலம் போகும். ரூமிமஸ்தகிச்சூரணம் 3 கிராம் வெந்நீரிற்கலக்கிச் சாப்பிட மலம்போகும். இரைப்பையின் கழுத்திற்கும் பலத்தை யுண்டாக்கி, அது மருந்தின் வேகத்தைத் தேகத்தினின்று நீக்கும். மலத்தைக் கட்டும்படியான

சேப்புப்பழம், பேரிக்காய் இவற்றின் துண்டுகளைச் சூப்புவதனால் இரைப்பையின் கழுத்துப் பலப்பட்டு அருவருப்பு நீங்கி, பேதிமருந்தை இரைப்பையிற் படியவைக்க நன்றாகப் பேதியாம்.

ஜாலிநியூஸ் மஹாபண்டிதர் சொல்வது - ''நான் மஹமுதாவை ஒருவனுக்கு பேதிக்காக கொடுத்தேன் ; ஆறு நாழிகை மட்டும் பேதி யாகவில்லை. இரைப்பையில் அது இழுக்கப்பட்டு நெருக்கப்படுவது போன்ற ஒருவித வுணர்ச்சி யுண்டாயிற்று; மேலும், அம்மனிதனின் முகம் மஞ்சணித்துக் கொண்டே வந்தது, உடனே நான் பழவர்க்கங்களைச் சாப்பிடும்படி செய்தேன், அவன் அவ்விதமே சாப்பிட எல்லாவிதத் துற்குணங்களும் நீங்கிப் பேதியும் ஆயிற்று, இத்துற்குணங்களுக்குக் காரணம், மருந்தானது இரைப்பைக்குட் செல்லாது இரைப்பையின் கழுத்திலேயே தங்கி நின்றது. அது அங்கிருந்தபடியே சத்துகளையிழுக்க ஆரம்பித்ததனால் மேற்கூறிய துற்குணங்கள் உண்டுபட்டன, அப்போது கட்டுங் குணங்களுடைய பழவர்க்கங்களைச் சாப்பிடக் கொடுத்ததனால் இரைப்பையின் கழுத்துப் பலப்பட்டு மருந்து கீழிறங்கி பேதியாகவே மேற்கண்ட துற்குணங்கள் நீங்கின'' என்பதே.

இந்தச் சிகிச்சைகளினாலும் யாதும் பிரயோஜனமின்றி, கண் சொருகுதல் முதலிய துற்குணமுண்டாம், பேதியாகாமல் மருந்தின்குணமே மீறி நிற்குமாயின், இரத்தங் குத்திவாங்குவதே தகுந்த சிகிச்சை.

பேதிமருந்து சாப்பிட்டும் அதன்குணம் வெளியாகாமல் உள்ளேயே தங்கி நிற்குமாயின், கெடுதியேயுண்டாக்கும். ஏனெனில், மாசுகள் இயக்கப்பட்டு, சிற்சிலவேளை ஒரு உறுப்பில் தங்கி நிற்க இடமுண்டாம்.

தாமதமாகப் பேதியாகும் மருந்தைச் சாப்பிட்டு பேதியாக அதிகத் தாமதப்பட்டால், அம்மருந்தை அல்லது மாசுகளை நீர்த்தன்மையாக்கும் ஷர்பத்துக்களைக்கொடுக்கலாம். இதற்குச் சூடான சிகாமதுபானம் ஏற்றது. வெந்நீரிற் கொஞ்சம் உப்பைக்கரைத்துக் குடிப்பாட்டுவதனாலும் குணமுண்டாம்.

மருந்து இரைப்பையினின்று கீழிறங்கிக் குடற்களில் தங்கியிருந்து, துற்குணங்களை யுண்டுபண்ணினாலும் மேற்கண்ட ஷர்பத்து முதலிய பிரயோகங்களே ஏற்றவை. இரைப்பையினின்று கீழிறங்கிக் குடற்களில் தங்கி நிற்கும் லக்ஷணங்களாவன இரைப்பை லேசாயிருத்தல், தாகம், அருவருப்பு, மருந்தின் வாசனையுள்ள ஏப்பம் ஆகியவை இல்லாதிருப்பனவாம் மதுகமலபானம், வெந்நீர் முதலியவற்றால் யாதும் பிரயோஜனம் இல்லாவிடில், ஆசனத்தில் திரிவைக்க வேண்டியது அவசியம். மருந்தானது இரைப்பையில் தங்கி நின்று மேற்காட்டிய சிகிச்சைகளினால் யாதொரு பயனும் உண்டாகாவிட்டால், வாந்திக்குக் கொடுத்து மருந்தை வெளிப்படுத்தி, இரைப்பையைச் சுத்திசெய்து, குளிர்ந்தநீரை குடிக்கச் செய்யவேண்டும்.

பேதி திரவிய குணத்தின் பேதாபேதம்

பேதி மருந்துகளின் குணம் ஒன்றுக்கொன்று மாறுபடும். சிலமருந்து இரத்தத்தினின்றும், அவயவத்தினின்றும் ஒருசத்தை மாத்திரம் பிரித்து வெளிப்படுத்தும், சிவதைவேர் கபத்தையும் மஹ்முதா பித்தத்தையும், சீமைக்காவிக்கல் வண்டலையும் அதிகம் வெளிப்படுத்தும்.

சில பேதி திரவியம் இரண்டு சத்துக்களை மாத்திரம் வெளிப்படுத்தும் சத்தியுள்ளன. கரியபோளம் பித்தத்தையும் கபத்தையும் வெளிப்படுத்தும் சக்தியுள்ளது

சில மூன்று சத்துக்களையும் வெளிப்படுத்தும் சக்தியுடையன. ஆற்றுத்தும்மட்டிக்காய், கபம், பித்தம், வண்டல் ஆகிய மூன்று சத்துக்களையும் வெளிப்படுத்தும் சக்தியுள்ளது.

ஒன்றிற்கதிகச் சத்துக்களை வெளிப்படுத்தும் சக்தியுள்ளவற்றிலும் சில விகற்பங்கள் உண்டு. காரிகியூன் மூன்று சத்துக்களை வெளிப்படுத்தும் சக்தியுடையதாயினும், பித்தத்தைப் பார்க்கிலும் கபத்தை அதிகமாகவும் வெளிப்படுத்தும். இதனால் பேதி திரவியங்களில் ஒன்றுக்கொன்று சக்தியில் விகற்ப மடைந்திருப்பது நன்கு புலப்படும்.

சில ஒவ்வொரு உறுப்பிற்கும் உரித்தா யிருக்கின்றன. அவை, மற்ற உறுப்புகளிலிருந்து வெளிப்படுத்தும் சத்தைப் பார்க்கிலும் தமக்குரியதாயுள்ள உறுப்பிலிருந்து அதிக அளவான சத்தை வெளிப்படுத்தும். ஆற்றுத் தும்மட்டிக்காய் மூளையினுடையவும் நரம்பாதிகளினுடையவும் சத்துக்களையும், சுரிஞ்சான் கீல்களினுடைய சத்துக்களையும் வெளிப்படுத்தும்.

மேற்கண்ட விதமாகச் சத்துக்களை வெளிப்படுத்துவதில் ஒவ்வொரு திரவியம் ஒவ்வொரு உறுப்பிற்குச் சொந்தமா யிருப்பது போலவே அவ்வொவ்வொன்று ஒவ்வொரு உறுப்பிற்குக் கெடுதி விளைவிப்பதில் சொந்தமாயிருக்கும். நாம்பாதிகளினுடையவும், சத்துக்களையும், சுரிஞ்சான், மஹ்மூதா ஈரலுக்கும், சுரிஞ்சான் இரைப்பைக்கும் ஆற்றுத் தும்மட்டிக்காய் குடற்களுக்கும் கெடுதியை விளைவிக்கும்.

கபத்தை வெளிப்படுத்துவதில் சிவதை, காரிகியூன் ஆகியவை ஆற்றுத்தும்மட்டிக்காயினும் அளவிலும், உறுப்பிற்குக் கெடுதி யுண்டாக்குவதிலும், வேறு காரணங்களிலும் வித்தியாசப்படுவது தெரிந்த விஷயம். ஆகையால், மருந்துகளின் பேதாபேதங்களையும் நன்றாக நிதானித்தறிய வேண்டியது.

ஓர் முறை மனிதனுக்கு நன்மை விளைவித்த மருந்தே மறுமுறை அவனுக்கே தீமை விளைத்ததாய் அனேகமுறை அனுபவ சித்தமாகக் காணப்பட்டிருக்கின்றது. ஏனெனில்,தேகசுபாவம் அடுத்தடுத்து மாறிக்

கொண்டிருக்கும். அதனுடன் இன்னும் பற்பல பேதங்களும் காணப்படும். ஆற்றுத்தும்மட்டிக்காய், சூடான தேகிக்குச் சூடான காலத்தில் கொடுக்கப்பட்டால் அவன் யௌவன வயதுள்ளவனாக இருந்தாலும், பலமான ஔஷதம் சாப்பிடும் வழக்கம் இல்லாதவனாயிருந்தால், கடினபேதியை யுண்டாக்கித் துற்குணங்களையும் உண்டாக்கும். ஆகையால், பேதி மருந்துகளைச் சாப்பிடுமுன் பூர்வ தேகசுபாவ ஸ்திதி, தற்கால தேக சுபாவ ஸ்திதி, பருவபேதம், ஆகியவற்றை நன்றாக உள்ளாழ்ந்து சிந்தித்தறிந் துணர்ந்தபின், பேதிக்குச் சாப்பிட வேண்டும் என்பது நமது கோட்பாடு.

வாந்தியின் சுகாசுகம்

நாம் உட்கொள்ளும் ஆகாரங்கள் இரைப்பையில் ஜீரணமாகின்றன. ஆனால், அவற்றில் பெரும்பாகம் சத்தாய் மாறினும், சிறுபாகம் வண்டலாகவும் வழவழப்பாகவும் மாறி, இரைப்பையைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுகின்றது. இவ்விதமே நாளாவர்த்தியில் சிறுகச் சிறுக சேர்த்து அதிகரித்துப் பல நோய்களுக்கு இடமாம். ஆகையால், இரைப்பையைச் சுத்திசெய்தால் அவசியமென்பது இதனால் நன்கு விளங்கும். இரைப்பையில் குளிர்ச்சியும் கொழுமையும் அதிகப்பட்டிருந்து, சூட்டின் குறைவினால் ஆகாரங்களை நன்றாக நசித்துப் பிசைய முடியாததாகையால், அவை நன்றாக ஜீரணிக்கா. அப்படியாகாவிட்டால் அசுத்தமாசு அதிகம் விளையும், அசுத்தமாசின் விளைதற்குத் தக்கபடி அதிகமாக இரைப்பையைச் சுத்திசெய்ய நேரிடும். இரைப்பையில் தங்கி நிற்கும் மாசுகளையும், மேலதிகமான கப முதலியவற்றையும் வாந்திக்குச் சாப்பிடுவதினால் லகுவாய் வெளிப்படுத்தி இரைப்பையைச் சுத்தி செய்யக் கூடும்.

பேர் பெற்ற பண்டிதராகிய பகறாத் சொல்வது -

"தேகத்திலுள்ள மாசுளையும் நீர்க்குண்டிக்காயிலிருந்து தேகத்தின் கீழ்ப்பாகங்களிலுள்ள நோய்களையும் முறையே வெளிப்படுத்தவும் நீக்கவும் வாந்திக்குச் சமானமானது ஒன்றுமில்லை" என்பதே.

வாந்தியானது, எல்லாவிதச் சுத்திகளைப் பார்க்கிலும், பலமானசுத்தி, முக்கியம் கபத்தை வெளிப்படுத்துவதிலும், நீர்க் குண்டிக்காய்களிலிருந்து பாதம் வரையில் உள்ள வியாதிகளைக் குணப்படுத்துவ திலுமே.

வாந்தியினாலுண்டாகும் சுகுணங்கள் பின்வருபவைகளாம் இரைப்பையை சுத்திசெய்யும்; தலைக்கனத்தை நீக்கும்; கண்ணுக்கு ஒளிதரும்; ஜீரணசத்தியை அதிகப் படுத்தி ஆகாரத்தை நன்றாக ஜீரணிக்கச் செய்யும்; மண், சாம்பல், கல்லு, புளி முதலிய வஸ்துகளிலுள்ள கெட்ட

விருப்பத்தை நீக்கும்; வீக்கங்களைக் கரைக்கும்; இரைப்பையினின்று எழும் அசுத்த ஆவியினாலுண்டாம் காக்கை வலியை நீக்கும், மஞ்சட்காமாலையைப் போக்கும்; நடுக்கல் பக்ஷவாதம், கஷ்டசுவாசம், கணுக்கால் வாதம், பைத்தியம் முதலியவற்றைத் தீர்க்கும்; பெருவியாதிக்கோர் சிறந்த சிகிச்சை. நாட்பட்ட வியாதிகளுக்கெல்லாம் அதிக உபயோகமுள்ளது; மிதமாகச் செய்யப்பட்டால் தேகத்தைக் கொழுப்பிக்கும். பேதிக்குச் சாப்பிட்டால் அருவருப்புண்டாவதும், தேகத்திற்சூடு அதிகரிப்பதுமான சுபாவம் உடையவர்கள்,பேதிக்குச் சாப்பிடுமுன் மூன்றுநாள் தொடர்ச்சியாய் வாந்திக்குச் சாப்பிட அத்துற்குணங்கள் உண்டாகமாட்டா.

வாந்தியினாலுண்டாம் துர்க்குணங்கள் அடியிற்காட்டிய வைகளாம். வாந்திக்கு அடிக்கடி சாப்பிடுவதனால், இரைப்பை துற்பலப்படும்; தேகத்திற் பரந்து நிற்கும் மாசுகள் இரைப்பையின் பக்கம் திரும்பிவிடும்; சுவாசக்கருவிகள், கண்கள், பற்கள், ஈரல் முதலிய இரைப்பையுடன் சம்பந்தப்பட்டிருக்கும் கருவிகள் ஆகியவைகளுக்கு ஆகாது. இரைப்பை சம்பந்தமான தலைநோய் அதிகரிக்கும்; சிலர்க்கு உக்கிரவாந்தியினால் மார்பின் நரம்புகள் அறுபடுவதும் உண்டு. வயிறு நிரம்பியிருக்கையில் வாந்திக்குச் சாப்பிடுபவர்களுக்குப் பலவித வியாதிகளுண்டாம்.

வாந்திமருந்து இன்னார்க்கு ஆம் ஆகாதெனல்

மூளை துர்பலப்பட்டவர்களுக்கும், மார்பு வீக்கமுள்ளவர்களுக்கும் வாந்திதரும் மருந்து ஆகாது. ஏனெனில், அசுத்த மாசுகள் மூளையின் பக்கம், அல்லது மார்பின் பக்கம் நோக்கி ஏறும். மார்பில் வீக்கம் இருந்தால், ஏதேனும் நரம்புகள் அறநேரிடும்.

மார்பு நெருக்கமா யிருக்கிறவர்களுக்கும், மார்பில் சதைப்பற்றில்லாதவர்களுக்கும், மார்பெலும்பு வெளிப்பட்டு இருப்பவ ர்களுக்கும் கழுத்து சிறுத்து அதிகம் நீண்டிருப்பவர்களுக்கும் வாந்திக்குக் கொடுக்கவொண்ணாது. ஏனெனில், இவர்களுக்கு அதிகக் கஷ்டத்துடன் வாந்தியாகுமாதலால், இரத்தங் கக்குதல், மார்பு வீங்குதல் ஆகிய நோய்களுண்டாம்.

அதிகம் பருத்துள்ளவர்களுக்கு,வாந்தியைப் பார்க்கிலும் பேதி ஏற்றது. மெலிந்தவர்களுக்குப் பேதியைப் பார்க்கிலும் வாந்தி ஏற்றது. ஏனெனில் மெலிந்தவர்களுக்கு பெரும்பாலும் பித்தநீர் அதிகரித்திருக்கும் ஆகையால், அதன் சுபாவம் மேனோக்குடையது. மெலிந்தும் துற்பலப் பட்டவர்களுக்கு வாந்தியும் அவசியமில்லை. இவர்களுக்குக் கொழுமையான ஆகாரங்களை உபயோகிப்பதனால் இரைப்பையில் நல்ல

சத்துண்டாகி, தேகம் சுகப்படுமென கனம்பொருந்திய (முகம்மதுஜகரியா) பண்டிதர் சொல்லுகிறார். கர்ப்பஸ்திரீகளுக்கு ஒருபொழுதும் வாந்திக்குக் கொடுக்கவொண்ணாது. ஏனெனில், இவர்களுக்கு அசுத்த மாசுகள் வாந்தியின் வழியாக வெளிப்படாமல், ஓர் வித வலிப்புண்டாம்.

இயல்பாக வாந்தியாகும் வழக்கமுள்ளவர்களுக்கும், அருவருப்பால் துன்புறுபவர்களுக்கும், வாந்தி செய்யும் வழக்கம் இல்லாதவர்களுக்கும், அதிகப்பிரயாசையுடன் வாந்தி செய்யும் வழக்கமுள்ளவர்களுக்கும், வாந்திக்குக் கொடுப்பது நன்மையல்ல. ஏனெனில் இவர்களுக்கு அப்படிக்-கொடுப்பதனால் அபாயமுண்டாம்.

மார்பு அகன்றிருப்பவர்களுக்கும், வயிற்றின் தசை அதிகமுள்ளவர்களுக்கும், வாந்திக்குக் கொடுக்கலாம். மார்புநோய், தீக்ஷண்யவியாதி இவையுள்ளவர்களுக்கு வாந்திக்குக் கொடுப்பது ஆகாது.

வாந்திக்குச் சாப்பிடுமுன் செய்ய வேண்டியவை

தேகத்திற் சூடுண்டாகும் மாசுகள் இளகும்படியாகவும், நாடிகள் விசாலிக்கும்படியாகவும் முன்னமே முயல வேண்டும். மாசுகள் கெட்டிப்பட்டிருந்தால் முன்னே ஸ்நானஞ் செய்வதனால் அவை இளகும். அவை அதிகமாய் நீர்த்திருந்தால், கடின ஆகாரங்களையும் வழுவழுப்பான ஆகாரங்களையும் சாப்பிட்டு, அவற்றைப் பக்குவப்படுத்த வேண்டும்.

வாந்தியாகச் சாப்பிடும் ஆகாரங்களை இரைப்பை நிறையச் சாப்பிட வேண்டும்; அவை பலவகையுடையனவாயிருக்க வேண்டும். ஏனெனில், இரைப்பையிற் செல்லும் பலவகை ஆகாரங்களை அது பிரயாசையுடன் ஏற்றுக் கொள்ளும். சாப்பிடும்பொழுது மேற்கண்ட ஆகாரங்களைத் தாமதித்துத் தாமதித்துச் சாப்பிட வேண்டும். ஏனெனில், அசுத்த மாசுகள், அந்த ஆகாரங்களிற் கலந்து கொண்டே வந்து வெளிப்படும்.

வாந்திக்குச் சாப்பிடும் காலமும் முறையும்

வாந்திக்குக் கோடைகாலம் அதிகம் ஏற்றது. கஷ்டத்துடன் வாந்தியாகும் வழக்கமுள்ளவர்களுக்கும், வாந்தியால் ஏதேனும் கெடுதி யுண்டாகாதிராது என்னும் சந்தேகமுள்ளவர்களுக்கும், அதைப் பார்க்கிலும் வேறு அநுகூலமான காலம் கிடையாது, ஏனெனில்,

அக்காலத்தில் அசுத்த மாசுகள் இளகி மேனோக்குடையதா யிருக்குமாகையால், அவை இலகுவாய் வாந்தியால் வெளிப்படும்.

இரத்தங்குத்தி வாங்கினபின் மூன்றுநாள் வரையிலும் கட்டாயம் வாந்திக்குச் சாப்பிடலாகாது. தேகசிரமத்திற்குப் பின் சிரமம் நிவர்த்தியாகும் வரையிலும் ஆகாது. ஆகாரம் பானம் இவற்றில் யாதேனும் இல்லாமல் வெறுவயிறாயிருக்கும்போது, முள்ளங்கிக்கிழங்குச் சாற்றில், அல்லது இளஞ்சூடான வெந்நீரில், உப்பு அல்லது பெரும்பயறு அல்லது தூட்செய்யாத கடுகு, அல்லது காடியும் தேனும் கலந்து காய்ச்சின ஷர்பத் ஆகிய இவற்றில் ஒன்றைக் கலந்து சாப்பிடக் கொடுக்க வேண்டும்.

பலமான ஔஷதங்களினால் வாந்தி செய்ய வசந்த காலமே ஏற்றது. வாந்திக்குச் சாப்பிடுமுன், வாதுமை நெய் கலந்த கஞ்சி குடிக்க வேண்டும். கஞ்சி குடித்த மூன்று நாலு நாழிகைக்குப்பின் வாந்திக்குச் சாப்பிட வேண்டும்.

"மாதம் ஒருதடவை வாந்திக்குப் சாப்பிட வேண்டும். இடையில் ஒரு நாள் விட்டு மறுநாளும் சாப்பிட வேண்டும். ஏனெனில், முதல் நாள் இயக்கப்பட்ட மாசு மறுநாள் லகுவாய் வெளிப்பட்டுவிடும். மேற்கண்ட பிரகாரம் மாதம் ஒரு தடவை வாந்திக்குச் சாப்பிடுவதனால் யாதொரு வியாதியும் அணுகாது; சுகமாயிருக்கலாம். இது நிச்சயம்" எனப் பேர்போன ஹக்கீம் பகறாத்து சொல்லுகிறார்.

மாதம் இரண்டு முறை வாந்திக்குச் சாப்பிட வேண்டுமென்றும் வேறு சில பண்டிதர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆயினும் தேகபலத்திற்கு ஏற்றவிதமாகவும் மாசு அடையும் காலத்திற்குத் தக்க அளவாயும், மாசம் ஒருமுறை அல்லது இரண்டு முறை அல்லது பலமாதங்களுக்கு ஒரு முறையாகச் சாப்பிட வேண்டும் என்பதே அநேக பண்டிதர்களின் கருத்து.

இரைப்பையைச் சுத்தி மாத்திரம் செய்ய வேண்டுமானால், காடிஷர்பத் மாத்திரமே போதுமானது. வாந்தி செய்யும்போது அதிகம் முக்கலுடன் செய்யலாகாது. ஏனெனில், அசுத்த மாசுக்கள் இரைப்பையின் பக்கம் திரும்பும். முள்ளங்கிக் கிழங்குரசம், மாதுளம் பழரசம் இவைகளையும் வாந்திக்குக் கொடுக்கலாம்.

வாந்தி செய்யும்போது கண்ணைக் கட்டிவைப்பது உத்தமம், வாந்தியானபின், வாயையும் கண்ணையும் குளிர்ந்த ஜலத்திற் கழுவ வேண்டும். ஸிகாமதுபானம், மதுகமலபானம் இவற்றில் ஒன்றுசேர்ந்த ஜலத்தினால் வாய் கொப்பளிக்க வேண்டும், வாந்தி செய்யும்போது நேராயிருக்க வேண்டும். நின்று செய்வது மிகவும் நலமே. எவ்விதத்திலும்

இருபக்கங்களிலும் சாய்ந்து கொள்ளலாகாது. வாய் கொப்பளித்தபின், கொஞ்சம் குல்கந்து சாப்பிடலாம். றூமிமஸ்தகிச் சூரணத்தைக் கொஞ்சம் தண்ணீரிலுங் கலந்தும் சாப்பிடலாம்.

வாந்தியானவுடன் ஆகாரம் போஜனம் செய்யலாகாது. அவசியமானால் ருசியானதும், சீக்கிரம் ஜீரணிக்கத் தக்கவையுமான ஆகாரங்களைச் சாப்பிடலாம்.

வாந்திக்குச் சாப்பிட்டிருக்கும்போது உண்டாகும் குணாகுணங்கள்

வாந்தி ஆக ஆக, தேகம் லகுவாயிருக்கும். சாப்பாட்டில் அதிகத் தேவையிருக்கும்; நாடியின் நடையும் சுவாச ஸ்திதியும் சமரசமாயிருக்கும், தேகபலமும் குன்றாது. வாந்தியின் ஆரம்பத்தில் அருவருப்பும், நெஞ்சிற் கொஞ்சம் எரிவந்தமும் உண்டாம். கடுகு முதலியவை போன்ற பலமான வாந்தி யௌஷதமானால், வாய்நீர் ஊறும். கபம் அதிகமாக வெளிப்பட்டு, பின்பு துர்நீர் வெளிப்படும். இரைப்பையில் கொஞ்சம் எரிவந்தம் இருந்தாலும் அருவருப்பும் சூடும் ஆகியவை மாத்திரம் நீங்கா இவையாவும் சுகுணத்திற்கு அறிகுறியாம்.

பின்வருபவை துற்குணக்குறிகளாம். வாந்தி நன்றாக வெளிப்படாமல் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படும்; கண் சிவக்கும்; வியர்வை அதிகரிக்கும்; சப்தம் தொண்டையினின்று புறப்படாது; விக்கல் உண்டாகும்; இத்துற்குணங்களைக் கண்டால், உடனே சிகிச்சை தேட வேண்டும். இளஞ்சூடான வெந்நீருடன் எண்ணெயினம் சேர்த்து ஆசனத்திற் செலுத்துவதனால் குணமுண்டாம்; நன்றாயும் வாந்தியாம். விக்கலின் காரணம், அசுத்த மாசுகள் கீழிறங்கி இரைப்பையில் தங்கி, அவற்றை வெளிப்படுத்த இரைப்பைக்குச் சக்தியில்லாமற் போவதே. கண் சொருகல் கண் சிவப்பு ஆகியவற்றின் காரணம், ஓர் அசுத்த சத்து அல்லது சூடுள்ள சத்து மூளையிற் சேர்த்துவிடுவதே மூளையில் சூடுண்டானால், விக்கல் உண்டாமென உத்தேசிக்க வேண்டும். வாந்தி தாமதமாகவும், இரைப்பையில் எரிவந்தமும், சகிக்கக்கூடாத தாகமும் இருக்குமாயின், வெந்நீருடன் ஜய்த்தூன் எண்ணெயை அல்லது நல்லெண்ணெயை கலந்து குடிக்கச் செய்தால் வாந்தி கஷ்டமில்லாமல் உண்டாகி, மாசுகளும் நன்றாக வெளிப்படும். இரைப்பை, கை, கால் இவற்றில் சூடுண்டாக்குவதனால் அருவருப்பு அதிகப்பட்டு வாந்தி நன்றாய்ப் பூர்த்தியாய் வெளிப்படும். வாந்தி தாமதமாய் உண்டாகி, இரைப்பையில் எரிவந்தமும் தாகமும் உண்டாயிருத்தல், காற்றில்லாத அறைக்குள்ளிலிருந்து கோழியிறகை எண்ணெய்ப் பசையாக்கிப் பரமௌஷதத்திற் புரட்டித் தொண்டைக்குள் இடுவதனால் வாந்தி அடிக்கடியுண்டாகி, மருந்தின்குணம் நன்றாய் வெளிப்பட்டுப் பூரணமாய் வாந்தியாகும். ஆனால் ஒருவேளை விலாவின்

மேற்புறத்தில் நோவுண்டானால் வெந்நீருடன் நெய்கலந்து அதில் கடற்காளான் (Sponge) துண்டை நனைத்து, அவ்விடத்தில் வைத்துக் கட்ட வேண்டும்.

வாந்திக்குப்பின் சகிக்கக்கூடாத எரிவந்தம் உண்டானால், கொழுப்பிறைச்சி ஸூப்புக் குடிக்கலாம். அவ்விடத்தில் மெழுகு தயிலத்துடன் பனப்ஷா எண்ணெய் கலந்தும் பூசலாம். வாந்திக்குப்பின் விக்கல் அதிகம் உண்டானால், வெந்நீரை சிறுகச் சிறுகக் கொடுப்பதாலும், தும்மல் உண்டாக்குவதனாலும் சுகுணமுண்டாம். வாந்திக்குப் பின் வலிப்பு, அதி நித்திராரோகம், தொனிக்குறைவு முதலிய சீதள வியாதிகள் உண்டானால், கை கால்களை நன்றாக இறுக்கிக் கட்டுவதனாலும், சதாபிலையை ஜய்த்தூன் எண்ணெயிட்டுக் காய்ச்சி யிறக்கி இளஞ்சூடான பதத்தில் இரைப்பையின் மேற் பூசுவதனாலும், வெந்நீருடன் தேனைக் கலந்து குடிப்பாட்டுவதனாலும் நீங்கும். அதிநித்திராரோகக் காரர்களின் காதில் மேற்படி எண்ணெய்த்துளி சிலவற்றை விடுவதனால் உடனே அந்தரோகம் நிவர்த்தியாகும். வாந்தியில் குரல்வளை வீங்கிப்போனால் இரண்டு புஜங்களையும் இறுக்கிக் கட்டுவதுடன் ஆசனத்திலும் மருந்தைச் செலுத்த வேண்டும். வாந்திக்குப் பின் இரத்தங்கண்டால் புதிதாய்க் கறந்த பசுவின் பாலைப்பருக, மருந்தின் தீக்ஷண்யம் மாறிப்போம். எல்லாத் துற்குணங்களிலும் பசுவின்பாலே சுகுணத்தைக் கொடுக்கத்தக்கது.

வாந்திக்குப்பின் தூங்க வேண்டும். இரைப்பையின் மேல் துவர்ப்பாகிய ஔஷதங்களை அரைத்துப் பற்றிட வேண்டும் இரத்தம் அபரிமிதமாய் வந்தால் பாலுடன் திராக்ஷரசபானத்தைச் சேர்த்துக் கொடுக்கலாம். மார்பு முதலிய இடங்களில் தங்கி நிற்கும் ரத்தத்தை வெளிப்படுத்த வேண்டுமானால், அடிக்கடி சீதஸிகாமதுபானம் கொடுக்க வேண்டும். பருப்புக்கீரையை யிடித்து ரசம் பிழிந்து பூங்காவித் தூளைக் கலந்து கொடுக்க, ரத்தம் நின்றுவிடும்.

வாந்தியில் முதல் முதல் கபம் வெளிப்படும். பின்பு பித்தம். ஆனால்; பித்தம் கபத்திலும் குறைந்த அளவாயிருக்கும். பின்பு வண்டல் வெளிப்படும். இது பித்தத்தின் அளவிலும் குறைந்ததா யிருக்கும். எல்லாருக்கும் வண்டல் வெளிப்படாது. சாராயம் குடிப்பவர்களுக்கும், ஈரற்சூடா யிருப்பவர்களுக்கும் மண்ணீரல் பருமனாயிருப் பவர்களுக்கும், சூதகபந்த ஸ்திரீகளுக்குமே வண்டல் பெரும்பாலும் வெளிப்படும். வாந்தியில் புளித்தநீர் வெளிப்பட்டால் ஆகாரம் குறைவாய்க் கொடுக்க வேண்டும். ஆகாரத்திற்கு முன் பன்னீரைக் காய்ச்சிக் குடிக்கச் செய்ய வேண்டும். இரைப்பை குளிர்ச்சியாயிருப்பதாகத் தோன்றினால் றூமிமஸ்தகித் தூளை குல்கந்தில் கலந்து கொடுக்க மாறும். வாந்தியில் வண்டல் வெளிப்பட்டால் காடியைக் காய்ச்சி அதில் கடற்காளானை (Sponge) அல்லது பஞ்சை நனைத்து இரைப்பையின் மேற்போட நீக்கும். மாசுகளை வெளிப்படுத்துவதில் வாந்தி மருந்துகளும் பேதி

மருந்துகளுக்குச் சமானமானவைகளே. ஆனால் இவ்விருவகைகளிலும் உள்ள வித்தியாசம், பேதிமருந்தானது மாசுகளை மெதுவாய்க் கிரகித்து வெளிப்படுத்தும், மெதுவாயும் தன் குணத்தை காட்டும். வாந்திமருந்தோ தேகத்தில் ஆழ்ந்த பாகங்களிலுள்ள மாசுகளையும் எட்ட இருக்கும் அவயவங்களின் மாசுகளையும் அதிகபலத்துடன் இயக்கி யிழுத்துக் கிரகித்து வெளிப்படுத்தும்.

வாந்தி மருந்துகளிலும் பலவகையுண்டு. வெள்ளைக் கடுகுரோகணியானது எட்ட இருக்கும் உறுப்புகளிலுள்ள மாசுகளையும், ஆழ்ந்து, உறைந்து கட்டி இறுகிப்போன மாசுகளையும், விடாது பற்றிப் பிடித்திருக்கும் மாசுகளையும் வெளிப்படுத்துவதில் அதிக பலமுள்ளது. அதற்கு அடுத்தது வெள்ளைக்காக்கட்டான் வேர்; அதற்கு அடுத்தது மருக்காளங்காய் என்னும் உலர்ந்த தேற்றாம்பழம். இவ்வகை ஔஷதங்களில் சாந்தமானது கறியுப்பு. அதற்கு அடுத்தவை மரஉப்பு, முள்ளங்கிவிதை, சதகுப்பை, கடுகு ஆகியவையாம். இவைகளும் சத்துகளை யிளக்கி வெளிப்படுத்துபவைகளாம். முலாம்பழ விதை, முலாங்கொடி வேர், உளுந்துக்கிஷாயம், நரிவெங்காயம் முதலியவை களும் சத்துகளை யிளக்கிச் சாந்தமாய் வாந்தியையுண்டாக்குவனவாம். வெள்ளைக் கடுகுரோகணி கடின வாந்தியை யுண்டுபண்ணுமாகையால், அஜாக்கிரதையுடன் உபயோகித்தால் அபாயம் நேரிடாதிராது. ஆகையால், அதிக கஷ்டத்துடன் வாந்தியாகிறவர்களுக்கும், மெலிந்த தேகிகளுக்கும், தேகத்தில் மாசு அதிகரித்திருக்காதவர்களுக்கும், இதைக் கொடுப்பது குணமல்ல. இவ்வகையானவர்களுக்கு அவசியமானால், இயன்றவரையும் மற்ற மருந்துகளினால் முயற்சிக்க வேண்டும்.

காடி ஷர்பத்தும் கஞ்சித் தண்ணீரும் கலந்து வயிறு நிரம்பக் குடித்து, துரும்பினால் அல்லது விரலினால் தொண்டைக்குள் கூச்சமுண்டாம்படி தூண்டி வாந்தி செய்ய, இளகலான கபம் நன்றாக வெளிப்படும்.

முள்ளங்கிக்கிழங்கை வேகவைத்துப் பிழிந்து ஸிகாமது பானத்திற் கலந்து கொஞ்சம் கரியுப்பைப் பொடித்து அதன் மேல் தூவி ஓரிரவு வைத்து மறுநாட்காலையில் வெறும் வயிற்றிற் சாப்பிட்டதன் மேல் மாதுளம் பழம், அல்லது சமைத்தமீன் சாப்பிட கெட்டியான கபம் வாந்தியினால் நன்றாக வெளிப்படும்.

மதுகமலபானத்தில் ஜூபா (Zoofa) வைப்போட்டுக் காய்ச்சிச் சாப்பிட்டு வாந்தி செய்ய இரைப்பையின் தட்டுகளிற் படிந்திருக்கும் மாசுகள் வெளிப்படும்.

ஆகாரம் சாப்பிட்டவுடன், நரிவெங்காயம்2, 3 சாப்பிட நன்றாய் வாந்தியாம்.

முள்ளங்கிவிதைச் சூரணம் 10 கிராம், மதுகமலபானத்திற் கலந்து சாப்பிட நன்றாய் வாந்தியாம். மருக்களங்காய் 6 கிராம் மேற்படி ஷர்பத்தில் அல்லது வெந்நீரிற் கலந்து சாப்பிட்டாலும் நன்றாய் வாந்தியாம். நையநறுக்கின வெள்ளரி வேர்த்தோல் 35 கிராம், சதகுப்பையிலை ரசத்தில் அல்லது ஸிகாமதுபானத்திற் கலந்து சாப்பிட, நன்றாக வாந்தியாம். பதினைந்து திராக்ஷைப் பழங்களைச் சதகுப்பை ரசத்தில் அரைத்துக் கலக்கிக் கொஞ்சம் எண்ணெய்விட்டுச் சாப்பிட, வெகு நன்றாய் வாந்தியாகும்.

சுகஸ்திதியிலிருப்பவர்களின் இரைப்பையைச் சுத்தி செய்ய முலாங்கொடிவேர், வெள்ளரிவேர், நரிவெங்காயம், முள்ளங்கிவிதை, சதகுப்பை ஆகியவைகளும் இவைபோன்றனவும், பக்ஷவாதம், நடுக்கம், உன்மத்தம் முதலிய பூர்வ ரோகங்களுக்கு வெள்ளைக் கடுகுரோகணி, மருக்களங்காய் ஆகியவையும் இவை போன்றவையும் ஏற்றன.

10 கிராம் உப்பை 35 கிராம் வெந்நீரிற் கரைத்துக் குடிக்க நன்றாய் வாந்தியாம். முள்ளங்கிக் கிழங்கு, சதகுப்பைக்கீரை இவற்றில் ஒன்றைச் சுத்தஜலத்திலிட்டுக் காய்ச்சிக் குடிக்க நன்றாக வாந்தியாம்.

சுரைவிதை, வெள்ளரிவிதை, வெந்தயம், எள்ளு, உளுந்து, சீமையத்திப்பழம் ஆகியவைகளையும் சுகவாந்தி திரவியங்களாக உபயோகிக்கலாம்.

துரிசு, பேயத்தி, எருக்கம்வேர்ப்பட்டை, விஷமூங்கில், நாய்ப்பாலை, குப்பைமேனி, உத்தாமணி, இலுப்பைப் பிண்ணாக்கு, நஞ்சறுப்பான் இலைத்தூள், மூக்குறட்டை, அமுக்கரா, உப்பைச் சேர்த்திடித்துப் பிழிந்த நொச்சியிலை ரசம் ஆகியவைகளையும் கடினவாந்தித் திரவியங்களாக உபயோகிக்கலாம்.

பித்த வாந்தி

ஸிகாமது ஷர்பத் 45 கிராம், யவைக்கோதுமைக்கஞ்சி 160 கிராம் இவ்விரண்டையும் கலந்து சாப்பிட்டு வாந்தி, செய்ய வேண்டும்.

கபவாந்தி

முள்ளங்கிவிதைச் சூரணம் 8 கிராம், சதகுப்பைச் சூரணம் 4 கிராம், கறியுப்ஃபுத்தூள் 2 கிராம், இவற்றைத் தேனிற்கலந்து சாப்பிட வேண்டும். சுபாவமாய் வாந்தியானால் நலம். ஆகாவிட்டால், வெந்நீரைக் குடித்து வாந்தி செய்ய வேண்டும்.

வண்டல் வாந்தி

முள்ளங்கிக் கிழங்கிற் பள்ளம்பண்ணி கடுகுரோகணித்தூளை நிறைத்து ஸிகாமது பானத்தில் நனைத்து ஓரிரவு வைத்திருந்து காலையிற் சாப்பிட்டு அதன்மேல் சிறுபயறிட்டுக் காய்ச்சின கஞ்சியில் ஸிகாபானம் கொஞ்சம் விட்டுக் கலந்து குடித்து வாந்தி செய்ய வேண்டும்.

பித்த கப வாந்தி

ஸிகாமதுபானம் 5 கிராம், கறியுப்புத்தூள் 9 கிராம். முள்ளங்கிக் கிழங்கு ரசம் 150 கிராம், இவற்றைக் கலந்து கொஞ்சம் காய்ச்சி இளஞ்சூடாகக் குடிக்க மேற்படி சத்துகள் வாந்தியால் வெளிப்படும்.

பித்தவண்டல் வாந்தி

அதிமதுரம், சதகுப்பை இவற்றின் சூரணம் வகையொன்றுக்கு 22 கிராம், குப்பாஜிவிதைச் சூரணம், யவைக் கோதுமைக்கஞ்சி இவை வகையொன்றுக்கு 13 கிராம், இவை யெல்லாவற்றையும் 340 மி.லிட்டர் ஜலத்திற்போட்டுக் காய்ச்சிச் சுடவைத்து அரைப்பதமாய்ச் சுண்டினபின், அப்திமூன் ஷர்பத் நாற்பத்தைந்து கிராம், சிகாமதுபானமும் கொஞ்சம் சேர்த்து இளஞ்சூடாகக் குடித்து வாந்தி செய்யவும்.

வாந்திமுறைகள்

கடுகுத்தூள் 15 கிராம், தண்ணீர் 30 கிராம் கரைத்துச் சாப்பிட வாந்தியாம்.

வாந்தியுப்பு அரை - ஒன்று குன்றியெடை, 30 கிராம் ஜலத்திற் கரைத்து ஒரே தடவையிற் சாப்பிட வாந்தியாம்.

துரிசு 4 அல்லது 5 குன்றியெடை 30 கிராம் ஜலத்திற் கரைத்துச் சாப்பிட வாந்தியாம்.

சுமார் 50-60 கிராம் கறியுப்பை 350-525 கிராம் வெந்நீரிற் கரைத்துக் குடிக்க வாந்தியாம்.

கடுகின்மா சுமார் 15-20 கிராம், கறியுப்புத்தூள் 15-20 கிராம் 250-325 கிராம் வெந்நீரில் இவற்றைக் கலந்து சாப்பிட, அஞ்சு எட்டு நிமிஷத்திற்குள் வாந்தியாம்.

கடுகின் தூள் 4 கிராம், கறியுப்புத்தூள் 1 கிராம், இவ்விரண்டையும் 140-175 கிராம் வெந்நீரிற்கலந்து குழந்தைகளுக்குக் கொடுக்க வாந்தியாம்.

மூத்திர வர்த்தனாகார முறைகள்
கல்லடைப்பு நிவாரணை

காசினிவேர்த்தோல், சோம்புவேர்த்தோல் அல்லது சோம்பு, கருங்கொள்ளு இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், காசினிவிதைச் சூரணம், சோம்புச் சூரணம், சீமை வெள்ளரிவிதை, நாட்டு வெள்ளரிவிதை, கெக்கரிவிதை, முலாம்பழவிதை ஆகிய இவ்வித்துகளின் பருப்பு இவை வகை ஒன்றுக்கு 30 கிராம், கரபஸ்ஓமம், மயிர்ச்சிக்கி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 10 கிராம், சீனிசருக்கரை 175 கிராம்.

செய்முறை- முன்மூன்று சரக்குகளையும் நைய நறுக்கி முக்காற்படி ஜலம்வார்த்து மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சியிறக்கி நன்றாய் வடித்து, சீனிசருக்கரையைச் சேர்த்துப் பாகுசெய்து, மேற்படி சூரணங்களைச் சேர்த்து நன்றாகக் கலந்து சீசாவில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- 30-40 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- நீரடைப்பு, கல்லடைப்பு, நீர்ப்பை வரட்சி, நீர்க்குண்டிக்காய் வரட்சி ஆகியவைகள் தீரும்.

ஜலமஞ்சரி ஸிகாமதுபானம்

சோம்புச்சூரணம் 8 கிராம், காசினி விதைச் சூரணம் 40 கிராம், பருப்புக்கீரை விதைச் சூரணம் 25 கிராம், ரேவல் சீனிச் சூரணம் விதை 12 கிராம், கஷுஒஸ்விதைச் சூரணம் 12 கிராம், ரோஜாப்பூச் சூரணம் 60 கிராம், பன்னீர் 525 கிராம், பொதினா இலைத் தீநீர் 350 கிராம், சீனிசருக்கரை 700 கிராம்.

செய்முறை- மேற்படி சூரணங்களையெல்லாம் ஒரு துணியில் முடிந்து, பன்னீர்த் திராவக முதலியவற்றில் போட்டு ஓரிரவு ஊறவைத்துக் காலையிற் பிசைந்து வடிகட்டி சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கி கொள்ள வேண்டும்ட.

மேற்கண்ட பன்னீரையும் தீநீரையும் கலந்து அதிற் சீனிசருக்கரை சேர்த்துப் பாகு செய்து பதத்தில் மேற்படி சூரணங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கலந்து கொள்ளலாம்.

மாத்திரை- 20-25-35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- பசிதீபன முண்டாக்கும், கபத்தைப் பக்குவப்படுத்தும், வாயுவைக் கண்டிக்கும், மூத்திரத்தைப் பெருக்கும்.

வேறு

உலர்ந்த கரைப்பூ அல்லது தாமரைப்பூ, ரோஜாப்பூ, பனப்ஷாபூ இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், காவுஸாபான்பூ 35 கிராம், கோராப்பட்டு 8 கிராம், வெள்ளரிவிதை, சீமை வெள்ளரி விதை, முலாம்பழ விதை இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், காசினி விதை 28 கிராம், பருப்புக் கீரை விதை 20 கிராம், சுரை விதை 28 கிராம், காசினி வேர்த்தோல் 12 கிராம், காவுஸாபான் தீநீர் 350 கிராம், மணத்தக்காளியிலைத் தீநீர் 530 கிராம், சீனிச்சருக்கரை 450 கிராம்.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் நைய நறுக்கித் தீநீர்களை யொன்றாகச் சேர்த்து அவற்றிலிட்டு ஓரிரவு ஊறவைத்து, காலையில் அடுப்பேற்றி அரைப்பாகமாகச் சுண்டினபின் இறக்கி நன்றாகப் பிசைந்து வடித்துச் சக்கை நீக்கி, அதில் சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சி ஷர்பத் பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- 20-35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- மூத்திரத்தை அதிகப்படுத்தும். இருதயத்தைப் பலப்படுத்தி மனந்துடித்தல் என்னும் வியாதியைத் தீர்க்கும்.

வேறு

காசினிவிதை 25 கிராம், வெள்ளரிவிதை, சீமை வெள்ளரி விதை, கெக்கரி விதை, முலாம்பழ விதை, கரபஸ் ஓமம், கஷூஸ் விதை இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், சோம்பு வேர்த்தோல், பெருலவங்கப்பட்டை இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், சோம்பு, திராக்ஷைப்பழம், காசினிவேர்த்தோல் இவை வகை ஒன்றுக்கு 16 கிராம், ரோஜாப்பூ 20 கிராம், அனிசூன் 12 கிராம், சிறுநெருஞ்சிமுள் 24 கிராம், கரபஸ்ஓமம் வேர்த்தோல் 12 கிராம், சரக்கொன்றைப்புளி 20 கிராம், நிலக்கடம்பு 2 கிராம், மணத்தக்காளியிலை ரசம் 75 கிராம், காசினியிலை ரசம் 700 கிராம், மஞ்சிட்டி 20 கிராம், சீனி சருக்கரை 875 கிராம்.

செய்முறை- இவற்றில் இரண்டு ரசத்தைத் தவிர மற்றவைகளை யெல்லாம் நைய நறுக்கி முக்காற்படி ஜலத்திற் போட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாளெடுத்துக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து நன்றாய் வடித்துச் சக்கை நீக்கி வைத்துக் கொள்ள வேண்டும். மேற்படி யிரண்டு ரசத்தையும் தனித்தனிக் காய்ச்சித் *தெளிநீரெடுத்து

---

* இவற்றைச் செய்யுங்கிரமம் ''காசினித் தெளிநீர்'' என்னும் தலைப்பிற் பார்க்க.

மேற்படி கிஷாயத்தையும் கூடக் கலந்து சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- 20-35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- நீரைப் பெருக்கும், சூதகத்தை யுடைக்கும்.

நீரடைப்புக்குப் பற்று

முள்ளங்கி விதை, பருப்புக்கீரை விதை, சிறுநெருஞ்சி முள், வெடியுப்பு, எலிப்புழுக்கை இவை வகை ஒன்றுக்கு சமனெடையெடுத்து முள்ளங்கிக் கிழங்கு ரசம்விட்டு மை போல நன்றாயரைத்து வயிறு, அடிவயிறு முதலிய ஸ்தானங்களிற் பற்றுப்போட நீரடைப்பு நீங்கி நீர் நன்றாயிறங்கும்.

நீர்க்கட்டுக்குத் திராவகம்

வெள்ளரிவிதை, சீமை வெள்ளரிவிதை, கெக்கரிவிதை காசினி விதை இவை வகை ஒன்றுக்கு 25 கிராம், முலாம் பழவிதை, பருப்புக்கீரை விதை, காசினிவேர்த்தோல், பனப்ஷாபூ இவை வகை ஒன்றுக்கு 70 கிராம், சிறுநெருஞ்சி முள், சரக்கொன்றைப் புளி இவை வகை ஒன்றுக்கு 210 கிராம், ஆலுபுகாரா 390 கிராம், மணத்தக்காளியிலைத் தீநீர் இரண்டரை படி, காவுஸுபான் தீநீர் நாலேகால் படி, காசினியிலை ரசம் இரண்டரைபடி, மணத்தக்காளியிலை ரசம் இரண்டரைபடி.

செய்முறை- இவைகளில் சரக்குகளை நன்றாக நைய நறுக்கித் திராவகம், இலைரசம் இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து அவற்றில் ஓரிரவு ஊறவைத்து மறுநாட்காலையில் வாலையிலிட்டு 5-6 படி திராவகம் வடித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- 105 கிராம் சாப்பிடவும்.

உபயோகம்- மூத்திரத்தைப் பெருக்கும். நீர்க்குண்டிக்காய் வியாதிகளுக்கு அதிக உபயோகப்படும்.

கல்லடைப்பு மாஜூன்

பனப்ஷாபூ 6 கிராம், ரோஜாப்பூ 9 கிராம், கருங்கொள்ளு 9 கிராம், சோம்பு 6 கிராம், அனிசூன் 5 கிராம், கரபஸ்ஓமம் 6 கிராம், காசினிவிதை, வெள்ளரிவிதை, சீமை வெள்ளரி விதை, கெக்கரிவிதை, முலாம்பழவிதை இவை வகை ஒன்றுக்கு 15 கிராம், முள்ளங்கி விதை 10 கிராம், திராக்ஷப்பழம் 30, சிறுநெருஞ்சி முள் 12 கிராம், உலர்ந்த சுரைப்பூ 16 கிராம், குல்கந்து 10 கிராம், கடுக்காய் முறப்பா 10, மணத்தக்காளி தீநீர் 400 கிராம், பன்னீர் 400 கிராம், கருமணத்தக்காளியிலை ரசத் தெளிநீர் 100 கிராம்,

சீனிசருக்கரை 470 கிராம், சடாமாஞ்சிச் சூரணம் 6 கிராம், லவங்கப்பட்டைச் சூரணம் 16 கிராம், அகருகட்டைச் சூரணம் 5 கிராம், ரோஜாப்பூச் சூரணம் 9 கிராம், சோம்புச்சூரணம், கஷ்ஒஸ்விதைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 5 கிராம்.

செய்முறை- பனப்ஷாபூ முதல் பன்னீர் ஈறாயுள்ளவற்றில் சரக்குகளையெல்லாம் நையநறுக்கிப் பன்னீரையும் மணத்தக்காளித் தீநீரையும் கலந்து அதிற் போட்டு ஓரிரவு ஊறவைத்துக் காலையில் காய்ச்சி அரைப்பாகமாய்ச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து வடிகட்டிச் சக்கை நீக்கி அதிற் கருமணத்தக்காளியிலை ரசத்தெளிநீரைச் சேர்த்துச் சீனிசருக்கரையைப் பாகுசெய்து பதத்தில் சூரணங்களை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கலந்து நன்றாய்க் கிளறி பாகப்படி மாஜூன் செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை- 12-18-24 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- கல்லடைப்பு, நீரடைப்பு ஆகியவற்றை நீக்கித்தேகத்தைப் பலப்படுத்தும்.

சொர்ண ஜலமஞ்சரி மாஜூன்

உலர்ந்த சுரைப்பூ 25 கிராம், சீமை வெள்ளரிவிதை, நாட்டு வெள்ளரிவிதை, கெக்கரிவிதை, காசினிவிதை இவை வகையொன்றுக்கு 15 கிராம், காசினிவேர்த்தோல் 9 கிராம், முலாம்பழவிதை 10 கிராம், கஷ்ஒஸ்விதை 6 கிராம், இதை மாத்திரம் துணியில் முடிந்து கொள்ள வேண்டும். திராக்ஷைப் பழம் 18 கிராம், சிறுநெருஞ்சிமுள், ரோஜாப்பூ இவை வகை யொன்று 15 கிராம், சோம்பு 12 கிராம், மணத்தக்காளித் தீநீர், காவுஜபான் தீநீர் இவை வகையொன்றுக்கு படி முக்கால், காசினியிலைரசத் தெளிநீர் படி- 1/8, சீனிச்சருக்கரை 650 கிராம், இனிப்பு மாதுளம்பழ ரசம் 175 கிராம், அகருகட்டைச் சூரணம் 6 கிராம், றூமிமஸ்தகி, குங்குமப்பூ, ஜாதிப்பத்திரி, ஜாதிக்காய் இவற்றின் சூரணம் வகையொன்றுக்கு 3 கிராம், லவங்கப்பட்டை சூரணம், கஸ்தூரி இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், ஜரிஷ்க் 8 கிராம், மூங்கிலுப்புச் சூரணம் ஏழு கிராம், நிலக்கடம்புச் சூரணம் நான்கு கிராம், வெள்ளிரேக்கு-பதினைந்து, தங்கரேக்கு-பத்து.

செய்முறை- சுரைப்பூ முதல் காசினியிலை, ரசத்தெளிநீர் ஈறாயுள்ளவற்றில், எல்லாச் சரக்குகளையும் நைய நறுக்கி இரு தீநீர்களையும் ஒன்றாகக் கலந்து அதிற்போட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாட் காலையில் அடுப்பேற்றிக் காய்ச்சி அரைப்பாகமாகச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து வடிகட்டிச் சக்கைபோக்கிக் காசினித்தெளிநீர், இனிப்பு மாதுளம் பழரசம், ஜரிஷ்க் பழத்தில் கொஞ்சம் நீர் விட்டு ஜாக்கிரதையுடன் பிசைந்து வடிகட்டின நீர் ஆகியவற்றை

அதிற்கலந்து சீனிசருக்கரையைக் கரைத்துப் பாகு செய்து பதத்தில் மற்றச் சூரணங்களெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து புரட்டிக் கிண்டிக்கிளறி மாஜூன் பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- 12-18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- நீரைப் பெருக்கி வரட்சியை நீக்கி, இரைப்பையைப் பலப்படுத்தி, பசிதீபனத்தை யுண்டாக்கும்.

ஜலோதர மாஜூன்

அனிஸூன், கரபஸ் ஓமம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், மூலாம்பழ விதைப்பருப்பு எட்டு கிராம், செம்முள்ளங்கி விதைச் சூரணம் 5 கிராம், மூங்கிலுப்புச் சூரணம் 2 கிராம், சதகுப்பைச் சூரணம் 3 கிராம், றூமிமஸ்தகிச் சூரணம் 5 கிராம், அகருகட்டைச் சூரணம் 4 கிராம், ரோஜாப்பூச் சூரணம் 6 கிராம், வெள்ளரிவிதை, சீமை வெள்ளரிவிதை, கெக்கரிவிதை இவற்றின் பருப்பு வகை ஒன்றுக்கு 8 கிராம், விதைநீக்கின நெல்லிக்காய் முறப்பா பத்து, விதைநீக்கின கடுக்காய் முறப்பா-7, சீனிசருக்கரை 350 கிராம்.

செய்முறை- சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து முறப்பாக்களைச் சேர்த்தரைத்துச் சீனிசருக்கரையைப் பாகுசெய்து அதில் மேற்படி கலவையைக் கூட்டிக் கடைந்து பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- 12-18-24 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- நீரைப்பெருக்கி, வயிற்றுப்பிசம், உதரவாயு ஆகியவற்றை நன்றாகக் கண்டிக்கும்.

மூளையைப் பற்றின தாதுநஷ்ட சிகிச்சை

நண்பர்களே, முதற்பாகத்திற் சொல்லப்பட்டிருக்கிற மூளையைப் பற்றின தாதுநஷ்ட சிகிச்சையில், சுபாவச்சூடு, சுபாவக்குளிர்ச்சி ஆகியவைகளிலொன்று அதிகரித்திருந்தால், இவ்விரண்டாம் பாகத்தில் பொதுசிகிச்சை யென்பதிலும், சிகிச்சையின் பொது லக்ஷணமென்பதிலும் சொல்லியிருக்கிறதுபோல, அதற்கு எதிரான தனிச்சரக்குகளினாலும்; யோகமுறைகளினாலும் சாந்தப்படுத்திச் சமப்படுத்த வேண்டும் இவ்வகைகள் முன்னமே விரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. மாசுகள் அதிகரித்திருந்தால், அவற்றைப் பக்குவப்படுத்தும் முறைகளை உபயோகித்துப் பக்குவப்படுத்தி லகுபேதி, பேதி, நீர்பேதி முதலிய முன் சொல்லப்பட்டிருக்கும் பாகங்களில் தத்தமக்கு ஏற்ற முறைகளை உபயோகித்து அவற்றை நீக்கி, பின்வரும் முறைகளில் ஏற்றவைகளையும் உபயோகித்து மூளையைப் பலப்படுத்தி, தாதுவிர்த்திக்கான ஔஷதங்களை உபயோகப்படுத்த வேண்டும்.

மஸ்தக ரக்ஷணா திரிபலாதி லேகியம்

மஞ்சட் கடுக்காய்த்தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல், கற்கடகசிங்கி, தான்றிக்காய்த்தோல், சீமை நெல்லிமுள்ளி. இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், வாதுமையெண்ணெய் அல்லது பசுவின் நெய் 70 கிராம் காய்ச்சி நுரைபோக்கிச் சுத்திசெய்த தேன் 420 கிராம்.

செய்முறை - தேனைக் காய்ச்சிப் பதத்தில் சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து எண்ணெயை அல்லது நெய்யைவிட்டுப் பசையுண்டாக்கி மேற்படி பாகிலிட்டு நன்றாகக் கிண்டிக் கிளறிப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 8 கிராம், 20 கிராம் வரையிற் சாப்பிடலாம்.

உபயோகம் - மூளையைப் பலப்படுத்தும், இரைப்பையின் தளர்ச்சியை நீக்கும். மூலவியாதிகளுக்கும் உபயோகப்படும்.

கபால பலகார ஆமிலாதி ஹல்வா

சீமை நெல்லிமுள்ளி 420 கிராம், தண்ணீர் போட்டால் அழுந்தும் அகருகட்டை, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, மூங்கிலுப்பு, ஏலக்காய், தாளிசபத்திரி, உலர்ந்த கிச்சிலி நாரத்தந்தோல் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 30 கிராம், சீனி சருக்கரை 1500 கிராம், வெள்ளிரேக்கு 8 கிராம், தங்கரேக்கு 1 கிராம்.

செய்முறை - இரண்டுபடி நீரில் நெல்லிமுள்ளியைப் போட்டு நன்றாக வேகவைத்துக் கடைந்து அதிலுள்ள நார் முதலியவற்றை வடித்து நீக்கிவிட வேண்டும். சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் சூரணங்களை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கலந்து ஹல்வாபதத்திலிறக்கிக் கொஞ்சம் ஆறவிட்டு இளஞ்சூடா யிருக்கையில் ரேக்குகளை ஒவ்வொன்றாகப் போட்டு நன்றாக மர மத்தினாற் கடைந்து பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 6-12-18 கிராம் வரையில் சாப்பிடலாம்.

உபயோகம் - தலைமூளை, இருதயம் , இரைப்பை இவைகளைப் பலப்படுத்தும், ஜீரணசக்தியையும் பசி தீபனத்தையும் அதிகப்படுத்தும்.

கபாலோஷ்ண சாந்த பாயசம்

மேல்தோல் நீக்கின இனிப்பு வாதுமைக் கொட்டைப் பருப்பு 20 கிராம், மேல்தோல் நீக்கின தேங்காய் 10 கிராம், கசகசா, சுரைவிதைப் பருப்பு, முலாம்பழ விதைப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 5 கிராம்,

கோதுமை நொய் 10 கிராம், சீனிசருக்கரை 35 கிராம் வெள்ளாட்டுப்பால் 105 கிராம் பசுவின் நெய் 20 கிராம்.

செய்முறை - முதற் பாகத்தில் வாதுமைப்பருப்புப் பாயசத்தின் முறையைப் போல் செய்து கொள்ளவேண்டும்.

மாத்திரை - ஜீரணசக்திக் கேற்றபடி அவ்வளவையும் சாப்பிடலாம். குறைத்தும் அதிகப்படுத்தியும் சமயத்திற்குத் தக்கபடியும் சாப்பிடலாம்.

உபயோகம் - மூளையின் உஷ்ணத்தை நீக்கி அதைக் கொழுக்கப் பண்ணி, தேகத்தையும் கொழுப்பிக்கும்.

வேறு

வெள்ளாட்டுப்பால் 70 கிராம், பசுவின் வெண்ணெய், பசுவின் நெய் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், சுரைவிதைப்பருப்பு, நிஷாஸ்தா, நெய்யிட்டு வறுத்த கடலைமா, காஹூவிதை, மேல்தோல் நீக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 30 கிராம், பூசினிவிதைப்பருப்பு, கசகசா இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், சீனி சருக்கரை 60-70 கிராம்.

செய்முறை - இவற்றுள் பருப்பினங்களையும், காஹூ விதை, கசகசா ஆகியவைகளையும் அம்மியில் ஜலம்விட்டு நன்றாக அரைத்துக் காற்படி ஜலத்திற் கரைத்து வடிகட்டின பாலுடன் ஆட்டுப்பாலையும் சேர்த்து அதில் நிஷாஸ்தாவைப்பொடித்துப் போட்டுச் சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சி இரண்டு மூன்று கொதி வந்தபின் கடலைமாவையும் போட்டு நன்றாகக் கிண்டிக் கிளறிப் பாயசப் பக்குவமாகக் காய்ச்சி நெய்யையும் வெண்ணெயையும் போட்டு இறக்கிக்கொள்ள வேண்டும்.

மாத்திரை:- ஜீரணசக்திக் குறைவில்லாதவர்கள் ஒரே தடவையில் அவ்வளவையும் சாப்பிடலாம். ஜீரண சக்தி குறைவுள்ளவர்கள் சக்திக்கு ஏற்ற அளவாகச் சாப்பிட்டு வர வேண்டும். அப்போதைக் கப்போது புதிதாகச் செய்து கொள்ளவேண்டும்.

உபயோகம்- மூளையைப் பலப்படுத்தும். ஆண்மையை யுண்டுபண்ணும்.

வேறு

சீனிசருக்கரை 55 கிராம், மேல்தோல் நீக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு இருபது கிராம், பருத்திவிதைப் பருப்பு, சுரைவிதைப் பருப்பு, பசுவின் நெய், சுகுதாஸ்அரிசி, கசகசா இவை வகை ஒன்றுக்கு 10 கிராம். கஸ்தூரிப் பிரம்புத் திராவகம் அல்லது காவுசுபான் திராவகம் அல்லது சுத்த ஜலம் கால்படி.

செய்முறை- சீனிசருக்கரையும் நெய்யும் தவிர மற்றவைகளைத் தனித்தனி அம்மியிலிட்டு நன்றாகயரைத்து மேற்படி திராவகமொன்றிற் கரைத்து பிழிந்த சலத்தில் சீனி சருக்கரையைச் சேர்த்துப் பாயசபக்குவமாகக் காய்ச்சிக் கொள்ளவேண்டும்.

மாத்திரை- ஜீரணசக்திக்கு ஏற்ற அளவாய் ஒரே தடவை அல்லது பலதடவை சாப்பிடலாம்.

உபயோகம்- மூளையைப் பலப்படுத்தும், இரத்த சத்தை விளைவிக்கும்.

வேறு

கோதுமையுமி 35 கிராம்,மேல்தோல் நீக்கின தித்திப்பு வாதுமைப் பருப்பு 10, பருத்திவிதைப் பருப்பு, கசகசா இவை வகை ஒன்றுக்கு 5 கிராம், கொத்துமல்லிவிதை 3 கிராம், சீனிசருக்கரை 20-30கிராம்.

செய்முறை - கோதுமையுமியைக் காற்படி ஜலத்திற் போட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாட் காலையில் நன்றாகப் பிசைந்து வடித்த ஜலத்துடன் மற்றவைகளையும் அம்மியில் ஜலம்விட்டு நன்றாயரைத்து அரையாழாக்கு ஜலத்திற் கரைத்து வடித்த பாலையும் சேர்த்துச் சீனி சருக்கரையைக் கூட்டிப் பாயச பதமாய்க் காய்ச்சிக் கொள்ள வேண்டும்.

மாத்திரை:- ஜீரணசக்திக்கு ஏற்ற அளவாய் ஒரே தடவை அல்லது பலதடவை சாப்பிடலாம்.

உபயோகம்:- மூளையைப் பலப்படுத்தும். நித்திரையின்மை, தலைசுழற்சி, கிறுகிறுப்பு ஆகியவைகளை நீக்கும்.

வேறு

கோதுமையுமி 315 கிராம், மேல்தோல் நீக்கின தித்திப்பு வாதுமைப் பருப்பு எட்டு, கசகசா ஆறு கிராம், நிஷாஸ்தா பத்து கிராம், சீனிசருக்கரை, பன்னீர் இவை வகை ஒன்றுக்கு முப்பத்தைந்து கிராம், ஏலக்காய்ச்சூரணம் நான்கு கிராம், குங்குமப்பூ ஒரு கிராம், கஸ்தூரி குன்றியெடை இரண்டு.

செய்முறை- கோதுமையுமியை முன்பாகப்படி ஜலத்தில் ஓரிரவு ஊறவைத்துக் காலையில் நன்றாகப் பிசைந்து வடித்த ஜலத்துடன், வாதுமைப்பருப்பையும் கசகசாவையும் அம்மியில் ஜலம் விட்டரைத்து வடித்த பாலையும் சேர்த்து, அதில் நிஷாஸ்தாவைக் கரைத்துப் பன்னீரைக் கலந்து ஏலக்காய்ச் சூரணத்துடன் குங்குமப்பூவையும் கஸ்தூரியையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து மேற்படி பாயசத்தில் தூவி வெந்த பக்குவத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - சீரணசக்திக்கு ஏற்ற அளவாய் ஒரே தடவை அல்லது பலதடவை சாப்பிடலாம்.

உபயோகம்- மூளையைப் பலப்படுத்தும், இரத்தத்தை விளைவிக்கும்.

குறிப்பு

இந்த முறையில் கொத்தமல்லி விதை, காஹுவிதை, சுரைவிதைப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், இவற்றை அரைத்துப் பிழிந்த பாலையும் சேர்த்துச் செய்தால் அதிகப் பிரயோஜனத்தைத் தரும்.

ஏலக்காயை மட்டும் குறைந்த அளவாகவும் அதிக அளவாகவும் இஷ்டபடி சேர்த்துக் கொள்ளலாம்.

மஸ்தக பலாபிவிர்த்தி காஜர் ஹல்வா

செம்முள்ளங்கி 350 கிராம், நுரைநீக்கிச் சுத்தி செய்த நல்ல கெட்டித்தேன் 250 கிராம், சீனிசருக்கரை 420 கிராம், மேல்தோல் நீக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, பிஸ்தாப்பருப்பு, விதை நீக்கின பேரீச்சங்காய் இவை வகை ஒன்றுக்கு 55 கிராம், காரலில்லாத சாரப்பருப்பு, மேல்தோல் நீக்கி நெய்யில் வறுத்தெடுத்த தேங்காய் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி இவற்றின் சூரணம் வகைக்கு 4 கிராம், கஸ்தூரி 3 கிராம், குங்குமப்பூ 2 கிராம், பசுவின் நெய் 105 கிராம் , தாழம்பூத் தீநீர் 700 கிராம்.

செய்முறை - அரைப்படி ஜலத்தில் மேற்படி செம்முள்ளங்கிக் கிழங்கைப் போட்டு வெண்ணெய்போல் நன்றாக வெந்தபின் நன்றாகப் பிசைந்து தாழம்பூத் தீ நீரை விட்டு நன்றாகக் கடைந்து வடித்த ஜலத்துடன் சீனிசருக்கரையையும் தேனையும் சேர்த்துக் காய்ச்சி இளம்பதத்தில் பேரீச்சங்காயையும் பருப்பினங்களையும் நன்றாகக் கரைத்து சூரணங்களுடன் கலந்து பாகிற் சேர்த்து நன்றாகக் கிளறி நெய் வார்த்து நீர் சுண்டின பக்குவத்தில் கீழிறக்கிக் கஸ்தூரியையும் குங்குமப்பூவையும் தாழம்பூத் தீநீரை விட்டரைத்து அதிற்கலந்து ஹல்வா செய்து கொள்ளவேண்டும்.

மாத்திரை - 12- 18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மூளையைப் பலப்படுத்தும். உள்ளுறுப்புகளையும் தேகத்தையும் கொழுப்பிக்கும்.

மஸ்தக பலாபிவிர்த்தி பூந்தாழம் ஹல்வா

* அன்னாசிப்பழ முறப்பா, சீமையிலந்தைப் (apple) பழ முறப்பா, நெல்லிக்காய் முறப்பா இவை வகை ஒன்றுக்கு 55 கிராம், சீனிசருக்கரை 315 கிராம், விதையில்லாத திராக்ஷைப்பழம், விதையுள்ள திராக்ஷைப்பழம் இவை வகை ஒன்றுக்கு 45 கிராம், செஞ்சந்தனம், வெண்சந்தனம் இவற்றின் சூரணம் வகையொன்றுக்கு இருபது கிராம், சடாமாஞ்சிற் சூரணம் 8 கிராம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி இவற்றின் சூரணம் வகைக்கு 2 கிராம் , சீமைப் பூமிசருக்கரைக்கிழங்கு, லவங்கப்பட்டை, நெய்யில் வறுத்த கருவேலம்பிசின், வேங்கை மரப்பிசின், பூங்காவி, உலர்ந்த சுரைப்பூ, ஏலம், வறுத்த பருப்புக்கீரை விதை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், வெள்ளிரேக்கு 5 கிராம், தங்க ரேக்கு20 கிராம், அம்பர், கஸ்தூரி இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், பச்சைக்கர்ப்பூரம் 2 கிராம்.

செய்முறை - முன் முறப்பாக்களை வெந்நீரிற் கழுவியெடுத்துத் தாழம்பூத் தீ நீர் பலம் பத்தில் நன்றாக மத்தித்துப் பிசைந்து வடிகட்டினதிற் சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் திராக்ஷைப்பழங்களிரு வகையையும் ஜலம் விட்டரைத்து மீந்த தாழம்பூத் தீ நீரிற் கலக்கிவடித்த ஜலத்தை மேற்படி பாகிற்சேர்த்துக் காய்ச்சிப் பதத்திற் சூரணங்களையொன்றாகக் கலந்து நன்றாகக் கிண்டிக்கிளறி, அம்பர் முதலிய மூன்றையும் கல்வத்திற்போட்டு, பன்னீர் வார்த்து நன்றாக அரைத்து அதிற்கூட்டி ரேக்குகளையும் சேர்த்துக் கீழ்மேலாக நன்றாகப்புரட்டி ஹல்வா செய்துகொள்ளள வேண்டும்.

மாத்திரை - 12-15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மூளையையும் இருதயத்தையும் பலப்படுத்தித் தாது நஷ்டத்தைத் தீர்க்கும்.

பாளிதாதி ஹல்வா

பசுவின் நெய் 70 கிராம், சீனிசருக்கரை 175 கிராம், சுரைவிதைப்பருப்பு 55 கிராம், பருத்தி விதைப்பருப்பு, மேல்தோல் நீக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, பன்னீர் இவை வகை ஒன்றுக்கு 30 கிராம், காரலில்லாத சாரப்பருப்பு 10 கிராம், கசகசா 6 கிராம், ஜாதிப்பத்திரிச் சூரணம் 45 கிராம், மூங்கிலுப்பு, ஏலக்காய் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 3 கிராம்.

---

* இதன் முறையை முதற்பாகத்தில் பக்குவ லக்ஷணத்தில் ''முறப்பா'' என்னும் தலைப்பைப் பார்க்க.

செய்முறை - பருப்பினங்களையும் கசகசாவையும் சுத்த ஜலம் வார்த்தரைத்துச் சூரணங்களுடன் கலந்து, நெய், சீனிசருக்கரை, பன்னீர் இம்மூன்றையும் சேர்த்துக்காய்ச்சி முன் மருந்துகளையும் சேர்த்துட் புரட்டி ஹல்வாவாகச் செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 9, 12 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மூளையைப் பலப்படுத்தும், தலைச் சுழற்றை நீக்கும். தாது நஷ்டத்தைத் தீர்க்கும்.

காவுஜுபான் பானம்

காவுஜுபான் இலை, காவுஜுபான் பூ, நைய நறுக்கின கொத்துமல்லிவிதை, பாலங்கூ விதை, நைய நறுக்கின பஹமனேசுபேத், சந்தனத்தூள், எலுமிச்சந்துளசிவிதை இவைகள் வகை ஒன்றுக்கு 35 கிராம், நைய நறுக்கின அக்கராகாரம் 30 கிராம், குங்குமப்பூ, சுத்திசெய்த கோராப்பட்டு இவை வகை ஒன்று 20 கிராம், பாகப்படுத்தின நற்பவளம், அம்பர் இவை வகை ஒன்றுக்கு 3 கிராம், காவுஜுபான் தீநீர் 175 கிராம், மணத்தக்காளி திராவகம் 175 கிராம், சீனிசருக்கரை 875 கிராம், வெள்ளிரேக்கு தங்கரேக்கு இவை வகை ஒன்றுக்கு 3 கிராம்.

செய்முறை - இவற்றின் காவுஜுபான் முதல் கோராப்பட்டு ஈறாகவுள்ளவைகளை முக்காற்படி சுத்தஜலத்தில் ஓரிரவு ஊறவைத்து மறுநாட்காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கிப் பிழிந்து வடிகட்டின கியாழத்துடன் இரண்டுவகை நீரையுங் கலந்து சீனிசருக்கரையைச் சேர்த்து பாகுசெய்து தடித்த பதத்தில் கீழிறக்கி அம்பரையும் பவளத்தையும் பன்னீர் வார்த்தரைத்து அதிற்சேர்த்து இரண்டு வகை ரேக்கையும் போட்டுக் கலந்து பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 8, 12 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மூளையைப் பலப்படுத்தும். மனதிற்கு ஆனந்தத்தை யுண்டு பண்ணும், தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வர மார்புதுடித்தல், பைத்தியரோகம் ஆகியவை தீரும்.

வேறு

காவுஜுபான் இலை, காவுஜுபான் பூ, நைய நறுக்கின கொத்தமல்லிவிதை, நைய நறுக்கின பஹமனே ஸுபேத், பாலங்கூ, சந்தனத்தூள், எலுமிச்சந்துளசிவிதை, கத்தரித்த கோராப்பட்டு இவைகள் வகை ஒன்றுக்கு 12 கிராம், சீனி சருக்கரை 260 கிராம், அம்பர் 6 கிராம்,

தங்கரேக்கு 18 கிராம், வெள்ளிரேக்கு 40 கிராம், காவுஜுபான் திராவகம் 175 கிராம், தாழம்பூத் திராவகம் 175 கிராம்.

செய்முறை- காவுஜுபான் முதல் கோராப்பட்டு ஈறாயுள்ளவைகளைக் காற்படி ஜலத்தில் ஓரிரவு நன்றாக ஊற வைத்துக் காலையில் நன்றாகப் பிசைந்து வடிகட்டின ஊறற் கிஷாயத்துடன் திராவகங்களைக் கலந்து சீனிசருக்கரையைச் சேர்த்துப் பாகுசெய்து தடித்தபதத்தில் அம்பரைப் பன்னீர் வார்த்தரைத்து அதிற்சேர்த்து இரண்டு வகை ரேக்குகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - விராகனெடை 8, 12 கிராம் சாப்பிடலாம் .

உபயோகம் - மூளையையும் இருதயத்தையும் பலப்படுத்தும், மனதிற்கு ஆனந்தத்தை யுண்டாக்கும். மேகநீரைப்போக்கும். தொற்று வியாதியைத் தடுக்கும். தாது நஷ்டத்தைக் கண்டிப்பாய் நிவர்த்தி செய்யும்.

வித்தாதி உஷ்ண சாந்த தயிலம்

பறங்கிக்காய் என்னும் இனிப்புப் பூசனிக்காய் விதைப் பருப்பு, முலாம்பழ விதைப்பருப்பு, கல்யாணப் பூசனிக்காய் விதைப் பருப்பு, கல் முதலியவை போக்கிச் சுத்திசெய்த காஹுவிதை *மேல்தோல் நீக்கின வாதுமைப் பருப்பு இவைகள் வகைக்கு 70 கிராம், சீமை வெள்ளரிவிதைப் பருப்பு, கெக்கரிவிதைப் பருப்பு, சுரைவிதைப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 35 கிராம்.

செய்முறை -பருப்பினங்களை எண்ணையெடுக்கும் யந்திரத்தில் போட்டு எண்ணை யெடுத்துக்கொள்வதுதான் லகுவானவழி. அதிலில்லாவிட்டால் எல்லாவற்றையும் கல்வத்திற்போட்டுக் குழவியினால் நையநறுக்கிப் பரும்படியாகத் தூட்செய்து பக்குவமாக வெந்நீர் தெளித்து உண்டை செய்து கையினால் அழுத்த அல்லது குழவியினால் நசுக்கத் தைலம் புறப்படும். இவ்விதம் எடுப்பது கை முறை தெரிந்த அநுபவசாலிகளுக்கன்றி, மற்றவர்களுக்கு அருமை. ஆகையால் அப்படிப்பட்டவர்கள் மேற்படி சரக்குகளை நன்றாக அரைத்துப் பதினைந்து பலம் ஜய்த்தூன் எண்ணெயில் அல்லது நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சித் திரள் பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம் - இதைத் தலையிற் பூசுவதனால் மூளையிலுள்ள உஷ்ணத்தைத் தணித்து அதைப் பலப்படுத்தும் நித்திரையை யுண்டாக்கும்.

---

* இதை வெந்நீரிற்போட்டு மேல்தோலை நீக்காமல் ரட்டுத்துணியிற் போட்டுத் தேய்த்து நீக்க வேண்டும்.

கபால பைரவம்

ஆட்டின் தலைமுளை 175 கிராம், ஆண் அடைக்கலான் குருவித் தலைமுளை 70 கிராம், பசுவின் நெய் 175 கிராம்.

செய்முறை - நெய்யைக் காய்ச்சி மேற்படி மூளைகளைப் போட்டு நன்றாகச் சிவக்கப் பொரித்து இறக்கி நெய்யை இறுத்துக் கொள்ளவும்.

உபயோகம் - ஜீரணசக்திக்கு ஏற்ற அளவு மேற்படி மூளையைக் கோதுமை ரொட்டியுடன் அல்லது யவைக் கோதுமை ரொட்டியுடன் காலையில் சாப்பிட்டு, நெய்யைச் சிரசில் பூசிவரவேண்டும். ஒரு தடவை பக்குவஞ்செய்த மூளை மறு தினத்திற்கு உபயோகப்படாது. நெய் மாத்திரம் எப்பொழுதும் உபயோகப்படும். இவ்விதம் தொடர்ச்சியாகச் சாப்பிட்டும் பூசியும்வர, துற்பலப்பட்ட மூளை பலப்படும். ஞாபகசக்தி அதிகரிக்கும் மறதி யொழியும். புத்தித் தெளிவும் கண்ணொளிவும் உண்டாகும்.

இலகு கபால சஞ்சீவி ஷர்பத்து

காவுஜுபான்பூ, காவுஜுபான் இலை இவை வகை ஒன்றுக்கு 105 கிராம், எலுமிச்சந்துளசி விதை, சந்தனத் தூள், கத்தரித்த கோராப்பட்டு இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், சீனிசருக்கரை 700 கிராம்.

செய்முறை - சரக்குகளையெல்லாம் ஒன்றரைபடி ஜலத்தில் ஒரு நாள் ஊறவைத்துப் பிசைந்து வடிகட்டின ஊறற்கிஷாயத்திற் சீனிசருக்கரையைச் சேர்த்து ஷர்பத்து பாகமாகக் காய்ச்சிக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 20, 30 கிராம் சாப்பிடவேண்டும்.

உபயோகம் - மூளையைப் பலப்படுத்தும். புத்திமந்தத்தைப் போக்கும்.

மஹா கபால சஞ்சீவி ஷர்பத்து

சந்தனத்தூள் 105 கிராம், பிரம்பிலைத் திராவகம் அல்லது காவுஜுபான் திராவகம் 700 கிராம் தித்திப்பு மாதுளம்பழரசம் ; புளித்தெளிநீர், எலுமிச்சம் பழரசம் இவை வகை ஒன்றுக்கு 105 கிராம் சீனிசருக்கரை 85 கிராம் பன்னீர் விட்டிழைத் துலர்த்தின சந்தனம் 6 கிராம் மூங்கிலுப்பு, பச்சைக் கர்ப்பூரம் இவை வகை ஒன்றுக்கு 3 கிராம் பக்குவப்படுத்தின துளையிடாத நன்முத்து 9 கிராம், தங்கரேக்கு 4 கிராம் வெள்ளிரேக்கு 5 கிராம்.

செய்முறை - முன் திராவகத்தில் முதலிலுள்ள சந்தனத் தூளை ஒரு சீலையில் தளர்ச்சியாக முடிந்து போட்டு ஒரு நாள் ஊறவைத்து அடுப்பேற்றி மெதுவாயெரித்து அரைப்பாகமாகச் சுண்டினபின், முடிச்சை நன்றாகக் கசக்கிப் பிழிந்து சக்கையையும் முடிச்சையும் நீக்கி அந்தக் கிஷாயத்தில் மூன்று ரசங்களையும் சீனிசருக்கரையையும் சேர்த்துக் காய்ச்சி ஷர்பத்து பதத்தில் இரண்டுவகை ரேக்குகளையும் சேர்த்துக் கீழிறக்கி ஆறினபின்,சந்தன முதலியவைகளை நன்றாகப் பொடித்துத் தூவி மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- *6-9* கிராம் பருப்புக்கீரை விதையை அரைத்துப் பிழிந்த ரசம் 12 கிராமுடன் கலந்து சாப்பிட வேண்டும்.

உபயோகம் - மூளையையும் இருதயத்தையும் பலப்படுத்தும், உஷ்ணம் அதிகரிக்கும், ஈரலையும் சமப்படுத்தும்.

மங்களகர திராவகம்

ஆலுபுகாராப்பழம் 6, மஞ்சட்கடுக்காய்த் தோல், சூரத்துக் கடுக்காய்த் தோல், கற்கடகசிங்கி, நெல்லி முள்ளி, தான்றிக்காய்த் தோல், பனப்ஷாபூ, ரோஜாப்பூ, கொட்டைக்கரந்தைப்பூ, சுத்தி செய்த கோராப்பட்டு, சிதைத்த வெள்ளரி விதை, சிதைத்த காசினி விதை இவைகள் வகை ஒன்றுக்கு 100 கிராம், சூரத்து நில ஆவாரை, சிதைத்த மூலாம்பழவிதை, காவுஜுபான், உலர்ந்த தாமரைப்பூ இவை வகை ஒன்றுக்கு 55 கிராம், சிதைத்த உஸ்துகுத்தூஸ் 45 கிராம், சிதைத்த சோம்பு, உலர்ந்த மருக்கொழுந்து இவை வகை ஒன்றுக்கு 25 கிராம், காவுஜுபான் திராவகம் படி 6, பிரம்பிலைத் திராவகம் படி 5, கருமணத்தக்காளி ரசத்தெளிநீர் ஒன்றரை படி.

செய்முறை - காவுஜுபொன் திராவகம், பிரம்பிலைத் திராவகம் இவ்விரண்டையும் கலந்து, அதிற்சரக்குகளை யெல்லாம் போட்டு ஓரிரவு ஊற வைத்துத் திராவக வாலையிலிட்டு கருமணத்தக்காளி ரசத்தெளி நீரையும் அதிற்சேர்த்து ஏழுபடி திராவகம் வடித்து, அதில் முன்சொன்ன சரக்குகளை அதனதன் எடையிற் பாதிபோட்டு ஓரிரவு ஊறவிட்டு ஒன்றரை படி திராவகம் வடித்துக்கொள்ள வேண்டும்.

மாத்திரை - 35- 55 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மூளையையும், இருதயத்தையும் பலப்படுத்தி தாது நஷ்டத்தைத் தீர்க்கும்.

கபால வீரிய மாங்கிஷ திராவகம்

கொழுத்த குட்டி யாட்டிறைச்சி நிணம், எலும்பு, நரம்பு முதலியன நீக்கி 1400 கிராம், எலும்பு முதலியவை நீக்கின கோழிக்குஞ்சிறைச்சி 1400 கிராம், எலும்பு முதலியவை நீக்கின நிலக்காடையிறைச்சி 175 கிராம், சிதைத்த கொத்துமல்லி விதை 35 கிராம், சிதைத்த ஏலக்காய் 70 கிராம்.

சந்தனத்தூள், செஞ்சந்தனத்தூள், சிதைத்த கொத்துமல்லி விதை, சிதைத்த சடாமாஞ்சில், சிதைத்த சோம்பு, சிதைத்த பஹமனேஸுபேத் இவைகள் வகை ஒன்றுக்கு 12 கிராம், ஆலுபுகாரா 35 கிராம், ரோஜாப்பூ, பனப்ஷாபூ, சுரைவிதைப்பருப்பு, சிதைத்த காஹுவிதை, கோராப்பட்டு, காவுஜுபொன் இலை, சிதைத்த காசினிவிதை, சீமைநெல்லிமுள்ளி வெள்ளரி விதைப்பருப்பு, குச்சி முதலியவை நீக்கின ஜரிஷ்க், தான்றிக்காய்த்தோல், பேதானா இவைகள் வகை ஒன்றுக்கு 50 கிராம், அகருகட்டை, மருக்கொழுந்து காவு ஜுபான்பூ இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், காவுஜுபான் திராவகம், பிரம்பிலைத் திராவகம் இவை வகை ஒன்றுக்கு அரைபடி, தாழம்பூத் திராவகம் கால்படி.

வெண் தாமரை அல்லது தாமரைப்பூ விதழ் 245 கிராம், உலர்ந்ததாயின் 70 கிராம், செம்பரத்தம்பூவிதழ் 175 கிராம், இனிப்பு மாதுளம்பழ ரசம், திராக்ஷைப்பழ ரசம், கிச்சிலி நாரத்தம்பழ ரசம் இவை வகை ஒன்றுக்கு 105 கிராம், சீமையிலந்தைப்பழம் (apple) ரசம் 175 கிராம், ஜம்புநாவற்பழ ரசம் 70 கிராம்.

மூங்கிலுப்பு, சந்தனத்தூள் இவை வகை ஒன்றுக்கு 30 கிராம், அம்பர் ஐந்து குன்றியெடை, கஸ்தூரி நான்கு குன்றியெடை, குங்குமப்பூ 2 கிராம்.

செய்முறை - இவற்றுள் மூங்கிலுப்பு முதல் குங்குமப்பூ ஈறாக உள்ளவற்றை வஸ்திரத்துண்டில் பொட்டணமாக முடிந்து வேறே வைத்துக் கொள்ளவேண்டும், முந்தின ஐந்து வஸ்துக்களை மாத்திரம் சேர்த்து முதற்பாகத்தில் "இலகுதீக மோகனாதலேகி" யத்தின் செய்முறையிற் சொல்லியிருப்பது போல் பாகப்படுத்தி வடிகட்டாமல் இறைச்சியுடன் வைத்துக்கொள்ள வேண்டும். திராவகம் மூன்றையும் ஒன்றாகக் கலந்து இரண்டாம் பாராவிற் சொல்லப்பட்ட சரக்குகளையெல்லாம் அதிற்போட்டு ஓரிரவு ஊற வைத்துக் காலையில் முன் சித்தப்படுத்தினவற்றையும் சேர்த்து வாலையிலிட்டு மூன்றாம் பாராவிற் கூறப்பட்ட புஷ்பங்களையும் சேர்தது அடுப்பேற்றி முன் முடிந்து வைத்திருக்கும் முடிச்சைத் திராவகம் வடியும் குழாயின் நுனியில் வடியும் திராவகம் அதில் தங்கி வடியும்படியாகக் கட்டித் திராவகம் வடித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 35- 70 கிராம் சாப்பிடலாம்

உபயோகம் - மூளை, இருதயம், இரைப்பை முதலிய உள்ளுறுப்புகளுக்குப் பலத்தைக் கொடுத்து அடங்காத வீரியத்தை யுண்டாக்கும்

பராக்கிரம கபால ரக்ஷணி

விதையில்லாத திராக்ஷப்பழம் விதையுள்ள திராக்ஷப் பழம் இவை வகைக்கு 60 கிராம்,சிதைத்த பரங்கிப்பட்டை 45 கிராம், கோராப்பட்டு 35 கிராம், சிதைத்த காஹூ விதை, காவுஜூபான் இலை, உலர்ந்த தாமரைப்பூ, பனப்ஷாபூ இவை வகை ஒன்றுக்கு பத்து கிராம், வெள்ளரி விதைப் பருப்பு உலர்ந்த கிச்சிலி நாரத்தம்பழத்தோல் தர்பூஜ் என்னும் கொம்மட்டிப்பழ விதைப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், சீமையிலந்தைப் பழம் (Thorn apple) 5, உஸ்துகுத்தூஸ் 8 கிராம், சுத்தஜலம் முக்கால் படி.

இடித்துச் சூரணித்துப் பசுவின்நெய் பசையுண்டாக்கின கடுக்காய்த்தோற் சூரணம், அவ்விதம் செய்த தான்றிக்காய்த்தோற் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 30 கிராம், சீமைநெல்லிமுள்ளிச் சூரணம் 55 கிராம், பிஸ்தா மேல்தோலின் சூரணம் 1 கிராம் , கொத்துமல்லிவிதைச் சூரணம் 3 கிராம், சீனிசருக்கரை 350 கிராம்.

செய்முறை - முன் பாராவில் சொல்லப்பட்ட சரக்குகளை யெல்லாம் ஜலத்தில் ஓரிரவு ஊறவைத்துக் காலையில் எடுத்து நன்றாகப் பிசைந்து வடிகட்டின ஊறல்கிஷாயத்திற் சீனிசருக்கரையைச் சேர்த்துப் பாகுபதத்திற் இரண்டாம் பாராவிற் சொல்லிய சூரணங்களை யெல்லாம் அதிற்கொட்டிக் கலந்து நன்றாக மிஸ்ரமித்து இறக்கிக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 18- 24 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மூளையைப் பலப்படுத்திப் புத்தியைத் தெளியச் செய்து ஞானத்தை அறியும் சக்தியை யுண்டாக்கும்.

ஞானாபிவிர்த்தி மனோரஞ்சிதம்

விதை நீக்கின நெல்லிக்காய் முறப்பா, சீமையிலந்தைப்பழ (Apple) முறப்பா இவை வகை ஒன்றுக்கு 350 கிராம், சந்தனம், செஞ்சந்தனம்,மூங்கிலுப்பு, உலர்ந்த கிச்சிலி நாரத்தம்பழத்தோற் சூரணம் இவை வகை ஒன்றுக்கு எட்டு கிராம், பக்குவப்படுத்தின துளையிடாத நன்முத்து, பக்குவப் படுத்தின நற்பவளம், அகருகட்டைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு பத்து கிராம், பக்குவப்படுத்தின கஹறூபா, சுரைவிதைப்பருப்பு, கொத்துமல்லிவிதைச் சூரணம், பேதானாவிதைச் சூரணம், இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், காவுஜூபான்பூ 12 கிராம், கஸ்தூரி 4 கிராம், குங்குமப்பூ 6 கிராம், தித்திப்பு மாதுளம்பழ ஷர்பத் 100 கிராம், சீனிசருக்கரை 400 கிராம், பன்னீர் 490 கிராம், கோராப்பட்டு 20 கிராம்.

செய்முறை - கோராப்பட்டை ஒன்றரை ஆழாக்கு நீரில் ஊறவைத்துக் காய்ச்சி அரைப்பாகமாகச் சுண்டின பின் இறக்கி வடிகட்டிக்

கொள்ள வேண்டும் கஸ்தூரியையும் குங்குமப்பூவையும் பன்னீர்வார்த்து நன்றாயரைத் தெடுத்துக்கொள்ள வேண்டும். இரண்டு முறப்பாக்களையும் அம்மியில் பன்னீர் விட்டரைத்து வடித்துச் சக்கை நீக்கின ரசத்தில் மாதுளம்பழ ஷர்பத், பட்டுக்கஷாயம்; சீனிசருக்கரை ஆகியவற்றைக் கூட்டிப் பாகுசெய்து பதத்திற் சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கொட்டிக் கலந்து சுரைவிதைப் பருப்பை வெண்ணெய்போல் அரைத்துச் சூரணத்திற் கலந்து மேற்படி பாகிற்போட்டுக் கிண்டிக்கிளறி, கஸ்தூரியோகத்தையும் சேர்த்து நன்றாக மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை-12, 16 கிராம் சாப்பிடலாம்

உபயோகம் - மூளையைப் பலப்படுத்தி அறிவை அபிவிர்த்தி செய்யும். பசி தீபனத்தை யுண்டாக்கும். மனதிற்கு ஆனந்தத்தை விளைவிக்கும்.

ஞானபிவிர்த்தி சொர்ண மனோரஞ்சிதம்

சிதைத்த பரங்கிச் சக்கை 70 கிராம், கோராப்பட்டு 35 கிராம், சீமையிலந்தைப் பழம் (Thorn apple)20 கிராம், உஸ்துகுத்தூஸ், காவுஜூபான் இலை, பனப்ஷாபூ, மயிர்ச் சிக்கி இவை வகை ஒன்றுக்கு 4 கிராம்,மணத்தக்காளியிலைத் திராவகம், காவுஜூபான் திராவகம், இவை வகை ஒன்றுக்கு 35 கிராம்,

சீனிசருக்கரை 260 கிராம், விதையில்லாத திராக்ஷப்பழம், விதையுள்ள திராக்ஷப்பழம் இவை வகை ஒன்றுக்கு 45 கிராம், விதை நீக்கின கடுக்காய் முறப்பா 35 கிராம், சீமையிலந்தைப்பழ (Apple)முறப்பா 70 கிராம், 35 கிராம் பேதானா விதையை அரையாழாக்கு ஜலத்தில் ஊற வைத்தெடுத்த கோமைநீர்.

தாளிசப்பத்திரிச் சூரணம் 6 கிராம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி இவற்றின் சூரணம் வகைஒன்றுக்கு 4 கிராம், மேல்தோல் நீக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, மேல்தோல் நீக்கின பிஸ்தாப்பருப்பு, காரலில்லாத சாரப்பருப்பு, சுரை விதைப்பருப்பு, அக்றோட்டுப் பருப்பு, முலாம்பழவிதைப்பருப்பு, கல்யாண பூசனிக்காய் விதைப் பருப்பு, இவைகள் வகை ஒன்றுக்கு 20 கிராம், தாழம்பூத் திராவகம் 35 0 கிராம்.

மூங்கிலுப்பு, காவுஜூபான்பூ, தாமரைப்பூ, பஹமனே ஸூபேத், பஹமேனஸூறுக், தூதரிஸூபேத், தூதரிஸூறுக், பிஸ்தாமேல்தோல், லவங்கம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், கிச்சலி நாரத்தம்பழத்தோற் சூரணம் 8 கிராம்.

அம்பர், கஸ்தூரி இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், வெள்ளிரேக்கு 4 கிராம், தங்கரேக்கு 1 கிராம்.

செய்முறை - இவற்றுள் பறங்கிச்சக்கையை முதலில் இலந்தைப்பழம் ஈறாகவுள்ளவற்றை ஒரு பாத்திரத்திற் போட்டு மணத்தக்காளித் திராவகம், காவுஸுபான் திராவகம் இவ்விரண்டையும் கலந்து அதில் விட்டு ஓரிரவு ஊறவிட்டுக் காலையிற்காய்ச்சி அரைப்பாகமாகச் சுண்டினபின், திராக்ஷப்பழம் முதல் பேதானாக் கோழைநீர் ஈறாகவுள்ள வஸ்துக்களைப்பன்னீர் வார்த்தரைத்துப் பிழிந்த நீரை முன்கஷாயத்திற்கலந்து சீனிசருக்கரையையும் சேர்த்துக் காய்ச்சித் தாளிசபத்திரி முதல் கல்யாண பூசனிக்காய் விதைப்பருப்பு ஈறாகவுள்ளவைகளைத் தாழம்பூத் திராவகத்தை வார்த்தரைத்து மற்றச் சூரணங்களையொன்றாக்கி மேற்படி பாகிற்போட்டுக் கிண்டி நீர் சுண்டினவுடன் கீழிறக்கி அம்பரையும் கஸ்தூரியையும் பன்னீர்விட்டரைத்து அதிற்சேர்த்து இருவகை ரேக்குகளையும் ஒவ்வொன்றாகப் போட்டு நன்றாகக்கலந்து மிஸ்ரமித்துபீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 12, 15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மூளையைப் பலப்படுத்தித் தளரா அறிவையும், இருதயத்தைப் பலப்படுத்தி இடையுறாத ஊக்கத்தையும் கொடுக்கும். உள்ளுறுப்புகளைக் கிரமப்படுத்தித் தாது நஷ்டத்தைத் தீர்க்கும்.

இரைப்பையைப் பலப்படுத்தும் முறைகள்

ஈரலைப் பலப்படுத்தும் முறைகளை எழுதுமுன், இரைப்பைக்குப் பலத்தைக் கொடுக்கும் ஔஷதங்களை எழுதுவது மிகவும் அவசியம். ஏனெனில், எல்லா உறுப்புகளுக்கும் இரைப்பைதான் ஆதாரமாயிருக்கிபடியாலும், எல்லா உறுப்புகளின் சுகஸ்திதி முக்கியமாய் இரைப்பையின் சுகஸ்திதியைச் சார்ந்ததா யிருக்கிறபடியாலுமே.

அன்னாசய ரக்ஷணி

சீமை நெல்லிமுள்ளிச் சூரணம் 525 கிராம், ரோஜாப்பூ, லவங்கப்பட்டை, பக்குவப் படுத்தின துளையிடாத நன் முத்து இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், சந்தனம்,கொத்துமல்லி விதை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 5 கிராம் மேல் தோல் நீக்கின சுக்குச் சூரணம் 4 கிராம், கோரைக்கிழங்கு கிச்சலிக் கிழங்கு, தாளிசபத்திரி, றூமிமஸ்தகி, நிலக்கடம்பு, ஏலக்காய், லவங்கப்பத்திரி, சடாமாஞ்சில், பிளப்புச்சீரகம், ஜரிஷ்க், உலர்த்தின கோழியின் கற்குடல் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 3 கிராம், லவங்கம், ஜாதிக்காய், குங்குமப்பூ இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 3 கிராம், கஸ்தூரி 1 கிராம், தித்திப்பு மாதுளம்பழ ஷர்பத் 105 கிராம்,கிச்சலிநாரத்தம் பழ ரசம், கெட்டித்தேன் இவை வகை ஒன்றுக்கு 55 கிராம், எலுமிச்சம்பழ ரசம் 35 கிராம், சீனி சருக்கரை 875 கிராம்.

செய்முறை - பழரசங்கள், தேன், சீனிசருக்கரை; ஜரிஷ்க் ஆகியவைகளைச் சேர்த்து, கொஞ்சம் ஜலம் வார்த்து அடுப்பேற்றி இரண்டு மூன்று கொதிவந்தபின், ஜரிஷ்க்கை, நன்றாகக் கசக்கிப் பிழிந்து சக்கை நீக்கி மறுபடியும் காய்ச்சிப் பாகுபதத்தில் சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து அதிற் சேர்த்து நன்றாகக் கிண்டிக்கிளறி கீழிறக்கி, கஸ்தூரியையும் குங்குமப்பூவையும் பன்னீர் விட்டரைத்து அதிற் கலந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இரைப்பை, இருதயம், மூளை ஆகியவற்றைப் பலப்படுத்தும், பசிதீபனத்தையுண்டாக்கும். மலப் போக்கைக் கட்டும்.

விக்கிரம அன்னாசய ரக்ஷணி

உலர்த்தின கோழியின் கற்குடல் சூரணம், மூங்கிலுப்புச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 3 கிராம், ரோஜாப்பூச் சூரணம் 12 கிராம், பஹமனேஸஂபேத், பஹமனேஸாருக், சந்தனம், செஞ்சந்தனம், உலர்த்தின பொதினா, வறுத்த கொத்துமல்லி விதை, பிளப்புச்சீரகம் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், பிஸ்தாமேற்தோல், உலர்த்தின துரிஞ்சி நாரத்தந்தோல், மஞ்சட் கடுக்காய்த்தோல் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 10 கிராம், கற்கண்டு 350 கிராம், சுக்கான் கீரை ரசம் எலுமிச்சம் பழரசம் இவை வகைக்கு 210 கிராம்.

செய்முறை - ரசங்களை யொல்லாம் ஒன்றாகக் கலந்து சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் சூரணங்களையெல்லாம் போட்டு நன்றாகக் கிண்டிக்கிளறிப் பக்குவப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை 4- 8 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - இரைப்பையைப் பலப்படுத்தி இருதயத்திற்கு வலுவையுண்டாக்கும் பசிதீபனத்தை அதிகப்படுத்தும்.

அன்னாசய பலஹாரி

சீமை நெல்லிமுள்ளி 70 கிராம், பன்னீர் 525 கிராம், குச்சி, காம்பு முதலியவை நீக்கின ஜரிஷ்க் 24 கிராம், தித்திப்பு மாதுளம்பழ ஷர்பத், புளிப்பு மாதுளம்பழ ஷர்பத் இவை வகை ஒன்றுக்கு 105 கிராம் கெட்டித்தேன் 70 கிராம் சீனிசருக்கரை 175 கிராம் மூங்கிலுப்பு, பிளப்புச்சீரகம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம் ஏலரிசி, பிஸ்தா மேற்தோல் கொத்துமல்லிவிதை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், அகருகட்டை, சடாமாஞ்சில், நிலக்கடம்பு இவற்றின்

சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், லவங்கப்பத்திரி, வெள்ளிரேக்கு வகைக்கு 4 கிராம் தங்கரேக்கு குன்றியெடை 2.

செய்முறை - ஜரிஷ்க்கை அரையாழாக்கு ஜலத்திலிட்டுக் காய்ச்சிநன்றாகப் பிசைந்து வடிகட்டிச் சக்கை போக்கி வைத்துக் கொள்ள வேண்டும். பன்னீர் விட்டு நெல்லிமுள்ளியை வேகவைத்து நன்றாய் வெண்ணெய்போல் வெந்தபின் கீழிறக்கிக் கடைந்து அதில் உள்ள நரம்பு முதலியவற்றை நீக்கி ஜரிஷ்கின் கியாழம், ஷர்பத்கள், தேன், சீனிசருக்கரை ஆகியவற்றைச் சேர்த்துப் பாகு செய்து பதத்தில் மூங்கிலுப்பு முதலிய சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து அதிற்போட்டு நன்றாகக் கிண்டிக் கிளறி இருவகை ரேக்குகளையும் சேர்த்து மிஸ்ரமித்துக் கொள்ளவேண்டும்.

மாத்திரை - 12- 16 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இரைப்பை, இருதயம் ஆகியவற்றைப் பலப்படுத்தும். பசி தீபனத்தையுண்டாக்கும்.

இரத்தனாதி ஜவாரிஷ்

விதைநீக்கின கடுக்காய் முறப்பா, சீமையிலந்தைப் பழ (Apple) முறப்பா,விதைநீக்கின நெல்லிக்காய் முறப்பா இவைகளை வெந்நீரிற்கழுவி,தாழம்பூத்திராவகம் 30 கிராம் விட்டரைத்துப் பிழிந்து வடிகட்டிச் சக்கை போக்கி வைத்துக் கொள்ளவேண்டும், சீனிசருக்கரை 250 கிராம்.

* பாகப்படுத்தின எஷப்கல், பக்குவப்படுத்தின சிவந்த நீருள்ள மாணிக்கம், ** பாகப்படுத்தின ராஜவர்த்திக்கல், மூங்கிலுப்பு, இவை வகை ஒன்றுக்கு ஆறு கிராம், இவற்றைக் கல்வத்திலிட்டுத் தாழம்பூத் திராவகம் வார்த்து இருபத்துநான்கு சாமம் அரைத்துக் கொள்ளவேண்டும்.

காசினிவிதைச் சூரணம் 15 கிராம், உலர்த்தின பொதினா இலை,ரோஜாப்பூ இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம்,

---

* மாணிக்கம், யஷப் இவற்றின் பக்குவக்கிரமத்தை முதற்பாகத்துப் பக்குவ லக்ஷணத்திற் பார்க்க.

** ராஜவர்த்திக் கல்லைமைபோலரைத்துத்தூட்செய்து ஜலத்திற் கரைத்து ஜய்த்தூன் எண்ணெய் (Olive oil) கொஞ்சம்விட்டுக் காய்ச்சி இரண்டு மூன்று கொதிவந்தபின் இறக்கித்தெளியவைத்து மெதுவாக நீரை வடித்து நீக்கிக் கீழ்ப்படிந்த வண்டலை யுலர்த்தி யரைத்து முன்போல நீரிற் கரைத்து மேற்படி எண்ணெய்விட்டு முன் போலச் செய்யவும். இவ்விதம் மூன்று தடவை செய்துலர்த்திக்கொள்வதே அதன் பக்குவமாம்.

வெள்ளரிவிதைப்பருப்பு, காவுஜூபான்பூச் சூரணம், ஏலரிசிச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு எட்டு கிராம், காவுஜூபொன் இலைச் சூரணம், சிறுநெருஞ்சி முட் சூரணம், முலாம்பழவிதைப் பருப்பு இவை வகை ஒன்றுக்கு 6 கிராம்.

வெள்ளிரேக்கு 6 கிராம், தங்கரேக்கு 3 கிராம், அம்பர் 2 கிராம்.

செய்முறை - முன் பாகப்படுத்தின முறப்பாக்களின் நீரில் சீனி சருக்கரையைச் சேர்த்துப் பாகுசெய்து, சூரணங்களையும் ரத்தினங்களின் சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து பருப்பினங்களை அம்மிதாள அரைத்து அதிற் கரைத்துப் பாகில் தூவிக் கிண்டிக்கிளறி ஜவாரிஷ்பதத்திற் கீழிறக்கி அம்பரைப் பன்னீர் விட்டரைத்துச் சேர்த்து இருவகை ரேக்குகளையும் ஒவ்வொன்றாகப் போட்டு நன்றாக மிஸ்ரமித்துக் கொள்ளவேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இரைப்பை மூளை ஆகியவற்றைப் பலப்படுத்தி மனதிற்கு ஆனந்தத்தை யுண்டுபண்ணும்.

ஆமில அகருமாஜூன்

சீமை நெல்லிமுள்ளிச் சூரணம் 175 கிராம், ரோஜாப்பூ, ஏலரிசி, சடாமாஞ்சில் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 55 கிராம், குச்சி, காம்பு முதலியவை நீக்கின ஜரிஷ்க் பழம் 55 கிராம், தண்ணீரில் அமிழும் அகருகட்டை, மூங்கிலுப்பு, கொத்துமல்லி விதை, பிஸ்தா மேல்தோல் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், தாளிசபத்திரிச் சூரணம் 30 கிராம், றூமிமஸ்தகிச் சூரணம் 20 கிராம், நெல்லிக்காய் ரசம் 150 கிராம், கிச்சிலி நாரத்தம்பழ ஷர்பத் 70 கிராம், தித்திப்பு மாதுளம்பழ ஷர்பத் புளி மாதுளம் பழசர்பத் இவை வகை ஒன்றுக்கு 55 கிராம், எலுமிச்சம்பழ ரசம் 45 கிராம், சீனிசருக்கரை 875 கிராம், * ஆலுபுகாராப் பழஷர்பத் 400 கிராம்.

செய்முறை - ஜரிஷ்க் பழத்தையும் சீனிசருக்கரையையும் கலந்து நீர் வார்த்துக் காய்ச்சி இரண்டு மூன்று கொதிவந்தபின் இறக்கி வடித்துப் பிசைந்து,சக்கை நீக்கினபின் ரசங்களையும் சேர்த்துப் பாகுசெய்து, பதத்தில் ஷர்பத் வகைகளையும் கலந்து சூரணங்களையொன்றாகச் சேர்த்துப் பாகில் தூவிக் கிண்டிக் கிளறி மாஜூன் செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடலாம்.

---

* இந்தப்பாகத்தில் ஆலுபுகாரா ஷர்பத்தைச் சேர்க்காமலும் செய்து கொள்ளலாம்.

உபயோகம் - இரைப்பையைப் பலப்படுத்தும். மலப்போக்கை நிறுத்தும். பித்த ரோகங்களைக் கண்டிக்கும்.

ஆமில அகரு ஜவாரிஷ்

துரிஞ்சி நாரத்தம்பழ ரசம் 55 கிராம், சுக்கான் கீரை ரசம், புளித்தெளிநீர், எலுமிச்சம்பழ ரசம், புளிப்பு மாதுளம் பழ ரசம் இவை வகை ஒன்றுக்கு முப்பது கிராம், ஜரிஷ்க் பழம் எழுபது கிராம், லவங்கச் சூரணம், குங்குமப்பூ, சடாமாஞ்சில் சூரணம், மூங்கிலுப்புச் சூரணம், காவுஜுபொன் இலைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு பத்து கிராம், ரூமிமஸ்தகிச் சூரணம் , தண்ணீரில் அமிழும் அகருகட்டைச் சூரணம், உலர்த்தின பொதினா இலைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், சந்தனச்சூரணம் 25 கிராம், சீனாகற்கண்டு 450 கிராம், கெட்டித்தேன் 450 கிராம், பன்னீர் 875 கிராம்.

செய்முறை - பன்னீரையும் ரசங்களையும் கலந்து, ஜரிஷ்க்கைத் தனியே யெடுத்து ஓர் ஆழாக்கு நீரிலிட்டுக் காய்ச்சி வடித்துப்பிசைந்திறுத்துச் சக்கை நீக்கின கிஷாயத்தையும் அவற்றிற் கலந்து பாகுசெய்து பதத்தில் சூரணங்களை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்துப் பாகில் தூவி நன்றாகக் கிண்டிக்கிளறி ஜவாரிஷ் செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடலாம்

உபயோகம் - இரைப்பையையும் ஈரலையும் பலப்படுத்திப் பசிதீபனத்தை யுண்டாக்கும். பித்தரோகம், அஜீரணரோகம் ஆகியவை போம்.

காசினி மாஜூன்

ரோஜாப்பூச் சூரணம், காசினிவிதைச் சூரணம், வெள்ளரி விதைப் பருப்பு இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், ரேவல் சீனிச் சூரணம் 5 கிராம், கஷூஸ் விதை 16 கிராம், (இதை ஒரு வஸ்திரத்துண்டில் முடிந்து அரையாழாக்கு நீரிற் போட்டுக் காய்ச்சிச் சத்தெல்லாம்வெளிப்படும்படி நன்றாக நசுக்கி நீர் அரைப்பாகம் சுண்டினபின் முடிச்சை நீக்கிச் சத்தையெடுத்துக் கொள்ள வேண்டும்) சடா மாஞ்சில் சூரணம் 25 கிராம், அகருகட்டை, ரூமிமஸ்தகி உலர்த்தின பொதினா இலை, இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு பதினாறு கிராம் தித்திப்பு மாதுளம்பழரசம் 310 கிராம் ஆலுபுகாராப்பழ ஷர்பத் 165 கிராம், சீனிசருக்கரை 700 கிராம்.

செய்முறை - கஷூஸ்விதைக் கிஷாயம், மாதுளம்பழ ரசம் இவ்விரண்டையும் கலந்து சீனிசருக்கரை சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து வெள்ளரிவிதைப் பருப்பை யரைத்து அதிற்புரட்டி மிஸ்ரமித்துப் பாகில் தூவிக் கிண்டிக்கிளறி மாஜூன் செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 12- 18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இரைப்பையைப் பலப்படுத்தும், அஜீரண ரோகங்களைக் கண்டிக்கும். ஈரலின் வீக்கம், வலி முதலியவற்றைக் கண்டித்து அதைப் பலப்படுத்தும்.

தீபாக்கினி மாத்திரை

சுக்கான் கீரைவிதைச் சூரணம், கிச்சிலிக்கிழங்குச் சூரணம், கெந்தியுப்பு, வளையலுப்பு, முள்ளங்கிக் கிழங்கின் உப்பு, உலர்த்தின பொதினா இலைச் சூரணம். சீமைச் சாமந்திப்பூச் சூரணம், மஞ்சட் கடுக்காய்த் தோல் சூரணம் சூரத்துக் கடுக்காய்தோல் சூரணம், தான்றிக்காய்த்தோல் சூரணம், சீமை நெல்லிமுள்ளிச்சூரணம் இவைகள் வகை ஒன்றுக்கு 20 கிராம், நற்சீரகம், கருஞ்சீரகம், பிளப்புச்சீரகம்,லவங்கப்பட்டை, இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 10 கிராம், அரிசித்திப்பிலி, சடாமாஞ்சில், ஏலரிசி, மேல்தோல் நீக்கின சுக்கு இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், லவங்கச் சூரணம் 6 கிராம், பொரித்த வெங்காரம் 4 கிராம், விதை நீக்கின திராக்ஷைப்பழங்கள் 25 கிராம், உலர்த்தின சீமையத்திப்பழங்கள் 2 கிராம்.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் கல்வத்திற்போட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு நான்கு சாமம் நன்றாயரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலுலர்த்திக் கொள்ளவேண்டும்.

மாத்திரை - 4- 8 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரலைப் பலப்படுத்தி, மந்தாக்கினி ரோகங்களைக் கண்டிக்கும்.

வேறு

நற்சீரகம், சோம்பு, கொத்துமல்லிவிதை, மஞ்சட்கடுக்காய்த்தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல், சீமைநெல்லிமுள்ளி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 55 கிராம், மேல்தோல் நீக்கின சுக்கு, அரிசித்திப்பிரி, கெந்தியுப்பு, இந்துப்பு, கறியுப்பு, இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 30 கிராம், பொரித்த வெண்காரம் நவச்சாரம் வகை ஒன்றுக்கு 10 கிராம்.

செய்முறை - இவற்றை யெல்லாம் கல்வத்திற்போட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு நான்கு சாமம் நன்றாயரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலுலர்த்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 4-8 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரலைப் பலப்படுத்தி, மந்தாக்கினி ரோகங்களைக் கண்டிக்கும்.

குறிப்பு

மலாக்கா சந்தனத்தூள் 175 கிராம், பன்னீர், கஸ்தூரிப் பிரம்புத் திராவகம், தாமரைப்பூத் திராவகம் இவை வகை ஒன்றுக்கு 350 கிராம், சுத்தசலம் 875 கிராம்.

புளிப்பு மாதுளம்பழ ரசம், இனிப்பு மாதுளம்பழ ரசம், புளித்தெளிநீர், சீமையிலந்தைப் பழ (Apple) ரசம், நெல்லிக்காய் ரசம் இவை வகை ஒன்றுக்கு கால்படி, சீனிசருக்கரை 1400 கிராம்.

பன்னீர் விட்டிழைத்துலர்த்தின சந்தனம், மூங்கிலுப்புச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 55 கிராம், பாகப்படுத்தின நன்முத்துத்தூள், பாகப்படுத்தின கஹறூபா தூள் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், பச்சைக் கர்ப்பூரத்தூள் 4 கிராம்.

செய்முறை- திராவகங்களையும் பன்னீரையும் கலந்து மட்பாண்டத்தில் ஊற்றி அதில் சந்தனத்தூளை ஒரு சீலையில் முடிந்துபோட்டு ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் அந்த ஜலத்தையும் சேர்த்துக் காய்ச்சும்போது சத்து வெளிப்படும்படி முடிச்சை நன்றாக நசுக்கிக் கொண்டிருந்து அரைப்பாகமாய்ச் சுண்டினபின் இறக்கி முடிச்சை நன்றாய்ப் பிசைந்து பிழிந்து அதை நீக்கிப் பழரசங்களையும் சீனி சருக்கரையையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் சூரணங்களையும் தூட்களையும் கலந்து பாகில் தூவி மிஸ்ரமித்து இறக்கி ஆறவிட்டுப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 30- 35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இரைப்பையைப் பலப்படுத்தி, பசிதீபனத்தை யுண்டாக்கும். இருதயத்தைப் பலப்படுத்தும், உஷ்ணாதிக்கத்தைச் சாந்தப்படுத்தும்.

மஸ்தகித் தைலம்

றூமிமஸ்தகியைப் பொடி செய்து வடி கட்டின சூரணம் ஒருபங்கு, ஜய்த்தூன் எண்ணெய் (Olive Oil) அல்லது நல்லெண்ணெய் ஒருபங்கு.

செய்முறை - இவ்விரண்டையும் காசிக் குப்பியிற்போட்டுக் குப்பிவாய் மூடி ஒரு அண்டாவில் ஜலம் வார்த்து மேற்படி குப்பியை அதில் மிதக்கவிட்டு அடுப்பேற்றித் தீ மெதுவாயெரிக்க, தண்ணீர்ச்சூடேறி, குப்பியிலுள்ள மஸ்தகி உருகித் தைலமான பதத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாத்திரை - 6-9 கிராம் சாப்பிடலாம். மேலிலும் பூசலாம்.

உபயோகம் - இரைப்பை நோய், மண்ணீரல் நோய், ஈரல்நோய் ஆகியவை தீரும்.

வேறு

றூமிமஸ்தகி, சடாமாஞ்சில் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு இருபது கிராம், சீமை விலாமிச்சவேர்ச் சூரணம் பத்து கிராம் சீமைச் சாமந்திப்பூ எண்ணெய், ரோஜாப்பூ எண்ணெய், நல்லெண்ணெய் இவையொவ்வொன்றிலும் 75 கிராம் எடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் அல்லது சீசாவில்வார்த்து மேற்படி சூரணங்களைப்போட்டு வாய்மூடிச் சீலைமண் செய்து ஒருவாரம் கடும்வெய்யிலில் வைக்க வேண்டும், பின்பு எடுத்து வடிகட்டின எண்ணெயில் முன் சரக்குகளை முன் எடையாகப் போட்டு முன் செய்தது போலச் செய்து ஒருவாரம் அந்தப் படி வைத்தெடுத்து வடிகட்டி முன்போலவே இன்னொரு தடவையும் செய்து கொள்ளவேண்டும்.

உபயோகம் - வயிற்றின்மேற் பூசுவதனால் இரைப்பையைப் பலப்படுத்தும், வாயுகளைக் கண்டிக்கும். குளிர்ச்சியான வீக்கங்களின் மேற்பூச வீக்கம் வற்றும்.

பஞ்ச தீபாக்கினிச் சூரணம்

லவங்கம் 1 றூமிமஸ்தகி 2 ஓமம் 3 சடாமாஞ்சில் 4 கிராம், உலர்த்தின பொதீனா இலை 5 இவற்றின் சூரணம் மேற்படி பங்குக்கணக்காயெடுத்து ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 6-9 கிராம் தேனில் அல்லது காடியிற் சாப்பிடலாம்.

உபயோகம் - குளிர்ச்சியான இரைப்பையைப் பலப்படுத்தி ஜீரணசக்தியை அதிகப்படுத்தும்.

லவணாதி தீபாக்கினிச் சூரணம்

கறியுப்பு, இந்துப்பு, ரோஜாப்பூ, ஏலக்காய்,புளிப்பு மாதுளம்பழச்சுளை வற்றல், அரிசித்திப்பிலி, சோம்பு, நெல்லிமுள்ளி, கடுக்காய்த்தோல் இவைகளின் சூரணம் வகைக்கு 140 கிராம், சுக்கான் கீரை விதைச் சூரணம்,குச்சி காம்பு முதலியவை நீக்கின ஜரிஷ்க்பழம் இவை வகை ஒன்றுக்கு 70 கிராம் தாளிசபத்திரிச் சூரணம் 20 கிராம்.

செய்முறை :- சூரணங்களை ஒன்றாகக் கலந்து ஜரிஷ்கை மைபோலரைத்து அதில் மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை :- 6-9 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் :- இரைப்பையை நன்றாகப் பலப்படுத்தி பசிதீபனத்தையும் ஜீரணசக்தியையும் உண்டாக்கும்.

ஜீவரக்ஷாமிர்த லவணம்

கறியுப்பு படி 1, இந்துப்பு, நவச்சாரம், கல்லுப்பு, இவற்றின் பொடி வகை ஒன்றுக்கு 210 கிராம் கரபஸ் ஓமச்சூரணம் 90 கிராம், கறிமிளகுச் சூரணம், சீமைவிலாமிச்சு வேர்ச்சூரணம் இவை வகை ஒன்றுக்கு 45 கிராம், வெள்ளை மிளகுச்சூரணம் 45 கிராம், அப்திமூன், சடாமாஞ்சில், வறுத்த பெருங்காயம், நற்சீரகம், பெருஞ்சீரகம், பிளப்பு சீரகம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 30 கிராம் லவங்கப்பட்டை, மேல்தோல் நீக்கின சுக்கு, மேல்தோல் நீக்கின அதிமதுரம், அனிஸூன் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம்.

செய்முறை :- கறியுப்பை ஓட்டிலிட்டு நன்றாக வறுத்து ஓட்டுடன் அப்படியே அடுப்பின் நெருப்பாறுகிறவரையிலும் விட்டு எடுத்து அதனுடன் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து பீங்கான் ஜாடியிற் போட்டு வாய்மூடிச் சீலைமண் செய்து தானியத்திற்குள் ஒருவாரம் புதைத்து வைத்துப் பிறகு எடுத்துக் கொள்ளவேண்டும்.

மாத்திரை - அரை - ஒன்று - ஒன்றரை கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்:- போஜனத்திற்குப் பின் கொஞ்சம் சாப்பிட,இரைப்பையைப் பலப்படுத்தி பசிதீபனத்தை யுண்டாக்கி, சீரணசக்தியை அதிகப்படுத்தும், இரைப்பையின் நோய்களுக்கெல்லாம் இது சஞ்சீவிக்கு ஒப்பானது. குன்மம் முதலிய கொடிய நோய்களெல்லாம் இதனாற் குணப்பட்டிருக்கின்றன. இது, பழமையாகவாக நிச்சயமாகவும் சீக்கிரமாகவும் குணத்தைத் தந்திருக்கின்றது. காலையில் சிற்றுண்டியுடன் சாப்பிட கண் மங்கல் தீர்ந்து கண்ணொளி அதிகப்படும், அரைவேக்காடான (Half boiled) கோழி முட்டையுடன் கலந்து சாப்பிட, தாது நஷ்டத்தைத் தீற்கும், தேனிற்சாப்பிட, வீக்கங்கள் வலிகள் தீரும், ஸிகாமதுபானத்திற் சாப்பிட, பித்த ரோகங்கள் தீரும், சுருக்கிச் சொல்லில் தக்க அனுபானங்களிற் சாப்பிட அனேக வியாதிகள் தீரும்.

குறிப்பு

மேற்படி கறியுப்பை வறுக்காமல் முருங்கைவேர்ப் பட்டை ரசம் அல்லது முருங்கை மரப்பட்டை ரசம் விட்டரைத்து பில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டுச் சீலை மண் செய்து காய வைத்து, 350 கிராம் எடையுள்ள இருபது இருபத்தைந்து விராட்டியிற் புடமிட்டெடுத்துப் பொடித்துச் சேர்த்துக்கொள்வதனால் முன்னிலும் அதிகப் பலனைத் தருகின்றது. இவ்விதம் குப்பைமேனி ரசத்திலும், ஆற்றுத்தும்மட்டிக்காய் ரசத்திலும், புளிப்பு மாதுளம்பழ ரசத்திலும் அரைத்துப் போடலாம். இப்படி வியாதிகளுத் தகுந்த பிரகாரம் செய்து கொள்வதனால் அதிகப் பிரயோஜனத்தைத் தருகின்றது.

பொதினா பானம்

பொதினா இலை ரசத்தெளி நீர் 525 கிராம், பன்னீர் மணத்தக்காளித் தெளிநீர், கிச்சிலி நாரத்தம்பழ ரசம், எலுமிச்சம்பழரசம், தாழம்பூத் திராவகம் அல்லது கஷாயம் கொத்துமல்லியிலை ரசம், இவை வகை ஒன்றுக்கு 105 கிராம் காசினிக்கீரை ரசத்தெளிநீர் 70 கிராம் சீனிசருக்கரை 1225 கிராம்.

சந்தனம், கொத்தமல்லி விதை, ரோஜாப்பூ, காவுஜுபான்பூ, மூங்கிலுப்பு, அகருகட்டை, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, லவங்கப்பட்டை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம்.

செய்முறை :- முன் ரசங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து அதிற் சீனிசருக்கரையைச் சேர்த்துப் பாகு செய்து பதத்தில் சூரணங்களை யொன்றாய்க்கலந்து தூவி நன்றாகக் கிண்டிக் கிளறி எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாத்திரை - 20- 30 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இரைப்பையைப் பலப்படுத்தும். சீரண சக்தியையும் தீபனசக்தியையும் அதிகப்படுத்தும்.

வேறு

பொதினாக்கீரை ரசத்தெளிநீர், பொதீனாக்கீரைத் திராவகம் அல்லது ஓமத்திராவகம், அல்லது சோம்புத் திராவகம், பன்னீர், மணத்தக்காளித் திராவகம் இவை வகை ஒன்றுக்கு 200 கிராம் சீனிசருக்கரை 200 கிராம் ஏலக்காய், ஜாதிக்காய், தாளிசபத்திரி, மூங்கிலுப்பு, இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 15 கிராம்.

செய்முறை - ரசங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து சீனிசருக்கரையைச் சேர்த்துப் பாகுசெய்து பதத்தில் சூரணங்களை யொன்றாகக் கலந்து தூவி நன்றாகக் கிண்டிக் கிளறி மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 9-12 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - முன் சொன்ன குணங்களுண்டாம்.

தாடிமக்கினி ஷர்பத்து

புளிப்பு மாதுளம்பழரசம் இரண்டு பங்கு, சீனிசருக்கரை ஒரு பங்கு, இவை யிரண்டையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் இறக்கிப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 35 - 55 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இரைப்பையைப் பலப்படுத்தும், வாந்தியையும் மலப்போக்கையும் நிறுத்தும்.

குறிப்பு

இனிப்பு மாதுளம்பழ ரசத்திலும் மேற்கண்ட பாகப்படி செய்து சாப்பிட ,ஈரற்சூடு, அஜீரணம், நீர்க்கட்டு ஆகியவை தீரும்.

திந்திரிணி அன்னாசய பலகாரி

கொட்டை கோது நீக்கின புதுப்புளி 315 கிராம், சீனி சருக்கரை 420 கிராம்.

செய்முறை - புளியைக் காற்படி ஜலத்திற் கரைத்து வடித்து அதிற் சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்திற் சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 12 -18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இரைப்பையைப் பலப்படுத்தும். இலகு பேதியாம். பித்தத்தைக் கண்டிக்கும். இரத்தக் கொதிப்பு முதலியவற்றைத் தனிக்கும்.

துவிதாடிமக்கினி ஷர்பத்து

தித்திப்பு மாதுளம்பழரசம் 420 கிராம், புளிப்பு மாதுளம் பழரசம் 210 கிராம், சீமையிலந்தைப் (apple) பழரசம் 210 கிராம், பொதினாக்கீரை ரசத்தெளிநீர் 210 கிராம், சீனிசருக்கரை 700 கிராம், றூமிமஸ்தகி, பிஸ்தா மேல்தோல் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 18 கிராம், அகருகட்டை, சடாமாஞ்சில் இவற்றின் சூரணம்வகை ஒன்றுக்கு 15 கிராம்.

செய்முறை - ரசங்களை யொன்றாகக் கலந்து மண் பாத்திரத்தில் வார்த்துச் சீனிசருக்கரையைச் சேர்த்து, சூரணங்களை ஒருவஸ்திரத்துண்டில் முடிந்து போட்டு காய்ச்சும்போது முடிச்சை நன்றாக நசுக்கிச் சிவந்து பாகு பதத்தில் இறக்கிப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவேண்டும்.

மாத்திரை - 20-30 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இரைப்பை இருதயம் முதலியவற்றைப் பலப்படுத்தும். ஜீரண சக்தியையும் பசிதீபனத்தையும் உண்டாக்கும்.

அகரு திராவகம்

தண்ணீரில் அமிழும் அகருகட்டை 35 கிராம், ஆலு புகாரா பழம்-5, காசினிவிதை, ரோஜாப்பூ, ஏலக்காய் இவை வகை ஒன்றுக்கு 80 கிராம், உலர்த்தின பொதினாக் கீரை 175 கிராம், மணத்தக்காளித் திராவகம் இரண்டுபடி, கொத்துமல்லிக்கீரை ரசம் அரைபடி, பொதினாக்கீரை ரசம் கால் படி.

செய்முறை - கடினமானவற்றைச் சிதைத்து மற்றச் சரக்குகளையும் மணத்தக்காளித் திராவகத்தில் ஓரிரவு ஊற வைத்து ரசங்களையும் சேர்த்து வாலையிலிட்டு இரண்டு படி திராவகம் வடித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 35-55 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இரைப்பையைப் பலப்படுத்தி வாயுகளை நாசஞ்செய்யும், சீரணசக்தி, தீபனசக்தி ஆகியவற்றை விர்த்தி செய்யும்.

முறப்பா குதூகலனி

கடுக்காய் முறப்பா நான்கு, நெல்லிக்காய் முறப்பா எட்டு, சீமையிலந்தைப்பழ (apple) முறப்பா இரண்டு , ஜம்புநாவற்பழ முறப்பா இரண்டு, * தாமரை குல்கந்து இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், காவுஜுபொன், உலர்ந்த தாமரைப்பூ, ரோஜாப்பூ இவை வகை ஒன்றுக்கு பன்னிரண்டு கிராம், காவுஜுபான் திராவகம் அரைபடி

தாழம்பூத் திராவகம் 210 கிராம், நெல்லிக்காய் ரசம் 55 கிராம், தித்திப்பு மாதுளம்பழ ரசம் 105 கிராம், கமலாநாரத்தம்பழ ரசம் 35 கிராம், சீனிசருக்கரை 300 கிராம்.

பாகப்படுத்தின தொளையிடாத நன்முத்து, பாகப்படுத்தின கஹறுபா, நற்பவளம், மூங்கிலுப்புத்தூள் இவை வகை ஒன்றுக்கு ஆறு கிராம், பன்னீர் விட்டிழைத்துலர்த்தின சந்தனம் ஐந்து கிராம், லவங்கப்பத்திரி, அகருகட்டை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு மூன்று கிராம்.

செய்முறை - முறப்பாக்களின் வித்துகளையும் அவற்றிலுள்ள பாகையும் நீக்கிச் சுத்திசெய்து அவற்றுடன் குல்கந்துகளையும் சேர்த்தரைத்து காவுஜுபான் திராவகத்திற் கரைத்து, ஆலுபுகாரா முதல் ரோஜாப்பூ ஈறாகவுள்ள வஸ்துகளை அதிற்போட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாட் காலையிலெடுத்துக் காய்ச்சி அரைப்பாகமாய்ச் சுண்டின பின் இறக்கிப் பிசைந்து வடித்துத் தாழம்பூத் திராவகம் முதல் சீனிசருக்கரை ஈறாகவுள்ளவற்றைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்திற் சூரணங்களை ஒன்றாகக் கலந்து தூவிச் சந்தனக்கட்டையினாற் கடைந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாத்திரை - 12- 18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இரைப்பையை இருதயத்தையும் பலப்படுத்தும். பசிதீபனத்தையும் ஜீரணசக்தியையும் விர்த்தி செய்யும்.

---

* இதை ரோஜாப்பூகுல்கந்து பாகப்படி செய்து கொள்ளவேண்டும்.

குல்கந்து குதூகலனி

குல்கந்து 210 கிராம், கடுக்காய் முறப்பா, நெல்லிக்காய் முறப்பா இவை வகை ஒன்றுக்கு 10 , ஆலுபுகாரா 100 கிராம், காவுஜூபான் திராவகம், பன்னீர் இவை வகைக்கு 210 கிராம்.

கரும்புரசம் 140 கிராம்,தித்திப்பு மாதுளம்பழரசம் 105 கிராம், சீனிசருக்கரை 210 கிராம்.

செய்முறை - முறப்பாக்களை வித்து நீக்கிப் பாகைத் துடைத்துச் சுத்திசெய்து, காவுஜூபான் திராவகம், பன்னீர் இவ்விரண்டையும் கலந்து அதில் ஊற வைத்துக் காய்ச்சி அரைப்பாகமாகச் சுண்டினபின் பிசைந்துவடித்து, கரும்பு ரசம் முதலியவற்றையும் சேர்த்துப் பாகு செய்து, ஷர்பத் பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 35-45 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இரைப்பையைப் பலப்படுத்தும். இலகு பேதியாம்.

ஈரலின் பலஹீன முதலியவற்றை நீக்கி அதனைப் பலப்படுத்தி தாதுநஷ்டத்தைத் தீர்க்கும் ஔஷத முறைகள்

பத்திரித் தைலம்

மாசிப்பத்திரியிலை ரசம் அரைபடி, ஜய்த்தூன் எண்ணெய் (Olive oil) அல்லது கசப்பு வாதுமை யெண்ணெய் கால்படி. இவ்விரண்டையும் புட்டியில் வார்த்து நன்றாகக் குலுக்கி வாய்மூடி நாற்பது நாள் கடும்வெய்யிலில் வைத்தெடுத்து நீர்வற்றாதிருந்தால் அடுப்பேற்றித் தீபம்போல் எரித்து நீர் சுண்டினபின் இறக்கி வடித்து எடுத்துக்கொள்ள வேண்டும், கூடினவரையில் காய்ச்சாமல் சூரியபுடமாக நீர் சுண்ட வைத்தெடுத்துக் கொள்வதே குணம்.

மாத்திரை - 6-9 கிராம் சாப்பிடலாம். அன்றியும் ஈரல் இரைப்பை ஸ்தானங்களிலும் பூசுவதனாலும் அவ்விரண்டும் பலப்படும்.

தாடிமக் கனிப் பிரயோகம்

புளிப்பு மாதுளம்பழ ரசம் தேவையான அளவு ஒரு மண்பாத்திரத்தில் வார்த்து ஓரிரவு வைத்துக் காலையிற் காய்ச்சி நாலிலொரு பாகமாகச் சுண்டினபின் பொதினா இலையைக் காம்புகளுடன் சிலவற்றைப் போட்டு வைத்து நன்றாக ஆறினபின் பொதினா இலையை நீக்கிவிட்டு ரசத்தை மாத்திரம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 12-15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரல் இரைப்பை ஆகியவற்றைப் பலப்படுத்தும், வாந்தியையும் பேதியையும் போக்கிச் சுகத்தைக் கொடுக்கும்.

தாடிமக் கனி மிட்டாய்

புளிப்பு மாதுளம்பழரசம், தித்திப்பு மாதுளம்பழ ரசம் இவை வகை ஒன்றுக்கு கால்படி சீனாகற்கண்டு 700 கிராம்.

செய்முறை - ரசங்களிரண்டையும் கலந்து காய்ச்சி நாலிலொரு பாகமாகச் சுண்டினபின் கற்கண்டைச் சேர்த்துக் கரைத்துக் காய்ச்சிக் கெட்டிப் பாகுபதத்தில் கீழிறக்கி அகன்ற பீங்கான் பாத்திரத்தில் அல்லது சமமான கற்பலகையில் வாதுமையெண்ணெய் அல்லது பசுவின் நெய் கொஞ்சம் தடவி அதன்மேல் பாகைவார்த்துச் சமமாகப் பரப்பி ஆறினபின் சதுரமான துண்டுகளாக அறுத்துக் கொள்ளவேண்டும்.

மாத்திரை - 35-55 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரல், இரைப்பை ஆகியவற்றைப் பலப்படுத்தும்.

குறிப்பு

மேற்படி பாகில் சீமைநெல்லிமுள்ளிச் சூரணம், குச்சி காம்பு முதலியவை நீக்கிச் சுத்திசெய்த ஜரிஷ்க் வகை ஒன்றுக்கு 20 கிராம், ஜரிஷ்க்கைப் பன்னீர் வார்த்து நன்றாக அரைத்து மேற்படி சூரணத்துடன் கலந்து பாகிற் போட்டு நன்றாகக் கிண்டிக்கிளறி முன்போற் செய்து கொண்டு சாப்பிட, முன்னிலும் அதிகமான சிரேஷ்ட குணத்தைக் கொடுக்கும்.

குளிர்ச்சியான தேகிகளானால், ரூமிமஸ்தகி, லவங்கம், அகருகட்டை, ஏலக்காய், சடாமாஞ்சில் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 10 கிராம், எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து மேற்படி பாகில் தூவி முன் பாகப்படி செய்துகொள்ள வேண்டும்.

புஷ்பாதி மாஜூன்

ரோஜாப்பூச் சூரணம் 175 கிராம், சடாமாஞ்சில், ரூமிமஸ்தகி, மூங்கிலுப்பு, லவங்கப்பட்டை, சீமைவிலாமிச்சவேர் நிலக்கடம்பு, பூமிசருக்கரைக் கிழங்கு, மாசிப்பத்திரி, கஷூஸ்விதை, காசினிவிதை, காப்ஸ்ஓமம், பெருமருந்துப் பட்டை, பல்ஸான் விதை, லவங்கம், ரேவல்சீனி, சந்தனம், அகருகட்டை,பெருலவங்கப்பட்டை, குங்குமப்பூ, மைசாட்சி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 10 கிராம், கெட்டித்தேன் 1050 கிராம்.

செய்முறை - சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து குங்குமப்பூவையும், மைசாட்சியையும், பன்னீர் விட்டரைத்து அதில் மிஸ்ரமித்துக் கொண்டு தேனைக் காய்ச்சிப் பாகுபதத்தில் சூரணத்தைத் தூவிக் கிண்டிக்கிளறி மாஜூன் பாகமாகச் செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 6-8 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரல், இரைப்பை ஆகியவற்றைப் பலப்பிக்கும். ஈரலிலுள்ள நாளங்களின் அடைப்பை நீக்கும். பலவிதப் பாண்டுரோகங்களையும் பலவிதத் தலைநோய்களையும் தீர்க்கும்.

இலகு புஷ்பாதிச் சூரணம்

குச்சி, காம்பு முதலியவை நீக்கின ஜரிஷ்க், ரேவல்சீனிச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், சுக்கான் கீரை விதைச் சூரணம் 5 கிராம், மூங்கிலுப்பு, வெண்சந்தனம், நிஷாஸ்தா, கருவேலம்பிசின் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், குங்குமப்பூ 2 கிராம்.

செய்முறை - ஜரிஷ்க்கையும் குங்குமப்பூவையும் பன்னீர்விட்டு நன்றாக அரைத்து, மற்றச் சூரணங்களையும் போட்டு நன்றாக மிஸ்ரமித்துக் கொள்ளவேண்டும்.

மாத்திரை - 4.5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரலிலுள்ள வியாதிகளை நீக்கி, அதைப் பலப்படுத்துவதில் இது அதிக உபயோகம் உள்ளது.

லவணச் சூரணம்

கறியுப்புத்தூள் 450 கிராம், வெள்ளை மிளகுச் சூரணம் 105 கிராம், நவச்சாரம்,மேல்தோல் நீக்கின சுக்கு, கறிமிளகு, உலர்த்தின பொதினா இலை இவைகளின் சூர்ணம் வகை ஒன்றுக்கு 70 கிராம், கரபஸ் ஓமச்சூரணம் 45 கிராம், அனிஸூன், ஓமம், சடாமாஞ்சில், ஏலக்காய் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 45 கிராம்.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 8-9 கிராம் சாப்பிட்டு மேலே கொஞ்சம் வெந்நீர் குடிக்க வேண்டும்.

உபயோகம் - ஈரல், இரைப்பை இவற்றின் வியாதிகளையும், கீல்வாயுகளையும் தீர்க்கும், பசிதீபனத்தையும் ஜீரணசக்தியையும் உண்டாக்கும்.

பேதானாச் சூரணம்

பேதானாச்சூரணம், வெள்ளரிவிதைப்பருப்பு, நிஷாஸ்தா இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், பூங்காவி, ரோஜாப்பூ, சடாமாஞ்சில், மேல்தோல் நீக்கின அதிமதுரம், மூங்கிலுப்பு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், ரேவல் சீனிச் சூரணம் 2 கிராம், றூமிமஸ்தகிச் சூரணம் 500 கிராம்

செய்முறை - வெள்ளரிப்பருப்பை நன்றாயரைத்து, சூரணங்களை யொன்றாகக்கலந்து அதிற்புரட்டிக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிட்டு மேலே கொஞ்சம் குளிர்ந்தநீர் குடிக்கவேண்டும்.

உபயோகம் - ஈரலின் சூட்டைத் தணிக்கும். மஞ்சட் காமாலை, இரத்தங்கக்குதல், ஈரலின் நாளங்களின் அடைப்பு ஆகியவற்றைத் தீர்க்கும்.

அகரு ஷர்பத்

தண்ணீரில் அமிழும் அகருகட்டை 80 கிராம், கெட்டித்தேன் 245 கிராம், சீனிசருக்கரை 450 கிராம்.

செய்முறை - அகருகட்டையைச் சிதைத்து முழுக்கூறாகக் காய்ந்த வெந்நீரிற்போட்டு ஒருநாள் ஊறவிட்டு மறுநாள் அடுப்பேற்றி மெதுவாயெரித்து அரைப்பாகமாகச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து வடிகட்டித் தேனையும் சீனி சருக்கரையையும் சேர்த்துக் காய்ச்சி பாகுபதத்தில் இறக்கிப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 12 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரல், இரைப்பை, இருதயம் ஆகியவற்றைப் பலப்படுத்தும். வாந்தி, மலப்போக்கு ஆகியவற்றைத் தீர்க்கும்.

யகிர்தகண்டரோக நிவாரணி

ரேவல்சீனிச் சூரணம் 35 கிராம், சுத்திசெய்த சீமைச் சிவதைவேர்ச் சூரணம், பாகப்படுத்தின காரிகியூன், பஸ்பாயிஜ், காசினிவிதை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், மேல்தோல் நீக்கின சுக்குச்சூரணம் 2கிராம், சீனிசருக்கரை 350 கிராம்.

செய்முறை - சீனிசருக்கரையைப் பாகுசெய்து பதத்தில் சூரணங்களை யொன்றாகச் சேர்த்து அதில் தூவிக் கிண்டிக்கிளறி எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாத்திரை - 12 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரல், மண்ணீரல் இவற்றின் வியாதிகளைத் தீர்க்கும், ஈரலின் நாளங்களின் அடைப்பைத் தீர்க்கும். இலகுபேதியாம்.

கஷூஸ் ஷர்பத்

கஷூஸ்விதை (இதை வஸ்திரத்துண்டில் முடிந்து கொள்ள வேண்டும்) சோம்பு, காசினிவிதை, கஷூஷ்பூ, சீமை வெள்ளரிவிதைப்பருப்பு, நாட்டு வெள்ளரிவிதைப் பருப்பு, முலாம்பழவிதைப்பருப்பு, கெக்கரி விதைப்பருப்பு, காசினிக்கீரை வேர்த்தோல் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், சோம்பு வேர்த்தோல் ரோஜாப்பூ, அனிஸூன் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், மேனா 150 கிராம், சீனி சருக்கரை 150 கிராம்.

செய்முறை - மேற்படி சரக்குகளில் கடினமானவற்றைச் சிதைத்துக் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் அரைப்படி ஜலத்திற்போட்டு ஓரிரவு ஊறவிட்டு மறுநாள் அடுப்பேற்றிக் காய்ச்சும்போது சத்து வெளிப்படும்படி மேற்படி முடிச்சை நன்றாக நசுக்கிக் கொண்டிருந்து மூன்றிலொரு பாகமாய் வற்றினபின் இறக்கிப் பிசைந்து வடித்துச் சக்கை போக்கின கஷாயத்திற் சீனிசருக்கரையையும் மேனாவையும் சேர்த்துக் காய்ச்சி ஷர்பத் பாகப்படி செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 35- 40 கிராம் காசினிவிதையை யரைத்துப்பிழிந்த ரசத்தில் அல்லது முலாம்பழவிதையை யரைத்துப் பிழிந்தபாலிற் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரலையும் இரைப்பையையும் பலப்படுத்தும், ஈரலின் நாளங்களின் அடைப்பை நீக்கும். இலகு பேதியாம், தொந்தசுரங்கள், ஆரம்ப பாண்டு ரோகங்கள் ஆகியவை தீரும்.

யகிர்தகண்ட உஷ்ண நிவாரணி

ரோஜாப்பூவிதழ் 18 கிராம், கோதுகொட்டை நீக்கின புதுப்புளி மாசிப்பத்திரி இவை வகை ஒன்றுக்கு 9 கிராம், தரஞ்சபீன் 105 கிராம்.

செய்முறை - முன் மூன்று சரக்குகளையும் காற்படி ஜலத்திற் போட்டு மெதுவா யெரித்துக் காய்ச்சி அரைப்பாகமாய்ச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து வடித்துத் தரஞ்சபீனைப் போட்டுக் கரைத்து மறுபடியும் வடித்து அவ்வளவையும் ஒரே தடவையில் குடிக்கவேண்டும்.

உபயோகம் - சூடான ஈரலின் துர்ப்பலத்தையும் இரைப்பையின் துர்ப்பலத்தையும் நீக்கும். ஈரலின் உஷ்ணத்தைத் தணிக்கும். சூடான தேகிகளுக்கு இது மிகவும் உபயோகமானது.

*சித்தர் மாஜூன்

மேல்தோல் நீக்கின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, லவங்கப்பட்டை, சீமை நெல்லிமுள்ளி, தான்றிக்காய்த் தோல், கொடிவேலி வேர்ப்படை, பெருமருந்துப்பட்டை; ஸாலாமிஸ்றி, வாதுமைப்பருப்பு அல்லது சாரப்பருப்பு, மேல் தோல் நீக்கின தேங்காய் இவைகளின் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், சீமைச் சாமந்திப்பூச் சூரணம் 55 கிராம், கஸ்தூரி மஞ்சட் சூரணம் 25 கிராம், கொட்டை, குச்சிநீக்கின திராக்ஷப்பழம் 100 கிராம், சீனிசருக்கரை 1120 கிராம் பாகப்படுத்தின துளையிடாத நன்முத்து, பாகப்படுத்தின நற்பவளம், பாகப்படுத்தின கஹருபா, அம்பர் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், பச்சைக்கர்ப்பூரம் ஆறு கிராம்.

செய்முறை - பருப்பினங்களையும் திராக்ஷப் பழங்களையும் அரைத்து, சூரணங்களை யெல்லாம் ஒன்றாகக்கலந்து சீனிசருக்கரையிற் கொஞ்சம் ஜலம்வார்த்துக் கரைத்துப் பாகுசெய்து பதத்தில் சூரணங்களைத் தூவி நன்றாகக் கிண்டிக் கிளறி இறக்கி அம்பரில் கொஞ்சம் பன்னீர்விட்டரைத்தும், பச்சைக்கர்ப்பூரம் கோரோசனை முதலியவற்றையும் பொடித்து அதிற்சேர்த்தும் நன்றாக மிஸ்ரமித்துக் கொள்ளவேண்டும்.

மாத்திரை - 8-12 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரல், இரப்பை இவற்றின் துர்ப்பலத்தை நீக்கி அவற்றைப் பலப்படுத்தும், பக்ஷவாதம், மறதிநோய் ஆகியவற்றைத் தீர்த்து, ஞாபகசக்தியை அதிகப்படுத்தும். அறிவை விர்த்தி செய்யும், மந்தாக்கினி ரோகத்தை நீக்கி, பசிதீபனத்தையும் ஜீரணசக்தியையும் உண்டாக்கும். நாத்தளர்ச்சி, மூத்திரவொழுக்கு, முதுகுவலி, நீர்க்குண்டிக்காயின் வலி, கீல்வாயுகள் ஆகியவைகளை நீக்கும், ஆண் குறியின் துர்ப்பலத்தை நீக்கி தாது நஷ்டத்தைத் தீர்க்கும்; வாயு, கபம் ஆகியவற்றாலுண்டாம் குடல் முறுக்கு நோயைத் தீர்க்கும். இதன்குணம் இன்னும் பலவுள. அநுபவத்தாற் கண்டறியலாம்.

குறிப்பு

இது, முதியோர்க்கும் கொழுமையான தேகிகளுக்கும் அதிகம் ஏற்றது அதிசூடான தேகிகளுக்குச் சிலவேளை ஒவ்வாவிட்டால் புதிதாகக் கறந்த பசுவின் பாலும் ஸிகாமது பானமும் கலந்து சாப்பிட, குணத்தைத் தரும்.

---

* இதற்கு மாஜூனே பிலாஸிபா என்றும் ஜீவாதார மாஜூன் என்றும் பெயர். இதன் யோகங்களைப் பலவாறாகச் சொல்லியிருப்பினும், எம் முன்னோர் அநுபவ முறைப்படி இங்கு எழுதியிருக்கிறோம் .

லசுண மாஜூன்

கொண்டைக்கடலை படி அரை இதனை இரண்டுபடி ஜலத்திலிட்டு ஓரிரவு ஊறவைத்துக் காலையிற் காய்ச்சி நாலிலொரு பாகமாகச் சுண்டிக் கடலையின் சத்தெல்லாம் நீரில் இறங்கினபின் ஜலத்தை யிறுத்து அதில், உரித்து முளைபோக்கின வெள்ளைப்பூண்டு 525 கிராம் போட்டு நன்றாக வேகவைத்துக் கூழ்போன்ற பருவத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் பக்குவப்படுத்தி யெடுத்த கூழ் 450 கிராம், புதிதாகக்கறந்த பசுவின் பால் 450 கிராம், பசுவின்நெய் 100 கிராம், கெட்டித்தேன் 700 கிராம், மேல்தோல் நீக்கின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, லவங்கம், லவங்கப்பட்டை, வால்மிளகு, ஜாதிக்காய், அக்கராகாரம் சன்னராஷ்டம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 9 கிராம். குங்குமப்பூ 2 கிராம்.

செய்முறை - மேற்படி கூழிற் பாலைவிட்டு அடுப்பேற்றி தீபம்போல் எரித்துப் பால் சுண்டினபின் நெய்விட்டு நன்றாகப்புரட்டித் தேனைவிட்டுத் தீபம்போல் எரித்துப் பாகுசெய்து பதத்தில் எல்லாச் சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து குங்குமப்பூவைப் பன்னீர்விட்டரைத்து அதிற் கலந்து பாகில் தூவி மாஜூன் பாகப்படி செய்திறக்கி ஆற விட்டுப் பச்சைநிறமான பீங்கான் பாத்திரத்தில் வைத்துப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 3-4 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரல், ஈரற்பை ஆகியவற்றின் பலவீனத்தை நீக்கும். பக்ஷவாதம், மறதிநோய், நடுக்கல் முதலிய குளிர்ச்சியாலுண்டாம் வியாதிகளைத் தீர்க்கும், சுவாசகாசம், நாக்குழறல், கொழுமையாலுண்டாம் இருமல், குரற்கம்மல், குரல்விகற்பம் ஆகிய நோய்களைத் தீர்க்கும். சூதகக்கட்டு நீர்க்கட்டு ஆகியவற்றை யுடைக்கும். தாது நஷ்டத்தையுந் தீர்க்கும், ஆண்மையையும் விர்த்தி செய்யும்.

வேறு

முன்பாகப்படி செய்தெடுத்த லசுணக் கூழ் 450 கிராம், பசுவின்பால் அரைபடி, நெய் 100 கிராம், கெட்டித்தேன் 1400 கிராம், வெண்தூதரிவித்து, செந்தூதரிவித்து, பிளப்புச் சீரகம், சன்னராஷ்டம், லவங்கப்பட்டை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 45 கிராம், மிளகுச் சூரணம் 20 கிராம்.

செய்முறை - முன் பாகப்படி செய்துகொள்ள வேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - முன் சொல்லியவை போலாம்.

வேறு

உரித்து முளைபோக்கின வெள்ளைப்பூண்டு 450 கிராம், பசுவின் பால் முக்கால்படி, நெய் 100 கிராம், கெட்டித்தேன் 1400 கிராம், லவங்கம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, மிளகு, றூமிமஸ்தகி, ஏலக்காய்,பேரேலக்காய், சூரத்துக்கடுக்காய்த்தோல், லவங்கப்பட்டை, மேல்தோல் நீக்கின சுக்கு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், அகருகட்டைச் சூரணம் 20 கிராம், குங்குமப்பூ 10 கிராம்.

செய்முறை - பாலில் பூண்டைப்போட்டு நன்றாகக் கூழ்போல் வெந்தபின் நெய்வார்த்துப் புரட்டித் தேன் சேர்த்துப் பாகுசெய்து, பதத்தில் சூரணங்களை யெல்லாம் ஒன்றாகக்கலந்து குங்குமப்பூவைப்பன்னீர் விட்டரைத்து அதில் புரட்டிச் சூரணத்தைத் தூவி நன்றாக கிண்டிக் கிளறி முன்போல மாஜூன் பாகப்படி செய்துகொள்ள வேண்டும்.

மாத்திரை - 2-3 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - முன் கண்ட வியாதிக்கெல்லாம் உபயோகப்படும்.

றூமிமஸ்தகி ஜவாரிஷ்

றூமிமஸ்தகிச் சூரணம் 12 கிராம், சீனிசருக்கரை 525 கிராம், பன்னீர் 175 கிராம்.

செய்முறை - சீனியில் பன்னீரை வார்த்துக் கரைத்துப் பாகுசெய்து, முதிர்ந்த பதத்தில் கீழிறக்கி றூமிமஸ்தகி சூரணத்தைத் தூவிப் பீங்கான் பாத்திரத்தில் அல்லது கற்பலகையில் வாதுமைநெய் அல்லது பசுவின்நெய் தடவிப்பசையாக்கி அதில்பாகையூற்றிச் சமமாகப் பரப்பி ஆறவிட்டுக்கத்தியினால் சதுரபில்லைகளாக அறுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 18 - 24 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஈரல், இரைப்பை இவற்றி லுண்டாம் குளிர்ச்சியான வியாதிகளைப் போக்கி, அவற்றை பலப்படுத்தும்.

வேறு

றூமிமஸ்தகிச் சூரணம் 12 கிராம், லவங்கப்பட்டைச் சூரணம் 20 கிராம், சீனிசருக்கரை 45 கிராம், பன்னீர் 175 கிராம்.

செய்முறை - பன்னீர் வார்த்துச் சீனிசருக்கரையைக் கரைத்துப் பாகுசெய்து கெட்டியானபதத்தில் சூரணங்களைக் கலந்து பாகில் தூவி முன்பாகப்படி செய்துகொள்ள வேண்டும்.

மாத்திரை - 12-18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - முன் பாகத்திற் கண்டவைகளாம்.

குறிப்பு

மலபந்தம் இருந்தால், லவங்கப்பட்டைச் சூரணத்திற்கு பதில் சுத்திசெய்த சீமைச் சிவதைவேர்ச் சூரணத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நாகராதி மாஜூன்

மேல்தோல் நீக்கின சுக்குச் சூரணம் 35 கிராம், உலர்த்தின பொதினா இலைச் சூரணம் 30 கிராம், லவங்கப்பட்டை, அகருகட்டை, உலர்த்தின செம்பைப்பூ, லவங்கம், மிளகு, அரிசித்திப்பிலி, சடாமாஞ்சில், நிலக்கடம்பு இவைகளின் சூரணம், இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், ஏலக்காய், வால்மிளகு இவை வகை ஒன்றுக்கு 10 கிராம் சீனிசருக்கரை 700 கிராம்.

செய்முறை - சீனிசருக்கரையைப்பாகுசெய்து, பதத்தில் சூரணங்களை யொன்றாகக் கலந்து அதில் தூவி நன்றாக கிண்டிக் கிளறி ஜவாரிஷ் பாகப்படி செய்துகொள்ள வேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- ஈரல், இரைப்பை இவற்றின் துர்பலத்தை நீக்கும். பசிதீபனத்தையும், சீரணசக்தியையும் உண்டாக்கும். வாயுகளைக் கண்டிக்கும்.

இருதயத்தைப்பலப்படுத்தித் தாது நஷ்டத்தை தீர்க்கும் முறைகள்

இராஜகருவிகளில் இருதயமானது பிரதானமாகையால், அதற்கு நேரிடும் வியாதிகளை உடனே கவனித்து அதற்குத்தக்க சிகிச்சைசெய்து நிவர்த்திசெய்ய முயலவேண்டும். அதன் சிரேஷ்டத்தைப்பற்றி முதற்பாகத்தில் தெரிவித்திருக்கிறோம்.

ரேஷமாதித் திரிபலாதி மாஜூன்

சுத்திசெய்த *கோராப்பட்டு 70 கிராம், மஞ்சள் கடுக்காய்த்தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல்; தான்றிக்காய்த்தோல், கற்கடகசிங்கி, சீமை

---

* பட்டு சேர்க்க வேண்டிய முறைகளில் அதைக் கஷாயமாகச்ச செய்து சேர்ததுக்கொள்வதைப் பார்க்கிலும் முதற்பாகத்தில் பாகலக்ஷணத்தில் சொல்லியிருக்கிறபடி பாகப்படுத்திச் சேர்த்துக்கொள்வதே அதிகப்பிரயோஜனம்.

நெல்லிமுள்ளி, பனப்ஷாபூ இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், பசுவின் நெய் 70 கிராம், காவுஜூபான் இலைச் சூரணம் 4 கிராம், காவுஜூபான்பூச் சூரணம் 20 கிராம், விதை நீக்கின கடுக்காய் முறப்பா, விதை நீக்கின நெல்லிக்காய் முறப்பா இவை வகை 1க்கு 100 கிராம், வெண் தாமரைப்பூச்சாறு கால்படி, சீனிசருக்கரை 1400 கிராம்.

செய்முறை - மேற்படி பட்டை முக்காற்படி ஜலத்திலிட்டு ஓரிரவு ஊறவைத்துக் காலையில் காய்ச்சி வடிகட்டின கஷாயத்துடன்வெண் தாமரைப்பூவின்சாற்றையும் கலந்து சீனி சருக்கரையையுஞ் சேர்த்துக் காய்ச்சி பாகுபதத்தில் கடுக்காய்களின் சூரணங்களையொன்றாகக் கலந்து முறப்பாக்களை யரைத்து அதிற்கலந்து மேற்படி பாகில் தூவிக் கிண்டிக்கிளறி மாஜூன் பதத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாத்திரை - 12- 15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தைப் பலப்படுத்தும், மனதிற்குச் சந்துஷ்டியையும் ஊக்கத்தையும் கொடுக்கும். மூளையைச் சுத்திசெய்யும்.

திரிதோஷ நிவாரண பலகாரி மாஜூன்

கொட்டை முதலியவை நீக்கின சீமைநெல்லிமுள்ளி 400 கிராம். நெல்லிக்காயானால் 700 கிராம், ரோஜாப் பூவிதழ்ச் சூரணம் 16 கிராம், கோரைக்கிழங்குச் சூரணம் 20 கிராம், லவங்கம், நிலக்கடம்பு, சடாமாஞ்சில் இவைகளின் சூரணம் வகை 1க்கு 12 கிராம், ஜாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி லவங்கப்பத்திரி, உலர்த்தின எலுமிச்சந்துளசி, ஏலக்காய், பேரேலக்காய் ஜாதிக்காய், பெருலவங்கப்பட்டை, குங்குமப்பூ, பாகப்படுத்தின துளையிடாத நன்முத்து, இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம்; அம்பர் 5 கிராம், கெட்டித்தேன் 400 கிராம்; சீனிசருக்கரை 460 கிராம்.

செய்முறை- ஒருபடி பசுவின்பாலில் அல்லது வெள்ளாட்டுப் பாலில் நெல்லிமுள்ளியானால் ஒருநாளும், நெல்லிக்காயானால் மூன்றுநாளும் ஊறவைத்துப் பால் மஷ்டுக்களில்லாமல் நன்றாகக்கழுவி இரண்டுபடி சுத்த ஜலத்திலிட்டு வேகவைத்து வெண்ணெய்போல் வெந்தபின் எடுத்துத் தகர சல்லடையில் அல்லது வலைபோன்ற உரத்த துணியில் வடித்து நரம்புகளைமாத்திரம் நீக்கிவிட்டு அதில் சீனசருக்கரையையும் தேனையும் விட்டுக் காய்ச்சி பாகுபதத்தில் சூரணங்களைத் தூவிக் கிண்டிக்கிளறிக் கீழிறக்கி அம்பரையும் குங்குமப்பூவையும் பன்னீர் விட்டரைத்துச்சேர்த்து நன்றாக மிஸ்ரமித்து ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் வைத்துப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 4-12 கிராம் ஆகாரத்திற்கு முன்னும் பின்னும் சாப்பிடவேண்டும்.

உபயோகம்- இருதயத்தைப் பலப்படுத்தித் தாது நஷ்டம் முதலிய ரோகங்களை நிவர்த்தி செய்து தேகாரோக்கியத்தை யுண்டாக்குவதில் இது மிகவும் பேர்பெற்றது . இருதய அதிர்ச்சி, மனக்குழப்பம், மனந்தடுமாறல் இவற்றை நீக்கி, மனத்திடாரிக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும், தலைமூளை, ஈரல் முதலிய இராஜகருவிகளையும் பலப்படுத்துவதில் இது சிறந்தது. ஈரலின் ஒழுங்கீனத்தைச் சீர்ப்படுத்தும். ஆண்மை, தாருட்யவிர்த்தி ஆகியவற்றை அதிகப்படுத்தும்.கிழத்தனத்தைத் தடுக்கும். இதனைத் தொடர்ந்தேற்றியாகச் சாப்பிட்டு வர, முத்தோஷங்களையும் நிவர்த்தி செய்து, காயச்சித்தியை யுண்டாக்கிக் காயகற்பம் போன்று, தாயைப்போல் தேகத்தைக் காப்பாற்றி ரட்சிக்கும்.

குறிப்பு

நெல்லிமுள்ளியானால் புதிதாயும் சதைப்பற்றுள்ளதாயும் இருக்க வேண்டும். மக்கி மடிந்து உளுத்துப் புழுத்துப்போனது ஆகாது. நெல்லிக்காயானால் முதிர் தருணமானதும், காயம் படாததும், நாரற்றதுமாயிருக்க வேண்டும். மற்ற பாகங்களிலும் இவ்விதியைத் தவறாது அநுசரித்து வர வேண்டும்.

தேவகிர்பா ஜவாரிஷ்

விதைநீக்கிச் சுத்தி செய்த சீமை நெல்லிமுள்ளி 210 கிராம், நெல்லிக்காயானால் 700 கிராம், சுத்திசெய்த கோராப்பட்டு 35 கிராம், மூங்கிலுப்பு, றூமிமஸ்தகி, சடாமாஞ்சில், ரோஜாப்பூ, குங்குமப்பூ, பாகப்படுத்திப் பன்னீர் விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின துளையிடாத நன்முத்து, பாகப்படுத்திய பன்னீர்விட்டு இரண்டு சாமம் .அரைத்துலர்த்தின கஹறுபா இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 15 கிராம், ரேவல்சீனி, நிலக்கடம்பு, கோரைக்கிழங்கு, அகருகட்டை, சீமை விலாமிச்சவேர், வெண்சந்தனம், உலர்த்தின துரிஞ்சி நாரத்தந்தோல், லவங்கப்பத்திரி, துளசிவிதை, ஏலக்காய், ஜரிஷ்க், பேதானா, கிச்சிலிக்கிழங்கு, லவங்கம் இவைகளைத் தனித்தனிச் சூரணம் செய்துகொள்ள வேண்டும், பாகப்படுத்திப் பன்னீர்விட்டு இரண்டு சாமம் அரைத்துலர்த்தின நற்பவளம், பாகம்படுத்திப் பன்னீர்விட்டு நாலுஜாமம் அரைத்துலர்த்தின யஷப்கல், பாகப்படுத்திப் பன்னீர் விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின செந்நீர்ப் பற்றுள்ள மாணிக்கம், தங்கரேக்கு, வெள்ளிரேக்கு இவைகள் வகை ஒன்றுக்கு 8 கிராம், சீனிசருக்கரை 700 கிராம், கெட்டித்தேன் 700 கிராம்.

செய்முறை - முன் பாகத்திற் சொல்லியிருக்கிறபடி நெல்லிமுள்ளியை அல்லது நெல்லிக்காயைப் பாகப்படுத்திச் செய்தெடுத்து, பட்டையும் ஜரிஷ்க்கையும் சேர்த்துக் காற்படி ஜலம் வார்த்து அரைப்பாகமாகச் சுண்ட

வைத்துப் பிசைந்து வடிகட்டின கஷாயத்தில் அதைச்சேர்த்துச் சீனி சருக்கரையையும் தேனையும் அதிற்கலந்து காய்ச்சிப் பாகு செய்து சூரணங்களை யொன்றாகக் கலந்து தூவி, அம்பரையும் குங்குமப்பூவையும் பன்னீர் விட்டரைத்துச் சேர்த்துக் கீழிறக்கி, முத்து, கஹறுபா, பவளம், யஷப், மாணிக்கம் ஆகியவற்றையும் பொடித்து முறையே அதிற் கலந்து, தங்கரேக்கையும் வெள்ளிரேக்கையும் முறையே ஒவ்வொன்றாக மிஸ்ரமித்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - முன் கண்டபடி எல்லாக் குணங்களையும் கொடுப்பதுந்தவிர, இருதய முதலிய ராஜ கருவிகளையும் மற்ற துணைக் கருவிகளையும் பலப்படுத்திக் காயசித்தி, தாருட்டியவிர்த்தி, ஆண்மைசக்தி, தேகசக்தி, சந்தானவிர்த்தி ஆகியவற்றை யுண்டாக்கும். இது பொதுவாய் எல்லோர்க்கும் இன்றியமையாத சுகாபிவிர்த்தியைத் தவறாது கொடுத்தலால் தேவகீர்பா ஜவாரிஷ் எனச் சிறப்புப் பெயர் பெற்றது.

சுகவல்லப ஜவாரிஷ்

தித்திப்புமாதுளம்பழ ரசம் 450 கிராம், பொதினாக்கீரை ரசம், பன்னீர், தாழம்பூத்திராவகம் அல்லது கஷாயம் இவை வகை ஒன்றுக்கு 100 கிராம், வெண்தாமரைப்பூ ரசம் 55 கிராம், சீனிசருக்கரை 700 கிராம் தாளிசப்பத்திரி உலர்த்தின துரிஞ்சி நாரத்தந்தோல், சந்தனம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், அம்பர், அகருகட்டைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம்.

செய்முறை - ரசங்களையும் திராவகங்களையும் ஒன்றாகக் கலந்து சீனிசருக்கரையைச் சேர்த்துப் பாகுசெய்து, பதத்தில் சூரணங்களை யொன்றாகக் கலந்து, தூவிக் கிண்டிக்கிளறிக் கீழிறக்கி, அம்பரைப் பன்னீர் விட்டரைத்து சேர்த்து நன்றாக மிஸ்ரமித்துப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 5-6 கிராம் சாப்பிடலாம்

உபயோகம் - இருதயத்தையும் இரைப்பையையும் பலப்படுத்தும், மனோற்சாகத்தையும் கொடுத்துத் தாது நஷ்டத்தையும் தீர்க்கும்.

காவுஜூபான் குல்கந்து

காவுஜூபான்பூ ஒருபங்கு, சீனிசருக்கரை ஒன்று அல்லது இரண்டுபங்கு, இவ்விரண்டையும் சேர்த்துக் கையினால் நன்றாக மத்தித்துப் பிசைந்து நாற்பது நாள் வெய்யிலில்வைத்து யெடுத்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 12-18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தையும் மூளையையும் பலப்படுத்துவதில் மிகவும் சிறந்தது. இருதய அதிர்ச்சி, மயக்கம் ஆகியவற்றை நீக்கும். வண்டலினாலுண்டாம் வியாதிகளுக்கும் அதியேற்றமானது. இது செலவிற் குறைந்ததும், பாகத்தில் லகுவானதும், சூரணத்திற் சிறந்ததுமாயிருகின்றது.

குறிப்பு

காவுஜுபொன்பூ அன்றலர்ந்ததாய், அகப்படாவிட்டால் உலர்ந்த பூவைப் பன்னீரிற்போட்டு ஊறவைத்தெடுத்து உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

பத்ம குல்கந்து

வெண் தாமரைப்பூவிதழ் ஒருபங்கு. தேனானால் இரண்டு பங்கு, சீனிசருக்கரையானால் ஒன்றரைபங்கு அல்லது இரண்டுபங்கு.

செய்முறை - தாமரைப்பூவிதழை ஒருநாள் நிழலில் ஆறவிட்டு அதன்மேலுள்ள நீர் சுவறினபதத்தில் கெட்டித் தேனானால் காய்ச்சி முதிர்பதத்தில் கீழிறக்கிக் குளிர ஆற விட்டு அதில் மேற்படி இதழ்களைப் போட்டு முன்பாகப்படி செய்துகொள்ள வேண்டும் சீனிசருக்கரையானால், பாகு செய்யாமல் மேற்கண்டபடியே செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 35-55 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தின் சூட்டைத்தணித்து அதனைப் பலப்படுத்தும், ஈரற்சூட்டையும் அதிக தாகத்தையும் தணிக்கும்.

முத்தாதி ரத்தின பலகாரி மாத்திரை

பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின தொளையிடாத நன்முத்துச்சூரணம், பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின செந்நீர்பற்றுள்ள மாணிக்கச் சூரணம், கருவேலம்பிசின் சூரணம், சீனிசருக்கரை, மேல்தோல் நீக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, நிஷாஸ்தாதூள் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், அபினி 24 கிராம், பாகப்படுத்திப் பன்னீர்விட்டு இரண்டுசாமம் அரைத்துலர்த்தின கஹறுபா, பாகப்படுத்திப் பன்னீர்விட்டு இரண்டுசாமம் அரைத்துலர்த்தின நற்பவளம் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், அம்பர் 3 கிராம்.

செய்முறை - முத்து, மாணிக்கம், கஹறுபா, பவளம் ஆகிய இந்நான்கையும் கல்வத்திலிட்டு, காவுஜுபொன் திராவகம் வார்த்து

எட்டுச்சாமம் கைவிடாமல் அரைத்து மற்றவைகளையும் சேர்த்து மறுபடியும் நாலுசாமம் விடாமல் அரைத்துக் கடலைப்பிரமாணம் மாத்திரை செய்துலர்த்திக் கொள்ளவேண்டும்.

மாத்திரை - 1-2 சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தின் பலவீனத்தைப் போக்கி, அதனைப் பலப்படுத்தும், மனோற்சாகத்தையும் தைரியத்தையும் உண்டாக்கும். விந்துக்கமலங்களைப் பலப்பித்து, ஆண்மையை யுண்டாக்கி, நீர்த்துப்போன இரத்த சத்தை மணியாக்கும். இருமலைநீக்கும். இது தாருட்டிய விர்த்திக்கு பேர் போனது.

திரியாக் ரத்தாதி மாத்திரை

அபினி 12 கிராம், அதிமதுரப்பால் 4 கிராம், அகரு கட்டைச் சூரணம், பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின தொளையிடாத நன்முத்துச் சூரணம், பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின செந்நீர்பற்றுள்ள மாணிக்கச் சூரணம், குங்குமப்பூ இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், பாகப்படுத்திப் பன்னீர்விட்டு இரண்டுசாமம் அரைத்துலர்த்தின கஹரூபா சூரணம் 2 கிராம்.

செய்முறை - இரத்தினச் சூரணங்களைக் கல்வத்திலிட்டு காவுஜபான் திராவகம் வார்த்து எட்டுச்சாமம் அரைத்து மற்றவைகளையும் சேர்த்து மறுபடியும் முன் போலவே நாலுசாமம் அரைத்து, கடலைப்பிரமாணம் மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவேண்டும்.

மாத்திரை - 1-2 சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயம், இரைப்பை ஆகியவற்றைப் பலப்படுத்தும். பசிதீபனத்தையும், ஜீரணசக்தியையும் உண்டாக்கும், மனோற்சாக மாகியவற்றைக் கொடுக்கும். இருமலைப் போக்கும்.

மஹாஜஸர் இருதய பலகாரி

நன்றாய்ச்சிவந்து பருத்துத் தித்திப்பானவைகளும், மேல்தோல் உள்நரம்பாகியவை நீக்கப்பட்டவைகளுமான மஞ்சள் முள்ளங்கிக்கிழங்குகள் 700 கிராம், சீமை யிலந்தைப் பழ (Apple) முறப்பா 175 கிராம், ஜம்பு நாவற்பழ முறப்பா 105 கிராம், இஞ்சி முறப்பா 70 கிராம்,மஞ்சள் முள்ளங்கிக் கிழங்கின் ரசம் அரைபடி, பசுவின்பால் அரைபடி, மேல்தோல் நீக்கின தண்ணீர்விட்டான் கிழங்கின் ரசம் கால் படி.

நிஷாஸ்தா 140 கிராம், பசுவின் நெய் 875 கிராம், சீனிசருக்கரை 875 கிராம், மேல்தோல் நீக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, மேல்தோல் நீக்கின அக்றோட்பருப்பு, மேல்தோல் நீக்கின பிஸ்தாப் பருப்பு, சாரப் பருப்பு, மேல் தோல் நீக்கின தேங்காய், சில்கூஜாபருப்பு இவை வகை ஒன்றுக்கு 25 கிராம்.

ஸாலாமிஸ்றிச் சூரணம் 25 கிராம், பூமிசருக்கரைக் கிழங்கு, சீமை தண்ணீர்விட்டான் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், பஹமனே ஸூபேத். பஹமனே ஸுறுக் இவை வகை ஒன்றுக்கு 5 கிராம், லவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, ஜாதிக்காய், குங்குமப்பூ இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 5 கிராம், அம்பர் 3 கிராம், கஸ்தூரி 2 கிராம்.

செய்முறை - முன் சொல்லப்பட்ட எட்டு வஸ்துக்களையும் ஒன்றாகக்கலந்து அடுப்பேற்றி எல்லாம் வெண்ணெய்போல் நன்றாய் வெந்தபின் இறக்கிப்பிசைந்து வடிகட்டிச் சக்கை நீக்கி ரசத்தை வைத்துக்கொள்ள வேண்டும். கொஞ்சம் நெய்வார்த்து நிஷாஸ்தாவைப் பொடித்துப்போட்டு நன்றாகச் சிவக்க வறுத்தெடுத்தும், பருப்பினங்களை நன்றாய் அரைத்தும், மேற்படி ரசத்திற் சேர்த்து அதில் மீந்த நெய்யையும் சீனிசருக்கரையையும் சேர்த்துக் காய்ச்சி நீர் சுண்டி நெய் புறப்படும் சமயத்தில் சூரணங்களை ஒன்றாகக் கலந்து, குங்குமப்பூவை அம்பரை கஸ்தூரியைத் தனித்தனி பன்னீர் விட்டரைத்துச் சூரணக்கலவையிற் கலந்து பாகில் தூவி நன்றாகக் கிண்டிக்கிளறி யிறக்கிப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 12- 18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தைப் பலப்படுத்தி ரத்தவிர்த்தியை யுண்டாக்கும், ரத்தத்தை புஷ்டியாக்கி தாதுநஷ்டத்தை நீக்கி, ஆண்மைசக்தியை அதிகப்படுத்தும், மனோற்சாக மாகியவற்றைக் கொடுக்குந் தன்மையில் இது மஹா தீரசக்தியுடையது.

கஸ்தூரி சீத சிந்தாமணி

பாகப்படுத்தின கோராப்பட்டு, ரோஜாப்பூவிதழ், மூங்கிலுப்பு கொத்தமல்லிவிதை, காவுஜுபான்பூ, பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நாலு சாமம் அரைத்துலர்த்தின துளையிடாத நன்முத்து, பாகப்படுத்திப் பன்னீர்விட்டு இரண்டு சாமம் அரைத்துலர்த்தின் கஹரூபா, பாகப்படுத்திப் பன்னீர்விட்டு இரண்டுசாமம் அரைத்துலர்த்தின நற்பவளம், குச்சி, காம்பு முதலியவை நீக்கப்பட்ட ஜரிஷ்க், பருப்புக்கீரை விதை, வெண்சந்தனம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 1 கிராம், செஞ்சந்தனம், பூங்காவி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம். அம்பர், நிஷாஸ்தா பொடி,

வெள்ளிரேக்கு, பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நாலு சாமம் அரைத்துலர்த்தின செந்நீர்ப்பற்றுள்ள மாணிக்கச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம். தங்கரேக்கு, கஸ்தூரி இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், சீமையிலந்தைப் பழ (Apple) ரசம், தித்திப்பு மாதுளம்பழரசம், புளிமாதுளம் பழ ரசம் இவை வகை ஒன்றுக்கு 150 கிராம், கஸ்தூரிப் பிரம்புத் திராவகம், பன்னீர் இவை வகை ஒன்றுக்கு 150 கிராம், சீனிசருக்கரை 350 கிராம்.

செய்முறை - ரசங்களையும் திராவகங்களையும் ஒன்றாகக் கலந்து, அதில் சீனிசருக்கரையைச் சேர்த்துப் பாகுசெய்து பதத்தில் சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து, ஜரிஷ்க்கை யரைத்துச் சூரணக்கலவையிற் புரட்டிப் பாகில் தூவி நன்றாகக் கிண்டிக் கிளறி, அம்பரையும் கஸ்தூரியையும் பன்னீர் விட்டரைத்துச் சேர்த்து நன்றாகப் புரட்டி, தங்கரேக்கு வெள்ளிரேக்கு ஆகியவற்றை முறையே ஒவ்வொன்றாகப் போட்டுப் புரட்டிப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 2-3 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தையும் மூளையையும் பலப்படுத்தும், சூடான ஈரலிற்கும் பலத்தைக் கொடுக்கும். மார்பு அதிர்ச்சி, மனக்குழப்பம், சூட்டினாலுண்டாகும் மயக்கம் முதலிய இருதயரோகங்களை நீக்கி மனோற்சாக மாகியவற்றையும் கொடுக்கும். சூடு அதிகமானால், கஸ்தூரியை நீக்கிவிட வேண்டும்.

அம்பர் கஸ்தூரி சீத சிந்தாமணி

அம்பர், பாகப்படுத்தி பன்னீர்விட்டு இரண்டு சாமம் அரைத்துலர்த்தின கஹறுபா, பாகப்படுத்தி பன்னீர்விட்டு இரண்டு சாமம் அரைத்துலர்த்தின நற்பவளம், கஸ்தூரி இவை வகை ஒன்றுக்கு 4 கிராம் தங்கரேக்கு, வெள்ளிரேக்கு இவை வகை ஒன்றுக்கு 2 கிராம் பாகப்படுத்திப் பன்னீர் விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின செந்நீர்ப்பற்றுள்ள மாணிக்கச் சூரணம், காஹுவிதைச்சூரணம் இவை வகை ஒன்றுக்கு 5 கிராம், கொத்துமல்லி விதை, வெண் சந்தனம், பேதானாவிதை, பருப்புக்கீரை விதை, காசினிவிதை, ஜரிஷ்க் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், ரோஜாப்பூவிதழ், மூங்கிலுப்பு, காவுஜுபான்பூ, பாகப்படுத்தின கோராப்பட்டு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், கஸ்தூரிப் பிரம்புத்திராவகம், பன்னீர், தாமரைப்பூத் திராவகம், காவுஜுபான் திராவகம் இவை வகை ஒன்றுக்கு 100 கிராம், சீனிசருக்கரை 350 கிராம்.

செய்முறை - திராவகங்களை யொன்றாய்க் கலந்து சீனிசருக்கரையைச் சேர்த்துப் பாகுசெய்து, பாகுபதத்தில் சூரணங்களைக்

கலந்து ஜரிஷ்கை யரைத்துச் சூரணக்கலவையிற் சேர்த்து, பாகில் தூவி நன்றாய்க் கிண்டிக் கிளறி, அம்பரையும் கஸ்தூரியையும் பன்னீர் விட்டரைத்து அதிற் சேர்த்து நன்றாய் மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - முன் கண்டவைகளுக்காம், இருதய சம்பந்தமான வியாதிகளில் சூடானவைகளுக் கெல்லாம் இது சஞ்சீவகரணிக்கு ஒப்பானது

சூட்சும கஸ்தூரி சீத சிந்தாமணி

சீமை நெல்லிமுள்ளிச் சூரணம் 28 கிராம், பாகப்படுத்தின பன்னீர்விட்டு இரண்டு சாமம் அரைத்துலர்த்தின கஹறுபா, மூங்கிலுப்பு, ரோஜாப்பூவிதழ், காவுஜுபான்பூ இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், வாதுமைப்பிசின், பாகப்படுத்திப் பன்னீர்விட்டு இரண்டு சாமம் அரைத்துலர்த்தின நற்பவளம், பாகப்படுத்திப் பன்னீர் விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின தொளையிடாத நன்முத்து, வெண்சந்தனம், பாகப்படுத்தின கோராப்பட்டு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 25 கிராம், கஸ்தூரி, லவங்கப்பட்டைச் சூரணம் வகை ஒன்றுக்கு 16 கிராம் குங்குமம்பூ 2 கிராம், சீனிசருக்கரை 350 கிராம்.

செய்முறை - சீனிசருக்கரையைப் பாகுசெய்து பாகுபதத்தில் சூரணங்களை யொன்றாய்க்கலந்து, குங்குமப்பூவையும் கஸ்தூரியையும் பன்னீர் விட்டரைத்துச் சூரணக்கலவையிற் போட்டுப் புரட்டிப் பாகில் தூவி நன்றாய்க் கிண்டிக்கிளறி யிறக்கிப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 8 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - முன் கண்டவைகளுக்காம்.

கஸ்தூரி சீதோஷ்ண சம சிந்தாமணி

பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நான்குசாமம் அரைத்துலர்த்தின தொளையிடாத நன்முத்து, பாகப்படுத்திப் பன்னீர்விட்டு இரண்டுசாமம் அரைத்துலர்த்தின கஹறுபா, பாகப்படுத்திப் பன்னீர்விட்டு இரண்டுசாமம் அரைத்துலர்த்தின நற்பவளம், பாகப்படுத்தின கோராப்பட்டு, கிச்சிலிக்கிழங்கு, பஹமனேஸுபேத், பஹமனேஸுறுக், கோரைக்கிழங்கு, சடாமாஞ்சில் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், அம்பர் 4 கிராம், லவங்கம், ஏலக்காய், லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, குங்குமப்பூ, றூமிமஸ்தகி, மூங்கிலுப்பு, வெண் சந்தனம்,செஞ்சந்தனம்,கஸ்தூரி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 2 கிராம் சீனிசருக்கரை 100 கிராம் கெட்டித்தேன் 100 கிராம்.

செய்முறை- தேனையும் சீனிசருக்கரையையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகுசெய்து பாகுபதத்தில், சூரணங்களையொன்றாகக் கலந்து, குங்குமப்பூவை பன்னீர்விட்டரைத்துச் சூரணக்கலவையிற்கலந்து, பாகில் தூவி நன்றாகக் கிண்டிக் கிளறிக் கீழிறக்கி, அம்பரையும் கஸ்தூரியையும் பன்னீர்விட்டரைத்து அதிற்சேர்த்து, நன்றாக மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மேற்கண்டவைகளுக்காம்.

ஸ்ரீ கெந்தாதி சூரணம்

பன்னீர் விட்டிழைத்துலர்த்தின சந்தனம், புதிதாயுலர்த்தின வெண்தாமரைப்பூவிதழ்ச் சூரணம், ஏலரிசிச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 30 கிராம், மூங்கிலுப்பு கோரோசனை, காவுஜுபான்பூ, பூங்காவி, கருவேலம்பிசின் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 8-12 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தைப்பலப்படுத்தும், மயக்கம், சோர்வு ஆகியவற்றைப் போக்கிச் சுறுசுறுப்பையுண்டாக்கும். குழந்தைகளின் வியாதிகளுக்கும் அதிகப் பிரயோஜனகரத்தைக் கொடுக்கும்.

சுவர்ணபூபதி சூரணம்

அம்பர், பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின துளையிடாத நன்முத்துச் சூரணம், றூமிமஸ்தகிச் சூரணம் வகை ஒன்றுக்கு 5 கிராம், தங்கரேக்கு 4 கிராம், கஸ்தூரி, மூங்கிலுப்புச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்தரைத்து எடுத்துக் கல் தக்கையுள்ள புட்டியிற் பத்திரப் படுத்த வேண்டும்.

மாத்திரை - வேளையொன்றுக்கு முதல்வாரம், 130 மி.கிராம், இரண்டாம் வாரம் 250 மி. கிராம், மூன்றாம் வாரம் 300 கிராம், நான்காம் வாரம் 520 மி.கிராம் இப்படி காலை மாலைச் சாப்பிட்டு ஐந்தாம்வாரம் 300 மி.கிராம், இவ்விதம் முறையே வாரத்திற்கு 130 மி.கிராம், குறைத்துச் சாப்பிட்டுவரவேண்டும், தாம்பூலத்துடனும் சேர்த்துச் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தையும், இரைப்பையையும் பலப்படுத்தும், பசி தீபனம் ஜீரணசக்தி ஆகியவற்றை அதிகப்படுத்தி ஆகாராதிகளை

அதிகமாயுட்கொள்ளச் செய்யும், நல்லிரத்தமுண்டாக்கி முகவசீகரம், தேஜஸு, ஆயுள்விர்த்தி ஆகியவைகளையுண்டாக்கும்.

ஹரிச்சந்தன ஷர்பத்

மஞ்சள் சாயலான வெண்மையும் தைலப்பசையும் உள்ள சந்தனகட்டையை இராவின தூள் 100 கிராம், பன்னீர் 425 கிராம், பச்சைக்கர்ப்பூரம், அம்பர், கஸ்தூரி இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், சீனிசருக்கரை 900 கிராம் வெள்ளிரேக்கு, தங்கரேக்கு, இவை சக்திக்கு ஏற்ற அளவு.

செய்முறை - பன்னீரிற் சந்தனத் தூளைப்போட்டு இரண்டு நாள் ஊறவைத்து மூன்றாம் நாள் பன்னீரை இறுத்துக் கொண்டு அந்தத்தூளில் 510 மி லிட்டர்க்கு, சுத்த சலம் வார்த்துக்காய்ச்சி மூன்றிலொன்றாகச் சுண்டினபின் இறக்கி வடித்த கஷாயத்தை முன் பன்னீருடன் சேர்த்துச் சீனிசருக்கரைகூட்டிப் பாகுசெய்து, பதத்தில் கீழிறக்கிப் பச்சைக்கர்ப்பூரம் முதலியவற்றைப் பொடித்துக் கொஞ்சம் பன்னீர் விட்டரைத்து அதிற் சேர்த்து, நன்றாக மிஸ்ர மித்துக் கொள்ளவேண்டும்.

மாத்திரை - 12-15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தின் சோர்வை நீக்கி, அதனைப் பலப்படுத்தும். உஷ்ண சம்பந்தமான இருதய அதிர்ச்சி, வீண் கவலை, நிர்நிமித்த பயம் ஆகிய இவற்றை நீக்கி, மனோற்சாகத்தையும், மனக்களிப்பையும் கொடுக்கும்.

இராஜ விக்ரம ஷர்பத்

காவுஜுபான் இலை, காவுஜுபான்பூ இவை வகை ஒன்றுக்கு 5 கிராம், ரோஜாப்பூவிதழ், வெண்சந்தனம், இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், பன்னீர் 450 கிராம், கஸ்தூரிப்பிரம்புத்திராவகம் 160 கிராம், சுத்தஜலம் 840 கிராம், காசினிவிதைத்தெளிநீர், தித்திப்பு மாதுளம்பழரசம், இவை வகை ஒன்றுக்கு 140 கிராம், சீனிசருக்கரை 840 கிராம் பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின துளையிடாத நன்முத்து, பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின செந்நீர்ப்பற்றுள்ள மாணிக்கம் பாகப்படுத்தி பன்னீர்விட்டு இரண்டு சாமம் அரைத் துலர்த்தின கஹறுபா, பாகப்படுத்திப் பன்னீர்விட்டு இரண்டு சாமம் அரைத்துலர்த்தின நற்பவளம், மூங்கிலுப்பு இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், அம்பர் 4 கிராம், தங்கரேக்கு, வெள்ளிரேக்கு வகை ஒன்றுக்கு 2 கிராம்.

செய்முறை - முன் நாலு சரக்குகளையும் அவற்றிற்கு அடுத்த மூன்றுவகைத் திரவங்களையும் ஒன்றாகக் கலந்து அதிற்போட்டு

ஓரிராப்பகல் ஊறவைத்து மறுநாள் சுண்டினபின் இறக்கி வடித்துச் சக்கைநீக்கி, அதில் அடுத்த இரண்டு திராவகத்தையும் சீனிசருக்கரையையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் கீழிறக்கிச் சூரணங்களையொன்றாகக் கலந்து அம்பரைப் பன்னீர் விட்டரைத்துச் சூரணக்கலவையிற் புரட்டிப் பாகில் தூவிக் கிண்டிக்கிளறி ரேக்குகளையும் முறையேபோட்டு மிஸ்ரமித்துப் பக்குவப்படுத்தவேண்டும்.

மாத்திரை - 12-15 கிராம் வெண்தாமரைப்பூத் திராவகத்திற் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தின் வியாதிகளை நீக்கி அதைப் பலப்படுத்துவதில் அதிசிரேஷ்டமாயிருப்பதுமின்றி மற்றெல்லா அவயவங்களைப் பலப்பிப்பதிலும் சிறந்ததே. இதனால் உண்டாம் சுகுணங்கள் பல. அது அநுபவத்தால் நன்கு புலப்படும்.

குறிப்பு

உஷ்ணாதிக்கத்தில் பச்சைக்கர்ப்பூரம் 4 கிராம் குங்குமப்பூ 2 கிராம், இவ்விரண்டையும் அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இருமலில்லாவிட்டால், பாகுசெய்யும்போது எலுமிச்சம் பழ ரசத்தை அல்லது துரிஞ்சிநாரத்தம் பழரசத்தை அல்லது புளித்தெளிநீரை வியாதியஸ்தன் தேகசுபாவத்திற்கு ஏற்ற அளவாய்ச் சேர்த்துப் பாகப் படுத்திக் கொள்வதனால், முன்னிலும் அதிக நற்குணத்தை கொடுக்கும். மலபந்த முண்டானால் சீனிசருக்கரைக்குப் பதில் தரஞ்சபீனைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

வேறு

காவுஜுபான் இலை 175 கிராம், பனப்ஷாபூ, கஷுஸ் விதை வகை ஒன்றுக்கு 50 கிராம், ரோஜாப்பூவிதழ், உலர்த்தின எலுமிச்சந்துளசி யிலை இவை வகை ஒன்றுக்கு 45 கிராம், புளிப்பு மாதுளம்பழரசம், காசினிக்கீரைத் தெளிநீர் இவை வகை ஒன்றுக்கு 525 கிராம், சீனிசருக்கரை 1800 கிராம்.

செய்முறை - முக்காற்கூறு காய்ந்த வெந்நீர்ப் படி முக்காலில் முன்னைய ஐந்து வஸ்துகளையும் போட்டு ஓரிராப்பகல் ஊறவைத்துக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் கீழிறக்கிப் பிசைந்து வடித்துச் சக்கை நீக்கி மற்றைய திரவங்களையும் சீனிசருக்கரையையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி ஆறவிட்டுப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 35-45 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தையும் இரைப்பையையும் பலப்படுத்தும், மார்பு அதிர்ச்சி முதலிய இரைப்பை சம்பந்தமான இருதய வியாதிகளை நீக்கும். இரைப்பைச் சூலையைக் கண்டிக்கும். இரைப்பையிலுள்ள பித்தநீரை வெளிப்படுத்தும் பயித்தியரோகம், நித்திரையின்மை ஆகியவற்றைப் போக்கும். உஷ்ணம் அதிகரித்தவர்களுக்கும், துர்பலப்பட்டவர்களுக்கும் இது அதிக உபயோகமானது.

ஆமிரஞ்ச ஷர்பத்

துரிஞ்சி நாரத்தம்பழ ரசம் 140 கிராம், காவுஜுபான் திராவகம் 175 கிராம், சீனி சருக்கரை 175 கிராம் குங்குமப்பூ 1 கிராம்.

செய்முறை - காவுஜுபொன் திராவகத்தில் சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சி நுரைநீக்கி வந்து, முதிர்ந்தபதத்தில் மேற்படி துரிஞ்சி நாரத்தம்பழரசம் சேர்த்து இரண்டு மூன்று கொதி வந்தபின் கீழிறக்கி குங்குமப்பூவைப் பன்னீர்விட்டரைத்து அதிற்கலந்து, நன்றாய் மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தையும் இரைப்பையையும் பலப்படுத்தும், பித்தம் உஷ்ணாதிக்கம் ஆகியவற்றைச் சமப்படுத்தும்.

நாரங்க வடக ஷர்பத்

துரிஞ்சி நாரத்தம்பழத் தோல் 450 கிராம் சுத்தஜலம் ஒரு படி, கெட்டித்தேன் 450 கிராம்.

செய்முறை - மேற்படி பழத்தின் தோலை ஒருநாள் ஊறவைத்துக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கி வடித்து சக்கை போக்கித் தேன் சேர்த்துக் காய்ச்சி, ஷர்பத் பதத்தில் இறக்கிப் பத்திரப்படுத்தவேண்டும்.

மாத்திரை - 6-12 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயம் இரைப்பை ஆகியவற்றைப் பலப்படுத்தும்.

இராஜ பராக்ரம ஷர்பத்

சுத்திசெய்த கோராப்பட்டு 175 கிராம், காவுஜுபொான், எலுமிச்சந்துளசி, ரோஜாப்பூவிதழ், சடாமாஞ்சில், லவங்கப் பத்திரி இவ்வை வகை ஒன்றுக்கு 8 கிராம், பன்னீர் 175 கிராம், சீனிசருக்கரை 525 கிராம்.

பன்னீர் விட்டிழைத்துலர்த்தின சந்தனப்பொடி 3 கிராம், பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின துளையிடாத நன்முத்து, பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின

யஷப், பாகப்படுத்திப் பன்னீர்விட்டு இரண்டுசாமம் அரைத்துலர்த்தின கஹறுபா இவைகளின் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், அம்பர் 4 கிராம், கஸ்தூரி 1 கிராம்.

செய்முறை - தங்கத்தை நெருப்பில் பழுக்கக் காய்ச்சி ஒருபடி சுத்தஜலத்தில் தோய்த்தெடுத்து மறுபடியும் அப்படிச் செய்து அந்த ஜலத்திலேயே தோய்க்க வேண்டும். இவ்விதம் பத்துத் தடவைக்குக் குறையாமற் செய்து வர வேண்டும். பின்பு, வெள்ளியையும் அவ்விதமே செய்து, அந்த ஜலத்திலேயே அத்தனை தடவைக்குக் குறையாமற் செய்யவேண்டும். இவ்விதம் பாகப்படுத்தின ஜலத்தில் மேற்படி பட்டையிட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் கீழிறக்கிப் பிசைந்து பிழிந்து சக்கைபோக்கி அந்தக் கஷாயத்தையெடுத்துக் கொள்ளவேண்டும். அடுத்த ஐந்து சரக்கையும் பன்னீர்விட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் கீழிறக்கிப் பிசைந்து பிழிந்து சக்கை போக்கி, அந்தக் கஷாயத்தையும்எடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு, இவ்விரண்டு கஷாயத்தையும் ஒன்றாகக் கலந்து சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப்பாகுபதத்தில் கீழிறக்கி, அம்பரையும் கஸ்தூரியையும் பன்னீர்விட்டரைத்து மற்றவைகளைச் சேர்த்துப் பொடித்துப் பாகில் தூவி நன்றாய் மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 8-9 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயம், இரைப்பை, ஈரல் ஆகிய இராஜகருவிகளைப் பலப்படுத்தும். இருதய அதிர்ச்சி, மனக்கிலேசம் ஆகியவற்றைப் போக்கும். மனோபலம், மனக்களிப்பு முதலியவற்றையுண்டாக்கும். மலப்போக்கை நிறுத்தும்.

இராஜ சௌரிய ஷர்பத்து

சுத்திசெய்த கோராப்பட்டு 350 கிராம், பாகப்படுத்திப் பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின தொளையிடாத நன்முத்துச் சூரணம் 12 கிராம், பாகப்படுத்திப் பன்னீர்விட்டு இரண்டுசாமம் அரைத்துலர்த்தின கஹறுபா, பாகப்படுத்திப் பன்னீர்விட்டு 2 சாமம் அரைத்துலர்த்தின நற்பவளம், ரோஜாப்பூவிதழ், சந்தனம், மூங்கிலுப்பு இவைகளின் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம் அம்பர் 7 கிராம், கஸ்தூரி 3 கிராம் *சீமையிலந்தைப்பழ (Apple), ரசம் கால்படி, சீனிசருக்கரை 140 கிராம்,

* இதனை ஒரு பாத்திரத்தில் வார்த்து அதைக் கொதிக்கும் ஜலத்தின் மேல் வைத்துத் தீய்த்து போகாமல் மெழுகுபோல் இறுகிய பதத்தில் எடுத்துச் சேர்த்தாலும் அல்லது வெய்யிலில் வைத்து இவ்விதம் செய்து சேர்த்தாலும், அதிகப் பிரயோஜனத்தைக் கொடுக்கும்.

காவுஜுபான் திராவகம் 280 கிராம், பன்னீர், கஸ்தூரிப் பிரம்புத் திராவகம் இவை வகை ஒன்றுக்கு 175 கிராம்.

செய்முறை - முன் பாகத்திற் சொல்லியிருப்பது போலப் பாகப்படுத்தின ஜலம் படி ஒன்றேகாலில் மேற்படி பட்டை பேட்டுக் காய்ச்சி, நாலிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து வடித்துப் பிழிந்து சக்கைபோக்கின கஷாயத்தில் மற்றைய திரவங்களையும் கலந்து சீனி சருக்கரை சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி, எல்லாச் சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து, அம்பரையும் கஸ்தூரியையும் பன்னீர்விட்டரைத்துச் சூரணக்கலவையிற் கலந்து பாகில் தூவி நன்றாய் மிஸ்ரமித்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 4 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - முன் கண்ட சுகுணங்களைத் தருவதில் இது, முன்னைய பாகத்தைப் பார்க்கிலும், விசேஷ மகிமையையுடையது.

மஹாராஜ சௌரிய ஷர்பத்து

சுத்திசெய்த கோராப்பட்டு 1225 கிராம் காவுஜுபான் திராவகம், கஸ்தூரிப் பிரம்புத் திராவகம், தரா இலைத் திராவகம் பன்னீர் இவை வகை ஒன்றுக்கு 2 படி, சீமையிலந்தைப் பழ (Apple) ரசம், தித்திப்புமாதுளம் பழரசம் இவை வகை ஒன்றுக்கு படி1 , நெல்லிக்காய் முறப்பா 350 கிராம், விதை நீக்கியரைத்து முக்காற்படி ஜலத்திற் கரைத்து வடித்துப் பிழிந்த ரசம் அரை படி.

றூமிமஸ்தகி, சடாமாஞ்சில், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி இவை வகை ஒன்றுக்கு 5 கிராம், ஏலக்காய், லவங்கம், அகருகட்டை, லவங்கப்பத்திரி இவை வகைக்கு 8 கிராம், லவங்கப்பட்டை 14 கிராம், இப் பத்து சரக்குகளையும் சிதைத்து, ஒரு வஸ்திரத்துண்டில் முடிந்து கொள்ள வேண்டும். சீனிசருக்கரை 1225 கிராம் கெட்டித்தேன் 175 கிராம்.

வெள்ளிரேக்கு 25 கிராம், அம்பர், தங்கரேக்கு இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், றூமிமஸ்தகி, குங்குமப்பூ, லவங்கம், லவங்கப்பட்டை, பஹமனேஸுபேத், பஹமனேஸுறுக், அகருகட்டை ஏலரிசி, வெண்சந்தனம், கஸ்தூரி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 3 கிராம்.

செய்முறை - முன்னைய நான்கு திரவங்களையும் ஒன்றாகக் கலந்து, அதில் மேற்படி பட்டைப்போட்டு மூன்று நாள் ஊறவிட்டு பின்பு அதில் பின்னைய மூன்று ரசங்களையும், முன்முடிந்த முடிச்சையும் சேர்த்துக் காய்ச்சுகையில் சத்து வெளிப்படும்படி முடிச்சை நசுக்கி வந்து நாலிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கி வடிகட்டி, சீனிசருக்கரையையும்

தேனையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து, அதில் தூவிக் கிண்டிக் கிளறிக் கீழிறக்கி, குங்குமப்பூவையும், அம்பரையும் பன்னீர் விட்டரைத்து அதிற் சேர்த்து நன்றாய் மிஸ்ரமித்துப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 4,6 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயம் இரைப்பை முதலிய ராஜகருவிகளைப் பலப்படுத்தும். பைத்திய ரோகங்கள், மனக்கிலேசம் நீர்நிமித்த பயம் முதலிய உக்கிரரோகங்களை அதிசீக்கிரம் குணப்படுத்தும். பலவிதத் தேகிகளுக்கும் ஏற்கும் . வண்டலைப் பற்றிப் பற்பல வியாதிகளைக் கண்டிக்கும்.

நித்தில பில்லை மாத்திரை

சீமை வெள்ளரிவிதைப் பருப்பு, நாட்டு வெள்ளரிவிதைப் பருப்பு, சுரைவிதைப் பருப்பு இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், பருப்புக்கீரை விதைச் சூரணம் 12 கிராம், ரோஜாப்பூவிதழ் சூரணம் 8 கிராம்,மூங்கிலுப்புச் சூரணம், பன்னீர்விட்டு எட்டுச்சாமம் அரைத்துலர்த்தின தொளையிடாத நன்முத்துச் சூரணம், பன்னீர் விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின நற்பவளச் சூரணம், வெண்சந்தனச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம் குங்குமப்பூ 2 கிராம்.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் கல்வத்தி லிட்டு ஒருபலம் இஸ்பகோல் விதையை ஒன்றரை ஆழாக்கு நீரிற்போட்டு இரண்டு மணித் தியாலம் ஊறவிட்டெடுத்து வடிகட்டிப் பிழிந்தஜலம் வார்த்து நாலுசாமம் அரைத்து 8-9 கிராம் நிறையுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 1சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயத்தையும் மூளையையும் பலப்படுத்தும், சூட்டினாலுண்டாம் இருதய அதிர்ச்சி, மஞ்சட்காமாலை முதலியவற்றைப் போக்கும்.

இரத்தினாதி பில்லை மாத்திரை

பன்னீர்விட்டு எட்டுச்சாமம் அரைத்துலர்த்தின துளையிடாத நன்முத்துச் சூரணம், பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின நற்பவளச் சூரணம், பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின கஹறுபா சூரணம் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், கசகசா 5 கிராம், (இதனைச் சூரணம் செய்ய வேண்டியதில்லை) மூங்கிலுப்பு, பூங்காவி, கருவேலம்பிசின், ரோஜாப்பூவிதழ், பருப்புக்கீரைவிதை இவற்றின்

சூரணம் வகை 1-க்கு 4 கிராம், பூமாதுளம்பூ, நிஷாஸ்தா, வாதுமைப்பிசின் இவற்றின் சூரணம் வகை 1-க்கு 3 கிராம், குங்குமப்பூ 5 கிராம்.

செய்முறை - இவை எல்லாவற்றையும் கல்வத்திலிட்டுச் சுத்த நீர் வார்த்து நாலுசாமம் அரைத்து 4-5 கிராம் நிறையுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ள வேண்டும்

மாத்திரை - 1 சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயம், மூளை ஆகியவற்றைப் பலப்படுத்தும் மலப்போக்கை நிறுத்தும்.

இருதயோச்சித குதூகலனி

சுத்தசலம் படி-5, லவங்கம், ஜாதிப்பத்திரி, அப்திமூன், ஏலக்காய், செஞ்சந்தனம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், இவ்வைந்தையும் சிதைத்து ஒரு வஸ்திரத்துண்டில் முடிந்து கொள்ளவேண்டும். சுத்திசெய்த கோராப்பட்டு நூறு கிராம், சீனிசருக்கரை 875 கிராம், சீமையிலந்தைப் பழ (Apple) ரசம் 350 கிராம், ஸப்ஜாவிதை, துளசிவிதை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம்.

செய்முறை - 175 கிராம் * இலாடத்துண்டுகளை நெருப்பில் பழுக்கக்காய்ச்சி, மேற்படிசுத்தஜலத்தில் தோய்த்தெடுத்து மறுபடியும் அப்படியே காய்ச்சி அந்த நீரிலேயே தோய்த்தெடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் நூறு தடவை செய்து எடுத்த நீரில், முன் முடிச்சையும் பட்டையும் போட்டுப் பத்துநாள் ஊறவிட்டு பின்பு காய்ச்சி, நாலிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து பிழிந்து வடி கட்டிச் சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சி, இளம் பதத்தில் மேற்படி பழரசத்தையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் கீழிறக்கிச் சூரணம் இரண்டையும் கலந்து அதில் தூவி நன்றாக மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 5-6 கிராம் சாப்பிடலாம்

உபயோகம் - இருதயத்தைப் பலப்படுத்தும். இருதய அதிர்ச்சி, இருதய நடுக்கம், மனக்கலக்கம் ஆகியவற்றைப் போக்கி, மனோற்சாகம், மனக்களிப்பு முதலியவற்றை யுண்டாக்கும், மனச்சோர்வு, அவயவச் சோர்வு, நடுக்கல் வியாதி, நெடுநாள் தலைநோய், நெடுநாட் சுரநோய் முதலிய தீர்க்க ரோகங்களையும் கண்டிக்கும், ஈரல் நோய்களை நீக்கும். தளர்ந்த ஆன்ம சக்தியைப் பலப்பித்து, நிலைநிறுத்தும். சுருக்கிச் சொல்லில், ரத்தசுத்தி, ரத்தவிர்த்தி முதலியவற்றை யுண்டாக்கி, ஆயுளை விர்த்திசெய்யும். இவ்வரிய மருந்து ஒரு வருஷத்திற்கு மேற்பட்டால் பலன் செய்யாது.

---

* குதிரைக்காலிலிடும் இரும்பு

இராஜயோகாமிர்த குதூகலனி

சடாமாஞ்சில் சூரணம் 32 கிராம், ரோஜாப்பூவிதழ், காவுஜுபான், பெருலவங்கப்பட்டை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், பஹமனே ஸுபேத், பஹமனே சுருக் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 16 கிராம், சன்னராஷ்டம், வால்மிளகு, லவங்கம், றூமிமஸ்தகி, குங்குமப்பூ, ஜாதிக்காய், ஏலக்காய், காட்டேலக்காய், துளசிவிதை, சன்னலவங்கப்பட்டை, உலர்த்தின துரிஞ்சி நாரத்தம்பழத்தோல், வெட்பாலையரிசி, ஜாதிப்பத்திரி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், அம்பர், பன்னீர்விட்டு எட்டுச்சாமம் அரைத்துலர்த்தின துளையிடாத நன்முத்துச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், கோரைக்கிழங்குச் சூரணம் 6 கிராம், லவங்கப்பத்திரிமேல்தோல் நீக்கின சுக்கு, அரிசித்திப்பிலி, பன்னீர்விட்டு எட்டுச்சாமம் அரைத்துலர்த்தின செந்நீர்ப்பற்றுள்ள மாணிக்கம், பன்னீர் விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின கஹரூபா, பன்னீர் விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின நற்பவளம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், கஸ்தூரி, தங்கரேக்கு, வெள்ளிரேக்கு இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், சுத்திசெய்த கஞ்சா இலைச் சூரணம் 14 கிராம், வாதுமைநெய் 70 கிராம், சீனிசருக்கரை 1 கிலோ.

செய்முறை - இவற்றை கஞ்சா இலைச் சூரணத்தில் வாதுமைநெய் வார்த்து நன்றாகப் புரட்டிக் கொள்ள வேண்டும். குங்குமப்பூ, அம்பர் இவற்றைப் பன்னீர் வார்த்து அரைத்துக்கொள்ள வேண்டும். இவ்விரண்டையும் மற்றைய சூரணங்களையும் ஒன்றாகக் கலந்துகொண்டு, சீனிசருக்கரையைப் பாகுசெய்து, பாகுபதத்தில் கீழிறக்கிச் சூரணங்களைத் தூவிக் கிண்டிக் கிளறிப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- 1-2 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இருதயம், இரைப்பை, தலைமூளை, ஈரல் ஆகியவற்றைப் பலப்படுத்தும். நீர்க்குண்டிக்காய்களையும் பலப்பிக்கும். இடுப்பிற்கும் வலுவைக்கொடுக்கும். ஜீரணசக்தியை அதிகப்படுத்தும். மனக்களிப்பை யுண்டாக்கும். இரத்தசத்தை பெருகவிளைத்து, தாருட்டிய நிர்வாக சக்தியை யுண்டுபடுத்தும்.

வேறு

கிச்சிலிக்கிழங்கு, லவங்கம், பஹமனேசுபேத், பஹமனே சுறுக், துளசிவிதை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், உலர்த்தின எலுமிச்சந் துளசியிலைச் சூரணம் 16 கிராம், அதிவிடயம், அகருகட்டை இவற்றின் சூரணம்வகை ஒன்றுக்கு 20 கிராம், கோரோசனை 12 கிராம், உலர்த்தின பொதினா இலைச் சூரணம், சுத்திசெய்த கஞ்சாஇலைச்

சூரணம், லவங்கப்பட்டைச் சூரணம், ஜாதிக்காய்ச் சூரணம், மேல்தோல் போக்கின எள்ளு, வெள்ளிரேக்கு, பன்னீர் விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின கஹறுபா, குங்குமப்பூ இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், ஜாதிப்பத்திரிச் சூரணம் பன்னீர்விட்டு எட்டுச்சாமம் அரைத்துலர்த்தின செந்நீர்ப்பற்றுள்ள மாணிக்கச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், பன்னீர், கஸ்தூரிப்பிரம்புத்திராவகம், காவுஜுபான் திராவகம், சீமையத்திப்பழ ரசம், மருக்கொழுந்து ரசம் இவை வகை ஒன்றுக்கு 70 கிராம் காய்ச்சி நுரைநீக்கி சுத்திசெய்த தேன் 875 கிராம், பசுவின் பால் 875 கிராம், வாதுமைநெய் 90 கிராம்.

செய்முறை - இவற்றில் வெள்ளிரேக்கு, கஹறுபா, மாணிக்கம், கோரோசனை ஆகிய இந்நான்கையுந் தவிர, மற்ற சரக்குகளைச் சுத்தஜலம் வார்த்து வெண்ணெய்போல் அரைத்து, திராவகங்களையும் ரசங்களையும் ஒன்றாகக் கலந்து அதிற் கலக்கி வசந்தகாலமானால் ஓரிராப்பகலும், மாரி காலமானால், இரண்டிராப்பகலும் வைக்க வேண்டும். பின்பு, தேனையும் பாலையும் கலந்து பால்மாத்திரம் சுண்டின சமயத்தில், வாதுமை நெய் சேர்த்துக் காய்ச்சித் திரள்பதத்தில் கீழிறக்கி, முன்கலவையிற் சேர்த்து மறுபடியும் அடுப்பேற்றி மெதுவாயெரித்துக் காய்ச்சிப் பாகுபத தருணத்தில் அடுப்புடன் விட்டுவைக்க வேண்டும். அடுப்பு நெருப்பு அறக் குளிர்ந்தபின், நீர்ச்சுண்டிப் பதமாய் இராவிட்டால் சிறுதீயாயெரித்து, கொதியெழும்பாமல் நீர் ஆவியாக கிளம்பி நீர்சுண்டினபின் இறக்கி, பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 8-9 கிராம், தேகசௌக்கியத்திற்கானால், வெறும்வயிற்றில் காலையில் சாப்பிட வேண்டும். தாருட்ய விர்த்திக்கானால், இரவிற்சாப்பிட வேண்டும். விஷங்களை முறிக்கவானால், சோம்புத் திராவகத்திலும், இருதய வியாதிகளுக்கானால் காவுசுபான் திராவகத்திலும் சாப்பிடவேண்டும்.

உபயோகம் - இருதயத்தைப் பலப்படுத்தும்; விஷ பேதி முதலிய வியாதிகளினால் அல்லது விஷத்தினால் தளர்ந்த ஆன்மசக்தியைப் பலப்படுத்தி, நிலைபெறுத்தும், எக்காலத்திலும் எத்தேகிக்கும் ஏற்கும். நடுக்கல்வாதம், கீல்வாதம், கணு வாதம், இருதய அதிர்ச்சி, பாண்டு, காமாலை, அஜீரணம், மந்தாக்கினி முதலியவற்றை நிவர்த்தி செய்யும்.

இர்ரஜோஷ்ண குதூகலனி

காவுஜுபான், உலர்த்தின எலுமிச்சந்துளசி, பஹமனேசுபேத், பஹேமனேசுறுக், துளசிவிதை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 32 கிராம், வறுத்திடித்த நெல்லிமுள்ளிச் சூரணம் 80 கிராம், அகருகட்டைச் சூரணம் 40 கிராம், பூங்காவித்தூள் பன்னீர் இவை வகை ஒன்றுக்கு 32 கிராம், வால் மிளகு, பூலாங்கிழங்கு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்து உலர்த்தின நற்பவளம்,

பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின கஹறுபா, கொத்தமல்லிவிதை, தாளிசபத்திரி, லவங்கம், லவங்கப்பட்டை இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், சடாமாஞ்சிற் சூரணம் 6 கிராம், பூங்காவித்தூள், பன்னீர்விட்டு எட்டுச்சாமம் அரைத்துலர்த்தின தொளையிடாத நன்முத்துச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 5 கிராம், குங்குமப்பூ 4 கிராம், கடுக்காய் மது 350 கிராம், பன்னீர்விட்டு எட்டுச்சாமம் அரைத்துலர்த்தின செந்நீர்ப்பற்றுள்ள மாணிக்கச் சூரணம், தங்கரேக்கு இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், சீனிசருக்கரை 420 கிராம், விதை நீக்கின திராக்ஷப்பழம் 350 கிராம்.

செய்முறை - கடுக்காய்மது, சீனிசருக்கரை ஆகிய இவ்விரண்டையும் காய்ச்சிப் பாகுபதத்தில், திராக்ஷப்பழங்களை உரலிலிட்டு நன்றாய் இடித்து அதிற்சேர்த்து, மற்றச் சூரணங்களையும் ஒன்றாய்க் கலந்து, அதில் தூவிக் கிண்டிக்கிளறி யெடுத்துக் கொண்டு, குங்குமப்பூவைப் பன்னீர் வார்த்தரைத்து அதிற்கலந்து நன்றாய் மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 8-9 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - குளிர்ச்சியதிகரித்துண்டாம் இருதய துர்பலமும், இருதய அதிர்ச்சி முதலிய நோய்களைப் போக்கி, இருதயத்தைப் பலப்படுத்தும்.

இராஜ சீத குதூரகலனி

பருப்புக்கீரை விதைச் சூரணம் 45 கிராம், குச்சி காம்பு முதலியவை நீக்கிச் சுத்திசெய்த ஜரிஷ்க் 25 கிராம், வெள்ளரிவிதைப்பருப்பு, கெக்கரி விதை பருப்பு, சுரைவிதைப் பருப்பு இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், ரோஜாப்பூவிதழ், பஹமனே ஸுபேத் காவுஜுபான், வறுத்த கொத்துமல்லி, வெண்சந்தனம் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், பன்னீர் விட்டு எட்டுச்சாமம் அரைத்துலர்த்தின தொளையிடாத நன்முத்து, பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின கஹறுபா, குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 2 கிராம், சீனிசருக்கரை 350 கிராம், கஸ்தூரிப் பிரம்புத் திராவகம் 350 கிராம் சீமையிலந்தைப் பழம் (Apple) ரசம் 245 கிராம்.

செய்முறை - திராவகத்தையும், பழரசத்தையும் ஒன்றாகக் கலந்து, சீனிசருக்கரையை அதிற்போட்டுக் கரைத்துக் காய்ச்சி பாகுசெய்து பாகுபதத்தில் சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து, அதில் தூவிக் கிண்டிக்கிளறி கீழிறக்கி, குங்குமப்பூவைப் பன்னீர் விட்டரைத்து அதிற்சேர்த்து நன்றாய் மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 6- கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - சூட்டினால் உண்டாகும் இருதய துற்பலம் இருதய அதிர்ச்சி முதலிய வியாதிகளைப் போக்கி, இருதயத்தைப் பலப்படுத்தும்.

குண்டிக்காய்களின் பலவீனத்தை நிவர்த்தி செய்து, அவற்றைப் பலப்பிக்கும் ஔஷத முறைகள்

தவாவுத்தரஞ்சபீன் அல்லது தரஞ்சபீன் பானம்

மண்ணு முள்ளு முதலியவற்றை நீக்கிச் சுத்தி செய்த தரஞ்சபீன் 100 கிராம், பசுவின் பால் 840 கிராம்.

செய்முறை - தரஞ்சபீனிற் கொஞ்ச சுத்தஜலம் வார்த்து கரைத்து வடித்துச் சக்கை போக்கி, அதிற் பசுவின்பால் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கி ஆறவிட்டு புட்டியில் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- வாய் கொண்ட அளவு இருதடவையாய் இரவில் படுக்கைக்குப் போகுமுன் குடிக்கலாம்.

உபயோகம் - குண்டிக்காய்களின் துற்பலத்தை போக்கி, அவற்றைக் கொழுப்பித்துத் தாருட்டியவிர்த்தியை யுண்டாக்கும்.

உசித மாஜூன்

மண்ணு, முள்ளு முதலியன போக்கிச் சுத்தி செய்த தரஞ்சபீன் 400 கிராம், மண்ணு, வேற்றினம் முதலியவை நீக்கி இடித்துப் பிழிந்த சிறுநெருஞ்சிச்சாறு அரைபடி, வெல்லம் 165 கிராம், பசுவின்பால் 840 கிராம்.

செய்முறை - நெருஞ்சிச் சாற்றில், தரஞ்சபீனையும் வெல்லத்தையும் கரைத்து வடிகட்டிச் சக்கை போக்கிப் பால்சேர்த்து மெதுவாயெரித்துக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கிப் புட்டியிற் பத்திரப்படுத்தவேண்டும்.

மாத்திரை - வாய் கொண்டமட்டும் படுக்கைக்குப் போகுமுன் குடிக்கலாம்.

உபயோகம் - சூட்டினாலுண்டாம் குண்டிக்காய்களின் துற்பலத்தைப் போக்கும். தாருட்டிய புஷ்டியை யுண்டாக்கும்.

மூத்திர பிண்ட பலகாரி பால்ஹல்வா

மண்ணு, முள்ளு முதலியவை போக்கிச் சுத்தி செய்த தரஞ்சபீன், சீனிசருக்கரை இவை வகை ஒன்றுக்கு 105 கிராம், மேல்தோல் நீக்கியிடித்துப் பிழிந்த தண்ணீர் விட்டான் கிழங்கு ரசம் 10 கிராம், கெட்டித்தேன் 210 கிராம், பசுவின் பால் படி ஒன்றரை,

பஹமனேஸஃபேத், பஹமனேஸஃறுக் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 13 கிராம், தூதரிஸஃ பேத், தூதரிஸஃறுக் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 10 கிராம், பூமிசருக்கரைக் கிழங்குச் சூரணம் மேல்தோல் நீக்கின வாதுமைப்பருப்பு, பிஸ்தாப்பருப்பு, சாரப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், பூலாங்கிழங்கு, ஜாதிப்பத்திரி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், குங்குமப்பூ 2 கிராம்.

செய்முறை - இவற்றில் முன்னைய ஐந்தையும் ஒன்றாகக் கலந்து, கட்டிப் போகாமலும்,அடிப்பற்றித் தீய்ந்து போகாமலும் கைவிடாமல் துழாவிக்கொண்டு வந்து, பால் நீர் சுண்டித் திரண்டபதத்தில் சூரணங்களை ஒன்றாகக் கலந்து அதில் தூவிக் கிண்டிக் கிளறி பருப்பினங்களைக் குறுக அரிந்துபோட்டுக் கீழிறக்கி குங்குமப்பூவில் கொஞ்சம் பன்னீர் விட்டரைத்து நன்றாக மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - ஜீரணத்திற்கு ஏற்ற அளவு 35 - 70 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - குண்டிக்காய்களைப் பலப்படுத்தித் தாருட்ய விருத்தியை யுண்டாக்கும். நீர்ப்பையையும் பலப்பிக்கும், நீர்த்துப்போன இரத்தசத்தை மணியாக்கும். துரித ஸ்கலிதத்தைப் போக்கி, இரத்த சத்தின் தன்மையை சுபாவமாக்கும்.

மனோரத ஜஸர் ஹல்வா

தீர்ந்த செந்நிறமும் பருமனும் உள்ள செம்முள்ளங்கிக் கிழங்கு 2800 கிராம், பசுவின் நெய் 700 கிராம் சீனிசருக்கரை 800 கிராம், பன்னீர் 800 கிராம், தர்பூச் என்னும் சருக்கரை கொம்மட்டிப்பழவிதை பருப்பு முலாம்பழ விதைப்பருப்பு, பறங்கிக்காய் விதைப்பருப்பு, வெள்ளரிவிதைப் பருப்பு, கெக்கரிவிதைப் பருப்பு, லவங்கப்பட்டைச் சூரணம், மேல்தோல்நீக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு மேல்தோல் நீக்கின பிஸ்தாபருப்பு, உள்விதைநீக்கின பேரீச்சங்காய் இவை வகை ஒன்றுக்கு 50 கிராம், ஸாலா மிஸ்றிச் சூரணம் 100 கிராம்.

செய்முறை - செம்முள்ளங்கிக் கிழங்குகளின் மேல்தோலையும் உள்நரம்பையும் போக்கிச் சிறுதுண்டுகளாகத் துண்டித்து, மண்பாத்திரத்திற் போட்டுக் கொஞ்சம் ஜலம் வார்த்து நன்றாக வெண்ணெய் போல் வேகவைத்து இறக்கி, ஆறினபின்பு கையால் நன்றாக மத்தித்துக் கடினமானவற்றை நீக்கி மெல்லிய வஸ்திரத்திலிட்டுப் பிழிந்து, கொஞ்சமும் ரசமில்லாமல் சக்கையையெடுத்து, ஓர் பாத்திரத்தில் நெய்வார்த்து அது கொதிக்கும் பொழுது, மேற்படி சக்கையைப் போட்டு நீர் சுண்டிச் சிவக்குமளவும் பொரித்து அதிற் சீனிசருக்கரையைச் சேர்த்துப் பாகுசெய்து, பாகு பதத்தில் பருப்பினங்களையும் பேரீச்சங்காயையும் நன்றாக அம்மிதாழ அரைத்துச் சூரணத்தையும் கலந்து பாகிற்போட்டு நன்றாகக் கிண்டிக்கிளறி, ஆறினபின் பன்னீர் சேர்த்து நன்றாக மிஸ்ரமித்துப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 20- 30- 35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மேற்கண்டவைகளுக்காம்.

மூத்திர கண்ட பலகாரி

ஒரு பாத்திரத்தில் சிறு நெருஞ்சிச் சாறு 350 கிராம் வார்த்து அதில் கொண்டைக்கடலை 55 கிராம் போட்டு ஊறவைக்க வேண்டும். 100 ஆளிவிதையை ஜலம்வார்த்தரைத்து 3/8 படி ஜலத்திற் கரைத்து வடித்துச் சக்கை போக்கின ரசம் பத்தை வேறொரு பாத்திரத்தில் வார்த்து அதில் ஒன்றரைபடி கொண்டைக்கடலைப் போட்டு ஊற வைக்க வேண்டும். இன்னொரு பாத்திரத்தில் பசுவின் பால் 350 கிராம் வார்த்து அதிலும் 55 கிராம் கொண்டைக் கடலையை ஊற வைக்க வேண்டும். மேற்கண்டபடி மூன்று வகையையும் தனித்தனி ஊற வைத்துத் தனித்தனி வடித்துக் கடலையை நீக்கி, மூன்றுவகை ஊறற்கிஷாயத்தையும் ஒன்றாகக் கலந்து, அதில் கொஞ்சம் பசுவின் நெய்விட்டுக் காய்ச்சி அடிப்பிடித்துத் தீய்ந்து போகாமல் ஜாக்கிரதை யாய்த் துழாவிக் கொண்டிருந்து, திரள்பதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சீமையத்திப்பழம், வித்தில்லாத திராக்ஷப்பழம், வித்துள்ள திராக்ஷப்பழம், விதைநீக்கின பேரீச்சங்காய், காரலில்லாத சாரப்பருப்பு, வெட்பாலையரிசிப் பருப்பு இவை வகை ஒன்றுக்கு 55 கிராம், ஏலக்காய்ச் சூரணம், பெருலவங்கப்பட்டைச் சூரணம், ஜாதிக்காய்ச் சூரணம் மேல்தோல் நீக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, மேல்தோல் நீக்கின பிஸ்தாப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 30 கிராம், லவங்கச் சூரணம் 9 கிராம், கசகசா, கஸ்தூரி இவைவகை ஒன்றுக்கு 6 கிராம், எலுமிச்சம்பழ ரசம், தாழம்பூத்திராவகம் வகை ஒன்றுக்கு 200 கிராம், சீனிசருக்கரை 350 கிராம்.

செய்முறை -பழரசத்தையும், திராவகத்தையும் ஒன்றாகக் கலந்து,அதிற் சீனி சருக்கரையைக் கரைத்து முன்னைய நாலுபழங்களையும் அம்மியிலிட்டு நன்றாக வெண்ணெய்போல் அரைத்துக் கரைத்துக் காய்ச்சி, பாகு பதத்தில் பருப்பினங்களையும் வெண்ணெய்போல் அரைத்து அதனுடன் சூரணங்களெல்லாவற்றையும் கலந்து பாகில் தூவிக் கிண்டிக்கிளறிக் கீழிறக்கி கஸ்தூரியையும் கசகசாவையும் பன்னீர் விட்டரைத்து அதிற்சேர்த்து நன்றாகமிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 12-18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மூத்திரக்குண்டிக்காயைப் பலப்படுத்தி தாருட்டிய விர்த்தியை யுண்டாக்கும்.

மஹா ஜஸர்ஹல்வா, மஹாவிந்தாதி லுபூப்லேகியம் ஆகிய இவற்றின் முறைகளை முதற்பாகத்திற் பார்க்க.

விஞ்ஞாபனம்

நண்பர்களே, முதற்பாகத்தில் "குண்டிக்காய்களின் பலவீனத்தைப் பற்றிய தாருட்டிய நஷ்டம்" எனும் தலைப்பில் விரித்துக் காட்டியிருக்கும் காரணங்களாலும், அதிமூத்திரம், ஸர்க்கரா ஹஸ்மரி அல்லது ஹஸ்மரிரோகம் (மூத்திரக் குண்டிக்காய்களில் மணல், கல்லு முதலியவை யுண்டாக்குதல்) மூத்திரக்குண்டிக்காய்த்தாபிதம் முதலிய வற்றாலும், மூத்திரக் குண்டிக்காய்கள் துற்பலப்பட்டுத் தாருட்டிய நஷ்டத்திற்கு இடமுண்டாகிறபடியால், இவ்வியாதிகளைப் போக்கவும் கைகண்ட சில பாகங்களை (முறைகளை) இங்கு எழுதுகிறோம்.

ஜாலிநியூஸ் சஞ்சீவி ஜவாரிஷ்

சடாமாஞ்சில், லவங்கம், ஏலக்காய், பெருலவங்கப்பட்டை, சன்ன லவங்கப்பட்டை, சன்னராஷ்டம், கோரைக் கிழங்கு, மேல்தோல் நீக்கின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, கோஷ்டம், ஊதேபல்ஸான், நிலக்கடம்பு, கருவேலம்பிசின், நிலவேம்பு, குங்குமப்பூ இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், றூமிமஸ்தகிச் சூரணம் 20 கிராம், சீனி சருக்கரை 125 கிராம், காய்ச்சி நுரைபோக்கிச் சுத்திசெய்த தேன் 525 கிராம்.

செய்முறை - தேனையும் சீனிசருக்கரையையும்சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில்,* றூமிமஸ்தகிக் கலவையைத் தவிர,மற்றச் சூரணங்களை யெல்லாம் ஒன்றாகக் கலந்து, அதில் தூவிக் கிண்டிக் கிளறிக் கீழிறக்கி நன்றாக ஆறினபின் ரூமிமஸ்தகிக் கலவையைச் சேர்த்து நன்றாக மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 2 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - சீதளத்தினால் உண்டாகும் அதிமூத்திரரோகத்தைக் கண்டிக்கும். தேகத்து எல்லாவுறுப்புகளுக்கும் பலத்தைக் கொடுக்கும். இரைப்பைச்சூலை, பசிதீபனக்குறைவு, வாயுகள், கபஇருமல், மூலவாயு, கணுவாதம், மேகப்படைகள்,ஹஸ்மரிரோகம் முதலியவற்றைப்போக்கி, போகசக்தியையும், தாருட்டியவிர்த்தியையும் உண்டாக்கும். இதனால் தீரும் வியாதிகள் பலவுண்டு. அவற்றை அநுபவத்தால் அறிந்து கொள்ளலாம். இது, நாள் செல்லச் செல்ல குணமும் அதிகரித்தோங்கிக் கொண்டே வரும்.

---

* றூமிமஸ்தகி, நிலவேம்பு இவ்விரண்டின் சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து, நன்றாக அரைத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் செய்வதனால், அதிகக் கைப்பிராது, அதுவே கலவையாம்.

சீமையத்திப்பழ ஷர்பத்து

நன்றாகப் பழுத்த சீமையத்திப்பழம் 1400 கிராம், கொண்டைக்கடலை 700 கிராம், கெட்டித்தேன் 500 கிராம், சன்னராஷ்டம், லவங்கப்பட்டை, சடாமாஞ்சில், லவங்கம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 2 கிராம், குங்குமப்பூ 2 கிராம்.

செய்முறை - அத்திப்பழத்தை மூன்றுபடி ஜலத்திற் போட்டுக் காய்ச்சி, மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து வடித்துச் சக்கைபோக்கின கஷாயம், கடலையை மூன்றுபடி நீரில்போட்டுக் காய்ச்சி ஆறிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கி நன்றாகப் பிசைந்து வடித்துச் சக்கைபோக்கின கஷாயம் ஆகிய இவ்விரண்டையும் ஒன்றாகக் கலந்து தேனையும் சேர்த்துக் காய்ச்சிப் 'பாகு பதத்தில் சூரணங்களை யொன்றாகக் கலந்து, அதில் தூவி நன்றாகக் கிண்டிக்கிளறிக் கீழிறக்கி, குங்குமப்பூவை நீர் விட்டு அரைத்து அதிற்கூட்டி நன்றாக மிஸ்ரமித்துக்கொள்ள வேண்டும்.

மாத்திரை - 30- 35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மூத்திரக் குண்டிக்காய்கள், நீர்ப்பை இடுப்பு, முதுகு, ஆகியவற்றின் நோய்களைக் கண்டித்து, தாருட்டிய விர்த்தியையுண்டாக்கும்.

உச்சிதாதி ஷர்பத்

சிறுநெருஞ்சி சமூலத்தில் கொஞ்சம் நீர்தெளித்திடித்துப்பிழிந்து வடித்த சாறு 350 கிராம், சீனிசருக்கரை 1400 கிராம், கெட்டித்தேன் 550 கிராம்.

செய்முறை - எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து காய்ச்சி, ஷர்பத் பதத்தில் இறக்கிக் கொள்ளவேண்டும்.

மாத்திரை - 9-12-15 கிராம் சாப்பிடலாம்

உபயோகம் - மூத்திரக் குண்டிக்காய்களின் ஸர்க்கரா ஹஸ்மரிரோகம், ஹஸ்மரிரோகம், நீரடைப்பு ஆகியவற்றைத் தீர்த்து, தாருட்டியவிர்த்தியை யுண்டாக்கும்.

குறிப்பு

சிறுநெருஞ்சி உலர்த்தப்பட்டதானால், 1400 கிராம் எடுத்து மூன்றுபடி சுத்தநீரில் ஒரிராப்பகல் ஊறவிட்டுச் சிறுதீயாயெரித்துக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கிப் பிழிந்து வடித்துச் சக்கைபோக்கின கஷாயத்திற்குச் சமனெடை சீனிசருக்கரையும், அதிற்பாதியெடை தேனும் சேர்த்துக் காய்ச்சி, ஷர்பத் பதத்தில் இறக்கிக்கொள்ள வேண்டும்.

சத்தா மாஜூன்

இலாடத்தை இராவின அரப்பொடி 350 கிராம்,எலுமிச்சம்பழ ரசத்திலும், காடியிலும் மும்மூன்றுநாள் ஊறவிட்டுப் பிசைந்து, நீர்வார்த்து நன்றாகக் கழுவியெடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு, நாவற்பட்டையை யிடித்த ரசம் பொடியின் மேல் இரண்டங்குலம் நிற்கும்படியாக விட்டுத் தீக்ஷண்யமான வெய்யிலில் வைத்து வர வேண்டும்.

சற்றேறக்குறைய ஒரு வாரத்திற்கு ரசம்சுண்டி, பொடி ஒருவிதச் சிந்தூரமாம். அச்செந்தூரத்தை கல்வத்திலிட்டு, நன்றாகப் பொடித்து மெல்லிய வஸ்திரத்துண்டில் வடித்த சிந்தூரம் நூறு கிராம், மஞ்சட் கடுக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, தான்றிக்காய்த்தோல், மேல்தோல்போக்கின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, கோரைக்கிழங்கு, சித்திரமூலவேர்ப்பட்டை, சடாமாஞ்சில் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், சதகுப்பை, ஆளிவிதை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 16 கிராம், காய்ச்சி நுரைநீக்கிச் சுத்திசெய்த கெட்டித்தேன் 1400 கிராம், பசுவின் நெய் 175 கிராம்.

செய்முறை - தேனைக்காய்ச்சிப் பதத்தில் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து, அதில் தூவிக் கிண்டிக்கிளறி நெய்வார்த்து நன்றாய் மிஸ்ரமித்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்து, இரண்டு மூன்று மாசத்திற்குப் பிற்பாடு எடுத்து உபயோகிக்க வேண்டும்.

மாத்திரை - 10 - 15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - அதிமூத்திர ரோகம், இரைப்பைதழற்சி, மூலவாயு முதலியவைதீர்ந்து ரத்தபுஷ்டியுண்டாய், தேகபல விர்த்தியுண்டாம்.

அத்தி மாஜூன்

மேற்புரணிபோக்கி யுலர்த்தின அத்திப்பட்டைச் சூரணம் 70 கிராம், பூங்காவிச்சூரணம், உலர்த்தின தித்திப்பு மாதுளச்சுளை, மாங்கொட்டைப் பருப்புச் சூரணம், நெல்லி முள்ளிச்சூரணம், கொத்துமல்லிவிதைச்சூரணம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், கெட்டித்தேன் 350 கிராம்.

செய்முறை - தேனைக்காய்ச்சிப் பாகுசெய்து பாகு பதத்தில் சூரணங்களை யொன்றாகச் சேர்த்து அதில்தூவி நன்றாகக் கிண்டிக்கிளறி யிறக்கிப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 20- 35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ஆரம்ப மதுமூத்திரரோகம் போம், நாட்பட்ட வியாதியுள்ள சிலர்க்கும் இது கைகண்ட பலனாயிற்று.

மதுமேக பில்லை மாத்திரை

மூங்கிலுப்பு, அதிமதுரப்பால் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், காஹ்ஹிவிதைச் சூரணம் 70 கிராம், பருப்புக்கீரை விதைச்சூரணம் 55 கிராம், கொத்துமல்லி, பூங்காவி இவற்றின் சூரணம் வகை 1-க்கு 20 கிராம், கருவேலம்பிசின், வாதுமைப்பிசின், வெண்சந்தனம், பூமாதுளம்பூ இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், பச்சைக்கர்ப்பூரம் 2 கிராம்.

செய்முறை - இவை எல்லாவற்றையுங் கல்வத்திற் போட்டு ஆவாரம்பூச் சாறுவார்த்து நாலுசாமம் அரைத்து ஒரு துலா எடையுள்ள பில்லை மாத்திரைகளாகச் செய்து கொள்ளவேண்டும்.

மாத்திரை - ஒன்று - ஒன்னேகால் கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மதுமேகம் தீரும். அவ்வியாதியால் உண்டுபண்ணும் தாகம் ஆயாசம் முதலியவை தீரும்.

வேறு

மூங்கிலுப்பு 35 கிராம் காஹ்ஹிவிதை, பருப்புக்கீரை விதை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 55 கிராம், கொத்துமல்லிவிதை, ரோஜாப்பூ, பூங்காவி இவற்றின் சூரணம் வகை 1-க்கு 20 கிராம், பூமாதுளம்பூச் சூரணம் 8 கிராம், பச்சைக் கர்ப்பூரம் 2 கிராம்.

செய்முறை - இவற்றை மேற்கண்ட பாகப்படியே செய்து கொள்ளலாம்.

மாத்திரை - 12- 15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மேற்கண்ட வியாதிகளுக்காம்.

விண்ணப்பம்

மதுமேகமானது, மஹாரோகங்களில் ஒன்றென்பது பிரசித்தம்; ஆனால் அவ்வியாதி ஆரம்பகாலத்திலும், மற்றக்காலத்திலும் மேற்கண்ட பாகங்களால் தீராவிட்டால், தாமதிக்காமல் தக்க சிகிச்சையைத் தேடிக் கொள்ள வேண்டும், ஆங்கிலேய வைத்திய சிகிச்சாகிரமப்படி, பெரும்பாலும் தக்க சிகிக்சையில்லையென்று காணப்பட்டாலும், ஹிந்து, யூநாநி வைத்திய சாஸ்திர கிரமப்படி பல சிகிச்சைகள் உள்ளன. ஆகையால், வியாதியஸ்தர்கள் ஆங்கிலேய வைத்தியத்தைப் பாராட்டுவதைப் பார்க்கிலும், தேர்ந்த ஹிந்து, யூநாநி வைத்தியங்களைக் கவனித்துப் பாராட்டுவது உசிதம். சர்வஜீவ தயாபர வல்லகடவுளின் பேரருளாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலும் இந்நோயாளிகளில் பலர் நமது சிகிச்சையாற் குணப்பட்டிருக்கின்றார்கள்.

வெள்ளை மிளகுச் சூரணம் 45 கிராம் பெருலவங்கப்பட்டைச் சூரணம் 15 கிராம், உலர்த்தின சதாபிலை, கோஷ்டம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகச் சூரணம், சுத்திசெய்த அரபிபோளச் சூரணம், குறாசானி ஓமச்சூரணம், கடுகுச் சூரணம், நெரியரிசிப்பால் இவை வகை 16 கிராம், கெட்டித்தேன் 100 கிராம்.

செய்முறை - தேனைக் காய்ச்சிப் பதத்திலிறக்கி, எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து அதில் தூவி, நன்றாகக் கிண்டிக்கிளறி பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - முத்திரக் குண்டிக்காய்களில் விளையும் மணல்,கல்லு ஆகியவற்றைப் போக்கிச் சுத்தப்படுத்தும்; நீர்கட்டு, கல்லடைப்பு ஆகியவற்றைத் தீர்க்கும், கஷ்ட சுவாசம், கபஇருமல், மார்பின் சீழ்க்கட்டி, பழஞ்சுரம், நடுக்கல், பாண்டுநோய், மண்ணீரல் வியாதி ஆகியுவற்றைக் கண்டிக்கும், மருந்துவிஷம், விரியன்பாம்பு விஷம் ஆகியவற்றையும் முறித்துக் குணப்படுத்தும்.

யூதாதிச் சூரணம்

*யூதக்கல்லுச் சூரணம் 100 கிராம் உலர்த்தின கருமணத்தக்காளிப்பழச் சூரணம், சுரைவிதைப் பருப்பு, வெள்ளரிவிதைப்பருப்பு, கெக்கரிவிதைப் பருப்பு மூலாம் பழ விதைப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 20 கிராம்.

செய்முறை - இவற்றில் பருப்பினங்களை அம்மியிலிட்டு வெண்ணெய்போல் அரைத்துச் சூரணங்களிற் கலந்து கொள்ளவேண்டும்

மாத்திரை - 4-12 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - மூத்திரக் குண்டிக்காய்களில் விளையும் கற்களைத் தகர்த்துடைத்து வெளிப்படுத்தும் நீர்க்கட்டு,நீர்ச்சுருக்கு ஆகியவற்றை நாசப்படுத்தும்.

இராஜ கருவிகளைப் பலப்படுத்தி, தாருட்டிய விர்த்தியை யுண்டாக்கு முறைகள்

ராஜகருவிகளாகிய தலைமூளை, இருதயம், ஈரல், இரைப்பை ஆகியவற்றைத் தனித்தனி பலப்படுத்தும் முறைகளை எழுதினோம்.

---

* இதற்கு அரபுப்பாஷையில்,ஹஜறுயல்கூது என்று பேர். இது ஓர்விதக்கல்லு, சாதாரணமாய் யூநாநி மருந்துக் கடைகளில் இந்நாமத்தைக் குறித்துக் கேட்டால் கிடைக்கும்.

இனி, அவையெல்லாவற்றையும் பொதுவாய்ப் பலப்படுத்தி தாருட்டியவிர்த்தி, ஆண்மை சக்தி முதலியவற்றையுண்டாக்கும் அபூர்வமுறைகளை இங்கு எழுதுகிறோம். புத்திமான்கள் சமயோசிதமாய்ச் செய்து அநுபவித்து அவற்றால் தேகாரோக்கியம் அடைவார்கள், என்று நம்புகிறோம்.

இராஜ சௌரிய யோகவிர்த்தி மாத்திரை

ஸாலாமிஸ்றிச் சூரணம் 12 கிராம், பஹமனேசுபேத் சூரணம், கருவேலம்பிசின் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், ரூமிமஸ்தகி மூங்கிலுப்பு, துரிஞ்சி நாரத்தம்பழத்தோல் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 5 கிராம் மஞ்சள் முள்ளங்கிவிதை, பூலாங்கிழங்கு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், சீமை ஜத்வார், அகருகட்டை,ஏலக்காய், சடாமாஞ்சில், லவங்கப்பட்டை, வெட்பாலையரிசி, லவங்கம், பஹமனேசுறுக், உறைந்த சீமை ஒட்டைப்பால் இவைகளின் சூரணம் வகை 1க்கு 3 கிராம், சந்தனம், ஊதேபல்ஸான், வெள்ளைமிளகு, மேல்தோல் நீக்கின சுக்கு, ரேவல்சீனி, உலர்த்தினபொதினா இலை, லவங்கப்பத்திரி, தாளிசபத்திரி, சன்னராஷ்டம், வால்மிளகு, மாசிப்பத்திரி, தூதரிசுபேத், தூதரிசுறுக், ரோஜாப்பூவிதழ், காவுஜுபான்பூ, துளசிவிதை, அக்கராகாரம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 2 கிராம், பன்னீர்விட்டு எட்டுச் சாமம் அரைத்துலர்த்தின துளையிடாத நன்முத்துச்சூரணம், பன்னீர்விட்டு எட்டுச்சாமம் அரைத்துலர்த்தின செந்நீர்ப்பற்றுள்ள மாணிக்கச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், அம்பர், கஸ்தூரி இவை வகை ஒன்றுக்கு 1 கிராம் சீனாகற்கண்டு 20 கிராம்.

செய்முறை -இவையெல்லாவற்றையும் நன்றாய்ச் சேர்த்து கல்வத்திலிட்டுப் பன்னீர்வார்த்து நாலுசாமம் அரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்துலர்த்தி, மாத்திரை ஒவ்வொன்றையும் வெள்ளிரேக்கு இரண்டில்வைத்துச் சுற்றி, அதன் மேல் தங்கரேக்கைச் சுற்றி, புட்டியிற் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 5-7 மாத்திரைகள் சாப்பிட்டு, அதன் மேல் மஞ்சள் முள்ளங்கித் திராவகம் குடிக்க வேண்டும்.

உபயோகம் - ராஜ வுறுப்புகளெல்லாவற்றையும் பலப்படுத்தி, ஆண்மை சக்தியை யுண்டாக்கும். ஆனந்தத்தையும், மனோற்சாகத்தையும் கொடுக்கும்.

இராஜாபி விர்த்தி மதுஸ்மிக ஹல்வா

பசும்பாலில் புட்டவியலாய் அவித்துச் சுத்திசெய்த பறங்கிச்சக்கைச் சூரணம் 225 கிராம், ஸாலாமிஸ்றிச் சூரணம் 35 கிராம், அப்திமூன், பஸ்பாயிஜ் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், லவங்கச்சூரணம் 15 கிராம் சூரத்துக் கடுக்காய்த்தோல், கற்கடகசிங்கி, சீமைநெல்லிமுள்ளி, சுத்திசெய்த சீமைச் சிவதைவேர், உஸ்துகுத்தூஸ், பஹமனே ஸ-பேத், பஹமனே ஸுறுக் பூலாங்கிழங்கு, உலர்த்தின எலுமிச்சந்துளசி இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், சடாமாஞ்சில், பூமிச்சருக்கரைக் கிழங்கு, பாகப்படுத்தின ராஜவர்த்திக்கல்லு அல்லது பூங்காவி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம் லவங்கப்பட்டை, ஜாதிக்காய், ரோஜாப்பூவிதழ், அகருகட்டை, பாகப்படுத்தின கோராப்பட்டு, இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், காய்ச்சி நுரைநீக்கி சுத்திசெய்த கெட்டித்தேன் 1400 கிராம்.

செய்முறை - தேனைக் காய்ச்சிப்பாகுபதத்தில் சூரணங்களை யொன்றாகச் சேர்த்து அதில் தூவிக் கிண்டிக் கிளறியிறக்கிப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 35-45 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ராஜ கருவிகளைப் பலப்படுத்தி ஆண்மை சக்தியை யுண்டாக்கும். மேகவியாதிகளைக் கண்டிப்பதில் இது மிகவும் சிறந்தது.

யோகாநந்த ஸ்தம்பன மாத்திரை

கஸ்தூரி, லவங்கச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், அம்பர், ஸாலாமிஸ்றிச் சூரணம், சன்னராஷ்டச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், சீமை ஒட்டகப் பால் 12 கிராம்.

செய்முறை - இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டுப் பன்னீர்வார்த்து ஆறுசாமமரைத்துச் சுண்டக்காய்ப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 1 சாப்பிட்டு அதன்மேல் காய்ச்சின பாலிற் கற்கண்டிட்டு ஜீரணசக்திக்கு ஏற்ற அளவு சாப்பிட வேண்டும். அல்லது கொண்டைக்கடலையை ஊறவைத்த ஜலத்தைக் குடிக்க வேண்டும். அவசியமான காலங்களிற்கு இரண்டு நாழிகைக்கு முன் சாப்பிட, யோக ஸ்தம்பன முண்டாம். 2 கிராம் வரையிலும் சாப்பிடலாம் கொழுமையான தேகிகள் அதற்கு அதிகமாகவும் சாப்பிடலாம்.

உபயோகம் - நரம்புகளுக்கு உறுதியுண்டாக்கி வீரிய சக்தியைத் தரும். ஆண்மை நீடித்து நிற்கவும் செய்யும். இதைச் சாப்பிட்ட ஆறு நாழிகைக்குள் நரம்புகளில் எழுச்சியைத்தரும். வாயில் அடக்கிக்கொண்டிருக்க மேற்படிஎழுச்சி நீடித்து நிற்கும். வாயில் சுகந்தத்தை யுண்டாக்கி மூளையையும் பலப்படுத்தும்.

இராஜப்பிரீதி யோகாதி திராவகம்

பறங்கிச்சக்கை, லவங்கப்பட்டை, காட்டேலம், அகருகட்டை,வெண்சந்தனம், செஞ்சந்தனம் இவை வகை ஒன்றுக்கு 140 கிராம் விதையுள்ள திராக்ஷப்பழம், விதையில்லாத திராக்ஷப்பழம் இவை வகை ஒன்றுக்கு 200 கிராம் லவங்கம் 10 கிராம், பன்னீர் படி 5, சுத்தசலம் படிமூன்றரை, கஸ்தூரி 4 கிராம்.

செய்முறை - இவற்றில் பன்னீரையும் சலத்தையும் கலந்து கஸ்தூரியைத் தவிர மற்றவைகளை நன்றாகச் சிதைத்து அதில் போட்டு ஓரிரவு ஊறவைத்து வாலையிலிட்டுக் கஸ்தூரியைப் பொடித்து ஒரு வஸ்திரத்துண்டில் முடிந்து திராவகம் இறங்கும் குழாயின் நுனியில் இறங்கும் திராவகம் முடிச்சில் தங்கி யிறங்கும்படி கட்டிமூன்று மூன்றரை படி திராவகம் வடித்து சீஷாவிற் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

மாத்திரை - 60-80-120 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- ராஜகருவிகளைப் பலப்படுத்தி, ஆண்மை சக்தியை யுண்டாக்கும்.

மஹாலுபூப் லேகியம்

இதன் யோகமுறையை முதற்பாகத்திற் பார்க்க.

இராஜகெம்பீர யோகவிர்த்தி மாஜூன்

மேல்தோல்போக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, காரலில்லாத சாரப்பருப்பு, மேல்தோல் போக்கின அக்றோட்பருப்பு, மேல்தோல் போக்கின பிஸ்தாப்பருப்பு, சில்கூஜா பருப்பு, பிந்தக் பருப்பு, மூலாம்பழவிதைப்பருப்பு, பருத்தி விதைப்பருப்பு, மேல்தோல் போக்கின தேங்காய், பறங்கி விதைப்பருப்பு, கசகசா, உள்விதை போக்கின பேரீச்சங்காய் இவைகள் வகை ஒன்றுக்கு 6 கிராம், ஸாலா மீஸ்றிச் சூரணம், உலர்த்தி ராவின மான் அல்லது ஆட்டுக்கோசத்தூள், உலர்த்தியிடித்த ஆண் அடைக்கலாங் குருவித் தலைமூளைத் தூள், உலர்த்தின சீமை அயிரை மீன் தூள் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம்

லவங்கச் சூரணம், வறுத்த சீமை நீர்முள்ளி விதைச் சூரணம், சீமைவிலாமிச்சை வேர்ச்சூரணம், நிலப்பனைக் கிழங்குச் சூரணம் சீமையொட்டகப்பால் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், வால்மிளகு, பெருலவங்கப்பட்டை, சன்னராஷ்டம், சன்ன லவங்கப்பட்டை ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, அகருகட்டை, பஹமனே ஸுபேத், பஹமனேஸுறுக், தூதரி ஸுபேத், தூதரிஸுறுக், தித்திப்புஸுரிஞ்சான், உலர்த்தின துளசியிலை, தாளிசபத்திரி, காவுஜுபான் இலை, காவுஜுபான் பூ, ஏலரிசி, காட்டேலரிசி, பூமிச் சருக்கரைக்கிழங்கு,வெட்பாலையரிசி, சிறு நெருஞ்சிமுள், றூமிமஸ்தகி, சடாமாஞ்சி,கோரைக்கிழங்கு, கஞ்சாவிதை, பூலாங்கிழங்கு ஆளிவிதை, மேல்தோல் நீக்கின சுக்கு, அரிசித்திப்பிலி அக்கராகாரம் நிலக்கடம்பு, பன்னீர் வார்த்தரைத்து உலர்த்தின சந்தனம், கருவேலம்பிசின், முருங்கைப்பிசின், வேப்பம்பிசின், மஞ்சள் முள்ளங்கிவிதை, வெங்காயவிதை, சீமை மருதோன்றி விதை, ஜுந்து, குறாசானி ஓமம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், குங்குமப்பூ 2 கிராம், கஸ்தூரி, அம்பர் வகை ஒன்றுக்கு 1 கிராம், வெள்ளிரேக்கு 8 கிராம் விதைபோக்கின நெல்லிக்காய் முறப்பா 10 கிராம் தண்ணீர்விட்டான் கிழங்கு ரசம், தித்திப்பு மாதுளம்பழ ஷர்பத் இவை வகை ஒன்றுக்கு 210 கிராம், சீனிசருக்கரை 525 கிராம் கெட்டித்தேன் 525 கிராம்.

செய்முறை - இவற்றில், முறப்பாவையும் பருப்பினங்கள் எல்லாவற்றையும் வெண்ணெய்போல் நன்றாக அரைத்துக் கொள்ளவேண்டும். கஸ்தூரி, அம்பர், குங்குமப்பூ ஆகியவற்றைப் பன்னீர் வார்த்தரைத்துக் கொள்ள வேண்டும். மற்றச் சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும், கிழங்கு ரசம், ஷர்பத், சீனிசருக்கரை, தேன் ஆகியவற்றை ஒன்றாகக்கலந்து காய்ச்சிப் பாகுபதத்தில் கீழிறக்கி, மேற்கண்ட மூவினங்களையும் ஒன்றாகச் சேர்த்து அதில் போட்டுச் சந்தனக்கட்டையால் நன்றாகக் கடைந்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 12-15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ராஜகருவிகளைப் பலப்படுத்தி, நரம்பாதிகளுக்கு முறுக்கேற்றி ஆண்மையை யுண்டாக்கும். இடுப்பின் நோயை அகற்றி, அதற்குப் பலத்தைத் தரும். இரத்தசத்தைப் பெருக்கி, அதை சுபாவஸ்திதியிலாக்கும். தேகசுகத்தைக் கொழுப்பிக்கும் இன்னும் பற்பல சக்திகளுண்டு,அவற்றை அநுபவ பூர்வமாய்க் கண்டுகொள்ளலாம்.

இராஜாந்தரங்க வீரியவிர்த்தி மாஜூன்

சாலாமிஸ்றிச் சூரணம், பெருலவங்கப்பட்டைச் சூரணம் ஜாதிக்காய்ச் சூரணம், சன்னராஷ்டச் சூரணம், சன்ன லவங்கப்பட்டைச்

சூரணம், லவங்கச்சூரணம், அக்கராகாரச் சூரணம், மேல்தோல் போக்கின சுக்குச் சூரணம், நிலப்பனைக் கிழங்குச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், மேல்தோல் போக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, மேல்தோல் போக்கின பிஸ்தாப்பருப்பு, புதிய சாரப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 55 கிராம், சீனி சருக்கரை 700 கிராம், பசுவின் பால் படி- 3.

செய்முறை- இவற்றில், பாலைக் காய்ச்சும் போது கைவிடாமல் துழாவி பால்திரண்டு கெட்டியான பின்பு, சீனிசருக்கரையைச் சேர்த்து அகப்பையினால் நன்றாய்த்துழாவி, சீனிசருக்கரை கரைந்தபின், பருப்பினங்களை வெண்ணெய்போல் நன்றாயரைத்து அதிற் போட்டுத் துழாவிச் சூரணங்களை யொன்றாய்க் கலந்து அதில் தூவியிறக்கிப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 35-55-70 கிராம் காலையில் மாத்திரம் சாப்பிடவேண்டும்.

உபயோகம் - ராஜகருவிகளைப் பலப்படுத்தி, ஆண்மையை யுண்டாக்கும், இது வைத்திய அந்தரங்க முறைகளில் ஒன்றாம்.

இராஜ பராக்ரம யோகவிர்த்தி மாஜூன்

பாஹமனேசுபேத், பஹமனேசுறுக், சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்கு, மேல்தோல் போக்கின சுக்கு, சன்னராஷ்டம், மஞ்சள் முள்ளங்கிவிதை, முள்ளங்கிவிதை, கசகசா, ஆவாரைவிதை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், மேல்தோல் போக்கின பிஸ்தாப்பருப்பு, மேல்தோல் போக்கின தேங்காய், சில்கூஜாபருப்பு, மேல்தோல் நீக்கின எள்ளு, புதிய சாரப்பருப்பு, பருத்தி விதைப்பருப்பு, சீமை அயிரைமீன் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 16 கிராம், வெள்ளரிவிதைப்பருப்பு, கெக்கரிவிதைப்பருப்பு, முலாம்பழ விதைப்பருப்பு இவை வகைக்கு 25 கிராம், ஆண் அடைக்கலாங் குருவித் தலைமூளை 35 *பாகப்படுத்தின குறாசானி ஓமச்சூரணம், குங்குமப்பூ இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், அம்பர், வெள்ளிரேக்கு, கஸ்தூரி இவை வகை ஒன்றுக்கு 3 கிராம் தங்கரேக்கு 50 மி கி ** ஆளிவிதை ஷர்பத் 175 கிராம், கெட்டித்தேன், சீனிசருக்கரை இவை வகை ஒன்றுக்கு 350 கிராம்.

---

* இதைப் பசுவின் பாலில் ஒருநாள் ஊறவைத்து நிழலிலுலர்த்திக் கொள்வதே அதன் பாகமாம்.

** ஆளிவிதை பலம் பத்தை நன்றாய்ச்சிதைத்து ஒருபடி சுத்தஜலத்தில் ஊறவிட்டுக் காலையிற் காய்ச்சி நாலிலொரு பாகமாய்ச் சுண்டினபின் இறக்கி வடிகட்டி சீனிசருக்கரையை ஏழரைபலம் சேர்த்துக்காய்ச்சி பாகுபதத்தில் இறக்கிக் கொள்வதே ஆளிவிதை ஷர்பத்தாம்.

செய்முறை - இவற்றில்,பின்னைய மூன்றையும் கலந்து காய்ச்சி பாகுபதத்தில் எள்ளு,கசகசா, பருப்பினங்கள் ஆகியவற்றை வெண்ணெய்போல் நன்றாயரைத்து பாகிற்போட்டுக் கைவிடாமல் துழாவி மற்றச் சூரணங்களையும் ஒன்றாய்க்கலந்து தூவிக் கிண்டிக் கீழிறக்கி, குங்குமப்பூ, அம்பர், கஸ்தூரி ஆகியவற்றைத் தனித்தனி பன்னீர் விட்டு நன்றாயரைத்து அதில்சேர்த்து, ரேக்குகளையும் முறையே ஒவ்வொன்றாய் போட்டுச் சந்தனக்கட்டையினாற் கடைந்து பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 4,6 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ராஜகருவிகள், பீஜங்கள் ஆகியவற்றைப் பலப்படுத்தி, ஆண்மை, ஸ்தம்பன சக்தி, மனக்களிப்பு ஆகியவற்றையுண்டாக்கும், துரிதஸ்கலிதத்தை நிறுத்தும்.

இர்ராஜ சூரயோக வீர்த்தி திராவகம்

ஆண் அடைக்கலாங்குருவி - 25 பறக்கும் பருவமெய்தின புறாக்குஞ்சு 3, யௌவனசேவல் 1 நிலக்காடை 2 இவை யெல்லாவற்றையும் அறுத்து, குடல், கால், மூக்கு, ரோமம் முதலியவற்றைப் போக்கிச் சுத்திசெய்து கொள்ள வேண்டும் கொழுத்த ஆட்டிறைச்சி 2800 கிராம், இதன் கொழுப்பு, நரம்பு முதலியவற்றைப் போக்கிச் சுத்திசெய்து கொள்ள வேண்டும்.

சன்ன லவங்கப் பட்டை, உலர்த்தின பொதீனா, பெருலவங்கப்பட்டை, அகருகட்டை, மாசிப்பத்திரி, லவங்கம் றூமிமஸ்தகி, ஓமம், வெண்சந்தனம், செஞ்சந்தனம், சீமைத்தண்ணீர்விட்டான் கிழங்கு, சன்னராஷ்டம், பூலாங்கிழங்கு ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, ஏலரிசி, சடா மாஞ்சில், தாளிசபத்திரி, மேல்த்தோல் போக்கின சுக்கு, இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், பன்னீர் 7 கிலோ கஸ்தூரி பிரம்புத் திராவகம் 2800 கிராம் அம்பர் 2 கிராம்.

செய்முறை - இவற்றில், இறைச்சியினங்களை நன்றாகக் கொத்தி ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். சரக்குகளை இடித்துத் தூள்செய்து கொள்ள வேண்டும். பிறகு ஒரு பாத்திரத்தில் முன்னமே கொஞ்சம் தூளைத்தூவி அதன்மேல் இறைச்சியைக் கொஞ்சம் பரப்பி மறுபடியும் அதன் மேல் கொஞ்சம் தூள் தூவி முன்போல இறைச்சியை அதன் மேல் பரப்பவேண்டும். இவ்விதம் இறைச்சியெல்லாம் அடுக்கடுக்காய்ப் பரப்பப்பட்டபின் மேலும் அந்தத் தூள் தூவி ஓரிரவு வைத்து மறுநாட்காலையில் பன்னீரையும் திராவகத்தையும் கலந்து வாலையிலிட்டு

அதில் பாகப்படுத்தின இறைச்சியையும் சரக்குகளையும் போட்டு மெதுவாயெரித்து அம்பரைப் பொடித்து ஒரு சீலையில் முடிந்து திராவகம் வடியும் குழாயில், வடியும் திராவகம் அதில் தங்கி நின்று வடியும் படியாகக் கட்டி நாலுபடி திராவகம் வடித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- 70 - 100 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - ராஜகருவிகளைப் பற்றிய சீதள நோய்களைக் கண்டித்து, அவற்றைப் பலப்பித்து, ஆண்மையை யுண்டாக்கும். இருதயத் துடிப்பை விரைவில் மாற்றும். குளிர்ச்சியினாலுண்டாகும் மயக்கத்தைப் போக்கும்.

இராஜாநந்த மகா யோகவிர்த்தி குதூகலனி

கஸ்தூரி 3 கிராம் வெள்ளிரேக்கு 4 கிராம்,பஹமனே சுபேத், பஹமனேசுறுக், வால்மிளகு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், ஆளிவிதை, தூதரிசுபேத், தூதரிசுறுக், ஸாலாமிஸ்றி, சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்கு, ஏலரிசி, சன்ன லவங்கப்பட்டை, ஜாதிக்காய், லவங்கம், ரோஜாப்பூவிதழ், உலர்த்தின துளசியிலை, வெண்சந்தனம் இவைகளின் சூரணம் வகை ஒன்றுக்கு 15 கிராம், மேல்தோல் போக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, கசகசா, பன்னீர் இவை வகை ஒன்றுக்கு 315 கிராம், *கஞ்சாவின் நெய் 400 கிராம், சீனிசருக்கரை கெட்டித்தேன் இவை வகை ஒன்றுக்கு 500 கிராம்.

---

*பிசின் பிடிப்புள்ள சடைக்கஞ்சா 84 கிராம்,இதை ஜலத்தில் ஊறவிட்டு அலசியெடுத்துப் பசுவின்பால் 1750 கிராமில், போட்டு ஓரிரவு ஊறவிட்டுக் காலையிற் காய்ச்சிப் பாலில் அதன் சத்து இறங்கினபின் பிசைந்து வடிகட்டிச் சக்கை போக்கினகஷாயத்தில், பசுவின் நெய் 1400 கிராம்,சேர்த்து மெதுவாயெரித்துக் காய்ச்சு நீர் முற்றும் சுண்டுந்தருணத்திற் கீழிறக்கிக் குளிர்ந்த இடத்தில் ஓரிரவு வைத்துக் காலையில் மேலே மிதக்கும் நெய்யைக் கையினால் மெதுவாய்த் தோய்த்தெடுத்து ஒரு பீங்கான் ஓரத்தில் அதைவழித்து மறுபடியும் பாத்திரத்தில் தோய்த்து வழித்துக்கொள்ள வேண்டும் இவ்விதமாகவே எடுத்துக் கொள்வது கஞ்சாவின் நெய்யாம்.

வேறுவகை

வேண்டிய அளவு கஞ்சாவையெடுத்து அதற்கு நாலு பங்கு பசுவின் பாலிற்போட்டு நன்றாகக் காய்ச்சிப் பிரை குற்றிக்கடைந்து வெண்ணெயெடுத்து உருக்கிக் கொள்வதாம். இவ்விதம் செய்தெடுக்கும் நெய்யே சுத்தமும் தோஷமற்றதுமாம்.

செய்முறை- இவற்றில், வாதுமைப் பருப்பையும், கசகசாவையும் அம்மியிலிட்டு அரைத்து ஜலத்திற் கரைத்து வடிகட்டிச் சக்கைபோக்கி, அந்தப்பாலையெடுத்து அதில் சீனிசருக்கரையையும் தேனையும் கலந்து காய்ச்சிப் பாகு செய்து பதத்தில் சூரணங்களையொன்றாகக் கலந்து அதில் தூவிக் கிண்டிக்கிளறிக் கீழிறக்கிக் கஸ்தூரியைப் பன்னீர் வார்த்தரைத்து அதில் கலந்து ரேக்குகளையும் ஒவ்வொன்றாகப் போட்டு சந்தனக்கட்டை மத்தினால் ஒன்றாகக் கடைந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- தலைமூளை, இருதயம் ஆகியவற்றைப் பலப்படுத்தி, நரம்பாதிகளுக்கு முறுக்கேறி, தாருட்டியவிர்த்தி, ஆண்மை ஆகியவற்றை அதிகப்படுத்தும். மனமகிழ்ச்சி நரம்புகளின் எழுச்சி உல்லாச இல்வாழ்க்கை இவைகளையுண்டாக்கும். கஞ்சாவின் துற்குணங்களாகிய நாவரட்சி, மலபந்தம் ஆகியவை சிறிதேனும் இரா.

மனதிற்கு நேரிட்ட சங்கடத்தினால் உண்டாம் தாருட்டிய நஷ்ட சிகிச்சை

இதற்கு முந்தின பாகமாகிய கிரந்தத்தில், இந்தத் தலைப்பிற் சொல்லியிருக்கிறபடி அந்தந்தக் காரணங்களை நாளாடகம் கிரமாணுவாய், நீக்கி வருவதுடன் அநுரஷ்தாறு, தவாவுல் மஸ்க் ஆகியவற்றைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், வெகு சீக்கிரம் அவை நீங்கிச் சுகமடையலாம் பின்வரும் மாங்கிஷத்தீநீரும் உபயோகப்படும்.

சந்தேக நிவாரணோற்சாக கரணி

சடாமாஞ்சில், தாளிசபத்திரி, பஹமனேசுறுக், ஏலக்காய், காட்டேலக்காய், சன்னலவங்கப்பட்டை, அகருகட்டை, காவுஜுபான், குங்குமப்பூ, காட்டுச்சீரகம், வெண்சந்தனம், எலுமிச்சந்துளசி, கொத்துமல்லிவிதை, சோம்பு, றூமிமஸ்தகி, கோரைக்கிழங்கு இவை வகை ஒன்றுக்கு 9 கிராம், துரிஞ்சிநாரத்தம்பழத் தோல் 12 கிராம், பஹமனே ஸுபேத், லவங்கம், பூலாங்கிழங்கு இவை வகை ஒன்றுக்கு 18 கிராம், ஸாலாமிஸ்றி, சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்கு, ரோஜாப்பூவிதழ் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், ஆட்டிளங்குட்டியிறைச்சி 2800 கிராம், யௌவன சேவல் 2, கவுதாரி 4, நிலக்காடை 7, கஸ்தூரிப் பிரம்புத் திராவகம், காவுஜுபான்பூத் திராவகம், சீமையிலந்தைப் பழ (Apple) ரசம் இவை வகை ஒன்றுக்கு 875 கிராம், காவுஜுபான் திராவகம் 350 கிராம், கோராப்பட்டு 350 கிராம்.

செய்முறை- இவற்றில், சேவல், கவுதாரி முதலியவற்றை அறுத்து, குடல், கால், மூக்கு, ரோமம் முதலியவற்றை நீக்கிச் சுத்திசெய்து கல்லுரலிலிட்டு இடித்தும் ஆட்டிளங்குட்டி யிறைச்சியைக் கொத்தியும் திராவகம், ரசம் ஆகியவற்றைக் கலந்தும் அதிற் போட்டு, மற்றச் சரக்குகளையும் நையநறுக்கிப் போட்டு இரண்டரைப்படி சுத்தஜலம் வார்த்துஆறுமணிநேரம் வரையும் ஊறவிட்டு வாலையிலேற்றி மூன்று அல்லது மூன்றரைப்படி திராவகம் வடித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- சமயத்திற்கு ஏற்ற அளவாய் 70 அல்லது 175 கிராம் குறைத்தும் அதிகப்படுத்தியும் சாப்பிடலாம்.

உபயோகம்- தலைமூளை,இருதயம், ஈரல், இரைப்பை ஆகியவற்றைப் பலப்படுத்தி, எவ்வித மனக்கவலையும் நீக்கி, தாருட்டிய விர்த்தியை யுண்டாக்கும்.

குறிப்பு

இத்துடன் திராக்ஷபானம் அல்லது திராக்ஷ ஷர்பத் சாப்பிட, அதிகப் பலனைத்தரும். இவ்விதம் சாப்பிடுவதனால் இதற்கு நிகரான ஔஷதமும் ஆகாரமும் கிடையாது. இதனால் மேற்கண்ட வியாதி தீராவிட்டால் வேறு ஔஷதங்களால் தீர்வது கடினமே.

பில்லி, சூனியம் முதலியவைகளினாலேயே மேற்கண்ட வியாதிகள் சம்பவித்தன என்னும் பீதியுடையவர்களுக்கும், புத்திமான்களாகிய பெரியோர்களின் மூலமாகவே அவ்விதத் தந்திர மந்திர சிகிச்சைகளை செய்வித்து நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

சந்தேகம், திகில், வெறுப்பு ஆகியவை தாருட்டிய நஷ்டத்திற்குக் காரணமானால், மனக்களிப்பையும், சிறு மயக்கத்தையும் தரும், ஈசுரமூலி, முதலியவை போன்ற லாகிரி திரவிய யோகமுறைகளைச் சாப்பிட்டு, சம்மந்தப்பட அவை நீங்கி, தாருட்டிய விர்த்தியுண்டாம்.

வியாதி முதலியவையுண்டாம் என்னும் சந்தேகம், பயம் ஆகியவை தாருட்டிய நஷ்டத்திற்குக் காரணமானால் அவ்வித ஸ்திரீகளின் கூட்டுறவை முற்றாக ஒழிப்பதே உத்தமமாம்.

மேற்கண்டபடி தாருட்டிய நஷ்டத்திற்குக் காரணமாம் கிரியைகளை அதற்கு ஏற்றவிதமாய் செய்வதுடன், தலைமூளை, இருதயம் முதலிய ராஜகருவிகளைப் பலப்படுத்தும் ஔஷதங்களில், தங்கள் தங்கள் தேக சுபாவத்திற்கு ஏற்ற முறைகளைச் செய்து சாப்பிட்டு, ராஜகருவிகளைப் பலப்படுத்த வேண்டும்.

ரூபவதி அல்லது தன் மனதிற்கேற்ற ஸ்திரீ ஆகிய இவர்கள் மேலேயே மனம் வைத்திருப்பதனால் தம்சொந்த ஸ்திரீ சம்பந்த இச்சை எழாததனால் உண்டாகும் தாருட்டிய நஷ்ட சிகிச்சை

அவ்வித இஷ்டத்தைப் படிப்படியாய் மாற்றும்படியான வேறுவிஷயங்களில்மனதைச்செலுத்தி வருவதுடன், மூளை,இருதயம் ஆகியவற்றைப் பலப்படுத்தும் ஔஷதங்களில், மனக்களிப்பையும் உல்லாச மயக்கத்தையும் தரத்தக்க யோகமூலி நெய் முதலிய திரவிய யோகமுறைகளைச் சேர்த்துச் சாப்பிடவேண்டும்.

சொப்பன ஸ்கலிதம் அதிகப்படுவதினாலுண்டான தாருட்டிய நஷ்டசிகிச்சை சொப்பன ஸ்கலித நிவாரணி

*சீமை நறுவிலிப்பழச் சூரணம், சீந்திற்சருக்கரை இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், *தேவதாரு பிசின் சத்து 24 கிராம், சீனிசருக்கரை 100 கிராம்.*

செய்முறை- இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 12 கிராம் சாப்பிட்டு அதன்மேல் ஜீரணசக்திக்கு ஏற்ற அளவு 350 அல்லது 700 கிராம் பாலும், அவ்வெடை ஜலமும் கலந்து

---

* இதற்கு பார்ஸி பாஷையில் கந்தபேரோஜா என்று பெயர். இவ்விதமே மருந்துக் கடைகளிலும் வழங்குகின்றது. இதில் சத்து எடுக்கும் விவரம்:- ஒரு வாயகன்ற பானைக்குள் சதுரமான செங்கல் துண்டொன்றை வைத்து, அதன் மேல் ஒரு பீங்கான் கோப்பையை வைத்து முக்காற் கோப்பை சுத்தஜலம் வார்த்து வேண்டுமளவிற்கு கந்தபேரோஜாவைப் பானையின் செங்கல்லைச் சுற்றிப்போட்டு பானைவாய்மூடிச் சீலை மண்செய்து அடுப்பேற்றி நாலு அல்லது ஐந்துமணிநேரம் வரையும் எரித்தபின், குளிரும் படி ஆறவிட்டுச் சீலைமண்ணைப் பெயர்த்துப் பிரித்துப் பார்க்க, பீங்கான் கோப்பையில் தயிலம் மிதக்கும்; அதனைக் கையினால் தோய்த்து மறுகோப்பையில் வழித்து வழித்து அதில் மிதக்கும் தயிலத்தையெல்லாம் எடுத்து அசையாமல் வைத்திருக்க, ஜலம் வெளிப்படும். இப்படிச் செய்தெடுத்து ஜலத்தை நீக்கின தயிலமே தேவதாரு பிசின் சத்தாம்.

விதை நீக்கிச் சிதைத்த பேரீச்சங்காய் ஐந்தை அதிற்பேட்டுக் காய்ச்சி. நாலிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கி வடிகட்டிச் சாப்பிட வேண்டும்.

உபயோகம்- எவ்வித சொப்பன ஸ்கலிதமும் தீர்ந்து தாருட்டிய விர்த்தியுண்டாம்.

வேறு

கருவேலம்பிசின் சூரணம்,ஆவாரம்பிசின் சூரணம், முள்ளிலவம் பிசின் சூரணம், சுத்திசெய்த *சிலாசத்துச் சூரணம், சீந்திற்சருக்கரை, மூங்கிலுப்பு, ரூமிமஸ்தகி, வறுத்திடித்த புளியங்கொட்டை மேல்த்தோல், தேவதாருபிசின் சத்து இவை வகை 1-க்கு 35 கிராம்.

செய்முறை- இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்துகொள்ள வேண்டும்.

மாத்திரை - 12 கிராம் சாப்பிட்டு, அதன்மேல் மேற்சொன்னபடி பாகப்படுத்தின பசுவின் பால் குடிக்க வேண்டும்.

உபயோகம்- மேற்கண்டவைக்காம்.

வேறு

பூமாதுளம்பூ, ஆவாரம்பூ, கஞ்சாவிதை இவற்றின் சூரணம் வகை 1-க்கு 35 கிராம்.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 8-10 கிராம், சாப்பிட்டு அதன்மேல் முன் சொன்ன பாகப்படி பசுவின்பால் சாப்பிடவேண்டும்.

உபயோகம்- முன் கண்டவைக்காம்.

கமுகு ரத்னாதி சூரணம்

உலர்த்தின பாக்கின்பூ, உலர்த்தினஆவாரம்பூ, உலர்த்தின ஆவாரம்பட்டை, மூங்கிலுப்பு இவற்றின் சூரணம் வகை 1-க்கு 35 கிராம், பன்னீவார்த்துப் பன்னிரண்டுசாமம் அரைத்துலர்த்தின தொளையிடாத நன்முத்து, பன்னீர்வார்த்துநாலுசாமம் அரைத்துலர்த்தின நற்பவளம், பன்னீர்வார்த்து நாலுசாமம் அரைத்துலர்த்தின கஹருபா, காண்டாமிருக ரத்தச் சூரணம், பூங்காவித் தூள் இவை வகை 1-க்கு 3 கிராம்,

---

*இதன் முறையைப் பின்வரும் காயசித்தியாதி மாத்திரையிற் காண்க.

கொத்துமல்லிவிதை, குறாசானி ஓமம், கருவேலம்பிசின், பருப்புக்கீரைவிதை, காஹ-விதை, பூமாதுளம்பூ, சீமை நெல்லிமுள்ளி இவைகளின் சூரணம் வகை 1-க்கு 10 கிராம்.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை -12கிராம் சாப்பிட்டு அதன்மேல் மேற்கண்ட பாகப்படி பசுவின்பால் சாப்பிடவேண்டும்.

உபயோகம்- மேற் கண்டவைக்காம்.

குறிப்பு

மேற்கண்ட முறைகளிலும், முதற்பாகத்திற் சொல்லப்பட்டிருக்கும் முறைகளிலும், இனிச்சொல்லப்படும் இந்திரிய வொழுக்கு, துரிதஸ்கலிதம் ஆகியவற்றின் சிகிச்சாக்கிரமங்களிலும் மேற்படி வியாதி சம்பவித்த காரணத்திற்கு ஏற்றவிதம் சமயோசிதமாய்ச் செய்து சாப்பிட்டு நிவர்த்திசெய்து, தாருட்டியவிர்த்திக்குரிய ஔஷதங்களைச் சாப்பிட்டுச் சுகமடைய வேண்டும்.

இந்திரிய இழிவு அல்லது இந்திரியவொழுக்கினால் உண்டான தாருட்டிய நஷ்ட சிகிச்சை தாத்துராதி மாத்திரை

*பக்குவப்படுத்தின ஊமத்தைவிதை, பருத்திவிதைப்பருப்பு, நற்சீரகம், கொத்தமல்லிவிதை இவற்றின் சூரணம் வகை 1-க்கு 20 கிராம்.

செய்முறை- இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திற்போட்டு, மஞ்சள் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், சீமை நெல்லிமுள்ளி இவை வகை 1-க்கு 20 கிராம், இம்மூன்றையும் சிதைத்து 170 மி.லிட்டர் ஜலத்திலிட்டு ஒருநாள் ஊறவிட்டு மறுநாள் எடுத்து

---

*90 கிராம் போஸ்தக்காயை அரைப்படி சுத்தஜலத்திற் போட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாய்ச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து வடித்துச் சீஷாவில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். ஊமத்தைவிதை 35 கிராம், ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு நன்றாய் நனையத்தக்க அளவு மேற்படி கஷாயம் வார்த்து வெய்யிலில் வைத்து நீர் சுவறி நன்றாய் உலர்ந்தபின் ,முன்போல கஷாயம் வார்த்து வெய்யிலில் வைத்துலர்த்த வேண்டும், இவ்விதம் ஏழு தடவை செய்துலர்த்தின பின், மேற்படி கஷாயத்தில் அரை ஆழாக்கு அந்த அளவில்வார்த்து அடுப்பேற்றி நீர் சுண்டக் காய்ச்சி யெடுத்துக் கொள்வதே ஊமத்தை விதையின் பக்குவமாம்.

நன்றாகப் பிசைந்து சக்கைபோக்கி வடித்த கஷாயம் வார்த்து இரண்டுசாமம் அரைத்துக் கடலைப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவிற் பத்திரப் படுத்த வேண்டும்.

மாத்திரை - படுக்கைக்குப் போகும்போது ஒரு மாத்திரையைச் சாப்பிட்டுப் படுக்கவேண்டும்.

உபயோகம்- இந்திரியவொழுக்கு, துரிதஸ்கலிதம், இருமல், தீராப்பீனிசம் முதலியவை தீரும்.

குறிப்பு

ஊமத்தன்விதைப் பிரயோகம் ஆக்ஷேபனைக்கிடமாயினும், அதன் துற்குணங்களை முறிக்கும் மாற்றாகிய பருத்தி விதைப்பருப்பு சேர்வதனாலும் மாத்திரையில் மிகவும்குறைந்த அளவாய் உபயோகப் படுவதனாலும் எவ்வித ஆக்ஷேபனையும் இன்றி, பயமில்லாமல் உபயோகிக்கலாம்.

காயசித்தி மாத்திரை

* பக்குவப்படுத்தின கற்பூரசிலாசத்து, வெள்ளரிவிதைப் பருப்பு, ஏலக்காய்ச்சூரணம், மூங்கிலுப்பு, ஜென்ஷன் வேர்ச் (Gention root) சூரணம், சீனிசருக்கரை இவை வகை 1-க்கு ஐந்து கிராம், தேன் தேவையான அளவு

செய்முறை- இவை எல்லாவற்றையும் கல்வத்திற் போட்டுத் தேன் வார்த்து நாலுசாமம் அரைத்து இரண்டு கிராம் மாத்திரைகளாகச் செய்து கொள்ளவேண்டும்.

மாத்திரை - 1 சாப்பிடலாம்.

உபயோகம்- இந்திரிய இழிவைத் தீர்த்து, இரத்த சத்தை சுபாவஸ்திதியிலாக்கும். ஸ்தம்பனத்தையுண்டாக்கி ஆண்மையை விர்த்திசெய்யும். பிரமேகவியாதியைக் குணப்படுத்தும்.

---

* வெண்மையான கற்பூர சிலாசத்து 35 கிராம், இதை 170 மி.லிட்டர் இளநீரில் மூன்றுநாள் ஊறவிட்டுக் கழுவியெடுத்துப் பசுவின்பால் படி நாலிற்போட்டுக் காய்ச்சி நன்றாய்க் கழுவி சிறுநெருஞ்சிச் சாறுவிட்டு இரண்டுசாமம் அரைத்து வில்லை தட்டிக்காயவைத்து ஓட்டிலிட்டு ஓடுமூடி, மூன்று சீலைமண் செய்துகாயவைத்து 500 கிராம், விராட்டியில் புடமிட்டெடுத்துக் கொள்வதே சிலாசத்தின் பக்குவமாம்.

திந்திரிணி பீஜாங்க மாத்திரை

புளியங்கொட்டை மேல்தோல் சூரணம் 35 கிராம், கொத்துமல்லிவிதைச் சூரணம் 16 கிராம், காஹூவிதைச் சூரணம் 9 கிராம், சீமை நீர்முள்ளிவிதை, உலர்த்தின கருவேலங்கொழுந்து, உலர்த்தின கருவேலம்பூ, பூனைக்காலி விதை, உலர்த்தின பாக்குபூ, நிலப்பனைக்கிழங்கு, பருப்புக்கீரை விதை, குச்சி, காம்பு நீக்கின ஜரிஷ்க், ஆற்றுச் சவுக்கங்காய் என்னும் வன்னிக்காய் அல்லது மாசிக்காய் ஆகியவற்றின் சூரணம் வகை 1-க்கு 6 கிராம், சீனிசருக்கரை 20 கிராம், ஆலம்பால் செல்லத்தக்க அளவு

செய்முறை- காஹூ, வன்னிக்காய், கொத்துமல்லி விதை, சீனிசருக்கரை ஆகிய இந்நான்கைத் தவிர, மற்றவைகளைப் பீங்கான் பாத்திரத்திற் போட்டு நன்றாய் நனையத்தக்க அளவு ஆலம்பால் வார்த்து நிழலுலர்த்தி நன்றாயுலர்ந்தபின், அவற்றுடன் முன்சொன்ன நான்கு சரக்குகளையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு ஆலம்பால் வார்த்து இரண்டு சாமம் கைவிடாமல் அரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலிலர்த்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 1, காலைவேளையில் வெறும் வயிற்றிற் சாப்பிட்டு அதன்மேல் புதிதாய்க் கறந்த பசுவின் பாலைக்காய்ச்சி, அதில் கொஞ்சம் கற்கண்டைப் பொடித்துப்போட்டுக் குடிக்க வேண்டும்.

உபயோகம்- இந்திரிய இழிவைத்தீர்க்கும். நீர்த்திருக்கும் இரத்த சத்தை சுபாவ ஸ்திதியிலாக்கும்.

மாஷாதி ஹல்வா

நாலு ஆழாக்கு உளுந்தின்பருப்பை அரைப்படி பசுவின் பாலிற்போட்டு நிழலுலிலர்த்தி யரைத்தமாவு; சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்குச் சூரணம், உலர்த்தின நெய்தற்கிழங்குச் சூரணம், வறுத்து மேல்தோல் போக்கின புளியங்கொட்டைப் பருப்புச் சூரணம் இவை வகை 1-க்கு 175 கிராம், சீனிசருக்கரை 700 கிராம், நெய் 700 கிராம்.

செய்முறை- இவற்றில் சூரணங்களை யொன்றாகக் கலந்தும், மற்றிரண்டைத் தனியாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். 35 கிராம் நெய்யைக் காய்ச்சி அதில் 35 கிராம் சீனிசருக்கரையைப் போட்டு அது கரைந்தவுடன் மேற்படி சூரணக்கலவையில் 35 கிராம் எடுத்துப்போட்டுக் கிண்டிக் கிளற ஹல்வாவாகும். அந்த ஹல்வா அவ்வளவையும் சாப்பிடவேண்டும். அவ்விதம் அன்றன்று காலையில் புதிதாகச் செய்து சாப்பிட வேண்டும் ஜீரணசக்திக்கு ஏற்ற அளவாகக் குறைத்தும் அதிகப்படுத்தியும் சாப்பிடலாம்.

உபயோகம் - இந்திரிய இழிவு, துரிதஸ்கலிதம் ஆகியவை தீர்ந்து, உடைந்து போன இரத்தசத்தை இயல்பான நிலைக்கு மாற்றும்.

அமிர்த பீஜ ஹல்வா

வறுத்துத் தோலுடன் இடித்த புளியங்கொட்டைச் சூரணம், முள் முருக்கம்பிசின் சூரணம், நிஷாஸ்தா இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், நாட்டுச்சருக்கரை 105 கிராம், பசுவின் நெய் 140 கிராம்.

செய்முறை- நெய்யைக்காய்ச்சி அதில் நிஷாஸ்தாவைத் தூட்செய்து போட்டுச் சிவக்க வறுத்து, மற்றிரண்டு சூரணத்தையும் கலந்து அதில் கொட்டி, சருக்கரையில் கொஞ்சம் ஜலம்வார்த்துக் கரைத்துவடித்துச் சக்கை போக்கிச் சேர்த்து நன்றாகக் கிண்டிக்கிளறி ஹல்வா பதத்திலிறக்கிப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 35 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- மோர் போலான இரத்த சத்தானது இயற்கை ஸ்திதியையடைந்து கெட்டியாம். தளர்ந்த நீர்க்குண்டிக் காய்களை ஸ்திரப்படுத்தி, அவற்றின் நோய்களைக் கண்டிக்கும். இடுப்பிற்கு வலுவைத் தரும்.

சுகந்தி பலோயுதக மாஜூன்

கசகசா 20 கிராம், மருத்துவெள்ளை, வெண்சந்தனம் பூங்காவி, காண்டாமிருகத்தின் ரத்தம், தூதரிஸூறுக் இவற்றின் சூரணம் 10 கிராம், பன்னீர் விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின நற்பவழம், சோம்பு, பாகப்படுத்தின கோராப்பட்டு, பிளப்புச் சீரகம், மேல்தோல் போக்கின சுக்கு, கருவேலம்பிசின், திருநீற்றுப்பச்சைவிதை,கொத்து மல்லிவிதை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், லவங்கப்பட்டைச் சூரணம் நான்கு கிராம், துரிஞ்சி நாரத்தம்பழத்தோல் சூரணம் 3 கிராம், காய்ச்சி நுரை போக்கிச் சுத்திசெய்த கெட்டித்தேன் 350 கிராம்.

செய்முறை- இவற்றில் தேனைக் காய்ச்சி பதத்தில் சூரணங்களை யொன்றாகக் கலந்து தூவிக் கிண்டிக்கிளறி மாஜூன் பாகப்படி செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை -12-15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இந்திரிய வொழுக்கு, துரிதஸ்கலிதம், சொட்டுமூத்திரம், சுகரொழுக்கு ஆகியவை தீரும்.

மஹா மேதோரி மாஜூன்

வெண்மையான கருவேலம்பிசின், உலர்த்தின நெய்தற்கிழங்கு, விதைநீக்கி யுலர்த்தியிடித்த பேரீச்சங்காய்ச்சூரணம் இவை வகை ஒன்றுக்கு 210 கிராம், மேல்தோல் போக்கின பிஸ்தாப்பருப்பு, மேல்தோல்

போக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, சாரப்பருப்பு, இவை வகை ஒன்றுக்கு 60 கிராம், சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்குச் சூரணம் 24 கிராம், லவங்கம், தூதரி ஸுபேத், தூதரிஸுறுக், பஹமனேசுபேத், பஹமனேசுறுக் இவற்றின் சூரணம்வகை ஒன்றுக்கு 6 கிராம், ஏலரிசிச் சூரணம் 5 கிராம், லவங்கப்பட்டை,மேல் தோல் போக்கின சுக்கு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம் அரிசித்திப்பிலிச் சூரணம் 1கிராம் சீனிசருக்கரை 840 கிராம் பசுவின் நெய் 210 கிராம்.

செய்முறை- இவற்றில், நெய்யில் கருவேலம் பிசினையும் நெய்தறகிழங்கையும் தனித்தனி வறுத்துத் தூட்செய்து சீனிசருக்கரையைப் பாகுசெய்து பதத்தில் சூரணங்களை யொன்றாகக் கலந்து தூவிக்கிண்டிக்கிளறி மாஜூன் பாகப்படி செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 12, 24 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - இந்திரிய வொழுக்கு, துரிதஸ்கலிதம் ஆகியவை தீர்ந்து, இரத்தபுஷ்டி யுண்டாக்கி ஆண்மை சக்தியை விர்த்தியாக்கும்.

கபிதாதி மாஜூன்

விளாம்பிசின் சூரணம் 21 கிராம், பூமாதுளம்பூச் சூரணம் 12 கிராம், வெண்சந்தனம், நிலவேம்பு, சுக்கான் கீரை விதை, கருவேலம்பிசின், மூங்கிலுப்பு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், குந்திரிக்கச் சூரணம் 4 கிராம், சீனிசருக்கரை 18 கிராம்.

செய்முறை- சீனிசருக்கரையைப் பாகுசெய்து, பதத்தில் சூரணங்களையொன்றாகக் கலந்து தூவி நன்றாகக் கிண்டிக்கிளறி மாஜூன் பாகப்படி செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 20 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இந்திரியவொழுக்கு, நீரொழுக்கு ஆகியவற்றைத் தீர்க்கும். இது, சூடான தேகிகளுக்கு மிகவும் ஏற்றது.

நித்தியானந்த வித்துருமப் பஸ்பம்

காற்படி முலைப்பாலில் இரண்டுபலம் நற்பவளத்தைப் போட்டு நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும். சோற்றுக் கற்றாழஞ்சோறு ஒரு படி.

செய்முறை- ஒருபடி கொள்ளத்தக்க ஒரு மட்பாண்டத்தில் மேற்படி சோற்றில் அரைப்பாகத்தைப் போட்டு அதன்மேல் முன்பு பாகப்படுத்தின பவளத்தை வைத்து, அதன்மேல் மற்றொரு பாதிச் சோற்றைப்போட்டு, வாய்க்குச்சில்லிட்டு, ஏழு மண்சீலை செய்துலர்த்தி, ஒரு கஜம் அகலம் ஒரு கஜம் ஆழமுள்ள சதுரமான ஒரு குழிதோண்டி, அதில் அரைவாசி

விராட்டியடுக்கி, முன் மண்சீலை செய்த பாத்திரத்தை வைத்து மேலே விராட்டியடுக்கிக் குழி நிறைந்தபின் தீ மூட்டவேண்டும். ஒரு நாள் முழுவதும் தீ ஆறாது. தீ நன்றாய் ஆறினபின் புடத்தைப் பிரித்துப் பாத்திரத்தையெடுத்து, அதிலிருக்கும் பவளத்தை நன்றாகப் பொடி செய்து சீஷாவிற் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

மாத்திரை - வேளை 1-க்கு நந்நான்கு குன்றியெடையாகக் காலை மாலை இரண்டு வேளையும் 85 கிராம், 170 கிராம் பசுவின் பாலுடன் முதல்வாரம் சாப்பிட வேண்டும். மறுவாரம், அவ்விதமாகவே அவ்வாறு குன்றி மணியெடை சாப்பிடவேண்டும். அடுத்த மூன்று வாரத்தில் எவ்வெட்டுக் குன்றியெடையாகச்சாப்பிட்வேண்டும்.

உபயோகம்- இந்திரியவொழுக்கு, துரிதஸ்கலிதம், எலும்புருக்கிநோய், அஸ்திவெட்டை, பித்தச்சூடு, கபவியாதிகள் ஆகியவைகள் தீர்ந்து, தாருட்டியவிர்த்தியுண்டாகும். இதனுடன் முன் சொல்லப்பட்டிருக்கிற ஔஷதங்களில், தேகசுபாவத்திற் கிசைந்த வொன்றைச் சேர்த்து உபயோகப்படுத்த, அதிகக் குணமுண்டாகக் காணப்பட்டது.

பறங்கி பந்தனச் சூரணம்

*பாகப்படுத்தின பறங்கிப்பட்டைச் சூரணம் 175கிராம், உலர்த்தின ஆலம்விழுதுச் சூரணம், சீமைத்தண்ணீர்விட்டான் கிழங்குச்சூரணம் இவை வகை 1-க்கு 175 கிராம், சீனிசருக்கரை 700 கிராம்.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவேண்டும்.

மாத்திரை - 8-12 கிராம், காலை மாலை இருவேளையும் 40-நாள் உட்கொள்ள வேண்டும்.

உபயோகம்- மேக சம்பந்தமான இந்திரியஇழிவு, துரிதஸ்கலிதம் முதலியவை தீரும், தாருட்டிய விர்த்தியும், ஆண்மையும் உண்டாம்.

சிற்றண்டப் பஸ்பம்

அடைகாத்த முட்டையோடு 175 கிராம், கிளிஞ்சிற் சுண்ணாம்புநீறு படி -1ல் ஒன்றரைப்படி ஜலம்வார்த்து நன்றாகக் கரைத்து ஒருநாள் வைத்திருந்து, மறுநாள் அதன் தெளிவில் அரை, முக்கால் படி யிறுத்தெடுத்து அதில் மேற்படி முட்டையோடுகளைப் போட்டு நாலுமணி நேரம் வரையும் மூடி ஊறவிட வேண்டும். பின்பு, ஓட்டுக்குள்ளிருக்கும்

---

*பத்துப்பலம் பறங்கிப்பட்டையைச் சன்னத் துண்டுகளாய் நறுக்கி, ஒருபடி பசுவின்பாலிற் போட்டுக் காய்ச்சிப் பால்சுண்டித் திரண்டு இறுகியபின் எடுத்துக் கழுவாமல் அப்படியே நிழலிலுலர்த்தி யிடித்து வஸ்திரகாயம் செய்து கொள்வதே அதன் பாகமாம்.

சவ்வை நீக்கி மெல்லிய வஸ்திரத்தால் துடைத்து, 140 கிராம் நிறுத்தெடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் அவற்றைப்போட்டு, நாலு பலம் எலுமிச்சம்பழ ரசம் அதில்வார்த்து வாய்மூடிமண்சீலை செய்து, வெய்யிலில் வைக்க வேண்டும்.

இது, சுமார் ஒரு வாரத்துக்குள் ரசமெல்லாம் சுண்டிப்போம், பின்பு பிரித்துப் பார்க்கையில் ரசம் சுண்டியிருந்தால் மறுபடியும் முன் அளவு எலுமிச்சம்பழ ரசம் வார்த்து வாய்மூடி முன்போல மண்சீலைசெய்து வைக்கவேண்டும், பழரசம் சுண்டாமலிருந்தால், அதிலிருக்கும் ரச எடை போகப் பாக்கிவிட்டு முன்போல செய்யவேண்டும். இவ்விதம் மூன்றுதடவை செய்யவேண்டும். பின்பு அதையெடுத்து ஒரு மண் கலயத்திற் போட்டுச் சில்லிட்டு மண்சீலை செய்து காயவைத்து ஒருமுழம் அகலம் ஒரு முழ நீளம் உள்ள குழிதோண்டி, அதில் அரைவாசி எருவடுக்கி மேலே கலயத்தை வைத்து அதன்மேலும் எருவடுக்கித் தீமூட்டி எரிந்தாறினபின் எடுத்து, வேறொரு கலயத்திற் போட்டு அதில் எலுமிச்சம்பழரசம் 175 கிராம் வார்த்துச் சில்லிட்டுச் சீலைமண் செய்து முன்போல புடமிட்டுஆறினபின் எடுத்து இன்னொரு தடவையும் அப்படியே செய்யவேண்டும், அப்புறம் எடுத்துப்பார்த்தால் தும்பைப் பூப்போல வெளுத்திருக்கும், அதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும்.

மாத்திரை- குன்றியெடை 2 கிராம், சாப்பிட்டு அதன் மேல் ஜீரணசக்திக்கு ஏற்றபடி காய்ச்சின பசுவின் பாலில் கற்கண்டிட்டுக் குடிக்கவேண்டும்.

உபயோகம்- இந்திரிய இழிவு, மேகவெட்டை, மேகச்சூடு, நீர்ச்சுருக்கு ஆகியவை தீர்ந்து, ஆண்மை சக்தியும், தாருட்டிய விர்த்தியும் உண்டாம்.

துரித ஸ்கலிதத்தால் உண்டாம் தாருட்டிய நஷ்ட சிகிச்சை * மண்டூராதி ஷர்பத்து

**பாகப்படுத்தின பழங்கிட்டம் 125 கிராம், திராக்ஷப்பழ ரசம் 2 படி, குச்சி, காம்பு நீக்கின ஜரிஷ்க், மாசிக்காய், பூமாதுளம்பூ, ரோஜாப்பூ

---

*இதற்குப் பஞ்சோஷ் பாவன திராவகம் என்றும் பேர்.

**கிட்டத்தை உரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம்செய்து ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு அதன்மேல் நாலு அங்குலம் நிற்கும்படியாகக் காரமான சீமைக்காடி வார்த்து இரண்டுவாரம் ஊறவிட்டு வெள்ளைப்பூண்டுத் தாளை அல்லது பூண்டை இடித்துப் பிழிந்தரசம் முன்போலவிட்டு ஒருவாரம் ஊறவிடவேண்டும். இதற்கிடையில் ஊறவைத்த ரசத்தை ஊற்றிவிட்டு வேறுரசம் புதிதாய் விடவேண்டும். பின்பு எடுத்து வாதுமைநெய் அல்லது பசுவின்நெய் வார்த்து கிட்டத்தை நன்றாக வறுத்துப்பொடித்து எடுத்துக் கொள்வதே கிட்டத்தின் பாகமாம்.

விதழ், கொத்துமல்லிவிதை, குந்திருக்கம், பொதீனா இலை, கோரைக்கிழங்கு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், குங்குமப்பூ முன் சொல்லப்பட்ட அண்ட பஸ்பம், முன்சொல்லப்பட்ட நித்தியாநந்த பஸ்பம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம்.

செய்முறை- இவற்றில், பின்குறித்த மூன்றையும் தவிர கிட்டத்தையும் மற்றவைகளையும் திராக்ஷரசத்தில் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கி வடித்து, குங்குமப்பூவைப் பன்னீர் வார்த்தரைத்துப் பஸ்பங்களைக் கலந்து அதனுடன் சேர்த்துச் சீஷாவிற் பத்திரப் படுத்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 20-30 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- துரிதஸ்கலிதம் முதலியவை தீர்ந்து, தாருட்டிய புஷ்டி யுண்டாம்.

குறிப்பு

இந்தப்பாகத்தில், கிட்டம், திராக்ஷப்பழம், குங்குமப்பூ, பஸ்பங்கள் ஆகிய இவ்வைந்தைத்தவிர,மற்றவைகளைச் சிதைத்து முக்காற்படி சுத்தஜலம் வார்த்து மூன்றுலொன்றாகச் சுண்டக் காய்ச்சி வடித்துச் சக்கைபோக்கின கஷாயத்தைத் திராக்ஷப்பழ ரசத்துடன் சேர்த்து இதனையும் மூன்றிலொன்றாகச் சுண்டக்காய்ச்சி, கிட்டம் முதலியவற்றைச் சேர்த்து 2, 3 கிராம் சாப்பிடுவதனால், முன்னிலும் அதிகப் பிரயோஜன முண்டாம்.

மண்டூராதி மாஜூன்

பாகப்படுத்தின கிட்டம் 140 கிராம், பூமாதுளம் பூச்சூரணம் 70 கிராம், கஞ்சாவிதை, கருஞ்சீரகம், ஓமம், பிளப்புச் சீரகம், மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, கற்கடகசிங்கி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், கெட்டித்தேன் 875 கிராம்.

செய்முறை- இவற்றில், தேனைக்காய்ச்சி பதத்தில் சூரணங்களை யொன்றாகக்கலந்து தூவி மாஜூன் பாகத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 5-9 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- துரிதஸ்கலிதத்தால் உண்டாம் தாருட்டிய நஷ்டம், அதிமூத்திரரோகம் முதலியவை தீரும்.

குறிப்பு

கிட்டத்தைச் சேர்க்கச் சொல்லி யிருக்கும் பாகத்தில் அதன் எடையிற் பாதி, முதற்பாகத்தில் பக்குவலக்ஷணத்திற் சொல்லப்பட்டிருக்கிறபடி

உபயோகம்- இதனைத் தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வர, தீராத துரிதஸ்கலிதம் தீர்ந்து, தாருட்டியவிர்த்தியாகும், இரத்தச் சத்தூறி, ஆண்மை சக்தி அதிகரிக்கும்.

உஷ்ணஸ்கலித பந்தனி

பருப்புக்கீரை விதைச் சூரணம் 12 கிராம், இஸ்பகோல் விதை, காஹூவிதைச் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், கொத்துமல்லிவிதைச் சூரணம் 6 கிராம்.

செய்முறை - இவற்றில் இஸ்பகோல் விதையை யிடிக்காமல், மற்றச் சூரணங்களுடன் ஒன்றாகக் கலந்துகொள்ள வேண்டும்.

மாத்திரை - 4 கிராம், வெறும் வயிற்றில் *கசகசா ஷர்பத்து 35 கிராம் சாப்பிட வேண்டும்.

உபயோகம்- உஷ்ணத்தா லுண்டான துரித ஸ்கலிதத்தை நிவர்த்தி செய்து, தாருட்டிய விர்த்தியையுண்டாக்குவதில் இது, ஒப்பற்றது; செலவோ அதிக சொற்பம்.

வேறு

மூங்கிலுப்பு, கசகசா, அனிஸூன், குந்திருக்கம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், உலர்த்தின சவுக்கங்காய்ச் சூரணம் 12 கிராம்.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவேண்டும்.

மாத்திரை- 8-35 கிராம் கசகசா ஷர்பத்துடன் சாப்பிட வேண்டும்.

உபயோகம் - துரிதஸ்கலிதத்தால் உண்டாம் தாருட்டிய நஷ்டம் தீர்ந்து, தாருட்டியவிர்த்தியும் ஆண்மை சக்தியும் அதிகரித்துண்டாகும்.

---

*கசகசா 350 கிராம், போஸ்துக்காய் 115 கிராம், இவ்விரண்டையும் உரலிற்போட்டு நன்றாயிடித்து உரத்த கம்பளியில் முடிந்து ஒரு பாத்திரத்திற் போட்டு, ஒருபடி சுத்தஜலத்தை அதில்வார்த்து அடுப்பேற்றிக் காய்ச்சும்போது, அதிலுள்ள சத்துவெளிப்படும்படி முடிச்சை நன்றாகக் கசக்கிச் சத்தெல்லாம் வெளிப்பட்டபின் இறக்கி முடிச்சைக் கசக்கி நன்றாகப்பிழிந்து சக்கைபோக்கி,வெளிப்பட்டசத்தை மறுபடியும் வேறு பாத்திரத்திலிட்டுக் காய்ச்ச, மேலே ஆடை படரும்.அவ்வாடை முறியும்போது கீழேயிறக்கி, கம்பளியால் வடித்துச் சக்கைபோக்கி, மீந்திருந்த சத்துக்குச் சமனெடை சீனிசருக்கரை சேர்த்துக் காய்ச்சி பதத்தில் இறக்கிக் கொள்வதே கசகசா ஷர்பத்தாம்.

தாதா மாஜூன்

குந்திருக்கம், பூமாதுளம்பூ, கஞ்சாவிதை, பாகப்படுத்தின சிலாசத்து இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8-10 கிராம், கெட்டித்தேன் 70 கிராம்.

செய்முறை- தேனைக்காய்ச்சி நுரைபோக்கிப் பாகு பதத்தில் அதில் சூரணங்களை யொன்றாகச் சேர்த்துத் தூவிக் கிண்டிக்கிளறி, மாஜூன் பாகப்படி செய்துகொள்ள வேண்டும்.

மாத்திரை - 6-8 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- மேற்சொல்லிய குணங்களுண்டாகும், ஆகாரத்துடன் பொரித்த இறைச்சியை அதிகம் சாப்பிட வேண்டும்.

தாடிமத்தாம மாஜூன்

பூமாதுளம்பூச் சூரணம் 70 கிராம், கருஞ்சீரகம், கொத்து மல்லிவிதை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம் பிளப்புச்சீரகம், கேக்குவிதை அல்லது ஷாஜீரா, ஓமம்இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், கற்கடகசிங்கி, சீமைநெல்லிமுள்ளி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், திராக்ஷரசபானம் 700 கிராம்.

செய்முறை - இவற்றில், திராக்ஷரச பானத்தைக் காய்ச்சி, பாகுபத்தில் சூரணங்களை யொன்றாகக் கலந்து தூவிக் கிண்டிக்கிளறி, மாஜூன் பாகப்படி செய்துகொள்ள வேண்டும்.

மாத்திரை- 9-10 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- துரித ஸ்கலிதத்தா லுண்டாம் தாருட்டிய நஷ்டந்தீரும். ஆகாரத்துடன் பொரித்த இறைச்சி சாப்பிடுவது யுத்தமம்.

தோகை தீக்ஷணாதி மாஜூன்

வால்மிளகு, லவங்கம், ஸாலாமிஸ்றி, உலர்த்தின பாக்குப் பிஞ்சு, சடாமாஞ்சில், றூமிமஸ்தகி, ஓமம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், கெட்டித்தேன் 350 கிராம்.

செய்முறை- இவற்றில், தேனைக்காய்ச்சி நுரை போக்கிப் பாகுபதத்தில் சூரணங்களை யொன்றாகக் கலந்து அதில் தூவி, மாஜூன் பாகப்படி செய்துகொள்ள வேண்டும்.

மாத்திரை - 8 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- மேற்கண்ட குணங்களுண்டாம்.

மண்டூரே கஸ்தூரி ஜவாரிஷ்

பாகப்படுத்தின கிட்டம் 610 கிராம், அல்லது பாகப்படுத்தின இரும்பு அரபொடி 310 கிராம், ஏலக்காய் கோஷ்டம், பெருலவங்கப்பட்டை, லவங்கம், தாளிசபத்திரி சூரத்துக் கடுக்காய்த்தோல், கடுக்காய்ப்பிஞ்சு, கொடி வேலி வேர்ப்பட்டை, சன்னராஷ்டம், நாகேசுரம், கரபஸ் ஓமம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 250 கிராம், தான்றிக்காய்த்தோல், சீமை நெல்லிமுள்ளி, ஓமம், சிவப்புத்தூதரி, வெள்ளைத் தூதரி, அரிசித்திப்பிலி, மேல்தோல் போக்கின எள்ளு, கோரைக்கிழங்கு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 16 கிராம், ஜாதிக்காய், சடாமாஞ்சில், மேல்தோல் போக்கின சுக்கு, கண்டத்திப்பிலி, இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், கஸ்தூரி 7 கிராம், அம்பர் 4 கிராம், பசுவின் நெய் 210 கிராம், காய்ச்சி நுரை போக்கிச் சுத்திசெய்த தேன் செல்லத் தகுமளவு.

செய்முறை- இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து நெய்வார்த்துப் பிசைந்து பசையுண்டாக்கி பின்பு தேன் வார்த்துப் பிசைந்து மத்தித்து லேகியம் போல செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 8 கிராம், காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின் தயிருடன் சாப்பிடலாம்.

உபயோகம்- துரிதஸ்கலிதத்தை நிறுத்தி, விந்து ஸ்தம்பனத்தை யுண்டாக்கி, ஆண்மை சத்தியையும், இரத்தச் சத்தையும் உண்டாக்கும், மூலவாயு, ரத்தமூலம் ஆகியவற்றையும் கண்டிக்கும்.

ஸ்தம்பன மாத்திரை

பவள பஸ்பம், வெள்ளரி விதைப்பருப்பு,கெக்கரி விதைப் பருப்பு, பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தின கஹறுபா, பருப்புக்கீரைவிதைச் சூரணம் சிறு நெருஞ்சிமுள் சூரணம், உலர்த்தின நெய்தற்கிழங்குச் சூரணம், இவை வகை ஒன்றுக்கு 13 கிராம், மூங்கிலுப்பு, வாதுமைப்பிசின், குச்சி, காம்பு நீக்கின ஜரிஷ்க் பேதானாவிதை, கொத்துமல்லிவிதை, புளிச்சக் கீரை விதை, பூங்காவி, வெண்சந்தனம், பூமாதுளம்பூ, கருவேலம்பிசின் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம்.

செய்முறை- இவற்றில் 55 கிராம், இஸ்பகோல் விதையை ஓர் ஆழாக்கு சுத்த ஜலத்தில் ஆறுமணி பரியந்தம் ஊறவிட்டு வடித்துச் சக்கைபோக்கிக் கோழை நீர் எடுத்துக் கொள்ள வேண்டும் முன் எல்லாச் சரக்குகளையும் கல்வத்திற் போட்டு மேற்படி கோழைநீர் வார்த்து இரண்டுசாமம் கைவிடாமலரைத்து ஓர் விராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 1 வீதம் சாப்பிடலாம்.

உபயோகம்-துரித ஸ்கலிதத்தா லுண்டாம் தாருட்டிய நஷ்டந் தீர்ந்து, ஆண்மையையும், இரத்தச்சத்தையும் உண்டாக்கும். சொட்டுமூத்திரம், இந்திரியவொழுக்கு, சிறுநீரிலிரத்தம் விழுதல் ஆகியவை தீரும்.

ஸ்தம்பன ரத்னாதி மாத்திரை

கஸ்தூரி குன்றியெடை 3, அம்பர் குன்றியெடை 4 பன்னீர் வார்த்து நாலுசாமம் அரைத்துலர்த்தின கஹறூபா, பன்னீர்வார்த்து நாலுசாமம் அரைத்துலர்த்தின நற்பவளம் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், மேல்தோல் போக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, நிஷாஸ்தா, அகருகட்டை பன்னீர்வார்த்து 24மணிநேரம் அரைத்துலர்த்தின தொளையிடாத நன்முத்து, பன்னீர்வார்த்து 24 மணிநேரம் அரைத்துலர்த்தினசெந்நீர்ப் பற்றுள்ள மாணிக்கம் இவை வகை ஒன்றுக்கு 3 கிராம், அதிமதுரப்பால், கருவேலம்பிசின், சீனிசருக்கரை, பனப்ஷாவேர்ச் சூரணம், அபினி இவை வகை ஒன்றுக்கு 6 கிராம்.

செய்முறை- இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டுப் பன்னீர்வார்த்து நாலுசாமம் நன்றாயரைத்துக் கடலைப்பிரமாண மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - 1 வீதம் சாப்பிடலாம்.

உபயோகம் - ராஜகருவிகளைப் பலப்படுத்தி; இரத்தச் சத்தையிறுக்கி சுபாவஸ்திதியிலாக்கி, துரிதஸ்கலிதம், இந்திரிய வொழுக்கு ஆகியவற்றைக் கண்டித்து, தாருட்டிய விர்த்தியையும் ஆண்மையையும் உண்டாக்கும். இரைப்பையைப் பலப்படுத்தி, ஜீரணசக்தியை அதிகப் படுத்தும், நீரேற்றம், கப இருமல் ஆகியவை தீரும்.

சதாநந்த நிர்விஷா மாத்திரை

நிர்பிஸிச் சூரணம், அபினி வகை ஒன்றுக்கு 4 கிராம், அம்பர், பனனீர்வார்த்து 12 மணிநேரம் அரைத்துலர்த்தின கஹறூபா, பனப்ஷாபூச் சூரணம், குங்குமப்பூச் சூர்ணம், சன்னலவங்கப்பட்டைச் சூரணம், ஜாதிக்காய்ச் சூரணம், றூமிமஸ்தகிச் சூரணம், கருவேலம்பிசினின் சூரணம், அகருகட்டைச் சூரணம்,பாகப்படுத்தின கோராப்பட்டு வெள்ளை பஹமன் சூரணம், அதிமதுரப்பால் இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், வெள்ளிரேக்கு 15 தங்கரேக்கு 10.

செய்முறை-இவை யெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு நன்றாயரைத்து கொஞ்சம் வாதுமை யெண்ணெய்வார்த்து மத்தித்துக் கடலைப்பிரமாணமான மாத்திரைகள்செய்து, ஒவ்வொன்றையும்

வெள்ளிரேக்கிற் பொதிந்து அதன்மேல் தங்கரேக்குச் சுற்றிப் பத்திரப்படுத்திக் கொள்ள வேணடும்.

மாத்திரை- 1 சாப்பிட்டு, அதன்மேல் காய்ச்சி பசுவின் பாலிற் கற்கண்டிட்டுக் குடிக்கலாம்.

உபயோகம்- ராஜகருவிகளைப் பலப்படுத்தி நரம்புகளுக்கு முறுக்கேற்றி, துரிதஸ்கலிதம், இந்திரியவொழுக்கு ஆகியவற்றைப் போக்கி, தாருட்டிய விர்த்தி ஆண்மைசக்தி முதலியவற்றை யுண்டாக்கும்.மனதிற்குக் களிப்பை யுண்டுபண்ணி, உற்சாகத்தைக் கொடுக்கும்.

கவனிப்பு

நிர்பிஸி என்பதற்கு ஜத்வார் என்றுபேர். இப்பேரே மருந்துக் கடைகளிலும் பிரபலமாய் வழங்குகின்றது. இது வடசீனத்திலிருந்தும் இமயகிரிக்கு அப்புறத்திலுள்ள தேசங்களிலிருந்தும் கொண்டுவரப் படுகின்றது, அப்படிக்கொண்டுவரப்பட்டதற்குச் சீமை ஜத்வார் என்று பேர், இதுவே ஔஷதங்களுக்கு ஏற்றது, இந்துதேசத்திலுண்டாவதற்கு நாட்டுஜத்வார் என்றுபேர், இது, ஓர்விதச் செடியின் கிழங்கு, இது உண்டாயிருக்கும் இடங்களில் நாபி முதலிய விஷபதார்த்தங்கள் உண்டாயிருந்தாலும், இதன் சக்தியால் அவற்றின் விஷத்தன்மை மாறிப்போம். ஆனது பற்றியே இதற்கு நிர்பிஸி; நிர்விஷா என்றும் பேர் வழங்கப்படுகின்றன, ஹைதிராபாக்கம், பம்பாய் முதலிய இடங்களில் இது, சகாயவிலைக்குக் கிடைக்கக் கூடியதாயினும், சென்னபட்டணம் முதலிய இடங்களில் கிடைப்பது அரிதாயும் விலையேற்றமாயும் இருக்கின்றது. சென்னபட்டணத்தில் ரூபாயெடை அஞ்சுமுதல் பத்து ரூபாவரையும் விற்கப்பட்டிருக்கின்றது. இது, இவ்விதம் விலையேற்றமாயிருக்கிறபடியால், சுபாவமான சரக்கிற்குப் பிரதியாகப் போலிச் சரக்கு விற்கப்படுகின்றது எப்படியெனில், மருந்துக்கடைக்காரர் செம்மரத்தை, சுபாவ ஜத்வார் ரூபமாய்ச்சீவி உளுக்காமலிருக்கும்படி கார்க்கிட்ட சீஷா எண்ணெயிட்டு கற்பித்து வைத்திருக்கிறார்கள், இது நாட்பட்டால், ருசி வர்ணம் முதலியவை பேதமாய், இன்ன தென்று பகுத்தறியக் கூடாமற் போகின்றது; இவர்கள் இப்படிச் செய்வதற்கு யாதொரு நிமித்தமுமில்லை; ஏனெனில் இது கைப்பான பதார்த்தமாகையால் எத்தனை நாளைக்கிருந்தாலும் புழுக்காது. கார்க்குள்ள புட்டியிற் பத்திரப்படுத்தி வைப்பதே போதுமானது. நரம்பாதிகளை முறுக்கேற்றிப் பலப்படுத்தித் தாருட்டியவிர்த்தி ஆண்மை சக்தி முதலியவற்றையுண்டாக்குவதில் இது மிகவும் சிறந்த ஓர்மருந்து. எட்டிக்கொட்டை முதலிய சில நரம்பைப் பலப்படுத்தி ஆண்மைசக்தியை யுண்டாக்கும் என்று மூவகை மருத்துவப்பண்டிதரால் நிச்சயிக்கப்பட்டிருந்தாலும் அவை அளவிற்கு அதிகப்பட்டாலும்,

அஜாக்கிரதையாய் உபயோகிக்கப்பட்டாலும் விஷக்குணத்தைக் காட்டி, அபாயத்திற்குட்படச் செய்யும் என்பது யாவரும் அறிந்த விஷயம், இதுவோ, அப்படி யாதொரு துற்குணத்தையும் தராமல் வேறு விஷங்களையும் முறிக்கும் அல்லாமலும் தேகத்திலுள்ள நரம்பாதிகளுக்கு முறுக்கேற்றித் தாருட்டியவிர்த்தி, ஆண்மை சக்தி முதலியவற்றை யுண்டாக்குவதிலும், இன்னும் பலவிதச் சுகுணங்களைக் கொடுப்பதிலும், சுறுசுறுப்பானதும், நம்பத்தகுந்ததுமான சிறந்த ஓர் உண்மையான மருந்து. இதற்குள்ள சிறந்த குணங்களைப் பதார்த்த குணக்களஞ்சியம் என்னும் பார்ஸிய பாஷையிலுள்ள கிரந்தங்களிற் காணலாம், ஆகையால் இவ்வருமையான மருந்தில் சுபாவ லக்ஷணங்களை உள்ளது உள்ளபடி இங்கு எழுதுவது நமக்கு அவசியமாயிற்று.

ஜத்வார், ஏழு அல்லது ஐந்து வகை யுண்டென்று சொல்லப்பட்டிருப்பினும், பெரும்பான்மையும் மூன்றே வகை தான் கிடைக்கப்படுகின்றன.

முதலாம் வகை:- உருவம், அரையங்குல முதல் ஒரு அங்குலம் நீளமுள்ளதாய்; கோரைக்கிழங்கைப்போல உள்துளையுள்ளதாய், தாமரைமுகிழ் போன்று கூம்பினதாயிருக்கும்;ஆனால், திரண்ட உருவமுடையதா யிராமல் சுருங்கித்திரைத்த மடிப்புகளை யுடைத்தாய், கரடு முரடாயிருக்கும், கத்தியாலும் லகுவாய்த் தறிக்க முடியாது.

வர்ணம், உள்ளும்புறமும் ஊதாவர்ணம் அல்லது இருண்ட ஊதா வர்ணமாயிருக்கும்.

சுவை- கலப்பற்ற சிறுகைப்பு; விறுவிறுப்பு, கரகரப்பு, உறைப்பு முதலியன சற்றும் இரா, சுவையும் மாறாது; உழுக்கவுமாட்டாது. இந்த லக்ஷணங்களை யுடையதற்குத்தான் சீமை ஜத்வார் என்றுபேர். இதுவே தாருட்டியவிர்த்தி ஔஷதத்திற்குச் சிறந்தது. பேர் போனது.

இரண்டாம் வகை :- உருவம், முன்னையதைப் போன்றதே. ஆனால், திரண்டவடிவுள்ளதும், சற்றேறக்குறையக் கரடு முரடில்லாததுமாய் குவிந்த வடிவுடையது.

வர்ணம்- உட்பக்கம் இருண்ட ஊதாவர்ணம் வெளிப்பக்கம், ஊதாவர்ணம்.

சுவை- நாபியைப்போலக் கலப்பற்ற சிறுகைப்பு; இதனைச் சிலர் ஜத்வார் வகையில் ஒன்றென்று சொன்னாலும், உருவத்திலும் நாபிக்கிழங்கை யொத்திருப்பதனால் கூடிய வரையும் நீக்கிவைப்பதே யுத்தமம்.

மூன்றாம் வகை:- உருவம் , ஒன்று ஒன்றேகால் அங்குலம் நீளமும், அடிப்பாகம், ஒன்று ஒன்றரை அங்குலம் அகலமும்,அதன் சுற்றளவு

இரண்டு அங்குலமும் உடையது. அது, சற்றேறக் குறையத் திரண்ட வடிவுடன் தாமரை முகிழ்போலிருக்கும். அதிலுள்ள சல்லிவேர்களில் கணுக்கள் வடுக்கள் ஆகியவை நிறைந்து, கரடுமுரடாயிருக்கும். கத்தியால் லகுவாய்த்தறிக்கலாம்.

வர்ணம்- உட்புறமும் வெளிப்புறமும் ஊதாவர்ணம்.

சுவை- கலப்பற்ற சிறு தித்திப்பு,இவ்வகை பழமையானால் கைப்பாவதும், புழுவிழுந்து உட்குவதும் சுபாவம்.

குற்சித மாஜூன்

கொட்டைநீக்கி யுலர்த்தியிடித்த சீமை நறுவிலிப்பழச் சூரணம், வெண்மையான கருவேலம்பிசின், பசுவின் நெய் இவை ஒன்றுக்கு 140 கிராம், கொட்டை நீக்கி யுலர்த்தி யிடித்த பேரீச்சங்காய்ச் சூரணம் 105 கிராம், பூனைக்காலி விதைப்பருப்புச் சூரணம் 20 கிராம், சீமைநீர்முள்ளிச் சூரணம், முள்ளிலவம்பிசின் சூரணம், பெருலவங்கப்பட்டைச் சூரணம், மேல்தோல் போக்கின தேங்காய், மேல்தோல் போக்கின சில்கூஜாப்பருப்பு, மேல்தோல் போக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, காறலில்லாத சாரப்பருப்பு, இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், கெட்டித்தேன் 1750 கிராம்.

செய்முறை- இவற்றில், நெய்யில் கருவேலம்பிசினை வறுத்துச் சூரணித்து, அதனுடன் மற்றச் சூரணங்களையு மொன்றாகக் கலந்து, பருப்பினங்களையும் அரைத்து அதிற் புரட்டி மிஸ்ரமித்து, தேனைக்காய்ச்சிப் பாகுபதத்தில் மேற்படி கலவையைத் தூவிக் கிண்டிக்கிளறி மாஜூன் பாகப்படி செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 18- 24 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- துரிதஸ்கலிதம் இந்திரிய இழிவு ஆகியவற்றை நீக்கி, தாருட்டிய விர்த்தி, ஆண்மை ஆகியவைகளை யுண்டாக்குவதில் இது மிகவும் சிறந்தது.

கரியுரியாதிச் சூரணம்

நிழலிலுலர்த்தி யிடித்த அத்திப்பட்டைச் சூரணம், நிழலிலுலர்த்தி யிடித்த ஒதியம்பட்டைச் சூரணம், நிழலிலுலர்த்தி யிடித்த அரசம்பட்டைச் சூரணம், புரசம்பிசின் சூரணம்,நிழலிலுலர்த்தியிடித்த கருவேலம்பிஞ்சுச் சூரணம், நிழலிலுலர்த்தியிடித்த இலந்தைப்பட்டைச் சூரணம் இவை வகை 1- க்கு 35 கிராம், பாகப்படுத்தின சிலாசத்து 20 கிராம், சீனாக்கற்கண்டுச் சூரணம் 125 கிராம்.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 35- 55 கிராம் சாப்பிட்டு, அதன்மேல் காய்ச்சின பசுவின்பாலிற் கற்கண்டிட்டுக் குடிக்க வேண்டும்.

உபயோடும்- துரிதஸ்கலிதம், இந்திரியவொழுக்கு பிரமேகம், சொட்டு மூத்திரம் முதலியவை தீர்ந்து, தாருட்டிய விர்த்தியுண்டாம்.

கண்ணியாதிச் சூரணம்

நிழலிலுலர்த்தின கருவேலங்கொழுந்து, நிழலிலுலர்த்தின இலந்தைக் கொழுந்து, நிழலிலுலர்த்தின முள்ளிலவம் பட்டை, பறங்கிச் சாம்பிராணி, றூமிமஸ்தகி, பூமாதுளம்பூ, கஞ்சாவிதை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம்.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை- 12 கிராம் சாப்பிட்டு அதன்மேல் காய்ச்சின பசுவின் பாலிற் கற்கண்டிட்டுக் குடிக்க வேண்டும்.

உபயோகம்- துரிதஸ்கலிதம், இந்திரியவொழுக்கு முதலியவை தீர்ந்து தாருட்டியவிர்த்தி ஆண்மை ஆகியவை யுண்டாம்.

ஆண் குறிகளைப் பற்றிய தாருட்டிய நஷ்ட சிகிச்சை

முதற்பாகத்திற் சொல்லப்பட்டிருக்கிறபடி, ஆண்குறிகளைப் பற்றியுண்டாம் தாருட்டிய நஷ்டம், எட்டுவிதத்தாலும் அவை சிறுத்தல், மெலிதல், தளர்தல், சுருங்கல், சோர்தல், ஸ்பரிச சலனங் குறைதல், கோணல், அடிசிறுத்து நுனிபருத்தல் ஆகிய இக்குணங்களால், பெரும்பாலும் துற்பலப்பட்டு, தாருட்டிய நஷ்டம் உண்டாகிறபடியால், உள்ளுறுப்புகளின் குறையை நிவர்த்தி செய்ய முயல்வதுடன், முக்கியமாய் இக்கருவிக்கு மேற்சிகிச்சை செய்ய வேண்டுவதும் அவசியம். உள்ளுறுப்புகளைப் பலப்பிக்கும் சிகிச்சைகள் முதற்பாகத்திலும், இவ்விரண்டாம் பாகத்திலும் இதற்குமுன்னும் அநேகம் சொல்லப்பட்டிருக்கின்றன; இனி மேலும் சொல்லப்படும்.

அவற்றுள்:- தங்கள் தங்கள் தேகசுபாவத்திற்கு ஏற்றவற்றையும், வியாதிகளுக்குத் தகுந்தவற்றையும் நிதானித்தறிந்து செய்வதுடன், மேற்கண்டபடி சிறுத்தல் முதலிய துற்குணங்களை நீக்கி, அதனைப் பலப்படுத்தும் முறைகளாகிய மேற்பூச்சுமருந்துகள், திலாக்கள், பட்டிகள், குழித்தயிலங்கள், சுடர்த்தயிலங்கள், ஒற்றிடங்கள் முதலிய

வற்றை முன்னேயெழுதி பின்னே அதற்குப் பலத்தைத் தரும் பாயாசங்கள், ஆகாரங்கள், ஹல்வாக்கள் முதலியவற்றையும் இங்கெழுதுகிறோம். இன்னும் முதற்பாகத்தின் அந்தந்தப் பிரிவுகளில் அந்தந்த வியாதியின் சிகிச்சையின் தலைப்பில் சொல்லியிருப்பது போலச் செய்வதுமன்றி, பின்காணப்படும் சிகிச்சைகளையும் செய்துவர வேண்டும்.

ஸ்தூல காரிகள்

அக்கராகாரம், லவங்கம், ஜாதிக்காய், சன்னலவங்கப் பட்டை, குங்குமப்பூ, சம்பங்கியெண்ணெய்கள், பூநாகம், அட்டை, ஜய்த்தூன் எண்ணெய், புலிக்கொழுப்பு, செம்மறியாட்டுக்கொழுப்பு, உடும்புக் கொழுப்பு, ஆகியவைகளும் இவை போன்றவைகளுமாம்.

ஆண்குறிகளைப் பலப்படுத்தும் உசித முறைகள்

வெள்ளாற்றலரிப்பூவை நல்லெண்ணெய் வார்த்தரைத்து துர்ப்பலப்பட்ட ஸ்தானங்களின் மேற் பூசிவர அவை பலப்படும்.

ஆற்றலரிவேர்ப் பட்டையைக் கைப்புப் பீர்க்கங்காய்ச்சாற்றில் அல்லது கழுதை முத்திரத்தில் அரைத்து துவண்டஸ்தானங்களின் மேற் பூசிவர அவை இறுகிப் பலப்படும்.

பூனைக்காலிவிதைப் பருப்புச் சூரணம் இருபது கிராம், * புதிய புலிக்கொழுப்பு 35 கிராம், கொழுப்பை யுருக்கி நீர் போலானவுடன் மேற்படி சூரணத்தைப் போட்டுக் கிண்டிக்கிளறி, பீங்கான் சிமிழில் அடைத்துக் கொண்டு சிறுத்த பாகங்களின் மேற்பூசிவர, அவை பருத்துப் பலப்படும்.

உறைந்த ஒட்டகப்பாலை, வெள்ளைப் பூண்டிடித்தரசம் வார்த்தரைத்து மேற்பூசிவர, நரம்புகளின் தளர்ச்சி நீங்கி அவை பலப்படும்.

**அகருகட்டையின் குழித்தயிலமும், உயர்ந்த ரோஜாப்பூ அத்தரும் கலந்து பலஹீனப்பட்ட விடங்களின் மேற்பூசிவர, அவை அதிக வலுவாகும். அவசியமான காலங்களில் உள்ளங்கையிற் பூசிக்கொள்வதனால் மனதிற்கு ஆனந்தத்தை தரும்.

பருத்திக்கொட்டைப் பருப்பு 10 கிராம் கல்வத்திலிட்டு 1 கிராம் அபினியை 42½மி. லிட்டர் நீரிலிட்டுக் கரைத்து அந்த நீர்வார்த்தரைத்து

* இது, பழையதானால் பிரயோஜனப் படமாட்டாது. வருஷத்திற்கு மேற்பட்டுப் போனால் சற்றும் பயன்படாது.

**இதன் முறை பின்னர் எழுதப்படும்.

வஸ்திரத்தில் தடவி நோயுற்ற ஸ்தானங்களின் மேற் சுற்றி வைக்கவேண்டும். இவ்விதம் நாள்தோறும் புதிது புதிதாய்ச்செய்து சுற்றிவர, முஷ்டிப்பிரயோகத்தால் தளர்ந்த நரம்புகள் முறுக்கேறிப் பலப்பட்டுச் சோர்வு நீங்கிச் சுபாவ ஸ்திதியில் நிலை பெறும்.

ஆணடைக்கலாங் குருவித்தலை மூளையில் சம்பங்கியெண்ணெய் சமனெடை வார்த்தரைத்து வியாதியுள்ள பாகங்களிலும், உள்ளங்கால்களிலும் பூசிவர, அங்குள்ள சோர்வு, தளர்ச்சி ஆகியவற்றைப் போக்கி விம்முதலை யுண்டாக்கி, ஆண்மையை யுண்டாக்கும்.

ஆணடைக்கலாங் குருவித் தலைமூளையில் அதற்குச் சமனெடை காட்டெள்ளெண்ணெய் வார்த்துச் சிவக்க வறுத்தெடுத்தரைத்து நோயுற்ற பாகங்களின் மேற் பூசிவைத்து மறு நாள் வெந்நீராற்கழுவி விடவேண்டும். இவ்விதம் சில கால மட்டும் தொடர்ச்சியாய்ச் செய்துவர, அவற்றின் சோர்வு, தளர்ச்சி முதலியவை நீங்கி, அவை பலப்படும்.

அராவினகாளைமாட்டின் சிசனப்பொடியில் வெள்ளைப் பூண்டிடித்த ரசம்வார்த்து நன்றாயரைத்து,நோயுற்ற ஸ்தானங்களிற் சிலகாலம் தடவிக்கொண்டு வருவதனால் அங்குள்ள நரம்புகளிலுள்ள கபநீர், விஷநீர் முதலியவை நீங்கி, அவை பலப்பட்டு உறுதியாம்.

இந்திர வீரிய லேபனம்

இந்திர கோபப்பூச்சி, ஜாதிப்பத்திரி, சன்னராஷ்டம், ஆலம்விழுது, ரூமிமஸ்தகி, லவங்கம், சன்னலவங்கப்பட்டை, நாமக்கோவைவேர் அல்லது சீமைக்கோவைவேர், அக்கராகாரம் இவை வகை ஒன்றுக்கு 24 கிராம், ஆணடைக்கலாங் குருவிக்கொழுப்பு, சேவற்கொழுப்பு, எருதுக்கொழுப்பு இவை வகை ஒன்றுக்கு 50 கிராம், பல்ஸான் எண்ணெய் 36 கிராம், நிஷாஸ்தா 18 கிராம், கஸ்தூரி, குங்குமப்பூ, நெரியரிசிப்பால், லவங்கப்பட்டைத் தயிலம், குங்கிலியம்,*பர்பயூன் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், அம்பர் 10 கிராம்.

---

*இது, கொத்துக்கொத்தாய் இலைகளுடன் முட்கள் நிறைந்த ஓர் செடியில் இருந்தெடுத்து உறையவைக்கும் ஒரு விதப்பால். இது ஹபஷா, சௌதான் முதலிய ராச்சியங்களிலிருந்து கொண்வரப்படுவது, இதை ஜய்த்தூன் எண்ணெய், ஜலம் இவற்றிலிட்டுக் காய்ச்சினாற் கரைந்து போம். இது லேசாயிருக்கும். வர்ணம்: மஞ்சள் சாயலான சாம்பல் வர்ணம், சுவை- விருவிருப்புள்ளது, மணம் காரமுள்ளது, பதில் தாருட்டிய விர்த்தி யௌஷதங்களில் உலர்த்தின திருகுகள்ளிப்பால், ஜுந்து. ஆனால் இதற்கு இரண்டு பங்கு.

செய்முறை- இவற்றில், இடிக்க வேண்டியவற்றை யிடித்துச் சூரணித்து, மற்றவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு நன்றாய் மெழுகுபோலரைத்துப் பீங்கான் சிமிழில் அடக்கிக்கொண்டு வினையுற்ற ஸ்தானங்களின் மேற்பூசி வரவேண்டும்.

உபயோகம் - அங்குள்ள நரம்புகளின் கபநீர்,விஷநீர், குளிர்ச்சி முதலியவற்றைப் போக்கி, சூட்டைக்கொடுத்து அவற்றைப் பலப்பித்து, தளர்ச்சி, சோர்வு, சுருங்கல் முதலியவற்றை நீக்கிப் பலப்படுத்தி, தாருட்டியவிர்த்தி, ஆண்மை ஆகியவற்றை யுண்டாக்கும்.

இங்குலிக லேபனம்

சாதிலிங்கம், தாளகம், பாதரசம், கமேலாமா அல்லது சீமையத்தி விடயம், அக்கராகாரம், திராக்ஷப்பழம், உரித்த ஒருதலை வெள்ளைப்பூண்டு, சன்னலவங்கப்பட்டை,எருதின் பித்துப்பை, அல்லது செம்மறியாட்டுப் பித்துப்பை இவை வகை ஒன்றுக்குச் சமனெடை.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் கல்வத்திற் போட்டு நன்றாகப் பொடித்தரைத்து,மேற்படி பித்தின் நீர் வார்த்து ஆறுசாமம் அரைத்து வெண்ணெய் போலான பின்பு, பீங்கான் சிமிழில் அல்லது மாட்டுக்கொம்புச் சிமிழில் அடக்கிப் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- இதில் சுமார் 2-3 கிராம் யெடுத்து ஜலம் வார்த்துக் குழைத்து நோயுள்ள ஸ்தானங்களின் மேற்பூசி வருவதினால், அங்குள்ள சோர்வு, தளர்ச்சி, விஷநீர் முதலியவை நீங்கி அவை பலப்படும்.

ஸ்தூல பலகாரி லேபனம்

சடாமாஞ்சில், சீமைக் காவிக்கல் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், உலர்த்தின எருமைப்பட்டை- 4, இதையும் சூரணித்துக் கொள்ள வேண்டும். பசுவின்பால், கெட்டித்தேன் இவ்விரண்டும் சமனெடையாகக் கலந்து வேண்டுமளவிற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இவற்றில் சூரணங்களை யொன்றாகக் கலந்து, அதில் அரைப்பாகம் அல்லது செல்லுமளவு எடுத்து, முன்னைய பால்தேன் கலவையிற் குழைத்து, சிறுத்துத் துர்ப்பலப்பட்ட பாகங்களில் இரவில் பூசிவைத்துக் காலையில் வெந்நீர்வார்த்து, அவை வசிக்கும்படி மெதுவாகவும் நன்றாகவும் தேய்த்துக் கழுவேண்டும். இப்படிச்சிலகாலம் செயற்துவர, அவை பருத்து உறுதியாய்ப் பலப்பட்டு, ஆண்மையைக் கொடுக்கும்; இதன் குணம் வெகுவிரைவில் புலப்படும்.

மஸ்தக லேபனம்

விலாங்கு அல்லது குறவை அல்லது வரால்மீன் தலை மூளை, சேவல் தலைமூளை, ஆண்புறாவின் தலைமூளை, மிஸ்றியபினி இவை வகை ஒன்றுக்கு 10 கிராம்.இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கல்வத்திலிட்டு வெண்ணெய் போலரைத்துக் கொம்புச்சிமிழி லடைத்துக் கொண்டு நோயுள்ள ஸ்தானங்களின் மேற் பூசிவர வேண்டும். இது, நாட்பட்டிருந்தால் துற்கந்தமுண்டாய், பதங்கெடும். ஆகையால், மேற்கண்டவைகளில் வகை ஒன்றுக்கு 1-கிராம் எடுத்து அரைத்து அன்றாடம் பூசி வருவது உத்தமம்.

உபயோகம்- அங்குள்ள சோர்வு, தளர்ச்சி முதலியவை நீங்கி, பலமும் புஷ்டியும் உண்டாம்.

காஞ்சிர லேபனம்

எட்டிக்கொட்டை, மல்லிகையிலைச்சாறு, மனோசிலை, மருக்காளங்காய் அல்லது உலர்ந்த தேற்றாம்பழம் இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், சம்பங்கியெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் 22 கிராம், இவற்றில் சரக்குகளைக் கல்வத்திலிட்டு நன்றாய்ப் பொடித்துத் தூள் செய்து, சாற்றையும் எண்ணெயையும் வார்த்து அரைத்துச் சிமிழில் வைத்துக் கொள்ள வேண்டும்.

உபயோகம் - வியாதியுற்ற ஸ்தானங்களில் இதனைப் பூசிவருவதனால் அங்குள்ள தளர்ச்சி, சோர்வு முதலியவை யொழிந்து, அங்குள்ள நரம்புகள் பலப்பட்டு உறுதியாய், ஆண்மை அதிகரிக்கும்.

இலகு பூவாதி லேபனம்

இந்திரகோபம், பூநாகம், அக்கராகாரம், லவங்கப்பட்டை, லவங்கம் இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், எருமைப்பால், ஆமணக்கெண்ணெய் இவை வகை ஒன்றுக்கு 80 கிராம், இவற்றில் சரக்குகளைக் கல்வத்திலிட்டுப்பொடித்துச் சூரணித்து, பாலையும் எண்ணெயையும் கலந்து, அதில் கொஞ்சம் கொஞ்சமாய் வார்த்து, 9 மணி நேரம் நன்றாக அரைத்துச் சிமிழில் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- இதை வியாதியுற்ற பாகங்களின் மேற் பூசிவருவதனால் அங்குள்ள சோர்வு, தளர்ச்சிமுதலியவை நீங்கிப் பலப்படும்.

இலகு ஜலூல லேபனம்

அட்டை 9, நல்லெண்ணெய் 60 கிராம், பூனைக் காலிவிதைச் சூரணம், அடைக்கலாங்குருவி யெச்சச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம் றூமிமஸ்தகிச் சூரணம், செங்குன்றிமணிப் பருப்புச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 72 கிராம்.

செய்முறை- இவற்றில் நல்லெண்ணெயைக் காய்ச்சி, அதில் அட்டைகளை யிட்டுச் சிவக்கப் பொரிக்க வேண்டும். பொரிக்கும்போது அதன் புகையானது, கண் முதலிய தேகவுறுப்புகளில் படவொட்டாமல் அதிஜாக்கிரதையாயிருக்க வேண்டும். பொரித்தெடுத்த அட்டைகளையும், குருவியெச்சந் தவிர மற்ற சூரணங்களையும் கல்வத்திலிட்டு நன்றாயரைத்துக் கடைசியில் எச்சச் சூரணத்தையும் போட்டுக் கலந்து, பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- இதனை ஒருவாரம் காலை மாலையிரு வேளையும் வியாதியுள்ள பாகங்களின் மீது பூசிவர முஷ்டிப்பிரயோகத்தால் உண்டாம் தளர்ச்சி, சோர்வு, கோணல் முதலியவை தீர்ந்து பலத்திறுகி வளர்ந்து ஆண்மைக்கு யோக்கியமாயிருக்கும்.

வேறு

இந்திரகோபம், பூநாகம், வெண்காரம், நாவி, வெண்குன்றிப்பருப்பு, எருக்கம்பால் இவை வகை ஒன்றுக்கு 72 கிராம், நல்லெண்ணெய் 105 இவற்றில் சரக்குகளையெல்லாம் கல்வத்திற்போட்டு நன்றாகப் பொடித்துச் சூரணித்து, நல்லெண்ணெயைச் சிறுகச் சிறுகவிட்டு 12 மணிநேரம் அரைத்து, வெண்ணெய் போலான பின் சிமிழிலடைத்துப் பூசி வரவேண்டும்.

உபயோகம் - மேற்கண்ட குணங்களுண்டாம்.

பர்பயூன் லேபனம்

பர்பயூன், கஸ்தூரி, அக்கராகாரம் இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், நிலச்சம்பங்கியெண்ணெய், கொடிச் சம்பங்கி யெண்ணெய் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம்.

செய்முறை- இச்சரக்குகளெல்லாவற்றையும் கல்வத்திலிட்டுப் பொடித்து நன்றாயரைத்து எண்ணெய்களையும் கலந்து,வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ள வேண்டும்

உபயோகம்- வியாதியுள்ள பாகங்களின் மேல்பூசிவர, அங்குள்ள தளர்ச்சி. சோர்வு ஆகியவை நீங்கி, அவை இறுகிப் பலப்பட்டு உறுதியாம்.

சூக்ஷும பூவாதி தயிலம்

உலர்த்தின பூநாகம் 70 கிராம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி இவை வகை ஒன்றுக்கு 4 கிராம்.

செய்முறை - இவை யெல்லாவற்றையும் தனித்தனி நையச்சிதைத்து ஒன்றாகக் கலந்து வாயகன்ற ஓர்மண்பாத்திரத்திற்குக் கெட்டியான மெல்லிய வஸ்திரத்தால் வேடுகட்டி, அதன்மேல் மேற்படி சரக்குகளை வைத்து மேலே அப்பிரேகத்தகடிட்டு, அதன்மேல் கரிநெருப்புப் போட்டுவீசத் தைலம் இறங்கும், அதனைச் சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- இதனை வியாதியுள்ள பாகங்களிற்பூசிவர, அங்குள்ள நரம்புகள் பலப்பட்டு, ஆண்மை அதிகரிக்கும்.

கச்சப்பிரசண்ட லேபன மாத்திரை

வெள்ளரிவேர்ப் பட்டையை நிழலிலுலர்த்தியிடித்து வஸ்திரகாயஞ்செய்த தூள் 35 கிராம், போஸ்துக்காய் 175 கிராம், கசகசா 175 கிராம்.

செய்முறை - இவற்றில், பின்சொன்ன இரண்டையும் சேர்த்திடித்து ஓர்படி ஜலத்திற்போட்டு ஓரிரவுவைத்து காலையில் நன்றாகப் பிசைந்து வடித்துச் சக்கை நீக்கி வெய்யிலில் வைத்து, முக்கால் வாசி சுண்டினபின் மற்றச் சூரணங்களையும் சேர்த்து வெய்யிலில் வைத்து, திரள்பதத்தில் இலந்தைப்பழப் பிரமாணம் மாத்திரைகள் செய்து, நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும்.

உபயோகம் - இவற்றில் தடவை யொன்றுக்கு ஒரு மாத்திரை, சாராயத்தில் அல்லது ஜலத்தில் இழைத்து, ஆண்ஜனன இந்திரிய முக்கிய கருவியின் நுண்ணிய பாகந்தவிர மற்ற பாகங்களிற் பூசிவர அவை நீண்டு புருந்து இறுகிப் பலப்பட்டு ஆண் தன்மையையதிகரிக்கும்.

பிபீலிகை பாலிதா லேபனத் தைலம்

சிறகுள்ள பச்சை வர்ணமான கட்டெறும்பு 60 கிராம், கூட்டிற்பிடித்த செங்குளவி 50 கிராம், சம்பங்கியெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் 350 கிராம்.

செய்முறை - இவற்றில் எண்ணெயை ஒரு சீஷாவில் வார்த்து அதில் மேற்படி ஜெந்துவையும் போட்டுக் கல்லுக்கார்க்கால் வாய்மூடி மண்சீலை செய்து நாற்பதுநாள் கடும் வெயிலில் வைத்து எடுத்து வடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- அவசியமான பாகங்களின் மீது முறையாகப் பூசிவருவதனால் முஷ்டிப் பிரயோகத்தால் நேரிட்ட சோர்வு, தளர்ச்சி, மெலிவு ஆகியவை தீர்த்து அவை பலப்பட்டு விம்மித்திமிர்ந்து பருத்து உறுதியாய் ஆண்மையதிகரிக்கும். அவசியமான காலங்களில் இதனை உள்ளங்கைகளிற் பூசிக்கொள்வதனால் இன்பம் ஆண்தன்மை முதலியவையுண்டாம்.

ஆங்கிலேய இங்கித லேபனம்

பெருங்கருங்குளவி 40, பெருங் கருந்தேள் 7, கழுதையின் பீசத்திற் கடிக்கவிட்டு அதன் இரத்தத்தை நிறையக்குடித்த அட்டை1 சம்பங்கியெண்ணெய் 1500 கிராம், ஜாதிக்காய், ஸாலாமிஸ்றி இவற்றின் சூரணம் 4 கிராம்.

செய்முறை - இரும்பு அல்லது தாம்பூரச்சட்டியில் மேற்படி எண்ணெயை வார்த்துக் காய்ச்சி முன்மூன்று வஸ்துக்களையும் போட்டுச் சிவக்கவறுத்து இறக்கி வடிகட்டிப் பின்குறித்த இரண்டு சூரணத்தையும் தூவிக்கலந்து சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- இதனை வியாதியுள்ள பாகங்களின் மேற்பூசிவர; அவற்றின் கோணலை நிமிர்த்து நேராக்கி அவற்றைப் பருமனாக்கி, கெட்டிப்படுத்திப் பலப்பிக்கும்.

மைன லேபன திராவகம்

கலப்பற்ற மஞ்சள் மெழுகு 840 கிராம், கழுவின ஆற்றுமணல் 60 கிராம், பாதரசம், சாதிலிங்கம், எட்டிக் கொட்டைச் சூரணம், வெண்ணாவிச் சூரணம் இவை வகை ஒன்றுக்க 12 கிராம்.

செய்முறை - ரசம், லிங்கம் இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்த்தரைத்து, அதில் இரண்டு சூரணத்தையும் கலந்தரைத்து, மெழுகையும் கொஞ்சங் கொஞ்சமாயிட்டரைத்து உப்பையும் மணலையும் கலந்தரைத்து ஓர் உருண்டையாக்கி வாலையிலிட்டுத் திராவகம் வடித்துக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதனை வியாதியுள்ள பாகங்களின் மேற் பூசிவர, முஷ்டிப்பிரயோகத்தாலும், பக்ஷவாயு சம்பந்தத்தாலும் உண்டான தளர்ச்சி, கோணல் முதலியவை தீர்ந்து, அவை நிமிர்ந்து பலத்து ஆண் தன்மை யுண்டாம்.

பட்டிமுறைகள்

இராஜ புத்ரியாங்கப் பட்டி

மேல்தோல் போக்கின பேய்ச்சுரைக்காயின் சதையுடன் சேர்ந்த குடல்விதை முதலியவை 35 கிராம், கருநாபிச் சூரணம் 18 கிராம், வெள்ளைக் குன்றிமணிப் பருப்பை ஜலம்வார்த்தரைத்த சந்தனம்,அக்கராகாரச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், உலர்த்தின தேற்றாம்பழச் சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 25 கிராம்.

செய்முறை - இவையெல்லாவற்றையும் கல்வத்திற் போட்டுப் பசுவின் நெய்வார்த்து, மூன்று நாளரைத்துப் பீங்கான் சிமிழிற் பத்திரப்படுத்தவேண்டும்.

உபயோகம் - இதனை யிரண்டு குன்றிமணியெடை யெடுத்து வியாதியுள்ள பாகங்களின் மேற்பூசி, அதன்மேல் கர்ப்பூரவள்ளி வெற்றிலையைச் சுற்றி நூலாற்கட்ட வேண்டும். காலையில் அவிழ்த்து வெந்நீர்விட்டுக் கழுவி மறுபடியும் முன்போல செய்யவேண்டும். இவ்விதம் ஒரு வாரம் அல்லது பத்து நாள் வரையும் செய்து வரவேண்டும். முஷ்டிப்பிரயோகத்தால் உண்டான தளர்ச்சி முதலியவை தீர்ந்து,ஆண்தன்மை அதிகரித்துண்டாம்.

குறிப்பு

இதனை எவ்வளவாய் அரைக்கிறோமோ அவ்வளவு பலனைத்தரும்.

வச்ரகண்ட காமஞ்சுப் பிரயோகப் பட்டி

ஒருசாண் அகலம் ஒருசாண் நீளம் உள்ள மெல்லிய வஸ்திரத்துண்டை, மஞ்சளையரைத்துக் கலக்கிய ஜலத்தில் நனைத்து நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும். அது நன்றாயுலர்ந்தபின், அதைப் புதிதாயரைத்துக் கரைத்த மஞ்சள் ஜலத்தில் முன்போல நனைத்துலர்த்த வேண்டும். இவ்விதம் ஏழுதடவை செய்தபின், திருகுகள்ளிப்பாலை அந்தவஸ்திரத்தில் நன்றாய் ஊட்டியுலர்த்தி, வெள்ளாட்டுப் பாலில் நனைத்து உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இந்த வஸ்திரத்தை அவசியமான ஸ்தானங்களின் மேற்சுற்றிக் கட்டிவைத்து, எரிவந்தம் கண்டவுடன் அவிழ்த்துவிடவேண்டும். மூன்று மணிநேரம் சென்றபின் மறுபடியும்

கட்டவேண்டும். எரிவந்தம் கண்டவுடன் அவிழ்த்து விடவேண்டும். இவ்விதம் நாளொன்றிற்கு வியாதிக்கு ஏற்றபடி ஒன்று முதல் அஞ்சுதடவையாக 3,5,7,9 நாள் செய்து வர அங்குள்ள விஷநீர், கபநீர் முதலியவை வரண்டு நீங்கி நல்லிரத்த வோட்டமுண்டாய், நரம்புகள் பலமடைந்து ஆண்தன்மை அதிகரிக்கும்.

ஆநந்த ஜீவாமணிப்பட்டி

லவங்கச் சூரணம் 24 கிராம், உலர்த்தின பாக்குப்பூ, பெருலவங்கப்பட்டை, மைதாலக்கட்டி, மஞ்சள் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், பாதரசம், சாதிலிங்கம், நேர்வாளப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், மஞ்சள் மெழுகு 2 கிராம், பசுவின் நெய் 25 கிராம்.

செய்முறை- இந்நான்கு சூரணங்களையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கலந்து, வேறே வைத்துக்கொள்ள வேண்டும். நெய்யையும் மெழுகையும் ஓர்இரும்புக் கரண்டியிலிட்டுக் காய்ச்சி, மெழுகு நன்றாய் உருகினபின் பாதரச முதலிய மூன்று சரக்கையும் பொடித்துப் போட்டுக் கீழிறக்கி, கல்வத்திற்போட்டு நன்றாயரைத்துப் பத்திரப்படுத்தவேண்டும்.

உபயோகம்- முன்சூரணத்தில் அரைத் துலாம் எடுத்துப் பட்டைச் சாராயத்திற் குழைத்து நெருப்பிற் சற்று கொதிக்க வைத்து வியாதியுள்ள பாகங்களின் மேற்பூசி, ஒருநாள் விட்டுவிட வேண்டும். மறுநாள் மேற்படி மெழுகில் வேண்டிய அளவு எடுத்து கர்ப்பூரவள்ளி வெற்றிலையில் தடவி நெருப்பிற்காய்ச்ச நெய்புறப்படும். அந்த நெய்யை மாத்திரம் நீக்கி முன் பாகங்களின் மேற் சுற்றிக் கட்டிவைக்க வேண்டும். காலையிற் கட்டின கட்டை மாலையில் அவிழ்த்தெறிந்துவிட்டு, முன்போற் செய்த வேறொரு பட்டியைக் கட்டிவைத்து, மறுநாள் அவிழ்த்துவிட வேண்டும். இவ்விதம் அவசியமாம் வரையும் கட்டிவர வேண்டும். மத்தியில் கொப்பளங்கள் கண்டால், நிறுத்திவிட வேண்டும். தளர்ச்சி, சோர்வு, மெலிவு முதலியவை தீர்ந்து, அங்குள்ள நரம்புகள் முறுக்கேறிப் பலப்பட்டுப் பெருத்து, நீண்டு, ஆண் தன்மையுண்டாம்.

சதாபுஷ்பி க்ஷீரப்பட்டி

எருக்கம்பால் 60 கிராம், பசுவின் நெய் 140 கிராம், அக்கராகாரம், ரசசெந்தூரம், முதல்தரமான கருநாவி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம்.

செய்முறை- இவையெல்லாவற்றையும் ஒரு செப்புப்பாத்திரத்திற் போட்டு வேப்பங்கட்டையால் மத்துச்செய்து, அதன் அடியில் அரையணாக் கனமுள்ள செப்புத்தகட்டைப் பதித்து, நான்குசாமம் கைவிடாமற் கடைந்து அப்படியே நாலைந்து நாள்விட்டு வைத்துப் பிற்பாடு வழித்தெடுத்துப் பீங்கான் சிமிழிற் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும்.

உபயோகம் - இதில் நான்கு குன்றியெடை யெடுத்து அவசியமான பாகங்களின் மேற்பூசி, கர்ப்பூர வள்ளி வெற்றிலையைச் சுற்றிக்கட்ட வேண்டும். அதைக் காலையில் எடுத்துவிட்டு வெந்நீர் வார்த்துக் கழுவவேண்டும். இரவிலும் முன்போல கட்டிக்கொள்ள வேண்டும். இவ்விதம் வியாதி நீங்குந்தனையும் கட்டிக் கொண்டுவர, முன் கண்ட குணங்களுண்டாம்.

மஹா வீரியப்பட்டி

காட்டு லவங்கச் சூரணம், உலர்த்தின வெள்ளலரி வேர்ப்பட்டைச் சூரணம், ஜலம் வார்த்திழைத்த குன்றிமணிப் பருப்புச் சந்தனம், ஜலம்வார்த்திழைத்துலர்த்தின எட்டிக்கொட்டைச் சந்தனம், இந்திரகோபப் பூச்சிச் சூரணம், வெண்ணாவிச் சூரணம், வெள்ளைப்பாஷாணப் பொடி, ஜாதிக்காய்ச் சூரணம், லவங்கப்பட்டைச் சூரணம், அபினி, பெருலவங்கப்பட்டைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 3 கிராம்.

செய்முறை - இவையெல்லாவற்றையும் கல்வத்திற் போட்டு, எட்டுச்சாமம் அரைத்துச் சிமிழில் வைத்துக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதனைக் கொஞ்சம் எடுத்துப் பிளாஸ்டர் போல் ஒரு வஸ்திரத்தில் தடவி, ஆண்ஜனன இந்திரிய முக்கிய கருவியின் நுண்ணியபாகந் தவிர மற்ற பாகத்திற் சுற்றிக்கட்டி வைக்கவேண்டும். மாலையிற் கட்டிக் காலையிற் அவிழ்த்து விடவேண்டும். இவ்விதம் ஒருவாரம் செய்துவர வேண்டும். முஷ்டிப் பிரயோகத்தால் மெலிந்து தளர்ந்து சோர்வுற்று, யாதொரு சிகிச்சையாலும் குணப் படாமலிருந்தாலும், இதனால் தடையின்றிக் குணப்படும்.

குறிப்பு

இம்மருந்தை உபயோகிக்கும்போது சிலர்க்குக் கொப்பளங்களும் காண்பதுண்டு. அப்பொழுது *வெள்ளைக் காய்ச்சுக் கட்டி, மிருதார்சிங்கி,

* இது பெரும்பாலும் ஹைதிராபாக்கத்திலிருந்து கொண்டுவரப் படுகிறபடியால், இதற்குப்பேர் ஹைதிரா பாக்கத்துக் காய்ச்சுக்கட்டி யென்று வழங்குகின்றது.

சுட்டபாக்குக்கரி, சாதிலிங்கம் இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், பசுவின் வெண்ணெய் 20 கிராம் (வெண்ணெயை நூறு தடவை ஜலம் வார்த்துக் கழுவிக்கொள்ள வேண்டும்) சரக்குகளைக் கல்வத்திற்போட்டு நன்றாகப் பொடித்து வெண்ணெய்சேர்த்துநன்றாயரைத்து வைத்துக் கொண்டு, கொப்புளங்களின் மேற்பூசி வரவேண்டும். அவை ஆறினவுடன் நிறுத்தி விட வேண்டும்.

பலாண்டுகு ஜீவாப்பட்டி

வெங்காயச்சாறு, பூண்டுச்சாறு,இஞ்சிச்சாறு, கெட்டித்தேன், பாதரசம் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், இவற்றை ஒரு பீங்கானிற் போட்டு விரற்களால் ஒருநாள் வரையும் மத்தித்து ஒரு வஸ்திரத்தில் தடவி வியாதியுள்ள பாகங்களின் மேற்சுற்றி, அதன்மேல் கர்ப்பூர வள்ளி வெற்றிலை சுற்றிப் பட்டிக் கட்டவேண்டும் இவ்விதம் அன்றாடம் புதிதாகச் செய்து, மூன்றுபட்டி கட்டவேண்டும்.

உபயோகம் - அங்குள்ள சோர்வு தளர்ச்சி நீங்கி, அவை பலப்பட்டுறுதியாம்.

துவாகர வீரப்பட்டி

வெள்ளலரிவேர்ப்பட்டை, செவ்வலரிவேர்ப்பட்டை, இவற்றையுலர்த்தியிடித்த சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், தைலமுள்ள ஜாதிக்காய் 10கிராம், அபினி 9 கிராம், முதலைக்கொழுப்பு அல்லது உடும்புக் கொழுப்பு 25 கிராம், கருவூமத்தையிலைச் சாறு தேவையான அளவு.

செய்முறை- இவையெல்லாவற்றையும் கல்வத்திற் போட்டு, சுமார் நான்குசாமம் நன்றாயரைத்து, பின்பு மேற்படி யிலைச்சாறு வார்த்து நான்குசாமம் அரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

உபயோகம் - காரமான சாராயத்தில் மேற்படி மாத்திரையை யிழைத்து, ஆண்ஜனன இந்திரிய முக்கிய கருவிகளின் நுண்ணியபாகம், தையல்கள் இவை தவிர, அவற்றின் மற்ற பாகத்திற் பூசி, வெற்றிலை சுற்றிப் பட்டி கட்ட வேண்டும். இப்படிக்கட்டி, மறுநாள் அவிழ்த்துவிட வேண்டும். இவ்விதம் இரண்டு வாரம் அல்லது இருபது நாள் கட்டி வரவேண்டும். முஷ்டி மைதுனத்தினாலுண்டான பிரதான அங்கச்சோர்வு, தளர்ச்சி முதலியவை நீங்கி, ஆண்மை யதிகரித்து அதில் நிர்வாக சக்தியுண்டாம்.

சுகாநந்தகர வீரப்பட்டி

உலர்த்தின வெள்ளலரி வேர்ப்பட்டைச் சூரணம் வெள்ளைக் குன்றிமணிப் பருப்பினமா வகை ஒன்றுக்கு நூறு கிராம், கோஷ்டச் சூரணம், நேர்வாளப் பருப்புத் தூள் வகை ஒன்றுக்கு இருபத்தைந்துகிராம், எருமைப்பால் படி எட்டு.

செய்முறை- சரக்குகளைக் கலந்தரைத்து, பாலிற் கலக்கிக் காய்ச்சி, பிரைகுற்றி வைத்து, காலையில் அதில்இரண்டுபடி சுத்தஜலம் வார்த்துக் கடைந்து வெண்ணெ யெடுத்து நெய்யுருக்கி, புட்டியில் பத்திரப்படுத்த வேண்டும் இவ்விதஞ் செய்தெடுத்த தயிர் மோர் ஆகிய கொடிய விஷமாகையால், அவற்றை அறவே விலக்கிவிட வேண்டும்.

உபயோகம்- இதன் நெய்யில் குன்றியெடை யெடுத்து வெற்றிலையில் தடவித் தின்ன வேண்டும். காலையில் ஒருவேளை மாத்திரமே: அன்றியும் வியாதியுள்ள பாகங்களின் மீதும் பூசி வெற்றிலை சுற்றிக்கட்ட வேண்டும்.இவ்வாறு ஒருவாரம் செய்ய, அவை சோர்ந்து தளர்த்து அநுபவிக்க நிர்வாகமில்லாமலிருப்பவர்களும் சர்வ வல்ல கடவுள் கிருபையால், அத்துர்க்குணங்கள் நீங்கி, அவை சுபாவஸ்திதியிலாய், ஆண்மை நிர்வாகிகளாவார்கள்.

போகாதி பாகப்பட்டி

தவளைக் கொழுப்பு குன்றியெடை 2,கடல்நுரை, சமுத்திராப்பழம், மிஸ்றி யபினி இவை வகை ஒன்றுக்கு குன்றியெடை4 பாதரசம், லவங்கப்பட்டைச் சூரணம் வகை ஒன்றுக்கு குன்றியெடை 5. கெட்டித்தேன் தேவையான அளவு.

செய்முறை - முன்னைய நான்கு வஸ்துக்களையும் கல்வத்திற் போட்டு, மேற்படி தேன்வார்த்து இரண்டு சாமம் நன்றாயரைத்து, பின்பு ரசத்தையும் லவங்கப்பட்டைச் சூரணத்தையும் கலந்து, அதிலும் தேன் வார்த்து இரண்டு சாமம் அரைத்து வழித்தெடுத்துப் பீங்கான் சிமிழில் அடக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

உபயோகம் - இதில் தினம் ஒன்றுக்கு நான்கு குன்றியெடை யெடுத்து வியாதியுள்ள பாகங்களின் மேற்பூசி. வெற்றிலைசுற்றி பட்டிகட்டவேண்டும். இவ்விதம் ஐந்து தினம் அல்லது ஒருவாரம் செய்ய முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாகப்பட்ட தளர்ச்சி முதலியவை தீர்ந்து, ஆண்மை யுண்டாம்.

மண்டலாதி பட்டி

செம்மண் பூநாகம் விலாங்குமீன் கொழுப்பு இவை வகை ஒன்றுக்கு 60 கிராம், அராவின யானைத்தந்தப்பொடி, நையச்சிதைத்த குதிரைக்காற் குளம்புச்சூரணம், புலிக்கொழுப்பு இவை வகை ஒன்றுக்கு 24 கிராம், இந்திரகோபப்பூச்சி 12 கிராம், எருமையட்டை 3 கிராம், லவங்கம், அக்கராகாரம், லவங்கப்பட்டை, ஜாதிக்காய் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 3 கிராம் , கஸ்தூரி 1 கிராம்.

செய்முறை- முன்குறித்த ஏழு வஸ்துக்களையும் சீஷாவிற்போட்டு பாகப்படி குழித்தயிலமிறக்கி அதில் பின் குறித்த நான்கு சூரணத்தையும் தூவிக்கலந்து கஸ்தூரியையும் பொடித்து சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம் : இதில், நாள்தோறும் 1-2 கிராம், வியாதியுள்ள பாகங்களின் மேற்பூசி, ஆமணக்கிலை வைத்துக் கட்டவேண்டும். இவ்விதம் மூன்றுவாரம் செய்து வர, அங்குள்ள வளைவு, சுருக்கம், தளர்ச்சி முதலியவை தீர்ந்து, நரம்புகள் பலமடைந்து பருத்துவிம்மி, ஆண்மை யுண்டாம்.

இராஜயோகப்பட்டி

அரிசித்திப்பிலி 10, ஓர் பழுத்த கத்திரிப்பழத்துக்குட் செலுத்தி அதனை உலர்த்திக் கொள்ள வேண்டும், நல்லெண்ணெய் 390 கிராம், பூநாகம் 100 கிராம், ஒரு தலைப்பூண்டு 35 கிராம்.

செய்முறை:- எண்ணெயை ஒரு பாத்திரத்தில் வார்த்து, கரிநெருப்பின்மேல் வைத்துக் காய்ச்சி, மேற்படி கத்திரிப்பழத்தைப் போட்டு, வெந்த பக்குவத்தில் பூ நாகத்தைப் போட்டு அது சிவந்த பதத்தில் பூண்டை நசுக்கியிட்டு, நன்றாக மிஸ்ரமித்து ஒன்றாகக் கலந்து, சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- இதில் 1-2 கிராம் , நாளொன்றிற்கு ஒருமுறை அவசியமான பாகங்களின் மேற்பூசி ஆமணக்கிலை அல்லது ஆலிலை வைத்துக்கட்ட முஷ்டிப் பிரயோகத்தினா லுண்டான சோர்வு, தளர்ச்சி, கோணல் முதலியவை தீரும். இது ஆண்மையைக் கொடுப்பதில், சஞ்சீவிக்கு ஒப்பானது.

காருறவி பைரவிப் பட்டி

அதிகக் கருமையானதும், இடுகாட்டில் உள்ளதுமான பெருங்கட்டெறும்பு பத்து, ஜய்தூன் எண்ணெய் (Olive Oil) பருத்திக் கொட்டை யெண்ணெய், நல்லெண்ணெய் இவை வகை ஒன்றுக்கு

இருபது கிராம் அல்லது இம்மூன்றில் ஒன்று ஐம்பது கிராம், கார்க்குள்ள சீஷாவில் எண்ணெய்களை அல்லது எண்ணெயை வார்த்து அதில் மேற்படி எறும்புகளைப் போட்டு, கடும் வெய்யிலில் ஒருவாரம் வைத்து எடுத்து வடிகட்டிச் சீஷாவில் அடக்கிப் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- இதில், தினம் கொஞ்சம் எடுத்து அவசியமான பாகங்களின் மேல் பூசி, சிற்றாமணக்கிலை வைத்துக் கட்டவேண்டும். தீராதென்று கைவிடப்பட்ட பிரதான அங்கச்சோர்வு, தளர்ச்சி, மெலிவு ஆகியவை தீர்ந்து நரம்புகள் முறுக்கேறிப் பலப்பட்டு,விம்மலும் எழுச்சியுமுண்டாம், ஆண்மையும் வீரிய விர்த்தியும் உண்டாம்.

மின்மினிப்பட்டித் தைலம்

மின்மினிப்பூச்சி 210 கிராம், செம்மண்ணிலுள்ள பூ நாகம், அட்டை இவை வகை ஒன்றுக்கு 105 கிராம், வெண்குன்றிமணிப் பருப்பு 35 கிராம், எருக்கம்பால் 175 கிராம்.

செய்முறை :- இவை யெல்லாவற்றையும் எண்ணெய்ப்பசையுள்ள ஓர் கலயத்திற்போட்டு, மேற்படி எருக்கம்பால் வார்த்து, நிழலில் சுவறவைக்க வேண்டும். பால் நன்றாய்ச் சுவறினபின், கலயத்தின் அடியில் ஒன்பது, பத்துச் சிறுதுவாரங்களிட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு மண்சீலைசெய்து, பூப்புடத் தயிலமிறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்:- இதில், நாளொன்றுக்கு ஒருதடவை கொஞ்சம் எடுத்து வியாதியுள்ள பாகங்களின்மேல் பூசி, ஆமணக்கிலை வைத்துக் கட்டவேண்டும், இவ்விதம் மூன்று வாரம் செய்ய முஷ்டிப் பிரயோகத்தால் உண்டான தளர்ச்சி, சோர்வு, கோணல் முதலியவை தீர்ந்து அவை பலப்பட்டு ஆண்மையுண்டாம்.

சோதிமுதோதிப் பட்டித்தைலம்

இந்திரகோபப்பூச்சி, கட்டெறுப்பு, பூ நாகம், தேன் குளவி இவை வகை ஒன்றுக்கு நூறு கிராம், எருமையட்டை, காட்டுச் சுண்டெலி, பெருந்தேள் இவை வகை ஒன்றுக்கு மூன்று, ஜாதிக்காய், லவங்கம், ஜாதிப்பத்திரி, லவங்கப் பட்டை இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், எருமைப்பால், எருக்கம்பால் இவை வகை ஒன்றுக்கு 175 கிராம்.

செய்முறை:- மேற்கண்ட பாகப்படி செய்துகொள்ள வேண்டும்.

உபயோகம்- மேற்குறித்த குணங்கள் உண்டாவதுடன் சிறுத்த அங்கங்கள் பருத்து இறுகும்.

வீரியாபிவிர்த்திப் பட்டி

செம்மண்ணில் உண்டாம் பூநாகம் 55 கிராம், காற்படி பசுவின் பாலிற் போட்டு மூன்று நான்கு மணிநேரம் சென்றபின் அதை யெடுத்துலர்த்தி வைத்துக்கொள்ள வேண்டும். காபூல் பெருங்காயம் 10 கிராம், தேறின இஞ்சிரசம் தேவையான அளவு.

உபயோகம் :- மேற்கண்டபடி பாகப்படுத்தின பூ நாகம் 6 கிராம், மேற்கண்ட காயம் 260 மி.கிராம். இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு நன்றாய்ப் பொடித்து மேற்படி இஞ்சிரசம் சிறுக சிறுக வார்த்து ஒரு மணி வரையும் நன்றாயரைத்து அவசியமான பாகங்களின் மேற்பூசி வெள்ளாட்டின் கழுத்திறைச்சித் துண்டத்தைத் தட்டையாக நசுக்கி அவற்றின் மேல்வைத்து இலையைச் சுற்றிக் கட்ட வேண்டும், இவ்விதம் அன்றாடம் புதிது புதிதாய்ச் செய்து காலையில் மாத்திரம் சமயத்திற்கு ஏற்றபடி 5-7-9 நாள் செய்ய அங்குள்ள சோர்வு, தளர்ச்சி ஆகியவை தீர்ந்து, பலமுண்டாய், ஆண்மை யதிகரிக்கும்.

பராத்துவாசப் பட்டி

ஒருதுலா முள்ளங்கி விதையை 35 கிராம் நல்லெண்ணெயிற்போட்டு, சிவக்க வறுத்திறக்கி விதை நீக்கி எண்ணெயை யெடுத்துக்கொள்ள வேண்டும். வறுக்காத வேறு முள்ளங்கிவிதைச் சூரணம், கருநாபிச் சூரணம், லவங்கப்பட்டைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், இந்திரகோபப்பூச்சி 12 கிராம் இந்நான்கையும் கல்வத்திற் போட்டுமேற்படி யெண்ணெயைச் சிறுக சிறுக வார்த்து இருசாமம் அரைத்து பீங்கான் சிமிழிலிட்டுப் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம் :- இதில் நாளொன்றுக்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவை அவசியமான ்பாகங்களின் மேல் பூசி, ஆமணக்கிலை வைத்துக் கட்டவேண்டும். இவ்விதம் ஒருவாரம் அல்லது இருவாரம் செய்ய,முஷ்டிப் பிரயோகத்தாலுண்டாம் அங்குள்ள சோர்வு முதலியவை தீர்ந்து, பலமுண்டாய் ஆண்மைசக்தி யதிகமுண்டாம்.

வன்னிகற்பப் பட்டி

சாதிலிங்கத்தூள், அரிதாரத்தூள், காட்டெள்ளு இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், இவற்றைக் கல்வத்திலிட்டு நன்றாய் நேரப் பொடித்து, பிராந்திச் சாராயம் சிறுகச் சிறுக வார்த்து, நான்குசாமம் அரைத்துச் சிமிழில் வைத்துப் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்:- இதில், கொஞ்சமெடுத்து தினம் ஒன்று அல்லது இரண்டு தடவை வியாதியுள்ள பாகங்களின் மேல் பூசி ஆமணக்கிலை வைத்துக் கட்டவேண்டும். இவ்விதம் ஒருவாரம் இருவாரம் செய்ய அங்குள்ள தளர்ச்சி,மெலிவு முதலியவை தீர்ந்து, அவை பலப்பட்டு, ஆண்மை சக்தி யுண்டாம்.

கோசபலகாரிப் பட்டி

அபினி, வெள்ளைக் குன்றிமணிப் பருப்பின்மா இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், மிருதாரசிங்கி 1 கிராம்.

உபயோகம்: மேற்கண்டவற்றைக் கல்வத்திலிட்டுச் சிறுகச் சிறுக நெய் அல்லது தேன் வார்த்து 2 சாமம் அரைத்து அவசியமான பாகங்களின் மேற்பூசி, ஆமணக்கிலை சுற்றி, பட்டி கட்ட வேண்டும். மறுநாள் காலையில் அதனை யவிழ்த்தெரிந்து விட்டு, வெந்நீர் வார்த்துக் கழுவி விடவேண்டும். இவ்விதம் பிரதி தினமும் புதிது புதிதாய் ஏழுநாள் வரையும் செய்துவர அவை பலப்பட்டு, அங்குள்ள சோர்வு, தளர்ச்சி முதலியவை தீர்ந்து ஆண்மைசக்தி யதிகரிக்கும்.

மதன மோஹனப் பிரயோகம்

வேண்டியமட்டும் அடைக்கலாங் குருவிகளை அறுத்து அவற்றின் வயிற்றைப் பிளந்து, அதிலுள்ள குடல் முதலிவற்றையும் மூக்கு, கால், ரோமம் முதலியவற்றையும் நீக்கி, கொஞ்சம் குங்குமப்பூ, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, லவங்கம் ஆகிய இவற்றைச் சுத்த ஜலம் வார்த்து நன்றாயரைத்து, குருவிகளின் உள்ளும் வெளியும் தடவியுலர்த்தி, கருங்குளவி அல்லது செங்குளவிக் கூட்டில் அவற்றை அவை கொட்டும்படி விட்டு வைத்தெடுத்து, ஒரு நாழிகைக்குப் பிற்பாடு முன்போல குளவிக்கூட்டில் வைத்தெடுக்க வேண்டும். இவ்விதம்மூன்று தடவைசெய்ய வேண்டும். பின்பு, குருவியொன்றுக்கு 55 கிராம் வீதமாகப் பசுவின் நெய்யைக் காய்ச்சி அதில் குருவிகளையிட்டு நன்றாகச் சிவக்க வறுத்தெடுத்துக் கொண்டு நெய்யைக் காய்ச்சி சீஷாவிற் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். மேற்படி குருவிகளைக் கல்லுரலிலிட்டு நன்றாயிடித்து, அதற்குச் சமனெடை வெல்லஞ்சேர்த்து, மறுபடியும் நன்றாயிடித்து, இலந்தைப்பழப் பிரமாணம் மாத்திரைகள் செய்துகொள்ள வேண்டும்.

உபயோகம்:- பிரதி தினம் காலைமாலை இருவேளையும் வேளை ஒன்றுக்கு 1 மாத்திரை சாப்பிட்டும், பிரதிதினம் இரண்டு மூன்று தடவை

மேற்படி நெய்யில் கொஞ்சமெடுத்து வியாதியுள்ள பாகங்களில் அவற்றின் நுண்ணிய பாகங்கள் தவிர மற்றப் பாகங்களில் பூசியும் வருவதானால், அவற்றின் சோர்வு, தளர்ச்சி, மெலிவு, சுருங்கல் முதலியவை தீர்ந்து, அவை நீண்டு பருத்துப் பலப்பட்டு தாருட்டிய ஸ்தம்பனமுண்டாய், ஆண்மை விர்த்தியாம். இருதய முதலிய ராஜகருவிகள் பலமடைந்து இரத்தசுத்தி யுண்டாய், கட்டழகும் உண்டாம்.

காளைபதாதி பட்டித் தைலம்

காட்டுப்புறா எச்சம் 1400 கிராம், சிதைத்த மருகம் பட்டை 350 கிராம், ஆமணக்கு நெய் 350 கிராம்,நல்லெண்ணெய் 140 கிராம்.

செய்முறை :- இவற்றில் முன்னைய இரண்டையும் தனித்தனி பாத்திரத்திற்போட்டு,அதற்கு ஆறுபங்கு எடை சுத்தஜலம் வார்த்து, மூன்றுதினம் ஊறவிட்டு, தனித்தனி வடிகட்டிச் சக்கைபோக்கி ஒன்றாகக் கலந்து அதில் எண்ணெய்களையும் சேர்த்துக் காய்ச்சி, நீர் சுண்டினபின் கீழிறக்கி வடிகட்டி, எண்ணெயையெடுத்துக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில் 2 கிராம் எடுத்து வியாதியுள்ள பாகங்களின்மேற் பூசி, ஆமணக்கிலையிட்டுக் கட்ட வேண்டும். இதனுடன் முட்டைசேர்ந்த ஆகாரங்கள், லேகியங்கள், ஹல்வாக்கள் சாப்பிட்டுவர வேண்டும். இப்படிச் செய்வதனால், முஷ்டிப்பிரயோகத்தால் உண்டாம் அவற்றின் சோர்வு, நரம்புத் தளர்ச்சி, கோணல், மெலிவு முதலியவை தீர்ந்து, அவை பலப்பட்டு விம்மித்திமிர்ந்து ஆண்மை யதிகரிக்கும்.

ஆலால பலகாரிக் குழித்தைலம்

வௌவால்களைப் பிடித்து அவற்றின் நகம், அபானம் ஆகியவற்றை நீக்கி, வௌவாலொன்றிற்கு வாலுழுவையரிசி, லவங்கம் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம் விகிதமாக அவற்றின் வயிற்றுக்குட்செலுத்தி, அவற்றை பாகப்படி குழித்தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில், கொஞ்சம் எடுத்துப் பிரதி தினமும் வியாதியுள்ள பாகங்களின்மேற் பூசிவர, கபாதிக்கத்தாலுண்டாம் ஆண் அங்கச்சோர்வு தீரும்.

மயூர குழித்தைலம்

குராசானி ஓமம் 700 கிராம், 525 கிராம் சாராயம் வார்த்துப் பிசறி நிழலிலுலர்த்தி, பாகப்படி குழித்தயிலம் வடித்துக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில் கொஞ்சம் எடுத்து வியாதியுள்ள பாகங்களின்மேற் பூசிவருவதுடன் 35 கிராம் கசகசா ஷர்பத்தில் 1 கிராம் தைலம் சேர்த்துச் சாப்பிட்டு வருவதனால், சுகநீர்ப்பெருக்கு, இந்திரியவொழுக்கு முதலியவற்றால் உண்டாம் பிரதான அங்கச்சோர்வு, தளர்ச்சி முதலியவை தீரும்.

தம்பல கெம்பீரத் தைலம்

இந்திரகோபப்பூச்சி 120 கிராம், பெருங்கருங்குளவி 20, பெருந்தேள் 10, கழுதைப் பீஜத்திற்கடிக்க விட்டு வயிறு நிரம்ப இரத்தங்குடித்த அட்டை 5, வௌவால் 1, ஜாதிக்காய், சன்னலவங்கப்பட்டை, லவங்கம், வாலுழுவையரிசி, ஆமணக்கம்பருப்பு, நேர்வாளப்பருப்பு, சேங்கொட்டை, எள்ளு இவற்றின் தூள் வகை ஒன்றுக்கு 12 கிராம் வெண்ணாவி, கருநாவி, சங்குப்பாஷாணம், கௌரிப்பாஷாணம் இவை வகை ஒன்றுக்கு 3 கிராம்.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் ஒன்றாக உரலிலிட்டு இடித்து, மண்சீலை செய்துலர்த்தின காசிக்குப்பியில் அல்லது சோடா குப்பியில்போட்டு, பாகப்படி தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில் பிரதிதினம் ஒன்று அல்லது இரண்டு தடலை வியாதியுள்ள பாகங்களின் மேற் பூசி வருவதால், அங்குள்ள சோர்வு, தளர்ச்சி முதலியவை தீர்ந்து, அவை பருத்துப் பலத்து ஆண்மை விர்த்தியுண்டாம்.

கோச பலகாரிக் குழித்தயிலம்

உலர்த்தின பூநாகம், உலர்த்தின அட்டை, நண்டு, குதிரைக்குளம்புச் சீவல், இந்திரகோபப்பூச்சி, ஆண் ஓணான் * சுழல்வண்டு, முள்ளங்கிவிதை, வெள்ளைப் பூண்டிதழ், உலர்த்தின வெள்ளலரி வேர்ப்பட்டை இவை வகை ஒன்றுக்கு இருபது கிராம், சம்பங்கி யெண்ணெய் 90 கிராம்.

செய்முறை- இவற்றில், சரக்குகளை இரண்டொன்றாகப் பொடித்து மற்றவைகளையும் சிதைத்து மேற்படி எண்ணெய் செல்லத்தகுமளவு வார்த்துப்பிசறி, சீஷாவிற்போட்டு, பாகப்படி தைலமிறக்கிக் கொள்ள வேண்டும். இந்தத் தைலத்தை ஒருவாரத்திற்குப் பிற்பாடு எடுத்து உபயோகிக்க வேண்டும்.

---

* இதற்கு மாம்பழப் பூச்சியொன்று சொல்வார்கள். இது நீரிற் சுழன்று கொண்டிருக்கும்.

உபயோகம்- இதில் கொஞ்சம் எடுத்துப் பிரதி தினமும் காலை மாலை இரண்டு தடவை வியாதியுள்ள பாகங்களின் மேல்பூசி வெற்றிலை சுற்றிக் கட்டிவர அங்குள்ள சோர்வு, தளர்ச்சி, சுருங்கல் முதலியவை தீர்ந்து அவை பருத்துப் பலத்து நீண்டு ஆண்மை அதிகப்படும்.

சுவீர சூர குழித்தைலம்

உலர்த்தின வெள்ளலரிவேர்ப்பட்டை 1400 கிராம், துத்திவிதை 700 கிராம், கழுவியுலர்த்தின பூநாகம் 140 கிராம், சிதைத்த வாலுழுவையரிசி 175 கிராம்.

செய்முறை- இவையெல்லாவற்றையும் ஓர்தோண்டியிற் போட்டு வாய்க்குச் சில்லிட்டு மண்சீலை செய்து பாகப்படி குழித்தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில் கொஞ்சம் எடுத்துப் பிரதி தினமும் காலை வேளையில் வெற்றிலையில் தடவி வியாதியுள்ள பாகங்களில் சுற்றிக்கட்டி வைக்க வேண்டும். மறுநாட் காலையில் அவிழ்த்தெடுத்து வெந்நீர் வார்த்துக் கழுவி மறுபடியும் முன்போற் செய்ய வேண்டும். இவ்விதம் ஏழு அல்லது பத்துநாள் வரையும் செய்வதுடன் வேளை 1-க்கு 2 கிராம், காலை மாலை இருவேளையும் வெற்றிலையில் தடவி வெறும்வயிறாயிருக்கும் போதாவது தாம்பூலத்துடனாவது மென்று தின்ன வேண்டும்.

இப்படிச் செய்வதினால் அவை பலத்திறுகி ஆண்மைக்கு யோக்கியமாயிருக்கும்.

போகபூவாதி பூப்புடத் தைலம்

கிணற்றுப் பெருந்தவளை, பூநாகம், உடும்பு இவற்றின் நெய், அட்டைக்குழித் தைலம் இவை வகை 1-க்கு 35 கிராம், சன்ன லவங்கப்பட்டை, அக்கராகாரம், லவங்கம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 18 கிராம்.

செய்முறை- இவற்றில் முன்னைய மூன்றையும் தனித்தனி நீரிலிட்டு நன்றாய் வேகவைத்து அப்படியே நீருடன் தனித்தனி தட்டையான பாத்திரத்தில் ஊற்றி, குளிர்ச்சியான இடத்தில் வைத்து, மறுநாட்காலையில் அப்பாத்திரத்தின் நீரின்மேல் மிதக்கும் நெய்யை வழித்தெடுத்து வெவ்வேறாக வைத்துக் கொள்ள வேண்டும். அட்டைகளைக் கலயத்திலிட்டு, பாகப்படி குழித்தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும். இவை மேற்கண்ட எடை விகிதம் தனித்தனியெடுத்துக் கலந்து,

சூரணங்களையும் அதில் சேர்த்துக் கல்வத்திலிட்டு ஒருசாமம் அரைத்து வழித்தெடுத்து பீங்கான், சிமிழில் அடக்கிப் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- இதில் கொஞ்சம் எடுத்துப் பிரதிதினமும் ஒருவேளை அல்லது இருவேளை வியாதியுள்ள பாகங்களின் மேல் பூசிவர, கைவிடப்பட்ட தீராத தளர்ச்சி, கோணல் முதலியவை தீர்ந்து, அவை பலங்கொண்டு, ஆண்மைக்கு ஏற்றதாயிருக்கும்.

மண்டலாதி குழித்தைலம்

உலர்த்தின பூநாகம் 210 கிராம், கூட்டிற்பிடித்த தேன் குளவி 210 கிராம், இந்திரகோபப்பூச்சி 70 கிராம், இவற்றைச் சீஷாவிற்போட்டுப் பாகப்படி குழித்தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில் கொஞ்சம் எடுத்து வியாதியுள்ள பாகங்களில் அவற்றின் நுண்ணிய பாகங்கள் தவிர, மற்ற பாகங்களில் பிரதிதினமும் இரண்டுவேளை பூசிவர, அங்குள்ள சுருக்கம், சோர்வு, தளர்ச்சி முதலியவை தீர்ந்து அவை நீண்டு பலத்து இறுகி, ஆண்மை யுடைத்தாயிருக்கும்.

கோசஸ்தூல வீரியதைலம்

ஆண் அடைக்கலாங்குருவி 2, முதிர்ந்த ஆண் ஓணான் 1, ஆண் பச்சோந்தி 1, எருமையட்டை 7, பூநாகம் நூறு கிராம், குதிரைக்குளம்புச் சீவல் 140 கிராம், ஊமத்தை விதை, சன்னலவங்கப்பட்டை இவை வகை ஒன்றுக்கு 50 கிராம், மனோசிலை 14 கிராம், சம்பங்கியெண்ணெய் 50 கிராம்.

செய்முறை- இவற்றில் முன்னைய மூன்றையும் அறுத்து தோல், பல்லு, நகம், வயிற்றுக்குள் இருக்கும் கொழுப்பு தவிர மற்றக் குடல் முதலியவற்றை நீக்கியும் அதையடுத்த இரண்டையும் உரலிற்போட்டு மைப்போல் இடித்தும், அதற்கடுத்த மூன்றையும் உரலிலிட்டு இடித்து மேற்படி எண்ணெய் வார்த்துப் பிசறி ஒருநாள் வைத்துப் பிற்பாடு இம்மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்துப் பிசைந்து சீஷாவிற்போட்டு, பாகப்படி தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில் 12 கிராம் தைலமெடுத்து வியாதியுள்ள ஸ்தானங்களில், தினமொன்றுக்கு ஒரு தடவையாக 7-9-11-நாள் பூசிவர, அங்குள்ள சோர்வு, தளர்ச்சி, மெலிவு, சுருக்கம் முதலியவை தீர்ந்து அவை பலத்து, இறுகி, பருத்து, நீண்டு ஆண்மைக்கு இயன்றதாயிருக்கும்.

கொங்கனி யிங்கிதத்தைலம்

வாழுலுவையரிசி 210 கிராம், உலர்த்தின வெள்ளலரி வேர்ப்பட்டை 90 கிராம், வெள்ளைக் குன்றிமணிப்பருப்பு, கைப்பு வெட்பாலையரிசி அல்லது குளப்பாலைவிதை, உலர்த்தின கருந்தவளை, இந்திரகோபப்பூச்சி, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, லவங்கம் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், கருநாவி, வெண்ணாவி, சங்குப்பாஷாணம், கௌரிப் பாஷாணம் இவை ஒன்றுக்கு 10 கிராம், எருமைப்பால் 30 கிராம்.

செய்முறை- இவற்றில், வெள்ளலரிவேர்ப் பட்டை, இந்திரகோபம், ஜாதிக்காய், லவங்கம் ஆகிய இந்நான்கொழிய, மற்றவைகளைப் பாத்திரத்திற் போட்டு மேற்படி பால்வார்த்து ஓரிரவு ஊறவைத்து, மறுநாட்காலையில் மேற்கண்ட நான்கையும் நன்றாய்ப் பொடித்து அதிற் கலந்து காசிக்குப்பியிலிட்டு, பாகப்படி தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில் கொஞ்சம் எடுத்து ஒவ்வொரு தினத்திலும் இரண்டொரு தடவையாக மூன்று அல்லது நான்குவாரம் வரையும் வியாதியுள்ள பாகங்களின் மேற்பூசிவர, அங்குள்ள கோணல், வளைவு முதலியவை யகன்று நீண்டு நிமிர்ந்து பலப்பட்டு, ஆண்மைக்கு உறுதியாயிருக்கும். இதனுடன் பின்னால் எழுதப்படும் மிஸ்றிச் சூரணத்தையும் சாப்பிட்டு வந்தால் அதிகக் குணந்தரும்.

ஹிங்குபூவாதி குழித்தைலம்

பெருங்காயம், உலர்த்தின செம்மண் பூநாகம், வெள்ளைக் குன்றி மணிப்பருப்பு, உலர்த்தின வெள்ளலரிவேர்ப்பட்டை, ஊமத்தம்விதை இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், சாராயம் 350 கிராம், மேற்கண்டவற்றையெல்லாம் சாராயத்தில் ஊறவிட்டு, அவை ஊறிச் சுவறினபின் பாகப்படி சீஷா அல்லது தோண்டியிற்போட்டு, குழித்தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில், கொஞ்சம் எடுத்து நாள்தோறும் வியாதியுள்ள பாகங்களில் இரண்டு மூன்று தடவை பூசிவர, முஷ்டிப்பிரயோகத்தால் உண்டாம் சோர்வு, தளர்ச்சி முதலியவை தீர்ந்து அவை பலப்பட்டு இறுகி, ஆண்மைக்குரியதாயிருக்கும்.

தம்பல ஜீவாபூப்புடத் தைலம்

இந்திரகோபப்பூச்சி, பாதரசம், சங்குப்பாஷாணம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம் கோழிமுட்டை 21.

செய்முறை- மேற்படி சரக்குகளைக் கல்வத்திற் போட்டு நன்றாய்ப் பொடித்து, நாளொன்றிற்கு மும்மூன்று முட்டை மஞ்சள் கருவிட்டு 6 மணி நேரம் அரைத்து, கடலைப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி, சீஷாவில்போட்டு பாகப்படி தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- மேற் குறித்தபடி செய்ய, மேற்குறித்த குணமுண்டாம்.

ரசித ஜீவா திலா மாத்திரை

வெள்ளி அரபொடி 30 கிராம் பாதரசம் 60 கிராம், கருநாவி, வெண்ணாவி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், இவற்றைக் கல்வத்திலிட்டுச் சாராயம் வார்த்து நான்குசாமம் நன்றாயரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணமுள்ள மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி ஊமத்தையிலை ரசம் ஒரு பாத்திரத்தில் முக்கால் வரிசைவார்த்து மாத்திரைகளைச் சீலையில் முடிந்து கிழிக்கட்டி, பாத்திரத்தின் அடியிற்படாமல் தொங்கவிட்டு அரைவாசி யிலைரசம் சுண்டுகிறவரையும் மெதுவாயெரித்து எடுத்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- இதில், ஒரு மாத்திரையை நாளொன்றிற்கு ஒரு தடவை வாலுழுவையரிசித் தைலத்தில் இழைத்து வியாதியுள்ள பாகங்களின் மேற்பூசி, ஆமணக்கிலை கட்டிவர முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் சோர்வு, தளர்ச்சி, மெலிவு முதலியவையொழிந்து, அவை பலமடைந்து இறுகிப் பருத்து, ஆண்தன்மை பூர்த்தி பெற்றிருக்கும்.

துஷ்டரோக நிவாரண திலா

அக்கராகாரச் சூரணம், குங்குமப்பூ, நாகேசுரச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், நல்லெண்ணெய் 50 கிராம், அரிதாரம், மனோ சிலை இவை வகை ஒன்றுக்கு 4 கிராம்.

செய்முறை- இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு நன்றாயரைத்து, எண்ணெயையும் சிறுகச்சிறுக வார்த்து, நான்குசாமம் அரைத்து வழித்தெடுத்து டப்பியில் வைத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில், கொஞ்சம் எடுத்து மாலை வேளையில் வியாதியுள்ள பாகங்களின் மேற்பூசி, ஆமணக்கிலை சுற்றிக் கட்டி வைத்திருந்து, காலையில் அவிழ்த்தெடுத்து வெந்நீர் விட்டுக் கழுவி

கொங்கனி யிங்கிதத்தைலம்

வாழுலுவையரிசி 210 கிராம், உலர்த்தின வெள்ளலரி வேர்ப்பட்டை 90 கிராம், வெள்ளைக் குன்றிமணிப்பருப்பு, கைப்பு வெட்பாலையரிசி அல்லது குளப்பாலைவிதை, உலர்த்தின கருந்தவளை, இந்திரகோபப்பூச்சி, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, லவங்கம் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், கருநாவி, வெண்ணாவி, சங்குப்பாஷாணம், கௌரிப் பாஷாணம் இவை ஒன்றுக்கு 10 கிராம், எருமைப்பால் 30 கிராம்.

செய்முறை- இவற்றில், வெள்ளலரிவேர்ப் பட்டை, இந்திரகோபம், ஜாதிக்காய், லவங்கம் ஆகிய இந்நான்கொழிய, மற்றவைகளைப் பாத்திரத்திற் போட்டு மேற்படி பால்வார்த்து ஓரிரவு ஊறவைத்து, மறுநாட்காலையில் மேற்கண்ட நான்கையும் நன்றாய்ப் பொடித்து அதிற் கலந்து காசிக்குப்பியிலிட்டு, பாகப்படி தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில் கொஞ்சம் எடுத்து ஒவ்வொரு தினத்திலும் இரண்டொரு தடவையாக மூன்று அல்லது நான்குவாரம் வரையும் வியாதியுள்ள பாகங்களின் மேற்பூசிவர, அங்குள்ள கோணல், வளைவு முதலியவை யகன்று நீண்டு நிமிர்ந்து பலப்பட்டு, ஆண்மைக்கு உறுதியாயிருக்கும். இதனுடன் பின்னால் எழுதப்படும் மிஸ்றிச் சூரணத்தையும் சாப்பிட்டு வந்தால் அதிகக் குணந்தரும்.

ஹிங்குபூவாதி குழித்தைலம்

பெருங்காயம், உலர்த்தின செம்மண் பூநாகம், வெள்ளைக் குன்றி மணிப்பருப்பு, உலர்த்தின வெள்ளலரிவேர்ப்பட்டை, ஊமத்தம்விதை இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், சாராயம் 350 கிராம், மேற்கண்டவற்றையெல்லாம் சாராயத்தில் ஊறவிட்டு, அவை ஊறிச் சுவறினபின் பாகப்படி சீஷா அல்லது தோண்டியிற்போட்டு, குழித்தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில், கொஞ்சம் எடுத்து நாள்தோறும் வியாதியுள்ள பாகங்களில் இரண்டு மூன்று தடவை பூசிவர, முஷ்டிப்பிரயோகத்தால் உண்டாம் சோர்வு, தளர்ச்சி முதலியவை தீர்ந்து அவை பலப்பட்டு இறுகி, ஆண்மைக்குரியதாயிருக்கும்.

தம்பல ஜீவாபூப்புடத் தைலம்

இந்திரகோபப்பூச்சி, பாதரசம், சங்குப்பாஷாணம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம் கோழிமுட்டை 21.

செய்முறை- மேற்படி சரக்குகளைக் கல்வத்திற் போட்டு நன்றாய்ப் பொடித்து, நாளொன்றிற்கு மும்மூன்று முட்டை மஞ்சள் கருவிட்டு 6 மணி நேரம் அரைத்து, கடலைப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி, சீஷாவில்போட்டு பாகப்படி தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- மேற் குறித்தபடி செய்ய, மேற்குறித்த குணமுண்டாம்.

ரசித ஜீவா திலா மாத்திரை

வெள்ளி அரபொடி 30 கிராம் பாதரசம் 60 கிராம், கருநாவி, வெண்ணாவி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், இவற்றைக் கல்வத்திலிட்டுச் சாராயம் வார்த்து நான்குசாமம் நன்றாயரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணமுள்ள மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி ஊமத்தையிலை ரசம் ஒரு பாத்திரத்தில் முக்கால் வரிசைவார்த்து மாத்திரைகளைச் சீலையில் முடிந்து கிழிக்கட்டி, பாத்திரத்தின் அடியிற்படாமல் தொங்கவிட்டு அரைவாசி யிலைரசம் சுண்டுகிறவரையும் மெதுவாயெரித்து எடுத்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- இதில், ஒரு மாத்திரையை நாளொன்றிற்கு ஒரு தடவை வாலுழுவையரிசித் தைலத்தில் இழைத்து வியாதியுள்ள பாகங்களின் மேற்பூசி, ஆமணக்கிலை கட்டிவர முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் சோர்வு, தளர்ச்சி, மெலிவு முதலியவையொழிந்து, அவை பலமடைந்து இறுகிப் பருத்து, ஆண்தன்மை பூர்த்தி பெற்றிருக்கும்.

துஷ்டரோக நிவாரண திலா

அக்கராகாரச் சூரணம், குங்குமப்பூ, நாகேசுரச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், நல்லெண்ணெய் 50 கிராம், அரிதாரம், மனோ சிலை இவை வகை ஒன்றுக்கு 4 கிராம்.

செய்முறை- இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு நன்றாயரைத்து, எண்ணெயையும் சிறுகச்சிறுக வார்த்து, நான்குசாமம் அரைத்து வழித்தெடுத்து டப்பியில் வைத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில், கொஞ்சம் எடுத்து மாலை வேளையில் வியாதியுள்ள பாகங்களின் மேற்பூசி, ஆமணக்கிலை சுற்றிக் கட்டி வைத்திருந்து, காலையில் அவிழ்த்தெடுத்து வெந்நீர் விட்டுக் கழுவி

வரவேண்டும் இவ்விதம் இரண்டு வாரமளவும் செய்து வர, முஷ்டிப்பிரயோகத்தால் உண்டாம் சோர்வு, தளர்ச்சி முதலியவை தீர்ந்து, அவை பலப்பட்டு இறுகி, ஆண்மைக்கு அனுகூலமாயிருக்கும்.

துன்ப நிவாரண ஜூந்து திலா

* ஜூந்து, மிளகு, பெருங்காயம் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், பருத்திவிதைப் பருப்பு 24 கிராம், கஸ்தூரி 500 மி.கிராம், சம்பங்கியெண்ணெய் தேவையான அளவு.

செய்முறை- இவையெல்லாவற்றையும் சேர்த்து கல்வத்திலிட்டுப் பொடித்து எண்ணெயைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் நன்றாயரைத்து டப்பியில் அடக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதை மேற்கண்டவிதம் செய்துவர, மேற்கண்ட குணமுண்டாம்.

ஆக்ரஸிம்ம வூக்கசஞ்சீவித் திலா

சங்குப்பாஷாணம், கௌரிப்பாஷாணம் இவை வகை ஒன்றுக்கு 3 கிராம், சாதிலிங்கம், பாதரசம், அரிதாரம், மனோசிலை இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், எருக்கம் பால் 210 கிராம்.

செய்முறை- இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டுப் பொடித்து, ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு மேற்படி பால்வார்த்து மூன்று நாள் இராப்பகலாக ஊறவிட்டு, நாலாம்நாள் கல்வத்திலிட்டு நான்கு சாமம் நன்றாயரைத்து, டப்பியில் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- இதில், குன்றியெடையெடுத்து கால்பலம் வெண்ணெயிற் குழைத்து, மாலையில் வியாதியுள்ள பாகங்களின் மேற்பூசி, ஆமணக்கிலை வைத்துக் கட்டி, காலையில் அவிழ்த்து வெந்நீர்வார்த்துக் கழுவிவிட வேண்டும். இவ்விதம் இரண்டு மூன்று வாரமளவும் செய்துவர, முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் கஷ்ட சாத்தியச்சோர்வு, தளர்ச்சி முதலியவை தீர்ந்து அவை மிகவும் பலப்பட்டு இறுகி யுறுதியாய், ஆண்மையின்பத்தை யநுபவிக்கக் கூடியதாயிருக்கும்.

வச்சரகண்டகாவுச்சித சுடர்த்தைலம்

ஒருசாண் சதுராகாரமான வஸ்திரத் துண்டில் திருகு க்ள்ளிப் பாலூட்டி அதன்மேல் ஒரு 12 கிராம் லவங்கப்பட்டைத் தூளைத்தூவி நிழலிலுலர்த்தி, அது நன்றாயுலர்ந்தபின் முன்போல அந்தப்பாலூட்டி

---

* இதற்கு நீர்நாயின் விதை என்றும் பெயர் வழங்கும்.

மேற்படி தூளை மேற்படி அளவு தூவி முன்போல் உலர்த்த வேண்டும். இவ்விதம் நான்கு தடவை செய்து அச்சீலையைத் திரியாக்கிப் பசுவின்நெய் மூன்றுபலம் வார்த்துப் பாகப்படி சுடர்த்தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதில் கொஞ்சம் எடுத்து வெற்றிலையில் தடவி வியாதியுள்ள பாகங்களின் மேற் பட்டி கட்ட வேண்டும். இவ்விதம் மூன்றுநாள் செய்து நாலாம்நாள் வெற்றிலையில் வெண்ணெய் தடவிக் கட்ட வேண்டும். இப்படி இரண்டொரு தினம் செய்ய வேண்டும். ஒரு தடவையிலேயே வியாதி நீங்காவிட்டால் இரண்டொருவாரம் கழிந்தபின் முன்போற் செய்து வர வேண்டும். முஷ்டிப்பிரயோகத்தால் உண்டாம் சோர்வு, தளர்ச்சி முதலியவை தீர்ந்து வீரியபுஷ்டி யதிகரித்து ஆண்மைக்கு வெகுயோக்கிய கரமாயிருக்கும்.

கோசபலகாரி யொற்றிடம்

சீமை மருதோன்றி விதை, வாலுமுவையரிசி, காட்டெள்ளு அல்லது காரெள்ளு, கடுகு இவை வகை ஒன்றுக்கு 30 கிராம், நல்லெண்ணெய் 105 கிராம்.

செய்முறை- இவையெல்லாவற்றையும் சேர்த்திடித்து மூன்று பொட்டணமாகக் கட்டிக் கொண்டு எண்ணெயைக் காய்ச்சி அதிற்போட்டு அதிகச் சூடில்லாமல் இளஞ்சூடாயிருக்கும்போது எடுத்துப் பிரதான அங்கங்கள், தொடையின் அடிப்பாகங்கள் முதலிய சுற்றுப்பக்கங்களில் ஒற்றிடம் இட வேண்டும்.

உபயோகம்- இவ்விதம் பிரதிதினமும், புதிது புதிதாகச் செய்து மூன்று வாரமளவும் ஒற்றிடமிட முஷ்டிப் பிரயோகத்தால் உணர்ச்சியற்றுச் சோர்வையடைந்த அவ்வுறுப்புகளின் வியாதி முதலியவை தீர்ந்து, அவை பலப்பட்டு, ஆண்மைசக்தி யதிகரித்துண்டாம்.

வேறு

யானைத்தந்தத் தூள் 4 கிராம், வாலுமுவையரிசி 6 கிராம், எள்ளு, ஆட்டின் கழுத்திறைச்சி இவை யெல்லாவற்றையும் சேர்த்திடித்து ஒரு பொட்டணமாகக் கட்டி ஒரு மண் பாத்திரத்தை நெருப்பிலிட்டு பழுக்கக் காய்ச்சியெடுத்து, அதில் அரை ஆழாக்கு பசுவின்பால் வார்த்து மேற்படி பொட்டணத்தை நனைத்து மேல்கண்ட ஸ்தானங்களில் ஒற்றிடமிட வேண்டும். சூடாறிவிட்டால், பாத்திரத்தை முன்போல நெருப்பில் காய்ச்சிக் கொள்ள வேண்டும். பாலாகிவிட்டால் வேறுபால் வார்த்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் மூன்றுவாரம் செய்துவர, முன்சொல்லிய வியாதி முதலியதும் தீரும்.

விசேஷ அறிக்கை

நண்பர்களே!

போக முதலியவற்றிற்கு ஆதாரமான உள்ளுறுப்புகளெல்லாம் யாதொரு குறைவின்றிப் பூரண சுகஸ்திதியிலிருந்தும்; அதற்குப் பிரதான சாதனமாகிய ஆண் ஜனன இந்திரிய முக்கிய கருவியொன்று மாத்திரம் சீர்குலைந்திருப்பின் போகத்திற்கும் பிரதிகூலம் என்பது ஆக்ஷேபனையற்ற விஷயம், முஷ்டிப்பிரயோகத் துர்ப்பழக்க வழக்கங்களால் முக்கியமாய் அதற்கு நேரிடும் பின்னங்கள் பல. அவையனைத்தும் முதற்பாகத்தில் தெள்ளத்தெளிய விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. அவ்வகைக் கொடிய வியாதிகளால் துன்புற்று வருந்துவோர் பலரென்றும், அத்தகைய வியாதிகள் பற்றறத் தீர்வது அசாத்தியமென்றும் கண்டு, அவற்றிற்குத் தக்க சிகிச்சைகள் இல்லையென்று அநேகர் கைவிட்டிருந்த போதிலும் நமக்கும், நமது முன்னோர்களுக்கும் அநுபவசித்தமாகக் கைகண்டவைகளும், இப்பிரதான அவயவத்தின் சிகிச்சைகளில் அதிகோன்னதமானவைகளுமான பலமுறைகளை நரஜீவகாருண்யம் பற்றி, இங்கெழுதத் துணிந்தோம். இம்முறைகளெல்லாம் பூர்வந்தொடங்கிப் பரமரகசியமாய் வைக்கப்பட்டு வந்தன. அப்படியிருந்தும், தமது அநுபவத்தில் இவ்விதக்கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டு வருந்தியுழல்வோர்களிற் பெரும்பான்மையோர் தமது பரிதாப நிலைமையை மயக்கமற வெளியிட முன்னே வராமலே இருதலைக் கொள்ளிவாய்ப்பட்ட எறும்புபோலத் தவித்துச் சுழன்று நிற்கும் தன்மையைக் கண்கூடாய்க் கண்டறிந்து சகிக்க வசமற்று, அவர்கள்மீது இரக்கங்கூர்ந்து, பரோபகாரார்த்தம் இங்கு வெளியிட நேர்ந்தனவன்றி, மற்றபடியல்ல. இவை அத்தகைமையோர்க்கு உற்றசமயத்தில் எதிர்பார்த்திராத பேருதவியாகாதிரா வென்பது திண்ணம்.

ஆண்குறிச் சிகிச்சாகிரமத்தில், முதல் முதல் அதில் தங்கிநிற்கும் அசுத்த ரத்தத்தை நீக்கி சுத்த ரத்தவோட்டத்தை விர்த்தி செய்வது அவசியம். இதற்காக அட்டைப் பிரயோகம், அர்க்கக்ஷீரப் பிரயோகம் என இருவகையுண்டு. இவற்றை நாம் இங்கு தெளிய விளக்கிக் காட்டியிருப்பினும், அவற்றை அநுபவசாலிகளின் உதவியைக் கொண்டு செய்து நிறைவேற்றிக் கொள்வார்களென்று நம்புகிறோம்.

அட்டைப் பிரயோகங்கள்

சிகிச்சைக்கு வேண்டிய அட்டைகளின் லக்ஷணங்களும் அவற்றை யுபயோகிக்கும் வகையும்

அட்டையில் பலஜாதிகள் உண்டு. சுத்தஜலத்தில் அல்லது பாசிபிடித்த ஜலத்தில் உற்பத்தியானவையே சிகிச்சைக்கு ஏற்றவை. அதி துர்கந்தமுள்ள ஜலத்தில் ஜனித்தவை சிரேஷ்டமாகா. தலை உருண்டை வடிவமாகவும், கடித்தால் கடிதாயில் முக்கோண ரூபம் விழும்படியான மூன்று பற்கள், உள்ளனவாயும் அடிவயிறு மடிப்புள்ளதாயும் இருப்பதுடன், அவை சிறிது சிவந்தும், முதுகில் பசுமையான வரி விழுந்தும் இருக்கும் அட்டைகளே அதிசிரேஷ்ட மானவை. அதிகம் பருத்திராமலும், அதிகம் சிறுத்திராமலுமிருப்பவைகளே உத்தமம். அதிகம் கருத்திருப்பவைகளையும், அதிகம் பருத்திருப்பவைகளையும் உபயோகிக்கலாகாது. ஓர் பீங்கான் ஜாடி நிறைய ஜலம்வார்த்து, அதன் அடியிற் படிந்திருக்கும்படி மண்போட்டு, அதில் அட்டைகளை விட்டு ஜாடிவாய்க்கு மெல்லிய வஸ்திரத்தில் கட்டி வைக்க வேண்டும்; இரண்டு மூன்று நாளைக்கொரு தடவை அதில் இருக்கும் ஜலத்தை ஊற்றிவிட்டு, வேறு புதிய ஜலம் ஊற்றி, இவ்விதம் மாற்றி மாற்றி வரவேண்டும். சிலசமயம் நாம் நினைத்தபடி அட்டைகள் கடித்துப்பிடிக்கா வாகையால், வேண்டுமளவிற்கு அதிகம் நாலைந்து அட்டைகள் கைவசம் இருக்க வேண்டும். கடிக்கவிடும் புதிய அட்டைகளை ஒரு நாழிகைக்கு முன் தலைகீழாய்ச் சற்றுநேரம் தூக்கிப் பிடித்து, அவற்றின் வயிறுகளிலுள்ள நீர் முதலியவை வெளிவரச் செய்ய வேண்டும். அட்டைகளைக் கடிக்க விட வேண்டிய பாகத்தைக் கொஞ்சம் சிவக்கும்படியாய்த் தேய்த்துக் கழுவ வேண்டும். இவ்விதம் செய்யும் பக்ஷத்தில் அப்பாகத்தை அட்டைகள் எளிதிற் கவ்விப் பிடித்துக் கொள்ளும். ஒருக்கால் அப்படியும் பிடிக்காவிட்டால் அந்தப்பாகத்தில் ஈரமுண்டாம்படி ஈரத்துணியால் தடவி, கடிக்கவிட வேண்டும். அப்படி செய்தும் பிடிக்காவிட்டால், ஜலத்தில் அல்லது பாலில் கொஞ்சம் சர்க்கரையைக் கரைத்து அந்தப் பாகத்தில் தடவி, அட்டைகளைக் கடிக்கவிட வேண்டும். இம்மாதிரியும் செய்தும் பிடிக்காவிட்டால், அந்தப் பாகத்தை ஊசியால் ரத்தம் வரும்படி மெதுவாய்க்குத்தி, கடிக்கவிட வேண்டும். அப்படியும் கடிக்காவிட்டால், அவை உபயோகமற்றவையென்று ஜலத்தில்விட்டு வைக்க வேண்டும். கடிக்கவிட்டபின், அது ரத்தங் குடித்துத் தானே கீழே விழும்வரையும் பொறுத்திருக்க வேண்டும், இடையில் அவற்றை நாம் கையாலிழுத்து நீக்கலாகாது. ஏனென்றால், அப்படிச் செய்வதனால், அது

அறுந்து போவதற்கும், அவற்றின் பற்கள் கடிவாயில் பதிந்து தங்கி நிற்பதற்குமிடமாம். இடையில் அவற்றை நீக்குவது அவசியமெனக் கண்டால், உப்புப்பொடியை அல்லது சாம்பற்பொடியை அவற்றின் வாயிற் போட்டாலும், வெங்காயரசத்தைப் பிழிந்தாலும் உடனே விழுந்துபோம், கடிவாயினின்று வடியும் ரத்தத்தை மெல்லிய பழைய வஸ்திரத்தால் சற்று தாமதித்துத் தாமதித்துத் துடைத்து வரவேண்டும். அட்டைக்கடியால் வடியும் ரத்தம் வலிய நின்றுவிடுமாகையாலும், அசுத்த ரத்தம் வெளிப்பட வேண்டுவது அவசியமாகையாலும், நாம் அதனை நிறுத்த முயல்வது வீண் வேலை. ஒருவேளை ரத்தம் அதிகம் வடிந்து அந்த க்ஷணமே நிறுத்துவது அவசியமென்று கண்டால், படிக்காரம், சீனக்காரம், சாம்பல் இவற்றில் ஒன்றின் தூளைக் கடிவாயிற்போட, ரத்தம் நின்றுபோம், ஒருதடவை கடிக்க விட்டு ரத்தமெடுத்து இரண்டொரு நாள் இடைவிட்டு மறுதடவை கடிக்கவிடுவதினால், அங்கு தங்கிநின்ற அசுத்த ரத்தமானது நீங்கி, சுத்தரத்தம் வியாபிக்க இடமாம். ஆனால் முதல் தடவையைப் பார்க்கிலும், இரண்டாந்தடவை அட்டைகள் எண்ணிற் குறைந்திருக்க வேண்டும். ஆனால் முதல் தடவை பத்தானால் இரண்டாந்தடவை ஐந்து அல்லது மூன்றுவிட வேண்டும். தேகபலம் குன்றியிருப்போர்க்குக் களையுண்டாம் படி ஒரே தடவையாய் எடுக்காமல் பல தடவையாய் எடுப்பதே சிகிச்சையின் கிரமம். கடித்த அவயத்தில், குளிர்ந்த ஜலம் பட்டோ அல்லது வேறு காரணத்தாலோ யாதேனும் வீக்கங்கண்டால் மஞ்சளையிழைத்துக் கொதிப்பாட்டித் தடவி வரத்தீரும். தேகத்தில், அசுத்த மாசுகள் நிறைந்திருக்கும் போது, அட்டைவிடக் கூடாது. முதல் முதல் பேதி முதலிய விரேசன மருந்தை யுபயோகித்துத் தேகத்தைச் சுத்தப்படுத்த வேண்டும். அட்டைவிட்டபின் குளிர்ந்த ஜலபானம், குளிர்ந்த ஜலஸ்நானம், குளிர்ந்தகாற்று, குளிர்ச்சியான பதார்த்தங்கள் புளிப்புப் பதார்த்தங்கள் ஆகியவற்றை நீக்கிவைப்பதே உசிதம்.

(1) தேகபலத்திற்கும் வியாதிக்கும் தக்கபடி 5, 7, 9 மேற்சொல்லிய லக்ஷணங்களமைந்த அட்டைகளைப் பிரதான அங்கத்தின் நுண்ணியபாகம் தையல் ஆகிய பாகம் தவிர, மற்ற பாகங்களில் மேல்கண்ட விதமாய் கடிக்கவிட்டு, அவற்றின் வயிறு அரைவரிசை ரத்தம் நிறைந்த பின் அவற்றின் வாயில் உப்புத்தூளை அல்லது புகையிலைத் தூளைப்போட, உடனே அவை கீழே விழுந்து போம். பின்பு, அங்குள்ள கடிவாய்களை அடிக்கொருதரம் நசுக்கிப் பிதுக்கி ரத்தத்தை வெளிப்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். ரத்தம் வெளிப்படுவது நின்றபின், கெட்டித்தேன் ஒரு பங்கு, யௌவனசேவலை

அப்பொழுதறுத்தொழுகிச் சூடாறாத ரத்தம் ஒருபங்கு இவ்விரண்டையும் சேர்த்து நன்றாயரைத்து, அப்பாகங்களின் மேல் நாளொன்றிற்கு ஒருதடவையாகப் பற்றிட வேண்டும். இப்படிப்பற்றிட்டபின், மூன்றுநாள் வரையும் அசையாமலும், நடக்காமலும், குளிர்காற்று முதலியனபடாமலும் இருந்த இருப்பிலேயே யிருக்க வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் நேரிட்ட சோர்வு, தளர்ச்சி, மெலிவு, முதலியவை தீர்ந்து, அவை பலப்பட்டு இறுகிப் பருத்து, ஆண்மைக்கு ஏற்றதாயிருக்கும்.

2. தேகபலத்திற்கும், வியாதிபலத்திற்கும் தக்கபடி 3-6 அட்டைகளை முக்கிய ஆண் அங்கங்களின் நுண்ணிய பாகங்கள், தையல் இவை தவிர, அவற்றின் அடி, நடு, முடி, ஆகிய இம்மூவிடங்களில் ஒவ்வொன்றாக அல்லது இரண்டிரண்டாக அல்லது மும்மூன்றாகக் கடிக்கவிட்டு, முன்பாகத்திற் குறிப்பித்தபடி, அசுத்த ரத்தத்தைப்போக்கி, சுத்தி செய்த பாதரசம் 4 கிராம் ஆட்டுப் பின்னங்கால் எலும்பின்மூளை 10 கிராம் 15 இவ்விரண்டையும் சேர்த்து கல்வத்திலிட்டு ஒரு சாமம் நன்றாயரைத்து வழித்து அங்கு பூசினவுடன் அதன்மேல் வெற்றிலை அல்லது ஆமணக்கிலை வைத்துக்கட்டி முன்சொல்லிய பிரகாரம் பத்தியங்காக்க வேண்டும்.

உபயோகம்- முன் சொல்லிய படியாம்.

3. தேகபலத்திற்கும் வியாதிபலத்திற்கும் ஏற்றபடி 5-6-9 அட்டைகள் மேற்சொன்னபடி அவற்றின் அடியினின்று முடிவரையும் உள்ள பல பாகங்களிலும் கடிக்கவிட்டு, முன்சொல்லிய பிரகாரம் அசுத்த ரத்தத்தை வெளிப்படுத்தி, சன்ன லவங்கப்பட்டைச் சூரணம் ஒரு பங்கு, கறி மஞ்சள் சூரணம் இரண்டு பங்கு, இவ்விரண்டையும் கல்வத்திலிட்டுத் தேன்வார்த்து வெண்ணெய் போலரைத்துப் பற்றிட்டு அதன்மேல், வெற்றிலை அல்லது ஆமணக்கிலை வைத்துச் சீலைசுற்றி இறுகக் கட்டிவைக்க வேண்டும். அன்றும் அடுத்த இரண்டு நாளும் ஆடாமல், அசையாமல் எழுந்து நடக்காமல் உட்கார்ந்தபடியே யிருக்க வேண்டும். மேற்படி பற்றை அவ்வப்போது புதிது புதிதாய்ச் செய்து பற்றிட வேண்டும். ஆகாரம் இருமுறைதான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகாரத்தில் பெரும்பாலும் சாப்பிட வேண்டுவது பக்ஷியிறைச்சிப் பொரியலாயிருக்க வேண்டும். காலை மாலை யிரண்டு வேளையும் கோழி முட்டை யோகங்களை அல்லது அரைவேக்காடான கோழி முட்டைகளைச் சாப்பிடுவதுடன் உள்விதை போக்கின பேரீச்சங்காய்களை நெய்யில் சிவக்க வறுத்திடித்த சூரணங்களையும் சாப்பிட்டுவர வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் சோர்வு, தளர்ச்சி, கோணல், சுருங்கல், முதலியவை தீர்ந்து, அவை பலத்திறுகி நீண்டுபருத்து, ஆண்மைக்கு ஒப்பற்றதாயிருக்கும்.

மேற்கண்ட வியாதிகளுடன் இந்திரியவொழுக்கும் சேர்ந்திருந்தால், அடியிற் கூறப்பட்ட சூரணத்தைச் சாப்பிடவேண்டும்.

சூரணம்

உலர்த்தின 90 கிராம் கருவேலங்காயைப் பசுவின் நெய்யில் பொரித்தெடுத்துச் சூரணித்து அதற்குச் சமன் நாட்டுச்சருக்கரை சேர்த்தரைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

மாத்திரை- வேளைக்கு 12-18 கிராம் விகிதம் காலை மாலை யிருவேளையும் சாப்பிட்டுவர, மேற்படி வியாதி தீரும்.

4. பிரதான அங்கங்களின் பாகம் சிறுத்திருந்தால் அவற்றின் அடியின் சுற்றுப்புறத்தில் மூன்று அட்டைகளையும், அது சிறுத்திருக்கும் பாகத்து மத்தியின் சுற்றுப்புறத்தில் மூன்றையும், அவற்றின் நுண்ணியபாகங்கள் தவிர அவற்றின் முடியின் சுற்றுப்புறத்தில் மூன்றையும் கடிக்கவிட்டு, முன்சொல்லியபடி அசுத்த ரத்தத்தைப்போக்கி, பின்பு, லவங்கம், அக்கராகாரம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம் இவற்றைக் கலந்து கல்வத்திலிட்டு 6 மணி நேரம் நன்றாயரைத்து வழித்தெடுத்துச் சிமிழில் அடைத்துக் கொண்டு, அங்கு மேல்பூசி, பிரதி தினமும் ஒரே தடவை வெற்றிலை அல்லது ஆமணக்கிலை சுற்றிக் கட்ட வேண்டும். முன்சொல்லிய கிரமப்படியிருந்து பத்தியங்காத்து, பத்து நாள் இப்படிச் செய்துவந்து, மறுபடியும் அட்டைகளைவிட்டு அப்படியே பத்தியமாயிருக்க வேண்டும். இவ்விதம் இரண்டு அல்லது மூன்று தடவை சமயத்திற்கு ஏற்றவண்ணம் செய்ய வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால், அல்லது வேறு காரணத்தால் சமமற்றுச் சிறுத்துப் பருத்த அங்கங்கள். அப்பாகங்களின் அவ்வொழுங்கீனங்கள் நீங்கி, பூரித்துப் பருத்துப் பலப்பட்டு. ஆண்மையுண்டாய், இல்வாழ்க்கை யநுபவத்திற்கு ஏற்றதாயிருக்கும்.

5. தேக பலத்திற்கும் வியாதி பலத்திற்கும் தக்கபடி 7-9 அட்டைகளை ஆண் அங்க நுண்ணிய பாகம், தையல் ஆகியவை தவிர, அதன் அடி, நடு, முடி ஆகிய பாகங்களில் முன்சொல்லிய கிரமப்பிரகாரம்விட்டு அசுத்த ரத்தத்தைப் போக்கி, கீழ்க்குறித்த பற்றைப்போட்டு வரவேண்டும்.

பற்று

வாலுமுவை யரிசிக் குழித்தைலம், அப்போது அறுத்த யௌவனச்சேவலின் இரத்தம், கழுதை மூத்திரம் இவை வகை ஒன்றுக்கு

35 கிராம் இந்திரகோபபூச்சிச் சூரணம் 20 கிராம் லவங்கப்பட்டை, லவங்கம், அக்கராகாரம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 10 கிராம்.

செய்முறை- இவற்றில் முந்தின மூன்றையும் ஒன்றாய்க் கலந்து, மற்றவைகளையும் அதிற்போட்டு நன்றாயரைத்துக் கொள்ள வேண்டும்.

இப்பற்றை மாத்திரம் பிரதிதினமும் காலையில் ஒரு வேளை பத்து நாள் வரையும் போட்டு வந்து, பதினோராம் நாள், 5-6-7 அட்டைகளைக் கடிக்கவிட்டு அசுத்த ரத்தத்தைப் போக்கி முந்தினபற்றை அம்முறையே போட வேண்டும். பின்பு, மூன்றாந்தடவையும் இப்படியே செய்துவர வேண்டும்; பெரும்பாலும் மூன்று தடவை செய்ய நேராது. இரண்டு தடவையிலேயே குணமாம்.

உபயோகம்- சுருங்கி, மெலிந்து, தளர்ந்து, சோர்ந்து, இல்வாழ்க்கைக்கு நிர்வாக பலமற்றுக் கோணின அங்கங்கள் நீண்டு பலத்துப் பருத்து, இறுகி, முறுக்கேறி, ஆண்மை பராக்கிரமம் பெற்றோங்கும்.

6. தேகசக்திக்கும் வியாதி பலத்திற்கும் ஏற்ற விதமாய் 5-7 அட்டைகளை மூன்காட்டிய கிரமப்படி கடிக்கவிட்டு, ரத்தத்தை வயிறு நிரம்பப் பூர்த்தியாய்க்குடித்தபின் அவை தாமே வசந்தப்பிக் கீழே விழுந்தபின்பு, லவங்கப்பட்டை, கஸ்தூரி மஞ்சள் இவற்றின் சூரணம் தனித்தனி சமனெடை யெடுத்து, மறுபடியும் ஒன்றாகக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து, அரைப்பலம் இக்கலவையிலெடுத்து, ஆண் அங்கத்தின் மேற்றூவி, வெற்றிலை அல்லது ஆமணக்கிலையிட்டுக்கட்டி அமுக்கராக்கிழங்குச்சூரணம், சிதைத்த சாரப்பருப்பு, ஆளிவிதைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், வாழுலுவையரிசி, எருதுக்கொழுப்பு, புலிக்கொழுப்பு இவை வகை ஒன்றுக்கு 12 கிராம் ஆகிய இவைகளையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்திடித்து, மெல்லிய வஸ்திரத்தில் நன்கு பொட்டணமாய்க் கட்டி கால்படி பசுவின் பாலைக்காய்ச்சி அதில் ஒரு பொட்டணத்தை நனைத்து, இளஞ்சூடாயிருக்கும் போதே ஒற்றிடங்கொடுக்க வேண்டும்.

இவ்விதம் ஒருவாரம் செய்து தீர்ந்தபின், கீழ்க்கண்ட சுடர்த்தைலத்தில் ஓர்குன்றியெடை வெற்றிலையில் அல்லது ஆமணக்கிலையில் தடவி அதன்மேல் சுற்றிப் பட்டி கட்டி வைக்க வேண்டும். பிரதிதினமும் ஒவ்வொரு தடவையாக இரண்டு வாரந்தனையும் செய்துவர வேண்டும்.

சுடர்த் தைலம்

பாதரசம் 4 கிராம், தாளகம், மனோசிலை, நெல்லிக்காய்க் கெந்தகம், நாட்டு வெண்காரம், சங்குப்பாஷாணம், கௌரிப்பாஷாணம் இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், பசுவின் நெய் 35 கிராம்.

செய்முறை- இவற்றில் பாதரசம் தவிர, மற்ற சரக்குகளையெல்லாம் நன்றாகப் பொடித்து, ஒன்றாகக் கலந்தரைத்து நெய்வார்த்துப் பிசறி, வஸ்திரத் துண்டில் பொதிந்து திரியாக்கி வைத்துக் கொண்டு, பாதரசத்தை ஓர் பீங்கானிலிட்டு பாகப்படி வடிக்கும் சுடர்த்தைலம் ரசத்தில் படும்படி வடிந்தபின், ரசம் நன்றாக மசிந்து போகும்படி வெள்ளெருக்கம் கொம்பாற் கடைந்தெடுத்துப் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப்பிரயோக முதலிய மற்றெவ்விதத் துஷ்டக்கிரியைகளால் ஆண் அங்கங்களுக்குச் சம்பவித்து, தீராதனவென்று அனேகரால் கைவிடப்பட்ட மஹாகொடிய நோய்களனைத்தும், முன்சொல்லியபடி அட்டைவிட்டு, ஒற்றிடங்கொடுத்து, மேல்கண்ட தைலத்தை அங்குபூசி, வெற்றிலை அல்லது ஆமணக்கிலை சுற்றி பட்டிகட்டி வருவதனால் நிவர்த்தியாய், அடங்கா விம்மிதங் கொண்டு பூரித்துப் புளகித்து, சுபாநுபவ இன்பத்திற் கேதுவாம்.

அர்க்கக்ஷிரப் பிரயோகங்கள்

இவற்றைப் பற்றி இங்குப் பிரஸ்தாபிக்குமுன் நண்பர்களுக்குச் சில விஷயங்களைக் குறிப்பிடுவோம்.

நண்பர்களே!

முஷ்டிப்பிரயோக முதலிய துஷ்டக்கிரியைகளால் பலவிதத் துஷ்டவியாதிகள் நேரிட்டு இவற்றால் துன்புற்று வருந்திப் பரிதாபிப்பவரில், சிலருக்குச் செய்யும் எவ்விதச் சிகிச்சைகளாலும் அவை தீராமல், நம்பிக்கையற்றிருப்பதை நாம் பிரத்தியக்ஷப் பிரமாணமாகக் கண்டு வருகிறோம். ஒன்றிலும் தீராத கொடிய வியாதிகளுக்குக் கடின சிகிச்சை செய்ய வேண்டியதும், அத்தியாவசியக மாதலாலும், இங்கெழுதப்படும் எருக்கம்பால் சிகிச்சை, சற்று வேகமான தென்றாலும் இதனால் அத்தகையோர் பலர் பலப்பிராப்தி யுற்றிருத்தலாலும் அவைகளையும் இங்கெழுதத் துணிந்தோம்.

எருக்கின் சுபாவ லக்ஷணமும் அதன்பாலை உபயோகிக்கும் விதமும்

கட்டாந்தரையில் அல்லது கற்பாங்கான நிலத்தில் முளைத்திருக்கும் எருக்கே சிகிச்சைக்கு ஏற்றது. மணல் பாங்கான நிலத்தில் முளைத்திருப்பது அதற்கு ஏற்றதல்ல. அடி பருந்து அடர்ந்து படர்ந்து ஆழ்ந்து வேரோடி யிருப்பதுடன் அதன் கீழ் எலிவளை முதலியவைகள் இருக்க வேண்டும்.

மழைக்காலத்தில் எருக்கில் நீர்த்தன்மை அதிகரித்திருக்கு மாகையால், அதன்பால் சிகிச்சைக்கு அதிக சிரேஷ்டமானதல்ல. மழைக்கால கடைசியில்

எருக்கம்பால் சமரசகுணமாயிருக்கும். அக்காலத்தில் எடுப்பது உத்தமம். இதனை உபயோகிக்குங் காலத்தில் குளிர்ந்த காற்று, குளிர்ந்த ஜலஸ்நானபானம்; குளிர்ச்சியான பதார்த்தங்கள், புளிப்பு, இனிப்பு, உவர்ப்பு ஆகிய வஸ்துக்கள், பசுவின் பால் ஆகிய இவற்றை ஒழித்துவிட வேண்டும். கோதுமை ரொட்டியுடன் கொஞ்சம் நாட்டுச்சருக்கரை சேர்த்துச் சாப்பிட்டு, அதன்மேல் வெந்நீர் குடிக்க வேண்டும். எருக்கம்பாற் பிரயோகத்தைப் பெரும்பான்மையாய் ஞாயிறு, செவ்வாய் ஆகிய இந்நாட்களில் ஆரம்பிக்க வேண்டும்; எருக்கின் வேரிலும் அதன் பூவிலும் எடுக்கும் பாலே சிகிச்சைக்கு விசேஷமானது.

பொதுவாய் அர்க்கக்ஷீரப் பிரயோகத்தால் தீரும் வியாதிகளாவன:- குளிர்ச்சி, கொழுமை, கபம், வாயு, விஷநரம்பு ஆகிய இவற்றின் சம்பந்தமான வியாதிகளும், முக்கியம் முஷ்டிப்பிரயோகத்தால் உண்டான ஆண் அங்கங்களின் சோர்வு, அவற்றின் நரம்புத் தளர்ச்சி, பக்ஷவாத சம்பந்தமான அவற்றின் நரம்புகளின் தளர்ச்சி ஆகியவைகளுமே. இவ்வியாதிகள் ஒன்றிலும் தீராமல் கைவிடப்பட்டாலும், ஸர்வவல்ல கடவுளின் கிருபையால் இச்சிகிச்சையால் தீர்ந்திருக்கின்றன.

1. ஒரு பிடியுப்பை, கால்படி வெந்நீரில் கரைத்து அதனால் முதல் முதல் ஆண் அங்கத்தை நன்றாகக் கழுவிச் சுத்தி செய்து, உரத்த இரட்டுத் துணியால் மெதுவாக அழுத்தித் துடைத்து, அது கொஞ்சம் சிவந்தவுடன், கால் பலம் பசுவின் வெண்ணெயை அல்லது நெய்யை அதன் மேல் பூசி, அதன் நுண்ணியபாகம் தையலாகிய இவை தவிர, மேற்சொல்லிய லக்ஷணங்களுடைய எருக்கம்பால் 1 கிராம் சொட்டும்படி விட்டு, சிற்றாமணக்கெண்ணையில் மெல்லிய பட்டுத்துணியை நனைத்து அதன்மேற் சுற்றி, பட்டிபோல் கட்டிவைக்க வேண்டும். இவ்விதம் மூன்றுநாள் செய்ய வேண்டும். முதல் இரண்டு நாளைக்குள் கொப்பளங் கண்டுவிட்டால் நிறுத்த வேண்டும். அசைந்தெழுந்து திரியாமல், முன் கிரமப்பிரகாரம் பத்தியங் காக்க வேண்டும்; இடையில் இரண்டு மூன்று வாரம் போகவிட்டு முன்போலச் செய்ய வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் சோர்வு, துவளல், தளர்ச்சி முதலியவை தீர்ந்து, நரம்புகள் பலப்பட்டு ஆண்மைக்கான சக்தியுண்டாம். புருஷத்தன்மை யற்றவர்களும் புருஷ யோக்கியதை பெற்று இல்வாழ்க்கை யுடையவர்களாவார்கள்.

2. சுடப்படாமல் வெய்யிலில் உலர்த்தின பச்சை மண்பாத்திரத்தில் மேற்படி எருக்கம்பாலைக் கறந்திட்டு நிழலில் உலர்த்தி நன்றாயுலர்ந்தபின் அப்பாத்திரத்தையுடைத்து அதில் உறைந்திருப்பதைக் கத்தியால் சுரண்டியெடுத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்த வேண்டும். இதில் 1 கிராம் எடுத்து 3 கிராம் வெண்ணெயில் நன்றாக மத்தித்து, பிரதான

அங்கத்தின் நுண்ணியபாகம், தையல் நீங்க, மற்ற பாகத்தில் பூசி, ஆமணக்கிலை வைத்துக் கட்டி, மறுநாள் அவிழ்த்து, முன்போல செய்து பூசிக் கட்ட வேண்டும். இவ்விதம் மூன்றுவாரம் செய்ய வேண்டும். மத்தியில் கொப்பளங்கண்டால், நிறுத்திவிட வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாகும் பல வியாதிகள் தீரும்.

3. நரம்பு வளைந்திருக்கும் ஸ்தானத்தில் மத்தியில் கூரிய கத்தியால் சந்திரார்த்த வடிவமாய் தொலியில் அழுந்தாமல் மேல் மேலாகக் கீறி, அந்த ஸ்தானத்திற்குத் தக்கபடி மேற்படி எருக்கம்பாலில் பஞ்சை நனைத்துப் புரட்டி, அதன்மேலே ஆமணக்கிலை சுற்றிக் கட்ட வேண்டும். அங்கு மற்றவிடங்களில் பால் படாமல் தோல் முதலியவற்றால் சுற்றிக் கட்டி வைக்க வேண்டும். பன்னிரண்டு மணி நேரத்திற்குப் பின் அவிழ்த்து முன் பஞ்சை நீக்கி, முன் மாதிரியாகப் புதிதாகச் செய்த பஞ்சைவைத்துக் கட்ட வேண்டும். இவ்விதம் 3-4 நாள் வரையும் செய்துவர, அங்கு கொப்பளமுண்டாய், துர்நீர்வெளிப்பட ஆரம்பிக்கும். அதனை நிறுத்தாமலிருக்க வேண்டும். எழுந்து திரியாமல் இருந்தபடியே யிருந்து, முன் சொல்லியபடி பத்தியங்காக்க வேண்டும், நீர்வெளிப்படுதல் நின்றபின், ரணத்தின்மேல் பசுவின் நெய் அல்லது ஆமணக்கு நெய் தடவிவந்தால், அது ஆறிக் குணப்படும்.

உபயோகம்- நரம்புகளிலுள்ள துர்நீர் வெளிப்பட்டு, சுத்த ரத்தவோட்டமுண்டாய், அவற்றின் வளைவு நிமிர்ந்து பலப்பட்டு, ஆண்மைசக்தி யுண்டாகும்.

நிர்விஷா அர்க்க க்ஷீரத்திலா

மேற்கண்டபடியுள்ள எருக்கம்பால், ஆமணக்கு நெய், எள்ளெண்ணெய் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், கெட்டித்தேன் 8 கிராம், நிர்விஷா 3 கிராம், சேங்கொட்டைப் பூப்புடத் தைலம் 2 கிராம்.

செய்முறை- இவற்றில் நிர்விஷாவைக் கல்வத்திலிட்டுப் பொடித்து நன்றாகத் தூள் செய்து, மற்றவைகளையும் சேர்த்து, 12 மணி நேரம் அரைத்துச் சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்- இதில் கொஞ்சம் எடுத்து, அவசியமான நரம்புகளின் மேல்பூசி, வெற்றிலை அல்லது ஆமணக்கிலை சுற்றிப் பட்டிகட்ட வேண்டும், இவ்விதம் 2-3 வாரம் செய்ய முஷ்டிப்பிரயோக முதலியவற்றால் உண்டாகும் சோர்வு, தளர்ச்சி முதலியவை தீர்ந்து, அவை பலத்துரத்து, ஆண்மைசக்தி குன்றாமலிருக்கும்.

அர்க்கக்ஷீரத்திலா

மேற்கண்டபடியுள்ள எருக்கம்பால் இரண்டு பங்கு, கெட்டித்தேன், பசுவின் நெய் இவை வகை ஒன்றுக்கு ஒரு பங்கு.

செய்முறை:- இவை யெல்லாவற்றையும் கல்வத்திற் போட்டு ஆறு மணிநேரம் நன்றாயரைத்து வழித்தெடுத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்:- இதில், கொஞ்சம் எடுத்து, நோயுற்ற ஸ்தானங்களின் மேல் பன்னிரண்டு மணிக்கொரு தடவை பூசி, அதன்மேல் வெற்றிலை அல்லது ஆமணக்கிலை சுற்றிக் கட்ட வேண்டும். இவ்விதம் இரண்டொரு வாரம் வரையும் செய்து வர, அங்குள்ள தளர்ச்சி முதலியவை தீரும்.

இது பரியந்தம், ஆண் ஜனன இந்திரிய முக்கிய கருவியின் சிகிச்சையில் பிரதானமான ஆண் அங்கத்தின் மேல் பூச்சு மருந்து, திலா, பட்டி முதலியவற்றைக் கூடினமட்டும் தெளிவாகவும், அநுபவ சித்தமாகவும் சொன்னோம். மேற்கண்ட சிகிச்சை செய்து கொள்வதுமின்றி, அதற்கு முந்தி அல்லது அதற்குப் பிந்தி அவசியம் உள்ளுக்கும் ஔஷதம் சாப்பிட வேண்டுவது அவசியம். ஏனெனில், அப்படிச் சாப்பிடாதவரையில், பூரணசுகம் பெற வாய்க்காது; ஆகையால், முக்கியமாக அதைப்பலப்படுத்தி, ஆண்மைசக்தியை யுண்டுபண்ணும் அநுபவயுக்தமாகக் கண்டறிந்த நானாவித யோகங்களை இங்கெழுதுவோம்.

மனோரஞ்சித மஞ்சூர * நாஷ்தா

வறுத்தரைத்த கொண்டைக் கடலைப் பருப்பின்மா 60 கிராம், பசுவின் நெய் 35 கிராம், பொறுக்கிச் சுத்தப்படுத்தி ஜலம் வார்த்துக் கழுவியுலர்த்தின பருத்திக்கொட்டை 60 கிராம், போஸ்துக்காய் 20 கிராம், சீனிச்சருக்கரை 100 கிராம், பாலாடை 105 கிராம்.

செய்முறை- இவற்றில் நெய்யைக் காய்ச்சி அதில் கடலைமாவைப் போட்டுச் சிவக்கவறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். பருத்திக் கொட்டையையும், போஸ்துக்காயையும் கொஞ்சம் ஜலத்தில் நாலுசாமம் ஊறவிட்டு, அவ்விரண்டையும் அம்மியிலிட்டரைத்தெடுத்து ஜலத்திற் கரைத்து வடிகட்டிச் சக்கை போக்கின பாலில் மேற்படி சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சி, பதத்தில் முன் சித்தப்படுத்தின கடலைமாவைப் போட்டுக் கிண்டிக் கிளறிக் கீழிறக்கி, பாலாடையும் கலந்து பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- இராப்போஜனம் குறைந்த அளவாகச் சாப்பிட்டு மூன்று மணிநேரம் சென்றபின், முன்சொல்லிய சிற்றுண்டி அவ்வளவையும்

* நாஷ்தா என்பது சிற்றுண்டி.

சாப்பிட வேண்டும். இதன்பின் ஒன்றும் சாப்பிடலாகாது. தாகங் கண்டால் காய்ச்சின பசுவின்பால் மாத்திரம் குடிக்க வேண்டும். இராப் போஜனத்திற்குப் பதிலாக இதையே சாப்பிடுவதனால் அதிகக் குணந்தரும். இவ்விதம் தொடர்ந்து புதிது புதிதாகச் செய்து கொண்டு சாப்பிட்டு வரவேண்டும்.

உபயோகம்- நரம்புகளின் சோர்வு தீர்ந்து, சுபாவ எழுச்சியுண்டாகி இரத்தச் சத்தூறி இயல்பான நிலையில் ஆண்மை பலம் அதிகரிக்கும்.

கோசபலகாரி நாஷ்தா

தேவையான மட்டும் கோழி முட்டைகளை யுடைத்துப் பீங்கானிலூற்றி, முட்டையொன்றிற்கு 500 மி.கிராம் விழுக்காடு குங்குமப்பூவைப் பன்னீர் வார்த்தரைத்து அதில் சேர்த்து ஒரு மணிநேரம் கையாலாவது அல்லது குச்சியால் செய்த துடுப்பாலாவது நன்றாக மத்தித்து அல்லது கடைந்து, சக்தியுண்டாகும் பக்ஷத்தில் அம்பர் 1 கிராம், கஸ்தூரி 1 கிராம் ஆகிய இவ்விரண்டையும் பொடித்து அதில்போட்டு, முட்டை யொன்றுக்கு 105 கிராம், *சீனிச் சருக்கரைப்பாகு அல்லது **பன்னீர் ஷர்பத் சேர்த்து இவையெல்லாவற்றையும் ஓர் வாயகன்ற பாத்திரத்தில்விட்டு, கரிநெருப்பின் மேல் வைத்துக் கைவிடாமல் துழாவி வரவேண்டும். பொங்குமானால், குளிர்ந்த ஜலம் தெளிக்க வேண்டும். இப்படி இரண்டு மூன்று கொதி வந்த பின், உரத்தவலைத் துணியால் வடிகட்ட வேண்டும். ஏதேனும் துணியில் சக்கை திப்பி மீந்திருந்தால், அதில் கொஞ்சம் முன்பாகப்படி செய்த ஷர்பத் சேர்த்துக் காய்ச்சி வடித்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் வடிகட்டினதில் தேவையான அளவு கல்கண்டுத் தூளிட்டு, பாகுபதமாகக் காய்ச்சி பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- ஜீரணசக்திக்கு ஏற்றபடி, காலை மாலை இருவேளையும் சாப்பிட்டு வரலாம்.

உபயோகம்- விந்தூறி, நரம்புகளின் சோர்வு நீங்கி, சுபாவ விம்மலுண்டாகி ஆண்மைசக்தி யதிகப்படும்.

** 175 கிராம் சீனிசருக்கரையில் 105 கிராம் ஜலம் வார்த்து,* பாகுபதமாகக் காய்ச்சிக் கொள்வதே சீனிசருக்கரைப் பாகாம்.

*** 175 கிராம் சீனிச்சருக்கரையில் 140 கிராம் அல்லது 175 கிராம்* பன்னீர் வார்த்துப் பாகுபதமாகக் காய்ச்சிக் கொள்வதே பன்னீர் ஷர்பத்தாம்.

வேறு

புதிதான கோழி முட்டை 50, பன்னீர் 140 கிராம், குங்குமப்பூ 2 கிராம், கஸ்தூரி 1 கிராம், சீனிச்சருக்கரை 140 கிராம், பசுவின் வெண்ணெய் 140 கிராம்.

செய்முறை- இவற்றில், முட்டைகளை யுடைத்தூற்றி, கையால் நன்றாக மத்தித்து, வஸ்திரத்திலிட்டு வடித்து, அதில் குங்குமப்பூவையும் கஸ்தூரியையும் பன்னீர் வார்த்தரைத்து அதில் கலந்து, மீந்ததையும் அதில் ஊற்றிச் சீனிசேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சும்போது, வெண்ணெயைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுத் துழாவி, வெண்ணெயனைத்தும் போட்டானபின், பதத்திற் கீழிறக்கி, பீங்கான் பாத்திரத்தில் வைத்துப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- இதில், ஜீரணசக்திக்கு ஏற்ற அளவாக காலை மாலை இருபொழுதும் ஒருவாரம் அல்லது அதற்கு அதிகம் இச்சிற்றுண்டி முழுவதையும் சாப்பிட வேண்டும்.

உபயோகம்- மேற்சொல்லிய குணங்களுண்டாம்.

கோசாதி பலகாரி பர்பி

அரைவேக்காடாய் வேகவைத்த கோழிமுட்டை மஞ்சட்கரு 25, பசுவின்பால் 1 கிலோ, பசுவின்நெய் 210 கிராம், கல்கண்டுத்தூள் 710 கிராம், வறுத்திடித்த ஏலக்காய்ச் சூரணம் 13 கிராம், மூங்கிலுப்புச் சூரணம் 3 கிராம், லவங்கப்பட்டைச் சூரணம் 2 கிராம், குங்குமப்பூ 1 கிராம்.

செய்முறை- இவற்றில், பாலை ஓர் பாத்திரத்தில் வார்த்து அடுப்பேற்றிக் கைவிடாமல் துழாவிக் காய்ச்சி, கெட்டியாகத் திரளும் பதத்தில் நெய்யை யுருக்கி வடித்து ஊற்றி, மேற்படி சரக்குகளைப் பொடித்துத் தூவி, கல்கண்டுத் தூளும் போட்டு நன்றாகக் கிண்டிக் கிளறி, மெதுவா யெரித்து வரவேண்டும். எல்லாம் சேர்ந்து திரளும் பதத்தில், குங்குமப்பூவைப் பன்னீர் வார்த்தரைத்து சூரணங்களையுங் கலந்து, பாகில் தூவி, கீழ்மேலாகப் புரட்டி நன்றாக மிஸ்ரமித்து 60-70 கிராம் கொள்ளத்தக்க தண்ணீர்படாத புதுப்பாத்திரத்தில் பாகைவார்த்து, ஆறிக்கெட்டியானபின் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- இதில் 100-135 கிராம் காலை மாலை இருவேளையும் கோதுமை ரொட்டியுடன் சாப்பிட்டு, முன் சொல்லப்பட்ட மயூரகுழித் தைலத்தை, நீர்க்குண்டிக்காய் ஸ்தானம், பீஜங்கள், கோசம் முதலியவற்றில் பூசிவர வேண்டும்.

உபயோகம்:- இரத்தச்சத்துண்டாய், நரம்புகளின் சுபாவத்தொழிலுமுண்டாய், இல்வாழ்க்கை நிர்வாகசக்தி யதிகரித்துண்டாம்.

சாப்பிட வேண்டும். இதன்பின் ஒன்றும் சாப்பிடலாகாது. தாகங் கண்டால் காய்ச்சின பசுவின்பால் மாத்திரம் குடிக்க வேண்டும். இராப் போஜனத்திற்குப் பதிலாக இதையே சாப்பிடுவதனால் அதிகக் குணந்தரும். இவ்விதம் தொடர்ந்து புதிது புதிதாகச் செய்து கொண்டு சாப்பிட்டு வரவேண்டும்.

உபயோகம்- நரம்புகளின் சோர்வு தீர்ந்து, சுபாவ எழுச்சியுண்டாகி இரத்தச் சத்தூறி இயல்பான நிலையில் ஆண்மை பலம் அதிகரிக்கும்.

கோசபலகாரி நாஷ்தா

தேவையான மட்டும் கோழி முட்டைகளை யுடைத்துப் பீங்கானிலூற்றி, முட்டையொன்றிற்கு 500 மி.கிராம் விழுக்காடு குங்குமப்பூவைப் பன்னீர் வார்த்தரைத்து அதில் சேர்த்து ஒரு மணிநேரம் கையாலாவது அல்லது குச்சியால் செய்த துடுப்பாலாவது நன்றாக மத்தித்து அல்லது கடைந்து, சக்தியுண்டாகும் பக்ஷத்தில் அம்பர் 1 கிராம், கஸ்தூரி 1 கிராம் ஆகிய இவ்விரண்டையும் பொடித்து அதில்போட்டு, முட்டை யொன்றுக்கு 105 கிராம், *சீனிச் சருக்கரைப்பாகு அல்லது **பன்னீர் ஷர்பத் சேர்த்து இவையெல்லாவற்றையும் ஓர் வாயகன்ற பாத்திரத்தில்விட்டு, கரிநெருப்பின் மேல் வைத்துக் கைவிடாமல் துழாவி வரவேண்டும். பொங்குமானால், குளிர்ந்த ஜலம் தெளிக்க வேண்டும். இப்படி இரண்டு மூன்று கொதி வந்த பின், உரத்தவலைத் துணியால் வடிகட்ட வேண்டும். ஏதேனும் துணியில் சக்கை திப்பி மீந்திருந்தால், அதில் கொஞ்சம் முன்பாகப்படி செய்த ஷர்பத் சேர்த்துக் காய்ச்சி வடித்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் வடிகட்டினதில் தேவையான அளவு கல்கண்டுத் தூளிட்டு, பாகுபதமாகக் காய்ச்சி பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- ஜீரணசக்திக்கு ஏற்றபடி, காலை மாலை இருவேளையும் சாப்பிட்டு வரலாம்.

உபயோகம்- விந்தூறி, நரம்புகளின் சோர்வு நீங்கி, சுபாவ விம்மலுண்டாகி ஆண்மைசக்தி யதிகப்படும்.

** 175 கிராம் சீனிசருக்கரையில் 105 கிராம் ஜலம் வார்த்து,* பாகுபதமாகக் காய்ச்சிக் கொள்வதே *சீனிசருக்கரைப்* பாகாம்.

*** 175 கிராம் சீனிச்சருக்கரையில் 140 கிராம்* அல்லது *175 கிராம்* பன்னீர் வார்த்துப் பாகுபதமாகக் காய்ச்சிக் கொள்வதே பன்னீர் ஷர்பத்தாம்.

வேறு

புதிதான கோழி முட்டை 50, பன்னீர் 140 கிராம், குங்குமப்பூ 2 கிராம், கஸ்தூரி 1 கிராம், சீனிச்சருக்கரை 140 கிராம், பசுவின் வெண்ணெய் 140 கிராம்.

செய்முறை- இவற்றில், முட்டைகளை யுடைத்தூற்றி, கையால் நன்றாக மத்தித்து, வஸ்திரத்திலிட்டு வடித்து, அதில் குங்குமப்பூவையும் கஸ்தூரியையும் பன்னீர் வார்த்தரைத்து அதில் கலந்து, மீந்ததையும் அதில் ஊற்றிச் சீனிசேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சும்போது, வெண்ணெயைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுத் துழாவி, வெண்ணெயனைத்தும் போட்டானபின், பதத்திற் கீழிறக்கி, பீங்கான் பாத்திரத்தில் வைத்துப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- இதில், ஜீரணசக்திக்கு ஏற்ற அளவாக காலை மாலை இருபொழுதும் ஒருவாரம் அல்லது அதற்கு அதிகம் இச்சிற்றுண்டி முழுவதையும் சாப்பிட வேண்டும்.

உபயோகம்- மேற்சொல்லிய குணங்களுண்டாம்.

கோசாதி பலகாரி பர்பி

அரைவேக்காடாய் வேகவைத்த கோழிமுட்டை மஞ்சட்கரு 25, பசுவின்பால் 1 கிலோ, பசுவின்நெய் 210 கிராம், கல்கண்டுத்தூள் 710 கிராம், வறுத்திடித்த ஏலக்காய்ச் சூரணம் 13 கிராம், மூங்கிலுப்புச் சூரணம் 3 கிராம், லவங்கப்பட்டைச் சூரணம் 2 கிராம், குங்குமப்பூ 1 கிராம்.

செய்முறை- இவற்றில், பாலை ஓர் பாத்திரத்தில் வார்த்து அடுப்பேற்றிக் கைவிடாமல் துழாவிக் காய்ச்சி, கெட்டியாகத் திரளும் பதத்தில் நெய்யை யுருக்கி வடித்து ஊற்றி, மேற்படி சரக்குகளைப் பொடித்துத் தூவி, கல்கண்டுத் தூளும் போட்டு நன்றாகக் கிண்டிக் கிளறி, மெதுவா யெரித்து வரவேண்டும். எல்லாம் சேர்ந்து திரளும் பதத்தில், குங்குமப்பூவைப் பன்னீர் வார்த்தரைத்து சூரணங்களையுங் கலந்து, பாகில் தூவி, கீழ்மேலாகப் புரட்டி நன்றாக மிஸ்ரமித்து 60-70 கிராம் கொள்ளத்தக்க தண்ணீர்படாத புதுப்பாத்திரத்தில் பாகைவார்த்து, ஆறிக்கெட்டியானபின் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- இதில் 100-135 கிராம் காலை மாலை இருவேளையும் கோதுமை ரொட்டியுடன் சாப்பிட்டு, முன் சொல்லப்பட்ட மயூரகுழித் தைலத்தை, நீர்க்குண்டிக்காய் ஸ்தானம், பீஜங்கள், கோசம் முதலியவற்றில் பூசிவர வேண்டும்.

உபயோகம்:- இரத்தச்சத்துண்டாய், நரம்புகளின் சுபாவத்தொழிலுமுண்டாய், இல்வாழ்க்கை நிர்வாகசக்தி யதிகரித்துண்டாம்.

கோசஸ்தூல கோசப் பிரயோகம்

கோழி முட்டை யொன்றைச் சிறுகத் துவாரஞ் செய்து, அதற்குள்ளிருக்கும் வெள்ளைக் கருவை நீக்கி, அது நிரம்ப, காய்ச்சி நுரைநீக்கிச் சுத்திசெய்த தேன்விட்டு, பெருலவங்கப்பட்டைச் சூரணம், அக்கராகாரச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், இவ்விரண்டையும் கலந்து அதில் போட்டு, கரிநெருப்பின்மேல் வைத்து, கொஞ்சம் வெந்த பின் எடுத்து, தோலைப் போக்கிச் சாப்பிட வேண்டும். இவ்விதம் ஜீரண சக்திக்கேற்றபடி ஐந்து அல்லது ஆறு முட்டைகளை ஒரே தடவையில் பாகப்படுத்தி, ஒரு வாரத்திற்குள் நாற்பது முட்டைகளைச் சாப்பிட வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் நரம்புகளின் சோர்வு முதலியவை நீங்கி, சுபாவ எழுச்சியுடன் ஆண்மை நிர்வாக பலமுண்டாம்.

உம்பல கெம்பீரத் தைலம்

இடிக்காமல் யந்திரத்தில் வைத்தியக்கிப் பிழிந்த எலுமிச்சம் பழரசம் 400 கிராம், மேல்தோல் நீக்கியிடித்துப் பிழிந்து சுண்ணாம்பு நீக்கின இஞ்சிரசம், மஞ்சள் முள்ளங்கி கிழங்குரசம், திராக்ஷாபானம் இவை வகை ஒன்றுக்கு 175 கிராம், முட்டை மஞ்சட் கரு 20, பருத்திக் கொட்டைப் பருப்பின் நெய் 210 கிராம், காய்ச்சி நுரை நீக்கிச் சுத்தி செய்த தேன் 700 கிராம்.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து மிஸ்ரமித்து, அடுப்பேற்றி மெதுவாயெரித்து இறுகின பதத்திலிறக்கி, பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- இதில் 60-70 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தில் உண்டாகும் நரம்புகளின் சோர்வு, தளர்ச்சி, மெலிவு, கோணல் முதலியவை தீர்ந்து, அவை இறுகிப் பலத்துப் பருத்து, நீண்டு நிமிர்ந்து ஆண்மைக்கு யோக்கியதை யுள்ளதாயிருக்கும்.

முஷ்டிரோக நிவாரண முட்டைப் பிரயோகம்

கோழிமுட்டை மஞ்சட் கரு 10, புறாமுட்டை, அடைக்கலாங்குருவி முட்டை இவை வகை ஒன்றுக்கு 20, கோதுமை மா கால்படி, சீனிசருக்கரை 700 கிராம், லவங்கப்பட்டைச் சூரணம் 12 கிராம், பசுவின் நெய்தேவையான அளவு.

செய்முறை- இவற்றில், முட்டைகளை யுடைத்து ஊற்றி, கோழிமுட்டை மஞ்சட்கருவையும், கோதுமைமாவையும் அதில் போட்டு நன்றாய்க் கலந்து பிசைந்து இஷ்டமான வரையும் பசுவின்நெய் ஒரு பாத்திரத்தில் வார்த்து, அடுப்பேற்றி மேற்படி கலவையையும் போட்டு வேகவைத்து நன்றாய் வெந்தபின், கீழிறக்கிச் சீனிசருக்கரையைச் சேர்த்துப் பிசைந்து அதில் லவங்கப்பட்டைச் சூரணத்தையும் கூட்டி மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- இவை ஜீரணசக்திக்கு ஏற்ற அளவாய் காலை மாலை இருவேளையும் சாப்பிட்டு வர வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாகும் சோர்வு முதலியவை தீர்ந்து, நரம்புகள் பலத்து முறுக்கேறிப் பருத்து, ஆண்மையுண்டாம்.

வேறு

கோழிமுட்டை மஞ்சட்கரு, புறாமுட்டை இவை வகை ஒன்றுக்கு 20, உரித்துத் தோல் போக்கின பெரும் வெங்காயம் 350 கிராம், சன்னராஷ்டச் சூரணம் 2 கிராம், உப்புத்தூள் 1 கிராம்.

செய்முறை:- இவற்றில், புறாமுட்டையை யுடைத் தூற்றி, அதில் கோழிமுட்டை மஞ்சட்கருவையும் சேர்த்து நன்றாய் மத்தித்து சன்னராஷ்டச் சூரணம், உப்புத்தூள் ஆகியவற்றையும் கூட்டி நன்றாய் மிஸ்ரமித்து அடுப்பேற்றி அரைவேக்காட்டில் இறக்கிக் கொள்ள வேண்டும். மேற்படி பெரும் வெங்காயத்தைச் சிறுக அரிந்து நெய்யில் சிவக்க வறுத்து மேற்படி கலவையும் கூட்டிக் கலந்து மறுபடியும் அடுப்பேற்றி இரண்டொருதரம் புரட்டி வெந்த பக்குவத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை:- இவை, ஜீரணசக்திக்கு ஏற்ற அளவு இரு வேளையும் சாப்பிட்ட வரவேண்டும்.

உபயோகம்:- முன் குறித்தவைக்காம்.

அதியோக ரோக நிவாரண பாயசம்

மேல்தோல் போக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு 11 மேல்தோல் போக்கின பிஸ்தாப்பருப்பு, மேல்தோல் போக்கின தேங்காய் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், ஏலரிசி, சன்ன லவங்கப்பட்டை, மேல்தோல் போக்கின சுக்கு இவை வகை 1க்கு 3 கிராம், கோழிமுட்டை மஞ்சட்கரு 5, பசுவின் நெய் 35 கிராம், சீனிசருக்கரை 50 கிராம்.

செய்முறை:- இவற்றில், முன்னைய ஏழு வஸ்துகளையும் அரைத்து, கொஞ்சம் சலத்திற் கரைத்து வடிகட்டிச் சக்கை போக்கி, சத்தையெடுத்துக்

கொள்ள வேண்டும். நிஷாஸ்தாவைப் பசுவின்பாலிற் கரைத்து, அதில் கோழிமுட்டைக் கருவைப்போட்டு நன்றாய் மத்தித்து முன் சித்தப்படுத்தின சத்தையும் சேர்த்து அடுப்பேற்றிச் சிறிதுநேரங் காய்ச்சி, நெய்வார்த்துத் துழாவி, சீனிசருக்கரையையும் கலந்து, பாயாசப் பதத்தில் கீழிறக்கி பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை:- இதை, ஜீரணசக்திக்கு ஏற்றவிதம் ஒரே தடவையில் அல்லது இரண்டு தடவையில் சிற்றுண்டியாக உட்கொள்ள வேண்டும். இதை அன்றன்று புதிதாயுஞ் செய்து கொள்ள வேண்டும்.

உபயோகம்:- மிதமிஞ்சின இல்வாழ்க்கையில் நேரிட்ட தேகச்சோர்வு தீர்ந்து, பலம் அதிகரிக்கும், இந்திரிய வொழுக்கும் நிலைப்பட்டு, விந்து ஸ்தம்பனமுண்டாம். முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாகும் சோர்வு முதலியவை தீர்ந்து, நரம்புகள் பலத்துவிம்மி ஆண்மைக்கு இணக்கமாயிருக்கும். தேகம் பூரிக்கும்.

வேறு

மேல்தோல் போக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, மேல்தோல் போக்கின பிஸ்தாப் பருப்பு, மேல்தோல் போக்கின தேங்காய், மேல்தோல் போக்கின சில்கோஜா பருப்பு, கசகசா, நிஷாஸ்தா இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், லவங்கப்பட்டை, சன்னராஷ்டகம், அக்கராகாரம், ஏலரிசி இவை வகை ஒன்றுக்கு 2 கிராம் அடைக்கலாங்குருவி முட்டைக்கருக்கள் 10, கோழி முட்டைக் கருக்கள் 4, மயில் முட்டைக்கருக்கள் 2, எருமைப்பால் பசுவின்பால் இவை வகை ஒன்றுக்கு 140 கிராம், பசுவின்நெய், கற்கண்டுத் தூள் இவை வகை ஒன்றுக்கு 105 கிராம்.

செய்முறை- இதனை, முன் பாகப்படி செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை- 175-210 கிராம், ஜீரணசக்திக்கு ஏற்றபடி குறைத்தும் கூட்டியும் சாப்பிட்டுவர வேண்டும்.

உபயோகம்- முன் சொல்லப்பட்ட குணங்களுடன் மூளையைப் பலப்படுத்தி, ஞாபகசக்தி முதலியவற்றை யுண்டாக்கும்.

லிங்க பலகாரி மங்கல மதுரம்

கோழிமுட்டை மஞ்சட்கரு 5, நிஷாஸ்தா 12 கிராம், எருமைப்பால் 210 கிராம்,பசுவின் பால் 1200 கிராம், திராக்ஷாபானம் அல்லது திராக்ஷாரசம் 60 கிராம். பசுவின் நெய் 105 கிராம், அக்கராகாரம், சன்ன லவங்கப்பட்டை ஜாதிக்காய், ஸாலாமிஸ்றி, சன்னராஷ்டம் இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், சீனிசருக்கரை 105 கிராம்.

செய்முறை- இவற்றில், நிஷாஸ்தாவை எருமைப் பாலிற் கரைத்துக் கொள்ள வேண்டும். அக்கராகார முதல் ஐந்து சரக்கையும்

அம்மியிலிட்டரைத்து பசுவின் பாலில் கரைத்து வடிகட்டிக் கொள்ள வேண்டும். கோழிமுட்டை மஞ்சட்கருவை நன்றாய் மத்தித்துக் கொள்ள வேண்டும். மேற்கண்ட மூன்றுவகையையும், திராக்ஷாபானம், நெய் ஆகியவற்றையும் நன்றாகக் கலந்து அடுப்பேற்றி மெதுவாயெரித்துக் காய்ச்சி, கைவிடாமல் துழாவி குழம்பு பதத்தில் இறக்கி; அகன்ற பீங்கான் பாத்திரத்தில் ஊற்றிக் குளிர்ந்த இடத்தில் வைக்க இறுகிப்போம்; பின்பு கத்தியால் துண்டுதுண்டாய் அறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- இதை, ஜீரணசக்திக்கு ஏற்றவிதம் 140-175 கிராம் * கற்கண்டுப் பாகுடனாவது, அல்லது காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின் பாலுடனாவது சாப்பிட்டு; மூன்று நாலு மணிக்குப் பிறகு போஜனம் செய்ய வேண்டும். தாகமெடுத்தால் காய்ச்சின பசுவினதுபால் குடிக்க வேண்டும். இவ்விதம் 10-30 நாள் சாப்பிட்டு வர வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் சோர்வு; தளர்ச்சி முதலியவை தீர்ந்து, நரம்புகள் பலப்பட்டு, எழுச்சியும் ஆண்மை சக்தியும் உண்டாம்.

வீரியாபிவிர்த்தி காஜர் முறப்பா

மேல்தோல், உள்நரம்பு முதலியவை போக்கிச் சுத்தி செய்த மஞ்சள் முள்ளங்கிக் கிழங்கு 350 கிராம், காய்ச்சி நுரைபோக்கிச் சுத்தி செய்த தேன், மேல்தோல் போக்கின சுக்கு, ஏலக்காய், ஜாதிக்காய், லவங்கம், லவங்கப்பட்டை,சன்னராஷ்டகம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், குங்குமப்பூ 3 கிராம் அம்பர் 2 கிராம்.

செய்முறை- இவற்றில் மேற்படி காஜரை சிறுசிறு துண்டாகச் செய்து மண்பாத்திரத்தில் போட்டு அடுப்பேற்றி, சற்று நேரம் வறுத்து முக்கால்பாகம் நீர் சுண்டின பக்குவத்தில் தேன் வார்த்துக் காய்ச்சி, கிழங்கு நன்றாய் வெந்தபின் சூரணங்களைக் கலந்து அதில் தூவி, கீழிறக்கி, குங்குமப்பூவையும், அம்பரையும் பன்னீர் வார்த்தரைத்து அதிற்கலந்து நன்றாய் மிஸ்ரமித்து, பீங்கான் பாத்திரத்தில் வைத்துப் பத்திரப்படுத்த வேண்டும். நீர்விட்டால், வெய்யிலில் வைத்துச் சுண்டச் செய்து கொள்ள வேண்டுமே தவிர, அடுப்பேற்றிக் காய்ச்சிச் சுண்ட வைத்துக் கொள்ளலாகாது.

மாத்திரை- 35 கிராம் வீதம் காலை மாலை இருபொழுதும் சாப்பிடலாம்.

---

* இதனையும் சீனிச்சருக்கரைப் பாகு முறைப்படி செய்து கொள்ள வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் இந்திரிய வொழுக்கு, சுகநீர்ப் பெருக்கு ஆகியவை தீர்ந்து, விந்தூறி சுபாவஸ்திதியிலாம். நரம்புகள் பலத்து, விம்மலுண்டாம், ஆண்மைசக்தி வீரியசக்தியுண்டாம்.

தீவிராபி விர்த்தி யமிர்தாதி லூபூப்

புதிதாய்க் கறந்த பசுவின்பால் படி 2, சுத்திசெய்த * சாதிலிங்கம் 12 கிராம், ஜாதிக்காய்ச் சூரணம் 10 கிராம், சீனிசருக்கரை 175 கிராம்.

செய்முறை- இவற்றில் பாலைக்காய்ச்சி, கைவிடாமல் துழாவி வரும்போது அது அரைப்பாகம் சுண்டிவருந் தருணத்தில், லிங்கத்தை நேரப்பொடித்த தூளையும், ஜாதிக்காய்ச் சூரணத்தையும் அதில் போட்டு முன்போல் துழாவி, நீர் சுண்டித் திரண்டு கெட்டியானபின் சீனிசருக்கரை சேர்த்து, நன்றாகக் கிண்டிக் கிளறிப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- 18, 24 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- மூளையின் துர்பலம், குளிர்ச்சி, கபம் இவை யதிகரித்துண்டாம் நோய்கள், நரம்பைப்பற்றின நோய்கள், இந்திரியவொழுக்கு ஆகியவை தீர்ந்து ஆண் நோய்கள் இந்திரியவொழுக்கு ஆகியவை நீங்கி, அவை பலப்பட்டு, சுபாவ எழுச்சியுண்டாய் விந்தூறி, ஆண்மை சக்தி யதிகப்படும்.

அதிரச வீரிய வர்த்தனி

மேல்தோல் போக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு 140 கிராம், மேல்தோல் போக்கின பிஸ்தாப்பருப்பு, மேல்தோல் நீக்கின சில்கூஜாப் பருப்பு, கசகசா இவை வகை 1க்கு 105 கிராம், வெண்சந்தனச் சூரணம் காவுஜுபான், கோராப்பட்டு இவை வகை ஒன்றுக்கு 16 கிராம், மாசிக்காய், நிலப்பனைக் கிழங்கு இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், திராக்ஷாபானம் 140 கிராம், தண்ணீர்விட்டான் கிழங்கு ரசம் 160 கிராம், பன்னீர் 175 கிராம், சுத்தஜலம் 200 கிராம், சீமை நீர் முள்ளிவிதைச் சூரணம், பெருலவங்கப்பட்டைச் சூரணம், உலர்த்தின சம்பங்கிப்பூச் சூரணம், நாகேஸ்வரப்பூச்சூரணம், சின்னியாகோந்துச் சூரணம், சடாமாஞ்சிச் சூரணம், மருத்து வெள்ளைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், லவங்கப்பட்டை, றூமிமஸ்தகி, அக்கராகாரம், லவங்கம், சன்னராஷ்டம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 3 கிராம், வெள்ளி ரேக்கு 5, கற்கண்டுச் சூரணம் 350 கிராம்.

செய்முறை- இவற்றில், முந்தின நான்கையும் அரைத்து கொஞ்சம் ஜலத்திற் கரைத்து வடித்துச் சக்கைபோக்கி, அவற்றின்பால் எடுத்துக்

---

* இதனை முலைப்பாலில் மூன்றுதினம் ஊறவிட்டெடுத்துக் கொள்வதே அதன் சுத்தியாம்.

கொள்ள வேண்டும். திராக்ஷாபானம் முதலிய நான்கு திரவங்களை ஒன்றாகக் கலந்து சந்தனம் முதலிய ஐந்தையும் நன்றாகச் சிதைந்து அதிற்போட்டு ஒரிரவு ஊறவிட்டு, காலையிற்காய்ச்சி அதைப் பாகமாய்ச் சுண்டினபின் இறக்கி வடித்துச் சக்கைபோக்கி, இதனுடன் முன் பாலையும் சேர்த்துக்காய்ச்சி, குழம்பாம் பருவத்தில் கற்கண்டுச் சூரணத்தையும் சேர்த்துக் காய்ச்சி பதத்தில் சூரணங்களை யொன்றாகக் கலந்து தூவி, நன்றாய்க் கிண்டிக்கிளறி, ரேக்குகளையும் கூட்டி மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- 12, 15 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தாலும், மிதமிஞ்சின செய்கைகளினாலும் உண்டாம் மூளையின் துற்பலம்; தேகதுர்பலம், இந்திரியவொழுக்கு ஆகியவை தீர்ந்து, இரத்தச் சத்தூறி, சுபாவ எழுச்சியுண்டாய் ஆண்மை உண்டாம்.

கோசரோக ஹரியேரிமுகி ஹல்வா

மூக்கு நறுக்கப்பட்ட *சேங்கொட்டை 840 கிராம், பசுவின்பால் இரண்டரை படி, பசுவின்நெய் 250 கிராம், நாட்டுவெல்லம் 840 கிராம், முட்டை மஞ்சட்கரு 20, லவங்கப்பட்டை, சன்னராஷ்டம், மேல்தோல் போக்கின சுக்கு, தாளிசபத்திரி, ஜாதிக்காய் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம்.

செய்முறை- இவற்றுள், சேங்கொட்டைகளைப் பாலிற் போட்டுக் காய்ச்சி. இதில் அதன் தைலம் வெளிப்பட்டபின் ஜாக்கிரதையாய் நசுக்கி வடிகட்டி சக்கைபோக்கி, நெய், வெல்லம், முட்டைக்கரு ஆகிய மூன்றையும் ஒன்றாகக் கலந்து அதிற்போட்டு அடுப்பேற்றி மெதுவாயெரித்து நன்றாகத் துழாவி வரவேண்டும். அது குழம்பாக வரும்பதத்தில் கீழிறக்கி யாறவிட்டு, சூரணங்களைக் கலந்து அதில்தூவி, அகப்பைக் காம்பால் நன்றாகத் துழாவி, பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை-12-24 கிராம் சாப்பிட்டு அதன் மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின்பால் குடிக்க வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் தளர்ச்சி, சோர்வு, திமிர் ஆகியவை தீர்ந்து; துரிதஸ்கலிதந்தீரும், மேகம், குஷ்டம், கீல்வாயு பிடிப்பு, விரணரோகம் முதலியவைகளும் நீங்கும்.

---

* இதன் தைலம் தேகத்திற்பட்டாலும், இதன்வாடை வீசினாலும் சிலர்க்குக் கொப்பளம், வீக்கம் முதலியவை யுண்டாகுமாகையால், இதனை வெகு ஜாக்கிரதையாய் நறுக்க வேண்டும்.

வேறு

மூக்கு நறுக்கப்பட்ட சேங்கொட்டை, பசுவின் நெய், தேன், நாட்டுவெல்லம் இவை வகை ஒன்றுக்கு 840 கிராம், பசுவின்பால் இரண்டரைபடி, மேல்தோல் போக்கின சுக்கு, அரிசித்திப்பிலி, தாளிசபத்திரி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம்.

செய்முறை- இவற்றில், சேங்கொட்டையைப் பாலிற்போட்டுக் காய்ச்சி, தைலம் வெளிப்பட்ட பின் கீழிறக்கி ஜாக்கிரதையாகப் பிழிந்து வடிகட்டி நெய் முதலிய மூன்றையும் அதிலிட்டுக் காய்ச்சி, ஹல்வாபதத்தில் கீழிறக்கி யாறவிட்டு மேற்படி சூரணங்களை யொன்றாகக் கலந்து போட்டு நன்றாகக் கிண்டிக்கிளறி, பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- 12-16 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- முகவாதம், பக்ஷவாதம், நடுக்கல்ரோகம், இசிவு ரோகம், விசைநரம்புத்தளர்ச்சி ஆகியவற்றையும், முஷ்டிப்பிரயோகத்தால் உண்டாம் ஆண்குறிகளைச் சார்ந்த சகல நோய்களையும் தீர்த்து, தாருட்டியவிர்த்தியை யுண்டாக்கும்.

ஆங்கிலேய லிங்கவீரிய ஹல்வா

கோழிமுட்டை மஞ்சட்கரு 10, பச்சரிசிமா, சீனிசருக்கரை, பசுவின்நெய் இவை வகை ஒன்றுக்கு 1400 கிராம், ஆவாரம்பிசின், வால்மிளகு, சன்னலவங்கப்பட்டை, லவங்கம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, வெங்காயவிதை, சீமைநிலப்பனைக்கிழங்கு, ஸாலாமிஸ்றி, உலர்த்தியராவின மாட்டுக்கோசத்தூள் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், பூனைக்காலிவிதைச் சூரணம் 35 கிராம்.

செய்முறை- அவற்றில் கருவையும் மாவையும் சேர்த்துக் கையால் நன்றாக மத்தித்துப் பிசைந்து நெய்யைக் காய்ச்சி அதில் மேற்படி கலவையை யிட்டுச் சிவக்கவறுத்துச் சீனிசருக்கரையும் சேர்த்து அடுப்பேற்றித் தீமெதுவாயெரித்து நன்றாகக் கிண்டிக் கிளறி வர எல்லாம் திரண்டு ஹல்வாவாகும். அச்சமயத்தில் கீழிறக்கி நன்றாயாறின பின் சூரணங்களை யொன்றாகக்கலந்து தூவிக் கிண்டிக்கிளறி பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை-12-18 கிராம் சாப்பிட்டு அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின்பால் குடிக்க வேண்டும்.

உபயோகம்- விந்து விளைந்து நரம்புகள் பலப்பட்டு ஆண்மை யதிகரிக்கும். கண்ணிற்கு ஒளியும், வாய்நாற்றம் நீங்கிச் சுகந்தமும் உண்டாம்.

கோசகாத்திர தாத்தூராதி ஹல்வா

வெள்ளுமத்தம்விதை 435 கிராம், பசுவின்பால் 3 படி, சுத்தஜலம் கால்படி, கோழிமுட்டை மஞ்சட்கரு 210 கிராம், காய்ச்சி நுரைபோக்கிச் சுத்தி செய்த தேன் 105 கிராம், நெய்யில் வறுத்துத் தூள் செய்த கொண்டைக் கடலைமா; பசுவின் நெய் இவை வகை ஒன்றுக்கு 245 கிராம், சன்னலவங்கப்பட்டை, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், குங்குமப்பூ 6 கிராம்.

செய்முறை- இவற்றில் பாலையும், ஜலத்தையும் கலந்து அதில் ஊமத்தம்விதையைப் போட்டுக் காய்ச்சி, நீர் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து வடித்து, சக்கைபோக்கிப் பிரைகுற்றி மறுநாள் கடைந்து வெண்ணெயெடுத்துக் கொள்ள வேண்டும். தேனுடன் முட்டைக் கருவைக் கலந்து மத்தித்துக் காய்ச்சி, பாகுபதத்தில், கடலைமாவைத் தூவித் தூவிக் கிண்டும்போது பசுவின் நெய்யையும், முன்னெடுத்த வெண்ணெயையும் போட்டு மற்றச் சூரணங்களையும் அதில் கலந்து தூவி, குங்குமப்பூவை பன்னீர் வார்த்தரைத்து அதில் சேர்த்து, நன்றாக மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- 5 கிராம், 13 கிராம், சாப்பிட்டு அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின்பால் குடிக்க வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் நரம்புகளின் சோர்வு, தளர்ச்சி, திமிர் முதலிய விக்கினங்களும் இந்திரிய வொழுக்கும் தீர்ந்து, ஆண்மைசக்தி அதிகரிக்கும்.

துஷ்டரோககண்டித அண்டஹாதி ஹல்வா

கோழிமுட்டை மஞ்சட்கரு 10 நிஷாஸ்தா 1400 கிராம், நெய், சீனிசருக்கரை இவை வகை ஒன்றுக்கு 4200 கிராம், ஜாதிக்காய், ஆவாரம்பிசின். வால்மிளகு, லவங்கம்; மேல் தோல் போக்கின சுக்கு, ஜாதிப்பத்திரி, இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 70 கிராம், பூனைக்காலிவிதைச் சூரணம் 140 கிராம்.

செய்முறை- இவற்றில், நிஷாஸ்தாவைப் பொடித்துத் தூள் செய்து, அதில் முட்டைமஞ்சட் கருவைப்போட்டு நன்றாக மத்தித்து நெய்யைக் காய்ச்சி, அதில் மேற்படி நிஷாஸ்தாவைப் போட்டுச் சிவக்க வறுத்துத் தூள் பண்ணி சீனிசருக்கரையைப் பாகு செய்து, அதில்போட்டு மற்ற சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து தூவி கிண்டிக்கிளறி பத்திரப்படுத்தி வரவேண்டும்.

மாத்திரை- மாலை போஜனத்திற்குப்பின் 12 கிராம், சாப்பிட்டு, அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின் பால் குடிப்பதன்றி, மற்றொன்றும் செய்யப்படாது.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் துஷ்ட வியாதிகள் தீர்ந்து, விந்து விளைவுண்டாகி ஆண்மை நிர்வாக பலமுண்டாம்.

நித்தியபல மாஜூன்

ஸாலாமிஸ்றிச் சூரணம், சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்குச் சூரணம், நெருஞ்சிமுள் சூரணம், நிலப்பனைக் கிழங்குச் சூரணம், அமுக்கராக் கிழங்குச் சூரணம், கொட்டைபாக்குச் சூரணம், முள்ளங்கி விதைச்சூரணம் * சீமை முள்ளங்கிவிதைச் சூரணம், ஆளிவிதைச் சூரணம், சுரைவிதைப்பருப்பு, மேல்தோல் போக்கின தேங்காய், சில்கோஜா பருப்பு, மேல்தோல் போக்கின பிஸ்தாப்பருப்பு, மேல்தோல் போக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, மேல்தோல் போக்கின பிந்தக் பருப்பு இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், ஊமத்தம் விதைச் சூரணம் 24 கிராம், வறுத்திடித்த கொண்டைக்கடலைமா, பருத்திவிதைப்பருப்பு, இவை வகை ஒன்றுக்கு 60 கிராம், காய்ச்சி நுரைபோக்கிச் சுத்திசெய்த தேன் 700 கிராம்.

செய்முறை- இவற்றில், சூரணங்களை யொன்றாகக் கலந்து, அதில் பருப்பினங்களை வேறெடுத்தரைத்து அதில் சேர்த்து, தேனைக் காய்ச்சி, அதில் சூரணங்களைக் கலந்து போட்டு நன்றாகக் கிண்டிக் கிளறி, மாஜூன் பதத்தில் எடுத்து, பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- 2-4 கிராம் சாப்பிட்டு, அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின்பால் குடிக்க வேண்டும்.

உபயோகம்- வயிற்றுப்பிசம், மந்தாக்கினி ரோகம் ஆகிய இவை தீர்ந்து, ஜீரணசக்தி யதிகப்பட்டு, விந்தூறி சுபாவ எழுச்சியுண்டாய், ஆண்மை விர்த்தியும், தாருட்டிய புஷ்டியும் அதிகப்படும்.

பூந்தாளியாதி மாஜூன்

நிலப்பனைக்கிழங்கு, மேல்தோல் போக்கின சுக்கு, ஜாதிக்காய், லவங்கம், ஏலக்காய், மஞ்சள் முள்ளங்கி விதை, லவங்கப்பட்டை, வாய்விளங்கம், வெங்காயவிதை, முள்ளங்கிவிதை, போஸ்துக்காய், நெல்லிமுள்ளி, இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், கசகசா, வெள்ளரி விதைப் பருப்பு இவை வகை ஒன்றுக்கு 20 கிராம் சுத்தி செய்த தேன் 810 கிராம்.

செய்முறை- இவற்றை முன் பாகப்படி செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை-4-12 கிராம் காலையில் மாத்திரம் சாப்பிட்டு, அதன்மேல், காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின் பால் குடிக்க வேண்டும்.

உபயோகம்- விந்து விளைவுண்டாகி, நரம்புகளைப் பலப்படுத்தி, ஆண்மை சக்தியை யுண்டுபண்ணும்.

---

* இதற்கு ஆங்கிலேய பாஷையில் டர்னிப் (Turnip) என்று பெயர்.

இராஜ வீரிய மாஜூன்

வறுத்தரைத்த உளுந்துப் பருப்பின்மா; மேல்தோல் போக்கின பிந்தக் பருப்பு இவை வகை ஒன்றுக்கு 35 கிராம் சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்குச் சூரணம், சாரப்பருப்பு, மஞ்சள் முள்ளங்கிவிதைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், அகருகட்டைச் சூரணம் 16 கிராம், குங்குமப்பூ 12 கிராம், நிர்விஷா சூரணம் 8 கிராம், அம்பர் 4 கிராம், கஸ்தூரி 2 கிராம், எருமைப்பால் 350 கிராம் காய்ச்சி நுரைபோக்கிச் சுத்திசெய்த தேன் 175 கிராம் தரஞ்சபீன் 140 கிராம், பன்னீர் 70 கிராம்.

செய்முறை- இவற்றில் தரஞ்சபீனில் கொஞ்சம் ஜலம் வார்த்து வடிகட்டிச் சக்கைபோக்கி, அதில் தேனையும் பாலையும் கலந்து சேர்த்துக் காய்ச்சி, பாகுபதத்தில் சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து, அதில் பருப்பினங்களை யரைத்துச் சேர்த்து பாகில் தூவிக் கிண்டிக்கிளறி யிறக்கி குங்குமப்பூவைப் பன்னீர்வார்த்தரைத்து அதில் கூட்டி கஸ்தூரி, அம்பர் இவ்விரண்டையும் தனித்தனி-பன்னீர் வார்த்தரைத்துச் சேர்த்து, நன்றாக மிஸ்ரமித்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- 4-5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- விந்துவை விளைவித்து, நரம்புகளைப் பலப்படுத்தி, சுபாவ எழுச்சியையுண்டாக்கி ஆண்மை சக்தியை யதிகப்படுத்தும்.

அண்டஹாதி மாஜூன்

வேகவைத்த கோழிமுட்டை மஞ்சட்கரு 20, அக்கராகாரம்; லவங்கம்; லவங்கப்பட்டை, மேல்தோல் போக்கின சுக்கு; சன்னராஷ்டம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், சுத்தி செய்த தேன் 420 கிராம்.

செய்முறை- இவற்றில், தேனைக் காய்ச்சிப் பாகுபதத்தில் முட்டைக் கருவைக் கையால் உதிர்த்துத் தூள் செய்து அதில் மற்றச் சூரணங்களையும் ஒன்றாக்கிக் கலந்து பாகில் தூவிக் கிண்டிக்கிளறிப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- 12-14 கிராம் சாப்பிட்டு அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின்பால் குடிக்க வேண்டும்.

உபயோகம்- நரம்புகளின் சோர்வை யகற்றி; அவற்றைப் பலப்படுத்தி; எழுச்சி முதலியவற்றையும் ஆண்மை சக்தியையும் உண்டாக்கும்.

குறிப்பு

லவங்கப்பட்டை; சன்னராஷ்டம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், தேகசுபாவ சீதோஷ்ணத்திற்குத் தக்கபடி குறைத்தும் அதிகமாக்கியும் சேர்த்துக் கொள்ளலாம்.

அண்டஹாதி அநூஷ் ஜவாரிஷ்

வேகவைத்த கோழிமுட்டை மஞ்சட்கரு 30, ரோஜாப்பூவிதழ்ச் சூரணம் 24 கிராம், கோரைக் கிழங்குச் சூரணம் 20 கிராம், லவங்கம், றூமிமஸ்தகி; நிலக்கடம்பு; சடாமாஞ்சில் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், தாளிசப்பத்திரி; ஜாதிப்பத்திரி; ஏலக்காய்; காட்டேலக்காய்; ஜாதிக்காய்; பெருலவங்கபட்டை; குங்குமப்பூ இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், நெல்லிக்காய் ரசம் 250 கிராம் சுத்தி செய்த தேன், சீனிசருக்கரை இவை வகை ஒன்றுக்கு 450 கிராம்.

செய்முறை- இவற்றில், தேன் சீனிசருக்கரை நெல்லிக்காய் ரசம் ஆகிய இம்மூன்றையும் சேர்த்துக் காய்ச்சி; பாகுபதத்தில் முட்டைக்கருவை யுதிர்த்துத் தூள்செய்து; மற்ற சூரணங்களை யொன்றாகக் கலந்து பாகில் தூவிக் கிண்டிக் கிளறி யிறக்கிக் குங்குமப்பூவைப் பன்னீர் வார்த்தரைத்து நன்றாக மிஸ்ரமித்து பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை- 12-18 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம்- இரைப்பை முதலிய ராஜகருவிகளைப் பலப்படுத்தும். மூலக்கிராணி; வயிற்றுப்போக்கு ஆகிய இவற்றை நீக்கும். நரம்புகளுக்கு விம்முதலை யுண்டாக்கி ஆண்மை சக்தியைக் கொடுக்கும்.

சுந்தர சிந்தாமணி ஜவாரிஷ்

மேல்தோல் போக்கிய வறுத்திடித்த குன்றிமணிப் பருப்பு சூரணம்; கொத்துமல்லிவிதைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 48 கிராம், தூள் செய்து வறுத்த நிஷாஸ்தா 140 கிராம், லவங்கச் சூரணம் 12 கிராம், குங்குமப்பூ 8 கிராம் நாட்டுச் சருக்கரை 450 கிராம்.

செய்முறை- இவற்றில் சருக்கரையைப் பாகுசெய்து; பதத்தில் சூரணங்களை யொன்றாகக் கலந்து அதில் தூவி யிறக்கி, குங்குமப்பூவைப் பன்னீர் வார்த்தரைத்து அதில் கலந்து மிஸ்ரமித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- 16-20 கிராம் சாப்பிட்டு அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பால் சாப்பிட வேண்டும்.

உபயோகம்- நரம்புகளின் சோர்வு, தளர்ச்சி முதலியவை தீர்ந்து, விந்துஸ்தம்பனம் உண்டாம். ஆண்மை சக்தியதிகரிக்கும்.

ஓங்கார மாங்கிஷத் தீநீர்

கொழுத்த ஆட்டிறைச்சி 840 கிராம், கொழுத்த யௌவனச் சேவல் 1, கொழுத்த காடை 7, கொழுத்த கௌதாரி 4, ஆணடைக்கலாங்குருவி 50, பஹமனேஸுபேத், பஹமனேஸுறுக், வெண்சந்தனம், லவங்கபட்டை, லவங்கப்பத்திரி, சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்கு, ரோஜாப்பூ, கொத்துமல்லி விதை இவை வகை ஒன்றுக்கு 13 கிராம், காவுஜுபான்பூ 32 கிராம், பன்னீர், கஸ்தூரிப் பிரம்புத்திராவகம், மஞ்சள் முள்ளங்கிரசம், கரும்புரசம், சீமையிலந்தைப்பழ (Apple) ரசம் இவை வகை ஒன்றுக்கு 450 கிராம், குங்குமப்பூ, கஸ்தூரி, அம்பர் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம்.

செய்முறை- இவற்றில் பக்ஷியினங்களை யறுத்து ரோமம், தோல், கால், மூக்கு, குடல், கொழுப்பு முதலியவற்றை நீக்கி, உரலில் இட்டிடித்து, அதனுடன் ஆட்டிறைச்சியிலுள்ள கொழுப்பை நீக்கி, யிடித்து எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து பஹமனேசுபேத், பஹமனேசுருக் முதல் காவுசுபான்பூ ஈறாயுள்ளவற்றைச் சிதைத்து மேற்படி இறைச்சிகளிற் சேர்த்து ஆறுபடி ஜலம்வார்த்துக் காலையில் வாலையிலிட்டு, மற்ற ஐந்து திரவங்களையும் ஊற்றி, அடுப்பேற்ற வேண்டும். குங்குமப்பூ முதலிய மூன்றையும் வஸ்திரத்தில் ஒன்றில் முடிந்து வாலையின் திராவகம் முடிச்சில் தங்கி நின்று விழும்படியாய்க் கட்டி வைத்து ஒன்றரை, இரண்டு படி திராவகம் வடித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை-100 கிராம் மாலை வேளையிற் சாப்பிட வேண்டும்.

உபயோகம்- மிதமிஞ்சின இல்வாழ்க்கை முஷ்டிப் பிரயோகம் முதலியவற்றால் நேர்ந்த தேகச்சோர்வு, நரம்புகளின் சோர்வு மனச்சோர்வு முதலியவை தீர்ந்து அவை பலப்பட்டு எழுச்சியும், ஆண்மை சக்தியு மதிகப்படும்.

இராஜ ராமேஸ்பரத் தீநீர்

நாட்டு வெல்லம் 16 கி. 700 கிராம், கருவேலம்பட்டை 1200 கிராம், அரசம்பட்டை, இலந்தைப்பட்டை இவை வகை ஒன்றுக்கு 700 கிராம், கொண்டைக்கடலை யூறவைத்த ஜலம் மூன்றரைபடி, (இரண்டுபடி கொண்டைக்கடலையை ஐந்துபடி சுத்த ஜலத்தில் ஓரிராப்பகல் ஊற வைத்தெடுத்துக் கொள்ள வேண்டும்) கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல் நெல்லிமுள்ளி, இவை வகை ஒன்றுக்கு 420 கிராம், கொத்துமல்லி விதை கற்கடகசிங்கி, கொட்டைப்பாக்கு, மாதுளம்பட்டை, பெருலவங்கப்பட்டை, நெய்தற் கிழங்கு, சீமைநீர் முள்ளி இவை வகை ஒன்றுக்கு 100 கிராம், கையாந்தகரை, வெள்ளறுகு, பருத்திக்கொட்டை,

ஆலம்விதை, மஞ்சள் முள்ளங்கிவிதை, சீமைமுள்ளங்கிவிதை, (Turnip) முள்ளங்கி விதை, வெங்காயவிதை, மேல்தோல் போக்கின சுக்கு, சன்னராஷ்டம், லவங்கப்பட்டை, தராயிலை, காவுசுபான், ரோஜாப்பூ, குசும்பாவிதை. உஸ்துகுத்தூஸ் பாலங்கூவிதை இவை வகை ஒன்றுக்கு 60 கிராம், பசுவின்பால், ஒன்னேகால்படி, எருமைப்பால்இரண்டரைபடி, பசுவின்நெய் 220 கிராம் சுத்தஜலம் 10 படி, ஆட்டுக்குட்டி யிறைச்சி 7 கிலோ.

லவங்கம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, செஞ்சந்தனம், வெண்சந்தனம், லவங்கப்பட்டை, ஏலக்காய், காட்டேலக்காய், கருஞ்சீரகம் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், சுத்தி செய்த பாதரசம் 35 கிராம், வெள்ளி அரபொடி 20 கிராம். இவ்விரண்டையும் சேர்த்தரைத்து உண்டை பண்ணிக் கொள்ள வேண்டும்.

குங்குமப்பூ 9 கிராம், 4 கிராம், அம்பர் 2 கிராம்.

செய்முறை- இவற்றில் வெல்லம் முதல் இறைச்சி யீறாயுள்ளவற்றில் இறைச்சியைக் கொத்தி ஜலத்திற்போட்டு அதில் வெல்லத்தைக் கரைத்து மற்ற சரக்குகளையும் சிதைத்து அதில்போட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாள் காலையில் கடலைஜலம் முதலிய திரவங்களையும் ஊற்றி, லவங்கம் முதல் பாதரசம் வெள்ளியரபொடியுண்டை ஈறாயுள்ளவற்றில், சிதைக்க வேண்டியவற்றைச் சிதைத்து, எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து வஸ்திரத்தில் முடிந்து அதில்போட்டு வாலையிலிட்டு அடுப்பேற்ற வேண்டும். குங்குமப்பூ ஆதியாயுள்ளவற்றையும் வஸ்திரத்தில் முடிந்து வாலையின் வடியும் திராவகம் அதில் தங்கி நின்று வடிந்து விழும்படி கட்டி, ஆறு ஏழுபடி திராவகம் வடித்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை-35-60 கிராம் திராவகத்தில்; இஷ்டமான அளவு சீனிசருக்கரை அல்லது கற்கண்டிட்டுச் சாப்பிட வேண்டும்.

உபயோகம்- மேற்கூறினபிரயோஜனங்கள் உண்டாவதுடன், மூத்திரரோகம், இந்திரியவொழுக்கு சொப்பனஸ் கலிதம், சுகநீர்பெருக்கம் முதலியவை தீர்ந்து தேகம் பலத்திறுகி, வச்சிரம்போலாம்.

கோசரோக பேதி மாத்திரை

பரமௌஷதம், சுத்தி செய்த சீமைச்சிவதை வேர்ச்சூரணம் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், கொடிக் காக்காட்டான் விதை, அனிசூன் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 2 கிராம், உலர்த்தின ஆற்றுத்தும்மட்டிக்காய்ச்சதை, பாகப்படுத்தின காரிகியூன், ஸாலாமிஸ்றி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு குன்றியெடை 3, சுத்தி செய்த மஹமூதா, வாதுமைப்பிசின் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு குன்றியெடை 6 பன்னீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு பன்னீர் வார்த்து இரண்டு சாமம் அரைத்து கடலைப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- 1-2-3 காலையில் மாத்திரம் சாப்பிடலாம்.

உபயோகம்- முஷ்டிப்பிரயோகத்தால் ஆண் அங்கங்களின் நரம்புகளில் கபநீர்தங்கி, அவை தளர்வுற்றுச் சோர்ந்து, ஆண்மைசக்தி குறைந்தால் அந்நரம்புகளிலுள்ள துர்நீர் முதலியவற்றை வெளிப்படுத்தி நல்லிரத்த வியாபகத்தையுண்டாக்கி; ஆண்மையை அதிகப்படுத்தும்.

ஜம்புகாய மாத்திரை

நரிவெங்காயம், ஜாதிக்காய்ச் சூரணம், வாதுமைப் பிசின் சூரணம் பொரித்த வெங்காரம் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம். ஜாதிப்பத்திரிச் சூரணம் 2 கிராம்.

செய்முறை- இவை யெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு ஒரு சாமம் நன்றாயரைத்து, உழுந்துப்பிரமாணம் மாத்திரை செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை-1 சாப்பிட்டு அதன் மேற் காய்ச்சிக் கற்கண்டிட்ட பால் குடிக்க வேண்டும். தாகமெடுத்தால் ஜலம் குடிக்கப்படாது; மேற்படி பாலே குடிக்க வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் நேரிட்ட நரம்புகளின் சோர்வு நீங்கி எழுச்சியுண்டாய் ஆண்மை அதிகரிக்கும்.

ஸ்தம்பன நிர்விஷா மாத்திரை

பாதரசம், நரிவெங்காயம் இவை வகை ஒன்றுக்கு 10 கிராம், வால்மிளகு, சன்ன லவங்கப்பட்டை, மேல் தோல் போக்கின சுக்கு, அக்கராகாரம், ஏலரிசி, நிர்விஷா, குங்குமப்பூ, போஜிதான்மிஸ்றி, ஸாலாமிஸ்றி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம்.

செய்முறை- இவற்றில், பாதரசத்தையும், நரிவெங்காயத்தையும் கல்வத்திலிட்டு நன்றாயரைத்து பருமனான ஓர் ஊமத்தங்காயைக் குடைந்து, அதில் அரைவாசியை நீக்கி, முன் அரைத்தவற்றை அதில் வைத்து வாய்மூடி, கொண்டைக்கடலைப் பருப்பு மாவைக்குழைத்து காயின் மேல் நான்கு அங்குலகனம் கவசங்கட்டி, கவசத்தின் மாவை நெய்யில் சிவக்க வறுத்தெடுத்து ஆறினபின், கவசம் செய்தமா, ஊமத்தங்காய்த்தோல் ஆகிய இவற்றை நீக்கி மற்றவைகளை 35 கிராம் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாயரைத்து மற்ற சூரணங்களையும் சேர்த்து அரைத்து குங்குமப்பூவையும் போட்டு, கருவேலம்பிசினை

ஊறவிட்ட ஜலம் வார்த்து இரண்டு சாமம் அரைத்து, கடலைப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை- 1-2 சாப்பிட்டு, அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின்பால் குடிக்க வேண்டும். இவ்விதம் ஒரு மண்டலம் செய்ய வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் அடைந்த நரம்புகளின் சோர்வு முதலிய நஷ்டங்களை நிவர்த்தி செய்து, அதற்கு லாபமாகிய எழுச்சி, விம்மல், இரத்தசத்து, ஸ்தம்பனம் முதலியவற்றை யுண்டுபடுத்தி, ஆண்மையை விர்த்தி செய்யும்.

ஸ்தம்பன அம்பர் மாத்திரை

அம்பர், ஸாலாமிஸ்றிச் சூரணம், சன்னராஷ்டச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு எட்டு கிராம், கஸ்தூரி, றூமிமஸ்தகிச் சூரணம், லவங்கச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு நான்கு கிராம், உறைந்த சீமை யொட்டகப்பால் 12 கிராம்.

செய்முறை- இவையெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு, கொஞ்சம் பன்னீர் தெளித்தரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரை செய்து, நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை-1 சாப்பிட்டு, அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின்பால் அல்லது கொண்டைக்கடலையை ஊறவைத்தெடுத்த ஜலம் குடிக்க வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் நரம்புகளின் சோர்வு முதலியவை தீர்ந்து, இரத்தசத்து ஸ்தம்பன முண்டாய், விம்முதலும், எழுச்சியும், ஆண்மை சக்தியும் உண்டாம்.

மிஸ்றிச் சூரணம்

ஸாலாமிஸ்றிச் சூரணம், பெருலவங்கப்பட்டைச் சூரணம், முள்ளிலவம் பிசின் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம்.

செய்முறை- இவையெல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை-12 கிராம் சாப்பிட்டு, அதன் மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின் பால் குடிக்க வேண்டும்.

உபயோகம்- முஷ்டிப்பிரயோக சிகிச்சையில்பட்டி, திலா முதலிய வெளிப்பிரயோகங்கள் செய்யும் பொழுது, இதனையுட்கொண்டு வதனால், விசேஷ குணமுண்டாம்.

பிரமேக வியாதியின் சிகிச்சை

நண்பர்களே, முதற்பாகத்தில் மேற்குறித்த வியாதியின் லக்ஷணங்கள், கூடினவரையில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், அதன் காரணங்களை முன்னமே நிச்சயித்து, அதனை நீக்கிப் பின்பு சிகிச்சை தேட முயல வேண்டும். அன்றியும் நீர்ப்பையில் உண்டுபட்டிருக்கும் சீழ்க்கட்டியைச் சுத்தி செய்து, அதன் அசுத்தத்தை வெளிப்படுத்தும் ஔஷதங்களை உபயோகித்துப் பிற்பாடு அதைச் சொஸ்தப்படுத்தும் ஔஷதங்களைப் பிரயோகிக்க வேண்டும். பிரமேக ரோகத்திற்கு, நம்பத்தக்க ஔஷதம் இதுதான் என்று சொல்வது அசாத்தியமாகையால், பெரும்பாலார்க்கு உபயோகித்துச் சித்தியான கைகண்ட முறைகளை (பாகங்களை) இங்கெழுதுகிறோம். சர்வ வல்ல கடவுளின் கிருபையால் நாம் அச்சிட்டிருக்கும் "பிரமேக ரோக நிவாரண போதினி" என்னும் கிரந்தத்தில் பிரமேக ரோக முதலியவைபற்றி இங்கிலீஷ், தமிழ், யூநாநி முதலிய வைத்திய சிகிச்சா கிரமங்களைத் தெளிய விளக்கிக் காட்டியிருக்கிறோம். அக்கிரந்தத்தைப் பார்ப்பதனால் கண்டறிந்து கொள்ளலாம்.

பிரமேக நீர்ப்பேதி

முள்ளங்கியிலை ரசம் 210 கிராம், ஸால்புர நீலா என்னும் சுத்தி செய்த வெடியுப்புத்தூள் 6 கிராம், போட்டுக் கரைத்துக் காலையில் குடிக்க வேண்டும். இவ்விதம் 3-6-7 நாள் காலையில் மாத்திரம் குடித்து சீதளோஷ்ணாதிக்க வஸ்துக்களை நீக்கி சமரசமாக வஸ்துக்களைப் புசித்து, பத்தியங்காக்க வேண்டும். நீர்ப்பையிலுண்டான அசுத்த முதலியவை நன்றாய் வெளிப்பட்டு, பிரமேகவியாதி குணப்படும்.

பிரமேக இந்திர பேதி

வால்மிளகு, ரேவல்சீனி, லவங்கப்பட்டை, ஏலரிசி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், நாலாங் காய்ச்சல் வெடியுப்புத்தூள், 12 கிராம், சீனிசருக்கரை 24 கிராம், இவையெல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து அரைப்படி பசுவின்பாலில் ஒருபடி சுத்தஜலம் வார்த்து, மேற்படி சூரணங்களையும் போட்டு நன்றாய்க் கலக்கி வைத்துக் கொண்டு, தடவை ஒன்றுக்கு அரை-முக்கால் ஆழாக்கு விகிதம் குடித்துவர, நீர் அதிகரித்திறங்கும். இவ்விதம் மூன்றுநாள் குடிக்க வேண்டும். நீர்ப்பையிலுள்ள ரணம், சீழ்க்கட்டி முதலிய நாள்பட்ட ரோகங்களாயினும் தீர்ந்து, நீர்ப்பை சுத்தமயமாய் பிரமேக ரோகம் தீரும், இப்பிரயோகாரம்ப முதல் தினத்திலேயே குணம் தெரியும். பாற்சோற்றுடன் சீனிசருக்கரையைச் சேர்த்துச் சாப்பிட வேண்டுமேயொழிய மற்றவை ஆகா.

பிரமேக நிவாரண பீச்சு மருந்து

படிக்காரம், * வெள்ளைக் காய்ச்சுக்கட்டி இவற்றின் தூள் வகை ஒன்றுக்கு 12 கிராம், இவற்றை அரைபடி சுத்தஜலத்திலிட்டு மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சி, பீச்சாங்குழல் சகிதம் தினம் 3, 4 தடவையாகப் பீச்சிட வேண்டும் இவ்விதம் பிரதிதினமும் புதிதாய் 7 நாள் செய்து பீச்சிட்டுவர பிரமேகரோகம் தீரும்.

வேறு

அரிசித்திப்பிலி, வெள்ளைக் காய்ச்சுக் கட்டி, ஏலக்காய் இவற்றை கால்படி ஜலத்திற்போட்டு, இராப்பனியில் வைத்து, காலையில் வடிகட்டி யெடுத்து 3, 4 தடவை மேற்படி பீச்சாங்குழல் சகிதம் பீச்சிட வேண்டும். இவ்விதம் பிரதிதினமும் புதிதாய் 3, 5 நாள்செய்து பீச்சிட்டுவர மேற்படி வியாதி தீரும்.

வேறு

வெள்ளைக் காய்ச்சுக்கட்டி, பூங்காவி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், அபினி, துரிசுத்தூள் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டரைத்து அரையாழாக்கு முலைப்பாலில் கரைத்து, பிரதி தினமும் 5, 6, 8 தடவை பீச்சிட வேண்டும். இவ்விதம் அன்றன்று 3, 4 தினம் புதிதாய்ச் செய்து பீச்சிட்டுவர, பிரமேகரோகந் தீரும்.

வேறு

பொரித்த சீனக்காரத்தூள், மயில் துத்தத்தூள் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், சிதைத்த கடுக்காய்த் தோல், சிதைத்த தான்றிக்காய்த்தோல், சிதைத்த நெல்லிமுள்ளி இவை வகை ஒன்றுக்கு 26 கிராம் இவற்றை இரவில் ஒருபடி ஜலத்திலிட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி, இராப்பனியில் வைத்துக் காலையிலெடுத்து வடிகட்டிச் சக்கை போக்கி வைத்துக் கொண்டு, 3, 4 தடவை பீச்சிட வேண்டும். இவ்விதம் அன்றன்று 4, 5 தினம் புதிதாய்ச் செய்து பீச்சிட்டு வர பழைய பிரமேக ரோகமாயினும் தீரும்.

வேறு

சிதைத்த கடுக்காய்த் தோல், சிதைத்த தான்றிக்காய்த் தோல், சிதைத்த நெல்லிமுள்ளி இவை வகை ஒன்றுக்கு 48 கிராம், பொரித்த சீனக்காரத்தூள் நெய்யிட்டு வறுத்த துரிசுத்தூள் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், இவையெல்லாவற்றையும் அரைப்படி சுத்தஜலத்தில் மூன்றிராப்பகல்

* இது காசுக்கட்டி என்று மருவி வழங்குகின்றது.

ஊறவிட்டு நாலாம்நாள் அவற்றை நன்றாகக் கலக்கி வடிகட்டி சக்கை போக்கி, சீஷாவில் அடைத்துக் கொண்டு தினமொன்றுக்கு நாலுதடவையாகப் பீச்சிட்டுவரவேண்டும். இதையுபயோகிக்கும்போது, சீமைத் தேவதாரிப்பிசின் இரு குன்றியெடைகளைச் சீனிசருக்கரையிற் கலந்து சாப்பிட்டு வரவேண்டும். எவ்விதப்பட்ட கடின பிரமேக வியாதியாயிருந்தாலும் தீரும்.

வேறு

கால் ஆழாக்குச் சுத்த ஜலத்தில் 20 கிராம் இஸ்பகோல் விதையைப்போட்டு ஊறவிட்டு காலையில் வடிகட்டி யெடுத்தகோழை 12 கிராம், இவ்விதமே செய்தெடுத்த பேதானா கோழை 9 கிராம், மரமஞ்சள் சூரணம் 6 கிராம்.

இவற்றைக் கால்படி சுத்த ஜலத்திலிட்டு அரைப்பாகமாய்ச் சுண்டும்படி காய்ச்சி, பிரதிதினமும் நாலுதடவை பீச்சிட வேண்டும். இவ்விதம் அன்றன்று புதிதாய் 4, 5 நாள் செய்து பீச்சிட்டு வர, சகிக்கக்கூடாத எரிவந்தத்துடன் கடின பிரமேகரோகம் தீரும்.

வேறு

வால்மிளகு, லவங்கப்பட்டை, நாகேசுரம், மிருதாரசிங்கி, ஏலக்காய், மூங்கிலுப்பு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 3 கிராம், மயில்துத்தத்தூள் குன்றியெடை 2, புளித்த தயிர் 420 கிராம்.

இவற்றில், சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து தயிரிற்போட்டு மிஸ்ரமித்து ஓர் வஸ்திரத்தில் முடிந்து தொங்கவிட்டு, முடிச்சினின்று வடியும் நீரைப்பிடித்து நாளொன்றுக்கு மூன்று நாலு தடவை பீச்சிட்டு வர வேண்டும். இவ்விதம் நாள்தோறும் புதிதாய் 3-4 நாள் செய்து பீச்சிட்டு வர, பிரமேகரோகம் நிவாரணமாம்.

வேறு

ரோஜாப்பூவிதழ் 6 கிராம், சிதைத்த மாதுளம்பட்டை,சிதைத்த சவுக்கங்காய், படிக்காரத் தூள், காண்டாமிருகரத்தச்சூரணம் இவை வகை ஒன்றுக்கு 9 கிராம், குறுக அரிந்த எருக்கிலை 3 கிராம்.

இவற்றில் காண்டாமிருக ரத்தச் சூரணம் தவிர மற்றவைகளை கால்படி சுத்த ஜலத்திலிட்டு அரைப்பாகமாகச் சுண்டவைத்து வடித்துச் சக்கைபோக்கி மேற்படி காண்டாமிருக ரத்தச் சூரணத்தையும் கலந்து சீஷாவிலிட்டுப் பத்திரப்படுத்திக் கொண்டு தினமொன்றுக்கு நாலைந்து தடவை பீச்சிட்டுவர, எரிவந்தத்துடன் கூடின ரத்தப்பிரமேக ரோகந் தீரும்.

வேறு

இஸ்பகோல்விதை, துத்திவிதை, ஸப்ஜாவிதை, பூனைக்காலிவிதை வகை ஒன்றுக்கு 12 கிராம், மரமஞ்சள் சூரணம் 6 கிராம், வெள்ளாட்டுப்பால் 420 கிராம், சூடன், காண்டாமிருக ரத்தம், வெள்ளைக் காய்ச்சுக்கட்டி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 2 கிராம்.

செய்முறை- இவற்றில், முந்தின நான்கையும் சிதைக்காமல் கால்படி ஜலத்திலிட்டு மரமஞ்சள் சூரணத்தையும் அதிற்போட்டு, கையால் நன்றாகப் பிசைந்து வடிகட்டிச் சக்கை போக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

வெள்ளாட்டுப் பாலைக் காயச்சி, அதில் சுமார் 35 கிராம் அத்திப்பாலை வார்த்து மூடிவைத்து ஓரிரவு வைத்து, காலையில் அதன் தெளிநீரையெடுத்து முன்னுள்ள ஊறற்கஷாயத்துடன் கலந்து, பிந்தின மூன்று சூரணங்களையும் அதிலிட்டுக் கலந்து, நன்றாகக் கலக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

உபயோகம்- இதனைப் பிரதிதினமும் நாலைந்து தடவை பீச்சிட வேண்டும். நீர்ப்பை ஆண்குறி ஆகிய இவற்றில் உண்டாம் அழலை, சீழ்க்கட்டி, ரணம், புண் முதலியவை தீர்ந்து, சௌக்கியமுண்டாம்.

வேறு

வெள்ளைக் காய்ச்சுக் கட்டி, பறங்கிச் சாம்பிராணி, பொரித்த படிக்காரம், கருவேலம்பிசின், நிஷாஸ்தா, காண்டாமிருக ரத்தம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம்.

இவற்றைக் கல்வத்திலிட்டு, இலந்தையிலைரசம் அல்லது கருவேலங்கொழுந்து ரசம் வார்த்து இருசாமம் அரைத்து சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரை செய்து, நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும்.

ஒரு ஆழாக்கு முலைப்பாலில் அல்லது ஆட்டுப்பாலில் 10 கிராம் மாத்திரைகளை யுரைத்துக்கரைத்து; தினம் 3-4 தடவை பீச்சிட வேண்டும்.

பிரமேகம், நீரெரிச்சல், நீர்ப்பையழலை, நீர்ப்பைச் சீழ்க்கட்டி முதலியவை தீரும்.

பிரமேக நிவாரணச் சூரணம்

நிஷாஸ்தா, வாதுமைப்பிசின், கருவேலம்பிசின் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், வால்மிளகுச் சூரணம் 16 கிராம் சீனிசருக்கரை 50 கிராம்.

இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து, கீழ்க்கண்ட அநுபானத்தில் சாப்பிட்டுவரவேண்டும்.

அநுபானம்

வெள்ளரிவிதை, மூலாம்பழவிதை, நெருஞ்சிமுள்ளு இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், இம்மூன்றையும் ஜலம் வார்த்தரைத்து வடிகட்டிச் சக்கை போக்கின பாலில் வேளையொன்றுக்கு மேற்படி சூரணத்தில் 6 கிராம் யெடுத்துக் கலந்து சாப்பிட வேண்டும். இவ்விதம் இருவேளைகளையும் அநுபானித்துச் சாப்பிட்டு வர வேண்டும்.

இதனால் பிரமேக முதலிய ரோகங்கள் தீரும்.

வேறு

சீமைத் தேவதாருப்பிசின் சத்து, ஏலரிசிச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், நாட்டுச்சருக்கரை 140 கிராம்.

இவற்றையெல்லாம் ஒன்றாகக் கலந்து, வேளை ஒன்றுக்கு 2 கிராம், அல்லது கால்படி பசுவின் பாலுடன் சாப்பிட வேண்டும். இவ்விதம் இருவேளையும் ஏழுநாள் சாப்பிட்டுவர, பிரமேக முதலிய ரோகங்கள் தீரும் பாற்சாதம் தவிர மற்றவையாகா.

வேறு

சீமைத் தேவதாருப்பிசின் சத்து, மூங்கிலுப்புச் சூரணம், ஏலரிசிச்சூரணம், வறுத்த கொண்டைக் கடலைமாவு, வால்மிளகுச்சூரணம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம்.

இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து 6 கிராம் சூரணத்தை 35 கிராம் பசுவின் பாலாடையில் கலந்து சாப்பிட்டு வர வேண்டும். இவ்விதம் இருவேளையும் ஐந்து நாள் சாப்பிட்டுவர, மேற்கண்ட ரோகங்கள் தீரும்.

வேறு

நற்சீரகச் சூரணம், சாம்பிராணிப்பாற் சூரணம், இவை வகை ஒன்றுக்கு 35 கிராம்.

இவற்றையொன்றாகக் கலந்து, 6 கிராம் புளித்த தயிரில் காலையில் மாத்திரம் 4, 5 நாள் சாப்பிட மேற்கண்ட ரோகங்கள் தீரும்.

வேறு

வால்மிளகு, நற்சீரகம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், இவற்றைக் கலந்து, வேளையொன்றுக்கு 6 கிராம், இருவேளையும் புளித்த தயிரில் மூன்றுநாள் சாப்பிட, மேற்கண்ட எவ்வித ரோகங்களும் தீரும்.

வேறு

வெள்ளைக் காய்ச்சுக்கட்டி, மூங்கிலுப்பு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், வால்மிளகுச் சூரணம் 24 கிராம், சீனிசருக்கரை 36 கிராம், இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து, வேளையொன்றுக்கு 9 கிராம், 3/16 கிராம் அல்லது கால் படி பசுவின் பாலில் சாப்பிட்டு புளிப்பு, வாயுப் பதார்த்தங்களை நீக்கி வைக்க, மேற்கண்ட ரோகங்கள் தீரும்.

பிரமேக நிவாரண மாத்திரை

மரமஞ்சட் சூரணம் 100 கிராம், சீமை நெல்லிமுள்ளிச் சூரணம் 18 கிராம், மூங்கிலுப்புச் சூரணம் 18 கிராம், கெட்டித்தேன் செல்லத்தக்க அளவு.

இவற்றில், சூரணங்களைக் கல்வத்திலிட்டு, தேன் வார்த்து ஒரு மணிநேரம் நன்றாயரைத்து, கொட்டைப் பாக்குப் பிரமாணம் மாத்திரை செய்து, ஒவ்வொரு மாத்திரையாக இருபொழுதும் சாப்பிட்டுவர, மேற்படி ரோகங்கள் தீரும்.

வேறு

வால்மிளகுச் சூரணம், மூங்கிலுப்புச் சூரணம், ஏலரிசிச் சூரணம், சீமைத் தேவதாருப்பிசின் சத்து இவை வகை ஒன்றுக்கு 35 கிராம்.

இவையெல்லாவற்றையும் கலந்து, கெட்டித்தேன் வார்த்துக் குழைத்து 72 கிராம் எடையுள்ள மாத்திரை செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

வேளையொன்றுக்கு 24 கிராம் பாலாடையில் ஒரு மாத்திரையைக் கலந்து, இவ்விதமாக இருவேளையும் 4, 5 நாள் சாப்பிட மேற்கண்ட எவ்விதப் பிரமேகங்களும் தீரும்.

வேறு

ஆலம்பால், கொண்டைக் கடலைமாவு இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், அபினி 8 கிராம்.

இவையெல்லாவற்றையும் சேர்த்தரைத்து முப்பது மாத்திரைகளாகச் செய்து, வேளையொன்றுக்கு ஒவ்வொரு மாத்திரையாக இருவேளையும் சாப்பிட்டுவர, மேற்கண்ட பழமையான பிரமேக ரோகங்களாயிருந்தாலும் தீரும்.

வேறு

லவங்கச் சூரணம், அக்கராகாரச் சூரணம், சிறு நெருஞ்சிமுட் சூரணம், பச்சைக் கர்ப்பூரம், சுத்தி செய்த மைசாக்ஷி, அபினி இவை வகை ஒன்றுக்கு 3 கிராம்.

இவையெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து, இரண்டு மூன்று சாமம் நன்றாயரைத்து இருபத்தொரு மாத்திரைகளாகச் செய்து, அதில் ஒரு மாத்திரையைத் தர்மத்திற்கென்று நிர்ணயித்துக் கீழெரிந்துவிட்டு, வேளையொன்றுக்கு ஒன்றொன்றாக இரண்டு வேளையும் சாப்பிட்டுவர, நாள்பட்ட பிரமேக வியாதிகள் தீரும்.

வேறு

புலிக்கொழுப்பு 12 கிராம், சேங்கொட்டைக் குழித்தைலம், மூங்கிலுப்பு இவை வகை ஒன்றுக்கு 6 கிராம் கஸ்தூரி, சாம்பிராணிச்சத்து, ஏலரிசிச் சூரணம், சீந்திற் சருக்கரை, வெள்ளிரேக்கு இவை வகை ஒன்றுக்கு 3 கிராம் தங்கரேக்கு 4 கிராம்.

இவையெல்லாவற்றையும் அரைத்து, கடலைப்பிரமாணம் மாத்திரை செய்து, வேளையொன்றுக்கு ஒவ்வொன்றாக இருவேளையும் சாப்பிட்டு, அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட ஆழாக்கு பசுவின்பால் குடிக்க வேண்டும்.

அதிகமா யிறைச்சி சாப்பிடுவர ஒன்றிலும் தீராத பிரமேக ரோகங்கள் தீரும். கஷ்டசாத்தியப் பிரமேக வியாதிகளுக்கு இதனுடன் ஒரு 12 கிராம் வங்கபஸ்பம் சேர்த்துச் சாப்பிடுவது உத்தமம்.

பிரமேக ரோக நிவாரண பானம்

பிராந்திச் சாராயம், நாட்டுச்சருக்கரை, பசுவின் நெய் இவை வகை ஒன்றுக்கு 24 கிராம்.

இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து, காலையில் மாத்திரம் சாப்பிட வேண்டும். இவ்விதம் மூன்று ஐந்து நாள் சாப்பிட்டுவர, மேற்கண்ட ரோகங்கள் தீரும்.

குறிப்பு

மதுபானம் குடிக்கும் வழக்கமுள்ளவர்களுக்கு எவ்வித மருந்தும் குணந்தருவது அரிதாகையால், அவ்விதத் துர்பழக்க வழக்கமுள்ளவர்களுக்கே இவ்வித முறைகள் ஏற்றவை.

பிரமேக ரோக நிவாரண ஷர்பத்

175 கிராம் ஆளிவிதையை ஐந்துபடி சுத்த ஜலத்திலிட்டுக் காய்ச்சி, அரைப்படியாகச் சுண்டினபின் பிசைந்த வடித்து சக்கை போக்கி, அதில் 1400 கிராம் சீனிசருக்கரை சேர்த்துக் காய்ச்சி, ஷர்பத் பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

இதை வேளையொன்றுக்கு 24-36 கிராம் இருவேளையும் 7-9 நாள் சாப்பிட்டுவர, பிரமேக ரோகம், கல்லடைப்பு, நீர்க்கட்டு, நீரெரிச்சல் முதலியவை தீரும்.

பிரமேக ரோக நிவாரண குழித்தைலம்

சீமைத் தேவதாருப்பிசின் 6 கிராம் வால்மிளகு வெண்மையான தேன்மெழுகு இவை வகை ஒன்றுக்கு 18 கிராம்.

இவற்றை பாகப்படி குழித்தைல மிறக்கி, சீனிச்சருக்கரையில் 2-3 துளிவிட்டு, காலையில் மாத்திரம் சாப்பிட்டு வரவேண்டும். உப்பில்லாப் பத்தியங்காக்க, ஏழு நாளையில் தீராத பிரமேக ரோகங்களெல்லாம் தீரும்.

இரத்த ஸ்கலித சிகிச்சை
றூமி மஸ்தகி யெண்ணெய்

35 கிராம் றூமிமஸ்தகியை, ஜய்த்தூன் அல்லது ரோஜாப்பூ அல்லது எள்ளு இவற்றின் எண்ணெய்களில் ஒன்றில் போட்டுக் காசிக்குப்பியில் அடைத்து ஜலயந்திரத்தில் வைத்து றூமிமஸ்தகி உருகிக் கரைந்தபின் எடுத்து வைத்துக் கொண்டு, பீஜம், மூத்திரக்குண்டிக்காய் இவற்றின் ஸ்தானங்களில் பூசிவர மேற்படி ரத்தஸ்கலித ரோகம் தீரும்.

பீஜங்களில் உஷ்ணாதிக்க முண்டாயிருந்தால், அங்கே வாதுமை நெய் பூசி வருவதுடன், கருவேலம்பிசின், மூங்கிலுப்பு, பூமாதுளம்பூ, காண்டாமிருக ரத்தம், ரோஜாப்பூவிதழ் இவற்றில், இஷ்டப்பட்ட ஒன்றைத் தனியாகவாவது, பலவற்றைக் கலந்தாவது காசினிவிதை யோகஷர்பத்துடன் காலையில் மாத்திரம் சாப்பிட்டுவர மேற்கண்ட வியாதி தீரும்.

மல ஸ்கலித சிகிச்சை
மல ஸ்கலித நிவர்த்திவர்த்தி

பூமாதுளம்பூ, கருவேலம்பிசின், குந்திருக்கும் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம்.

இவையெல்லாவற்றையும் ஒன்றாயரைத்து வஸ்திரத்தில் தடவி, இரண்டு, மூன்று வர்த்தி செய்து, ஆசனத்துட்செலுத்திக் கொண்டு போகிக்க வேண்டும்; இவ்விதம் சிலகாலம் செய்து போகிக்க மலஸ்கலித வியாதி தீரும்.

மல ஸ்கலித நிவர்த்தியெண்ணெய்

சவுக்கங்காய் 70 கிராம், பிரப்பயிலை; அக்கராகாரம், மருக்கொழுந்து, சேங்கொட்டை, சீமைவிலாமிச்சம்வேர்; பெருலவங்கப்பட்டை இவை வகை ஒன்றுக்கு 35 கிராம்.

இவை யெல்லாவற்றையும் சிதைத்து, இரண்டுபடி சுத்த ஜலத்திலிட்டுக் காய்ச்சி நாலிலொன்றாய்ச் சுண்டின பின் பிசைந்து வடித்து, அதில் 175 கிராம் சதாபிலையெண்ணெய் சேர்த்து மெதுவாயெரித்து நீர்சுண்டினபின் இறக்கிவடித்து, அதில் ஜுந்து 20 கிராம், மாசிக்காய் 15 கிராம் இவ்விரண்டையும் அரைத்துக்கலக்கி சீஷாவில் அடைத்துக் கொண்டு ஆசனவாயில் பூசிவர, மேற்படி வியாதி தீரும்.

மல ஸ்கலித நிவாரணக் களிம்பு

பேதானா எண்ணெய், மருதோன்றிப்பூ, வெண்ணெய் இவை வகை ஒன்றுக்கு 175 கிராம். கருவேலம் பிசின் சூரணம் மறுதோன்றியிலைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 45 கிராம்.

இவை யெல்லாவற்றையும் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி களிம்புப்பதத்தில் இறக்கிக் கொண்டு ஆசனத்தின் வாயில் பூசிவர, மேற்படி வியாதி தீரும்.

கோச ஸ்தம்ப ரோக சிகிச்சை

தேன்மெழுகை, ரோஜாப்பூ எண்ணெயில் அரைத்து, கோசத்தின்மேற் பூசிவருவதனாலும் காட்டுச் சாமந்திப் பூவை ஜலம்வார்த்தரைத்து, மேகத்தின் மேல்பற்றிட்டு வருவதனாலும் கோசஸ்தம்ப ரோகம் தீரும்.

தாமரைக்கிழங்கு, காஹுவிதை, சதாபிலை, சதாபின் பூ இவற்றில் ஒன்றை தனியாகவாவது, பலவற்றைக் கலந்தாவது கஷாயமாக அல்லது ஷர்பத்தாகச் செய்து சாப்பிடுவதனாலும் பற்றாகச் செய்து உபயோகிப்பதனாலும், சத்துள்ள ஆகார வர்க்கங்களைக் குறைத்தாவது அல்லது நீக்கியாவது கண்டிப்பான பத்தியம் பிடித்து வருவதனாலும் மேற்கண்ட ரோகம் தீரும்.

மகாமோஹ ரோக சிசிச்சை

அடுத்தடுத்து பேதிக்கு வாங்கு வதனாலும், அடுத்தடுத்து ரத்தங்குத்தி வாங்குவதனாலும், சத்துள்ள அன்ன பானாதிகளைக் குறைத்து இலந்தைப்பழம், திராக்ஷப்பழம், புளிமாதுளம்பழம், காடி முதலிய புளிப்பான பதார்த்தங்களை அதிகப்படுத்திச் சாப்பிட்டு வருவதனாலும் காஹூ விதை; கொத்துமல்லி விதை; தாமரைப்பூ; பருப்புக்கீரை விதை, சந்தனம்; ஜரிஷ்க்; பூமாதுளம் பூ; மூங்கிலுப்பூ; ரோஜாப்பூ; தீபகர்ப்பூரம் அல்லது சூடன்; வாதுமைப்பிசின் இவற்றில் ஒன்றை தனியாகவாவது, பலவற்றைக் கலந்தாவது சாப்பிடுவதனாலும் முள்ளங்கிக் கிழங்கைச் சருக்கரையைச் சேர்த்துச் சாப்பிடுவதனாலும் புளியம்பழம்,புளி மாதுளம்பழம் இவற்றை அதிகமாய்ச் சாப்பிட்டு வருவதாலும்; தீப கர்ப்பூரத்தை மோந்து வருவதனாலும் மகாமோஹ ரோகம் தீரும்

கனவான்களே!

புருஷஜனன இந்திரியத்தில், பிரதானமாகிய கோசம், அதன் சம்பந்தமான மற்ற அவயவங்கள் முதலியவை வியாதியுற்று வருந்தாமல் முன்னெச்சரிக்கையாயிருந்து தடுத்து, அவற்றைப்பாதுகாக்கும் வகை விவரங்களையும், வியாதியுற்றபின் அதனை நிவர்த்தித்து அவற்றைச் சுபாவஸ்திதியில் கொண்டுவந்து நிறுத்தி, தாருட்டியவிர்த்தி ஆண்மைவிர்த்தி முதலியவற்றை யுண்டாக்கும் விதவிதமான அபூர்வமுறைகளைக் கூடுமளவும் தெள்ளத்தெளிய எழுதினோம்.

இனி, அவ்விதமே ஸ்திரீஜனன இந்திரியத்தில் பிரதானமாகிய கருப்பையின் வியாதியின் சிகிச்சாகிரமங்களையும் தீரத்தெளிய எழுத வேண்டுவது அவசியமாவதால் அதனை இதனுடன் சேர்த்தெழுதுவதனால் இக்கிரந்தம் இன்னும் அதிக விரிவாகுமாகலின், கடவுளின் கிருபையால் அச்சிகிச்சா கிரமங்களையும் பிரத்தியோகமாய் "பூநாறி வைத்திய கர்ப்பகோள்" என்னும் கிரந்தரூபமா யெழுதிவரினும் இக்கிரந்தத்தைப் பார்ப்பவர்களின் கோரிக்கையும் அவலமாகாமல் சூதகபந்த நிவாரண முதலிய சில கைகண்ட சூக்ஷ்மபாகங்களை இங்கெழுதுவோம்.

சூதகபந்த சங்காரன்

சதாபிலைச்சாறு 70 கிராம், சிற்றாமணக்கெண்ணெய் 35 கிராம், இவ்விரண்டையும் கலந்து விரலால் நன்றாய் மத்தித்து காலையில் குடிப்பாட்டவேண்டும். இவ்விதம் ஒவ்வொரு மாசத்திலும் சூதகம் வழக்கமாய்க் காணும் குறிப்பான நாட்களில் தேகசக்தி, வியாதி ஆகியவற்றிற்கு ஏற்றவண்ணம் 3-5 நாளாக மூன்றுமாதம் சாப்பிட்டு வர வேண்டும். தேகசக்திக்கு ஏற்றபடி மருந்தைக்கூட்டியும் குறைத்துங்

கொள்ளலாம். நாள்பட்ட சூதகபந்தம், அதனால் உண்டாம் நோய் முதலியவை தீரும்.

வேறு

சதாபிலைச்சாறு மூன்று பங்கு, சிற்றாமணக்கெண்ணெய் ஒருபங்கு, இவ்விரண்டையும் கலந்து காய்ச்சி நீர் சுண்டினபின் வடிகட்டாமல் வைத்துக்கொள்ள வேண்டும் இதில் 35 - 55 கிராம்; மேற்கண்ட விதமாய்க் கொடுத்துவர, மேற்கண்டவியாதிகள் தீரும். இன்னும் இது பல வியாதிகளுக்கும் உபயோகமாம்.

சூதகபந்த விமோசனி

முதிர்ந்த வேப்பம்பட்டைச் சூரணம் 70 கிராம், பொரித்த வெங்காரம் 55 கிராம், மேல்தோல் போக்கின சுக்குச் சூரணம் 20 கிராம் பனைவெல்லம் 140 கிராம்.

இவையெல்லாவற்றையும் சேர்த்து ஒருசாமம் நன்றாயரைத்து வேளை ஒன்றுக்கு 3 கிராம் விகிதம் இரண்டு வேளையும் பக்ஷத்திற் கொருமுறை மூன்றுமாதம் சாப்பிட்டுவர, மேற்கண்ட வியாதிகள் தீரும்

கொங்கார மலரெண்ணெய்

குங்குமப்பூ 55 கிராம், சத்திசெய்த அரபிபோளம் 35 கிராம், காட்டுச்சீரகம் 16 கிராம், நிலவேம்பு 20 கிராம் நல்லெண்ணெய் 875 கிராம்.

செய்முறை - இவற்றில், எண்ணெயை ஒரு பாத்திரத்தில் வார்த்து, சரக்குகளை நன்றாய்ச்சிதைத்து அதில் போட்டு ஒருவாரம் வெய்யிலில் வைக்கவேண்டும். அதைப்பிரதிதினமும் நன்றாய்க் கலக்கி வரவேண்டும். பின்பு, அதில் ஒருபடி சுத்தஜலம் சேர்த்து, நீர் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - சமயத்திற்கு ஏற்றபடி 20-30-35 கிராம் தனியாகவாவது, பால் முதலிய தக்க அநுபானங்களில் கலந்தாவது குடிப்பதுடன், அடிவயிறு முதலிய ஸ்தலங்களிலும் பூசிட வேண்டும்.

உபயோகம் - கருப்பை, இரைப்பை இவை தடிப்புற்றுக் கடினமாயிருத்தல், சூதகபந்தத்தால் உண்டாம் பற்பல இசிவு, பற்பல நோய், கருப்பை வெளிப்புறப்பட்டிருத்தல் ஆகியவை தீர்ந்து, சூதகபந்தக் கட்டறும்.

சூதகபந்த நிவாரணி

காசினிவிதை, சோம்பு, முலாம்பழவிதை, வெள்ளரி விதை, கெக்கரிவிதை, சுரைவிதை,நெருஞ்சிமுள்ளு இவை வகை ஒன்றுக்கு 20

கிராம், காசினிவேர்த்தோல், தராயிலை, மாசிப்பத்திரி, சீமைத்துத்திவிதை, அதிமதுரம், சடாமாஞ்சில், பனப்ஷாபூ, அனிஸூன், காவுஜூபான் இவை வகை ஒன்றுக்கு 10, திராக்ஷப்பழம் 90 கிராம், சீனிசருக்கரை 900 கிராம்.

செய்முறை - இவற்றில், பிந்தின இரண்டைத்தவிர, மற்றவைகளை நன்றாகச் சிதைத்து கால்படி சுத்தஜலத்தில் ஒருநாள் ஊறவைத்து, அதில் திராக்ஷப்பழத்தையும் போட்டுக் காய்ச்சி அரைப்பாகமாய்ச் சுண்டினபின் பிழிந்து வடிகட்டி, சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சி, பதத்தில் இறக்கி, பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை - 12, 18 கிராம் சாப்பிடலாம்

உபயோகம் - நாள்பட்ட சூதகபந்தம், பித்தச்சூடு முதலிய உஷ்ணாதிக்கத்தால் உண்டாம் சூதகபந்தம் முதலியவை தீரும். நீரடைப்பு, ஈரல் வியாதி முதலியவைகளும் குணப்படும்.

ரக்தஸ்ராவகரோக நிவாரணி

பாகப்படுத்தின கஹறூபா, பாகப்படுத்தின நற்பவளம், பாகப்படுத்தின கோராப்பட்டு, பூமாதுளம்பூச் சூரணம், பூங்காவிச் சூரணம், காண்டாமிருக ரத்தச் சூரணம், கருவேலம்பட்டைக் கரிச்சூரணம், வெள்ளாட்டுக் கொம்பு சுட்ட கரிச்சூரணம், வெள்ளைக் காய்ச்சுக்கட்டிச் சூரணம், நெல்லிமுள்ளிச் சூரணம், லவங்கப்பட்டைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம்.

செய்முறை - இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு நெல்லிக்காய் ரசம் அல்லது மாசிக்காய்க் கஷாயம் வார்த்து இருசாமம் நன்றாயரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - மாத்திரை ஒன்றை வாயிலிட்டடக்கி, அதன் ரசத்தை விழுங்கவேண்டும். இவ்விதம் பிரதி தினமும் 3-4-5 தடவை செய்து வர வேண்டும்.

உபயோகம் - பெரும் பாடு, சூதகப் பெருக்கு முதலியவை தீரும்.

ஸ்திரீ சகாயச் சூரணம்

பாகப்படுத்தின கஹறூபா, பாகப்படுத்தின நற்பவளம், பருப்புக்கீரைவிதைச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், வெள்ளாட்டுக் கொம்பு சுட்ட கரிச்சூரணம், வாதுமைப்பிசின் சூரணம், கருவேலம்பிசின் சூரணம், வறுத்த கொத்துமல்லிச் சூரணம், போஸ்துக்காய்ச் சூரணம். குறாசானி ஓமச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், பாகப்படுத்தின தொளையிடாத நன்முத்து 3 கிராம்

இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து நன்றாயரைத்து 2,3 கிராம் தேன் அல்லது நெய்யில் சாப்பிட்டு வர உஷ்ணாதிக்கத்தால் உண்டாம் பெரும்பாடு, துற்பலம் முதலியவை தீரும்.

ஸ்திரீ குதூகல ஹல்வா

நெருஞ்சிமுள்ளிச் சூரணம், நெய்யில் வறுத்துப் பொடித்த கருவேலம்பிசின் சூரணம், நாட்டுச் சருக்கரை இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், பசுவின் நெய் 20 கிராம்.

இவற்றில், சருக்கரையைப் பாகுசெய்து, அதில் சூரணங்களைக் கொட்டிக் கிளறி, நெய்வார்த்து, ஹல்வாவைப்போல் செய்து, காலையில் ஒருபங்கும் மாலையில் மற்றொரு பங்குமாகச் சாப்பிடவேண்டும்.

இவ்விதம் பிரதிதினமும் புதிது புதிதாய்ச் செய்து கொள்ள வேண்டும்.

இதனால், நாள்பட்ட பெரும்பாடும் அதன் சம்பந்தமான பல நோய்களும் தீரும்.

கஹறுபாச் சூரணம்

ரோஜாப்பூவிதழ், பருப்புக்கீரை விதை, கொத்துமல்லிவிதை, ஸமொக்உமி, வறுத்த நிஷாஸ்தா, வறுத்த கருவேலம்பிசின், பூமாதுளம்பூ இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், பாகப்படுத்தின கஹறுபா, பாகப்படுத்தின நற்பவளம், பாகப்படுத்தின தொளையிடாத நன்முத்து, * பாகப்படுத்தின பலகறை அல்லது கவடிவெள்ளாட்டுக் கொம்புசுட்ட கரிச்சூரணம் ** பாகப்படுத்தின காந்தம் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், மூங்கிலுப்புச் சூரணம், மாம்பிசின் அல்லது விளாம்பிசின் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 8 கிராம்

---

* வேண்டிய அளவு கவடியை எலுமிச்சம் பழரசத்தில் ஒருநாள் ஊறவிட்டு அகலில் வைத்து மேலகல்மூடி மண்சீலை செய்து, கொல்லுலையில் வைத்து அகலமுக ஊதியெடுத்தாறவிட்டு, கல்வத்திலிட்டுப் பொடித்தெடுத்துக் கொள்வதே கவடியின் பாகமாம்.

** காந்தத்தை ஒட்டிலிட்டு, கொல்லுலையில் வைத்துப் பழுக்கவூதி, கரிசலாங்கண்ணியிலைச் சாற்றில் தேய்த்து ஆறினபின் எடுத்து முன்போல் காய்ச்சி மறுபடியும் தோய்க்க வேண்டும். இவ்விதம் ஏழு தடவைக்குக் குறையாமல் செய்தெடுத்து நன்றாய்ப் பொடித்துக் கொள்வதே காந்தத்தின் பாகமாம்.

செய்முறை - இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு சுக்கான்கீரை வேர்ச்சாறு அல்லது கொத்துமல்லி கீரைச்சாறுவிட்டு இருசாமம் அரைத்துச் சிறு பில்லைகளாகச் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை - பில்லையெடுத்துச் சூரணித்து 10 கிராம், பேதானா ஷர்பத்தில் அல்லது கசகசா ஷர்பத்தில் அல்லது துவர்ப்பான தக்க அநுபானத்தில் சாப்பிட வேண்டும்.

உபயோகம் - பெரும்பாடு, ரத்தபேதி, ரத்தமூலம், ரத்த வாந்தி முதலியவை தீரும்.

காந்தாதி மாத்திரை

பாகப்படுத்தின காந்தம், வாதுமைப்பிசின் சூரணம், அதிமதுரப்பால், கருவேலம்பிசின் சூரணம், பருப்புக்கீரைவிதைச் சூரணம், கொத்துமல்லி விதைச் சூரணம், கசகசா, நிஷாஸ்தா, ரோஜாப்பூச் சூரணம், மூங்கிலுப்புச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், பூங்காவித்தூள் 60 கிராம் * நல்லஜல நண்டு பஸ்பம் 35 கிராம், குராசானி ஓமச் சூரணம், அபினி, குங்குமப்பூ இவை வகை ஒன்றுக்கு 4 கிராம்.

செய்முறை - இவையெல்லாவற்றையும் கல்வத்திற்போட்டு ஸ்பகோல் கோழைஜலம் வார்த்து இருசாமம் அரைத்து பில்லை மாத்திரைகளாகச் செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - பெரும்பாடு, ரத்தவாந்தி, க்ஷயகாசம், தேகவெளுப்பு முதலியவை தீர்ந்து, பலம் அதிகரிக்கும்.

கர்ப்ப ரக்ஷண்ய ஜவாரிஷ்

யானைத் தந்தச் சூரணம், நெரியரிசிப்பால், சடாமாஞ்சிற்சூரணம், லவங்கப்பட்டைச் சூரணம், றூமிமஸ்தகிச் சூரணம், அகருகட்டைச் சூரணம் இவை வகைக்கு ஒன்றுக்கு 35 கிராம், துரிஞ்சி நாரத்தம்பழத் தோல், கோரைக்கிழங்கு, நாகேசரம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 32 கிராம், லவங்கப்பத்திரி, மாசிப்பத்திரி, ரோஜாப்பூ இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 25 கிராம், அபினி 16 கிராம், அம்பர் கஸ்தூரி இவை வகை ஒன்றுக்கு 8 கிராம் லவங்கச் சூரணம் 48 கிராம் சீனிசருக்கரை 420 கிராம் கெட்டித்தேன் 700 கிராம்.

---

* இதனைக் கழுவி, அதன் காலிலுள்ள கொடுக்களை நீக்கி, கலயத்திலிட்டு மேலகல்மூடி மண்சீலை செய்து புடமிட்டெடுத்துக் கொள்வதே நண்டுபஸ்பமாம்.

செய்முறை - இவற்றை மாஜூன் பாகப்படி செய்யவேண்டும்.

மாத்திரை - 9 கிராம் சூதகம் பற்றற நின்றுபோய், சுத்தஸ்நானம் செய்த நாள் முதற்கொண்டு ஆரம்பித்து சாப்பிட்டு வரவேண்டும் கர்ப்பவதியாயிருக்கும்போதும் இதனைச் சாப்பிடுவதனால், கருச்சிதைவு முதலியவற்றைத் தடுத்து கருவை ரக்ஷித்து வளர்க்கும்.

கர்ப்ப ரக்ஷண்ய நித்தில மாஜூன்

பாகப்படுத்தின தொளையிடாத நன்முத்து, அக்கராகாரச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், கிச்சிலிக் கிழங்கு, லவங்கம், கரபஸ் ஓமம், லவங்கப்பத்திரி, ஏலக்காய், ஜாதிக்காய், தாளிசப்பத்திரி, பெருலவங்கப்பட்டை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம் பஹமனேஸுறுக், பஹமனேஸுபேத், மிளகு, அரிசித்திப்பிலி, வெண்சந்தனம், பருப்புக்கீரை விதை, மருதம்பட்டை இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம், மேல்தோல் போக்கின சுக்கு, றூமிமஸ்தகி, செஞ்சந்தனம், முலாம்பழவிதைப் பருப்பு, மூங்கிலுப்பு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 16 கிராம், பஹமனேஸுறுக் சூரணம் 20 கிராம் பசுவின் நெய் 100 கிராம், சீனிசருக்கரை 350 கிராம்

செய்முறை - இவற்றை மாஜூன் பாகப்படி செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை - 2 கிராம் சாப்பிடலாம்.

உபயோகம் - கர்ப்பத்தை ரக்ஷித்துப் பரிபாலித்து வளர்க்கும் அடுத்தடுத்துண்டாகும் கருச்சிதைவைத் தடுத்து கருப்பையைப் பலப்பிக்கும், இது குளர்ச்சியான தேகிகளுக்கு ஏற்றது.

வேறு

லவங்கச் சூரணம் 12 கிராம், லவங்கப்பட்டை. கிச்சிலிக்கிழங்கு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், ஜூந்து 6 கிராம், பாகப்படுத்தின தொளையிடாத நன்முத்து, பாகப்படுத்தின நற்பவளம், பாகப்படுத்தின கஹருபா, பாகப்படுத்தின கோராப்பட்டு, அகருகட்டைச் சூரணம், ஏலரிசிச் சூரணம், குங்குமப்பூ இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், அனிஸூன், சடாமாஞ்சில் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 2 கிராம், கெட்டித்தேன் 175 கிராம்.

செய்முறை - இவற்றை மாஜூன் பாகப்படிசெய்து கொள்ளவேண்டும்.

மாத்திரை - 4-5 கிராம் சாப்பிடவும்.

உபயோகம் - அடுத்தடுத்துண்டாம் கருச்சிதைவை அகற்றி அதனை காத்து வளர்க்கும்.

சந்தனோற்பத்திக் கஸ்தூரிப் பிரயோகம்

கஸ்தூரி குன்றியெடை 2, அபினி, ஜாதிக்காய், களிப்பாக்குச் சூரணம், குங்குமப்பூ இவை வகை ஒன்றுக்கு 1 கிராம்; சுத்திசெய்த கஞ்சாச் சூரணம் 2 கிராம், பனை வெல்லம் 12 கிராம், ஆண்லவங்கம் 4. இதனையும் சூரணித்துக் கொள்ள வேண்டும்.

இவை யெல்லாவற்றையும் சேர்த்தரைத்து, ஆறு மாத்திரையாகச் செய்து, சூதகங்கண்டு பற்றற நின்ற பின் சுத்த ஸ்நானஞ்செய்த நாள் முதற்கொண்டு மூன்று தினம் இருவேளையும் சாப்பிட்டு, உடலுறவுகொள்ள கடவுளின் கிருபையால் சந்தானோற்பத்தி யுண்டாம்.

புத்திரோற்பத்தி யத்திதந்த வுசிதம்

பன்னீர் வார்த்திழைத்துலர்த்தின யானைத்தந்தச் சூரணம், கற்கண்டுச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 55 கிராம். இவ்விரண்டையும் கலந்துவைத்துக் கொண்டு சூதகம் பற்றற நின்றுபோய்ச் சுத்தஸ்நானம் செய்த நாள் முதற்கொண்டு ஏழுதினம்வரையும் இருவேளையும் மேற்படி சூரணத்தில் 8 கிராம் சாப்பிட்டு, உடலுறவு கொள்ள, கடவுளின் கிருபையால் புத்திரோற்பத்தி யுண்டாம்.

கனதனவான்களாகும் நண்பர்களே.

ஸ்தீரீ புருஷர்களுக்குச் சிறுபான்மை இயற்கையா யுண்டுபட்டிருக்கும் முக அவலக்ஷணம், வாய்நாற்றம், அக்குள் நாற்றம், வியர்வைநாற்றம், படர்தேமல் முதலியன ஸ்திரீ புருஷ இச்சைக்குப் பலவகையாலும் இடையூறாயிருப்பனவாகலின் அவற்றைமாற்றி இருதரத்தார்க்கும் இச்சை பெருகுவதற்கு ஏதுவாயுள்ள சுகந்தத்தையுண் டாக்கி, ஆனந்தத்தைக் கொடுத்துதவும் திரவிய முதலிய யோகமுறைகளையும் இங்கு ஒருவாறு எழுதுவது உசிதமாகும். ஏனென்றால், மேற்குறித்த குணதோஷங்கள், தாருட்டியவிர்த்தி, ஆண்மைசக்தி ஆகிய இவற்றைக் குறைக்க நிமித்தகாரணங்களா யிருப்பனபோலவே, அவற்றைவிலக்கி சுகானந்தத்தைத் தருமுறைகள், தலைமூளை; இருதயம் ஆகியவற்றைப் பலப்பித்து உற்சாகத்தையும், ஆண்மைசக்தி முதலியவற்றையும் அதிகப்படுத்த இயன்றனவாயிருக்கின்றன. ஆனதுபற்றியே அவற்றுள் சிறந்த சிலவற்றை இங்கெழுதப் பிரியங்கொண்டோம்.

அளக ரக்ஷண்ய தயிலம்

நன்றாய்க்கழுவி யாட்டியெடுத்த நல்லெண்ணெய் 2800 கிராம், கையாந்தகரை சமூலம், 1400, வறுத்த சீமை மறுதோன்றி விதை, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல் இவை வகை ஒன்றுக்கு 360 கிராம், ஒதளம் பட்டை அல்லது காய்ச்சுக்கட்டி மரப்பட்டை 180 கிராம்.

இவற்றில், எண்ணெய் தவிர மற்றவைகளை எட்டுப்படி சுத்தஜலத்திற் போட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி, வடிகட்டிச் சக்கைபோக்கி, அதில் மேற்படி எண்ணெய் வார்த்துக் காய்ச்சி, நீர் சுண்டினபின்னிறக்கி, தலையில் தடவி, சீப்பிட்டு வார்த்து இரண்டு நாளைக்கு ஒருமுறை சிகைக்காய்த் தேய்த்துக் கழுவிவர, மயிர் தழைத்து நீண்டு நெறித்துக்கறுத்து, ஓங்கி வளரும்.

ககனாரவிந்தாதி குந்தள போஷக தயிலம்

உலர்த்தின ஆகாசத்தாமரையிலை, நெல்லிமுள்ளி இவை வகை ஒன்றுக்கு 50 கிராம் கடுக்காய்தோல், தான்றிக்காய்த்தோல் இவை வகை ஒன்றுக்கு 30 கிராம் றூமிமஸ்தகி, மயிர்ச்சிக்கி, லாதன் இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், மூங்கிலுப்பு 3 கிராம், பாக்கு 12 கிராம் நல்லெண்ணெய் அரைபடி.

இவற்றில், எண்ணெய் தவிர, மற்றவைகளைச்சிதைத்து ஜலத்திலிட்டுக் காய்ச்சி, நாலிலொரு பங்காய்ச் சுண்ட வைத்து, கஷாயத்தை வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். சக்கையில் மறுபடியும் முக்காற்படி ஜலம் வார்த்து நாலிலொன்றாகக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டிச் சக்கை போக்கி, அதில் முன் கஷாயத்தையும் மேற்படி எண்ணெயையும் கலந்து காய்ச்சி நீர் சுண்டினபின் அதில் மேற்படி சக்கையையும் போட்டு வெய்யிலில் வைத்துச் சக்கை போக்காமல் வைத்துக்கொள்ள வேண்டும்.

இதைத் தலையில் தடவிச் சீப்பிட்டுச் சீவிவர மயிர் உதிர்தல் தீர்ந்து, அதிதீவிரமாக முளைத்துக் கறுத்துக்குழன்று நீண்டு, மினுமினுப்பேறி, மயிர் ஓங்கி வளரும்.

சிரோருகாபி விர்த்தி யெண்ணெய்

நன்றாக முற்றின தேங்காய்த் துருவல் 2800 கிராம், கரும்பூலாப்பழம் 5 கிலோ, நல்லெண்ணெய் 2800 கிராம்.

இவற்றில் தேங்காய்த் துருவலையும் கரும்பூலாப் பழத்தையும் ஒன்றாகக் கலந்து ஓர்மண் பாத்திரத்திற் போட்டு வாய்க்கு அகலிட்டு வலுவாக மண்சீலை செய்து, சேற்றிற் புதைத்து, இரண்டு வாரம்

சென்றபின் எடுத்து மேற்படியெண்ணெயைக் கலந்து காய்ச்சி நீர் சுண்டின பிற்பாடு சீஷாவில் அடக்கிக் கொண்டு தலையில் தேய்த்து வருவதனாலும், ஸ்நானம் செய்து வருவதனாலும் ஆச்சரியப்படத்தக்க விதமாக மயிர்தழைத்து வளர்ந்து நீண்டு, நேத்திரோற்சவமாயிருக்கும்.

கேசாதித் தயிலம்

மருதோன்றியிலை, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, மாதுளம்பட்டை, கையாந்தகரை சமூலம் இவை வகை யொன்றுக்கு 280 கிராம் எலுமிச்சம்பழச்சாறு 140 கிராம், இரும்பரபொடி, காய்ச்சுக்கட்டி இவை வகை ஒன்றுக்கு 70 கிராம், நல்லெண்ணெய் 1120 கிராம்.

இவற்றில் சரக்குகளைத் தூள் செய்து எண்ணெயிலிட்டு மற்றவைகளையும் சேர்த்துக் காய்ச்சி, நீர் சுண்டினபின் வடிகட்டி, சீஷாவில் வார்த்து வைத்துக் கொண்டு, மாலை வேளையில் தைலத்தைத் தலையில் தடவி காலை வேளையில் கழுவி வாசனைத் தைலம் பூசிவரவேண்டும். சம்பங்கியெண்ணெயும் பூசலாம்.

மயிர்நீண்டு வளர்ந்து மிருதுவாக, பளபளப்பேறி, பார்வைக்கு வெகுநேர்த்தியாயிருக்கும்.

இந்தத் தயிலத்தில் கொஞ்சம் எடுத்து அதற்குச் சமனெடை கையாந்தகரைச் சாறுகூட்டி, தலையில் தடவிச் சீப்பிட்டுச் சீவி வருவதனால் முன்னிலும் விசேக்ஷித்த குணத்தைத் தரும்.

கூந்தற் சுகந்த தூபம்

கொட்டிச்சாந்து, லவங்கப்பத்திரி இவை வகை ஒன்றுக்கு 6 கிராம், பர்மி; நெரியரிசிப்பால், தும்பராஷ்டம்; அகருகட்டை இவை வகை ஒன்றுக்கு 24 கிராம், கற்கண்டு 50 கிராம், சாம்பிராணி 50 கிராம், மலாக்கா சந்தனத்தூள் 120 கிராம்.

இவற்றையெல்லாம் சேர்த்திடித்து, தூள் செய்து வைத்துக் கொண்டு அதில் கொஞ்சம் எடுத்துத் தூபக் கலசத்தில் அல்லது நெருப்பிலிட்டுக் கூந்தலுக்குப் புகையூட்ட, கூந்தல் கமகமென்று பரிமளிக்கும் அன்றியும், ஸ்திரீ புருஷர் இருதரத்தார்க்கும் விருப்பத்தையும், இன்பத்தையும் கொடுக்கும்.

கூந்தற் பரிமள தூபம்

மலாக்கா சந்தனத்தூள் 120 கிராம், நெரியரிசிப் பால் 24 கிராம், சடாமாஞ்சில், தேவதாரம், அகருகட்டை, கிரந்தி தகரம், சாம்பிராணி, வெ..வுளா, தும்பராஷ்டம் இவை வகை ஒன்றுக்கு 72 கிராம்.

இவற்றை மேற்படி பாகப்படி செய்துகொள்ள மேற்படி குணங்களுண்டாம்.

கூந்தல் நறுமண தூபம்

மலாக்கா சந்தனத்தூள் 72 கிராம், சீமைக் கிச்சிலிக் கிழங்கு, வெள்ளைக் குங்கிலியம்; சாம்பிராணி இவற்றின் தூள் வகை ஒன்றுக்கு 55 கிராம், கெவுளா, லவங்கம், ஜாதிக்காய், தும்பராஷ்டம் இவற்றின் தூள்வகை ஒன்றுக்கு 15 கிராம், நாட்டுச்சருக்கரை 25 கிராம்.

இவற்றில், சருக்கரையைப் பாகுசெய்து மேற்படி தூள்களை அதில்போட்டு நன்றாக மிஸ்ரமித்து மேற்கண்ட படி செய்ய மேற்கண்ட குணங்களுண்டாம்.

முகவஜீகரப் பிரயோகம்

பிஸ்தாப்பருப்பு, கசகசா இவை சமனெடையெடுத்தரைத்து வெள்ளாட்டுப்பால் பாலாடையில் கொஞ்சம் விட்டுக் குழப்பி, முகத்தில்பூசி, கொஞ்சநேரம் பொறுத்திருந்து கழுவவேண்டும். இவ்விதம் தொடர்ந்தேற்றியாகச் சிலகாலம் செய்துவர முகத்தில் பளபளப்பு; மினுமினுப்பு உண்டாகி முகவஜீகரமாம்.

வேறு

கொண்டைக் கடலைப் பருப்புமா, மொச்சைப்பருப்புமா எவைக்கோதுமைமா, நிஷாஸ்தா, முள்ளங்கிவிதைத்தூள் இவை வகை ஒன்றுக்கு சமனெடை.

இவற்றையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து நன்றாயரைத்துப் பசுவின்பாலில்குழைத்து முகத்தில் பூசிவைத்திருந்து பனப்ஷா கஷாயமிட்டுக் கழுவிவர, முகத்திற்கு அழகும்; பளபளப்பும், மினுமினுப்புமுண்டாய் பார்வைக்கு வெகு ரம்மியமாயிருக்கும்.இதனை தேகத்தில் பூசி ஸ்நானம் பண்ணி வருவதனாலும் முன் கண்ட குணங்களுண்டாம்.

முகவஜீகரப் பில்லை

வாதுமைப்பிசின், நிஷாஸ்தா இவற்றின் தூள் சமனெடை. இவ்விரண்டையும் கலந்து பசுவின்பால் வார்த்தரைத்து 10-20 கிராம் நிறையுள்ள பில்லைகளாகச் செய்துலர்த்தி பிரதிதினமும் ஒன்றிரண்டு பில்லையைப் பாலாடையில் குழைத்தாவது அல்லது சுத்த ஜலத்தில் குழைத்தாவது முகத்தில் பூசிக் கழுவிவர, முகவஜீகரம் மிகுந்துண்டாம்.

முகவஜீகரச் சூரணம்

கற்கண்டு 35 கிராம், உலர்த்தின ஜவ்பொ 35 கிராம், குங்குமப்பூ 12 கிராம்.

இவையெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்திடித்துத் தூள் செய்து வஸ்திரகாயம்பண்ணி, சீஷாவில் அடைத்து கொண்டு பிரதிதினமும் 8-10 கிராம் சுத்தஜலத்தில் அல்லது பசுவின் பாலில் குழைத்து முகத்தில் பூசிவர, முகம்வஜீகரமாய் கண்ணாடியைப்போல் பளபளத்து மினுமினுத்து பார்ப்போர் கண்களைப் பறிக்கத்தக்கதா யிருக்கும்.

வாய்ச் சுகந்தக் கஸ்தூரி மாத்திரை

கஸ்தூரி, ஏலக்காய்ச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், சடாமாஞ்சில், எலுமிச்சந்துளசி, லவங்கம், நாகேசுரம், வால்மிளகு, பெருலவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, பாக்கு, சன்னாராஷ்டம், கோரைக்கிழங்கு, துரிஞ்சி நாரத்தம் பழத்தோல், மேல்தோல் போக்கின சுக்கு, லவங்கப்பத்திரி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 1 கிராம்.

இவை யெல்லாவற்றையும் சேர்த்து, பன்னீர்வார்த்தரைத்து முடிவில் கருவேலம்பிசின் ஊறவிட்டெடுத்த ஜலம் கொஞ்சம் வார்த்தரைத்து, தேற்றாம் வித்துப் பிரமாணம் மாத்திரை செய்துலர்த்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

இதில் ஒன்றிரண்டை வாயிலிட்டடக்கி, அதன் ரசத்தை விழுங்கிக் கொண்டுவர: வாய்நாற்றம் முதலிய துர்க்கந்தம் நீங்கி இருதயம் பலப்படும்.

வேறு

கஸ்தூரி, மேல்தோல் போக்கின சுக்குச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், சன்னராஷ்டம், துரிஞ்சி நாரத்தம்பழத்தோல்; சடாமாஞ்சில்; வால்மிளகு இவற்றின் சூரணம் வகை ஒன் றுக்கு 4 கிராம். கோரைக்கிழங்கு, லவங்கம்; பாக்கு இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம்.

இவற்றை, மேற்கண்ட முறைப்படி செய்துவர மேற்கண்ட குணங்களுண்டாம்.

வேறு

கஸ்தூரி 2 கிராம், பச்சைக்கர்ப்பூரம் 2 கிராம், எலுமிச்சந்துளசி, ஜாதிக்காய், வால்மிளகு, ஏலக்காய், மேல்தோல் போக்கின சுக்கு, தாளிசப்பத்திரி, பாக்கு, லவங்கப்பட்டை; சன்னராஷ்டம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம்.

இவற்றையும் முன்பாகப்படி செய்துகொள்ள முன்கண்ட குணங்களுண்டாம்.

வாய்சுகந்தப் பச்சைக் கர்ப்பூர மாத்திரை

பச்சைக்கர்ப்பூரம், ஜாதிக்காய் சூரணம், ஏலக்காய்ச் சூரணம், லவங்கப்பட்டைச் சூரணம், சன்னராஷ்டச் சூரணம், பாக்குச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம். துரிஞ்சி நாரத்தம் பழத்தோல், வால்மிளகு, தாளிசப்பத்திரி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 2 கிராம். கோரைக்கிழங்குச் சூரணம் 8 கிராம், கஸ்தூரி 2 கிராம்.

இவற்றையும் முன்கண்ட பாகப்படி செய்து கொள்ள மேற்கண்ட குணங்களுண்டாம்.

சுகந்த தந்தப்பொடி

கறியுப்புத்தூள் 35 கிராம், சீமை யிலாமிச்சைவேர்ச் சூரணம், யவைக்கோதுமைமா இவை வகை ஒன்றுக்கு 20 கிராம். அக்கராகாரச் சூரணம் 16 கிராம்.

இவற்றில், யவைக்கோதுமை மாவில் கொஞ்சம் தேன் விட்டுக் குழைத்து ஓட்டிலிட்டு, கருகவறுத்துத் தூள் செய்து அதனுடன் மற்றவைகளையும் சேர்த்துத் தூள் செய்து வைத்துக்கொண்டு பல்விளக்கிவர, பல்லிலுள்ள ஊத்தை அறநீங்கி, பல் முத்தைப் போல் வெளுத்துப் பிரகாசிக்கும். அன்றியும் வாய் நாற்றமும் நீங்கிச் சுகந்தமுண்டாம்.

சந்தனாதி தந்தப்பொடி

வெண் சந்தனத்தூள், உலர்த்தின துரிஞ்சி நாரத்தம் பழத்தோல் சூரணம், சீமையிலாமிச்சை வேர்ச்சூரணம் * மாசிக்காய்க் கலவைச் சூரணம் 18 கிராம், ஏலக்காய், வால்மிளகு, தாளிசப்பத்திரி, அகருகட்டை, றூமிமஸ்தகி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 12 கிராம்.

இவையெல்லாவற்றையும் கலந்து வைத்துக் கொண்டு அதில் கொஞ்சம் எடுத்து, பல்லிலிட்டு விளக்கிவர தந்த வியாதி முதலியவை தீர்ந்து, ஈறு இறுகிப் பலப்பட்டு, வாய்க்குச் சுகந்த முண்டாம்.

---

* மாசிக்காய்த்தோல் சூரணம் ஒரு பங்கு, உலர்த்தின மாதுளம்பட்டைச் சூரணம் அரைப்பங்கு, இவ்விரண்டையும் நாலுபங்கு ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் குழம்புபதத்தில் படிக்காரத்தூள் காற்பங்கு போட்டுக் காய்ச்சி, அதில் ஒன்றரைப் பங்கு தேன் சேர்த்துக் காய்ச்சி, இறுகின பதத்தில் பில்லைகளாகச் செய்துலர்த்திக் கொள்வதே மாசிக்காய் கலவையாம்.

முத்தூள்தந்த சுகந்தப் பொடி

மூங்கில்வேர் சுட்டகரி, தேன்விட்டுக் குழைத்து வறுத்த யவைக்கோதுமை மாவின்கரி, கடல் நுரைத்தூள் இவை வகை ஒன்றுக்கு 70 கிராம், இந்துப்பு 200 கிராம், ஏலக்காய், வால்மிளகு, தாளிசபத்திரி, அக்கராகாரம் இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், மூங்கிலுப்பு ரோஜாப்பூவிதழ் ஆகிய இவ்விரண்டையும் தனித்தனி வறுத்துக் கரியாக்கி யிடித்ததூள் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம்.

இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொண்டு அதில் கொஞ்சம் எடுத்துப் பல்லிலிட்டு விளக்கி வர, தந்தவாயு முதலியவை தீர்ந்து, பல்லிறுகி முத்தைப் போல் பளிச்சென்று துலங்கும்.

* கைக்குழி நறுமண மாத்திரை

படிக்காரப்பொடி 35 கிராம், கஸ்தூரி 6 கிராம், அம்பர் 3 கிராம், இம்மூன்றையும் பன்னீர் வார்த்தரைத்து கொட்டைப் பாக்களவு மாத்திரைசெய்து வைத்துக்கொண்டு, இதைக் கொஞ்சம் பன்னீரில் இழைத்து அக்குளில் பூசிவர, அதிலுள்ள துர்நாற்றம் முதலியவை தீர்த்து பரிமளம் உண்டாம்.

வேறு

சந்தனம்; பெருலவங்கப்பட்டை, கற்பாசி, மஞ்சள் நிறப்படிகாரம் அல்லது பொரித்த படிக்காரம், அரபிபோளம், லவங்கப்பத்திரி, ரோஜாப்பூவிதழ் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 4 கிராம், துரிசு; மிருதார்சிங்கி இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், இவ்விரண்டையும் தனித் தனி ஓட்டிலிட்டு வறுத்து வெண்மையானபின் எடுத்துக் கொள்ள வேண்டும். பச்சைக்கர்ப்பூரம் 2 கிராம்.

இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து, பன்னீர் வார்த்தரைத்து, பில்லைகளாகச் செய்து, நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு இதைக் கொஞ்சம் பன்னீரில் இழைத்து அக்குளில் பூசிவர அதிலுள்ள துர்நாற்றம் முதலியவை தீர்ந்து, நறுமணம் உண்டாம்.

மழுக்கி ரோம சங்காரன்

சிதைத்த வசம்பு 900 கிராம், மூன்று படி ஜலம் வார்த்து எரித்து மூன்றிலொன்றாய்ச் சுண்டும்படி காய்ச்சி வடிகட்டி, சக்கைபோக்கி யெடுத்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் படாத **சுண்ணாம்பு நீறு

---

* கமுக்கட்டு, இதனை அக்குள் என்றும் சொல்வார்கள்.

** முத்துச் சிப்பியைச் சுட்டு நீறாக்கிச் சேர்ப்பதே யுத்தமம்.

1400 கிராம் பொன்னரிதாரம் 250 கிராம், கிச்சிலிக்கிழங்கு, சடாமாஞ்சில், ஸூரிஞ்சான், அக்கராகாரம், அனிஸூன், காட்டுச் சீரகம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 35 கிராம், கரியபோளச் சூரணம், ஜூந்து இவை வகை ஒன்றுக்கு 5 கிராம்.

இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து, மேற்படிகஷாயம் வார்த்து அந்த க்ஷணமே நன்றாய்க் கலக்கி, அதன் மேல் இரண்டு கோழிமுட்டையை யுடைத்தூற்றி, மிஸ்ரமித்துக் கொள்ள திரவரூபமாயிருக்கும், ரோமத்தைக் கழிக்க வேண்டிய பாகத்தில் அதில் கொஞ்சம் எடுத்துப்பூசி, கொஞ்சம் நேரம் சென்றபின், ரோமத்தை மெதுவாயிழுத்துப் பார்க்கவேண்டும், ரோமம் கழன்றுவிட்டால், அதுவே பக்குவமென்று உடனே ரோமத்தைக் கழித்து விட வேண்டும், ரோமம் கழலாவிட்டால் மறுமுறையும் முன்போல் செய்ய வேண்டும். இதற்கும் கழலாவிட்டால் மூன்றாம் முறையில் கட்டாயம் கழன்றுபோம், உடனே ரோஜாப்பூ விதழ், துத்திப்பூ இவ்விரண்டையும் கஷாயம் செய்து கழுவ வேண்டும்.

குறிப்பு

மேற்கண்ட பாகப்படி செய்தெடுத்த இரண்டு பங்கு திரவத்தில் ஒருபங்கு நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி, தைலமாகவும் உபயோகிக்கலாம்.

ரோம நாசகாரி

பொன்னரிதாரத்தூள், தண்ணீர்படாத சுண்ணாம்பு நீறு இவை வகை ஒன்றுக்கு 1 பங்கு. கரிய போளம் 3/8 பங்குஆகிய இவற்றை 10 பங்கு ஜலத்திலிட்டுக் கரைத்து வடிகட்டியெடுத்த ஜலத்தில் முன்னைய மூன்றையும் முன் கண்ட அளவு புதிதாய்ப் போட்டுக் கரைத்துவடிகட்டிக் கொள்ள வேண்டும். அப்படியே இன்னொரு முறையும் செய்து கொள்ள வேண்டும். ஆக மூன்று தடவையாய்ச் செய்தெடுத்த ஜலம் நாலுபங்கு, நல்லெண்ணெய் ஒருபங்கு இவ்விரண்டையும் கலந்து மெதுவாயெரித்து நீர்சுண்டின பின் எடுத்து வைத்துக்கொண்டு, ரோமத்தை நீக்க வேண்டிய பாகத்தில் தடவிவர, ரோமம் நீங்கும்.பின்பு கோதுமைமா; பச்சைப்பருப்பு மா, முலாம்பழவிதைப் பருப்பு ஆகிய இவற்றையரைத்துப் பூசிக் கழுவிவிட வேண்டும்.

ரோம நிர்மூல சுகுமார திலா

நிஷாஸ்தா நூறுபங்கு, தண்ணீர்படாத சுண்ணாம்பு நீறு ஐம்பதுபங்கு, பொன்னரிதாரச் சூரணம் இருபது பங்கு.

இவையெல்லாவற்றையும் சேர்த்தரைத்து, சீஷாவில் அடக்கி வைத்துக்கொண்டு, வேண்டியபோது அதில் கொஞ்சம் எடுத்து

எண்ணெயில் அல்லது சுத்தஜலத்தில் குழைத்து குறித்தபாகத்தில் பற்று இட ரோமம் நிர்மூலமாம்.

வேறு

ஒரு பங்கு தண்ணீர்படாத சுண்ணாம்பு நீற்றில் ஆறு பங்கு ஜலம் வார்த்துக் கரைத்து, மூன்றுநாள் ஊறவிட்டுத் தெளிவிறுத்து; அதில் முன் அளவு புதிதாய்ச் சுண்ணாம்பு நீறுபோட்டு முன்போற்செய்து தெளிவிறுத்து மூன்றாம் தடவையும் அப்படியே செய்தெடுத்த தெளிநீரில் அந்நீரெடைக்கு மூன்றில் ஒரு பாகம் பொன்னரிதாரச் சூரணம் போட்டு வெய்யிலில் வைத்து வரவேண்டும். அதில் ஒரு இறகை நனைத்து இழுத்துப் பார்க்க, ரோமம் வந்து விட்டால் அது பக்குவம் என்று எடுத்து வைத்துக்கொண்டு, அதை உபயோகிக்க வேண்டிய பாகத்தில் சீமை ஸோப்பிட்டுத் தேய்த்துக் கழுவி, அதில் கொஞ்சம் எடுத்துப்பூசி ரோமத்தை நீக்கி, அதன்மேல் நெய்யை அல்லது ரோஜாப்பூ எண்ணெயைத் தடவ வேண்டும்.

குறிப்பு

இப்பிரயோக ரோம நிவாரணங்களால் சில சுகுமார தேகிகளுக்கு எரிவந்தம் கண்டாலுங் காணலாம். அப்படிக் கண்டால், உடனே கழுவிவிடவேண்டும். அதை யுபயோகிக்கும் அப்பாகத்தில் ரோஜாப்பூ எண்ணெய் தடவி; பின்பு அதை உபயோகிப்பது உத்தமம். சுண்ணாம்பு நீற்றை அவ்விதத் தேகிகளுக்கு நிஷாஸ்தாவுடன் சேர்த்தும் உபயோகிக்கலாம். அதை உபயோகித்து ரோமத்தை நீக்கினபின் எரிவந்தம் கண்டால், மொச்சைமா சந்தனம் இவற்றில் ஒன்றைத் தனியாகவாவது, கலந்தாவது உபயோகித்தாலும், காய்ச்சுக்கட்டித்தூளை நெய்யில் குழைத்துப்பூசினாலும் நின்றுபோம். மிருதார்சிங்கி, கோழிமுட்டை வெள்ளைக்கரு, ரோஜாப்பூ எண்ணெய் வகை ஒன்றுக்குச் சமனெடை யெடுத்து அதனுடன் கொஞ்சம் சூடன் சேர்த்தரைத்துப் பூசுவதனாலும் எரிவந்தம் முதலிய துர்க்குணங்கள் தீரும்.

இப்பிரயோகங்களால் சிலசமயம் அந்தப் பாகத்தில் துர்க்கந்தம் இருக்குமாகையால், ரோஜாப்பூவிதழைக் காடிவிட்டரைத்துப் பூசுவதனாலும், துளசியிலை, கோரைக்கிழங்கு, ரோஜாப்பூவிதழ், சடாமாஞ்சில், மருதோன்றிப்பூ, இலாமிச்சவேர், லவங்கம், குசும்பாபூ இவை வகை ஒன்றுக்குச் சமனெடையெடுத்து இவையெல்லா வற்றையும் பன்னீர் வார்த்தரைத்துப் பூசி வருவதனாலும் தீரும்.

கடிதட நாற்ற நிவாரணி

மாதுளமரப்பட்டை, மாதுளம்பழத்தோல், மாதுளம் இலை, மாதுளம்பூ இவை வகை ஒன்றுக்கு 90 கிராம் இவையெல்லாவற்றையும்

சிதைத்து ஒன்றாய்க் கலந்து, முக்காற்படி சுத்தஜலத்திலிட்டு, காற்படியாகச் சுண்ட வைத்து இறக்கிப் பிசைந்து வடிகட்டின கஷாயத்தில், அரைக்கால்படி சம்பங்கியெண்ணெய் கலந்து நீர் சுண்டக் காய்ச்சி வைத்துக்கொண்டு பெண் அங்கத்திற்குள் பூசி வர, அதன் துர்நாற்றம், அசுத்தநீர் வடிதல் முதலியவை தீரும்.

வேறு

நூறு வருஷம் சென்ற வேப்பமரப் பட்டை 1400 கிராம், இதனையிடித்து மூன்றுபடி சுத்த ஜலத்தில் போட்டு, நாலிலொன்றாய்க் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டின கஷாயத்துடன், பத்துப்பலம் சம்பங்கியெண்ணெய் கலந்து நீர் சுண்டக் காய்ச்சியிறக்கி வைத்துக்கொண்டு மேற்கண்ட படி செய்துவர, துர்க்குணங்கள் தீரும்.

வேறு

நாவல்பட்டை, மாம்பட்டை, துரிஞ்சி நாரத்தம்வேர் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், ஜாதிக்காய் 24 கிராம், இவையெல்லாவற்றையும் உரலிலிட்டு நன்றாயிடித்து ஓர் பாத்திரத்தில் போட்டு, அரையாழாக்கு ஜலம்வார்த்து, அந்த ஜலம் எல்லாம் சுண்டும்படி காய்ச்சி யெடுத்து வெய்யிலிலிட்டு உலர்த்திச் சூரணித்து வடிகட்டி வைத்துக் கொண்டு, அதில் கொஞ்சம் எடுத்து சம்பங்கியெண்ணெயில் குழைத்து மர்ம ஸ்தானத்துக்குள் பூசிவர, அதன் துர்நாற்ற முதலியவை தீர்ந்துபோம்.

குரற்கம்மற் திறவுகோல்

கடுக்காய்விதைப்பருப்பு, கல்லுப்பு, அரிசித்திப்பிலிச் சூரணம் இவை வகை ஒன்றுக்குச் சமனெடை, கொம்புத் தேன் அல்லது கெட்டித்தேன் செல்லுமளவு வார்த்தரைத்து, சுண்டைக்காய்ப் பிரமாணம் தின்றுவர, குரற்கம்மல், குரற்கட்டு, கோழைக்கட்டு முதலியவை தீர்ந்து, இனிய குரலோசையுண்டாம்.

வேறு

மேற்றோல் போக்கின இஞ்சி 10 கிராம், பனை வெல்லம் 20 கிராம் ஆகிய இவ்விரண்டையும் நன்றாக நேக அரைத்து, காலை வேளையில் தனியாகவாவது காலை போஜனத்துடன் சேர்த்தாவது சாப்பிட்டுவர, தொண்டைக் கட்டு, தொண்டைக்கம்மல் முதலியவை தீர்ந்து இனிய தொனியுண்டாம்.

வேறு

நெல்லிமுள்ளிச் சூரணம் ஒருபங்கு, மேற்றோல் போக்கின எள்ளு அரைப்பங்கு, கொம்புத் தேன் அல்லது கெட்டித்தேன் இருபங்கு ஆகிய

இவற்றை ஒன்றாய்க் கலந்து சாப்பிட்டு வர, வறட்சியாலுண்டாம் தொண்டையிலுள்ள கபக்கட்டு முதலியவை தீர்ந்து சப்தம் சீர்ப்படும்.

தேமற்படை கொல்லி

முள்ளங்கிவிதைச் சூரணம் 35 கிராம், குந்திரிக்கச் சூரணம் 32 கிராம் ஆகியவற்றை, காரமான பழங்காடி வார்த்துத் தேமற்படைகளின் மீது பூசிவர அவை மறைந்து நிர்மூலமாம்.

வேறு

பறங்கிச்சாம்பிராணி, மஞ்சிட்டி, கொடிவேலி வேர்ப்பட்டை, காக்கட்டான்விதை, மாசிக்காய், ஆற்றுத் தும்மட்டிக்காய் விதை, வெள்ளைக்கடுகு ரோகணி, திராக்ஷப்பழம், மஹமூதா இவை வகை ஒன்றுக்கு 12 கிராம் குசும்பாப்பூ அல்லது லாலாப்பூ அல்லது நெருப்பு மல்லிகைப்பூ 24 கிராம் இவையெல்லாவற்றையும் அம்மியிலிட்டுக் காரமான பழங்காடி வார்த்தரைத்துத் தேகத்தின் மேற் பூசிவர; வெள்ளைத்தேமல், கறுப்புத்தேமல் முதலியவை தீரும்.

வேறு

வாதுமைப்பிசின் சூரணம் 12 கிராம், பறங்கிச் சாம்பிராணித்தூள் 4 கிராம் ஆகிய இவ்விரண்டையும் முலைப்பாலில் குழைத்துத் தேகத்தின்மேல் பூசிவர, தேமற்படை முதலியவை தீரும்.

வேறு

முற்றின வேப்பம்பட்டையை யிழைத்த சந்தனம் ஒரு பங்கு பன்னீர்வார்த்திழைத்த மலாக்காய்ச் சந்தனம் அரைப்பங்கு ஆகிய இவ்விரண்டையுங் கலந்து தேகத்தின் மேற்பூசிவர, தேமல், வியர்வை நாற்றம் முதலியவை தீர்ந்து சுகமுண்டாம்.

மலீமச நிவாரண நலங்கீடு

பச்சைப் பயற்றம்பருப்பு, வாதுமைக் கொட்டைப்பருப்பு ஆகிய இவ்விரண்டையும் அம்மியிலிட்டு, பன்னீர் வார்த்தரைத்து, சம்பங்கி யெண்ணெய் விட்டுக் குழைத்துத் தேகத்தின் மேற்பூசி, சற்றுநேரஞ் சென்றபிறகு கையால் நன்றாய்த் தேய்த்துருட்டி, அழுக்கை நீக்கி, வெந்நீர் ஸ்நானம் செய்துவர வேண்டும். இவ்விதம் சிலதினம் செய்துவர தேகம் மிருதுவாய், மினுமினுத்து தேகவஜீகர முண்டாம்.

மலின நிவாரண சுகந்த நலங்கீடு

வேகவைத்துலர்த்தின கொண்டைக் கடலைப்பருப்பு, 3/8 மசூரிப்பருப்பு அல்லது பச்சைப்பயற்றின் பருப்பு 3/8 படி ஆகிய

இவ்விரண்டையும் தனித் தனி மாவாக்கிக்கொள்ள வேண்டும். இலாமிச்சை வேர்ச்சூரணம், பால்சாம்பிராணிச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 60 கிராம், சடாமாஞ்சில், மகிழம்பூ இவற்றின் சூரணம் வகைஒன்றுக்கு 18 கிராம், பேரரத்தைச் சூரணம் 20 கிராம் கெளளா 16 கிராம் சீமைக்கிச்சிலிக்கிழங்கு, காட்டேலக்காய் பூலாங்கிழங்கு ஆகிய இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 13 கிராம், கோஷ்டச் சூரணம், நெய்தெளித்து வறுத்திடித்த நாகணச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 9 கிராம் ஜாதிக்காய், ஜாதிபத்திரி, லவங்கம் ஆகிய இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 6 கிராம், குங்குமப்பூ 2 கிராம்.

செய்முறை - இவற்றில், குங்குமப்பூவை பன்னீர் வார்த்தரைத்து, அதில் மா, சூரணவகை ஆகிய இவற்றைக் கலந்து, சீஷாவில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உபயோகம் - இதில், செல்லத்தக்க அளவு எடுத்து, அதில் சம்பங்கியெண்ணெய் முதலிய பரிமளபுஷ்ப எண்ணெய் கலந்து, தேகத்தில் நன்றாய்த் தேய்த்து சற்றுபொறுத்திருந்து, பிறகு தேய்த்துருட்டி வெந்நீரில் ஸ்நானம் செய்துவர, வியர்வை நாற்றம், கற்றாழை நாற்றம், அழுக்குத்தேமல், பறைத்தேமல், முதலிய சருமத்தைப் பற்றி வியாதிகள் தீர்ந்து, தேகமிருதுவு, தேகமினுமினுப்பு, தேகவஜீகரம் ஆகிய இவையுண்டாய், தேகம் பரிமளிக்கும்.

வேறு

பச்சரிசி மா, மசூரிப்பருப்பு மா, யவைக் கோதுமை மா, கடலைப்பருப்பு மா, தராயிலைச் சூரணம், கடையில் விற்கும் வெள்வங்கபஸ்பம், குசும்பாபூ, மொச்சைப்பருப்புமா, செஞ்சந்தனம், மருதோன்றியிலைச் சூரணம் ஆகிய இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், மூங்கில் வேர்ச்சூரணம், கோஷ்டச் சூரணம், பிரகாசமுள்ள முத்துச்சிப்பிச் சூரணம், தித்திப்புப் பூசணிக்காய் விதைப்பருப்பு, மூலாம்பழவிதைப்பருப்பு, சீமைத்துத்திப்பூ, காட்டு வாதுமைப்பருப்பு, அல்லது நீரடிமுத்து, * சுந்தரவித்து, ஸர்ஸூன், கடுகு, துரிஞ்சி நாரத்தந்தோல், கொம்மட்டிப் பழவிதைப்பருப்பு, வெள்ளரி விதைப்பருப்பு ஆகிய இவை வகை ஒன்றுக்கு 25 கிராம்.

இவற்றில் பருப்பினங்களையெல்லாம் அம்மியிலிட்டரைத்து, அவற்றுடன் மற்ற சூரணங்களையும் சேர்த்தரைத்துக்கொண்டு

* இதற்கு அரபியில் ஹஷீஸ் என்றும், பார்ஸியில் ஹூஸனே பூஸூப் என்றும் பேர். இதன் உருவம். கசகசாவிலும் சிறிது. கடினமுள்ளது, வர்ணம்-வெண்மை ருசி-இலைப்பும் உரைப்பும், பதில்-கசகசா

தேவையான அளவு எடுத்து, சம்பங்கியெண்ணெயிலிட்டுக் குழைத்துத் தேகத்தின் மேற்பூசி, நன்றாய்த் தேய்த்துருட்டி வெந்நீர் ஸ்நானம் செய்துவர, தேகத்தில் உண்டாம் மாசு, மறு முதலியவை தீர்ந்து, தேகம் நிர்மலமாய், தோல் மிருதுவாய், மினுமினுத்து, பளபளத்து, சுகந்த, வாசனை பரிமளிக்கும்.

வேறு

பறங்கிவிதைப் பருப்பு, கொம்மட்டிப்பழ விதைப்பருப்பு, தித்திப்பு வாதுமைப்பருப்பு, கசகசா, பனப்ஷாபூ, குசும்பாபூ வெண் சந்தனம், செஞ்சந்தனம், கோதுமையும், காவுஜுபான் இலை, சம்பங்கிப்பூ ஆகிய இவை வகை ஒன்றுக்கு 12 கிராம்.

இவற்றையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து நேக அரைத்து வெள்ளாட்டுப் பாலாடையிலாவது பசுவின் பாலாடையிலாவது குழைத்துத் தேகத்தின் மேல் பூசிவர, தேகத்தில் அழுக்கு முதலியவை தீர்ந்து சருமம் மிருதுவாய், பளபளப்பாய்; தேகத்தில் சுகந்தவாசனை வீசும்.

* ஸ்நான பரிமளப் பொடி

கஸ்தூரி மஞ்சள், கிச்சலிக் கிழங்கு, கோரைக்கிழங்கு, சடாமாஞ்சில் கார்போக அரிசி, வாய்விளங்கம்; கசகசா; துரிஞ்சி நாரத்தந்தோல்; சந்தனம்; பச்சிலை ஆகிய இவற்றை வகை ஒன்றுக்கு சமனெடை யெடுத்து இடித்துத்தூள் பண்ணி வஸ்திரகாயம் செய்து, ஸ்நானம் செய்யும் போது இதில் கொஞ்சம் எடுத்து; சம்பங்கியெண்ணெய் வார்த்துக் குழைத்துத் தேகத்தில் பூசி ஸ்நானம் செய்துவர வியர்வை நாற்றம், கற்றாழை நாற்றம் முதலியவை தீர்ந்து, சுகந்தம் உண்டாம்.

ஜகமோஹன ஸ்நான சுகந்தப் பொடி

லவங்கம் 12 கிராம், லவங்கப்பட்டை நெய் தெளித்து வறுத்த நாகணம், கஸ்தூரிமஞ்சள், கார்போக அரிசி இவை வகை ஒன்றுக்கு 30 கிராம், கெவுளா, சன்னராஷ்டம், வாசனைப்புல்லு 'இவை வகை ஒன்றுக்கு 55 கிராம் கோஷ்டம், பனப்ஷாவேர், நாட்டுக் கிச்சலிக்கிழங்கு இவை வகை ஒன்றுக்கு 80 கிராம், இலாமிச்சைவேர்; ஏலக்காய்; பச்சிலை இவை வகைஒன்றுக்கு 100 கிராம், சீமைக் கிச்சலிக் கிழங்கு 130 கிராம், லவங்கப்பத்திரி 160 கிராம், சடாமாஞ்சில், மகிழம்பூ, ரோஜாப்பூ இவை வகை ஒன்றுக்கு 210 கிராம், கொட்டிச் சாந்து 300 கிராம்.

இவையெல்லாவற்றையும், நன்றாயிடித்துத் தூள் செய்து; ஸ்நானம் செய்யும்போது செல்லும் அளவு எடுத்து சம்பங்கியெண்ணெய் வார்த்துக்

---

* இதற்குச் சிக்ஸா என்று ஹிந்துஸ்தானி பாஷையில் பேர் வழங்குகின்றது.

குழைத்து; அதில் ஸுஹாகா அத்தர் சிறுக விட்டுக் கலந்து; தாழம்பூத் திராவகமாவது ஜலமாவதுவிட்டுக் குழப்பித் தேகத்தில் பூசி ஸ்நானம் செய்துவர; வியர்வை நாற்றம், கற்றாழை நாற்றம் தேகத்தில் இயற்கையாய்ப் படிந்து நாளும் துர்நாற்றம் முதலிய பழமைப்பட்ட துர்க்குணங்கள் தீர்ந்து, ஸ்திரீபுருஷர்களுக்கிடையில் ஒருவித விருப்பம் உண்டாம்.

ஸ்நான நறுமண மாத்திரை

பச்சைக்கர்ப்பூரம்; நெரியரிசிப்பால்; இலாமிச்சைவேர்ச் சூரணம்; சாம்பிராணிச் சூரணம்; ஜாதிப்பத்திரிச் சூரணம்; சந்தனச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 45 கிராம், கஸ்தூரி 4 கிராம் இவற்றுள் பச்சைக்கர்ப்பூரத்தை மாத்திரம் சக்திக்கு ஏற்ற அளவு சேர்த்து உபயோகிக்க வேண்டும்.

இவையெல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்தரைத்து, சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு ஸ்நானம் செய்யும் போது; இதில் ஒரு மாத்திரையைச் சுத்தஜலத்தில் கரைத்துத் தேகத்தில் பூசி ஸ்நானம் செய்துவர, தேகத்திலுள்ள வியர்வை நாற்றம் கற்றாழை நாற்றம் முதலிய துர்நாற்றங்களொழிந்து, தேகம் பரிசுத்தமாய் சுகந்த வாசனை கமழும்.

வேறு சூரணம்

ஜாதிக்காய், வாய்விளங்கம், இலாமிச்சைவேர், சந்தனம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம் கஸ்தூரி குன்றியெடை -4.

இவையெல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்தரைத்து ஜலம் வார்த்துக் குழைத்து, தேகத்தில் பூசி, சற்று பொறுத்திருந்து ஸ்நானம் செய்துவர, தேகத்திலுள்ள துர்நாற்றமனைத்தும் நீங்கி, தேகம் வஜீகரமாய் நறுமணம் வீசும்.

லோக மோஹன ஸ்நான பில்லை

அகருகட்டை, சந்தனம்; கிச்சிலிக்கிழங்கு, கோரைக்கிழங்கு, மகிழம்பூ, இலாமிச்சைவேர், நெரியரிசிப்பால், கஸ்தூரிமஞ்சள், லவங்கப்பட்டை, ஏலக்காய், நாகேசரப்பூ, கெவுளா; நெய்தெளித்து வறுத்த நாகணம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், ஆற்றுத்தும்மட்டிக்காய்வேர் 20 கிராம், குங்குமப்பூ 8 கிராம், அம்பர் 4 கிராம், கஸ்தூரி 3 கிராம்.

இவற்றில் சரக்குகளையெல்லாம் நன்றாயிடித்துச் சூரணமாக்கி வடிகட்டி, அதில், குங்குமப்பூ முதலியவற்றையும் தூள் பண்ணிச்சேர்த்து, பன்னீர் செல்லுமளவு வார்த்தரைத்து, பில்லைகளாகச் செய்து வைத்துக் கொண்டு, ஸ்நானம் செய்யும்போது பில்லைகளில் வேண்டு மளவு

எடுத்து, ஜலத்தில் குழைத்துத் தேகத்தில் பூசி ஸ்நானம் பண்ணிவர, தேகத்தில் நாட்படப் படிந்திருந்து, பிறர்க்கு அரோசிகத்தை யுண்டாக்கும் வியர்வை நாற்றம், கற்றாழைநாற்றம், முதலிய துர்நாற்றமனைத்தும் தீர்ந்து, தேகம் பரிசுத்தமாய் சுகந்தமயமாம்.

குறிப்பு

ஸ்நான சுகந்தப் பிரயோகங்களை, தேகத்திலுள்ள அழுக்கு முதலியவை நீக்கப்பட்ட பிற்பாடு உபயோகித்து ஸ்நானம் செய்ய வேண்டும்.

சம்பங்கி யெண்ணெய்

வேண்டுமளவிற்கு வெள்ளெள்ளை யெடுத்துக்குத்தி உமிபோக்கி, நன்றாகக் காயவைத்து ஒருமிடாவில் பச்சைக்காம்பு முதலியவை போக்கியநீர் ஒற்றப்பட்ட அன்றலர்ந்த ஒருபடி சம்பங்கிப் புஷ்பத்தைப் பரப்பி; அதன் மேல் மேற்படி எள்ளில் ஒருபடியிட்டுப் பரப்பி, அதன்மேல் மேற்கண்டவிதமாக மேற்படி அளவிற்குப் புஷ்பத்தைப் பரப்பி, அதன் மேல் மேற்கண்ட எள்ளை மேற்கண்டவிதமாய்ப் பரப்ப வேண்டும். இவ்வாறு எள்ளும் புஷ்பமும் சமன் அளவு அடுக்கடுக்காய் பரப்பப்பட்டபின், மிடா நிறைந்து மேலடுக்கில் புஷ்பம் இருக்கையில் மிடாவின் வாய்க்குக் கெட்டி வஸ்திரத்தினால் புட்பத்தின் வாசனை போகாமல் நன்றாயிறுக்க கட்டிவைக்க வேண்டும். பின்பு அடுத்தநாள் மத்தியானம் எடுத்து, புட்பத்தையெல்லாம் நீக்கிவிட்டு, எள்ளை எடுத்துக் கொண்டு மறுபடியும் புதிய புட்பத்தையும் இந்த எள்ளையும் சேர்த்து முன் பக்குவப் பிரகாரம் செய்ய வேண்டும். இவ்விதம் அன்றன்று புதிய புஷ்பம் கலந்து நாற்பது தடவை எள்ளுக்கு வாசனையூட்டி வரவேண்டும். இடையில் எள்ளை 3-4 தடவை காற்றாற விட்டு வைக்க வேண்டும், முடிவிலும் காற்றாறவிட்டுச் செக்கில் இட்டு ஆட்டி எண்ணெயெடுத்து, சீஷாவில் அடக்கிப் பத்திரப்படுத்த வேண்டும். இப்படியெடுத்ததற்கு முதல் தர எண்ணெயென்றும் அந்தப் புண்ணாக்கில் நல்லெண்ணெய் கலந்து ஆட்டியெடுத்த எண்ணெய் இரண்டாந்தரம் என்றும் இந்தப் புண்ணாக்கில் மறுபடியும் நல்லெண்ணெய் சேர்த்து ஆட்டியெடுத்த எண்ணெய் மூன்றாம்தரம் என்றும் சொல்லப்படும் முதல்தர எண்ணெயை; தேகத்தில் பூசி வருவதனாலும், சுகந்ததிரவியங்களுக்கு அநுபானமாகச் சேர்த்து உபயோகப்படுத்தி வருவதனாலும் தேகத்தின் உஷ்ணாதிக்கம் இரத்தக்கொதிப்பு, உட்சூடு, தேகாரோசிகம், சுரரோகம், மேகச்சூடு, சரீராயாசம் முதலியவை தீர்ந்து, மனமலர்ச்சி முதலியன உண்டாம்.

குறிப்பு

எள்ளுக்கு ஐந்து தடவைக்குக் குறையாமல் சக்திக்கு ஏற்ற அளவாகப் புஷ்ப வாசனையூட்ட வேண்டும் எவ்வளவுக்கெவ்வளவு வாசனை யூட்டுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு சுகந்தமும் அதிகரித்துண்டாம்.

வேறு

முன் சொன்னபடி எள்ளையும் புஷ்பத்தையும் சமன் அளவு எடுத்து முன் பாகப்படியே பன்னிரண்டு தடவை செய்து எடுத்து எள்ளைக் காற்றாறவிட்டு செக்கிலிட்டாட்டி எண்ணெயெடுத்து அரைவாசி நிற்கும்படி ஒரு பாத்திரத்தில் வார்த்து, எண்ணெய்க்குமேல் நான்கு அங்குல உயரத்தில் இருக்கும்படி மூங்கில்பிளாச்சு, இலாமிச்சைவேர் ஆகிய இவற்றால் தட்டிகட்டி, (அது, பாத்திரம் கொள்ளும் படியாகவும் எண்ணெயில் விழாமல் மேற்கண்ட உயரத்தில் தங்கி நிற்கும்படியான பக்குவமுள்ளதாகவுமிருக்க வேண்டும்) பாத்திரத்திற்குள் விட்டு, முன் பாகத்தில் சொல்லியபடி அன்று புஷ்பித்த சம்பங்கிப் புஷ்பத்தைப் பாத்திரம் நிரம்பப் போட்டு முன்போல் கெட்டி வஸ்திரத்தினால் இறுகக்கட்டி வைத்து மறுநாள் பிரித்து முன் புஷ்பத்தை நீக்கிவிட்டு, வேறு புதிய புஷ்பத்தைப் போட்டு முடிவைக்க வேண்டும் இவ்விதம் பன்னிரண்டு தடவை செய்து, எடுத்து வடித்து கொஞ்சம் கஸ்தூரியும் கொஞ்சம் பச்சைக் கர்ப்பூரமும் அரைத்து அதில் கலந்து, சீஷாவில் ஊற்றிப்பத்திரப்படுத்த வேண்டும் இதனைத் தேகத்தில் பூசுவதனாலும், சுகந்த திரவியங்களில் அநுபானமாகச் சேர்த்துக் கொள்வதனாலும் மேற்கண்ட குணங்கள் தவறாதுண்டாம்.

குறிப்பு

மேற்கண்ட இருவகையாகவும் மல்லிகைப் புஷ்பம் முல்லைப் புஷ்பம் ஆகிய சுகந்த புஷ்பங்களின் எண்ணெய் செய்து கொள்ளலாம். மேற்கண்ட பாகத்தில் எள்ளுக்கு நறுமணம் ஊட்டும்போது, நான்கு முதல் எட்டுச் சாமத்திற்கு மேற்படாமல் புட்பத்தை நீக்கிவிட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், அப்புட்பத்தின் நறுமணம் வெறுமணமாகப்போம்.

அகரு குழித்தைலம்

* கிருஷ்ண அகருகட்டை 140 கிராம் இதை நெல்லைப்போல் சிறு துண்டுகளாகச் செய்து பன்னீரில் அல்லது தாழம்பூத் திராவகத்தில் அல்லது

---

* அகருகட்டை பிரதானமாயிரு வகைப்படும். வெண்மையாயும் லேசாயும் இருப்பதற்குத் தெப்பல் அகரு என்று பேர். இதுதான் முக்கியமாய் ஔஷதங்களில் சேரும், மற்றொரு வகை கருமையாயும், பளுவாயும் மேற்புறத்தில் பிசின் படிந்தும், தண்ணீரில் அமிழும் தன்மையுள்ளதாயும் இருக்கும். இதற்கே கிருஷ்ண அகரு என்றும் ஹிந்துஸ்தானி பாஷையில் ஊதே கறகி என்றும் பேர். இது சுகந்தத்திற்குப் பேர் போனது. ஆனால், சென்னையிலுள்ளவர்கள் முந்தின வகைக்குக் கிருஷ்ண அகரு என்கிறார்கள். காரணம் புலப்படவில்லை.

சுத்தஜலத்தில் மூன்று நாள் ஊறவிட்டெடுத்து அதனுடன் நாட்டெள்ளெண்ணெய் 24 கிராம் நெரியரிசிப்பால் 18 கிராம், * கசகசா அம்பர் 24 கிராம் வெள்ளை மெழுகு 12 கிராம்.

இவையெல்லாவற்றையும் நன்றாகக் கலந்து சீஷாவிலிட்டு, பாகப்படி குழித்தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும். இதனைத் தனியாக வேனும், மற்ற ஔஷதத்துடன் கலந்தேனும் நோயுற்ற பாகத்தின்மீது பூசிவருவதனால் அதன் நரம்பு பலப்பட்டு, சோர்வு தளர்ச்சி முதலியவை தீர்ந்து தாருட்டியசக்தி அதிகரிக்கும்; வெற்றிலையில் தடவித் தின்றுவருவதனாலும் மேற்கண்ட குணங்கள் உண்டாம்.

வேறு

முன்பாகப்படி செய்து பன்னீரில் மூன்று நாள் ஊறவிட்டெடுத்த அகரு 210 கிராம், கசகசா அம்பர் 12 கிராம், சீமை கிச்சிலிக் கிழங்கு, ஜாதிக்காய், நாகணம், உஷ்ணா இவை வகை ஒன்றுக்கு 5 கிராம்.

இவற்றை யெல்லாம் ஒரு புட்டியில்போட்டு பாகப்படி குழித்தைலம் இறக்கிக்கொள்ளவேண்டும் இதனை மேற்கண்டபடி உபயோகிக்க, மேற்கண்ட குணங்களுண்டாம்.

சுல்தானி அகருதைலம்

முன்பாகப்படி பக்குவப்படுத்தின அகருகட்டை 210 கிராம், மலாக்காசந்தைச்சீவல் 210 கிராம், கசகசா அம்பர் 60 கிராம், ** உயர்ந்த கஸ்தூரி 3 கிராம், உயர்ந்த பச்சைக் கர்ப்பூரம் 1 கிராம், கற்கண்டு 9 கிராம்.

இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து சீஷாவிலிட்டு, பாகப்படித் குழித்தைலம் இறக்கிக்கொள்ளவேண்டும். இதில், கொஞ்சம்

---

* கசகசா அம்பர் என்பது அம்பர் வகையில் ஒன்று. இது கசகசாவைப் போன்ற உருவமுடையதாய் கருஞ்சாயலாயிருக்கும். இது நடுத்தரமானது. வெண்மையான அம்பர்தான் உண்டு. அறக்கருமையா யிருப்பதற்கு ஹபஷி அம்பர் என்று பேர். மீன் அம்பர் என்றும் ஒருவகையுண்டு.

** உயர்ந்த கஸ்தூரியாவது; மஞ்சள்வர்ணம் அல்லது கறுப்புவர்ணம் உள்ளதாயும், காரமான வாசனையுள்ளதாயும் இருக்கும். இதனைப் பரீக்ஷித்தறியும் விதம் - நூல் கோக்கப்பட்ட ஊசியை வெள்ளைப் பூண்டில் குத்தியிழுத்துக் கஸ்தூரியில் புரட்ட, அப்பூண்டின் துர்வாசனை எடுபடுமானால் அதுவும், கஸ்தூரியில் கொஞ்சம் உள்ளங்கையிலிட்டு இரண்டு மூன்று துளிஜலம் விட்டு விரலால் நன்றாகத் தேய்க்க, திரியைப்போல் திரளாமல் இருக்குமானால் அதுவும் உயர்ந்தது.

எடுத்து, தாம்பூலத்துடன் சேர்த்து மென்று தின்பதினாலும், வாசனைத்திரவியங்களுடன் சேர்த்து தேகத்தில் பூசிவருவதனாலும் இருதயம் பலப்பட்டு மனோற்சாக முண்டாய் தாருட்டிய விர்த்தியும், ஆண்மையும் உண்டாம்.

சாம்பிராணித் தைலம்

*தைலப்பசையுள்ள சாம்பிராணி 210 கிராம், நெரியரிசிப்பால் 80 கிராம், குங்கிலியம் 35 கிராம்.

இவற்றைத் தூள்செய்து, ஒருசிறு தோண்டியிலிட்டு, தோண்டியின் விலாவில் துவாரமிட்டு அதில் இருப்புக்குழாயொன்றைப் பொருந்தச்சொருகி, மண்சீலை வலுவாகச் செய்து, தோண்டிவாய்க்கு மேல் குழிந்தபாத்திரங்கொண்டு மூடிச்சீலைசெய்து அடுப்பேற்றி மெதுவாக எரிக்கவேண்டும். தோண்டி வாய்க்குமேல் இருக்கும் பாத்திரத்தில் ஜலம் வார்த்து வைப்பதுடன் ஈரச்சீலையாலும் தோண்டியின் கழுத்துபுறத்தை நனைத்துக் கொண்டிருக்க வேண்டும், அப்புறம் குழாயின் வழியாக இறங்கும் தைலத்தை யெடுத்து ஒரு புட்டியில் அடைத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும் இதனை நெற்றியில் தடவி வருவதனால் தலை நோய், பீனிசநோய், ஜலதோஷம் முதலியவை தீரும்.இத்தைலம், சுகந்த பில்லைப்பிரயோகத்தில் சேர்ப்பதற்கும் உதவும்.

மட்டிப்பால் தைலம்

சமமானதும் சுத்தஞ் செய்யப்பட்டதுமான இரண்டு வெண்கலத் தாம்பாளங்களை முந்தியே, சித்தஞ்செய்து வைத்துக்கொள்ள வேண்டும். தேவையான அளவு மட்டிப் பாலையும் பொடித்து, தனியேவைத்துக்கொள்ள வேண்டும் ஒரு மண்கலயத்தைக் கரிநெருப்பின்மீது வைத்து, அது சூடேறினவுடன் மேற்படி மட்டிப்பால் பொடியில் சுமார் அரைப்பலம் போட்டு உடனே மேற்படி தாம்பாளங்களில் ஒன்றால் மூடிவைத்து சற்று தாமதித்து எடுத்துக்கொள்ள வேண்டும், கலயத்தில் புகை யெழும்பிக்கொண்டிருந்தாலும் மற்றொன்றால் உடனே மூட வேண்டும். அல்லது புகையில்லாதிருந்தால், முன்போல் பொடிபோட்டும் உடனே மூட வேண்டும் முன்னெடுத்த தாம்பளத்தில் உள்ள தைலத்தை சூடாறுமுன் வழித்துச் சிமிழில் அடக்கிக்கொள்ள வேண்டும். சற்று தாமதித்து இரண்டாவதாக மூடின தாம்பாளத்தை யெடுத்துக்கொண்டு முன்போலவே மற்றொன்றால் மூட வேண்டும். முன் சொன்னபடியே சூடாறுமுன் இதில் ஏறின

* சாம்பிராணியானது வெண்மையாயும் கருமையாயும் இருக்கும். கருமையாயிருப்பதில் தைலச்சத்து அதிகரித்திருப்பதால், தைலப்பசையுள்ள சாம்பிராணி என்று பேர் பெற்றது.

தைலத்தையும் வழித்துக்கொள்ள வேண்டும். இந்தப்படி மேற்படி பொடிபோட்டும் தாம்பாளங்களை ஒன்றைவிட்டொன்றாக முறையே மூடியும் வழித்தும் பொடியெல்லாம் செலவாகும் வரையும் இவ்வாறு செய்து, பத்திரப்படுத்த வேண்டும்.

இத்தைலம், முன்சொன்ன பாகத்தில் கண்டவைகளுக்காம்.

சுகந்த தூபப்பொடி

சந்தனம், நாகணம், இலாமிச்சைவேர், சாம்பிராணி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 25 கிராம், நெரியரிசிப்பால், சீமைக் கிச்சிலிக்கிழங்குச் சூரணம், கோரைக்கிழங்குச் சூரணம், தேவதாரச் சூரணம், நாட்டுக் கிச்சிலிக்கிழங்குச் சூரணம், வெள்ளைக்குங்கிலியத்தூள், கொம்பரக்குத் தூள், ஏலக்காய்ச் சூரணம், லவங்க முகிழ்ச் சூரணம், கோஷ்டச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு 16 கிராம். * லாதன் 25 கிராம், கிருஷ்ண அகரு, உஷ்ணா இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 8 கிராம், சீனிச்சருக்கரை 60 கிராம்

இவையெல்லாவற்றையும் கலந்து நன்றாகப்பொடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு, பன்னீர்விட்டுப்பிசைந்து, வெய்யிலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தூபங்கொடுக்க குளிர்ந்தஜல ஸ்நானபானங்களால் அடிக்கடியுண்டாம் தலைநோய், மூக்கிலிருந்து ஜலம்வடிதல் சலதோஷம், நீர்ப்பீனிசம், சீதள தலைநோய் தீரும். இப்பொடியை, கூந்தலுக்கும் தூபங்கொடுக்க அதிலுள்ள எண்ணெய்ச்சிக்கு நாற்றம்; ஈரம் முதலியவை நீங்கி பரிமளிக்கும். வீட்டிலிட்டுப்புகைக்க, அதிலுள்ள துர்கந்தம் முதலியவைநீங்கி, தொற்றுவியாதியகன்று, வீடுமுழுதும் சுகந்தவாசனை பரிமளிக்கும்.

மஹா சுகந்த தூபப்பொடி

ரோஜாப்பூ 840 கிராம், உஷ்ணா 630 கிராம், சீமைக் கிச்சிலிக்கிழங்கு, நாட்டுக்கிச்சிலிக்கிழங்கு, உலர்த்தின சீமை யிலந்தைப்பழ (Apple) மேல்தோல், தண்ணீரில் அமிழும் கிருஷ்ண அகரு, உயர்ந்த சாம்பிராணி இவை ஒன்றுக்கு 50 கிராம். சடாமாஞ்சில்; லவங்கப்பத்திரி, காட்டேலக்காய், பெருலவங்கப்பட்டை, உலர்த்தின நாரத்தந்தோல் இவை வகை ஒன்றுக்கு 210 கிராம், பன்னீர் 280 கிராம், கஸ்தூரி 6 கிராம், அம்பர் 6 கிராம்.

இவற்றில், பிந்தின மூன்றைத்தவிர, மற்றவைகளையிடித்து, வஸ்திரகாயம்செய்து அதில்,கஸ்தூரியையும், அம்பரையும் கலந்தரைத்து,

---

* இது ஐரோப்பாவிலிருந்து கொண்டு வரப்படும் ஓர் விதச் சுகந்தபிசின்.

பன்னீர்வார்த்துக் குழைத்து நன்றாக நேக மத்தித்து, தூபகலசங்களில் அரையரைவாசி போட்டு, காய்ந்தபின்பு கலசத்துவாய்மூடி, கரி நெருப்பின் மீதுவைக்க, அனேக அகருபத்திகளை ஒன்றாக்கி அவற்றை ஏககாலத்தில் கொளுத்திப் புகைப்பதுபோல அத்தனை சுகந்தவாசனை தரும். இது முக்கியமாக சுபதினங்களிலும், உல்லாச காலேக்ஷபக் களரிகளிலும் உபயோகிக்கத் தகுந்தது. அல்லாமலும் முன்கண்ட துர்க்கந்தம், தொற்று வியாதி முதலானவைகளுக்கன்றி, மனோரம்மியத்திற்கும் ஏதுவாம்.

சுகந்த தூபதீபத் திரி

உஷ்ணாசூரணம், கோரைக்கிழங்குச்சூரணம், நெரியரிசிப்பால், அகருசூரணம் இவை சமனெடையாகக் கொண்டு நன்றாயரைத்து, சீலையில் தடவித் திரியாகத் திரித்து விளக்கில்போட்டு, சம்பங்கியெண்ணெய் அல்லது வேறு சுகந்த எண்ணெயிட்டுக் கொளுத்த, வீடெங்கும் சுகந்தம் வீசும். அதனால் மூளை, இருதயம் பலப்படும். தொற்று வியாதியையும் தடுத்துப் போக்கும்.

குதூகல நறுமண வர்த்தி

கொட்டிச்சாந்து 60 கிராம், கற்பாசி, சன்ன லவங்கப்பட்டை, பெருலவங்கப்பட்டை, இலாமிச்சைவேர் இவை வகை 1க்கு 35 கிராம், தாளிசப்பத்திரி, கிளியூறல்பட்டை, சடா மாஞ்சில் இவை வகை 1க்கு 30 கிராம், கோஷ்டம்; லவங்கப்பத்திரி; சிறுநாகப்பூ; குருவேர் என்னும் வெட்டிவேர் நன்னாரிவேர்; ரோஜாப்பூ, அதிமதுரம்; கோரைக்கிழங்கு இவை வகை 1க்கு 20 கிராம், சன்னராஷ்டம், பச்சிலை, சண்பகப்பூமுகிழ் இவை வகை ஒன்றுக்கு 10 கிராம்.

இவையெல்லாவற்றையும் இடித்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து, பன்னீர் வார்த்துப் பிசறி மூன்றுநாள் ஊற வைத்துக்கொள்ள வேண்டும். பின்பு சாம்பிராணி, சந்தனத்தூள் இவை வகை ஒன்றுக்கு 175 கிராம், அகருகட்டை 210 கிராம், தேவதாரு, அகில் இவை வகை 1க்கு 20 கிராம், கெவுளா 20 கிராம் இவற்றையு மிடித்துவஸ்திரகாயம் செய்து முந்தின சூரணத்துடன் கலந்துகொள்ளவேண்டும். நெரியரிசிப்பால் 150 கிராம், மட்டிப்பால் 60 கிராம் இவற்றையும் மேற்படி சூரணத்துடன் கலக்க வேண்டும். தேன் 90 கிராம், கற்கண்டுத்தூள் 10 கிராம் இவற்றையும் மேற்படி கலவையிலிட்டு நன்றாகக்கலந்து கொள்ள வேண்டும். 70 கிராம் புனுகு சட்டத்தைத் துண்டுதுண்டாய் நறுக்கி, கொஞ்சம்பன்னீர் வார்த்துமூன்று தினம் ஊற வைக்கவேண்டும். காற்பலம் நாககணத்தை ஒரு ஆழாக்கு ஆற்றுமணலை ஓட்டிலிட்டு வறுத்து நன்றாய்ச் சூடேறினபின், மேற்படி நாகணத்தைப் போட்டுச்

சிவக்க வறுத்து மணலை நீக்கி எடுத்து அம்மியிலிட்டு, பன்னீர் வார்த்தரைத்து வெண்ணெய்போல் ஆனபிற்பாடு எடுத்துக் கொள்ளவேண்டும். மேற்படி அம்மியில் புனுகு சட்டத்தையிட்டு வெண்ணெய்போல் அரைத்தெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். அரைத்த நாகணத்தையும், அரைத்த புனுகு சட்டத்தையும் முன்மூடி வைத்த சரக்குகளில் நன்றாய்க் கலந்து, சந்தனக்கட்டைக் கரித்தூள் அல்லது வாதுமைக்கொட்டை சுட்டக் கரித்தூள் 35 -70 கிராம் சேர்த்துப் பன்னீர்விட்டுக் குழைத்து விளாங்காய்ப்பருமனான உண்டைகளாய்ச் செய்து, ஒவ்வொரு உண்டையையும் மேற்படி அம்மியிலிட்டுப் பன்னீர்வார்த்து, வெண்ணெய் போல் அரைத்தெடுத்து இவையெல்லாவற்றையும் ஒன்றாய் சேர்த்துப் பிசைந்து வைத்துக்கொள்ள வேண்டும். சுமார் 175 கிராம் பிசின் கட்டையின் மேற்புரணியை நீக்கியிடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். முன் கலவையில் கொஞ்சம் எடுத்துப்பிசின் பட்டைச் சூரணத்தில் கலந்து மத்தித்துப் பார்க்க, பிசின் பசையுண்டாயிருந்தால், அதுவே பக்குவமாம் அதன்பின்பு ஒரு சமமான பலகையில் மெல்லிய மூங்கிற் குச்சியை வைத்து மேற்படி யோகத்தைத் தடவி, பக்குவமாய் எடுத்து வேறொரு சமமான பலகையிலிட்டு உருட்டிக்கொள்ள வேண்டும்; இவ்விதமே மற்றெல்லாவற்றையும் செய்துகொள்ள வேண்டும். அப்புறம் உலர்த்திப் பத்திரப்படுத்திக் கொண்டு வர்த்திகளில் நாலிரண்டைக் கொளுத்திப் புகைக்க அச்சுகந்தப் புகையால் பரமானந்தம் உண்டாய் மூளைக்கும், இருதயத்திற்கும் பலம் உண்டாம்; இதனால் அனேக குணம் உண்டாம். சக்தியுள்ளோர் இம்முறையில் தமது சக்திக்கு ஏற்கும் வண்ணம் அம்பர், கஸ்தூரி ஆகிய இவற்றைச் சேர்த்துக் கொண்டால், இன்னும் அதிக விசேஷகுணம் உண்டாம்.

வேறு

1. பூஞ்சாந்துப்பட்டை 140 கிராம், கற்பாசி, கிளியூறல் பட்டை, ஏலக்காய்விதை, ஏலம் இவை வகை ஒன்றுக்கு 70 கிராம், கோஷ்டம், தாளிசப்பத்திரி, சடாமாஞ்சில், பச்சிலை, நன்னாரிவேர், இலாமிச்சைவேர், வெட்டிவேர், சிறுநாகப்பூ, சன்னலவங்கப்பட்டை, பெருலவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, அன்னாசிப்பூ, சண்பகமொக்கு, அதிமதுரம் இவை வகை ஒன்றுக்கு 35 கிராம், கறுவாப்பட்டை, சன்னராஷ்டம், தும்பராஷ்டம், வறுத்த கொத்துமல்லி, வறுத்த ஜாதிக்காய், வறுத்த லவங்கம், கார்போக அரிசி இவை வகை ஒன்றுக்கு 20 கிராம்.

2. அகில், தேவதாரு, மலாக்காசந்தனம், உயர்ந்த அகருகட்டை, பாற்சாம்பிராணி இவை வகை 1க்கு 140 கிராம், கெவுளா 20 கிராம்.

3. நெரியரிசிப்பால் 140 கிராம், மட்டிப்பால் 70 கிராம், றூமிமஸ்தகித்தூள் 20 கிராம்.

4. கற்கண்டுத்தூள், தேன், காட்டெருமைப்பால் இவை வகை 1க்கு 70 கிராம்.

5. * புனுகுசட்டம் 35 கிராம், பூஜபத்திரி 12 கிராம்.

செய்முறை - (1) பாராவில் கண்ட வஸ்துக்கள் இடித்துப் பொடியாக்கி வஸ்திரகாயம் செய்த சூரணத்தை ஒரு பாத்திரத்திலிட்டு, (2) பாராவில் உள்ளவற்றையும் இடித்து வஸ்திரகாயம் செய்து அதில் கலந்து, மூன்றாவது பாராவில் குறித்த சரக்குகளையும் அதில் கூடக் கலந்து நன்றாய் அமுக்கிமூடி 4,5 நாள் வைத்திருந்துப் பின்பு நான்காவது பாராவில் சொல்லியவற்றையும் கலந்து வைத்துக் கொண்டு ஐந்தாவது பாராவில் காட்டியவஸ்துகளை அம்மியிலிட்டு நன்றாய் நேக அரைத்து அதில் நன்றாய்ச் சேர்த்து, சந்தனக்கட்டைக் கரித்தூள் அல்லது வாதுமைக்கொட்டை சுட்ட கரித்தூள் 35 அல்லது 70 கிராம், கூடப்போட்டு எல்லாவற்றையும் பன்னீர்வார்த்துக் குழைத்து, முன் பாகப்படி உண்டைகள் செய்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு உண்டையையும் அம்மியிலிட்டு மறுபடியும் பன்னீர் விட்டரைத்து முடிவில் எல்லாவற்றையும் ஒன்று சேரக் கலந்து முன்பாகப் பிரகாரம் வர்த்திகள் செய்து கொள்ள வேண்டும்; இதில் இரண்டு மூன்றெடுத்துப் புகைக்க முன்கண்ட குணங்கள் உண்டாம்.

மனோரம்மிய நறுமண அகருவர்த்தி

உயர்ந்த அகருகட்டை 70 கிர்ாம், மலாக்காசந்தனம், தேவதாரு அகில் இவை வகை ஒன்றுக்கு 60 கிராம், கற்பாசி 30 கிராம், பூஞ்சாந்துப்பட்டை, கிளியூறல்பட்டை வெட்டிவேர், இலாமிச்சைவேர், பச்சிலை, தாளிசபத்திரி, சன்னலங்கப்பட்டை, சடாமாஞ்சில் லவங்கப்பத்திரி இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், லவங்கம் 10 கிராம்.

இவையெல்லாவற்றையும் இடித்துச் சூரணமக்கி வடித்து, பன்னீர் வார்த்துப் பிசைந்து ஒருவாரம் வரையும் உட்கவைக்க வேண்டும். பின்பு, அதில் நெரியரிசிப்பால் 105 கிராம், சாம்பிராணி 70 கிராம், கூகை நீர் 35 கிராம், அதிமதுரம், நன்னாரிவேர், பூலாங்கிழங்கு, கெவுளா, கோரைக்கிழங்கு, தேன், கற்கண்டுப் பொடி, சண்பகப்பூ மொக்கு, அன்னாசிப்பூ, மட்டிப்பால் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், ஏலக்காய்விதை 15 கிராம், ஜாதிக்காய் 10 கிராம், இவற்றில் நெரியரிசிப்பால்,தேன்,கற்கண்டுப்பொடி ஆகிய இந்நான்கைத் தவிர, மற்றவைகளை யிடித்து வஸ்திரகாயம் செய்து முந்தின கலவையில் சேர்த்துக்கலந்து கொள்ளவேண்டும் புனுகுசட்டம் 12 கிராம் (இதை

---

* இதை முன்னமே முன் சொல்லப்பட்டிருக்கிறபடி ஊற வைத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

முன்சொன்னபடி ஊறவைத்தெடுத்துக் கொள்ள வேண்டும்) பூஜபத்திரி 2 கிராம், பச்சைக் கர்ப்பூரம் 10 கிராம் ஆகிய இம்மூன்றையும் அம்மியிலிட்டு மைபோல் நன்றாய் நேக அரைத்து முன் கலவையில் கலந்து முன்குறித்த கரித்தூள் 20 - 30 கிராம் கூடப்போட்டு எல்லாவற்றையும் கலந்து அம்மியிலிட்டு அரைத்து முந்தின பாகப்படி வர்த்திகள் செய்து புகைக்க மூளை இருதயம் முதலியவற்றிற்குப் பலத்தையுண்டாக்கி ஆனந்தக்களிப்பைத் தரும்.

குறிப்பு

வாசனைத் திரவியக் கூட்டுச்சேர்ந்த வர்த்தி முறைகள் பலவற்றில் பிரதானமாயுள்ள மூன்றுவகை முறைகளை இங்கு காட்டினோம். புத்திமான்களா யுள்ளோர் இவற்றைச் சார்ந்து, தங்கள் தங்கள் நிலைமைக்கும் விருப்பத்திற்கும் தக்கப்படி விலையேறப்பெற்ற திரவியங்களைக் கூட்டியும் குறைத்தும், உயர்ந்ததும் தாழ்ந்ததுமான பலமுறைகளாகவும் செய்துகொள்ளலாம்.

மதனாலங்கிர்த சுகந்த பில்லை

அன்னாசிப்பூ 16 கிராம், கொண்டைச் சீனிக்கிழங்கு, கெவுளா, கொத்துமல்லி, சோம்பு இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், வெட்டிவேர் 9 கிராம், கோஷ்டம், பூலாங்கிழங்கு, அதிமதுரம், சண்பகமொக்கு, நன்னாரிவேர், சன்ன லவங்கப்பட்டை இவை வகை ஒன்றுக்கு 3 கிராம், சிறு நாகப்பூ 7 கிராம், சன்னராஷ்டம் 5 கிராம், கார்போக அரிசி 2 கிராம், நாகணம், பேரரத்தை, பெருலவங்கப்பட்டை இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், வாய்விளங்கம் 3 கிராம் இவையெல்லாவற்றையும் கொஞ்சம் நீர்தெளித்து வறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும் பச்சிலை 12 கிராம் வெட்டிவேர் 24 கிராம் தாளிசப்பத்திரி, லவங்கப்பத்திரி இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், கிளியூறல்பட்டை 7 கிராம், கோரைக்கிழங்கு 5 கிராம், கசகசா, கற்பாசி, வங்காள மஞ்சள் இவை வகை ஒன்றுக்கு 4 கிராம் இவை யெல்லாவற்றையும் நெய்தெளிக்காமல் வறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விரண்டு இனங்களையும் ஒன்றாகக் கலந்திடித்து வஸ்திரகாயம் செய்து அம்மியிலிட்டு, பன்னீர் வார்த்து மைபோல் அரைத்து வைத்துக்கொண்டு, ஏலக்காய்விதை 24 கிராம், லவங்கம் 20 கிராம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வால்மிளகு இவை வகை ஒன்றுக்கு 4 கிராம். இவற்றைப் பொடித்துச் சூரணமாக்கி வடிகட்டி அம்மியிலிட்டு, பன்னிர் வார்த்தரைத்து அதில் கலந்து நன்றாய் மிஸ்ரமித்து, மறுபடியும் எல்லாவற்றையும் அரைத்துக்கொள்ளவேண்டும். பன்னீர் விட்டிழைத்துலர்த்தின அகருகட்டைச் சந்தனம் 210 கிராம், பன்னீர் விட்டிழைத்துலர்த்தின மலாக்கா சந்தனம் 35 கிராம் நெரியரிசிப்பால் 28 கிராம் மட்டிப்பால் தைலம், சாம்பிராணித் தைலம், சாம்பிராணிப் பூ இவை

வகை ஒன்றுக்கு 8 கிராம், இவையெல்லாவற்றையும் முன் கலவையுடன் கலந்து, இக்கலவையை மூன்றாந்தடவையும் அரைத்துக்கொள்ள வேணடும்.

புனுகு 12 கிராம், குங்குமப்பூ, சவ்வாது இவை வகை ஒன்றுக்கு 8 கிராம், கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம், கஸ்தூரி இவை வகை ஒன்றுக்கு 4 கிராம் ரோஜாப்பூ அத்தர் 12 கிராம், ஸுவாகா அத்தர் 12 முதல் 36 கிராம் வரையும்.

இவற்றில் குங்குமப் பூவைக் கல்வத்திலிட்டு, கொஞ்சம் பன்னீர் வார்த்தரைத்து பின்பு, முறையே கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம், கஸ்தூரி ஆகிய இவற்றைச் சேர்த்தரைத்து, அதில் புனுகையும் சவ்வாதையும் கலந்துபோட்டு, அத்தர்களையும் சேர்த்து நன்றாக மத்தித்து முன்பு சித்தப்படுத்தின கலவையிற் கலந்து நன்றாக மிஸ்ரமித்துப் பிசின் நைப்புக்காக வேண்டிக் கருவேலம் பிசினை யிடித்து வடிகட்டின தூளில் 4-6 கிராம் போட்டுக் கலந்து, எல்லாம் ஒன்றாகக் கலக்கும்படி நாலாம்தடவையும் அம்மியிலிட்டு அரைத்தெடுத்து, பில்லைகளாகச் செய்துலர்த்தி, பத்திரப் படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்த பில்லைகளில் சிறிதெடுத்து பன்னீரில் அல்லது தெளிந்த சுத்தநீரில் இழைத்து தொடர்ந்தேற்றியாய் உடம்பில் பூசிக்கொள்வதனால் வாதரூக்ஷை; மேகரூக்ஷை, அதிரூக்ஷை, சித்தப்பிரமை, மதோன்மத்தம், பித்தகோபம், விகுணம், உட்காங்கை, இரத்தச்சூடு, விஷரோகம் முதலிய பல மூளை, இருதயம் ஆகியவற்றைத் தொடர்ந்து பற்றின வியாதிகள் தீர்ந்து, அவை பலப்பட்டு தேககாந்தி, தேகவஜீகரம், தேகவன்மை, தேஜஸு, ஆயுள்விருத்தி முதலியவை யுண்டாய், அட்டகருமத்தில் ஒன்றாகிய வசியமும் உண்டாம்.

ஆமோதானந்த மதனகாம பில்லை

a. தாளிசப்பத்திரி 60 கிராம், கிச்சிலிக்கிழங்கு 70 கிராம், கிளியூறல்பட்டை, கோஷ்டம் இவை வகை ஒன்றுக்கு 25 கிராம், கெவுளா, சோம்பு, ரோஜாப்பூ, பச்சிலை, சடாமாஞ்சில், சண்பகமொக்கு இவை வகை ஒன்றுக்கு 20 கிராம், லவங்கப்பட்டை, ஜாதிக்காய், சன்னராஷ்டம், குருவேர் என்னும் வெட்டிவேர், ஏலக்காய் விதை, லவங்கம், நாகணம், அன்னாசிப்பூ இவை வகை ஒன்றுக்கு 10 கிராம். இவை யெல்லாவற்றையும் தனித்தனி நெய் தெளித்து வறுத்துலர்த்தி யிடித்து வடிகட்டி அம்மியிலிட்டு, பன்னீர் வார்த்து நேக அரைத்துக் கொள்ள வேண்டும்.

b. புனுகுசட்டம் 55 கிராம், (இதை முன்னமே முன் சொன்னபடி ஊறவைத்துக் கொள்ள வேண்டும்) குங்குமப்பூ 24 கிராம், தாழம்பூ

அத்தர், ஸுவாகா அத்தர், ரோஜாப்பூ அத்தர், பச்சிலையத்தர் இவை வகை ஒன்றுக்கு 18 கிராம், பன்னீர் வார்த்தரைத் துலர்த்தின சந்தனம், புனுகு இவை வகை ஒன்றுக்கு 12 கிராம், பச்சைக்கர்ப்பூரம் 8 கிராம், மட்டிப்பால் தைலம், கோரோசனை, ஜவ்வாது இவை வகை ஒன்றுக்கு 4 கிராம், கஸ்தூரி 2 கிராம், ஈரான் அத்தர் சக்திக்கு ஏற்ற அளவு.

இவற்றில் புனுகுசட்டத்தை அம்மியிலிட்டு நேக அரைத்து முறையே குங்குமப்பூ, கோரோசனை, மட்டிப் பால் தைலம், பச்சைக்கர்ப்பூரம், கஸ்தூரி ஆகிய இவற்றையும் அதிற்சேர்த்து அரைத்து, புனுகையும் ஜவ்வாதையும் அதனுடன் கலந்து அத்தர்களையும் ஊற்றிக்கலந்து, முன் சித்தப்படுத்தினதில் கலந்து, முன் சொல்லியபடி கொஞ்சம் கருவேலம்பிசின் சூரணம் போட்டு எல்லாம்ரேகிக்கும்படி, பில்லைகளாய்ச் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும்.

இந்த பில்லைகளையும் முன்சொன்னபடி உபயோகித்து வர, முன் கண்ட சுகுணங்களெல்லாம் உண்டாம்.

இப்பாகங்களில் அத்தர் இனங்களை அதிக அளவிற்குச் சேர்த்துக்கொண்டால் தைல பில்லையென்றும், வெள்ளி, தங்கரேக்குகளையும், அம்பர், கஸ்தூரி முதலியவைகளையும் சேர்த்துக்கொண்டால், முறையே ரசிதம், சொர்ணம், அம்பர், கஸ்தூரி முதலிய பில்லைகளென்றும் பெயர் பெறும்.

குறிப்பு

சுகந்த பில்லை முறைகள் பலவற்றில் சிரேஷ்டமான இரண்டு முறைகளை இங்கு எழுதினோம். புத்திமான்கள் இதைக் குறித்துக் கொண்டு தங்கள் தங்கள் சக்திக்கு ஏற்ற விதமாய் வாசனைத் திரவியங்களை ஏற்றியும் தாழ்த்தியும் சமயோசிதமாய்ச் செய்து கொள்ளலாம்.

கஸ்தூரி சுகந்தச் சந்தனம்

பன்னீர் விட்டிழைத்துலர்த்தின மலாக்கா சந்தனம் 35 கிராம், கஸ்தூரி நான்கு கிராம், கெவுளா சூரணம், வறுத்த நாகணச் சூரணம் இவை வகை ஒன்றுக்கு குன்றியெடை 2.

இவற்றில் கஸ்தூரியை கல்வத்திலிட்டு, பன்னீர்வார்த்தரைத்து, மற்றிரண்டு சூரணங்களையும் அதனுடன் சேர்த்து அரைத்து, முடிவில் சந்தனத்தையும் அதில் சேர்த்தரைத்து உலர்த்தி வைத்துக்கொண்டு இதில் சிறுக எடுத்து, பன்னீரில் குழைத்து உடம்பில் பூசிவர மூளை, இருதயம் முதலியவை பலப்பட்டு தாருட்டியவிர்த்தி, யோகசக்தி ஆகிய இவை யுண்டாய் ஸ்திரீ புருஷர்களுக்கிடையில் உள்ளவன்பை யுண்டாக்கும்.

வேறு

பன்னீரில் இழைத்த அகரு சந்தனம் 20 கிராம், கஸ்தூரி குன்றியெடை - 4.

இவற்றில் கஸ்தூரியில் பன்னீர் விட்டரைத்து அதனுடன் மற்றிரண்டையும் சேர்த்தரைத்து வைத்துக் கொண்டு உடம்பில் பூசிவர, முன் குறித்த குணம் உண்டாம்.

சுகந்தமூலச் சந்தனம்

பன்னீர் விட்டிழைத் துலர்த்தின சந்தனம் தேவையான அளவு, இதில் கொஞ்சம் கஸ்தூரியும், பச்சைக் கர்ப்பூரமும் சேர்த்தரைத்து, அதி மெல்லிய சல்லாவுறைக்குள் போட்டுச் சம்பங்கிப் புஷ்ப எண்ணெய் முறையில் சொல்லிய வண்ணம் இஷ்டமான பரிமள புஷ்பங்களின் சுகந்தத்தை யூட்டிவர வேண்டும், எத்தனைவகைச் சுகந்தப் புஷ்பங்களின் சுகந்தத்தை எவ்வளவாயூட்டி வந்தோமா அத்தனை வகை சுகந்தமும் அவ்வளவாயுண்டாம்; இவ்வாறு சுகந்தமூட்டிய பின்பு சீஷாவில் அடக்கிக்கொண்டு, பன்னீரில் குழைத்துப் பூசுவதனால் தேககாங்கை, ரத்தச்சூடு முதலியவை தீர்ந்து, அவ்வவ்வகைப் புஷ்பத்திற்குரிய குணமுண்டாய்; மனோபல விர்த்தியுண்டாம்; இதனை இதர சுகந்தத் திரவியங்களிலும் சேர்த்து உபயோகப்படுத்தி வரலாம்.

சந்தூக சுகந்தப் பன்னீர்

ஜவ்வாது 18 கிராம், அகரு அத்தர் 18 கிராம்,சம்பங்கிப்பூ அத்தர் 2 கிராம் ஆகிய இவற்றைக் கலந்தரைத்து 1400 கிராம் உயர்ந்த பன்னீரில் கலந்து, பன்னீராக உபயோகிக்க வேண்டும். இப்பன்னீர் பட்ட வஸ்திரங்களும் சிலநாள் வரையும் பரிமளித்துக் கொண்டிருக்கும். இதனால் மனதிற்கு இன்பகரமும், ஆனந்தக்களிப்பு முண்டாம்.

சந்தூக சுகந்த அம்பர் அத்தர்

சந்தன அத்தர் 120 கிராம், உயர்ந்த அம்பர் 18 கிராம் ரோஜாப்பூ அத்தர் 12 கிராம், மகிழம்பூ அத்தர் 6 கிராம், வெண்மெழுகு இரண்டு கிராம், பச்சைக் கர்ப்பூரம் இரண்டு கிராம்.

செய்முறை - கரிநெருப்பின் மீது சுத்தநீர் நிறைந்த ஓர் பாத்திரத்தை வைத்து, இதிலுள்ள ஜலத்தில் சூடேறியபின் ஓர்வெள்ளிக் கிண்ணத்தில் மேற்படி சந்தன அத்தரைவார்த்து, அந்த நீரிலிட்டு நெருப்பாறாமல் விசிறிக் கொண்டிருந்து, அக்கிண்ணத்து அத்தர் ஜலோஷ்ணத்தால் கொதிகண்ட போது அதில் அம்பரையும் மெழுகையும் போட்டு அதன்பின் கஸ்தூரியையும் பொடித்திட்டு மூங்கிற் பிளாச்சால் நன்றாய்க் கலக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

இவ்விதம் செய்து அவை யாவும் ஒன்றாய்ச் சேர்ந்து கலந்தபின் இறக்கி, அதில் பச்சைக் கர்ப்பூரத்தையும், மற்ற அத்தர் தினுசுகளையும் போட்டு வெள்ளியாற் செய்த குழவியால் அந்தக் கிண்ணத்திலேயே ஒருசாமம் கை விடாமல் அரைத்து வழித்தெடுத்து வேறொரு சீஷாவில் பத்திரப்படுத்தி, ஒன்றைவிட்டொரு நாள் வெய்யிலில் வைத்து வர வேண்டும்.

இவ்வித பாக அத்தரை வஸ்திராதிகளில் தடவ அவை வண்ணான் கையேறிய வெள்ளாவியில் வைத்தாலொழிய அதில் புடிந்த நறுமணம் நீங்காது. இதில் 25 கிராம் அத்தரை ஒருபுட்டி பன்னீரில் கலந்துபயோகிக்க, மனோகரமான வாசனை தரும்.

சுகந்தமூல சந்தனப் பன்னீர்

பன்னீரில் இழைத்த சந்தனம், பன்னீரில் இழைத்த அகரு சந்தனம் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம் ஆகிய இவ்விரண்டிலும் தனித்தனி 350 கிராம் பன்னீர் வார்த்துலர்த்தி, முன் சொல்லப்பட்டபடி அதிமெல்லிய சல்லாவுறைக்குள் வைத்து எட்டுத் தடவை சம்பங்கிபுஷ்பவாசனை யூட்டியெடுத்து அம்பர், கஸ்தூரி, அகரு அத்தர், சவ்வாது இவை வகை ஒன்றுக்கு 2 கிராம், பனப்ஷா வேர், வாசனைப்புல்லு, பச்சைக்கர்ப்பூரம், வறுத்த நாகணம் இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு குன்றியெடை 2, சம்பங்கி அத்தர் 5 கிராம் ஆகிய இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து நேக அரைத்து, இரண்டுபுட்டி பன்னீரில் கலந்து உபயோகப்படுத்திவர, மஹா ஆனந்தகரமான சுகந்தத்தை தரும்.

வேறு

பன்னீர் விட்டரைத்துலர்த்தின சந்தனம் 20 கிராம், உயர்ந்த அகரு அத்தர், கஸ்தூரி இவை வகை ஒன்றுக்கு 1 கிராம், அகருகட்டைச் சந்தனம், சம்பங்கி புஷ்ப அத்தர் இவை வகை ஒன்றுக்கு 3 கிராம், பச்சைக்கர்ப்பூரம், வறுத்த நாகணம், கெவுளா, பனப்ஷாவேர் ஆகிய இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு குன்றியெடை 2 இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்தரைத்து ஒரு புட்டி பன்னீரில் கலந்து உபயோகிக்க, மனோரம்மிய பரிமளானந்தத்தை யுண்டாக்கும்.

தாம்பூல பரிமள மாத்திரை

உயர்ந்த காய்ச்சுக் கட்டி 220 கிராம், இதனைப் பொடித்து ஓர் பாத்திரத்திலிட்டு, ஜலம் வார்த்து ஒருநாள் ஊறவிட்டு, மெதுவாக ஜலத்தை மாத்திரம் இறுத்து வடித்து நீக்கிவிட்டு, அதில் 350 கிராம் பன்னீர் வார்த்து ஊறவைத்து அப்படியே உலர்த்தும்போது சற்றிறுகின பதத்தில் சிறு பில்லைகளாகச் செய்து உலர்த்தி, நறுமண முள்ள செந்தாழம்பூ; சம்பங்கி

புஷ்பம் ஆகிய இவற்றின் வாசனையை முன் சம்பங்கி யெண்ணெயின் பாகத்தில் கூறியபடி பத்து தடவைக்குக் குறையாமல் ஊட்டியெடுத்து, கஸ்தூரி 12 கிராம், பச்சைக்கர்ப்பூரம் 2 கிராம் ஆகிய இவற்றைத் தனித்தனி பொடித்து முன் காய்ச்சுக்கட்டியையுஞ் சேர்த்தரைத்துக் கலந்து, மறுபடியும் கொஞ்சம் பன்னீர்விட்டு அரைத்து, கையில் கொஞ்சம் சம்பங்கியத்தர் தடவிக்கொண்டு மிளகைப்போல் மாத்திரைகள் செய்துலர்த்திப் பத்திரப்படுத்தி பின்பு தாம்பூலத்துடன் இஷ்டப் பிரகாரம் இரண்டு மூன்று போட்டுத்தின்ன வாய்நாற்றம், பல்லசைவு, அஜீரண வியாதி முதலியவை நீங்கி சுகந்த முண்டாகி, தாருட்டியவிர்த்தி மனக்களிப்பு முதலியவை யுண்டாம்.

வேறு

மேற்கண்ட பாகப்படி பன்னீரில் ஊறவிட்டுலர்த்தின காய்ச்சுக்கட்டித் தூள் 220 கிராம், ஏலக்காய், லவங்கம், ஜாதிக்காய், ஆகிய இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு 20 கிராம், பச்சைக்கர்ப்பூரத் தூள், 20 கிராம் இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து பன்னீர் வார்த்தரைத்து முன்போல் மாத்திரைகள் செய்து உபயோகித்துவர, முன் காட்டிய குணங்கள் உண்டாம்.

தாம்பூல நறுமணச் சுண்ணம்

முத்தை அல்லது முத்துச்சிப்பியை அல்லது சங்கை தேவையான அளவெடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு, அதற்குமேல் நான்கு அங்குல உயரம் நிற்கும்படி இளநீர் வார்த்து, மூன்று தினம் ஊறவிடவேண்டும். அன்றன்று அதிலுள்ள இளநீரை மாற்றி மாற்றி விட வேண்டும். அதன் பிறகு அதையெடுத்து ஒரு மண் கலயத்தில் போட்டு அதற்குமேல் நான்கு அங்குல உயரம் நிற்கும்படி ஆவின் பால் வார்த்து வாய்க்குச் சில்லிட்டு மண் சீலை செய்து, கனபுடமிட அது நீறும். அந்நீற்றையெடுத்துப் பொடித்து வடிகட்டின தூள் 35 கிராம் பச்சைக் கர்ப்பூரத்தூள் 4 கிராம், கஸ்தூரி 2 கிராம், அம்பர் 1 கிராம், ஏலக்காய் விதைச் சூரணம் 2 கிராம் ஆகிய இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்தரைத்து, பன்னீர்வார்த்துக் குழைத்து, பீங்கான்சிமிழிலாவது, வெள்ளி டப்பியிலாவது அடைத்துக் கொண்டு, வெற்றிலையில் தடவித் தின்ன, ஜீரணசக்தி அதிகரித்து ரத்தவிர்த்தியுண்டாய், தேஜஸ், முகவஜீகரம் முதலியவை யுண்டாம். தாருட்டியவிர்த்தியும் அதிகரிக்கும்.

தாம்பூல பரிமளச் சுண்ணக்கலவை

சந்தன அத்தர் 35 கிராம், வெண்மெழுகு 10 கிராம், பச்சைக்கர்ப்பூரத்தூள் 2 கிராம், கஸ்தூரித் தூள் 2 கிராம்.

இவற்றில்,அத்தரில் மெழுகை யிட்டு நீர்போல் ஆனவுடன், மற்றிரண்டையும் போட்டுக்குளிர்ச்சியான இடத்தில் வைத்து, இறுகி வெண்ணெய்போல் ஆன பதத்தில் எடுத்துச் சிமிழில் அடக்கிக்கொள்ள வேண்டும். அப்புறம் மேற்கண்ட பாகப்படி செய்தெடுத்த நீறு அல்லது கற்சுண்ணாம்பு நீறு, அல்லது கிளிஞ்சிற்சுண்ணாம்பு ஆகிய இவையொன்றில் மூன்று பங்கு, மேற்படி மெழுகில் ஒருபங்கு ஆகிய இவ்விரண்டையும் கலந்து கொண்டு வெற்றிலையில் தடவித் தின்னலாம்; அல்லது தாம்பூலந் தரிக்கும்போது தனியாக வெற்றிலையுடனேயும் தின்னலாம். இப்படித் தின்றுவர, மேற்சொல்லிய குணங்கள் உண்டாம்.

குறிப்பு

இப்பாகத்தில் இஷ்டப்படி வெண்மெழுகைக் சேர்த்து வெண்ணிறமாகவும், மஞ்சள் மெழுகைச் சேர்த்து மஞ்சள் நிறமாகவும் செய்துகொள்ளலாம். சக்தியுள்ளோர் அகரு அத்தர், அம்பர், கஸ்தூரி ஆகிய இவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். அல்லாதோர் நிறத்திற்காகவும், சுகந்தத்திற்காகவும் அரைத்த குங்குமப்பூவில் கொஞ்சமும் கிச்சிலிக் கிழங்குச் சூரணத்தில் கொஞ்சமும் சேர்த்துக்கொண்டால், நல்ல நிறமாகவும் வாசனையாகவும் இருக்கும்.

நறுமணப் பாக்குயோகம்

பொறுக்கி யெடுத்த சிற்றினக் களிப்பாக்கு 350 கிராம் ஏலக்காய்விதை, லவங்கம், இவை வகை ஒன்றுக்கு 20 கிராம் ஜாதிக்காய் 10 கிராம், ஜாதிப்பத்திரி 10 கிராம், குங்குமப்பூ 2 கிராம் * இழைத்த கொப்பறைத் தேங்காய்த் தூள் 30 கிராம் பசுவின் நெய் 30 அல்லது 35 கிராம்.

செய்முறை - இவற்றில், மேற்படி பாக்கை ஜலத்தில் ஓரிரவு ஊறவைத்து மறுநாள் காலையில் நன்றாய் அலம்பிக் கழுவி வெய்யலிலிட்டு இரண்டு மூன்று தினம் நன்றாய் உலர்ந்தபின், இளநீர் படி அரையுடன் அரைக்கால்படி பசுவின்பால் கலந்து அதில் மேற்படி பாக்கையிட்டு ஓரிரவு ஊறவைத்து, காலையில் எடுத்து, அப்படியே வெய்யிலில் இட்டுலர்த்தி யிடித்துத் தூளாக்கி, குங்குமப்பூவை பன்னீர் வார்த்தரைத்து அதில் அத்தூளைப்போட்டுப் புரட்டி, கொப்பறைத்தேங்காய், நெய் ஆகிய இவ்விரண்டைத்தவிர, மற்றவைகளையும் தனித்தனியே சூரணித்து முன் கலவையிலிட்டுப் புரட்டி, எல்லாவற்றையும் உரலில் போட்டிடித்து, அதில் கொப்பறைத் தேங்காயையும் கூட்டியிடித்து, நெய்யிட்டுக் கலந்து எடுத்துப் பத்திரப்படுத்த வேண்டும்.

---

* இதனை இஷ்டமுள்ளோரும் அப்போதைக்கப்போது உபயோகப்படுத்துவோரும் மாத்திரம் உபயோகிக்கலாம்.

உபயோகம்: இதனை வேண்டுமளவும் வெற்றிலையுடன் போட்டுத் தின்றுவர, கோழைக்கட்டு, கபக்கட்டு, வாய் நாற்றம் முதலியவை நீங்கி, வாய் பரிமளிக்கும். இதில் சக்தியுள்ளோர், பச்சைக் கர்ப்பூரம், கஸ்தூரி, அம்பர், சுகந்த அகரு, அத்தர் ஆகிய இவற்றையும் சேர்த்துக் கொண்டால், அவற்றிற்குத் தக்க குணம் உண்டாம்.

சுபமங்களா நந்தகர லக்ஷணி

நன்றாய் ஆய்ந்து பொறுக்கியெடுத்த சிற்றினக்களிப்பாக்கு 350 கிராம் (இதனை முன் பாகப்படி ஜலத்தில் ஊறவிட்டுக் கழுவியெடுத்துக் கொள்ள வேண்டும்) பன்னீர் 525 கிராம், சந்தனத்தூள், அகருகட்டைத்தூள், குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரத்தூள், ஏலக்காய்த்தூள் இவை வகை ஒன்றுக்கு 20 கிராம் இச்சரக்குகளைப் பன்னீர்வார்த்தரைத்து மேற்படி பன்னீரில் கரைத்து மேற்படி பாக்கை அதில் போட்டு ஒரிராப்பகல் ஊறவிட்டு எடுத்து, கத்தரிக்கோலால் மெல்லிசாய்க் கத்தரித்து, ஊறவிட்டிருந்த பன்னீர்க் கலவையுடன் புரட்டி அப்படியே வெய்யிலில் இட்டுலர்த்தி இதற்கு பத்துத்தடவை தாழம்பூவாசனை யூட்டியபின், பத்துத் தடவைக்கதிகம் நாரத்தம் புஷ்ப வாசனையூட்டி, புட்டியில் அடக்கிப் பத்திரப்படுத்த வேண்டும்.


இதனை மேற்சொல்லிய முத்துச்சுண்ண யோகமிட்ட வெற்றிலையுடன் கூட்டித்தின்ன, நித்திய சுபமங்களா நந்தகர முகவஜீகரத்தைத் தரும்.

ஸர்வஜீவ தயாபர வல்ல கடவுளின் பேரருளாலும், மற்ற பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும் இவ்விரண்டாம் பாகம் நிறைவேறியது, ஆகையால் நமது பிரிய நேசர்களாகிய அறிவாளிகள் ஒவ்வொருவரும் ''யூநாநி வைத்திய தாருட்டியவிர்த்தி போதினி'' முதற்பாகம், அதன் இரண்டாம் பாகமாகிய இது ஆகிய இவ்விருபாகங்களையும் தங்களுக்கு உற்ற சமயத்திற்கு உதவும் உயிர்த்துணைகளாய்க் கொண்டு அவை விதித்த விதிமுறைகளை ஒழுங்குறவாசித்து தாங்களாகவேனும், தெரிந்தோர் மூலமாகவேனும் ஐயந்திரிபற நன்காய்ந்தறிந்து அவதானித்து, அவற்றைக் கைவிடாமற் கொண்டொழுகி, இரத்தவிர்த்தி, தேகபலவிர்த்தி, மனோபலவிர்த்தி ஆயுள்விர்த்தி, ஆநந்த சுபமங்களகரவிர்த்தி முதலிய மறுமைக்கு ஏததுவாகிய இம்மைக்குரிய பயன்களை இனிது பெற்று வாழ்வார்களாக.

ஆமீன்

முற்றுப் பெற்றது.

திராவகம் வடிக்கும் யந்திரம் அல்லது வாலை



மேற்படி யந்திரத்தில் திராவகமிறக்கும் முறை.

திராவகம் வடிக்கும் யந்திரம் அல்லது வாலை

1, 2, 3 இம் மூன்று எண்கள் அடங்கினது பட்டிஅல்லது மேல்மூடி, என்று பெயர்பெறும், இது வெள்ளி, துத்தநாகம், தகரம், மண் ஆகிய இவற்றால் செய்யப்படும்.

4. இந்த எண்ணுடையது கீழ்ப்பாண்டம் இது மண், தகரம் முதலியவற்றால் செய்யப்படும்.

1, பட்டி அல்லது மூடியின்வாய், 2,திராவகம் வடியும் குழாய், 3, மேல் மூடியினின்று ஜலம் வடியும் குழாய். 5. சரக்கும் ஜலமும் பாண்டத்தில் இருக்கவேண்டிய அளவு.

A.மேல் மூடியும், கீழ்ப்பாண்டமும், தனித்தனியா யிருக்கும் பாவனை. B.கீழ்ப்பாண்டமும், மேற்பாண்டமும் மூடியும் பொருந்தியிருக்கும் பாவனை.


திராவகம் வடிக்கும் விதி

திராவகம் வடிக்கப்பட வேண்டிய சரக்குகள், புஷ்பங்கள்; இலைகள் ஆகிய நுண்ணிய வஸ்துக்களானால் ஓரிரவும், வேர், வித்து

முதலிய கடினவஸ்துக்களானால், ஒருராப்பகலும் ஊறவைக்கவேண்டும். சரக்கு அல்லது சரக்குகள் காவுஜூபானைப்போல லேசாயும், வழவழப்பாயும் இருப்பின், அவற்றை ஒரு வஸ்திரத்தில் பொட்டணங்கட்டி அவசியம் நேரிட்டால் அதன்கீழ் ஒரு கனத்த வஸ்துவைக்கட்டிக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்யா விட்டால் அவை நீராவியுடன் மேலெழும்பி, திராவகம் வடியும் குழாய்க்குள் வந்து தங்கி அடைத்துக்கொண்டு நிற்க, திராவகம் சுத்தமாய் வடிய ஏதுவில்லாமற்போம். ஒருக்கால்வடியினும், அற்பமாயிருக்கும். இவ்விதம்சித்தஞ் செய்தவற்றை பாகத்திற்கண்ட அளவு சுத்தஜலம் சேர்த்து 4ல் அதாவது கீழ்ப்பாண்டத்தில் இடவேண்டும். இது பாண்டத்தின் அரைப்பாகத்திற்குச் சற்று குறைந்த அளவினதாக இருப்பது உத்தமம். அரைப்பாகத்திற்கு மேற்படக்கூடாது; அப்படியானால், சரக்குகள் பொங்கி வெளியே வந்துவிடும். இதில் கூடுமானால் நாலைந்து லேசான கவடிகளைப் போட்டுவைத்தால் ஜலம் கொதிக்கையில் கட்கட் என்னும் சப்தம்வந்து கொண்டிருக்கும். ஜலம் சுண்டிவிட்டால், சப்தம் நின்றுபோம் பின்பு பட்டி அல்லது வாலையைவைத்து அழுத்தி, சந்தில்லாமல் கோதுமைமா, உளுந்துமா, களிமண் ஆகிய இவற்றிலொன்றைச் சீலையில்தடவிப் பந்தித்து அடுப்பேற்றி 3 -ல் நெட்டிக்கட்டை அல்லது துணியிட்டடைத்து மேல் மூடியில் சுத்தஜலம் வார்த்து மெதுவாய் எரிக்கவேண்டும். குழாயின் கீழ் அதனின்று வடியும் திராவகம் விழும்படி ஓர் பாத்திரம் வைக்கவேண்டும். அப்பாத்திரம் மூடப்பட்டு இரண்டொரு துவாரம் உள்ளதாயிருப்பது உத்தமம்.

கஸ்தூரி, அம்பர் முதலிய வாசனைத் திரவியங்களைச் சேர்க்க வேண்டுமானால் அவற்றைப் பொடிசெய்து பொட்டணமாய் முடிந்து (2), குழாயின் நுனியில் தொங்கும் படிகட்ட, அதில் நின்று வடியும் திராவகம் அம்முடிச்சில் தங்கியிருந்து வடியும். 1- ல் வார்த்த ஜலம் சூடாய்விட்டால் 3-ல் இட்ட நெட்டியை அல்லது துணியை நீக்க, அந்த ஜலம் உடனே வெளிப்பட்டுப்போம். முன்போல் துவாரத்தையடைத்து வேறு சுத்தஜலம் வார்க்கவேண்டும். இப்படிச் சூடுகாணும்போதெல்லாம் மாற்றிக்கொண்டிருக்கவேண்டும். இவ்விதம் செய்வதனால் பாண்டத்திலிருப்பவை நீராவியாய் மாறி மேலெழும்பும்போது இந்தக் குளிர்ந்த ஜலத்தின் சக்தியினாலேதான் திராவகமாய் மாறும். 2-ல் நின்று வடியும் திராவகத்தைச் சுத்தமான பாத்திரத்தில் பிடித்துப் பத்திரப்படுத்த வேண்டும்.பாகப்பிரகாரம் வடிந்த திராவகமானது சுத்த ஜலத்தைப்போல் சுகந்த வாசனையாயும், தித்திப்பாயும் இருக்கும். தீய்ந்தவாசனை, புகை நாற்றம் ஆகிய இவற்றை யுடைத்தாயிருந்தால், தீ அதிகம் என்றும், இட்ட சரக்குகளின் நிறம்கண்டால், பாண்டத்தில் ஜலம் அதிகரித்து, அது பொங்கி வருகிறதென்றும் அறிய வேண்டும்.

பூப்புடத்தைலம் அல்லது குழித்தைலம்
இறக்கும் யந்திரம்



1,1.குழி, ***2,*** புடகடத்தின் கீழ்வைத்திக்கும் பாத்திரம் ***3, **** புடகடம், ***4.4,*** தீயெரியும் பாவனை.

தைலம் இறக்கும் முறை


தைலமிறக்கப்பட வேண்டிய சரக்குகளைப் புடகடத்திற்போட்டு அதன் வாய்க்கு அகலிட்டு மண்சீலைசெய்து சதுராகரமான குழியொன்றுதோண்டி, அதன் நடுவில் வேறொரு சிறு குழியகழ்ந்து, அதில் ஒரு பாத்திரத்தை வைத்து, முன் சித்தப்படுத்தின புடகடத்தை வைத்துப் பொருத்தி வாய்க்கு இரண்டொரு மண்சீலை செய்து கீழ்ப்பாத்திரத்தின் வாய்க்குமேல் ஒன்று ஒன்றரை அங்குலம் மண்ணைத் தள்ளிச் சமப்படுத்தி எருவடுக்கித் தீயிட்டு ஆறினபின் மெதுவாய்ப்பிரித்து, மண், சாம்பல் முதலியவை விழவொட்டாமல் ஜாக்கிரதையாய்க் கீழ்ப்பாத்திரத்தையெடுக்க, அதில் தைலம் இறங்கி நிற்கும். அதுவே குழித் தைலமாம். பள்ளத்தின் ஆழம், அகலம் ஆனவை, தைலம் இறக்கப்பட வேண்டிய சரக்குகளின் வன்மை, மிருதுவு, தைலப்பசை முதலியவைகளுக்கேற்ற அக்கினியா யிருக்க வேண்டும் (அதாவது அதில்

---

* புடகடம் என்பது இவ்வகைத் தைலமிறக்க அதனடியில் சக்கரமாய் ஒன்பது பத்துச்சிறு துவாரங்களிட்டுச் சித்தப்படுத்தி வைத்துக் கொள்வதேயாகும்.

உள்ள, சரக்குகள் வெந்து போகாமல் பூரணமாய் நீற்றுப்போகத்தக்க அக்கினி கொள்ளும் அளவாயிருக்கவேண்டும்)

குப்பிப்புடத் தைல யந்திரம்



1, 1. அடுப்பு, **2, 2.**புடச்சட்டி, **3.** காசிக்குப்பி அல்லது ஸோடா வாட்டர் புட்டி, **4,** புட்டியினின்று வடியுந்தைலத்தை ஏற்கும் பாத்திரம்.

தைலம் வடிக்கும்முறை


மேற்கண்ட இருவகையில் ஒருவகைச் சீஷாவில் மைபோலரைக்கப்பட்ட ஔஷதங்களை அல்லது அரைத்துருட்டின மாத்திரைகளைப் போட்டு நிரப்பி, வளைந்த கம்பிகளை அல்லது குதிரையின் ரோமங்களைக் கீழ்விழாதபடி கெட்டியாய்த் திணித்தடைத்து, புடச்சட்டியென்னும் வாயகன்ற வோர் சட்டியெடுத்து, அதன் மத்தியில் மேற்படி புட்டியின் வாய் மூன்று நான்கு அங்குலம் கிழிறங்கி நிற்கும்படியான ஓர் துவாரமிட்டு, சீஷாவைத் தலைகீழாக வைத்து, சட்டி நிரம்ப மணல் கொட்டவேண்டும். ஆனால், மணலானது புட்டிக்குமேல் நாலங்குலம் இருக்க வேண்டும். பின்பு எருவடுக்கித் தீ மூட்ட, தைலம் வடியும், இதுவே குப்பிப் புடத் தைலமாம்.

குறிப்பு

சட்டியில் மணல் நிரப்பாமல் எருவடுக்கித் தீயிட்டும் வடிக்கலாம், அதனால் தீயின் காங்கையேறிச் சீஷா வெடிப் புண்டு போகுமாகையால்,

முந்தியே சீஷாவுக்கு ஏழெட்டு மண்சீலை வலுவாய்ச்செய்து உலர்த்திப் பாகப்படுத்திக் கொள்வதே யுத்தமம்.

சுடர்த் தைல யந்திரம்



1. இரும்புக்கம்பி, 2. திரி, 3. சுடர் ரூபமாய் வடியுந்தைலத்தை ஏற்கும் சுத்த ஜலம் நிரம்பின ஓர் பாத்திரம்.

சுடர்த்தைலம் வடிக்கும் முறை

தைலம் வடிக்கப்பட வேண்டிய சரக்குகளைஅரைத்து அல்லது பொடித்து,கெட்டித் துணித் துண்டை அவசியமானால் நெய், எண்ணெய், கொழுப்பு ஆகிய இவை ஒன்றில் நனைத்து அதன் நைப்புண்டாக்கி மேற்படி பொடியைத் தூவி, திரியாகத் திரித்து மேற்கண்ட கம்பியில் கோர்த்து, நெருப்பில் கொளுத்தி அதினின்று சுடர் சுடராய் வடிந்துவிழும் தைலத்தை சுத்தஜலம் நிரம்பின மற்றோர் பாத்திரத்தில் சொட்டவிட வேண்டும். திரி யெரியும்போது அது பாத்திரம் எரிந்துபோகாமல் நெய் முதலியவற்றை வார்த்துக் கொண்டு உருக்கவேண்டும். பின்பு நீரின் மீது மிதக்கும் தைலத்தை வழித்தெடுத்து நீர் சுண்டவைத்துப் பத்திரப்படுத்துவதே சுடர்த்தைலமாம்.

தூபக்கலசம்.



1. 1 தூபக்கலசம், 2. அதன் வாய்மூடி, 3. 3 புகை வெளிப்படும் துவாரங்கள், 4. கரிநெருப்புச் சட்டி.

தூபங் கொடுக்கும் முறை

ஓர் மண் கலசத்தை யெடுத்து அதன் கழுத்தைச் சுற்றிலும் சமயத்துக்கு ஏற்றபடி ஒன்று அல்லது இரண்டு பத்தியாய்ச் சிறு துவாரமிட்டு, தூபச்சரக்குகளை அதில் போட்டுவாய்மூடிப் பந்தனஞ்செய்து வேறொரு பாத்திரத்தில் கரிநெருப்புண்டாக்கிப் புகை யடங்கினபின், மேற்படி தூபக்கலசத்தை அதன்மீத வைக்க, சுகந்த வாசனை யெழும்பும். இவ்வகையில் தூபங்கொடுக்கலாம் சுபதினங்களிலும் இவ்வாறு செய்ய உண்டாம் சுகந்தத்தால் மனதிற்கு ஆனந்தமும் மங்களகரமும் அதிகரிக்கும்.

அறிக்கை

இவ்வகைப்பட்ட கருவிகள் பலவுள. அவையெல்லாம் தொழிலாளிகளுக்கு அவசியமானவையாலும் பொதுவானவையும், முக்கியமானவையும், அவற்றின் முக்கிய விதிகளையும் பற்றிச் சிலவற்றை இங்கு எழுதுவது சிரேஷ்டம் என்று கண்டு அறிந்து எழுதினோம். ஆதலின், புத்திமான்கள் அவற்றை அநுசரித்தே தங்கள் சக்திக்கு ஏற்றவண்ணம் பலவிதமாய்ச் செய்து உபயோகித்துக்

கொள்வார்களென்றும், ஏழையாகிய நம்மீது கிருபை கூர்ந்து ஆசீர்வதிப்பார்கள் என்றும் நாம் விநயவந்தன பூர்வமாய் அவர்கள் மேலானகனத்தை மிகவும் வேண்டிக் கொள்கிறோம். எல்லார்க்கும் சுபமங்களகர முண்டாகுக. ஆமீன்!

பிஸ்முல்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

யூநாநி வைத்திய தாதுவிர்த்தி போதினியின்

ரோக சிகிச்சாக்கிரம அட்டவணை

அ

அக்கினி மந்தத்திற்கு :- ஆமில அகரு மாஜூன், இராஜ யோகாமிர்த குதூகலனி, கலவை சோம்புத் தீநீர், காசினி மாஜூன், சோம்புத்தைலம், தாடிமக்கனி ஷர்பத்து; (இனிப்பு) தாம்பூல பரிமள மாத்திரை, மேற்படி வேறு, தீபாக்கினி மாத்திரை, மேற்படி வேறு, நிதித்யபல மாஜூன், பசிதீபன மதிகப்பட, பசிதீபன முண்டாக, தீபன சக்தி யதிகப்பட, ஜீர்ணசக்தி யதிகப்பட என்பனவற்றையும் பார்க்க.

அங்குஷ்ட வாதத்திற்கு:- கீல்வாத சங்காரன், சந்நிவாத நிவாரணி, சுரிஞ்சான்மிஸ்ரி மாத்திரை.

அசுத்தசத்துகள் வெளிப்பட :- அனிசூன்ஜவாரிஷ், இலவங்கப்பட்டைச் சூரணம், இலவங்கப்பட்டை மாத்திரை, காரிகியூன் மாத்திரை, காவலதிபதி மாத்திரை, மேற்படி வேறு, சுகாதார மாஜூன், பனப்ஷா மாஜூன், வேம்பின் எண்ணெய், றூமிச்சோம்பு ஜவாரிஷ், ஷாத்திரா எண்ணெய், காஜர்ஹல்வா, பார்லியரிசிஜலம், ஹப்பதுஸ் ஸவுதா ஹல்வா, பேதியாக, வாந்தியினால் அசுத்தமாசுகளை நீக்க, நீரைப்பெருக்க, மூத்திர மதிகப்பட என்பனவற்றையும் பார்க்க.

அசுத்தசத்துகள் வெளிப்பட (அழுகிப்போன) :- ஆத்மரக்ஷா திராவகம், அசுத்தசத்துகள் வெளிப்பட என்பதையும் பார்க்க.

அசுத்தசத்துகள் வெளிப்பட (இருதயத்தின்) :- காவலதிபதி மாத்திரை, மேற்படி வேறு, அசுத்தசத்துக்கள் வெளிப்பட என்பதையும் பார்க்க.

அசுத்தசத்துக்கள் வெளிப்பட (இரைப்பையிலுள்ள) :- ஏலக்காய் மாஜூன், ஊஷ்ணபுஜூரி ஷர்பத்து, காவலதிபதி மாத்திரை, மேற்படி வேறு, சிறுதிரிபலாதி லேகியம், சுகுமார திரிபலாதி, திரிபதா ஜவாரிஷ், பரமௌஷதம், ரோஜாப்பூ எண்ணெய், ரோஜாப்பூ பானம் (வேறு) ஜமானி திரிபலாதி லேகியம், அசுத்தசத்துக்கள் வெளிப்பட என்பதையும் பார்க்க.

அசுத்தசத்துகள் வெளிப்பட (ஈரலின்):- காவலதிபதி மாத்திரை, மேற்படி வேறு.

அசுத்தசத்துக்கள் வெளிப்பட (குளிர்ச்சியான) :- ரோஜாப்பூ எண்ணெய், அசுத்தசத்துகள் வெளிப்பட என்பதையும் பார்க்க.

அசுத்தசத்துக்கள் வெளிப்பட (சூடான) :- இலந்தைக்கியாழம், ரோஜாப்பூ எண்ணெய், அசுத்தசத்துகள் வெளிப்பட என்பதையும் பார்க்க.

அசுத்தசத்துகள் வெளிப்பட (நரம்புகளிலுள்ள) :- ஏலாதித் தீநீர். அசுத்தசத்துகள் வெளிப்பட என்பதையும் பார்க்க.

அசுத்தசத்துகள் வெளிப்பட (மூளையின்) :- காவலதிபதி மாத்திரை,மேற்படி வேறு, சிறு திரிபலாதிலேகியம். சுகுமார திரிபலாதி, பரமௌஷதம்.

அசுத்தசத்துகள் வெளிப்பட (இரைப்பை, மூளையிவற்றிலுள்ள) :- சுகுமார திரிபலாதி, பஸ்பாயிஜ் மாத்திரை, இரைப்பையிலுள்ள அசுத்தமாசுகள் வெளிப்பட; மூளையின் அசுத்தசத்துகள் வெளிப்பட என்பனவற்றையும் பார்க்க.

அசுத்தசத்துகள் வெளிப்பட (வாந்தியினால்) :- வாந்தி முறைகள்.

அசுத்தநீர்கள் வெளிப்பட :- அசுத்தசத்துகள் வெளிப்பட என்பதைப் பார்க்க.

அசுத்தமாசுகள் வெளிப்பட :- அசுத்தசத்துகள் வெளிப்பட என்பதைப் பார்க்க.

அண்டவாயுவிற்கு :- ஹிந்துபா மாஜூன்.

அதிதாகத்திற்கு :- (தாகத்திற்கு) என்பதைப் பார்க்க.

அதிபித்தரோகத்திற்கு : (பித்தத்திற்கு) என்பதைப் பார்க்க.

அதிமூத்திரரோகத்திற்கு :- அத்திமாஜூன், சத்தாதி மாஜூன், மண்டூராதி மாஜூன், மதுமேகபில்லை மாத்திரை, ஜாலினியூஸ் சஞ்சீவிஜவாரிஷ், மதனகாமவச்சிர தண்டம்.

அதிருட்சைக்கு :- ஆமோதானந்த மதனகாமபில்லை, மதனாலங்கிருத சுகந்தபில்லை.

அதிவியர்வைக்கு :- ரோஜாப்பூ எண்ணெய்.

அபினிவிஷமித்தால் :- விஷநிவாரணி.

அரிதாரம் விஷமித்தால் :- ரோஜாப்பூ எண்ணெய்.

அரோசிகத்திற்கு (அரோசகம்) :- சோம்புகிஷாயம் (வேறு) நிம்பாதி ஷர்பத்து.

அவயவங்கள் பலப்பட (குளிர்ச்சியான) :- மதுகமலபானம் உறுப்புகள் பலப்பட என்பதையும் பார்க்க.

அவயவச் சோர்விற்கு :- (உறுப்புகள் பலப்பட) என்பதைப் பார்க்க.

* அழலைக்கு:- சீதகுதூகலனி, சொர்ணமஹா சீதகுதூகலனி, மஹா சீதகுதூகலனி, எரிச்சலுக்கு என்பதையும் பார்க்க.

அழலைக்கு (நீர்ப்பையின்) :- பிரமதண்ட திராவகம், மேக நிவாரண எண்ணெய்.

அழுகிப்போன சத்துகள் வெளிப்பட :- அசுத்தசத்துகள் வெளிப்பட (அழுகிப்போன) என்பதைப் பார்க்க.

அறிவை விர்த்திசெய்ய :- சித்தர்மாஜூன்.

அஸ்திசுரத்திற்கு :- காஹூவிதை மாத்திரை, சாந்திசமனபில்லைமாத்திரை, தரா இலைத் தீநீர், பச்சைக்கற்பூரத்திராவகம், பச்சைக்கற்பூர மாத்திரை, பருப்புக்கீரை வித்துஹல்வா, மேத்தியாகிஹல்வா, (உட்காங்கைக்கு) என்பதையும் பார்க்க.

அஸ்திசூட்டிற்கு :- (அஸ்திசுரத்திற்கு) என்பதைப் பார்க்க.

அஸ்திவெட்டைக்கு:- சாந்திசமன பில்லை மாத்திரை, சீதகுதூகலனி, சொர்ணமஹா சீதகுதூகலனி, நித்தியா நந்த வித்துரும பஸ்பம், பச்சைக்கற்பூர திராவகம், பச்சைக்கற்பூர மாத்திரை, மஹாசீதகுதூகலனி.

அஜீரணத்திற்கு:- (அக்கினிமந்தத்திற்கு) என்பதைப் பார்க்க.

ஆ

ஆசனப்புணர்ச்சி செய்து கொள்வதினாலுண்டாகும் தாது நஷ்டத்திற்கு :- (ஆண்குறி பலப்பட) என்பதைப் பார்க்க.

ஆண்குறி பலப்பட (அதன் நரம்புகளின் வியாதிகளினாலும்; அதில் கபநீர், விஷநீர் முதலிய துர்நீர்கள் சேர்வதினாலும் உண்டான கோணல், வளைவு முதலியன நீங்கி) :- அகறுகுழித் தைலம், மேற்படி வேறு, அட்டைப் பிரயோகங்கள், அர்க்கக்ஷீரப் பிரயோகங்கள், ஆங்கிலேய இங்கிதலேபனம், ஆனந்தஜீவா மணிப்பட்டி, ஆலால பலகாரி குழித்தைலம், இங்குலிக லேபனம்,

---

* அழலுதல் - எரிதல், வெப்பங் கொள்ளல்.

இந்திர வீரியலேபனம், இராஜா நந்தயோக போகவிர்த்தி குதூகலனி, இராஜவீரிய மாஜூன், காஞ்சிரலேபனம், காருறவிபைரவிப்பட்டி, காளைபதாதிப்பட்டித் தைலம், கொங்கணி இங்கிததைலம், கோசரோக பேதி மாத்திரை, சதாபுஷ்பிக்ஷீரப்பட்டி, குக்ஷூம பூவாதி தைலம், தீவிராபிவிர்த்தி யமிர்தாதிலுபூப், போகபூவாதி பூப்புடத் தைலம், மண்டலாதிப்பட்டி, மதனமோஹனப் பிரயோகம், முஷ்டிரோகநிவாரண முட்டைப்பிரயோகம், மேற்படி வேறு மைநலேபன திராவகம், லிங்கபலகாரி மங்கலமதுரம், வச்சிர கண்டகா மஞ்சுப் பிரயோகப்பட்டி, வீரியாபிவிர்த்தி காஜர்முறப்பா, சுகுமாரதிலா, பால்திலா, மைந திலா.

ஆண்குறி பலப்பட (இரத்தக் குறைவினால் அல்லது சரீரத்தின் கீழ்பாகத்தில் ஆவி குறைவாயுண்டாவதினால் உண்டான சோர்வு, தளர்ச்சி, சுருங்கல் முதலியவை தீர்ந்து. எழுச்சி விம்மல் உண்டாகி) :- அட்டைப் பிரயோகங்கள், அண்டஹாதி அநூஷ்ஜவாரிஷ், அண்டஹாதிமாஜூன்; அதிபோக நிவாரணபாயாசம், மேற்படி வேறு, அதிரஸ வீரியவிர்த்தினி,ஆங்கிலேய லிங்கவீரிய ஹல்வா, இராஜாராமேஸ்வரத்தீநீர், இராஜவீரியமாஜூன், உம்பலகெம்பீரத்துவை, ஓங்காரமாங்கிஷத் தீநீர், காருறவி பைரவிப்பட்டி, காளைபதாதி பட்டித் தைலம், கொங்கணி இங்கித தைலம், கோச பலகாரிகுழித்தைலம், கோசபலகாரி நாஷ்த்தாமேற்படி வேறு, கோசரோகபேதி மாத்திரை, கோசஸ்தூலகோசப் பிரயோகம், கோசஸ்தூலவீரியதைலம், கோசாதிபலகாரி பர்பி, சோதி மூதோதிபட்டித்தைலம், தம்பல கெம்பீரத்தைலம், தீ விராபிவிர்த்தி அமிர்தாதிலுபூப், நித்தியபல மாஜூன், பூந்தாளியாதிமாஜூன், போகாநந்த ஸ்தம்பனமாத்திரை, மண்டலாதிகுழித்தைலம், மண்டலாதிப்பட்டி, மனோரஞ்சித மஞ்சூரநாஷ்த்தா, லிங்கபலகாரி மங்கலமதுரம், வீரியாவிர்த்தி காஜர் முறப்பா, ஸ்தம்பன அம்பர் மாத்திரை, ஸ்தம்பன நிர்விஷா மாத்திரை, ஜம்புகாயமாத்திரை.

ஆண்குறி பலப்பட (பிரமேகம் முதலியவைகளாலும் மற்ற காரணங்களினாலும் உண்டான சோர்வு, தளர்ச்சி, முதலியவைகள் தீர்ந்து):- அட்டைப்பிரயோகங்கள், அதிபோகரோக நிவாரண பாயாசம், மேற்படி வேறு அர்க்க க்ஷீரத்திலா, ஆங்கிலேய இங்கிதலேபனம், ஆநந்தஜிவா மணிப்பட்டி, இந்திரபூவாதி லேபனம், கச்சப்பிரசண்டலேபன மாத்திரை, கவீசூர குழித்தைலம், காஞ்சிரலேபனம், கொங்கண இங்கித தைலம், கோசபலகாரி குழித்தைலம், கோசபலகாரிப் பட்டி, கோசஸ்தூல வீரிய தைலம், சதாபுஷ்பிக்ஷீரப் பட்டி, சித்தர் மாஜூன், சுகாநந்த கரவீரப்பட்டி, சுந்தர சிந்தாமணி ஜவாரிஷ், தம்பல கெம்பீர தைலம், பர்பயூன்

லேபனம், பலாண்டுகு ஜீவாப்பட்டி, போகபூவாதி பூப்புடத் தைலம், மண்டலாதி குழித்தைலம், மண்ட லாதிப்பட்டி, மதனமோஹனப் பிரயோகம், மயூரகுழித்தைலம், மஸ்தகலேபனம், வன்னிகர்ப்பப்பட்டி, வீரியாபி விர்த்திப்பட்டி, ஸ்தூல பலகாரிலேபனம், திலா எண்ணெய், வேறு திலா எண்ணெய், பூண்டுத்தைலம், மைநதிலா.

ஆண்குறி பலப்பட (முஷ்டிமைதுனம், ஆசனப்புணர்ச்சி முதலிய துஷ்ட கிரியைகளினா லுண்டான சோர்வு தளர்ச்சி, கோணல், மெலிவு முதலியவை தீர்ந்து):- அட்டைப் பிரயோகங்கள், அதிபோக நிவாரணபாயசம் மேற்படி வேறு, அதிரசவீரியவர்த்தினி, அர்க்கக்ஷீரப் பிரயோகங்கள், ஆக்ரசிம்ம ஊக்க சஞ்சீவித்திலா, ஆங்கிலேய இங்கிதலேபனம், இங்கு பூவாதி குழித்தைலம், இராஜபுத்திரி யாங்கப்பட்டி, இராஜ யோகப்பட்டி, இராஜராமேஸ்வரத் தீநீர், இலகுஜலூலலேபனம், மேற்படி வேறு, உம்பல கெம்பீரைத்துவை, ஓங்கார மாங்கிஷத் தீநீர், காளைபதாதி பட்டித்தைலம், கொங்கனி இங்கித தைலம், கோசகாத்திரதாத்துராதி ஹல்வா, கோசபலகாரி ஒற்றிடம், மேற்படி வேறு, கோசரோக ஹரி எரிமுக ஹல்வா, கோசஸ்தூல கோசப் பிரயோகம், சோதி மூதோதிப்பட்டித் தைலம், தம்பல ஜுவா பூப்புடத் தைலம், துவாகர வீரப்பட்டி, துன்ப நிவாரண ஜுந்துதிலா, துஷ்டரோக கண்டித அண்ட ஹாதி ஹல்வா, துஷ்டரோக நிவாரண திலா, நிர் விஷா அர்க்கக்ஷீரத்திலா, பாரத்துவாஜப்பட்டி, பிபீலிகை பாலிதா லேபனத்தைலம், போகாதிபாகப் பட்டி, மஹா வீரியப்பட்டி, மின் மினிப்பட்டித்தைலம், மிஸ்ரிச் சூரணம், முஷ்டிரோக நிவாரண முட்டைப் பிரயோகம், மேற்படி வேறு, மைநதலபன திராவகம், ரசிதஜுவாதிலா மாத்திரை, லிங்க பலகாரி மங்கலமதுரம், வச்சிரகண்டர் உச்சித சுடர்த்தைலம், வீரியாபி விர்த்திகாஜர் முறப்பா, ஸ்தம்பன அம்பர் மாத்திரை, ஸ்தம்பன நிர்விஷ மாத்திரை ஜம்புகாய மாத்திரை, அம்பர் திலா, பைரவிப்பட்டி.

ஆண்குறியானது அடிசிறுத்து, நுனி பருத்திருப்பதற்கு :-

ஆண்குறி பலப்பட என்பதைப் பார்க்க.

ஆண்குறியானது கோணலாயிருப்பதற்கு	மேற்படி
ஆண்குறியானது சிறுத்திருப்பதற்கு	,,
ஆண்குறியானது சுருங்கி இருப்பதற்கு	,,
ஆண்குறியானது சோர்ந்திருப்பதற்கு	,,
ஆண்குறியானது தளர்ந்திருப்பதற்கு	,,

ஆண்குறியானது மெலிந்திருப்பதற்கு மேற்படி

ஆண்குறியானது ஸ்பரிச சலனம் குறைந்திருப்பதற்கு ”

ஆண்குறியில் கபநீரிறங்கியுண்டாகும் தாது நஷ்டத்திற்கு ”

ஆண்குறியில் வாதரோகங் கண்டுண்டான தாது நஷ்டத்திற்கு ”

ஆண்குறியின் அழலைக்கு:- பிரமேக நிவாரண பீச்சு மருந்து வேறு வகைகளில் 8 - வதும், 9வதும் அழலைக்கு என்பதையும் பார்க்க.

ஆண்குறியின் சோர்விற்கு (இந்திரிய ஒழுக்கினாலுண்டான) :- மயூர குழித்தைலம் இந்திரிய இழிவிற்கு ஆண் குறி பலப்பட என்பனவற்றையும் பார்க்க.

ஆண்குறியின் சீழ்க்கட்டிக்கு: (ஆண் குறியின் அழலைக்கு) என்பதைப் பார்க்க.

ஆண்குறியின் சோர்விற்கு (சுகநீர்ப் பெருக்கினாலுண்டான): மயூர குழித்தைலம் சுகநீர்ப்பெருக்கிற்கு, ஆண்குறி பலப்பட என்பனவற்றையும் பார்க்க.

ஆண்குறியின் நரம்புகளின் வியாதியினாலுண்டான தாது நஷ்டத்திற்கு:- (ஆண்குறி பலப்பட) என்பதைப் பார்க்க.

ஆண்குறியைப்பற்றின தாதுநஷ்டத்திற்கு :- (ஆண்குறிபலப்பட) என்பதைப் பார்க்க

ஆண் மலட்டிற்கு :- மதனகாம வச்சிரதண்டம் .

ஆயாசத்திற்கு (மதுமேகத்தினாலுண்டான) :- மதுமேக பில்லை மாத்திரை, மேற்படி வேறு.

ஆயுள் விருத்தியுண்டாக :- ஆமோதானந்தமதனகாமபில்லை, இருதயோச்சித குதூகலனீ, சொர்ணபூபதிச் சூரணம், மதனாலங்கிருத சுகந்தபில்லை, மதனகாம வச்சிரதண்டம்.

ஆறாத இரணத்திற்கு - குஷ்டநிவாரணி, ரோஜாப்பூ எண்ணெய்.

ஆனந்த முண்டாக :- சந்தூக சுகந்தபன்னீர், ராஜசௌரிய போகவிருத்தி மாத்திரை, மனக்களிப்புண்டாக, என்பதையும் பார்க்க.

ஆன்மசக்தி பலப்பட :- இருதயோச்சித குதூகலனி, காஜராதி வீரியவிர்த்தினி, காஜராண்டயோகபோகவிருத்தி மாஜூன், நாராயண வீரியவிர்த்தி முறப்பா.

ஆன்மசக்தி பலப்பட (விஷம், விஷபேதி முதலியவற்றால் தளர்ந்த) :- இராஜயோகாமிர்த குதூகலனி.

இ

இசிவிற்கு :- அனிசூன் மாத்திரை, கோசரோக ஹரிஎரிமுகி ஹல்வா, ரோஜாப்பூ எண்ணெய்.

இசிவிற்கு (சூதக பந்தத்தினாலுண்டான) :- கொங்கார மலரெண்ணெய். சூதகக்கட்டிற்கு என்பதையும் பார்க்க.

இடுப்பிற்குப் பலமுண்டாக:- அமிர்த பீஜாஹல்வா, ராஜ கெம்பீர போகவிருத்தி மாஜூன், ராஜயோகாமிர்த குதூகலனி, அண்டஹாதி ஹல்வா, கெட்டிமூலகப்பிட்டு, சாலாமிஸ்ரி முறப்பா, பஹமனே சுபேத் முறப்பா, மேதாபிவிர்த்தி ஸ்தூல மாஜூன்.

இடுப்பின் நோய்க்கு :- சீமை துத்திவிதை மாஜூன், சீமை யத்திப்பழ ஷர்பத்து, திராஷாதி மாஜூன், மதுகுல்கந்து, மஹாபாநு விரேசனி, ராஜகெம்பீர யோக மாஜூன், மஹாஜஸர் ஹல்வா, வசந்தமலருரி ஹல்வா, விந்தோதர வீரியவிர்த்தினி.

இடுப்பின் வலிக்கு :- (இடுப்பின் நோய்க்கு) என்பதைப் பார்க்க.

இந்திரிய இழிவிற்கு :- அதிபோகரோக நிவாரண பாயாசம் மேற்படி வேறு, இராஜராமேஸ்வரத் தீநீர், கண்ணியாதிச் சூரணம், கபிதாதிமாஜூன், கரியுரியாதிச்சூரணம், காயசித்தி மாத்திரை, குற்சித மாஜூன், சிற்றண்ட பஸ்பம், சுகந்தி பலோயுத மாஜூன், தாத்துராதி மாத்திரை, திந்திருணி பீஜாங்க மாத்திரை தீவிராபி விர்த்தியமிர்தாதிலுபூப், நித்தியானந்த வித்துருமபஸ்பம், பறங்கிந்தன சூரணம், பிரமதண்ட திராவகம், மஹாமேதோரி மாஜூன், மாஷாதிஹல்வா, மேகநிவாரண எண்ணெய், ஸ்தம்பனமாத்திரை, ஸ்தம்பன ரத்னாதிமாத்திரை, வசந்தமலருரி ஹல்வா.

இந்திரிய இழிவிற்கு (முஷ்டிப் பிரயோகத்தாலுண்டான) :- கோசகாத்திர தாத்துராதி ஹல்வா, வீரியாபிவிர்த்தி காஜர் முறப்பா, (இந்திரிய இழிவிற்கு) என்பதையும் பார்க்க.

இந்திரிய இழிவிற்கு (மேக சம்பந்தமான) :- பறங்கி பந்தன சூரணம், இந்திரிய இழிவிற்கு என்பதையும் பார்க்க.

இந்திரிய ஒழுக்கிற்கு :- (இந்திரிய இழிவிற்கு) என்பதைப் பார்க்க.

இந்திரிய ஒழுக்கினாலுண்டான ஆண்குறியின் சோர்விற்கு :- ஆண்குறி பலப்பட, இந்திரிய இழிவிற்கு, ஆண்குறியின் சோர்விற்கு (இந்திரிய ஒழுக்கினாலுண்டான) என்பனவற்றைப் பார்க்க.

இந்திரிய கமலங்கள் பலப்பட :- சீமைத் துத்திவிதை மாஜுன், முத்தாதிரத்தின் பலகாரி.

இந்திரிய கருவிகளின் துர்ப்பலத்தினாலுண்டான தாது நஷ்டத்திற்கு:- * மஹா விந்துவாதி லுபூப் லேகியம், விந்துவாதி மாஜுன் , * இந்திரிய கமலங்கள் பலப்பட என்பதையும் பார்க்க,

இந்திரிய நரம்புகளின் குளிர்ச்சிக்கு:- நாகராதிபோக விருத்தி ஹல்வா*

இந்திரிய நரம்புகளின் விஷநீர் நீங்க:-* மதுஸ்மிகாதி விந்துவாதி மாஜுன்*

இந்திரிய நஷ்டத்திற்கு :- (இந்திரிய விளைவுண்டாக) என்பதைப் பார்க்க.

இந்திரிய புஷ்டியுண்டாக :- ஆங்கிலேய லிங்க வீரிய ஹல்வா, ராஜகெம்பிர போகவிர்த்தி மாஜுன். ராஜ யோகாமிர்த குதூகலனி, சீமை துத்திச் சூரணம், சீமை நறுவிலிப்பழ மாஜுன், நித்திய பல மாஜுன், மஹாமேதோரி மாஜுன், மஹா ஜஸர் இருதய பலகாரி, * அண்டஹாதி ஹல்வா, அமிர்த விந்தாதி லேகியம், இரத்தாதி இந்திரிய விர்த்தினி, இலகிந்திரிய விர்த்தினி, இலகு அமிர்த விந்தாதி, இலகுதீக மோகநாத லேகியம், இலகு விந்தாதி லேகியம், கடலை நாஷ்தா, கடலைநீர்ப்பானம், கந்துமாதி விந்தாதி லேகியம், மேற்படி வேறுவகை கர்ச்சூரயோக போகவிர்த்தினி, கர்ச்சூராதி வீரிய விர்த்தினி, காஜர் பாயசம், கிரிஞ்சன ஹல்வா, கூபத்தண்டம், கொட்டி மூலப்பிட்டு, கோதுமைப் பாயசம். சரசவிந்தாதிச் சூரணம், சாலாமிஸ்ரி முறப்பா, சில்கூஜா நாஷ்தா, சிற்றண்ட சிந்தாமணி லேகியம், சிற்றண்ட விந்தாதிலேகியம், சுக்கில விருத்தி லேகியம், சுக்கிலாதி வீரிய விர்த்தி லேகியம், தஞ்சை குஞ்சிஷ்க் முறப்பா, தீகமோகநாத லேகியம், நாராயணி விந்தாதி லேகியம், நாராயணி வீரியவிர்த்தி முறப்பா, பஹமனே சுபேத் முறப்பா, பம்பா பானம், பாதம் சட்னி, பால் ஹல்வா, போகாதி பலஹீன நிவாரணி,மஹா அமிர்தவிந்தாதி லேகியம், மஹா ஜஸர் ஹல்வா, மஹா தீக மோகநாத லேகியம், மஹாதீத மோகநாதன், மேற்படி வேறு வகை, மஹா மதன விந்தாதி மாஜுன், மஹாவிந்தாதிலுபூப் லேகியம், மஹாலுபூப் லேகியம், மஞ்சள் முள்ளங்கி ஹல்வா, மதன காமரசம், மதன மெழுகு, மதனவிந்தாதிமாஜுன், மதுஸ்மிகாதி விந்தாதி மாஜுன், மல்கோபா மஹா குலகலினி, மேகநிவர்த்தி போக விர்த்தினி, மேகாதி யூஷ்ண நிவாரணி, மேதாபி விர்த்திஸ்தூல மாஜுன், மேத்தியாதி ஹல்வா, வச்சகத்தண்டுலாதி உச்சிதப் பிரயோகம், விந்தாதிச் சூரணம், விந்தாதி மாஜுன், விந்தோதர வீரிய விர்த்தினி, ஹிம்மஸ் விந்தாதி லேகியம், ஹிம்மஸ் ஹல்வா, மேற்படி வேறுவகை, ஷிகாமூல லேகியம்*.

இந்திரியம் கெட்டிப்பட :- அமிர்த பீஜா ஹல்வா,காய சித்தி மாத்திரை, திந்திருணி பீஜாங்க மாத்திரை, துரிதஸ்கலித நிவாரணி, மாஷாதிஹல்வா, மிஸ்ரியாதிச் சூரணம், ராஜா பராக்கிரமவிர்த்தி மாஜூன், வீரியாபி விர்த்திகாஜர் முறப்பா, ஸ்தம்பன ரத்தினாதி மாத்திரை * அண்டஹாதி ஹல்வா, அமிர்தவிந்துவாதி லேகியம், கடலை நாஷ்தா, கடலை நீர்ப்பானம், கந்துமாதி விந்துவாதி லேகியம், மேற்படி வேறுவகை, கூபத்தண்டம், பால்பாயசம், பிண்டலதிண்டி, மதனகாமரசம், மதன மெழுகு,மஹா அமிர்த விந்துவாதி லேகியம், வசந்த மலருரி ஹல்வா.

இந்திரிய விளைவுண்டாக:- (இந்திரியபுஷ்டியுண்டாக) என்பதைப் பார்க்க.

இரத்தக்கெடுதிக்கு :- (இரத்தசுத்தியுண்டாக) என்பதைப்பார்க்க.

இரத்தக் கொதிப்பிற்கு- அதியிரத்த ரோகநிவாரணி, ஆமோதானந்த மதனகாமபில்லை, ஆலுபுகாரா இலகு பேதிஷர்பத்து, ஆலுபுகாராபேதி ஷர்பத்து, இலந்தைப் பானம் வேறு, காஹூவிதைமாத்திரை, சந்தனஷர்பத்து, சம்பங்கி யெண்ணெய் மேற்படி வேறு, சல்லாத்து விதை ஷர்பத்து, தராஇலைத்தீநீர், திந்திரிணி அன்னாசயபலகாரி, தேசிக்காய்ப் பில்லைகள் நிம்பாதிஷர்பத்து, மதனாலங்கிருத சுகந்தபில்லை, ஷாத்ரா எண்ணெய்.

இரத்தங் கக்குதலுக்கு - பச்சைக்கற்பூரபில்லை மாத்திரை, பருப்புக்கீரை வித்துச் சூரணம், பேதானா சூரணம், மஹாபாநுவிரேசனி இரத்தவாந்திக்கு என்பதையும் பார்க்க.

இரத்தக் கொதிப்பினாலுண்டான சுரத்திற்கு - தாமரைப்பூ திராவகம். இரத்தக்கொதிப்பிற்கு என்பதையும் பார்க்க.

இரத்தசம்பந்தமான வியாதிகளுக்கு:- சந்தனோபய ஷர்பத்து. இரத்தக்கொதிப்பிற்கு என்பதையும் பார்க்க.

இரத்த சிராவக ரோகத்திற்கு - (பெரும்பாட்டிற்கு) என்பதைப் பார்க்க.

இரத்த சுத்தியுண்டாக :- இருதயயோச்சித குதூகலனி, காஜர்பானம், சந்தனசர்பத்து, சொர்ண மஹாசீத குதூகலனி, தேகாரோக்கிய எண்ணெய், நிம்பப்பட்டைத் திராவகம், நிம்பப்பூ திராவகம், மதன மோஹானப் பிரயோகம், வேப்பம்பூத் திராவகம், சுக்கிலவிருத்தி லேகியம், தஞ்சை குஞ்சிஷ்க் முறப்பா, திரிபலாதி சரீரஹிம்ஸஸங்காரி, பூண்டுப் பாயசம், மதுஸ்மிகாதி விந்துவாதி

மாஜூன் மல்கோபாமது குதூகலனி, ஹப்பத்துஸ்ஸவுதா ஹல்வா.

இரத்த சூட்டிற்கு :- (இரத்தக் கொதிப்பிற்கு) என்பதைப் பார்க்க.

இரத்தச் சூட்டினாலுண்டான சுரத்திற்கு:- சுரத்திற்கு (இரத்தச் சூட்டினாலுண்டான) என்பதைப் பார்க்க.

இரத்தபுஷ்டியுண்டாக :- (இரத்தவிர்த்தியுண்டாக) என்பதைப் பார்க்க.

இரத்தபேதிக்கு :- கஹருபாச்சூரணம், சந்தானோபய சர்பத்து, மகாகோகிலாதி மாத்திரை.

இரத்தபேதிக்கு (குடல் முறுக்குடனுண்டாகும்) :- பேதானா கலவைச் சூரணம். இரத்தபேதிக்கு என்பதைப் பார்க்க.

இரத்த பிரமேகத்திற்கு:- பிரமேக நிவாரண பீச்சுமருந்து வேறு வகைகளில் 7-வது பிரமேகத்திற்கு என்பதையும் பார்க்க.

இரத்த மூலத்திற்கு :- கஹருபாச் சூரணம், மண்டூர கஸ்தூரி ஜவாரிஷ்.

இரத்தமேகத்திற்கு :- பச்சைக்கருப்பூர பில்லை மாத்திரை, பிரமதண்ட திராவகம், ஸ்தம்பன்மாத்திரை, பிரமேகத்திற்கு என்பதையும் பார்க்க.

இரத்தம் நிற்க (சிறுநீருடன் விழும்) :- (இரத்த மேகத்திற்கு) என்பதைப் பார்க்க.

இரத்தம் நிற்க (நுரை ஈரலிலிருந்து விழும்) :- இரத்தங் கக்குதலுக்கு, இரத்தவாந்திக்கு என்பனவற்றைப் பார்க்க.

இரத்தம் நிற்க (மூலத்திலிருந்து விழும்) :- இரத்தமூலக் குடாரம், மைசாக்ஷி மாத்திரை, இரத்தமூலத்திற்கு என்பதையும் பார்க்க.

இரத்தவாந்திக்கு:- கஹ்ருபாச் சூரணம், கரந்தாதி மாத்திரை, இரத்தங் கக்குதலுக்கு என்பதையும் பார்க்க.

இரத்தவிருத்தியுண்டாக:- அத்திப்பழக் கிஷாயம், ஆட்டிறைச்சிக் கஞ்சி, ஆட்டிறைச்சி சத்து, மேற்படி வேறுவகை. இருதய போச்சித குதூகலனி, கந்துமாதி விந்துவாதி லேகியம், காஜர் திராவகம், காஜர் மிட்டாய், சத்தாதி மாஜூன், சீமை அத்திப்பழப் பிரயோகம், சூரத்துநில ஆவாரைப் பிரயோகம்; தாம்பூல நறுமணச் சுண்ணம்; தாம்பூலப் பரிமளச் சுண்ணக் கலவை, தேன்பானம், பாதம் பருப்புப் பாயசம், மஹாகாஜர் பானம், வேப்பம் பட்டைக் கியாழம், அரிசன ஹத்ல்தந்தி முறப்பா; இலகு அமிர்தவிந்துவாதி, இலகுலுபூப் லேகியம், கசகசாப் பாயசம், காஜாரண்ட யோகபோக விருத்தி மாஜூன், காஜர்பாயசம், (காஜர்ஹல்வா), கோதுமைப் பாயசம், சிற்றண்டசிந்தாமணி லேகியம், சுக்கில விருத்தி லேகியம்,

பால்ஹல்வா, பூண்டுப்பாயசம், மதுஸ்மிகாதி விந்தாதி மாஜூன், மஹாதீக மோகன நாத லேகியம் மஹாலுபூப் லேகியம், மேகநிவர்த்தி, போகநிவர்த்தினி, ஹிம்மஸ் ஹல்வா, ஷகாமூலக லேகியம்.

இரத்தஸ்கலிதத்திற்கு:- ரூமி மஸ்தகி யெண்ணெய்.

இரத்தாதிக்கத்தினாலுண்டான சுரத்திற்கு :- காசினிக் கீரை ரசம், இரத்தத்தை சாந்தப்படுத்தும் பதார்த்தங்களையு முபயோகிக்கலாம்.

இரத்தாதிக்கத்தினாலுண்டான ரோகங்களுக்கு: அதி இரத்த ரோக நிவாரணி, மேற்படி வேறு, இரத்தத்தைச் சாந்தப்படுத்தும் பதார்த்தங்களையும் உபயோகிக்கலாம்.

இராஜ உறுப்புகள் பலப்பட: அண்டஹாதி அநூஷ் ஜவாரிஷ், இராஜ சௌரிய ஷர்பத்து, இராஜ பராக்கிரம ஷர்பத்து, இராஜ யோகாமிர்த குதூகலனி, இராஜப்ரீதி போகாதி திராவகம்,சதானந்த நிர்விஷா மாத்திரை, சீனா சஞ்சீவிச் சூரணம், தேவகிருபா ஜவாரிஷ், மதன மோஹநப்பிரயோகம், மஹாராஜ சௌரிய ஷர்பத்து, ராஜகெம்பீர போகவிர்த்தி மாஜூன், ராஜசௌரிய போகவிர்த்தி மாத்திரை, இராஜாந்தரங்கவீரிய விர்த்தி மாஜூன், ராஜபராக்கிரம போகவிர்த்தி மாஜூன், ராஜாபிவிர்த்தி மதுஸ்மிகாதி ஹல்வா, ஸ்தம்பன ரத்தினாதிமாத்திரை, சடாமாஞ்சில் ஜவாரிஷ்.

இராஜகருவிகளின் சீதள நோய்க்கு :- இராஜசூர போகவிர்த்தி திராவகம், இராஜ உறுப்புகள் பலப்பட என்பதையும் பார்க்க.

இராஜகருவிகளின் சூடான நோய்களுக்கு :- இராஜ உறுப்புகள் பலப்பட என்பதைப் பார்க்க.

இராஜகருவிகள் துர்ப்பலத்திற்கு (சீதளத்தினாலுண்டான) :- இராஜ சூரபோகவிர்த்தி திராவகம், இராஜ உறுப்புகள் பலப்பட என்பதைப் பார்க்க.

இராஜகருவிகள் பலப்பட:- (இராஜ உறுப்புகள் பலப்பட) என்பதைப்பார்க்க.

இருதயத்தின் அசுத்த நீர்களை நீக்க:- அசுத்தநீர்களை நீக்க (இருதயத்தின்) என்பதைப் பார்க்க.

இருதயத்தின் அதிர்ச்சிக்கு :- இராஜசௌரிய ஷர்பத்து, இராஜபராக்கிரம சர்பத்து, இராஜயோகாமிர்த குதூகலனி, இருதயோச்சித குதூகலனி, காவுஜூபான் குல்கந்து, காவுஜூபான் தீநீர், மேற்படி வேறு, காவுஜூபான் சர்பத்து, கொத்துமல்லிச் சூரணம், சந்தன இரசித

ஆமிலஷர்பத்து, சந்தனோபய சர்பத்து, சந்தனஜவாரிஷ், திரிதோஷ நிவாரண பலகார மாஜூன், துவசந்தனாதி சர்பத்து, தேவகிருபா ஜவாரிஷ், மஹாபாநுவிரேசனி, ராஜசூரபோக விருத்தித் திராவகம், ஜலமஞ்சரி சிகாமதுபானம், மேற்படி வேறு வகையும்.

இருதயத்தின் அதிர்ச்சி (உஷ்ணத்தினாலுண்டான):- அதி இரத்தரோக நிவாரணி வேறு, அரிச்சந்தன சர்பத்து, சந்தன ஆமிலசர்பத்து, சந்தன சொர்ணாதி சர்பத்து, சந்தநமாஜூன், சந்தனசர்பத்து வேறுவகை, தாமரைபூத் திராவகம், நித்திலபில்லை மாத்திரை, மஹா சுகந்தஹல்வா.

இருதயத்தின் அதிர்ச்சிக்கு (குளிர்ச்சியினாலுண்டான) :- இராஜோஷ்ண குதூகலனி, இருதயத்தின் அதிர்ச்சிக்கு என்பதைப் பார்க்க.

இருதயத்தின் அதிர்ச்சிக்கு (சூட்டினாலுண்டான):- இருதயத்தின் அதிர்ச்சிக்கு உஷ்ணத்தினாலுண்டான என்பதைப் பார்க்க.

இருதயத்தின் சூட்டிற்கு:- பச்சைக் கற்பூரபில்லை மாத்திரை, இருதயத்தின் அதிர்ச்சிக்கு (உஷ்ணத்தினாலுண்டான) என்பதைப் பார்க்க.

இருதயத்தின் சோர்விற்கு:- அரிச்சந்தன சர்பத்து, இருதயத்தின் துர்ப்பலத்திற்கு என்பதைப் பார்க்க.

இருதயத்தின் துடிப்பிற்கு :- (இருதயத்தின் அதிர்ச்சிக்கு) என்பதைப் பார்க்க.

இருதயத்தின் துர்ப்பலத்திற்கு:- அரிச்சந்தன சர்பத்து, இராஜசீத குதூகலனி, இராஜாயோகாமிர்த குதூகலனி வேறு, இராஜோஷ்ண குதூகலனி, இருதயபலகாரி, சந்தன ஆமில சர்பத்து, சந்தன இரசித ஆமிலசர்பத்து சந்தனசொர்ணாதி சர்பத்து, சந்தனோபய சர்பத்து, சீமைத்துத்தி விதைமாஜூன், சுல்தானி அகருதைலம், ஞானாபிவிர்த்தி சொர்ண மனோரஞ்சிதம், திரிதோஷ நிவாரண பலகாரி மாஜூன் , தேவகிருபா ஜவாரிஷ், பத்மகுல்கந்து, பரந்தாதிபானம், மதனமோகனப் பிரயோகம், மஹாசுகந்தஹல்வா வேறு, மஹாஜஜர் ஹல்வா, முத்தாதிரத்தின பலகாரிமாத்திரை, ரேஷமாதித் திரிபலாதி மாஜூன், ரோஜாமாஜூன், ஜலமஞ்சரி சிகா மதுபானம், ஸ்ரீ கந்தாதிச் சூரணம்.

இருதயத்தின் துர்ப்பலத்திற்கு (குளிர்ச்சியினாலுண்டான)- இராஜோஷ்ண குதூகலனி, இருதயத்தின் துர்ப்பலத்திற்கு என்பதையும் பார்க்க.

இருதயத்தின் துர்ப்பலத்திற்கு (சூட்டினாலுண்டான) :- இராஜசீதகுதூகலனி, காவுஜபொான் பூவின்சர்பத்து, காவுஜபொான் சர்பத்து, இருதயத்தின் துர்ப்பலத்திற்கு என்பதைப் பார்க்க.

இருதயத்தின் நடுக்கத்திற்கு :- (இருதயத்தின் அதிர்ச்சிக்கு) என்பதைப் பார்க்க.

இருதயத்தின் பலஹீனத்திற்கு :- (இருதயத்தின் துர்ப்பலத்திற்கு) என்பதைப் பார்க்க.

இருதயத்தின் ரோகத்திற்கு :- அம்பர் கஸ்தூரி சீதசிந்தாமணி, இராஜவிக்ரம சர்பத்து, இருதயரோக நிவாரணி, கஸ்தூரி சீதசிந்தாமணி, கஸ்தூரி சீதோஷ்ண சம சிந்தாமணி, சூக்ஷ்ம கஸ்தூரிசீதசிந்தாமணி, இருதயத்தின் துற்பலத்திற்கு என்பதையும் பார்க்க.

இருதயத்தின் ரோகத்திற்கு (இரைப்பை சம்பந்தமான) :- இராஜவிக்ரம சர்பத்து வேறு, இருதயம், இரைப்பை இவை பலப்பட என்பதையும் பார்க்க.

இருதயத்தின் ரோகத்திற்கு (எரிந்துபோன வண்டலினா லுண்டான):- இருதயரோக நிவாரணி, இருதயத்தின் துர்ப்பலத்திற்கு என்பதையும் பார்க்க.

இருதயத்தின் ரோகத்திற்கு (வாத, பித்த சம்பந்தத்தினாலுண்டான):- இருதயரோக நிவாரணி, சந்தனோபய சர்பத்து, இருதயத்தின் துர்ப்பலத்திற்கு என்பதையும் பார்க்க.

இருதயத்தின் வியாதிக்கு:- இருதயத்தின் ரோகத்திற்கு என்பதைப் பார்க்க.

இருதயம் இரைப்பை இவை பலப்பட:- ஆமிரஞ்ச சர்பத்து, சுகவல்லப ஜவாரிஷ், சொர்ணபூபதிச் சூரணம், திரியாக் ரத்தின பலகாரிமாத்திரை, துளசி சர்பத்து, நாரங்கவடக ஷர்பத்து, மகாராஜ சௌரிய சர்பத்து,ராஜவிக்ரம சர்பத்து வேறு, இரைப்பை, இருதயம் இவை பலப்பட என்பதையும் பார்க்க.

இருதயம் இரைப்பை, ஈரல் இவை பலப்பட:- இராஜ சௌரிய சர்பத்து இராஜ பராக்கிரம சர்பத்து, ஏலாதிச் சூரணம், சந்தன பலானி சர்பத்து, இரைப்பை, இருதயம், ஈரல், இருதயம், இவை பலப்பட என்பனவற்றையும் பார்க்க.

இருதயம், ஈரல் இவற்றின் சூட்டிற்கு:- திராக்ஷப்பழ சர்பத்து.

இருதயம், ஈரல் இவை பலப்பட:- சீமைதுத்தி தீநீர்

இருதயம் பலப்பட:- (இருதயத்தின் துர்ப்பலத்திற்கு) என்பதைப் பார்க்க.

இருதயம், மற்ற உறுப்புகள் இவை பலப்பட:- இராஜவிக்ரம சர்பத்து.

இருதயம், மூளை இவை பலப்பட:- அம்பர் கஸ்தூரி சீத சிந்தாமணி, ஆமோதானந்த மதனகாமபில்லை, இரத்தினாதிபில்லை மாத்திரை,

இராஜானந்தயோகபோக விருத்தி குதூகலனி, கஸ்தூரி சீதசிந்தாமணி, சீதோஷ்ண சமசிந்தாமணி, கஸ்தூரி சுகந்தசந்தனம், காவுஜூபொான் குல்கந்து, காவுஜூபொான் பானம் வேறு, கிரந்தாதி இருதய குதூகலனி, குதூகலநறுமணவர்த்தி, மேற்படி வேறு, சந்தன அத்தர், சந்தனதிராவகம், சந்தனஜவாரிஷ், சுகந்த தூபத் திரி, குக்ஷுமகஸ்தூரி சீதசிந்தாமணி, நித்திலபில்லைமாத்திரை, மங்களகரதிராவகம், மதனாலங்கிருத சுகந்தபில்லை, மனோரம்மிய அகருநறுமண வர்த்தி, மஹாகபால சஞ்சீவி சர்பத்து, மஹாசுகந்த ஹல்வா, மஸ்தகபலாபிவிர்த்தி பூந்தாழம்ஹல்வா, மஹாவிந்துவாதி லுபூப்லேகியம்

இருதயம், மூளை, இரைப்பை இவை பலப்பட :- கபாலபல கார ஆமிலாதி ஹல்வா, கபாலவீரிய மாங்கிஷத் திராவகம், துளசித் திராவகம், ஆமிலகமுறப்பா.

இருமலுக்கு: - அதிமதுரமாத்திரை, சீமைதுத்திவிதைக்குளிகை, சீமை நறுவிலிப்பழப் பிரயோகம், சோம்புக் கியாழம்வேறு, தாத்துராதி மாத்திரை, துளசிசர்பத்து, மதுயாஷ்டிகாதிச் சூரணம், யாஷ்டி மதுராதிச் சூரணம், முத்தாதி ரத்தின பலகாரி மாத்திரை, சூஸாதி சர்பத்து, கசகசாப் பாயசம், பாதம் பருப்புப் பாயசம், பூண்டுப் பாயசம்.

இருமலுக்கு:- (கபத்தினாலுண்டான) கப இருமலுக்கு, கப ரோகத்திற்கு, கபம் வெளிப்பட என்பனவற்றைப் பார்க்க.

இருமலுக்கு (கொழுமையினாலுண்டான) :- லசுண மாஜூன், மேற்படி வேறு, மேற்படி வேறு; கபரோகத்திற்கு, இருமலுக்கு என்பனவற்றையும் பார்க்க.

இருமலுக்கு (சூட்டினாலுண்டான) :- பரந்தாதிமாஜூன், பருப்புக்கீரை வித்து சர்பத்து, இருமலுக்கு என்பதையும் பார்க்க.

இருமலுக்கு (பழைய):- அனிசூன் ஜவாரிஷ், கபஹாரி மாத்திரை, நிம்பாதி மனோரஞ்சித பானம், றூமிச்சோம்பு ஜவாரிஷ்,இருமலுக்கு கபரோகத்திற்கு, கபம் வெளிப்பட, என்பனவற்றையும் பார்க்க.

இருமலுக்கு:- (வரட்சியினாலுண்டான) ஆவாரைத் திரிபலாதி லேகியம், இலந்தைக் கிஷாயம், இலந்தைப்பாகு, இலந்தைப் பானம், சரக்கொன்றைப்புளிபானம், தாமரைப்பூ திராவகம், தாமரைப்பூ சர்பத்து, நறுவிலிப் பழ சர்பத்து.

இரைப்பிற்கு :- அதிமதுர மாத்திரை, கஷ்டசுவாச நிவாரணி, துளசி ஷர்பத்து, மதுயாஷ்டிகாதிச் சூரணம், மேற்சுவாச நிவாரண மாத்திரை, யாஷ்டி மதுராதிச் சூரணம், சூஸாதி சர்பத்து, கபரோகத்திற்கு என்பதையும் பார்க்க.

இரைப்பை, இருதயம் இவை பலப்பட:- அன்னாசய பலகாரி, அன்னாசய ரக்ஷணி, ஆமிலசந்தனபானம், துவிதாடிமக் கனி ஷர்பத்து, நிம்பாதி மனோரஞ்சித பானம், முறப்பா குதூகலனி, இருதயம், இரைப்பை இவை பலப்பட என்பதையும் பார்க்க.

இரைப்பை, ஈரல் இவை பலப்பட:- ஆமில அகருஜவாரிஷ், இலவங்கப்பட்டை மாத்திரை, ஈரல் இரைப்பை இவை பலப்பட ஈரல், இருதயம், இரைப்பை, இவை பலப்பட என்பதையும் பார்க்க.

இரைப்பை, இருதயம், ஈரல், இவை பலப்பட:- ஏலாதித் தீநீர், சந்தன பலாநி ஷர்பத்து, இருதயம், இரைப்பை, இவை பலப்பட என்பனவற்றையும் பார்க்க.

இரைப்பை, இருதயம், மூளை இவை பலப்பட:- அன்னாசய ரக்ஷணி, இரத்தினாதி ஜவாரிஷ், இருதயம், மூளை, இரைப்பை இவை பலப்பட என்பதையும் பார்க்க.

இரைப்பை சம்பந்தமான இருதய ரோகத்திற்கு - இருதயத்தின் ரோகத்திற்கு (இரைப்பை சம்பந்தமான) என்பதைப் பார்க்க

இரைப்பை, மூளை இவற்றின் அசுத்த மாசுகளை நீக்க:- அசுத்த சத்துகள் வெளிப்பட (இரைப்பை, மூளை இவற்றின்) என்பதைப் பார்க்க.

இரைப்பை, மூளை இவை பலப்பட:- சிறு திரிபலாதி லேகியம், பஹமனே சுபேத் முறப்பா, இரைப்பை பலப்பட, மூளை பலப்பட என்பனவற்றையும் பார்க்க.

இரைப்பை பலப்பட:- அகரு திராவகம், அண்டஹாதி அநூஷ் ஜவாரிஷ், ஆமில அகருமாஜூன், இருதயோச்சித குதூகலனி, இலவங்கப்பட்டைச் சூரணம், இலவங்கப்பட்டை ஜவாரிஷ், எலுமிச்சம் பழ முறப்பா, கமூனி மாஜூன், காசினி மாஜூன், காவுஜபொன் பூவின் ஷர்பத்து, குல்கந்து குதூகலனி, சொர்ணஜல மஞ்சரி மாஜூன், சோம்புச்சூரணம், குல்கந்துடன் சாப்பிடவும், தாடிமக்கனி ஷர்பத், திந்திருணி அன்னாசய பலகாரி, திந்திருணி ஷர்பத்து, நிம்பப்பத்திரி லேகியம், பச்சைக் கர்ப்பூர லேகியம், பரமௌஷத மாத்திரை, பொதினாபானம், மேற்படி வேறு, மதுகமல

பானம், மஸ்தகித்தைலம் வேறு, லவணாதி தீபாக்கினிச் சூரணம், ஸ்தம்பன ரத்தினாதி மாத்திரை, ஜடாமாஞ்சில் மாஜூன், ஜீவரக்ஷாமிர்த லவணம், ஆட்டிறைச்சிக் கஞ்சி, மாங்கிஷத் தீநீர்

இரைப்பை பலப்பட (குளிர்ச்சியான) :- பஞ்ச தீபாக்கினிச் சூரணம், இரைப்பை பலப்பட என்பதையும் பார்க்க.

இரைப்பையிலிருந்தெழும் கெட்ட ஆவிகளைத் தடுக்க:- சந்தன மாஜூன்.

இரைப்பையிலுள்ள அசுத்த மாசுகள் நீங்க:- அசுத்த மாசுகள் வெளிப்பட (இரைப்பையிலுள்ள) என்பதைப் பார்க்க.

இரைப்பையிலுள்ள கபம் வெளிப்பட:- கிறுமானி மாஜூன், சிவதைத் திரிபலாதி, சூரத்து நில ஆவாரைப் பிரயோகம், கபம் வெளிப்பட, கபவாந்தி என்பனவற்றையும் பார்க்க.

இரைப்பையிலுள்ள பித்தநீர் வெளிப்பட: ஆலுபுகாராகிஷாயம், இராஜ விக்ரம ஷர்பத்து வேறு, சிவதைத் திரிபலாதி, பித்தவாந்தி.

இரைப்பையின் உஷ்ணத்திற்கு :- சந்தனபில்லை மாத்திரை, சந்தனஷர்பத்து வேறுவகை, ரோஜாப்பூ எண்ணெய்.

இரைப்பையின் எரிவந்தத்திற்கு:- திராக்ஷாதி பானம், ஸல்லாத்து விதை சர்பத்து.

இரைப்பையின் குளிர்ச்சிக்கு:- கருஞ்சீரக மாஜூன், ஆர்த்திரக முறப்பா

இரைப்பையின் சூலைக்கு :- இராஜ விக்ரம ஷர்பத்து வேறு, ஜாலினியூஸ் சஞ்சீவி ஜவாரிஷ்.

இரைப்பையின் தளர்ச்சிக்கு :- சத்தாதி மாஜூன், மஸ்தக ரக்ஷணாத் திரிபலாதி லேகியம்.

இரைப்பையின் துர்நீர்கள் வெளிப்பட : அசுத்த மாசுகள் வெளிப்பட (இரைப்பையிலுள்ள), என்பதைப் பார்க்க.

இரைப்பையின் துர்ப்பலத்திற்கு :- இரைப்பை பலப்பட என்பதைப் பார்க்க.

இரைப்பையின் துர்ப்பலத்திற்கு (சூடான), யகிர்தகண்ட உஷ்ண நிவாரணி.

இரைப்பையின் துர்ப்பலத்திற்கு (வாயுவினா லுண்டான) கமூனி மாஜூன்.

இரைப்பையின் நோய்களுக்கு:- அன்னாசய ரக்ஷணி, உதரரோக நிவாரணி, கொங்கார ரோஜாபில்லை, பரமௌஷதம், ஜடாமாஞ்சில் பானம், சடாமாஞ்சில் மாஜூன், ஜீவரக்ஷாமிர்த லவணம்.

இரைப்பையின் நோவிற்கு (குளிர்ச்சியினாலுண்டான):- மஸ்தகி தைலம், மஹா மதுபானம், இரைப்பையின் நோய்களுக்கு என்பதையும் பார்க்க.

இரைப்பையின் பலஹீனத்திற்கு:- (இரைப்பை பலப்பட) என்பதைப் பார்க்க.

இரைப்பையின் வியாதிகளுக்கு :-(இரைப்பையின் நோய்களுக்கு) என்பதையும் பார்க்க.

இரைப்பையின் வியாதியின் சம்பந்தத்தினாலுண்டான தலைநோய்க்கு:- இருதயரோக நிவாரணி இரைப்பையின் வியாதிகளுக்கு என்பதையும் பார்க்க.

இரைப்பையின் வீக்கத்திற்கு, - ஜடாமாஞ்சில் பில்லை மாத்திரை.

இரைப்பையின் வெப்பத்திற்கு :- (இரைப்பையின் உஷ்ணத்திற்கு) என்பதைப் பார்க்க.

இலகுபேதி முறைகள் - அஷ்டிகீர ரோஜாபில்லை, இலகுபேதி, மேற்படி வேறு, உசிதமாஜூன், கஷூஸ் ஷர்பத்து, குல்கந்த குதூகலனி, சொர்ணாசீனா ஷர்பத்து, திந்திருணி அன்னாசயபலகாரி; திந்திருணி ஷர்பத்து, யகிர்த கண்டரோக நிவாரணி.

இலகுபேதியாக (குளிர்ச்சியான தேகிகளுக்கு):- மதுகுல்கந்து.

இலகுபேதியாக (சூடான தேகிகளுக்கு):- குல்கந்து.

இலகுவிரேசனகாரிகள் - (இலகுபேதி முறைகள்) என்பதைப் பார்க்க,

இலகுவில் ஜீரணிக்கத்தக்கதும் இரத்த விருத்தியையுண்டாக்கத்தக்கது மானவைகள்:- ஆட்டிறைச்சிக்கஞ்சி, ஆட்டிறைச்சிச் சத்து, மேற்படி வேறு வகை பார்லி அரிசி ஜலம், மேற்படி வேறுவிதம்.

ஈ

ஈரலின் அசுத்த சத்துகள் வெளிப்பட :-(அசுத்த சத்துகள் வெளிப்பட, ஈரலின்) என்பதைப் பார்க்க.

ஈரலின் உஷ்ணத்திற்கு - இரசித ஆமில ஷர்பத்து, ஏலாதிலேகியம், ஏலாதி ஷர்பத்து, சந்தனபில்லை மாத்திரை, சந்தனோபய ஷர்பத்து, சந்தன ஷர்பத்து வேறுவகை, சீமைத்துத்தித்தீநீர், தாடிமக்கனி ஷர்பத்து இனிப்பு, பச்சைக்கற்பூரபில்லை மாத்திரை, பத்ம குல்கந்து, பருப்புக்கீரை வித்துச்சூரணம், பருப்புக்கீரை வித்து ஹல்வா,

பேதனாச் சூரணம், மேகநிவாரண எண்ணெய், யகிர்தண்ட உஷ்ண நிவாரணி.

ஈரலின் ஒழுங்கீனத்திற்கு :- திரிதோஷ நிவாரணபலகாரி மாஜுன், தேவகிருபா ஜவாரிஷ்.

ஈரலின் சூட்டிற்கு :- (ஈரலின் உஷ்ணத்திற்கு) என்பதைப் பார்க்க.

ஈரலின் துர்ப்பலத்திற்கு - ஈரல் பலப்பட என்பதைப் பார்க்கவும்.

ஈரலின் துர்ப்பலத்திற்கு(சூடான) - யகிர்தகண்ட உஷ்ண நிவாரணி.

ஈரலின் நரம்புகளின் அடைப்பிற்கு - கஷுஸ் ஷர்பத்து, காசினிக்கீரை இரசம், புஷ்பாதி மாஜுன், பேதனாச்சூரணம், யகிர்தகண்ட ரோகநிவாரணி.

ஈரலின் நரம்புகளின் வரட்சிக்கு - காசினிக் கீரை ரசம்.

ஈரலின் நரம்புகளின் அடைப்பிற்கு - ஈரலின் நரம்புகளின் அடைப்பிற்கு என்பதையும் பார்க்க.

ஈரலின் நோய்களுக்கு: இருதயயோச்சித குதூகலனி, இலகு புஷ்பாதிச் சூரணம், சொர்ணசீனா ஷர்பத்து வேறு, பரமௌஷ்த மாத்திரை, பாண்டு மாத்திரை, யகிர்தகண்டரோக நிவாரணி.

ஈரலின் நோவிற்கு - காசினி மாஜுன், கொங்கார ரோஜாபில்லை, சூதகபந்த நிவாரணி, சொர்ணசீனாசர்பத்து, பில்லை மாத்திரை, மஸ்தகிதைலம், மஹாபாநு விரேசனி, மஹா மதுபானம், ஜடாமாஞ்சில்பானம் சடாமாஞ்சில் மாஜுன்.

ஈரலின் நோவிற்கு (சூட்டினாலுண்டான):- சீனா சிகாமதுபானம்.

ஈரலின் வறக்ஷிக்கு: அனிசூன் தீநீர், காஜர் மிட்டாய்.

ஈரலின் வறஷிக்கு (குளிர்ச்சியான தேகிகளின்) உஷ்ணபுஜுரி சர்பத்து சமபுஜுரி சர்பத்து.

ஈரலின் வறஷிக்கு (சூடான தேகிகளின்) :- குளிர்ச்சி புஜுரி ஷர்பத்து.

ஈரலின் வலிக்கு : ஈரலின் நோவிற்கு என்பதைப் பார்க்க.

ஈரலின் வீக்கத்திற்கு : காசினி மாஜுன், சொர்ணசீனா ஷர்பத்து, வெள்ளரிவிதைச் சூரணம், ஜடாமாஞ்சில் எண்ணெய், சடாமாஞ்சில் பில்லை மாத்திரை.

ஈரல் இருதயம் இவை பலப்பட: இருதயம் ஈரல் இவை பலப்பட என்பதைப் பார்க்க.

ஈரல், இருதயம், இரைப்பை இவற்றின் பலஹீனத்திற்கு :- ஈரல், இருதயம், இரைப்பை இவை பலப்பட என்பதைப் பார்க்க.

ஈரல், இருதயம், இரைப்பை இவை பலப்பட:- அகருஷர்பத்து, சந்தனபலானி ஷர்பத்து, நிம்பாதிஷர்பத்து இருதயம், இரைப்பை, ஈரல் இவை பலப்பட; இரைப்பை, இருதயம், ஈரல் இவை பலப்பட என்பனவற்றையும் பார்க்க,

ஈரல், இரைப்பை, இவற்றின் துர்ப்பலத்திற்கு - ஈரல், இரைப்பை இவை பலப்பட என்பதைப் பார்க்க.

ஈரல், இரைப்பை இவற்றின் நோவிற்கு - அசையாதிமாஜூன்.

ஈரல், இரைப்பை இவற்றின் ரோகங்களுக்கு:- லவணச் சூரணம்.

ஈரல், இரைப்பை இவை பலப்பட :- கஷூஸ் ஷர்பத்து, சித்தர் மாஜூன், தராஇலைத் தீநீர், தாடிமக்கனிப் பிரயோகம், தாடிமக்கனி மிட்டாய், தேசிபொதினா ஷர்பத்து, நாகராதி மாஜூன்,பத்திரித் தைலம், புஷ்பாதி மாஜூன், மஸ்தகி ஜவாரிஷ், மேற்படி வேறு, லசுண மாஜூன், மேற்படி வேறு, ஷாத்ரா எண்ணெய், இரைப்பை, ஈரல் இவை பலப்பட என்பதையும் பார்க்க.

ஈரல் பலப்பட :- இலகு புஷ்பாதிச் சூரணம், சந்தனோபயஷர்பத்து, சரக்கொன்றைப்புளி ஷர்பத்து, பச்சைக் கர்ப்பூர லேகியம், ஜடாமாஞ்சில் மாஜூன்.

ஈரல் பலப்பட (உஷ்ணமான) :- அம்பர் கஸ்தூரி சீத சிந்தாமணி, கஸ்தூரி சீத சிந்தாமணி, கஸ்தூரி சீதோஷ்ணசம சிந்தாமணி; காசினி மாஜூன், குஷூம கஸ்தூரி சீத சிந்தாமணி, தீபாக்கினி மாத்திரை மேற்படி வேறு, மஹா கபால சஞ்சீவி ஷர்பத்து.

ஈரல், மூளை இவை பலப்பட:- திரிதோஷ நிவாரண பலகாரி மாஜூன், தேவகிருபா ஜவாரிஷ்.

ஈரலின் நோவிற்கு :- ரோஜாப்பூ எண்ணெய்.

ஈறு பலப்பட:- சந்தனாதி தந்தப்பொடி, முத்தூள் தந்த சுகந்தப் பொடி.

உ

உட்காங்கைக்கு:- ஆமிரஞ்ச சர்பத்து, ஆமில சந்தன பானம், ஆமோதானந்த மதனகாமபில்லை, இராஜவிக்ரம சர்பத்துவேறு, கருஞ்சீரக மாஜூன் வேறு, சந்தன பலானி சர்பத்து, சம்பங்கி யெண்ணெய், மேற்படி வேறு, தீபகற்பூர எண்ணெய்,

மதனாலங்கிருத சுகந்தபில்லை, அஸ்திசுரத்திற்கு என்பதையும் பார்க்க.

உட்சூட்டிற்கு-உட்காங்கைக்கு என்பதைப் பார்க்க.

உதரவாயுவிற்கு :- ஜலோதர மாஜூன்.

உப்புசத்திற்கு (வாயுவினாலுண்டான) : ஹிந்தபாமாஜூன்

உரோமத்தை நீக்க :- மூலூக்கி ரோம சங்காரன், ரோம நாசகாரி, ரோம நிர்மூல சுகுமாரதிலா, மேற்படி வேறு.

உள் அவயவங்களின் சக்தி அதிகரிக்க:- மஹாகஸ்தூரி சுகந்த எண்ணெய்.

உறுப்புகள் பலப்பட :- இருதயோச்சித குதூகலனி, ஜாலி நியூஸ் சஞ்சீவி ஜவாரிஷ், * ஷிகாமூல லேகியம் *

உன்மதத்திற்கு : நிசிசிநேக மாத்திரை, மனோரஞ்சித பானம் * இரசித கபால வீரியவிர்த்தினி, திரிபலாதி சரீர ஹிம்ச சங்காரி* பைத்தியத்திற்கு என்பதையும் பார்க்க.

உஷ்ணத்திற்கு :- உட்காங்கைக்கு என்பதையும் பார்க்கவும்.

உஷ்ணத்தினாலுண்டான இருதய அதிர்ச்சிக்கு:- இருதயஅதிர்ச்சிக்கு (உஷ்ணத்தினாலுண்டான) என்பதைப் பார்க்க.

உஷ்ணத்திற்கு- சூட்டிற்கு, உட்காங்கைக்கு, என்பனவற்றைப் பார்க்க.

உஷ்ணமான ஈரல் பலப்பட :- (உஷ்ணமான) என்பதைப் பார்க்க.

உஷ்ண வியாதிகளுக்கு :- உட்காங்கைக்கு, சூட்டிற்கு என்பனவற்றைப் பார்க்க.

<u>ஊ</u>

ஊக்கமுண்டாக (மனதிற்கு) :- ஞானாபிவிர்த்தி சொர்ணமனோரஞ்சிதம், ரேஷமாதி திரிபலாதி மாஜூன், இருதயம் பலப்பட என்பதையும் பார்க்க.

உஷ்ணத்திற்கு (நாள்பட்ட) - தாமரைத் தீநீர் அஸ்திசுரத்திற்கு என்பதையும் பார்க்க.

உஷ்ண வியாதிகளுக்கு :- சூரத்து நில ஆவாரைப் பிரயோகம், உஷ்ணத்திற்கு என்பதையும் பார்க்க.

உஷ்ணம் தணிய- ரோஜாப்பூ மாத்திரை, உஷ்ணத்திற்கு என்பதையும் பார்க்க.

எ

எரிச்சலுக்கு: சோம்பு கியாழம், நிம்பாதி ஷர்பத்து, மேனா சர்பத்து, அழலைக்கு என்பதையும் பார்க்கவும்.

எரிந்துபோன கபம் வெளிப்பட:- மதுபாக குல்கந்து, கபத்தை பக்குவப்படுத்தும் முறைகள் என்பதையும் பார்க்க.

எரிந்துபோன சத்துகள் வெளிப்பட :- ரோஜாப்பூ பானம்; அசுத்த மாசுகள் வெளிப்பட என்பதையும் பார்க்க.

எரிந்துபோன சத்துகள் வெளிப்பட (இரைப்பையிலுள்ள) :- பித்தஹாரி அரிதகிக் கியாழம்; அசுத்த மாசுகள் வெளிப்பட (இரைப்பையிலுள்ள) என்பதையும் பார்க்க.

எரிந்துபோன சத்துகள் வெளிப்பட (சிரசிலிலுள்ள) :- ஆத்மரக்ஷாக் கியாழம், பித்தஹாரி அரிதகிக்கியாழம், அசுத்த மாசுகள் வெளிப்பட; அசுத்த மாசுகள் வெளிப்பட (மூளையின்) என்பனவற்றைப் பார்க்க.

எரிந்துபோன சத்துகள் வெளிப்பட (மூளையிலுள்ள) :- எரிந்துபோன சத்துகள் வெளிப்பட (சிரசிலுள்ள) என்பதைப் பார்க்கவும்.

எரிந்துபோன மாசுகள் வெளிப்பட: எரிந்துபோன சத்துகள் வெளிப்பட என்பதைப் பார்க்கவும்.

எரிந்துபோன வண்டலினா லுண்டான இருதய சோகத்திற்கு: இருதய ரோக நிவாரணி, இருதயத்தின் துர்ப் பலத்திற்கு என்பதையும் பார்க்க.

எரிந்துபோன வண்டலினா லுண்டான இருதய ரோகத் திற்கு- இருதயரோக நிவாரணி, இருதயத்தின் துர்ப்பலத்திற்கு என்பதையும் பார்க்க.

எரிந்துபோன வண்டல் வெளிப்பட:- மதுபாக குல்கந்து; ரோஜாப்பூ சர்பத்து.

எரிந்துபோன வண்டல் வெளிப்பட (மூளையின்) - காரிகியூன் மாத்திரை.

எரிவந்தத்திற்கு - எரிச்சலுக்கு என்பதைப் பார்க்கவும்.

எரிவந்தத்திற்கு (கட்டிகளினாலுண்டாகும்) - ரோஜாப்பூ எண்ணெய்.

எரிவந்தத்திற்கு (பிளவையினாலுண்டாகும்) - ரோஜாப்பூ எண்ணெய்.

எரிவந்தத்திற்கு (வாயுவினாலுண்டாகும்) - சந்தன மாத்திரை

எலும்புருக்கி மேகத்திற்கு - நித்தியாநந்த வித்துரும பஸ்பம்; மேக சஞ்சீவியெண்ணெய்;

ஏ

ஏங்கலுக்கு (கேவுதலுக்கு) - பரந்தாதி பானம்.

ஒ

ஒருதலை நோய்க்கு (சூட்டினாலுண்டான) - தாமரைப்பூ திராவகம், தாமரைப்பூ சர்பத்து.

க

கடிதட நாற்றத்திற்கு:- கடிதடநாற்ற நிவாரணி, மேற்படி வேறு,மேற்படி வேறு.

கட்டியினா லுண்டான எரிவந்தத்திற்கு : ரோஜாப்பூ எண்ணெய்.

கட்டுகளுக்கு (அடைப்பிற்கு) (நாளங்களின்) - சீனாசிகா மதுபானம், சொர்ண சீனா சர்பத்து, மேற்படி வேறு.

கணச்சூட்டிற்கு :- * மேத்தியாதி ஹல்வா*

கணுக்கால் வாதத்திற்கு :- ஆமணக்குப் பிரயோகம், இராஜயோகாமிர்த குதூகலனி, வேறு, சுரிஞ்சான் மிஸ்ரி மாத்திரை. ஜாலினியூஸ் சஞ்சீவி ஜவாரிஷ்.

கணுவாதத்திற்கு:- கணுக்கால் வாதத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

கண்டமாலைக்கு:- தராயிலைக் கியாழம்.

கண்ணிற்கொளியுண்டாக:- ஆங்கிலேய லிங்க வீரிய ஹல்வா, காஜ ராண்ட யோகபோக விருத்தி மாஜூன்.

கண்ணின் ஒளி யதிகப்பட:- கபால பைரவம், காவலதிபதி மாத்திரை, மேற்படி வேறு. சீனா சஞ்சீவிச்சூரணம், ஸ்வரக்ஷாமிர்தலவணம்.

கண்ணொளி மங்கலுக்கு (கண்ணினொளி யதிகப்பட) :- என்பதைப் பார்க்க.

கப இருமலுக்கு :- அஸ்மரிரோக நிவாரணி, ஸ்தம்பன ரத்தினாதி மாத்திரை, ஜாலினியூஸ் சஞ்சீவி ஜவாரிஷ், கபரோகத்திற்கு; கபம் வெளிப்பட என்பனவற்றையும் பார்க்க.

கபக்கட்டிற்கு :- நறுமணபாக்குப் பிரயோகம்.

கபசம்பந்தமான வியாதிகளுக்கு :- ஆலுபுகாரா பேதி ஷர்பத்து, தீவிராபி விர்த்தி யமிர்தாதிலுபூப், மதுபாக குல்கந்து, கபரோகத்திற்கு என்பதையும் பார்க்க.

கபசம்பந்தமான வியாதிகளுக்கு (சிறுகுடலின்) :- கொன்றைப்புளி மாஜூன்.

கப சுரத்திற்கு :- கருஞ்சீரக மாஜூன், கிறுமானி மாஜூன், சூரத்து நிலாவாரைப் பிரயோகம், ஆர்த்திரக முறப்பா.

கபரோகத்திற்கு:- கபத்தை பக்குவப்படுத்துங் கிஷாயங்கள், கபபேதி முறைகள், கபஹாரிச் சூரணம், காரிகியூன் மாத்திரை வேறு, சூரத்து நிலாவாரைப் பிரயோகம், நித்தியானந்த வித்துரும பஸ்பம், மஹா பரமௌஷதம், திரிபலாதி சரீர ஹிம்ச சங்காரி.

கபவியாதிக்கு :- கபரோகத்திற்கு என்பதைப் பார்க்க.

கபம் பக்குவப்பட :- கபத்தைப் பக்குவப்படுத்தும் கிஷாயம் கபத்தைப்பக்குவப்படுத்தும் பதார்த்தங்கள், ஜலமஞ்சரி சிகாமதுபானம்.

கபம் பக்குவப்பட (இறுகலான) :- மதுகமல பானம்.

கபம், பித்தம் இவை வெளிப்பட :- சிலேஷ்ம பித்த நிவாரணி

*கபம் வெளிப்பட :- அத்திப்பழக் கிஷாயம், ஆரோக்கிய மாஜூன், சிவதை மாத்திரை, சீமைதுத்திவிதை மாஜூன், தந்திபீஜ மாத்திரை, பேதிமாத்திரை.

கபம் வெளிப்பட (இரைப்பையிலுள்ள) :- இரைப்பையிலுள்ள கபம் வெளிப்பட என்பதைப் பார்க்க.

கபம் வெளிப்பட (கெட்டியான) :- இந்துபா மாஜூன்.

கபம் வெளிப்பட (சிரசிலுள்ள) :- ஆத்மரக்ஷாபானம்.

கபம் வெளிப்பட (நுரையீரலிலுள்ள) :- கபஹாரி மாத்திரை.

கபம் வெளிப்பட (நெஞ்சிலுள்ள) :- சோம்புக் கியாழம் வேறு.

கபம் வெளிப்பட பிசுபிசுப்பான - அனிசூ ன் ஜவாரிஷ், றூமிச்சோம்பு ஜவாரிஷ்.

கபம் வெளிப்பட (மார்பிலுள்ள) - கபஹாரி மாத்திரை.

கபம் வெளிப்பட (வாந்தியினால்) - கபவாந்தி.

---

* கபத்தை வெளிப்படுத்த வேண்டியபோது கபத்தை பக்குவப்படுத்தும் பதார்த்தங்கள், கியாழங்கள், அவ்வித முறைகள் ஆகியவைகளில் சமயத்திற்கேற்ற வண்ணமுபயோகித்த பின்னரே கபபேதி முதலியவைகளை உபயோகிக்கலாம்.

கபால வரட்சிக்கு - இரசித கபால வீரியவிர்த்தினி, உஷ்ண சாந்தி கபாலரஷணி, உஷ்ண நிவாரண கொத்துமல்லி விதைச் சூரணம்.

கமுக்கட்டின் துர்வாசனைக்கு - கைக்குழி நறுமண மாத்திரை, மேற்படி வேறு

கரப்பானுக்கு- ஆவாரைத் திரிபலாதி லேகியம்.

கருச்சிதைவிற்கு - கர்ப்பரக்ஷணிய நித்திய மாஜூன், மேற்படி வேறு, கர்ப்பரக்ஷணிய ஜவாரிஷ்.

கருத்தரிக்க - பிண்டலதிண்டி

கருப்பை பலப்பட - கர்ப்பரக்ஷணி நித்தில மாஜூன், விந்தோதய வீரிய விர்த்தனி.

கருப்பைவலிக்கு - மஹாபாநு விரேசனி.

கருப்பையின் கடினத்திற்கு- கொங்கார மலரெண்ணெய்.

கருப்பையின் குளிர்ச்சிக்கு :- விந்தோதர வீரியவிர்த்தினி.

கருப்பையின் துர்ப்பலத்திற்கு :- (கருப்பை பலப்பட) என்பதைப் பார்க்க.

கருப்பையின் வியாதிக்கு - சொர்ண சீனா ஷர்பத்து, கருப்பை பலப்பட என்பதைப் பார்க்க.

கருப்பை வெளியிற் புறப்பட்டிருப்பதற்கு - கொங்கார மலரெண்ணெய்.

கருப்பை ஸ்தம்பித்தலுக்கு - திரிபலாதி சரீர ஹிம்ச சங்காரி.

கருமேகங்களுக்கு - பிரமாதி விரணபைரவி.

கரும்பித்தத்திற்கு - காவுஜூபான் ஷர்பத்து.

கரும்புள்ளி ரோகத்திற்கு - ஆத்மரக்ஷா திரிபலாதி.

கர்ப்பப்பை நோய்க்கு - கருப்பை நோய்க்கு என்பதைப் பார்க்கவும்

கல்லடைப்பிற்கு:- அஸ்மரிரோக நிவாரணி, கல்லடைப்பு நிவாரணி, கல்லடைப்பு மாஜூன்,காஜர்மிட்டாய், பிரமேகரோக நிவாரணஷர்பத்து, மதுகுல்கந்து, ஜடா மாஞ்சில் எண்ணெய்.

கறட்டு சூலைக்கு :- சுக்கில விருத்தி லேகியம்.

கற்றாழை நாற்றத்திற்கு :- லோகமோஹ ஸ்நானபில்லை, ஸ்நானநறுமண மாத்திரை, மேற்படி வேறு சூரணம், ஸ்நான பரிமளப்பொடி, ஸ்நானபில்லை, ஜகமோகன ஸ்நான சுகந்தப்பொடி.

கஷ்ட சுவாசத்திற்கு:- அதிமதுர மாத்திரை, அஸ்மரிரோக நிவாரணி, கபஹாரி மாத்திரை, கஷ்டசுவாச நிவாரணி சரக்கொன்றைப்புளி பானம், சோம்புக்கியாழம் வேறு, நிம்பாதி மனோரஞ்சித பானம், மஹாபாநு விரேசனி, மேற்சுவாச நிவாரண மாத்திரை.

கா

காக்கைவலிக்கு:- ஆத்மரக்ஷாதிராவகம், சீனா சஞ்சீவிச் சூரணம், கஸ்தூரி மஸ்தகரக்ஷணி.

காக்கைவலிக்கு (கபத்தினாலுண்டான) :- ஆத்மரக்ஷாத் திரிபலாதி.

காசநோய்க்கு மதன காம வச்சிரதண்டம்.

காசநோய்க்கு (பேதியுடன் கூடிய) :- பச்சைக்கற்பூர திராவகம், பச்சைக்கற்பூரபில்லை மாத்திரை, பச்சைக் கற்பூர மாத்திரை.

காதின் நோய்க்கு :- சுகுமார திரிபலாதி, ரோஜாப்பூ எண்ணெய்.

காமமதிகப்பட :- சாலாமிஸ்ரி முறப்பா, வச்சகத்தண்டுலாதி யுச்சிதப் பிரயோகம்.

காமாலைக்கு :- அனிசூன் தீநீர், இராஜயோகாமிர்த குதூகலனி, இலவங்கப்பட்டை ஜவாரிஷ், சீனாசஞ்சீவிச் சூரணம், ரேவல் சீனி சிகாமதுபானம்.

காமாலைக்கு வரட்சியினாலுண்டான :- சீனாசிகாமது பானம்.

காயசித்தியுண்டாக :- திரிதோஷ நிவாரண பலஹாரி மாஜூன், தேவகிருபா ஜவாரிஷ்.

காலையில் பேதியாக:- இராபேதி மாத்திரை.

கால்நரம்பின் நோவிற்கு :- கமூனிமாஜூன்; மஹாபாநு விரேசனி.

கால் வாதத்திற்கு : கீல்வாத சங்காரன், சந்நிவாத நிவாரணி.

கி

கிரந்திக்கு :- ஆவாரைத் திரிபலாதி லேகியம், சுக்கில விருத்தி லேகியம்.

கிருமிகளுக்கு (வயிற்றிலுள்ள) :- சுகபேதிச் சூரணம்.

கிழத்தனத்தைத் தடுக்க:- திரிதோஷ நிவாரண பலஹாரி மாஜூன், தேவகிருபா ஜவாரிஷ்.

கபால வரட்சிக்கு - இரசித கபால வீரியவிர்த்தினி, உஷ்ண சாந்தி கபாலரஷணி, உஷ்ண நிவாரண கொத்துமல்லி விதைச் சூரணம்.

கமுக்கட்டின் துர்வாசனைக்கு - கைக்குழி நறுமண மாத்திரை, மேற்படி வேறு

கரப்பானுக்கு- ஆவாரைத் திரிபலாதி லேகியம்.

கருச்சிதைவிற்கு - கர்ப்பரக்ஷணிய நித்திய மாஜூன், மேற்படி வேறு, கர்ப்பரக்ஷணிய ஜவாரிஷ்.

கருத்தரிக்க - பிண்டலதிண்டி

கருப்பை பலப்பட - கர்ப்பரக்ஷணி நித்தில மாஜுன், விந்தோதய வீரிய விர்த்தனி.

கருப்பைவலிக்கு - மஹாபாநு விரேசனி.

கருப்பையின் கடினத்திற்கு- கொங்கார மலரெண்ணெய்.

கருப்பையின் குளிர்ச்சிக்கு :- விந்தோதர வீரியவிர்த்தினி.

கருப்பையின் துர்ப்பலத்திற்கு :- (கருப்பை பலப்பட) என்பதைப் பார்க்க.

கருப்பையின் வியாதிக்கு - சொர்ண சீனா ஷர்பத்து, கருப்பை பலப்பட என்பதைப் பார்க்க.

கருப்பை வெளியிற் புறப்பட்டிருப்பதற்கு - கொங்கார மலரெண்ணெய்.

கருப்பை ஸ்தம்பித்தலுக்கு - திரிபலாதி சரீர ஹிம்ச சங்காரி.

கருமேகங்களுக்கு - பிரமாதி விரணபைரவி.

கரும்பித்தத்திற்கு - காவுஜுபான் ஷர்பத்து.

கரும்புள்ளி ரோகத்திற்கு - ஆத்மரக்ஷா திரிபலாதி.

கர்ப்பப்பை நோய்க்கு - கருப்பை நோய்க்கு என்பதைப் பார்க்கவும்

கல்லடைப்பிற்கு:- அஸ்மரிரோக நிவாரணி, கல்லடைப்பு நிவாரணி, கல்லடைப்பு மாஜூன்,காஜர்மிட்டாய், பிரமேகரோக நிவாரணஷர்பத்து, மதுகுல்கந்து, ஜடா மாஞ்சில் எண்ணெய்.

கறட்டு சூலைக்கு :- சுக்கில விருத்தி லேகியம்.

கற்றாழை நாற்றத்திற்கு :- லோகமோஹ ஸ்நானபில்லை, ஸ்நானநறுமண மாத்திரை, மேற்படி வேறு சூரணம், ஸ்நான பரிமளப்பொடி, ஸ்நானபில்லை, ஜகமோகன ஸ்நான சுகந்தப்பொடி.

கஷ்ட சுவாசத்திற்கு:- அதிமதுர மாத்திரை, அஸ்மரிரோக நிவாரணி, கபஹாரி மாத்திரை, கஷ்டசுவாச நிவாரணி சரக்கொன்றைப்புளி பானம்,சோம்புக்கியாழம் வேறு, நிம்பாதி மனோரஞ்சித பானம், மஹாபாநு விரேசனி, மேற்சுவாச நிவாரண மாத்திரை.

கா

காக்கைவலிக்கு:- ஆத்மரக்ஷாதிராவகம், சீனா சஞ்சீவிச் சூரணம்,கஸ்தூரி மஸ்தகரக்ஷணி.

காக்கைவலிக்கு (கபத்தினாலுண்டான) :- ஆத்மரக்ஷாத் திரிபலாதி.

காசநோய்க்கு மதன காம வச்சிரதண்டம்.

காசநோய்க்கு (பேதியுடன் கூடிய) :- பச்சைக்கற்பூர திராவகம், பச்சைக்கற்பூரபில்லை மாத்திரை, பச்சைக் கற்பூர மாத்திரை.

காதின் நோய்க்கு :- சுகுமார திரிபலாதி, ரோஜாப்பூ எண்ணெய்.

காமமதிகப்பட :- சாலாமிஸ்ரி முறப்பா, வச்சகத்தண்டுலாதி யுச்சிதப் பிரயோகம்.

காமாலைக்கு :- அனிசூன் தீநீர், இராஜயோகாமிர்த குதூகலனி, இலவங்கப்பட்டை ஜவாரிஷ், சீனாசஞ்சீவிச் சூரணம், ரேவல் சீனி சிகாமதுபானம்.

காமாலைக்கு வரட்சியினாலுண்டான :- சீனாசிகாமது பானம்.

காயசித்தியுண்டாக :- திரிதோஷ நிவாரண பலஹாரி மாஜூன், தேவகிருபா ஜவாரிஷ்.

காலையில் பேதியாக:- இராபேதி மாத்திரை.

கால்நரம்பின் நோவிற்கு :- கமுனிமாஜூன்; மஹாபாநு விரேசனி.

கால் வாதத்திற்கு : கீல்வாத சங்காரன், சந்நிவாத நிவாரணி.

கி

கிரந்திக்கு :- ஆவாரைத் திரிபலாதி லேகியம், சுக்கில விருத்தி லேகியம்.

கிருமிகளுக்கு (வயிற்றிலுள்ள) :- சுகபேதிச் சூரணம்.

கிழத்தனத்தைத் தடுக்க:- திரிதோஷ நிவாரண பலஹாரி மாஜூன், தேவகிருபா ஜவாரிஷ்.

கிறுகிறுப்பிற்கு: அதி இரத்தரோக நிவாரணி, கபாலோஷ்ண சாந்த பாயசம், வேறு வகைகளில் மூன்றாவது குல்கந்து, இரசித கபாலவீரிய விர்த்தினி.

கீ

கீல்களின் தளர்ச்சிக்கு : மது குல்கந்து.

கீல்களின் நோவிற்கு : அனிசூன் மாத்திரை, ஆத்மரக்ஷா திராவகம், இராஜயோகாமிர்த குதூகலனி வேறு, இலவணச்சூரணம், கமூனிமாஜூன், கீல்வாதசங்காரன், கோசரோகஹரி எரிமுகி ஹல்வா, சகுமூனியா ஜவாரிஷ், சந்நிவாத நிவாரண சூரணம், சித்தர் மாஜூன் சீமைதுத்திவிதை மாஜூன், பரமௌஷதம், மதுகுல்கந்து, வாதஹரி சூரணம், சுரிஞ்சான்மிஸ்ரி மாத்திரை.

கீல்களின் வாதத்திற்கு : (கீல்களின் நோவிற்கு) என்பதைப்பார்க்க.

கீல்களின் வாயுவிற்கு : (கீல்களின் நோவிற்கு) என்பதைப்பார்க்க.

கீல்களின் வாயுவிற்கு (நாட்பட்ட) : வாதசங்காரன், கீல்களின் நோவிற்கு என்பதையும் பார்க்க.

கீல்களின் வாயுவிற்கு (பித்தவாத சம்பந்தமான) : சயா ரோஜா ஷர்பத்து, கீல்களின் நோவிற்கு என்பதையும் பார்க்க.

கு

குடலின் நோவிற்கு (கபத்தினாலுண்டான) : கருஞ்சீரக மாஜூன்.

குடல் முறுக்கு நோய்க்கு : அன்னாசயரக்ஷணி, உதரரோக நிவாரணி, குன்மக் குடோரி ஜவாரிஷ், சகுமூனியா ஜவாரிஷ், சரக்கொன்றைப்புளி ஷர்பத்து, சுகுமார மாஜூன், பரமௌஷதம், ஹிந்துபா ஜவாரிஷ்.

குடல் முறுக்கு நோய்க்கு - (சிறு) கொன்றைப்புளிமாஜூன்.

குடல் முறுக்கு நோய்க்கு (சூட்டினாலுண்டான) - கொன்றைப்புளி மாஜூன்.

குடல்முறுக்கு நோய்க்கு - (வாயு, கபம் இவற்றின் சம்பந்தத்தினாலுண்டான)- சித்தர் மாஜூன்.

குடல் முறுக்கு வாயுவிற்கு- (குடல்முறுக்கு நோவிற்கு) என்பதைப் பார்க்க.

குடல் வாதத்திற்கு - குடல் முறுக்கு நோவிற்கு என்பதைப் பார்க்க.

குண்டிக்காய்களின் குளிர்ச்சிக்கு- கிறுமானி மாஜூன்; ஆர்த்திரக முறப்பா.

குண்டிக்காய்களின் துர்ப்பலத்திற்கு: அமிர்த பீஜா ஹல்வா, இராஜபோகாமிர்த குதூகலனி, உசிதமா ஜூன், தவாவுத்தரஞ்சபின், மனோரத ஜஸர் ஹல்வா, மூத்திரகண்ட பலகாரி, மூத்திரபிண்ட பலகாரி, பால் ஹல்வா, ரோஜாப்பூ பானம், இலகுவிந்துவாதி லேகியம், கொட்டி மூலகப்பிட்டு, சாலாமிஸ்ரி முறப்பா, பஹமனேசுபேத் முறப்பா, மஹா அமிர்தவிந்துவாதி லேகியம், மஹாவிந்துவாதி லூபூப் லேகியம், மஹா ஜஸர் ஹல்வா, மேதாபிவிர்த்தி ஸ்துலமாஜூன், வசந்த மலருரி ஹல்வா.

குண்டிக்காய்களின் துர்ப்பலத்திற்கு (சூட்டினாலுண்டான)- உசிதமாஜூன், குண்டிக்காய்களின் துர்ப்பலத்திற்கு என்பதையும் பார்க்க.

குண்டிக்காய்களின் நோவிற்கு : (நீர்க்குண்டிக்காய்களின் நோவிற்கு) என்பதைப் பார்க்க.

குண்டிக்காய்களின் வரட்சிக்கு : நீர்க்குண்டிக்காய்களின் வரட்சிக்கு என்பதைப் பார்க்க.

குண்டிக்காய்களின் வலிக்கு- நீர்க்குண்டிக்காய்களின் நோவிற்கு என்பதைப் பார்க்க.

குண்டிக்காய்களின் வீக்கத்திற்கு - (நீர்க்குண்டிக்காய்களின் வீக்கத்திற்கு) என்பதைப் பார்க்க.

குண்டிக்காய்கள் பலப்பட - (குண்டிக்காய்களின் துர்பலத்திற்கு) என்பதைப் பார்க்க.

குதிகால் நரம்பின் வாயுவிற்கு :ஹிந்தி ஜவாரிஷ்.

குதிகால் வலிக்கு : கஸ்தூரி மஸ்தக க்ஷரணி.

குரலோசை யுண்டாக (இனிய)- குரல்கம்மல் திறவுகோல், மேற்படி வேறு, மேற்படி வேறு, சரக்கொன்றைப் புளி சட்னி, லசுண மாஜூன், மேற்படி வேறு, மேற்படி வேறு.

குரல் கம்மலுக்கு - (குரலோசை யுண்டாக) என்பதைப் பார்க்க.

குழந்தைகளின் வயிற்றுப்பிசத்திற்கு - சோம்புச் சூரணத்தை வயிற்றில் தேய்க்கவும்.

குழந்தையின் வியாதிக்கு - நிம்மதி மனோரஞ்சித பானம், ஹரித எண்ணெய், ஸ்திரீகந்தாதிச் சூரணம், மேத்தியாதி ஹல்வா.

குழந்தைகளுக்கு வாந்தியாக- வாந்திமுறைகள் (குழந்தைகளின்)

குழிப்புண்ணிற்கு - ரோஜாப்பூ எண்ணெய்.

குளிர் சுரங்களுக்கு - சொர்ண சீனா ஷர்பத்து.

குளிர்ச்சிக்கு (இரைப்பையின்) - கிறுமானி மாஜூன்

குளிர்ச்சிக்கு (குண்டிக்காய்களின்) :- கிறுமானி மாஜூன் ஆத்திரக முறப்பா.

குளிர்ச்சி சம்பந்தமான வியாதிகளுக்கு : தீவிராபிவிர்த்தி யமிர்தாதி லுபூப், லசுண மாஜூன், மேற்படி வேறு, மேற்படி வேறு.

குளிர்ச்சியான இரைப்பை பலப்பட: இரைப்பை பலப்பட (குளிர்ச்சியான) என்பதைப் பார்க்க.

குளிர்ச்சியான துர்நீர்களை வெளிப்படுத்த:- ரோஜாப்பூ எண்ணெய்.

குளிர்ச்சியான தேகிகளின் ஈரலின் வரட்சிக்கு:- ஈரலின் வரட்சிக்கு (குளிர்ச்சியான தேகிகளின்) என்பதைப் பார்க்கவும்.

குளிர்ச்சியான தேகிகளுக்கு இலகுபேதியாக:- இலகு பேதியாக (குளிர்ச்சியான தேகிகளுக்கு) என்பதைப் பார்க்க.

குளிர்ச்சியான வியாதிகளுக்கு:- குளிர்ச்சி சம்பந்தமான வியாதிகளுக்கு என்பதைப் பார்க்க.

குளிர்ச்சியினால் விந்துறைந்துண்டான தாது நஷ்டத்திற்கு- நாகராதிபோக விருத்தி ஹல்வா.

குளிர்ச்சியினாலுண்டான இருதயத்தின் துர்ப்பலத்திற்கு:- இருதயத்தின் துர்ப்பலத்திற்கு (குளிர்ச்சியினாலுண்டான) என்பதையும் பார்க்கவும்.

குளிர்ச்சியினாலுண்டான இரைப்பையின் நோவிற்கு :- இரைப்பையின் நோவிற்கு (குளிர்ச்சியினாலுண்டான) என்பதையும் பார்க்கவும்.

குறைநோய்க்கு :- குஷ்ட நிவாரணி, கோசரோக ஹரிஎரிமுகி ஹல்வா, நிம்பப்பட்டைத் திராவகம், நிம்பப்பத்திரி லேகியம், வேப்பம் பூத்திராவகம்.

குன்மநோய்க்கு:- ஜமாநி திரிபலாதி லேகியம், ஜீவரக்ஷாமிர்த லவணம், திரிபலாதி சரீரஹிம்ச சங்காரி.

குஷ்டத்திற்கு :- (குறை நோய்க்கு) என்பதைப் பார்க்கவும்.

கூ

கூந்தல் நாற்றத்திற்கு :- கூந்தல் வாசனையுண்டாக என்பதைப் பார்க்க.

கூந்தல் வாசனையுண்டாக :- கூந்தல் சுகந்த தூபம், கூந்தல் நறுமண தூபம், கூந்தல் பரிமளதூபம், சுகந்ததூபப்பொடி.

கெ

கெட்ட ஆவிகள் மூளையிற் செல்லாது தடுக்க:- நிம்பாதி மனோரஞ்சித ப்ானம், ஜமானி திரிபலாதிலேகியம்.

கெட்ட ஆவியைத் தடுக்க (இரைப்பையிலெழும்) :- கிறுமானி மாஜூன், சல்லாத்து விதைச்சூரணம், மதுராதிச் சூரணம்.

கை

கைகால் பிடிப்பிற்கு :- பிரமதண்டம் எண்ணெய்

கைகால் முடக்கிற்கு :- வாயுசங்காரன், மதனகாம வச்சிரதண்டம்.

கொ

கொப்புளங்களுக்கு :- இலந்தைப் பானம்.

கொழுமையாலுண்டான இருமலுக்கு :- இருமலுக்கு (கொழுமையா லுண்டான) என்பதைப் பார்க்க.

கோ

கோச எழுச்சியுண்டாக (ஆறு நாழிகைக்குள்) :- போகானந்த ஸ்தம்பன மாத்திரை.

கோசத்தின் சோர்விற்கு :- ஆண்குறி பலப்பட என்பதைப் பார்க்கவும்.

கோசம் பலப்பட (அதன் நரம்புகளின் வியாதியினாலும், அதில் கபநீர், விஷநீர் முதலிய துர்நீர்கள் சேர்வதினாலும் உண்டான கோணல், வளைவு, சோர்வு முதலியவை நீங்கி):- (ஆண்குறி பலப்பட) என்பதைப் பார்க்க.

கோசம் பலப்பட: (எழுச்சி விம்மல் உண்டாகி) இரத்தக் குறைவினால் அல்லது சரீரத்தின் கீழ்பாகத்தில் ஆவிகுறைவா யுண்டாவதினால் உண்டான சோர்வு, தளர்ச்சி, சுருங்கல் முதலியவை தீர்ந்து:- ஆண்குறி பலப்பட என்பதைப் பார்க்க.

கோசம் பலப்பட :- (முஷ்டி மைதுனம், ஆசனப்புணர்ச்சி முதலிய துஷ்ட கிரியைகளினாலுண்டான கோசச் சோர்வு, தளர்ச்சி, கோணல், மெலிவு முதலியவை தீர்ந்து):- ஆண்குறி பலப்பட என்பதைப் பார்க்கவும்.

கோசம் பலப்பட :- (பிரமேகம் முதலியவைகளாலும் மற்ற காரணங்களினாலும் உண்டான சோர்வு, தளர்ச்சி, சுருங்கல் முதலியவைகள் தீர்ந்து):- ஆண்குறி பலப்பட என்பதைப் பார்க்கவும்.

கோழைக்கட்டிற்கு :- நறுமணப்பாக்குப் பிரயோகம்.

கௌ

கௌசைக்கட்டிக்கு:- கலிங்காதிக் குழம்பு.

ச

சங்கோசனகாரி :- ரோஜாப்பூ யெண்ணெய்.

சத்துகள் வெளிப்பட (எரிந்துபோன):- எரிந்துபோன சத்துகள் வெளிப்பட என்பதைப் பார்க்கவும்.

சந்தான உற்பத்தியுண்டாக:- சந்தான உற்பத்தி கஸ்தூரிப் பிரயோகம், தேவகிருபா ஜவாரிஷ், புத்திரோற்பத்தி ஹத்திதந்த உசிதம், கூபத்தண்டம், மதனகாம வச்சிரதண்டம்.

சந்தான விர்த்தியுண்டாக:- சந்தான உற்பத்தி யுண்டாக என்பதைப் பார்க்கவும்.

சந்துவாதத்திற்கு :- சந்நிவாத நிவாரணி.

சந்துஷ்டியுண்டாக (மனதிற்கு) :- ரேஷமாதி திரிபலாதி மாஜூன், மனக்களிப்புண்டாக, இருதயம் பலப்பட, என்பனவற்றையும் பார்க்க.

சம்போக காலத்தில் இன்பமுண்டாக:- பிபீலிகை பலிதா லேபனம்.

சரீர ஆயாசத்திற்கு :- சம்பங்கி எண்ணெய், மேற்படி வேறு.

சர்மரோகத்திற்கு:- நிம்பப்பட்டைத் திராவகம், வேப்பம் பூத் திராவகம்.

சலம் சாப்பிடச்சாப்பிட பேதியாக:- சிலேஷ்ம பித்த நிவாரணி வேறு.

சளிப்பிற்கு :- திரட்சாதி மாத்திரை.

சளிப்பிற்கு (வரட்சியினாலுண்டான) :- நறுவிலிப்பழ ஷர்பத்து

சளிப்பினாலுண்டான வியாதிகளுக்கு :- திராட்சாதி மாத்திரை.

சாங்கரிக சக்தியுண்டாக :- ரோஜாப்பூ எண்ணெய்.

சித்தப்பிரமைக்கு:- ஆமோதானந்த மதனகாமபில்லை, துளசித் திராவகம், மதனாலங்கிருத சுகந்தபில்லை, ரேவல் சீனி சிகாமதுபானம், உன்மதத்திற்கு என்பதையும் பார்க்க.

சிரங்குகளுக்கு - ரோஜாப்பூ பானம், ஹரித எண்ணெய்.

சிரசுநோய்களுக்கு (வண்டலினாலுண்டான) - ஆத்மரக்ஷணி மாத்திரை.

சிரசுநோய்களுக்கு (சூட்டினாலுண்டான) - சீதபரமௌஷதம்.

சிலேஷ்மசுரத்திற்கு - அஷ்டபூத ரோஜாபில்லை.

சில்விஷத்திற்கு - சுக்கில விருத்தி லேகியம்.

சிறுகுடலின் இரணத்திற்கு - மஹாபாநு விரேசனி, ரோஜாப்பூ எண்ணெய்.

சிறுகுடல் முறுக்கு வியாதிக்கு- இசுபகோல் ஊறல் கிஷாயம் வேறு, ரோஜாப்பூ எண்ணெய்.

சிறுகுடல் வலிக்கு - ரோஜாப்பூ எண்ணெய்.

சிறுசிரங்கிற்கு - பிரமாதி விரண பைரவி

சீ

சீதக்கடுப்பிற்கு - மஹா கோகிலாதி மாத்திரை.

சீதபேதிக்கு - இலவங்கப்பட்டைச் சூரணம், இசுபகோல் உமிச்சூரணம், இசுபகோல் ஊறல் கிஷாயம் வேறு, இசுபகோல் விதைச் சூரணம் வேறு.

சீதபேதிக்கு (மூலசம்பந்தமான) - மஹா கோகிலாதி மாத்திரை

சீதள தலைநோய்க்கு - சுகந்த தூபப்பொடி.

சீதள நோய்களுக்கு - அனிசூன் தீநீர், யாஷ்டி மதுராதிச் சூரணம்

சீதள வியாதிகளுக்கு - சீதள நோய்களுக்கு என்பதைப் பார்க்கவும்.

சீர்ணசக்தி யதிகப்பட :- அகருதிராவகம், இராஜயோகாமிர்த குதூகலனி, இலவணச் சூரணம், கபால பலகாரி ஆமிலாதி ஹல்வா, சித்தர் மாஜூன், சொர்ணபூபதிச் சூரணம், திரியாக் ரத்தினாதி மாத்திரை, துவிதாடி மக்கனி ஷர்பத்து, துளசித்திராவகம், நாகராதி மாஜூன், பஞ்சதீபாக்கினிச் சூரணம், புதினாபானம், மேற்படி வேறு, மதுகுல்கந்து, முறப்பா குதூகலனி, ஸ்தம்பனரத்தினாதி மாத்திரை, ஜீவரக்ஷாமிர்த லவணம், ஆமில முறப்பா, அக்கினி மந்தத்திற்கு என்பதையும் பார்க்க.

சீர்ணசக்தி விருத்தியாக - சீர்ண சக்தியதிகப்பட என்பதைப் பார்க்க.

சீழ்மேகத்திற்கு - பிரமதண்ட திராவகம்.

சு

சுகநீரொழுக்கிற்கு - சுகந்திபலோயுதக மாஜுன், ராஜ ராமேஸ்வரத் தீநீர்.

சுகநீர்ப்பெருக்கிற்கு - சுகநீர்ப்பெருக்கிற்கு.

சுகநீர்ப்பெருக்கிற்கு (முஷ்டிப் பிரயோகத்தா லுண்டான) வீரியவிர்த்தி காஜர் முறப்பா.

சுகநீர்ப் பெருக்கினாலுண்டான ஆண்குறியின் சோர்விற்கு - ஆண்குறியின் சோர்விற்கு (சுகநீர்ப்பெருக்கினாலுண்டான) சுகநீர்ப்பெருக்கிற்கு ஆண்குறி பலப்பட என்பனவற்றைப் பார்க்க.

சுகந்த திரவியங்களுக்கு அநுபானம்- சம்பங்கி எண்ணெய் .

சுகந்தமுண்டாக (வாயில்) - போகாநந்த ஸ்தம்பன மாத்திரை, வாயின் நாற்றத்திற்கு என்பதையும் பார்க்க.

சுகபேதியாக - அமஸ்தாஸ் சட்னி; சீதகுமார நெய்; சுகவிரேசன நெய், சுகிர்தானந்த சிவதை மாஜுன், சுகுமாரபேதி.

சுகஸ்திதியிலிருக்க - சூரத்து நிலாவாரைப் பிரயோகம்.

சுகுமார தேகிகளுக்குப் பேதியாக - சுகபேதியாக என்பதைப் பார்க்கவும்.

சுகுமார பேதி முதலியவைகளுக்கு அநுபானங்களுக்காக- ரோஜாப்பூத் தீநீர் ஷர்பத்து

சுக்கிலவிளைவுண்டாக - (இந்திரியவிளைவுண்டாக) என்பதைப் பார்க்கவும்.

சுண்ணாம்பு விஷமித்தால்- ரோஜாப்பூ எண்ணெய்.

சுபமங்களானந்தகர முண்டாக - சுப மங்களானந்த சுரலக்ஷணி.

சுரத்தில்பேதியாக - (சுகபேதியாக) என்பதைப் பார்க்க.

சுரத்தில்பேதியாக (ரத்தக்கொதிப்பினாலுண்டான) - ராஜபேதி வேறு, மேற்படி வேறு.

சுரத்திற்கு - இலந்தைப்பாகு, இஸ்பகோல் விதைச்சூரணம், சம்பங்கி எண்ணெய், மேற்படிவேறு, சொர்ணசீனா ஷர்பத்து, துளசி ஷர்பத்து, மஹா கபால சஞ்சீவி ஷர்பத்து.

சுரத்திற்கு (இரத்தத்தினாலுண்டான) - ஆலுபுகாராபேதி ஷர்பத்து.

சுரத்திற்கு (சிலேஷ்ம) - அஷ்டிபூத ரோஜாபில்லை.

சுரத்திற்கு (சூட்டினாலுண்டான) - குளிர்ச்சி புஜூரி ஷர்பத்து, தரஞ்சபீன் பேதி ஷர்பத்து.

சுரத்திற்கு (தொந்த) சமபுஜூரி ஷர்பத்து, பித்த நிவாரணி.

சுரத்திற்கு நாட்பட்ட - நாட்பட்ட சுரத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

சுரத்திற்கு (பித்த) - (பித்த சுரத்திற்கு) என்பதைப் பார்க்க.

சுரத்திற்கு (பழைய)- சுரத்திற்கு (நாட்பட்ட) என்பதைப் பார்க்க.

சுரத்திற்கு (பித்தசிலேஷ்ம) - பித்த சிலேஷ்ம சுரத்திற்கு என்பதைப் பார்க்க.

சுரத்திற்கு (மூளையின் தாபனத்தினாலுண்டான) - ரோஜாப்பூ எண்ணெய்.

சுரத்திற்கு (விடா) - விடாசுரத்திற்கு என்பதைப் பார்க்க,

சுரத்திற்கு (விஷ) - விஷசுரத்திற்கு என்பதைப் பார்க்க.

சுறுசுறுப்புண்டாக - சூரத்து நிலாவாரைப் பிரயோகம், ஸ்திரீ கந்தாதிச்சூரணம்.

சுவாசகாசத்திற்கு - லசுண மாஜூன், மேற்படி வேறு, மேற்படி வேறு.

சுவாசத்திற்கு - அதிமதுரமாத்திரை.

சுவாசப்பை சுத்தியாக - அனிசூன் தீநீர்.

சுவாசப்பை பலப்பட - ஏலாதிச் சூரணம்.

சூ

சூடதிகரித்துண்டான விந்துநஷ்டத்திற்கு - சீதவிந்துவாதிலுபூப் லேகியம்; இந்திரிய புஷ்டியுண்டாக என்பதைப் பார்க்க.

சூடான அசுத்த சத்துகளை நீக்க - அசுத்தசத்துகள் வெளிப்பட (சூடான) என்பதைப் பார்க்க.

சூடான இரைப்பையின் துர்ப்பலத்திற்கு - இரைப்பையின் துர்ப்பலத்திற்கு (சூடான) என்பதைப் பார்க்க.

சூடான ஈரலின் துர்ப்பலத்திற்கு : ஈரலின் துர்ப்பலத்திற்கு (சூடான) என்பதைப் பார்க்க.

சூடான சுபாவமுடைய வாலிபர்களுக்கு அநுபானம்:- ஆலுபுகாரா ஷர்பத்து.

சூடான துர்நீர்களை வெளிப்படுத்த - அசுத்த சத்துகள் வெளிப்பட (சூடான) என்பதைப் பார்க்க.

சூடான தேகிகளின் ஈரலின் வரட்சிக்கு - ஈரலின் வரட்சிக்கு (சூடான தேகிகளின்) என்பதைப் பார்க்க.

சூடான தேகிகளுக்கு இலகுபேதியாக - (இலகு பேதியாக) (சூடான தேகிகளுக்கு) என்பதைப் பார்க்க.

சூடான மாசுகளை நீக்க (எரிந்துபோன)- ஆலுபுகாரா மாஜூன்.

சூடான வியாதிகளில் பேதியாக - இராஜ பேதி வேறு, மேற்படி வேறு.

சூடான வியாதிக்கு (சூட்டிற்கு) என்பதைப் பார்க்க.

சூடு, குளிர்ச்சி முதலியவைகள் சமப்பட- மஹாஜஸர் ஹல்வா.

சூட்டிற்கு - சந்தன சொர்ணாதி ஷர்பத்து, சீதகுதூகலனி, சூரத்து நிலாவாரைப் பிரயோகம், சொர்ண மஹாசீத குதூகலனி; தாமரைப்பூ எண்ணெய், திந்திரிணி ஷர்பத்து, பறந்தாதி பானம், பருப்புக்கீரை வித்து ஹல்வா, மஹா சீதகுதூகலனி, மேனா ஷர்பத்து, கசகசாப் பாயசம், பம்பா பானம், பாதாம் பருப்புப் பாயசம், மேத்தியாதி ஹல்வா.

சூட்டிற்கு (ஈரலின்) - ஏலாதி லேகியம்.

சூட்டினாலுண்டான இருதயத்தின் துர்ப்பலத்திற்கு - இருதயத்தின் துர்ப்பலத்திற்கு (சூட்டினாலுண்டான) என்பதைப் பார்க்கவும்.

சூட்டினாலுண்டான இருதயத்தின் துடிப்பிற்கு - இருதயத்தின் அதிர்ச்சிக்கு (உஷ்ணத்தினாலுண்டான) என்பதைப் பார்க்கவும்.

சூட்டினாலுண்டான இருமலுக்கு - இருமலுக்கு (சூட்டினாலுண்டான) என்பதைப் பார்க்க.

சூட்டினாலுண்டான ஈரல் நோவிற்கு - ஈரலின் நோவிற்கு, ஈரல் நோவிற்கு (சூட்டினாலுண்டான) என்பனவற்றைப் பார்க்க.

சூட்டினாலுண்டான சுரத்திற்கு - (சூட்டினாலுண்டான) என்பதைப் பார்க்கவும்.

சூட்டினாலுண்டான மார்பு துடித்தலுக்கு - சூட்டினாலுண்டான இருதயத்தின் துடிப்பிற்கு என்பதைப் பார்க்க.

சூதகக் கட்டிற்கு - கொங்கார மலரெண்ணெய், சூதகபந்த சங்காரன், மேற்படி வேறு, சூதகபந்த நிவாரணி, சூதகபந்த விமோசனி, மதுகமல பானம், லசுணமாஜூன், மேற்படி வேறு, மேற்படி வேறு,

சடாமாஞ்சில் எண்ணெய், ஜலமஞ்சரி சிகாமது பானம், மேற்படி வேறு.

சூதகக்கட்டிற்கு (வாயுவினாலுண்டான) - கமூனிமாஜூன், கலிங்கமுறப்பா, சூதகக் கட்டிற்கு என்பதையும் பார்க்க.

சூதக ஜன்னிக்கு- கலிங்காதிக் குழம்பு, கொங்கார மலரெண்ணெய், சூதகக் கட்டிற்கு என்பதையும் பார்க்க.

சூதகபந்தத்திற்கு - (சூதகக்கட்டிற்கு) என்பதைப் பார்க்க.

சூதகபந்தத்திற்கு (சூட்டினாலுண்டான)- சூதகபந்த நிவாரணி.

சூதகபந்தத்தினாலுண்டான இசிவிற்கு- இசிவிற்கு (சூதக பந்தத்தினாலுண்டான) ;சூதகக் கட்டிற்கு என்பனவற்றையும் பார்க்க.

சூதகப் பெருக்கிற்கு - கஹரூபாச் சூரணம், காந்தாதி மாத்திரை, ரத்த சிராவகரோக நிவாரணி, ஸ்திரீ குதூகல ஹல்வா, ஸ்திரீசகாய சூரணம், மதனகாமவச்சிரதண்டம்.

சூதகப்பெருக்கிற்கு (உஷ்ணத்தினாலுண்டான) - ஸ்திரீ சகாயச் சூரணம்.

சூதகவலிக்கு - சூதகபந்த சங்காரன், மேற்படி வேறு, சூதகபந்த விமோசனி, சூதகக்கட்டிற்கு என்பதைப் பார்க்க.

சூதகவாயுவிற்கு - கலிங்காதிக் குழம்பு, கலிங்காதி லேகியம், சூதகக் கட்டிற்கு என்பதைப் பார்க்க.

சூலைக்கட்டிற்கு - பிரமேக நிவாரண பீச்சு மருந்து வேறுவகைகளில், 8 -வது, 9-வதும்,

சொ

சொட்டு மூத்திரத்திற்கு - கரியுரியாதிச் சூரணம், சீமைதுத்தி விதை மாஜூன், சுகந்திபலோயுத மாஜூன், நிம்பாதி மனோரஞ்சித பானம், ஸ்தம்பனமாத்திரை,

சொர்ப்பன ஸ்கலிதத்திற்கு - இராஜராமேஸ்வரத் தீநீர், கமுகுரத்தினாதிச் சூரணம், சொர்ப்பன ஸ்கலித நிவாரணி, மேற்படி வேறு, மேற்படி வேறு.

சொறிக்கு :- சொறி சிரங்கிற்கு என்பதைப் பார்க்கவும்.

சொறி சிரங்கிற்கு :- ஆவாரைத்திரிபலாதி லேகியம், தரா இலைக் கியாழம், நிம்பப்பட்டைத் திராவகம், வேப்பம்பூத் திராவகம்.

சோ

சோம்பல் நீங்க:- சுறுசுறுப்புண்டாக என்பதைப் பார்க்கவும்.

ஞா

ஞாபகசக்தி யதிகப்பட :- அதிபோகரோக நிவாரணபாயசம், மேற்படி வேறு, கபாலவைரவம், கருஞ்சீரக ஜவாரிஷ், சூரத்து நிலாவாரைப் பிரயோகம், துளசித்திராவகம்.

ஞாபகவிருத்தியாக :- ஞாபக சக்தி யதிகப்பட என்பதைப் பார்க்கவும்.

த

தந்தவாயுவிற்கு :- தந்தனாதி தந்தப்பொடி, சுகந்த தந்தப்பொடி, முத்தூள் தந்த சுகந்தப்பொடி.

தந்திமேகத்திற்கு :- பிரமதண்ட திராவகம்.

தம்பனசக்தியுண்டாக:- இந்திரியம் கெட்டிப்யட என்பதைப் பார்க்க

தலைசுழற்றலுக்கு :- கபாலோஷ்ண சாந்தபாயசம்வேறு வகைகளில் மூன்றாவது, குல்கந்து, பாளிதாதி ஹல்வா, இரசித கபால வீரிய விர்த்தினி, கஸ்தூரிமஸ்தக ரக்ஷணி.

தலைநோய்க்கு :- சாம்பிராணித் தைலம், சீனாசஞ்சீவிச் சூரணம், சுகந்ததூபப்பொடி, சுகுமார திரிபலாதி பரமௌஷதம், பனப்ஷா ஷர்பத்து, புஷ்பாதிமாஜூன், மட்டிப்பால் தைலம், றேவல் சீனி சிகாமதுபானம்.

தலைநோய்க்கு (இருதய வியாதி சம்பந்தமான) :- ஆத்மாரக்ஷாபானம்.

தலைநோய்க்கு (இரைப்பை வியாதிசம்பந்தமான) :- இருதயரோக நிவாரணி.

தலைநோய்க்கு (குளிர்ச்சியினாலுண்டான) :- திராக்ஷாதி மாத்திரை, தலைநோய்க்கு என்பதையும் பார்க்க.

தலைநோய்க்கு (சுரத்துடன் கூடின):- இஸ்பகோல் விதைச்சூரணம், கொத்துமல்லி விதைச்சூரணம் வேறு.

தலைநோய்க்கு (சூட்டினாலுண்டான):- அதியிரத்தரோக நிவாரணி, இலந்தை யூறல் கிஷாயம், சரோக ருக ஷர்பத்து, சீதபரமௌஷதம், தாமரைப்பூ எண்ணெய்,திராக்ஷாதி மாத்திரை.

தலைநோய்க்கு (நாட்பட்ட) :- ஆத்மரக்ஷாத் திராவகம்.

தலைநோய்க்கு (பித்த சம்பந்தமான) :- சுகாதார மாஜூன்.

தலைநோய்க்கு (மண்ணீரல் வியாதி சம்பந்தமான) :- ஆத்மரக்ஷா பானம்.

தலைநோய்க்கு (மயக்கத்துடன் கூடின) :- கொத்துமல்லி விதைச் சூரணம், வேறு.

தலைநோய்க்கு (வண்டலினா லுண்டான) :- காரிகியூன் மாத்திரை.

தலைமயிர் வளர :- அளகரக்ஷணியத் தைலம், சுகநாத விந்தாதி குந்தளபோஷக தைலம், கேசோசிததைலம், சிரோருகாபி விர்த்தி எண்ணெய்.

தலைமூளை, இருதயம் இவை பலப்பட:- இருதயம், மூளை, இவை பலுப்பட என்பதைப் பார்க்க.

தலைமூளை, இருதயம், ஈரல், இரைப்பை இவை பலப்பட:- சந்தேக நிவாரணோர்ச் சாகரணி, இரா ஜ உறுப்புகள் பலப்பட என்பதையும் பார்க்க.

தா

தாகத்திற்கு:- இரசித ஆமில ஷர்பத்து, இலந்தைப்பானம் வேறு, இலந்தைப்பாகு, கொங்கார ரோஜாபில்லை, சந்தனஷர்பத்து வேறுவகை, பத்ம குல்கந்து.

தாகத்திற்கு (மதுமேகத்தினா லுண்டான):- மதுமேகபில்லை மாத்திரை, மேற்படி வேறு.

தாகத்திற்கு (வரட்சியினாலுண்டாம்):- காகுவிதை மாத்திரை, சல்லாத்து விதை ஷர்பத்து.

தாகத்திற்கு (விஷசுரத்திற் காணும்) :- சந்தனபில்லைமாத்திரை.

தாது நஷ்டத்திற்கு :- (தாது புஷ்டியுண்டாக) என்பதைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு:- (ஆசனப்புணர்ச்சி செய்து கொள்வதினா லுண்டான):- கடுங்காவலில் வைத்தல், வியசனமுண்டாக்குதல், துன்பப்படுத்தல், பயமுறுத்தல், அவமானப்படுத்தல் முதலியவைகளினா லப்பழக்கத்தை நிறுத்த முயல்வதுடன், கபபேதிக்குக் கொடுத்து, கபநீரை வெளிப்படுத்துவதினாலும், பனப்ஷா எண்ணெயில் நனைத்த திரியை ஆசனத்தில் செலுத்தி வைத்து வருவதினாலும், ஆண்குறி பலப்பட என்பதிலுள்ளவைகளில் சமயோசிதமாய் உள்ளும் புறமும் உபயோகித்து வருவதினாலும் நீக்கவேண்டும்.

தாது நஷ்டத்திற்கு (ஆசனப்புணர்ச்சியினாலுண்டான) :- தாது நஷ்டத்திற்கு ஆசன புணர்ச்சி செய்து கொள்வதினாலுண்டான என்பதைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (ஆண்குறியில் கபநீரிறங்கி யுண்டாகும்) :- இந்திரிய வீரிய லேபனம், ஆண்குறி பலப்பட என்பதையும் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (ஆண்குறியில் வாதரோகங் கண்டுண்டான) :- மேற்படி.

தாது நஷ்டத்திற்கு (ஆண்குறியின் நரம்புகளின் வியாதியினா லுண்டான) :- மேற்படி.

தாது நஷ்டத்திற்கு (ஆண்குறியைப் பற்றின) :- மேற்படி

தாது நஷ்டத்திற்கு (இடையில் வெகுநாள் போகத்தை விட்டதினாலுண்டான) :- இரத்தவிருத்தி யுண்டாக; தாதுபுஷ்டியுண்டாக, ஆண்குறி பலப்பட, என்பனவற்றைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (இந்திரிய இழிவினாலுண்டான) :- சிற்றண்ட பஸ்பம், நித்தியானந்த வித்துரும பஸ்பம், பறங்கிபந்தன சூரணம், இந்திரிய இழிவிற்கு, ஆண்குறி பலப்பட என்பனவற்றையும் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (இந்திரிய நரம்புகளில் வலிப்புண்டா வதினால் இந்திரிய இழிவுண்டாகி அதனால் நேரிட்ட) -மேற்படி.

தாது நஷ்டத்திற்கு (இரத்தக்குறைவினால் ஆண்குறி தளர்ந்துண்டான) :- இரத்தவிருத்தி யுண்டாக, தாது புஷ்டியுண்டாக, ஆண்குறி பலப்பட என்பனவற்றைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (இரத்தம் அதிகரித்து, துரிதகஸ்கலிதம் உண்டாகி யுண்டான) :- அது உண்டான காரணத்தை நீக்குவதுடன், இரத்தக் கொதிப்பிற்கு என்பதிலுள்ளவைகளை யுபயோகிக்கலாம்.

தாது நஷ்டத்திற்கு (இரத்தக்குறைவினாலுண்டான):- இரத்தவிருத்தி யுண்டாக, தாது புஷ்டியுண்டாக, இந்திரியபுஷ்டி யுண்டாக என்பனவற்றைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (இராஜ கருவிகளைப் பற்றிய) :- முன்னர் எந்த உறுப்பு வியாதியினாலதிகமாய் பீடிக்கப் பட்டிருக்கிறதோ அதற்கு சிகிச்சை செய்யவும்; பின்பு, இராஜஉறுப்புகள் பலப்பட; தாதுபுஷ்டி யுண்டாக என்பனவற்றி லுள்ளவைகளை யுபயோகிக்கவும்.

தாது நஷ்டத்திற்கு (இருதயத்தைப் பற்றின):- திரிதோஷ நிவாரணபலகாரி மாஜூன், தேவகிருபா ஜவாரிஷ், இருதயத்தின் துர்ப்பலத்திற்கு; இருதயத்தின் ரோகத்திற்கு என்பனவற்றையும் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (இருதய பலஹீனத்தினாலுண்டான) :- மேற்படி.

தாது நஷ்டத்திற்கு (ஈரல் பலஹீனத்தினாலுண்டான):- இரைப்பை பலப்பட, ஈரல் பலப்பட, தாதுபுஷ்டியுண்டாக என்பனவற்றைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (குண்டிக்காய்களைப் பற்றிய):- மூத்திர குண்டிக்காய்களின் நோய்களுக்கு, குண்டிக்காய்களின் துர்ப்பலத்திற்கு, தேகங்கொழுக்க என்பனவற்றைப் பார்க்கவும்.

தாது நஷ்டத்திற்கு (குளிர்ச்சியாகிய தண்ணீரிலடிக்கடி நிற்க நேரிடுவதினால் ஆண்குறி தளர்ந்துண்டான):- வியாதி நேரிட்ட காரணத்தை நீக்கவும். ஆண்குறி பலப்படஎன்னும் முறைகளில் தக்கவைகளைச் செய்யவும்.

தாது நஷ்டத்திற்கு (சிலேஷ்மலோஷ மதிகரித்துண்டான):- இலவங்கப்பட்டைச் சூரணம், இலவங்கப்பட்டை மாத்திரை, ஏலாதித் தீநீர், இன்னும் இவைபோல்வன, இந்திரியவிளைவுண்டாக, தாதுபுஷ்டியுண்டாக என்பனவற்றையும் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (சுக்கிலமுறைந்துண்டான) :- உஷ்ண புஜூரி ஷர்பத்து, குளிர்ச்சி புஜூரி ஷர்பத்து,சமபுஜூரி ஷர்பத்து, மேதாபிவிர்த்தி ஸ்தூல மாஜூன், விந்தாதி மாஜூன்.

தாது நஷ்டத்திற்கு (சொப்பன ஸ்கலித மதிகரித்துண்டான) இலவங்கப்பட்டைமாத்திரை, ஏலாதித்தீநீர், கமுகுரத்னாதிச் சூரணம், காகுவிதைச் சூரணம், மேற்படி மாத்திரை, மேற்படி ஷர்பத்து, கொத்துமல்லிவிதைப் பிரயோகங்கள், சொப்பனஸ்கலித நிவாரணி, மேற்படி வேறு, மேற்படி வேறு, பருப்புக்கீரை விதைப் பிரயோகங்கள், நாகராதிபோகவிருத்தி ஹல்வா,இந்திரியங் கெட்டிப்பட என்பதைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (துரிதஸ்கலிதத்தினாலுண்டான) உஷ்ணஸ்கலித பந்தினி, மேற்படி வேறு, தாடிமத்தாம மாஜூன், தாதா மாஜூன், துரிதஸ்கலித நிவாரணி, தோகை தீக்ஷணாதிமாஜூன், மண்டூரகஸ்தூரி ஜவாரிஷ், மண்டூராதி மாஜூன், மண்டூராதி ஷர்பத்து, ஸ்தம்பன மாத்திரை, துரிதஸ்கலிதத்திற்கு என்பதைப் பார்க்க.

தாதுநஷ்டத்திற்கு (தேகத்தின் கீழ்ப்பாகத்தில் ஆவி குறைந்த அளவாய் உண்டாவதினால் நேரிடும்):- இலந்தைப்பானம் வேறு, இந்திரியவிளைவுண்டாக, தாதுபுஷ்டியுண்டாக, ஆண்குறி பலப்பட என்பனவற்றையும் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (நெடுநாள் வரையில் போகிக்காததினால் ஆண்குறி தளர்ந்துண்டான):- ஆண்குறி பலப்பட என்பதைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (பனிக்கட்டி அல்லது குளிர்ச்சியான வஸ்துவின்மேல் உட்கார்ந்ததினால் ஆண்குறி தளர்ந்துண்டான) :- ஆண்குறி பலப்பட என்பதைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (பித்த் தோஷ மதிகரித்துண்டான)- பித்தத்திற்கு, தாதுபுஷ்டியுண்டாக என்பனவற்றைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (பிரமேக வியாதியாலுண்டான):- பிரமேகவியாதிக்கு, தாதுபுஷ்டியுண்டாக என்பனவற்றைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (மனதிற்கு நேரிடும் சங்கடத்தினாலுண்டான) - சந்தேக நிவாரணோர்ச்சாக கரணி; இருதயம் பலப்பட என்பதைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (முஷ்டிப் பிரயோகத்தினாலுண்டான) - முஷ்டிப்பிரயோகத்தினாலுண்டான கோசச் சோர்விற்கு, ஆண்குறி பலப்பட, தாது புஷ்டியுண்டாக, என்பனவற்றைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (மூளையைப் பற்றின) :-மூளைப்பலப்பட, தாது புஷ்டியுண்டாக என்பனவற்றைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (மேகசம்பந்தமான) :- மேகவியாதிக்கு, தாது புஷ்டியுண்டாக என்பனவற்றைப் பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (வாததோஷ மதிகரித்துண்டான) - வண்டலை சாந்தப்படுத்தும் பதார்த்தங்கள், வண்டலைப்பக்குவப்படுத்தும் பதார்த்தங்கள், வண்டல் விரேசனி, வாதநோய்களுக்கு, தாதுபுஷ்டியுண்டாக என்பனவற்றைப் பார்க்கவும்.

தாது நஷ்டத்திற்கு (விந்துவில் குளிர்ச்சி யதிகரித்துண்டான) - நாகராதிபோக விருத்திலேகியம், மஹரலுபூப் லேகியம், மதன விந்தாதி மாஜூன்.

தாது நஷ்டத்திற்கு (விந்துவில் கொழுமையதிகரித்துண்டான):- இலவங்கப்பட்டை, சீரகம் இவற்றின் பிரயோகங்கள்.

தாது நஷ்டத்திற்கு (விந்தில் சூடதிகரித்துண்டான)- காகுவிதை,பருப்புக்கீரைவிதை, வெள்ளரிவிதை; முதலிய இவற்றின் பிரயோகங்கள்.

தாது நஷ்டத்திற்கு (விந்திழிவினாலுண்டான) :- இந்திரிய இழிவிற்கு, தாதுபுஷ்டியுண்டாக என்பனவற்றை பார்க்க.

தாது நஷ்டத்திற்கு (விந்துவின் சக்தி குறைந்துண்டான)- இந்திரிய புஷ்டியுண்டாக என்பதைப் பார்க்க.

தாதுநஷ்டத்திற்கு (விந்து தெளிந்துண்டான):- இந்திரியம் கெட்டிப்பட என்பதைப் பார்க்கவும்.

தாது நஷ்டத்திற்கு (ரூபவதியாகிய ஓர் ஸ்திரீயின் மேலேயே மோகித்திருப்பதினால் வேறு ஸ்திரீகளிடத்தில் போகிக்க இச்சையற் றுண்டாகும்) - மனதிற்கு நேரிட்ட சங்கடத்தினாலுண்டான தாதுநஷ்டத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

தாது புஷ்டியுண்டாக:- உசித மாஜூன், கண்ணியாதிச் சூரணம், கரியுரியாதிச் சூரணம், கஸ்தூரி சுகந்த சந்தனம், மேற்படிவேறு, காவுஜூபான் பானம் வேறு, காஜர் திராவகம், குர்ச்சித மாஜூன், சதானந்த நிர்விஷா மாத்திரை, சீமையத்திப்பழ ஷர்பத்து, சீமை துத்திவிதைச் சூரணம், சீமை நறுவிலிப்பழ லேகியம், சுல்தானி அகருதைலம், ஞானாபிவிர்த்தி சொர்ணமனோரஞ்சிதம்,தவாவுத் தரஞ்சபீன், தாம்பூல பரிமள சுண்ணக்கலவை, தாம்பூல பரிமள மாத்திரை, மேற்படி வேறு, திராக்ஷாதி மாஜூன், திரிதோஷ நிவாரண பலகாரி மாஜூன் வேறு, தேவகிருபா ஜவாரிஷ், நிம்பப்பத்திரி லேகியம், மனோரஞ்சித ஜஸர் ஹல்வா, மஹாஜஸர் இருதய பலகாரி, முத்தாதி ரத்தின பலகாரி மாத்திரை, மூத்திரகண்ட பலகாரி, மூத்திரபிண்டபலகாரி, பால்ஹல்வா, ராஜானந்தயோக போகவிருத்தி குதூகலனி, ஸ்தம்பன ரத்தினாதி மாத்திரை, ஷஷ்வர்ண காஜர் மிட்டாய், ஜாலினியூஸ் சஞ்சீவிஷர்பத்து, ஜீவரக்ஷாமிர்த லவணம்.

தி

திமிர் வாதத்திற்கு:-சுக்கில விருத்தி லேகியம்.

தாது விருத்தியுண்டாக :- தாதுபுஷ்டியுண்டாக என்பதைப் பார்க்க.

தீ

தீபன சக்தி யதிகப்பட :- அகரு திராவகம், துவிதாடி மக்கினி ஷர்பத்து, புதினா பானம், மேற்படி மதுகமல பானம், நாகராதிபோக விருத்திஹல்வா, பசிதீபன மதிகப்பட என்பதையும் பார்க்க:

தீபன சக்தி யுண்டாக - பசிதீபன முண்டாக என்பதைப் பார்க்கவும்.

தீபாக்கினி யதிகப்பட:- தீபனசக்தி யதிகப்பட என்பதைப் பார்க்க.

தீராத வாந்திக்கு :- கொத்துமல்லி விதைக் கிஷாயம்.

து

துரிதஸ்கலிதத்திற்கு - அத்தியானந்த வித்துரும பஸ்பம், இராஜ பராக்கிரம போகவிருத்தி மாஜுன், உஷ்ண ஸ்கலித பந்தினி, மேற்படி வேறு, கண்ணியாதிச் சூரணம், கரியுரியாதிச் சூரணம், குர்ச்சித மாஜுன், சதானந்த நிர்விஷா மாத்திரை, தாடிமத்தாம மாஜுன், தாதா மாஜுன், தாத்துராதி மாத்திரை, துரிதஸ்கலித நிவாரணி; தோகை தீட்சணாதி மாஜுன், பறங்கி பந்தன சூரணம், மண்டூரகஸ்தூரி ஜவாரிஷ், மண்டூராதி மாஜுன், மண்டூராதி ஷர்பத்து, மனோரஞ்சித ஜஸர் ஹல்வா, ம்ஹாமேதோரி மாஜுன், மாஷாதி ஹல்வா, மிஸ்ரியாதிச் சூரணம், மூத்திரபிண்ட பலகாரி பால் ஹல்வா, ஸ்தம்பன ரத்தினாதி மாத்திரை, அமிர்த விந்துவாதி லேகியம். மஹா அமிர்த விந்துவாதி லேகியம்.

துரிதஸ்கலிதத்திற்கு (உஷ்ணத்தினாலுண்டான) :- உஷ்ண ஸ்கலித பந்தனி, துரிதஸ்கலிதத்திற்கு என்பதையும் பார்க்க.

துர்நீர்களை நீக்க :- அசுத்த மாசுகள் வெளிப்பட என்பதைப் பார்க்க.

துர்நீர்களை வெளிப்படுத்த (இரைப்பையிலுள்ள):- அசுத்தமாசுகள் வெளிப்பட (இரைப்பையிலுள்ள) என்பதைப் பார்க்கவும்.

துர்நீர்களை வெளிப்படுத்த (குளிர்ச்சியான) -அசுத்த மாசுகள் வெளிப்பட (குளிர்ச்சியான) என்பதைப் பார்க்க.

துர்நீர்களை வெளிப்படுத்த (சூடான) அசுத்தமாசுகள் வெளிப்பட (சூடான) என்பதைப் பார்க்க.

துர்நீர்களை வெளிப்படுத்த (மூவகை) - அசுத்த மாசுகள் வெளிப்பட என்பதைப் பார்க்கவும்.

துர்ப்பலத்திற்கு - இராஜ விக்ரம ஷர்பத்து வேறு, சீனா சஞ்சீவிச் சூரணம், தேகபலமுண்டாக என்பதையும் பார்க்கவும்.

துர்ப்பலத்திற்கு (குண்டிக்காய்களின்) - குண்டிக்காய்களின் துர்ப்பலத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

துர்ப்பலத்திற்கு (சுரத்தினாலுண்டான) - வேப்பம் பட்டைக் கிஷாயம், தேகபலமுண்டாக என்பதையும் பார்க்கவும்.

துர்ப்பலத்திற்கு (பெரும்பாட்டினாலுண்டான) - காந்தாதி மாத்திரை, ஸ்திரீ சகாயச் சூரணம், தேகபலமுண்டாக என்பதையும் பார்க்கவும்.

துர்ப்பலத்திற்கு (போகத்திற்குப் பின் உண்டாகும்):... மதுகமல பானம், தேகபல முண்டாக என்பதையும் பார்க்க.

துர்ப்பலத்திற்கு (மிதமிஞ்சின போகத்தினாலுண்டான) அதிபோக ரோக நிவாரண பாயம், மேற்படி வேறு, ஆங்கார மாங்கிஷத்தீநீர், இராஜ ராமேஸ்வரத் தீநீர்.

துர்மலங்களை நீக்க (இரைப்பையிலுள்ள) :- அசுத்த சத்துகள் வெளிப்பட (இரைப்பையிலுள்ள) என்பதைப் பார்க்கவும்.

துர்மலங்களை நீக்க (வயிற்றிலுள்ள):- அஷ்டிபூத ரோஜாப்பில்லை, அசுத்த மாசுகள் வெளிப்பட என்பதையும் பார்க்கவும்.

தெ

தெவிட்டலுக்கு- தரஞ்சபீன் பேதி ஷர்பத்து.

தே

தேக அழலைக்கு :- தேக உஷ்ணத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

தேக ஆரோக்கியமுண்டாக - ஆமோதானந்த மதன காமபில்லை, சந்தன ஆமில ஷர்பத்து, சம்பங்கி எண்ணெய், மேற்படி வேறு, மதனாலங்கிருத சுகந்தபில்லை.

தேக உஷ்ணத்திற்கு: சம்பங்கியெண்ணெய், மேற்படி வேறு, தேக ஆரோக்கிய எண்ணெய்.

தேக காந்தியுண்டாக- காவுஜூபான் தீநீர் வேறு.

தேகங்குளிர- சந்தன ஷர்பத்து.

தேகங் கொழுக்க- கபாலோஷ்ண சாந்த பாயசம், காஜர்மிட்டாய், சூரத்து நிலாவாரைப் பிரயோகம், பருப்புக்கீரை விந்து ஹல்வா, மஹா காஜர் பானம், ராஜகெம்பீர போகவிர்த்தி மாஜூன்;

தேக துர்ப்பலத்திற்கு - துர்ப்பலத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

தேகத்திலுள்ள துர்நீர்கள் நீங்க- நிம்ப பத்திரி லேகியம் அசுத்த மாசுகள் வெளிப்பட என்பதைப் பார்க்கவும்.

தேகத்திலுள்ள மாசுகள் நீங்க- அசுத்த மாசுகள் வெளிப்பட என்பதையும் பார்க்கவும்.

தேகத்தில் சுபாவச் சூடு விர்த்தியாக - காவுஜூபான் தீநீர் மேற்படி வேறு.

தேகத்திறன் அழுக்கு நீங்கி, வஜீகரமுண்டாக - தேகவஜீகர முண்டாக என்பதைப் பார்க்கவும்.

தேகத்தின் அழலைக்கு - அழலைக்கு என்பதைப் பார்க்கவும்.

தேகத்தின் கீழ்ப்பாகங்களின் வியாதிகளுக்கு- இலந்தைப் பானம் வேறு.

தேகபலமுண்டாக- ஆமோதானந்த மதன காமபில்லை, இராஜராமேஸ்வரத் தீநீர், ஏலாதிச் சூரணம், காவுஜுபான் தீநீர் வேறு, சத்தாதி மாஜூன், சீத குதூகலனி, சூரத்து நிலாவாரைப் பிரயோகம், சொர்ணமஹா சீத குதூகலனி, தேவகிருபாஜவாரிஷ், தேன் பானம், மதனாலங்கிருத சுகந்தபில்லை, மஹா சீதகுதூகலனி

தேக புஷ்டியுண்டாக- (தேகங் கொழுக்க) என்பதைப் பார்க்கவும்.

தேகம் பூரிக்க- அதிபோக ரோக நிவாரண பாயசம், மேற்படி வேறு, தேகபுஷ்டியுண்டாக என்பதையும் பார்க்கவும்.

தேகம் பெருக்க- சூரத்து நிலாவரைப் பிரயோகம், தேக புஷ்டி யுண்டாக என்பதையும் பார்க்கவும்.

தேகம் மறத்திருப்பதற்கு- அப்திமூன் கியாழம், அப்திமூன் சிகாமதுபானம், மேற்படி வேறு அப்திமூன் மாஜூன்.

தேகவரக்ஷிக்கு - தேக ஆரோக்கிய எண்ணெய்.

தேக வஜீகரமுண்டாக- ஆமோதானந்த மதன காமபில்லை, மதனாலங்கிருத சுகந்த பில்லை, மலினநிவாரண சுகந்த நலங்கீடு, மேற்படி வேறு, மேற்படி வேறு, மலீமச நிவாரண நலங்கீடு.

தேமல்களுக்கு- தேமற் படைகொல்லி, மேற்படி வேறு, மேற்படி வேறு.

தேள் விஷத்திற்கு - இலவங்கப்பட்டை எண்ணெய்.

தேஜஸ் உண்டாக - சொர்ண பூபதிச் சூரணம், சொர்ண மஹாசீத குதூகலனி, நிம்பப்பட்டைத் திராவகம், வேப்பம்பூத் திராவகம்.

தை

தைரிய முண்டாக - முத்தாதி ரத்தின பலகாரி மாத்திரை, இருதயத்தின் துர்ப்பலத்திற்கு - என்பதையும் பார்க்கவும்.

தொ

தொண்டை எரிச்சலுக்கு - பேதானா சர்பத்து.

தொண்டை வரக்ஷிக்கு -சீமை நறுவிலிப்பழப் பிரயோகம், பேதானாபானம், மேனா ஷர்பத்து.

தொண்டையின் விக்கத்திற்கு:- இலந்தைப்பாகு, சரக்கொன்றைப் புளிச்சட்னி.

தொந்த சுரத்திற்கு - சுரத்திற்கு (தொந்த) என்பதைப் பார்க்கவும்.

தொந்த ரோகங்களுக்கு - கஷூஸ் சர்பத்து, சீனாசிகாமது பானம், சொர்ண சீனாசர்பத்து வேறு.

தொந்த வியாதிகளைத் தடுக்க- காவுஜூபான் பானம், சுகந்த தூபப்பொடி, துளசி ஷர்பத்து, மஹாசுகந்த தூபப்பொடி.

ந

நடுக்கலுக்கு- அஸ்மரிரோக நிவாரணி, ஆத்மரக்ஷாத் திராவகம், இராஜயோகாமிர்த குதூகலனி வேறு, இருதயோச்சித குதூகலனி, கோசரோகஹரி எரிமுகி ஹல்வா வேறு.

நடுக்கலுக்கு (குளிர்ச்சியினாலுண்டான) :- லசுணமாஜூன், மேற்படி வேறு, மேற்படி வேறு.

நடுக்கலுக்கு (கைகாலின்)- இலவங்கப்பட்டை எண்ணெய்

நடுக்கல்ரோகத்திற்கு - நடுக்கலுக்கு என்பதைப் பார்க்கவும்.

நடுக்கு வாதத்திற்கு - நடுக்கலுக்கு என்பதைப் பார்க்கவும்.

நடுக்கல் வியாதிக்கு - நடுக்கலுக்கு என்பதைப் பார்க்கவும்.

நமைச்சலுக்கு- (சொரி சிரங்கிற்கு) என்பதைப் பார்க்கவும்.

நரம்புகளிலுள்ள (அசுத்த மாசுகள்) நீங்க- அசுத்த மாசுகள் வெளிப்பட (நரம்புகளிலுள்ள) என்பதைப் பார்க்கவும்.

நரம்புகளின் நோய்களுக்கு- தீவிராபிவிர்த்தி அமிர்தாதிலுபூப்.

நரம்புகளின் நோய்களுக்கு (குளிர்ச்சியினாலுண்டான) - மஹா மதுபானம்.

நரம்புகளின் ரோகங்களுக்கு - நரம்புகளின் நோய்களுக்கு என்பதைப் பார்க்கவும்.

நரம்புகள் பலப்பட - இராஜவீரிய மாஜூன், சந்தானந்த நிர்விஷா மாத்திரை, போகானந்த ஸ்தம்பன மாத்திரை, ராஜகெம்பீர போகவிர்த்தி மாஜூன், ராஜாநந்தபோக விருத்தி குதூகலனி, கஸ்தூரிமஸ்தக ரக்ஷணி, திலா எண்ணெய், பார்லி அரிசிசலம், பூண்டுப் பாயசம், பூண்டுத் தைலம், மைனதிலா, வேறு திலா எண்ணெய்.

நல்லிரத்தமுண்டாக - சொர்ண பூபதிச் சூரணம், திராக்ஷப் பழ சர்பத்து, கிரிஞ்சனஹல்வா, நாராயணி விந்துவாதி லேகியம், இரத்த சுத்தியுண்டாக, இரத்த விர்த்தியுண்டாக என்பனவற்றையும் பார்க்கவும்.

நா

நாக்குத் தடிப்பிற்கு - சந்தன மாத்திரை.

நாக்குழரலுக்கு- லசுணமாஜூன், மேற்படி வேறு.

நாட்பட்ட சுரத்திற்கு - அஸ்மதிரோக நிவாரணி, அஷ்டி பூத ரோஜாபில்லை, இருதயோச்சித குதூகலனி, சூரத்து நிலாவாரைப் பிரயோகம், சோம்புச் சூரணத்தைத் தேனில் சாப்பிடுதல், தாமரைத் தீநீர், நிம்பாதி மனோரஞ்சித பானம், பில்லை மாத்திரை, வேப்பம் பட்டைக் கிஷாயம், ஜடமாஞ்சில் பானம்.

நாபி விஷமித்தால் - விஷநிவாரணி.

நாவரட்சிக்கு- இலந்தைப்பாகு, சந்தனபில்லை மாத்திரை.

நாவின் தளர்ச்சிக்கு-சித்தர்மாஜூன், பரமௌஷதம், மதுகுல்கந்து.

நி

நித்திரை யில்லாமைக்கு- இராஜவிக்கிரம ஷர்பத்து, கபாலோஷ்ண சாந்த பாயசம், கபாலோஷ்ண சாந்த பாயசம், வேறுவகைகளில் மூன்றாவது, தாமரைப்பூ எண்ணெய், வித்தாதியுஷ்ணசாந்த தைலம், ஊஷ்ண சாந்த கபாலரக்ஷணி, ஊஷ்ண நிவாரணி.

நித்திரையுண்டாக - நித்திரை இல்லாமைக்கு என்பதைப் பார்க்கவும்.

நிர்நிமித்த பயத்திற்கு :- அரிச்சந்தன ஷர்பத்து, மஹாராஜசௌரிப ஷர்பத்து, இருதயத்தின் துர்ப்பலத்திற்கு, என்பதையும் பார்க்க.

நீ

நீரடைப்பிற்கு:- அஸ்மரிரோக நிவாரணி, இஸ்பகோல் ஊறல் கியாழம், உச்சிதாதி ஷர்பத்து, கமூனிமாஜூன், கல்லடைப்பு நிவாரணை, கல்லடைப்பு மாஜூன், காஜர்மிட்டாய், கியாரையின்பில்லை மாத்திரை, சமபுஜூரி ஷர்பத்து, சூதகபந்த நிவாரணி, சொர்ண சீனா ஷர்பத்து, சொர்ணஜல மஞ்சரிமாஜூன், தாடி மக்கினி ஷர்பத்து, (தித்திப்பு) நீரடைப்பிற்குப் பற்று, பருப்புக்கீரை வித்து ஷர்பத்து, பிரமேக நிவாரணி ஷர்பத்து, புஜூரி ஷர்பத்து, மதுகமலபானம்,

மதுகுல் கந்து, மேகசஞ்சீவி எண்ணெய்; பூதாதிச் சூரணம், லசுண மாஜூன், மேற்படிவேறு மேற்படி வேறு, வெள்ளரிவிதைச் சூரணம், வெள்ளரிவிதை ஷர்பத்து, ஜடாமாஞ்சில் எண்ணெய் ஆர்த்திரக முறப்பா, மேதாபி விர்த்தி ஸ்தூப மாஜூன்.

நீராமைக்கு- கலிங்காதிக் குழம்பு

நீரெரிச்சலுக்கு- இஸ்பகோல் ஊறல்கிஷாயம், கியாரையின் பில்லைமாத்திரை, சீமை துத்தித்நீர், பிரமேகரோக நிவாரண சர்பத்து. பேதானா சர்பத்து, மேகசஞ்சீவி எண்ணெய், வெள்ளரிவிதை சர்பத்து, சூஸாதி சர்பத்து.

நீரேற்றத்திற்கு -ஸ்தம்பன ரத்தினாதி மாத்திரை.

நீரையதிகப்படுத்த:- நீரடைப்பிற்கு என்பதைப் பார்க்கவும்.

நீரைத்தடுக்க (கண்ணிலிருந்து வடியும்)- காவலதிபதி மாத்திரை.

நீரைப்பெருக்க:- நீரடைப்பிற்கு என்பதைப் பார்க்கவும்.

நீரழிவிற்கு:- அதிமூத்திர ரோகத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

நீரொழுகிற்கு :- கபிதாதி மாஜூன், நீரிழிவிற்கு என்பதைப் பார்க்கவும்.

நீர்க்கட்டிற்கு:- நீரடைப்பிற்கு என்பதைப் பார்க்கவும்.

நீர்க்கட்டிற்கு :- (குளிர்ச்சியினாலுண்டான) - இலவங்கப்பட்டைச் சூரணம்.

நீர்க்குண்டிக்காய்களின் துர்ப்பலத்திற்கு - குண்டிக்காய்களின் துர்ப்பலத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

நீர்க்குண்டிக்காய்களின் துர்ப்பலத்திற்கு (சூட்டினாலுண்டான:- குண்டிக்காய்களின் துர்ப்பலத்திற்கு (சூட்டினாலுண்டான) என்பதைப் பார்க்க.

நீர்க்குண்டிக்காய்களின் நோவிற்கு - சித்தர் மாஜூன், சொர்ண சீனா சர்பத்து, நிம்பாதி மனோரஞ்சிதபானம், நீர்க்கட்டிற்குத் திராவகம், மஹாபாநு விரேசனி.

நீர்க்குண்டிக்காய்களின் வலிக்கு- நீர்க்குண்டிக்காய்களின் நோவிற்கு என்பதைப் பார்க்கவும்.

நீர்க்குண்டிக்காய்களின் வியாதிகளுக்கு - மூத்திரகுண்டிக்காய்களின் நோவிற்கு, குண்டிக்காய்களின் நோவிற்கு என்பனவற்றைப் பார்க்கவும்.

நீர்க்குண்டிக்காய்களின் வீக்கத்திற்கு:- குண்டிக்காய்களின் வியாதிக்கு என்பதைப் பார்க்கவும்.

நீர்க்குண்டிக்காய்கள் பலப்பட - குண்டிக்காய்களின் துர்ப்பலத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

நீர்ச்சுருக்கிற்கு - சிற்றண்ட பஸ்பம், சீதகுதூகலனி, சொர்ண மஹா சீதகுதூகலனி, மஹா சீதகுதூகலனி, மேகசஞ்சீவி எண்ணெய், யூதாதிச் சூரணம், சூஸாதி சர்பத்து.

நீர்த்துப்போன விந்து கெட்டிப்பட- மனோரதஜஸர் ஹல்வா, மூத்தாதி ரத்தின பலகாரி மாத்திரை, மூத்திர பிண்டபலகாரி, பால் ஹல்வா. இந்திரியம் கெட்டிப்பட என்பதையும் பார்க்க.

நீர்ப்பீனிசத்திற்கு - சுகந்த தூபப்பொடி, திராக்ஷாதிமாத்திரை. பீனிசத்திற்கு என்பதையும் பார்க்கவும்.

நீர்ப்பை பலப்பட - மனோரதஜஸர் ஹல்வா, மூத்திர பிண்ட பலகாரி, பால்ஹல்வா, இலகுவிந்துவாதி லூபூப்லேகியம்

நீர்ப்பையின் அழலைக்கு - அழலைக்கு (நீர்ப்பையின்) என்பதைப் பார்க்க.

நீர்ப்பையின் இரணத்திற்கு - பிரமேக இந்திரபேதி, பிரமேக நிவாரண பீச்சுமருந்து, வேறுவகைகளில் 8-வதும், 9-வதும்.

நீர்ப்பையின் சீழ்க்கட்டிற்கு - மேற்படி

நீர்ப்பையின் துர்ப்பலத்திற்கு - நீர்ப்பை பலப்பட என்பதை பார்க்கவும்.

நீர்ப்பையின் நோய்களுக்கு - சீமையத்திப்பழ சர்பத்து, சூரத்து நிலாவாரைப் பிரயோகம்.

நீர்ப்பையின் வறட்சிக்கு - கல்லடைப்பு நிவாரணை.

நீர்ப்பையின் வலிக்கு - மஹாபாநுவிரேசனை.

நீர்ப்பையின் வியாதிக்கு :- நீர்ப்பையின் நோய்களுக்கு என்பதைப் பார்க்கவும்.

நீற்றுப்போன விந்து கெட்டிப்பட:- நீர்த்துப்போனவிந்து கெட்டிப்பட என்பதைப் பார்க்கவும்.

நு

நுரையீரலின் இரணத்திற்கு :- பருப்புக்கீரை விதைச்சூரணம், பேதனா பானம்.

நுரையிரலின் புண்ணிற்கு :- நுரை ஈரலின் இரணத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

நுரைஈரலின் வறட்சிக்கு :- சீமை நறுவிலிப்பழப் பிரயோகம்

நுரையீரலின் வியாதிகளுக்கு (குளிர்ச்சியான கபத்தினாலுண்டான):- கபஹாரிமாத்திரை.

நுரையீரலின் வீக்கத்திற்கு :- சரோருகசர்பத்து, தாமரைத் திராவகம்.

நெ

நெஞ்செரிச்சலுக்கு - திராக்ஷாதி பானம்.

நெடுநாட் சுரத்திற்கு - நாட்பட்ட சுரத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

நெடுநாள் தலைநோய்க்கு - ஆத்மரக்ஷாத் திராவகம், இருதயோச்சித குதூகலனி.

நோ

நோவிற்கு :- ரோஜாப்பூ எண்ணெய்.

ப

பக்க நோவிற்கு :- சரக்கொன்றைப்புளி சட்னி, பனப்ஷாபானம், வாதநோய்களுக்கு என்பதையும் பார்க்கவும்.

பசிதீபனக் குறைவிற்கு- பசிதீபனமதிகப்பட என்பதைப் பார்க்கவும்.

பசிதீபன கெடுதிக்கு - பசிதீபனமதிகப்பட என்பதைப் பார்க்கவும்.

பசிதீபன மதிகப்பட - இலவங்கப்பட்டைச் சூரணம், சீனா சஞ்சீவிச் சூரணம், சொர்ண பூபதிச் சூரணம், தேசிக்காய்பில்லைகள், தேசி புதினா ஷர்பத்து, நிம்பப் பத்திரி லேகியம், ஜாலினியூஸ் சஞ்சீவி ஷர்பத்து. அக்கினி மந்தத்திற்கு, பசிதீபன சக்தியதிகப்பட, என்பனவற்றையும் பார்க்கவும்.

பசிதீபன முண்டாக:- அன்னாசய பலகாரி, அன்னாசயரக்ஷணி, ஆமிலசந்தனபானம், இலவங்கச் சூரணம், இலவங்கப்பட்டை மாத்திரை, கருஞ்சீரக மாஜூன், கருஞ்சீரக மாஜூன் வேறு, சித்தர் மாஜூன், சீமை துத்தி விதை மாஜூன், ஞானாபிவிர்த்திமனோரஞ்சிதம், திரியாக்ரத்தினாதிமாத்திரை, தேன்பானம், நாகராதி போகவிருத்தி ஹல்வா, நாகராதி மாஜூன், பரமௌஷத மாத்திரை, முறப்பா குதூகலனி, லவணாதி தீபாக்கினிச் சூரணம், விக்கிரம அன்னாசயரக்ஷணி, ஜலமஞ்சரிசிகா மதுபானம், ஜீவரக்ஷாமிர்த லவணம், அக்கினி மந்தத்திற்கு என்பதையும் பார்க்க.

பசிதீபனம் விர்த்தியாக - பசிதீபனமதிகப்பட என்பதைப் பார்க்கவும்.

பஞ்சேந்திரியங்களின் கெடுதிக்கு - பரமௌஷத மாத்திரை.

பஞ்சேந்திரியங்களின் சக்தி விர்த்தியாக - மஹாகஸ்தூரி சுகந்த எண்ணெய். மூளை பலப்பட என்பதையும் பார்க்க.

படைகளுக்கு - ரோஜாப்பூ பானம், மேகத்திற்கு, இரத்த சுத்தி யுண்டாக என்பனவற்றையும் பார்க்கவும்.

பலமுண்டாக- சூரத்து நிலாவாரைப் பிரயோகம், தேகபல முண்டாக என்பதையும் பார்க்க.

பலமுண்டாக (உறுப்புகளுக்கு) - காவுஜுபொன் தீநீர், மேற்படி வேறு. தேகபலமுண்டாக என்பதையும் பார்க்கவும்.

பலவகை கெட்ட எண்ணங்கள் உண்டாவதைத் தடுக்க:- ஜமானித் திரிபலாதி, வண்டலைப் பக்குவப்படுத்தும் கிஷாய முதலியவைகள்.

பலஹீனத்திற்கு - காஜர் பானம், தேகபலமுண்டாக என்பதையும் பார்க்க.

பல்லசைவிற்கு -தாம்பூல பரிமளமாத்திரை, மேற்படி வேறு

பல்லின் ஊத்தை நீங்க- சந்தனாதி தந்தப் பொடி, சுகந்த தந்தப் பொடி, முத்தூள்தந்த சுகந்தப்பொடி.

பல்லின் நோய்களுக்கு- திராக்ஷாதி மாத்திரை, ரோஜாப்பூ எண்ணெய்.

பழைய இருமலுக்கு- இருமலுக்கு (பழைய) என்பதைப் பார்க்கவும்.

பழைய சுரத்திற்கு - (நாட்பட்ட சுரத்திற்கு) என்பதைப் பார்க்கவும்.

பக்ஷவாத சம்பந்தமான ஆண்குறியின் வியாதிகளுக்கு: மைன லேபன திராவகம், ஆண்குறி பலப்பட என்பதையும் பார்க்க.

பக்ஷவாதத்திற்கு :- அனிசூன் தீநீர், கோசரோக ஹரி எரிமுகி ஹல்வா, மேற்படி வேறு, சித்தர் மாஜூன், பரமௌஷதம், மதுகுல்கந்து, லசுண மாஜூன், மேற்படி வேறு, மேற்படி வேறு.

பா

பாண்டு ரோகத்திற்கு - அனிசூன் தீநீர், அஸ்மரிரோக நிவாரணி, இலவங்கப்பட்டை ஜவாரிஷ், ஊஷ்ண புஜூரி ஷர்பத்து, கலிங்க முறப்பா, கலிகங்காதி லேகியம் குளிர்ச்சி புஜூரி சர்பத்து, சூரத்து நிலாவாரைப் பிரயோகம், பாண்டு மாத்திரை, புஷ்பாதி மாஜூன், ராஜயோகாமிர்த குதூகலனி வேறு.

பாண்டு ரோகத்திற்கு (ஆரம்ப) - கஷூஸ் ஷர்பத்து, பாண்டு ரோகத்திற்கு என்பதையும் பார்க்க.

பி

பிசுபிசுப்பான நீர்கள் வெளிப்பட - ரோஜாப்பூ எண்ணெய், அசுத்த சத்துகள் வெளிப்பட என்பதையும் பார்க்க.

பித்த இருதய ரோகத்திற்கு - இருதயரோக நிவாரணி, இருதயத்தின் ரோகத்திற்கு என்பதையும் பார்க்க.

பித்தக் கொதிப்பிற்கு - ஆலுபுகாரா இலகுபேதி ஷர்பத்து, ஆலுபுகாராபேதி ஷர்பத்து, எலுமிச்சம் பழ முறப்பா, காகுவிதை மாத்திரை, சந்தன பில்லை மாத்திரை, சல்லாத்து விதை ஷர்பத்து, தராஇலைத் தீநீர், திந்திரிணி ஷர்பத்து, நேசிக்காய் பில்லைகள், நித்தியானந்த வித்துரும பஸ்பம், நிம்பாதி சர்பத்து, பருப்புக்கீரை வித்துச் சூரணம், ஷாத்திரா எண்ணெய்.

பித்த கோபத்திற்கு - ஆமோதானந்த மதனகாம பில்லை, மதனாலங்கிருத சுகந்தபில்லை, பித்தக் கொதிப்பிற்கு என்பதையும் பார்க்க.

பித்த சம்பந்தமான வியாதிகளுக்கு - ஆலுபுகாரா பேதி ஷர்பத்து, கொன்றைப்புளி மாஜூன், பித்தத்திற்கு என்பதையும் பார்க்க.

பித்த சிலேஷ்ம ரோகத்திற்கு - கொங்கார ரோஜாபில்லை வேறு, பாநுவிரேசனி பில்லை மாத்திரை.

பித்தசுரத்தில் பேதியாக- இராஜபேதி வேறு, மேற்படி வேறு.

பித்த சுரத்திற்கு - ஆலுபுகாரா ஷர்பத்து, கருஞ்சீரக மாஜூன், காசினிக்கீரை இரசம், சயரோஜா ஷர்பத்து, சரோருக ஷர்பத்து, தாமரைப்பூ சர்பத்து. பித்ததைப் பக்குவப்படுத்தும் கிஷாயம் வேறு, மேற்படி வேறு.

பித்தச் சூட்டிற்கு- பித்தக் கொதிப்பிற்கு என்பதைப் பார்க்கவும்.

பித்த தலைநோய்க்கு- கொத்துமல்லி விதைச் சூரணம், தலைநோய்க்கு என்பதையும் பார்க்க.

பித்தத்திற்கு- ஆமிரஞ்ச சர்பத்து, ஆமில அகருமாஜூன், ஆமில அகரு ஜவாரிஷ், ஏலாதி சர்பத்து, சயரோஜா சர்பத்து, சிகா பாளிதபானம், சிகாமதுபானம், சூரத்து நிலாவரைப் பிரயோகம், சோம்புக் கிஷாயம் வேறு, திந்திரிணி அன்னாசய பலகாரி, நிம்பாதி சர்பத்து, பனப்ஷாபானம், பாநுவிரேசனி.

பித்தத்தைப் பக்குவப்படுத்தும் கிஷாயம்:- மேற்படி வேறு, மேற்படி வேறு, மஹா பரமௌஷதம், ஜீவரக்ஷாமிர்த லவணம், பித்தத்தைச் சாந்தப்படுத்தும் முறைகள், பித்தத்தைப் பக்குவப்படுத்தும் முறைகள் என்பனவற்றையும் பார்க்கவும்.

பித்தத்தினாலுண்டான மலப்போக்கிற்கு - பித்தபேதிக்கு என்பதைப் பார்க்கவும்.

பித்தத்தைப் பேதியால் வெளிப்படுத்த - அஷ்டிபூத ரோஜாபில்லை, ஆரோக்கிய மாஜூன், இலந்தை யூறல்கிஷாயம், கொன்றைப்புளி மாத்திரை, சிவதை மாத்திரை, தரஞ்சபீன் பேதி சர்பத்து, பித்தஹாரி அரிதகிக் கிசாயம், பேதிபில்லை,

பித்தத்தை வெளிப்படுத்த (இரைப்பையிலுள்ள) - இரைப்பையில் படிந்திருக்கும் பித்தநீரை வெளிப்படுத்த என்பதைப் பார்க்கவும்.

பித்தத்தை வாந்தியில் வெளிப்படுத்த- பித்தவாந்தி.

பித்தநீரைத் தடுக்க (கண்ணிலிறங்கும்) - கொத்துமல்லி விதைச் சூரணம் வேறு.

பித்தபேதிக்கு- ஏலாதிலேகியம், ஏலாதி சர்பத்து, சந்தன ஜவாரிஷ், சந்தனோபய சர்பத்து, சிகாமது பானம், பேதானா கலவைச் சூரணம், ரோஜாப்பூ எண்ணெய்.

பித்தம், கபம் இவற்றை வாந்தியால் வெளிப்படுத்தபித்த கபவாந்தி.

பித்தம், வண்டல், இவற்றை வெளிப்படுத்த- இருதயரோக நிவாரணி.

பித்தம், வண்டல் இவற்றை வாந்தியில் வெளிப்படுத்த:- பித்தவண்டல் வாந்தி.

பித்தரோகத்திற்கு :- பித்தத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

பித்தவாந்திக்கு:- சந்தனோபய சர்பத்து, சூரத்துநிலாவாரைப் பிரயோகம், தாமரைப் பூ சர்பத்து.

பித்தவாயு சம்பந்தமான கீல் வாயுவிற்கு - சயரோஜா சர்பத்து.

பித்தாதிக்க ரோகங்களுக்கு - பித்தத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

பிரமேக சம்பந்தமான வியாதிகளுக்கு :- வாயுசங்காரன் பிரமேகத்திற்கு என்பதையும் ப்பார்க்க.

பிரமேகத்திற்கு - சீமைத்துத்தித் தீநீர், பால் சர்க்கரை, பிரமேக இந்திரபேதி, பிரமேக நிவாரணச் சூரணம், மேற்படி வேறு வகைகளில், 1, 2, 3, 4, 5, பிரமேக நிவாரண பீச்சு மருந்து, மேற்படி வேறுவகைகளில்

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, பிரமேக நிவாரண மாத்திரை, மேற்படி வேறுவகைகளில் 1, 2, 3, 4, 5 பிரமேக நிவாரண பானம், பிரமேக நிவாரண சர்பத்து, பிரமேக நீர்பேதி, மேகசஞ்சீவி எண்ணெய், மேகாதியூஷ்ண நிவாரணி, போஸ்த்து பீஜ ஹல்வா.

பிளவையின் எரிவந்தத்திற்கு - ரோஜாப்பூ எண்ணெய்.

பீ

பீனிசத்திற்கு - ஆத்மரக்ஷாத்திராவகம், கொத்துமல்லி விதைச் சூரணம், சாம்பிராணித் தைலம், மட்டிப்பால் தைலம், மனோரஞ்சித திரிபலாதி, யாஷ்டிமதுராதிச் சூரணம். ஜமானி திரிபலாதி லேகியம்.

பீனிசத்திற்கு (சூட்டினாலுண்டான) - இலகு பனப்சா சர்பத்து, பனப்சா மாத்திரை.

பீனிசத்திற்கு (நாட்பட்ட) - சிறு திரிபலாதிலேகியம், தாத்துராதி மாத்திரை.

பீனிசநோய்க்கு-பீனிசத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

பினிசரோகத்திற்கு- (பீனிசத்திற்கு) என்பதைப் பார்க்கவும்.

பீனிச வியாதிக்கு - மேற்படி.

பீஜங்களின் குளிர்ச்சிக்கு-ஆர்த்திரக முறப்பா.

பீஜங்கள் பலப்பட- இராஜ பராக்கிரமபோக விருத்தி மாஜூன், மஹா அமிர்த விந்துவாதி லேகியம், மஹா ஜஸர் ஹல்வா.

பீஜங்களின் துர்பலத்திற்கு - பீஜங்கள் பலப்பட என்பதைப் பார்க்க.

பு

புண்ணிற்கு (ஆறாத) - ஆறாத இரணத்திற்கு என்பதைப் பார்க்க.

புண்ணிற்கு (நீர்த்தாரையின்)- போஸ்த்து பீஜாஹல்வா.

புண்களுக்கு :- பிரமதண்டம் எண்ணெய்.

புத்திதடுமாற்றத்திற்கு :- அப்திமூன் கியாழம், அப்திமூன் சிகா மதுபானம், மேற்படி வேறு, அப்திமூன் மாஜூன், ஜமானி திரிபலாதி லேகியம்.

புத்தி தீக்ஷணியப்பட - இலகு கபால சஞ்சீவி சர்பத்து,சீமைதுத்திவிதை மாஜூன்.

புத்தி தெளிவுண்டாக:- கபால பைரவம்.

புத்தி மந்தத்திற்கு :- புத்தி தீக்ஷணியப்பட என்பதைப் பார்க்க.

புரைகளுக்கு - புண்களுக்கு என்பதைப் பார்க்க.

புளியேப்பத்திற்கு- கிறுமானி மாஜூன், அக்கினிமந்தத்திற்கு என்பதையும் பார்க்க.

பூ

பூச்சிகள் வெளிப்பட (பலவகை) -ஹரித எண்ணெய்.

பெ

பெண்மலட்டிற்கு -சந்தான உற்பத்தியுண்டாக, சந்தான விர்த்தி யுண்டாக என்பனவற்றைப் பார்க்கவும்.

பெரும்பாட்டிற்கு - சூதகப் பெருக்கிற்கு என்பதைப் பார்க்க.

பெருவயிற்றிற்கு :- கலிங்காதிக் குழம்பு, கலிங்காதி லேகியம்.

பெருவியாதிக்கு :- ஆலுபுகாரா மாஜூன், மேக நிவாரண எண்ணெய்.

பே

பேதியாக - அப்திமூன்சத்து, கடுக்காய்சத்து, கலிங்கச்சத்து, சீமைச் சிவதைவேர்ச்சத்து, பஸ்பாயிஜ்சத்து, பக்ஷணபேதி, மஹ்மூதா பேதிஜவாரிஷ், ராஜபேதி, ரோஜாப்பூ பானம் வேறு.

பேதியாக (உஷ்ணதேகிகளுக்கு) - ரோஜாப்பூ மாத்திரை.

பேதிக்கு- மலப்போக்கிற்கு என்பதைப் பார்க்கவும்.

பேதிக்கு (பித்த):- பித்தபேதிக்கு என்பதைப் பார்க்கவும்.

பேய்நாய்கடிக்கு - விஷநிவாரணி.

பை

பைத்தியத்திற்கு - அப்திமூன் கியாழம், அப்திமூன் சிகாமது பானம், மேற்படிவேறு, அப்திமூன் மாஜூன், ஆவாரைத் திரிபலாதி லேகியம் வேறு. இராஜ விக்ரம ஷர்பத்து வேறு, காரிகியூன்மாத்திரை, காவுஜூபான் தீநீர், மேற்படிவேறு, காவுஜூபான் பூவின் சர்பத்து, காவுஜூபான் சர்பத்து, சந்தன சொர்ணாதி சர்பத்து, சுரிஞ்சான் மிஸ்றிமாஜூன், நிம்பாதி மனோரஞ்சித பானம், பத்மகுல்கந்து, மஹாராஜசௌரிய சர்பத்து, ரோஜா மாஜூன், இரசிதகபால வீரியவிர்த்தினி, திரிபலாதி சரீரஹிம்சசங்காரி, உன்மதத்திற்கு என்பதையும்பார்க்க.

பைத்தியத்திற்கு (இரைப்பை வியாதி சம்பந்தமான) - சந்தன மாஜூன், இரைப்பையின் நோய்களுக்கு என்பதைப் பார்க்கவும்.

பைத்தியத்திற்கு (வண்டலினா லுண்டான) - அப்திமூன் மாத்திரை, சந்தன சொர்ணாதி சர்பத்து, நிசி சிநேக மாத்திரை, வண்டலினாலுண்டான ரோகங்களுக்கு என்பதைப் பார்க்க.

போக இச்சையுண்டாக - அரிதகி வீரியவிர்த்தி திராவகம், போகசக்தி யதிகப்பட , போகசத்தி யுண்டாக என்பனவற்றையும் பார்க்கவும்.

போகசக்தி யதிகப்பட - அகரு குழித்தைலம், மேற்படி வேறு, உஷ்ண ஸ்கலிதநிவாரணி வேறு, காயசித்தி மாத்திரை, சுந்தர சிகாமணி ஜவாரிஷ், தாதாமாஜுன், நித்தியபல மாஜுன், போகானந்த ஸ்தம்பன மாத்திரை, மஹா மேதோரிமாஜுன், மஹாஜஸர் இருதய பலகாரி, மிஸ்ரியாதிச் சூரணம், அரிசனஹத்தி தந்தி முறப்பா, ஆமலக முறப்பா, ஆர்த்திரக முறப்பா இலகிந்திரிய விர்த்தினி, இலகு அமிர்த விந்தாதி, இலகுதீகமோகநாத லேகியம், இலகு விந்தாதி லுபூப் லேகியம், கடலை நீர்ப்பானம், கந்துமாதி விந்தாதி லேகியம், கர்ச்சூரயோக போகவிர்த்தினி, கொட்டி மூலப்பிட்டு, சரச விந்தாதிச் சூரணம், சாலாமிஸ்ரி முறப்பா, சிற்றண்ட சிந்தாமணி லேகியம், சிற்றண்ட விந்தாதிலேகியம், சீத விந்தாதி லுபூப் லேகியம், சுக்கிலாதி வீரிய விர்த்தி லேகியம், தஞ்சை குஞ்சிஷ்க் முறப்பா, தீகமோக நாத லேகியம், நாராயணி விந்தாதி லேகியம், நாராயணி வீரியவிர்த்தி முறப்பா, பஹமனே சுபேத்முறப்பா, பம்பாபானம், பால்பாயசம், பிண்டலதிண்டி, போகாதி பலஹீன நிவாரணி, மஹா அமிர்த விந்தாதி லேகியம், மஹாஜஸர், மஹா தீக மோகநாத லேகியம், மேற்படி வேறுவகை, மஹா விந்தாதி லுபூப் லேகியம், மஞ்சள் முள்ளங்கி ஹல்வா மதுஸ்மிகாதிவிந்தாதி மாஜுன், மல்கோபா மஹா குலதலினி, மேகாதியூஷ்ண நிவாரணி, விந்தோதரவீரிய விர்த்தினி, ஹப்பத்துஸ் ஸவுதா ஹல்வா.

போகசக்தியுண்டாக - அரிதகி வீரியவிர்த்தி திராவகம், ஆங்கிலேய லிங்க வீரிய ஹல்வா, இந்திர வீரிய லேபனம்.இராஜகெம்பீர போகவிர்த்தி திராவகம், இராஜ சௌரிய போகவிர்த்தி மாத்திரை, இராஜ பராக்கிரம போகவிர்த்தி மாஜுன், இராஜாப் பிரீதி போகாதி திராவகம்; இராஜ யோகாமிர்த குதூகலனி, இராஜநந்தயோக போகவிர்த்தி குதூகலனி, இராஜாந்தரங்க வீரியவிர்த்தி மாஜுன், இராஜாபிவிர்த்தி மதுஸ்மிகாதி ஹல்வா, இலவங்கப்பட்டை ஜவாரிஷ் மேற்படி வேறு, உச்சிதா ஷர்பத் கஸ்தூரி சுகந்த சந்தனம், மேற்படி வேறு, காஞ்சிர லேபனம், காவுஜபொன் தீநீர்வேறு. குற்சித மாஜுன், கோச காத்திர தாத்துராதி ஹல்வா, சாதாநந்த நிர்விஷா மாத்திரை, சுல்தாநி அகருதைலம், சூரத்து நிலாவாரைப் பிரயோகம், திராக்ஷாதி மாஜுன், தேவகிருபா ஜவாரிஷ், போகாநந்த ஸ்தம்பன மாத்திரை, மண்டூர கஸ்தூரி

ஜவாரிஷ், மநோரஞ்சித மஞ்சூர நாஷ்தா, முத்தாதி இரத்தின பலகாரி மாத்திரை, வீரியாபிவிர்த்தி காஜர் முறப்பா, ஸ்தம்பனமாத்திரை; ஸ்தம்பன ரத்தினாதி மாத்திரை, ஸ்தூல பலகாரி லேபனம், ஜாலிநியூஸ் சஞ்சீவி ஜவாரிஷ், அம்பர் திலா, இரசித கபால வீரியவிர்த்தினி, உஷ்ணசாந்தி கபால ரக்ஷணி; கூபத்தண்டம், தீகாநந்த லேகியம், மதனகாமரசம்; மதனகாம வச்சிரதண்டம், மஹா மதனவிந்துவாதி மாஜூன்.

போகசக்தி குறைவிற்கு - போகசக்தி யதிகப்பட என்பதைப் பார்க்கவும்.

போகசக்தி விர்த்தியாக - போக சக்தி யதிகப்பட என்பதைப் பார்க்கவும்.

போகத்திற்குப் பின் உண்டாகும் ஆயாசத்திற்கு - போகாதி பலஹீன நிவாரணி.

ம

மகோதரத்திற்கு - அனிசூன் தைலம், கலிங்காதிக் குழம்பு, மகோதர மாத்திரை, மேற்படி வேறு, மேற்படி வேறு.

மஞ்சட்காமாலைக்கு- நித்தில பில்லை மாத்திரை, பேதானாச்சூரணம், ஜடாமாஞ்சில் எண்ணெய்.

மண்ணீரலின் துர்ப்பலத்திற்கு (மூல வியாதியினாலுண்டான) சீனாசஞ்சீவிச் சூரணம்.

மண்ணீரலின் நோய்க்கு - அஸ்மரிரோக நிவாரணி, பரமௌஷத மாத்திரை, மஸ்தகித் தைலம், யகிர்தகண்ட ரோக நிவாரணி, ஜடாமாஞ்சில் பானம்.

மண்ணீரலின் வறட்சிக்கு - அனிசூன் தீநீர், சமபுஜூரி ஷர்பத்து.

மண்ணீரலின் வியாதிக்கு - மண்ணீரலின் நோய்க்கு என்பதைப் பார்க்கவும்.

மண்ணீரலின் வீக்கத்திற்கு- மஹாபாநு விரேசனி, ஜடாமாஞ்சில் எண்ணெய்.

மதுமூத்திர ரோகத்திற்கு - அதிமூத்திர ரோகத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

மதுமேகத்திற்கு - மதுமூத்திரரோகத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

மதுமேகத்தினா லுண்டான ஆயாசத்திற்கு - ஆயாசத்திற்கு (மதுமேகத் தினாலுண்டான) என்பதைப் பார்க்கவும்.

மதோன்மத்தத்திற்கு - ஆமோதானந்த மதனகாமபில்லை, மதனாலங்கிருத சுகந்தபில்லை.

மந்தாக்கினிரோகத்திற்கு - அக்கினி மந்தத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

மயக்கத்திற்கு - அதியிரத்த ரோக நிவாரணி, இராஜ சௌரிய ஷர்பத்து, இராஜ பராக்கிரம ஷர்பத்து, கொத்துமல்லிவிதைச் சூரணம், சீனாசஞ்சீவிச்சூரணம், சோம்புக்கியாழம், நிம்பாதி ஷர்பத்து, ஸ்ரீகந்தாதிச்சூரணம், இரசித கபால வீரியவிர்த்தினி, கஸ்தூரி மஸ்தகரக்ஷணி.

மயக்கத்திற்கு (குளிர்ச்சியினாலுண்டான) - இராஜசூரபோக விர்த்தி திராவகம்.

மயக்கத்திற்கு (சூட்டினாலுண்டான) - அம்பர் கஸ்தூரி சீத சிந்தாமணி, கஸ்தூரி சீத சிந்தாமணி, கஸ்தூரி சீதோஷ்ண சிந்தாமணி, சூக்ஷமெக கஸ்தூரி சீத சிந்தாமணி.

மயிற்கூச்சிற்கு - இலவங்கப்பட்டை எண்ணெய்.

மருந்தின் துர்குணத்தை மாற்ற - மதுகமலபானம்.

மருந்துகள் விஷமித்தால் - அஸ்மரிரோக நிவாரணி.

மலக்கட்டிற்கு - அத்திப்பழக் கியாழம், ஆவாரைத் திரிபலாதி லேகியம், உதரரோக நிவாரணி, சரக்கொன்றைப் புளி ஷர்பத்து, சீமையத்திப்பழப் பிரயோகம், சுகபேதிச் சூரணம், சுகுமார திரிபலாதி, தரஞ்சபீன் பேதி ஷர்பத்து, மேனா ஷர்பத்து, ரோஜாப்பூ தீநீர் ஷர்பத்து, ஹிந்துபா சூரணம், இலகுபேதி முறைகள் என்பதையும் பார்க்கவும்.

மலஜலகட்டிற்கு - சூரத்து நிலாவாரைப் பிரயோகம், பேதியாக என்பதையும் பார்க்க.

மலச்சிக்கலுக்கு- அன்னாசயரக்ஷணி, அஷ்டரோஜாபில்லை, ஆலுபுகாரா இலகுபேதி ஷர்பத்து, கொங்கார ரோஜாபில்லை, சுகாதார மாஜூன், தேகாரோக்கிய எண்ணெய், பருப்புக்கீரை வித்து ஷர்பத்து, மதுகமல பானம், ரோஜாப்பூ பானம், பார்லி அரிசி ஜலம், இலகுபேதி முறைகள் என்பதையும் பார்க்க.

மலச்சிக்கிற்கு (மூலச்சூட்டினாலுண்டான) கோகில திரிபலாதி, மூலக்குடோரி.

மலபந்தத்திற்கு - மலக்கட்டிற்கு என்பதைப் பார்க்கவும்.

மலபந்தத்திற்கு (மூலச் சூட்டினாலுண்டான) - மலச்சிக்கலுக்கு (மூலத்தினாலுண்டான) என்பதைப் பார்க்கவும்.

மலப்போக்கிற்கு - அகரு ஷர்பத்து, அண்டஹாதி அநூஷ் ஜவாரிஷ், அன்னாசய பலகாரி, அன்னாசய ரக்ஷணி, ஆமில அகருமாஜூன், இரத்ததினாதிபில்லை மாத்திரை, இராஜசௌரிய சர்பத்து, இராஜ பராக்கிரம ஷர்பத்து, கருஞ்சீரக மாஜூன் வேறு, தாடிமக்கனிப் பிரயோகம், தாடிமக்கனி ஷர்பத்து.

மலப்போக்கிற்கு (சூட்டினாலுண்டான) :- பேதானாகலவைச் சூரணம்.

மலப்போக்கிற்கு (பித்தத்தினாலுண்டான) - ஏலாதிலேகியம், ஏலாதி ஷர்பத்து.

மலமிளக - மலச்சிக்கலுக்கு என்பதைப் பார்க்கவும்.

மலம்போக - மலக்கட்டிற்கு என்பதைப் பார்க்க.

மலவறட்சிக்கு - அஷ்டிகீர ரோஜாபில்லை, தாமரைப்பூ ஷர்பத்து, ஹிந்துபாச்சூரணம், பார்லி அரிசி ஜலம்.

மலஸ்கலிதத்திற்கு -நிவர்த்தி வத்தி, மலஸ்கலித நிவாரண களிம்பு மலஸ்கலித நிவர்த்தி யெண்ணெய்.

மறதிக்கு - கபால பைரவம், கருஞ்சீரக ஜவாரிஷ், கொத்து மல்லி விதைச் சூரணம் வேறு, சித்தர் மாஜூன், லசுணமாஜூன், மேற்படி வேறு, மேற்படி வேறு.

மனக்கலக்கத்திற்கு - அம்பர் கஸ்தூரி சீத சிந்தாமணி, ஆவாரைத் திரிபலாதி லேகியம் வேறு, இராஜ சௌரிய ஷர்பத்து, இராஜபராக்கிரம ஷர்பத்து, இருதயோச்சித குதூகலனி, கஸ்தூரி சீதசிந்தாமணி, கஸ்தூரி சீதோஷ்ண சம சிந்தாமணி, காவுஜூபான் தீநீர், மேற்படி வேறு, காவுஜூபான் பூவின் ஷர்பத்து,காவுஜூபான் சர்பத்து, குல்கந்து, கொத்துமல்லிச் சூரணம், சம்பங்கியெண்ணெய், மேற்படி வேறு, சந்தேக நிவாரணோற்சாககரணி, திராக்ஷப்பழ ஷர்பத்து, திரிதோஷ நிவாரண பலகாரி மாஜூன், நிம்பாதி மனோரஞ்சித பானம், மஹா சுகந்த தூபப்பொடி, மஹாராஜ சௌரிய சர்பத்து.

மனக்கலக்கத்திற்கு (வண்டலினாலுண்டான) - துவசந்தனாதி ஷர்பத்து.

மனக்கவலைக்கு - மனக்கலக்கத்திற்கு என்பதைப் பார்க்க

மனக்களிப்புண்டாக- அரிச்சந்தன ஷர்பத்து, இராஜபராக்கிரம போக விருத்தி மாஜூன், இராஜ சௌரிய சர்பத்து, இராஜ பராக்கிரம ஷர்பத்து, இராஜ யோகாமிர்த குதூகலனி, இராஜநந்த போகவிர்த்தி குதூகலனி, இருதயோச்சித குதூகலனி, காவுஜூபான் பானம், மேற் படிவேறு, சதனாந்த நிர்விஷா மாத்திரை, சீமை அத்திப்பழப் பிரயோகம், சுகந்த மூல சந்தன பன்னீர், சொர்ணமஹா சீத குதூகலனி,

ஞானபிவிர்த்தி மனோ ரஞ்சிதம், தாம்பூல பரிமள மாத்திரை, மேற்படி வேறு, மஹா சீத குதூகலனி, காஜராண்ட யோக போக விருத்தி மாஜூன், கிரிஞ்சன ஹல்வா, கொட்டி மூலப்பிட்டு, சாலாமிஸ்ரி முறப்பா, சிற்றண்ட சிந்தாமணி லேகியம்,தீகானந்த லேகியம், மஞ்சள் முள்ளங்கி ஹல்வா, மஹாலுபூப் லேகியம், மஹா விந்துவாதி லுபூப்லேகியம், மஹாஜஸர் ஹல்வா, ஹரிச்சந்தன ஹத்தி தந்த முறப்பா.

மனக்கிலேசத்திற்கு - மனக்கலக்கத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

மனக்குழப்பத்திற்கு - மனக்கலக்கத்திபூ;கு என்பதைப் பார்க்கவும்.

மனச்சோர்விற்கு - மனோற்சாக முண்டாக இருதயம் பலப்பட என்பனவற்றைப் பார்க்க.

மனதிடாரிக்கம் (திடம்) உண்டாக- மனக்கலக்கத்திற்கு என்பதைப் பார்க்க.

மனதிற்கானந்த முண்டாக- மனக்களிப்புண்டாக என்பதைப் பார்க்க.

மனதிற் கின்பமுண்டாக - சந்தூக சுகந்த பன்னீர்.

மனதிற்குச் சந்தோஷமுண்டாக - மனதிற்கானந்த முண்டாக என்பதைப் பார்க்க.

மனத் திடுக்கத்திற்கு - மனக்கலக்கத்திற்கு என்பதைப் பார்க்க.

மனந் தடுமாறலுக்கு - மனக்கலக்கத்திற்கு என்பதைப் பார்க்க.

மனமகிழ்ச்சியுண்டாக - மனக்களிப்புண்டாக என்பதைப் பார்க்க.

மனமலர்ச்சியுண்டாக - மேற்படி.

மனவூக்கமுண்டாக- மனோபலமுண்டாக என்பதைப் பார்க்க.

மனோகரமுண்டாக - சந்தூக சுகந்த அம்பர் அத்தர்.

மனோபலமுண்டாக - இராஜ சௌரிய சர்பத்து, இராஜ பராக்ரம சர்பத்து, சுகந்தமூலசந்தனம், சொர்ண மஹாசீத குதூகலனி, மஹாசீத குதூகலனி இருதயம் பலப்பட என்பதையும் பார்க்கவும்.

மனோரம்மியமுண்டாக - மனக் களிப்புண்டாக என்பதைப் பார்க்க.

மனோற்சாகமுண்டாக - அம்பர் கஸ்தூரிசீதசிந்தாமணி, அரிசந்தன சர்பத்து, அரிதகிவீரியவிர்த்தி திராவகம், இராஜசௌரிய போகவிருத்தி மாத்திரை, இருதயோச்சித குதூகலனி, ஏலாதிச் சூரணம், கஸ்தூரி சீதசிந்தாமணி, கஸ்தூரி சீதோஷ்ண சமசிந்தாமணி, சதானந்தநிர்விஷா மாத்திரை, சுகவல்லப ஜவாரிஷ், சுல்தானி அகருதைலம், சூக்ஷுமெ

கஸ்தூரி சிந்தாமணி, சொர்ண மஹாசீத குதூகலனி, திரிதோஷ நிவாரண ப்லகாரி மாஜூன், திரியாக்ரத்தினாதி மாத்திரை, மஹாசீத குதூகலனி, மஹாஜஸர் இருதய பலகாரி மாத்திரை, ஸ்ரீ கந்தாதிச் சூரணம்.

மா

மாசுகள் நீங்க - அசுத்த மாசுகள் வெளிப்பட என்பதைப் பார்க்க.

மாசுகள் நீங்க (இரைப்பையிலுள்ள) - அசுத்தமாசுகள் வெளிப்பட (இரைப்பையிலுள்ள) என்பதைப் பார்க்கவும்.

மார்பின் அதிர்ச்சிக்கு - அம்பர் கஸ்தூரி சீதசிந்தாமணி, இராஜவிக்ரம சர்பத்து, கஸ்தூரிசீத சிந்தாமணி,கஸ்தூரி சிதோஷ்ண சம சிந்தாமணி, காவுஜபான் தீநீர், காவுஜபான் பானம், மேற்படி வேறு, சகு மோனியா ஜவாரிஷ், சீனாசஞ்சீவிச்சூரணம், சூக்ஷ்ம கஸ்தூரி சீத சிந்தாமணி, சோம்புக்கியாழம்.

மார்பின் சீழ்க்கட்டிற்கு - அஸ்மரிரோக நிவாரணி.

மார்பின் துடித்தலுக்கு - மார்பின் அதிர்ச்சிக்கு என்பதைப் பார்க்கவும்.

மார்பின் நோவிற்கு இலந்தைப் பானம், மேற்படி வேறு, சரக்கொன்றைப்புளி சட்னி, பருப்புக்கீரை வித்து ஹல்வா.

மார்பின் வறக்ஷிக்கு - தாமரைப்பூ சர்பத்து.

மார்பின் வியாதிக்கு- இலந்தைப்பாகு, நிம்பாதிமனோரஞ்சித பானம், பனப்ஷாபானம்.

மார்பின் வியாதிக்கு (குளிர்ச்சியான கபத்தினாலுண்டான) கபஹாரி மாத்திரை.

மார்பு பலப்பட - இலகுலுபூப் லேகியம், கோதுமைப் பாயசம்.

மி

மிருகங்களின் விஷத்திற்கு - மஹாபாநு விரேசனி.

மு

முகங்கோணலுக்கு- இலவங்கப்பட்டை யெண்ணெய், கோசரோகஹரி எரிமுகி ஹல்வா, மேற்படி வேறு பரமௌஷதம்.

முகவஜீகரமுண்டாக - ஏலாதிச் சூரணம், சொர்ணபூபதிச் சூரணம், சொர்ண மகாசீத குதூகலனி, தாம்பூலநறுமணச் சுண்ணம், தாம்பூல பரிமளச் சுண்ணக் கலவை, முகவஜீகரச்சூரணம், முகவஜீகரப் பில்லை, முகவஜீகரப் பிரயோகம், மேற்படி வேறு.

முகவாதத்திற்கு - முகங்கோணலுக்கு என்பதைப் பார்க்கவும்.

முடக்குவாதத்திற்கு - வாதநோய்களுக்கு என்பதைப் பார்க்க.

முதுகின் நோவிற்கு - குன்மக்குடோரி ஜவாரிஷ், சித்தர் மாஜூன், சீமை அத்திப்பழ சர்பத்து, ஹிந்தி ஜவாரிஷ்

முதுகின் வாயுவிற்கு - முதுகின் நோவிற்கு என்பதைப் பார்க்க.

முதுகு பலப்பட - சாலாமிஸ்ரி முறப்பா, பஹமனே சுபேத் முறப்பா, மேதாபி விருத்தி ஸ்தூல மாஜூன்.

முத்தோஷங்களுக்கு- திரிதோஷ நிவாரண பலகாரிமாஜூன், தேவகிருபா ஜவாரிஷ்.

முள்ளந்தண்டின் வாதத்திற்கு - சந்நிவாத நிவாரணி, வாத நோய்களுக்கு என்பதையும் பார்க்க.

முறைக்காய்ச்சலுக்கு- மகாபாநு விரேசனி, வேப்பம் பட்டைக்கியாழம்.

முறைசுரத்திற்கு - முறைக்காய்ச்சலுக்கு என்பதைப்பார்க்கவும்.

முஷ்டிப் பிரயோகத்தினாலுண்டான கோசத்தின் வியாதிகளுக்கு - அட்டைப் பிரயோகம், அதிபோகரோக நிவாரண பாயசம், மேற்படி வேறு, அதிரசவீரிய விர்த்தினி, அர்க்கக்ஷீர பிரயோகங்கள், ஆகரசிம்ம ஊக்க சஞ்சீவித் திலா, இங்கு பூவாதிக் குழித்தைலம், இராஜ ராமேஸ்வரத் தீநீர், இலகுஜலூல லேபனம், மேற்படி வேறு, உம்பலகெம்பீரத்துவை, ஓங்கார மாங்கிஷத் தீநீர், காளைபதாதிபட்டித் தைலம், கோசகாத்திர தாத்துராதி ஹல்வா, சோதி மூதோதிப்பட்டித்தைலம், தம்பல ஜீவாப்பூப்புடத்தைலம், துவாரகர வீரப்பட்டி, துன்ப நிவாரணஜூந்து திலா, துஷ்டரோக கண்டித அண்டஹாதி ஹல்வா, துஷ்டரோக நிவாரண திலா, நிர்விஷா அர்க்கக்ஷீரத்திலா, பாரதுவாஜப்பட்டி, பிபீலிகை பாலிதா லேபனத் தைலம், போகாதி பாகப்பட்டி, மகா வீரியப்பட்டி, மின்மினிபட்டித்தைலம், மிஸ்ரிச்சூரணம், முஷ்டிரோக நிவாரண முட்டைப் பிரயோகம், மேற்படி வேறு, மைலேபன திராவகம், ரசித ஜீவாதிஷா மாத்திரை, லிங்க பலகாரி மங்கல மதுரம், வஜ்ஜிரகண்டா உச்சித சுடர்தைலம், ஸ்தம்பன அம்பர் மாத்திரை, ஸ்தம்பன நிர்விஷா மாத்திரை, ஜம்புகாய மாத்திரை.

முஷ்டிப் பிரயோகத்தினா லுண்டான இந்திரிய இழிவிற்கு- இந்திரிய இழிவிற்கு (முஷ்டிப் பிரயோகத்தினாலுண்டான) என்பதைப் பார்க்க.

மூ

மூக்கிலிருந்து ஜலம் வடிவதற்கு - சுகந்ததூபப்பொடி.

மூச்சிற்கு - காரிகியூன் மாத்திரை வேறு, நிம்பாதி மனோரஞ்சித பானம்.

மூச்செரிதலுக்கு - மூச்சிற்கு என்பதைப் பார்க்க.

மூத்திர ஒழுக்கிற்கு - சித்தர் மாஜூன், மேகநிவாரண எண்ணெய்.

மூத்திரக் குண்டிக் காய்களின் நோய்களுக்கு - அமிர்த பீஜஹல்வா, அஸ்மரி ரோகநிவாரணி, சீமைஅத்திப்பழசர்பத்து, யூதாதிச் சூரணம்.

மூத்திரகுண்டிக்காய்கள் பலப்பட - குண்டிக்காய்கள் பலப்பட என்பதைப் பார்க்க.

மூத்திரமதிகப்பட - நீர்க்கட்டிற்குத் திராவகம், ஜலமஞ்சரி சிகாமதுபானம், மேற்படி வேறு, மேற்படி வேறு, நீரைப் பெருக்க என்பதையும் பார்க்க.

மூத்திரரோகத்திற்கு - இராஜராமேஸ்வரத் தீநீர்.

மூர்ச்சைக்கு - காவுஜுபான் தீநீர், மேற்படி வேறு, கஸ்தூரி மஸ்தகரக்ஷணி.

மூலக்கடுப்பிற்கு- மூலத்திற்கு என்பதைப் பார்க்க.

மூலக்கிராணிக்கு - அண்டஹாதி அநூஷ் ஜவாரிஷ்.

மூலச்சூட்டிற்கு: மூலத்திற்கு என்பதைப் பார்க்க.

மூலத்திற்கு - ஆவாரைத் திரிபலாதி லேகியம்,குக்கிலாதி மாத்திரை, சகுமூனியா ஜவாரிஷ், கத்தாதி மாஜூன், பஸ்பாயிஜ் கியாழம்; பால்சர்க்கரை, மண்டூரகஸ்தூரி ஜவாரிஷ், மஸ்தகரக்ஷ ணாத் திரிபலாதிலேகியம், மூலக்குடோரி, ஜாலினியூஸ் சஞ்சீவி ஜவாரிஷ்.

மூலவாயுவிற்கு - மூலத்திற்கு என்பதைப் பார்க்க.

மூவகை அசுத்த நீர்களை வெளிப்படுத்த- பரமௌஷதம்; அசுத்தமாசுகள் வெளிப்பட என்பதையும் பார்க்க.

மூளை, இருதயம், இவை பலப்பட - இருதயம், மூளையிவை பலப்பட என்பதைப் பார்க்கவும்.

மூளை, இருதயம், இரைப்பை இவை பலப்பட - இருதயம், மூளை, இரைப்பை இவைபலப்பட என்பதைப் பார்க்கவும்.

மூளை, இரைப்பை யிவற்றின் அசுத்தமாசுகளை நீக்க - அசுத்தசத்துகள் வெளிப்பட (இரைப்பை, மூளை யிவற்றின்) என்பதைப் பார்க்கவும்.

மூளை இரைப்பை யிவை பலப்பட:- இரைப்பை மூளையிவை பலப்பட என்பதைப் பார்க்கவும்.

மூளை சுத்தியாக - சுகுணாதிச் சூரணம், துளசிஷர்பத்து, பரந்தாதி பானம், பனப்ஷா மாத்திரை, மனோரஞ்சித திரிபலாதி, ரேஷமாதி திரிபலாதி மாஜூன், ஜமானிதிரிபலாதி லேகியம், கஸ்தூரி மஸ்தகரக்ஷணி.

மூளைபலப்பட - அதிபோகரோக நிவாரணபாயசம் வேறு, அதிரச வீரியவிர்த்தினி, ஆத்மரக்ஷாத் திராவகம், இலகு கபாலசஞ்சீவி ஷர்பத்து, கபால பைரவம், கபாலோஷ்ண சாந்த பாயச வகைகள், காவுஜூபான் பானம், கொத்துமல்லி விதைச் சூரணம், ஞானாபிவிர்த்தி மநோரஞ்சிதம், தீவிராபிவிர்த்தி அமிர்தாதிலுபூப், பராக்கிரம கபால ரக்ஷணி, பாளிதாதி ஹல்வா, போகாநந்த ஸ்தம்பன மாத்திரை; மநோரஞ்சித திரிபலாதி, மஸ்தகபலாபிவிர்த்தி காஜர்முறப்பா, மஸ்தகரக்ஷணா திரிபலாதிலேகியம், மஹாகஸ்தூரி சுகந்த எண்ணெய், ரோஜாப்பூ எண்ணெய், வித்தாததி யுஷ்ண சாந்த தைலம், ஜமாநி திரிபலாதி லேகியம், இரசிதகபால வீரிய விர்த்தினி, இலகு லுபூப் லேகியம், உஷ்ணசாந்தி கபாலரக்ஷணி, கஸ்தூரி மஸ்தக ரக்ஷணி, கொட்டி மூலப்பிட்டு, சாலாமிஸ்ரி முறப்பா, சுகுணாதிச் சூரணம், திரிபலாதி சரீர ஹிம்ச சங்காரி.

மூளையில் அசுத்த சத்துகளை நீக்க - அசுத்த சத்துகளை நீக்க (மூளையின்) என்பதைப் பார்க்க.

மூளையின் உஷ்ணத்திற்கு - கபாலோஷ்ண சாந்த பாயசம், வித்தாதி யுஷ்ண சாந்த தைலம்.

மூளையின் தாபனத்தினாலுண்டான சுரத்திற்கு - ரோஜாப்பூ எண்ணெய்.

மூளையின் தாபனத்தினாலுண்டான வீக்கத்திற்கு - ரோஜாப்பூ எண்ணெய்

மூளையின் வரட்சிக்கு- (கபால வரட்சிக்கு) என்பதைப் பார்க்க.

மூளையின் துர்பலத்திற்கு- (மூளை பலப்பட) என்பதைப் பார்க்க.

மூளையின் வியாதிக்கு- ஆத்மரக்ஷாபானம், மூளை பலப்பட என்பதையும் பார்க்க.

மூன்றாமுறை காய்ச்சலுக்கு - கொங்காரரோஜாபில்லை.

மே

மேக இரணத்திற்கு - குஷ்ட நிவாரணி, பிரமாதிவிரண பைரவி, வேப்பம்பட்டை திராவகம், வேப்பம்பூத் திராவகம், மேகநிவர்த்தி போக விர்த்தினி.

மேகஊரலுக்கு- மேகத்திற்கு என்பதைப் பார்க்க.

மேகக்கட்டிகளுக்கு - மேகவியாதிக்கு என்பதைப் பார்க்க.

மேகசம்பந்தமான இந்திரிய இழிவிற்கு - இந்திரிய இழிவிற்கு (மேக சம்பந்தமான) என்பதைப் பார்க்க.

மேகச்சூட்டிற்கு - சம்பங்கி எண்ணெய், மேற்படிவேறு, சிற்றண்ட பஸ்பம், தரா இலைத் தீநீர், மேகநிவாரண எண்ணெய், ஹரிதஎண்ணெய், பம்பா பானம்.

மேகச்சூலைக்கு - மேகவியாதிக்கு என்பதைப் பார்க்க.

மேகத்தடிப்பிற்கு - தரா இலைக்கியாழம், பிரமாதி விரண பைரவி.

மேகநீருக்கு - மேகவியாதிக்கு என்பதைப் பார்க்க.

மேகப் படைக்கு- சூரத்து நிலாவாரைப் பிரயோகம், தரா இலைக் கியாழம், பிரமாதிவிரண பைரவி, மேக நிவாரண எண்ணெய், ஜாலினியூஸ் சஞ்சீவி ஜவாரிஷ்

மேகப்புண்ணிற்கு - மேக இரணத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

மேகரூட்சைக்கு - ஆமோதானந்த மதனகாமபில்லை மதனாலங்கிருத சுகந்தபில்லை.

மேக வாயுவிற்கு - மேகநிவாரண எண்ணெய், வாயுசங்காரன்.

மேகவிகாரத்திற்கு - மேக வியாதிக்கு என்பதைப் பார்க்க.

மேகவியாதிக்கு - காவுஜூபான் பானம் வேறு, கோசரோக ஹரி எரி முகி ஹல்வா, சுக்கில விருத்திலேகியம், தரா இலைக் கியாழம், பிரமதண்டம் எண்ணெய், மது ஸ்மிகாதி விந்துவாதி மாஜூன், மேகாதி பூஷ்ண நிவாரணி, மேகநிவர்த்திபோக விர்த்தினி.

மேகவியாதிக்கு (பிர) - வெள்ளரிவிதை ஷர்பத்து.

மேகவெட்டைக்கு - சிற்றண்ட பஸ்பம்; மதனகாம வச்சிர தண்டம்.

மேற்சுவாசத்திற்கு - கபஹாரி மாத்திரை.

ர

ரத்தசுத்தியுண்டாக - இரத்தசுத்தி யுண்டாக என்பதைப் பார்க்கவும்.

ரத்தவிர்த்தியுண்டாக - இரத்தவிர்த்தியுண்டாக என்பதைப் பார்க்கவும்.

ரா

ராஜ கருவிகளின துர்ப்பலத்திற்கு - இராஜ உறுப்புகள் பலப்பட என்பதைப் பார்க்கவும்.

ராஜகருவிகள் பலப்பட - இராஜ உறுப்புகள் பலப்பட என்பதைப் பார்க்கவும்.

ராஜகருவிகளின் சீதள நோய்க்கு - இர॥ஜ கருவிகளின் சீதள நோய்க்கு என்பதைப் பார்க்கவும்.

ராஜகருவிகளின் துர்ப்பலத்திற்கு (சீதளத்தினாலுண்டான) - இராஜகருவிகளின் துர்ப்பலத்திற்கு (சீதளத்தினாலுண்டான) என்பதைப் பார்க்கவும்.

வ

வசியமுண்டாக- ஆமோதாநந்த மதன காமபில்லை, மதனாலங்கிருத சுகந்தபில்லை.

வண்டலினாலுண்டான ரோகங்களுக்கு- காவுஜுபான் குல்கந்து, பாநு விரேசனி, மதுபாக குல்கந்து, மஹா பரமௌஷதம், மஹாராஜசௌரிய ஷர்பத்து, வண்டலைப் பக்குவப்படுத்தும் கியாழம்.

வண்டலினாலுண்டான வியாதிகளுக்கு - வண்டலினாலுண்டான ரோகங்களுக்கு என்பதைப் பார்க்கவும்.

வண்டலை வெளிப்படுத்த - அப்திமூன் மாத்திரை; சீதசுகுமார நெய், சுகவிரோசன நெய், தந்தி பீஜமாத்திரை, பேதி மாத்திரை.

வண்டலை வெளிப்படுத்த (எரிந்துபோன)- அப்திமூன் மாத்திரை; ரோஜாப்பூ பானம்.

வண்டலை வெளிப்படுத்த (சிரசிலுள்ள) - வண்டலை வெளிப்படுத்த (மூலையிலுள்ள) என்பதைப் பார்க்கவும்.

வண்டலைவெளிப்படுத்த (மூளையிலுள்ள) - ஆத்மரஷா பானம் நிசிசிநேக மாத்திரை.

வண்டலை வெளிப்படுத்த (வாந்தியினால்) - வண்டல் வாந்தி.

வயிறு கட்ட- சந்தன ஷர்பத்து வேறுவகை, பேதிக்கு என்பதையும் பார்க்க.

வயிற்றின் உப்பிசத்திற்கு - உதரரோக நிவாரணி, கலவைச் சோம்புத்தீநீர், நித்திய பலமாஜுன், ஜடாமாஞ்சி லெண்ணெய், ஜலோதர மாஜுன்.

வயிற்றின் உளைவிற்கு - வயிற்றின் கடுப்பிற்கு என்பதைப் பார்க்க.

வயிற்றின் எரிச்சலுக்கு - பேதானாபானம்.

வயிற்றின் கடுப்பிற்கு - இஸ்பகோல் உமிச்சூரணம், இஸ்பகோல் ஊறல் கியாழம் வேறு, இஸ்பகோல் விதைச்சூரணம் வேறு, ரோஜாப்பூ எண்ணெய்

வயிற்றின் துர்மலங்களை நீக்க- அஷ்டிபூத ரோஜாபில்லை அசுத்த சத்துகள் வெளிப்பட என்பதையும் பார்க்கவும்.

வயிற்றின் நோவிற்கு - அஷ்டிபூத ரோஜாபில்லை, கலிங்காதிக் குழம்பு, கலிங்காதி லேகியம், சொர்ணசீனா ஷர்பத்து, பஸ்பாயிஜ் கியாழம், மதுகமலபானம், ஜடாமாஞ்சில் எண்ணெய்.

வயிற்றின் நோவிற்கு (வாயுவினா லுண்டான) - கலவை சோம்புத் தீநீர், சோம்பும் தைலம்.

வயிற்றின் வலிக்கு (வாயுவினாலுண்டான) - வயிற்றில் நோவிற்கு (வாயுவினாலுண்டான) என்பதைப் பார்க்கவும்.

வயிற்றுப் போக்கிற்கு - மலப்போக்கிற்கு என்பதைப் பார்க்கவும்.

வலிப்பிற்கு- இசிவிற்கு என்பதைப் பார்க்க.

வறட்சிக்கு - ஆத்மரக்ஷாத் திராவகம், இலவங்கப்பட்டை ஜவாரிஷ், சீனாசிகாமதுபானம், சீனாசஞ்சீவிச் சூரணம், சொர்ணாசீனா ஷர்பத்து, ரோஜாப்பூ பானம்.

வறட்சியான இருமலுக்கு - இலந்தைக் கியாழம், இலந்தைப் பாகு, இலந்தைப்பானம், சீமை துத்திவிதைக் குளிகை, தாமரைப்பூத்திராவகம்.

வா

வாதசுரத்திற்கு - கிறுமானி மாஜுன்.

வாதபித்த சம்பந்த இருதய ரோகத்திற்கு - இருதய ரோகத்திற்கு (வாதபித்த சம்பந்த) என்பதைப் பார்க்க.

வாத நோய்களுக்கு - சீதசுகுமார நெய், சுகவிரேசன நெய், பஸ்பாயிஜ் கியாழம், பஸ்பாயிஜ் சூரணம், பஸ்பாயிஜ் பானம், பிரமதண்டம் எண்ணெய், மஹா பரமௌஷதம், வண்டலைப் பக்குவப்படுத்தும் கியாழம்.

வாதருட்சைக்கு - ஆமோதானந்த மதனகாமபில்லை, மதனாலங்கிருத சுகந்தபில்லை.

வாத ரோகங்களுக்கு - வாதரோகங்களுக்கு என்பதைப் பார்க்கவும்

வாந்திக்கு அகரு ஷர்பத்து, ஏலாதி லேகியம், ஏலாதி ஷர்பத்து, கருஞ்சீரக மாஜூன் வேறு, சந்தன மாஜூன் சிகாமதுபானம், தாடிமக்கனிப் பிரயோகம், தாடி மக்கனி ஷர்பத்து, மதுகமலபானம்.

வாந்திக்கு (குடல்முறுக்கோடுண்டாகும்) - பரமௌஷதம்.

வாந்தியினால் அசுத்தமாசுகளை நீக்க- அசுத்த சத்துகள் வெளிப்பட (வாந்தியினால்) என்பதைப் பார்க்கவும்.

வாயிற் சுகந்தமுண்டாக- வாயின் நாற்றத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

வாயின் இரணத்திற்கு - சந்தன மாத்திரை.

வாயின் கோணலுக்கு - அனிசூன் தீநீர், மதுகுல்கந்து

வாயின் நாற்றத்திற்கு - ஆங்கிலேய லிங்க வீரியஹல்வா இலவங்கப்பட்டை ஜவாரிஷ் வேறு, ஏலாதிச் சூரணம், சந்தன மாத்திரை, சந்தனாதி தந்தப்பொடி, சுகந்த தந்தப்பொடி, சூரத்துநிலாவாரைப் பிரயோகம், தாம்பூல பரிமளமாத்திரை, மேற்படி வேறு, நறுமணபாக்குப் பிரயோகம், வாய்ச்சுகந்த கஸ்தூரி மாத்திரை, மேற்படி வேறு, மேற்படி வேறு, வாய்ச்சுகந்த பச்சைக்கற்பூர மாத்திரை.

வாயின் புண்ணிற்கு - வாயின் சூரணத்திற்கு என்பதைப் பார்க்க.

வாயு சம்பந்த ரோகங்களுக்கு : வாயுவிற்கு என்பதைப் பார்க்க.

வாயுவிற்கு : அகரு திராவகம், அசையாதி மாஜூன், அனிசூன் தீநீர், அனிசூன் மாத்திரை, அனிசூன் ஜவாரிஷ், இந்துபாச் சூரணம், இந்துபா மாஜூன், இலகு பரமௌஷதம், இலவங்கப்பட்டை ஜவாரிஷ் வேறு, கமூனி மாஜூன், கலிங்க முறப்பா, சகுமூனியா ஜவாரிஷ், சீமை துத்திவிதை மாஜூன், தந்திபீஜ மாத்திரை, தீபகர்ப்பூர எண்ணெய், நாகராதி மாஜூன், பச்சைக் கர்ப்பூர லேகியம், பேதி மாத்திரை, மதுகுல்கந்து, ரோஜாப்பூத் தீநீர், ஷர்பத்து, வாதஹாரிச் சூரணம், வாயுசங்காரன், றூமிச்சோம்பு ஜவாரிஷ், சடாமாஞ்சில் ஜவாரிஷ், ஜலமஞ்சரி சிகாமதுபானம், ஜாலினியூஸ் சஞ்சீவி சர்பத்து, ஹரிதஎண்ணெய், திரிபலாதி சரீரஹிம்ச சங்காரி,

வாயுவிற்கு (இரைப்பையின்) - கமூனி மாஜூன், சகுமுனியா ஜவாரிஷ், மஸ்தகித் தைலம், வாதஹாரிச்சூரணம்.

வாயுவிற்கு - (ஈரலின்) - வாதஹாரிச் சூரணம்.

வாயுவிற்கு (குடலின்) - தேசிபுதினா சர்பத்து.

வாயுவிற்கு (குடலைப்புரட்டி நோவுண்டாக்கும்) - கமூனி மாஜூன்.

வாயுவிற்கு (குளிர்ச்சியான இரைப்பையின்) - இலகு பரமௌஷதம்,

வாயுவினாலுண்டான கட்டுகளுக்கு - பிரமாதி விரண பைரவி

வாயுவினாலுண்டான இரைப்பையின் துர்ப்பலத்திற்கு- துர்ப்பலத்திற்கு (வாயுவினாலுண்டான) என்பதைப் பார்க்கவும்.

வி

விக்கலுக்கு - மகாபாநு விரேசனி.

விசைநரம்பின் தளர்ச்சிக்கு - கோசரோகஹரி எரிமுகிஹல்வா வேறு.

விடாசுரத்திற்கு :- சந்தன பலானி சர்பத்து, சாந்தி சமனபில்லை மாத்திரை, சீதகுதூகலனி, சொர்ண மகாசீத குதூகலனி, தாமரைப்பூத் திராவகம், பச்சைக்கர்ப்பூர திராவகம், பச்சைக் கர்ப்பூர வில்லை மாத்திரை, பச்சைக்கர்ப்பூர மாத்திரை, மகாசீதகுதூகலனி, வேப்பம்பட்டைக்கியாழம்.

விந்திழிவிற்கு- (இந்திரிய இழிவிற்கு) என்பதைப் பார்க்க.

விந்திழிவிற்கு (முஷ்டிப்பிரயோகத்தாலுண்டான) - இந்திரிய இழிவிற்கு (முஷ்டிப் பிரயோகத்தாலுண்டான) என்பதைப் பார்க்கவும்.

விந்திறுக - இந்திரியம் கெட்டியாக என்பதைப் பார்க்கவும்.

விந்து கமலங்கள் பலப்பட - இந்திரிய கமலங்கள் பலப்பட என்பதைப் பார்க்க.

விந்து கருவிகளின் துர்ப்பலத்தினாலுண்டான தாதுநஷ்டத்திற்கு - இந்திரிய கருவிகளின் துர்ப்பலத்தினாலுண்டான தாது நஷ்டத்திற்கு என்பதைப் பார்க்க:

விந்துகெட்டியாக- இந்திரியம் கெட்டிப்பட என்பதைப் பார்க்கவும்.

விந்து நஷ்டத்திற்கு- இந்திரிய நஷ்டத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

விந்து நஷ்டத்திற்கு (சூடதிகரித்துண்டான)- இந்திரிய புஷ்டியுண்டாக என்பதைப் பார்க்க.

விந்து பந்தன முண்டாக- அதிபோகரோக நிவாரண பாயசம், மேற்படி வேறு, காயசித்தி மாத்திரை, சுந்தர சிந்தாமணி ஜவாரிஷ், திராக்ஷாதி மாத்திரை, மண்டூர கஸ்தூரி ஜவாரிஷ், மதன மோகானப்பிரயோகம், மநோரத ஜஸர் ஹல்வா, மூத்திரபிண்ட பலகாரி ஹல்வா.

விந்து புஷ்டியுண்டாக - இந்திரிய புஷ்டியுண்டாக என்பதை பார்க்க.

விந்து விளைவுண்டாக- இந்திரிய புஷ்டியுண்டாக என்பதைப் பார்க்க.

விந்து ஸ்தம்பனமுண்டாக - விந்து பந்தனமுண்டாக என்பதைப் பார்க்க.

விந்து ஸ்தானங்கள் பலப்பட - இந்திரிய கமலங்கள் பலப்பட என்பதைப் பார்க்க.

விந்தூற - இந்திரிய புஷ்டியுண்டாக என்பதைப் பார்க்க:

விந்தொழுக்கிற்கு - இந்திரிய ஒழுக்கிற்கு என்பதைப் பார்க்கவும்.

விரண ரோகத்திற்கு - கோசரோக ஹரி எரிமுகி ஹல்வா.

விலாவின் வீக்கத்திற்கு - சரோருக சர்பத்து, சொர்ண சீனாசர்பத்து, தாமரைப்பூ திராவகம், தாமரைப்பூ சர்பத்து, பனப்ஷா பானம், பனப்ஷா சர்பத்து

விரியன் விஷத்திற்கு - அஸ்மரிரோக நிவாரணி, இலவங்க பட்டை யெண்ணெய்.

விஷகடிக்கு :- ஆமோதானந்த மதனகாமபில்லை, தரா இலைக்கியாழம், மதனாலங்கிருத சுகந்தபில்லை.

விஷசுரத்திற்கு :- ஆலுபுகாரா மாஜூன், சந்தன பலானி சர்பத்து, நிம்பாதி சர்பத்து, றேவல்சீனி சிகாமதுபானம்.

விஷ நீர்களுக்கு :- சூரத்து நிலாவாரைப் பிரயோகம், வேம்பின் எண்ணெய்.

விஷ ரோகங்களுக்கு :- விஷகடிக்கு என்பதைப் பார்க்க

வீ

வீக்கத்திற்கு :- ஆமணக்குப் பிரயோகம், கலிங்கமுறப்பா, கலிங்காதி லேகியம், வேம்பின் எண்ணெய், ஜீவரக்ஷா மிர்த லவணம்.

வீக்கத்திற்கு (நுரையீரலின்) :- சரோக சர்பத்து, தாமரைப்பூத் திராவகம், பனப்ஷா சர்பத்து.

வீக்கத்திற்கு (மூளை தாபனத்தினாலுண்டான) :- ரோஜாப்பூ எண்ணெய்.

வீக்கத்திற்கு (விலாவின்):- விலாவின் வீக்கத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

வீண் கவலைக்கு :- அப்திமூன் கியாழம், அப்திமூன் சிகா மதுபானம், மேற்படி வேறு, அப்திமூன் மாஜூன், ஆவாரைத் திரிபலாதி லேகியம் வேறு, ஹரிச்சந்தன சர்பத்து.

வீண் சந்தேகத்திற்கு - வீண் கவலைக்கு என்பதைப் பார்க்க.

வீட்டின் துர்க்கந்தத்திற்கு :- சுகந்த தூபத்திரி, சுகந்ததூபப் பொடி, மகாசுகந்த தூபப்பொடி.

வீரிய விர்த்தியுண்டாக :- தாது புஷ்டியுண்டாக என்பதைப் பார்க்க.

வெ

வெட்டைச் சூட்டிற்கு :- பிரமேகத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

வெண்புள்ளி ரோகத்திற்கு :- ஆத்மரக்ஷாத் திரிபலாதி லேகியம்.

வெள்ளை வியாதிக்கு :- பிரமேகத்திற்கு என்பதைப் பார்க்கவும்.

வே

வேர்வைக்கு : அதிகவியர்வைக்கு என்பதைப் பார்க்க.

வேர்வையின் நாற்றத்திற்கு: லோகமோகன ஸ்நாநபில்லை, ஸ்நாந நறுமணமாத்திரை, மேற்படி வேறுசூரணம், ஸ்நாநபரிமளப்பொடி, ஸ்நாநபில்லை, ஜகமோகன ஸ்நாந சுகந்தப்பொடி.

ஸ்

ஸ்தன வீக்கத்திற்கு:- ஆமணக்குப் பிரயோகம்.

ஸ்தம்பன சக்தியுண்டாக :- இந்திரியங் கெட்டிப்பட என்பதைப் பார்க்கவும்.

ஸ்திரீ புருஷர்களுக் கிடையில் அன்புண்டாக :- கஸ்தூரி சுகந்தம் மேற்படி வேறு.

ஸ்ர்க்கரா ஹஸ்மரி ரோகத்திற்கு (மூத்திரக் குண்டிக்காய்களின்) :- உச்சிதாதி சர்பத்து.

ஜ

ஜலதோஷத்திற்கு :- சாம்பிராணித் தைலம், சுகந்த தூபப்பொடி, மட்டிப்பால் தைலம்,

ஜலுப்பிற்கு:- பனப்ஷா மாத்திரை.

ஜலுப்பிற்கு (சூட்டினாலுண்டான) :- இலகு பனப்ஷா சர்பத்து.

ஜீ

ஜீர்ணசக்தி யதிகப்பட:- அனிசூன் தீநீர், துளசிதிராவகம், நித்தியபல மாஜூன், நிம்பாதி மனோரஞ்சிதபானம், சடாமாஞ்சில் ஜவாரிஷ், அக்கினி மந்தத்திற்கு என்பதையும் பார்க்கவும்.

ஜீர்ணசக்தி குறைவிற்கு :- ஜீர்ணசக்தி யதிகப்பட என்பதைப் பார்க்கவும்.

ஜீர்ணசக்தியுண்டாக:- இலவங்கப்பட்டை ஜவாரிஷ், மேற்படி வேறு, தாம்பூல நறுமணச் சுண்ணம், தாம்பூல பரிமளச் சுண்ணக்கலவை.

ஜீர்ணசக்தி விருத்தியாக:- ஜீர்ணசக்தி யதிகப்பட என்பதைப் பார்க்கவும்.

ஹ

ஹஸ்மரி ரோகத்திற்கு :- உச்சிதாதி சர்பத்து

க்ஷ

க்ஷயகாசத்திற்கு:- கந்தாதி மாத்திரை.

ஶ்ரீநாடி வைத்திய தாதுவிர்த்தி போதினி

ரோக சிகிச்சாக்கிரம அட்டவணை

முற்றிற்று.